மகரிஷி வேத வைசியரின்

தேவீ பாகவதம்

(இரண்டு தொகுதிகள்)

தொகுப்பு ஒன்று



சித்தாந்த போதரத்தினாகரம்

காஞ்சி அ.ஆலால சுந்தரம் பிள்ளை

2001

ஸ்ரீ. ராம சுப்ரமணியன் தொண்டு.

மகரிஷி வேத வைசியரின்

தேவீ பாகவதம்

(இரண்டு தொகுதிகள்)

தொகுப்பு ஒன்று

காஞ்சி அ.ஆலால சுந்தரம் பிள்ளை

(முதல் பதிப்பு 1907)

பேருதவி புரிந்த நான்கு பேரறிஞர்களின் பட்டியல்

1. ஸ்ரீ ரத்னா கரன் ஸ்ரீமத் அப்பாவு குருக்கள் (சென்னை)
2. ஸ்ரீ சுப்பிரமணியம் சாஸ்திரியார் (சிந்தாதிரிப்பேட்டை)
3. ஸ்ரீ காஞ்சி பிரம்மஸ்ரீ விஸ்வநாத சாஸ்திரியார்
4. ஸ்ரீமத் பைரவ சிவாச்சாரிய சுவாமிகள்

மறுபதிப்பு மற்றும் வெளியீடு :

நிர்வாக அறங்காவலர்

காஞ்சி ஆலால சுந்தரம் பிள்ளை அறக்கட்டளை

(பதிவு எண். 518/99)

"காஞ்சி" 11, இராமமூர்த்தி தெரு,

நேரு நகர், சென்னை – 600 044.

2001

நூல் தலைப்பு	:	**தேவீ பாகவதம்**
ஆசிரியர்	:	காஞ்சி அ. ஆலால சுந்தரம் பிள்ளை
முதல் பதிப்பு	:	1907
பதிப்பு	:	காஞ்சி ஆலால சுந்தரம் பிள்ளை அறக்கட்டளை
மொழி	:	தமிழ்
முந்தைய பதிப்புகள்	:	3 (மூன்று)
பதிப்புரிமை	:	வெளியீட்டாளருக்கு
வெளியீடு நாள்	:	ஏப்ரல் 2001
தாள் பயன்பாடு	:	60 ஜி.எஸ்.எம். மேப்லித்தோ
பக்கங்கள்	:	839 + 9
அச்சிட்ட பதிப்புகள்	:	1000
பொருண்மை	:	மஹா புராணம்–மகா காலக்கிரமமாகத் தொகுக்கப்பட்ட நிகழ்ச்சி குறிப்புப் பழமையான இந்தியப் புராணக் கதைகள், ஐதிகம், பரம்பரை வழக்கங்கள்
அச்சுக்கோர்வை மற்றும் அச்சிட்டோர்	:	ஏ வி கிராபிக்ஸ் 4, (ப.எண்.56), ஐயம் பெருமாள் தெரு, இராயப்பேட்டை, சென்னை – 600 014.
விலை	:	ரூ. 260.00

Maharishi Veda Vysya's
Devee Bhagavatham

(Two Volumes)

Volume - I

by

Conjee A. Alala Sundaram Pillai

(First Published in 1907)

Assisted by panel of four eminent scholars :
Sri Rathna Garam Srimad Appavu Gurukal
Sri Subramaniam Sasthriyar (Chindaripet)
Sri Conjee Bramhasree Vishwanatha Sasthriyar
Srimath Bairava Sivasacharaya Swamigal

Reprinted & Published by
Managing Trustee
Conjee Alala Sundaram Pillai Trust
(Regd. No.518/99)
"Conjee" 11, Ramamurthy Street,
Nehru Nagar, Chrompet, Chennai - 44. South India

Year 2001

Title of the Book	:	Devi Bhagavatam
Author	:	Conjee A. Alala Sundaram Pillai
First published	:	1907
Publishers	:	Conjee Alala Sundaram Pilla Trust
Language	:	Tamil
No. of editions already printed	:	3 (Three)
Copy right	:	Publishers
Date of Publication	:	April 2001
Paper Used	:	60 gsm Maplitho
Size of the Book	:	Demy Octova
No.of Pages	:	839 + 9 (Part 1)
No. of copies Printed	:	1000
Subject	:	Maha Purana - a mega chronicle of ancient Indian Mythology and Traditions
Laser Typesetting & Offset Printing	:	a v graphics 56, Iyemperumal Street, Royapettah, Chennai 600 014.
Price	:	**Rs. 260.00**

பிரசுரிப்பவர் குறிப்பு

தேவீ பாகவதம்

19ஆம் நூற்றாண்டின் தொண்ணூர்களில், வேத வைசியரின் தேவீபாகவதம் எனும் நூலின் முதல் தமிழாக்க நூலாக இது வெளியிடப் பெற்றது. இதுவே ஆசிரியரால் எழுதப்பெற்ற முழுமையான, விரிவான மூலத் தமிழாக்கமாகும். மிகவும் பிரபலமான, கொண்டாடப்பெறுகிற மதிக்கப்பெறுகிற தேவீ மாகத்மியம் என்பதே இந்நூல் நவிலும் முதன்மைக் கருப்பொருளாகும்.

பண்டைய இந்திய புராண மரபுக்கதைகளின் காலப்பெட்டகமாகிய இந்நூல் மிகவும் பிரபலமானது. தொடர்ந்த கால இடை இடைவெளிகளில் பல மறுபதிப்புகளைக் கண்டது. இறுதியாக மறுபதிப்புச் செய்யப்பட்ட ஆண்டு 1929. 72 ஆண்டுகள் கழிந்து அன்னை காஞ்சி அன்னை காஞ்சி காமாட்சி தேவீயின் திருவருளால் மீண்டும் இந்நூல் வெளி வருகிறது.

இப்புதிய செம்பதிப்பில் மூல எழுத்துருவையும் கருத்துரையையும் அப்படியே எடுத்துக்கொண்டு தமிழ்ப் பகுதியில் அரபு எண்களை வரிசையிட்டும், வடமொழிச் சொற்களுக்கு தமிழ்மொழி பெயர்ப்பும் இடம் பெற்றுள்ளன. ஏறத்தாள ஒரு நூற்றாண்டுக்கு (1907) முன்பாகப் பதிப்பித்த போதிருந்த தலைப் பக்கத்தினை அப்படியே எடுத்தாண்டுள்ளோம். இதில் 216, 217 மற்றும் 218-ம் பக்கங்களில் உள்ள 10-ம் நூற்றாண்டு தமிழ் எழுத்துக்களும் அடங்கும்.

பேருதவி புரிந்த அடையாறு நூலகம், சென்னை பல்கலைக்கழக நூலகம் மற்றும் இராமகிருஷ்ணா நூற்றாண்டு நூலகம் ஆகிய நூலகங்களுக்கும் அந்த நூலகங்களில் பணியாற்றும் அன்பர்களுக்கும் நிர்வாகத்துக்கும் நெஞ்சார்ந்த நன்றியறிதலைப் பதிவு செய்கிறோம்.

தொய்வற்ற எளிதான வாசிப்பிற்கு பெரிய எழுத்துக்களில் அச்சிட வேண்டும் எனப் பரிந்துலிருத்து அதல்படுத்திய எமது அச்சகத்தார் ஏவி கிராபிக்ஸ் நிறுவனத்துக்கும் எங்களின் நன்றிகள்.

இந்நூலின் ஆசானுக்கு ஆசானாகவும், மாதா பிதா குரு தெய்வமாகவும் இருந்து அருள்பாவித்த 'ஸ்ரீமத் காஞ்சி ஏகாம்பர சிவ

யோகியார்' அவர்களின் அன்பின் நினைவாக இந்த புராணச் சிறப்புமிக்க நூலை அர்ப்பணிக்கிறோம். ஸ்ரீ காஞ்சி ஆலால சுந்தரம் பிள்ளை அவர்களின் வழித்தோன்றலாகிய நாங்கள் இதன் மூலம் அந்த மகா ஆத்மாவிற்கு எங்களின் பணிவார்ந்த அஞ்சலியைத் தெரிவிக்கிறோம்.

ஒரு நூற்றாண்டுக்கும் முன்னதாக வெளியிடப்பெற்ற இந்த நூல் வெளிவர நிதியுதவி அளித்த கீழ்க்குறித்த கொடையுள்ளம் கொண்ட பெருமகனார்களுக்கு எங்களின் நன்றியறிதலைப் பதிவு செய்கிறோம்.

1. ஸ்ரீ வடிவேல் முதலியாரவர்கள்
2. ஸ்ரீமத் செந்தில் வேலு முதலியாரவர்கள்
3. சேலம் மிட்டதார் ஸ்ரீமத் முத்துசாமி கவுண்டர்
4. ஸ்ரீமத் க.மு.மயிலை அரங்கசாமி நாயக்கர்
5. ஸ்ரீ ம.சிங்கார வேலு முதலியார் (பாக்கம்)
6. ஸ்ரீ ம. செந்தில்வேலு முதலியார்
7. ஸ்ரீ காளத்தீஸ்வரன் முதலியார் (செந்தில்வேலு குமாரர்)
8. ஸ்ரீ தா.வெங்கடாசலம் முதலியார் (காட்டாங்குளம்)

இந்த புண்ணியாத்மாக்களுக்கு எங்களின் மரியாதை நிறைந்த அஞ்சலியைச் செலுத்துவதில் பெருமை கொள்கிறோம். அவர்களின் வழித்தோன்றல்கள் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று நிறைந்த மனதுடன் மகிழ்வுடன் திகழ தேவி காமாட்சியின் திருவருளை வேண்டி இறைஞ்சுகிறோம்.

இந்த நூலின் ஆக்கத்தில் பங்கு கொண்ட பேரறிஞர்களை ஸ்ரீ ரத்னாகரன் ஸ்ரீமாத் அப்பாவுக் குருக்கள், ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரியார், ஸ்ரீ காஞ்சி பிரம்மஸ்ரீ விசுவநாத சாஸ்திரியார், ஸ்ரீமத் பைரவ சிவாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் நினைவில் நிறுத்தப்பட வேண்டியவர்கள். அவர்களின் ஒத்துழைப்பும் ஊக்கமும்தான் இப்பெரு நூலை இறுதிவரைத் தொய்வின்றி வெளிக்கொணரத் தூண்டுகோலாக அமைந்தது. கூப்பிய கரங்களுடன் இந்தப் புண்ணிய ஆத்மாக்களுக்கு எங்களின் பணிவான அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அறங்காவலர்கள்

காஞ்சி ஆலாலசுந்தரம் பிள்ளை அறக்கட்டளை

சென்னை–44.

PUBLISHER'S NOTE

DEVEE BHAGAWATHAM

The author with a vibrant pioneering zeal, brought this unabridged, authentic, original and the first ever Tamil version of "Veda Vysaya's Devee Bhagawatham" in the early 90's. The most popular, the most celebrated and held in high reverence the "Devi Mahatyam" is the main component of this book. The glory of Devi emanating through its scriptures are infinite, unlimited.

This book, a mega chronicle of Ancient - Indian Traditions and Mythology was very popular. It was re-printed several times at regular intervals. The last edition was in 1929. After a lapse of seventy two long years, this first reprint is ventured with the divine grace of our Mother Goddess "Devee Kamakshi Ambal of Conjee".

We have retained the text and the script in its original form, with provision of Arabic numerals for the Tamil and Tamil translation for Sanskrit words. The title page is reprinted as it appeared in the original edition of nearly a century ago, including 3 pages of 10th century Tamil Script (Pages 216, 217, 218).

We profoundly thank for the great assistance rendered by the Adayar Library, Madras University Library and Ramakrishna Centenary library. We are thankful to the management and staff of these esteemed institutions.

A great slice of credit goes to M/s. av graphics, our printers, who suggested and printed the letters in large prints for strain free reading.

With our humble Pranams and the saintly reverence, we dedicate this book to the fond memory of **"Srimad Conjee Ekambara Siva Yogiyar"** Avl, the Guru, who was more like a mother, father, guru and Divine God to the author. *We the descendants of Sri Conjee Alala Sundaram Pillai, pay our humble homage to this Great Soul.*

We will be failing in our duty if we fail to give this key note as our humble gratitude to the following large hearted philanthropists who provided

the monetary assistance for bringing out the first edition of this book, nearly a century ago. They are :-

1. Sri **Vadivelu Mudaliar** avl.
2. Srimath **Senthilvelu Mudaliar** avl.
3. Salem Sri **M. Mitadhar Muthuswamy Gownder** avl.
4. Srimath **K.M. Mylai Arangaswamy Naicker** avl.
5. Sri **M. Singaravelu Mudaliar** avl. (Pakkam)
6. Sri **M. Senthilvelu Mudaliar** avl.
7. Sri **Kalatheswarar Mudaliar** avl.
   (Sri Senthilvelu Mudaliar avl's son)
8. Sri **Venkatachalam Mudaliar** avl. (Kattankulam)

We offer our respectful homage to those noble souls. We pray to Devi Kamakshi to bless their descendants with health, happiness, prosperity and success.

Also the eminent scholars

(1) Sri Rathna Garam Srimad Appavu Gurukal,

(2) Sri Subramaniam Sasthriyar (Chindaripet),

(3) Sri Conjee Bramhasree Vishwanatha Sasthriyar,

(4) Srimath Bairava Sivacharaya Swamigal

are to be remembered and cherished for their associations and co-operation with the author till the end in bringing out the mammoth Publication. With folded hands we offer our humble homage to these noble souls.

TRUSTEES

Conjee Alala Sundaram Pillai Trust
Chennai - 44.

உ

கணபதி துணை

ஸ்ரீ திரிபுரசுந்தர்யை நம :

———-

வியாசமுநிவரருளிய

பதினொானங்களிலொன்றாகிய

தேவீபாகவதம்

பூர்வபாகம்.

இஃது

சம்ஸ்குருத பண்டிதர்களுதவியைக் கொண்டு

ஸ்ரீ காஞ்சிபுரம் ஸ்ரீமத் ஏகாம்பர சிவயோகி

மாணுக்கர்

ஆலாலசுந்தரம்பிள்ளையவர்கள்

மொழிபெயர்க்கப்பட்டு

சென்னை

கணேச அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது

——-

1907.

இதன் விலை ரூபா. 3-12

(இந்த பக்கம் 1907ல் வெளியிடப்பட்ட மறுபதிப்பு)

With affection and Reverance Dedicated to



Srimath Conjee Ekambara Siva Yogiyar
The Guru

உ

ஸ்ரீ திரிபுரசுந்தர்யை நம :

தேவீபாகவதம்

பிரகடனம்

"ஸ்ரீமத் பாகவதம், புண்யம் நாளுக்கியான கதான்விதம்
த்வைபாயன முகோத்பூதம் பஞ்சலக்ஷண சம்யுதம்".

இந்நூல், "சிவமெனும் பொருளும் ஆதிசத்தியொடு சேரி னெத்தொழிலும் வல்லதாம், இவள் பிரிந்திடி னியங்குதற்கு மரி தரிதெனா மறையிரைக்குமால்" என்ற பிரமாணப்படி சிவத்தை யசைப்பித்து எல்லாத்தொழிலையுஞ் செய்விக்கவல்ல பிரதம சத்தி யாகியும், வித்தை எனவும், சர்வஜ்ஞை எனவும், சமுசாரபந்தத்தைச் சேதிப்பதில் நிபுணை எனவும், தியாஞஸ்பதத்தை யடைவிக்கச் செய்வதில் வல்லபை எனவும் உத்கோஷிக்கும் வித்தியாசொ ருபிணியாகியும் விளங்கும் பராசத்தியாகிய பகவதியினுடைய மகிமாதி சயங்களைக் கூறும் புராணரூபமாயுள்ளது.

புராணம், "சர்க்கஸ்ச ப்ரதிசர்க்கஸ்ச வம்ஸோ மந்வந்தராணிச, வம்ஸாநு சரிதஞ்சைவ புராணம் பஞ்சலக்ஷணம்," என்று கூறும் ஐந் திலக்கணங்களையும் உடைத்தாயிருக்க வேண்டுமாதலால், சிருட்டியாதி நிமித்தம் சாத்வீக, ராஜச தாமசமென்னுந் திரிகுண சத்தி சொரூபமாய் விளங்கும் பகவதியினது திருமேனி களினுடைய வியல்பு கூறும் சர்க்கமும், சிருட்டியாதி முத்தொழிலியற்றும் பிரமனாதி மும்மைத் தேவருற்பத்தி கூறும் பிரதி சர்க்கமும், சோமசூரியாக்னிகளால் சனித்தவர்களான அரசர்களுடைய பரம்பரைகளைக் கூறும்வம்சமும், சுவாயம்பு முதலிய பதினான்கு

மநுக்களுடைய காலவளவை முதலியன கூறும் மன்வந்தரமும், அம்மனுக்களுடைய வம்சசரித்திரங்கள் கூறும் வம்சாநு சரிதமுமாகிய ஐந்தினையும் விரிவாயெடுத்து கூறியுளது இப்புராணம்.

இது, பன்னிரண்டு ஸ்கந்தங்களாகவும், (318) அத்தியா யங்களாகவும் பதினெண்ணாயிரஞ் சுலோகங்களாகவும் வகுக்கப் பட்டுள்ளது.

இதுகாறும் கணபதி. ஸ்கந்த, சிவ விஷ்ணுவாதியர்களுடைய மகிமாதிசயங்களைக் கூறும் புராணமுதலிய பல வடமொழி யின்கணுள்ள நூல்கள் பலநாளாய்ப் பலமுறையாக வெளிப்பட்டு வருகின்றனவே யன்றி தேவீ சம்பந்தமாயுள்ள பெருநூல்களி லொன்றேனும் வெளிப்பட்டதின்று.

தேவி எத்தன்மையளெனின், "பரந்தபராபரையாதி பரனதிச்சை பரஞானங்கிரியை பரபோகரூபந், தருங் கருணையுருவாகி விசுத்தா சுத்தத் தநுகரண புவனபோகங்கடாங்க, விரிந்த வுபாதானங்கண்மேவி யொன்றாய் விமலமாயைந் தொழிற்கும்வித்தாய்" எனவும், "ஈங்கையினா னாமனைத்துஞ் செய்தாற்போ னாடனைத்தும், நங்கையினாற் செய்தளிக்கு நாயகன், எனவும், "குவளைக்கண்ணி கூறன் காண்க, அவளுந் தானுமுடனே காண்க, பரமானந்தப் பழங்கடலதுவே" எனவும், சிவப்பிரகாசம், திருக்களிற்றுப்படியார் திருவாசக முதலியவற்றிற்கூறிப் போந்த திருவாக்குகளான் சிவ பெருமானா ரியற்றியருளும் பஞ்சகிருத்திய சத்தியாய் அவற்றிற்குக் காரணியாயிருப்பவளெனவும், அவ்விறைவர், காரணியாகிய அச்சத்தியைக் கொண்டே ஆன்மாக்களுக்கு அனுக்கிரகமுறைமையைப் புரிகின்றவரெனவும் அவ்வனுக்கிரகம் போக யோகப் பிரதமானதாற் பேரகானுக்கிரகத்தின் பொருட்டு அவ்வருணோக்கியை ஒரு கூறாகத் திருமேனியிற் படைத்தவரெனவும், அவள் கூற்றிலே தன்னையும், தன் கூற்றிலே அவளையும் காண்டலாகிய யோகானுக்கிரகத்தின் பொருட்டு அவளுந் தானுமுடனாயிருத்தலாகிய திருமேனியைப் படைத்தவரெனவும், இத்திருமேனியைக் காணப்பெற்றார் நானென்பதற்று, தானாகவே இருத்தலாகிய பரமானந்தத்தில் மூழ்கியிருத்தற்பொருட்டு மனவாக்குக் கெட்டாததாகிய அவளது அருட்டிருமேனியைப் படைத்தவரெனவும் வெளிப்பட்டன.

இங்ஙனமான அருஞ்சிறப்பு வாய்ந்த பகவதியினுடையசம் பந்தமாகிய வடமொழியிலுள்ள பாகவதத்தை, தென்மொழியில் வல்லவர் மகிழவும் ஏனையோரும், கல்விநலம் வாய்க்கப்பெற்ற பெண்டிரும்

முறையே கற்று தேவியினுடைய திருவருளுக் குரிய ராகவும் அவளது பொன்னடியைக்கருதி தமிழில் எளியநடையாய் மொழிபெயர்க்கலாயிற்று.

பாகவதம் - பாகவதமென்றால் யாவரும் விஷ்ணு பாகவதமென்று கிரஹிப்பரேயன்றி (தேவீபாகவதம் வழங்கி வராமையால்) தேவீபாகவதமென்று கிரஹிக்கவறியார் எனவும்;

அன்றியும் சிலர், விஷ்ணுமூர்த்தி பகவானாதலால் அவருடைய அவதாராதி லீலைகளைக்கூறும் நூலுக்குப் பாகவதமெனப் பெயர்வந்தது என்று கூறுவர், அது நிலைபெறாது, ஏனெனில், பகவானென்கிற நாமம் சிவனாருக்கும், பிரமனுக்கும், அருகனுக்கும், சூரியபகவானென்று சூரியனுக்கும், அக்னிபகவானென்று அக்னிக்கும் வியாசபகவானென்று வியாசருக்கும், சூதபகவானென்று சூதருக்கும், இன்னம் பல தேவர்களுக்கும் பல இருடிகள் முதலானவர்களுக்கும் ஏற்றப்பட்டு உலக வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் வழங்கிவருதலால் யாவரும் பகவான்களேயாவர்; ஆகையால் விஷ்ணுமூர்த்தியே பகவானென்கிற நாமமுடையவரென்பது யாங்ஙனம் பொருந்தும் எனவும்.

பகவதி சப்தம் புன்லிங்கமன்று, ஸ்திரீலிங்க மாகையால் அந்த சப்தம் தேவிக்கே வுரித்தெனவும், இவ்வுண்மைதோன்றவே வியாசர், சிவ விஷ்ணு வாதியருக்கு புராணங்கள் வகுக்கும்பொழுது சிவபாகவதம், விஷ்ணுபாகவதம், பாத்மபாகவதம் ஆக்னேய பாகவதம் ஆதித்ய பாகவதம் என்றுகூறாது சிவபுராணம் விஷ்ணு புராணம், பாத்மபுராணம், ஆக்னேயபுராணம், ஆதித்யபுராணம் எனவகுத்து தேவீசம்பந்தமான இந்த நூலை "தத்துபாகவதம் ப்ரோக்தம் நது தேவீ புராணகம்" எனவே தேவீபுராணமென்று கூறக்கடாது தேவீ) பாகவதமென்றே கூறவேண்டுமெனவும்;

இவ்வாறே மஹாபுராண உப புராணங்களில் பல விடங்களிலும் (பராசரோக்தம் ப்ரவரம் ததா பாகவ தாஹ்வயம்) (புராண பாகவதம தவுர்க்கம் நந்திப்ரோக்தம் ததைவச) (சைவம் பாகதம் தவுர்க்கம்,) (சைவமாதி புராணஞ்ச தேவீபாகவதந்தத (பிராஹ்மஞ்ச வைஷ்ணவம் பாத்மம் சைவம் பாகவதம், ததாய என கூர்மகருட பாத்மாதிகளில் ஆங்காங்கு கூறப்பட்டிருக்கின்றது எனவும்,

மஹாபுராண உபபுராணபிரதி பாதகமாயுள்ளது இத்தேவீ பாகவத மொன்றே எனவும்

வேத காயத்திரியானது, திரிபாதையாய்ப் பிரதி பாதிக்கப் பட்டிருக்கிறது, அதற்குரிய ருஷி, சந்தஸு, பீஜம், நியாசம்

தியானமுதலியன எதில் முறையாகக் கூறப்பட்டுள்ளனவோ அது பாகவதமா மென்பது பிரமாணமாகலான் அவைகளைக் கூறுவதாகிய இத்தேவீபாகவதமே பாகவதமாகுமன்றி இம்முறைமைகளைச் கூறாத விஷ்ணுபாகவதமென வழங்கும் பாகவதம் எங்ஙனம் பதமாகுமெனவும்.

இப்பொழுது விஷ்ணு பாகவதமென்று வழங்கு நூலில் வருகின்ற சரித்திராதிகளெல்லாம் இப்பாகவதத்தில் நான்காவது ஸ்கந்தத்தில் கிருஷ்ணாவதாராதி பிரச்னம், கிருஷ்ணாவதார காணம், கிருஷ்ணசன்ம கதனம் கிருஷ்ண லீலாப்ராரம்பம் என்ற றொடக்கத் தனவாகிய கிருஷ்ணமூர்த்தியினுடைய விஷயங்களும், வசுதேவாத் யவதாரகாரணம், கம்சகிருத தேவகீ சப்த சுவதம், என்றற் றொடக்கத் தனவாகிய சரித்திர விசேஷங்கள் பலவும் இவையன்றி வேறு சிலவும் வருகின்றன, இவற்றையெல்லா "பம்மர போத" ரென்பவராற் சங்கிரகித்துப் பெருநூலாக்கி விஷ்ணுபாகவதமென்கிற பெயராற்பிரசுரஞ் செய்யப்பட்ட தெனவும்.

தேவீபாகவத விஷ்ணு பாகவதங்களுடைய உண்மையுணர்ந்த பண்டிதோத்தமர்கள் வடமொழி பாகவத பீடிகையில் பாரஞ் செய்திருக்கின்றனர். அதில் இது பற்றிய விஷயங்கள் என்னும் பலவுள அவையெல்லாம் ஈண்டு விரிக்கிற் பெருகுமென ததாம்.

திரிபுரிசுந்தர்யை நம :

தேவீபாகவதம்

அத்யாயசூசனை.

ஷை
ஷை

நான்காம் ஸ்கந்தம்

ஐந்தாம் ஸ்கந்தம்

13) தேவ்யாஸஹ மாஷ்கல துர்முக யோர் யுத்தம்.
14) தேவ்யாஸஹ மாஷ்கல தாம்பி யோர் யுத்தம்.
15) தேவீம்பிரதி அசிலோம் பிடா. லாதி ப்ரஸ்தானம்
16) தேவீ மஹிஷ சம்வாதம்
17) மந்தோதரீ விருத்தாந்தம்
18) தேவீ மஹிஷாசுர யுத்தம்
19) இந்திராதிகிருத தேவீஸ்துதி
20) தேவ்யந்தர்த் தானோத்தர விருத் தாந்தம்
21) சும்பநிசும்ப விர்த்தாந்தம்
22) ஹிமாலயம் பிரதி இந்திராதி கதனம்
23) சும்பநிசும்ப நகரீம் பிரதி தேவீ கமனம்
24) தேவீ மஹாத்மியம்
25) காளிகயாசஹ தூம்ர லோசன யுத்தம்
26) தேவ்யாசஹ சண்ட முண்ட யுத்தம்.
27) ரத்த பீஜயுத்த கதனம்

ஷ

28) ரத்தபீஜ வதம்
29) தேவ்யாசஹ நிசும்பயுத்தம்
30) சும்ப வதா ப்ராரம்பம்
31) சுரதோரேபாக்யானம்
32) புவன சுந்தரீ மஹாத்மியம்
33) தேவீ பூஜாவிதானம்
34) தேவீ பூஜாபலம்.

———

ஆறாம் ஸ்கந்தம்

1) இந்திர க்ருத திரிசிர வதோபாய சிந்தா கதனம்
2) விருத்திரா சுரோத்பத்தி
3) விருத்ர க்ருத தேவாசுர பரா ஜயம்
4) விருத்ர க்ருத தேவ பராஜயம்
5) இந்திராதி கிருத தேவீஸ்துதி
6) வருத்ரவத கதா ப்ராரம்பம்
7) விருத்ர வகம்
8) கச்ய இந்திரதரிசனம்
9) நகுஷஸ்ய இந்திரபத ப்ரச்யுதி
10) தர்மணாந்கதி விசேஷ விசாரம்
11) தீர்த்த க்ஷேத்ராதி மஹாத் மியம்.
12) அரிச்சந்திரோ பாக்யானம்
13) நிமிசாபேந வசிஷ்டஸ்ய தேஹா ந்தர ப்ராப்தி:
14) வசிஷ்டசாபேநநிமேர்த் தேஹ ந்தர பிராப்தி:
15) ஹை ஹயகிருத விப்ரவதம்
16) ஔர்யோத்பத்தி கதனம்
17) ஹைஹய வம்சோத்பத்தி கத னம்.

ஷ

18) துர்வசோரோ புத்ர பிராப்தி:
19) ஏகவீரஸ்ய பட்டாபிஷேகாதி:
20) ஏகாவளீ விருத்தாந்தம்
21) ஏகவீர காலகேதுநா ஸஹ யுத்தம்
22) வ்யாச நாரத சம்வாதம்:
23) திரிதராஷ்டிராத் யுநபத்தி:
24) வியாசாய நாரதோக்த ஸ்வ மோஹ மாஹாத்மியம்
25) நாரத விவாஹம்
26) வியாசாய நாரதோக்த ஸ்வ விருத்தாந்தம்
27) நாரதஸ்ய புருஷஸ்வரூபு பிரா ப்தி:
28) நாரதம் பிரதி ஹரிகிருத மாயா மஹிமானுவர்ணனம்
29) மஹா மாயா மஹிமாதி கதனம்

———

ஏழாம் ஸ்கந்தம்

எட்டாம் ஸ்கந்தம்

———

ஒன்பதாம் ஸ்கந்தம்

தேவீபாகவத அத்யாயசூசனை

மு ற் றி ற் று

———

உ

திரிபுரசுந்தர்யை நம:

அ த் ய ா ய வி ஷ ய சூ ச னை

(1) சவுநகர் வினா.

சவுநகர், சூதமுனிவரை வணங்கி யாங்களெல்லாம் இதுவரையில் எண்ணிறந்த யாகங்களியற்றியும் எங்கட்கு சனன மரண துக்கம் நீங்கியதி ன்று. யரகாதிகளான் அழிவெய்துவதாகிய சுவர்க்கலோகப் பிராப்திகிடைக்குமேயன்றி அழிவில்லாமல் என்றுஞ் சுகமுற்றிருத்தலாகிய மோக்ஷப்பிராப்தம் எங்ஙனங் கிடைக்கும். ஆகலான், அச்சுகத்தை யடைதற்குத் தேவி யினுடைய பாகவதத்தைக் கூறவேண்டுமென்று பிரார்த்தித்தல்.

(2) ஸ்கந்த சங்கியாதி கதனம்.

பாகவதத்தில் வரும் ஸ்கந்தங்களித்தனை என்றும், அந்தந்த ஸகந்தங்களில் வரும் அத்தியாயங்களித்தனை என்றும், புராணலக்ஷணம் இதுவாமென்றுங் கூறுதல்.

(3) புராணசங்கியை

புராணங்கள் (18) என்றும், அக்ஷரமுறைமையான் அவைகளின் பெயர் இது விது வெனவும், இப்புராணங்களைத் துவாபரயுகங்கடோறும் இந்த வியாசரேயன்றி இவருக்குமுன் (27) வியாசர்கள் வகுத்திருக்கின்றனரெனவும், அப்புராணங்களிற் சிறந்த இப்பாகவதம் கலியுகத்தின் கொடுமையை எளிதிற்போக் கடிக்குஞ் சதுர்ப்பா டுடையதெனவுங் கூறுதல்.

(4) சுகோற்பத்தி

வியாசர். சரஸ்வதீ தீரத்தில் ஓர் மரத்தின்கண் ஆண் பெண்ணாகிய ஊர்க்குருவிக ளிரண்டு, தங்குஞ்சுகளிடத்தில் பிரேமாதி சயத்தோடிருப்பதைக் கண்டு புத்ராபே க்ஷயடைந்து மேருமலையிற் றவஞ்செய்திருக்குஞ் சமயத்தில் நாரதமுனிவரால் தேவியினுடைய மகிமையை விஸ்தாரமாய்க் கேட்டு அவரால் தேவீ மந்திரோபதேசஞ் செய்யப்பெற்று முன்போல் அம்மலையிற றவஞ் செய்திருத்தலைக் கூறுதல்.

(5) ஹயக்கிரீ வாவதார மகிமை.

விஷ்ணு மூர்த்திக்குக் கோதண்டத்தன கரமற்றுப்போக, பிரஹ்மா குதிரையின் றலையைக்கொண்டு வந்து பொருத்த, பின் அவ்விஷ்ணு மூர்த்தி ஹயக்கிரீவரான வைபவத்தைக் கூறுதல்.

(6) மதுகைடப ருற்பத்தி

விஷ்ணுமூர்த்தி, திருப்பாற்கடலில் சேஷசாயியரா யிருக்கும்பொழுது அவர் காதிலுள்ள அழுக்கினின்றும் மதுகைட பருற்பத்தியானதும், அவர்கள் தேவீ அனுக்கிரகத்தினால் அக்கடலி லிறு மாந்துலாவும் பொழுது பிரமன்வந்து அவர்களால் ஏளனஞ் செய்யப்பட்டு மனவேக்கமுற்று ஆலோசிக்கத் தொடங்கு தலுங் கூறுதல்.

(7) கமலாசனகிருத விஷ்ணுயோக நித்ராஸ்துதி.

பிரமன், மதுகைட பரைக் கொல்லும் பொருட்டு யோகநித்திரையி லிருக்கும் விஷ்ணுமூர்த்தியைத் தோத்திரஞ் செய்ததும், அவர் நித்திரையை விட்டெழுந்திராமையால் இவர் தேவீவசப்பட்டவரேயன்றி சுதந்திர ரல்லரென் றுணர்ந்ததும், பின்னர் தேவியைத் தோத்திரஞ்செய்து விஷ்ணுமூர்த்திக்கு நித்திரையைப் போக்கியதுங் கூறுதல்.

(8) மதுகைடப யுத்தம்.

தேவியால் நித்திரை தெளிந்தெழுந்த விஷ்ணுமூர்த்தி, பிரமனது துயரங்கண்டு மதுகைடபரோடு ஐயா யிரவருடம் யுத்தஞ்செய் திளைத்ததும், பின்னர் தேவிகருணை கூர்ந்து தமது மோகினிரூபத்தால் அசுரர்களை மயக்க, அஃதுணர்ந்து திருமால் அவ்வசுரர்களிடத்தில் ஓர் பிரதிஞ்ஞை பெற்று அவர்களைக் கொலைபுரிந்ததுங் கூறுதல்.

(9) சக்தி ஸ்வரூபகதனம்

விஷ்ணுமூர்த்தி, தேவியினால் நித்திரை தெளிந்தா ரென்பதைக்கேட்ட சவுனகாதியர் சந்தேகமுற்று தேவியினுடைய சொரூப வுண்மையைக் கேட்டு தேவியே பெரிய தெய்வமென் றுணர்தமையைக் கூறுதல்.

(10) வியாசக்ருத தபஸ்சரியை.

மேருமலையில் தவஞ்செய்த வியாசர், சக்தி மந்திரமும் சிவரூபத்தியானமும் செய்ய அதனால் தரமெண்ணிய வெண்ணம்

நிலைபெறாது போனதும், பின்னர் சக்தி மந்திரமும் தேவித்தியானமுஞ் செய்ய அதனாற் தேவி அனுக்ரகம் பெற்று அரம்பையைக் காணப்பெற்றுத் தனது தவத்தை விடுவதற்கும் அவளை விடுவதற்கும் மனமில்லாமல் அவளிடத்திற் சந்தேகந் தெளிந்தமையைக் கூறுதல்.

(11) புதனுற்பத்தி.

பிரகஸ் பதியினுடைய மனைவியாகிய தாரை, சந்திரனை மோகித்து அவனிடத்திற் தங்கியிருக்க, அதனை பிரகஸ்பதி தெரிந்து சந்திரனோடு வாதஞ்செய்ததும் அவன் தாரையை அனுப்பாமல் வினோதமான்வாக் வாதஞ்செய்ததும், பின்னர் இந்திரசகாயத்தால் அவனோடு போர் புரிந்து தாரையை மீட்டுக் கொண்டதும், பின்னர் தாரைபெற்ற புத்திரனை சந்திரன் தன் மகனென்று போரிட்டு மீட்டுக் கொண்டுபோய் நாமகரணாதிக ளிட்ட என கூறுதல்.

(12) சுத்யும்னனுக்கு ஸ்திரீத்வப் பிராப்தி கதனம்.

சுத்யம்ன னென்கிற அரசன், ஆரண்யஞ்சென்று வேட்டையாடித் திரும்பிவரும் பொழுது உமா சங்கரருக்குக் கிரீடார்த்தமாயிருந்த உத்பான வனத்துக்குச் செல்ல அவனுக்குப் பெண்ணுருவம் வந்தமையையும், அதனை வசிட்டமுனிவர் சிவபெருமானால் அறிந்து அவரால் சரபலிமோசனம் பெற்றமையையும், அவ்வரசன் பெண்ணுருவடைந்திருந்த காலத்தில் புதனுக்குப் பெற்ற புரூரவச் சக்கிரவர்த்திக்கு அரசியலளித்து தேவி சந்திரத் தியானத்தால் சாயுச்சியமடைந் தமையையுங் கூறுதல்.

(13) சுத்யும்னோ பாக்யானம்.

சுத்யம்னன் புத்திரனாகிய புரூரவன் அரசாண்டு வருநாளில் ஊர்வசி இதனை மோகித்து காந்தர்வ மணம்புணர்ந்து சில வுறுதிமொழிகளைப் பெற்றதும், பின்னர் இந்திரன் அவவுறிதிமொழிக் கிடையூறுண்டாக்க அவ்வூர்வசி அரசனை நிந்தித்துவிட்டு நீங்கியதும், அதனால் புரூவ பித்தனைப் போற்றிருந்து அவ்வூர் வசியைக்கண்டு பிரலாபித்து நிங்கியதுங் கூறுதல்.

(14) சுகோற்பத்தி.

முன் ஊர்வசிக்யைக் கண்டு மோகித்த வியாசர், நித்தியஹோமம் செய்தற்கு அரணியைக் கடைகின்ற காலத்தில் வீரியம் வெளிப்பட அதினிறுஞ் சுகா உற்பத்தியானதும், அவருக்கு கிருகஸ்தாச் சிரமத்தைக் கொள்வது பெருஞ் சிறப்பென்றதும், சுகா வியாசர கூறியதை அங்கிகாது நிந்தை கூறி விலக்க மீளவும் வியாசர் தாம் கூறியதேரே

காணமென்றதும் இதனைக்கைவிட்டம் றொருவருமில்லையென்றது குறிப்பிடத்தக்கது.

(15) சுகர் சம்சாரநித்தாதி கதனம்.

சுகா, தந்தையைப் பார்த்து சம்சாரமுடையவன் ஒருநாளும் சாஸ்திரவிசாரஞ் செய்தவனுமன்று, முனியுமன்று என்று பலவாறாக நிந்தித்ததும் பின்னர் வியாசர் தேவீபாகவதம் தேவியினால் விஷ்ணுமூர்த்திக்கு உபதேசிக்கப்பட்டதென்று அதன் மகிமை சுகருக்குரைத்ததுங் கூறுதல்.

(16) தேவீபாகவ தோத்பத்தி ஸ்வரூப கதனம்.

சுகருக்கு, தேவீபாகவத மகிமை எடுத்துக் கூறுங்கால் இது விஷ்ணுமூர்த்திக்கு மந்திரமாயிருந்தது, பாதி சுலோகமாயிருந்தது, பிரமதேவன் வழியாக எனக்குபதேசத்தில் வந்தது, என்னால் பன்னிரண்டு ஸ்கந்தங்களாகச் செய்யப்பட்டதென்று அதன்வழியைக் கூறி, பாகவதத்தை உபதேசித்ததும், மீண்டும் சுகர் கிருகதாச்சிரமத்தை யங்கீகரித்துக்கொள்ள சனகமகா ராஜாவினிடத்தில் ஏவியதும், அவர் அதற்குடன்பட்டு மிதுலாபுரிக்குப போகின்றேனென்றதுங் கூறுதல்.

(17) மிதுலாம் பிரதி சுககமனம்

சுகர், எண்ணியவாறே மிதுலாபுரிக்குச்சென்று சேவகராம் அங்க தடுக்கப்பட்டு அவர்களாலேயே பூ பட்டுப் பின்னர் மந்திரியினால் உத்தியான வனத்தில் வசிக்கப்பெற்று அங்கு ஸ்திரீகளுடைய மோகவ யிற் சிக்குண்ணாது தவநிலை யிற்றங்கியிருந்த அற்புதத்தைக் கூறுதல்.

(18) சுகஜனக சமவாதம்

ஜனகர் தனது உத்தியான வனத்திலிருக்குஞ் சுகரைக்கண்டு அவரதுவைராக்கியமான சிலவாய் மொழிகளைக்கேட்டு வேததருமங்களைப் பலமுறையாக வெடுத்துக் கூறியதும், சுகர் அவ்வுவேதமொழிகளும் தருமநோக்கியதன்றென்று நிக்ரஹித்ததும், சனகர் அதனுண்மை விளங்கிய துங்கூறுதல்.

(19) சுகர் சந்தேக நிவிர்த்தி

சுகர், மீண்டும் சனகமாகாராசாவைப் பலவாறாக நிந்தித்து நீர் உண்மைஞானமுடைய வரனறென்று நிந்தித்ததும், சனகர் அனுபவமான சில திட்டாந்தத்தால் அவருக்குண்டாகிய சந்தேகத்தை யொழித்ததும், பின்னர் வியாசரிடஞ்சென்று அவர் மனம்போல் கிருஹஸ்தாச் சிரமமுடையவராய் அவரை மகிழ்வித்து சில

குழந்தைகளைப் பெற்றுவிட்டு ஆகாச சஞ்சாரியா யிருடிகளோடிருந்ததும், சுகர் பிரிந்துபோன சோகத்தால் வியாசர்சுகர், சுகர்வென்று கூவித்திருந்ததும் கூறுதல்,

20 - வது திருதராஷ் டிராதி யுத்பத்தி.

வியாசர், புத்திரசோகத்தால் பல விடங்களிற்சென்றுந் தணியப் பட்டது தனது தயாகிய சத்தியவதியை நோக்கிச்சென்று அவள் வரலாற்றை தெறிந்துகொண்டு அங்குமில்லாமற் றமது ஆசீர்மத்திற்கு வந்ததும், இவரது தாயாகிய சத்தியவதியை இரண்டாவது மனைவியாகக் கொண்ட சந்தனு மஹாராசன புத்திரர்களைப் பெற்று சுவர்க்கமடைந்ததும், அவ்வரசனது மூத்தாள் குமார ரிருவரும் அரசாண்டுமரள அவன் பத்தினிகளை வியாசர் புணர்ந்து திருதராஷ்டிரன் முதலானவர்களைப் பெற்றுதுங் கூறுதல்.

முதல் ஸ்கந்தம்

அத்யாய விஷயசூசனை

முற்றிற்று.

———

ஶ்ரீ திரிபுரசந்த பை நம:

தேவீ பாகவதம்.

முதலாவது ஸ்கந்தம்

அத்தியாய அட்டவணை

உ

ஸ்ரீ மஹாத்ரிபுரசுந்தர்யை நம:

தேவீபாகவதம்

முதல்ஸ்கந்தம்

——:0:——-

பராசத்திவணக்கம்

யாமாராத்ய விரிஞ்சிரஸ்ய ஜகத; ஸ்ரஷ்டாஹரி; பாலக
ஸம்ஹர்த்தர கிரிசஸ்வயம் ஸமபவத் தியேயா சயாயோகிபி

யாமாத்யாம் ப்ரகிருதிம்வதந்தி முநய ஸ்தத்வார்த்த விஜ்ஞாபராம்
தாம்தேவீம் பிராணமாமி விஸ்வஜநீம்ஸ்வர்க்காப வர்க்கப்ரதாம்

யாஸ்வேச்ச யாஸ்ய ஜகத; ப்ரவிதாயசிருஷ்டிம்
ஸம்பிராப்யஜன்ம சததா பதிமாபதம்பும்

உத்ரை ஸ்தவோபி ரபியாம் ஸமவரப்யபதநீம்
ஸம்பு; பதம் ஹ்ருதிதயே பரிபாதுஸாந

பிரமன் விஷ்ணு ருத்ரர்கள் எந்த பராசத்தியைப் பூசித்து இவ்வுலகிறகு முறையே படைத்தல் காத்தல் அழித்தல் முதலிய அதிகாரங்களைப் பெற்றார்களோ, பரமயோகிகளால் எந்த ஆதி சத்தி சொரூபமானது எப்பொழுதும் தியானிக்கத்தகுந்ததோ, தத்வார்த்த முணர்ந்த மஹரிஷிகள் எந்த பராசக்தியை முதற் காரணமாகக் கூறுகின்றனரோ அங்ஙனமான போகமோஷங்களைத்தரும் பிரபஞ்சமாதாவாகிய அம்பிகையை நமஸ்கரிக்கின்றேன்.

எந்த அம்பிகை தனதிச்சாமார்ததிரத்தினால் பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்கின்றனளோ, எந்தத் தாக்ஷாயணி பர்வதராஜ புத்திரியா யவதரித்து உக்ரமான தபோபலத்தினால் பரமசிவனைப் பதியா கவடைந்தனளோ, எந்த பார்வதியைப் பரமசிவன் பத்தினியாகக் கொண்டு அவளது பாதத்தை இருதயத்தில் வைத்துக் கொண்டனரோ அப்படிப்பட்ட தேவி நம்மைக்காப்பாற்றுக. ஸர்வ சைதன்ய ரூபாந் தாமாத் யாம் வித்யாஞ்ச தீமஹி புத்திம்யாந : ப்ர்சோதயாத்.

முதல் அத்யாயம்.

சவுனகர்வினா.

(க-ங) சூதமுனிவரே, நீர் சுபகரங்களான புராணங்களுளடங்கிய சங்கிதைகளைக் கற்றுணர்ந்தவரா; யிருக்கின்றபடியால் நீரே

மஹாபுண்யபுருஷர், மஹானுபாவர், மஹாபாக்யசாலி, சத்ய வதீபுத்ரராகிய வியாசமுனிவர் முகமாய்ச் சங்கிதைகளேயன்றி பஞ்சலஷண முள்ளதாகியும், அதிகரகசியத்துடன் கூடியனதாகியும், ஜ்ஞானப்பிரதமகியும், திவ்யம் (மனசுக்கு ரம்யமாகியு) மிருக்கின்ற *சகலபுரா ணங்களையும் கற்றுணர்ந்தவர்.

(சு-சு) இத்தகயை சிறப்புவாய்ந்த தேவரீர்) எங்களுடைய புண்யசம்பந்தத்தினால், மனோகரமாகியும், விஸ்வசனம் (நம்பத்தகுந்ததாகியும்) புண்யரூபமாகியும், கலிதோஷத்தைப் போக்குவதாகியும், மிகவா் உத்தமமாகியும் இருக்கின்ற (இந்த ஷேத்திரத்தை வந்தவடந்தீர்.

ஓ சர்வஜ்ஞரே, தாபத்திரயமில்லாதவரே, மஹாபாக்யிசீலரே நீர் நீடுழி காலமிருக்க வேண்டும். இங்கிருக்குங் கூட்டத்தவராகிய முனிவர்களெல்லாம் பெரும்புண்ணியத்தைத் தருவதாகிய புராண்சங்கிதைகளைக் கேட்க விருப்பமுள்ளவர்களா யிருக்கின்றனர்.

---

*சகலபுராணங்களென்றது உப்புராணங்களை இம்மூன்று சுலோகங்களால் முறையே - சவுனகமுனிவரை யுள்ளிட்டமுனிவர்களெல்லாம் சூத முனிவரைப் போதகாசிரியராகக் கொண்டனராகையான் அக்கொள்கை தோன்ற மஹாபுண்யபுருஷர், மஹானுபாவர், மஹாபாக்யசாலி என ஒவ்வொருபதங்களையும் உபசர்க்கத்துடன் புகழ்ந்தும் எனவே - (அடைமொழியினால் சொல்லப்படுபொருளை வேறொருபொருளைக் கொண்டு வலியுறுத்தியும்,) அவர் அனுக்ரஹசாமர்த்திய முடையவரென்பது தோன்றப் புராணங்களுளடங்கிய சங்கீதைகளைக் கற்றுணர்ந்தவரெனவும், சகலபுராணங்களையும் அறிந்திருக்கின்றீரெனவுங் கூறினார்.

இவற்றுள் புராணங்களுளடங்கிய சங்கிதைகளை முன்னும் அதன்பின் டதினெண்புராணங்களையும், அதன்பின் உபபுராணங்களையும் உணர்ந்தவரென்றது என்னையோவெனின் - உபபுராணங்கள் புராணங்களை வலுயுறுதுவன, அப்புராணங்கள் சங்கிதைகளைத் தலைமையாகக் கொண்டு தழுவியிருப்பன. ஏனெனின் - "ஸ்ருதிஸம்மிதாமிதி சகலஸ்ருத்யர்த்த சங்கிர ஹாத்மிகரம்" என்பது பிரமாணம்ரகலான் அத்தலைமைபற்றி அங்ஙனங் கூறியதென்க.

ஆயின் சங்கிதைகளையும் புராணோப் புராணங்களையு முணர்ந்தவரேன்று கூறினாரேயன்றி வேதங்களை யோதியுணர்ந்தவரென்று கூறாததென் னையோவெனின் புராணாதிகளையுணராது வேதமாத்திர முணர்ந்தவன் வேதத்தைத்துன்பஞ் செய்கிறவனென்றும் புராணங்களுணர்ந்தவன் வேதப்பொருளை யுணர்ந்தவனென்றுங் கூறியிருத்தலான் புராணங்களைக் கற்று ணர்ந்தவரென்று கூறுவே வேதங்களையும் அறிந்தவரென்றே கொள்ளக் கிடந்தன.

புராணங்களின் சிறப்புத்தோன்ற வியாசமுனிவரால் சொல்லப்பட்ட கெனவும், பஞ்சலக்ஷணருள்ளதெனவும், சகலரகசியங்களுங் கூடினதெனவும், சூதமுனிவர் சிறப்புத்தோன்ற புராணங்களுணர்ந்தவரெனவுங் கூறியதென்க.

ஆகையால் வேதத்துக்குச் சமானமாயுள்ள அப்புராணங்களை எங்களுக்குச் சொல்லவேன்டுமென்கிற கருத்துடன் சொல்லியருளல் வேண்டும்.

(எ-க0) ஓ சூதமுனிவரே; சுரேத்திரேந்திரியத்துடன் கூடினவர்களாயும், அறுசுவையறிவதில் சமர்த்தர்களாயும் இருக்கின்ற எந்தமானிடர் புராணங்களைக் கேட்கிறதில்லையோ, அவர்கள் தெய்வத்தினால் வஞ்சனை செய்யப்பட்டவர்களன்றோ (எனவே, கேட்கும் புண்ணியமாகிய ஊழ் இல்லை யென்றபடி) காதில்லாமலிருக்கிறசர் ப்பங்களே ஆகாசத்தின் குணமாகிய சப்தபேதங்களால் மிகவும் பிரமிக்கின்றன வென்றால், மானிடயாக்கையைப் பெற்றவர்கள் சத்வாக்யங்களைக் கேளாராயின் கேட்குங்காதுகளைப் படைத்தவராயினும்; அவர்கள் எவவாற்றானுங் காதுகளைப் படையாதவர்களே (சிறிபோர்களுக்கு) அறுசுவைகளால் எப்படி ஜிஹ்வேந் ()திரியானந்தம் உண்டாகிறதோ அப்படியே பெரியோர்களுக்கு சத்வாத்யங்களால் சுரோத்திரேந்திரி யானந்தம் உண்டாகிறதென்று சொல்லப்படுகிறது. *

ஆகையால், சவும்யரான (சாந்தரான) சூதபகவானே இம்முனிவர்களெல்லாம் இக்கலியினது கொடுமையை எண்ணி பயந்தவர்களாய்ப் புராணங்களைக் கேட்கவேண்டுமென்கிற சிரத்தை யோடு இநநைமிசாரண்யத்தில் வசிக்கின்றார்கள்.

(கக-கசு) இவ்வுலகின்கண் காலம் ஏதாவது ஒருபாயத்தினாற் கழிக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றது (அதுபோலவே மூர்க்கர்களுக்கு) வியசனத்தினாலும் பண்டிதர்களுக்குச் சாத்திர

+ இம்மூன்று சுலோகங்களால் முறையே புண்ணிய வசத்தால் நைமி ரண்யங் கிடைத்தது போல் நீருங்கிடைத்திரென வருகையைக்கூறி அவனா மகிழ்வித்தனரெனவும், நைமிசவனமும் முனிவராகிய வும்மையுங் கிடைக்கப்பெற்ற புண்ணியத்தின்பயன் புராணங்கேட்பதே யாமெனத் தமது அனுக்ரஹ சீலமுடைமை புலப்படுத்தி அவரைக்கருத்துடையவராய்ச் சொல்லவேண்டுமென்று கேட்டனரெனவும், உம்மால் எங்களுக்குக்கிடைக்கப்படுவதாகிய செவிச்செல்வம் எந்நாளு நீங்காதிருக்க வேண்டுமெனத்தமது அன்புடைமையைக் காட்டி அவரை நீடுழிகாலம் இருக்கவேண்டுமென்று வாழ்த்தினரெனவுங் கொள்ளற்பாற்று.

() திரியானந்தம் - பெண் மூன்று

*அவர்கள் வேறுசில கேட்கின்றார்களே என்பவரைமறுத்தற்கு ஸகர்ணாயே நஸ்ருண்வந்தி தேப்யகர்ணா : க்தஞ்சந என்றார். இதனால் அவர்கள் அர்த்தமில்லாத சொல்லென்றது - கேட்கப்படு நூற்பொருளமையாதசொல், அச்சொன் மாத்திரங் கேட்பராயின் பொருள்விளங்குவதும், கேட்கப்படு நூற்பொருனமைந்த சொல்லைக்கேட்பராயின் பொருள் விளங்காமையுமான செவியைப்படைத்தவர்கள்

மஹாபுண்யபுருஷர், மஹானுபாவர், மஹாபாக்யசாலி, சத்யவதீபுத்ரராகிய வியாசமுனிவர் முகமாய்ச் சங்கிதைகளேயன்றி பஞ்சலஷண முள்ளதாகியும், அதிகரகசியத்துடன் கூடியனதாகியும், ஜ்ஞானப்பிரதமகியும், திவ்யம் (மனசுக்கு ரம்யமாகியு) மிருக்கின்ற *சகலபுரா ணங்களையும் கற்றுணர்ந்தவர்.

(சு-சு) இத்தகயை சிறப்புவாய்ந்த தேவரீர்) எங்களுடைய புண்யசம்பந்தத்தினால், மனோகரமாகியும், விஸ்வசனம் (நம்பத்தகுந்ததாகியும்) புண்யரூபமாகியும், கலிதோஷத்தைப் போக்குவதாகியும், மிகவர் உத்தமமாகியும் இருக்கின்ற (இந்த ஷேத்திரத்தை வந்தவடந்தீர்.

ஓ சர்வஜ்ஞரே, தாபத்திரயமில்லாதவரே, மஹாபாக்யிசீலரே நீர் நீடூழி காலமிருக்க வேண்டும். இங்கிருக்குங் கூட்டத்தவராகிய முனிவர்களெல்லாம் பெரும்புண்ணியத்தைத் தருவதாகிய புராண்சங்கிதைகளைக் கேட்க விருப்பமுள்ளவர்களா யிருக்கின்றனர்.

---

*சகலபுராணங்களென்றது உப்புராணங்களை இம்மூன்று சுலோகங்களால் முறையே - சவுனகமுனிவரை யுள்ளிட்டமுனிவர்களெல்லாம் சூத முனிவரைப் போதகாசிரியராகக் கொண்டனராகையான் அக்கொள்கை தோன்ற மஹாபுண்யபுருஷர், மஹானுபாவர், மஹாபாக்யசாலி என ஒவ்வொருபதங்களையும் உபசர்க்கத்துடன் புகழ்ந்தும் எனவே - (அடைமொழியினால் சொல்லப்படுபொருளை வேறொருபொருளைக் கொண்டு வலியுறுத்தியும்,) அவர் அனுக்ரஹசாமர்த்திய முடையவரென்பது தோன்றப் புராணங்களுளடங்கிய சங்கீதைகளைக் கற்றுணர்ந்தவரெனவும், சகலபுராணங்களையும் அறிந்திருக்கின்றீரெனவுங் கூறினார்.

இவற்றுள் புராணங்களுளடங்கிய சங்கிதைகளை முன்னும் அதன்பின் டதினெண்புராணங்களையும், அதன்பின் உபபுராணங்களையும் உணர்ந்தவரென்றது என்னையோவெனின் - உபபுராணங்கள் புராணங்களை வலுயுறுதுவன, அப்புராணங்கள் சங்கிதைகளைத் தலைமையாகக் கொண்டு தழுவியிருப்பன. ஏனெனின் - "ஸ்ருதிஸம்மிதாமிதி சகலஸ்ருத்யர்த்த சங்கிர ஹாத்மிகரம்" என்பது பிரமாணம்ரகலான் அத்தலைமைபற்றி அங்ஙனங் கூறியதென்க.

ஆயின் சங்கிதைகளையும் புராணோப் புராணங்களையு முணர்ந்தவரேன்று கூறினாரேயன்றி வேதங்களை யோதியுணர்ந்தவரென்று கூறாததென் னையோவெனின் புராணாதிகளையுணராது வேதமாத்திர முணர்ந்தவன் வேதத்தைத்துன்பஞ் செய்கிறவனென்றும் புராணங்களுணர்ந்தவன் வேதப்பொருளை யுணர்ந்தவனென்றுங் கூறியிருத்தலான் புராணங்களைக் கற்று ணர்ந்தவரென்று கூறுவே வேதங்களையும் அறிந்தவரென்றே கொள்ளக் கிடந்தன.

புராணங்களின் சிறப்புத்தோன்ற வியாசமுனிவரால் சொல்லப்பட்ட கெனவும், பஞ்சலக்ஷணருள்ளதெனவும், சகலரகசியங்களுங் கூடினதெனவும், சூதமுனிவர் சிறப்புத்தோன்ற புராணங்களுணர்ந்தவரெனவுங் கூறியதென்க.

ஆகையால் வேதத்துக்குச் சமானமாயுள்ள அப்புராணங்களை எங்களுக்குச் சொல்லவேண்டுமென்கிற கருத்துடன் சொல்லியருளல் வேண்டும்.

(எ-கO) ஓ சூதமுனிவரே; சுரேத்திரேந்திரியத்துடன் கூடினவர்களாயும், அறுசுவையறிவதில் சமர்த்தர்களாயும் இருக்கின்ற எந்தமானிடர் புராணங்களைக் கேட்கிறதில்லையோ, அவர்கள் தெய்வத்தினால் வஞ்சனை செய்யப்பட்டவர்களன்றோ (எனவே, கேட்கும் புண்ணியமாகிய ஊழ் இல்லை யென்றபடி) காதில்லாமலிருக்கிறசர் ப்பங்களே ஆகாசத்தின் குணமாகிய சப்தபேதங்களால் மிகவும் பிரமிக்கின்றன வென்றால், மானிடயாக்கையைப் பெற்றவர்கள் சத்வாக்யங்களைக் கேளாராயின் கேட்குங்காதுகளைப் படைத்தவராயினும்; அவர்கள் எவவாற்றானுங் காதுகளைப் படையாதவர்களே (சிறிபோர்களுக்கு) அறுசுவைகளால் எப்படி ஜிஹ்வேந் ()திரியானந்தம் உண்டாகிறதோ அப்படியே பெரியோர்களுக்கு சத்வாத்யங்களால் சுரோத்திரேந்திரி யானந்தம் உண்டாகிறதென்று சொல்லப்படுகிறது. *

ஆகையால், சவும்யரான (சாந்தரான) சூதபகவானே இம்முனிவர்களெல்லாம் இக்கலியினது கொடுமையை எண்ணி பயந்தவர்களாய்ப் புராணங்களைக் கேட்கவேண்டுமென்கிற சிரத்தை யோடு இநநைமிசாரண்யத்தில் வசிக்கின்றார்கள்.

(கக-கசு) இவ்வுலகின்கண் காலம் ஏதாவது ஒருபாயத்தினாற் கழிக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றது (அதுபோலவே மூர்க்கர்களுக்கு) வியசனத்தினாலும் பண்டிதர்களுக்குச் சாத்திர

+ இம்மூன்று சுலோகங்களால் முறையே புண்ணிய வசத்தால் நைமி ரண்யங் கிடைத்தது போல் நீருங்கிடைத்திரென வருகையைக்கூறி அவனா மகிழ்வித்தனரெனவும், நைமிசவனமும் முனிவராகிய வும்மையுங் கிடைக்கப்பெற்ற புண்ணியத்தின்பயன் புராணங்கேட்பதே யாமெனத் தமது அனுக்ரஹ சீலமுடைமை புலப்படுத்தி அவரைக்கருத்துடையவராய்ச் சொல்லவேண்டுமென்று கேட்டனரெனவும், உம்மால் எங்களுக்குக்கிடைக்கப்படுவதாகிய செவிச்செல்வம் எந்நாளு நீங்காதிருக்க வேண்டுமெனத்தமது அன்புடைமையைக் காட்டி அவரை நீடுழிகாலம் இருக்கவேண்டுமென்று வாழ்த்தினரெனவுங் கொள்ளற்பாற்று.

() திரியானந்தம் - பெண் மூன்று

*அவர்கள் வேறுசில கேட்கின்றார்களே என்பவரைமறுத்தற்கு ஸகர்ணாயே நஸ்ருண்வந்தி தேப்யகர்ணா : க்தஞ்சந என்றார். இதனால் அவர்கள் அர்த்தமில்லாத சொல்லென்றது - கேட்கப்படு நூற்பொருளமையாதசொல், அச்சொன் மாத்திரங் கேட்பராயின் பொருள்விளங்குவதும், கேட்கப்படு நூற்பொருனமைந்த சொல்லைக்கேட்பராயின் பொருள் விளங்காமையுமான செவியைப்படைத்தவர்கள்

சிந்தனையினாலுங் கழிக்கப்படுகிறது. சாஸ்திரங்கள் விசித்திரமாயும், *ஜல்பவாதங்களுடன் கூடினவைகளாயும், அநேகவிதமான அர்த்தவாதத்துடன் கூடினவைகளாயும், ஏதுக்களுடன் கூடினவைகளாயும், மிகவும் பெரிதானவைகளாயு முள்ளன. (அவைகளில்) வேதாந்தம் சாத்வீகமெனவும், மீமாம்ஸம் இராஜசமெனவும், தர்க்கம் தாமசமெனவும் ஏதுவாதங்களால் வரையறுக்கப் பட்டிருக்கின்றன. வேதாந்தாதிகளுக்குக் கூறியபடியே புராணங்களும் முக்குணங்களுடையனவென்றும் சர்க்கம் பிரதிசர்க்கமாகிய ஐந்திலக்கணங்களுடையனவென்றும் உம்மால் கதாரூபமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது.

(கரு-கசு) அவற்றுள், பாகவதம் மிகவும் புண்யத்தைத் தருவதாகியும், வேதத்துக்குச் சமானமாகியும், ஐந்தாம் வேதமென்னும் பெயருடையதாகியும், எல்லா லஷணங்களோடு கூடினதாகியு முள்ளது என்று உம்மால் முன்னங் கூறப்பட்டிருக்கின்றது. இந்த் பரமாத்புதமாகிய பாகவதம் எண்ணியமாத்திரத்தில் முமூக்ஷுக்களுக்கு மோஷப்பிரதமாகியும், அப்படியே தர்ம காமசிந்தனையுடையவர்களுக்குத் தர்மகாமப் பிரதமாகியும் இருக்கிறதென்றுஞ் சொல்லியிருக்கின்றீர்.

ஆகலான் அவர்கள் செவியுடையவர்களாயினுஞ் செவியில்லாதவர்களே, இதனை, "கேட்பினுங்கேளாத்தகையவே கேள்வியாற்றோட்கப்படாதசெவி" என்றதனாற் காலம் எவவே, கேள்வியாற் றுளைக்கப்படாத செவிகள் தம்புலமாகிய வோசை மாத்திரங் கேட்குமாயினுஞ் செவிடர்ந்தன்மையேயாம். ஏனெனின் ஓசை மாத்திரத்தான் இம்மைமறுமைப்பயனாகிய உறுதியடையாமையின் கேட்பினுங் கேளாத்தகையவே என்றார். கேள்வி என்பது உட்டுளையையுடைய காதினை மனத்தின்கண் நூற்பொருணுழைதற்கு வழியாக்குங்கருவி என்று கூறியிருத்தலாற்காண்க.

+ இந்நானகு சுலோகங்களுள் முதலாவது அனுக்ரஹ சாமர்த்தியமுடைய உம்மை யாங்களடையப்பெற்றும் புராணார்த்தங்களைக் கேளாடுதொழிவேமாயின் தொன்றுதொட்டுவரும் புண்ணியமில்லாதவரென்றும் அதனால் கேள்விகேட்கும் புண்ணியத்தைத் தெய்வங்கூட்டாதொழிந்தது என்றும் அறிஞரால் இழித்துரைக்கப்படும் பழிப்புரையைச் சொல்லப்பெறுவோம். ஆகலின் அ௺தெங்களுக்குண்டாகாவண்ணஞ் செய்யவேண்டுமென்றுணர்த்த "வஞ்சிதாவிதி நாஹிதெ" எனவும். இரண்டாவது, நீர் கற்றுணர்ந்த கல்விகளெல்லாம் உணரும் அதிகார சீலமுடையவராயிருக்கின்றோம் எம்பால் உம்முடைய சாஸ்திரத்தை மொழியீராயின் உமக்கு உலகின்கண் பிரகாசமின்றாம். ஆகலின் அவ் வப்பிரகாசம் உமக்கு உண்டாகாவண்ணஞ் சொல்லவேண்டுமென்றுணர்ந்த "ஸுதியாம் வசேரபி : ஸரோத்திரேந்திரிய ஹ்லாத : ஸ்மிருத : எனவும், மூன்றாவது, தொன்று தொட்டுவரும் புண்ணியமில்லாதவர்கள் என்கிற பழிப்புரைவருவதேயன்றி அர்த்தமில்லாதசொல்லைமாத்திரங் கேட்குஞ்

(கஎ-உ0) ஆகையால்யாங்னைவரும் நூல்களிற்சிறந்து அறமுதலியன் தரும் சுபகரமாகிய இந்த உத்தமமான பாகவத்தைக் கேட்க ஆசையுடையவர்களா யிருக்கின்றோம். ஓ! தா்மபரிசீலனரே? நீரொருவர் தான் வியாசரால் உபதேசிக்கப்பட்ட புராண சங்கிதைகளை நன்றாயறிந்தவா, (அன்றியும்) ௵ குருபக்தியிற் சிறந்தவர், (அதனால்) சத்வகுணங்களுக்கெல்லாம் வாசஸ்தானமாக விருக்கின்றீர். ஓ! சா்வஞ்ஞரே? உம்முடைய திருவாக்கினின்றும் வெளிப்பட்ட வேறுசில புராணங்களை யாங்கள் கேட்டவா்களாயிருந்துத் தேவர்கள் எங்ஙனம் அமிர்தபானம் செய்வதில் திருப்தியடைந்திலரோ அங்ஙனமே இப்பொழுது யாங்கள் சிறிதுந்திருப்தியடைந்திலம் (எனவே) தேவர்களுக்கு அமிர்தம் உண்பதில் (நீங்காத) விருப்பமுண்டாவதுபோல் எங்களுக்குப் புராணங்களைக் கேட்பதில் நீங்காத விருப்பமுண்டாகிறது. ஓ! சூதரே? அமிர்தபானஞ் செய்யுந் தேவர்களுக்கு அந்த அமிர்தபானத்தால் முக்தியென்பது ஒருஞான்றும் அந்தோ உண்டாவதேயில்லை, பாகவதமென்னும் அமிர்தத்தைப்-பானம்செய்யு மக்கட்பிறப்பினர் அக்கணமே சங்கடத்தினின்றும் விடுபடுகின்றனா். (எனவே அமிர்தபானம் நரைதிரை மூப்பைப் போக்குவதேயன்றி முக்தியைத் தருவதன்று (அதனால்) திக் (துச்சம்) பாகவதமென்னும் அமிர்தத்தை

செவியைப்படைத்தவர்கள் போல் இவர்களும் அவிவேகிகளென்று எங்களையாவரும் அனாதரண்யஞ்செய்வார்களென்றுணர்த்த ஸகர்ணாயேஸ்ருண்வந்தி தேப்யகரணா : கதஞ்சன எனவும், நான்காவது, யாவராலும் புகழுரையும் ஆதரணீயமும் உண்டாகவேண்டுமென்கிற எண்ணமே யன்றிக் கலிபீடா நிஸ்ராணமும் உண்டாகவேண்டுமென்கிற ஆசக்சியையும் உடையவர்களா யிருக்கின்றோம் எனபதுணர்த்த "அதஸ் ஸர்வேத்விஜாஸ்ஸௌம்ப ஸ்ரோது காமாஸ்ஸமா ஹிதந:" எனவுங் கூறினார்.

++ விசனமாவது, காமந்தக : "மிருகயாக்ஷோ திவாஸ்வாப : பரிவாத ஸ்திரியோமதஃதவுர்யத்ரிகம் வ்ருதாடாட்யா காமஜோ தசகோகுணஃ; எனவருதலாற் காண்க. மிருகையா-வேட்டையாடுதல், அக்ஷ:-சொக்கட்டானாடுதல், திவாஸ்வாப:-பகற்பொழுது தூங்கல், பிரவாத:-அபவாதங்கூறுதல், ஸ்திரிய:- எப்பொழுதும் மோஹத்தினால் பெண்களோடு கூடியிருத்தல், மத:- செருக்கடைந்திருத்தல், தவுர்யத்ரிகம் - ஆடலைப்பார்த்தல் பாடலைக்கேட்டல் வாத்தியங்களை வாசித்தல், விருதாடாட்ய - எப்பொழுதும் வீணாகச் சஞ்சரித்தல் (ஆகபத்து) இப்பத்தும் மூர்க்கரிலக்கணம். ஆடலென்பது பதத்தினர்த்தத்தைக் காட்டுவதாகிய அபிநயம்.

இதனால் மூர்க்கர்களுக்கு இங்ஙனம் கூறியவகையான் காலம்போவதுபோல் எங்கள் காலம்போகாது சாஸ்திர சிந்தனையிலேயே போகவேண்டுமென்று குறித்ததென்க.

(க்ராவம்-கேட்பது) நரைதிரை மூப்பைத் தருவதாகிய தேசபந்தத்தை யொழித்து முக்தியை அக்கணமேதரும் அதிசயத்தை யுடைத்து.

(உக-உசு) ஓ! சூதரே? யாங்கள் அமிர்தபானம் உண்டாம் வண்ணம் எண்ணிறந்தயாகங்கள் செய்தனம். அங்ஙனஞ் செய்தும் யாங்கள் ஒரு சிறிதும் சாந்தியடைந்தோமில்லை. (எனவே) யாகங்களால் எங்கள் மனம் உபசாந்தியடைந்ததில்லை. (சனனமரணதுக்க நீங்கியதில்லை). யாகத்திற்குப் பலன் சொர்க்கத்தை யடைவதும் மீளவும் அச்சொர்க்கத்தினின்றும் அதப்பரனமாவதும் இயற்கை, இவ்வாறே இந்த சமுசார சங்கரத்தில் மாறிமாறிச் சுழன்றிருப்பதே நிரந்தரமாயுள்ள செயல். இதனால் ஒரு சிறிதுஞ் சாந்தியடைந்தோமில்லை. ஓ! சர்வஜ்ஞரே? திரிகுணாத்மகமான இந்தக் காலசக்கரத்திற் சுழன்று கொண்டிருக்கின்ற ஆன்மாக்களுக்கு ஞானோதயமின்றி ஒருபொழுதும் முக்தியுண்டவதேயில்லை. (எனவே) ஞானத்தினால் கன்மநிவர்த்தி யுண்டாமன்றி @யாகாதி #சிர்த்தியங்களால் அஃதுண்டாவதில்லை. ஆகையால் எல்லா ரசங்களோடு கூடினதாயும் புண்ணியசொரூபமாயும் பரிசுத்தமாயும் முத்தியைத் தருவதாயும் ரகசியமாயும் முமூட்சுங்களுக்கு எப்பொழுதும் விருப்பமாயும் உள்ளபாகவதத்தைச் சொல்லி யருளுமென்க.

முதல் ஸ்கந்தம் - முதல் அத்யாயம் சவுனகர் வினா

முற்றிற்று. ஆ ஸ்லோகம் (உசு)

---

* ஜல்பமாவது - பரபக்ஷத்தை நிராகரித்து சுபக்ஷஸ்தரபனஞ் செய்தல், வாதமாவது-பிராமாண்யபலத்தி னுண்மையை யறியவேண்டு மென்கிற விருப்பங்கொண்டு பரபக்ஷத்தாரோடு சம்பாஷித்தல், அர்த்தமாவது "நியாயசித்தாந்தமஞ்சர்யாம்" ஆகாக்ஷவாத : விரோதேகுணவாதஸ்யா தநுவாதோவதாரிதே, பூதார்த்தவரத ஸ்துத்தாநா தர்த்தவாதஸ்திரிதரபத:" அர்த்தவாதம் மூன்றுகிளைகளாகப் பிரித்திருக்கின்றது. அதாவது குணவாதம், அநுவாதம் பூதார்த்தவாத மென்பன. இவற்றின் விரிவைப் பின்னர் வருமிடத்திற காண்க.

இதனால் சாஸ்திரபுராணாதிகள் முக்குண. புந்தமுடையவாகியும் பஞ்சலக்ஷணங்களோடு கூடினவைகளாகியும் இருக்கின்றனவென்று குறிக்கப்பட்டன.

$ இதனால் குருபக்தியுடையவர்க்கே குணசீலத்னமும். அதனால் தர்மசிந்தனையும் இவ்விரண்டு முடைமையான் சற்குருலாபமும் அந்த லாபத்தால் சாஸ்திரஜ்ஞானமும் உண்டாமென்னு முறைமையை விளக்கினமைகான்க.

"மஹாத்மபி:" என்றதனால் முனிவர் சிறப்பும், "மஹத்புண்யம் வேதவிஸ்ருதம்" என்றதனால் புராணச் சிறப்பும், "தன்யோஹம் - அதி பாக்யோஹம் பாவிதோஹம்" என்பவைகளால் புராணத்தை எடுத்துக் கூறுவதனால் வரும் பிரயோசனமும் கூறியவாறு.

@ யாகாதி - வேள்வி # சிர்த்தியங்களால் - பிதுர்கன்மம்

இரண்டாம் அத்யாயம்

ஸ் க ந் த ச ங் கி யா தி க த ன ம்.

(க-ங) ஓ! நைமிசாரண்ணிய முனிவர்களே; மஹான்களாகிய நீவிர் என்னைப் பார்த்து மஹா புண்ணியத்தைத் தருவதாயும், வேதங்களில் முறையிடப்பட்டதாயுமுள்ள தேவீ பாகவதபுராணத்தைச் சொல்லுமென்று கேட்டதனால், யான் தன்யனாயினேன், மஹாபாக்யசாலியாயினேன், பரிசுத்தனுமாயினேன். ஓ! அந்தணர்களே; மிகவும் மேன்மையுடையதாகியும் மனோகரமாகியும் முத்திப்ரதமாகியும் பிரமனாதியரால் சேவிக்கப்பட்டதாகியும் தோத்திரஞ்செய்வதில் ஆசையுடையவர்களான முனிவர்களால் எப்பொழுதுந் தியானிக்கத் தக்கதாகியுமுள்ள அந்தப் பராசத்தியின் பாதாரவிந்தத்தைவணங்கி

வேதார்த்தத்திற்கும் ஆகமத்திற்கூறும் ரகஸ்யத்திற்கும் விரோத மின்மையை எடுத்துக்கூறுவது இப்புராணமென்பது தோன்ற "ஸர்ஸுருத்யர்த்தம்" "ஸர்வசாஸ்திராணாம் ஆகமரநாம் அநுத்தமம்" எனவும் வேதரார்த்தசம்மத முள்ளது எதுவோ அதுவே தமக்குச்சம்மதமென்பது தோன்ற "ஸம்ப்ரவக்ஷ்யாமி" எனவுங் கூறினார்.

யோசிகளடைய விருப்பும் முத்தியும், பிரமனாதியர்பெற விருப்பும் கிருஷ்டியாதி அதிகாரமும், முனிவர்கள் நிலைபெறவிருப்பும் மனனசீலமும் எண்ணியாங்களிப்பது தேவியினது பதகமலங்களே யாகவான் "ஸுலலிதம் முக்திபரதம் யோகினாம்" எனவும், "பிரம்ஹாத்யை ரபிஸேவிதம்" எனவும், "ஸ்துதிபரை:முனீந்த்ரை:தியேயம்" எனவும், தேவியினுடைய பாதம் மனோவாக்கிறந்த விடத்துத் தோன்றுவதாகலான் தத்பதமெனவுங் கூறினார்.

"வித்யை அத்யை சர்வஜ்ஞை"? என்று சிவசத்தியின் ஜ்ஞானசத்தியையும், "பவபந்தச்சிதி நீபுணா" என்று அச்சத்தியின் கிரியாசத்தியையும், "ஸர்வாஸ்ரயேஸம்ஸ்திதா" என்று அச்சத்தியின் இச்சரசத்தியையும், "துர்ஜ்ஞேயாஸு துரத்மபி:" என்று அச்சத்தி திரோதரன சத்தியாயிருத்தலையும், "முனிபிரத்யானாஸ்பதம்" என்று அச்சத்தி அனுக்கிர ஹசத்தியாயிருத்தலையும் விதந்தமைகாண்க.

இதனானே சிவசத்தி, இச்சாசத்தி-ஞானசத்தி-கிரியாசத்தி-கிரோதரனசத்தி - அனுக்ரஹசத்தி எனப்பஞ்சசத்திகளாய் விவகரிக்கப்பட்டிருத்தல் காண்க.

அன்றியும், இந்தப் பொருளடங்கிய "பாவித்யே;ய பிதியதேஸ்ருதிய தேசக்திஸ்ஸதாத்பாபரம் சாவஜ்ஞாபவபந்தசித்திநிபுணா கர்வாசயேசம்ஸ்திதா, துர்ஜ்ஞேயாக துராத்மபிஸ்ச முநிபித்யாநா ஸ்பதம் பிராட்தா, பிரத்ய க்ஷாபவதீ ஹஸாபகவதீ புத்திப்ரதா ஸ்யாத்தஸதா" என்னும் இந்த சுலோகத்தில் "யாவித்யா" என்று தொடுத்து "ஸ்ர்வஸயே ஸமஸ்திதா" என்று ஓர்முடிவும், "துர்ஜ்ஞேயா" என்று தொடுத்து "தியானாஸ்பதம் ப்ராபிதா" என்று ஓர் முடிவுமாகக் கூறினமையான். அப்பராசத்தியை ஞானக்கிரியா சத்தியாகவே தியானித்து என்னுடைய மனவர்க்குகளுக்கு வியஞ்சகமாயிருந்து வேதார்த்தங்களை யறியவும் சொல்லவும் செய்யவேண்டுமென்று வணங்கியதரமென்றுங் குறிப்பாற்கொள்ளக் கிடந்தன.

அதிக ரசமுள்ளதா்யும் உத்தமமாயும் எல்லா ரசங்களுக்கிருப்பிடமாயும் சகல வேதார்த்த சம்மதமாயும் சகல சாஸ்திரசம்மதமாயும் ஆகமங்களுக்குள் உத்தமமாயும் தேவியினுடைய நாமத்தினால் பிரசித்தி பெற்றதாயுமுள்ள ஸ்ரீ தேவீபாகவத புராணோத்தமத்தை அன்புடன் விரிவாய்ச் சொல்லுகின்றேன்.

எனக்கு, எந்த பராசத்தியை வேதத்தில் வித்தை எனவும், சர்வஜ்ஞை எனவும், ஆதியானவளெனவும், சமுசாரபந்தத்தைச் சேதிப்பதில் நிபுணை எனவும், சர்வாத்மாக்களுடைய இருதயகமலத்தில் வீற்றிருப்பவளெனவும், துராத்மாக்களால் அறியப்படாதவளெனவும், முனிவர்களால் தியானாஸ்பதத்தை அடைவிக்கச் செய்கின்றாளெனவுங் கூறப்படுகின்றதோ அந்த பகவதி பிரத்தியக்ஷமா யெழுந்தருளிவந்து எப்பொழுதும் நிர்மலபுத்தியைத் தருவாளாக.

(ரு) யாதொரு பராசத்தி திரிகுணாத் மகமாயிருக்கின்ற தன துசத்தியினால் சேதனாசேதனங்களாயுள்ள இந்த சகத்தைச் சிருட்டித்துக் காக்கின்றனளோ, அப்படியே #கற்பாந்தத்தில் இந்த சகத்தைச் சங்கரித்துத் தானொன்றாகவே யிருந்து விளையாடிக் கொண்டுருக்கின்றனளோ அங்ஙனமான உலகமாதாவாகிய பராசத்தியை மனதினால் தியானிக்கின்றேன்.

முக்குண சம்பந்தமாயிருக்கின்ற பிரகிருதிமாயாசத்தி சிவசத்தியாகிய பராசத்தியன்றி இயங்குவதின் றாகலான், திரிகுணாத்மகமா யிருக்கின்ற பிரகிருதிமாயையைத் தனது சத்தி எனவும், இவ்வுலகமெல்லாந் தத்துவதாத்திகங்களாகிய சடரூபமாகவும், உயிர்வாக்கங்களாகிய சித்ரூபமாகவுங் காணப்படுதலால் "அகிலம் சகதிதம் சதசத்ஸ்வரூபம்" எனவும், சிருட்டியாதி முத்தொழிலைச் செய்தல் பராசத்தியின் பகுதியனவாகவே 'கூறப்பட்ட வரமாதி சத்திகளின் காரியங்களேயாகலான் "சிருஷ்ட்வா பரிபாதிவிஸ்வம்" எனவும் இங்ஙனம் பலமுறையியற்றுதல் "ஐங்கலப்பாரஞ் சுமத்தல் சாத்தனுக்கு ஓர் விளையாட்டென்பது போல்" மிகஎளிமையா யியற்றுவதேயன்றி அத்தொழிலால் ஒரு சிறிதும் துன்பமுறுத விலவாகலான் "ரமதே" எனவும் சிருட்டியாதி காரியங்களுக்கேற்பப் பவசத்திகளாய்ப் பலபெயர்பெறினும் அவைகட்கெல்லாங் காரணசத்தி சிவசத்தி யொன்றேயாகலான் "ஏகா" எனவும், பக்கட்பிணியை யகற்றுந் தாயபோல் உயிர்களுக்கு மலநோயைச் சிருட்டியாதிகளாற் போக்கலான் "விஸ்வஜனனீம்" எனவும், பராசத்தி ஞானப்பிரதமாகலான் அச்சத்தியை ஞானத்தினால் வணங்கலே முறைமையாகலான் "மனஸாஸ்மராமி" எனவுங் கூறினார்.

கற்பாந்தத்தில்- உறுதியாயிருப்பது

*பராசத்தியே உலகத்தைப் படைத்தலென்பது உண்மையாயின் பெரியோரெல்லாம் பிரசித்தமாய் உலகமெல்லாம் படைத்தவர் பிரமதேவர் என்றும், அவரைப்படைத்தவர் விஷ்ணுமூர்த்தி என்றுங் கூறுவது என்னை என்னும்

(சு) (ஏனென்றால்) இவ்வுலகங்களை யெல்லாஞ் சிருட்டித் தவன் பிரமதேவனென்று வேதங்களைக் கற்றுணர்ந்தவராலும் *பவுராணிகர்களாலும் பிரசித்தமாய் வழங்கப்பட்டிருக்கின்றன, அவர்களாலேயே அப்பிரமனும் விஷ்ணுவினுடைய நாபீகமலத்தில் உத்பத் தியானானென்றுங் கூறப்பட்டிருக்கின்றன. இவ்விசாரத்தால் இவர்களெல்லாஞ் சிருட்டிக்குஞ் சுதந்தர மில்லாதவரென்று வெளியாகின்றது.

(எ) விஷ்ணுமூர்த்தி என்றாலோ கற்பாந்தகாலத்தில் ஆதிசேஷனாகிய சயனத்தில் உறங்குகின்றாரெனவும், அவருடைய நாபிக்கமலத்தில் பிரமன் உற்பத்தியாகின்றானெனவும், அந்த விஷ்ணுவுக்கு ஆயிரம்பணாமுடிகளையுடைய ஆதிசேஷன் ஆதாரமாயிருக்கின்றானெனவுங் கூறப்பட்டுள்ளனவன்றோ ? ஆகலான் அந்தமுராரி எப்படிபகவானென்று அழைக்கப்படுவர்.

(அ) பெருவெள்ளமாகிய கடனீரானது ஒருதன்மையாகிய ரசரூபமே, அந்தரசரூபமாகிய சலமானது (கடலென்கிற) பாத்திரமில்லாமல் ஒருபொழுது மிருப்பதன்று (அதுபோல்) தேவி சர்வான்மாக்களுடைய விஷயத்தில் சத்திரூபமாக விருக்கின்றாள். ஆகலான் அவ்வுலகமாதாவையே சரணமடைகின்றேன்.

பூர்வபக்ஷிகளை மறுத்தற்கு “ஸ்வதந்தர நஹி ஸ்ருஜதே” என்றார். எனவே இவர்களெல்லாம் அவரந்தரகாரண ராவர் என்று சித்தாந் தங்கூறியதாகும். ஏனெனின் கர்த்தா எனப்படுவோர் பிறராற் படைக்கப் படாதவராயிருத்தல் வேண்டும். படைக்கப்படுவாராயின் அவர் கர்த்தாவாகரீர். அன்றியும் அவர் கரணத்தாற் படைப்பவரேயன்றி சங்கற்பமாத்திரத்தாற் படைக்கும் ஆற்றலில்லாதவர் அதனால் அவரத்தொழிற்குச் சுதந்தரராகார் என்றும் வலியுறுத்தினமை காண்க.

* பவுராணி - பௌராணி

பராசத்தியை “மனசாஸ்மராமி” என்று ஞானத்தால் வணங்கிப் பின்னர் பிரமவிஷ்ணுக்கள் காரணராகார் அவர் தியானித்தற் குரியராகார் என்றெடுத்துக் கூறியது என்னையென் றாராயின்; சிருஷ்டியாதி கிர்த்தியங்களைச் செய்தல் பராசத்தியே இவர்களன்றெனவும், சங்கற்பமாத்திரையாற் படைத்தல். அச்சத்தியே, இவர்கள் கரணத்தாற் படைப்பரெனவும், ஆதாரமில்லாதிருத்தல் அச்சத்தியே, இவர்கள் ஆதாரத்தை யுடையபரெனவும், இக்காரணத்தால் பிரமனாதியர்தியானப்பொரு ளாகாராகலான். இங்ஙனம் வணங்காதொழிந்தோமெனவும் விளக்கி, சங்கற்பு மாத்திரத்தால் யாவையும் படைப்பவராய்த் தானொன்றேயா யிருப்பவரே தியானப் பொருளாவாரென அறிவுறுத்தியவாறு காண்க.

சலத்தினிடத்தில் சுவை எப்படி பிரிவில்லாம லிருக்கின்றதோ அதுபோலவே பிர்ஹ்மவிஷ்ணுக்களேயன்றி எல்லா வுயிர்களுடைய வுறிவிலுந் தொழிலிலும் பிரிவில்லாமல் அநநியமாய்ச் சிவசத்தி யிருப்ப தென்று குறித்தமை காண்க. இதனால்

(கூ) கமலாசனனாகிய பிரமன் முன்னொருகாலத்தில் விஷ்ணு மூர்த்தியை யோகத்திலிருப்பவராக வறிந்து எந்த தேவியைத் தோத்திரஞ் செய்யத் தொடங்கினனோ அந்த தேவியை நான் வணங்குகிறேன்.

க0. சகுணசொரூபியாயும் நிர்க்குணசொரூபியாயும் மாயா பந்தத்தையும் முத்தியையுந் தருபவளாயுள்ள அப்பராசத்தியைத் தியானித்து தேவீபாகவதமென்னும் புராணமுறைகள்யாவும் இவ்விடத்தில் சொல்லுகின்றேன் கேளுங்கள் முனிவர்களே!

(கக–களஎ) ஸ்ரீ மத்பாகவதமென்று சொல்லப்பட்ட இப்புராணம் உத்தமமாயும் புண்ணியரூபமாயுமுள்ளது. அது நன்றாய்ச் சோதிக்கப்பட்ட வியாசமுனிவரால் பதினெண்ணாயிரஞ் சுலோகங்களாகவும் பன்னிரண்டு ஸ்கந்தங்களாகவும் முந்நூற்றுப் பதினெட்டு அத்தியாயங்களாகவுஞ் செய்யப்பட்டது. முதல் ஸ்கந்தம்

முன்னர் பிரமனாதியர் அகாரண ரென்றதை "ஏகார்ணவஸ்யசலிலம் ரசரூபமேவ" என்னும் உவமானத்தான் வலியுறுத்தியதென்க. எனவே பிரமனாதி எல்லாவுயிர்களுடைய அறிவு தொழில்கள் பல புவனங்களில் பலவாக விரிந்திருப்பனவாகலான் அவையெல்லாம் (ஏகார்ணவஸ்யசலிலம்) பெருவெள்ளமாகியகடனிர்போல் எனவும், அவ்வெள்ளத்தில் ஓர் பாகத்திற்றான் அந்தசலத்திற்குரியரசமிருப்ப தென்பதின்றி முற்றுங்கலந்திருப்பது போல்சிலரிடத்திற்றான் சிவசத்தி கலந்திருப்பதென்பதின்றி யாவரிடத்துங் கலந்திருந்து அவரவரறிவு தொழில்களைச் செயவிக்கின்றபடியால் "ரசரூபம்போ" லெனவும், எல்லாருடைய தொழிலும் அச்சிவசத்தியின் செயலாக வெளிப்படவே அச்செயல் நிகழ்தற்கிடமாய் நின்ற பிரமனாதி உயிர்களெல்லாம் கடல்போல் பாத்திரமென்னும் அளவை மாத்திரையே யானாராகலான் "பாத்திரம்" போலெனவுங் கூறினார். இவ்விசாரத்தால் சிருட்டி யாதிதொழிற்குரியராகிய பிரமனாதியர் உருவங்களெல்லாங் கடல்போல் பாத்திரங்களெனவும், அவர் தொழில்களாகிய சிருட்டியாதிகளெல்லாம் அக்கடலிற்றங்கிய சலம்போலெனவும், அச்சலத்திற்றங்கிப் ரசம்போல் சிவசத்தியாகிய ரசங்கலந்திருப்பதெனவும் கொள்ளக்கிடந்தன. கொள்ளவே யாவரும் பாத்திரரூபம், அறிவுதொழில்கள் சலரூபம், அறிதற் சத்தி செயதற் சத்தி ரச ரூபம். பாத்திரத்தைவிட்டு சலமில்லை சலத்தைவிட்டு ரசமில்லை. அதுபோலும் பிரமனாதியரைவிட்டு சிருட்டியாதி தொழில்களில்லை அச் சிருட்டியாதிகளைவிட்டு சிவசத்தியில்லை என்றபடி. முன்னர் "உறங்குகின்றவரைத் தியானிப்பது விதியன்றென்றதையும்" விஷ்ணுவாதியர்களெல்லாந் தியானித்தற்குரிய ராகா" ரென்றதையும் இந்த சுலோகத்தால் வலியுறுத்தியதெனக் கொள்க. அன்றியும் இங்கு உறங்குகின்றாரென்னாது யோகத்திலிருப்பவராக வறிந்து தேவியைத் தோத்திரஞ்செய்யத் தொடங்கினாசென்றதனால் திருமாலுந் தம்முடைய உள்ளத்தில் பராசத்தியையே தியானிகன்றாரென் றுணர்ந்து தாமும் அத்தேவியையே வணங்கவேண்டுமென்று தெளிந்துப் பின்றொடர் கினாரென்பதே தேற்றமெனக் கொள்க.

– இருபது அத்யாயம், இரண்டாவது ஸ்கந்தம் பன்னிரண்டு அத்யாயம், மூன்றாவது ஸ்கந்தம் – முப்பது அத்தயாயம், நான்காவது ஸ்கந்தம் – இருபத்தைந் தத்யாயம், ஐந்தாவது ஸ்கந்தம் – முப்பத்தைந்து அத்யாயம், ஆறாவது ஸ்கந்தம் – முப்பத்தொன் றத்தியாயம், ஏழாவது ஸ்கந்தம் – நாற்பது அத்தியாயம், எட்டாவது ஸ்கந்தம் – இருபத்துநான்கத்யாயம், ஒன்பதாவது ஸ்கந்தம் – ஐம்பது அத்தியாயம், பத்தாவது ஸ்கந்தம் – பதின்மூன்றத்தியாயம், பதினொன்றாவது ஸ்கந்தம் – இருபத்து நான்கத்யாயம், பன்னிரண்டாவது ஸ்கந்தம் – பதினான்கத்யாயம் எனவும், சுலோக சங்கியைகள் பதினெண்ணாயிரமெனவும் இவ்வகையாக இப்புராணத்தில் மஹாத்மாவான வியாசமுனிவரால் கூறப்பட்டிருக்கின்றது.

இனிப் புராணலக்ஷணம் வருமாறு.

(கஅ-உசு) சர்க்கம், பிரதிசர்க்கம், வம்சம், மந்வந்தரம், வம்சாநுசரிதம் என்று சொல்லப்பட்ட பஞ்சலட்சணங்களை யுடையது புராணமாகும்.

சர்க்கமாவது, நிர்க்குணசொரூபியாயும் எப்பொழுதும் நாசரகிதையாயும் சாவவியாபகியாயும் யோகசாத்யையாயும் சர்வலோகங்களுக்கும் ஆதாரமாயுமிருக்கின்ற யாதொருசிவசக்தி துரியப் பொருளாயிருக்கின்றதோ அப்பராசத்தி ஓர் கூற்றானே சாத்வீகம் இராஜசம் தாமசம் எனமூன்று சத்திகளாகி முறையே சாத்வீக சத்தி மாஹலக்ஷிமியென்றும், இராஜசசத்தி சரஸ்வதி என்றும், தாமசசத்தி மஹாகாளி என்றும் பெயர் பெறுமெனக் கூறப்படுகிறது. சிருட்டியாதி நிமித்தம் கொள்ளப்படும் அந்த மூன்று சத்திகளுடைய திருமேனிகளேயாம்.

பிரதிசர்க்கமாவது:-உற்பத்தி ஸதிதி நாசமென்னு முத்தொழலியற்றப் பிரம்ஹ விஷ்ணு ருத்திரர்களுடைய உற்பத்தியைக் கூறுவதாகும்.

வம்சமாவது, சோமசூரியாக்கினிகளால் உற்பத்தியான இரண்யகசிபு முதலிய அசுரர்களுடைய வம்சத்தைக் கூறுவதாகும்.

மன்வந்தரமாவது, சுவாயம்புமுதலிய பதினான்கு மநுக்களுடைய மந்வந்திரங்களின் மாறுபாட்டையும் அவர்களுடைய காலவளவைகளையும் எடுத்துக் கூறுவதாகும்.

வம்சாநுசரிதமாவது. – மேற்கூறியமநுக்களுடைய வம்சசரித்திரங்களை எடுத்துச் சொல்லுவதாகும். இவ்வைந்துமே புராணலக்ஷணங்களாமென்க.

இதுவேயுமன்றி வியாசமுனிவர் வேதசம்மதமாயும், ஐந்தாம் வேதமாயுமுள்ள மகாபாரதமென்கிற இதிகாசமுஞ் செய்தனர்; அது ஒருலஷத்து இருபத்தையாயிரங் கிரந்தங்களாம்.

(உஎ-ருசு) சௌனகர் சூதமுனிவரைப்பார்த்து ஓ சர்வஞ்ஜரே? நீர் முற்றுமுணர்ந்தவராகையால் புராணங்களென்றவை எவை; எவ்வளவு சங்கியையோடு கூடினவை. அவற்றின் விரிவையுங்கேட்க வேண்டுமென்னும் அவாவுடையவர்களாக விருக்கின்றோம். ஆகையினால் அவற்றை விரிவாயெங்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். நைமிசாரண்ய முனிவர்களாகிய யாங்களெல்லாம் கலியின் கொடுமைக்கு மிகவும் பயமுற்றனம். எங்களுக்கு பிரமதேவர் மனோகரமாகிய சக்கரத்தைக் கொடுத்து ✣ஆஜ்ஞை யொன்று செய்தனர். அஃதாவது நீங்கள்யாவரும் புண்ணியக்ஷேத்திரத்தை யுத்தேசித்து இச்சக்கரத்தின் பின்னே செல்லுங்கள் இது எவ்விடத்தில் சிதறிவிழுகின்றதோ அந்தவிடந்தான்புண்ணியபூமி. அந்தவிடத்தில் ஒருபொழுதும் கலிதோஷம் அணுகமாட்டது. ஆகையால் கிருதயுகம் வருமளவும் நீங்கள்யாவரும் அவ்விடத்திற்றானே தவஞ்செய்திருங்கள் என்று கட்டளையிட்டனர். யாங்களெல்லாம் சகலதேசங்களையும் பார்க்கவேண்டுமென்கிற இச்சையினால் அவரால் சொல்லப்பட்ட கட்டளையை யங்கீகரித்து வேகமாய்ச் சுழன்று போகின்ற அச்சக்கரத்தின்பின்னே சென்றுகொண்டிருந்தோம்; சுழன்றுகொண்டே வந்த அந்தச்சக்கரம் இவ்விடத்தில் சிதறி விழுந்தது நாங்கள் அதைப்பார்த்தோம் அதனால் இந்த க்ஷேத்திரம் நைமிசமெனப் பெயர்பெற்றது. இதுமகாபரிசுத்தமானது. இவ்விடத்தில் கலியின் பிரவேசமேயில்லை, அதனால் என்னாலும் முனிவர்களாலும் மகாத்மாக்களாகிய சித்தர்களாலும் வசிக்குமிடமாகக் கொள்ளப்பட்டது. அன்றுமுதல் இம்முனிவர்களெல்லாம், பசுவின்றிப் *பிஷ்டபசுக்களால் யாகங்கள் செய்துவருகிறார்கள் இப்படியே கிருதயுகம் வருமளவும் காலங்கழிக்க வேண்டியதாயிருக்கின்றது.

(எரு-சு0) சூதமுனிவரே? நீவிர் எமது பாக்யவசத்தால் இவ்வனத்தைவந்தடைந்தீர், ஆதலால் எவ்விதத்திலாயினும் இப்பொழுது வேதசம்மதமாயும் பரிசுத்தமாயுமுள்ள இப்புராணத்தைச் சொல்லியருளல் வேண்டும். மேதாவியரான நீர் எப்படி போதகாசிரியத்தன்மை யுடையவராக விருக்கின்றீரோ அப்படியே யாங்களனைவரும் கவலைக ளனைத்தையும் விட்டொழித்து மனமொருமைப்பட்டு கேட்கும் விருப்பமுடையவராக விருக்கின்றோம்.

✣ ஆஜ்ஞை - ஆணை. * பிஷ்டம் - மா. + த்வைபாயனமுனிவர் - வியாசர்.

ஆதியாத்மிக முதலிய ~தாபத்திரயங்களினின்றும் விடுபட்ட நீர் தீர்க்காயுளுடையவரா யிருத்தல்வேண்டும், எந்த புராணத்தில் தர்மார்த்த காமங்களுடைய சிறப்பு, விதி பூர்வகமாகக் கூறப்படுகிறதோ அப்படிப்பட்ட புண்ணியமங்கள் சீலம் வாய்ந்த புராணம் இபுராணமேயாம். ஆகையால் அதை எங்களுக்குச் சொல்லியருளும் (ஏனெனின்) பாகவதமென்னும் இக்கதை பரவித்யாசொருபமென்றும் இதனாலேயேமோஷமுண்டென்றும் வியாசமுனிவரிடத்தில் கேட்டதாகக் கூறியிருக்கின்றீரல்லவா? சூதரே, த்வைபாயன முனிவராலே பரிசுத் தமான எந்தப்புராணங்கள் கூறப்பட்டனவோ அந்தமனோகரமாகிய புராணங்களை யாங்கள் கேட்டுத் திருப்தியடைந்திலம். 'மேலுங்கேட்க விருப்பமுடையவரா யிருக்கின்றோம்.' எந்தபாகவதம் சகலகுணசமுகங்களுக்கு முக்கியமான பாத்திரமாயும், பரி சுத்தமாயும் எல்லாவுலகங்களுக்கும் மாதாவான அம்பிகையினுடைய நாடியம் போல் விசித்திரமாயும் மலசமூகமனைத்தையும் நசிக்கச் செய்வதாயும் இஷ்டகாமியங்களை நிறைவேற்றுவதற்கு மூலமாயும் பகவதியினுடைய நாமத்தோடு கூடினதாயுமுள்ளதோ அந்த பாகவதத்தைப் பிரகடனஞ் செய்ய வேண்டும்.

முதல் ஸ்கந்தம் – இரண்டாவது அத்யாயம்
ஸ்கந்தசங்கியாதிகதனம்

முற்றிற்று.

ஆஉ ஸ்லோகம் (சுசு)

———

உ

திரிபுரசுந்தர்யை நம:

மூன்றாவது அத்யாயம்

புராணசங்கியை வரலாறு

(க) சூதமுனிவர் சவுனகாதியரை நோக்கி ஓ முநிவர்களே! சத்யவதீசுதரான வியாசரிடத்தில் எப்படி புராணங்களைக் கேள்வியுற்றேனோ அப்படியே உண்மையாய்க் கூறுகின்றேன் கேளுங்கள்.

---

* உபப்ரம்ஹணம் - அங்கமென்றாவது. அவற்றிற் கூறாத ஏனைய விஷயங்களைக் க்ரோடிகரித்து (சேகரிக்தப்பட்டது) என்றாவது பொருள் கொள்க.

() த்விஜபந்து - பிராம்ஹண குலத்திற்பிறந்து - அக்குலாசார தர்மங்களைக் கைவிட்டுப் பெயர்மாத்திர முடையவர்.

~ திரயங்களினின்றும் - திதிவார் நட்சத்திரங்கள்

(இனி, பதினெண்புராணங்களுடைய பெயர்களை அக்ஷரசங்கியை யாகக் கூறுகிறேன்.)

(உ) மகாரத்தை முதற்கண்ணுடைய புராணங்களிரண்டும், பகாரத்தை முதற்கண்ணுடைய புராணங்களிரண்டு, ப்ர காரத்தை முதற்கண்ணுடைய புராணங்கள் மூன்று, வகாரத்தை முதற்கண்ணுடைய புராணங்கள் நான்கு, அ-நா-ப-லிங்-க-கூ-ஸ்கா என்கிற அக்ஷரங்களைத் தனித்தனி முதற்கண்ணுடைய புராணங்களேழு (ஆகப்பதினெட்டு).

மகாரத்திலிரண்டு என்றுது மத்ஸியம், மார்க்கண்டேயம், பகாரத்திலிரண்டு *பவிஷ்யம், பாகவதம். ப்ர காரத்தில் மூன்று, பிரம்ஹம், பிரம்ஹாண்டம், பிரம்ஹகைவர்த்தம், வகாரத்தில் நான்கு, வாமனம், வாயவ்யம், விஷ்ணு, வாரகம். அ, என்றது அக்னிபுராணம். நா, என்றது நாரதபுராணம். ப, என்றது பத்மபுராணம். லிங், என்றது லிங்கபுராணம். க, என்றது கருடபுராணம். கூ, என்றது கூர்மபுராணம். ஸ்கா, என்றது ஸ்கந்தபுராணம்.

இனி முன்னர், வர்ணக்கிரம முறையாகக்கூறிய பதினெண்புராணங்களுடைய க்ரந்த சங்கியைக் கூறுகிறேன்.

(ங-கஉ) முதலாவதான மத்ஸிய புராணம் - பதினாலா யிரங்கிரந்தம், மஹாத்புதகரமான மார்க்கண்டேயம் - ஒன்பதினாயிரங் கிரந்தம். பவிஷ்யபுராணம் - ஐந்நூற்றை அந்தத்திலுடைய பதினாலாயிரங் (கசரு00) கிரந்தம். புண்ணியமான பாகவதம் - பதினெண்ணாயிரங்கிரந்தம். பிரம்ஹபுராணம் பதினாயிரங்கிரந்தம், பிரம்ஹாண்ட புராணம் நூற்றையும் இரண்டாயிரத்தையும் அதிகமாகவுடைய பதினாயிரம் (கஉக00) கிரந்தம், பிரம்ஹ கைகவர்த்தம் - பதினெண்ணாயிரங் கிரந்தம், வாமன புராணம் - அறுநூற்றை முன்னேயுடைய பதினாயிரங் (கசு000) கிரந்தம். வாயவ்யபுராணம் ஆயிரமென்னும் எண்ணை முன்னேயுடைய இருபத்துநாலாயிரம் (2சு000) கிரந்தம். பரமாத்புதமானவிஷ்ணு புராணம் - இருபத்துமூவாயிரங் கிரந்தம், வராகம் இருபத்து நாலாயிரங்கிரந்தம். அக்னிபுராணம் - பதினாறாயிரங்கிரந்தம். சிறந்ததான நாரதபுராணம் இருபத்தையாயிரங் கிரந்தம். பெரிதான பத்மபுராணம் ஐம்பத்தையாயிரங்கிரந்தம். இலிங்க புராணம் பதினோறாயிரங் கிரந்தம். விஷ்ணு ரதிப் பாதகமான காருடம் ஒன்றொழுந்த இருபதினாயிரங் கிரந்தம். கூர்மா வதாரத்திற் கூறப்பட்ட கூர்ம புராணம் பதினேழாயிரங் கிரந்தம். ஆஸ்சர்யகரமான ஸ்கந்தபுராணம் எண்பத்தோராயிரங் கிரந்தம்.

* பவிஷ்யம் - ஒருபுராணம்

() பாபரஹிதர்களான முனிவர்களே! இயாமிப்பொழுது புராணங்களுடைய பெயர்களும் அவற்றின் சங்கியைகளும் விஸ்தாரமாகக் கூறினோம்.

(கங-கசு) ஓ முனிசிரேஷ்டர்களே! பதினெண் புராணங்களைக் கூறியபடியே உப்புராணங்களையும் இனிக்கூறுகின்றோம் கேட்பீர்களாக, சநற்குமாரம், நாரசிம்ஹம், நாரதீயம், சிவம், சிறந்த தூர்வாசம், காபிலம், மானவம், அவுஸ்நஸம், வாருணம் காளிகாக்யம், சாம்பம், அழகானநந்திகேஸ்வரம், சௌரம், பராசராலே கூறப்பட்ட பாராசரீயம், ஆதித்யம், மாஹேஸ்வரம், பாகவதம், வாசிஷ்டம், ஆகிய இவைகளே உபபுராணங்களென்று மஹத்துக் களாற் கூறப்பட்டன.

(கஎ-உசு) சத்யவதீ புத்ரரான வியாசமுனிவர் அஷ்டா தச புராணங்களையு மியற்றி ஒப்பில்லாத தான் பாரதமென்னும் இதிகாசத்தையும் அப்புராணங்களுக்கு * உபப்ரம்ஹணமாகச் செய்தருளினர் எல்லா மந்வந்தரங்களிலேயும் வரும் துவாபரயு கங்கடோறும் விஷ்ணுமூர்த்தியானவர் தர்மத்தைவிரும்பி வியாசரா யவதரித்து உயிர்களுடைய நன்மைகளைக் கருதினவராய் ஒவ்வொரு வேதத்தையும் சாகோபசாகைகளாயும் விதிப்படி புராணங்களையும் இடைவிடாமற்செய்கின்றார். இதுவுமன்றி இந்தவியாசரே கலியுகத்திற்றோன்றிய அந்தணர்களை அற்பாயுளுடையவர்களாகவும், அற்பவறிவினை யுடையவர்களாகவும் அறிந்து யுகந்தோறும் புண்ணியமான சம்ஹிதைகளையுஞ் ஸ்திரீ சூத்ரர் () த்விஜ பந்துக்கள் ஆகிய இவர்கள் வேதத்தைக் கேட்கும் அதிகாரமில்லாதவர்களாதலால் அவர்களுடைய நன்மையைக்கருதி புராணங்களையுஞ் செய்துவருகின்றார். ஓ! முனிசிரேஷ்டர்களே! சுபகரமானதும் வைவஸ்வத மென்னும் பெயருடையதுமான ஏழாவது மந்வந்தரம் நிகழுங்காலத்தில் வருவதான இருபத்தெட்டாவது துவாபரயுகத்தில் சத்யவதீ புத்திரரும், தர்மஜ்ஞருட்சிறந்தவரும் எனக்கு ஆசிரியருமாகிய இவ்வியாசமுனிவர். அவதரிக்கின்றார். மேற்கூறிய மந்வந்த்ரத்தில்வரும் இருபத்தொன்பதாவது துவாபரயுகத்தில் அஸ்வத்தாமா் வியாசராக அவதரிப்பார். இம்முறையானே இருபத்தேழு வியாசர்கள் முன் அவதரித்துச் சென்றனர். அந்த வியாசர்களால் யுகந்தோறும் புராணமுஞ் சம்ஹிதைகளுஞ் சொல்லப்பட்டு வருகின்றன.

(உரு-ஙங) முனிவர்காள் மஹாபாக்கியவந்தரான சூதமுனிவரைப் பார்த்து ஓ. சூதரே! முன்யுகங்களில் அவதரித்தவர்களான வியாசர்கள் ஒவ்வொரு துவாபரயுகத்திலும் புராணங்களை எப்படி கூறினார்கள்; அதைத் தெரிவிக்கவேண்டுமென்ன சூதர், தயை கூர்ந்து முனிவர்களை நோக்கி முதல் துவாபரயுகத்தில் பிரம்ஹதேவராலேயே வேதங்கள்

() பாபரஹிதர்களான - பாவ மற்றவன்

வகுக்கப்பட்டன, இரண்டாவது துவாபர யுகத்தில் பிரஜாபதி என்பவர் வியாசருடைய காரியத்தைச் செய்தனர் (புராணங்களைச் செய்தனரென்றபடி) மூன்றாவது துவாபரயுகம் ஆதியாக இருபத்தெட்டாவது துவாபராந்தம் முறையே அவதரித்த வியாசர்கள் உசனர் (சுக்ராசாரியர்) பிரக ஸ்பதி சூரியன் இயமன் இந்திரன் வசிஷ்டர் சாரஸ்வதர் த்ரி தாமர் த்ரிவிருஷர் பரத்துவாஜர் அந்தரிஷர் தர்மர். த்ரையாருணி, தனஞ்சயர் மேதாதி ரதீ அத்திரி கவுதமர் உத்தமர் ஹரீயாத்மர் வேனரென்கிற வாஜஸ்ரவர் அமுஷ்யமயணரென்கிறசோமர் திரணபிந்து பார்க்கவர் சக்தி என்கிற ஜாதுகர்ணர் கிருஷ்ண்த்வைபாயனர் என்று நான் கேட்டிருக்கிறேன்; கேட்டவாறே, ஈண்டெடுத்துக் கூறினேன்.

(ஙசு-ஙசு) இந்த வியாசமுனிவராலேயே கூறப்பட்டதும் புண்ணியமானதும் துக்கசமூகங்களையெல்லாம் நாசப்படுத்துவது. மான பாகவதமென்னும் புராணமுங் கேட்டிருக்கின்றேன். இப்பாகவதம் மோஷத்தைக் கொடுக்கத்தக்கது, காமியார்த்தங்களைத் தரத்தக்கது. வேதார்த்தங்களைப் பரிப்ரும்ஹிதம் (எடுத்துக் கோஷிக் கத்தக்கது), எல்லாவாகமங்களுடைய சாரங்களுக்கும் சோலையாயுள்ளது. முமூஷுக்களுக்கு எப்பொழுதும் பிரீதிகரமானது. வியாசமுனிவர் மங்களம் வாய்ந்த இப்பாகவதத்தை இயற்றி மகாத்மாவாயும் வைராக்யத்தோடு கூடினவராயும் விசேஷஜ்ஞராயும் அரணியிற்றோன்றினவ ராயும் (தமது) புத்திரராயுமுள்ள சுகமுனி வருக்குபதேசித்தனர்.

(ஙஎ-எகூ) ஓ முநீந்திரர்களே! கருணாநிதியாயும் எமது குருவாயுமுள்ள வியாசமுனிவர் அற்புத அறிவுடையவராயும் அயோ நிஜராயுமுள்ள சுகமுனிவருக்கு சர்வபுராண ரகஸ்யமானதும் மஹாப்ரபாவமுடையதுமான இத்தேவீபாகவதத்தை எவ்விடத்தில் பிரசங்கித்தனரோ அவ்விடத்தில் யானும் அவரது கருணையினால் கேட்டுக் கிரஹிக்கவுமாயினேன். சம்சாரமென்னும் ஆழ்ந்த கடலைக்கடத்தற்கு விருப்பமுடையவரான சுகமுனிவர் நானாவிதமான கதாரசங்களமைந்த பாகவதமென்னும் கற்பக விருஷத்தினுடைய பலரசத்தையுட் கொண்டு அதன் சுவையையறியும் அறிவுடையவவாய் அன்போடு செவிகளாரக் கேட்டனர். ஆகலான் அற்புதமான இப்புராணத்தைக் கேட்டு 'இவ்வுலகில்' கலியினது கொடுமையி னின்றும் விடுபடாத வரெவருள்ளார்.

(சுO-சுங) பாவமுடையவனாயினும் வேததர்மங்களைக் கைவிட்டவனாயினும் குலாசாரத்தை விட்டொழிந்தவனாயினும்

புல்லறி வுடையவனாயினும் ✡பிரபத்தினமன்றியில் தற்செயலாய் மிகவுஞ்சிறந்த இப்பாகவதத்தைக் கேட்கப் பெறுவானாயின் அவன் இம்மையில் பெறுதற்கரிய போகங்களெல்லாம் அனுபவித்து இவ்வுடனீக்கத்தில் அழிவில்லாததும் யோகிகளாலடையத்தக்கதும் பகவதியினுடைய திரு நாமத்தால் முத்திரிக்கப்பட்டதும் அழகினையுடையதுமான தத்பதத்தை யடைகிறான். எந்த பரதேவதை நிர்க்குணையாயும் ஹரிஹராதிகளால் அறியப்படாதவளாயும் சாதுக்களுக்குப் பிரியதமையாயும் சமாதியவஸ்தையில் அறியப்பட்ட வளாயும் அடையத்தக்க வித்யாரூபியாயு மிருக்கின்றனளோ அந்த பகவதியினுடைய இப்பாகவதத்தை எந்த சத்புருஷன் எப்பொழுதும் சிரவணஞ்செய்கிறானோ அவனுடைய இருதயமாகிய குகையுள் பாவனா ரூபமாய்ப் பிரகாசிக்கின்றாள். எந்த அறிவிலியானவன் எல்லா வுறுப்புகளோடு கூடின மானிட சம்பந்தமான சரீரத்தை. *பிறவிக்கடலைக் கடப்பதற்குத் தோணியாக அடைந்தும் சுகத்தைத் தருவதான புராணவசனங்களைக் கேட்கிறதில்லையோ அவன் அந்தோ! இவ்வுலகில், தெய்வத்தினால் வஞ்சிக்கப்பட்டவனாவன், எந்த மனிதன் பெறுதற்கரிதான, இம்மானிட சன்மத்தில் செவிகளைப்படைத்தும் இடைவிடாது ✈பரதூஷணாவசனங்களைக் கேட்கின்றானோ, அப்பல்லறிவாளன்' இவ்வுலகில் அர்த்தங்களை யெல்லாந் தருவதும் ரசநிதியாயுள்ளதும் மலமற்றதுமான புராண சாரமாகிய தேவீபாகவத்தைக்கேளான்; அவன் மனிதனல்லன் ✟பதிதன்.

முதல்ஸ்கந்தம் புராணசங்கியை கூறும் மூன்றாவது அத்யாயம் முற்றிற்று.

ஆஉ அத்தியாயம் ங-க்கு ஸ்லோகம். (கOஎ)

———

முதல்ஸ்கந்தம் நான்காம் அத்யாயம்

சுகோத்பத்தி வினா

(க-ங) சவுனகாதியர் சூதமுனிவரை நோக்கி ஓசாந்தரான சூதரே? வியாசருடைய எந்த மனைவியினிடத்தில் சுகரென்னும் புத்திரர் உற்பத்தியானார்? அன்றியும் அச்சுகமுனிவர் அயோநிஜரென்றும், அதுபோலவே அரணியிற்றோன்றினவரென்றுங் கூறக்கேட்டிருக் கின்றோம், அவ்விஷயத்தில் பெருஞ்சந்தேகம் உண்டாகின்றது. ஓ

வேதங்களி வாழ்ந்திருக்கும் அர்த்த புஷ்டிகளை மதுச்செருக்குற்றபானை கர்ஜீப்பதுபோல் கோஷிப்பது. ✡ பிரபத்தின் - மகன் ✈ பரதூஷணா - பிறரைத் தூஷணித்தல் ✟ பதிதன் - குல சமய முதலிய வொழுக்கத்திற்றவறினோன்.

தீர்க்கதரிசியே! அதை இப்பொழுது எங்களுக்குச் சொல்லல்வேண்டும். அன்றியும் சுகமுனிவர் மஹாதபசியென்றும், கர்ப்பத்திலேயே யோகவானாயிருந்தவரென்றுங் கேட்டிருக்கின்றோம். அவர் மிகவும் விஸ்தாரமான இப்புராணத்தை எவ்வாறு கற்றனர்.

(சு-கூ) சூதர்விடை, ஓ முனிவர்களே! முன்னொரு காலத்தில் சத்யவதீ புத்ரரான வியாசர் ஸரஸ்வதி தீரத்திலுள்ள ஓராஸ்ரமத்தில் ஆண்பெண்ணாகிய ஊர்க்குருவிகள் லீலாவினோதமா யிருத்தலைக் கண்டு மிகவும் வியப்படைந்தனர். பின்னர் அவ்விரண்டு ஊர்க்குருவிகளும், கூடில் தாங்களிட்ட அண்டத்தி (முட்டையி) னின்றும் வெளிப்பட்டதும் அழகானதும் செம்பைப்போலும் செந்நிறமுடையதும் மேன்மையான வடிவமுடையதும் இறகுமுளையாததுமான அக்குஞ்சுகளைக் கண்டு களித்துக் கொண்டிருந்தன. பின்னர் அப்பறவைகளிரண்டும் தன் குஞ்சுகளுக்கு உணவைத் தேடிவந்து ஊட்டுந் தொழிலில் மிகவும் வருந்திய முயற்சிகளுடையனவகளா யுணவைக் கொண்டுவந்து அப்பிள்ளை களினுடைய வாயில் சிறிதுசிறிதாய்ப்பல தடவை யூட்டிக் கொண்டிருந்தன. அன்றியும் குஞ்சுகளினுடைய உடம்போடு தம்முடம்பை அணைத்துக் கொண்டும் முகத்தில் அன்போடு முத்தமிட்டும் சந்தோஷித்து மகிழ்ந்துக் கொண்டிருந்தன. இவ்வாறு அவ்விடத்தில் அப்பறவைகள் தம்பிள்ளை களினிடத்தில் பாராட்டிக் கொண்டிருந்த ப்ரேமாதிசத்தை வியாசர்கண்டு தம்முடைய மனதில் இதனை யோசிக்கலாயினர். ஆ-அ-என்ன ஆச்சரியம் பட்சிசாதிகளுக்குந் தமது குஞ்சுகளிடத்தில் எவ்வளவு ஆராமையிருக்கின்றது. (இதனை ஆராயுமிடத்து), புத்திரனால் தாங்கள் பலத்தையடைய விரும்பும் மானுடர்கள் புத்திரர்களிடத்தில வாஞ்சைவைத்திருப்பது ஓரதிசயமா?

* இதனால் மானிடயாக்கை, பிறவிக்கடலைக் கடப்பதற்கு ஓர் தோணியாயுள்ளதெனவும். அதனைச் செலுத்துவதற்குக் கலைஞானங்களைக் கற்றற்குரிய வாக்கு செலுத்துங் கருவியாயுள்ளதெனவும், செலுத்துங்கருவியாற் கடலைக்கடந்தவழி அக்கலைஞானங்களில் எடுத்துரைக்குஞ் சதுர்ப்பாடாகிய ஞானம் அங்கு அடையக்கடவதாகிய பயனெனவும், அந்த ஞானமாகியபயனை எளிதிற்கூட்டவல்ல இப்புராணஞ் செவிப்புலனுக்கெட்டும் பாக்கியமிலனாயின் அதுவே தெய்வவருள் பெறாததன்மை எனவுங் கொள்ளக் கிடந்தன.

எவனொருவன் மனிதயாக்கையைப் பெற்றும் அதில் சதுர்ப்பாடுடைய இரண்டு செவிகளைப்படைத்தும் புறங்கூறுதலாகிய சொற்களையே கேட்கின்றனோ அந்த அறிவிலி சகல புருஷார்த்தங்களைத் தருவதாயும் சுவைகளுக்கெல்லாம் இருப்பிடமாயும் நிர்மலமாயு மிருக்கின்ற இப்பாகவே தத்தைக் கேளாமையால் அவனது செவித்துளையை நரகத்திற் செலுத்தும் ஓர் பிலத்துவாரமென்றறிய வேண்டும்.

(க0-உ0) இப் பறவைகளிரண்டும் இக்குஞ்சுகளுக்குச் சுகசாதனமாயுள்ள விவாகத்தைச் செய்து மருமகளுடைய குளிர்ந்த முகத்தைக் கண்டு சுகத்தையடையப் போகின்றனவா? அதுவன்றியும் * பரமதார்மிஷ்டரான, இந்த புத்திரர் (குஞ்சுகள்) தாய் தந்தைகளான இப்பறவைகளுக்குக் கிழத்தன்மை வருகிறபோது புண்ணியத்தை விரும்பி ஏவற்பணிவிடையைச் செய்யப்போகின்றனவா? அதுவன்றியும் இக்குஞ்சுகள் அனேகமான திரவியங்களைச் சேகரித்து இத்தாய்தந்தைகள் பரலோகமடைதற்குரிய அபரகர்மங்களை விதிப்படி நடத்தப்போகின்றனவா? அல்லது, அவற்றிலொன்றேனும் காசிக்குப் போய் கயாசிரார்த்தஞ் செய்யப்போகின்றதா? பிதுர்க்களை யுத்தேசித்து * விருஷோத்ஸர்ஜன முதலியவற்றை விதிமுறையாகச் செய்யப் போகின்றதா. (இங்ஙனங் கூறிவந்தவைகளி லொன்று மில்லையே) நூல்களிலும் இச்சமுசாரத்தில் புத்திரனுடைய சரீரத்தைத் தழுவிக் கொள்வதனாலுண்டான அடையாளத்தையே சுகத்தைக்குள் உத்தமமான சிறந்த சுகமென்று கூறப்பட்டிருக்கின்றன புத்திரனில்லாதவனுக்குக் கதியில்லை சுவர்க்கமும் இல்லை? இல்லை, (ஆகையால்) புத்திரனைக்காட்டிலும் வேறான எந்தச்சாதனமும் பரலோக சாதன மாகமாட்டாது. மநுமுதலிய நீதிமான்களால் ஏற்படுத்தப்பட்ட தர்மசாஸ்திரங்களிலும் புத்திரனையுடையவன் சுவர்க்கத்தை யடைகிறானென்றும் புத்திரனில்லாதவன் ஒருபொழுதும் அதை யடைகிறதில்லையென்றுங் கூறப்பட்டிருக்கின்றன. அது அனுமானத்தாற் சாதிக்கப்பட்டதன்று இவ்விடத்தில் பிரத்தியஷமாய்க் காணப்படுகின்றது. இதனால் புத்ரவான் பாபத்தினின்றும் விடுபடுகிறானென்று வேதவாக்கியம் நிச்சயமாயிற்று. ரோகத்தாற் பீடிக்கப்பட்டவன் அந்தியகாலத்தில் பூமியிற் புரண்டு துக்கித்தவனாய், அந்தோ! நமக்குப் புத்திரனில்லாமற் போயிற்றே என்று மனதில் ஏக்கமுறுகிறான். அன்றியும் நமக்கு அளவிறந்த செல்வமும், கிரகத்தில் அநேக பாத்திர வரிசைகளும் சுதந்தரமான வீடும் இருக்கின்றன; இவைகட்கு எவன் அதிகாரியாகப் போகிறானோ? அறியோம். இவ்வாறுமரணாந்த காலத்தில் அவனுடைய மனமானது துயரத்தால் மிகவும் பிரமிக்கின்றது அதனால் பிராந்தசித்தனான அவனுக்கு எவ்விதத்தினானுந் துற்கதியேயன்றி வேறில்லை.

(உக-ஙO) என்றிவ்வாறு வியாசமுனிவர் பலவாறாய்ச் சிந்தித்து வெம்பிப் பெருமூச்செறிந்து மனோவிசாரமுடையவராயினர். இப்படி மனதில் பெரும்பாலுஞ் சிந்தித்துப் பின்னர்

* பரமதார்மிஷ்டர் புத்திரரென்பன இழிவுசிறப்பு.

புத்திராபேஷையுடையவராய் மேருவின் சிகரத்தில் தவம்புரிய நிச்சயித்து அங்குச் சென்றனர். சென்று வரந்தருவதில் சாதுர்யமுடையவரும் இஷடகாமியங்களை நிறைவேற்றுபவருமான உருத்திர மூர்த்தியை உபாசிப்போமா? அல்லது விஷ்ணு இந்திரன் பிரமன் சூரியன் கணேசர் கார்த்திகேயர் அக்னி வருணன் முதலிய இவர்களை பாசிப்போமா, எந்த தெய்வத்தையு பாசிப்போம் என்று மனதிற் சிந்தித்தனர். இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்குமளவில் வீணாபாணியாகிய நாரதமுனீந்திரர் அங்கு தெய்வகதியாய் வந்தனர். சத்தியவதீ புத்திரரான வியாசமுனிவரும் அந்த நாரதரைக்கண்டு மனமகிழ்ந்து அர்க்கிய பாத்ய ஆசமனாதிகள் கொடுத்து அவரது ஷேமாதிசயங்களை வின்வினர். நாரதமுனிவர் அந்த வியாசர்கூறிய குசலவார்த்தைகளைக் கேட்டு ஆனந்தித்து ஓ வியாசரே? நீர் மனோசிந்தையுடையவராகக் காண்கின்றீர் அதற்குக் காரணம் யாது அதைச் சொல்லுமென்ன வியாசர் ஓ நாரத முனிவரே? புத்திரனில்லாதவனுக்கு சத்கதியில்லை என்று வேதங்கள் முறையிடுகின்றன. அதனாற்றான் என்மனதுக்குச் சுகமுண்டாகவில்லை. அக்காரணம் பற்றியே நான் பலமுறையுஞ் சிந்தித்துச் சிந்தித்துத் துக்கிக்கின்றேன். (இதுநிற்க) இப்பொழுது நான் தவத்தினால் எந்த தேவதையைத் திருப்தியடையச் செய்கிற விஷயத்தில் துணிவு பிறவாதவனாய் உம்மைச் சரணமடைகின்றேன் தயாநிதியான ஓ முனிவரே? நீர் சர்வஜ்ஞரல்லவா இயான் எந்தக் கடவுளைச் சரணமடையலாம் எந்தக் கடவுள் எனக்குப் புத்ரசம்பத்தைக் கொடுப்பார் அதை எனக்கு விரைவிற் சொல்லவேண்டும்.

(ஙக-சுக) இவ்வாறு வியாசராலே கூறக்கேட்ட வேதவித்தான நாரதமுனிவர் மிகவும் பிரீதியோடு அம்முனிவரை நோக்கிக் கெம்பீரமாய்க் கூறத் தொடங்கினர்.

மகாபாக்ய வந்தரான வியாசரே? நீவிர் இப்பொழுது எம்மை நோக்கி எத்தகைய கேள்விகளைக் கேட்டீரோ அக்கேள்விகளையே எம்முடைய பிதாவாகிய பிரமதேவரும் நாராயணமூர்த்தியை நோக்கிக் கேட்டிருக்கின்றார் : எங்ஙனமெனில் எம்முடைய பிதா ஓர்கால் நாராயணமூர்த்தியைத் தியான நிஷ்டையிலிருப்பவராக வறிந்து அதிக

---

*அபரகிரியையில் (சுக)-வது தினத்தில் இறந்துபோனவருக்கு அபசாச சணைம் வாராதிருத்தற்காக இளஞ்சேவை சூலமுதலியனவதற் பொறித்து ஆலயத்துக்கு விடுதலாகிய சடங்கு.

ஆச்சரியமடைந்து தேவசனாயும் இலஷ்மீபதியாயும் சகத்பதியாயும் கவுஸ்துவமணியால் பிரகாசிக்கின்ற திருமார்புடையவராயும் சுந்தர வடிவுடையவராயும் சங்குசக்கர கதாதரராயும் பீதாம்பிரதாரியாயும் நான்கு புயமுடையவராயும் வத்ஸமென்னு மருவுடையவராயும் எல்லாவுலகங்களுக்குங் காரணராயும் தேவதேவராயும் சகத்குருவாயும் மகத்தான தவத்தைச் செய்கின்றவராயும் விளங்காநின்ற வாசுதேவரை நோக்கி அடியில் வரும் வகையாக வினாவுகின்றார். இறந்தகா முதலிய முக்காலமுணர்ந்தவராயும் தேவதேவராயு முள்ள பகவானே; நீர் யாது காரணத்தால் தவஞ்செய்கின்றீர் யாரைத் தியானஞ் செய்கின்றீர் இது எமக்கு மிகவும் வியப்பைத் தருகின்றது. (ஏனெனில்) நீர் எல்லாவுலகங்களுக்கும் ப்ரபு அங்ஙனமிருக்க நீர் இப்பொழுது தியான நிஷ்டராக விளங்குகின்றீர். ஓதேவேசனே; உலகில் இதைவிட ஆச்சரியம்யாதிருக்கின்றது. ஓலக்ஷிமீபதே! தேவரீரது உந்திக்கமலத்தினின்றுந் தோன்றியயானே எல்லா வுலகங்களுக்குங் கர்த்தனா கவிருக்கின்றேன். ஆதலால் இப்பூமியில் உம்மைவிட மேலானவர் எவருளர் உளரெனில் ஆச்சரியமே; அப்படி யொருவரிருந்தாற் சொல்லும். யான் ஜகந்நாதரான உம்மையே எல்லாவற்றிற்கு முதற்காரணமாகவும் சிருட்டிகருத்தாவாகவும் பரிபாலகராகவும் சம்ஹாரமூர்த்தியாகவும் எல்லாக்காரியங்களையுஞ் செய்வதில் சமர்த்தராகவுமெண்ணி யிருக்கின்றேன்.

ஓ மஹாராசாவே உமது ஆஜ்ஞையினால் யானிவ்வுலகைப் படைக்கின்றேன். உருத்திரர் கற்பாந்தத்தில் எல்லாவற்றையும் சம்ஹரிக்கின்றார். சூரியனும் ஆகாயத்தில் சஞ்சரிக்கின்றான. வாயுவும் சிறுகாற்றுப் பெருங்காற்றாக வீசுகின்றது. அக்கினியும் சப்தஜ்வாலையோடு பிரகாசிக்கின்றது. மேகங்களும் வருஷித்துக் கொண்டு வருகின்றன.

(சுஉ-சுங) இத்தகைய பெருமைவாய்ந்த தேவரீர் எந்ததெயவத்தைத் தியானிக்கின்றீர். இவ்விஷயத்தில் எனக்குப் பெருஞ் சந்தேக முண்டாகின்றது. ஏனெனில் மூன்றுலகத்திலும் உம்மை விடச்சிறந்த தெய்வமொன்றிருக்கின்றதாக யான் கண்டிலன். ஆதலால் உமது பக்தனும் புத்திரனுமாகிய உனக்கு அன்புகூர்ந்து அவ்வுண்மையை விளக்கவேண்டும் (ஏனெனில்) மகத்துக்களுக்குத் தமதன்பர்களிடத்தில் மறைக்கத்தக்க பொருளொன்று மில்லையென த்தர்மசாஸ்திரங் கூறுகின்றதல்லவா. எனவே (பெரியோர் தம்மைவிசுவசித்தவர்களுக்கு உண்மைப்பொருளை மறைத்தல் குற்றமென்பது விதியல்லவா.)

(சுசு-சுரு) இவ்வாறு பிரமன்கூறிய வசனத்தைத் திருமால்கேட்டு அப்பிரமனை நோக்கிக் கூறுகின்றார்: ஓ சிருட்டிகர்த்தனே நீ ஒருமைப்பட்ட மனமுடையவனாய்க் கேட்பாயாக யான் என்னுடைய மனதிலுள்ளவற்றைக் கூறுகின்றேன். உன்னையும் என்னையும் உருத்திரமூர்த்தியையும் சிருட்டியாதிகளுக்குக் கர்த்தாக்களாக தேவாசுரர்களும் மனிதர்களும் ஆகிய இவர்களனைவரும் அறிவார்கள். (நீ அதனை யெண்ணாதொழிவாய்.)

(சுசு-ரு0) பிரமனே, நீ படைப்பதும் யான் காப்பதும் அரனாரழிப்பதும் ஆகிய இம்முத்தொழில்களும் சத்தியினாலே செய்யப் படுகின்றன வென்று வேதபாரகர்களால் கணிக்கப்பட்டிருக்கின்றன. அது எப்படி என்றால் அச்சத்தி உலகைபபடைக்கின்ற உன்னிடத்தில் இராஜசகுணமாயும் காக்கின்ற என்னிடத்தில் சாத்விககுணமாயும் சங்கரிக்கின்ற உருத்திரரிடத்தில் தாமசகுணமாயும் வியாபித்திருக்கின்றது. எனவும், அச்சத்தி உன்னிடத்தில் பரிணமிக்காவிடில் நீ படைப்பதற்குச் கர்த்தாவாக மாட்டாய். அப்படியே யானும் பரிபாலிப்பதற்குச் சக்தனாகமாட்டேன் அப்படியே சங்கரரும் சங்கரிப்பதற்குச் சக்தராகமாட்டார் எனவும், யாமனைவரும் எக்காலத்தும் அச்சத்திற்கு ஐக்கியப்பட்டவர்களாகவே யிருக்கின்றோம் எனவுங் கூறுகின்றனர். அதுபரோக்ஷமாயும் பிரத்யக்ஷமாயும் பார்க்குங்கால் உண்மையாகவே விளங்குகின்றது. அதற்குத் திருஷ்டாந்தரமொன்று கூறுகின்றேன் கேட்பாயாக, யான் ஆதிசேஷனாகிய படுக்கையில் உறங்குங்கால் அச்சத்திக்கு சுவாதீனப்பட்டவனாகவே யிருக்கின்றேன் இவ்விஷயத்தில் யாதொரு சந்தேகமுமில்லை. மீண்டும் ஓர்கால் சாக்ரகாலவசப் பட்டவனா யெழுந்திருக்கின்றேன்.

(ருக-ருரு) யான்அச்சத்திக் குடன்பட்டே எப்பொழுதுந் தவம் புரிகின்றேன் ஓர் சமயத்தில் இலக்குமிதேவியோடு சுகமாய் ரமிக்கின்றேன், மற்றொரு சமயத்தில் யுத்தரங்கத்தில் அசுரர்களோடு பயங்கரமாயும் தேகத்தைத் துன்பப்படுத்துவதாயும் உலகங்களுக்கெல்லாம் நடுக்கத்தை விளைவிப்பதாயுமுள்ள போர் செய்கின்றேன். ஓ தர்மஜ்ஞனே! முன்னொரு காலத்தில் அவ்வசுராகளோடு ஐயாயிரவருடம் இடைவிடாமல் யான் மல்யுத்தஞ் செய்தது உனக்குப் பிரத்யக்ஷமாய்த் தெரிந்திருப்பது தானே. அப்படிப் போர்புரியுங்காலத்தில் என்னுடைய காதிலுள்ள மலத்தினின்றும் உத்பத்தியானவர்களும் துஷ்டர்களும் மதோன்மத்தர்களுமான மதுகைடபர்களென்கிற இரண்டசுரர்களும் *தேவியினுடைய

அனுக்ரஹத்தினால் சம்ஹரிக்கப்பட்டார்களல்லவா். அப்பொழுது எல்லாவற்றிற்கும் காரணமாயும் பராபரமாயும் உள்ளது சத்தி ரூபமே என்று ஏன் உன்னாலறியப்படவில்லை, ஹே மஹாபாக்கி யசாலியே? அவ்விஷயத்தைப் பற்றி மீண்டு மீண்டுங் கேட்பது ✈ எற்றுக்கு.

(ருசு– சுக) அன்றியும் யான் புருஷரூபமாய்த் திருப்பாற் கடலில் வசிப்பதும் யுகந்தோறும் மத்சியமாயும் நரசிம்ஹமாயும் வாமனமாயும் அவதரிப்பதும் அப்பராசத்தியினுடைய இச்சாமாத்திரமேயன்றி என்னிச்சையன்றாம் திரியக்யோனிகளிற் பிறந்தவன் ஒருவருக்கும் பிரியனாக ஆகமாட்டான். யானோ வென்றால் வராக வாமனாதிகளாகிய திரியக்யோனிகளில் உற்பவித்தும் சகலப் பிராணிகளுக்கும் விருப்பமுடையவனா யிருக்கின்றேன் அது என்னுடைய இச்சையாகமாட்டாடது. எனவே என்னுடைய இச்சாசுதந்தரத்தினால் திரியக் யோனிகளிற் பிறப்பவனுமன்று; அப்பிறவிகளிற் பிறந்தும் இகழ்சியடையாது புகழ்ச்சியடைந்திருப்பவனுமன்று, யாவும் அச்சத்தியின் இச்சா சதந்தரத்தினாலேயாம். இலஷிமிதேவியோடு ரமித்திருப்பதாகிய உல்லாசத்தையும் சயனத்தையும் விட்டு மச்சிய முதலிய இழிந்த யோனிகளில் எவன்றான் பிறப்பான். அன்றியும் கருடனை ஊர்தியாகக்கொண்டு மஹத்தான யுத்தஞ்செய்வதும் என் சுதந்தரந்தானா? அன்று, முன்னொருகாலத்தில் வில்லிற்பூட்டிய நாண் அற்றுப்போக அதனால் ஒளிபொருந்திய என் சிரம் அறுபட்டது. அது எவ்விடத்திற்றான் போயிற்றோ? பின்னர் சிற்பவேலையில்வல்ல நீ அஸ்வத்தின் (குதிரையின்) சிரத்தைக் கொண்டு வந்து பொருத்தனை, அது முதல் யான் ஹபானனன் (அஸ்வமுக முடையவன்) என்று வழங்கப்பட்டேனென்கிற விஷயம் உலககர்த்தாவாகிய உனக்கு பிரசிததமாய்த் தெரிந்திருப்பது தானே? யான் சுந்தரனாயிருப் பேனாயின் இப்படி யெல்லாம் அவனோ?

(சுஉ-சுரு) ஆகலான் யான் சுதந்தரனன்று; எப்பொழுதுஞ் சக்திக் குட்பட்டவனாகவே யிருக்கின்றேன். அந்தச்சத்தியையே இடைவிடாமற் சிந்தித்துத் தியானிக்கின்றேன். அதை விட மேலானவஸ்து ஒன்றிருக்கின்றதா ஓ கமலபவனே? யானறி யேனென்று பிரஹ்மதேவனுக்கு வைகுண்டநாதர் கூறினார். ஓ வியாசரே, யானும் அந்தநிச்சயஞானத்தினாலேயே முத்தனானேன் அப்படியே நீரும் அந்த ஞானத்தினால் மங்களமான புருஷார்த்த சித்தியின் பொருட்டு இருதய கமலத்தில் தேவியினுடைய பாதகமலத்தைத் தியானஞ்செய்யும் : அந்தத் தேவி உம்முடைய ☼ அபீஷ்டங்களை முடித்தருளுவள் இதிலையமில்லை. இவ்வாறு

✈ எற்றுக்கு - எறிதல் ☼ அபிஷ்டங்களை - விருப்பங்களை

நாரத முனிவரால் கூறப்பட்ட வுண்மையைச் சத்யவதீ புத்ரரான வியாசருணர்ந்து தேவியினுடைய பாதம்புஜத்தில் நிச்சலபுத்தியுடைய வராய்த்தவஞ்செய்வானெண்ணி ௺ மேருமலையை நோக்கிச்சென்றனர்.

முதல் ஸ்கந்தம் நான்காவது அத்யாயம் சுகோற்பத்திவினா முற்றிற்று

ஆ அத்தியாயம் சு-க்கு ஸ்லோகம் (௧௭௨.)

―――――

முதல் ஸ்கந்தம் ஐந்தாம் அத்யாயம்

ஹ ய க் ரீ வா வ தா ர ம கி மை.

(இருடிகள் வினா.)

(க-சு) ஓ சூதமுனிவரே? தேவரீர் கூறிவந்தவைகளில் மிகவும் ஆச்சரியத்தைக் கொடுப்பதாயும் உலகினர் நகைப்பதற்கேது வாயுமுள்ள ஒரு விஷயத்தைக் கூறினீர். அதிலுண்டாகிய ஐய மென்னுங்கடலில் எங்களுடைய மனம் மிகவும் ௐ மக்னப் படுகின்றது.

ஏனெனின், விஷ்ணுமூர்த்தியினுடைய சிரம் தம்முடைய தேகத்தினின்றும் அறுபட்டு சென்றவிடந்தெரியாமற் சிதறிப்போயிற்றென்றும் அதன்பின்னர் அத்திருமால் சர்வநியந்தாவான ஹயக் கிரீவராக அவதரிந்தாரென்றுங் கூறின் சிரம் அறுபட்ட ஹயக்கிரீவர் கடவுளாவது எப்படி? அன்றியும் எந்த ஹயக்கிரீவரை (உலகமெல்லாம்) புகழ்ந்துரைக்கின்றதோ, தேவர்களெல்லாம் எவரை ஆஸ்ரயிக்கின்றார்களோ அந்த ஆதிதேவரே, சகந்நாதரான கடவுளாவாரெனவும், அவரே எல்லாவற்றிற்குங் காரண கின்றா ரல்லவா எனவும் அவரை வேதங்கள் புகழ்ந்து தோத்த ரஞ் செய்யுமா? ஆகலான் முன்னர்க்கூறிய சிறப்புவாய்ந்த விஷ்ணு மூர்த்தியினுடைய சிரம் ஓர் காலத்தில் தெய்வகதியாய் எப்படிப் போயிற்று. அதனை அறிவிற்சிறந்த நீர் விரிவாய் விரைவில் சொல்லல் வேண்டும்.

(ரு-அ) ஓ! மஹரிஷிகளே! நீங்களனைவருந் தேவர்களுக்கெல்லாந் தேவரும் பெரிய காந்தியையுடையவருமான விஷ்ணுமூர்த்தியினுடைய சரித்திரத்தைச சாவதானமாக முற்றும் முறையாகக்கேளுங்கள் கூறுகின்றேன். ஓர்காலத்தில் அநாதியான விஷ்ணு மூர்த்தி பதினாயிரம் வருடம் அசுரரோடு பயங்கரமான யுத்தத்தைச் செய்து மிகவுஞ் சோர்வடைந்தவராய்ச் சமமாயும் சுபகரமாயுமுள்ள ஓரிடத்திற்சென்று பத்மாசனராய் நாணோடுகூடிய

* உருத்திரரென்பது ஏகாதசருத்திரரை. இவ்வாறு வருமிடந்தோறுங் காண்க.
௺ மேருமலை - பொன்மலை ௐ மக்னம் - ஆழ்தல்

திண்ணிய வில்லைப் பூமியிலுன்றிக் கண்டப்பிரதேசத்தில் (முகவாய்க் கட்டையில்) நாட்டி அவ்வில் நுனியில் தமது தேகபாரத்தை யிறுத்தி நித்திரைசெய்யத் தொடங்கினர். அப்பொழுது அவ்விடத்தில் பிரபுவான அந்த இலஷிமிநாதர் மிகவும் இளப்படைந் தவராகையினால் தெய்வச் செயலாய்ப் பேருறக்கங் கொண்டனர்.

(கூ-கசு) அக்காலத்தில் இந்திரன் முதலிய தேவர்களெல்லாம் தங்களுடைய காரியசித்தியின் பொருட்டு பிரஹ்ம ருத்திரர்களோடு கூடி அனேககாலமாய் ஓர் யஜ்ஞஞ்செய்யவேண்டு மென்கிற விருப்பமுடையவர்களாய், யஜ்ஞகர்த்தாவாயும் பிரபுவாயும் விளங்காநின்ற விஷ்ணு மூர்த்தியைப் பார்ப்பதற்கு வைகுண்டத்தை யடைந்தார்கள். அவ்வைகுண்டத்தில் அப்பொழுது அந் நாராயண மூர்த்தியைக் காணாமல் தேவர்கள் தங்கள் ✡ ஜ்ஞாநதிருஷ்டியினால் அவரிருக்குமிடமறிந்து அங்கு சென்று பிரபுவாகிய விஷ்ணுமூர்த்தி மெய்மறந்து நித்திரையிலிருப்பது அறிந்து நித்திரை நீங்குமளவும் இருப்போமென் றெண்ணி, அவ்விடத்திற்றானே யிருந்தார்கள். இவ்வாறு இவரெல்லாம் நின்றவண்ணமே நிற்க உலக கர்த்தாவாகிய விஷ்ணுமூர்த்தியோ நித்திரையிற்றானே யிருந்தனர். பிரமருத்திரர்களை முதன்மையாகவுடைய தேவர்களனைவரும் இவரது பேருறக்கத்தைக் கண்டு ☞ சிந்தாகுலமாயினர். பின்னர் இந்திரன் தன்பரிவாரங்களாகிய தேவர்களைப் பார்த்து, தேவர்காள் இப்பொழுது யாம் யாது செய்யலாம், இந்த விஷ்ணுவினுடைய நித்திரைக்குப் பங்கஞ்செய்வது உசிதமாகுமா இதனை ஆராய்ச்சி செய்யுங்கள் என்று கூறினன்.

(கரு-ககூ) அப்பொழுது உருந்திரர் இந்திரனைப் பார்த்து நித்திரையைப் பங்கப்படுத்துவதனால் குற்றமிருக்கின்றது. குற்றமுளதாயினும் (இச்சமயம்) தேவர்கள் செய்யவேண்டிய யஜ்ஞத்திற்கு ஏது வொன்றைத் தேடிக்கொள்ளல் வேண்டும். அன்றியும் பூர்வத்தில் சத்யலோக வாசியான பிரமனால் செல் என்கிற ஒரு செந்து உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றது. அந்தச் செல்லுருவத்தினால் இப்பொழுது பூமியில் நாட்டியிருக்கப்பட்ட வில் நுனியைப் பக்ஷிப்பதற்கு வேண்டிய முயற்சியிற் றலைப்படுங்கள். அப்படிவில் நுனி

* ஈண்டு யாங்கள் எங்களுடைய பிரயோசனத்தை (நஷ்டத்தை) நாடித்துன்பமடைகின்றோம் எனவும், அன்றி எங்களுடைய பிரயோசனத்தை எண்ணாமல் பிரிவாற்றாமையை எண்ணித் துன்பமடைகின்றோம். எனவும், அன்றி எங்கள் பிரயோசனத்தைப் பற்றிச் சிறிதுந்துன்பப்படவே மாட்டோம் யாம்செய்த இக்காரியமே துன்பத்தை விளைவித்தது எனவும் பொருள்கொள்க.

சுரர்பே ம் அசுரர், அசுரர்பே இராக்கதர்.

✡ ஜ்ஞாந - ஞான ☞ சிந்தாகுலம் - மனக்கவலை

பக்ஷிக்கப்படுமேயானால் வில்லானது மேலே நிமிர்ந்துவிடும். அதன்பின்னர் இந்த நாராயணர் நித்திரையினின்று நீங்கிவிழித்துக் கொள்வர். அப்பால் தேவகாரியமனைத்துங் நிர்விக்கினமாய் நிறைவேறுமென்பதிற் சந்தேகமில்லை என்று தேவர்களிற் சிறந்த உருத்திரர் இந்திரனைச் செல்லுருக் கொண்டுவரும்படி ✡ ஆஜ்ஞைசெய்தனர். அப்பொழுது அவராணையின்படி செல்லுருக்கொண்ட இந்திரன் சிலவெண்ணி, கூறுகின்றான். உருத்திரமூர்த்தியை நோக்கி எங்களுக்குத் தலைவரும் உலகத்திற்குக் குருவும் ஆகிய இலக்குமி நாதருக்கு யான் நித்ராபங்கம் எவ்வண்ணஞ் செய்யலாம். நித்ராபங்கம் செய்வதும், கதாச்சேதம் செய்வதும் (இதிகாசாதிகளை முறையே சொல்லிவந்து இடையேவிடுவதும்) ஸ்திரீபுமான்களாகிய தம்பதிகளுக்கு அமைந்துள்ள பிரேமாதிசயத்தைக் கெடுப்பதும், தாயைவிட்டுச் சிசு தனித்திருக்கச் செய்வதுமாகிய இவையெல்லாம் பிரஹ்ம அத்திக்குச் சமானமாகச் சொல்லப்பட்டிருக்கின்றதல்லவா ?

(உ0-உரு) ஆதலால் யான் தேவதேவரான விஷ்ணுமூர்த்திக்குச் சுகசாதனமாயுள்ள நித்ராபங்கத்தை எப்படி செய்யத்துணிவேன். ஓ தேவனே யான் எந்தகிருத்தியத்தினால் பாவத்தைச் செய்தவனாக ஆவேனோ அந்தகிருத்தியம் இதுவாகவே இருக்கின்றமையால் இந்தவில்லைப் பக்ஷிப்பதனால் வரும்பிரயோசனமென்னை ? இவ்வாறு யோசிப்பேனாயின் உலகத்தில் யாவருந் காரியார்த்தமாய்ப் பாவத்தைச் செய்கின்றரல்லவா; ஆதனால் யானும் என் பிரயோசனத்தை நாடியே வில்லைப் பக்ஷிக்கின்றேன் என்றனன். அப்பொழுது பிரமன் ஓ இந்திரனே, நீ அங்ஙனஞ் செய்வையாயின் யாங்கள் யஜ்ஞஞ்செய்யுஞ் சமயத்தில் உனக்கு ▯ அவிர்பாகங் கொடுக்கின்றோம். ஆகையால் நீ சொன்னபடியே எங்களுடைய காரியத்தைச் செய், விஷ்ணுவை யெழுப்புவாயாக, சாவகாசஞ் செய்யாதை; (இதுவன்றி உனக்கு) ஓமகிருத்தியத்தில் அவிர்ப்பாகங் கொடுக்குங்கால் பக்கத்தில் எந்தபாகம் விழுகின்றதோ அதுவும் உன்னுடையபாகமென்றே அறிதி. ஆதலால் விரைவுடன் அக்காரியத்தைச் செய்வாயாக. இப்படி பிரமதேவர், செல்லுருக்கொண்ட இந்திரனை நோக்கிச் சொல்லியவுடன் அவன் அதிசீக்கிரமாய்ப் பூமியில் நாட்டப்பட்ட வில்நுனியைக் கரித்தனன் உடனே நாணற்றுப் போயிற்று.

(உசு-ஙூ0) நாணற்றவுடன் மேனுனியும் மேலே நிமிர்ந்தது. நிமிர்ந்தவுடன் பயங்கரமான பேரொலி யொன்றுண்டாயிற்று. அவ்வொலியால் தேவர்களனைவரும் மிகவும் நடுக்குற்றனர்

✡ அஞ்ஞை - ஆணை, கட்டளை, ▯ அவிர்பாகம் - பிரகாசம்

பிரஹ்மாண்டமெல்லாம் பொடிப்பொடியாய்ப் போயிற்று பூமியும் அப்பொழுது கம்பமாயிற்று சமுத்திரமும் கரைபுரண்டது நீர்வாழுயிர்களும் அச்சமுற்றன அப்படியே காற்றும் வேகமாக வீசிற்று பர்வதங்களு நடுங்கிற்று இனிவரப்போகின்ற துக்கத்தைச் சூசிப்பிக்கின்ற அழற்கொள்ளிகளான மகோத்பாதங்களும் உண்டாயின திக்குகளெல்லாம் மிகவுங் கோரதரங்களாக ஆயின சூரியனும் அத்தமனம் அடைந்தவன் போலாயினன் அச்சமயத்தில் தேவர்களனைவரும் இத்தன்மையான இத் தீயநாளில் என்னவரப் போகின்றனவோவென்று சிந்தாகுலமடைந்தனர். ஓமுநிவர்களே! தேவர்களெல்லாம் இவ்வாறு மனக்கவலை யுற்றிருக்கு மளவில் விஷ்ணுவினுடைய மகுட குண்டலங்களோடு கூடிய சிரம் அறுபட்டுப் போனவிடந்தெரியாமற் போயிற்று.

(ஙக-ஙரு) அப்பொழுது கோரமான அந்தகாரம் (சிறிது) நீங்கிற்று நீங்கியவுடனே பிரமருத்திர ரிருவரும் அழகு குறைந்ததும் சிரமற்றதுமான சரீரத்தைக் கண்டனர், தேவர்களும் அந்த விஷ்ணுவினுடைய ✈கபந்தமாயிருக்கின்ற சரீரத்தைக் கண்டு ஹா! ஹா? என்று ஆச்சரியமடைந்து துன்பக்கடலில் மூழ்கி சோகத்தாற் பீடிக்கப்பட்டவர்களாய்க் கூ கூ வென்று பேரொலியிட்டு அழுதனர். ஆ! நாதா இதுவென்ன! ஓ! பிரபோ! மனிதர்களால் கணிக்கக்கூடாத அத்யத்புதமான செய்கையாயிருக்கின்றதே? ஓ! அநாதியான தேவதேவனே; இது தேவர்களனைவர்க்கும் இம்சையைத் தருகின்றது: உம்முடைய சிரமானது எதனால் அபகரிக்கப்பட்டது, இது எந்த தெய்வத்தினுடைய மாயை, நீர் ஒருவராலுஞ் சேதிக்கப்படாதவராயிற்றே ஒருவராலும் எக்காலத்திலுந் தடுக்கப்படாததவராயிற்றே, ஓ விஷ்ணுவே நீரே இந்த கதியை யடைவீரானால் இனித் தேவர்களும் மரணமடைவதுதான் கதி ஆகையால் உம்மிடத்தில் எப்படிப்பட்ட சிநேகமுமில்லை இப்பொழுது எங்களுடைய காரியத்தினாலேயே யாங்கள் *துன்பப்படுகின்றோம்.

(ஙசு–ஙகூ) இந்தத் தீங்கு அசுரரால் செய்யப்பட்டது மன்று இராக்கதரால் செய்யப்பட்டதுமன்று தேவர்களாகிய எங்களாலேயே செய்யப்பட்டது ஓ! ரமாபதி! இதற்கு யாரைப்பழிப்பது பிரமனைப்பழிப்பதனாற் பயனென்னை தேவர்களெல்லாம் பராதீனர்களானார்கள் அதற்கு என் செய்வோம் மூடர்களான தேவர்களுக்கு இனி பாதுகாப்பு ஒரு சிறிதுமில்லை இப்பொழுது எந்தமாயையினால் உமது சிரம் சேதிக்கப்பட்டதோ, அந்தமாயை சாத்வீககுண முடையதுமன்று இராஜசகுண முடையதுமன்று

✈ கபந்தமா - நிறைவு

தாமசகுண முடையதுமன்று சகத்குருவாகிய ஈசனுடைய மாயையேயாம் என்றனர்.

(சுO—சுங) என் றிவ்வண்ணம் பலவாறாக வெண்ணிப்புலம்பிக் கொண்டிருக்கும் சிவபுரோகமர்க (பரமசிவனை முன்னிட்டவர்க) ளான தேவர்களை வேதவித்தமரான பிரகஸ்பதி துக்கோபசமனஞ்செய்து கூறத்தொடங்கினர். தேவர்காள்! நீங்கள் துக்கிப்பதினாலேயுங் கூக்குரலிட்டழுவதினாலேயும் பிரயோஜன மென்ன எக்காலத்தில் எதுபுத்திக்கு கோசரிக்கின்றதோ அதனை அக்காலத்துக்குரிய உபாயமென்றெண்ணிச் செய்யவேண்டும். ஓ தேவேசனே! உலகில் தெய்வப்பிரயத்தனம் புருஷப்பிரயத்தனமென விரண்டு கூறுவர் அவ்விரண்டும் ஒப்பானவை, ஆகலான் புருஷன் பிரயத்தனஞ் செய்வானாயின் அப்பிரயத்தனத்தினா லடையும் பயனை எவ்வகையிலாயினும் கூட்டிமுடித்தல் தெய்வப்பிரயத்தனம்; எனவே, தெய்வமாகிய ஈஸ்வரனுடைய பிரேரேபணையன்றித் தெய்வமாகிய வினையின் முயற்சி புருஷனிடத்தில் நிகழுமாட்டாது, அவ்வினையான்வரும் முயற்சியன்றி புருஷப்பிரயத்தனமும் முடிவு பெற்றாது. ஆகலான் வினை காரணமாகவரு முயற்சியும் அம் முயற்சியளவாகச் செய்யும் புருஷப்பிரயத்தனமும் ஆகிய இவ்விரண்டும் தெய்வமாகிய ஈஸ்வரனுடைய செயலாகவே எண்ணி நீ செய்வாயென்ன, இந்திரன் தனது குருவை நோக்கி ஆசிரியரே? தேவரீர் கூறியவற்றுள் தெய்வப்பிரயத்தனமும் மனுஷப் பிரயத்தனமும் ஒன்றென்பது ஒப்பத்தகுந்ததன்று ஆகலான் இருவகைப் ☞பிரயத்தனங்களுள் தெய்வப் பிரயத்தனத்தையே முதன்மையாக வெண்ணுகிறேன் ✠அனர்த்தத்தை விளைவிக்கும்படியான பௌருஷம் (புருஷப்பிரயத்தனத்தை) திக்சுடும் (தள்ளும்) ஏனெனில் தேவர்கள் பார்த்துக்கொண்டிருக்கிற பொழுதே விஷ்ணுவினுடைய சிரம் அறுபட்டுப் போயிற்றே. இதில் புருஷப் பிரயத் தனமும், தெய்வப்பிரயத்தனமும் ஒத்திருக்குமாயின் அறுபடுமா? என்றனன். அப்பொழுது பிரமன் காலத்தினால் எந்தவினை பீரே ரேபிக்கப்படுகின்றதோ. அதனால் வருவது நன்மை தீமை என்னுங் கருவியால் அனுபவத்திற்கு வருவது உண்மையாதலால் அவ்விரண்டையும் அவசியம் அனுபவித்தே திரவேண்டும் தெய்வச் செயலை எவன்றான் அதிக்கிரமிப்பான்.

(சுசு-(ருO) சரீரமெடுத்தவன் சுகதுக்கங்களை அனுபவிக்கின்றவனாகவே ஆகிறான். இதி லையமில்லை எங்ஙமெனின் முன் காலவசத்தினால் (என்னறிவுகெட) அதுகண்ட

☞ பிரயத்தனம் - நிறைவேற்றல். ✠அனர்த்தத்தை - பொல்லாங்கு

சிவனார் என்றலையைக் கிள்ளினர். அப்படியே, பிரகஸ்பதயினுடைய சாபத்தினால் சந்திரன் க்ஷயரோக முடையவனாயினன். சசிதேவியினுடைய பதியாகிய இந்திரனும் (கவுதமர்சாபத்தினால்) ஆயிரம்யோனிகளை யடையவும் அதுபோலவே, ஓர்கால் அகத்தியமுனிவர் சாபத்தினால் சுவர்க்கத்தினின்றுந் தவறிப் பூமியில் விழவும் பிரஹ்ம ஹத்தியினால் பீடிக்கப்பட்டு மானததடாகத்திலுள்ள தாமரை நாளத்தில் வசித்திருக்கவுமாயினன். அதுபோலவே இப்பொழுது விஷ்ணு மூர்த்தியினுடைய சிரமும் உப்புக் கடலிற்போய்விழுந்தது. இவை யெல்லாந் தெய்வத்தின் செயலேயன்றோ; (அதனைக்கடப்பது) கஷ்டம்.என்றுகூறிப் பின்னர் தேவர்களைப் பார்த்து ஓ தேவர்களே! இவர்களனைவரும் எப்பொழுதும் மாறிமாறித் துன்பத்தை அனுபவிக்கின்றவர்களாகவே யிருக்கின்றார்கள். ஆகையால் இத்தேகமாகிய சமுசாரத்தினால் எவர் தான் துன்பம் அனுபவிக்காமலிருக்கின்றனர். ஆகவே நீங்கள் ❃விசனப்படுவதை விட்டொழியுங்கள். மஹாமாயை எனவும், வித்யை எனவும், தேவி எனவும், சநாதநி எனவும், பிரசித்திபெற்ற நாரணியைத் தியானஞ் செய்யுங்கள். நிர்க்குணையாயும் பிரகிருதியாயும் உள்ள அப்பரதேவதை நமது ❖அபீஷ்டத்தை நிறைவேற்றுவள். சராசரமாயுள்ள இந்த மூன்றுலகமும் எந்த பகவதியினாலே வியாபிக்கப்பட்டிருக்கின்றதோ, அப்படிப்பட்ட பிரஹ்மவித்தையாயும், சகத் சிருஷ்டிகர்த்தையாயும், யாவருக்கும் மாதாவாயும் இருக்கின்ற பகவதியைத் தியானஞ் செய்யுங்கள். என்றிவ்வாறு பிரமதேவர் தேவர்களை நோக்கிக் கூறிப் பின்னர் தேவகாரிய சித்தியின் பொருட்டு நான்கு வேதங்களும் தேகவுருவோடு கூடினவைகளாய் எதிரில் வந்திருக்கும் படிக் கட்டளையிட்டனர். அவைகளும் அப்படியே வந்தன.

(ருக-ருஉ) பிரமன் அந்த வேதபுருஷர்களைப் பார்த்து! பிரஹ்ம வித்தையாயும், சநாதநியாயும், *மறைக்கும்படியான அங்கங்களை யுடையவளாயும், மஹாமாயையையாயும், சர்வகாரியங்களையுஞ் சாதிக்கும் வல்லமையுடையவளாயும் இருக்கின்ற பரதேவதையைத் தோத்திரஞ் செய்யுங்கள். என்றிவ்வாறு கூறிய பிரஹ்மதேவருடைய வசனத்தை வேதபுருஷர்கள் கேட்டு மிகவுஞ் சவுந்தரியமான அங்கங்களுடையவளாயும் ஜ்ஞானத்தினால் அறியப்பட்டவளாயும், மாயாசொரூபியாயும், ▮சகத்துக்குள் இருப்பவளாயும் விளங்கா நின்ற அந்நாரணியைத் தோத்திரஞ்செய்யத் தொடங்கினர்.

❃ விசனம் - துன்பம். ❖ அபீஷ்டத்தை - விருப்பத்தை

▮ சகத்துக்குள் - உலகம்

வேதங்கள்செய்யுந் தோத்திரம்

ஹே! அம்பிகே! ஹே! மஹாமயே! ஹே! விஸ்வோற்பத்திகரே! (பிரபஞ்சோற்பத்தி காரியங்களைச் செய்கின்றவளே!) ஹே! சிவே, நிர்க்குணே, ஹே! மாதா, சங்கரகாமதே, (சங்கரனுக்குக் காமந்தருகின்றவளே) நீ எல்லாப்பூதமயமாயிருக்கின்றாய். உனக்கு வந்தனம். நீ எல்லாப் பூதங்களுக்கும் ஆதாரை, பிராணிகளுக்கெல்லாம் பிராணை, அப்படியே, தீ, ஸ்ரீ, காந்தி, ✳ க்ஷமை, சாந்தை ✯சிரத்தை, மேதை, த்ருதி, ஸ்மிருதி என்ற சொல்லப்பட்ட நவ சக்தி சொரூபை, (என்று) துதிக்கப்பட்டவளாயும் இருக்கின்றாய். அன்றியும் அக்ஷரசங்கியையில் கணிக்கப்பட்ட அர்த்தம் மாத்திரையாயும், காயத்ரியாயும், வியாஹ்ருதி (மந்திரவிசேஷை) யாயும் அப்படியே ஜயையாயும், விஜயையாயும், தாத்ரியாயும், லஜ்ஜையாயும், கீர்த்தியாயும், ஆசையாயும், தயையாயும், இருக்கின்றாய். ஹே அம்பா! உன்னை மூன்றுலங்களையும் படைத்துக் காக்கின்றவளெனவும், தயாரசத்தோடு கூடினவளெனவும், சனங்களுக்குச் சநநி எனவும், வித்தை சிவை எனவும், எல்லா வுலகங்களுக்கும் ஹிதை எனவும், வரேண்யை (வரிப்பதற்கு யோக்யை) எனவும், மந்திர பீஜங்களிடத்தில் வாசஞ்செய்வதில் நிபுணை எனவும் சனமத்துக்கு நாசத்தைச் செய்கிறவளெனவுந் துதிக்கின்றோம்.

(ருஎ-சு0) * (ஹே தேவீ) பிரமன் அரன் அரி இந்திரன் வாயு அக்நி சூரியன் ஆகிய இவர்களெல்லாம் புவனங்களுக்கு அதிகாரிகளாயினும் அவர்கள் உன்னாஜ்ஞையினாலே (யாவும்) செய்யப்படுகின்றாராகலானும் நீ ஸ்திரமான ஜங்கமங்களுக்கு மாதாவாக ஆகின்றமையானும் அவர்கள் முதன்மையான கர்த்தாக்களாக மாட்டார். அன்றியும் நீ எப்பொழுது இவ்வுலகமனைத்தையும் படைப்பதற்கு இச்சிக்கின்றனையோ அப்பொழுதே ஹே! ஜநநி! பிரஹ்ம விஷ்ணு உருத்திரர் முதலிய தேவர்களைப் படைத்து அவர்களால் சிருஷ்டி ஸ்திதி லயாதி கிருத்தியங்களைச் செய்விக்கின்றாய். ஹே தேவி! (அங்ஙனம் செய்விக்கின்ற அத்தொழில்களால்) உனக்கு சம்சார பந்தம் ஒரு சிறிதுமில்லை. ஒருவடிவமாகவே யிருக்கின்றாய் (இதனால்) சகலபுவனத்தினும் உனது சொரூபத்தை அறிவதற்கு ஒருவரும் சக்தராகார். அதுபோலவே உன்னுடைய நாமசங்கியைகளை எடுத்துச்

*தேவியினது அக்ஷரசொரு மாயிருக்கின்ற பிரமவித்தையும் மறைக்கததக்கது. சிருஷ்டி நிமித்தங்கொள்ளும் சரீராங்கமும் மறைக்கத்தக் ஆகலான் மறைக்கும்படியான அங்கங்களையுடையளென்று கூறியதென்.

✳ க்ஷமை - பொருமை. ✯ சிரத்தை - சமன்தாய்

சொல்வதற்குஞ் சமர்த்தரான புருடர் ஒருவருமில்லை. (ஏனெனின்) அல்பமான சலத்தைத் தாண்டுவதற்குக் கூடாதவொருவன் கரையில்லாத சமுத்திரத்தைக் கடப்பதற்குச் சாதுர்ய முடையவனாக எப்படியாவான். ஹே பகவதி! உனது மகிமையை இவ்வுலகிலேனும் தேவசமூகத்திலேனும் ஒருவரு மறியமாட்டார். ஹே! ஜநநி! நீ ஒருருவாகவேயிருக்கின்றாய். அப்படி ஒருருவாகவேயிருந்தும் இல்லையாய்ப் போகின்ற இப்பிரபஞ்ச மனைத்தையும் எவ்வாறு தான்படைக்கின்றனை ? ஹே தேவி! இவ்விஷயத்தில் வேதவசனமும் பிரமாணமாகக் கூறப்படுகிறது.

(சுக-சுரு) நீ ஆசையற்றவளாகவே யிருந்தும் எல்லாவுலகங்களுக்குங் காரணமாக விருக்கின்றாய். (இது மிக்க) ஆச்சரியம்! ஹே பகவதி உனது சரித்திரம் விசித்திரமானது. எங்களுடைய மனம் இவ்விஷயத்தில் கலக்கமுறுகின்றது. சகல வேதங்களுடைய அந்தத்தினாலும் அறியக்கூடாத மகிமையையுடைய உனது பரதத்வத்தை நீயும் அறியமாட்டாய். ஹே ஜநநி! நீ விஷ்ணுவினுடைய சிரம் அறுபட்டுச் சிதறிப்போனதை அறியமாட்டாயா; ஹேசிவே! விஷ்ணுவினுடைய (இவ்வளவு எளிமையான) சக்தியை அறியாமல் எதையறியப்போகின்றாய். ஹே அம்பா! விஷ்ணுவினுடைய பலிஷ்டமான பாவக்கூட்டம் இதுதானோ? ஹே ஜநநி! உன்னுடைய பாதபத்மத்தில் தியானநிபுணரா யிருக்கின்றவரிடத்தில் பாவம் எப்படியிருக்கும். தேவசமூகத்தினிடத்தில் (பிரியமுள்ள உனக்கு) மிகவுங்குடிலமான இத்தகைய ✪ உபேக்ஷை எற்றுக்கு? மிகவும் ஆச்சரியகரமான விஷ்ணுவினுடைய சிரோ நாசமானது உனக்கு சம்மதம்போலும், ஹே அம்பா! (இதனால்) நீ சரீரச்சேதஞ்செய்வதில் மிகவுஞ் சாமர்த்திய முடையவளென்றாகின்றாய். இது பெருந்துக்கம்! சிரத்தை ஒன்று

தீ-புத்தி, ஸ்ரீ-சம்பத்து. மேதை-ஞானம். த்ருதி-தைரியம்; ஸ்மிருதி சித்தம். ஏனைய வெளிப்படை தாத்ரி-கிருஷ்டிகர்த்தை.

இதனால், 'தச்சனாலாகிய கோயில்' என்பதுபோல பிரமனாதியரால் சிருட்டியாதிதொழில் நிகழ்தலால் (நமுக்யா :- முக்கியமான கர்த்தாக்களாகார்) எனவே ஏவுதற் கர்த்தாக்களாகார். ஆகவே இவரெல்லாம் இயற்றுதற் கர்த்தாக்களே யாவரெனவும், அம்பிகையோ "அரசனாலாகிய கோயில்" என்பது போல பிரமனாதியரைச் சிருட்டியாதி தொழில்களில் ஏவும் எல்லாவுயிர்களுக்கும் நிலையான மாதாவாய் நிற்றலான் ஏவுதற் காத்தா எனவுங் குறித்தமை காண்க.

தொழில்களால் சம்சாரபந்தமில்லை என்றது. அவை அருளால் செய்கின்றவளெனவும், ஒருவடிவமாகவே இருக்கின்றாள் என்றது. கன்மமல மில்லாதவளெனவுங் குறித்தற் கென்க.

✪ உபேக்ஷை - அலட்சியம் பண்ணல்

சேர்ப்பதில் நீ காலதாமதஞ் செய்வது எப்படி சகிக்கத்தக்கது? அறியோம். ஹே தேவி! உனது சித்தத்தில் எல்லாத்தேவர்களுந் தாபத்தைத் தரும்படியான தோஷமியற்றியதை இன்று தான் அறிந்தனையோ, அன்றி யுத்தத்தினால் விளைந்த சொல்லுதற்கரிதான விஷ்ணுவினுடைய அகங்காரமே வேகமாய்ச் சேதிப்பதற்குச் சத்தியுடைய தாயிற்றோ? ஹே அம்பா! உனது மகிமாவிலாசத்தை யாங்கள் அறியவேமாட்டோம். ஹேபவாநி? இப்பொழுது அவ்விஷ்ணுவினுடைய சிரம் மிகவும் ரம்மியமான. தீர்த்தப்பிரதேசத்தில் கோரமான தவஞ்செய்து உன்னிடத்தில் வரம்பெற்றவரும் அவ்விஷ்ணுவினால் யுத்தத்தில் செயிக்கப்பட்டதா? இப்படி தலையற்றுப்போன வாசுதேவனைப் பார்ப்பது அவர்களுக்கு இதுவொரு விநோதமா;

(சுசு-எ0) அன்றி முதன்மையானவளே! நீ சமுத்திரராஜனுக்குப் புத்ரியான இலஷிமியினிடத்தில் கோபங் கொண்டனையோ! இல்லையாயின் இந்த இலஷிமியை நாதனற்றவளாகப் பார்க்கின்றது எற்றுக்கோ? அக்கமலாசநி உனக்கு ஏதேனும் அபராதஞ் செய்திருப்பாளாயின் அவளுஞ் உனது அம்ஸத்தினின்றும் உண்டானவளாகலின் அவளுடைய அபராதம் பொறுக்கத் தக்கதன்றோ. இனி என் விண்ணப்பத்தையேற்று இந்த விஷ்ணுவை எழுப்பி தேவியை, சந்தோஷப்படுத்தும்படியாகச் செய்வதும் (ஆவசியம்.) ஹே சகலாதிநாதை! இந்த லஷமியேயல்லாமல் இந்ததேவர்களுந் துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கின்றனர். இவர்களோ! காரியங்களில் முதன்மையானவராயும் பிரசித்தமான பிரபாவத்தையுடையவராயுமிருக் கின்றவர். உன்னை எப்பொழுதும் நமஸ்கரித்துக் கொண்டு மிருக்கின்றவர். ஆகையால் இவரனைவர்க்கும் நாதனாய் விளங்காநின்ற விஷ்ணுமூர்த்தியை எழுந்திருக்கச்செய்து அவர்களைத் துக்கசாகரத்தினின்றுங் கரையேற்றுவாயாக. ஹே தேவி? விஷ்ணுவினுடைய சிரம் எவ்விடஞ் சென்றதோ அறியோம், இப்பொழுது அவரைப் பிழைப்பிக்கும் உபாயம் யாங்கள் வேறொன்றையும் அறிந்திலம் நீயோ, எப்படி அமிர்தமானது தேவர்களைச் சீவிக்கச்செய்யந் தொழிலில் ஆற்றலுடையதே, அப்படியே உலகத்திற்குப் பிராணனைக் கொடுக்குந்தொழிலில்

பிரபஞ்சம் இல்லை என்று சொல்லும்படி நாமரூபங்களழிந்து மாயையிவொங்கி யிருத்தலை முன்னுள்ளவாறு தோன்ற தேவிசங்கற்பிக்கின்றன. ளாதலால் இல்லையாய்ப்போகின்ற இப்பிரபஞ்ச மனைத்தையும் எவ்வாறு தான்னுடைகின்றனை? என்று வியந்ததென்க.

பவன்ஆவன். பவாநி-சிவனுடைய பத்நி.

ஆற்றலுடையவள். இவ்வண்ணஞ் சரீரத்தோடு வெளிவந்த வேதாகமங்கள் குணாதீதையாயும் மகா மாயாசொரூபையாயும் உள்ள மகாதேவியைத் துதிக்க அத்தேவி பிரசன்னையாய் ஆகாயத்திற்றோன்றி இனிய வோசையால் சனங்களுக்கு. ஆனந்தத்தைத் தருவதும் சுபகரமுமான அசரீரிவாக்கால் அந்த தேவர்களை நோக்கி (அடியில் வருமாறு) கூறினள்.

(எக-அக) ஓ தேவர்காள்! நீங்கள் துன்பப்படவேண்டாம். அமரர்களே! சுவஸ்தமாக விருங்கள். வேதங்கள் என்னைத் துதித்தன. அதனால் சந்தோஷமடைந்தேன் இதில் சம்சயமில்லை. இந்த மானிடப் பிரபஞ்சத்தில் எந்த புருஷன் என் சம்மந்தமான இத்துதியை எப்பொழுதும் பக்தியோடு தோத்திரஞ்செய்கின்றானோ அவன் எல்லாவபீஷ்டங்களையு மடைவன். எந்த புருடன் மூன்று காலத்திலும் பக்தியோடு எனது சம்பந்தமான இந்த ஸ்தோத்திரத்தைத் தவராமற் கேட்கின்றானோ, அப்புருடன் துக்கத்தினின்று நீங்கினவனும் சுகமடைந்தவனு மாகின்றனன். இத்தோத்திரம் வேதத்தினால் சொல்லப்பட்டபடியால் வேதத்துக் கொப்பானதாம். இனி எக்காரணத்தினால் விஷ்ணுவினுடைய சிரம் அறுபட்டுப் போயிற்றோ அக்காரணத்தை இப்பொழுது கேளுங்கள். சம்சாரமாகிய இந்தப் பிரபஞ்சத்தில் ஒருவருக்கும் ஒரு காரணமன்றியில் நன்மை தீமையாகிய காரியங்கள் எப்படி சம்பவிக்கும். ஓர் காலத்தில் விஷ்ணுமூர்த்தி, சமுத்திரராசபுத்திரியும் தன் சமீபத்தில் நிலைபெற்றிருப்பவளும் பிரியதமையுமாகிய லஷிமியினுடையம னோரம்யமான முகத்தைப் பார்த்து இகழந்து கூறினர். இலஷிமி தேவி, பிரபுவான பதி, நம்மைப்பார்த்து ஏன்பரிகாசஞ் செய்கின்றார், நமதுமுகம் எந்த காரணத்தினால் அவருக்கு விரூபமாக (அழகில்லாததாகக்) காணப்பட்டது, அது நம்மாலறியப்பட வில்லை, இதுவுண்மை. ஆயினும், காரணமில்லாமல் நம்மைப் பரிகாசஞ் செய்தற்கு ஏது வென்னை நம்மிலுஞ் சிறந்த சுந்தரமுடைய வேறொரு காமக்கிழத்தியே இப்படி நம்மைச் செய்யும்படிசொல்லி யிருக்கவேண்டும் என்றாலோசித்து கோபங்கொண்டு தமோகுணப் பிரதானையாயினள். அப்பொழுது தாமசசக்தியும் அவளது தேகத்தில் வியாபித்தது. மிகவுங் கொடூரமான தாமசசத்தி அவ்விலக்குமிதேகத்தில் வியாபித்ததை ஆராயுங்கால் யாதோவொரு காலவசத்தில் தேவகாரியசித்தி யுண்டாகும் பொருட்டென்றே நிச்சயிக்க வேண்டும். இதுநிற்க, பின்னர் அந்த தேவி தாமசசதியினால் கவரப்பட்ட தேகத்தையுடையவளாய் மிகவும் உக்கிரா வேசங்கொண்டு திருமாலைநோக்கி உன்னுடைய தலை அற்றுப்போகக்கடவது என்கிற இக்கடுஞ்சொல்லைக் கோபமிகுதியினால் தத்தித் தத்திக் கூறினள்.

(அஉ-அரு) அந்தோ வைதவ்யத் தினால்வருந் துக்கத்தைக் காட்டிலும் காமக்கிழத்தியினால் வருந்துக்கம் மிகவும் கொடுமை யானதென்றெண்ணித் தாமசசத்தியின் சம்பந்தத்தினால் இவ்வாறு கூறினாள். எனவே லஷிமிதேவி, நாம் சாபமிடுவோமாயின் பதியையிழக்கவருமே, அதுவருமாயின் சுகத்துக்கழிவும், அமங்கலத்வமும் உண்டாகுமே என்கிற எண்ணங்கொள்ளாமல் மாற்றாளிடத்துக் கொண்ட பகைமையினால் தன்கணவன் அவளுக்கு உதவாமற் போகவேண்டுமென்கிற எண்ணத்தையே பெரிதாகக் கொண்டன ளென்க. ஓ முனிவர்களே! ஸ்திரீகளுக்கு மூர்க்கத் தன்மையும் தயையின்மையும் பேராசையும் ஆசாரமின்மையும் அசத்தியம் பேசுவதும், சாஹசஞ்செய்வதும், மாயை வித்தை காட்டுவதும் ஆகிய இவைகளெல்லாம் இயற்கையாயுண்டாகுந் தோஷகுணங்களாம். (இதுநிற்க) விஷ்ணுமூர்த்திக்கு சாபம் வந்த காரணத்தைக் கூறிய பின்னர் தேவி தேவர்களை நோக்கி ஓ தேவர்காள்! இந்த விஷ்ணுவினுடைய தலை உப்புக்கடலி வாழ்ந்துபோயிற்று. இப்பொழுது அந்த வாசுதேவனை சிரத்தோடு கூடினவனாகச் செய்கின்றேன். இதுவன்றியும் வேறொருகாரண மிருக்கின்றது. அதனால் உங்களுக்கு மஹத்தான கார்யானுகூலம் உண்டாகப்போகிறது. இதிலையமில்லை.

(அசு-கூ0) முன்னொருகாலத்தில் மஹாபாகுவும் (பெரு தோளனும்) ஹயக்ரீவனென்று பிரசித்திபெற்றவனுமான ஓரசுரன் சரஸ்வதீ நதிக்கரையில் மிகக்கடினமான தவஞ்செய்திருந்தனன். அவ்வசுரன் ஆகாரமில்லாதவனாயும், ஜிதாத்மாவாயும், எல்லாப்போகங்களையும் வர்ஜித்தவனாயும், எனது மாயா பீஜாத் மகமான ஏகாக்ஷர மந்திரத்தை ஜபித்தவனாயும் சர்வாபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட எனது தர்மச்சத்தியைத் தியானித்தவனாயும் ஆயிரம் வருஷங் கோரமான தவஞ்செய்துவந்தனன். அப்பொழுது அவனுடையகண்ணுக்கெதிரில் அவ்வசுரனால் எவ்வாறு தியானிக்கப்பட்டனோ அவ்வாறே அத்தகைய தாமசவுருவங் கொண்டு யான் சிம்ஹவாகனாரூடையாய் அவனிடத்தில் கருணை யுடையவளாய் அங்கு *ஆவிர்ப்பவித்து ஓ மகாபாக்கியவந்தனே? விரதசீலனே? நீ விரும்பிய வரத்தைக் கேட்பாய், அதை உனக்குத் தருகின்றேன்; என்று கூறினேன்.

(கூக-கூஅ) அவன் என்னுடைய இனியவசனத்தைக் கேட்டு சந்தோஷ பூரிதனாய் அதிகவிரைவோடு பிரதக்ஷண நமஸ்காரஞ் செய்து எனது அத்புதரூபத்தைக் கண்டு பிரேமையினால் மலர்ந்த

* ஆவிர்ப்பவித்து - அவன் முன்னே தோன்றி

கண்களை யுடையவனாய் சந்தோஷத்தினால் ஆனந்தகண்ணீர் பொழிந்து துதிக்கத்தொடங்கினன். ஹே தேவி! மஹாமாயே? சிருஷ்டிஸ்திதி சம்ஹாரகாரணி : பக்தர்களுக்கு அனுக்ரஹஞ் செய்வதில் சாமர்த்திய முடையவளே! அபீஷ்டத்தைத் தருபவளே! மோஷத்தைக் கொடுக்கின்றவளே; உனக்கு வந்தனம். பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களுக்கும் கந்த ரசரூப ஸ்பரிச சப்தங்களுக்கும் நீயே காரணை ஆக்ராணம் சிஹ்வை சக்ஷுதுவக்கு சுரோத்திரம் ஆகிய ஞானேந்திரிய பஞ்சகங்களும் இவைகட்கு வேறான வாக் பாத பாணி பாயுரு உபஸ்தங்க ளென்னும் கன்மேந்திரியங்களும் ஆகிய இவைகளெல்லாம் உன்னிடத்திலிருந்தே வெளியாகின்றன என்று தோத்திரஞ் செய்தனன். மீளவும் யான் உனது பக்தியினாலும் அத்புதமான தவத்தினாலும் ஆனந்தமடைந்தேன். உனக்கு அபீஷ்டமான வரம் யாது? சொல்வாய், எதை நீ விரும்புகின்றனையோ அதைத்தருகின்றே னென்றேன். அவன் ஹே அம்பா! எனக்கு எப்படியானால் மரணம் நேரிடமாட்டாதோ, அந்தவகையைச் செய்வாய் யான் எப்படி யோகியாய்த் தேவாகர்களால் ஜயிக்கப்படாதவனாய் தேவத்வத்தை யடைவேனோ அப்படிச் செய்வாயென்றனன். ஜன்மம் எடுத்தவனுக்கு மரணம் நிச்சயம் அதுபோலவே மரணமடைந்தவனுக்குச் சன்மம் நிச்சயம் இத்தகைய மரியாதை உலகத்தில் வழங்கப்பட்டு வருகின்றது. இம்முறைமைக்கு மாறானவிதி எப்படி யுண்டாகும்.

(கூகூ-300) ஓ அசுரகுலோத்தமனே! நீ இவ்வாறு மரணவிஷயத்தில் நிச்சயபுத்திவைத்து மனதினால் யோசித்து உனக்கு இஷ்டமானவரந்தைக் கேட்பாயாக வென்றேன். அவன் ஹே ஜக தம்பிகே! எனக்கு ஹயக்கிரீவனிடத்திலிருந்தே மரணமுண்டாக வேண்டும், வேறொருவராலும் எனக்கு மரணம்வரக் கூடாது, என்றுமனத்திலுதித்த என்னிஷ்ட காமத்தைப் பூரணஞ் செய்வாயாக வென்றனன்.

(க0-க0ரு) ஓ மஹாபாக்யவந்தனே! நீ வீடுபோய்ச் சேர்ந்து இராஜ்ய பாரத்தை உன்னிஷ்டம்போற் செய்வாயாக. ஹயக்கிரீவனைத் தவிர உனக்கு வேறொருவராலு மரணம் நேரிடமாட்டாது இது நிச்சயம் என்று அந்த ஹயக்ரீவனுக்கு வரந்தந்து அப்பொழுதே மறைந்துபோயினேன். அந்த அசுரனும் பரமானந்தத்தையடைந்து தன் வீட்டுக்குச் சென்றனன். பின்னர் துஷ்டாத்மாவான அந்த அசுரன்மஹரிஷிகளையும் வேதங்களையும் பீடித்தும் நித்தித்து மிருந்தனன். அவ்வசுரனைக் கொல்லத்தக்கவர்

மூன்றுலகத்திலுமில்லை. ஆதலால் பிரஹ்மதேவன் மனோகரமான குதிரையினுடைய சிரசை அறுத்து சிரோபங்கனான விஷ்ணுவினுடைய தேகத்தில் இப்பொழுது சேர்த்துவிடுவன். அதன் பின்னர் ஹயக்ரீவனான நாராயணன் உங்களுடைய நன்மையைக் கருதி பாபிஷ்டனும் குரூரனும் பகைவனுமான அவ்வசுரனைக் கொல்லப்போகின்றான்.

(கOசு-ககஉ) என்று தேவர்களை நோக்கிக் கூறிப்பின்னர் ஆகா சவாணியாய்க் கூறிய சர்வாணியாகிய தேவி மௌனமுற்றனள். தேவர்களும் பரமானந்த பரவசராய்த் தேவசில்பியான பிரமதேவனை நோக்கிக் கூறத் தொடங்கினர். (ஓ பிரஹ்மதேவரே ?) தேவர்களுடைய காரியமாகவிருக்கின்ற விஷ்ணுவினுடைய சரீரத்தில் தலையைப் பொருத்துவதைச் செய்வீர். பின்னர் ஹயக்ரீவ வுருவர் கொண்ட விஷ்ணுமூர்த்தி அசுரசிரேஷ்டனான அந்த ஹயக்ரீவனைச் சங்கரிப்பதாகிய தேவகாரியத்தைச் செய்து முடிப்பரென்று கூறினர். ஓ முநிவர்களே! இவ்வாறு கூறிய தேவர்கள் விண்ணப்பத்தைப் பிரமதேவர் கேட்டு மிக விரைவோடு தேவர்களுடைய முன்னிலையிலேயே வாளினால் ஓர் குதிரையின் சிரசையறுத்து மஹாமாயா சொரூபியாகிய தேவியினுடைய திருவருளால் அத்தலையை விஷ்ணுமூர்த்தியினுடைய ✧ கண்டத்திற் சேர்த்தனர் அவருமெழுந்தனர். அதனால் அந்நாள்தொட்டு விஷ்ணுமூர்த்தி ஹயக்ரீவரென்னுந் திருநாமமுடையவராயினர். சில நாட்சென்ற பின்னர் மதோனமத்தனும் தேவர்களுக்குச் சத்துருவுமான அந்த தயித்தியனாகிய ஹயக்கிரீவன் பலிஷ்டரும் தேஜிஷ்டருமான விஷ்ணுமமூர்த்தியாகிய அந்த ஹயக்கிரவராலேயே யுத்தத்தில் கொல்லப்பட்டனன். பூமியில் எந்த மனிதர்கள் சுபகரமான இந்த ஹயக் கிரீவோ பாக்கியானத்தைக் கேட்கிறார்களோ, அவர்கள் சகல துக்கத்தினின்றும் நீங்கினவராகின்றனர். இதிலையமில்லை. இந்த மஹாமாயா சொரூபியாகிய தேவீசரித்திரம் பாபத்தைப் போக்குவது, பரிசுத்தமானது, படிப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் சர்வசம்பத்தையுந் தருவது.

முதல் ஸ்கந்தம் ஐந்தாம் அத்தியாயம்

ஹயக்கிரீவாவதாரமகிமை

முற்றிற்று.

ஆஉ அத்யாயம் ரூ-க்கு ஸ்லோகம் (உஅசு.)

✧ கண்டத்தில் - கழுத்தில்

முதல் ஸ்கந்தம் ஆறாம் அத்தியாயம்.

ம து கை ட வ ரு ற் ப த் தி

சவுநகர் சூதமுநிவரைப்பார்த்து ஓ முனிவரே! நீ விஷ்ணுமூர்த்தி ஹயக்ரீவரான வரலாற்றைக் கருணையினாற் கூறக்கேட்டோம்; இனி அவர் மதுகைடவர்களென்னும் அசுரர்களொடு கடலில் ஐயாயிரவருடம் போர்புரிந்ததாய்க் கூறினீரல்லவா அதனையும் அனுக்ரஹஞ் செய்யவேண்டுமென்று கேட்கத் தொடங்கினர். அந்த மஹாசமுத்திரத்தில் மஹாபலிஷ்டரும், (ஒருவராலும்) அதிக்கிரமிக்க முடியாதவரும், தேவர்களாலும் வெற்றிகொள்ளக் கூடாதவருமான அவ்விரண்டசுரரும் எப்படிப் பிறந்தார்கள், எப்படி விஷ்ணுமூர்த்தியினால் சங்கரிக்கப்பட்டார்கள்; அந்த அத்புதமான சரித்திரத்தைக்கூறும். யாங்களனை வரும் கேட்பதில் விருப்பமுடையவர்கள். மிக்க கேள்வியுடைய நீரும் சொல்வதில் வெறுப்பில்லாதவர். இப்படிப்பட்ட நம்மிருவருக்கும் இவ்வனத்தில் சந்திக்கும்படி நேரிட்டது தெய்வச்செயல் தான். மூர்க்கனோடு சந்திப்பது விஷத்தைக்காட்டிலுங் கொடுமை யானதென்றும், விவேகியோடு சந்திப்பது தேவாமிர்தத்தைக் காட்டிலும் மிக இனிமையானதென்றும் சொல்லப்படுகிறது.

பசுக்களான எல்லா ஜந்துக்களும் ஜீவித்திருக்கின்றன, புல்முதலியவைகளைத் தின்கின்றன, வீரியத்தை ✧ ஸ்கலிதஞ்செய்கின்றன, விஷயாகாரமான புணர்ச்சி யின்பத்தையும் அத்புதமாயறிகின்றன, (இவையன்றி) அவைகளுக்கு நன்மைதீமைகள் அறியும் அறிவுமில்லை. மோஷந் தரும் ஞானமுமில்லை. ஆதலால் எவர்களுக்கு சத்கதைகளைக் கேட்பதில் விருப்பமில்லையோ அவர்கள் மேற்கூறிய பசுக்கள் முதலிய ஜந்துக்களுக் கொப்பாகவே மதிக்கற்பாலராவர்.

(எ-க0) விலங்குமுதலிய செவிபடைத்த சிற்சில சந்துக்கள் இனிய வோசைகளில் இன்புற்றிருக்கின்றன, செவிபடையாத சர்ப்பங்கள் நாதவொலியைப் பானம் பண்ணி மிகவும் மோகமடைகின்றன. ஆகலான் மெய்வாய் முதிலிய பஞ்சேந்திரியங்களுள் கேட்குந் தொழிலமைந்த செவியே சிறந்ததாம். ஏனெனின் செவி என்னும் அவ்விந்திரியத்தைக் கொண்டன்றி கேட்பது முடியுமா அக்கேள்வியன்றி யொருவஸ்துவினுடைய சொரூபம் விளங்குமா அது விளங்காதாயின் அவ்வஸ்துவைப் பார்ப்பதினாலுண்டாகுஞ் சித்தக்களிப் புண்டாகுமா இவ்வகையான் சிறப்படைந்த அக்கேள்வியாகிய சிரவணம் சாத்விக

✧ ஸ்கலித - விந்து வீழ்கை

ராஜச தாமசமென்கிற பேதங்களால் மூவகைப்படும், ஓ மஹரிஷிகளே! இது மெய்ஞ்ஞானிகளால் கூறப்பட்ட உண்மை.

(கக-கசு) (அவற்றுள்) சாத்துவிக சிரவணம் வேதசாஸ்திர முதலிய சாஸ்திர விசாரஞ்செய்தலெனவும், இராஜச சிரவணம் காவியாலங்கார நாடகாதி ஸாஹித்தியங்களைப் பழகுதலெனவும், தாமச சிரவணம் போர்புரிவதற் கேதுவானவார்த்தையாடல் பிறன் பழி கூறுதல் முதலியனவெனவுங் கூறப்படும். அன்றியும் அச்சாத்வீகவிசார முதலிய மூன்றுந் தனித்தனி உத்தமம் மத்திமம் அதமம் என மூவகைப்பட்டு ஒன்பது வகைப்படும். அவைபாவன சாத்துவித விசாரத்தில் உத்தமம் மோக்ஷபதத்தைப்பற்றி விசாரிக்கும் விசார மெனவும், மத்திமம் சுவர்க்க பதத்தைப் பற்றி விசாரிக்கும் விசாரமெனவும், அதமம் இவ்வுலக போகத்தைப் பற்றி விசாரிக்கும் விசாரமெனவும்; இராஜசவிசாரத்தில் உத்தமம் தான்கற்ற சாஹித்தியங்களால் தந்நாயகியினிடத்தில் சுகிப்ப னெவும், மத்திமம் கணிகை மாதரிடத்தில் சுகிப்பதெனவும், அதமம்பரதாரத்தினிடத்தில் சுகிப்பதெனவும்; தாமசவிசாரத்தில் உத்தமம் எப்பொழுதும் போர்புரிவதில் ஆயுத்தமாயிருப்ப னெவும் மத்திமம் துரியோதனாதியர்களால் பாண்டவர்களுக்கு துவேஷ முண்டாயிற்றோ அப்படி சத்துருர்களிடத் தெனவும், அதமம் காரணமன்றியில் விவாதத்திலும் கலகத்திலும் பிரவிர்த்தி யுண்டாவதெனவும் பெரியோர்களால் கூறப்படுவதேயா மென்க.

(கஎ-ககூ) ஓ மேதாவியரான சூதரே? இங்ஙனங் கூறிவந்தவைகளில் சாத்து விகத்தில் உத்தமமான வேதசாரமாகிய புராணத்தைக் கேட்பதே மேன்மையாம். அது புத்தியை வளரச் செய்யும், புண்ணியத்தைத்தரும், அதன்பின்னர் பாபத்தை நசிக்கச் செய்யும் ஆகையால், அறிவிற்சிறந்த நீர் முன் வியாசரால் கேட்கப்பட்டதும், புருஷார்த்தங்களை யெல்லாந் தருவதும் மங்களம் வாய்ந்ததுவுமான புராணகதையைச் சொல்லியருளு மென்றனார். சூதமுனிவர் ஓ மஹாபாக்ய சீலரான மகரிஷிகளே! இவ்வுலகில் நீங்களே தான் தன்யர்கள் யானேதான் தன்யன். உங்களுக்குப் புராணங்கேட்பதில் எப்படி புத்திப்பிரவேச முண்டாகின்றதோ அப்படியே எமக்கும் சொல்வதில் ஆசக்தி யுண்டாகின்றது.

(உ0-உஉ) முன்னொருகாலத்தில் சமுத்திரம் பெருவெள்ளமாகப் பெருக அதில் மூவுலகமும் மூழ்கிப்போக அப்பொழுது வாசுதேவராகிய ஜநார்த்தனர் ஆதிசேஷனாகிய படுக்கையில் உறங்கிக் கொண்டிருக்க அவருடைய காதுகளிலுள்ள மலத்தினின்றும் மஹாபலிஷ்டரும் அசுரத்தொழிலுடைய வருமான மதுகைடபரென்னுந் தயித்தியர்கள்

தோன்றி அக்கடவிற்றானே வளர்ந்து வந்தனர். அதன் பின்னர் பெரிய சரீரத்தையுடைய அம்மதுகைடபரிருவரும் அச்சமுத்திரத்தில் விளையாடவேண்டுமென்னும் இச்சையுடையவர்களாய் அங்குமிங்குமாக வுலாவி விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது சகோதரர்கள்போல் பிரியாதுவாழும் அவ்விருவரும் மனதில் அடியில் வருமாறு சிந்திக்கலாயினர்.

(உங-உசு) எவ்விடத்துங் காரணமின்றிக் காரிய நிகழா வென்பதும் ஆதாரமின்றி ஆதேயப்பொருள் நிலைபெறா வென்பதும் உண்மையன்றோ ஆகலான் நாமிப்போது ஆதாரவாதேயங்களின்றன்மை யறியவெண்டியவர்களா யிருக்கின்றோம். ஏனெனின் மிகவும் விசாலமாயும் சுகரூபமாயும் நீர்மயமாயும் விளங்கும் இக்கடலுக்கு ஆதாரம்யாது, இது யாவருடைய படைப்பு, எப்படி யுண்டாயிற்று, இக்கடலில் மூழ்கியிருக்கிற நாமிருவரும் எப்படி யாவரால் உண்டுபண்ணப்பட்டோம், நமது தந்தையார் எங்குற்றனர், இவை முதலிய விஷயங்கள் நமக்கு நன்றாய்த் தெரியவில்லையே என்கிற விசாரமும் தெரியவேண்டுமென்கிற விருப்பமும் உடையவர்களா யிருந்தோமேயன்றி நிச்சய மறிந்தோமில்லை.

(உஎ-ஙஙவ) இவ்வாறு தங்களுக்குள் சந்தேகமூற்றுச் சிந்தித்திருந்த இருவருள் கைடபன் தன் பக்கத்தில் நீரில்நின்ற மது என்பவனைப் பார்த்து, ஓமதுவே! இங்கு இச்சலார்ணவத்தில் நம்மை நிலை பெறச் செய்வதாயும் அசைவற்றதாயும் மஹா பலத்தோடு கூடினதாயுமுள்ளது யாதொரு சத்தியோ அச்சத்தியே காரணமாகுமென்பது எனது அபிப்பிராயம். இக்கடலும் அச்சத்தியினாலேயே வியாபிக்கப் பட்டிருக்கிறது அதனையே ஆதாரமாகவுங் கொண்டிருக்கிறது ஆகையினால் நம்மிருவருக்கும் எல்லாவற்றிலுமேம்பட்ட அத்தேவியே காரணியாயிருக்கின்றன ளென்றனன். மதுவும் அவ்வாறே அபிப்பிராயப்பட்டனன். அவ்வாறு இருவரும் அறிவினால் யூகிக்கப்பட்டு யோசனையுட னிருக்கையில் மனங்கவரும் அழகிய வாக்பீஜமாகிய அக்ஷரவோசை ஆகாயத்திலுண்டாகியது, அதை அவ்விருவருங்கேட்டு மனத்துட் கொண்டனர். உடனே ஒரு மின்னொளியும் அவர் கண்ணுக்குத் தோன்றிற்று. ஒளியையும் ஓசையையும் கண்டுகேட்ட அவ்விருவரும் அன்விரண்டையும் நன்றாயாராய்ந்தவர்களாய் நாங்கேட்ட வோசை வாக்பீஜமாகிய ஒருமந்திர சொரூப மாகவேண்டும் நாங்கண்டவொளி தியேயப் பொருளாகிய சகுணசொரூப மாகவேண்டுமேயன்றி அது வெற்றோசையுமன்று அது வெற்றொளியுமன்று என நிச்சயித்து

தாங்களுண்ணும் உணவையொழித்து ஐம்பொறிகளையு முள்ளடக்கி அறிவைத்தியேயப் பொருளிற் கூட்டி மனத்தை அக்ஷரத்தில் நிறுத்தி உடலைச் சமாதியோகத்தி லிருத்தி ஆயிரம் வருடம் உக்கிரமான தவம்புரிந்து வந்தனர்.

(ஙங-உ-ஙகூ) அப்பொழுது பராசத்தி அவ்விருவருக்கும் பிரசன்னையாய்த் தவஞ் செய்வதில் மனவுறுதியுடையராய் மிகவும் வருந்துகிற அவ்விருதானவரையும் பார்த்து அவர்களுக் கனுக்கிரகம் புரிவானெண்ணி முன்போல் அசரீரியாயிருந்து உங்களிருவரது தவங்கண்டு மகிழ்வுற்றனம் யாம் உங்களுக்குச் சம்மதமான வரத்தைத் தருகின்றோம் கேட்பீராக என்றனர்.

(ஙஎ-ஙகூ) இவ்வார்த்தையைக் கேட்ட தானவரிருவரும் ஹே தேவி! எங்களிருவருக்கும் மரணம் யாங்கள் விரும்பும்பொழுது உண்டாம்வண்ணம் அனுக்கிரகித்தல் வேண்டுமென்றனர். தேவி, ஓ தயித்தியர்காள்! எனதனுக்கிரஹத்தால் நீவிர் விரும்பும் பொழுதே மரணத்தையடையக்கடவீர். இப்படியன்றித் தேவர்களாலும் ஏனைய வசுரர்களாலும் நீவிரிருவரும் ஜெயிக்கப்படத்தகுவரல்லீரென்று அனுக்கிரஹித்தனர். இவ்வரத்தைப்பெற்ற அசுரரிருவரும் மதமடைந்து செருக்குற்று நீர் வாழ்வனவாகிய உயிர்களொடு கலந்து கூடி விளையாடிக்கொண்டிருந்தனர்.

(சு0-சுங) ஓ அந்தணர்காள்! இவ்வசுரர் இவ்வாறு விளையாடிக் கொண்டிருக்கையில் ஓர்நாள் கமலாசனனும் சிருஷ்டிகர்த்தனுமாகிய பிரமன் திடீலென்று அவர் முன் தோன்றினன். மஹா பலசாலிகளாயும் யுத்தஞ்செய்வதில் விருப்புடைய வர்களாயுமுள்ள அவ்விருவரும் பிரமதேவனைக் கண்டு களிப்படைந்து ஓ பிரம தேவனே! எங்களிருவருடன் யுத்தஞ்செய்யக் கடவாய் இன்றேல் உனக்காசனமாயுள்ள தாமரையைவிட்டு எங்கேனுஞ் செல்லக் கடவாய் போர்செய்ய வலியிலனாகிய உனக்கு மங்களகரமான இச்சுகாசனம் எங்ஙனங்கூடும். இக்கமலாசனம் வீரத்தோடு கூடினவர்களுக்குத் தகுதியேயன்றி பயத்தோடு கூடினவர்களுக்குத் தகுதியன்று ஆகையால் நீ இதைவிட்டு உடனே போகக்கடவா யென்றனர். இவ்வாறு கூறிய அவ்விருவரது வாய்மொழியைப் பிரஜாபதி கேட்டு மிகவும் விசாரமுற்று அதி பலசாலிகளாயுள்ள இவர்களை அந்தோ! நாம்யாது செய்யுந் திறமுடையோம் என ஏக்கங்கொண்டு மனதில் ஆராய்வானாயினான்.

முதல் ஸ்கந்தம் ஆறாம் அத்தியாயம்
மதுகைடப ருற்பத்தி
முற்றிற்று.
ஆக அத்தியாயம் – சு-க்கு ஸ்லோம் (ஙஉ)

———

முதல் ஸ்கந்தம் ஏழாம் அத்யாயம்

*கமலாசனகுருத விஷ்ணுயோக நித்திராஸ்துதி

(க-உ) சூதமுனிவர் சவுனகாதியரைப்பார்த்து, ஓ முனி கணங்காள்! மதுகைடபருடைய வீரமொழியினால் மதிமயங்கி ஆராயத்தொடங்கிய சர்வதந்திர வேத்தாவான பிரமன் அவ்விருவரையு நோக்கித் தண்டத்தை யீறாகவுடைய சாமதான பேதமென்னுஞ் சதுர்வித வுபாயங்களை யாலோசித்து அடியில் வருமாறு தன்னுள் எண்ணலாயினள்.

(ங-எ) நாமிப்பொழுது இவ்விருவரது பலமும் இவ்வள வினவென உள்ளவா றறிந்தோமில்லை; ஆகலானும், பகைவர் வலியுணராது யுத்தஞ்செய்தல் மிகவுந் தகுதியற்றதாகலானும், இவர்களிடத்தில் யுத்தஞ்செய்ய வேண்டுமென்னும எண்ணமொழித்துத் துதிசெய்யின் மதம் பிடித்திருக்கும் இவ்விருவருக்கும் நமது வலியின்மை நம்மாலேயே தெற்றென வெளியாகுமாகலானும், அங்ஙனம் வலியின்மை வெளியாகுங்கால் (நம்மைக்கொல்ல இரண்டு பேர்வேண்டுமா) ஒருவனே கொல்லுவானாகலானும், அன்றித் தானத்தால் வெல்லலாமென் றெண்ணுவோமாயின் அதற்கு நாம் ஒரு சிறிதும் யோக்யதையுடையோ மல்லோம் ஆகலானும், அன்றிப் பேதத்தினால் வெற்றியடைவோ மென்றெண்ணுவோமாயின் இவர்களைப் பேதிக்க எவ்வாற்றானு முடியாதாகலானும், இந்நான்குபாயங்களையும் எண்ணுவதொழித்து ஜனார்த்தனராய் மஹாவீரமுடையவராய் நான்கு திருக்கரங்களையுடையவராய் ஆதிசேஷன் மடியிற்றுயில் கொள்ளுந் திருமாலைத் துயிலுணர்த்தின் நமது இடுக்கணைத் தீர்த்தருளுவர் என மனதில் நிச்சயித்து உந்திமலரிற் றோன்றிய அப்பிரமன் அவரது தாமரைத் தண்டுட்சென்று துக்கந்தீர்த்தருளவல்ல விஷ்ணுமூர்த்தியை மனத்தாற் சரணமடைந்து அவர் துயிலுணரும் பொருட்டு ஜகந்நாதரும் யோக நித்திரையால் அசைவற்றவரும் நாராயணருமான அரியை அவரது மங்களகரமான திருநாமங்களால் அடியில் வருமாறு அழைப்பாராயினர்.

(அ-கO) ஹே தீனநாத! ஹரே! விஷ்ணோ, வாமந மாத வந் பத்தார்த்த ஹ்ருத்! (அடி பரிடர் தீர்ப்பவனே) ஹ்ரீஷிகே (இந்திரிய நிக்கிரஹ,) சர்வவாச, ஜகத்பதே, அந்தர்பாமின், அமேயாத்மன் (அளவிடப்படாத சொரூப முடையோய்) வாசுதேவ, துஷ்டாரிநாச நைதாக்ரசித்த (துஷ்டராகிய சதருக்களை அழிப்பதிலேயே செலுத்துமன முடையோய்) சக்ரகதாதர, சர்வஜ்ஞ, சர்வலொகேச, சர்வசக்தி சமன்வித, தேவேச, துக்கராச, பள்ளி எழுந்தருளும் எழுந்தருளும் அடியேனைக் காத்தருளும்.

(சக-கங) ஹேவிஸ்வம்பர, விசாலாக்ஷ, புண்யஸ்ரவணகீர்த்தன, சகத்யோநே, நிராகார, சர்க்க (சிருஷ்டி) ஸ்தித்யந்த காரக இந்த இரண்டசுரரும் மதம்பிடித்து என்னைக்கொல்ல விருப்புற்றனர். எல்லாவற்றிற்கும் ஆதாரமானவரே யான் சங்கடப்படுவதை தேவரீர் அறியாததென்னை அதிக துன்பத்தினால் மெலிந்து தேவரீரைச சரணமடைந்திருக்கிற அடியேனைக் கடாக்ஷித்திலீராயின் ஹே தீனரக்ஷகரே தேவரீரது காத்தற் றொழில் நிலையற்றதாகுமன்றோ என இங்ஙனம் பிரமன் மிக வருந்தித் துதித்தும் திருமால் யோகநித்ரையைவிட்டுத் திருக்கண் மலர்த்தா திருப்ப மீளவும் பிரமன் அடியில் வருமாறு ஆலோசிப்பானாயினான்.

(கசு-கசு) யோகநித்திரையின் வசப்பட்ட விஷ்ணு பகவானை நாம் இவ்விதமாகத் துதித்தும் அவர் திருப்பள்ளியுணராராயினர். தரும சொரூபியாகிய அவரென் செய்வர். நித்திராசக்திபால் விழுங்கப்பட்டு அதற்குள்ளாகி திருக்கண்விழித்திலர். இவ்விருதானவரும் மதர்த்துச் செருக்குற்று நம்மைக்கொல்லக்கருதி (கண்ணிமைகொட்டாது) குறுகுகின்றனர். இவர்களால் மிகத்துன்புற்ற நாம் இனியாது செய்யவல்லம் எங்குச் செல்லவல்லம் என மனதிற் பலவாறாகவெண்ணிக் கவலையுற்றுப் பின்னர் தெய்வவருளால் ஒருவாறுகவலையற்றுத் தெளிந்து இவ்விஷ்ணு மூர்த்தியையும் அசைவற்ற அசேதனப் பொருளாய்ச் செய்த எந்த சத்தியோ அந்தச்சத்தியே நம்மைக்காக்க வல்லவளாவள்.

(கள-உக) ஏனெனின், பஞ்சபூதங்களின் குணங்களாகிய சத்தாதி விஷயங்களை உயர்நீங்கினவனறியாவாறுபோல் இத்திருமாலும் நித்திராசத்தியான் திருக்கண்கள் மூடப்பட்டு ஒன்றும் அறியாதிருக்கின்றனர். நாம் இவரை எவ்வளவு பரத்வமாகத் துதித்தோம் அத்துதியுள் ஏதேனும் ஒன்று கேட்டிருப்பரெ ஆகையால் இவர் நித்திராசத்தியின் வயத்தரேயன்றி நித்தியாசத்தி இவவ் வயத்ததன்று. பிறர்வயப்பட்டோர் அவரது ஏவலரேயாணி இம்முறைமையான்

நித்திராசக்தியின் வயத்தராகிய இத்திருமாலுக்கு அந்நித்திரா தேவியே ஏவல் கொள்ளுங் கடவுளாவள்

(உஉ-உங) அத்தேவி இலஷிமீதேவி என்று கொள்ளலாமோவெனின் அத்தேவியும் நமது தோத்திரத்தைக் கேட்டுக் கண் விழித்தில ளாகையால் இவ்விலக்குமிதேவியும் அத்தேவியாகாள். இவளுக்கும் யாவருக்கும் எசமானனாகிய திருமாலையே நித்திரையின் வயத்தராக்கியதால் இவ்வுலகியாவும் அச்சத்தியில் விபத்தவேயாம். இதனால் நாமும் திருமாலும் ருத்திரமூர்த்தியும் சரஸ்வதி முதலிய முத்தேவி முதலியயாவரும் அத்தேவியின் வரத்தரே என்றுணர்வதிற் சிறிதேனுஞ் சந்தேகமில்லை.

(உசு-உசு) திருமாலே இத்தேவியினது மகிமைக்குத் தேவற்று பிராகிதரைப்போற் றன் வயமிழந்து கிடக்கின்றாரெனின் ஏனைய கடவுளரைப்பற்றிச் சொல்லக் கிடப்பதென்னை; ஆதலாலிப்பொழுது யோக நித்திராசத்தியைத் துதிப்போம். அங்ஙனந்துதிப்பின் அத்தேவியானவள் கருணை கூர்ந்து திருமாலை கண்விழிக்கும்படிச் செய்வள். அப்பொழுது சநாதனராகிய மஹாவிஷ்ணுவானவர். அவ்வசுரருடன் போர்செய்தருளுவர் எனப்பிரமனெண்ணித் தாமரைத் தண்டினின்றும் ஏகாக்கிரசித்த முடையனாய்த் திருமாலது திருமேனியில் வியாபித்திருக்கும் யோகநித்திரையைப்பின் வருமாறு துதிப்பானாயினான்.

(உஎ-உகூ) ஹே தேவி! இவ்வுலதிற்குத் தேவரீரே காரணமென வேதவாக்கியங்களானைத் தானும் அறிந்தேன் (அதற்குச் சன்றாக) எவ்வுலகிற்கும் அறிவளிக்கும் புருஷோத்தமராகிய திருமாலும் இன்று உம்மால் நித்திராதேவியின் வயத்தராயினர். ஹே அன்னாய்! எல்லாப் பிராணிகளது மனதிலுறைபவளே! திருமலே தன்வயமிழந்து கிடக்கின்றனரெனின் தேவர்களுள் மிகச்சிறந்த சமர்த்தனாய எவன்றான் நிர்க்குணையாகிய மோகவில சலையை (மதிமயக்கும் வேடிக்கையான விளையாட்டை) இவ்விதமென அறியவல்லவன். அங்ஙனமறியக் கூடாததை மூடனானயானா அறிவது.

(ஙO) ஹே தேவி! (நிர்க்குணையாகிய உம்மை) சந்தியை என்னும் பெயரால் முனிகணங்களை• மூன்று காலமுந்தவறாது எவ்வாறு குணரூபங்களைத் தியானிக்கின்றனரோ, அத்தகைய தியானரூபசகுணையாய்த் தேவரீர் பலவகையான நடனங்கள் செய்கின்றீர். அங்ஙனமான நடனத்தொழிலியற்றுவதில் தேவரீர் சமமந்தப் படுவதையாவரு முணரார்.

(ஙக-ஙரு) உம்மைச் சாங்கியர் புருஷனென்றும், பிரகிருதி என்றும், சைதன்ய பாவரகிதை என்றும் கூறுவது மல்லாமல் சகத்தைப் படைக்குங் கர்த்தையென்றுங் கூறுகின்றனர். நீர்படைக்கும் மகிமையையுடையவர்தானா? அதுவுண்மையாயின் இந்த விஷ்ணுமூர்த்தியை ஏனிப்பொழுது பிரஜ்ஞையில்லாதவராகச் செய்தீர். இது மாத்திரந்தானா, சகுணையாயிருந்து நானாவிதமான நாட்டியத்தைச் செய்கின்றீர் இவ்வாறு செய்வதாகிய உம்முடைய சதுர்ப்பாடாகிய தொழிலை ஒருவருமாறியார். ஹேபவாநீ! உம்மை முனிகணங்கள் முக்காலத்திலும் இடைவிடாமல் சந்தியை சாவித்திரி, காயத்திரி என்னும் நாம குணங்களைக் கற்பித்துத் தியானிக்கின்றார்கள். ஹே மாதா! நீர் எப்பொழுதும் அறிவை உயிர்களுக்கு ஊட்டுகின்றபடியால் புத்தி என்றும், தேவர்களுக்கு எக்காலத்தும் சுகத்தைத் தருகின்றபடியால் என்றும், ஏனையவர்களுக்கு ✧மதி ✳காந்தி ✂சிரத்தை முதலிய குணவிசேஷங்களைத் தருகின்றபடியால் அவ்வக்குண சொரூபி என்றும் கூறப்படுகின்றீர். (இக்காரணங்களை யோசிக்குங்கால்) உம்மைவிட மேலான தெய்வம் ஒன்றிருக்கின்றதென்று அநேகம் பிரமாணங்களினாலும் யுக்தி விசேஷங்களினாலும் என்னாலறியப்படவில்லை. ஆகையால் நீரே எல்லாவுலகங்களுக்குந் தாயென்பது சத்தியம். இதற்கும் சாஷி இரக்ஷிக்கின்றவரென்று பேருடையவராயிருக்கின்ற இந்த விஷ்ணு நித்திரை வசப்பட்டிருக்கின்றதேயாம். ஏனெனில் இந்நாள்காறும் இவரையே தெய்வமென்றெண்ணியிருந்தேன் இவரிப்பொழுது அறிவுகெட் டுறங்கும் மானிடரைப் போல் யாதொரு உணர்ச்சியுமின்றி என்னுடைய துக்கத்தையறியாமல் உரக்கங்கொண்டிருக்கின்றார் இவரை நானெப்படி தெய்வமாகிய தாமென்று கூறுவேன், ஹே தேவி! நீர் வேதவித்துக்களாலும் அறியப்படாதவர், வேதத்தாலும் அவ்வேதந் தன்னுளடக்கிக்கொண்டிருக்கும் அர்த்த விசேஷங்களாலும் உம்முடைய பெருமையறியப்படமாட்டாது. ஏனெனில் இந்த வேதம் உம்மாலுண்டாக்கப்பட்டது; உலகத்தில் நடக்கும் சகல கிருத்தியங்களும் உம்முடையதே; இது பிரத்தியக்ஷந்தான். உம்முடைய மகிமை பொருந்திய சரிதங்களனைத்தையும் எந்தப் புத்திமான்கள் தானறிவார்கள்? எவருமறியமாட்டார்; யானுமறிய மாட்டேன்; ஹரிஹரரும் ஏனைய அமரரும் அறியமாட்டார். இவர்களே யறியார்களாயின் முனிவர்கள் எங்ஙனம் அறியப்போகிறார்கள்? அவர்கள் அசக்தர்கள்.

✧மதி - அறிவு. ✳காந்தி - அழகு ✂சிரத்தை - தருமன் பாரி

என்னாலுண்டாக்கப்பட்ட புத்திரர்களும் அறியார். ஆகையால் எந்த வுலகத்திலும் உம்முடைய மகிமையை அறியவல்லாரொருவருமில்லை. அது வாக்குக்கெட்டாதது. ஹே தேவி! வேதவித்துக்கள் யாகங்களில் ஆகுதி செய்யுங்காலத்தில் (ஸ்வாஹா) என்னும் உமது நாமத்தை உச்சரிக்காமற் போவாராயின் யஜ்ஞத்தில் கொடுக்கப்படும் அவிர்ப்பாகத்தைத் தேவர்கள் ஒருபொழுதும் பெறமாட்டார்கள். ஆகையால் தேவர்களுக்கும் தேவரீர்தான் ஆகாரத்தைத் தருகின்றவராகின்றீர். (31-35)

ஹே பகவதி! பூர்வத்தில் உம்மால் தேவர்களும் யானும் அசுரர்களுடைய பயத்தினின்றும் காக்கப்பட்டோமல்லவா? அது போலவே இப்பொழுதும் காக்கப்படவேண்டும். ஆகையால் இப்பொழுது மதுகைடபருடைய கோரமான தொழிலைக்கண்டு நடுங்கி உம்மைச் சரணடைந்தேன். என்னைக் காத்தருளல்வேண்டும். மந்தமதிகளாகிய சிலர் வேறு சில தேவர்களைத் துதிக்கின்றனர். தேவரீர் ஒருக்கால் நீ முன் விஷ்ணுவைத்தானே சரணமென்றடைந்து துதி செய்தனை என்று வினவுவீராயின் அவரிப்பொழுது எனக்கு நேரிட்டிருக்கும் துக்கத்தை யறிந்தாரில்லை. (அவரறியாமைக்குக் காரணம்) அவர் உம்முடைய சக்தியினால் வசீகரிக்கப்பட்ட சரீரத்தை யுடையவராயிருக்கின்றார். ஆகையால் அவரை நித்திரையினின்றும் விலக்கிவிடும்; இல்லையாயின் இவ்வசுரர்களை யாவது கொன்றுவிடும். இதுவன்றி யான் அதிகமாகச் சொல்லும் யோக்யதையுடையேனல்லேன். ஹே பகவதி! யான் விண்ணப்பஞ் செய்து கொண்டவற்றுள் உமக்கு எது உசிதமென்று தோன்றுகிறதோ அதனைச் செய்தருள்வீர். உம்முடைய பிரபாவத்தை ஹரிஹராதிகளும் அறிந்துகொள்ளக்கூடாதவராய் தியானஞ் செய்கின்றார்கள். (உம்முடைய பெருமை இவ்வாறிருக்குமாயின் நீர் இது செய்யுமென்று அடியேன் எங்ஙனம் சொல்வேன்?) ஹே ஜநநீ! யானும் உமது பிரசித்தமான மகிமை அளவுகடந்ததென்று அறிந்தேன். இதற்கும் சாக்ஷி இந்த விஷ்ணுமூர்த்தியே. (எப்படி யென்றால்) இந்த விஷ்ணுமூர்த்தியினுடைய மார்பில் வசிக்கின்ற கடலிற்றோன்றிய லக்ஷ்மிதேவியும் நித்திரா சக்தியின் வயத்தராய்க் கிடக்கும் தனது பதியாகிய ஹரியை எழுப்புவதற்குச் சக்தியற்றவளாய்ப் போனதுமன்றித் தானும் நித்திரா சக்தி வசப்பட்டுப் பராதீனையா யுறங்குகின்றாள். இப்படி இந்த லக்ஷ்மியும் அறிவிழந்து உறங்குவதற்குக் காரணம் உம்முடைய

சக்தியாலென்றே நினைக்கின்றேன். ஹே தேவி! இவ்வுலகத்தில் அந்நிய தெய்வங்களைத் தோத்திரஞ் செய்வதை விட்டுவிட்டு உம்முடைய பாத கமலங்களில் ஆழ்ந்த பக்தியை யடையப் பெறுவார்களாயின் அவர்களே செல்வவான்களாவர். அந்நெறியை யுடையவர்கள் தான் அம்பிகையாகிய உம்முடைய பக்தி மார்க்கங்களனைத்தையும் நன்குணர்ந்து ஸர்வஜ்ஞநியாய் விளங்குங் காமதேனுவாகிய உம்மைத் தியானிப்பார்கள். ஹே தேவி! இந்த லக்ஷ்மி இங்கு உறங்கிவிட்ட அவர்து கணங்களையுங் காண்கிலன். உம்முடைய சொரூபமாகிய புத்தி, காந்தி, கீர்த்தி, நல்விருத்தி முதலிய குணங்களைத் தம்முடைய குணங்களாகக் கொண்டிருக்கும் இவ்விஷ்ணு அக்குணங்களை நீக்கிவிட்டு நித்திரையை ரம்யமாகக் கொண்டு எவ்விடஞ் சென்றனர்? (36-41)

இவ்வண்ணம் விஷ்ணுவும் உறங்குகின்றார்; அவருடன் லக்ஷ்மியும் உறங்குகின்றான்; அவருடைய குணங்களுமொழிந்தன என்று பிரமன் எண்ணி மறுபடியும் தேவியைத் துதிக்கிறான். ஹே பகவதி! மிகவும் மானமுடைய உம்முடைய சக்தியாகிய நித்திரையினால் இவ்விஷ்ணு கட்டுப்பட்டா ரென்பது நிச்சயம். ஹே தேவி! எல்லா மகிமையும் உமக்கிருக்கின்றமையால் உலகத்திற்கு நீரே சக்தி. (அன்றியும்) இவ்வுலகெல்லாம் உம்முடைய சங்கற்ப மாத்திரத்தினால் சிருஷ்டிக்கப்பட்டது. ஒரு நாடகன் தன்னால் செய்யப்பட்ட நாடகத்தைத் தானே அவ்விடத்தில் நடித்துக் காட்டுவதுபோல் உம்மால் நிர்மிக்கப்பட்ட மோஹஜாலமான இவ்வுலகமாகிய நாடகசாலையில் நீர் விளையாடுகின்றீர். பூர்வம் சிருஷ்டி காலத்தில் விஷ்ணுவை வெளிப்படுத்திக் காத்தற்றொழிலுக்குரிய அமலமாகிய சக்தியைத் தந்தருளியதால் அவரிவ்வுலகத்தைக் காத்தருளினர். இப்பொழுது அவரை நித்திரா சக்தியின் வசத்தராக்கினீர். ஹே அம்பா! தேவரீர் திருவுளத்தில் எது எது எப்பொழு தெப்பொழுது உதிக்கின்றதோ அதையதை அப்பொழு துப்பொழுதே செய்து வருகின்றீர். (உம்மைத் தடுப்பாரார்?) இது நிச்சயம். ஹே பகவதி! என்னையும் தேவரீரே விரும்பிப் படைத்தருளினீர். படைத்த நீரே இப்பொழுது கொல்ல இச்சைப் படுகின்றீரென்றெண்ணுகிறேன். அப்படி என்னைக் கொல்லும் இச்சை இல்லையாயின் (யானெது சொல்லியும் கேளாததுபோலிருக்கின்ற) மௌன முத்திரையை விட்டுத் திருவாய் திறந்தருளுவீர். ஹே சங்கரி!

௨௰

கருணாகரி! கால சொரூபிகளான இந்த அசுரர்களை இப்பொழுது படைத்திருக்கின்றீரே அவர்களைப் படைத்தது என்னைப் பரிஷிக்கவேண்டு மென்கிற எண்ணங்கொண்டே யன்றி வேறென்னையுள. உம்முடைய அற்புதமான லிலை இத்தன்மைத்தென்று (இப்பொழுது) யானறிந்தேன். நீர் இந்த உலகங்களைப் படைத்து சுதந்தரையாய் விளையாடுகின்றீர் பின்னர் சங்கரிக்கின்றீர் (இப்படி உலகமுழுவதையும் படைத்ளித் தழிப்பதை ஓர் விளையாடலாகக் கொண்ட நீர் முன் என்னைப் படைத்ததும்) இப்பொழுது கொல்ல இச்சிப்பதும் ஓராச்சரியமா அன்று ஹே மாதா? உம்மிச்சைப்படி என்னைக் கொல்லும். ஹே சகதம்பிகை மரணமடைவதில் துக்கம் எனக்குச் சிறிதுமில்லை, (இல்லையாயினும் உமக்கொரு பழியுண்டாகுமே என்று எண்ணுகிறேன்) என்னையெனின்? பூர்வத்தில் உம்மால் சிருட்டிகர்த்தாவாகப் படைக்கப்பட்டபிரமன் தயித்தியர்களால் கொல்லப்பட்டா னென்னும் அபகீர்த்தி உலகத்தில் நிலைபெற்றிருக்கு மென்பதேன்றி வேறில்லை. ஹே தேவி! எழுந்திரும், எழுந்து அற்புதமான ஓர் திருவுருவங்கொண்டு என்னையாவது இந்த அசுரர்களையாவது கொன்றுவிடும். சிறியபாலையைப்போல் லீலைசெய்கின்றவரே உம்முடைய இச்சைப்படி செய்யும், அப்படியில்லையாயின் இந்த விஷ்ணுவையாவது எழுந்திருக்கச் செய்யும். (உம்மால் எழுந்திருப்பாராயின்) அவர் இவ்வசுரர்களைக் கொல்லவல்லவராவர். இவையாவும் உம்மாலேயே நிறைவேறத்தக்கவை. என்றிப்படி பிரமனால் துதிக்கப்பட்ட அம்பிகையினருளால் விஷ்ணுமூர்த்தியினு சரீரத்தினின்றுந் தர்மசரூபமான நித்திராசத்தி அவ்விருரையும் ஒழிக்கும்பொட்டு வெளிப்பட்டு அவ்வம்பிகை கத்தினின்றனள், உடனே விஷ்ணுமூர்த்தி தேஜோரூபி பிரகாசித்துத் தன்னுடைய சரீரத்தை யசைத்தனர். அது கண்ட பிரமன் அளவிறந்த ஆனந்தமடைந்தனன்.

முதல் ஸ்கந்தம் ஏழாம் அத்தியாம்

கமலாசனகிருத விஷ்ணுயோக நித்திராஸ்துதி

முற்றிற்று

ஆக அத்தியாயம் எ - க்கு ஸ்லோகம் (ஙளஎ)

முதல் ஸகந்தம் எட்டாம் அத்யாயம்

சக்திஸ்வரூபகதனம்

(க - எ) சவுநகாதிகள் மஹாபாக்கியசாலியான சூதமுனிவரைப்பார்த்து நீரிப்பொழுது கூறிவந்த கதையில் அநேக ஆச்சரியமான

சந்தேகங்கள் எங்களுக்குண்டாகின்றன. என்னையெனின்? வேதசாத்திர புராணங்களாலும் பெரியோர்களாலும் பிரம்ஹ விஷ்ணு ருத்திரர்களாகிய இவர்களே அநாதியாயுள்ள கடவுளரெனவும், இவர்களுக்கு மேலானோர் இப்பிர மாண்டத்தில் இல்லை எனவும், இவர்களுள் பிரமதேவன் சிருஷ்டிக்கின்றவனெனவும், விஷ்ணு இரக்ஷிக்கின்றவரெனவும், உருத்திரர் சங்கரிக்கின்றவரெனவும், இம்மூவரே உலகிற்குக் காரணகர்த்தாக்க ளெனவும், ஒரு மூர்த்தியே சத்துவரஜஸ்தமோகுண வேற்றுமைகளான் பிரம்ஹா விஷ்ணு மஹேஸ்வரரெனப் பெயர்பெற்று எல்லாக்காரியங்களையு நடத்துகின்றவரெனவும், இந்த மூவருள் மாதவரும், புருஷோத்தமரும், ஆதிதேவரும், சகந்நாதருமாகிய விஷ்ணு மூர்த்தியே சர்வகாரியங்களிலும் சமர்த்தரெனவும், அவரே சிரேஷ்டமானவரெனவும், நின்மலமர்ன தேஜோரூபியான இவரையன்றி வேறொருசமர்த்தரில்லை எனவும், நிச்சயிக்கப்பட்ட இவர் நித்திராசக்தியினால் அவசரப்பட்டு உறங்கினாரென்பது எப்படி? அவருடைய ஞானம்போனவழி எப்படி, இறந்து போகாமல் உயிரோடு கூடியிருக்கிற அவருடைய ✧ கரணசேஷ்டைகள் அடங்கினவழி எப்படி? என்று அடியோங்களுக்கு ஐயந் தோன்றுவதால் அவ்வையமகலத்திவாய் மலர்ந்தருளல் வேண்டும்.

(அ-கக) இதுவன்றி, பூர்வத்தில் விஷ்ணுமூர்த்தி! சக்தியினால் வெல்லப்பட்டாரென்று கூறினீரல்லவா, அந்தச் சத்தி எப்படி யுண்டாயிற்று, அப்படிப்பட்ட சத்தியை யுடையது எது, அந்த சத்தியையுடையதாகிய அது எப்படிப்பட்டது, சர்வேஸ்வரன், விஷ்ணு, வாசுதேவன், சகத்குரு, பரமாத்மா, பரானந்தன், சச்சிதானந்த விக்ரஹன், சர்வகிருத், (எல்லாஞ்செய்பவர்) சர்வபிருத், (எல்லாம் பரிப்பவர்) சர்வக்ஞசி, என்று புகழப்பட்ட விஷ்ணுமூர்த்தி எவ்வாறு நித்திராசத்தியினால் மயக்கப்பட்டு பரதந்திரராயினார். இது எங்களுக்கு ஆச்சரியமாயும் சந்தேகத்துக்குக் காரணமாயு மிருக்கின்றது. சூதமுனிவரே நீர் வியாசபகவானுக்கு மாணாக்கராயும் அறிவிற்சிறந்தவராயு மிருத்தலால் எங்களுக்குத் தோன்றிய இவ்வையங்களை உமது ஞானவாளுருவிக்களையக் கடவீரென்று பிரார்த்திக்க, சூதர் முனிவர்களை நோக்கிக் கூறுகின்றார்.

(கஉ-உசு) ஓ முனிவர்களே? உங்களைப் போன்ற பெரியோர்களுக்குண்டாகுஞ் சந்தேகத்தை நிவிர்த்தி செய்வதற்கு

✧ கரணசேஷ்டைகள் -நற்செய்கை

இவ்வுலகில் எவர் தான் சமர்த்தர். பிரமதேவனுடைய புத்திரரான சங்கர்தியரும் நாரதமுனிவர் கபிலர் முதலிய முனிபுங்கவரும் இப்படிப்பட்ட வினாக்களுக்கு விடைதருவதற் கஞ்சுகின்றன ரென்றால், அறிவிற்சிறியவனான யான், பரியாலோசித்துச் சொல்வதுமிகவும் கஷ்டதரமென்பதற்குச் சந்தேகமுமுளவோ, ஆகலான்யான் என்னசொல்லப் போகிறேன் முனிவர்களே, சிலர் தேவர்களுக்குள் விஷ்ணுவே யாவுமறிந்தவரெனவும், யாவரையும் பரிபாலிக் கின்றவரெனவும், விராட்புருடரெனவும், அவரிடத்திலிருந்தே சராசரமான இவ்வுலகந்தோன்றிய தெனவும், மேலானவற்றிற்கு மேலானவரென்வும், இருடீகேசரெனவும், சநார்த்தனரெனவும், வாசுதேவரெனவும் வேதங்கோஷிக்கின்றபடியால் அவரை வணங்கி உபாசிக்கின்றனர். சிலர் மஹாதேவரான சங்கரரையுட் அதுபோலவே சங்கரன், சந்திரசேகரன், திரிநேத்திரன், பஞ்சவக்திரன், சூலபாணி, விருஷபத்துவஜன், திரியம்பகன், கபர்த்தி, கவுரிபாகன், கைலாசவாசன், சர்வசக்திதரன், பூதகணநாதன், கக்ஷயஜ்ஞவிகாதன் என்று வேதங்கள் ஸ்தோத்திரஞ் செய்கின்றபடியால் அவரை யுபாசிக்கின்றனர், சிலர் சூரியனே பரம்பொருளென்று கூறுகின்றபடியால் காலை மாலை பகலென்னு முக்காலங்களினும் உபாசிக்கின்றனர், சிலர் அதுபோலவே இந்திரன் அக்னிமுதலாயினோரையும் எண்ணி உபாசிக்கின்றனர். சிலர் கங்கையானது பல நதிகளுள் கலக்குமாறுபோல விஷ்ணுமூர்த்தியை எல்லாத் தேவருள்ளுஞ் சேர்த்து நமஸ்கரிக்கின்றனர். இதுவேயுமன்றி சில பண்டிதர்கள் ❊ பிரத்யக்ஷம், அனுமானம், சப்தம் என அளவைகள் மூன்றென்றும், சிலர் உவமான வளவையைக்கூட்டி நான்கென்றும், சிலர் அருத்தாபத்திப் பிரமாணங்கூட்டி ஐந்தென்றும், ★ புராணிகர் ஏழென்றுங் கூறுகின்றனர். இங்ஙனங் கூறுகின்ற பிரமாணங்களொன்றாலும் அறிதற்கரிய சச்சிதானந்த சொரூபமான பரம்பொருளொன்று உனடென்று சிலர் கூறுகின்றனர். இப்படிப் பலபலவாய் அவரவருங் கூறுகின்றபடியால் அவரவருங்கூறும் பிரமாணங்களைக் கொண்டே எவர்பரம்பொருளாவார் என்று புத்திவிசாலத்தால் தன்னறிவோடுகூடிய ஆகமத்தைக் கொண்டு தர்க்கித்து அத்தர்க்கத்திற் செல்லும் யுக்தியினால் பலமுறையும் விசாரித்து நிச்சயிக்க வேண்டும். அவ்விசாரமாவது முன்னர் வேதத்தில் கூறும் வாக்கியங்களை விசாரிக்கவேண்டியது, அங்ஙனம் வாக்கியவிசாரஞ் செய்தபுத்தியினாலும் அந்த புத்தியைக் கொண்டு யூகித்த யுக்தியினாலும் பின்னர் இது இவருக்குக் கூறியது வுண்மை இது இவருக்குக்கூறியது உபசாரமென்று இடைவிடாமற் சிந்திக்க

❊ பிரத்யக்ஷம் - காணத்தக்கது. ★ புராணிகர் - புராணநிலையினிற் போன்.

வேண்டியது, அதன்பின்னர் அச்சிந்தனையால் ஐயமற றுணர்ந்த அறிவைக்கொண்டு திஷ்டாந்த வாயிலாகவும், மெய்ஞ்ஞானிகளாகிய பெரியோர் சென்றசன்மார்க்க முறையாகவும், தெளியவேண்டியது. இப்படியறிய வேண்டுமென்றே அனாதியாயுள்ள சாஸ்திரங்களுங் கூறுகின்றன. வேத வித்துக்களுங் கூறுகின்றனர். முனிவர்களே! இவ்விஷயத்தைப் பற்றிச் சொல்லவேண்டிய பாகம் மிக விஸ்தாரமாகவிருக்கின்றது. அதனை எடுத்து இவ்விடத்திற் சொல்லப் புகுவேனாயின் பலவாய்விரிந்து நாட்செல்லும், ஆகையால் எடுத்த பிரமேயத்துக்கு வேண்டியது எதுவோ அதை இப்பொழுது எடுத்துக் கூறுகின்றேன்.

(உஎ-ஙசு) விஷ்ணுவாதி கடவுளரை பெரியோர்களேயன்றி வேதசாஸ்திர புராணங்களும் இவ்வுலகமும் சக்தியுடையவர் களென்று கூறுகின்றனவா? சக்தியற்றவர்களென்று கூறுகின்றனவா? ஒருவரையும் ஒருபொருளையும் சத்தியற்றவரென்றும், சக்தியற்றதென்றும் மறந்துங்கூறா, ஆகையால் அச்சத்தி யானது யார் யாரிடத்தில், எத்தனிடத்தில் எப்படி எப்படியிருக்கிறதோ அதனதன் பேதத்தைச் சில கூறுகின்றேன் கேளுங்கள். பிரமனிடத்தில் சிருஷ்டிசத்தியாயும், உருத்திரரிடத்தில் சம்ஹரிரசக்தியாயும் சூரியனிடத்தில் பிரகாசப்படுத்துஞ் சத்தியாயும், ஆதிசேஷன் கார்க்கோடகன் கூர்மமுதலியவைகளிடத்தில் தரிக்குஞ் சத்தியாயும், அக்னியிடத்தில் கடுஞ் சத்தியாயும் வாயுவினிடத்தில் தள்ளுஞ் சத்தியாயும், பரசிவத்தினிடத்தில் குண்டலினி சத்தியாயும் நிலைபெற்றிருக்கின்றது. இங்ஙனங்கூறி வந்தபடி அரி அராதிகளிடத்திலும், அக்னியாதிகளிடத்திலும், பரசிவத்தினிடத்திலு சத்தியில்லையாயின் செயலற்றிருப்பாரென்றும் செயலற்றிமருக்கு மெனறும் பண்டிதர் கூறுகின்றனர். அன்றியும் இந்தப்பிரமாண்டத்தில் சராசராத் மகமாய் விளங்கும் பிரஹ்மாதி ஸ்தம்பப்ரியந்தமாகிய சர்வபூதங்களிடத்திலுஞ் சத்தியில்லையாயின் அவைகள் துச்சமென்றும் சத்தில்லாதபதார்த்தங்களென்றும் நிந்திக்கப்படுகின்றன. அன்றியும் ஒருவனை யொருவன் வெல்லநினைப்பானாயின் சத்தியில்லாமல் வெல்லுவானா? நடக்கவெண்ணினவன் சத்தியில்லாமல் நடப்பானா? ஆகாராதிகளை யுண்ணவெண்ணினவன் சத்தியில்லாமல் உண்பானா? ஆகவே எல்லாவற்றிலும் சக்தியென்பதொன்று நிறைந்திருக்கின்றது என்றறியற்பாலதாகும். அந்தச்சத்தியாகிய தேவியே பிரமசொரூபமென் றறியப்படுகின்றனள். மேதாவியருக்கும் இந்திராதி தேவர்களுக்கும் உபாசனாமூர்த்தியா யுள்ளவள். அன்றியும் அந்தசத்தி விஷ்ணுமிடத்தில்

சத்துவகுணசத்தியாயும், பிரமனிடத்தில் ரசோகுண சத்தியாயும், உருத்திர மூர்த்தியினிடத்தில் தமோர்குண சத்தியாயும் இருந்து காத்தும் படைத்தும் அழித்தும் வருகின்றது. இவ்வாறு அச்சத்தி அவர்களிடத்தில்லையாயின் விஷ்ணுமுதலிய மும்மைத் தேவருந் தத்தந் தொழில்களைச் செய்யவறியார். ஆகையால் முனிவர்களே! தான் பிரமாண்டத்தைச் சிருட்டித்து யாவற்றையுங் காத்து தன்னிச்சையால் சராசரமான இவ்வுலகனத்தையும் அழிக்கின்றனள் திருமாலேனும் உருத்திரனேனும் இந்திரனேனும் பிரமனேனும் அக்கினியேனும் சூரியனேனும் வருணனேனும் யாவரேனுந் தந்தந் தொழிலில் வல்லரல்லா:

(ஙள-சுO) அச்சத்தியோடு கூடியே மேற்கூறிய யாவருந் தத்தந் தொழியிலியற்று வாராதலின் அத்தேவியே காரணங்களிலுங் காரியங்களிலும் 'காட்சியளவையா னறியத்தக்கவா். அச்சத்தியை சகுணை எனவும் நிர்க்குணை எனவும் இருவிதமாகப் புத்திமான்கள் கூறுகின்றனா். சகுணையாகிய அத்தேவியை போககாமிளும் நிர்க்குணையாகிய அத்தேவியை மோக்ஷகாமிகளும் உபாசிக்கின்றனா் அறம்பொருள் இன்பம் வீடென்பவற்றிற்கு எதிரற்று எஜமானிஅவளே யாகலான் விதிபடியவளைப் பூசிப்போர்க்கு வேண்டுவன தந்தருள்வாள் மாயா வயத்தராகிய மூடா் அவளது கருணையை யறியார்; சிலா் அறிந்தும் பிறரை மயக்குகின்றனா். பண்டிதரும் கலியின் கொடுமையால் அறிவிழந்து பலவிதமான *பாஷண்ட மதங்களை வயிற்றிந் கொடுமையால் உலகிற் பரவச்செய்கின்றனா், அறிவிற்சிறந்த முனிவா்காள்? நானாபேதங்களுடன் கூடிய வேதவிருத்தங்களாகிய தா்மங்கள் பல இக்கலியில் உண்டாகின்றனவே யன்றி மற்றயுகங்களில் சிறிதேனும் உண்டானதில்லை.

(சுக-சுஅ) இம் மஹாவிஷ்ணுவும் பிரமனும் உருத்திரமூா்த்தியும் தமக்குவேண்டிய தொன்றைப்பெற தியானித்துக்கொண்டு அநேக வருஷம் உக்ரமானதவஞ்செய்கின்றனா். அத்தேவியைக்குறித்தே பலவித வேள்வியியற்றுகின்றனா். பிரமமென்று கூறப்படும் பரமாத்மாவாகிய தேவியையே அழியா தென்று முள்ளமேலானசத்தி யென்றெண்ணி அம்மூன்றுமூா்த்திகளும் எப்பொழுதும் மனதாற்றியானிக்கின்றனா். ஓ முனிவீா்காள்? கலியின் கொடுமையை யறிந்து அவ்வழி செல்லாது சா்வசத்தி சொரூபமாகிய பரதேவதையே பெரிய தெய்வமென்று துணிவீராக. எல்லா நூல்களும் துணிந்தெடுத்துக் கூறும் பொருளும் இதுவேதானென்றறிமின்கள்.

*பாஷண்ட - போதனை

(சுகூ-ருக) இந்த ரகசியத்தை எனது குருவாகிய வியாசமுனிவர் கூறினார். அவருக்கு நாரதமுனிவ ருபதேசித்தனர் அவருக்கு பிரமதேவ ருபதேசித்தனர் அவருக்கு விஷ்ணுமூர்த்தியுபதேசித்தனர். இன்னோரன்ன வுபதேசமொழியாற் றெளிந்தவுண்மையை யறியப்பெறாத மந்தமதிகள் பலர் பலநெறிகளைக் கூறுவர் அவைகளைக் கேட்பதும் நினைப்பதும் பெரும்பாவம். ஆகையால் பராசத்தியே பரம்பொருளென்றும் அவளே வணக்கப்படும் தெய்வமென்றும் நிச்சயித்து வழிபட்டுய்வீராக என்றனர்.

முதல் ஸ்கந்தம் எட்டம் அத்தியாயம்

சத்திஸ்வ ரூபநதனம்

முற்றிற்று

ஆக அத்தியாயம் அ-க்கு ஸ்லோகம் (சுஉஅ)

உ

ஸ்ரீ தேவ்யை நம:

முதல் ஸ்கந்தம் - ஒன்பதாம் அத்யாயம்

மதுகைடப யுத்தம்

சவுநகாதியரை, சூதமுனிவா கண்ணுற்று ஓ முனிவர்காள்? உங்களுக் கிதுகாறும் பராசத்தியின் சொரூபத்தை ஒருவாறு எடுத்துக் கூறினோம். இனி விஷ்ணுமூர்த்தியினுடைய அங்க வியாபகமாயிருந்த நித்திராசத்தி அவரைவிட்டு விலக அந்த விஷ்ணுமூர்த்திக்கும் மதுகைடபருக்கும் உண்டான யுத்தத்தைக் கூறுகின்றேன் கேட்பீர்களாக.

(க-கக) முன் விஷ்ணுமூர்த்தியினுடைய *நேத்திரம் முகம் மூக்கு தோள் இருதயமுதலிய சர்வாங்கங்களிலும் நித்திராரூபமாய் வியாபித்திருந்த தாமசசத்தி வெளிப்பட்டு ஆகாயத்திற் கட்புலனுக்குத் தோன்றாதிருந்த பராசத்தியுடனிற்க, விஷ்ணுமூர்த்தி கண் விழித்து மதுகைடபருக்கஞ்சி மிகவும் பயந்து நிற்கின்ற பிரமனைப்பார்த்து கெம்பீரத்தொனியோடு அயில்வருமாறு வினாவலுற்றனர். தாமரை மலரிற்றோன்றிய பிரமனே நீ தவத்தைவிட்டு இவ்விடம் வந்தகாரணமென்னை? பயத்தாற்கலங்கிய மனத்தனாயிங்கு துக்கத்துடனே யிருப்பதற்குக் காரணமென்னை, பிரமன்

*நேத்திரம் - கண்

என்றந்தையே? உமது காதிலுள்ள மலத்தினின்றும் உதித்த மதுகைடபராகிய வசுரர் கோரமான பெரிய உருவங்கொண்டு என்னைக் கொலைசெய்ய வருகின்றனர். யான் பயந்து தேவரீரைச் சரணமடைய வந்தேன். ஓ வாசுதேவரே? பயத்தினானடுங்கி அறிவிழந்து வந்த என்னைக் காத்தருளல் வேண்டும். விஷ்ணுமூர்த்தி ஓ பிரமனே? அவ்வசுரர்களை இதோ ஒரு நிமிஷத்திற் கொன்றுவிடுகிறேன் அவர்கள் என்னுடைய பலத்தையறியாமல் உன்னைப் பின்றொடர்ந்து வந்து என்னுடனும் போர்செய்ய எத்தனித்துக் கொண்டிருக்கின்றனர். அது அவர்கள் விதி முடிந்ததனாற்றான். நீ அஞ்சாதை என்ற பயமொழி கூறிக்கொண்டிருக்கும் பொழுதே அவ்வசுரர் ஓ நான்குதலையனே? எங்கொளித்தனை எங்கொளித்தனை என்று அங்கு நெருங்கி ஆதாரமில்லாமல் சலத்தில் நின்றுகொண்டு பிரமனைப்பார்தது ஓ பலமில்லாதவனே? எங்களுடன் போர்புரிவதற்கஞ்சிப் பயமுற்றோடிவந்து இத்தூங்குமூஞ்சியுடன் சேர்ந்தனையே எங்களுக்கென்னபயம். இவன் பார்த்தும் கொண்டிருக்கும்பொழுதே உன்னைக்கொன்றுவிட்டு, பின்சேஷ சயனத்தின்மீ திறுமாந்திருக்கும் அவனையுங்கொன்று விடுகிறோம் ஓ பிரமனே? நீ போருக்கு வருவாயாக, அல்லது உங்களுக்கடிமை என்று சொல்லிப்பணிவாயாக என்றனர்.

(கஉ-கஎ) இவ்வாறு உதாசீனமாய்ப்பேசும் அவ்வசுரர்களை விஷ்ணுமூர்த்திபார்த்து ஓ அசுரஸ்ரேஷ்டர்களே? நீங்கள் வாயில் வந்தபடி பிதற்றவேண்டாம். நீக்கள் வீரராயிருப்பீராயின் என்னுடன் போர்புரியவம்மின். ஒருகணப்பொழுதில் உங்கள் மதகர்வத்தையடக்கி விடுகிறேன். வீணாய் வீரம்பேசுவதிற் பயனென்னை, காரியத்திற் காண்பிப்பதனறோ ஆண்பிள்ளைத் தனம் என்று கூறிய விஷ்ணுவை மதுகைடபர் பார்த்து மிகுந்த கோபங்கொண்டு கண்சிவப்பேறி அச்சமுத்திர மீத்தியினின்றபடியே யுத்தஞ் செய்ய ஆரம்பித்து இருவருள் மது என்பவன் முற்பட்டு மிகவேகமாய்ப் பாய்ந்தோட கைடபன் அவ்விடத்திற்றானே நின்று விட்டனன். ஓடிய மது விஷ்ணுமூர்த்திமேற் பாய்ந்து அவரைத் தழுவி யிறுக்கிக் கட்டிக்கொண்டு மற்போர் செய்யத் தொடங்கினன். விஷ்ணுமூர்த்தி சிறிதேனும் இளைக்காமல் எண்ணிறந்தகாலம் அம்மது வென்பவனோடு போர்செய்து அவனைப் புறங்கொடுத்தோடும்படி செய்தனர். அவனோடு தலைக்கண்ட கைடபன் அவனைப் போலவே திருமாலோடு போர்புரிந்தோடினன். இவனோடு தலைக்கண்ட மதுமுன்போலெதிர்த்துப் போர்புரிந்தனன். இவ்வாறு இரண்டசுரரும் ஒரு ஹரியோடு மாறிமாறிப் போர்செய்து வந்தனர்.

(கஅ-உக) இப்போரைப் பிரமனும் ஆகாயத்தில் நிற்கும் நித்திராதேவியும் பார்த்து இரண்டசுரருள் ஒருவனாவது சிறுதும் இளைத்தானில்லை. விஷ்ணுவோ மதோன்மத்தர்களான இருவரோடும் போர்புரிந்து மிகவும் இளைத்திருக்கின்றனன். இந்த யுத்தம் ஆரம்பித்து ஐயாயிர வருடமாயிற்று, இவ்வளவு காலமாகியும் அசுரர்கள் அழியும் வகையைக் காண்கிலோம் என்று எண்ணும் பொழுது விஷ்ணுமூர்த்தியும் இதுபோலவே வெண்ணி அந்தோ ? நமது சவுரியமும் பலமும் எவ்வாறு போயிற்று, அசுராகளுக்கு அவ்விரண்டும் எவ்வாறு வளருகின்றது. இது என்ன ஆச்சரியம். இவர்களை நாம் எந்த வுபாயத்தினாற் கொல்லப்போகிறோம். உபாயமென்பது நமக்கொன்றுந் தோன்றவில்லையே தோன்றாமைக்குக் காரணம் என்னையோ அறியோமென்று ஏக்கமுற்றுச் சிறுபொழுது நின்றனர்.

(உஉ-ஙக) அப்பொழுது அசுரர்கள் மேகம்போல் கர்ச்சித்து திருமாலைப் பார்த்து என்னை ? ஏக்கமுற்று நிற்கின்றாய் (எட்டினால் குடிமியைப்பிடி எட்டாவிட்டால் காலைப்பிடி) என்னும் பழமொழியை நீ யறிந்திலாயோ, நீ யொன்றும் யோசிக்கவேண்டாம் எங்களைச் செயிப்பதற்கு உனக்கு இயலாம லிருக்கின்றபடியால் அடைக்கலமென்று எங்கள் காலில் வீழ்ந்துவிடு அங்ஙனம் வீழ்வையாயின் உயிர்பிழைப்பாய் விழாது நிற்பையாயின் உயிரிழப்பாய், ஒருக்கால் துயிரியங்கொண்டு முன்போல் போர்புரிய வெண்ணுவையேல் உனக்குப் பலமேது, அதனை நாங்களொழித்து விட்டோம் அந்தோபாவம் நீ என்செய்வாய். எங்கள் வார்தையில் உனக்குச் சந்தேக மிருக்குமாயின் இந்த க்ஷணமே போருக்குவருவாயாக. காலத்தை வீணாக்கவேண்டாம். உன்மகனாகிய பிரமனோ நீ ஜயமடைவையோ மரணமடைவையோ வென்று இமை கொட்டாமல் விழித்தகண் விழித்தவண்ணமாகவேயிருக்கப் பார்த்துக் கொண்டிருக்கின்றான். அவன் சந்தேகந்தீரும்படி உன்னைக் கொன்று பின்னர் அவனையுங்கொல்லவேண்டி யிருக்கிறது என்று கூறும் பரிகாசவார்த்தையை விஷ்ணுமூர்த்திகேட்டு இனி நமக்கு வெற்றியுண்டாவதருமை, இவர்களைத் தந்திரத்தினால் வெல்லவேண்டு மென்றெண்ணி, அசுரரைப்பார்த்து ஓ வீரர்களே ? யுத்தமுகத்தி லிளைத்துப் போனவனையும் நிராயுதபாணியா யிருக்கின்றவனையும் சோர்ந்து கீழேவிழுந்தவனையும் பாலபருவ முடையவனையும் சுத்தவீரர்கள் யுத்தத்தில் கொல்ல நினையார். இந்தநீதி நீவிரும் அறிந்திருப்பீர்கள். ஆகையால் இப்பொழுது நான் மிகவும் இளைப் படைந்திருக்கின்றேன். நீவி ரிளைப்படையவில்லை. ஏனெனில்

நீவிரிருவரும் சேர்ந்து சண்டைசெய்யாமல் தனித்தனியே செய்கின்றபடியால் இளைப்பாறுவதற்கிட னுண்டாயிற்று. நான் தனியனாகையால் இளைப்பாறுதற்கிடனேது, இந்த வுண்மையை எண்ணி நான் சிறிதுநேரம் இளைப்பாறுமளவும் நீவிரிருவரும் நிதானிப்பீர்களாயின் இளைப்பாறியவுடன் முன்போல் போருக்கு வருகிறேன். பின்னர் நியாயமான யுத்தஞ்செய்வோம். இதிற்சந்தேகமில்லை. எனது விஷ்ணுமூர்த்தி சொல்லியவார்த்தையை அசுரர்கள் கேட்டு நம்பிக்கையுடையராய் இளைப்பாறியபின்னரே யுத்தஞ்செ ய்யலாமென்று நிச்சயித்து அவரை யிளைப்பாறவிட்டு தூரத்தில் நின்றனர். அது கண்ட சதுர்ப்புஜராகிய திருமால் இனிநாம் அவ்விருவரையும் எவ்விதவுபாயத்தினாலாவது வெல்ல வேண்டுமே என்று அதற்குரிய வாலோசனை அடியில்வருமாறு எண்ணுவதாயினர்.

(ருஉ-சுகூ) இவ்வசுரர்கள் தேவியினிடத்தில் எங்களிஷ்டப்படி மரணமுண்டாக வேண்டுமென்று வரம்பெற்றிருக்கின்றார்களல்லவா, இவர்களிளைப்பார்களா இவர்களுக்கு நம்மால் மரண முண்டாகுமா நாம் இதுவரையிற்செய்த சண்டை வீண்தானே போர்செய்ய முடியாமல் விட்டு விடுவோமானால் இவ்வசுரர்கள் தேவர்முதலிய யாவருக்கும் பெருந்தீங்கு விளைவிப்பார்களே, இதற்கு நாமென்னசெய்யலாம். இவர்கள் சரீரம் இளைக்கும்படியாகக் கொடுமையான வியாதிகளை யுண்டுபண்ணி விடுவோமென்றாலோ அவைகளால் சிறிதேனும் இளைப்பார்களா, இவர்களெந்தகாலத்தில் என்னவிதமாய் மரணமடையலா மென்றெண்ணி யிருக்கின்றார்களோ அதனை நாமறியோம். ஆகையால் இனி நாம் போர்செய்ய வெண்ணங்கொள்வது வீணாகும். இவர்கள் மரணத்தை விரும்பும்படியான காரியமெதுவோ அதனைச் செய்ய வெண்ணங்கொள்வதே மேலான யோசனையாகும். அது செய்வதற்குந் தேவியினுடைய கருணையன்றி எப்படி முடியுமென்று பரியாலோசனை செய்து ஆகாயத்தில் சோதிசொரூபமாய் நின்றருளுந் தேவியைப் பார்த்து அஞ்சலிசெய்து ஹே புவனேஸ்வரி, மஹாமாயி சிருஷ்டி சம்ஹாரணி, புக்தி முக்திப் பிரதாயினி, உன்னுடைய சகுண ரூபத்தையும், உன்னுடைய மகிமையைக் கூறுஞ் சரித்திரங்களையும் யானறியேன் உன்னை நமஸ்கரிக்கின்றேன் என்னன்னையே யான் மிகவு மனங்கலங்கித் திகைக்கின்றேன் யான் உனது மாயையால் நித்திராசக்தியினால் கவரப்பட்டு பிரஞ்ஞையற்றவனாய்க் கிடந்தேன் அத்தருணத்தில் பிரமன் என்னிடம் வந்து நான் இந்திரிய சேஷ்டையில்லாமல் அசேதனனாயுறங்குவதைப் பார்த்து என்னை யெழுப்ப முயற்சித்தும் எழுந்தி ராமையால் தேவரீரைத் தோத்திரஞ்செய்ய; தேவரீர் கருணைகூர்ந்து என்னை விழிக்கும்படி

செய்தீர் நான் விழித்தது முதல் இந்த ஐயாயிரவருடமும் இந்த மதுகைடபரோடு போர்புரிந்து இளைத்தேன். அசுரர்களோ உமது வரப்பிரசாதத்தால் வன்மையடைந்திருக்கின்றனர் நானவர்களோடு போர்புரிய முடியாமையால் மறைந்து போகலாமென்று மறைந்து போவேனாயின் அவர்கள் பிரமனைக் கொல்வதிற் சந்தேகமில்லை. ஆகையால் என்னையும் பிரமனையுந் தேவரீர் காப்பாற்றியருள வேண்டுமென்று சரணமடைந்தேன் எனக்கு அனுக்கிரகஞ் செய்யுந்தருணம் இதுவே, நீரிப்பொழுது அனுக்கிரகஞ் செய்யாதொழியின் எங்களை அசுரர்கள் கொன்று விடுவர், யான் என்செய்வேன் எங்கு செல்வேன் என்று கண்ணீராறாய்ப் பெருக்கித் துக்கித்து விஷ்ணுமூர்த்தி நின்றனர்.

(ரு0-ருரு) தேவி கருணைகூர்ந்து ஓ மாதவனே நீ அஞ்ச வேண்டாம், நீ இப்பொழுது சண்டைசெய்யச்செல்வாயாக. உனக்குச் சயமுண்டாகுமாறு அவர்களுக்கு நான் என்னுருவத்தைக் காட்டி மோகங்கொள்ளும்படி வஞ்சிக்கின்றேன் அத்தருணத்தில் நீ வெற்றிகொள்வாயென்றருள் செய்தனர், அவ்வருண் மொழி யைக்கேட்ட திருமால் ஆனந்த பரவசமுற்று வணங்கி விடைபெற்று சமுத்திர மத்தியிற்சென்று போர்த்திரங்காட்டி தோள்தட்டி நின்றனர். அசுரர்கள் விஷ்ணுமூர்த்தியினுடைய கொக்கரிப்பைக் கண்டு பளா, பளா, நீ மிகச்சமர்த்தன்தான் யுத்தஞ்செய்ய வா, வா. நம்மிருவருடைய வெற்றிதோல்வி தெய்வாதீனமே யன்றி நம்மதீனமன்று, ஓர்கால விசேடத்தில் பலிஷ்டன் இளைக்கின்றான், இளைத்தவன் பலிஷ்டனாகின்றான் ஆகையால் அறிவுடையார் வெற்றி யுண்டானபோது சந்தோஷத்தையும் தோல்வி யுண்டான போது துக்கத்தையும் அடையார்கள்.

(ருசு-சுஎ) பூர்வத்தில் உன்னால் எங்களினத்தவர் தோல்வியடைந் திருக்கின்றார்கள், இப்பொழுது எங்களால் நீ தோல்வி யடைந்திருக்கிறாய் இது நிலையல்ல. நாமிருவரும் யுத்தஞ்செய்யத் தொடங்குவோமென்று கூறியவுடனே விஷ்ணுமூர்த்தி வீராவேசங்கொண்டு வெகுசாதுர்யமாய்க் கையைமுஷ்டியாகப் பிடித்து இருவரையுங் குத்தினார். அவர்களும் அப்படியே இவரைக்குத்தினார் இவ்வாறு இருவரும் முஷ்டியுத்தஞ்செய்து வருகையில் அசுரர்கள் முன்போல் வெற்றியடைவாராயினர், திருமால் முன்போலிளைத்து ஏதேது இவர்கள் இளைப்பார்களா இவர்கள் மஹாசூரர்களா யிருக்கின்றார்கள் நாம் அம்பிகையினுடைய அனுக்கிரகத்தைப் பெற்றும் இவர்களைக் கொல்ல முடியவில்லையே இனி யென் செய்வோமென்று

ஏக்கமுற்று முகம்வாடி நிற்கின்றபொழுது அம்பிகை கருணைகூர்ந்து அசுரர்களுக்கு முன்னர் வந்து தமதுகடைக் கண்ணாகிய காமபாணத்தை அவர்கள்மேல் விடுத்து, புன்னகையாகியதீயை மூட்டி, அபிநயமாகிய நாடகத்தால் அவர்களைப் போர் செய்யவொட்டாது மயக்கி, சங்கீதமாகிய கானத்தால் மோகாந்த காரத்தில் மூழ்கச்செய்து வெறிபிடித்தவர் பொலாக்கித் தன்னையே பார்த்திருக்கச் செய்தனர். அத்தருணத்தில் விஷ்ணுமூர்த்தி தேவியினுடைய திருவுள்ளக் குறிப்புணர்ந்து இனி இவ்வசுரர்களை நாம் வெல்வதிற் றடையில்லையென்று தீரங்கொண்டு அவர்களைப் பார்த்து நகைத்து ஓ வீரர்களே உங்களைப்போல் யுத்தஞ்செய்தவர்களை யான் எங்குங்கண்டதில்லை, உங்களுடைய யுத்தத்திறமையைக் கண்டு மிகவுஞ் சந்தோஷித்தேன் இப்பொழுது உங்களுக்குப் போர்செய்ய வேண்டுமென்கிற ஆவல் இல்லைபோற் காண்கின்றது இனி உங்களுக்கு யாது வேண்டியது, வேண்டியவற்றை யான் கொடுப்பதற்குச் சித்தமாயிருக்கின்றே னென்றனர்.

(சுஅ-எ0) அசுரர்கள் சகன்மோகினியாகிய தேவியினால் காமாதுரர்களாயிருந்தும் விஷ்ணுமூர்த்தி தான் கொடுக்குங்கர்தாவாகக் கூறிய வார்த்தையைக்கேட்டுச் சகியாதவர்களாய் ஓ விஷ்ணுவே என்னகூறினாய் நாங்களா உன்னிடத்தில் யாசிக்கத்தக்கவர்கள் நீ யல்லவா எங்கள் மரபினரிடத்தில் யாசிக்கின்ற வழக்க முடையவன் அதைமறந்து இவ்வாறு கூறினையன்றோ நன்றாயிருந்தது, ஆயினும் நாங்கள் உன்னுடைய யுத்த சாமார்த்தியத்தைக் கண்டு மிகவுஞ் சந்தோஷித்தோம் உனக்குப் பரிசளிக்கவேண்டுமென்கிற எண்ணம் எங்களுக்குமுண்டு ஆகையால் உனக்குவேண்டியவற்றைச் சீக்கிரமாகக் கேட்பாயென்றனர். விஷ்ணுமூர்த்தி நமக்கு நல்லகாலம் வந்துவிட்டதென்று உள்ளேமகிழ்ந்து ஓ அசுரர்களே உங்களுக்குக் கொடுக்குந்திரமும் என்னுடைய யுத்தத்தில் சந்தோஷமும் உண்மையாயிருந்தால் இந்த யுத்தத்தில் என்னால் கொல்லப்படும் விருப்பம் உமக்குண்டாகவேண்டும் அதாவது உங்களை நான் கொல்லவேண்டும் இதுதான் எனக்குவேண்டிய வர மென்றனர்.

(எக-அசு) இதைக்கேட்ட அசுரர்கள் பிரமைகொண்டு மெய் மறந்து ஐயோ நாம் மோசம்போனோமே? இவன் நம்மை வஞ்சித்து விட்டானே, நாம் இவன் வேண்டியவற்றைக் கொடுத்துத் தொலைத்துவிட்டு இந்தப் பெண்ணோடுகூடி வாழலாமென் றெண்ணியன்றோ நாம் கேட்டது, இவன் நமது உயிருக்கே வேலைவைத்து விட்டானே, அடபாவி என்று மனநொந்து இனி நாம்

எண்ணியாவதென்னை (மேலுலகம் இல்லெனினுமீதலே நன்று) ஆகையால் நாம் அவ்வஞ்ச னெண்ணியபடியே இறந்து விடுவோமென்று துணிந்தவர்களாய் விஷ்ணுவைப் பார்த்து ஓ மாயனே? முன்னொரு காலத்தில் இப்பூலோகமெல்லாம் சலமயமாயிருப்பதைப் பார்த்து உன்னிடத்தில் நாங்கள் ஓர்வரம் வேண்டும்பொழுது கொடுக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அது உனக்குக்கியாபகமிருக்கின்றதோ இல்லையோ நீ உண்மையானவனாயிருந்தால் இப்பொழுது நாங்கள் வேண்டும் வரத்தைக் கொடுக்கக்கடவாய், அஃதாவது சலமயமாயிருக்கின்ற இந்த விடத்தில் எங்களைக் கொல்லாதை, சலமில்லாமலும் விசாலமாயு மிருக்கின்ற பிரதேசத்தில் எங்களை உன்னிஷ்டம்போல் கொன்றுவிடு, இதுதான் எங்களுக்கு வேண்டுவது என்றனர். விஷ்ணுமூர்த்தி உடனே சக்கிராயுதம் தம்மிடம் வரும்படி சிந்தித்தனர். அதுவும் வந்து கரத்திற்றங்கியது அப்பொழுது அசுரர்களைப் பார்த்து புன்னகைசெய்து ஓ மதுகைடபர்களே உங்களை இப்பொழுது நீங்கள் வேண்டியபடியே நிர்ச்சலப் பிரதேசத்திற் கொன்றுவிடுகிறேனென்று கூறி விஸ்வரூபமெடுத்துத் தனது துடைகளை விசாலமான பூமியாகக் காண்பித்து ஓ அசுரர்களே இந்த பூமியைப்பார்த்தீர்களா இங்கு சலமில்லை இது நிர்ஜலமானவிடம் இந்த விடத்தில் உங்கள் சிரசை நாட்டுங்கள் இப்பொழுது தான் நான் சத்தியவானாயினேன் நீங்களும் சத்தியவான்களாக வேண்டும் என்றனர். அசுரர்கள் அம்மொழியைக் கேட்டு இனிநாம் சத்தியந்தவறுவது நீதியல்ல ஆயினும் இந்த மாயவன் ஒரு உபாயஞ்செய்ததுபோல் நாம் ஒரு உபாயஞ்செய்வோமென்றெண்ணி தங்கள் சரீரத்தை ஆயிரம்யோசனை நீளமுள்ளதாகக் காட்டினார்கள், விஷ்ணுவும் தந்துடைகளை இரண்டாயிரயோசனை நீளமுள்ளதாகக் காட்டினர். அசுரர்க ளதைப் பார்த்து நாணமுற்று அதிசயமடைந்து இனி நாம் நம்முடைய தலைகளைக் கொடாமலிருப்பதற்கு முடியாது, என்றெண்ணி விசாலமான அவ்விஷ்ணுவினுடைய துடைகளில் தங்கள் தலைகளை வைத்தார்கள் வைத்தவுடன் விஷ்ணுமூர்த்தி சக்கிராயுதத்தினாற் சங்கரித்தனர். அவர்களும் பரலோகமடைந்தனர். அப்பொழுது அவர்களுடைய சரீரத்தினின்றும் வெளிப்பட்ட உதிரங்களும் மாமிசங்களும் சமுத்திரத்திற் பரவியது, பரவியவிடமெல்லாம் பூமியாய்விட்டது. அதனால் இந்தபூமிக்கு மேதினி என ஒரு பெயர் வந்தது இப்பூமி அசுரர்களுடைய மேதையானதால் உண்ணுகின்ற பதார்த்தமாகா தொழிந்தது.

ஓ முனிவர்களே? இந்த மதுகைடபர் விஷ்ணுவினுடைய பலத்தினாலாவது சாமர்த்தியத்தினாலாவது இறந்தவர்களல்லரெனபதும்

தேவியினுடைய மோகனாசத்தியினாற்றான் அவர்கள் இறக்க வந்த தென்பதும், உங்களுக்கு நன்றாய் விளங்கியிருக்குமன்றோ. ஆகையால் சகுணை நிர்க்குணையாகவிருந்து அனுக்கிரகஞ் செய்யும் பராசத்தியே சுராசுரர்களால் பூசித்து வணங்கத்தக்கவள், அந்தத் தேவிக்குக் கிஞ்சித் அதிகமாக ஒருவராயினும் திரிலோகத்தினுங் கிடையாது இது சத்தியம், சத்தியம், சத்தியம். இதுவே வேத சாஸ்திர சம்மதமென்று தெளிமின்.

முதல் ஸ்கந்தம் ஒன்பதாம் அத்தியாயம்

மதுகைடப யுத்தம்

முற்றிற்று.

அக அத்தியாயம் கூ - க்கு ஸ்லோகம் (ருகசு)

———

முதல் ஸ்கந்தம் பத்தாம் அத்யாயம்

***வியாச க்ருத தபச்சரிதை**

(க-கக) சவுனகாதி முனிவர்கள் சூதமுனிவரைப் பணிந்து தேவரீர் எங்கள் பால் வைத்த கருணையினால் மதுகைடபருடைய யுத்தத்தைக்கேட்கப் பெற்றனம். இனி முன்னர் வியாசமுனிவர் செய்தற்கருமையான தவத்தைச் செய்து சுகரென்னும் ஓர் புத்திரைப் பெற்று அவருக்குச் சகல சாஸ்திரபுராணங்களையும் உபதேசித்தனரென்று கூறினீர் அந்த சரித்திரத்தை எங்களுக்கு விரித்துச் சொல்ல வேண்டுமென்றனர். சூதர் மகிழ்ந்து ஓ முனிவர்களே? வியாசமுனிவர் முன்னர் மிகவும் ரம்யமான மேருபர் வதத்தின் சிகரத்தில் புத்திரப்பேறுவேண்டி நாரதமுநிவரால் வாக்பீஜமென்னும் ஏகாக்ஷர மந்திரத்தை யுபதேசிக்கப்பெற்று ஜபித்து வந்தனர். பின்னர் அம்பிகையினுடைய மாயையால் தேவியை மறந்து பிரதிவி அப்பு தேயு வாயு ஆகாயமென்று சொல்லப்படும் பஞ்சபூதங்களுக்குள்ளவன்மையுடைய ஒரு புத்திரனைத்தர வேண்டுமென்று மஹாதேவராகிய சதாசிவமூர்த்தியைத் தியானித்து அன்னபானாதி ஆகாரக்களை விலக்கி நூறுவருடம் கோரமானதவம்புரிந்து வந்தனர். அங்ஙனஞ்செய்தும் புத்திரோற்பத்திக்குக் காரணமான குறிகுணங்கள் தமக்குத் தோன்றாமையால் வியாசர் சிறிதுகவலைகொண்டு நாம் முன்னர் யாரைத்தியானித்தோம், இப்பொழுது யாரைத்தியானிக்கின்றோம் இது வென்னமாயம். நாம் நாரதரிடத்தில் தேவிமந்திரத்தை உபதேசித்தும் கொண்டு மஹாதேவரை மாத்திரந் தியானித்துப் பிரார்த்திக்கின்றோமே

இதுவென்ன மடமை உலகில் சாதாரணமாய்ச் சக்தியோடு கூடினவனை யாவரும் புகழ்கின்றார்கள். சக்தியில்லாதவனை யாவரும் இகழ்கின்றார்கள் நாம் மஹாபூஜ்யையான பராசக்தியை விலக்கிப் பரசிவத்தை மாத்திரந் தியானித்தோமே அந்தோ நமதுதவம் வீணாய்ப் போயிற்றே இனி என்செய்வோமென் றேங்கிப் பின்னர் ஒருவாறு தெளிந்து மேருமலையைவிட்டு பத்திரபுஷ்ப பலங்களால் நிறைந்து அழகான அனேக வனப்பிரதேசங்களை யுடையதும், தேவர் முனிவர் துவாதசாதித்தர் ஏகாதச ருத்திரர் அஷ்டவசுக்கள் சப்தமருக்கள் அஸ்வினிகள் பிரம நிஷ்டர்கள் ஆகிய இவர்களால் சூழப்பெற்றதும், கந்தருவர்களால் சங்கீத கானங்கள் நிறையப்பெற்றதும் மஹாதேவிக்கு அதிப்பிரியகரமானதுமான இமமலையி னுச்சியிற்சென்று தேவியோடு பரசிவத்தைத் தியானித்து முன்போல் தவஞ்செய்யத் தொடங்கினர்.

(கஉ-கஅ) அவருடைய தபாக்னியானது எல்லா உலகங்களிலுஞ் சராசரங்களிலும் வியாபித்து இந்திரன் முதலிய தேவர்களைச் சுட்டெரித்தது. இந்திரன் இத் தபாக்னியைக்கண்டு கோபமு நடுக்கமுங்கொண்டு சிவபெருமா னிடத்திற்சென்று பணிந்து நின்றனன். சிவபெருமான் இந்திரனைப் பார்த்து ஓ இந்திரா? நீ என்பயமடைந் திருக்கின்றனை, ஏன் கோபத்துடனிருக்கின்றனை இப்பொழுது சுட்டெரிப்பது தபாக்னியல்லவா, தவஞ்செய்யபவரிடத்தில் நீ கோபங்கொள்ளலாமா அது நியாயமன்று, நீ பயப்படுவதற்குங் காரணமில்லை. அவன் உன் பதத்தை விரும்பித் தவஞ் செய்தாலல்லவா நீ பயப்படவேண்டும் அதுவுமில்லை. முனிவராயினார் தங்களுயிருக்கு ஓரிறுதி வந்தபோதிலும் தாங்கள் பிறவுயிருக்குத் தீங்கு செய்யார். தவஞ்செய்கின்ற வியாசமுனிவனோ இப்பொழுது என்னைச் சத்தியோடு சேர்த்துத் தியானிக்க வேண்டுமென்று ஆராய்ந்து தெளிந்து அப்படியே தவஞ்செய்து வருகின்றான். தவஞ்செய்யுங்காரணம் என்னையெனின் தனக்கு ஒரு சற்புத்திரனுண்டாக வேண்டுமென்று தான். வருடமே நூறாயிற்று. அவனுக்கு நாம் அனுக்கிரகஞ் செய்யப்போகின்றோம் நீ உன்னுலகஞ் செல்லக்கடவையென்று விடைகொடுத்தனுப்பினர்.

(ககூ-உங) சங்கரர், வியாசரிடஞ்சென்று ஓ வியாசனே எழுந்திரு. உனது தவத்தைமெச்சினோம் உனது வேண்டுகோளின்படி நல்ல தேஜோரூபியாயும், ஞானியாயும், கீர்த்தியுடையவனாயும் இவ்வுலகத்திற்கு நாயக மணியாயும் சாந்தமுடையவனாயும் சத்தியனாயும் விளங்கத்தக்க ஒரு புத்திரனை உனக்குத் தந்தோ மென்றனர். அவ்வருண் மொழியைக் கேட்ட வியாசமுனிவர்

ஆனந்தமுற்று அடியில் வீழ்ந்து பணிந்து நிற்ப சிவபெருமான் திருவுருக்கரந்தனர். வியாசருந் தம்மிடஞ்சென்று தவஞ்செய்யுங் காலத்தில் விட்டிருந்த அக்னிகாரியத்தை அப்பொழுதே செய்யவேண்டுமென்றெண்ணி அரணியில் மத்தைபப்பூட்டிக் கடையும்பொழுது இவருடைய மனதில் புத்திரோற்பத்திக்கேதுவான ஒருவிதமான காமசிந்தனை யுண்டாயிற்று.

(உசு-உகூ) முனிவர்காள்? அஃதென்னையெனில் நாம் மத்தை இந்த அரணியோடு சேர்த்துக் கடைவதினாலல்லவா அக்னியுண்டாகிறது மத்தை அரணியோடு சேர்க்காமற் போவோமானால் அக்னியெப்படி யுண்டாகும், அதுபோலவே நாம் ஒரு ஸ்திரீயோடு சேர்ந்தாலல்லவா நமக்குப் புத்திரனுண்டாவான் இல்லாவிடில் புத்திரனேது. ஆகையால் எவ்வனமுடையவளாயும் சுந்தரமுடையவளாயும் நற்குலத்திற்பிறந்தவளாயும் பதிவிரதையாயுமுள்ள மனைவி நமக்குக் கிடைக்க வேண்டுமே, கிடைத்தாலும் அவளுக்கும் புத்திரோநபத்தி யுண்டாகுமென்பதும் பதிவிரதா தர்மம் கெடாதிருக்குமென்பதும் நாமெப்படி நிச்சயஞ்செய்யக்கூடும். இந்த இரண்டு முடையவளா யிருந்தாலும் அதிகாமியாயிருப்பாவானால் நம்மை எப்பொழுதும் நிர்ப்பந்தப்படுத்தி சிற்றின்பத்தில் மூழ்கச்செய்து பேரின்பத்தைப் போக்கி விடுவாளே, சிற்றின்பம் எப்பொழுதும் சிவத்தியான முடையவர்களையுங் கெடுக்கும் பெரும்பாசமல்லவா, இது நமக்குப் பெரியபந்தமாக முடிவதிற்றடையென்னை? ஆகையால் யான் கிரகதாச்சிரமத்திற் புகேன், பிரமசரியாச்சிரமத்தை விடேன் என்று எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது மின்னற் கொடிபோன்ற ரூபத்தையுடைய தேவ ரம்பையானவள் ஏக்க முற்றிருக்கும் அவரது சமீபத்தில் ஆகாயத்திற்றோன்றினள்.

(ங0-ஙசு) வியாசமுனிவர் அசைந்து கொண்டிருக்கும் அவளது அங்கத்தையும் நீண்ட புருவத்தையும் உருண்டநேத்திரத்தையும், பந்துபோன்ற தனத்தையும் சிறுத்த இடையையும் கோவைபோன்ற அகரத்தையும் சங்கம்போன்ற கண்டத்தையும் கொடிபோன்ற சரிரத்தையும் பிறைபோன்ற நெற்றியையும் வளைந்த மயிரினையும் சுவர்ணகாந்தியையுங்கண்டு காமனுடைய பஞ்ச பாணத்தால் வருந்தி அந்தோ என் செய்வேன் சங்கடத்திலகப்பட்டுக் கொண்டேனே தவநெறியைக் கைக்கொண்டிருக்கும் என்னெதிரில் அடக்கக்கூடாத காமத்தீ சுடர்விட்டெரிகின்றதே இவ்வெரியைத் தணிப்பதற்கு இவளை யங்கீகரிப்பேனாயின் பின்னர் இவள் நம்மை வஞ்சிக்கு நிமித்தம் இங்கு

வந்ததாக வெளிப்படுங்கால் உலகத்தார் நகைப்பார்களே, முனிவர்களுள் சிரோரத்தினமாய்ப் பிரகாசித்தது போய் அவர்களால் பரிகசிக்கப்படுவேனே, நூறுவருடங் கோரமான தவம்புரிந்து கடைசியில் சிற்றின்பத்துக் காசைப் பட்டு ஆசேதனமான ஒருபெண்ணைக்கண்டு மயங்கிப்போயினனே இது வென்ன மடமையென்று வைராக்கிய சீலரால் கூறப்படுவேனே என்று தவத்தைக் கைவிடுவதற்குக் கூடாமல் வருந்தினார்.

(ஙரு-ஙசு) பின்னர் இவ்வாறு பலரால் நித்திக்கப்பட்டாலும் படுவோம். கிருக தாச்சிரமத்தில் உண்டாகவேண்டிய ஒப்பில்லாத புத்திரசுகம் உண்டானாற்போதும் புத்திரசம்பத்தால் இம்மையிலும் மறுமையிலும் இன்பமுண்டாகுமென்று அநேக ஞானிகள் இல்லறத்தோடு கூடியிருந்து மோக்ஷத்தையடைந் தார்களென்று பலசாத்திரங்களால் கேட்கப்பட்டிருக்கின்றோம். ஆகையால் தெய்வகதியாய் நேரிட்ட இவளை நாம் கைவிடக்கூடாது. இவளை அங்கீகரிக்கவேண்டும். ஆனால் முன் ஊர்வசியைப் புரூரவனென்னும் அரசன்கூடிப் பின் அவளால் அவமானத்தை யடைந்தனனென்று நாரதர் ஓர்கதை கூறியிருக்கின்றார். இதை கன்னிகை அப்படி அவமானஞ் செய்பவளாகத் தோன்றவில்லை இது நிச்சயம்.

முதல் ஸ்கந்தம் பத்தாம் அத்தியாயம்

வியாச க்ருத தபச்சரிதை

முற்றிற்று

ஆஉ அத்தியாயம் க0-க்கு ஸ்லோகம் (ருரு0)

———

முதல் ஸ்கந்தம் பதினொன்றாம் அத்தியாயம்

புதனுற்பத்தி

(க-க0) சௌனகாதியர், சூதமுனிவரைநோக்கி எங்களை யரே புரூரவனென்னும் அரசன் யார். ஊர்வசி யென்னுந் தேவ கன்னிகை யார். அவளால் அவ்வரசன் எப்படி அவமானத்தை யடைந்தான் இந்த வரலாற்றைக் கூறல்வேண்டும். இவ்வரலாற்றைக் கேட்க வேண்டுமென்கிற ஆவல் யாவருக்கும் அதிகமாகவிருக்கின்றது என்று பல இனியவுபாசார மொழிகளோடு விண்ணப்பஞ்செய்ய சூதமுனிவர் மனமகிழ்ந்து ஓ முனிவர்களே, முன்னொருகாலத்தில் தேவகுருவாகிய பிரகஸ்பதியினுடைய பத்னியாகிய தரரை என்பவள் சந்திரனுடைய

வீட்டிற்குச் சென்றனள். அவன் இவளது அழகைக்கண்டு காமாதுரனாயினான். இவளும் அவனது முகவிலாசத்தைக்கண்டு தன்னறிவிழந்தாள். இவ்வாறு இருவரும் மன்மதனுக்காளாய் ஒருவருக்கொருவர் அதிக மோகங்கொண்டு கிரீடித்துக் கொண்டிருந்தனர்.

(கக-கஅ) தேவகுரு சந்திரனிடஞ்சென்ற தாரை நெடுநாளாயும் வராமையால் மிகவும் கவலையுற்று சந்திரனுடைய கிருகத்துக்குச் சென்றவள் இதுவரையில் வராமைக்குக் காரணமென்னை? என்ன தீங்கு விளைந்ததோ மோசம் வந்தது என்று கோபாவே சங்கொண்டு தனது மாணாக்கருளொருவனை, தாரையை யழைத்து வரும்படி ஏவினார். அவன் சந்திரன் வீட்டுக்குப்போய் அம்மணி உம்மை உம்முடைய கணவராகிய என்னாசிரியர் அழைத்து வரும்படி ஏவினார் வாரும் என்றனன். அவள் அச்சொல்லை ஒரு சிறிதும் கேளாதவள்போல் சும்மாவிருக்க அக்குறிப்புணர்ந்து, வந்த மாணாக்கன் தேவகுருவினிடஞ் சென்று சுவாமி! அந்த அம்மாள் வருவதாகத் தோன்றவில்லை என்றனன். அதைக்கேட்டவுடன் வேறு சில சீடர்களை ஒருவன்பின் னொருவனாக அனுப்பியும் வராமலே யிருக்கக்ண்டு இவள் சந்திரன் வசமுற்றிருக்கின்றாள். இனி நாமே செல்வோமென்று அதிக கோபங்கொண்டு சந்திரனிடத்திற்சென்று அங்கு மதோன்மத்தனாய்த் திரிந்து கொண்டிருக்குஞ் சந்திரனைப்பார்த்து ஓ சந்திரா! என்னகாரியஞ் செய்தனை என் மனையாளை இதுவரையில் என்னிட மனுப்பாத காரணமென்னை? தருமத்திற்கு விரோதமான காரியத்தைச் செய்வது நீதியா அவளை இதுவரையில் வைத்துக்கொண்டு ரக்ஷிப்பதற்குக் காரமென்னை; யான் உனக்குக் குருவல்லவா; குருபத்னியாகிய அவள் உனக்குத் தாயல்லவா; உன்குறிப்பை நோக்குங்கால் அவளை உனக்குத் தாயாக எண்ணியிருப்பதாகத் தெரியவில்லை: ஆகையால் அவளால் நீ அநுபவிக்கப் பட்டனையா? உன்னால் அவள் அநுபவிக்கப்பட்டனளா; இவ்விரண்டுமின்றி உன் காவலிலிருந்தவளா; ஏ மூடா! பிரமஹத்தி செய்தவனும் பொன் திருடினவனும் மதுபானஞ் செய்தவனும் குருமனைவியைப் புணர்ந்தவனுமாகிய இந்நால்வருங் கொடும்பாவிகளென்றும் இவர்களை நேசிக்கின்றவன் ஐந்தாவது பெரும்பாவி என்றும் தரும நூல்களிற் கூறப்பட்டிருக்கின்றன வல்லவா; இந்தத் தாரை உன்னா வநுபவிக்கப்பட் டிருப்பாளாயின் நீ முன்கூறிய பஞ்சமாபாதகருக்குள் ஒருவனாயினை யன்றோ இனி நீ தேவர்களிடஞ் செல்வதற்கு யோக்கியனல்லை. யாவராலு நிந்திக்கப்படுவாய் இப்பொழுதாயினும் என்மனைவியை விட்டுவிடு

நான் அழைத்துக்கொண்டு போகிறேன். இல்லையாகில் ஹே துஷ்டா? என்னால் குரு தாராபகாரி என்று பழிக்கப்படுவாய், குருவினால் நேரிடும் பழியை சிவபெருமானாலு நீக்கமுடியாது சொன்னேன் சொன்னேன்; என்று தாரையினிடத்தில் வைத்திருக்கும் பிரியத்தை மாற்றக்கூடாத தேவகுரு கடிந்து பேசும் வார்த்தையை சந்திரன் கேட்டுக் கூறுகின்றனன்.

(கசு-உங) ஓ தேவகுருவே! மனைவியைப் பிரிந்திருக்குங் காரணத்தினால் உமக்கு அளவு கடந்த கோபம் வருகின்றது கோபமுடைய அந்தணரைப் பூசிக்கக்கூடாதென்றுங் கோபமில்லாத அந்தணரை விதிப்படிபூசிக்க வேண்டுமென்றுந் தருமசாஸ்திரங் கூறுகின்றதே அதை நீரறியாமற் போனதென்னை; நீர் கோபத்தோடு வருங்குறிப்பை யறிந்தே யான் வழிபாடியற்றாமலிருந்தேன் இனி நீரதிகமாய்ப் பேசவேண்டாம். உமது மனைவி உம்மிடம்வர இஷ்டமிருந்தால் இத்தனை மாணாக்கரும் நீரும் வரவேண்டுமா : இதைத் தெரிந்துக்கொள்ளு மதி யுமக்கில்லையா? அவளுக்கெப்போதிஷ்டமோ அப்போ தும்மிடம் வந்து சேருவள். ஒரு சமயம் வராம லிவ்விடத்திலேயே தங்கியிருந்தாலு மிருப்பள். ஏனெனில் பெரும்பாலும் அவளுக்கு இவ்விடத்திலேயே சுகத்தையனுபவிக்க வேண்டுமென்னும் விருப்பமிருக்கின்றது. அதற்கிடையூறு செய்து நீர்கொடுக்கப்போகிற சுகமென்னை, இதனை யறியாதிருக்கின்றீரே, உமக்கு வந்தகேடென்னை? நீர் தனித்திருக்க வாகாதா, இப்போது நீர் யான் சொல்லும் புத்தியைக்கேட்டுப் போவீராயின் அவள் சிலகாலஞ்சென்று தானாய் வந்துசேருவள். அவளென்னிடமிருப்பதால் அவளுக்குவருந் தோஷமென்னை, நீர் முன்னொருகாலத்தில் இவ்விஷயத்தைப் பற்றி விபசாரஞ் செய்கிற ஸ்திரீயும் வேத விதிப்படி கன்ம மநுட்டிக்காத அந்தணனும் தூஷிக்கப்படமாட் டார்கள் என்று ஓர் தர்ம சாஸ்திரம் ஏற்படுத்தி யிருக்கின்றீரே. அது உமக்கில்லையோ ஊருக்குத்தானா சொன்னது ஆ! ஆ! நன்றாயிருந்தது என்றிவ்வா றுதாசீனமாய்க் கூறிய சந்திரன் வார்த்தையைக் கேட்டு தேவகுரு மிகவருந்தமடைந்த வாடின முகத்தோடு சிந்தாகுலப்பட்டு காம மேலிட்டவராய் அங்கிருக்கவுங் கூடாமல் தமதிருப்பிடஞ் சேர்ந்தனர்.

(உசு - ஙரு) சில காலஞ்சென்ற பின்னர் மீண்டும் சந்திரனுடைய கிருகத்திற்குச் சென்றனர், அங்கிருந்த வோர்காவலாளி அவரை யுள்ளே போகவிடாமற் றடுக்க, மிக்க கோபங்கொண்டு அக்காவற்காரனைப் பார்த்து என் வரவை உன் எஜமானனுக்குத் தெரிவிப்பாயென்று சொல்ல, அவன் ஓர் ஆளையனுப்பி சந்திரனுக்குத்

தெரிவித்தும் அவன் வரவில்லை அப்படி வராமையைத் தேவகுரு வெண்ணி இப்பரம சண்டாளன் எனக்குச் சீடனாய் வந்து என் மனைவியை யபகரித்தமையால் இவனுக்குப் பலமான தண்டனைசெய்ய வேண்டும். இவனை எளிதில் விட்டு விட்டால் நகைப்புக்கிட முண்டாகுமென்று அந்த வாசற்படியிற்றானே நின்று ஒரு பெருங்கூச்சலிட்டு. அடா! துற்புத்தியுடையவனே! தேவாதமனே! பாபி! தெருவில் யான் நின்று கொண்டிருக்க நீ வீட்டில் என் மனைவியோடு தூங்கிக்கொண்டிருக் கின்றனையே, அவளைச் சீக்கிரம் விட்டுவிடு இல்லையாயின் கடுமையான சாபத்தினாலுன்னைச் சாம்பராக்கிவிடுவேன். இது உண்மை. வீணாய்க் கெடாதை தாரையை சீக்கிரம் என்னிடம் கொண்டுவந்துவிடு, என்றிவ்வாறு கூறிய பிரகஸ்பதி வசனத்தைக்கேட்ட சந்திரன் கோபாவேசங்கொண்டு விரைவாய் வெளியேவந்து குருவைப்பார்த்து நீ ரென்ன அதிக வார்த்தைகளைப் பேசுகின்றீரே நீரென்ன மன்மதனோ அவளும்மோடிருப்பது நீதியாமோ குருபியானவுமக்கு ரூபவதியான இத்தாரை எப்படி தகுதியானவள். உமக்கேற்றபடி குருபியான ஓர் ஸ்திரீயை சுவாதீனப் படுத்திக்கொண்டு இனிச் சுகமாகவிரும். பிச்சையெடுத்துண்ணு முமது வீட்டில் இவள் கால்வைக் கவுங்கூடுமா; ஸ்திரீகளுக்குத் தனக்குச் சமானமான ரூபலாவண்ணியமுடைய புருஷனிடத்திலேயே அன்புண்டாகுமென்று சொல்லப் பட்டிருக்கும் காமசாஸ்திரத்தை மனைவி, மனைவி என்றமும் நீரறிந்ததில்லைபோலும். ஓ மூடரே? தாரை காமசாஸ்திரப்படி தனக்கொப்பாகாத உம்மிடத்தில் உண்மையான அன்பைவைகாமல் தனக்கேற்ற என்னிடத்தில் அன்பை வைத்திருக்கிறாள் நீரேன் சாஸ்திர விருத்தஞ் செய்கின்றீர்; வந்தவழியைப் பார்த்துச்செல்லும். என்னன்புக்கன்பான தாரையை விடமாட்டேன் நீரிப்பொழுது காமவெறி மேலீட்டினால் கொடுக்குஞ்சாபம் என்னை யொன்றுஞ் செய்யமாட்டாது. உமது மனைவியைக் கொடேன். உம்மாலானதைப் பார்த்துக் கொள்வீர் என்று கூறிய சந்திரன் வசனத்தைக்கேட்டு நான் மனைவியை யிழந்ததுமன்றி *இந்தப்பாபியினால் சொல்லப்படும் துச்சவார்த்தைகளைக் கேட்கும் விதியுமிருந்ததே என்று அவ்விடம்விட்டு இந்தரனிடஞ் சென்றனர்.

(௩கூ-சுசு) இவர் வரவைக்கண்ட இந்திரன் அர்க்கிய பார்த்யா சமனாதிகள் கொடுத்து ஆசனத்திலுட்காரச்செய்து மிகவணக்கத்தோடு என்னாசிரியரே! உமது திருமுகத்தைப் பார்க்கும்போர்தே விசனகரமான

*பாபி - பாவி

குறியைக் காட்டுகின்றது. அப்படிப்பட்ட துக்கம்! என்னவுண்டாயிற்று எதற்குச்சிந்தனைப்படுகின்றீர். எனக்குக் குருவா யிருக்கின்ற வுமக்கென்ன குறையுளது என ராஜ்யத்தில் தேவரீரை எந்த துஷ்டன் அவமானப்படுத்தினான் என் பரிவாரங்களாயுள்ள சைனியங்களை யெல்லாம் உமது வசத்திலொப்புவித்துவிட்டேன் உமக்கேதேனும் இடையூறு வரும் பக்ஷத்தில் பிரமனாதி தேவரும் சகாயஞ்செய்யச் சித்தமாயிருக்கின்றனர். இப்படியிருக்க தேவரீருக்கென்ன விசனம் நேரிட்டதென்று கேட்கப்பிரகஸ்பதி கூறுகின்றார். ஓ இந்திரா! என் மாணாக்கனாகிய சந்திரன் எனக்கு அதிகப்பிரியமான மனைவியை யபகரித்துப் போயினன். யான் பலமுறை சென்று அனுப்பும்படி கேட்டு மனுப்பவில்லை. யான் என் செய்வேன் எனக்கு நீ தான் கதி. எனக்கு வேண்டுஞ் சகாயத்தை நீயே செய்யவேண்டும். நான் மிகவும் வருத்தப்படிருக்கிறேன் என்றுகூற. இந்திரன் ஓ பிரபு! நீர் வருத்தப்படவேண்டாம் உமக்குவேண்டுஞ் சகாயஞ் செய்வதற்கு யானடிமையாளா யிருக்கிறேன். இந் நிமிஷத்திற்றானே சந்திரனிடஞ்சென்று உம்முடைய மனைவியை யழைத்துக்கொண்டு வருகிறேன் அன்றித் தூதுவனை யனுப்புவனேயாயின் காமாந்தகனான சந்திர னனுப்பமாட்டான். ஆயினும் அனுப்புகிறேன் அவன பின்னனுப்பானாயின் பின்னர் யான் சேனைகளோடுசென்று யுத்தஞ் செய்தாவது உமது காரியத்தை நிறைவேற்றுகிறேன் என்று ஆசிரியருக்குச் சமாதானஞ் சொல்லிவிட்டு ஓர் தூதனை அழைத்துச் சந்திரனிடஞ்சென்று நமது குருபத்தினியை யழைத்துவா வென்றனுப்பினான்.

(சுரு-ருசு) அவன் சந்திரனிடஞ்சென்று ஓ சந்திரனே யான் யார் தெரியுமா உனக்கரசனான இந்திரனா லனுப்பப்பட்ட தூதன். அந்தப் பிரபு உன்னிடத்தில் ரகஸ்யமான சில சங்கதிகளைச் சொல்லும்படி எனக்குக் கட்டளையிட்டனுப்பினார் அதைச்சொல்லுகிறேன் கேள். நீ எல்லா நீதிகளையு முணர்ந்தவன் நீயறியாத தர்மமொன்றில்லை. உனது பிதாவோ அத்திரிமகாரிஷி அவர்பெயரைச்சொல்லும்போதே உலகமெல்லாம் ஆச்சரியமடையும் அப்பெரியோருடைய கீர்த்திக்குக் கெடுதி வரும்படியாக நீ நடக்கலாமா உலகத்தில் பசு பக்ஷி முதலிய ஜீவராசிகளும் தனது தாரத்தைக் காப்பாற்றிக் கொள்வதில் சோம்பலின்றிச் சாக்கிரதையா யிருக்கின்றன. அந்த விஷயமாய் அவைகளுக்கு நேரிடும் கலகங்களும் விரோதங்களு மளவிறந்தன. அங்ஙனமிருக்க எல்லா அறிவோடுங்கூடிய மானிடர் தம்மனைவியைப் பிறருக்கொப்புவித்து விட்டுத் தான் தனியே உறங்கி வீழ்வாரா? இப்பொழுது உன்மனைவியைப் பிறரனுபவிக்க மனமொப்புவையா!

தன்னைப்போல் பிறரையும் பார்ப்பதல்லவோ நீதி. உன்மனைவியைக்காக்க நீ எப்படி முயல்கின்றனையோ அப்படியோ பிறருமிருப்பாரென்று நீயேனுணரவில்லை. உனக்குத் தஷனால் கொடுக்கப்பட்ட மனைவிகள் இருபத்தெண்மரும் அதிரூபவதிகளாயிருக்க குருதாரத்தை யிச்சித்ததென்னை; இது உனது கீர்த்தியைத் தொலைக்குந் தொழிலாய் முடிந்தது. பரஸ்திரீகமனஞ் செய்ய விருப்பமிருந்தால் மேனை முதலிய தாசிக ளிருக்கின்றார்களே அவர்களை இஷ்டப்படி அநுபவிக் கலாகாதா? நீ செய்வது அநீதி என்று யான் சொல்லவேண்டுமா வீணாய்க் கெடாதை உன்குருவின் மனைவியை யனுப்பிவிடு உன்னைப்போன்ற நீதிமான்களே இத்தகைய தீத்தொழிலில் பிரவேசித்தால் மூடர்களான என்போலியர் இதையே சான்றாகக்கொண்டு அஞ்சாமல் நடப்பார்களல்லவா, அப்பொழுது தர்மம் வேரோடழிந்துவிடுமே, இதை வாய்திறந்து சொல்லவும் வெட்கமா யிருக்கிறதே ஆகையாலிக்கணமே தாரையை யனுப்பிவிடு அனுப்பாமற்போனால் இது நிமித்தமாய் ஒருவருக்கொருவர் கலகப்பட்டு யுத்தத்தில் மடியவரும் இதிலையமில்லை அக்கலகம் நேரிடாவண்ணஞ் செய்வதே அறிவுடையோர்க் கிலக்கணமென்று துதன் கூறினான்.

(ருரு-சுக) சந்திரன் கோபங்கொண்டு ஓ தூதனே! உன்னிடஞ் சில நியாயங்கூறுகின்றேன் அதனை நீ இந்திரனிடத்தில் சென்று நான் நேரிற்சொல்வது போல் நீ சொல்லவேண்டும் என்னையெனில் ஓ இந்திரா! நீ எல்லாநீதிகளையு முணர்ந்தவன் ஓ தேவராஜனே உனக்குக் குரு பிரகஸ்பதி உங்களிருவருடைய புத்தியைக் குறித்து நானென்னவென்று புகழ்வேன் உலகத்தில் அநேகர் பிறருக்கு வைராக்ய ஞானோபதேசஞ்செய்வதில் சமர்த்தராயிருக்கின்றனர். அதுபோல் தாங்கள் நடப்பதில்லை. நடக்கின்றவர் மிகவும் அருமை. பிறர் குற்றம் கூறப்புகுந்தவர் முன்னர் தங்கள் குற்றங்களை யாலோசிக்கவேண்டியது தவசியமானகாரியம். எனக்கு நீதிசொல்ல வந்த நீ பரதாரகமனஞ் செய்யாதவனாயிருந்தாலல்லவோ உன்சொல் என்னிடங் கௌரவப்படும். உனக்கெப்போதும் பரதாரகமனஞ்செய்யச் சந்துபார்ப்பதே வேலை. உன்செய்தி இப்படியிருக்க. உன் குருவாகிய பிரகஸ்பதி காமசாஸ்திரம் ஏன் செய்யவேண்டும்? செய்தது காமுகர்களாயிருக்கின்றவர் அந்த சாஸ்திரப்படி நடப்பதற்கா? அதைக் கைவிடுவதற்கா? கைவிடுவதற்காயின் இவர்செய்தது வீண்தானே. அந்த சாத்திரப்படி பார்க்கும்போது நான் விரோதஞ் செய்ததாக ஏற்படமட்டாது. அவருக்கு மாணாக்கனாயிருக்கிற நான் அவர்சொல்லிய சாத்திரப்படி நடப்பதன்றோ தருமம். இதை நான்சொல்லவேண்டுமா.

அவர் கூறிய சாஸ்திரத்தில் பெண் ஒரு புருஷனிடத்தில் ஆறாவன்ப வைப்பாளாயின் அவளைரமிக்கலாமெனவும், வன்மையாளருக் கெல்லாப் பெண்களும் சுவாதீனமெனவும், மென்மையாளருக்குத் தமக்குரிய வொருபெண்ணும் சுவாதீனமில்லையெனவும், தந்தாரம் பிறர் தாரம் என்கிற வேற்றுமை மந்தமதிகளுக் குண்டாகும் வீண் பிரமையெனவுங் கூறப்பட்டிருக்கின்றது. இந்த நியாயப்படி தாரை என்னிடத்தில் வைத்திருக்கும் பிரேமைக்களவேயில்லை. அதிலோரணு வளவும் குருவினிடம் வைத்தவளன்று. அப்படி என்னிடம் பிரேமைவைத்திருக்குந் தாரையை அவர்கூறிய நீதிப்படி விடக்காரணமில்லை. அன்றியும் இல்லறத்தில் வாழ விருப்பமுடையவளுக்கு இல்லறம் ஒத்திருக்கும். இல்லறத்தில் வெறுப்புடையவளுக்கு அது ஒத்திருக்குமா! இவள் இல்லறத்தில் வாழும் விருப்பில்லாதவளாக விருந்தமையால் நானிந்த தாரையை இளையதார மாகக்கொண்டேன். இனி என் தாரத்தைக் கொடுப்பேனா கொடேன். ஓ ஆயிரங்கண்ணனே! நீ அரசனாயிருந்தால் உன்னிஷ்டப் படிசெய் என்று கூறுவ. யென்ன தூதன் கேட்டு வேறு சொல்ல வறியாது இந்திரனிடஞ் சென்று சந்திரன் கூறியவாறே கூறினன்.

(கூஉ-எசு) இந்திரன் கண்சிவந்து பெருமூச்செறிந்து தன்சேனையுடன் யுத்தஞ்செய்யத் தலைப்பட்டனன். அத்தருணத்தில் அசுரகுருவாகிய சுக்ராசாரி தன் பகைவராகிய தேவகுருவுக்கும் சந்திரனுக்கும் நேர்ந்திருக்கும் விரோதத்தைக் கர்னபரம்பரையாகக் கேட்டு சந்திரனிடஞ்சென்று சந்திரா, நீ ஒருக்காலுந் தாரையைப் பிரகஸ்பதியினிடம் விடாதை, அவனாவது மற்றையராவது போருக்கு வருவாராயின் நான்வேண்டிய சகாயம் அசுரராலுஞ் சாஸ்திரத்தினாலும் மந்திரத்தினாலுஞ் செய்கிறேன் என்று தைரியங் கூறினன். இச்செய்தியைத் தேவகுருவறிந்து ஹே சங்கரா எனக்கு நீதான் துணை. உன்னையன்றி வேறுதுணையில்லை என்று பிரார்த்தித்த காலத்தில் சங்கரன் நானே உனக்குத் துணையாயிருக்கின்றேனென்று துணையாயினர். போர்க்கோலங்கொண்ட இந்திரன் சந்திரனிடஞ்செல்ல அவ்விடத்தில் சுக்கிரனுடைய முயற்சியினாற் கூடிய அசுரரும் வந்துசேர்ந்தனர், பின்னர் முன்தாரகா திகளுக்குண்டான யுத்தம்போல் தேவாசுரர்களுக்கு யுத்தமூண்டது. இந்த யுத்தம் இவ்வாறு நெடுநாளாய் நடந்து வருவதைப் பிரமன்கேட்டு இதுவென்னபாவம் குருபத்தினிக்காக இப்படி யுத்தஞ் செய்வாருமுண்டா இதை நாம்சென்று சமாதானஞ்செய்து வருவோமென்றெண்ணி போர்க்களத்தில் வந்து சந்திரனைப்பார்த்து ஓ சந்திரா! உன்னை மதியென்று வித்துவான்கள் கூறுகின்றார்களே இனியுன்னை மதிப்பார்களா, அடா

மதிகெட்டவனே குருபத்தினியைக் கொடுத்துவிடு இல்லையாயின் விஷ்ணுமூர்த்தியைக் கொண்டு உன்னை நாசஞ்செய்து விடுவேமென்று சந்திரனுக்குக் கூறி அவனருகிலிருக்கும் சுக்கிரனைப்பார்த்து உனக்குமென்ன மதிகெட்டுப்போயிற்று, நீதியில்லையா பிறர் மனைவியை விரும்பினவர் இதுவரையில் யாராயினும் பிழைத்ததுண்டா! புகழ்படைத்ததுண்டா, இச்சண்டையில் தலையிட்டுக் கொண்டனையே, இது உன் புகழுக்கு ஏதுவாகுமோ! உன் பேரிற்குறை கூறுவதனாற் பயனென்னை ? இது சேர்க்கையினால் வந்தகேடு இனியாவது சண்டையை நிறுத்து என்றிடித்துச்சொல்லிய நல்லுரையால் தான் கொண்ட துன்மதியைவிட்டு சந்திரனைப் பார்த்து சந்திரனே! இனியான் யுத்தத்திற்குச் சகாயஞ் செய்யமாட்டேன். தாரையை அனுப்பிவிடு என் தந்தை மிகவுங் கோபிக்கின்றார் என்று கூறிய அசுரகுருவசனத்தைக்கேட்டு சந்திரன் மிக வருத்தத்தோடு தாரையை கருப்பாதானத்தோடு குருவினிடம் போய்ச்சேரும்படி யனுப்பினான். அவள் தேவகுருவின் பால்வா அவரும் கர்ப்பவதியா யிருக்கின்றாளே என்பதையும் யோசியாமல் மகிழ்ந்தவரா யழைத்துக்கொண்டு தம்மிடஞ் சென்றனர். பிரமன் முதலிய தேவர்களும் அசுரர்களும் தங்கள் தங்களிடம் போய்ச்சேர்ந்தனர்.

(எரு-அசு) தாரை கர்ப்பிணியானதால் சில நாட்சென்ற பின் நல்ல திதிவார நஷத்திரங்கூடிய சுபதினத்தில் அழகான புத்திரனைப் பெற்றனள். தேவகுருவும் தமக்குப் புத்திரப்பேறுண்டா யிற்றென்று ஆனந்தமடைந்தவராய் சாதகாதிகளை விதிப்படி செய்து முடித்தனர். இச்செய்தியைக்கேட்ட சந்திரன் ஓர் தூதனை யனுப்பி சந்திரன் வீரியத்திற்கு பிறந்தவனை உன் மகனாகவெண்ணிக் கூத்தாடுகின்றனையே அவன் உனக்குப்பிறந்தவனா ? உனக்கு அறிவில்லையா என்று கேட்கும்படி யனுப்பினன். அப்படியே தூதனுஞ்சென்று கேட்க தேவகுரு இப்போது ஜநிந்தவன் என்னைப்போல் இருப்பதனால் என் மகனென்பதற்குச் சந்தேகமென்னை ? இவனைப்பற்றிச் சந்திரனுக்கு யாதொரு சம்ப தமுமில்லையென்று தூதனிடஞ் சொல்லியனுப்ப முன்போல் சந்திரனுக்கும் தேவ குருவுக்கும் கலகம் விளைந்து தேவர்களும் அசுரர்களும் போர் புரிய பிரமன் வந்து சமாதானஞ் செய்து சண்டையை நிறுத்தி இதனுண் மையறியத் தாரையினிடஞ்சென்று ஓதாரையே! இப்போது பிறந்திருக்கும் உன்புத்திரன் சந்திரனுக்குண்டானவனா ? உன் நாயகருக்குண்டானவனா சந்தேகமறச் சத்யமாய்ச் சொல்வாயென்று கேட்கத் தாரை நாணத்தினால் தலையிரக்கிக் கொண்டு இவன் சந்திரனுக்கே பிறந்தவனென்று முற்றுங்கூற நாணமுற்றுச் சந்திரனுக்கே என்று குறிப்பிக்க, பிரமன் சந்திரனுக்குற்பத்தியானவ னென்று தெளிந்தனன் அப்புத்திரனுக்குச்

சந்திரன் ஜாதகாதி கர்மங்களை விதிவத்தாய்ச் செய்து புதனென்று பெயரிட்டனன். தேவகுருவும் தம்மிடஞ்சென்று பத்னியுடன் வாழ்ந்திருந்தனர் என்றனர்.

பதினொன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

——

உ

காமேஸ்வரப்ராணநாட்யை நம:

பன்னிரண்டாம் அத்தியாயம்

சுத்யும்நஸ்ய ஸ்திரீத்வப் பிராப்திகதனம்

(க-கக) சூதமுனிவர் முநிவர்களைப் பார்த்து ஓ விரத சீலர்களே! இனிச் சுத்யும்னனென்னும் ராஜாதிராஜன் பெண்ணுருவமடைந்து புதனோடு புணர்ந்து புரூரவனைப்பெற்ற வரலாற்றுக் கூறுகின்றேன் கேட்பீர்களாக என்று கூறுகின்றார்:- சுத்யும்னனென்னும் அரசன் சத்யவாதியாயும் தருமசீலனாயும் யஜ்ஞ தானாதிகளைச் செய்கின்றவனாயும் பஞ்சேந்திரியங்களை வென்றவீரனாயும் நல்ல வுத்தமமான க்ஷத்திரியகுலத்திற் பிறந்தவனாயும் இருந்தனன். இவன் ஓர்நாள் வேட்டையாடுநிமித்தம் அதற்குரிய ஆயுதங்களோடு குதிரைமீதேறிக்கொண்டு சில மந்திரிகளைப் பின்றொடர்ந்து வரும்படியாகக் கட்டளையிட்டு அடர்ந்தவனஞ்சென்று அங்குள்ளமான், முயல், பன்றி, கட்கமிருகம், சிறுத்தை, சர்ப்பம், காட்டெருமை, கவரிமான், காட்டுக்கோழி முதலியவற்றை வேட்டையாடிக் கொன்றுவிட்டு மேருமலையின் தாழ்வரையிலுள்ளதும் அழகானதும் மந்தார விருஷங்களால் சூழப்பட்டதும் அசோகவிருட்சத்தின் கிளைகளினால் மறக்கப்பட்டதும் தாழைகளால் வாசம் வீசப்பட்டதும் தேக்கு, பனை, தெங்கு கதலி முதலிய பல விருஷங்களால் அலங்கரிக்கப்பட்டதும் புன்னை, மாலதி, (மனோரஞ்சிதம்) குந்தம் (குருக்கத்தி) மல்லிகை முதலிய கொடி முதலியவைகளால் நிறைந்திருக்கப்பட்டதும் அன்னங்களால் சூழப்பட்டதும் மூங்கிற் புதரிலுண்டான நாதங்களால் சப்தமயமாகச் செய்யப்பட்டதும் வண்டுகளின் ஒலியால் திக்குகளில் சப்திக்கப்பட்டதும் எல்லா சுகங்களுக்கும் உற்பத்தித்தானமாய் விளங்கப்பட்டதுமான ஓர் உத்யான வனத்தைக் கண்டு பரிவாரத்தோடு சென்று விருஷங்கள் மலர்ந்திருப்பதையும் குயில்கள் இனிமையான வொலியோடு விளையாடிக் கொண்டிருப்பதையும் அரசன் கண்டு அதிக சந்தோஷத்தோடு உள்ளே பிரவேசித்த மாத்திரத்தில் ஸ்திரீரூபமடைந்தனன். அவனேறி வந்த குதிரையும் பெண் குதிரையாயிற்று. ராஜ ருஷியான இவ்வரசன் தானுற தன் குதிரையும்

பெண் வடிவமானதைக் கண்டு சிந்தாகுலமடைந்து இதுவென்ன ஆச்சரியம் என்று தன் மனதில் எட்டியமட்டும் ஆலோசித்து அதன் காரணமொன்றும் புலப்படா மையால் துக்கசாகரத்தில் மூழ்கி நாணமடைந்து யான் என் செய்வேன் இந்த ஸ்திரீரூபத்தோடு எவ்வண்ணம் என் ராஜ்யத்திற்குச் சென்று அரசியல் எவ்வாறு நடத்துவேன். என்னை யார் வஞ்சித் தனரோ தெரியவில்லையே எனப் பலவாறாய் நினைந்து ஏக்கமுற்று அவ்வனத்திலேயே இளை என்கிற பெயர்பெற்று அங்குமிங்குந் திரிந்துகொண்டு வாழ்ந்திருந்தனன்.

(கசு-ச0) முனிவர்கள் ஓ சூதமுனிவரே நீர் கூறிய சுத்யும்ன னென்னும் அரசனுக்கு ஸ்திரீருபப்பிராப்தியைக் கேட்டுக் கேட்க ஆச்சரியகரமாக விருக்கின்றது. அவ்வரசனுக்கு மனோகரமான அந்த உத்யான வனத்தில் பிரவேசித்தவுடன் பெண்ணுருவம் வருதற்குக் காரணமென்னை; அவனவ்விடத்தில் யாது செய்தனன். இவைகளை விரிவாய்ச்சொல்ல வேண்டுமென்று கேட்க, சூதர், முனிவர்களைநோக்கி முனிவர்களே! ஓர் காலத்தில் சநகாதி முனிவர்கள் சிவபெருமானைக் காணும் விருப்பமுடையவர்களாய் ஆகாயமார்க்கமா யவ்வுத்தியான வனத்தைநோக்கி வரும்போது அவ்விடத்தில் சங்கரர் பார்வதி தேவியோடு உல்லாசமாய்க் கிரீடித்திருக்குஞ் சமயமாயிருந்தது. அதனை அறியாது இவர்கள் சென்றனராகையால் இவர்களுடைய சரீரகாந்தி வனமுற்றும் பரவியது அவ்வொளியால் சிவபெருமானோடு கிரீடித்திருந்த அம்பிகை அவர்களைக்கண்டு நாணமுற்று சங்கரருடைய மடியினின்று மெழுந்து ஆடையின்றியிருந்த தமது அங்கத்தை ஆடையினால் மறைத்துக் கொண்டு அவ்விடத்தைவிட்டு மறைவான வோரிடத்திற் றலைவணங்கினவராய் மிகவும் வெட்கத்தோடிருந்தனர். இதுகண்ட சநகாதியர்களும் உமாசங்கரர்களுடைய கிரீடா சமயமென் றுணர்ந்து விரைவாய்த் திரும்பி நரநாராயணருடைய தபோவனஞ் சென்றனர். பின்னர் சங்கரர் உமாதேவியைப் பார்த்து ஓ பிரியே! நீயாது காரணத்தால் லஜ்ஜாமுகியா யிருக்கின்றாய் உன்னிஷ்டப்படி கிரீடிப்பதற்கு இப்போது இடையூறென்ன வுண்டாயிற்று? அதனைக் கூறுவையாயின் அவ்விடையூற்றைப் போக்கி உனக்குச் சுகமுண்டாகும்படிச் செய்கின்றேனென்ன, அம்பிகை ஓ என்பிராணநாயகரே! சநகாதியர் நாமிருவருங் *கிரீடித்திருக்குஞ் சமயத்தை நோக்காதவர்களாகி இவ்வனத்தின் வழியாகவந்தனர் அவர்கள் தேத காந்தி பாஞானவொளியாகையான் இவ்வனமுற்றும் பரவியது, யா வொளிக்குக் காரணம் யாதென்றுபார்க்க, அவர்களைக் கண்டேன் அதனால் நாணமுற்றிருக்கின்றேனே யன்றி வேறுகாரணமின்றறன்ன, சங்கரர் பார்வதிதேவியைப் பார்த்து ஓ தேவி! இன்று முதல் இவ்வனம்

* கிரீடி - புணர்தல்

நம்மிருவருக்கும் கிரீடார்த்தமா யிருப்பதென்றறியாமல் எவனொருவன் பிரவேசிக்கின்றானோ அவன் பெண்ணுருவத்தை யடையக் கடவனென்று சபித்தனர். ஓ முனிவர்களே! இவ்வனம் இவ்வாறான சாபமேற்றிருப்பதைப் பலரும் அறியார். அறிந்த சிலர் இவ்வனத்திற் பிரவேசிப்பதில்லை. சுத்யும்னனும் இதனை அறியானாகையால் அவ்வனத்திற் பிரவேசித்துப் பெண்ணுருவத்தை யடைந்தனன். வனத்தின் செய்தி இங்ஙனமிருக்க. இனி புரூரவன் பிறந்தவரலாற்றைக் கூறுகின்றேன். ஓ முனிவர்காள்? சுத்யும்னன் பெண்ணுருவோடு அவ்வனத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் பொழுது சந்திரன் புத்திரனான புதன் தேசசஞ்சாரஞ் செய்துகொண்டு அவ்வனத்தின் வழியாய்ப் போகுந் தருணத்தில் அதி சுந்தரத்தோடு விளங்கும் இளையப்பார்த்து மோகித்தனன் இளையும் அவனைப்பார்த்து மோகித்து ஓ சுந்தரா! உன்னையான் புருஷனாகக்கொண்டு சுகிக்கவெண்ணி யிருக்கிறேன் என்று கூறியவளவில் அவனும் மோகித்தவனாய்ப் புணர்ந்து சென்றனன். பின்னர் இளை என்பவள் கர்ப்பவதியாய்ப் புரூரவனைப் பெற்று வளர்த்து அக்குழந்தையின் முகத்தை அடிக்கடி பார்த்துப்பார்த்துத் தீராத துயரமடைத்து தன் குலகுருவாகிய வசிட்டரை நினைத்தனன். அம்முனிவர் இவனடைந்திருக்குந் தீனதிசைகளை ஞானதிருஷ்டியாலுணர்ந்து கருணைகூர்ந்தவரா யிவனை ஸ்திரீரூபத்தினின்றும் மாற்றவேண்டி மகாதேவரை நோக்கித் தவம்புரிய அம்மகாதேவரெழுந்தருளிவந்து உனக்குவேண்டும் வரத்தைத் தருகின்றேன் கேளென்றுகூறினர், வசிட்டர் பணிந்து எம்பெருமானே! அடியேன்பால் கருணைவைத்திருப்ப துண்மையாயின் பெண்ணுருவடைந்திருக்கும் சுத்யும்னன் மீண்டும் புருஷரூபமடையக் கிருபைபுரியவேண்டும் என்று பிரார்த்திக்க, சிவபெருமான் யாம் அவ்வனத்தில் யாவர்வரினும் ஸ்திரீரூபத்தையடையக் கடவரென்று சபித்திருக்கின்றோம் ஆகையால் அந்த சுத்யும்னன் மீண்டும் புருஷரூபமடைவ தரிது அவன் ஒரு மாதம் புருஷரூபமும் ஒரு மாதம் ஸ்திரீரூபமு மடையக்கடவனென் றனுக்கிரகஞ் செய்து மறைந்தனன். வசிட்டரு மகிழ்திருக்குஞ் சமயத்தில் சுத்யும்னன் முன்போற் புருடவடிவங்கொண்டு தன் பட்டணத்திற்கு வந்து ஆசிரியராகிய வசிட்டரைவணங்கித் தன் வரலாற்றைச் சொல்லி இப்பெண்ணுருவ மாறினமை யான்றியேனென்ன, வசிட்டர் தாம் தவங்கிடந்து பெற்றவரலாற்றைக் கூறினார். அது தவத்தா லென்றுகேட்டு விடைபெற்றுப் பெண்ணுருவடையு மாதத்தின் அந்தப்புரத்திலும் புருடவுருவடைய பாதத்தில் அரசாட்சி நிமித்தும் கொலு மண்டபத்திலு மிருந்து நாட்கழித்து வந்தனன். இதையறிந்து நகரவாசிகள் அவ்வரசனிடத்தில் வெறுப்புடையவர்களா யலஷியஞ்செய்து வந்தனர்.

இவ்வாறு சிலகாலஞ்சென்ற பின்னர் தன் புத்திரனாகிய புரூரவனுக்கு யௌவனதிசைவர பட்டாபிஷேகஞ்செய்து அவனிடம் அரசாக்ஷியை யொப்பிவித்து ஆரணியஞ்சென்று நாரத முனிவரிடத்தில் நவாக்ஷர மந்திரோப தேசம்பெற்று அம்மந்திரத்தை மனவுறுதியோடு அநேகவருடஞ் செபித்து வந்தனன். அம்மந்திர தேவதையாகிய பராசத்தி சிம்ஹாரூடையாய்ப் பிரசன்னமாயினள் சுத்யும்னன் மிகுந்த பக்தியோடு துதிக்கலாயினன்.

* ஸ்லோகம் :- (சுO) திவ்யஞ்சதே பகவதி பிரதிதம் ஸ்வரூபம் திருஷ்டம்மயா சகலலோக ஹிதாமரூபம், வந்தே த்வதங்கிரி கமலம் சுரதங்கிய ஸேவ்யம் காமபரதம் ஜநநிசாபி விமுக்திதஞ்ச, (சுக) கோவேத்திதேம்ப புவிமர்த்ய தூர் ந்நிகாமம் முஹ்யந்தி யத்ர முநயஸ்ச சுராஸ்சஸர்வே, ஐஸ்வர்யமேததகிலம் க்ருபணே தயாஞ்ச திருஷ்டைவதேவி சகலம் கிலவிஸ்மயோமே. (சுஉ) சம்புர்ஹரி: கமலஜோ மகவாரவிஸ்ச வித்தேசவந்ஹி வருணா; பவ நஸ்சசோம, ஜாநத்தி நைவ வஸவோபி ஹிதேப்ரபாவம் புத்யேத் கதம் தவகுணா நகுணோ மநுஷ்ய: (சுங) ஜ்ஞநாதிவிஷ்ணு ரமிதத்யுதிரம்ப சாக்ஷாத் த்வாம் சாத்விகீ முததிஜாம் சகலார்த்த தாஞ்ச, கோராஜசீம் ஹரவுமாம் கிலதாமசீம்த்வாம் வேதாம்பிகே நதுபுந: கலுநிர்க்குணாம் த்வாம். (சுசு) க்வாஹம் சுமந்த மதிரப்ரதி தப்ரபாவ கோயந்தவாதி நிபுணோ மயிசுப்ரசாத; ஜாநேபவாநி சரிதம் கருணாசமேதம யத்ஸேவகாம்ஸ்ச தயசே த்வாயிபாவயுக் தான். (சுரு) விருத்தஸ்த்வயா ஹரிராவ் வநஜேசயாயி கைவாச ரத்யபிமுதம் மதுசூதருசை, பாதவ் தவாதி புருஷ் கிலபாவகோ கிருத்வாகரோதி சகரேண சுபவ்பவித்ரா. (சுசு) வாஞ்சியாத்ய ஹோஹா ரசோக பிவாதிகாரம் பாதாஹதிம் ப்ரமுதிக: புருஷ: புராண:, தாம்த்வங்கரோஷி ருஷிதாம் பிரணதஞ்சம்தே திருஷ்ட்வாபதம் சகலதேவநுதம் ஸ்மரார்த்தம். (சுஎ) வக்ஷஸ்தலேவளஸிதேவி சதைவதஸ்ய ப்ரயங்கவத்ஸுசரிதே விபுலேதி ஸாந் ஸவுதாமிநீவ சுகநேஸு விபூஷிதேச கிந்தேநவாஹன மசவ் கதீஸ்வரோபி. (சுஅ) த்வம் சேஜ் ஜஹாசி மதுசூதந மம்பகோ பாந் நைவார்ச்சிதோபி சபவேத் கிலசத்தி ஹீந;, பிரத்யக்ஷமேவ புருஷம் ஸ்வஜநாஸ்த்ய ஜந்தியாந்தம் ச்ரியோத்தி யதமதீவகுணைர் வியுத்தம், (சுகூ) ப்ரஹ்மாதய: சுரகுணா நதுகிம்யுவத்யோ யேத் வத்பதாம்புஜ மஹர்நிச மாச்ரயந்தி, மந்யேத்வயைவ விஹிதா: கலுதேபுமாம்ஸ: கிம்வர்ணயாமி தவசக்தி மநந் தவீர்யே. (ருO) த்வ ம்நாபுமாந் ரசபுமா நிதிமேவிகல்போ யாகாசிதேவி சகுணாநநு நிர்க்குணாவா, தாந்த்வாம் நமாமிசததம் கிலபாவயுக்தோ வாஞ் சாமி பக்தி மசலாம் த்வயிமாதரந்தே.

இனி இந்த ஸ்லோகங்களின் தாத்பரியம் வருமாறு.

ஹே ஜநநி? ஹே பகவதி? திவ்யமாகியும் சர்வவேத ப்ரசித்தியாகியும் சர்வலோக க்ஷேமகரமாகியும் இருக்கிற உம்முடைய சொரூபமானது என்னாலே காணப்பட்ட படியினால் தேவசமூகங்களாலே சேவிக்கப்படுகிறதாயும். போகமோஷப் பிரதமாகியும் விளங்கும் உம்முடைய சரணாரவிந்தத்தை நமஸ்கரிக்கின்றேன். (இதனால், என்னாலே காணக்கூடாத உன்னுடைய சொரூபம் உன்னுடைய அனுக்ரஹத்தால் காணப்பெற்றே னாகையால் இதற்கு நானென்ன கைம்மாறு செய்வேன் வேறொன்றறியேன் உன்றிரு வடியை நமஸ்கரிக்கின்றதே யாம் என்றறிவித்ததென்க.) ஹே அம்பா. முநிவர்களும் தேவசமூகங்களும் (உன்னுடைய சம்பந்தமான) யாதொரு விஷயத்தையும் அறியக்கூடாமல் மயங்குகின்றார்கள். (இவர்களே மயங்குகின்றாரெனின்) பூமியில் எந்தமாநுடன் உன்னுடைய சொரூபவிசேஷத்தை யறிவான். (அறியான், இது இங்ஙனமிருக்க) ஹே தேவி? தீனனாகிய என்னிடத்தில் ஒவ்வொன்றிலும் குறைவில்லாமல் அகண்டமாய் நிறைந்துள்ள ஐஸ்வர்யங்களையும், உம்முடைய தயையையும் பார்க்கின்ற பொழுதே (எனக்கு) ஆச்சரியமல்லவா வுண்டாகிறது. (இதனால், உன்னாலடைய வேண்டிய மோக்ஷைஸ்வர்யமும் போகைஸ்வர்யமும் அடைவதற்கு உன்னுடைய சொரூபத்தை யறிவதற்கின்றி மயங்குகின்றார்கள். பூமியிற்பிறந்த மாநுடரிற்கடைப் பட்டயான் ஒன்றிலுங் குறைவில்லாத அகண்டைஸ்வர்யமும், உன்னுடைய தயையுங்கிடைக்கப்பெற்றதை எண்ணுங்கால் ஆச்சரியமன்றோ உண்டாகிறதென்று கருணையை வியந்ததென்க.) சம்பு, நாராயணன், பிரமன், இந்திரன், சூரியன், குபேரன், அக்னி, வருணன், வாயு, சந்திரன், வசுக்கள் என்று சொல்லப்பட்ட இவர் முதலியோரே உன்னுடைய மகிமையை அறியமாட்டார்களென்றால் குணஹினனாகிய மாநுடன் எப்படியறிவான். (இதனால் உலகினர் ஐஸ்வர்யம் பெறுதற்குரியார் இவரென்பார்க்கு ஐஸ்வர் யங் கொடாமலும், பெறுதற்குரிய ராகாரென்பார்க்கு ஐஸ்வர்யங் கொடுத்தலுமாகிய உனது அனுக்கிரக சூட்சியை ஒருவரு மறியாரென்று அனுக்கிரக மிகமையைக் கூறியதாம்.) ஹே அம்ப? சர்வ வியாபியாகியும், அளவிறந்த தேஜோரூபியாகியும் இருக்கின்ற சங்கரார் உன்னைப் பிரத்யஷ மாயறிவார். (வேறொருவரு மறியார். ஏனெனில்) நீ, சத்வகுணசம்பன்னையாகிய பாற்கடலிலுதித்த லஷிமி சொரூபியாகியும், ரஜோகுணசம்பன்னையாகியும், தமோகுண சம்பன்னையாகிய துர்க்கா சொரூபமாகியும் இருக்கின்றனை, (இம்முக்குணரூபமல்லாத) நிர்க்குணையாயு மிருக்கின்றனை,

(ஆகையால்) உன்னைச் சங்கரரன்றி எவரறிவார். (இதனால் திரிகுண சத்தி சொரூபமா யெவராலும் அறியத்தக்கவள்போ லிருக்கின்றாய், ஒருவராலும் அறியக்கூடாத நிர்க்குணையாயு மிருக்கின்றாயாகையால், உன்னை நிர்க்குணையே என்று கணிப்பார்க்குச் சகுணையாயும், சகுணையே என்று கணிப்பார்க்கு நிர்க்குணையாயு மிருத்தலால் உன்னை எவரறியவல்லா ரென்க.

மந்தபுத்தி யுள்ளவனாகியும், அப்பிரசித்தனாகியும் இருக்கின்ற நான் எவ்வளவு தன்மையுடையவன், என்னிடத்தில் மிகவும் விசேஷித்திருக்கின்ற உனது நல்ல அனுக்ரஹம் எவ்வளவு மேம்பாடுளது. ஹே அம்ப! தயையோடு கூடிய உன்னுடைய சர்த்திரத்தை நானறிவேன். (என்னையெனில்) ஒருவன் எந்த காரணத்தினாலாவது உன்னிடத்தில் பக்தி பாவத்தோடுங் கூடியிருப்பானாயின். அவ்வடியானுக் கனுக்கிரகஞ்செய்யும் (இயல்புடையளல்லவா) (இதனால் யாவனாயினும் உன்னிடத்தில் பக்தி பாவத்தோடு கூடியிருப்பானாயின் அவனளவு நோக்காது அளவிறந்த அனுக்கிரஹஞ் செய்யுங் கருணையுடையவள் நீ என்று குறித்ததாம்.) உன்னாலுண்டாக்கப்பட்ட பிரமன், மதுசூதனனாகியும் ஆதிபுருஷனாகியுமுள்ள விஷ்ணு உருத்திரர் ஆகிய மூவரும் ஆனந்தத்தை யடையவில்லை; அதனால் அம்மூவரும் சுத்தமாகியும், சுபகரமாயுமுள்ள உன்னுடைய பாத கமலங்களைத் தங்களுடைய கரங்களால் அடிக்கடி நமஸ்கரிக்கின்றார்கள், (இதனால் மும்மூர்த்திகள் சிருஷ்டியாதி முத்தொழி லியற்றினாலும் அதனாற் பிரஹ்மானந்த முண்டாகாமையால் அஃதுண்டாகும் பொருட்டு அவ்வானந்தத்திற் கிடனாகிய திருவடியைப் பிரார்த்திக்கின்றே னென்று குறித்ததாம்.) அதிபுருஷராகிய நாராயணர் ஆனந்தத்தையடைந்து சோகமில்லாதவர்போல் உன்னிடத்தில் சரணாகதியை யபேஷிக்கிறார். சகலதேவதைகளாற் றுதிக்கப்பட்டவராகியும், காமபீடிதராகியும், பாதத்தில் வீழ்ந்துகிடக்கிற அந்த நாயகரைப் பார்த்து நீ அந்த சரணாகதியைக் கடூரமாகச் செய்கிறாய். (இதனால், தேவியே நீ இலஷிமிசொரூபியாய் நாராயணருக்குப் பத்னியாக விருப்பது உண்மையானால் அந்தநாராயணர் உன்னுடைய திருவடியில் அடைக்கலம்புக எண்ணுவரா? அப்படியடைக்கலம் புகுந்த அவரைக் காமபீடிதராய் வீழ்ந்தாரென்று திருவுளத்தி லெண்ணித் திரஸ்கரிப்பையா? ஆகையால் நீ அவரால் ஆளப்பட்ட சக்தியன்று அவரையாளுஞ் சக்தின்று குறித்ததாம்.) நல்ல லீலாவினோதமுடையவளே, திவ்யாலங்கார முடையவளே, அதி சாந்தமுடையவளே, ஹே அம்ப? மஞ்சம் போல் விலமாகிய அந்த

நாராயணருடைய மார்பில் மேகத் திற்றோன்றுகின்ற மின்னற்கொடிபோல வாசம்பண்ணுகிறோய். இந்த நாராயணர் உனக்கு வாகனமாக ஆகமாட்டாரா? ஆவது ஒரருமையா?

(இதனால் நீ நாராயணருடைய மார்பிடத்தைக் கட்டிலாகக் கொண்டு மின்னல்போல் பிரகாசிக்க, அவர் உனக்குக் கட்டிலாக விருப்பது ஆச்சரியமன்று. ஏனெனில் உன்னாலாளப் பட்டவரென்று முன்னரே குறித்திருக்கின்றேனாகையால் உனக்கு அவர் கட்டிலாகவிருப்பது ஒரருமையன்றென்று குறித்ததாம்.) ஹே அம்ப, (ஓர்கால்) நீ கோபத்தினாலே மது சூதனராகிய நாராயணரை விட்டு விலகுவையே யானால் அந்த நாராயணர் யாவராலும் பூஜிக்கப்பட்டவரா யிருந்தாலும் (நிக்கிரகானுக்கிரகஞ் செய்யும்) சக்தியில்லாதவாக ஆகமாட்டாரா? (ஏனெனில்) உலகில் பிரத்யக்ஷமாய் ஒருவன் சாந்தனாயும். ஐஸ்வர்யவந்தனாயும் இருந்தபோதிலுங் குணஹீனனாயிருப்பானாயின் அவனை அவனுடைய ஜனங்கள் விட்டுவிடுகிறார்களல்லவா. (இதனால் ஒருவனிடத்தில் குண நீங்குமாயின் அவனினத்தவர் அவனைவிட்டு நீங்குவதுபோல் நீ நாராயணரைவிட்டு நீங்குவையாயின் உன்சக்தியாகிய நிக்கிரகா னுக்கிரகமும் அப்பொழுதே நீங்குமென்று குறித்ததாம்.) பிரஹ்மா முதலாகிய யாதொரு தேவகணங்கள் உன்னுடைய பதாரவிந்தத்தை, இரவும் பகலும் ஆஸ்ரயிக்கின்றார்களோ அவர்களெல்லாம் உன்னாலே சிருட்டிக்கப் பட்டவர்கள். ஸ்திரீகளோ வென்றால் அப்படியன்று. ஓ அநந்த சாமர்த்திய முடையவளே! உன்னுடைய சக்தியை! என்னவென்று கவனிக்கப்போகிறேன். (இதனால் புருடரெல்லாம் உன்னால் சிருட்டிக்கப் பட்டவரானபடியினால் உன்னை யாஸ்ரயிக்கின்றார்கள். ஸ்திரீகளெல்லாம் நீயாகவே யிருக்கின்றபடியால் அடிமைகளாக ஆஸ்ரயிக்கவில்லை என்று குறித்ததாம்.) நீ புருஷரூப மல்லாதவளாயுமில்லை புருடனாகவுமில்லை (இவ்விஷயத்தில்) பிரமையுண்டாகிறது. ஹே தேவி? (நீ ஆணோ பெண்ணோ) சகுணையோ நிர்க்குணையோ, எவ்வண்ணமிருந்தாலு மிருப்பாயாக; ஒருவண்ணமுஞ் சொல்லக் கூடாதிருக்கின்ற உன்னை (நான்) பக்திபாவத்தோடு கூடினவனாக எக்காலமு நினைக்கின்றேன். (ஏனெனில்) ஹே அம்ப? தேகாந்தத்தில் உன்னிடத்தில் ஸ்திரமான பக்தியை *அபேக்ஷிக்கின்றேன். (இதனால் நீ ஸ்திரீரூபமாத்திரமா யிருக்கின்றாயென்றாலோ புருடரூபமாகவுங் காணப்படுகின்றாய் அல்லையாகவுங் காணப்படுகின்றா யாகையால் நீ ஆணோ

* அபேக்ஷிக்கின்றேன் - தருணத்தை எதிர்பார்த்தல்

பெண்ணோ நிர்க்குணையோ சகுணையோ இன்னம் எத்திற த்தனளே யான் கணிக்கற்பாலனன்று. கணித்தற்கறிவில் னாயினும் உன்னை நமஸ்கரிக்கின்றேன். அதற்கு நீ எனக்கு மரணாந்தத்தில் உன் பக்தியைக்கொடு என்று குறித்ததாம்.) என்று தோத்திரஞ்செய்து தேவியினுடைய பாதகமலங்களைப் பணிந்தனன். தேவி இவனது தோத்திரத்திற்கு மகிழ்ந்து அவ்வரசனுக்கு, தன் சொரூபத்தில் நீங்காதிருக்குஞ் சாயுஜ்யபதமளித்தனள். பின்னர் சுத்யும்னன் அந்த தேவியினுடைய அனுக்ரஹத்தினால் முநிவர்களுக்குங் கிடைத்தற்கிரியதும், சிலாக்கியமானதும், நாசமில்லாததுமான பதத்தை யடைந்தனன்.

முதல் ஸ்கந்தம் பன்னிரண்டாம் அத்தியாயம்

சுத்யும்னனுக்கு ஸ்திரீத்வப் பிராப்திகதனம்

முற்றிற்று.

அஉ அத்தியாயம் கஉ- க்கு ஸ்லோகம் (சுஅகூநி)

———

உ

ஸ்ரீ தேவ்யைநம:

முதல் ஸ்கந்தம் பதின்மூன்றாம் அத்யாயம்

சுத்யும்னோபாக்யானம்

(க-ரு) சூதர் சௌநகாதியர்களைப் பார்த்து ஓ முனிகணங் காள்! சுத்யும்னனென்னும் அரசன் சுவர்க்கலோகமடைந்த பின்னர் சற்குணனாயும், அழகிற் சிறந்தவனாயும், மன்னுயிர்களைக் காப்பதில் மாண்புடையனாயும், எல்லாவறங்களையு முணர்ந்தவனாயுமிருந்த புரூரவனென்னு மரசன் தனது பிரதிஷ்டா நகரத்தை நீதியோடு அரசாண்டுவந்தனன். அவன் தன்னுடைய ரகசியம் இத்தன்மைத்தென்று சத்துருக்களாலுணர வொட்டாமலும் சத்ருக்களுடைய ரகசியம் தானெளிதாகவுணர்ந்தும் பிரபுத்துவசக்தி உத்சாகசத்தி ஆகிய இவைகள் எக்காலத்தும் நீங்காது நிறையப் பெற்றும், சாம பேத தான் தண்டங்களாகிய நான்குபாயங்களால் யாவரையுஞ் சுவாதீனப்படுத்தியும், நான்கு வருணத்தவருந் தங்கள் தங்களொழுக்கங்களிற் றவராது நடந்துவரவும் செங்கோல் செலுத்திவந்தனன். இதுவன்றி அஸ்வமேதாதி அநேகயாகங்களையும் கோதான்முதலிய அநேகதானங்களையு மாறாது செய்து வந்தனன்.

(சு-கங) இந்தப் புரூரவ சக்கிரவர்த்தியினுடைய பேரரசு பெருங்குணம் பெருநடக்கை பேராண்மை முதலியவைகளை இந்திர னுலகிலுள்ள ஊர்வசி கேள்வியுற்று அவனைத்தான் விவாகஞ் செய்து கொள்ளவிரும்பினள். இதனையறிந்த பிரமன், தேவர்களைப் பார்த்து மோகிக்கவேண்டிய நீ மண்ணுலகிலுள்ள மானுடனிடத்தில் மோகங்கொண்டமையால் இனி தேவலோகத்தில் வசிப்பதற்குரியளாகாய், ஆகையால் மண்ணுலகிற் போகக்கடவாயென்று சபித்தனன். உடனே பூலோகம் வந்துசோர்ந்து தானெண்ணிய வாறே புரூரவச் சக்கிரவர்த்தியைக் காந்தருவ விவாகத்தாற்கூடி ஓ அரசனே! என்னை நீர் ஒருநாளுமறவாமல் ரஷிக்கவேண்டும். இதுமுதல் நான்கொடுக்கும் நெய்யைத் தினந்தோறும் புசித்துவர வேண்டும். வேறும் போஜன மொன்றையுங் கொள்ளக்கூடாது. என்னிடமிருக்கும் * உரணங்களை உம்மிடங் கொடுக்கின்றேன். இதை களவுபோகாவண்ணம் பாதுகாத்தல்வேண்டும். நிர்நிர் வாணியாயிருக்கும்போதும் வேறு ஸ்திரீயோடு சங்கமஞ்செய்யும் போதும் உம்மைப்பாரேன். யானிப்போது குறிப்பிட்ட விஷயங்களைத் தவறாது நடத்துவிராகில் உம்மிடத்தில் மாறாத நேசமுடையவளா யிருப்பேன். இவைகளிலொன்று தவறினும் நானும்மை விட்டுப்போய் விடுவேன். இது சத்யம். அரசனே! இதற்கு நீரென்ன சொல்லுகிறீர்; என்று கேட்க அரசன் அதற்கிணங்கி யுறுதி மொழி கூறி அவளோடு வாழ்ந்திருந்தனன். இவளுடைய மோகத்தினால் தான் நடத்தவேண்டிய அரசநீதி முதலிய யாவையுங் கைவிட்டு ஒருவருமறியாமல் அநேக வருடகாலமாய் ஊர்வசியோடு ஒன்றுபட்ட மனமுடையனாய் ரமித்துப் போகித்துவந்தனன். அவளைவிட்டு ஒருகணமேனும் பிரிந்துவனன்று எப்போதும் உல்லாசமாய் விளையாடிக்கொண்டே யிருந்தனன். ஊர்வசியும் அரசனிடத்தில் மிக்க அன்புவைத்து அவனுக்காசைபூட்டித் தானுமின்புற் றிருந்தனள்.

(கசு-கசு) இவ்வாறு அநேககாலமாய் பூலோகத்திற்றானே இருந்துவிட்டமையால் இந்திரன் தன் சபைக்கு ஊர்வசி யில்லாக் குறையைப் பார்த்து கந்தருவர்களையழைத்து ஓ காந்தருவர்களே! சிலநாளாய் ஊர்வசி இங்குவராத காரணமென்னை? நீங்களனைவருமொன்றுகூடி எவ்வித்திலாவது அவளையழைத்து வரவேண்டும். ஆனா லவள் தேவலோகத்தி லிருப்பதாகக் காணவில்லை. பூலோகத்தில் புரூரவச் சக்கிரவர்த்தியின் அந்தப்புரத்தி லிருப்பதாகத் தெரிகிறது. ஆகையால் அந்த அந்தப்புரத்தினின்றுஞ்

* உரணங்களை - ஆட்டுக்கிடா

சமயமறிந்து வெளிப்படுத்திக்கொண்டு வரவேண்டும். ஊர்வசியில்லாம லென்சபை சிறிதேனும் பிரகாசிக்கவில்லை. அவளுக்குப் பிராணனைப் போன்ற வுரணங்களைத் தக்க முயற்சியினால் கைக்கொள்விராயின் அவள் வந்து சேருவளென்று கட்டளையிட் டனுப்பினன்.

(கஎ-உங) கந்தருவர் அந்தகாரமான இருள்சூழுஞ் சமயம் பார்த்து புரூரவனுடைய அந்தப்புரஞ்சென்று அந்த வுரணங்களைக் கவர்ந்துகொண்டு ஆகாயவழியாகச் செல்லுங்கால அவைகள் சப்தித்தன. அதைக்கேட்ட ஊர்வசி நித்திரைதெளிந்து கந்தருவரால் உரணங்கள் போகின்றமையை யறிந்து அரசனிடத்தில் அதிககோ பங்கொண்டு அரசனைக்கூவி ஓ அரசனே? இனி உன்னை விட்டுப்போவதற்குக் காலம் வந்துவிட்டதே? இப்படி வருமென்று கூறி உன்னிடத்தில் உறுதிமொழி கேட்டிருந்தேனே? அதனை நீ மறந்தனையோ? நான் உன் உறுதிமொழியைக் கேட்டுக் கெட்டுப் போனேனே? உன்னிடத்தில் அன்புபாராட்டியது விணாயிற்றே? என் உரணங்களையும் உன்னாலிழக்கப் பெற்றேனே? அவைகளைக் கள்வரைப்போல் கந்தர்வர்கள் கொண்டு போகின்றார்களே? அவை எனக்கு புத்ரனுக்குச் சமானமா யிருப்பதென்றறியாயா? நீ எந்த ஸ்திரீயோடு தூங்கிக் கொண்டிருக்கின்றனையோ? நீ எனக்குக்கொடுமையான புருஷனாகவாயினையே உன்னைப்பதியாக வடைந்து வீணாய்க்கெட்டுப் போனேனே? நீ புருஷகோடியிற் சேர்ந்தவன்றானா? உன்னிடம் செவரியங் கிடையாதா! மானமென்பதை அடியோடுவிட்டு விட்டனையா? என்று பலவாறாய்க் கூக்குரலிட்டு அழும் ஊர்வசியின் சோபவர்த்தையு மறியாமல் அப்படியே விரைவா யோடிவந்து அவளைப் பின்றொடர்ந்தனன். அத்தருணத்தில் கந்தருவாமாயையால் ஓர் மின்னலுண்டாக்கினர். ஊர்வசி, நிர்வாணி யாயிருக்கும் அரசனைப் பார்த்து அளவிறந்த கோபங்கொண்டு அந்தப்புரத்தை விட்டுப்போயினள்.

(உசு-உஎ) கந்திருவரும் இவள் வருகின்றாளென்று தெரிந்து தாங்கள் கொண்டுவந்த உரணங்களை ராஜமார்க்கத்தில் போட்டுவிட்டுப் போயினர். அரசன் வழியில் வீழ்ந்துகிடக்கும் உரணங்களை எடுத்துக்கொண்டு வாட்டமுற்று ஊர்வசியைக் காணாமல் திகம்பரனாகவே வீடுவந்துசேர்ந்து அவளை நினைந்து நினைந்து அவள் நம்மைப் பிரிவாளா பிரியாள். நாம் நிர்வாணியா யிருந்தமையினாற்றான் முன் நமக்குச் சொல்லிய வுறுதிமொழிப்படி பிரிந்து விட்டனள். ஆகையால் நாமிப்போது ஆடையுடையவனாய்ச்

செல்வேகமாயின் ஒருக்கால் நேரிடமாட்டாளா எங்கேயிருப்பாளென்று தேடுவோம் என்றழுதுகொண்டே தேசமெல்லாம் சுற்றிக்கொண்டு சரீரம்நொந்து குருக்ஷேத்திரஞ் செல்லுங்கால் அங்கு ஊர்வசியைக்கண்டு தன்றுயரமொழிந்து சந்தோஷ முடையவனாய்ச் சொல்லுகின்றான்.

(உ௮-ஙO) ஓ மாதரசே! நில்லு நில்லு நீ என்மனைவி யல்லவா? கற்பிழந்த துஷ்டையைப்போல் என்னைவிட்டுப் பொவது நீதியல்லவே? நானுனக்கு மனப்பூர்த்தியாக ஒரு பிழையையுஞ் செய்ததில்லையே? எப்போதும் உனக்கு வசப்பட்டவனாகவே யிருந்தேனே; உன்னைப்பார்க்கவே இப்பூவுலகமுற்றுஞ் சுற்றிவந்தேனேயன்றி பூப்பிரதஷ னஞ்செய்ய வந்தவனன்றே? இங்கு வந்த எனக்கு ஏதோ தெய்வச்செயலாய் நீ நேரிட்டும் என்னைவிட்டுப் போவதற்கே எத்தனஞ் செய்கின்றனையே? அந்தோ! அந்தோ! நீ போவையாகிய என் பிராணனை வைத்திருப்பேனா இவ்விடத்திலேயே போக்கிவிடுவேன். அப்பொழுது உன்னிமித்தமா யிறந்துபோன என்சரீரத்தைக் கழுகுகளும் காக்கைகளும் பிடிங்கித் தின்றுவிடும். அந்தப்பழியை நீ யடைவாய் அது உன்னைவிட்டுப் போகாது என்றிவ்வாறு கூறிக்கூறியழுது கொண்டிருக்கும் அரசனைப்பார்த்து ஊர்வசி கூறுகின்றாள்.

(ஙக-ஙசு) ஓ அரசனே! நீ என்னை அறிவிலியா? உன்னறிவு எங்குபோயிற்று? பெண்களுக்குப் புருஷரிடத்தில் நேசமென்பது ஏது. அவர்கள் பாராட்டும் நேசம் புவி, மானினிடத்தில் பாராட்டும் நேசத்திற் கொப்பானதல்லவா, இதனை நீ யறியாமற்போனது மிக்க ஆச்சரியமே. பெண்களிடத்திலும் கள்வரிடத்திலும் நல்ல குலத்துதித்த அரசன் நேசம்பாராட்டுதல் கூடாதென்பதல்லவோ நீதி. நீதிமறந்த வுன்னைப்பார்த்தேன் இனி நீ ஏன் முன் நிற்காதை. உன்னரண்மனைக்குச் செல்லக்கடவாய் வீணாய் வருந்துவதனாற் பயனென்னை என்று பலவாறாய் திக்கரித்துச் சொல்லவும் அரச னதனை யுணர்ந்து தெளியாது தாசியின் மோகவலையிற் சிக்கிக் கொண்டு தீராத துக்கத்திலாழ்ந்திருந்தனன்.

முனிவர்களே! ஊர்வசியின் சரித்திர மிகப்பெரிது ஈண்டுச் சுருக்கிக்கூறினேன். (உரணம் - ஆபரண விசேஷம்.)

சுத்யும்னோ பாக்கியானம்

முற்றிற்று.

ஆஉ அத்தியாயம் கங - க்கு ஸ்லோகம் (எஉங)

முதல் ஸ்கந்தம் பதினான்காம் அத்தியாயம்

சுகோற்பத்தி வரலாறு

(க-எ) சூதர் நைமிசாரணிய முனிவர்களைப்பார்த்து, ஓ மூனிவர்களே! புரூரவச் சக்கிரவர்த்தியைத் துயர்த்திலாழ்த்திய ஊர்வசி என்னும் வேசி வியாச ராச்சிரமஞ்சென்று கூக்குரலிட்டு அழுதுகொண்டிருந்தனள். வியாசமுனிவர் அவளைப் பார்த்து இக்கன்னிகை தேவகன்னியாயிருத்தல் வேண்டும் இவளை நாம் அங்கீகரிப்பது தகுதியன்று இவளைவிடுவதுங் குணமன்று இதற்கென் செய்வேன் என்றிவ்வாறு சிந்தித்து இருக்குந்தருணத்தில் ஊர்வசி தனக்குப் பிரமனால் நேரிட்டிருக்குஞ் சாபத்தை இவரால் நிவர்த்தி செய்துக் கொள்ளலா மென்றெண்ணி சுகமான ஒரு ரூபங்கொண்டு அதிக பக்தியோடு சிங்காரமா யங்குமிங்கு முலாவினள். அதைக்கண்ட வியாசர் வியப்படைந்து காமமீதூர்ந்து மயிர்ப்புளகங் கொண்டு மனங்காமவழியிற்செல்ல அதைத் தன்னறிவாற் கூடிய வளவில் உள்ளடக்கியும் தன்னுளடங்காமல் அவளும்ளொடுங்கி மோகவளையிற் சிக்கிக் கொண்டுழலும்போது தாம் செய்யத் தகுவதாகிய அக்னிகாரியத்தைச் செய்யவேண்டுமென்கிற அறிவுதோன்றி அரணியில் மத்தைப்பூட்டி அக்னியை வெளிப்படுத்த விடாது கடையுங்காலத்தில் இவரது வீரியமானது அந்த அரணியில் சிதறியது சிதறியதனால் அக்னிக்கநுசிதமுண்டாயிற்றென்று சிந்தித்து மீளவும் விடாது கடைந்து கொண்டிருந்தனர்.

(அ-ககூ) அச்சமயத்தில் அவ்வரணியிலிருந்து இவரைப் போலு மோர் புத்திரன் றோன்றினன். புத்திரனைக் கண்ணுற்ற வியாசர் ஆனந்தமடைந்து அரணியிலுண்டான இவன் மகாபரிசுத்தன் இவனுற்பத்தி யாவராலும் வியக்கத்தக்கது என்று நினைத்துக் கொண்டே அவ்வரணியினின்றும் அக்னியை வெளிப்படுத்தினர். அவ்வக்னி நெல் முதலிய அவிசுகளையுட்கொண்டு மேலோங்கி எழுவது போல் அதிகமாய்ப் சுவாலித்து வலஞ்சுழித்தெழுந்தது. வியாசர் அதைப்பார்த்து அநுசிதமுண்டாயிற்றே என்றெண்ணிய வையத்தினின்று நீங்கி மிக்கவானந்த மடைந்து இது சிவபெருமான் றந்த வரத்தின் பெருமைதானோ, இந்தவரணியிற்றோன்றிய தேஜோ ரூபமான புத்திரன் இரண்டாவது அக்னிபோற் சுவலித்துக் கொண்டிருக்கின்றானே இவனல்லவோ புத்ரன் எனவியப்புற்று அக்குழந்தையைத் தழுவிக் கையிலெடுத்துக் கொண்டு கங்கையில் ஸ்நானஞ்செய்து மீண்டுந் தன்னாச்சிரமமடைந்து சுகரூபியான ஊர்வசியைக்கண்டு மோகங்கொள்ள இப்புத்திர னுண்டானமையால்

சாதகாதி கர்மங்களைச் செய்து சுகன் என்று பெயரிட்டனர். ஆகாயத்தில் புஷ்பமாரி பொழிந்தது. தேவர்கள் துந்துபி முதலிய பஞ்சவாத்தியங்களை முழக்கினர். தேவதாசிகள் நடித்தனர் கந்தருவர் பாடினர். நாரதர் முதலியரிஷிக ளாசீர்வதித்தனர். உலகத்திலுள்ளவர்களெல்லாம் ஆனந்தசாகரத்தில் மூழ்கினர் அத்தருணத்தில் ஆகாயத்தினின்றும் தண்டமும் கமண்டலமும் கிருஷ்ணாசனமும் வியாசருக்கருகில் வீழ்ந்தன. அதைச் சுகரெடுத்துக் தரித்துக் கொண்டனர், பின்னர் வியாசர் சுகருக்கு உபநயனஞ் செய்தனர், உடனே சுகா அதிக தேஜசுடன் வளர்ந்து வேதங்களையும் வேதாந்தங்களையுந் தன் பிதாவைப் போலுங் கற்று ணர்ந்தவராயினர்.

(உ0-ஙங) வியாசர் சுகருடைய *தீக்ஷண்ய புத்தியைக் கண்டு, நமது குமாரனாகிய சுகமுனிவன் பிராசரியாச்சிரரத்தை யடைந்துகுருகுலவாசஞ்செய்து சர்வசாஸ்திரங்களையுங் கற்றுணர்ந்து, பின்னர் இல்லறதருமத்தை வந்தடைய வேண்டுமென் றெண்ணும்பொழுது பிரகஸ்பதிபகவானங்குவந்தனர். அவரைக் கண்டவுடன் தனது ஞானபுத்திரனை அவரடிபணியச்செய்து அவர் பின்னோடனுப்பினர். சுகர், பிரகஸ்பதிபகவானை உபரத்தியாயராக வைத்துக் கொண்டு வேதவேதாந்தங்களையும், தருமசாஸ்திரங்களையும், நன்றாய்க் குருகுலவாசஞ்செய்து கற்றுணர்ந்து குருதக்ஷணையுங் கொடுத்துத் திரும்பித் தன் தகப்பனாரிடம் வந்தனர். வியாசர், சர்வசாஸ்திர சம்பந்நனான புத்திரனைக்கண்டதும் அன்போடெழுந்திருந்து விரைவா யாலிங்கனஞ் செய்து உச்சிமோந்து இனிய மொழிகூறி கல்வி நல முசாவி, தமது ஆச்சரிமத்திலேயே யிருக்கச் செய்து, பின்னர் விவாகஞ்செய்விக்க வேண்டுமென்கிற எண்ணமுடையவராய் ஓர் முனிகன்னிகையை விசாரித்து சுகரைப்பார்த்து, ஓ மேதாவி? நீ தர்ம சாஸ்திர முதலியவைகளை நன்றாய்க் கற்றுணர்ந்தவன். உனக்கு யான் அதிகமாய்ச் சொல்லவேண்டுவதில்லை. நீ இப்போது நல்ல லக்ஷணமான கன்னிகையை விவாகஞ்செய்து கொண்டு கிருகஸ்தாச்சிரமிகள் செய்யவேண்டிய தேவயஜ்ஞும் பிதுர்யஜ்ஞும் முதலிய கர்மங்களை மனைவியுடன் செய்து பிதுர்க்கடனினின்றும் என்னை விமோசனஞ்செய்துவை. புத்திரனில்லாதவனுக்கு சுவர்க்கமில்லையென்று தர்மசாஸ்திரங் கூறுகின்றமையால், நீ கிருகஸ்தாச்சிரமத்தை யடைந்து என்னைச் சுகிக்கச் செய்வாய். பிர மசரியத்தை நிறைவேற்றினதுபோல் கிருகஸ்தாச்சிர மத்தையும் நிறைவேற்றிவிட்டுப் பின்னர் தவம்புரியச் செல்வாய். யான் உன்னைப்

*தீக்ஷண்ய - கூர்மையான

புத்திரனாயடைவதற்கு அநேககாலம் தவம்புரிந்தேன். பின் நீ அயோநிஜனாகவும் மேதாவியாகவும் தேவதாரூபியாகவும் பிறந்தாய். உன் தந்தையான என்னை, கிருகஸ்தாச்சரமடைந்து காப்பாற்றுவாயென்று கூறிய இல்லற விருப்பமுடைய தந்தையைப்பார்த்து அதில் விருப்பமில்லாத சுகர் கூறுகின்றார்.

(ருசு-சுகூ) ஓ மேதாவியரான தர்மஜ்ஞரே? நீர் என்னசொல்லுகின்றீர். நான் உம்முடைய மகனாயினும் நன்மார்க்கத்தில் பிரவேசிக்கும்படிக் கட்டிளையிட்டால் அந்தப்படி செய்வதற்கு அதிக விருப்பமுடையவனாவேன். வேறுமார்க்கத்தைக் கூறுவீராயின் நானெப்படி விரும்புவேனென்றனர். வியாசர் ஓ குழந்தாய்! உன்னிமித்தமாய் யான் நூறுவருடம் கோரமான தவம்புரிந்து அதிக கஷ்டத்துடன் சிவராதனையுஞ்செய்து உன்னைப் புத்திரனாகப் பெற்றேன். ஆதலால், என்னிஷ்டத்துக்கு விரோதஞ் செய்யாதை. உனக்குப் பொருள்வேண்டுமாயின் அரசனையாசித்து வேண்டிய பொருள் சம்பாதித்துக் கொடுக்கிறேன், அதைவைத்துக் கொண்டு மனைவியோடு யெளவனத்தில் நல்லசுகத்தை யனுவித்துக் கொண்டிருவென்று கூறினார். சுகர் ஓ பிதாவே! இம்மானுடவுலகத்தில் விசாரமற்ற சுகமென்பது ஏது? நீர் கூறிய சுகம், முன்னர் சுகம் போற்றோன்றிப், பின்னர் ஆறாத்துயரந் தருகின்றது. இப்படி துக்க பரம்பரைக்கிடமாயிருக்கிற இல்லற வாழ்க்கையை அறிவுடையோர் சுகமென்றுகூறார். உம்முடைய சொற்படி ஓர் பெண்ணைவிவாகஞ் செய்துகொண்டால் அப்பெண்ணுக்கு யான் வசப்பட்டிருக்கவேண்டும். பிறகுக் குட்படிந்திருக்கின்றவனுக்குச் சுகமென்பது உண்டாகுமா? உண்டாகிறதேயில்லை. அதிலும் ஸ்திரீ வசப்பட்டவனுக்குச் சுகமுண்டாகிறதென்பது விந்தையினும் விந்தை, அப்படி அறிவின்மையால் ஸ்திரீ வசப்பட்டவன் புத்ர பௌத்திரர்களாகிற இருப்பு விலங்குகளினால் கட்டப்பட்டு ஒரு நாளும் அவ்விலங் கினின்றும் விடுபடுகிறதில்லை. இத்தேகம் மலமூத்ராதிகளால் செய்யப்பட்ட பிண்டமாயிருக்கிறது. இதுபோலவே பெண்கள் தேகமுமிருக்கின்றது. இப்படிப்பட்ட சரீரத்தில் என்ன சுகமுண்டாகப் போகிறது. இதில் வித்வான் பிரீதிவைப்பதற்குச் சம்மதியான். ஓ பிதாவே? யான் யோனியிற் பிறவாதவன். அப்படிப்பட்ட எனக்கு இத்தகைய அற்பவிஷயங்களில் மனம் பிரவேகிக்கச் சம்மதியாது. ஆதலால், உம்முடைய சொல்லைக்கேட்டு மணம்புரிந்து இனி யோனியில் சனிக்கும்படியான காரியத்தைச் செய்யமாட்டேன். மலமூத்திரத்தில் சுகிக்க யான் விரும்பேன். அற்புதமான ஆத்மசுகத்தை யநுபவிப்பதற்கே என் விருப்பம். அந்தப்படி, ஆதமசுகத்தை அனுபவிப்பனே யாயின்,

காபாவா சஞ்செய்துயே னிவாயிலாக ஜன்ம மெடுக்குந் துக்கத்தை யனுபக்விகாமலிருப்பேன், யான் பிரதமத்தில் ஆத்ம சுகத்தைத் தரும் படியான வேத வேதாந்தங்களை விஸ்தாரமாய்க் குருவினிடத்தில் படித்தேன். இப்போது உம்மிடத்தில் காம்மார்க்கப் பிரவர்த்திகளான இம்சையான பாடங்கள் படிக்கும்படி நேர்ந்தது. எனக்கு வாய்த்த பிதா குரு ஆகிய உங்க ளிருண்டிடத்திலும் கன்மார்க்கத்கதைக் காணோம் என் னாசிரியரோ, நீர்கூறிய இந்த சம்சார சாகரத்தில் நன்றாய் முழுகிக் கிடக்கிறார், இது அஞ்ஞானமல்லவா ? அப்படி அஞ்ஞானத்தாற் கவரப்பட்ட பிரகஸ்பதி, என்னைக் கடைத்தேறச் செய்வதற்கு எப்படி திறமைசாலியாவர். ரோகத் ரேல்பீடிக்கப்பட்ட வைத்தியன் எப்படி பிறருக்கு ரோக சிகிச்சை செய்வதற் காவான் அதுபோலென்க. ஆயினும் அவர் உம்மை தநாக்க நல்லவரே. ஏனெனில் சமுசாரத்தில் மூழ்கினவராயிருந்தும் மோஷமடைய விருப்பமுடைய வெனக்கு அதற்கேதுவான ஞானநிலையைக் கூறினாரேயன்றி உம்மைப்போல் கிருகஸ்த நிலையைக் கூறியதில்லை. நீர் என் பிதாவாக விருந்துத் துன்பந்தரும் கிருகஸ்த தருமத்தை யுபதேசிக்கின்றீர். இதுபயனற்ற உபதேசம். எனக்குத் தத்வோபதேசஞ் செய்து சம்சாரமாகிற கொடிய பாம்பின்வாயிற் புகவொட்டாது காப்பது உமது கடமை. இந்தகோரமான சம்சாரம் சக்கரம்போல் சுழன்றுகொண் டிருக்கின்றது. சூரிய னிரவிலும் பகலிலு முழன்றுவருகின்றானே யன்றி இளைப்பாறுத லெப்படியில்லையோ அப்படியே இச் சம்சார சக்கரத்தில் லகப்பட்டுக் கொண்டவனுக்குச் சுகத்திற் கிடமேயில்லை.

(சுஎ-ருசு) ஓ தந்தையே ? விசாரிக்கு மளவில் இதில் சுகமென்பது ஒரு சிறிதாயினு மிருக்கின்றதா ? அமேத்யத்திற் கிருமி யுழன்று சுகிப்பதுபோல் மந்தர்களுக்கு இச்சம்சாரத்தில் சுகபுத்தி யுண்டாகிறது. சம்சாரத்தில் அதிக ஆசை வைப்பவ ரெவர்களோ அவர்களைவிட மூடர் ஒருவருமில்லை. அப்படிப்பட்டவர் பன்றிக்கும், நாய்க்குஞ், சமானமானவர். பெறுதற்கருமையான மானுட சரீரத்தை யெடுத்து வேதசாத்திரங்களையும் விதிப்படி அத்யயனஞ்செய்து சம்சாரமாகிய பாசத்தாற் கட்டுப்பட்டால் அந்தக் கட்டைவிடுவிப்பதற்கு எவன் சாமர்த்திய முடையவன். புத்ரனிடத்திலும், தாரத்தினிடத்திலும், வீட்டினிடத்திலும், மிக அவல் கொண்ட பண்டிதன் இந்த வுலகத்தைவிட மேலான பரலோக மொன்றுமில்லை யென்று மதிமயங்கிக் கூறுகின்றான். அவன் விசேஷமாய்க் கற்றுணர்ந்தவ னாயினும் அவன் அறிவில்லாதவனே. எந்த மனிதன் பெண்களாகிற மாயவலையினாற் கட்டப்படவில்லையோ, அவனே வித்வான், அவனே மேதாவி, அவனே சாஸ்திர பாரங்கதன். (எல்லையுணர்ந்தவன்.)

வேதத்தை யுருவேத்திப் பாடம்பண்ணுவதனா லென்னபயன். சம்சாரபந்தத்தினின்றும் விடுபடும்படியான பாடத்தைப்படிப்பதுதான் பயன். பாசத்தினாற் கிரஹித்துக் கட்டி யிருகச்செய்வது எதுவோ அது கிருகஸ்தமெனப் பெயர் பெறும். அதனை யுடையவன் கிருகஸ்தன். அப்படிபட்ட பந்தத்தில் என்னைப் பிரவேசித்துச் சுகிக்கும்படி உபதேசிக்கின்றீரே. அதி லுண்மையில் சுகமிருக்கின்றதா. ஆகையால் அதிக் பிரவேசிப்பதற்கு மிகவும் பயப்படுகிறேன். எவர்கள் வேதசாத்திரங்களைக் கற்றுணர்ந்தும் மந்தமதிகளா யிருக்கின்றார்களோ அவர்கள் வினையினால் கவரப்பட்டவர்களே. அவர்கள் அந்த கிருகஸ்தாச்சிரமத்தை யடைந்து மீண்டு மீண்டும் சென்மமெடுப்பதற்கு வித்தை நாட்டிப் பந்தப்பட்டுக் கொண்டிருப்பர். என்று கூறிய சுகரைப் பார்த்து வியாசர் கூறுகின்றார்.

(ருரு-சுக) ஓ குழந்தாய்! நீ கிருகதாச்சிரமத்தை மந்தமதிகளுக்கும், வினையினால் கவரப்பட்டவர்களுக்கும், ஆலயமென்று கூறினாயல்லவா? அதை, அப்படி கூறுவதற்குக் காரணமொன்றுமில்லை. ஒருவன் கிருகஸ்தாசிரமத்தி லிருந்தும் மனசில் பற்றில்லாதிருப்பானானால் முத்தனாவான். அன்றி அவ்வாச்சிரமத்தில் நியாயவழியாய்ப் பொருளைச் சம்பாதித்து, வேதத்தில் விதித்த கர்மங்களைக் கிரமப்படி செய்யுஞ் சிரத்தையுடையவனாயும், சத்ய சந்தனாயும் ஆசாரசீலமுடையவனாயும், இருப்பானாயின் அவன் அப்பந் தத்தினின்றும் விடுபடுவா னென்பதிற் றடையேதுமில்லை. அன்றி, பிரமசாரியும் வானப்பிரஸ்தனும் சந்நியாசியும், மத்தியான வேளையில் * கிருகஸ்தரை நாடிச் சீவிக்கின்றார்கள். நீதியிலொழுகும் கிருகஸ்தாச்சிரமிகளும் தங்கள் வீட்டைநாடி வந்த மேற்கூறிய மூன்றாச்✧சிரமிகளையும், பக்தியினாலேயும், அன்னதானத்தினாலேயும், இனியசொற்களினாலேயு முபகரிக்கின்றார்கள். ஆதலால்? இல்லறத்தைவிட மேலானதரும மொன்றுமில்லை. அப்படி யிருப்பதாய்ச் சொல்லப்படவுமில்லை. அக்காரணம்பற்றியே வசிட்டாமுதலிய பெரியோர்களினாலேயும், ஞானிகளினாலேயும் அதனை அங்கீகரிக்கப்பட்டது. வேதத்தில் விதித்தகர்மத்தை வழுவாமற் செய்கிறவனுக்குச் சாதிக்கக்கூடாதது எது விருக்கிறது. சுவர்க்கமோ, மோஷமோ, நல்லசன்மமோ. இவற்றுள் நாதனை விரும்புகின்றானோ அது வருகின்றது. தர்மவிந்துக்கள் கூறும்விதி என்னவெனில்? ஒவ்வொரு ஆச்சிரமத்தையுந் தவறாமல் கொள்ளவேண்டு மென்பதேயாகும்.

* கிருகஸ்தரை - இல்லறவாழ்க்கை வாழ்பவன்
✧ சிரமிகளை - பழைய சினேகிதன்

(சுஉ-எக) ஆதலால், கிருகதாச்சிரமத்தை யடைந்து, தேவர்களையும், பிதுர்க்களையும், மநுடர்களையும், விதிப்படி திருப்தியடையச் செய்யும்படியான கர்மங்களைச் சோம்பலின்றிச் செய்து, உன்மனைவியோடுகூடி, சத்புத்திரனைப் பெற்று, அவனை கிருகஸ்தாச்சிரமத்தில் சேர்த்துவிட்டு, பிறகு அந்த ஆச்சிரமத்தைப் பரிகரித்து, வானப் பிரஸ் தாச்சிரமத்தை யடைந்து, அதற்குக்கூறிய விரதத்தை யநுட்டித்து, அந்த ஆச்சிரமத்திற் சிலகாலமிருந்து, பின்னர்சந்நியாச ஆச்சிரமத்தை யடைவாய். ஹே புத்ரா! இந்திரியங்களையும் மனசையும் வெல்வது இல்லறத்தி வீடுபடாதவனுக்கு முடியாது. ஆதலால்? அவைகளை வெல்வதற்காகவே கலியாணஞ் செய்துகொண்டு, அவைகளை வென்று பின்னர் வார்த்திக திசையில் தவம்புரிய வேண்டுமென்பது சாஸ்திரங்களிற் கூறப்படும் நிச்சயம். ஓ புத்திரனே! விஸ்வாமித்திர முனிவர், மூவாயிர வருடம் அகோராத்திரமாய்க் கோரமான தவம் புரிபவராயிருந்தும் மேனகையைக் கண்டவுடன் மோகித்து அந்த வனத்திலேயே சகுந்தலையென்னும் புத்திரியைப் பெற்றனரல்லவா? எனக்குப் பிதாவான பராசர், வலைஞர்மகளாகிய மச்சகந்தியைக் கண்டு மோகித்து அப்பெண்ணைச் சுவாதீனப் படுத்திக் கொண்டு ஓடத்திலேயே யிருந்தனர். பிரமன் தன்புத்திரியினிடத்தில் மோகங்கொண் டோடித் திரிந்து மூர்ச்சையடைந்து பின்னர் சிவபெருமானால் தெளிவடைந்தனன். ஆதலால் இவைகளையெல்லாம் நீ நன்றா யாலோசித்து என்சொற்படி நல்ல குலத்திலுதித்த கன்னிகையை மணம்புணர்ந்து வேதசம்பந்தமான கர்மங்களைச் செய்வாயாக.

முதல் ஸ்கந்தம் பதினான்காம் அத்தியாயம்.

சுகோற்பத்திகதன வரலாறு.

முற்றிற்று.

ஆஉ அத்தியாயம் கசு - க்கு ஸ்லோகம் (எகூங)

———

உ

ஸ்ரீ தேவ்யைநம:

முதல் ஸ்கந்தம் பதினைந்தாம் அத்தியாயம்

சுகர் சமசார நிந்தாதிகதனம்

(சு-கூ) சுகர் தன்பிதாவாகிய வியாசரைப்பார்த்து, ஓ தந்தையே! யான் எப்போதும் எல்லாமனிதர்களுக்குந் துயரத்தைத் தருவதாயும், மிருகத்தைப் பந்திக்கின்ற வலைபோன்றதாயுமுள்ள கிருகஸ்தாசிரமத்தில், ஒருநாளும் பிரவேசிக்கமாட்டேன். பொருளிலாசையுடைய மனிதர்களுக்குச் சுகமென்பது ஏது? பொருளில்லாதவனைப் பந்துக்க ளெப்போதும் நெருங்கிப் பீடிப்பார்கள். சந்நியாசியானவன், எல்லாவாசையும் விட்டொழிந்த மையால், அவனைப்போல் சுகி, இந்திரனுமாகான். அந்தச் சம்சார பந்தத்திலிருப்பவனுக்குத், திரளானபொரு ணிறைந்திருந்தாலும் மேன்மேலும் பொருள்விருத்தி யடையவேண்டுமென்றே விரும்புவனேயன்றி, திருப்தியடைகிறதில்லை. இந்திரன் மூன்றுலகங்களுந்தன் சுவாதீனத்திலிருக்கும்படியான சம்பத்தைப் பெற்றிருந்தும், பிறர், கோரமான தவம்புரிவாராயின் தனது இந்திரபட்டம் போய் விடுமே என்கிற அச்சத்தால், அவர்களுக்கு அளவிறந்த இடையூறுகளைச் செய்கின்றான். இது சம்சார பாசத்தினாலுண்டான துக்கமல்லவா; இதுபோலவே பிரமனும், சரஸ்வதியை மணம்புரிந்து, ஒரு சுகத்தையுமடைந்தவனன்று. விஷ்ணுமூர்த்தி லஷ்மியை யடைந்ததனா லென்ன சுகத்தைப் பெற்றார். அந்த விஷ்ணுமூர்த்தி, அசுரர்களோடு போர்புரியும் ஒவ்வொரு சமயத்திலும் லஷ்மியை எந்த அசுரனாவது அபகரித்துக்கொண்டு போய்விடுவானோ என்பதாதி துக்கங்களை யநுபவித்துக்கொண்டே யிருக்கின்றார். அன்றி, அசுரர்களைச் செயிப்பதற்காக, கோரமான தவங்களைச் செய்து, சொல்லமுடியாத கஷ்டங்களை யெல்லாம் அநுபவிக்கின்றார். விஷ்ணுவுக்கு லஷ்மி, மனைவியாயிருப்பதால், அவருக்கிருக்கும் சம்பத்துக் களவில்லை. அப்படிப்பட்ட திரளான சம்பத்திருந்தும் நல்ல சுகத்தை யநுபவிக்க முடியவில்லை. இதற்குளே துக்கத்தை யநுபவிக்குங்கால், சாமான்யர்களான தனஹீனர்களுக்கு, இல்லறத்தில் சுகம் எப்படியுண்டாகும். ஓ தந்தையே? யான், உமது ரேதஸுக்கு ஜனித்தேனென்பதை நன்றாயறிவேன் அக்காரணத்தையே முக்கியமாக வைத்துக்கொண்டு என்னைக் கோரமான சம்சாரவலையில் சிக்கிக்கொள்ளும்படி கட்டளையிடுகின்றீர்.

(௧0-௨0) சென்மமெடுப்பதே துக்கம். எடுத்து விட்டால், பின்னர் கிழத்தன்மை வந்து விடுமே என்பதில் துக்கம். அது வந்தபின்னர், மரணத்தில் துக்கம். அதுவுஞ் சமீபித்தபொழுது, புனர்ஜன்மம் வருமென்கிற துக்கம். அதுவருங்கால மலமூத்திர மயமான கர்ப்பவாசத்தில் அதிக துக்கம். அதன் பின்னர், நமக்கு எல்லா ஐஸ்வர்யங்களும் நிறம்ப இருக்கவேணு மென்பதில் துக்கம். அது இல்லாவிட்டால், யாசகஞ்செய்வது மரணதுக்கத்தைப் பார்க்கிலும் துக்கம். யாசகஞ்செய்து வாங்கிய பொருளினால் பிழைப்பது புத்திபலமில்லாதவர் செய்யத்தக்க சீவனமென்கிற துக்கம். பிறர்வாழ்ந்திருப்பதைப் பார்க்குந்தோறுந் தனக்கில்லையே என்கிற துக்கம். இவையன்றி யமபாதை நினைக்கு நிமிஷந்தோறு முண்டாகுந்துக்கம். இத்துக்கங்க ணீங்கத் தக்கதன்று. கிருகஸ் தாச்சிரமத்தில் புகுந்தவன் சகல சாத்திரங்க ளுணர்ந்த வனானாலும், யாவருக்கு மிஷ்டனானாலும், பொருளில்லாதவனாயிருப்பானாயின், தனிகர்களுடைய வீடுதோறுஞ்சென்று தலையிறங்கி இச்சகம் பாடி யாசிக்கவரும். ஆகையா விதைவிட்டு ஏகாகியா யிருப்பனாயின், வயிற்றைப் போஷிக்க வேண்டியதைப் பற்றி யோசிக்க வேண்டியதில்லை. ஏனென்றால், ஆரணியம் விஸ்தாரமாயிருக்கின்றது. அதில் கனிவர்க்கங்களும், இலை காய் கிழங்குகளும், ஏராளமாக விருக்கின்றது. யாதினலாவது, தன் வயிறு நிறையும்படிச் செய்து கொள்ளலாம். மனைவி புத்திர பௌத்திராள் சகோதரர் பந்துவர்க்கங்கள் அதிகமாக இருக்குமாயின் இவர்களுடைய வயிற்றை நிறப்புவதற்கு அதிகமான முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். இது துக்கத்திலும் பெருந்துக்கந்தானே. இப்படியிருக்க, இதைச் சுகமென்று எப்படி கூறலாம். ஆதலால் எனக்கு யோகசாஸ்திரத்தையும், சந்மார்க்கத்தையு மெடுத்துச் சொல்லும். இதுதான் சொல்துதற்கரிதான சுகத்தைத்தரத்தக்கது. கர்மகாண்டத்தைப்பற்றி, எவ்வளவு புகழ்ந்துரைப்பினும் அதில் என்மனம் விருப்பங்கொள்ளாது. இனி, நீர் கர்மமூலமாகிய ஆகாமிய சஞ்சிதய பிராரத்தங்களான மூன்றையு மொழிக்குமுறையையே, விதிப்படிகூறும் அட்டையைப்போல், எப்போதும் புருஷர்களுடைய ரத்தத்தை ஸ்திரீகள் பானஞ் செய்கிறார்களென்கிற விஷயத்தை மூடர்களறியாமல், அவர்களுடைய அங்கசேஷ்டைகளைக் கண்டு, மோகிக்கிறார்கள். ஸ்திரீகள், போகத்தினால் பலத்தையும், செல்வத்தையும், சொற்சாதுரியத்தினால் மனதையும், அபகரிக்கிறார்கள். ஸ்திரீயோடு நேசம் செய்கிறவன், எல்லா மகத்துவத்தையு மிழக்கின்றான். ஆதலால், இதைவிட வேறு என்ன வைரி இருக்கின்றது. மூடன், நித்ரா சுகத்தை யிழப்பதற்காகவே

மணம்புரிகிறான். ஆனால், அவன் அது கெடுகிறதென்கிறதை யறிகிறதில்லை. மாயையால் அவன் துக்கத்தைச் சுகமென்றெண்ணி மோசம்போகிறான்.

(உக–ருரு) என்று சுகர்கூறிய சொற்களைக் கேட்ட வியாசர், அதிக துக்கத்தையடைந்து, கண்ணீர்சொரிந்து, வேர்வை யரும்பி, இனி நான் என் செய்யப்போகின்றேனென்று சோகமாயினர். சுகர் தந்தையைப்பார்த்து நகைத்துக் கூறுகின்றார். ஆ! இது என்ன ஆச்சரியம். மாயையின் வலி மிகக்கொடியது கொடியது. பண்டிதராகிய இவரும், மாயைக்குட்பட்டுத் துயரப்படுகின்றாரென்றெண்ணி, ஓ தந்தையே? நீவிர் பிரம சூத்திர முதலிய வேதாந்த சாத்திரங்களை யியற்றினவர், எல்லா முணர்ந்தவர். உம்மிடத்தில் இக்கொடிய மாயையானது எப்படிவசிக்கிறதோ அறியேன். இதை யோசிக்குங்கால் அது கொடிதென்பது கொல்லாமலே யமையும். பண்டிதராகிய உம்மைக்கூட மோகிக்கச்செய்கிற தல்லவா? நீர் வேதங்களையும் வரையறுத்தவர். புராணங்களையும் பராதத்தையுமியற்றினவர், நீர் இப்படிப்பட்ட மோகத்தை யடைகிறீர். பிரம விஷ்ணுருத்திராதிகளும் அந்த மாயைக்கு வசப்படுவாராயின் ஏனையரைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ, மூன்று லகத்திலும் மாயைக் குட்படாத மேதாவியர் எவரிருக்கின்றனர். ஆகையால், மாயையின் வலிவு இவ்வளவென்று சொல்லவியலுமா. அதனது சௌரியம் எத்தகையதோ? இது தேவியினால் எப்படி உற்பத்தி செய்யப்பட்டதோ? அது மூன்றுலகத்தையும் எப்படி மோகிக்கச் செய்கின்றதோ? யானறியேன். சர்வஜ்ஞரான ஈஸ்வரனும் இதை மாற்றாமலிருக்கின்றனரே ஆகையால் அந்த மாயையை யாள்கின்ற தேவியை யான் சரணமடைகின்றேன். அவள் எனக்குத் தக்க ஞானோபசேத்தைச் செய்தருளுவன். இராணிகர் வியாசரை விஷ்ணு அம்சமாகக் கூறுகின்றார். இவரும் மாயா சமுத்திரத்தில், மூழ்கிப்போன வோடத்தையுடைய வணிகன் போல மூழ்கித் தத்தளிக்கின்றனரே? கண்களில் பாமரசனங்களைப் போல தாரை தாரையாய் நீரைச் சொரிகின்றனரே? அந்தோ? இவர் கற்றுணர்ந்த அறிவால் மாயையை வெல்ல சாத்யப்படவில்லையே? இதன் வன்மையே வன்மை. இவர்யார்? யாமார்? நம்மைப்பற்றி இத்தகைய ப்ரமத்தையடைவானேன். பஞ்சபூதங்களா லாக்கப்பட்டதே கத்தில், தகப்பனென்றும், பிள்ளைரென்று முண்டாகும்படியான பாசம் மாயையினாலன்றோ? இந்தமாயை மிகவலிவானதே. மகான்களையு மோகிக்கச் செய்கிறதே. அந்தோ? இவர் இந்த தேகமாயைக்கு வசப்பட்டு வெட்கமின்றி யழுகின்றனரே? என்றிவ்வாறு சுகர் மனதில் ஆலோசித்துக் கொண்டு, எல்லாவற்றிற்குங் காரணையாயும். இந்திராதி

தேவர்களுக்கும், பிரமாதிகளுக்கும், மஹேஸ்வரி யாயிருக்கின்ற அம்பிகையை நன்றாய்த் தியானித்துத் துயரக்கடலில் மூழ்கிக் கரைகாணாது திகைத்துக் கொண்டிருக்குந் தந்தையைப் பார்த்து, விவேக ஞானத்தோடு கூடிய வசனத்தைக் கூறத் தொடங்கினர்.

(உசு-சுஉ) ஓ பிதாவே! நீர் அறிவிலிகளுக்கு அறிவைவிளக்கும் போதகாசிரிய ரல்லவா? அத்தகைய நீர், துயரப்படுவானேன். நீர்படுந் துயரம் ஒன்று மறியாத பிராகிருதருக் குண்டாகுந் துயரம் போலிருக்கின்றதே? யா னிந்த சன்மத்தி லுமக்குப் புத்திரனாகப் பிறந்தேன். இதற்கு முந்திய சன்னத்தில் எவருக்குப் புத்திரனோ அறியேன். நீர்யார், யான் யார், பரமாத்மாவினால் இத்தகைய பிரமையெல்லாங் கற்பனைப்பட்டு வருகின்றது. இனியாவது, மனதைத் தைரியப்படுத்திக் கொண்டு விழித்துப்பாரும். வீணான் விஷயத்தில் துயரப்படும்படி மனதை விடோதேயும். இவையெல்லாம் மாயையின் கூற்றெனத் தெளிந்து துயரத்தை விட்டொழிப்பீராக. ஒருவனுக்குப் பசியுண்டாகுமாயின். அதற்கேற்ற ஆகாரத்தை யுட்கொண்டாற் றீருமேயன்றிப் புத்திரனைப் பார்ப்பதாற் றீருமா? தாகமெடுக்குங்கால் சலபானஞ் செய்தாற் றீருமே யன்றிப் புத்திரனைப் பார்ப்பதினாற் றீருமா. மூக்கு, வாசனையினால் சுகிக்கின்றது. செவி, இனியவோசையினால் சுகிக்கின்றது. ஸ்திரீசுகம், ஸ்திரீயினாலேயே யுண்டாக வேண்டும். யானோ பிள்ளை, என்னால் என்ன சுக முண்டாகும். நா னென் செய்வேன். அரிச்சந்திரன் என்னும் சக்கரவர்த்தி, தான் செய்யத் தொடங்கிய வேள்விக்கு, அஜீகர்த்தர் என்பவர் தன்புத்திரனை யாகபகவாகத்தரளான திரவியத்துக்கு விற்றுவிட்டனர். ஆதலால், சுகங்களுக்கெல்லாஞ் சாதனமாயிருப்பது செல்வம். செல்வத்திற்றான் சுகமிருக்கின்றது.

(சுங-சுஎ) அப்படி உமக்குச் சுகம்வேண்டுமாயின் பொருளைச் சம்பாதியும், யானோ புத்திரன். என்னாலெப்படி சுகமுண்டாகும். ஓ தந்தையே! நீர் சிறந்த ஞானியல்லவா? எனக்கு நல்ல ஞான முண்டாகும்படிச் செய்யும். இப்போது நீர் உபதேசிப்பது மீண்டு மெனக்குக் கர்ப்பவாச முண்டாகாமைக்கேயாகவேண்டும். கர்மபூமியான இவ்வுலகில் மானுடசனனமெடுப்பது அருமையினுமருமை. அதிலும் பிராமணசன்ம மெடுப்பது மிக அரிது. அதிலும் உத்தமகுலத்தி லுதிப்பது அதனினுமரிது. அதிலும் எனக்கு மீண்டுங் கர்ப்பவாச முண்டாகமலிருக்க வேண்டுமென்கிற நிச்சய புத்தியுண்டானது எவ்வளவு அரிதானதோ, அதை நீரே அறிந்து கொள்ளும். நான் கட்டுண்டவ னானேனென்கிற புத்தியானது என்னைவிட்டுச் சிறிது

மகலவில்லை. என்னைப்பற்றிய மாயையானது, சன்ம சன்மாந்திரங்களில் அளவிறந்த துன்பங்களை யனுபவிக்கச் செய்து, கிழத்தன்மையை யடைந்து, இப்போது என்னைவிட்டு விலகிப் போயிற்று. என்று மீண்டுங் கூறக்கேட்ட வியாசமுனிவர், இவன் நல்ல பரிபாகியாகுயும், சந்நியாச ஆச்சிரமத்திலேயே அதிக ஊக்கமுடையவனாயு மிருக்கின்றான். இனி இவனுக் கிரண்டாவது ஆச்சிரமத்தைப் பற்றி விசேடமாய்க் கூறுவதிற் பயனில்லையென நினைத்து சுகரைப்பார்த்துக் கூறுகின்றார்.

(சுள-சுள) புத்திரனே? யான் பாகவதமென்கிற சுருக்கமான புராணமொன் றியற்றியிருக்கின்றேன். அது, வேத சம்மந்தமானது. பன்னிரண்டு ஸ்கந்தங்களோடு கூடியது. ஸர்க்கம், பிரதி ஸர்க்கம், வம்சம், மன்வந்தரம், வம்சானு சரிதம் என்று கூறப்படும் ஐந்து லஷணங்களோடு கூடியது. எல்லாப் புராணங்கட்கும் மகுடமாய் விளங்கத் தக்கது. இதைக் கேட்டமாத்திரத்தில் சதசத்தாகிய ஆத்மவிசாரஞ் செய்யும் நல்லறிவு வுண்டாகும். அதை நீ இப்போது படிக்கத்தொடங்கு வாயாக. ஓர் காலத்தில், விஷ்ணுமூர்த்தி அரசிலையின் மீது பால ரூபத்தோடு படுத்துக்கொண்டு அடியில் வருமாறு ஆலோசிக்கத் தொடங்கினர். யான், யாதுகாரணம்பற்றி சிதாத்துமாவினால் பாலரூபனா யிதிலடைக்கப்பட்டேன். இந்த வுலகத்தை எந்த கருவியினால் எவ்விதமா யறிகிறேன். என்றீவ்வாறு ஆலோசித்துக் கொண்டிருக்க, அவரது சந்தேகம் நிவிர்த்தியாமாறு அம்பிகை எல்லாப் பொருளும் அடங்கியிருக்கிற ஒரு பாதி சுலோகத்தைக் கூறினள், காணப்படும் இவ்வுலகமெல்லாம் யானே, என்னைத்தவிர அனாதியானது வேறொன்று மில்லை என்பது அதிலுள்ள பொருள். அந்த சுலோகத்தைக் கேட்டு விஷ்ணு, இவ்வரிய பொருளோடு கூடிய சத்தியமானசொல் யாரால் கூறப்பட்டது, பெண்ணால் கூறப்பட்டதா? புருடனால் கூறப்பட்டதா? நபும்ஸகனால் கூறப்பட்டதா? இதனை எப்படி யறியமுடியும். என்று ஏக்கமுற்றிருக்குந் தருணத்தில், இந்தப் பாகவதச் செய்யுளாகிய அந்த பாதிச்செய்யுள், அவருடைய ஹ்ருதய கமலத்திற் றரிக்கப்பட்டு, அடிக்கடி உச்சரித்துக்கொண்டே வடபத்ரத்தில் சயனித்துக்கொண் டிதன் பொருளை விசாரித்துக் கொண்டிருந்தனர். அப்போது அம்பிகை சாந்த சொரூபியாயும் சங்கு சக்கர கதை பத்மம் என்கிற நான்காயுதங்களை நான்கு புஜங்களில் தரித்தவளாயும், திவ்ய வஸ்திராபரணா லங்கிருதையாயும், தனக்கு சசமானமான வசின்னியாதி சகிகளால் சூழப்பட்டவளாயும், அளவற்ற வொளியை யுடையவளாயும், விஷ்ணுவி னெதிரில் நின்று, மந்தகாசஞ் செய்தனள்.

இவளைக் கண்ட மகாலஷ்மியும், தேவியென் றுணராது, புன்னகைசெய்து மலர்ந்த முகமுடையவளாயினள். அவ்வாறே, விஷ்ணுமூர்த்தியு முணராது அற்புத வேஷத்துடன் ஆதாரமில்லாமல் பாற்கடலில் நின்று கொண் டிருக்கும் அம்பிகையைப் பார்த்து அதிக ஆச்சரியமடைந்து சிரித்தனர். மற்றொரு கணத்துக்குள், அந்த அம்பிகையின் பக்கங்களில் ரதி, புத்தி, பூதி, கீர்த்தி, ஸ்மிருதி, திருதி, ஸ்ரத்தை, மேதை, ஸ்வதை, ஸவா; நித்திரை, தயை, துஷ்டி, புஷ்டி, ஷமை, வச்சை, ஜ்ரும்பை, தந்திரை முதலிய சக்திகள் நானாவிதமான ஆயுதங்களைத் தாங்கிக்கொண்டும். அநேகவிதமான ஆபரணங்களை அலங்கரித்துக் கொண்டும், சாதி முதலிய புஷ்பமாலை, முத்துமாலை முதலிய மாலைகளைத் தரித்துக் கொண்டும், அந்த பாற்கடலிலேயே தோன்றினர். இவைகளையெல்லாங் கண்ட விஷ்ணு அளவிறந்த ஆச்சரியமடைந்து இதனை யாலோசிக்கலாயினர். இது என்ன மாயை, கண்டவர்களுக் கெல்லாம் வியப்பைத் தருகின்றது. இந்தப் பெண்கள் எப்படி உண்டானார்கள். இப் பரிவாரங்களோடு நிற்கின்றவள் மாதாவா ? அல்லது மாயையா ? இதனுண்மை யறிய முடியவில்லையே. யாதுகாரணம்பற்றி இங்கு இவர்கள் காணப்பட்டனர். இது விஷயத்தில் என்னாற் சொல்லத்தக்கது என்ன விருக்கிறது. இவர்களிங்கிருக்க வேண்டியவரோ, போகவேண்டியவரோ, ஒன்றுந் தெரியவில்லை. நாம் சிறுவனைப்போல் மௌனமாயிருத்தலே நலமென் றிருந்தனர்.

முதல் ஸ்கந்தம் பதினைந்தாம் அத்தியாயம்

சுகர் சம்சார நித்தாதிகதனம்.

முற்றிற்று.

ஆஉ அத்தியாயம் கரு - க்கு ஸ்லோகம் (அசுO)

முதல் ஸ்கந்தம் பதினாறாம் அத்தியாயம்

தேவீபாகவதோத்பத்தி ஸ்வரூபகதனம்

(க-கங) வியாசர் கூறுகின்றார். மகாலஷிமி, விஷ்ணுமூர்த்தி வடபத்திரத்தில் * சயனரூபியாய்ப் புன்னகையோடு கூடியிருப்பதைப் பார்த்து, நீர் என்ன சிரித்துக்கொண் டிருக்கின்றீர். மகாசக்தியுடைய மாயாப் பிரபாவத்தினால், இங்கேதோன்றிய தேவியை, தேவியென் றுணராது நகையாடுகின்றீர். அப்பராசத்தி, இவ்வுலகம் லயமடைந்து சிருட்டியாகுந் தோறும் சகுணையாய் (வடிவ முள்ளவளாய்) ஆவிர்ப் பவிக்கின்றாள். யான் அவளுடைய சகுணை, என்னை, சாத்வீக சக்தி

* சயனரூபியாய் - நித்திரை ரூபியாய்

அம்சமா யறிந்து கொள்வாய். உன் நாபிக் கமலத்தில் பிரமனுதிக்கப் போகின்றான். அவன் தவம்புரிந்து ஒப்பில்லாத ராஜஸ சக்தியோடு கூடி, செந்நிறமுடையவனாய் பூவுலகத்தைப் படைப்பான். அப்பிரமன், தனது புத்திவிசேஷத்தால் பஞ்சபூத சம்மந்தமான உருவங்களையும், இந்திரியங்களையும், அறி கருவிகளான மனமுதலியவைகளையும், முன் வினைக்குத் தக்கவாறு கூட்டிமுடித்தலாகிய உற்பத்தியைச் செய்துவருவா னாதலால், சிருட்டிகருத்தா வென்று கூறப்படுவான். நீரோ, அவனால் படைக்கப்பட்ட இவ்வுலகத்தைக் காக்கின்றவ ராவீராதலால், காவற்கடவுளெனப் பெயர்பெறுவீர். அந்தப் பிரமனுடைய புருவநடு விலிருந்து, உக்கிரத்தோடு கூடிய * உருத்திரமூர்த்தி தோன்றி, கோரமான தவம்புரிந்து, தாமச சக்தியுக்தராய், கற்பாந்த காலத்தில் எல்லாவற்றையுஞ் சங்கரிக்கும் சம்ஹார கர்த்தராவர். ஓ விண்டுவே? பிரமனுக்கும், உருத்திரமூர்த்திக்கு முரிய சக்திகளைக் கூறினேன். உனக்குச் சக்தியாரெனில். சாத்வீக சக்தியாகிய யானே யென்றறிவீர். யான், எப்போதும் இந்த சாத்வீக வுருவத் தோடுமே உன்சமீபத்தில் வசிப்பேன். அந்த சமீபத்தானம் எதுவென்றால், உன்னுடைய ஹ்ருதயமாகும். என்று கூற, விஷ்ணுமூர்த்தி, அதனைக்கேட்டு ஓ தேவி! யான் முன்னர் நல்ல பொருளமைந்த பாதி சுலோகமொன்று கூறக்கேட்டேன். அது யாரால் கூறப்பட்டது. அதை எனக்குச் சொல்லவேண்டும், அதில் பெருஞ் சந்தேகமிருக்கின்றது. தனமில்லாதவன், எப்படி சர்வகாலமுந் தனத்தையே சிந்தித்துக் கொண்டிருப்பானோ அப்படியே யானும் அடிக்கடி சிந்தித்துக்கொண் டிருக்கிறேன். என்று கூறிய விஷ்ணுவின் வசனத்தைக் கேட்ட மகாலஷ்மி சொரூபியாய் வந்த தேவி, நகைத்து அதிக பிரேமையோடு கூறுகின்றாள்.

(கசு-ஙக) ஓ விஷ்ணுமூர்த்தியே? என் சொல்லைக் கேட்பாயாக. என்னை, நீ இப்போதுகண்ட சகுணசொரூபமாக அறிந்தனையே யன்றி, நிர்க்குணையென யறிந்தாயில்லை. அறிந்திருப்பையாயின், அந்த சுலோகம் யாரால் சொல்லப்பட்டதென்று கேட்க மாட்டாய். அது நிற்க. பகவதியினால் சொல்லப்பட்டது பாகவத சாரம். இதிற்சந்தேகம் வேண்டாம். அதில் பாகவதத்தின் தாத்பரிய விசேஷங்கள் ஸ்பஷ்டப்படுத்தி யிருக்கிறது. ஆகையால் அது. வேதசாரமான பாகவதமென்றே அறிந்து கொள்ளலாம். உனக்கு தேவியின் கிருபை மிகவும் விசேடமா யிருந்தபடியினாற் பாகவதத்தின் ரகசியாமிசத்தைக் கூறினாள். அதனை நீர் மறவாமல் மனத்திலிருத்தி எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கவேண்டும், இது, எல்லா சாஸ்திரங்களிலும் ரகசியமான அமிசம். இதை விட சிறந்த சாத்திரங்கள்

மூவுலகினுமில்லை. என்றுகூறிய வசனத்தைக் கேட்ட விஷ்ணு, பாகவத சாரமான அம் மந்திரத்தை அநுதினந் தியானித்துவந்தனர். இவ்வாறு சிலகாலஞ்சென்ற பிறகு, அந்த விஷ்ணுவினுடைய நாபிக்கமலத்தி லுற்பவித்த பிரமன் மதுகைடப ருடைய பீதியினால் அவரைச் சரணமடைய, உடனே மதுகைடப ரோடு போர்புரிந்து, சங்கரித்து விட்டுப், பின்னர் பாகவதசார மந்திரமாகிய பாதி சுலோகத்தைச் செபித்தனர். அவ்வாறு செபித்துக் கொண்டிருக்கும் விஷ்ணுவை, பிரமன் பார்த்து, நீர் என்னசெபஞ் செய்கின்றீர். உம்மைவிட மேலான தெய்வ மொன்றிருக்கிறதா! நீர் செபிப்பதால், உம்மைவிடச் சிறந்ததெய்வ மிருப்பதென்பது நிச்சயம். ஆம், அப்படியே சிறந்ததெய்வ மொன்றிருக்கின்றது, என்னிடத்திலும் உன்னிடத்திலுந் தொழில்களை யியற்றுஞ் சக்தியொன்றிருக்கிறதல்லவா? அது, இத்தன்மைத்தென விசாரித்துப் பார்ப்பாய். அத்தகைய சிவசக்தி சொரூபமாய் விளங்கும் அம்பிகையே, நம்மிருவருக்கும் மேலான தெய்வம். அத்தேவியை ஆதாரமாக வைத்துக்கொண் டிருப்பதனாற்றான், இப்பூவுலகமும் சலமயமான சமுத்திரத்தில் விளங்கிக் கொண்டிருக்கிறது. அவளது பெருமை இப்படிப்பட்டதென்று ஒருவராலுங் கூறமுடியாது. அவள் தான், ஆதியந்த ரகிதமான மேலான தெய்வம். ஆவளாற்றான் தாவர ஜங்கமாத்மகமான இவ்வுலகம், படைக்கப்படுகிறது. அவளது கருணையினாற்றான், மானுடசன்ம மெடுத்தோர் முத்திபெறவேண்டும். அவள்தான், முத்திக் கதிஷ்டான தேவதை. பந்தத்தில் கட்டுண் டுழல்வதற்கும், அவள்தான் தாரகம். யாமும், இப்பிரபஞ்ச மனைத்தும், அவளது சிற்சத்தியாற் றோற்றப்பட்டவர்களே. இதி லையமொன்று மில்லை. இதனை, யதார்த்தமென் றுணர்வாயாக. அவ்வம்பிகை, என்னிடத்தில் கருணைகூர்ந்து பாகவத சாரமான அர்த்த சுலோகத்தை உபதேசித்தனள். அந்த சுலோகார்த்தமானது, துவாபர யுகாரம்பத்தில் விஸ்தாரமான பாகவதமாகப் போகின்றது. என்று கூறியவுடனே, பிரமன், அந்த பாகவதசார மந்திரத்தை அவரிடத்தி லுபதேசம் பெற்றனன். அவர் தன் புத்திரனாகிய நாரதருக்குபதேசித்தனர். நாரதர், என்னிடத்தில் கருணைவைத் துபதேசித்தனர். அவரது கிருபாபலத்தினால், துவாபரயுகாதியில் அந்த பாதி சுலோகார்த்தைப் பன்னிரண்டு ஸ்கந்தமாகச் செய்தேன். இதனை, நீ என்னிடம் உபதேசம் பெற்றுக்கொண்டு படிப்பாயாக.

(ஙஉ—ஙகூ) இது, பஞ்ச லக்ஷணத்தோடு கூடினதாயும், அம்பிகையின் லீலாவினோதாதி சரித்திரங்களடங்கினதாயும், தத்துவ ரகசியங்கள் நிறைந்ததாயும், எல்லாப் புராணங்களிலுஞ் சிறந்த தாயும்,

தருமசாத்திரத்துக் கொப்பானதாயும், வேதார்த்தப் பிரதிபாதகமாயும், விருத்திராசுர வத சரித்திரமுதலிய அனேக சரித்திரங்களடங்கியதாயும், பிரமவித்தைக்கு ஆதிகாரணமாயும், சம்சார சமுத்திரத்தைத் தாண்டிவைப்பதாயு மிருக்கின்றமையால், இதனை நீ, என்னிடம் உபதேசம் பெறுவாயாக. இதற்கு, நீ தான் யோக்யனானவன். இதை நீ, இடைவிடாமற் பாராயணஞ் செய்து வருவாயாக. இது பதினெண்ணாயிரஞ் சுலோக சங்கியயுடையது. அஞ்ஞானத்தை நசிக்கச் செய்வது. மேலான ஞானமென்னுஞ் சூரியனைப் பிரகாசிக்கச் செய்வது. சுகத்தையுஞ், செல்வத்தையும், ஆயுள் விருத்தியையுந் தாத்தக்கது. இதைப் படிப்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும். புத்திர பௌத்திர தனதானியாத சம்பத்தைத் தரத்தக்கது. இப்புராணசங்கிதை, உன்னுடன் எவர் படிக்கின்றாரோ அவர், எனக்குச் சீடனாவர். என் றிவ்வாறு இப்புராண சங்கிதையை, வியாசர் தனது புத்திரனாகிய சுகருக் குபதேசித்த பின்னர், ஓ முனிவர்களே? எனக்கு முபதேசித்தனர்.

(சு0-சுஅ) சுகர், இதனை உபதேசம் பெற்றநாள் தொடங்கி வியாசர் ஆசீர்மத்தில் பாராயணஞ்செய்து வருகின்றார். அதுமுதல் அச்சுகர், இதற்குப் புறம்பான கர்மமொன்றுஞ் செய்கிறதில்லை. தன் சுகத்தையும் நாடுகிறதில்லை. ஏகாந்தத்திலேயே யிருப்பர். அதிகமாக ஆகாரமுங்கொள்ளார். உபவாசத்திலேயே விருப்பம். அவரைப் பார்க்கும்போ தெல்லாங் கேவல ஞானநிஷ்டராகவே தோன்றுவர். தனக்கு வேண்டுமென் றொன்றையும் விரும்பார். யாவரையும் வேற்றுமையின்றிச் சமமாக நினைப்பர். எக்காலத்திலும் சிந்தா சக்தராகவேயிருப்பர். இவ்வாறு சுகமுனிவரிருப்பதைக் கண்ட வியாசர், ஓர் காலத்ல், அப்பா குழந்தாய்? நீ யாதுகாரணத்தால் சிந்தாகுலனாகவும், எங்கு போவோமென்று துவரிதப் பட்டுக் கொண்டிருக்கிறவனாகவும் காணப்படுகின்றாய். அன்றி, கடன்காரரால் பீடிக்கப்பட்ட நிர்த்தனனைப்போல், சர்வகாலமும் ஏக்கமுற்றவனாயு மிருக்கின்றாய். அத்தகைய வியாகுலம், யானிருக்கும் போது உனக்கெப்படி வந்தது. இனி விசனப்படுவது யொழித்து, இஷ்டப்படி வேண்டியசுகங்களை அநுபவிப்பாய், ஞான சாஸ்திரத்தை சாத்திரவிதிப்படி அநுஷ்டிப்பாய். மேலான ஞான வழியில் அறிவைச்செலுத்துவாய். என்னுடைய உபதேசத்தால் உனக்கு மன்மொடுக்கம் உண்டாகாமற் போனால் சனகமகாராஜனால் பரிபாலித்துவரும் மிதுலாபட்டினஞ் சென்று, அவரைக்கண்டு அவருடன் சிலகாலம் பழகிவருவையானால் அவர் உனது அஞ்ஞானத்தை யொருங்கே யொழித்துவிடுவர். அவர் சாமானி யமானவரல்லர். தர்மபுத்தியுடையவர். சத்யசந்தர் ஜிதேந்திரியர். அவரை

யாவரும் விதேகரென்று கூறுவர். அப்படிப்பட்ட மஹாத்மாவான சனகரை யடைந்து, உனது ஐயத்தை யெல்லாம் நிவிர்த் தித்திக் கொள்வாய். அவர் சீவன்முத்த திசையிலிருப்பவர். தெளிவான பிரமஞானமுடையவர். நல்ல சீலர். ராஜரிஷி, மிகவும் சாந்த குண முடையவர். போகத்தில் விருப்பத்தை யொழித்த யோகி,

(சுகூ–சுக) என்று கூறிய வியாசரது இதவார்த்தைகளைக் கேட்ட சுகர். ஓ பிதாவே! நீர் கூறிய சனக சக்கிரவத்தி, அதிகமான டம்பமுடையவ ரென்று என்மனத்திற் றோன்றுகின்றது. அவரை நீர் ஜீவன்முக்தரென்றும், விதேகரென்றும், தர்ம சாஸ்திரப் பிரவீண ரென்றுங் கூறியது, மலடி மைந்தன் கதைபோலிருக்கிறது. அவர் ராஜ்யத்தைப் பரிபாலித் துக்கொண் டிருக்கும்போதே விதேகரெனக் கூறிய விஷயத்தில், எனக்குச் சந்தேக முண்டாகின்றது. அப்படிப்பட்ட விதேகரான அரசனைம் பார்ப்பதற்கு எனக்கு அதிக விருப்ப முண்டாகிறது. சம்சாரத்தில் தாமரை யிலையி லிருக்கம் நீரைப்போ லெப்படி யிருக்கமுடியும், இதை யோசிக்குக்கால் சம்சயமுண்டாகின்றது. ஓ தந்தையே! மோஷமென்பது என்னை; அநுபவித்தும் அநுபவிக்காம லிருப்ப தெப்படி ? இந்திரியங்களுடைய தொழில்களை விலக்குவ தெப்படி, தாய், புத்திரன், மனைவி, உடன்பிறந்தார், வியபசாரி, இவர்களிற் பேதாபேதம் எப்படி யுண்டாகாமற்போகும். உண்டாகுமானால் முக்த லஷண மென்பது எப்படி ? கசப்பு, உவர்ப்பு, தித்திப்பு, புளிப்பு, காரம், முதலிய ரசவர்க்கங்களை நாவு அறியுமாயின் போகத்தை யநுபவிக்கிற தாகிறது. சீதம், உஷ்ணம், சுகம், துக்கம், இவை தோன்றாமலிருப்பது எப்போது ? முக்தனாக விருப்பது எப்படி ? முக்ததிசை யடைந்திருக்குங் காலத்தில் சத்ருவையும் மித்ருவையும் எப்படி யறிவது. சத்ருவானவன், நன்மையைச் செய்வான்போல் நடிப்பானாயின் அவனை எவ்வாற்றிவது ? விவகாரதிசையில் மிக வூக்கமில்லாதவனாயின் அதனையெவ்வா றறிந்து கொள்வன் ? சோரனையுந், தபசியையும் சமானமாக யெப்படி எண்ணுவன், சமானமான புத்தியுடையவனல்லவோ முக்தனாவன். ஆகையால், அரசரில், ஒருவனாவது சீவன் முத்தனாக விருப்பனென்றுயா னிதுவரையிற் கேட்டதில்லை. அன்றியும், கிருகஸ்தாச்சிரமத்தி லிருந்தவண்ணமே முக்தனாவா னென்கிற விஷயத்தில் மேன்மேலு மெனக்குச் சந்தேக முண்டாகிறது. ஒருவன் அரசனாக விருத்தே ஜீவன்முக்தனாக விருக்கின்றானென்று நீர் குறிப்பிட்டுக் கூறினமையால் அச் சந்தேகத்தை யொழித்துக் கொள்ள அவ்வரசனிருக்கும் மிதுலாநகரம் செல்கின்றேன்.

முதல் ஸ்கந்தம் பதினாறாம் அத்தியாயம்

தேவீபாகவதேசத்பத்தி ஸ்வரூபகதனம்

முற்றிற்று

ஆஉ அத்தியாயம் கசு - க்கு ஸ்லோகம் (கூஉக)

முதல் ஸ்கந்தம் பதினேழாம் அத்தியாயம்

*** மிதுலாம்பிரதி சுக கமனம்**

(க-ரு) சூதர் கூறுகின்றார். இவ்வாறு சுகமுனிவர், தன்றந்தையை நமஸ்காரஞ் செய்து கைகூப்பி நின்று யான் மிதுலைக்குப் போக விருப்பமுடையவனா யிருக்கின்றேன். எனறந்தையே? சனக சக்ரவர்த்தி, சனங்களைத் தண்டிக்காமலே நீதி வழியினிறுத்தி ஆண்டுவருகின்றானென்று கூறினீர். எந்த ராஜ்யத்தில் பிரஜைகளிடத்தில் தண்டத்தை அரசன் செலுத்தாம லிருக்கின்றானோ, அந்த ராஜ்யத்தில் பிரஜைகள் நீதிமார்க்கத்தில் சரியாகச் செல்லமாட்டார்கள். மநுமுதலிய தருமசாஸ்திரங்களில் அரசன் தன்றேயத்தில் தருமம் நிலைக்கவேண்டுமென் றெண்ணுவானாயின், அது, நிலைப்பதற்குத் தண்டமே முதற்காரணமெனக் கூறப்பட்டிருக்கிறதல்லவா? இங்ஙனமிருக்க, மிதுலா நகரத்தில் தண்டமில்லாமற் பிரஜைகள் நீதியில் நிற்கின்றார்க ளென்பதை யோசிக்குங்கால், இதோ இருக்கின்ற எனதுதாய். மலடியெனக் கூறுங்கதைபோ லிருக்கின்றது. ஆகையால் இவ்வற்புதத்தைப் பார்க்க விருப்பமுடையவனா யிருக்கின்றேன். விடைதரவேண்டும். எவ் விதத்திலாகிலும் அங்கு செல்லவே வேண்டுமெனக் கூறினர்.

(சு□கஅ) வியாசர். புத்திரனைக்கட்டித் தழிவிக்கொண்டு ஓ குழந்தாய்? உனக்கு மங்களம் உண்டாகுக, நீ சிரஞ்சிவியா யிருக்கக்கடவாய் எனக் குறுதியான வார்த்தை யொன்று சொல்லிவிட்டு, உன்னிஷ்டம்போற் போய்வருவாய். அஃதாவது நீ போய்வரும்பேர்து, என்னாச்சிரமம்வந்து சேரவேண்டும். இதைவிட்டு வேறோரிடமுஞ் செல்லக்கூடாது. இதுதா னெனக்குச் சொல்ல வேண்டிய உறுதிமொழி. இதுகாறும் உனது முகத்தைப் பார்த்துக்கொண்டே சந்தோஷமாய்க் காலங்கழித்து வந்தேன். இது முதல் உன்னைக்காணுமளவும், உன் முகம் பாராமையாகிய துக்க சாகரத்தில் மூழ்கிக்கிடப்பேன். என்பிராணன் நீ தான். நீ இங்கிருந்து சனகனிடஞ்சென்று சந்தேகங்களை நிவிர்த்தித்துக்கொண்டு, இங்கு வந்துசேர்ந்து வேதாத்தியயனஞ் செய்துகொண்டே காலத்தைச் சுகமாய்க் கழிப்பா

யென்று கூறிய வியாசமுனிவரை, சுகமுனிவர், பிரதக்ஷண நமஸ்காரஞ்செய்து, வில்லினின்றும் வெளிப்பட்ட பாணம்போல், அதிவேகமாய் வெளிப்பட்டு, அநேக தேசங்கள், நதிகள், ஆரணியங்கள், புண்யக்ஷேத்திரங்கள், தபோவனங்கள் ஆகிய இவற்றைக் கடந்து அங்கங்கு தவம்புரிகின்றவர்களையும், யாகஞ் செய்கின்றவர்களையும், யோகிகளையும், வானப் பிரஸ்தர்களையும், பாசுபதர்களையும், சாக்தேயர்களையும் தரிசித்துக்கொண்டு, இரண்டு வருடத்தில் மேருவையும், ஒருவருடத்தில் ஹிமாசலத்தையுத் தாண்டி, சர்வசம்பத்துக்க ணிறைந்துள்ளதும், சதாசார நிரதர்களான அந்தணர்களால் குழப்பட்டதுமான, மிதுலாநகரத்தை யடைந்து சுற்றிப்பார்த்து வருந் தருணத்தில், அங்கு ஒருகாவலாளி, அவரைத் தடுத்து, நீயார்? இங்கு ஏன் வந்தாய்? உனக் கிங்கென்ன காரியம்? சொல்லென்று கேட்க, பதிலொன்றுங் கூறாது மௌனமாயிருந்தனர்.

(கக-உக) இருக்கவே, அவன், நகர வாசற்படியிற் றள்ளிக்கொண்டுவந்து விட, அவ்வாசற்படியிலேயே கட்டையைப் போல் நின்று நகைத்துக்கொண்டு பேசாதிருந்தனர். காவலாளி? நீ என்ன ஊமையா? எவ்வளவு கேட்டும் பதிலொன்றும் பேசுவதில்லை? பேசாத நீ இங்கு யாதுகாரணம்பற்றி வந்தனை? எவ்வளவு மூடனானாலும் ஒரு காரியமின்றி ஓரிடமுஞ் செல்லான்? இது நிற்க. யாவராயினும், இந்நகரத்தில் பிரவேசிக்க வேண்டுமானால், அரசனுத்தரவு வேண்டும். ஊர், பெயர், தெரியாத நவீனன் (புதுமையானவன்) இந் நகரத்தில் பிரவேசிக்கக்கூடாது. உன் முகத்தைப் பார்த்தால் பரமதேஜஸ்ஜொலித்துக் கொண்டிருக்கின்றது. வேதவித்தகரைப் போலுங் காணப்படுகின்றது. ஆகலான், இனியாவது குலம், பெயர், ஊர், வந்தகாரியம், ஆகிய இவையிற்றைச் சொல்லிவிட்டு உன்னிஷ்டம்போல் நகரத்துக்குட் செல்லுவா யென்றனன்.

(உஉ-உகூ) சுகர், அவனைப்பார்த்து, ஓ துவாரபாலகனே! யான் எந்தகாரியத்தை யுத்தேசித்து இவ்விடம் வந்தேனோ, அந்த காரியம் உன் வார்த்தையினால் கைகூடிவிட்டது. நகரத்துட் பிரவேசிப்பதே துர்லபமா யிருக்கும் பொழுது, என் காரியத்தைச் சொல்வதினாற் பயனென்னை? என்னறிவின்மையால் அந்தோ? இரண்டுமலைகளை வெகு கஷ்டப்பட்டுத் தாண்டி வழிதெரியாமற் றிரிந்தலைந்து வருத்தத்துடன் அரசனைப் பார்க்கவேண்டுமென்னும் அவாவினா லிங்கு வந்தேன், வந்த காரியம் வீணாயிற்று. என் தகப்பனார் என்னை வஞ்சித்தனர். பிறரைப்பழிப்பதிற் பயனென்னை? யான் எவ்வளவு திரியவேண்டுமோ, அவ்வளவுந் திருந்தாயிற்று. ஓரிடத்திலும்

இவ்வளவு கடுமையான சொல்லைக் கேட்டறியேன். தனத்தில் விருப்பமுடையவனுக்கு, உலகத்தைச் சுற்றித்திரிவதும், ஒவ்வோரிடத்திலும் இச்சகம்பேசிப் பொருளைத் தேடுவதும் இயற்கை. எவற்றிலும் ஆசையற்றவனுக்கு சுகந் தானாகவே யமையுமல்லவா? அவன் வீணாய்க் கண்டவிடங்களிற்றிரிவது அறிவின்மையன்றோ, எனக்கோ பொருள் தேடவேண்டுமென்றாவது, அதனால் விஷயசுகத்தை யனுபவிக்கவேண்டு மென்றாவது, விருப்ப மிருக்கின்றதோ வெனின்? ஒரு சிறிதுமில்லை. அப்படியிருக்க நான் அரசனைக் காணவேண்டுமென்று பேரவாகொண்டு தேசம்விட்டுத் தேசம்வந்து பயனற்றுப் போயினேனே? இதைவிட அறிவின்மையான செய்கை என்ன விருக்கின்றது. மேருபர்வதமெங்கே? மிதுலைநகரமெங்கே? இதற்கும் அதற்கும் எவ்வளவு தூர மிருக்கின்றது. இவ்வளவு தூரமுங் காலால் நடந்து வந்தேனே? அப்படிவந்தும் என்ன பலன்கண்டேன். யான் மிகவும் தெய்வத்தினால் வஞ்சிக்கப்பட்டவ னானேன். நன்மையாயினுந், தீமையாயினும் வருவது வந்தேதீரும். பிராரத்தம் அவசியம் அனுபவிக்க வருமென்பது நிச்சயம். புருஷப் பிரயத்தனமும், அதற் கொத்ததாகவே யிருக்கும். இவ்விடத்தில் தீர்த்தமிருக்கின்றதா? வேத மிருக்கின்றதா, ஒன்று மில்லையோ. இவ்வலைச்சலில் எனக்குச் சிரமந்தான் பிரயோஜனம். இது பிராரத்தந்தானே? இந்நகரத் தரசனோ தன்னகரத்தில் ஒருவரும் பிரவேசிக்கக்கூடாதென்று கட்டளையிட் டிருக்கின்றான். என்று பலவாறாய் மனவருத்தத்துடன் சொல்லிவிட்டு மௌனமுற் றிருந்தனர்.

(௩0-௩௫) இதைக்கெட்ட துவாரபாலகன், இவரைச் சிறந்த ஞானியென்றறிந்து, அதிக விநயத்தோடு ஓ பிராமனோத்தமரே? இனி உம்மிடத்தில் என்னதிசாரத்தைச் செலுத்துவேனாயின் என்குலம் நாசமாய்விடும். ஆகலான், நீர் எங்கு செல்லவேண்டுமோ அங்கு செல்லலாம். உமது காரியத்துக்கு என்னால் ஒருதடையும் வேண்டாம். இது வரையில், என்னாலுண்டான அபராதத்தைப் பொறுத்தருளல் வேண்டும். உம்மைப்போன்ற மகான்களுக்குப் பொறுமையன்றோ சிறந்த பூஷணம் என்றுகூற, அவனைப் பார்த்து ஓ துவாரபாலகனே? உன்பேரில் சினங்கொள்ளக் காரணமென்னை? நீ பராதீனன்றானே. சேவகனா யிருக்கிறவனுக்கு, பிரபுவின் உத்திரவின்படி காரியத்தைச் சரிவர நடத்த வேண்டியது நீதிதானே. இவ்விஷயத்தில், அரசனைப் பழிப்பதும் நீதியன்று. சோரன பகைவன் முதலிய துஷ்டர்கள் நகரத்தில் பிரவேசிக்கச் செய்யாமற் றடுப்பதே புத்திமான்க ளிலக்கணம். பிறராளுகைக் குட்பட்ட பிரதேசத்தில் சுலபமாய்ப் பிரவேசிக்க எண்ணங் கொண்டது அறிவின்மை யாதலால், இவ்விஷயத்தில்

என்னிடத்திற்றான் குற்ற மிருக்கின்றது. என்று அவனுக்குச் சமாதானங் கூறினார்.

(ஙசு-ருரு) அவன் ஓ அந்தனரே? சுகமெது. துக்கமெது? சத்ரு ஆர்? மித்ரு ஆர்? சுபத்தை யபேஷிக்கிறவனாலே செய்யத் தக்கது என்ன? இவற்றை நன்றாய்ச் சொல்லவேண்டுமென்று கேட்க. சுகர், அவனைப் பார்த்து எல்லாவுலகத்திலும் இரண்டுவிதமிருக்கிறது. அதிலிருக்கும் பிரஜைகளும் *அராகி ✧விராகி என இரண்டுவிதமா யிருக்கின்றனர். அவர்களுடைய சித்தமும் இரண்டுவிதம். இவற்றுள் விராகி என்பவர் அறிந்தவர், அறியாதவர், அறிந்தும் அறியாதவர் என மூன்று விதமாயிரும்பர். ராகி என்பவர், மூர்க்கர் சதுரர் என இரண்டுவிதமா யிருப்பர். அந்த சதுர்ப்பாடு சாஸ்திர விசாரத்தால் வருவதாகிய சாமர்த்தியம் என இரண்டுவிதம். அந்தபுத்தி, யுக்தம், அயுக்தமென இரண்டுவிதம். என்று கூறிவரும்பொழுது துவாரபாலகன், அவரைப்பார்த்து ஓ பிராஹ்மணோத்தமரே; நான் அர்த்தஜ ஞானமுடையவ னல்லன். ஆகையால் நீரிப்போது கூறிய சொற்களுக்குப் பொருள் நன்றாய் விளங்கவில்லை. ஆகலான், சற்று தயவுசெய்து விளங்கச்சொல்ல வேண்டு மென்று விண்ணப்பஞ் செய்தனன். சுகர், சேவகனே? எவனுக்கு சம்சாரத்தில் விருப்ப மிருக்கின்றதோ அவன் ராகி எனப்படுவன். அவன்றான் எல்லாவற்றிலு மோகமடைகின்ற மூர்க்கன். அவனுக்குச் சுக துக்கங்கள் அநேக விதங்களாக விருக்கின்றன. என்னவென்றால், தனம், பத்திரன், செல்வம், மனைவி மானம், விஜயம் முதலியவற்றையுங், காரிய சாதனத்தையும் பெறுவதினாற் சுகமும், அதைப்பெறாததனாற் றுக்கமும், நிமிஷந்தோறும் மாறி மாறி வந்துகொண்டே யிருக்கின்றன அவனது செய்கை யெல்லாம் சுகத்தை யடைய வேண்டுமென்கிற விருப்பதை யடைந்திருக்கிறது. அச் செய்கைக்கு மாறான செய்கைகளை யியற்றித் தடைபடுத்துகிறவன் சத்ருவாகின்றான். அச்செய்கைக்குச் சாதகனாயிருக்கிறவன் மித்ரனாகிறான். விராகி, விஷய சுகங்க ளொன்றிலும் ஆசை வையாமல் ஏகாந்தத்தில் வேதாந்த விசாரஞ்செய்து. ஆத்மசுகத்தை யநுபவித்துக்கொடிருப்பன். அவன்றான் எந்த விஷயத்திலு மோகமடையாத பண்டிதன். அவனுக்கு இந்த சம்சார வாழ்க்கையின் சுகமெல்லாந் துக்ககரமாகவே யிருக்கும். ஆயினும் அப்படி ஆத்மசுகத்தை நாடுகின்றவனுக்குக் காமக்குரோத லோப மதமாச்சரிய முதலிய கொடிய சத்ருக்கள் பலவுண்டு. இப்படிப்பட்ட சத்ருக்களால் பீடிக்கப் பட்டவனுக்கு பந்து, சந்தோஷ

* அராகி - விருப்பம் ✧ விராகி - வெறுப்பு

மென்பவனொருவனே, அவனைத் தவிர வேறொருவரு மூன்றுலகத்திலு மில்லை. இவ்வாறு கூறிய சுகருடைய வசனத்தைக் கேட்ட துவாரபாலகன், அவவை ஞானியென் றெண்ணி, பட்டணத்தில் சுவேச்சையாய்ச் சஞ்சரிக்கும்படிப் போகவிட்டனன். பின் இரண்டாவது சூரியனைப்போலும் பிரகாசிக்கின்ற சுகமுனிவர் உள்ளே சென்று அந்நகரம் அநேக சனங்களால் சூழப்பட்டிப்பதையும், கடைகளாலலங்கரிக்கப் பட்டிருப்பதையும் மூன்றுலகத்திலு முள்ள எல்லாப்பொருளும் நிறைந்திருப்பதையுங்கண்டு அப்புறஞ்செல்ல, அங்கு வியாபாரிகள் கிரய விக்ரய வியாபார விஷயமாய்ப் பேசிக் கொண்டிருப்பதையும், சனங்கள் ராகத்துவேஷ காமக்குரோத லோபமோஹாதிகளால் பரஸ்பரம் போராடிக் கொண் டிருப்பதையும், பண்டிதர்கள் சாஸ்திரவாதஞ் செய்துகொண் டிருப்பதையும், பார்த்துக் கொண்டே உள்ளே பிரவேசிப்பதற்குப் பிரயத்தனப் படுங்கால், அவ்விடத்திலும், முன்போல ஓர் துவாரபாலகனால் தடுக்கப்பட்டு, அவ்விடத்திலேயே ஓர் விருஷ நிழலில் உட்கார்ந்து கொண்டு பிரஹ்மவிசாரஞ் செய்திருந்தனர். இப்படி சில நேரம் ஓர் கட்டுத்தரியைப் போலும் தியானநிஷ்டரா யிருக்குந் தருணத்தில் அரசனுடைய மந்திரி, அவ்விடம்வந்து இவர் நிஷ்டரா யிருப்பதைப் பார்த்து, கைகூப்பி நடுநடுங்கி சுவாமி, எங்கள் அபராதத்தைப் பொறுத்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்து இரண்டாவது பிராகாரம் அழைத்துக் கொண்டுபோய் அங்கு அநேகவிதமான பரியள புஷ்பங்கணிறைந்த உத்யானவனத்தைக் காண்பித்து, அவ்விடத்தில் அர்க்கியபாத்ய ஆசமனாதிகள் தந்து உபசரித்து வைத்தனன்.

(ருசு-சுசு) அதுவேயுமன்றி அம்மந்திரி அரண்மனையில் ராஜசேவையைச் செய்கின்றவர்களாயும், சங்கீத நாட்டியாதிகள் செய்வதில் வல்லவர்க ளாயுமுள்ள ஸ்திரீகளை அழைத்து நீங்கள் இச்சுக முனிவரை உபசரித்து வாருங்களென்று கட்டளையிட்டுச் சென்றனன். அந்த ஸ்திரீகளும் அம்முனி புங்கவரை நாடோறுந் தவறாமல் அன்ன பானாதிகளால் வேண்டிட வுபசாரங்கள்செய்து வந்தனர். சுகரும் சுகானந்தமா யிருந்தனர். பின்னர், அந்தப்புரத்தில் வசிக்கும் சில ஸ்திரீகள் உத்யான வனஞ்சென்று ரமிக்க விருப்பங் கொண்டவர்களாய் அநேக தாதிகளோடு அவ் வனஞ்சென்று குதூஹலத்துடன் சுற்றிப் பார்த்துக்கொண்டு வரும்போது, ஓர் பக்கத்தில் ஆயிரஞ் சந்திரன் ஏககாலத்தி லுதித்தாற்போல், சாந்த மூர்த்தியாய் மிருதுவான வார்த்தையுடையவராய் விளங்கும் மன்மதப் பிரதிநிதியான சுகமுனிவரைக்கண்டு, காம மீதூர்ந்து, மோகமடைந்து, ஒருவருக் கொருவர், இவரது ரூபலாவண்ணியங்களைப் பேசிக் கொண்டும்,

ஒருவருக் கொருவர் முந்திச் சென்றும், அவரை முற்றுகைசெய்ததுபோல் சூழ்ந்து கொண்டு ஒவ்வொருவரும், என்னிடத்தி லன்புவைக்கவேண்டும், அன்பு வைக்க வேண்டுமென்று பலவாறாய்ச் சகிக்கக்கூடாத சாகசங்களாற் பல வத்காரஞ் செய்தனர். ஜிதேந்திரியரான முனிவர், அவர்களுடைய மோகவசனங்களுக் கிடங்கொடாமல் நிச்சலசித்தராய்க் கட்டையைப் போலிருந்தனர். இப்படி யிருப்பதையறிந்த பெண்கள், இவரை யெப்படியாவது நம்முடைய சுவாதீனத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்து, சிலர் உயர்ந்த சயனாதிகளையும், சிலர் பீதாம்பரங்களையும், சிலர் மணிகுண்டலாதி ஆபரணங்களையும், வெகுமானமாகக் கொடுத்தார்கள். அவைகளில் லொன்றையேனுஞ் லஷ்யஞ் செய்யாமல் உதாசீன பாவமுடையவராய், கமண்டலத்தி லிருக்குஞ் சலத்தினால் கைகால் சுத்திசெய்து கொண்டு சந்தியா காலந்தோறுஞ் செய்யவேண்டிய வந்தனாதி அநுஷ்டானங்களைச் செய்துமுடித்தும், ஒரு யாமகாலந் தியான நிஷ்டராக விருந்தும், பின் சுகமாய் சயனித்துக்கொண்டும், இரண்டு யாமம் நித்திரை செய்தும், நான்காவது யாமம் முழுவதையுந்தியான யோகத்திலேயே கழித்தும், பின்னர் ஸ்நானஞ்செய்து காலைக்கடனை முடித்தும், முன்போல் தியான நிஷ்டராகவும், இருப்பரேயன்றி ஸ்திரீகளுடைய செயலை யறிந்து அதற்குடன் பட்டாரல்லர், இவ்வாறு தினமும் வழுவா தியற்றி வந்தனர்.

முதல் ஸ்கந்தம் பதினேழாம் அத்தியாயம்

மிதுலாம்பிரதி சுக கமனம்

முற்றிற்று

ஆஉ அத்தியாயம் கஎ – க்கு ஸ்லோகம் (கூஅஎ)

———

முதல் ஸ்கந்தம் பதினெட்டாம் அத்யாயம்

சுகஜனகசம்வாதம்

(க-கசு) சூதர் கூறுகின்றார். ஓ சௌனகாதி முனிவர்காள்? இவ்வாறு உத்யான வனத்தில் சுகமுனிவர், சீலராயிருப்பதைக்கேட்டு, சனகமகாராஜன் ஆசாரயுக்தனாய் மந்திரிகள் பக்கங்களிலும் புரோகிதர் முன்னுமாய்வர உத்யானவனஞ்செய்று, சுகமுனிவரைக் கண்டு, அர்க்கிய பாத்யாசம னாதிகள் விதிப்படி தந்து, சிறந்த ஆசனத்தி லிருக்கவைத்து, கோதரிசனஞ் செய்வித்து வேதவிதிப்படி பூஜித்தனன். அவரும், அவனது உபசாரமுழுவதையுஞ் சந்தோஷமா யங்கீகரித்தனர்.

பின்னர் அரசன் சுகமுனிவரை நோக்கி தேவரீரது கிருபா விசேஷத்தால் செங்கோல் நடந்து வருகின்றது என்று தனது ராஜ்யாதி க்ஷேமங்களைச் சொல்லிவிட்டு, சுகருடைய க்ஷேமத்தைக் கேட்கத் தொடங்கினன. தபோபலத்தினால், சூரியனைப்போலப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் வியாச பத்திரராகிய ஓ சுகமுனிவரே! உம்மைப் பார்க்கும்பொழுதே ஒன்றிலும் ஆசை யில்லாதவராகக் காணப்படுகிறது. ஆசையில்லாத மக்கு, என்னா லாகவேண்டிய காரிய மென்ன விருக்கிறது. ஆகையால், தேவரீர் இங்குவந்த காரணத்தைத் தயைகூர்ந்து சொல்லவேண்டு மென்று பிரார்த்தித்தனன். சுகர், அரசனைப் பார்த்து, ஓ மகாராஜனே என் தகப்பனார் எல்லா ஆச்சிரயங்களிலும் கிருகஸ்தாச்சிரமமே சிறந்ததென்று புகழ்ந்து என்னை விவாகஞ் செய்துகொள்ளும்படி கூடியமட்டும் பலாத்காரம் செய்தனர். யான், அது பந்தத்தைத் தருமென்றெண்ணி, அவரது வாக்யத்தை அங்கீகரிக்காமலிருக்க, அவர் என்னைவிடாது அது பந்தத்தைத் தரமாட்டா தப்பனேயென்று, பலகாரணங்களைச் சொன்னார். சொல்லியும், யானுடன்பட்டே னில்லை. இப்படி யான்திடசித்தனா யிருப்பதை யறிந்து, ஓ பிள்ளாய், யாதொன்றுக்குங் கவலைப்படாதை? நீ மிதுலாநகரஞ் செல்வாய். அங்கு சீவன் முக்தனான விதேகி என்னும் ஜனகராஜர், ராஜ்ஜிய பரிபாலனஞ் செய்துகொண்டும், சம்சாரவலையில் சிக்கிக்கொள்ளாம லிருக்கின்றார். அவரைப்பார், அவரைப் பார்த்தபின்னராவது, பாணிக்கிரகணஞ் செய்துகொள்ளப் பயந்து தவம்புரியப் பிரயத்தனப் படுகின்ற நீ, கிரகஸ்தாச்சிர்மத்தி லிருக்கும் பீதியொழியப்பெற்று, பாணிக்கிரகணஞ் செய்துகொள்வா யென்றெண்ணுகின்றேன். இதிற் சந்தேக மேதாவது இருப்பின், சனக மகாராஜனைக் கேட்பாய். அவர் தெளிவாய்க் கூறுவர். என் றிவ்வாறு கூறிய பிதுர்வாக்கியத்தைக் கேட்டு, அதிக வியப்புண்டாகி, உம்மைக் காணவேண்டு மென்கிற அவாவினால், கிரிகளையும், நதிகளையும், வனங்களையுங் தேசங்களையுங்கடந்து இங்கு வந்தனன். ஆதலால், நான் மோக்ஷ காமியா யிருக்கிறேன். அந்த மோக்ஷசுகத்தைக் கொடுக்கத் தக்கது, தவமா, தீர்த்தயாத்திரையா, சாந்திராயணவிரதமா, யாகமா, வேதாத்தியயனமா, இவைகளில் எது? அதனைச் சொல்லும் என்றனர்.

(சரு-உஉ) சநகர், ஓ சுகரே! மோக்ஷத்தில் விருப்புடையவன் செய்யவேண்டிய கர்மத்தைச் சொல்லுகிறேன் கேளும். விதிப்படி முன் உபநயனஞ் செய்துகொண்டபின், வேதத்தைக் கற்கும்பொருட்டு குருவினிடத்தில் வாசஞ்செய்து, வேத வேதாந்தங்களை நன்றா யத்தியயனஞ் செய்து, குருதக்ஷணை கொடுத்து, அவரிடத்தில் விடைபெற்று, நல்ல குலத்தி லுதித்த கன்னிகையைப்

பாணிக்கிரகணஞ் செய்துகொண்டு, மனைவியுடன் கிருகஸ்தாச்சிரமத்தி லிருக்கவேண்டும். அதில் நியாயவழியாய்ப் பொருள்தேடி, அதிக ஆசையை யொழித்து, கிடைத்தமட்டில் சந்தோஷிப்பதும், அக்னி ஹோத்தர முதலிய கர்மங்களை வழுவாமற் செய்து முடிப்பதும், புத்ரோற்பவதானஞ் செய்து, சில காலம் வசித்திருப்பதும் தருமமாகும். பின்னர், வானப்பிரஸ் தாச்சிரமத்திற் பிரவேசித்து, கடுமையான தவத்தினாற் காமாதி அறுகுணங்களைச் செயித்து, மனைவியைப் புத்திரனிடத்தி லொப்பு வித்துவிட்டு, அக்னிகளையெல்லாந் தன்னிடத்தி லாரோகணஞ் செய்துகொண்டு, பின்னர், நான்காவது ஆச்சிரமமாகிய சந்நியா சத்தில பிரவேசிக்கவேண்டும். அந்த துரீயாச்சிரமத்தில் சாந்தனாயும், சுத்தனாயும், வைராக்யத்தோடு கூடினவனாய் மிருக்கவேண்டும். சந்நியாச ஆச்சிரமத்துக்கு ஆசையற்றவன் அதிகாரியாவனன்றி. ஆசையோடு கூடினவன் ஒருபோது மதிகாரி பாகான். இது, வேதத்திற்கூறியவிதி. இதிற்கொஞ்சந் தவறு நேரிடினும் பயனில்லை. ஓ சுகமுனிவரே? நாற்பத்தெட்டு சம்ஸகாரங்கள் வேதத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது. அதில் நாற்பது ஸமஸ்காரங்கள் கிருகஸ்தனுக்கும், ஏனைய சம தமாதி முதலிய எட்டு சம்ஸ்காரங்கள் மோஷகாமிக்கும், விதிக்கப்பட் டிருக்கின்றன. இதனால், இந்த நாற்பத்தெட்டு சம்ஸ்காரங்களால் சம்ஸ்கரிக்கப் பட்டவன்றான் மோஷத்துக் குரியவனாகின்றானென ஸ்பஷ்டமாகிற படியினால், ஒவ்வொரு ஆச்சிரமங்கள் தோறுஞ் சென்று, தர்மங்களை விதிப்படிச் செய்யவேண்டுமென்று பெரியோர் கூறுவர் என்று அரசன் கூறினன்.

(உங சுள) சுகர் கூறுகின்றார். சனகமகாராஜனே? சனித்தபொழுதே ஞான விஞ்ஞானோற் பந்த மான வைராக்யம், ஹ்ருதயத்திற் பலமாய் வேரூன்றி இருப்பவன், கிருகஸ்தாதி ஆச்சிர மங்களிலெல்லாம் பிரவேசித்தே தீரவேண்டுமென்பது ஆவசியகமா? அல்லது சந்நியாச ஆச்சிரம மொன்றே ஆவசியகமா? இதனைக்கூறும். சனகர் கூறுகின்றார். சுகரே! இந்திரியங்கள் வலிவுபெற்றிருக்குங் காலத்தில், அதை அடக்குவதற்கு ஒருவராலு முடியாது. அசாத்தியம். இந்திரியங்கள் பரிபாகமில்லாதவனை தாம் செல்லும் வழியெல்லாம் ஈர்த்து ஆசையை யெழுப்பி, அறிவை ஆகரிஷித்துக்கொண்டு பலவிதமாய்க் கெடுத்துவிடுகிறது. (எப்படியென்றால்) ஆதாரவிச்சையிலேயும், சுகேச்சையிலேயும், சயனேச்சையிலேயும் எண்ணமுண்டாக்கிக் கெடுக்கின்றது. ஆகையால் இந்திரியங்களை வைத்துக்கொண்டு எதிராகச் சென்றாற் பயனென்னை? பிராரத்த வாசனாபலத்தைச் செயிப்பது மிகவுங் கஷ்டம் அது ஒருபொழுதுஞ்

சமனமடைகிறதில்லை. ஆதலால், கிரானமாய் ஒவ்வொரு ஆச்சிரமத்திலு மீடுபட்டு, அவைகளைப் பற்றறத் தொலைக்கவேண்டும். சுகரே, உன்னதமான பிரதேசத்தில் தூங்குகிறவன். கொஞ்சஞ் சலிப்பானாயின் கீழே விழுந்தே தீருவன். கீழே தூங்குகிறவன், எவ்வளவு சலித்தாலும் வீழ்மாட்டான். அதுபோலச் சந்நியாச ஆச்சிரமத்தை யடைந்தபின் சபல புத்தியுண்டாகுமானால் பிரஷ்டனாய்ப் போய்விடுவன். மீண்டும், அவனீடேற வழியில்லை. சுகரே! எறும்புகளானவை, ஒரு பயனுள்ள விருக்ஷ மூலத்தை ஆச்ரயித்து மெல்லவூர்ந்து உச்சியிலேறி சுவையுள்ள கனிகளைச் சிறிதுசிறிதாய்ச் சுகமாய்ச் சாப்பிடுகின்றன. பக்ஷிகளோ, அக் கனிகளைச் சாப்பிடுவதற்கு வேகமாய் ஒரே பாய்ச்சலில் கனிக்குச் சமீபத்திற் சென்றும், அங்கு நேரிடுஞ் சில இடையூறுகளால் மொத்துண்டு சிரமப்பட்டுப் பயனற்றுப் போகின்றன. எறும்புகளோ ? அப்படியன்று. அங்கங்கு சிரமத்தைப் பரிகாரஞ்செய்து கொண்டும், யாதொரு இடையூறில்லாமலும், அந்த பலத்தை யநுபவிக்கின்றன. ஆதலால், எவருக்கும் மனதைவெல்ல முடியாது. ஏனென்றால் மனதைக் காமம் விடாது. ஆகலான் அம்மனத்தை ஆச்சிரமந்தோறுஞ் சிறிது சிறிதாய் அடக்கிவரவேண்டும். சாந்தனாயும், ஞானவானாயும், ஆத்ம விசார முடையவனாயுமுள்ள புருஷன் கிருகஸ்தாச்சிரமத்தி விருப்பனாயிருந்தபோதிலும் இலாபத்திற் சந்தோஷமும், அலாபத்திற் றுக்கமும், அடையமாட்டான். இவ்விரண்டிலும் சமபுத்தி யுள்ளவனாக விருப்பான். ஆதலால், எவனாயினும் வேதத்தில் விதித்த கர்மங்களைச் செய்து. அதன்பலத்தை விரும்பாமல், ஈஸ்வரார்ப்பணஞ் செய்கின்றானோ அவன் ஆத்மானுபவத்தை யடைந்து, ஆனந்த மூர்த்தியாய், சம்சார பந்தத்தி னின்றும் விடுபடுவன். இதிலையமில்லை. என்னைப் பாரும். யான் ராஜ்ய பரிபாலனஞ் செய்து கொண்டு, யதேச்சையாய்ச் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறேன். எனக்கொன்றிலும் சுக துக்கமென்பது சிறிது மில்லை. அப்படி நான் பற்றற்றிருக்கின்றமையால் சீவன் முத்தனாய் விளங்குகின்றேன். யான், அநேகவிதமான போகங்களை யனுபவித்துக் கொண்டும், ராஜ்ய விவகாரங்களை நடத்திக்கொண்டும், எப்படி அவைகளில் விருப்பமற் றிருக்கின்றேனோ, அப்படியே, நீரும் கிருகஸ்தாச்சிரமத்தைக் கைக்கொண்டு எல்லாக் கர்மங்களை யுஞ்செய்து, அதன்பலத்தை விரும்பாம லென்னைப்போல் சீவன் முத்தனாகவிரும். எது காணப்படுகிற விஷயமோ, அது பந்தத்தை விளைவிக்கும். காணப்படாதபொருள், பந்தத்தை விளைவிக்க மாட்டாது. இவ்விரண்டனுள் பஞ்சபூதங்களும் அதனதன்

நீக்கதில் அக்னியினிடத்தில் புகையின்மை விளங்கு கிறதல்லவா அதுபோலவே வேதத்திற்கூறிய இம்சை, இம்சையில்லாத தாகவே விளங்குகிறது. இம்சை யாருக்கெனின் தற்பிரயோசனத்தை நாடிச்செய்யும் காமிகளுக்கேயாம். ஈஸ்வரார்ப் பணமாகச் செய்யும் நிஷ்காமிகளுக்கு அஹிம்சையேயாம். இவ்வுண்மை யுணர்வீராக. காமமில்லாமலும் அகங்காரமில்லாமலும் எந்தக் கருமஞ் செய்யப்படுகின்றதோ அது செய்துஞ் செய்யாததென்றே மேதாவியரான பண்டிதர் கூறுகின்றனர். (எனவே செய்துஞ் செய்யாதவறென்றபடி) கிருகஸ்தர்களுக்கு யஜ்ஞத்தில் விதிக்கப்பட்ட ஹிம்சை எதுவோ அதுவே ராக மில்லாமலும் அகங்காரமில்லாமலுஞ் செய்கின்ற முமூக்ஷுக்களுக்கு அஹிம்சையாம்.

முதல் ஸ்கந்தம் பதினெட்டாம் அத்யாயம்

சுக ஜனக சம்வாதம்

முற்றிற்று

அஉ அத்தியாயம் கஅ-க்கு ஸ்லோகம் (க0சுகூ)

முதல் ஸ்கந்தம் பத்தொன்பதாம் அத்தியாயம்

சுகர்சந்தேகநிவிர்த்தி.

(கூ-கஉ) சுகர் கூறுகின்றார், ஓ ஜனகராஜனே! இப்பொழுது கூறிவந்த ஹிம்சை அஹிம்சைகளின் நியாயம் பின்னர் விசாரிப்போம். நீர் கிருகஸ்தன் சீவன் முத்தனாவா னென்றீரே அதுபற்றி என் மனதில் மேன்மேலும் சந்தேக முதித்துக்கொண்டே யிருக்கிறது. மாயாமயமான வலைமத்தியி லிருக்கின்ற புருடன் எவ்வாறு ஆசையில்லாதவ னாவான்? அவன் சாஸ்திர ஞானத்தை யடைந்து நித்யாநித்திய வஸ்துவிசாரஞ் செய்தவனானாலும் அவன் மனம் மோகத்தினின்றும் நீங்குவதில்லை. அவன் எப்படி முக்தனாவான்? அந்தக்கரணத்தில் (இருதயத்தில்) பற்றி யிருக்கும் அஞ்ஞான விருளைப்போக்குவதற்கு சாஸ்திரஞானம் என்ன வலிவு செய்யும்? தீபம் என்கிற சொல்லினாலேயே இருளானது நாசமடையுமா? எப்பொழுதும் பாவரிடத்துந் துரோகசிந்தனை தனையில்லாமலிருக்க வேண்டுமல்லவா? அது கிருகஸ்தனுக்கு எப்படி வாய்க்கும்? ஓ அரசனே உமக்குப் பொருளாசை தொலைந்ததா இன்னுந் தொலையவில்லை. அவ்வாறே ராஜ்யசுகானுபவ வாசையும்

போகவில்லை. அன்னிய ராஜ்ஜியத்தைச் செயிக்கவேண்டு மென்கிற ஆசையும் நீங்கவில்லை. இப்படியிருக்க நீ ரெவ்வாறு ஜீவன் முக்தராவீர், அன்றி நீர் சோரர்களிடத்தில் சோரபுத்தி யுடையவராகவும், கபஸ்விகளிடத்தில் சாது புத்தியுடையவராகவு மிருக்கின்றீர். இது என்னுடையது அது உன்னுடையது என்கிற பேத புத்தியு முமக்கிருக்கின்றது. நீர் விதேகராக எப்படியாவீர்? அறுசுவையாகிய ரசங்களையும் நன்மை தீமைகளையும் அறிகிறீர். உமது மனம் நன்மையிற் களிப்பையும் தீமையிற் சோகத்தையும் அடைகின்றது. சாக்கிர சொப்பன சுழுத்திகளாகிய மூன்றவத்தைகளு முமக்குத் தவறாது நிகழ்ந்து கொண்டிருக்கிறது. துரீய அவஸ்தை யடைந்தவராக எப்படியாவீர்? ரதகஜ துரக பதாதிகளெல்லா மென்வசத்தி லிருக்கிறது, யான் எல்லாவற்றிற்கும் அதிபன் என எண்ணுகின்றிரா இல்லையா? நன்மை தீமைகளையறிந்து சுகதுக்கங்களை யடைகின்றமையால் உம்மை மனமில்லாதவராக எப்படி சொல்லலாம்? எப்பொழுதும் சந்தோஷ சித்தனாயும், புஷ்பமாலையிலுஞ் சர்ப்ப தாரையிலுஞ் சம திருஷ்டி உடையவனன்றோ மனமில்லாதவனாவன்? மண்கட்டியையும், பொன்கட்டியையும், சமமாய்ப் பார்ப்பவனன்றோ சீவன் முத்தனென்று கூறப்பட்டிருக்கிறது? எல்லாவற்றிலும் ஏகாத்ம புத்தியைப் படைத்தலும், எல்லாச் செந்துக்களுக்கும் ஹிதத்தைச் செய்வது மன்றோ சீவன் முக்திலக்ஷணம்? ஆதலால் என் மனமானது இல்லறத்தில் ஒரு சிறிதும் ரமிக்கவில்லை. ஏகாகியாகியும், ஒன்றிலும் பற்றில்லாதவனாகிய மிருக்கவேண்டு மென்பதே என் கருத்து.

(கங - உ0) சங்கவர்ஜிதனாகவும். அகங்கார மமகாரமில்லாதவனாகவும், கந்த மூலபலாசன்னாகவும், துவந்த புத்தியில்லாதவனாகவும், விவாகமில்லாதவனாகவும், மிருகம்போல் சஞ்சரிக்கப் போகின்றேன். ஆசையில்லாதவனாயுங், குணாதீதனாயு மிருக்கின்ற எனக்கு வீட்டினாலுந் தனத்தினாலும் அழகான மனைவியினாலும் ஆகவேண்டிய தென்னவிருக்கின்றது. நீர் நானாவிதமான ஆசைகளுக்கு மூலமாயுள்ள ராஜ்ய சிந்தையை யடிக்கடி யாலோசிக்கின்றீர். இப்படியிருந்தும் நான் முக்தனென்று சொல்லுகின்றீர். இதனை டம்பமென்று சொல்லவும் வேண்டுமோ? உமக்கு சில் காலம் சத்துருக்களைப்பற்றிய சிந்தையும், சில நேரம் பொருளைப்பற்றிய சிந்தையும், சிலநேரம் சேனை பரிவாரங்களைப் பற்றிய சிந்தையும் இடைவிடாமலிருக்கின்றதே நீ ரெப்பொழுது தான் சிந்தையற்ற வராக விருப்பீரோ அறிகிலேன். வைகானசரும் முனிகளும் மிதமான ஆகாரமுடைய வர்களாயும் ஜிதேந்திரியர்களாயு மிருக்கின்றனர். அவர்களும் ஓர் காலத்தில் இச்சம்சார சுகத்தை

அசத்தியமென்று அறிந்தவர்களாக விருந்தும் ஓர் காலத்தில் மயக்க முறுகின்றனர். உமது வம்சத்தில் சனித்தவர்களுக்கெல்லாம் விதேகர்களென ஓர் பெயர் வழங்கப்பட்டுவருகிறது. அப்பெயரை வஞ்சகமென்று சொல்லவேண்டுமேயன்றி வேறுவிதமாய்ச் சொல்ல ஒருபொழுதும் இயலாது. ஏனெனில் உமது வமிசத்திலுதித்த ஒருவருக்கு வித்யாதர ரென்கிற பெயர். அவர் மூர்க்க சிரோமணியாக விருந்தனர். ஒருவருக்குத் திவாகரர் என்று பெயர் அவர் பிறவிக்குருடர். ஒருவருக்கு லக்ஷ்மீதரர் என்று பெயர் அவர் பரம தரித்திரராயிருந்தனர். ஆதலால் உமது வமிசத்தில் பிறந்தவர்கள் இதுபோலவே பெயருக்குரிய அர்த்தத்தை யுடையவரல்லரென்பது நிச்சயம். இதுபோலவே உமது குலத்தில் எவரெவர் பூர்வத்தில் பிறந்திருந்தனரோ அவர்களுக்கெல்லாம் விதேகர்களெனப் பெயர் மாத்திரமேயன்றி அது செய்கையினாலன்று ஓ சனகமகாராஜனே? இதற்கோர் கதையுளது.

(உக - ஙக) உமது குலத்தில் பூர்வம் நிமி என்னும் பெயருடைய ஓ ராசனிருந்தான். அவன் யாகஞ்செய்வதற்காக வசிஷ்ட முனிவராகிய தனது குல குருவைப் பிரார்த்தித்தனன், அதற்கு வசிஷ்டமுனிவர் யான் நீர் சொல்வதற்கு முன்னர் தேவேந்திரன் இப்பொழுது தான் தனது யாகத்துக்கு என்னையிருக்க வேண்டுமென்று கோறினன். அதனை யானங்கீ கரித்துவிட்டேன். இனி யானதனைத் தடுக்கவல்லவனன்று. ஆகையால் அவ்வேள்வியை முடித்துவிட்டுப் பின்னர் உன் வேண்டுகோளின்படி உன் யாகத்திற்கு வருகிறேன் சந்தேகமில்லை. நீ அதுவரையில் யாகத்துக்கு வேண்டிய சாமக்கிரியைகளைத் தினே தினே சாவதானமாய்ச் சேர்த்து வருவாயென்று விடைதந்து இந்திரனுடைய யாகத்தை நிறைவேற்றிவைக்கச் சென்றனர். பின்னர், வசிட்டர் தன யாகத்துக்கு முன்னர் வராமையால் சினங்கொண்டு வேறொருவரைக் குருவாகக் கொண்டு யாகத்தைச் செய்து முடித்தனன் அதனைக் கேட்ட வசிட்டமுனிவர், அதிக கோபங்கொண்டு அரசனைநோக்கி ஓ குருத்துரோகியே உனது தேகம் அதப்பதனம் (கீழே விழக் கடவது) என்று சபித்தனர். அரசனுங் கோபித்து என் சரீரம் அதப்பதனம் ஆவதுபோல் உமது சரீரமும் அதப்பதனமாகக் கடவது என்று பிரதி சாபமிட்டனன். இவ்வாறு ஒருவருக்கொருவர் சாபத்தினாற் பதிதராயினர் என்பதைக் கேட்டிருக்கிறேன். உமது குலத்தவர் விதேகர்களென்கிற பெயருக்குரியவரா யிருப்பின் அவர் எப்படி சபிக்கப்படுவர். இது என் மனதுக்கு அதிக வியப்பை யுண்டுபண்ணுகிறது என்று கூற, சநகர் சுகரைப்பார்த்து ஓ சுகரே! நீர் இப்பொழுது சொல்லி வந்ததெல்லாம்

சத்தியம். இதில் ஒரு சிறிதும் பொய்மையில்லை. ஆயினும் நான் கூறுவதைச் சற்று சாவதானமாகக் கேட்பீராக. உமது தந்தை எனக்குப் பூஜ்யராயும் குருவாயும் இருக்கின்றவர். அத்தகைய நும் பிதாவை விட்டு விட்டு வனவாசஞ் செல்ல விருப்பங் கொண்டவராக விருக்கின்றீர். அப்படி நீர் செய்வீராயின் அவ்வனுத்திலுலாவு மிருகங்களெல்லாம். உமக்கு நெருங்கின பந்துவைப்போலாய் விடுமென்பதிலையமில்லை. தந்தைசங்கமம் பந்தத்தை விளைவிக்கு மென்றெண்ணி யாரணியமடைந்த வுமக்கு அங்கும் மிருகசங்கமம் உண்டாகின்றமையால் நீர் சங்கமற்றிருப்பது எப்படி? இதுவன்றி உணவின் பொருட்டாகவாவது கவலை யுண்டாகுமாதலால் கவலையற்றிருப்பது எப்படி? நீர் வனத்தில் வசித்தபோதிலுந் தண்டம் மான்தோல் முதலியன வேண்டுமென்று கவலையுண்டாகு மல்லவா? அதுபோல் எனக்கும் ராஜ்யத்தில் விவகாரார்த்த மாய்க் கவலையுண்டாகிறது. இருவருக்கும் கவலை பொதுவோ அன்றோ? இதனையுணராது என் மேலும் என்னுடைய மூதாதைகள் மேலும் பெருங்குறையெல்லாங் கொள்ளை கொள்ளையாகக் கூறினீர். இது நிற்க.

(௯௨ - ௫௯) நீர் மனக்குழப்பமடைந்து தூரதேசமிருந்து வந்தவர். அது எனக்கில்லாமையால் எப்பொழுதும் நான் நிர்விகல்பனா யிருக்கிறேன். சுகமாயுறங்குகின்றேன். புசிக்கின்றேன். நான் பந்தனென்கிற புத்தியை யடையாமையால் எப்பொழுதுஞ் சுகரூபியா யிருக்கின்றேன். நீர் பந்தனாயிருக்கின்றேன் என்கிற புத்தியைக் கொண்டிருப்பதால் எப்பொழுதுந் துக்கரூபியா யிருக்கின்றீர். அந்த பந்தன் என்கிற புத்தியை விட்டுவிட்டு சுகியாயிரும். பந்தத்துக்குக் காரணம் தேகமாதலால் அது நானல்லவெனச் சிந்தித்தலே முத்தியாம். அதுபோலவே கிருகம் தனம் ராஜ்ய முதலியன எனதல்லவென்கிற நிச்சய முண்டாகுமானால் அதுவே முத்தியாம் என்றனர். சுகமுனிவர், சநகர் வாக்கியத்தைக் கேட்டு சந்தோஷ சித்தராய் விடைபெற்று தன் பிதாவாகிய வியாசரிடஞ் சென்றனர். வியாசமுனிவரும் புத்ரனுடைய வரவைக்கண்டு அதிக ப்ரேமையோடு தழுவி வுச்சிமோந்து சனக ராஜாவினால் தனக்குவந்த ஞானவிசேஷத்தைக் கூறக்கேட்டு மகிழ்ந்தனர். பின்னர் சுகர் அவ்வனத்தின்கண் தன் பிதாவினிடத்தில் வேதாத்தியயனஞ் செய்து சர்வ சாஸ்திர பாரங்கதராய் சனக ராஜன், ராஜ்யத்தி லிருந்துகொண்டே விரக்தி யடைந்திருந்தது போல் தாமும் மனோபந்தமே பந்தமன்றி சம்சாரம் பந்தமன்றென்று தெளிந்து விரக்தி யடைந்து சுகியாய் வசித்திருந்தனர். பின்னர், பிதாவினுடைய இச்சையின்படி பிதுர் தேவதைகளுக்குப் புத்திரியாகிய பீவரி என்னும்

சுந்தரவதியாகிய மங்கையை விவாகஞ்செய்து கொண்டு இல்லற வொழுக்கத்தினின்று கிருஷ்ணன். கவுரப்ரமன், பூரிதன், தேவஸ்ரிதன் என்கிற நான்கு புத்திரர்களையும், கீர்த்தி என்கிற ஒரு பெண்ணையும் பெற்று, அப்பெண்ணை விப்ராஜ புத்திரனாகிய அணுவென்னும் மகானுக்குக் கொடுத்தனர். அந்த அணுவென்பவர் பிரமதத்த னென்னும் புத்திரனைப் பெற்றனர். அவர் சௌரிய பலபராக்கிரமத்தினால் அரசனாகி தனது விருத்தவயதில் நாரதமுனிவருடைய உபதேசத்தினால் யோகமார்க்கத்தையும், பிரம ஞானத்தையு முடையராய்த் தனது புத்திர னிடத்தில் ராஜ்ய பாரத்தை விட்டு, பதரிகாஸ்ரமத்தை யடைந்து அங்கு முன்போலவே நாரதமுனிவரால் மாயாபீஜ மந்திர முபதேசிக்கப்பெற்று சத்திய ஞானத்தையடைந்து முத்தியடைந்தனர். பின்னர், சுகமுனிவர் தன்பிதாவை விட்டு நீங்கி, கயிலாயபர்வதஞ்சென்று தியான நிஷ்டராய், சங்கவர்ஜிதராய், அணிமாதிசித்திகளை யடைந்து அப் பாவதத்திலிருந்து உதயகிரியினின் றெழும் சூரியனைப்போல் ஆகாயத்தி லெழும்பினர். அப்பொழுது ஸ்ரீ கயிலாயம் இரண்டுசிகர முடையதுபோ லாயிற்று. அன்றியும் இவ்ரெழுந்த வேகத்தாற் சிறிதசைந்து. அதனாற் பிறரெல்லாம் இதுவென்ன உத்பாதமென் றெண்ணவும் வந்தது. சுகர் வாயுவைப்போலுஞ் சூரியனைப்போலும் எப்பொழுதும் ஆகாயசஞ்சாரியா யிருடிகளாற் றுதிக்கப்பெற்றவராய் விளங்கி யிருந்தனர். இவர் செய்தி இங்ஙனமிருக்க.

சர்வஞ்ஞராகிய வியாசமுனிவர் புத்திரசோகத்தால் அடிக்கடி ஓ புத்திரனே, புத்திரனே, என்று கதறிக்கொண்டே சுகர் எந்த மலையை நோக்கிச் சென்றனரோ அந்தமலையை யடைந்து அங்கு ங்காணாமல் புத்திரா, என்கிற சொல்லையே பெருங்கூச்சலோடு இடைவிடாமற் சொல்லிக்கொண்டே சிந்தாகுலத்தோடும் அம்மலையைச் சுற்றிக் கொண்டிருந்தனர். அவர் கூறிய அச்சொல்லோசை அம்மலையில் வியாபித்து இவரைப் போலவே அதுவும் ஓயாது எதிரொலி ஒலித்துக்கொண்டிருந்தது. இவ்வாறு வியாசர் துயரப்பட்டுக் கொண்டிருப்பதைப் பரமசிவனார், சகியாதவராய்ச் சுகரைப்போல் எதிரொலி கொடுத்தனர். அன்று முதல் அப்பருப்பதத்தை யாரொருவர் துயரமுற் றடைகின்றாரோ அவர்களுக்கு அவரது துன்ப மகலுமாறு எதிரொலி கொடுத்துக்கொண்டிருக்கின்றது. பின்னர், சிவனார், புத்திரசோகத்தால் சுகனே, சுகனே, அப்பனே? அப்பனே? என்று கூவிக் கூவிக் கதறியழும் வியாசரருகில் வந்து ஓ வியாசனே? நீ சோகமடைய வேண்டாம், உன் புத்திரன் யோகாப்பியாசத்தில் பரமோத் கிருஷ்டத்தை யடைந்து ஒருவராலும் அடையக்கூடாத ஆகாச சஞ்சார சாமார்த்தியத்தை யடைந்திருக்கின்றனன். ஆதலால், நீ

துயரத்தை யடைய வேண்டாம். சுகனால் உனது புகழ், எங்கும் பரவியிருக்கின்றது. என்று அனுக்ரஹஞ் செய்யும்பொழுது வியாசர், ஹே பரமசிவா, தேவரீர் எவ்வளவு சொல்லியும் அடியேனுக்குச் சமாதானம் பிறக்கவில்லை, புத்திரசோகமுஞ் சிறிதும் நிவிர்த்தியாகவில்லை. இப்பாசத்திற்கு யான் என்செய்வேன். ஹேசங்கரா ? அடியேன் கண்களால் காணப்பெறாத தேவரீரைக் காணப்பெற்றுந் திருப்தியடையாமல் புத்திரனைக் காணவேண்டுமென்கிற விருப்பத்தையே மேலாகக் கொண்டிருக்கின்றேனே அறிவிலியாகிய யான் ஏன் செய்வேன். அடியேன் பிழையைப் பொறுத்தருளல் வேண்டுமென்றனர். சிவனார், ஓ வியாசனே ? நீ புத்திரனையே பார்க்கவேண்டுமென்று விரும்பி யிருக்கின்றபடியால் சுகனை உனது பக்கத்தில் சாயாரூபமாய்த் தோன்றுபடி அனுக்கிரகஞ் செய்கினறேன். அந்தச் சாயை யைக்கண்டு உனக் குண்டாயிருக்கும் புத்திரசோகத்தை நிவிர்த்தித்துக்கொள்வா யென்று வரந்தந்து மறைந்து போயினர். வியாசருந் தனது ஆச்சிரமத்தை யடைந்து சாயாரூபமாய்த் தோன்றிய புத்திரனைக் கண்டனர். கண்டுந் திருப்தியடையாமல் முன்போலவே புத்திரசோகத்தாற் றகிக்கப்பட்டு துக்காச்சிராந்தராயினர். ("மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர், சொற்கேட்ட வின்பஞ் செவிக்கு" என்று மெய்ம்மொழியிற் கூறியவாறு செவிக்கின்பமாகிய மழலைச்சொற் கேட்கப் பெற்றோமில்லை. மெய்க் கின்பமாகிய மெய் தீண்டப் பெற்றோமில்லை, ''குழலினிது யாழினிதென்ப தம்மக்கண், மழலைச்சொற் கேளாதவர்'' என்று கூறியவாறு மகவின் மழலைச்சொல்லை இனிதென்று கூறப்பொறாது, குழலோசையும் யாழோசையும் இனி இனிதென்று கூறப்பெற்றோ மென்று எண்ணுந்தோறும் துன்பமே, பெருகி யதனாற் புத்திரசோகந் தகிக்கத் தலைப்பட்டது. அதனாற் றுக்காக்கிராந்த நாயினாரென்று கூறினார்.)

முதல் ஸ்கந்தம் பத்தொன்பதாம் அத்தியாயம்

சுகர் சந்தேக நிவிர்த்தி

முற்றிற்று

அஉ அத்தியாயம் ககூ - க்கு ஸ்லோகம் (கக0அ)

———

முதல் ஸ்கந்தம் இருபதாம் அத்யாயம்

திருதராஷ் டிராத்யாத் உத்பத்தி

(க - க0) தவத்திற்சிறந்த முநிபுங்கவர், சூதமுநிவரைப் பணிந்து ஓ சர்வஜ்ஞராகிய சூதரே? சுகமுநிவர் தெய்வத் தன்மை யடைந்து ககனசஞ்சாரி யானபின்னர் வியாசர் யாது செய்தனர். அதனை எங்கட்குச் சொல்லியருளுமென்று கேட்க சூதர் கூறுகின்றனர். ஓ முநிவர்காள்? வியாசர் தம்முடைய சன்ம பூமியாகிய ஆச்சிரமத்தை யடைந்து வசிக்குங்காலத்தில் அசிதர், தேவலர், வைசம்பாயனர், சைமிநி, சுமந்து முதலிய தபோதனர் அவரிடத்தில் வேதாத்தியயனஞ்செய்து கொண்டுவந்து சிஷ்யத் துவத்தை யடைந்து விடைபெற்று, தங்கடங்களிடம்போய்ச் சேர்ந்தனர். வியாசர் அவர்களுக்கு விடையளித்த பின்னர் அங்கிருப்பதற்கு மனமில்லாமற் றம்மிடத்தில் அத்யயனஞ்செய்து போன தபோதன ரிடந்தோறுஞ் சென்றனர். புத்திர சோகத்தால் அங்குமிருக்க மனமில்லாதவராய் மீண்டுந் தமது தபோவனத்தை யடைந்து ஜபாதி தியான விசேஷத்தாலும், சாஸ்திர சிந்தனா விசேஷத்தாலும் சிலநாள் கழித்திருந்தனர். அங்கு அவ்வகையானுங் கழித்திருப்பதற்குக் கூடாமல் மனம்பொங்கிச் சோகமுற்று பெருமூச்செறிந்து இனி நாம் எங்கேயாயினும் போய்விடுவோமென்று ஓர் கருத்தெண்ணினர். அப்பொழுது கங்காதீரத்தில் தம்மை நினைத்துத் *துக்கித்திருக்க, விட்டுவந்த வலைஞர் பெண்ணாகிய சத்யவதீ என்னுந் தமது தாயை நினைத்துக் கொண்டு அத் தபோவனத்தை விட்டு அவ்விடஞ்சென்று தாயைக்காணாமல் அங்கிருக்கும் வலைஞர்களைப் பார்த்து ஓ வலைஞர்களே? இவ்விடத்தில் அதிக சுந்தரத்தோடு ஓரம்மணியிருந்தனளே அவ்வம்மணி எங்கு சென்றனளென்று கேட்க, அவ்வலைஞர்கள் அவள் எங்களரசனிடஞ் சென்றன ளென்ன, அதைக்கேட்டு அவ் வரசனிடஞ் சென்றனர். வலைஞர் குல திலகனாகிய தாசரதனென்னும் அம்மன்னவன், இவரது வரவைக் கண்டு மகிழ்ந்து அன்போடு அர்க்கிய பாத்தியாதிகள் தந்து பூஜித்துக் கைகூப்பி நின்று விநயத்துடன் கூறுகின்றான். ஓ வியாசபகவானே? இப்பொழுது தேவரீரது வரவால் எனது ஜன்மம் சபலமாயிற்று, எங்கள் குலமும் பரிசுத்தமடைந்தது. தேவர்களுக்குங் கிடைத்தற் கரிதான உமது தெரிசனம் எனக்கிப்போது கிடைத்தமையால் எனது

* தன்மகனாகிய சுகன் தன்னைத் துக்கத்திலிருக்க வைத்துத் தான் சென்றபடியால், தன்னைப்பிரிந்த துக்கத்தால் தன்றாயாகிய சத்தியவதீ எவ்வாறிருக்கின்றனளோ வென்றெண்ணி அங்குசெல்லநினைத்தாரென்க.

பாக்கியத்தை என்னவென்று சொல்லுவேன். என் பாக்கியமே பாக்கியம். என்பால் கருணைகூர்ந்தெழுந்தருளியது யாதுகாரணமோ அதனைத் தயைசெய்தருளும். யானும் என்னுடைய மனைவிமுதலிய சர்வ பதார்த்தங்களும் உம்முடையன. ஆகையால், உமக்குவேண்டியவை எவையோ அவைகளை யடைவதற்கு யாது தடையுள்; என்றனன்.

(கக - கஅ) தனது தாயாகிய சத்தியவதீ, சந்தநு என்னும் அரசனுக்கு இரண்டு பிள்ளைகளைப் பெற்றிருக்கின்றா ளென்பதைச் சிலராலறிந்தவராய் அவ் வலைஞரரசனை யொன்றுங்கேட்க மனமில்லாமற் றிரும்பி, இனி நாம் வனத்திற்சென்று அங்கு தவமாய் நாள் கழிப்பதே நலமென்று நினைத்து சரஸ்வதி நதிதீரத்தில் மனோகரமான ஆச்சிரமமொன்று அமைத்துக் கொண்டு அவ்விடத்திற் றவம்புரிந்து வந்தனர். (இவர் செய்தி இங்ஙன மிருக்க) சந்தநு என்னும் அரசனுக்கு முதல் மனைவியாகிய தர்ம பத்னிக்கு காங்கேயன் (பீஷ்மன்) என்னுந் தவசீலனாகிய ஒருமகன் பிறந்தான், அவ் வரசனது காமக்கிழத்தியாகிய சத்யவதீ, என்னும் வியாசரது தாயாகிய இரண்டாவது மனைவிக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். அவருள் மூத்தவன் சித்திராங்கதன். இளையவன் விசித்திர வீரியன், இவர்கள் சர்வ லக்ஷணாங்கங்களோடு கூடினவராயும், சர்வ சுகுணங்களோடு கூடினவராயும் மஹாவீர பலங்களோடு கூடினவராயும், தந்தையாருக்கு வேண்டுஞ் சுகங்களைக் குறிப்பறிந்து செய்கின்றவராயு மிருந்தனர். இம் மூன்று புத்திரர்களும் உயர்வு தாழ்வின்றி எல்லா விஷயங்களிலும் சமான தரும முடையவர்களா யிருப்பதையறிந்த சந்தநு, இறுமாந்து நம்மைத் தேவர்களாலும் வெல்லமுடியாதென்கிற நினைவோடு வயோதிகப்பருவ மளவுந்ததீரனாய் வாழ்ந்திருந்து சுவர்க்கலோகம் போய்ச் சேர்ந்தனன். இவனது சீமந்த புத்திரராகிய பிஷ்மர் அவனுக்குச் செய்யவேண்டிய உத்தரகிரியைகளை விதிப்படி செய்து முடித்தனர்.

(ககூ - ஙசு) பின்னர் பீஷ்மர் தனது சகோதரனான சித்திராங்கதனை அரசாக்ஷிக் குரியனாக்கி ராஜ்யபரிபாலனஞ் செய்து வரும்படி கட்டளையிட்டுத் தான் விரதசீலனா யிருந்தனன். இராஜ்யசுதந்தரத்தை யடைந்த சித்தராங்கதன், தன் றந்தையைப் போற்றானும் தனக்குச் சமானமான பலிஷ்டன் உலகி லொருவருமில்லையென் றிறுமாந்து மக்களுயிர்க்குத் தீராத் துயரத்தைச் செய்துவந்தனன். ஓர் நாள் வேட்டையாடு நிமித்தம் அநேக சேனைகளுடன் ஆரண்யஞ்சென்று அவ்விடத்திலுள்ள துஷ்டமிருகங்களைக் கொலைசெய்துக் கொண்டு போகும்பொழுது

அங்கிருந்த கந்தர்வராஜ னொருவன் இவனுடைய கொடுமைக்கஞ்சி தனது விமானத்தை அப்புரஞ்செலுத்திச் சென்றனன். சித்திராங்கதன் அஞ்சிச் செல்கின்ற அக் கந்தர்வனைப் பார்த்து, நாம் வருகின்ற மார்க்கத்தில் இவ னஞ்சாது போகின்றா னல்லவாவென்று அகங்காரங்கொண்டு அவனை விமானத்தோடு பிடித்திழுத்தனன். காந்தர்வராசன் கோபங்கொண்டு மூன்றுவருடங் கொடுமையான யுத்தஞ்செய்து முடிவில் சித்திராங்கதன் கந்தர்வனால் கொல்லப்பட்டு இந்திரலோகஞ் சேர்ந்தனன். அதை பீஷ்மர் கேட்டுக் கவலையடைந்து சித்திராங்கதனுக்குச் செய்யவேண்டிய உத்தரகிரியைகளை முடித்து பின்னர் மந்திரிகளை வரவழைத்து ஓ அமைச்சர்காள்? இனி யாரை யரசாளும்படிச் செய்யலாமென் றாலோசித்துத் தணிந்து, அவன் தம்பியாகிய சித்திரவீரியனை அரசனாக்கி அரசாளச் செய்தனர். சித்திராங்கதன் இறந்தபோன செய்தியைச் சத்தியவதி கேட்டு பெருந் துயரத்தில் மூழ்கிப் பின்னர். தனது இளையபிள்ளைக்குப் பட்டமானசெய்தியைக் கேள்வியுற்று. அத்துயரத்தை யொழித்துச் சந்தோஷ மடைந்தனள். இச்செய்தியை வியாசருங்கேட்டு மகிழ்ந்தனர். பீஷ்மர், அரசாக்ஷிபுரியும் சித்திரவீரியன், யவ்வனதிசையோடுங் கூடியிருப்பதைக் கண்டு கலியாணஞ் செய்விக்கவெண்ணி, ஆலோசித் திருக்கும்பொழுது, காசிராசன் தனது புத்திரிகளான அம்பா, அம்பிகை, அம்பாவிகை என்னு மூன்று பெண்களுக்கும் விவாகஞ் செய்விக்கும் உத்தேசியமாய்ச் சுயம்வரநாட்டி, சகலதேசத் தரசரும், அரசபுத்திரரும் வந்துசேரும்படி தெரிவித்தனன். அச்செய்தியை பீஷ்மர் கேள்வியுற்று ரதாரூடராய்ச் சென்று, அங்குவந்திருந்த அரசர்களையும், அம்மூன்று பெண்களையுங் கைப்பற்றியிருந்த சாளுவதேசத் தரசனையும் வெற்றிகொண்டு அவ்வரசனைக் கீழே தள்ளிவிட்டு அம்மூன்று பெண்களையுந் தன் தேரிலேற்றிக்கொண்டு அம்மூவரையும் முறையே, தாயாகவும், தங்கையாகவும், புத்திரியாகவும், பாவித்து வெகுவீரியத்தோடு அஸ்தினாபுரத்தை வந்தடைந்து, சத்தியவதியை வரவழைத்து, என் தாயே? இப்பெண்களைப் பார்த்தனையா? ஒருத்தி என்தாய், ஒருத்தி என் தங்கை, ஒருத்தி என் புத்திரி என்று அவளிடத்தில் ஒப்புவித்துப் பின்னர், அப்பெண்களைப் பார்த்து, ஓ பெண்கள் சிகாமணிகளே? சத்தியவதியாகிய இவ்வம்மை என் சிறியதாய், ஆகையால் நீங்கள் மூவரும் இவள் சொற்படியே கேட்டு நடக்கவேண்டுமென்று கட்டளையிட்டுப் பின்னர் அப்பெண்களைத் தன் சகோதரனான சித்திரவீரியனுக்கு விவாகஞ்செய்விக்க வெண்ணி, பிராமணர்களையும், சோதிடர்களையும் வருவித்து முகூர்த்த நிச்சயஞ்செய்து விவாகத்துக்கு வேண்டிய சாமக்கிரையகளைச் சேகரித்துவிட்டனர்.

(ருரு - ருகூ) இச் செய்திகள்யாவும் மூத்தவளாகிய அம்பா என்பவள் கேள்வியுற்று, பீஷ்மரிடம்வந்து மிகநாணத்தோடு நின்று, ஓகங்காபுத்திரரே? இந்த குருவம்சத்தில் நீர்மூத்தவர், எல்லா தருமங்களையு மறிந்தவர், இந்தகுலத்தை விர்த்திசெய்விக்குங் கடமையை மேற்கொண்டவர், இந்தகுலத்தை விர்த்திசெய்விக்குங் கடமையை மேற்கொண்டவர், இத்தகையநீர், சாளுவ தேசாதிபதியினால் கைக்கொள்ளப்பட்ட என்னைக் கைக்கொண்டு மனசினால் அங்கீகரித்துக் கையைப் பிடித்துக் கொண்டவர். இப்பொழுது அவைகளை யெல்ல மறந்து, என்னை வேறொருவருக்குக் கொடுப்பதாக நிச்சயித்துவிட்டீரே? இச்செய்கை இந்த குருவம்சத்திற்குத் தக்கது தானா? முன் என்னைக் கைபற்றியபொழுது உம்மையே பாத்தாவாச நிச்சயித்து விட்டேன், எல்லா தருமங்களையுமுணர்ந்த நீரும் அப்பொழுது அப்படியே நினைத்தீர். அவையெல்லாம் இப்பொழுது சொல்வதிற் பயனென்னை? நீரோ பலீஷ்டர், உம்முடைய மனதில் எச்சமயத்தில் எவ்விதமாய்த் தோன்றுகிறதோ அவ்விதமா யாவையும் ஒழுங்குபடச்சொல்லி சரிசெய்யும் ஆற்றலும், சொற் சாதுர்யமும் உடையவர். உம்முடைய இஷ்டப்படியே செய்யும்.

(சு0 - ரு0) என்று அம்பா என்பவள் சொல்லிய வார்த்தையைப் பீஷ்மர்கேட்டு, தருமசாஸ்திர முணர்ந்த விருத்தப் பிராமணர்களையும், சிறியதாயாகிய சத்தியவதியையும், மந்திரிகளையும் வரவழைத்து அவர்களிடத்தில் அப்பெண்கூறிய நீதிவசனங்களை எடுத்துக்கூறி இதற்குயான் செய்யவேண்டியது என்ன? யானோ எப்பொழுதும் விவாகஞ் செய்து கொள்வதில்லை என்று பீஷ்மம் பண்ணிக் கொண்டிருக்கின்றேன். இவ்விஷயத்தில் உங்களுக்குத் தோன்றுகிறது எதுவோ அதனைச் சொல்லுங்க ளென்றனர். அப்பொழுது அவர்களும் அப்பெண்ணினுடைய அபிப்பிராயப்படியே கூறி, மறுபடி அப்பெண் மற்றொருவருக்கு உரியவ ளாகாளென்றுங் கூறினர். அதைக்கேட்ட பீஷ்மர் தாம் கொண்ட விரதத்தை விடுவதற்கு எண்ணமில்லாதவராய் அப்பெண்ணை யழைத்து "நீ பூர்வத்தில் சாளுவதேசத் தரசனால் வரிக்கப்பட்டமையால்" எனக்கு உரியவளாகாய். ஆகையால் இனி உன்னிஷ்டப்படி எவர்பாற் செல்லவேண்டுமோ அவர்பாற் செல்லலாம். ஒரு கணமும் இவ்விடத்தில் நில்லாதை என்றுகடித்து துரத்திவிட்டனர். அவள் அதிக துயரத்தோடு தன்னைப் பூர்வத்திற் கைப்பிடித்த சாளுவதேசாதிபதியினிடஞ்சென்று, பீஷ்மரால் தனக்குநேரிட்ட ஆபத்தைக் கூறி வென்றலரி என்னாயகனே? இனி என்னை உன்னிஷ்டம்போல் * பாணிக்கிரஹணஞ் செய்து கொள்ளும். யானும்

* பாணிக்கிரஹணம் - விவாகம்

உன்னிஷ்டம் போல் நடந்து கொள்ளுகிறேன். நீரும் என்னைப் பூர்வத்தில் விவாகஞ் செய்துகொள்ளுகிறதாக சுயம்வரத்தில் வந்தவர்தானே? ஆகையால் இப்பொழுது என்னை அனாதரணை செய்யாமல் அங்கீகரித்துக் கொள்ளும் என்று பிரார்த்தித்தனள். அவ்வரசன் அவளைப்பார்த்து, ஓ பெண்மணியே? நான் உன்னைக் கைப்பற்றி யிருந்த அக்காலத்தில் யாவருங்காண பீஷ்மர் பலவத்காரமா யுன்னைவரித்துத் தன்னுடைய ரதத்தில் ஏற்றிக்கொண்டு போய்த் தானும் வைத்துக் கொள்ளாமல் தள்ளிவிட்டபடியால் யானும் உன்னைப் பாணிக்கிரகணஞ் செய்து கொள்ளுமாட்டேன். பிறர் கைப்பற்றித் தள்ளிவிட்ட பெண்ணை எந்தமூடன்றான் கைக்கொள்வான். ஆகையால், பீஷ்மரால் பரிகரிக்கப்பட்ட வுன்னை யான்வரிக்கமாட்டேன். இனி நீ எனக்குத் தாயாவாய் எனக்கூறி நிக்ரஹித்துவிட்டான். பின்னர், அவள் பெருந் துக்கத்தில் மூழ்கிக் கதறிக் கதறி ஓ வென் றழுதுகொண்டே மீண்டும் பீஷ்மரிடம் வந்து ஓ பீஷ்மரே, யான் உம்மால் வரிக்கப்பட்டவ ளானபடியினால் பாணிக்கிரஹணஞ் செய்து கொள்ள மாட்டேனென்று சாளுவனுந் தள்ளிவிட்டான். இனி நீர் தான் பாணிக்கிரஹணஞ் செய்து கொள்ளவேண்டும். வேறு எனக்குக் கதியாவார் யார்? சகல தருமங்களையும் அறிந்த நீர் என்னை அநியாயஞ்செய்வது நீதியன்று. இனி என்வேண்டுகோளை மறுப்பீராயின் பிராணஹானியையடைய வேனென்பதிலையம் வேண்டாம். பீஷ்மர், ஓ பெண்ணே? இந்த வார்த்தையை முன்னமே சொல்லலாகாதா? வேறு புருஷனிடத்தில் எண்ணம் வைத்திருந்தபடியினா லல்லவாயான் வேண்டாமென்று சொன்னவுடனே இது நல்லகாலந் தானென்று சென்றுவிட்டாய். அங்கு உன்னெண்ணம்போல் முடிவுபெறாமையினா லல்லவா மீண்டும் என்னிடம்வந்து சேர்ந்தனை. வீணாயேனழுகிறாய். இப்படிப்பட்ட கெட்டவெண்ணமுடைய வுன்னை அங்கீகரிக்கமாட்டேன். ஆகையால் உன்றந்தையிடம் போய்ச் சேர்வாய் என்று பீஷ்மரால் மறுக்கப்படவே அம்பா, இனி ஒருவருடைய முகத்தையும் பார்ப்பதில்லை என்று நெருங்கிய வனம்புகுந்து மநுஷ்ய சஞ்சாரமில்லாத ஓரிடத்திற் றங்கி, பரிசுத்தமான ஓர் தீர்த்தக்கரையிற் றவம்புரிந்து கொண்டிருந்தனள்.

(ருக - எசு) விசித்திரவீரியன், மிகரூபவதிகளான அம்பிகா அம்பாலிகா என்திற இரண்டு பெண்களையும் விதிப்படி விவாகஞ் செய்துகொண்டு அப்பெண்களோடு கிருகத்திலும் வனத்திலும், உத்தியான வனத்திலும், நானாவிதமான காமரசங்களை ஒன்பது வருடமளவும் போகித்துப் பின்க்ஷயரோகத்தாற் பீடிக்கப்பட்டு மரணமடைந்தனன். இச்செதியை யறிந்துகொண்ட சத்யவதீ

பெருந்துக்கமடைந்து, அவனுக்குச் செய்யவேண்டிய உத்தரகிரியைகளை மந்திரிகளைக் கொண்டு முடித்து, பின்னர் பீஷ்மரை யழைத்து ஏகாந்த ஸ்தானத்தில் வைத்துக்கொண்டு பெருந்துயரத்துடன் ஓ புத்திரனே? உன்பிதாவினால் சம்பாதிக்கப்பட்ட அகண்ட ராஜ்யத்தையும், உன் சகோதரருடைய மனைவிமார் இருவரையும் வைத்துக்கொண்டு வம்சத்தையும் அரசாக்ஷியையும் விர்த்திசெய்வாயாக. யான சொல்வியவாறு நீ செய்யாமற் போவையே யானால் யயாதி மஹாராஜவினுடைய இந்த வம்சமானது க்ஷிணதிசையையடைந்துவிடு மென்றனள். ஓதாயே? என்றந்தை நிமித்தம யான் செய்திருக்கும் பிரதிஜ்ஞை நீயறியாயோ? அறிந் திருந்தாலும் அறியாதிருந்தாலும் யானிப்பொழுது சொல்லுகிறேன். என்னை யெனில், நான் இராஜ்ய மாளுகிறதில்லை என்றும், விவாகஞ் செய்து கொள்ளுகிறதில்லை என்றும் பிரதிஜ்ஞை செய்திருக்கிறே னென்றனர், சத்தியவதீ, மஹாதுக்கத்தை யடைந்தவளாய் இந்த வம்சமானது எப்படி விருத்தியடையப்போகின்றது? அரச னில்லாமறபோனால் ராஜ்யத்தில் நீதி தப்பிப்போமே? என்று பலவாறான குறைமொழிகளைக் கூறும் பொழுது பீஷ்மர் ஓ அம்மணி, நீ யேன் வீணாக வியசனப்படுகிறாய், விசித்திர வீரியனு டைய மனைவியினிடத்தில் நல்லகுலத்திற் பிறந்த பிராஹ்மணனையழைத்து வந்து புணரும்படி செய்து புத்திரோற்பத்தி செய்துக் கொள்ளலாம். குலம் நாசதிசையையடைய வருந்தருணத்தில் இவ்வண்ணஞ் செய்வது தோஷமன்று. வேதத்திலும் இவ்வாறே கூறியிருக்கின்றது. ஆகையால் நீ பவுத்திரனை உண்டு பண்ணிக்கொண்டு அவனுக்கு இந்த ராஜ்யத்தைக் கொடுத்து விடுவாய். அது வரையில் உன்னுத்திரவின் பேரில் யானாண்டுவருகிறேன் என்று கூற, சத்திய வதீ, அவ்விதியைக்கேட்டு, கானீன்னும், தனக்குப் புத்திரனும், த்வை பாயனனு மான வியாச பகவானை நினைத்தனள். அவர் ஞான திருஷ்டியினா லறிந்து அந்த க்ஷணமே வந்து தாயை வணங்கி நின்றனர். அப்பொழுது பீஷ்மரும்வந்து பூஜித்தனர். சத்யவதி அக்னிதேவனைப் போல் தேஜோ நிதியாய்ப் பிரகாசிக்கின்ற வியாசரைப் பார்த்து, ஓ புத்திரா, நீ விசித்திர வீரயனுடைய மனைவியிடத்தில் உன்னுடைய வீரியத்துக்குத் தக்கவாறு புத்திரனை யுண்டுபண்ணக் கடவாயென்றனள். வியாச ரதனைக் கேட்டு பிரணவோச்சாரணை செய்து மாதுர் வாக்கியத்தை மறுக்கக் கூடாதென்கிற நீதிவாக்கியத்தை எதிர்பார்த்திருந்து அவளோடு சங்கமஞ் செய்து அந்தகனாகிய ஓர் புத்திரனைப் பெற்றனர். பிறவிக்குருடனாகப் பிறந்த அப்பிள்ளையை சத்யவதி பார்த்து, தீறாக் கவலையடைந்து அவனது இரண்டாம்

மனைவியாகிய அம்பாலிகையை யழைத்து ஓ பெண்ணே? நீயாவது அந்த வியாசரோடு சேர்ந்து நல்ல புத்திரனைப் பெறுவாயென்று கூற அவள் அச்சொல்லைக்கேட்டு உடன் பட்டவளாய் வியாசரைப் புணர்ந்து பாண்டு என்னும் வியாதியோடு கூடிய ஓர் புத்திரனைப் பெற்றனள். வெண் குஷ்டத்தோடு கூடிய பிள்ளை பிறந்தானென்று சத்யவதி கேள்வியுற்று இவனும் அரசியலுக்கு உரியவனல்லவே என்று மாறாத்துயரமடைந்து ஒரு வருடமான பின்னர் மறுபடியும் மருமகளையழைத்து, பெண்ணே? இரண்டு பிள்ளைகளும் அரசியல் செலுத்துந் தன்மைக்கு உரியராகாமற் போயினாரே, உன்னை வியாசனோடு கூடும்படி வேண்டிக்கொண்டதும் அதற்கேயன்றோ, நீ மனம் வேறுபட்டு இப்படி செய்து விட்டனையே? இனியேனும் மனம் ஒரு மித்து அந்த வியாசனோடு கூடி ஒரு நல்ல பிள்ளையைப் பெறுவா யென்று வேண்டிக் கொண்டனள். பின்னர் வியாசரையும் வரவழைத்து அவரையும் வேண்டிக்கொண்டு அன்றிரவில் அதிக அலங்காரத்தோடு கூடியிருக்கின்ற பள்ளியறையைப் போய்ச்சேரும்படி செய்தனள். மருமகள் சத்யவதிக்கு உடன் பட்டவள்போல் நடித்து விடை பெற்றுச்சென்று படுக்கை யறையைப்போய்ச் சேராமல் தனக்குப் பதிலாகத் தாதியேயனுப்பினாள். அவள் வந்த வியாசரை இன்பமாய்க் கூடி இயனுடைய அம்சமான சத்வகுணசம்பன்னனாகிய விதுரனைப் பெற்றனள். இந்தப்பிரகாரம் கவுரவ வம்ச விர்த்தியின் பொருட்டு சத்தியவதியானவள் வியாசராலே மஹாவீரர்களாகிய திருதராஷ்டிரன் முதலிய மூவரையும் உண்டாக்கி ரக்ஷித்த முறைமையைக் கூறினோமென்று சூதமுனிவர் சவுநகாதி முனிவர்களைப் பார்த்துக் கூறினார்.

முதல் ஸ்கந்தம் இருபதாம் அத்யாயம்

திருதராஷ் டிராத்யாத் யுத்பத்தி

முற்றிற்று.

அஉ அத்தியாயம் உ0-க்கு ஸ்லோகம் (கககஉரு)

———

தேவீபாகவதம்

முதல் ஸ்கந்தம் முற்றிற்று.

———

உ

ஸ்ரீ திரிபுரசுந்தாயை நம:

தேவீபாகவதம்.

இரண்டாவது ஸ்கந்தம்

அத்தியாயசூசனை

உ

ஸ்ரீ தேவ்யைநம:

இரண்டாவது ஸ்கந்தம்

முதலாவது

மத்ஸ்யகந்தி உற்பத்தி

சவுநகர் சூதமுனிவரை வணங்கி, முதல்ஸ்கந்தம் இருபதாவது அத்தியாயத்தில் திருதராஷ்டிராதியுற்பத்தி கூறியதில் சிற்சில சந்தேகங்கள் தோன்றி யிருக்கின்றனவென்றும், அச்சந்தேகங்களாவன:- வியாசருக்குத் தாயாராகிய "சத்யவதி" சந்தநுவுக்கு மனைவியானா ளென்பதும், அவளுக்கு இரண்டு பிள்ளைகள் உண்டாயினா ரென்பதும், அவர்கள் மனைவியரோடு அந்தச்சத்தியவதியே வியாசரைப் புணரச்செய்து திருதராஷ்டிராதியரை யுண்டாக்கினா ளென்பதும், இக்காரணங்களை யோசிக்குங்கால் வியாசருக்குப் பிதாசந்தநுவா? வேறொருவரா? என்பதும், வேறொருவராயின். சத்தியவதி இரண்டு கணவரையுடையவளாகின்றாளே என்பதும், இருவராகுங்கால் வியாசர் யாருக்குப்பிறந்தவர், ஏனைய விரண்டு மக்கள் யாருக்குப் பிறந்தவர்க ளென்பதுமே யாம் என்றுங் கேட்கப் பின்னர் சூதமுநிவர் "யஸ்யோச்சரண மரத்திரேண ஸித்திர்ப்பவதி ஸரஸ்வதீ, வ்யாஜே நரபிஹி பீஜஸ்ய வாக்பவஸ்ய விசேஷத; சம்யக் ஸர்வாத்மநா சர்வை ஸ்ஸர்வகாமார்த்த சித்தயே, ஸ்மர்த்தவ்யா சர்வதாதேவீ வாஞ்சிதார்த்தப் பிரதாயிநி,, என்று பரதேவதையைத் தியானித்து சவுநகரதியரைப் பார்த்து ஓ முனி கணங்காள்? "சத்தியவதி" முன்னம் "மச்சகந்தி" என்று "உபரிசரன் என்கிற அரசனால் பெயரிடப்பெற்றா ளென்றும், பரிமளகந்தி" "சத்தியவதீ" என்று பாரசுர முநிவரால் அனுக்கிரகிக்கப்பெற்றா ளென்றும், அவற்றுள் "மச்சகந்தி" என்று வந்த பெயர்க்காரணமாவது:- சேதி தேசாதிபதியாகிய "உபரிசரன்" என்கிற அரசன் பிதிர்க்களுடைய ஏவுதலால் காட்டுக்குப்போய் இராவளவும் வேட்டையாடி வோய்ந்த பொழுது மனையானை மோகித்து நினைக்கவும் வீரியம் வெளிப்பட்டது, அதனை ஓராவிலையில் வைத்துத் தன்னருகிலிருந்த கழுகுனிடங் கொடுத் தனுப்ப, அது எடுத்துக்கொண்டு போகும் பொழுது வேறொரு கழுகு அதனை இறையென் றெண்ணிக் கவர்தற்குவர, அதனைப் போக்கியமுநுநதி வழியே வரும்பொழுது அந்நதியில் ஒ ரந்தணனுடைய சாபத்தால் மச்சமாய்க்கிடந்த "அத்திரிகை" என்னுந் தேவமங்கையின் வாயில் தவறி வீழ்ந்தது. அந்த மச்ச கர்ப்பத்தில் பிறந்தவளாகும் இந்தச்

சத்தியவதி என்றறின்கள் என்றுங் அவ்விருவர் வரலாற்றையுங் கூறுதல்.

இரண்டாவது

வி யா சோ ற் ப த் தி

மச்சகந்தி பரமளகந்தி என்று பெயர்பெற்ற வரலாற்றைக் கூறுதலாகும். எங்ஙனமெனின்? ஓர் காலத்தில் பாரசரமுனிவர் யமுனா நதிக்கரையை யணுகி அங்கிருந்த தாசனைக்கண்டு என்னை அக்கரையில் கொண்டு போய் விடுவையா வென்ன? அவன் மச்சகந்தியைப் பார்த்து நீ இப் பெரியோரை ஓடத்தி லேற்றிக்கொண்டு போய் வருவாயென்றேவ, அவள் அப்பராசர முநிவரை ஓடத்தி லேற்றிக்கொண்டு போகும்பொழுது முனிவர் பெருமான் அவளது ரூபலாவண்ணியத்தைக் கண்டு தமது வேட்கையை வெளிப்படுத்துங்கால் அவள் தவத்திலுயர்ந்த நீர் குலத்திலிழிந்த என்னை விரும்புவது அடாது, இதுமதி கேடு, "துர்லபம் மாநுஷம் ஜன்ம புலி ப்ராம்ஹண சத்தம, தத்ராபி துர்லபம்மந்யே பிராம்ஹணத்வம் விசேஷத:" என்று கிடைத்தற் கருமையாகக் கூறிய பிராம்ஹணத்துவத்தை ஏன் கைவிடுகின்றீர் என்று தடுத்துக் கரைசேர்க்க முனிவர் ஓடத்தை விட்டிறங்கி ஓ மச்சகந்தி உன்னைப் பரிமளகந்தியாகச் செய்கிறேன் என்னிஷ்டப்படி இணங்குவா யென்ன, அவள் பகற்பொழுதாயிற்றே என்று மறுக்க, உடனே யமுனாதீர்த்தத்தை யள்ளி மந்திரித்து ஆகாயத்தில் வீசி யிருளுண்டாக்கினர். சத்தியவதி நான் உம்மைச் சேருவேனாயின் புத்திரனுண்டாவனே? அவனை நான் வைத்துக்கொண்டு பரிதவிக்க வருவதன்றிக் கற்பினையும், தாய் தந்தை முதலாயினாரையும் இழந்து நாயகனற்றவளாய் நாள்கழிக்கவும் வருமல்லவா? என்றேங்க, முனிவர் ஓ பெண்மணியே? நீ என்னைப் புணர்ந்தபின் நீ எந்தவிதத்திலும் முன்னிலுங் குறைவின்றி வாழ்வா யென் றாசிபுகன்று அவளுக்கு மகிழ்ச்சியுண்டாகும்படி செய்து புணர்ந்தின்புற்றுப் பின்னர் யமுனாநதியில் நீராடி வனம்போய்ச் சேர்ந்தனர்.

பின்னர் வியாசர் அவதரித்துத் தாயைப்பார்த்து ஓ அன்னாய்? என் பொருட்டு நீ யாதொருகவலையும் கொள்ளற்கவென்று பல இனியமொழிபகர்ந்து விடைபெற்றுச்சென்றனர். சத்தியவதியும் தன் தந்தைபால் வந்து சிலநாட் சென்றபின் சந்தது மஹாராஜாவைக் கண்டு அவன் பால் பிரிய முடையவளாய் அவனுக்கே மனைவியாய் வாழ்ந்தனளென்று கூறுதல்.

மூன்றாவது

கங்காயா சாபப்பிராப்தி யாதி கதனம்

சத்தியவதியாகிய பரிமளகந்தி யானவள் சந்தநு மஹாராஜாவுக்கு மனைவியான காரணங் கூறத்தொடங்கி முன்னர் சந்தநுவினுடைய வரலாறு கூறுதல்.

இக்ஷ்வாகு வம்ச திலகனாகிய "மஹாபிஷன்" இந்திரலோகத்தில் வாழுநாளில் ஓர் நாள் பிரமசபைக்குப் போயிருந்த பொழுது அங்குக் கங்கையும் ஓர் பெண்ணுருவங்கொண்டு வந்திருந்தனள். அச் சமயத்தி லெழுந்த காற்றினால் கங்கையின் மேலிருந்த வஸ்திரம் விலகிப் போயிற்று. "மஹாபிஷன்" அவளங்கத்தைக் கண்டு மோஹித்தனன், அவளும் அவன்குறிப்பறிந்து அவன்மேல் மோகங் கொண்டிருக்குஞ் சமயத்தில், பிரமன் இருவர் குறிப்பையும் அறிந்து நீங்களிருவரும் பூலோகத்தில் மானிடராகப் பிறந்து பின்னர் உங்கள் பதங்களை அடையக்கடவீர்களென்று சாபானுக்ரஹஞ் செய்ய அதனை யேற்று இருவரும் போயினர்.

இனி "மஹா பிஷன்" சந்தது ராஜாவாக வரும் வரலாறு, அஷ்டவசுக்கள் ஓர் நாள் "வசிஷ்டருடைய" ஆசிரமத்திற்கு வந்தபொழுது அங்கு "நந்தினி" என்னும் பசுவை "தியா" என்கிற வசுவினுடைய மனைவியானவள் கண்டு தன் நாயகன்பால் அதன் மகிமைகளைக் கேட்டு இந்தப்பசுவை உசீனருடைய மகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று தெரிவிக்க, அவர் பின்வருவதை நாடாமல் அவள் விரும்பிய படியே அப்பசுவைக் கவர்ந்து கொண்டு மனைவியோடு ஏனைய முநிவர்களையும் அழைத்துக் கொண்டுபோயினர். இச்செய்தி வசிஷ்டமுநிவ ரறிந்து அந்த அஷ்டவசுக்களும் பூலோகத்தில் மானிடராகப்பிறந் துழலக் கடவரென்று சபித்தனர். அச்சாபத்தை யேற்ற வசுக்கள் வசிஷ்ட முனிவரைச் சரணாகதியடைய அவரிரக்கமுற்றுப் பசுவைக் கொண்டு போனவன் "தியா" வாகையால் அவன் மாத்திரம் நெடுங்காலந்தெய்வத் தன்மையினின்றும் நீங்கி பூவுலகிலுழலக் கடவன். ஏனையரெல்லாம் ஒரு வருட மிருந்தபின் வசுக்களாகக் கடவரென் றனுக்ரகிக்க விடைபெற்றுக் கங்கா தீரத்தருகே வரும்பொழுது கங்கா தேவியைக்கண்டு ஓ அம்மணீ? நீ சந்தநு மஹாராசாவுக்குப் பத்தினியாய் எங்களைப் புத்திரராகப் பெற்று அவ்வப்பொழுதே இக் கங்காதீர்த்தத்தில் விட்டுவிடவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அவள் அவ்வண்ணமே செய்கிறேனென்று மறைந்துபோயினள். பின்னர் ஓர் நாள் குரு வம்சஸ்தனாகிய "பிரதீப" னென்னும் அரசன்

கங்கைக்குவந்து ஸ்நானாதி கருமங்களை முடித்துக்கொண்டு தூரிய நமஸ்காரஞ் செய்து கரையிலிருக்கும் பொழுது கங்கையானவள் அதி சுந்தரவதியாய் வந்து அவன் வலது துடையிலிருந்து தழுவுவாள் போன்றிருக்க அவன் அவளைப்பார்த்து நீ என் மனைவியாகாய் மருமகளாதற் குரியா யென்ன அவள் மகிழ்ந்து போயினள். அரசனுந்தன்னரண்மனை போய்ச் சேர்ந்து மகனில்லாத நமக்கு மருமகளாகக் கங்கை எப்படிவருவாளென்றெண்ணி நாள் கழித்துவரும் பொழுதுமனைவி கருப்ப முடையவளாய் ஆண் மகனைப் பெற்றனள். அவன் தான் முன் பிரமனால் சாபமேற்ற "மஹாபிஷன்" அவனுக்குப் பிரதீபன் சந்தநுவென்று நாமகரணஞ்செய்து சகலகலையும் பயிற்றிப் பின்னர் ஓர் நாள் ஓ குழந்தாய்? நீ கங்கா நதிக்குப் போகவரும். அங்கு ஒரு ஸ்திரீவருவாள் அவளை நீ குலமுறை யென்றும் விசாரிக்காமல் மனைவியாகக் கொள்வாயென்று கூறிப் பட்டாபிஷேகஞ்செய்து தான் ஆரண்யஞ் சென்று தேவியைத் தியானஞ் செய்து சுவர்க்கலோக மடைந்தனனென்று கூறுதல்.

——

நான்காவது

காங்கேயோற்பத்தியாதி கதனம்

சந்தநு சத்தியவதியை மனைவியாகக் கொள்ளவதற்கு முன் கங்கை யோடுகூடிக் காங்கேயர் முதலியோரைப் பெற்றவரலாற்றைக் கூறுதல்.

——

ஐந்தாவது

சத்தியவதீ சுந்தநுசம்வாத கதனம்

சந்தநு சத்தியவதியைப் பரமளம் வீசியகாரணத்தாற் கண்டு அவள் வரலாற்றை வினாவியும், சத்தியவதிக்குத் தன்வரலாற்றைக் கூறியும், பின் இருவர்மனமும் ஒத்துத் தாசனாலும், காங்கேயனாலும், கலியாணஞ் செய்யப்பெற்று வாழ்ந்ததாகிய வரலாற்றைக் கூறுதல்.

——

ஆறாவது

திருதராஷ்டிராதி யுத்பத்தி

சந்தநுவுக்கு "சித்திராங்கதன்" "விசித்திர வீரியன்" என்பவர் பிறந்து இறந்து போனமையும், சத்தியவதி சந்தநுவினுடைய சந்ததி க்ஷீணமாகப் போதலும், அரசாங்கம் செங்கோலின்றிப் பாழ்படுதலும் நலமன்றென்றெண்ணி அறநூ லாராய்ந்து அரியதவசியாகிய வியாசரைக்

கொண்டு திருதராஷ்டிராதியரை உற்பத்தி யாக்கிய வகைகளும், அவர்கள் பத்தினிமார்க்களுடைய வரலாறும், அவர்களுக்குப் புத்திரோற்பத்தியான தெய்வத்தின் செயல்களும் கூறுதல்.

— —

ஏழாவது

யுதிஷ்டாரதி சரிதம்

குந்தி தேவி, மாத்திரி என்பவருடைய புத்திராளாகிய பாண்டவர்களால் காந்தாரியினுடைய புத்திராளாகிய துரியோதனனாதியர் இறந்து போனமையைநாடித் தீராத்துயரத்தை யடைந்து திருதராஷ்டிரனைத் தருமன் அன்பு பாராட்டியதும், வீமன் வம்பு பாராட்டியதும், இவரெல்லாம் மனம்போய்ச் சேர்ந்து இறந்தவர் கடன் கழித்ததும், அவரவரைக் கண்டதுங் கூறுதல்.

— —

எட்டாவது

திருதராஷ்டிராதி மரணம்

வனத்திலிருந்த திருதராஷ்டிரன், விதுரர் முதலாயினாரும், குந்தி தேவி முதலாயினாரும், துவாரகையில் வசிப்பவராகிய கிருஷ்ணர், பலராமர், ஏனைய யாதவர்கள், கோபிகாஸ்திரீகள் முதலாயினாரும் அவரவர் விதியின் வழியாயும், மதியின் வழியாயும், சாபத்தின் வழியாயும், மரணமடைந்த வகையையும், பாண்டவர்கள் அஸ்தினாபுரத்தை முப்பத்தாறுவருடம் ஆண்டு பின்னர் அபிமன்யுமகனாகிய பரிக்ஷித்து மகாராஜனுக்குப்பட்டாபிஷேகஞ் செய்வித்துப் பரலோகப் பிராப்தி யடைந்தமையும், பரிஷித்து தானியற்றிய தீமையினால் "கவிஜாத" ரிட்ட மரணசாபமேற்றமையும், அந்த மரணபயத்தைப் போக்கடித்துக் கொள்ளலாமென்று "குரு"மஹருஷியினுடைய வரலாற்றைக் கூறத் தொடங்கிய முறைமையுங் கூறுதல்.

— —

ஒன்பதாவது

பரிக்ஷித்சாப நிவர்த்தியுபாய சிந்தனை

பரிக்ஷித்துத் தான் சொல்லிவந்த "ருரு" மஹருஷியினுடைய சரித்திரத்தினால் மந்திரி களுக்குத் தைரியமுண்டாக்கித் தன்னையும் அதுபோல் மணி மந்திர அவுஷதங்களினால் பாதுகாத்துக் கொள்ளலாமென்று முயன்றிருந்ததையும், அக்காலத்தில் சாபவன்மையால் தக்ஷகன் கொல்லவருவதையுங் கூறுதல்.

— —

பத்தாவது

பரிக்ஷித்தின் மரணம்

பரிக்ஷித்தைக் கொல்லவந்த தக்ஷகன், அவனைப்பிழைப்பிக்க வருகின்ற கஸ்யப ருஷியோடு வாக்குவாதஞ் செய்து அவரை வந்தவழியே போகச்செய்து தானெண்ணி வந்தபடியே பரிக்ஷித்தைக் கொன்று வரலாற்றைக் கூறுதல்.

— —

பதினோராவது

ஜனமேஜயஸ்யராஜ்யப்ராப்தி

பரிக்ஷித்து மரணமடைந்தபின்னர் அவன் மகனாகிய ஜனமேஜயனுக்குப் பட்டாபிஷேகமான சிறப்பும், அவன் அரசுபுரியங் காலத்தில் "உத்ங்கமஹருஷி" அவன் பால்வந்து தந்தையினுடைய மரண கஷ்டத்தை தெரிவித்துப் பாம்புகளிடத்தில் பகைமை யுண்டாக்கி அவனைக் கொண்டே சர்ப்பயாகத்தை ஆரம்பித்தவரலாறு, யாகம் நடத்திருக்கும் பொழுதே "அஸ்திக" ரென்கிற மஹருஷிவந்து தடைபடுத்தினதும், அதனால் ஜகன் மேஜயன் சோகமுற்றிருக்குங் காலத்தில் "வைசம்பாயன" முநிவர் சோகம் நீங்குமாறு "பாரதத்தைப்" போதித்துந் தனக்குண்டாகிய பிதுர் துக்கம் நீங்கப்பெறாமல் என்பிதா என்ன சாந்திசெய்தால் சுவர்க்கலோகமடைவாரென்று வினாவியவினாவுங் கூறுதல்.

— —

பனிரண்டாவது

வியாச ஜனமேஜய சம்வாதம்

பாரதத்தைக் கூறியும் மனவுபசாந்தி யடையப்பெறாத ஜனமேஜயனுக்குச் சிரவணஞ்செய்த மாத்திரத்தில் பரமசுகத்தையும், நித்தியத்துவத்தையும், அளிக்கவல்ல ஸ்ரீ "தேவிபாகவத்தை" உபதேசிக்கத் தொடங்கியதும், அரசன் சர்ப்பயாகத்தைக் கெடுக்கவேண்டுமென்று வந்த "அஸ்திகருஷி"யினுடைய வரலாற்றை முன்னர் கேட்கவேண்டுமென்று வேண்டியபடியேவியாசர் அந்த அஸ்திகருடைய வரலாற்றைக் கூறியுதும் பின்னர் முன் உபதேசிக்கத் தொடங்கிய பாகவதச் சிறப்பையே சிறப்பித்தோத வந்ததும் விளங்கக் கூறுதல்.

இரண்டாவது ஸ்கந்தம்

அத்தியாய விஷயசூசனை முற்றிற்று.

— — — —

உ

திரிபுர சுந்தர்யை நம:

தே வீ பா க வ த ம்.

இரண்டாம் ஸ்கந்தம்

முதல் அத்தியாயம்

---

* மத்ஸ்யகந்தி உத்பத்தி.

கஞ்சன காஞ்சீநிலயம் கரத்ருத கோதண்ட ஸ்ருணுபாசம்,
கடின ஸ்தனபர நம்பரம் கைவஸ்யானந்த கந்தமவலம்பே.

(க - எ.) சவுநகர் சூதமுனிவரைப் பணிந்து சர்வபுராணப் பிராஜ்ஞரே, இப்பொழுது தேவரீர் கூறிவந்தவைகளிற் சிற்சில சந்தேகங்கள் தோன்றி என்மனத்தையும் இங்குள்ளாராகிய முனிகணங்களுடைய எண்ணங்களையும் பிரமிக்கச் செய்கின்றன. அவற்றை மாற்றியருளல்வேண்டும். திருதராஷ்டிராதியருடைய உற்பத்திகள் சத்யவதியினுடைய ஆணையின்படி வியாசரால் ஆயினவென்றும், அந்த சத்யவதியை வியாசருடைய தாயென்றும், சந்தநுராசன் அந்த சத்யவதியை மனைவியாகக் கொண்டானென்றும், இவளுக்குச் சித்திரவீரியன், சித்திராங்கதன் என்கிற இரண்டு பிள்ளைகள் பிறந்தார்களென்றுங் கூறினீரல்லவா? சத்யவதீ, வியாசரை, திருதராஷ்டிராதியருடைய விர்த்தியின் பொருட்டுப் பரஸ்திரீகளைப் புணரும்படிச் செய்யவேண்டிய காரணமென்னை? வியாசருக்குத் தாயாயிருக்கின்ற சத்தியவதியே சந்தநுவுக்கு மனைவியானால் வியாசருக்குப் பிதா சந்தநுவா? சந்தநு பிதாவாகாமற்போனால் இவருக்குப் பிதாயார்? இவருக்குப் பிதா வேறொருவரென்றால் சத்யவதிக்குக் கணவர் இருவரா? சத்யவதிக்கு இரண்டு பிள்ளைகளென்றீரே அவர்கள் வியாசருடைய தந்தையாருக்கு பிறந்தவர்களா? சந்தநுவுக்குப் பிறந்தவர்களா? என்று வினவினர். சூதர் தருமார்த்த காமமோக்ஷங்களைக் கொடுக்கின்றவளாகியும், ஆதிசத்தியாகியும் இருக்கின்ற பராசத்தியை அடியில்வருமாறு

* மச்சத்தினுடைய வாசனை வீசுகின்ற சரீர முடையவளுடைய சனன வரலாற்றைக் கூறுதல்.

தியானித்த புராணப் பிரசித்தமாய் விளங்கும் பரிசுத்தமான கதையை, சவுநதியருக்கு கூறத்தொடங்கினர்.

*''யாதொரு தேவியினுடைய மந்திர பீஜாக்ஷரத்தைப் பக்திஹீனமாக வுச்சரித்தபோதிலும் அழிவில்லாத இஷ்டகாமியசித்தி யுண்டாகும். ஆகையினால், போகமோக்ஷ காமிகளாகிய யாவராலும் எவ்விதத்தினாலாயினும் சர்வாபீஷ்டங்களையுங் கொடுக்கின்றவளாகிய அத்தேவியானவள் எப்பொழுதும் ஸ்மரிக்கத்தக்கவள்."

(அ-கரு) என்று, யாவரும் தேவியினுடைய தியானபாராயிருக்கத் தியானித்துக் கூறத்தொடங்கினர். ஓ அனுக்கிரஹ சீலராகிய முனிகணங்காள்! சேதிதேசத்தில் உபரிசரன் (மேலேசஞ்சரிக்கின்றவன்) என்னும் அரசன் தர்மிஷ்டனாயும், சத்யசாகரனாயும், பிராஹ்மணபூஜையிற் சிறந்தவனாயு மிருந்தனன். அவன் இந்திரனை நோக்கித் தவஞ்செய்ய, அவ்விந்திரன் மகிழ்ந்து அவ்வரசனுக்குப் பரிசாக ஸ்படிகமயமாயிருக்கிற ஓர் விமானந்தந்து ஆசிபுகன்று போயினன். அன்று முதல் அவ்வரசன் அவ்விமானத்தில் ஆரோகணித்தவனாய் எப்பொழுதும் ஆகாசசஞ்சாரியாய் அஷ்டவசுக்களில் இவனும் ஒருவனென்று சொல்ல உலாவி, பின்னர் கிரிகா என்கிற மங்கையை மணம் புணர்ந்து ஐந்து பிள்ளைகளைப் பெற்று, அவ்வைவரும் வீரபராக்ரம சாலிகளா யிருத்தலைக்கண்டு, தன்னகரைச் சூழ்ந்திருக்கும் ஐந்து தேசங்களைத் தனித்தனியே அவர்களை அரசாளவைத்துத் தான் தன்னகரத்தை யாண்டு வந்தனன். அக்காலத்தில் ஓர் நாள் பிதிர் தேவதைகள் வந்து ஓ அரசனே! உன்னகரத்தில் மிருகங்கள் மிகுந்திருக்கின்றன. ஆகையால், நீ இன்று வனஞ்சென்று வேட்டையாடி வருவாயென்று போயினர். அம்மொழியைக்கேட்ட அரசன், இன்று நம்முடைய மனைவியானவள் ருதுஸ்நானமுடையவளாயிருக்கின்றனளே நாமெப்படி வனம் போகிறது என்று அடியில்வருமாறு சிந்தாகுலனாய்ச் சிந்திக்கலாயினன். ருதுஸ்நானகாலத்தில் மனைவியைப் புணராதவன் பசுவின் கன்றைக் கொலைசெய்தவனாவான் என்றும், பிதுர்வாக்யத்தைக் கடந்தவன் மஹாபாதகனாவானென்றுந் தருமசாஸ்திரங் கூறுகின்றதே; இவ்விரண்டில் நாமிப்போது எந்தபாதகத்துக்கு ஆளாவது. ஒன்று கெட்டு ஒன்று தானே முடியும். இவற்றில் எது விடத்துக்கது. எது செய்த்தக்கது, இவ்விரண்டில் பிதுர்வாக்யமே மேலானதென்று

* "யஸ்யோச்சாரண மாத்ரேண ஸித்திர்ப்பவதி ஸாஸ்வதீ, வ்யாஜே நாபிஹி பீஜஸ்ய வாக்பவாய விசேஷத:" "சம்யக் சர்வாத்மநாசர்வை ஸ்ஸர்வ காமார்த்த சித்தயே, ஸ்மர்த்தவ்யா சர்வதாதேவீ வாஞ்சிதார்த்த ப்ரதாயிநீ"

கூறியிருக்கின்றபடியால் அதுவே செய்யத்தக்கதென்று துணி வேட்டையாடச் சென்றனன்.

(கக - உள) அவ்வேட்டை, அன்று அரசன் அரண்ம சேராவண்ணம் பொழுதைப்போக்கி அவனை இர அவ்விடத்திற்றானே தங்கியிருக்கச்செய்தது. அப்பொழுது அ தன்மனையாளை நினைத்து இன்று நம்முடைய மனைய ருதுஸ்நான முடையவளா யிருந்தும் அவளைக் கூடுதற்கில்லா போயிற்றே, அவளைக் கூடவேண்டிய நாளி லொருநாள் வீணாயிற் என்றேங்கி அவளுடைய அங்கங்களை எல்லாம் ஒவ்வொன் நினைத்து நினைத்து மயங்கியிருக்கும் பொழுது அவனது வீரி வெளிப்பட்டது. அதனை அரசன் பூமியில் வீணாய்ப்போக வி ஓராலிலையிற் பிடித்துவைத்துக்கொண்டு அந்தோ! இந்த வீரி வீணாய்ப் போகத் தக்கதன்று, இது * அமோகம் சிசு உற்பத் கேதுவாயுள்ளது; ஆகையால் இது இன்று எவ்விதத்திலாவது நம் மனைவியினுடைய கர்ப்பத்திற்போய்ச் சேரவேண்டும் என்று மனதி நிச்சயிக்கும் பொழுது தன்னருகில் ஓர் கழுகிருக்கக்கண்டா அக்கழுகைப்பார்த்து ஓ பக்ஷிராசனே? உன்னால் எனக்கொரு உபகா ஆகவேண்டும், அதனைத் தட்டாமல் நீ செய்யவேண்டும் என்னையெனில், இந்த வீரியத்தை வாங்கிக் கொண்டு என்னுடை கிருகத்தை யடைந்து கிரிகா என்னும் என்மனையாளிடத்தி சேர்த்துவிட வேண்டும் என்று கூறி, தொன்னையிலுள்ள வீரியத்தை எதனாலுங் கெடுதி நேரிடாவண்ணங் காத்தற்பொருட்டு அபிமந்திரித்த அதன் கையிற்கொடுத்தனுப்பினன். அப்பக்ஷி ராசன் தன் மூக்கினாற் கவ்வி எடுத்துக்கொண்டு அதிவேகமா யாகாயத்திற் தன் மூக்கினாற் கவ்வி எடுத்துக்கொண்டு அதிவேகமா யாகாயத்திற் பறந்து போகும்பொழுது மற்றொரு கழுகானது இதனை மாமிசகண்ட மென்றெண்ணி, அதிவேகமாய்ப் பின்றொடர்ந்து இறகினாலும் மூக்கினாலும் அடித்துங் குத்தியும் பிடிங்கிக்கொண்டு போகப் பிரயத் தனப்பட்டது. அதனாற் கவர்ந்துகொண்டு போவதற்கு இடங்கொடாமல் இக்கழுகு அதனைப் பாதுகாத்துவரும்பொழுது தெய்வ கதியாய்த் தவறி பெருவெள்ளங் கொண்டுவரும் யமுனா நதியில் விழுந்தது. பக்ஷிகளிரண்டும் போராடிக்கொண் டோடிப்போய் விட்டன.

(உஅ - சுஅ.) நதியில் விழுந்த வீரியமானது அவ்வெள்ளத்தில் மிதந்துகொண்டுவர, அதனை ஓர் மச்சம் விழுங்கிவிட்டது. ஓ முனிவர்காள்! இனி அம்மச்சத்தின் வரலாற்றைக் கூறுகின்றேன்

* மோகம்-கெடுதியடையத்தக்கது. அமோகம்-கொடுதியடையத்தகாதது.

கேளுங்கள். அந்த மச்சம், அத்ரிகை என்கிற தேவமங்கை. அவள் அந்நதியில் ஸ்நானஞ்செய்து கிரீடித்துக்கொண் டிருக்கும்பொழுது, ஓர் பிராஹ்மணன் சந்தியாவந்தன நிமித்தம் அந்நதியி லிறங்கினன். அப் பிராஹ்மணன் காலை அந்த அப்சரஸ்திரீயானவள் பிடித்திழுத்தனள். பிராஹ்மணன் திடுக்கிட்டு நமது காலைப் பிடித்திழுப்பது சலஜெந்துவோ, அரக்கனோ, என்றாலோசித்து ஞானதிருஷ்யால் நோக்கித் தனது தவத்தைக்கெடுக்கவந்த ஓர் அப்சரஸ்திரீ என்றறிந்து கோபங்கொண்டு நீ நீரில்வாழுமுயிரைப்போல் என்னுடைய காலைப்பற்றி யிழுத்து சந்தியாவந்தனத்துக்கு இடையூறு செய்தமையால் மச்சமாகக்கடவாய் என்று சபித்தனர். இந்தச் சாபமேற்ற மச்சந்தான் அந்த வீரியத்தை விழுங்கியது. பின்னர் தேவமங்கையாகிய இந்த மச்சங் கர்ப்பமாயுலாவிக் கொண்டிருக்க, ஓர்நாள் ஓர்வலைஞன் வந்து வலைவீச, அவ்வலையிற் சிக்கிக்கொண்டது. அப்பொழுது அதற்குக் கர்ப்பமாசம் *பத்து. வலையிற் சிக்குண்ட அம்மச்சத்தை வலைஞன்கண்டு ஆச்சரியமடைந்து அதன்வயிற்றை யிரண்டாகப் பிளந்தனன். அதில் ஒரு ஆண்குழந்தையும், ஒரு பெண்குழந்தையும் இருக்கக்கண்டு இது வென்னவிந்தையினும் விந்தையாக விருக்கின்றதே என்று அந்த இரண்டு குழந்தைகளையும் உபரிசரனாகிய அரசனிடத்திற் கொண்டுபோய்க் கொடுத்தனன். அவன் அக்குழந்தைகள் தன் வீரியத்திற்குப் பிறந்தனவாமென்றறிந்து, ஆண்குழந்தையை வைத்துக்கொண்டு, பெண்குழந்தையை அவ் வலைஞனிடத்திலேயே கொடுத்து இக்குழந்தையை, காளி, அல்லது மத்ஸ்யகந்தி என்றழைக்கக்கடவாய் என்று கட்டளையிட்டனுப்பினன். அவ்வலைஞன் அப்பெண்குழந்தையை வீட்டுக்குக் கொண்டுபோய் அன்போடு வளர்த்துவருநாளில் அக்குழந்தை மேனியில் மச்சநாற்றம் வீசத்தலைப்பட்டது. அதுகண்ட யாவரும் காளியென வழைக்காமல் மச்சகந்தி, என்றே யழைத்து வந்தனர் என்று சூதமுனிவர் கூறும்பொழுது, சவுநகர் இவள் தாயாகிய அத்ரி என்னகதியடைந்தனள், அதனைச் சொல்லவேண்டும் என்ன; சூதர் ஓ முனிவர்களே! அப்சரஸ்திரீயாகிய அந்த அத்திரி தனக்குச் சாபமிட்ட அப் பிராமணரை அப்பொழுதே யடிபணிந்து ஓ அந்தணரே! நீர் யாவரிடத்துங் கருணையுடைய வராயிற்றே! அதனிற் சிறிது என்பால் வைத்து ஓர் விமோசனஞ் செய்யக் கூடாதாவென்று பிரார்த்திக்கும்பொழுது மனமிரங்கினவராய், ஓ சுந்தரமுடையவளே! சிறிது காலஞ்சென்றபின் நீ கர்ப்பவதியாய் இரண்டு பிள்ளைகளைப் பெறுவாய்; அக்காலத்தில்

* உண்டது மானு:- வீரியமாகையால் சலசரங்களுக் குரியனபோலா காது மாசம் பத்தாயிற்று.

கூறியிருக்கின்றபடியால் அதுவே செய்யத்தக்கதென்று துணிந்து வேட்டையாடச் சென்றனன்.

(க்சு - உள) அவ்வேட்டை, அன்று அரசன் அரண்மனை சேராவண்ணம் பொழுதைப்போக்கி அவனை இரவில் அவ்விடத்திற்றானே தங்கியிருக்கச்செய்தது. அப்பொழுது அரசன் தன்மனையாளை நினைத்து இன்று நம்முடைய மனையாட்டி ருதுஸ்நான முடையவளா யிருந்தும் அவளைக் கூடுதற்கில்லாமற் போயிற்றே, அவளைக் கூடவேண்டிய நாளி லொருநாள் வீணாயிற்றே என்றேங்கி அவளுடைய அங்கங்களை எல்லாம் ஒவ்வொன்றாக நினைத்து நினைத்து மயங்கியிருக்கும் பொழுது அவனது வீரியம் வெளிப்பட்டது. அதனை அரசன் பூமியில் வீணாய்ப்போக விடாது ஓராலிலையிற் பிடித்துவைத்துக்கொண்டு அந்தோ! இந்த வீரியம் வீணாய்ப் போகத் தக்கதன்று, இது * அமோகம் சிசு உற்பத்திக் கேதுவாயுள்ளது; ஆகையால் இது இன்று எவ்விதத்திலாவது நமது மனைவியினுடைய கர்ப்பத்திற்போய்ச் சேரவேண்டும் என்று மனதில் நிச்சயிக்கும் பொழுது தன்னருகில் ஓர் கழுகிருக்கக்கண்டான். அக்கழுகைப்பார்த்து ஓ பக்ஷிராசனே ? உன்னால் எனக்கொரு உபகாரம் ஆகவேண்டும், அதனைத் தட்டாமல் நீ செய்யவேண்டும். என்னையெனில், இந்த வீரியத்தை வாங்கிக் கொண்டு என்னுடைய கிருகத்தை யடைந்து கிரிகா என்னும் என்மனையாளிடத்திற் சேர்த்துவிட வேண்டும் என்று கூறி, தொன்னையிலுள்ள வீரியத்தை எதனாலுங் கெடுதி நேரிடாவண்ணங் காத்தற்பொருட்டு அபிமந்திரித்து அதன் கையிற்கொடுத்தனுப்பினன். அப்பக்ஷி ராசன் தன் மூக்கினாற் கவ்வி எடுத்துக்கொண்டு அதிவேகமா யாகாயத்திற் தன் மூக்கினாற் கவ்வி எடுத்துக்கொண்டு அதிவேகமா யாகாயத்திற் பறந்து போகும்பொழுது மற்றொரு கழுகானது இதனை மாமிசகண்ட மென்றெண்ணி, அதிவேகமாய்ப் பின்றொடர்ந்து இறகினாலும் முக்கினாலும் அடித்துங் குத்தியும் பிடுங்கிக்கொண்டு போகப் பிரயத் தனப்பட்டது. அதனாற் கவர்ந்துகொண்டு போவதற்கு இடங்கொடாமல் இக்கழுகு அதனைப் பாதுகாத்துவரும்பொழுது தெய்வ கதியாய்த் தவறி பெருவெள்ளங் கொண்டுவரும் யமுனா நதியில் விழுந்தது. பக்ஷிகளிரண்டும் போராடிக்கொண் டோடிப்போய் விட்டன.

(உஅ - சுஅ.) நதியில் விழுந்த வீரியமானது அவ்வெள்ளத்தில் மிதந்துகொண்டுவர, அதனை ஓர் மச்சம் விழுங்கிவிட்டது. ஓ முனிவர்காள்! இனி அம்மச்சத்தின் வரலாற்றைக் கூறுகின்றேன்

* மோகம்-கெடுதியடையத்தக்கது. அமோகம்-கொடுதியடையத்தகாதது.

கேளுங்கள். அந்த மச்சம், அத்ரிகை என்கிற தேவமங்கை. அவள் அந்நதியில் ஸ்நானஞ்செய்து கிரீடித்துக்கொண் டிருக்கும்பொழுது, ஓர் பிராஹ்மணன் சந்தியாவந்தன நிமித்தம் அந்நதியி லிறங்கினன். அப் பிராஹ்மணன் காலை அந்த அப்சரஸ்திரீயானவள் பிடித்திழுத்தனள். பிராஹ்மணன் திடுக்கிட்டு நமது காலைப் பிடித்திழுப்பது சலஜெந்துவோ, அரக்கனோ, என்றாலோசித்து ஞானதிருஷ்யால் நோக்கித் தனது தவத்தைக்கெடுக்கவந்த ஓர் அப்சரஸ்திரீ என்றறிந்து கோபங்கொண்டு நீ நீரில்வாழுமுயிரைப்போல் என்னுடைய காலைப்பற்றி யிழுத்து சந்தியாவந்தனத்துக்கு இடையூறு செய்தமையால் மச்சமாகக்கடவாய் என்று சபித்தனர். இந்தச் சாபமேற்ற மச்சந்தான் அந்த வீரியத்தை விழுங்கியது. பின்னர் தேவமங்கையாகிய இந்த மச்சங் கர்ப்பமாயுலாவிக் கொண்டிருக்க, ஓர்நாள் ஓர்வலைஞன் வந்து வலைவீச, அவ்வலையிற் சிக்கிக்கொண்டது. அப்பொழுது அதற்குக் கர்ப்பமாசம் *பத்து. வலையிற் சிக்குண்ட அம்மச்சத்தை வலைஞன்கண்டு ஆச்சரியமடைந்து அதன்வயிற்றை யிரண்டாகப் பிளந்தனன். அதில் ஒரு ஆண்குழந்தையும், ஒரு பெண்குழந்தையும் இருக்கக்கண்டு இது வென்னவிந்தையினும் விந்தையாக விருக்கின்றதே என்று அந்த இரண்டு குழந்தைகளையும் உபரிசரனாகிய அரசனிடத்திற் கொண்டுபோய்க் கொடுத்தனன். அவன் அக்குழந்தைகள் தன் வீரியத்திற்குப் பிறந்தனவாமென்றறிந்து, ஆண்குழந்தையை வைத்துக்கொண்டு, பெண்குழந்தையை அவ் வலைஞனிடத்திலேயே கொடுத்து இக்குழந்தையை, காளி, அல்லது மத்ஸ்யகந்தி என்றழைக்கக்கடவாய் என்று கட்டளையிட்டனுப்பினன். அவ்வலைஞன் அப்பெண்குழந்தையை வீட்டுக்குக் கொண்டுபோய் அன்போடு வளர்த்துவருநாளில் அக்குழந்தை மேனியில் மச்சநாற்றம் வீசத்தலைப்பட்டது. அதுகண்ட யாவரும் காளியென வழைக்காமல் மச்சகந்தி, என்றே யழைத்து வந்தனர் என்று சூதமுனிவர் கூறும்பொழுது, சவுநகர் இவள் தாயாகிய அத்ரி என்னகதியடைந்தனள், அதனைச் சொல்லவேண்டும் என்ன; சூதர் ஓ முனிவர்களே! அப்சரஸ்திரீயாகிய அந்த அத்திரி தனக்குச் சாபமிட்ட அப் பிராமணரை அப்பொழுதே யடிபணிந்து ஓ அந்தணரே! நீர் யாவரிடத்துங் கருணையுடைய வராயிற்றே! அதனிற் சிறிது என்பால் வைத்து ஓர் விமோசனஞ் செய்யக் கூடாதாவென்று பிரார்த்திக்கும்பொழுது மனமிரங்கினவராய், ஓ சுந்தரமுடையவளே! சிறிது காலஞ்சென்றபின் நீ கர்ப்பவதியாய் இரண்டு பிள்ளைகளைப் பெறுவாய்; அக்காலத்தில்

* உண்டது மானு:- வீரியமாாகையால் சலசரங்களுக் குரியனபோலா காது மாசம் பத்தாயிற்று.

சாப விமோசனமுண்டாய் சுவர்க்கலோக மடையக்கடவாய் என்றனுக்கிரகஞ் செய்தனர். ஆகையால் ஓ முனிவர்களே! அதுபோல் பிள்ளைகளைப் பெறவேண்டிய பத்தாவது மாசத்தில் வலைஞன் கைப்பட்டிறக்கப்பெற்று சுவர்க்கமடைந்தனளென்று அறிமின்கள். பின்னர், வலைஞனால் வளர்க்கப்பட்ட மத்ஸ்யகந்தியானவள் தன்னை வளர்த்துவந்த தாய்தந்தையர் மனமகிழ நடந்துவந்தனள்.

இரண்டாவது ஸ்கந்தம் முதலத்யாயம் மத்ஸ்யகந்தி உற்பத்தி முற்றிற்று.

அத்யாயம் ஒன்றுக்கு ஸ்லோகம் - சஅ

ஸ்ரீ தேவ்யைநம:

இரண்டாம் அத்தியாயம்

வி யா சோ த் ப த் தி.

சூதர் சௌநகாதியரை நோக்கி ஓ முனிவர்களே! முன் மத்ஸ்ய கந்தியினுடைய பிறப்பின் முறைமையைக் கூறினேம். இனி அவளிடத்தில் வியாசர் உற்பத்தியான முறைமையைக் கூறுகின்றேம்.

(க-ரு). முனிவரிற்சிறந்த பராசரமுனிவர் ஓர் காலத்தில் தீர்த்தயாத்திரை செய்துவரும்போது காளிநதி என்னும் உத்தமமாகிய யமுனா நதிக்கரையில் வந்து அந்நதியைக் கடத்தற்கு அங்கிருந்த ஓடக்காரனாகிய தாசன் என்னும் வலைஞனைப் பார்த்து என்னை ஓடத்திலேற்றிக் கொண்டுபோய் அக் கரையில் விடுவையா வென்று கேட்க, அவனப்போது ஆகாரங்கொள்ளுஞ் சமயமாயிருந்தபடியால் அம்முனிவரை நோக்கி ஓ சுவாமிகாள்! யான் ஆகார முண்ட பின்னர் உம்முடைய இஷ்டம்போல விடுகிறேனென்று கூறினன். முனிவர் அப்பா! யான் அதுபரியந்தம் இருக்கமுடியாது; சீக்கிரமாய்ப் போகவேண்டும் மென்ன, அவன் அப்படியானால் இதோ என்னருமை மகளிருக்கிறாள் அவளை யனுப்புகிறேன் னென்று உபசாரத்தோடு கூறி, தனக்குப் பிரியையாய் தன்னால் வளர்க்கப்பட்ட மச்சகந்தியைப் பார்த்து ஓ குழந்தாய் இம் மஹாநுபாவரை ஓடத்தி லேற்றிக்கொண்டு அக்கரையில் விட்டுவருவா யென்று கூற, மச்சனாற்றம் இடைவிடாது சரீரத்தில் வீசுவதனால் மச்சகந்தியெனப் பெயர் பெற்ற அப்பெண் அவ்

வலைஞனை வணங்கி உம்முடைய கட்டளையின்படியே தவசிரேஷ்டராகிய முனிவரை, விட்டு வருகின்றேனென்று விடைபெற்று அம்முனிவர்பாற் சென்று ஐயா தர்மாத்மாவே! தவசிரேஷ்டரே! விரதசீலரே! இதோ ஓடங் கொண்டு வந்து விட்டேன் வாரும், இவ் வோடத்தி லேறும் ஏறும் உம்முடைய ஆசாரத்திற்குக் குறைவின்றிக் கொண்டுபோய் விடுகிறேன் என்று பல மதுரமொழிகளைக்கூறி அவரை ஏற்றிக்கொண்டு ஓடத்தை விட்டனள்.

(சு - கசு.) முனிவர் அவ் வோடம் போகும்பொழுது அவள் அசைந் தசைந்து ஒய்யாரமாய்ப் போவதையும் அவளுடைய ரூபலாவண்ய சௌந்தரியங்களையும் நன்றாய்க் கவனித்துப் பார்த்து ஊழ்வகையால் காமவெள்ளத்தில் மூழ்கிக் கரையேறமாட்டாது இனி நாம் என்செய்வோம்? நமக்கு யாதொரு பற்றுக்கோடு மில்லையே என்றெண்ணி ஏக்கமுற்றுத் தள்ளாடித்தள்ளாடி, அவள் சமீபத்திற் சென்று அவளுடைய வலக்கரத்தைப் பிடித்துக் கொண் டெழுந்தனர். இதனைக்கண்ட மச்சகந்தி தன்கையைப் பிடித்த முனிவரைப் பார்த்து இது என்னகொடுமை! உம்முடைய புத்தி இப்படியும் மோசம்போகலாமா? என் கையைப் பிடித்தது எதற்றுக்கு? நல்லகுலத்திற் பிறந்தவராயும், ஆசார சீலராயும், ஞானவைராக்ய முடையராயுமிருக்கிற நீர் இப்பொழுது அவைகளை மறந்து குலமுதலியவற்றிலிழந்த என்னுடைய கரத்தை எப்படி பிடிக்கத் துணிந்தீர்? மன் மதனுடைய வேதனைக்குள்ளானீரே! உலகில் மானுடப்பிறப்புவருவது அரிது, அதனினுமரிது பிராஹ்மணனாகப் பிறத்தல், அதனினுமரிது பிராஹ்மணத்வ முண்டாதல், என்று வேதங்கள் கூறுகின்றனவல்லவா? அவ்வேத மொழியையுங் கைவிட்டீரே? ஓ விப்பிரேந்திரரே! என் சமீபத்திலெப்படி யிருக்கின்றீர்? என் சரீரத்தில் மச்சநாற்றம் வீசுகின்றதே அது உமக்கு வீசவில்லையா? உலகில் ஸ்திரீ புருஷாளிருவரும் குலத்திலும் ஆசாரத்திலும் அழகிலும் ஒத்திருந்து கூடுவாராயின் அவர்களுக்குச் சுகமுண்டாகுமேயன்றி இவை மாறுபட்டவர்களுக்குச் சுகமெப்படி யுண்டாகும்! ஆகையால் நீர் என்னைக் கைப்பற்றியதும் என் சமீபத்திலிருப்பதும் ஆகிய இச்செய்கைகள் எனக்கு அருவருப்பைத் தருகின்றன. அருவருப் படைந்திருக்கிற என்னிடத்தில் உமக்கு எப்படிச் சுகமுண்டாகும்! மந்தபுத்தி யுடையவரே! பின்வருவதை ஆலோசியாமல் திடீரென்று என் கையைப்பிடித்தீரே! அப்பொழுது நான் பயந்தாவது அல்லது நம்முடையகையை இவர் பிடிக்கலாமா என்றெண்ணியாவது இவ்வோடத்தைக் கவிழ்த்து விடுவேனாயின் நீர் என்செய்வீர். என்னையு மிழந்து உம்முயிரையு மிழந்து விடுவீரே!

உம்மால் வஞ்சனையில்லை. மன்மதனுடைய பஞ்சபாணங்களி லகப்பட்டவர்களில் யாவர் பிழைத்தனர். என்றுகூறிய மொழியை முனிவர்கேட்டுச் சிறிது திடுக்கிட்டனர். அதுகண்ட மச்சகந்தி ஓ முனிவரே! என்ன திகிற்படுகின்றீர், நான் ஓடத்தைக் கவிழ்த்து விடுவே னென்றால் நான் கவிழ்ப்பேனா! நீர் அஞ்சாதிரும் என்று கூறினள். இம்மொழிகளைக் கேட்ட முனிவர் இவளுடைய சாகசக்யமாயிருக்கிற ஹிதமொழிகளை யூகித்து இவள் வலைஞர் மகளாயினும் அறிவிற் சிறந்தவளே என்று தன்னுள்ளே மகிழ்ந்தவராய் அடியில்வருமாறு கூறுகின்றார்.

(கரு - உசு) ஓ பெண்மணியே! என்னை மந்தபுத்தி யுடையவனென்றும், மன்மதபாணத்தால் வருந்துகின்ற அறிவிலியென்றும், இழித்துக்கூறினா யாயினும் யான் உன்பாற்கொண்ட மோகத்தை விடக்கூடவில்லை என்று அவள் கையைவிட்டு மனதில் சில எண்ணுமளவில் அப்பெண் கரைசேர்த்தனள். முனிவர் கரைசேர்ந்தவுடன் அப்பெண் எங்கு போய்விடுவளோவென்று மீளவுங் கையைப் பிடித்துக்கொண்டு. ஓ சுந்தரீ! உன் சரீரம் மச்சநாற்றம் வீசுகின்ற தென்றல்லவா கூறினை, இப்பொழுதே அந்நாற்றம் பரிமள நாற்றமாக விசச் செய்கின்றேனென்று தன் தபோபலத்தினால் அவ்வாறே செய்து சத்யவதீ யென்று பெயரிட்டு ஓ சத்யவதீ யென்றழைத்து நீ முன் மச்சகந்தியா யிருந்தபடியால் எனக்கு நீ ஒத்தவ ளன்றென்று கூறினாய். இப்பொழுது பரிமளகந்தியானதால் இனி எனக்கு நீ ஒத்தவள்தானே, இனி காமசுக முண்டாவதற்குத் தடையென்னை! உன் பரிமளமானது ஒருயோசனைதூரம் மிருகமதம்போல் வாசம் வீசுகின்றது என்று சரசமொழிகளைக்கூற; அப்பெண் இனி யான் உம் மிஷ்டம்போ லிணங்கத் தக்கவளாயினும் இப்போது பகற்காலமா யிருப்பதனால் சங்கமஞ்செய்வ தெப்படி! காலம்நோக்காது சங்க மஞ்செய்வது மிருகங்களினுடைய தருமமல்லவா! இது மாநுடதருமமாருமா! இம்மார்களல்லவா! ஆகையால் இராப்பொழுது வருமனவும் மன்மதவேதையைச் சிறிது பொறுத்திருப்பீராயின் அப்போது ஒழித்துவிடுகிறேன் என்று கூறினள். முனிவர் அதற்குடன்பட்டவராகி அந்த யமுனாதீர்த்தத்தைக் கையிலள்ளி மந்திரித்து ஆகாயத்தில் வீசினர். உடனே இருள் எங்கும்மூடியது. அப்பொழுது முனிவர் ஓ சத்யவதீ! இதோ இருள்வந்துவிட்டது என்னசொல்லுகிறாய் என்று கேட்க, அவள் ஐயா உமக்குக் காமமிகுதியினால் உண்டாயிருக்கும் வீரியம், அமோகம். என்னைப் புணர்வீராயின் புத்திரோற்பத்தி உண்டாவதற்கும், புணர்ந்தபின் நீர் சார்த்தூலம் போல் என்னைவிட்டு வேகமாய்ப்

போவதற்கும் யாதொருசந்தேகமுமில்லை. யான் உம்மைவிட்டு பிதாவையும்விட்டு குழந்தையையும் பெற்று இவ்வாற்றங்கரையே கதியாகக்கிடந்து இம்மார்க்கத்தில் செல்கின்றவர்களால் சோரஸ்திரீயென் றிகழப்பட்டு இவ்விகழ்ச்சியைக் கேள்வியுறும் பந்துக்களால் தள்ளப்பட்டு பாழ்பட்டுப்போவதா உமக்குண்டாகிய காமநோயைப் பரிகாரஞ்செய்யுமெனக்கு நீர் செய்யு முபகாரம்! என்று வினவினள்! முனிவர் இரக்கமுற்றவராய் ஓ சத்யவதீ! இப்போது நீ அடைந்திருக்கும் சௌந்தரியமான மங்கைப் பருவம் என் சுகத்தின் பொருட்டேயாகும்; நான் சென்றபின்னர் நீ முன்போல் கன்னியாகவே யிருப்பாய் என்று கூறினர். இவள் முன்போ லாவாயென்றதனால் மச்சகந்தியாக ஆவோமோ என் றையமுற்றவளாய் முனிவரைப் பார்த்து முன்போல் கன்னிகையாவதிற் சந்தோடமாயினும் மச்சநாற்றம் வீசுவதில் அசூயை யுடையவளா யிருக்கின்றேன் என்ன. முனிவர். உனக்கிடையிடையே எந்த சந்தேகமும் தோன்றுவதற் கிடமில்லாமல் உனக்காக வேண்டிய எல்லா நன்மைகளையும் இப்பொழுதே கூறுகின்றேன்.

(உஎ - ஙOஇ) என்னையெனில், நீ கன்னிகைப் பருவமுடைய வளாயும், மச்சகந்தி என்கிற பெயர் வழங்குவதொழிந்து எப்பொழுதும் பரிமளகந்தி சத்யவதீ என்கிற பெயரா னழைக்கப்பட்டவளாயும், சோரஸ்திரீ என்கிற இகழுரை வெளிப்படாமல் கற்பிற் சிறந்த மங்கையென்று யாவராலும் புகழப்பட்டவளாயும், இனி உன்னால் விரும்பப்பட்டவனாகிய புருடனே உனக்குக் கணவனாக வரும் பாக்கிய சீலமுடையவளாயு மாவாய். அன்றியும் இப்போழுது என்னால் உனக்குண்டாகப் போகிற புத்திரன், விஷ்ணுவினுடைய அம்சபூதனாயும், சுகியுடையவனாயும், சகல வேதங்களையும் ஓதாதுணர்பவனாயும், அவைகளின் பொருளுணர்ந்து முறையாக விபாகப்படுத்தும் ஜ்ஞானமுடையவனாயும், அதுபோலவே வேதார்த்தங்களை மலைவுபடுத்தா துணர்த்தவல்ல புராணங்களை வகைப்படுத்துங் கர்த்தாவாயும், மூன்றுலகத்திலும் பிரசித்தி யுடையவனாயும் விளங்குவான். (இச்செய்தி யிங்ஙனமிருக்க)

(ஙக - ருகஇ) ஓ சுந்தரீ! எனக் கெப்பொழுதும் மோகமுண்டானது கிடையாது. ஆனால் நான் ஸ்திரீகளைப் பார்ப்பதில்லையா, அதிக ரூபலர்வண்யத்தோடுங் கூடியிருக்கின்ற அரம்பை முதலிய ஸ்திரீகளைப் பார்ப்பதுண்டு. அப்பொழுதெல்லாம் தயிரியம் (வைராக்கியத்தை) வகித்திருந்தேன். அப்படிப்பட்ட நான் உன்னிடத்தில் காமநோய்கொண்டு பரிதவிப்பது ஓர் காரணத்தாலென்று நீ யறிந்துகொள்வாய். அக்காரணமாவது விதி, அவ்விதிகூட்டிய

காரணத்தால் உன்னைப் பார்த்தவுடனே மன்மதன்வசமாயினேன் விதியைக்கடப்பதற்கு ஒருவராலு முடியாது. இதற்கொரு ஞாயங்கூறுகிறேன் கேட்பாயாக. நீயோ சுந்தரமுடையவளாயினும் சமீபிப்பதற்குக்கூடாத துர்க்கந்தத்தோடுங் கூடினவள். நானோ அதி பரிசுத்தத்தோடுங் கூடினவன். இப்படிப்பட்ட நான் உன்னைப் பார்த்தவுடன் துர்க்கந்தமே தோன்றாமல் எப்படி மோகத்தை யடைந்தேன் என்று முனிசிரேஷ்டராகிய பராசரர், தன் சுவாதீனையா யிருக்கிற சத்யவதியினிடத்தில் இவ்வண்ணங்கூறிப் பின்னர் அவருடைய சுகானுபோகத்தையடைந்து, காளிந்தியாகிய யமுநாநதியில் ஸ்நானஞ்செய்து அதிசீக்கிரமாய் ஆரணியத்தை நோக்கிச் சென்றனர். பதிவிரதையாகிய சத்யவதி பராசர முனிவரைக் கூடியபொழுதே கர்ப்பவதி யாயினாளாகையால் பராசர முனிவர் சென்றவுடன் அந்நதிக்கரையில் இரண்டாவது மன்மதனோ இவனென்று கண்டோர் சொல்லும்படி மஹாதேஜஸோடுங்கூடிய ஓர் பிள்ளையைப் பெற்றனள். அப்பிள்ளை பிறந்தவுடன் தாய் முகத்தைப் பார்த்து ஹேமாதா! ஹே மஹாநுபாவினீ! உனக்கு மிகவும் உத்தமமானகாலம் எப்பொழுதுண்டாகுமோ அப்பொழுதும், நீ நினைக்குங் காலத்திலும் உன்னிடம் வந்து சேருவேன். உனக்கு மங்களம் உண்டாகுக. உன்னிஷ்டப்படி போகுமிடத்திற் போகக்கடவாய், நானும் போகின்றேன். என்னைப் பிரிவதில் நீ சிந்தனைப் படுவதைவிட்டு சுகமாகவசித்துக் கொம்டிருப்பாய்; என்று சொல்லிவிட்டெமிகுந்த தபோபலத்தினாற் பிறந்தவராதலால் தவமியற்றுவதில் மனவூக்கமுடையவராய்த் தவத்தையே புரிய வனத்தை நோக்கிச் சென்றனர். அவர் தாயாகிய சத்யவதியும் தன் பிதாவினிடம் போய்ச் சேர்ந்தனள். பின்னர் இந்த *த்வைபாயனர் தீர்த்தங் கடோறுஞ் சென்று ஸ்நானஞ் செய்து மேலான வேத கர்மங்களை யெல்லாம் விடாது அநுஷ்டித்து இனிவரப் போகிற கலியின் கொடுமையை எண்ணி வேதசாகைகளை வரையரை செய்து அதனால் வேத வியாசரெனப் பெயர்பெற்று வேதங்களை வகுத்துப் பின்னர் புராண சங்கிதைகளையும், மஹாபாரதத்தையுஞ் செய்தருளினர். அன்றியும் தம்மால் விபாகஞ் செய்யப்பட்ட வேத முதலிய கலைகளை சுமந்து, ஜயிமினி, பயிலர், வைசம் பாயனர், அசிதர், தேவலர், தமது குமாரராகிய சுகர், ஆகிய இம் மஹாருஷிக ளுக்கு அத்யயன முறையாக உபதேசஞ் செய்துவந்தனர் என்று கூறிய சூதமுனிவரை சவுநகாதியர் பணிந்து ஓஓ போதகாசிரியரே! சகல சம்பன்னராகிய வியாசரது தவநிலை முதலிய நெறிகளைக் கேட்கும்பொழுது ஆனந்தகரமும், அவரது தாய்

* நதிக்கரையில் பெற்று அவ்விடத்தில் வைக்கப்பட்டவர்-த்வீபம்-கரை.

தந்தைய ருடைய வரலாற்றைக் கேட்கும்பொழுது அதிருப்தியும் எங்களுக்குண்டாகின்றன. ஏனெனில், ஆசாரசீலர்களால் அருவருக்கத்தக்க மச்சநாற்றத்தோடுகூடிய ஓர் பெண்ணை, தர்மஜ்ஞராகிய பராசரமுனிவர் கண்ட மாத்திரத்தில் எப்படி அவர் மனங் காமநோயையடைந்து *அவிவேகிகளால் செய்யப்பட்ட செயலைகச் செய்யத் துணிந்தது. இவரோடு புணர்ந்த மச்சகந்தி பரிமளகந்தத்தையும், சத்யவதீ என்கிற பெயரையும் பெற்றபின்னர் சந்தநு என்கிற அரசனுக்கு மனைவியாயிருக்க எப்படி துணிந்தனள் என்றனர். சூதர் ஓ முனிவர்களே! மஹத்துக்களுடைய சரித்திரங்களில் குணங்களையே கிரஹிக்கத்தக்கவை. ஏனைய வெல்லாங் கழிக்கத்தக்கவை. இந்த வியாசர் அந்த மச்சகந்தி கர்ப்பத்திற் பிறக்க வேண்டிய விதி என்கிற காரணமொன்றிருந்தபடியினால் பராசரர் காமவசத்தராயினர். இந்த நியாயம் சதயவதிக்குப் பராசரர் கூறியதை முன்னங்கூறியிருக்கிறேன். அந்த நியாயத்தை நீங்களும் ஆராய்ந்து தெளிவீர்களாக. வியாசர் சத்யவதிக்குப் பிறந்தவராயினும், அவருடைய அவதாரம் மிகவும் மங்களகரமுடையது. இதிற் சந்தேகங் கொள்ளாதீர்கள். காரணத்தோடு கூடியதாகியும், கேட்கின்றவர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறதாகியுமுள்ள இவரது அவதாரத்தை வேதசம்பன்னனாகிய எந்த மானுடன் கேட்கின்றானோ அவன் அந்தக்கணமே சகலபாபங்களினின்றும் விடுபடுகிறான். அவனெப்பொழுதுந் துர்க்கதியடைகிறதில்லை. இவ்வுலகிலும் அவ்வுலகிலும் சுகத்தையே அனுபவிப்பான்.

இரண்டாவது ஸ்கந்தம் இரண்டாவது அத்யாயம் வியாசர் உத்பத்தி முற்றிற்று

ஆஉ அத்யாயம் ஸ்லோகம் - கூகூஇ

ஸ்ரீத்ரிபுரசுந்தர்யைநம:

முன்றாம் அத்தியாயம்

*** கங்காயா : ஸாபப்பிராப்தியாதிகதனம்**

(க-கக.) ஓ சர்வஜ்ஞராகிய சூதமுனிவரே! இதுவரையில் சத்யவதியினுடைய உத்பத்தி முதலிய வற்றையும், வியாசருடைய

✲ அவிவேகி - அறிவீனன்

* கங்காதேவிக்குச் சாபம் நேரிட்டகாரண முதலிய கூறுதல்.

உத்பத்தியையும் விரிவாய் அனுக்ரகஞ் செய்தீர். யாங்கள் முன்வினாவிய வினாக்களிற் சிலவற்றிற்கு விடைவராமையால் மீளவுங் கேட்கத் தொடங்கினோ மென்று சவுநகாதியர் வினாவலுற்றனர். என்னை யெனில், வியாசருடைய தாயாகிய சத்யவதீ சந்தநுமஹா ராஜாவை எப்படியடைந்தாள்? இவ்வரசன் தர்மஜ்ஞனும், நல்ல குலத்திற் பிறந்தவனுமாக விருக்க, அவன் குலஹீனையாகிய இவளை மனைவியாக எப்படி வகித்துக்கொண்டான்? சந்தநு சத்தியவதியை வகித்துக்கொள்வதற்குமுன் அவனுக்கிருந்த தர்மபத்னி என்ன கதியாயினாள்? அஷ்டவசுக்களுடைய அம்சமாகிய பீஷமர் இவ்வரசனுக்கு எப்படி மகனாகப்பிறந்தனர்? சந்தநுவைச் சேர்ந்த சத்யவதிக்குச் சித்திராங்கதன், விசித்திர வீரியன் என்று இரண்டு பிள்ளைகள் பிறக்க, அவ்விரண்டு பிள்ளைகட்கும் முறையே முன் பின்னாகப் பட்டாபிஷேகஞ் செய்ய எப்படி தர்ம சாஸ்திரம் இடங் கொடுத்தது? பீஷ்மர் ஜேஸ்டராக விருக்கத்தாம் அரசுக்குரிமை யாகாமல் அவ்விருவரையுமே உரிமையாக்கி அரசாளும்படிச் செய்தது யாதுகாரணம். இந்த இரண்டுபிள்ளைகளும் மாண்டபின்னராவது பீஷ்மருக்கு ஏன் ராஜ்யத்தைக் கொடுக்கவில்லை. இந்த பீஷ்மர் ஏன் பாணிக்கிரகணஞ் செய்து கொள்ளவில்லை. இவையெல்லாம் ஓர் பட்சமிருக்க, சத்தியவதீ சந்ததி விர்த்திசெய்விக்கத் தனது புத்திரராகிய வியாசரை சித்திராங்கதன் விசித்திர வீரியன் என்பவர்களுடைய மனைவிகளைப் புணரும்படி ஏவிய காரணமென்னை? வியாசர் எல்லா திருமத்தையு முணர்ந்தவராயிருந்தும் உலகத்தார் மூர்க்கரென்று சொல்லும்படியாகத் தன் தம்பிமாருடைய பத்னிகளிடத்தில் புணர்ச்சி செய்து இரண்டு புத்திரர்களை உத்பத்தி செய்யத் துணிந்ததென்னை? இவர் புராணகர்த்தாவாயும், தர்மாத்மாவாயும், ✻யஜ்ஞங்களைச் செய்கின்றவராயுமிருக்க இவருக்குப் ✼பரதாரகமனஞ்செய்வது தோஷமென்று கூறும் அறிவியினுடைய அறிவும் இல்லையாயிற்றே? அந்தோ! இவர் தன் சகோதரர்களுடைய மனையாட்டிகளிடத்திற் சிறிதேனும் நாணத்தையும், பாபத்தையும், பிறர்பழிக்க வரும் பழிப்புரையையும், பாராட்டாது இவ்விழிதொழிலை ஏன் செய்தனர்? வேதத்தில் விதித்திருக்கும் விதியாவது, சிஷ்டாசாரமென்றும், அந்த ஆசாரத்தைக் கைவிடாமல் நடத்திக்கொண்டு வருபவரே பெரியோரென்றுங் கூறுவதல்லவா? *வேதம் பிரமாண மென்பதற்கும்

* சிஷ்டாசார பேதங்களையும் அதை யநுஷ்டிக்கின்றவர் பெருமைகளையும் எடுத்துக் கூறுவது வேதம். ஆகையால் சிஷ்டாசாரமும் அதை யனுஷ்டிக்கும் பெரியோரும் உலகில் மாறுபடின் வேதம் பொய்யென்று சொல்லவரும் என்று இங்ஙனங் குறித்ததென்க.

✻ யஜ்ஞ - மாலிய வந்தன் புத்திரன் ✼ பரதாரக - பிறர் மனைகலத்தல்

இது பெரியசாக்ஷி யல்லவா? இம்முறைமைகளெல்லாம் இவரிப்படிச் செய்ததனால் இனி என்னாம்? இனி ✲சிஷ்டாசாரம் வேதத்திற்கு அவிரோதமென்பது போய், வேதத்திற்கு விரோதமென்பது பெறப்பட்டது. ஓ மேதா வியாரான சூதமுனிவரே! நீர் அந்த வியாச முனிவருக்குச் சீடராகையினால் எங்களுக்குண்டாகிய இந்தச் சந்தேகங்களை நிவிர்த்தி செய்தருளுமென்றனர். நாங்களனைவரும் இத்தன்மையவான தர்மங்களைத் தெரிந்துகொள்வதற்கே இந்த தர்ம க்ஷேத்திரத்தில் வசித்திருக்கின்றோம் என்றனர்.

(கரு - உஉஏ.) சூதர் கூறுகின்றார். ஓ முனிவர்களே? இக்ஷ வாகு வம்சத்தில் மஹா பிஷன் என்னும் அரசன் உற்பவித்து ஆயிரம் ஆஸ்வமேதம், நூறு ராஜபேயம் முதலியன வியற்றி இந்திரபதத்தையடைந்து வாழும் நாளில் ஓர்நாள் பிரமசபைக்குப் போயினான். அவ்விடத்தில் சகல தேவர்களும் பிரமதேவனுடைய தரிசன நிமித்தமாக வந்திருந்தனர். மஹா நதீஸ்வரூபிணியாகிய கங்கா தேவியும் வந்திருந்தனள். இவ்வாறு யாவருங் கூடியிருக்கின்ற சமயத்தில் பெருங்காற்றொன்றுவீச அதனால் கங்காதேவியினுடைய வஸ்திரமானது விலகிப் போயிற்று. அதனை அச்சபையி லுள்ளார் யாவருந் தெரிந்துகொண்டு கங்காதேவியைப் பாராமல் கீழ்நோக்கி யமுகமாகவே யிருந்தனர். மஹாபிஷன்மாத்திரம் அவ ளங்கத்தைப் பார்த்தவண்ணமாகவே யிருந்தனன். கங்காதேவியும் மஹாபிஷன் தன்னைப் பார்க்கின்றா னென்கிற லஜ்ஜையில்லாமல் அவனைப் பிரிய முற்றுப்பார்த்திருந்தனள். இவ்வாறு இருவருங் காமமுடையவராய் கண்ணிமைகொட்டாது பார்த்திருக்கும் பார்வையைப் பிரமன் கண்டு கோபங்கொண்டு ஓ அரசனே! ஓ கங்கையே! நீங்களிருவரும் சிற்றின்பத்தை விரும்பியபடியால் பூலோகத்தில் சென்று அவ்வின்பத்தை யனுபவித்து சில புண்ணியங்களியற்றி முன்போல் உங்கள்பதத்தை வந்தடையக்கடவீர்களென்று சபித்தனன். அச் சாபமொழியைக்கேட்ட அவ்விருவரும் மனோவருத்தமுடையவர்களாய் அச்சபையைவிட்டுத் தங்கள் தங்களிடம்போய்ச் சேர்ந்தனர்.

(உங - ஙஉ.) மஹா பிஷன் நாம் பூலோகத்திற் போகும்படி சாபம் வந்துவிட்டபடியால் நாம் யாருக்கு மகனாகப் பிறப்பது என்று பூலோகத்திலுள்ள அரசரையெல்லாம் எண்ணி எண்ணிக் கழித்துத் தர்மிஷ்டனாகிய பூருவம்சித்திற் றோன்றிய பிரதீபனென்கிற அரசனைச் சிந்தித்திருந்தனன். இவன் செய்த யிங்ஙனமிருக்க, அஷ்ட * வசுக்கள் தங்கள் தங்கள் பத்தினிகளோடுங்கூடி பூலோக சஞ்சாரமாய் வரும்பொழுது வசிஷ்டருடைய ஆசிரமத்தை யடைந்து அங்கு

✲ சிஷ்டாசாரம் - படிந்தவொழுக்கம் * வசுக்கள் - புத்திரன்

உல்லாசமா யுலாவிக்கொண் டிருந்தனர். அப்பொழுது பிருது முதலான அஷ்ட வசுக்களுக்குள் ஒருவரான தியா என்கிற வசுவினுடைய மனைவியானவள் அங்குலாவும் நந்தினி என்கிற பசுவைப்பார்த்து மோகித்தவளாய்த் தன் கணவனைப்பார்த்து இந்தவுத்தமமாகிய பசு யாருடையதென்று கேட்டனள். அவ்வசு ஓ சுந்தரீ! இது வசிட்டருடையது, இதனுடைய பிரபாவும் இப்போது சொல்லிமுடியுமோ. இதனதுபாலை புருஷராவது ஸ்திரீகளாவது உண்பார்களாயின் நரைதிரை மூப்பின்றி பதினாயிரம் வருடம் சுகமாக வாழ்வார்கள். இவ்வருமையுடைய இந் நந்தினியை வசிட்டர் தனக்குப் பெருந்தனமாகக் கொண்டு பூசித்து வாழ்கின்றனர் என்று கூறக்கேட்ட சுந்தரி மனமகிழ்ந்தவளாய் தனக்குப் பிரியை யாகிய உசீனருடைய மகளுக்கு இப்பாலை உண்பித்துப் பூலோகத்தில் இவ்வொருத்தியை யாவது நரைதிரைமூப்பின்றி வாழச்செய்து அதன் பெருமையை விளக்கவேண்டு மென்றெண்ணி மீளவுங் கணவரைப்பார்த்து ஓ என் பிராணநாதரே! பூலோகத்தில் உசீனருடைய மகளுக்கு இப்பாலை உண்பிக்க இப்பசுவை எவ்விதத்திலாவது கொண்டுபோக ஆசைப்படுகிறேன். அதனை நீர் எவ்வுபாயத்திலாவது முடிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தனள். இதனைக்கேட்ட தியா என்று வசு பெண்புத்தி தீமையைப் பயக்குமென்பதையும், இத்தீச் செயலால் தபசிரேஷ்டராகிய வசிட்ட ரிடுஞ்சாபந் தன்னைப் பற்றி விடாதலைக்கு மென்பதையும் மறந்தவராய் மனையாட்டியின் சொற்படி அப்பசுவைக் கன்றுடன் முனிவரில்லாச் சமையத்திற் கவர்ந்துகொண்டு ஏனைய வசுக்களுடன் தன்னிடம்போய்ச் சேர்ந்தனர்.

(நஙு - சுசு.) பின்னர் வசிட்டர் தனதாச்சிரமம் வந்து தனது யஜ்ஞாதி ✧ கிருத்தியங்களுக்கு இன்றியமையாத நந்தினியைக் கன்றுடன் காணாமல் சுற்றுமுற்றும் பார்த்து ஏக்கமுற்று அந்தோ! இந்த நந்தினியைக் கொண்டுபோன தீமையாளர் யாவர்? இக்கொடுஞ்செயலைச் செய்ய நமக்குப் பகையாயுள்ளவர் யாவர்? இந்நந்தினியில்லாமல் நமது கர்மானுஷ்டானங்களை எப்படி முடிப்பது? இவ்வஞ்சச் செயலை யறியவேண்டுமென்று ஞானதிருஷ்டியாற் பார்க்க வசுக்களா லென்றுணர்ந்து கோபங் கொண்டு இவர்கள் நமது செல்வமாகிய தேனுவைக் கவர்ந்துபோனபடியால் பூலோகத்தில் மாநுடராய்ப் பிறக்கக் கடவரென்று சபித்தனர். இச்சாபத்தை அஷ்ட வசுக்களுங் கேட்டு இக்கொடுஞ் சாபத்தினின்று மெவ்வாறு நீங்கப் பெறுவோமென்று திடுக்கிட்டு வசிட்டரைச் சரணாகதி யடைந்து நாங்க ளறிவீனத்தினா லறியாதியற்றிய இக்குற்றத்தைப் பொறுத்து எங்களுக்குச்

✧ கிருத்தியங்கள் - சடங்கு

சாபவிமோசனஞ் செய்யவேண்டுமென்று பலமுறை பணிந்துகேட்க, முனிவர் மனமிரங்கி ஓ வசுக்களே! உங்க ளெண்மரில் தியாஎன்பவன் பசுவைக் கவர்ந்து போனவ னாகையால் அவன் நெடுங்காலம் தெய்வத்தன்மை நீங்கி மனிதனா யிருக்கக் கடவன். அவனது கொடுஞ்செயலை மறுக்காது நீங்க ளுடன்பட்டவர்போன்று பின்றொடர்ந் தமையால் ஒருவருடம் மாநுடஜென்ம மெடுத்திருந்து தெய்வத்தன்மை யடையக் கடவீர்களென்று அநுக்ரஹஞ் செய்ய அதனைப்பெற்று கங்காதீர மார்க்கமாய் வரும்போது பிரமலோகத்தில் சாபமேற்ற கங்கையானவள் எதிரே வரக்கண்டு ஓ கங்கையே! நாங்கள் வசிட்டருடைய சாபத்தால் மாநுடப்பிறப்பை அடையும்படி வந்தது. அதனால் யாங்களெல்லாம் யாருக்குப் புத்திரராய்ப் பிறப்போமென்கிற ஏக்கத்துடன் வருகின்றோம் உன்கிருபை யிருக்குமானால் அவ்வருத்தமொழியைப் பெறுவோம். என்னையெனில் நீ எங்கள் பொருட்டாக மாநுடப்பிறப்படைந்து சந்தநுவென்னும் அரசனுக்குப் பத்தினியாய் எங்களைப்பெற்று அப்போ தப்போது இக் கங்காதீர்த்தத்தில் விட்டுவிடுவையாயின் யாங்கள் சாபவிமோசனத்தைப் பெறுவோம் என்றனர். அதுகேட்ட கங்கை உடன்பட்டவளாய் விடைகொடுத்து மறைந்தனள்.

(சுரு - ருகூஏ.) பின்னர். குருவமிசத் தரசனாகிய பிரதீபன் ஓர் நாள் தான் நாடோறும் கங்கையில் ஸ்நான முதலிய நித்திய கர்மானுட்டானங்களை முடித்து சூரியநமஸ்காரஞ் செய்துவருவதுபோல் செய்து கரையிலிருக்கும்பொழுது கங்கையானவள் அதிக சுந்தரமுள்ள ஓர் பெண்ணுருக்கொண்டு அவ்வரசனது வலது தொடையில் உட்கார்ந்து அவ்வரசனைப் பார்த்துப் புந்நகையரும்பி அவனைத் தழுவுவாள் போன்றிருக்க, அரசன் அவளைப்பார்த்து நீயார்! நீ சிறிதும் அஞ்சாது எனது தொடையி லுட்கார்ந்து என்னைத் தழுவ எண்ணுவது என்ன முறை என்ன? கங்கை நான் உன்னைத் தழுவுங் காரணம் உனக்கு விளங்கவில்லையா, நான் உனக்கு மனைவியாக இருக்கவே இவ்வாறு செய்தேனென்றனள். அரசன் அந்தோ! இதுவென்ன கொடுமை நான் ✻பரதாரகமனஞ் செய்வதில்லையே, அன்றியும் வலது தொடையில் உட்காரத்தக்கவர் புத்திரன், புத்ரி மருமகளுமேயன்றோ! இதனை நீ யறியாயா! புத்திராதியர்களுக்குரிய தொடையில் உட்கார்ந்தமையால் நீ என் மகனுக்கு மனைவியாவாயன்றி எனக்காகாய் இது உண்மை என்றுகூற; கங்கை மகிழ்ந்து விடைபெற்று மறைந்தனள். அரசன் தன் அரண்மனையடைந்து கங்கைக்கரையில் நடந்த செய்திகளை எண்ணி நமக்குப் புத்திரன் எப்போதுண்டாகப் போகிறான்,

✻ பரதாரகமனஞ் - பிறர்மனை கலக்கல்

இவ்வாக்ய ✯பரிபாலனம் எப்போது நடக்கப் போகிறது என்றாலோசித்து வரும் நாளில் பிரமலோகத்தில் சாபமேற்ற ம்ஹாபிஷன் என்னு மரசன் இவனது மனைவிவயிற்றில் கருக்கொண்டு பத்தாமாண்டிற் பிறந்துவளர்ந்து சகலசிறப்புடன் யௌவனதிசையை யடைந்த காலத்தில் பிரதீபன் தன் மகனைப் பார்த்து முன் தனக்கும் கங்கைக்கும் நடந்த செய்திகளைச் சொல்லி ஓ குழந்தாய்! அந்த கங்கையானவள் உன்னை யபேக்ஷித்தவளாய் கங்கைக் கரையில் எச்சமயத்தி லாவது வந்தடைவளே யானால் அந்த மனோரம்யமான ஸ்திரீயை தர்மபத்னியாகக் கொண்டு அவளுடன் சுகமாக வாழ்வாய். அவளை நீ வரித்துக்கொள்வது என்னுடைய ஆஜ்ஞை யாகையினால் அவளுடைய குலமுறை முதலியவற்றை நீ விசாரிக்கவேண்டிய அவசியமின்று என்றுகூறித் தனது ராஜ்யசம் பத்தையும் செங்கோலையும் அவன்வசமாக்கித் தான் ஆரண்யம் போய்ச்சேர்ந்து அரியதவாநுஷ்டானங்களைக் கைக்கொண்டு இராஜராஜேஸ்வரித் தியான பரவசனாயிருந்து தேகாந்தத்தில் தேஜோரூபியாய்ச் சுவர்க்கலோக மடைந்தனன். இப்பால் அவன் மகனாகிய சந்தநு மஹாராசன் அகண்டசாம்பிராஜ்ய பட்டாபிஷேகனாய் அரசியல் நடாத்தி மன்னுயிர்களைத் தன்னுயிர்போற் காத்துவந்தனன்.

இரண்டாவது ஸ்கந்தம் மூன்றாம் அத்யாயம்
கங்காயா: ஸாபப்பிராப்தியாதி கதனம்
முற்றிற்று

ஆ.உ அத்யாயம் ங-க்கு ஸ்லோகம் - கருகூ.

ஸ்ரீதேவ்யைநம:

நான்காம் அத்தியாயம்

* காங்கேயோத்பத்தியாதி கதனம்

(க - கO.) சூதமுனிவர், சவுநகாதியரைப் பார்த்து ஓ முனிவர்களே! பிரகீபனென்னும் அரசன் ஆரணியஞ் சென்று தேவி அனுக்கிரகத்தினாற் சுவர்க்கலோகமடைந்தமையும், அவன் மகனாகிய சந்தநு மஹாராசன் அரசாண்டு வந்தையுங் கூறினாமன்றோ; இனி அச்சந்தநு கங்காதேவியைக் காண்டலாதியாகிய சரித்திரங்களைக்

* காங்கேயர் முதலியோருடைய உற்பத்தியைக் கூறுதல்.
✯ பரிபாலனம் - அருளுதல், சமாளிப்போன்

கூறுகின்றேம் கேட்பீர்களாக. சந்தநுமஹாராசன் செங்கோல் செலுத்தி வருநாளில் ஓர்நாள் துஷ்டமிருக *நிவாரணார்த்தம் வேட்டையாட வெண்ணி ஆரண்ணியஞ் சென்று புலி, கரடி, கட்க மிருகமுதலிய மிருகபேதங்களை யெல்லாம் வேட்டையாடி கங்கா தீர மார்க்கமாய் வரும்பொழுது கங்கையானவள் முன் இவன் தந்தையாருக்குத் தோன்றியதுபோல் பெண்ணுருக்கொண் டுலாவி யிருந்தனள். அக் கங்கையைக்கண்ட சந்தநு மதிமயங்கி இப்படியும் ஒரு பெண்ணிருப்பாளோ! இவளொரு பூங்கொம்போ! மின்னற்கொடியோ! அறியேன். இவ்வழகியை நமது புயமலை அணையப் பெறுமோ பெறாதோ! பெறாதாயின் நமதுயிர்வாழுமோ! என்று பித்தனைப்போற் பலவாறாய்ப் பிதற்றுரை பிதற்றி, யௌவன சம்பன்னையாய் சாக்ஷாத் லக்ஷிமியைப்போல் பிரகாசிக்கும் அவளைச் சமீபித்து இவள் நம்முடைய பிதாவினால் சொல்லப்பட்ட ஸ்திரீயா யிருக்குமோவென் றையுற்று, அவளைப்பார்த்து ஓ என்னுயிருக்கொப்பானவளே! நீ தெய்வலோக மங்கையா? நாகலோகமங்கையா? நீ எவ்வுலகிலுள்ளவள்? உன்னுடைய முகவிலாசம் என்கண்ணைக் கவர்ந்தது, உன்னுடைய இளமுலை என்னுடைய புயமலையைத் துளைக்கின்றது, உன்னுடைய பேரழகு என்னறிவைக் கொள்ளை கொண்டது, உன்னுடைய துடைகளில் என்மனம் புகுந்தது, அது எவ்வுழிச் சென்றதோ? அறியேனென்று மதிமாழாந்து நின்றனன்.

(கக - உஉ.) கங்கை, அரசன் கூறிய காமவார்த்தைகளைக் கேட்டுக் கோபங் கொள்ளாது இவன் பிரமலோகத்தில் நம்மைக்கண்டு மோகித்தவ னல்லவா? அக்காரணத்தால் இவ்வுலகில் அரசனாக வந்திருக்கின்றா னென்று தன்னுள்ளே மகிழ்ச்சியடைந்து, அரசனைப் பார்த்து ஓ ராசபுத்திரனே! நீ என்னைப் பார்த்தவுடன் அறிவுகெட்டு வாயில் வந்தவாறெல்லாம் பிதற்றுகின்றனை. யான் இன்னாளென்பதையும், என் குலமுதலிய இவை என்பதையும் என் மனோபாவம் இவ்வண்ணமிருக்க மென்பதையும் அறிந்தல்லவா என்னை விரும்பவேண்டும். ஒன்றையும் அறிந்துகொள்ளாமல் என் பேரில் மோகங்கொள்வது முறைமையாகுமா என்றனள். அரசன் ஓ அழகிய துடையை புடையவளே! உன் குலமுதலிய வற்றை நான் விசாரிக்கவேண்டியதில்லை. என்னுடைய தந்தை அப்பா குழந்தாய் நீ கங்காநதிக்குப் போகுங்காலம் வரும், அப்பொழுது அக் கரையின்கண் ஒப்புசொல்லக்கூடாத பெண்ணொருத்தி வருவாள். அப்பெண்ணை நீ யாதொருகேள்வியுங் கேளாமல் தர்மபத்னியாகக் கொண்டு வாழக்கடவாயென்று சொல்லியிருக்கின்றனர். அவள் நீதானென்பதிற் றடையென்னையுள. அக்காரணத்தினாலேயே

* நிவாரணார்த்தம் - தடையை நீக்கி

எனக்கும் உன்னிடத்தில் காமமுண்டாயிற் றென்றாகிக்கின்றேன். ஆகையால் இனி நீ என்மனைவியாவதிற் றடையென்னை என்றனன். கங்கை, அரசனே! அது வுண்மையாயின் யான் உன்னிடத்தில் தெரிவித்துக் கொள்ளவேண்டியவை சிலவுள. அவை கட்கு நீ வேறுபடாது ஒப்புக்கொள்ளுகிற பக்ஷத்தில் நான் உன்மனைவியாவதிற் றடையில்லை என்றனள். அரசன் ஓ சுந்தரி! நீ என்பிராண நாயகியாகும்பக்ஷத்தில் உன்னால் கேட்கப்படுமவை கட்குத் தடையுமுளவோ. தடைகூறுவே னாயின் நா னரசனாவேனோ நீதியுடையவனாவேனோ என்றனன். கங்கை ஓ அரசனே! நான் நல்லகாரியத்தைச் செய்தாலும், தீயகாரியத்தைச் செய்தாலும், நீ என்னை ✡ நிஷேதிக்கக் கூடாது; என்னிடத்தில் வெறுப்புண்டாய்ப் பிரியமில்லாத வார்த்தைகளைச் சொல்லக்கூடாது; என்னுடைய வார்த்தையை எப்பொழுது நீ அங்கீகரிக்காமற் போகின்றனையோ நானப்பொழுது உன்னைவிட்டு எனக் கிஷ்டமானவிடம் போய்ச் சேருவேன் என்றனள். அரசன் ஓ மாதரசியே! நா னொருபொழுதும் உனக்குப் பிரியமில்லாத சொல்லைச் சொல்லமாட்டேன். நீ சம்மதித்து எந்தத் தொழிலைச் செய்தபோதிலும் அது எனக்குச் சம்மதமே! என்னை நீ உன்னாஜ்ஞையின்படி நடந்து கொள்ளும் ஏவலாளியென் றெண்ணுவாய். இதிற் சந்தேகமில்லை என்றனன். கங்கை, ஓ அரசனே! என்னை நீ இன்னாளென்று நீ விசாரிக்காமற் போனபோதிலும் யான் கூறுகிறேன். யான் கங்கை, அஷ்ட வசுக்களுடைய சாபநிவிர்த்தியின் பொருட்டு இவ்வுருக் கொண்டு உன்மனைவியா யுன்னோடு வாழவந்தே னென்றனள். அரசன் புளகாங்கிதங்கொண்டு கங்கையின் கரத்தைப் பற்றியழைத்துக் கொண்டுபோய்த் தன் கைரஞ்சேர்ந்து விதிப்படி விவாகஞ் செய்து கொண்டு உத்யானவனத்தில் அவளை பொருக்ஷணமேனும் பிரியாமல் காமநூலுக்கிலாக்காய் இரதியும் மனமதனும் போலும், இந்திராணியும் இந்திரனும்போலும், இலக்ஷிமியும் நாராயணரும் போலும் உல்லாசமாய் கிரீடித்திருந்தனன். இவ்வாறு அநேக நாள் கழிந்தபின்னர் கங்கை கர்ப்பவதியாய் அஷ்ட வசுக்களில் முதல்வசுவைப் புத்திரனாகப் பெற்றனள். அப்பிள்ளையைத் தீர்த்தத்திற் கொண்டுபோய் விட்டனள். இந்தப்படி ஏழுவசுக்களையும் புத்திரராகப்பெற்று அவ்வப்பொழுதே கங்காதீர்த்தத்தில் விட்டுக் கொன்றுவந்தனள். இவ்வண்ணமே புத்திரரெல்லாம் இறந்துவரும் பொழுது வசந்தநுராசன் அடியில்வருமாறு துக்காக் கிராந்தனாயச் சிந்திக்கலாயினன்.

(உங - உஅ.) நம்முடைய வம்சமானது பூமியில் நீடூழியாய் வளர்ந்து வருவதெப்படி? நாமிப்பொழுது என்னசெய்கிறது, பா

✡ நிஷேதிக்க - விலக்க

பிஷ்டியாயிருக்கிற இவளால் ஏழுபிள்ளைகள் நாசமாய்ப்போயினார் களே, இது மிகவாச்சரியம், இப்பொழுது இவளைத் தடுப்போமானால் இவள் நம்மைவிட்டுப் போய்விடுவாளே, இவளோ இப்பொழுது நம்முடைய மனசுக்குச் சுகத்தைக் கொடுக்கும்படியான கர்ப்பத்தை யுடையவளா யிருக்கின்றாளே, ஆகையால் இக்குழந்தையை முன் குழந்தைகளைச் செய்ததுபோற் செய்யாமற் றடுக்கவேண்டும். தடுக்காமற் போவோமானால் இவள் பெரும்பாலும் சலத்திற் போட்டுவிடுவாள். தடுத்தோமானால் அக்குழந்தை நம்மால் காக்கப்பட்டுப் பிழைத்திருக்குமோ, இறந்துபோய் விடுமோ? இது நமக்குச் சந்தேகமா யிருக்கிறது. இந்த துஷ்டையானவள் இனி பிறக்கப்போகிற பிள்ளையினிடத்தி லாவது இரக்கமுடையவளாய் ரக்ஷிப்பாளோ முன்போல் ✧ பக்ஷிப்பாளோ! நமக்கு எதுவுஞ் சந்தேகமா யிருக்கிறது. நம்மாலே செய்யத்தக்கது என்னவிருக்கின்றது. இனி எட்டாவது பிள்ளைபிறக்கப் போகிறது அவசியந்தானே? நா மென்செய்வதென்று அப்பொழுது சும்மாவிருப்போமானால் நம்முடைய வம்சம் எப்படி உத்தாரணமாகும். ஆகையால் அதற்குத்தக்க பிரயத்தினஞ் செய்ய வேண்டியது ஆவசியமே. என்று பலவாறாயெண்ணி யிருக்கும்பொழுது, ஸ்திரீவசப்பட்டு வசிட்டருடைய நந்தினி என்கிற பசுவை அபகரித்த வசுவானவன் இந்த கங்கைக்கு எட்டாவது பிள்ளையாகப் பிறந்தான். அப்பிள்ளை பிறந்தவுடன் சந்தநு மிகவும் மகிழ்ச்சி யடைந்தவனாய்த் தனது பத்னியாகிய கங்கையின் பாதத்தில் வீழ்ந்து சொல்லுகிறான்.

(உகூ - ருஉஏ.) மந்தகாசத்தோடு கூடியிருக்கிற பெண்மணியே! நா னுனக் கடிமையாளாய்ப் பிரார்த்திக்கின்றேன். இந்த வொரு புத்திரனை நான் காப்பாற்றிக் கொள்ளுகிறேன். இதுவரையில் ஏழுபிள்ளைகளைக் கொன்றுவிட்டாய். இவ்வரிய பிள்ளையையுங் கொல்லுவையே யானால் நானு முயிரிழப்பேன். ஆகையினால் என்னுயிரோடு பிள்ளையைக் கொடுப்பாய். ஓ அழகிய நிதம்பத்தை யுடையவளே! எட்டாவதாகிய இந்தக் குழந்தையையாவது ரக்ஷிப்பாய். நானுன்காலில் விழுகிறேன். உனக்கெவ்வகை பொருள் வேண்டுமோ அவையெல்லாம் அரியபொருளா யிருந்தப்பொதிலும் நான் கொண்டுவந்து இப்பொழுதே கொடுக்கிறேன். நீ போகட யவம்சத்தை ரக்ஷிக்கவேண்டியவ ளல்லவா. வேதவித்துக்களான பெரியோர்கள் புத்திரனில்லாதவருக்குக் கதியில்லை என்றுசொல்லுகிறார்கள். ஆகையால் இப்பொழுது பிறந்த இப்பிள்ளையைக் கொடுத்து விடுவாயென்று பிரார்த்திக்கிறே னென்றனன். கங்கையானவள், அரசன் பலவாறாய்ப் பிரார்த்தித்தும் சிறிதும் இரங்காவதளாய்க் குழந்தையை

✧ பக்ஷிப்பாளோ - விலக்குவாளோ

எடுத்துக் கொண்டு போவதற்கே பிரயாணப் பட்டாள். அதைப் பார்த்து அரசன் திருக்கிட்டு அந்தோ நமக்கு ஏழுபிள்ளைகள் பிறந்தன. அவைகளில் ஒரு பிள்ளையேனும் நாம் கண்டுகளிட்பதற் கில்லாமற் போயிற்று. இப்பொழுது பிறந்தது எட்டாவது பிள்ளை. இதையுங் கொன்றுவிடுவாளானால் இனி நமக்குப் பிள்ளைபிறக்கு மென்பது என்ன நிச்சயம். நம்முடைய சந்ததி நம்மோடன்றோ போய்விடும். இந்தப்பாவி நமக்கெங்கிருந்துவந்தாள். இவளை இப்பொழுது தடுப்போமானால் மீளவும் இவளைக் காணப்போகிறதில்லை. தடுக்காமற் போவோமானால் பிள்ளையைக் காணப்போகிறதில்லை என்று சிந்தாகுலமடைந்து இவள் தொலைந்தாலுந் தொலையட்டும். சந்ததிவிர்த்தியாதற்குரிய பிள்ளையைப் பாதுகாத்தலே முக்கியமான தருமமென்று துணிந்து அவளைச் சமீபித்து ஓ பாபாத்மாவே! இப்பொழுது நானென்ன செய்வேன்? உனக்கு நரகமுண்டென்கிற பயமில்லையா? உன்னைப் பாபிஷ்டாளுடைய புத்திரியாக நினைக்கின்றேன். இல்லாவிட்டால் பாவகிருத்தியத்தில் ஆசையுடையவளா யிருப்பாயா? இக்குழந்தையை என்ன செய்யப்போகிறாய்? கங்கையிற் போடமனம் எவ்வாறு துணிகின்றது? பிள்ளையைப் பேயும் வளர்க்குமென்று உலகினர் கூறுகின்றனரே? நீ அப் பேயினும் இரக்கமென்பதறியாத வொரு பெரியபூதமோ ராக்ஷசியே? யாவளோ அறியேன். இவ்வொரு பிள்ளையாயினும் எனக்கிருக்கும்படி மனமிரங்கிக் கொடுப்பாய் நீ இருந்தாலும் இரு, இல்லாமற் போனாலும்போ, இவ்விடத்தில் என்னுடைய புத்திரன் மாத்திரம் இருக்கவேண்டும். வம்சநாசஞ் செய்யவந்த வுன்னோடு நானென்ன சொல்லப்போகிறேனென்று சொல்லுகிற பொழுது, கங்கை குழந்தையை எடுத்துக்கொண்டு அதிக கோபமுடையவளாய் அரசனைப் பார்த்து ஒருவார்த்தை சொல்லுகிறாள். நானடியில் உன்னிடஞ் சொன்ன வார்த்தையை மறந்து விட்டாயாகையால் நான்போகிறேன். நான் குழந்தைகளைக் கொல்லுகின்ற கொலையாளியா! என்னுடைய காரணமறியாமற் பேசினாய். நான் தேவகாரியார்த்தமாக வந்த கங்கை யென்றறிவாய். அஃதாவது, மஹாத்மாவான வசிட்டராலே அஷ்டவசுக்கள் மாநுடராகப் பிறக்கக் கடவீர்களென்று முன்சபிக்கப்பட்டார்கள். அவர்கள் சிந்தாகுலராய் மார்க்கத்தில் வரும்பொழுது தெய்வகதியாய் நானெதிர்ப்பட்டேன். என்னைப் பார்த்து அந்த அஷ்டவசுக்களும் ஓ பரிசுத்தையாகிய கங்காதேவியே! எங்களுக்கு நேரிட்ட சாபநிவாரண மாகும்வண்ணம் நீ தாயாகவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள். அவர்களுக்கு அப்படியே அனுக்ரஹஞ்செய்து உனக்குப் பத்னியாயினேன். அவர்கள் தான்

ஏழுபிள்ளைகளாகப் பிறந்தார்கள், அவர்கள் அப்பொழுது வேண்டியபடியே தீர்த்தத்திற் கொண்டுபோய் விட்டு சாபவிமோசனஞ் செய்வித்தேன். கையிலிருக்கின்ற இவன் எட்டாவது வசு இவன் பூமியில் சிலகாலம் உன்னுடைய புத்திரனென்று யாவருஞ் சொல்ல மஹா வீரனாயிருந்து பின்னர் சாபநிவிர்த்தியடைய வேண்டியவன். ஆகையால் ஓ அரசனே! நீ வேண்டிய வண்ணமே இவனைக் கொடுக்கிறேன். இவனைப் புத்திரனாகக் கிரஹித்துக் கொள்ளக் கடவாய். இவனைச் சாதாரணமான குழந்தை யென்றெண்ணாமல் வசுக்களில் ஒருவனாகிய தெய்வத்தன்மை யுடையவ னென்றறிந்து புத்திரசுகத்தை யடையக்கடவாய். ஓ மஹானுபாவனே! இவனுக்குக் காங்கேய னென்றுபெயர். இவன் அதிக பலமுடையவனாய்ப் பிரசித்திபெற்றிருப்பான். இவனை நாமிருவரும் சுகித்திருந்த அஸ்தினா புரத்துக்கு அனுப்பமாட்டேன். இவனுக்கு ⁘ யவ்வனதிசை வருகிறவரையில் நான் ரக்ஷித்திருந்து நீ இவ்வனத்துக்கு வரும்பொழுது கொடுக்கிறேன். என்னையும் பார்க்கலாம். ஏனென்றால் தாயைப் பிரிந்த பிள்ளை பிள்ளையன்று அது நலமுடன்வளராது, வளர்ந்தாலும், நயமடையமாட்டாதென்று சொல்லிக் குழந்தையுடன் மறைந்துபோயினள்.

(ருங - சுO.) அரசன் புத்திரனையும் மனைவியையுங் காணப்பெறாமல் புத்திர சோகத்தையும் விரகதாபத்தையும் ஏக்காலத்தில் அடைந்தவனாய்த் தன்னுடைய கிருகம்போய்ச் சேர்ந்து அரசியல் நடாத்திவந்தனன். சிலகாலங் கழிந்தபின்னர் வேட்டையாட வெண்ணி வனஞ்சென்று காட்டெருமை, காட்டுப் பன்றி முதலிய கொடிய மிருகங்களைப் பாணங்களால் தும்சஞ்செய்து மஹாரா சாவாகிய சந்தது கங்கைக் கரையையடைந்தான். அப்பொழுது கங்கை பெருவெள்ளங்கொண் டெழுந்தது. அக் கரையில் பெரிய தநுசொன்றை நாட்டி அநேக பாணங்களைவிட்டு விளையாடிக் கொண்டு ஒரு சிறுவனிருந்தனன். இவ்விரண் டதிசயத்தையும் பார்த்து ஆச்சரியமடைந்து, மநுஷ்ய சாத்திய மில்லாத அஸ்திரசஸ்திரப் பிரயோகங்களால் விளங்கும் இவனது வீரதர்மத்திற்கும், கண்டவர் மனத்தைக் கிரஹிக்கவல்ல இவனது ரூபலாவண்யத்திற்கும் ஒப்பு எவை. இவன் கங்கையின் கர்ப்ப சம்பவனாகிய நமது குமாரனா யிருக்க வேண்டும், அன்றி வேறெந்த வீரனுடைய குமாரனோ வென்றையுற்று, அவன் சமீபத்திற் சென்று நீயாருடைய குமாரனென்று கேட்டனன். அவன் பாணங்களைவிட்டு விளையாடிக் கொண்டிருந்தனனே யன்றி இவன் கேட்ட கேள்விக்கு விடைதந்தவனு மன்று, இவனை லக்ஷயஞ்செய்து பார்த்தவனுமன்று. சிலநேரம்

⁘ யவ்வனதிசை - யௌவனம்

விளையாடிக் கொண்டிருந்து கங்கையில் மறைந்து போயினன். போகவும் அரசன் ஆச்சரியமடைந்து இவன் இன்னாருடைய குமாரனென்று அறிவதற் கில்லாமற்போயிற்றே, இவனை எவ்விடத்திற் றேடுவது, என்றெண்ணி ஏகாக்ரசித்தனாய்க் கங்கையை நினைத்தனன். கங்கை முன்போல் திவ்ய ரூபத்தோடும் அவன் காணத் தோன்றினள். அரசன் கண்டு மகிழ்ந்து ஹே கங்கே! என்குமார னெங்கே? எவ்விடத்திற்குப் போயினன்? அவனை இப்பொழுது எனக்குக் காட்டவேண்டுமென்ன, கங்கை ஓ எனது பிராண நாயகனே! உன் மகனை உனக்குக் கொடுப்பதில் எனக்கென்ன ஆக்ஷேபம். உன்னுடைய குமாரன் இதுகாறும் வசிட்டரிடத்திலிருந்து சகல வேதசாஸ்திரங்களு முணர்ந்தான் இவனைப் பிரகஸ்பதி எப்படியோ அப்படியே கற்றுணர்ந்தவனென்று சொல்லலாம். தநுர்வித்தையில் ஜமதக்கினியினுடைய குமாரன் எவ்வளவு பாண்டித்தியனோ அவ்வளவு பாண்டித்ய முடையவனென்று இவனைச் சொல்லலாம். ஆகையால் ஓ ராஜசிரேஷ்டனே! உன்னுடைய வம்சத்துக்குக் கீர்த்தியை யுண்டுபண்ணி உனக்கு என்றும் அழியாத புகழைக் கொடுக்கத் தக்கவன் இவனேயாவன். இவனை இதுவரையில் யான் பாதுகாத்துவந்தேன். இப்பொழுது இதோ உன்னிடம் ஒப்புவித்து விட்டேன், நீர் பெற்றுக்கொள்ளும்; என்று காங்கேயரைக் கொடுத்து இனி நீர் உம்முடைய நகரத்தையடைந்து புத்திரனோடு சுகமாய் வாழ்ந்திருமென்று வாழ்த்தி மறைந்துபோயினள்.

(சுக -சுகூ.) பின்னர், அரசன் சகல வித்தியாபாரங்கதனாய், அதிபரிசுத்தனாய், மஹாவீரனாய்ப் பிரகாசிக்கும் அரியமகனை * ஆலிங்கனஞ் செய்துகொண்டு உச்சிமோந்து பெரு மகிழ்ச்சியடைந்தவனாய் நான் தன்யனாயினேன் தன்யனாயினேன் என்று கூத்தாடி, பிள்ளையை ரதத்திலேற்றிக் கொண்டு அஸ்தினா புரத்தை யடைந்து சோதிடர்களை வரவழைத்து நல்ல சுபமுகூர்த்தம் பார்த்து மந்திரிப் பிரதானிகளோடு அனேக தேசத் தரசரெல்லாம் புடை சூழ்ந்திருப்பக் கங்கா புத்திரனாகிய தன் மகனுக்கு இளவரசு பட்டங்கட்டி மங்களங் கொண்டாடி ஆனந்தக் கடலில் மூழ்கினன்.

தர்மாத்மாவாகிய சந்தநு, தன் மகன் யுவராஜ்பட்டத்துக் குரியவனானா னாதலால் ராஜ்ய விசாரமற்றும், சகல சத்குண சம்பன்னாதலால் காமாதி குணவர்ஜிதனாய் மனைவியை மறந்தும் சுகமாய் வாழ்ந்திருந்தனன். ஓ முனிவர்களே! இதுவரையில் வசுக்களுக்கு நேரிட்ட சாபகாரணமும், கங்காதேவி சந்தநு மஹாராசாவுக்கு மனைவியாய் வந்த காரணமும், காங்கேயருடைய பிரபாவமும்

* ஆலிங்கனஞ் - தழுவல்

சொல்லப்பட்டன. இந்த புண்யகரமான சரித்திரங்களை எந்தமாநுடன் கேட்கிறானோ அவன் சகலபாபத்தினின்றும் விடுபடுகிறான். இதிற்சந்தேகமில்லை. நானாவிதமான புண்ணிய சரித்திரங்களுடையதாயும் பஞ்சலக்ஷணமுடையதாயு வியாசருடைய வாக்கினின்றும் வெளிப்பட்டதாயும், கேட்போர்க்குப் பாபங்களைப் போக்கி, இகபரலோக சுகானுபவங்களைக் கொடுப்பதாயுமுள்ள இப்பாகவதத்தில் எப்படி வியாசரிடத்தில் இந்தச் சரித்திரத்தைக் கேட்டேனோ அப்படியே சொன்னேனென்று அறிமின்கள்.

இரண்டாவது ஸ்கந்தம் நான்காம் அத்யாயம்
காங்கேயோதுபத்தியாதி கதனம்

முற்றிற்று

ஆஉ அத்யாயம் சு-க்கு ஸ்லோகம் - உஉஅ.

ஓம் காமேஸ்வரக்ருஹேஸ்வர்யை நம:

5. சத்தியவதி சந்தனு சம்வாதம்

சவுனகாதியர் வினவுகின்றார் : ஓ சூதமுனிவரே! அஷ்ட வசுக்களுக்குச் சாபகாரணத்தினால் நேரிட்ட ஜன்ம ✰விவரணமும் அவருள் காங்கேயருடைய வீரப்ரதாப விசேஷமும் எங்களுக்குப் புளகாங்கிதம் கொள்ளுமாறு எடுத்துரைத்தீர். நல்ல விரதானுஷ்டான முடைய சூத பகவானே! இனி வியாசபகவானுக்கு மாதாவாகியும், திவ்ய லக்ஷண சம்பன்னையாகியும், பரிமள கந்தியாகியும் விளங்கும் சத்தியவதியானவள், வலைஞனாகிய தாசனிடம் போய்ச் சேர்ந்து வாழுநாளில் சர்வதர்மஜ்ஞனாகிய சந்தனு மஹாராஜன், அவனை எவ்வாறடையப்பெற்று மனைவியாகக் கொண்டான்? அதனைச் சொல்லவேண்டும். அதைக்கேட்பதில் மிகவும் விருப்பமுடையவர்களா யிருக்கின்றோம். அதில் எங்களுக்குள்ள சந்தேகத்தை நிவிர்த்தி செய்தருளு மென்றனர். (1-3)

சூதர் கூறுகின்றார் : ஓ முனிவர்களே! இராஜரிஷியாகிய சந்தனு மஹாராஜன், மஹாதேவர் சுப்பிரமணியக் கடவுளோடு எவ்வாறு ரமித்திருப்பாரோ அவ்வாறு தன் மகனாகிய காங்கேயனோடு நான்கு வருஷம் ✽ரமித்திருந்து அரசாக்ஷி செய்துவருநாளில் ஒரு நான் மான், காட்டெருமை, சிறுத்தை முதலிய மிருகங்களை வேட்டையாடுவதில் பிரியமுடையவனாய் அரண்யஞ் சென்று நாள்தோறும் அவ்வாறே செய்துவந்தனன். ஒருநாள் வேட்டையாடி கட்கம் காட்டுப்பன்றி

✰ விவரணம் - விபரம் ✽ ரமித்திருந்து - சுகமாய் இருந்தது.

முதலிய கொடிய மிருகங்களையும், பாணப்பிரயோகஞ் செய்து கொன்று வரும்பொழுது நதிசிரேஷ்டமாகிய கங்கைக் கரையைத் தெய்வாதீனமாய் வந்தடைந்தனன். அப்பொழுது இந்த வாசனை இதுவாகுமென்று மதித்தறியக்கூடாத தாகிய பரிமளத்தோடு கூடிய காற்றொன்று வீசியது. அந்த உத்தமமாகிய சுகந்தத்தை ஆக்கிராணித்து ஆச்சரிய மடைந்து இஃதுவென்ன வாசம், இந்த வாசனை தேவமந்தார புஷ்ப வாசனையுமன்று, சண்பகத்தினுடைய வாசனையுமன்று, மல்லிகையினுடைய வாசனையுமன்று, தாழம்பூவினுடைய வாசனையுமன்று, மிருக மதத்தினுடைய வாசனையுமன்று. இந்தச் சுபகரமாகிய சுகந்தத்தை நாம் முன்னெப்பொழுதும் ஆக்கிராணித்தது மின்று. இவ்வரிய சுகந்தம் எவ்விடத்தினின்றும் எழுந்து வீசுகின்றது? இதனுற்பத்தி ஸ்தானத்தை யறியவேண்டும். இந்தக்கந்தமானது நம்முடைய மனத்தைக் கவர்ந்து மேன்மேலும் மோரவேண்டுமென்கிற அவாவையே விளைவிக்கின்றது; ஆகையால் இச்சுகந்தம் இவ்வனத்துக்குள் எங்குநின்று தோன்றுகிறதோ அவ்விடத்தைச் சுற்றிப் பார்ப்போமென் றெண்ணி அதிமோக முடையவனாய் அதிவேகமாய் அப்பரிமளம் வரும் வழியே இலக்காக யமுனா நதிக்குச் சென்றனன். செல்லும் பொழுது அங்கு ஓரிடத்தில் பார்ப்பதற்கு அழகுள்ளவளாயும், ஆபரண விசேடங்க ளில்லாதவளாயும் அழுக்கடைந்த ஆடை யுடுத்தவளாயும் மனத்தை வசீகரஞ் செய்கின்ற ❋யௌவனத்தோடு கூடினவளாயும் பிரகாசிக்கின்ற ஒரு பெண்ணைக் கண்டான். (4-11)

கருத்தவிழியோடு கூடிய கடைநோக்கமுடைய அப்பெண்ணைப் பார்த்து, நாம் அருமையாக மோந்து சுகந்தம் இவளுடைய சரீரத்தினின்றும் வீசுகிறதாகவே தெரிய வருகிறது; இதிற் சந்தேகமில்லை என்ன நிச்சயித்துக் கூறுகின்றான் : ஆஹா! இஃது வென்ன ஆச்சரியம்! இப்படியும் ஒரு பெண்ணுக்கமையுமோ! இவளுடைய அங்க விசேஷங்களைப் பார்க்கும்பொழுது ஒவ்வொன்றும் உவமானப்பொருள்களி லடங்கியதாகவில்லை. சௌந்தரிய விசேஷமும் அப்படியே யமைந்திருக்கின்றது. பருவமும் இப்பொழுது ஒத்திருக்கின்றது. அப்பருவத்துக்குத் தக்க யௌவன விசேஷமும் எவரிடத்துங் காணக்கூடாததாக விருக்கின்றது. இவ்வாறு ஒன்றுக்கொன்று மேன்மேலாக அமைந்திருக்கும் ☸சௌந்தரியாதி விசேஷங்களே யன்றிப் பரிமளமொன் றமைந்திருக்கின்றதல்லவா? இதனை யாவரிடத்தே காணப்பெறுவோம்? யாவர்தான் காணப்பெற்றார்கள்? இனி யாவர்தான் காணப்பெறுவார்கள்? இஃது எவ்வுலகிலுள்ள மங்கையர்க்கும் அமையப்பெறாத அதிசய

❋ யௌவன - யவ்வனம் ☸ சௌந்தரியாதி - மிக அழகாக

முடைத்தானது. இந்தக் கந்தத்தை எந்தப் புருஷனாவது எந்தத் தேவராவது மோரப் பெறுவாராயின் அவர் பிரமிப்பரேயன்றி பிரமிக்காமற் போவாரா என்று சந்தனு மஹாராஜன் அளவிறந்து வந்தவள்? இவள் தெய்மங்கையோ, பூலோகமங்கையோ, கந்தர்வமங்கையோ, நாகமங்கையோ? பரிமள மிகுதியோடு கூடியிருக்கின்ற இவளை யாரென்று யான் தெரிந்து கொள்வேனென்று சிந்தித்துக் காமாதுரனாய் மதிமயங்கி முன் தான் கண்ட கங்கையோவென் றையுற்று அது தெளிய அப்பரிமள கந்தியைப் பார்த்துக் கேட்கத் தொடங்கினன்: (12-15)

பரிமளத்தோடு கூடியிருக்கின்ற ஓ மங்கையே! நீ யார்? நீ என்ன குலத்தவள்? யாருடைய மகள்? ஓ அழகுள்ள தொடையை யுடையவளே! மனித சஞ்சார மில்லாத இவ்விடத்தில் நீ தனியே யிருக்கின்றனையே! யாது காரணம்? காமத்தை விளைவிக்கும் நேத்திரத்தை யுடையவளே! நீ விவாக முடையவளா, இல்லாதவளா? நீ எத்தொழில் செய்கின்றவள்? உன் விருத்தாந்தங்களைச் சொல்லுவாயாக. மாவடுவகிர்ந்தன்ன கண்ணியே! மனோகரமாயும் யௌவன முடையவளாயும் இருக்கின்ற உன்னை நான் பார்த்தபொழுதே காமவெள்ளத்தில் மூழ்கிக் கரையேறப்பெறாது அலமருகின்றேன். ஆகையால் நான் காமக்கரையேறுமாறு கேட்டவைகட்கெல்லாம் விடை கூறுவாயென்று புன்னகையோடு வினாவினான். பரிமள கந்தியானவள், தன்பாலுள்ள விருப்பத்தைப் புன்னகையினாற் காட்டும் அரசனை நோக்கிக் கூறுகின்றாள் : ஓ அரசனே! நீர் என்னைப் பரிமளகந்தியாகவும், வலைஞர் பெண்ணாகவும், தாசனுடைய மகளாகவும், பிதாவினுடைய ஆக்ஞையினால் இவ்விடத்திற்றனியே இருக்கின்றவளாகவும், கன்னிகையாகவும், இந்நதியில் தருமநிமித்தமாக இந்த வோடத்தைத் தள்ளிச் செலுத்துகின்ற தொழிலுடையவளாகவும் அறிந்து கொள்ளக்கடவீர் என்று விடை கூறி, பரிமளகந்தி சும்மாவிருந்தனள். காமாதுரனாகிய அரசன் அவளைப்பார்த்து பின் வருமாறு கூறத்தொடங்கினன் : ஓ மான் போலுங் கண்களை யுடையவளே! உன்னுடைய யௌவனத்தை வீணாய்க் கெடுத்துக்கொள்ளாதே, கௌரவகுல வீரனாகிய என்னை நாயகனாகக் கொள்ளக்கடவாய். எனக்கு வேறு மனைவி யுண்டென்று நீ நினைக்கவேண்டாம். எனக்கு இப்பொழுது பத்தினி யில்லை. ஆகையால் உன்னை மனைவியாகக் கொள்கின்றேன். ஆனால் காமக்கிழத்தியாகக் கொள்வேன் என்று சந்தேகிக்க வேண்டாம். தர்ம பத்னியாகவே கொள்வேன். மனோரம்ய மானவளே! மனோபவனாகிய மன்மதன் நான் உன்னைப் பார்த்ததுமுதல் என்னை வாட்டுகிறான். ஓ பாலையே! எனக்குப் பிரியையான பத்னியானவள் என்னை விட்டுப்போயினாள். அவள்

போனபின்னர் நான் விவாகஞ் செய்து கொள்ளவில்லை, நான் சம்சாரமில்லாதவ னாகவே இருக்கிறேன். எல்லா அவயவங்களாலும் ரம்யமா யிருக்கின்ற உன்னைப்பார்த்த என்மனம் சிறிதேனும் என் சுவாதீனத்திலில்லை, நான் துணையற்றவனா யிருக்கின்றேன். ஆகையால் எனக்கு நீ துணைவியாக வேண்டும்; ஆவையேல் உனக்கு நான் சுவாதீனனாகவும் அடிமையாளாகவு மாகிறேன். இதற்குச் சந்தேகமில்லை என்று கூறவும்; தாசன்மகளாகிய பரிமளகந்தி அமிர்தம் போலும் சுவையையும் மனதுக்கு இன்பத்தையும் விளைவிக்கின்ற சந்தநுமகா ராஜனுடைய வார்த்தையைக் கேட்டு சாந்த குணத்தோடுங் கூடினவளாய் தைரியத்தோடும் அரசனைப்பார்த்துச் சொல்லுகின்றாள். ஓ அரசரேறே! நீர் என்னிடத்தில் எந்த அபிப்பிராயத்தை வெளிப்படுத்தினீரோ அந்த அபிப்பிராயம் நானும் உம்மிடத்தில் கொண்டவளா யிருக்கின்றேன். அன்றியும் உம்முடைய வரலாறு எவ்வண்ணமோ அவ்வண்ணமே என்னுடைய வரலாறு மிருக்கின்றது. இருவருடைய வரலாறும் எண்ணமும் இவ்வண்ணம் ஒத்திருந்தபோதிலும் இப்பொழுது நான் சுதந்தரையா யிருக்கின்றவ ளல்லளென்று நீர் தெரிந்துக் கொள்ளலாம். என்னை உமக்குக் கொடுக்கவேண்டியவர் என்னுடைய தந்தையார், நான் தந்தைசொற்படி நடக்கும் நியமமுடையவள், நான் வலைஞர்மகளாயினும் விபசாரியாக ஆகத்தக்கவளல்லள், என்பிதாவானவர் மிகவும் பிரசித்தியானவர், அவர் சம்மதித்து என்னை உமக்குக்கொடுக்கிற பக்ஷத்தில் நீர் பாணிக் கிரகணம் பண்ணிக்கொள்ளலாம், என்னாற் சிறுதுந் தடையில்லை, நான் என்றும் உம்முடைய வசமாகவே இருப்பேன், ஏனென்றால் மன்மதன் உம்மை எப்படி வாட்டுகின்றானோ அப்படியே எவ்வனத்தோடு கூடினவளாகிய என்னையும்வாட்டுகின்றான், நம்மை விதிகூட்டும் அப்படியிருந்தபோதிலும் குலாசார பரம்பரைகளைக் காப்பாற்ற வேண்டுமென்பது அறிவுடையார்க் கியல்பன்றோ, ஆகையால் என்னுடைய பிதாவானவர் இப்போது தான் வீட்டுக்குப் போயினர், வீட்டிலேயே யிருப்பர், அவரெங்கும் போயிரார், ஓ தனாட்டியரான வள்ளலே! உம்மிடத்தில் சிறிதேனும் பொய்சொல்லேன். சத்தியத்தையே சொல்லுகிறேன். நீர் அதிசீக்கிரமாய்ச் சென்று கேட்பீராக; என்று கூறிய அமைதியான வார்த்தைகளைக் காமத்தினால் பீடிக்கப்பட்ட அரசன் கேட்டு அவள் கூறிய முறைமையைக் கடத்தற்கஞ்சி அதுபோற் சம்மதித்து இவளைப் பாணிக்கிரகணஞ் செய்துகொள்ள விரும்பி யிருக்கிறேனென்று அந்தத் தாசனைக்கேட்க அவன் கிருகத்துக்குச் சென்றான்.

(உ அ - ௩சுசு.) அந்த தாசன் தன்வீடு நோக்கிவருகின்ற அரசனைப் பார்த்து இவ்வளவென்று சொல்லக்கூடாத ஆச்சரியமடைந்து

அனந்தமுறை தெண்டனிட்டு கைகூப்பிநின்று அடியில் வருமாறு சொல்லத்தொடங்கினன். ஓ அரசனே! நான் தேவரீருக்குத் தாசனாயுள்ள தாசன், உம்முடைய வரவால் இன்று நான் தன்யனாயினேன், எந்த நிமித்தமாகத் தாங்கள் இங்குவர நேர்ந்ததோ அதனைக் கட்டளையிட் டருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அரசன் ஓ ஒழுக்கமுடைய தாசனே! உன்மகனை நான் பாணிக்கிரகணஞ் செய்துகொள்ளப்போகிறேன், நீ சம்மதிப்பையே யானால் நான் தர்மபத்னியாகக் கொள்வேன் இது சத்தியம் என்றரசன் கூறத்தாசன் ஓ அரசனே! நீர் என் சுவாதீனையாயுள்ள கன்னியாரத்தினத்தை விரும்பியது என்னுடைய பாக்கியமே யாயினும் கொடுக்கக்கூடியதா யிருந்தாற் கொடுக்கிறேன், கூடாமையா யிருந்தால் நான் எப்படி கொடுக்கத் துணிவேன், ஓ மஹாராஜனே! என் வேண்டுகோள் சிலவுள அவற்றைக் கேட்டருளுக, உமக்குப் பின் என்மகளுக்குப் பிறக்கும் மகன் அரசனாக எவ்விதத்தினாலுந் தடையின்றிப் பட்டாபிஷேக முடையவனா யுலகாள வேண்டும், உம்முடைய வேறுபிள்ளைக்குப் பட்டாபிஷேக மாகக்கூடாதென்று பணிந்தனன். அரசன் தாசனுடைய வார்த்தையைக்கேட்டுச் சீமந்த புத்தி ரனாகிய காங்கேயன் பட்டாபிஷேகத்துக் குரியவனாயிருக்க அவனை மாற்றுவது அறமாகுமா! அதனை எண்ணி இவனை மறுப்போமாயின் இவ்வலைஞன் பரிமளகந்தியைத் தருவானா; இதற்கென்செய்வோமோ மென்றேங்கிக், காங்கேயரைப் பலகால் நினைக்குஞ் சிந்தனையாற் பீடிக்கப்பட்டவனா யொன்றுந்தோன்றாது அவனுக்கு விடை கூறாமல் தன் னரண்மனை சேர்ந்து காமநோயானும் பட்டாபிஷேக சிந்தனையானும் மதிமயங்கினவனாய்ச் சோர்ந்து ஸ்நானஞ்செய்வதொழிந்தும், ஆகாரங்கொள்ளுவ தொழிந்தும், நித்திரை பண்ணுவதொழிந்து மிருந்தனன்.

(ஙரு - சுஅ) புத்திரராகிய காங்கேயர் சிந்தா குலனாயிருக்கந் தந்தையைப் பார்த்துச் சமீபித்து நின்று நீர் சந்தோஷ மற்றிருப்பதற்குக் காரணமென்ன! உமக்கு எந்த சத்துருவரனவன் செயிக்கக் கூடாதவனாயிருக்கிறான், அவனை நான் செயித்து உம்முடைய அடிமையாளாகச் செய்கிறேன். ஓ ராஜ சிரேஷ்டரே! உமக்கு என்னசிந்தனை யுண்டா யிருக்கிறது, உண்மையைச் சொல்லும். என்னையாவே! எந்தபுத்திரன் பிதாவினுடைய துக்கத்தையறியா மலிருக்கின்றானோ, எந்த புத்திரன் துக்கத்தைத் தெரிந்துகொண்டு அந்தத் துக்கத்தை நிவர்த்தி செய்யாமலிருக்கின்றானோ அந்தப் புத்திரன் பிறந்ததனாலென்? இருந்ததனாலென்? அவன் யாரென்றால் பூர்வஜன்மத்தி லுண்டாகிய ருணத்தைத் தீர்த்துக் கொள்வதற்கு

வந்தவனாவன். இதில் விசாரிக்கத்தக்க தொன்றுமில்லை. ஓ பூமண்டலாதிபதியே! ரகு வம்சஸ்தனாயும் தசரதகுமாரனாகியு மிருந்த இராமன் பிதாவினாகஜ்ஞையினால் தானடைய வேண்டிய ராஜ்யசம்பத்தைவிட்டு லக்ஷ்மணன் சீதை இவர்களோடு சித்ரகூடத்தையடைந்து ஆரணிய சஞ்சாரஞ் செய்தனன். லோகிதாசன் தன் பிதாவாகிய அரிச்சந்திரனால் கடைவீதியில் அடிமையாளாக விற்கப்பட்டனன். சுனஸ்சேபன் என்று பிரசித்திபெற்ற பிராமணன் ஆணி கர்த்தரென்கிற ✡ இருடியாகிய தன் பிதாவினால் தனத்துக்கு விற்கப்பட்டு ✠ யூபஸ்தம்பத்தில் கட்டுப்பட்டுப் பின்னர் விஸ்வாமித்திரரால் விடுபடப்பட்டான். பரசுராமன் முன்னொரு காலத்தில் தந்தையாருடைய ஆக்ஞையால் தாயாருடைய சிரசை வெட்டியும் பின்னர் அவருடைய ஆக்ஞையினாலே அவளை யெழுப்பியும் விட்டனன். இவ்வாறு தந்தையின் வாக்கியத்தைப் பரிபாலனஞ் செய்த புண்ணியசீலர்பலர். இவர்கள் ஒவ்வொருவரும் செய்தகாரியங்களை எண்ணிப்பார்க்குங்கால் நடத்தக் கூடுமானவைகளா? இவைகளெல்லாம் யாருமறிந்த விஷயமே. ஓ பூபதியே! என்னுடைய சரீரம் உம்முடையது நான் என்ன செய்யவேண்டும் அதனைச் சொல்லும் அது செய்வதற்கு நானருகனல்லவா? நானிருக்கன்றபொழுது நீர் துக்கிக்கவேண்டியகாரண மென்னை? ஆகையால் நீர் ♓ அபேக்ஷத்திருக்கிறது எதுவோ அது சாத்தியப் படாததாயினும் அதை நான் கூட்டிவைக்கிறேன். ஓ அரசனே! உம்முடைய சிந்தையானது என்னருபமாயிருக்கிறது விவரமாய்ச் சொல்லும். சத்துருக்களைப் பற்றிய சிந்தனையாயிருக்குமாயின் இப்பொழுதே தனுசைத் தாங்கிக் கொண்டு அந்தச் சிந்தையைப் போக்கடிக்கிறேன். என்னுடைய தேகச்சிரமத்தால் எதுவும் நடத்தக்கூடும் பக்ஷத்தில் உம்முடைய அபிப்பிராயமானது உயர்த்தமாய்க்கேட்டுப் போகாது, உம்முடைய ஏக்கத்தை வாய்விட்டுப் பகரும், எந்த குமாரன் பலவிதத்திலும் யோக்கியனாயிருந்தபோதிலும் பிதாவினுடைய ஆக்ஞையைப் பரிபாலனஞ் செய்யாமற்போகிறானோ அவனைப் புத்திரனென்று நினைக்கக்கூடாது. பிதாவினுடைய மனக்கவலையை யறிந்து தீர்க்க வறியாத பிள்ளை பிறந்திருப்பதினாற் பிரயோஜனமென்ன என்றனன். சந்தநுமகாராஜன் புத்திரனுடைய வாக்கியங்களைக் கேட்டு மனசில் லஜ்ஜையுடையவனாய் அந்தகுமாரனைப் பார்த்து அடியில் வருமாறு கூறுவானாயினான். ஓ புத்ர சிகாமணியே! எனக்கு நீ ஏக புத்திரனாயிருக்கிறாய், மேலும் சூரனாகியும் அதிபலிஷ்டனாகியும், சத்துருக்களிடத்தில் கோபிஷ்டனாகியும், யுத்தத்தில் புறங்

✡ இருடியாகிய - முனிவராகிய ✠ யூபஸ்தம்பம் - வேள்வித்தூணில்
♓ அபேக்ஷித்திருக்கிறது - உன் விருப்பத்தை

காட்டாதவனாகியு மிருகதின்றாய், ஆகையால் உனக்குச் சத்துருக்கள் பலருண்டாவர் என்கிற சிந்தனை என்ன மிகவும் பாதிக்கின்றது. ஓ என்னப்பனே! ஏக புத்திரவானாகிற என் பிழைப்பு வியர்த்தமல்லவா? எவ்விடத்திலாவது யுத்தத்தில் நீ மரணமடையும் பக்ஷத்தில் நானென்ன செய்யப்போகிறேன், நான் நிராதரவாக ஆவேனல்லவா? ஓ புத்திரா! எந்த விசாரத்தை இப்பொழுது உன்முன்னே சொன்னேனோ அந்த விசாரந்தான் எனக்குப் பெரிய சிந்தனையாயிருக்கின்றது அந்தக் காரணத்தினாற்றான் துக்கித்துக் கொண்டிருக்கிறேன், எனக்குவேறு சிந்தையில்லை என்றனன்.

(சுன்-ருகூ) பிதாவாக்கியத்தைக்கேட்ட காங்கேயர் இது வுண்மையான மொழியல்ல வென்றெண்ணி வயதில் முதிர்ந்த மந்திரிகளைப் பார்த்துத் தொன்று தொட்டுள்ள அமைச்சர்களே! என்னுடைய பிதா என்னிடத்தில் உண்மையைச் சொல்லவில்லை; ஆகையால் அரசனுடைய அபிப்பிராயத்தை நீங்கள் நிச்சயமாய்க் கேட்டு என்னிடத்தில் அந்த அபிப்பிராயத்தைச் சத்தியமாய்ச் சொல்லவேண்டும் சொல்லும் பக்ஷத்தில் அந்த அபிப்பிராயத்தை இப்பொழுதே செய்து முடிக்கிறேனென்று சொல்லி யனுப்பினர். உடனே அந்த மந்திரிகள் அரசனிடத்திற்போய் அந்த விஷயத்தைப்பற்றிக் கேட்டு சோக காரணத்தையும், அதுபற்றிய பலவாறாகச் சிந்திக்கும் சிந்தனையையும் உண்மையாயறிந்து கொண்டு காங்கேயரிடத்திற் றெரிவித்தனர். காங்கேயர் அதைக்கேட்டு இது தான் உண்மையானசங்கதி யென்றெண்ணி ஆலோசிக்கவேண்டிய அளவும் ஆலோசித்து அப்பொழுதே அந்தமந்திரிகளையும் அழைத்துக்கொண்டு துரிதமாகத் தாசனுடைய வீட்டுக்குப் போய்த் தாசனைக்கண்டு நாணத்தோடும் அதிக வி.நயத்தோடும் அடியில் வருமாறு சொ.ல்லத் தொடங்கினார். ஓ தாசனே! இப்பொழுது உன்னுடைய புத்திரியை என்னுடைய பிதாவுக்குக் கொடுப்பாயாக, இந்தப் புத்திரியானவள் என்னுடைய பிதாவுக்குக் கொடுப்பாயாக, இந்தப் புத்திரியானவள் என்னுடைய தாயாக ஆகவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன், இவள் தாயாகும்பக்ஷத்தில் நான் புத்திரனாவது மன்றித் தாசனுமாகிறேனென்றனர். தாசன் குருவம்சத்திற் றோன்றிய அரசரேறே! தேவரீர் விதிக்குங் கட்டளையை மறுக்குந்தன்மைய னல்லனாயினும் என் மகள்பாலுள்ள பாசத்தினாற் றேன்றும் ஓ ராசையை மறுக்கும் வலியில்லாதவனா யிருக்கின்றேன். தாசனாகிய யான் என் செய்வேன், அஃதென்னை யெனில் தேவரீரிருக்கும்பொழுது இவளுக்குப் பிறக்கப்போகிற புத்திரன் சிம்மாசனாதி பதியாக ஆவனா ஆகமாட்டான்? ஆகையால் ஓ மஹானுபாவனே! என் மகளைத் தேவரீர் பத்தினியாகக் கொள்ளும் என்றனன். காங்கேயர் ஓ தாசனே!

நீ ஆலோசனையிற் சிறந்தவன், காரியத்திலே கண்ணுடையவன் "உன் மகளை என்வாக்கினால் எனக்குத் தாயாக ஆகவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்" என்றமையால் இனி நான் பத்னியாகக் கொள்ளேன், அவள் எனக்குத் தாயேயாவள், நான் சிம்ஹாசனா ரூடனாவதில்லை. இவளுக்குப் பிறக்கப்போகிறபிள்ளையே ராஜ்யத்தை எவ்விதத்தினாலும் நடத்துவதற்குரியவனாவான் இதிற் சந்தேகமில்லை என்றனா். தாசன் ஐயா தருமசீலரே! சத்தியமாகிய உம்முடைய வார்த்தையைத் தெரிந்துக் கொண்டேன், ஆயினும் உமக்கு எப்படியும் புத்திரப் போறுண்டாகு மல்லவா? அப்பிள்ளை பலவானாவனேயானால் அந்தக் குமாரன் தன்னுடைய பராக்கிரமத்தினால் ராஜ்யத்தைக் கிரகித்துக் கொள்ளமலிருப்பனா? அதற்குச் சந்தேகமு முண்டா? நீரப்பொழுது என்செயவல்லீர் என்றனன். காங்கேயா் ஓ வலைஞனே! நீ வலையை வீசி அக்கண்ணியிற் சலசரங்களைப் பிணிப்படுத்தி எப்படி ஆட்டிப்படைக்கின்றனையோ அப்படியே என்பிதாவையும் என்னையும் உன் சொல்வலையிற் பிணிப்படுத்தி விழிக்கும்படிச் செய்து உன்னெண்ணத்தை முடித்துக் கொள்ளத் துணிந்தாய், உன் னெண்ணத்துக்கு நானஞ்சேன், நான் எவ்விதத்திலும் விவாகஞ்செய்துக் கொள்ளுகிறதில்லை, இது நிச்சயம். அப்பா! இப்பொழுது நான் இந்த பீஷ்மம் (பயங்கரமான) இந்த விரதத்தை அநுஷ்டித்துக்கொண்டேன் இந்த வார்த்தை சத்யம் என்றனா். ஓ மத்தியசீவனஞ்செய்யும் அந்ததாசன் பீஷ்மா் செய்தபிரதிக்ஞையைக் கேட்டு அச்சமுற்றவனாய் இனித்தா்க்கிப்போமாயின் தீங்குநேரிடுமென்றெண்ணி அதிக செளந்தா்யவதியாகிய தன்மகளைக் காங்கேயரிடம் ஒப்புவித்து விட்டனன். காங்கேயா் மகிழ்ந்து அவளைத் தன் பிதாவினிடங்கொண்டு போய்ச் சோ்த்து அவரது கவலையை மாற்றினாா். சந்தநு மகாராஜன் தன்மகனது அரியசெயலைக் கேட்டு அதிசயமுடையவனாக மகிழ்ந்து பிரமளகந்தியை விதிமுறைப்படி தா்மபத்தினியாகக் கொண்டு அவளது இன்ப நலத்தை உண்டு வாழ்ந்திருந்தனன். அந்நாள்வரையில் சந்தநுமகாராஜன் இந்த சத்யவதிக்கு முன் வியாசா் பிறந்த செய்தியை யறியான்.

இரண்டாவது ஸ்கந்தம் ஐந்தாம் அத்யாயம்

சத்யவதீ சந்தநு சம்வாதகதனம்

முற்றிற்று.

———

ஆஉ அத்யாயம் ரு-க்கு ஸ்லோகம் - உஅஎ.

ஓ மத்தியசீவன - நடுத்தர உத்தியோகம்

உ

ஸ்ரீதேவ்யைநம:

ஆறாம் அத்தியாயம்

தி ரு த ரா ஷ் ட ரா தி யு த் ப த் தி.

(க-கO) சூதமுனிவர் சவுநகாதியரை நோக்கி ஓ முநிகணங்காள்! சந்தநுமகாராசன் சத்யவதியை விவாகஞ் செய்து கொண்டு சித்ராங்கதன், விசித்திர வீரியன் என்னும் இரண்டு பிள்ளைகளைப் பெற்றனன். அவ்விருவரும் சிலகாலம் அரசாண்டு பின்னர் தெய்வலோகஞ் சென்றனர். சத்யவதீ தன் மக்களிருவரும் இறந்து போனபடியால் சந்ததிவிர்த்தியின் பொருட்டு வியாசரைப் பிரார்த்தித்து மூத்த மருமகளிடத்தில் சம்போகிக்கச் செய்து திருதராஷ்டிரனையும், இளைய மருமகளிடத்தில் பாண்டுவையும் உற்பத்தி செய்வித்தனள். இருவருள் ஒருவன் குருடனாகவும், மற்றொருவன் வெண்குஷ்ட முடையவனாகவும் பிறந்தகாரணம் என்னையெனின், மூத்தவள் வியாசருடைய சடை முடையையும் நகரோம முதலியனவுக்கண்டு அச்சமுற்றவளாய்க் கண்களை மூடிக்கொண்டாள் அதனால் நீங்காத குருடனாயினான், இளையவளும் அச்சத்தினாலும், நாணத்தினாலும் தன்னருவத்தைக் காட்டாமல் ஓர் வெள்ளை வருணத்தைப் பூசிக் கொண்டாள் அதனால் நீங்காத வெண்ணிற முறைய வியாதியாளனாயினான். இவ்வண்ணம் வியாசருடைய கோபத்தினாற் பிறந்தபிள்ளைக ளிருவரும் குருடனும் வியாதியாளனுமாய்ப்போன படியினால் சத்யவதி இவ்விரும் அரசுரிமைக் குரியரல்லரே என்றெண்ணி மறுபடியும் இளையவளை யழைத்து அவளுக்கு வேண்டிய நயவுரைகள் கூறி மீண்டும் வியாசரைப் புணரும்படி ஏவினள். அவள் தான்போகாமல் தன்னேவலாளியாகிய ஒரு தாதியை யனுப்பினள். அவள் மனங்களித்து முனிவர்பாற் செல்ல அவரும் இவளுடைய சுந்தர நலங்களைக் கண்டு அன்புடையராய்க் ஃ கிரீடித்தனர். அதனால் தருமாத்மரும், சாந்தரும், ஆசார ஞானமுடையவரும், யமனுடைய அம்சருமான விதுரர்பிறந்தனர். ஓ முநிவர்களே! பின்னர் சத்தியவதீ பீஷ்மர் அனுமதியினால் பாண்டுவுக்கு மந்திரிகளால் முடி சூட்டிவைத்து விதுரரை மந்திரியாக நியமித்து பீஷ்மருடைய ஆணையின்படி அரசியல் நடத்திவரச் செய்தனள். திருதராஷ்டிரன் மூத்தவனா யிருந்தும் குருடனாகையினால் அவன் அரசியலுக் குரியனாகா னாயினான். இவ்வந்தகனுக்கு சவுபலை,

ஃ கிரீடித்தனர் - புணர்தல்

காந்தாரி என்று இரண்டுமனைவியர், அவருள் காந்தாரி துரியோதனன் முதலிய நூறு பிள்ளைகளைப் பெற்றனள். வைசியப் பெண்ணாகிய சவுபலை யுயுத்ஸு என்கிற பிள்ளையைப் பெற்றனள். பாண்டுவுக்கு சூரசேனன் மகளாகிய குந்தி மாத்திரி எனஅறு இரண்டு மனைவிகள். குந்திதேவியானவள் விவாகத்துக்கு முன் கன்னிகையாயிருந்தபொழுது சூரியபகவானால் மனோகரமாகிய கர்னனைப் பெற்றனள் என்றனர். சவுநகாதியர் சந்தேகமுற்று ஓ முனிபுங்கவரே! இது வென்ன மிக ஆச்சரியமாக விருக்கின்றது! நீர் கூறிய இச்செய்தி மிக நன்கு யிருக்கின்றது!! முதலில் கன்னிகையா யிருந்த காலத்தில் சூரியனால் புத்திரனெப்படிப் பிறந்தான்? பிள்ளையைப் பெற்றவளைப் பாண்டு எப்படி கலியாணஞ் செய்துக் கொண்டான்? என்றனர் சூதமுனிவர் ஓ முனிவர்களே! குந்திதேவியின் வரலாற்றைக் கூறுகின்றேன் கேட்பீர்களாக; வேதவித்துக்களாகிய மஹரிஷிகளால் பாண்டு மகாராஜாவுக்கு முதற் பத்னியென் றழைக்கப்பட்ட குந்திதேவி தன் தந்தையாகிய சூரசேன மகாராசனித்தி லிருக்கும்பொழுது குந்திபோஜனென்னும் அரசன் அங்குவந்து உமது புத்திரியாகிய குந்தியை என் பூஜாபரிசாரக நிமித்தம் என்வசம் ஒப்பிவிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தனன். சூரசேனனும் அவன் வேண்டுகோளின்படியே அனுப்பினன். பின்னரவன் தனது புத்திரியாகப் பாவித்துத் தான்செய்யும் சூரிய பூசைக்குரிய பணிவிடைகளுக்குரியவளாக வைத்துக்கொண்டன.

(கரு - ஙஅ.) ஓர் நாள் குந்திபோஜன்பால் தூர்வாசமுனிவர் வந்து சாதுர்மாசிய விரதபூர்த்தி உன்னாலாக வேண்டுமென்றனர்; அவன் மகாபாக்கியமென்று சம்மதித்து அவருடைய பணிவிடைக்களுக்குக் குந்திதேவியை நியமித்தனன்; அவள் அம்முனிவருக்குரிய ஏவற் பணிகளிற் சிறிதும் வழுவின்றி அவர் குறிப்புணர்ந்துசெய்து வந்தனள். தூர்வாசா விரதபூர்த்தியானவுடன் குந்தியினிடத்தில் மிகவுஞ் சந்தோஷமுடையவராய் ஓ குழந்தாய்! உன்வழிபாட்டுக்கு மகிழ்ந்தேன் உனக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும் என்று ஆசிபுகன்று சில திவ்யமந்திரங்களை யுபதேசித்து இம்மந்திரங்களை எப்பொழுது உச்சரிக்கின்றனையோ அப்பொழுது அம்மந்திரங்களுக்குரிய தேவதைகள் பிரசன்னமாகும் என்றனுக்கிரகஞ் செய்து போயினர். சில நாள்கழிந்தபின்னர் குந்திதேவி தனக்குபதேசித்த மந்திரங்களின் மகிமை தெரிந்துக்கொள்ள அம்மந்திரங்களிலொன்றை யெண்ணி யுச்சரித்தனள்; உடனே அம்மந்திரத்திற் கதிதேவதையாகிய சூரியமூர்த்தி மானுடவடிவங்கொண்டு வந்துநின்றனர், குந்தி அவருடைய பேரழகைக்கண்டு அதிசயித்துக் காமங்கொண்டு ருதுதோஷத்தையடைந்து நாணமுடையவளாய்க் கைகூப்பி ஓ

சுவாமிகாள்! உம்மைத்தரிசிக்கவெண்ணினேன் தரிசனமாய் விட்டது உம்முடைய மண்டலத்துக் கெழுந்தருளலாம் என்ன, சூரிய மூர்த்தி ஓ குந்தீ! உன்னிடத்தில் மந்திரசித்தி யுண்டானபடியினாற்றான் நானிவ்வளவு எளிதில் வந்தேன் நீ என்னால் ஒரு பிரயோசனமுமடையாமற் போவென்று சொல்வது அழகன்று, இதற்கா எனது மந்திரத்தை உச்சரித்தது, நான் உன்னைப் பார்த்த வுடன் மன்மதனால் பீடிக்கப்பட்டு காமவெப்ப முடையவனாயினேன், அவ்வெப்பத்தை உன்னால் போக்கிக்கொள்ளாமல் நானெப்படி போவேனென்றனா். குந்தி யான் கன்னிகையாயிருக்கும்பொழுது நீரிப்போதுகொண்ட அபேக்ஷை எப்படி நிறைவேறும், அதற்குரியவளாயிருப்பின் உம்முடைய ஆக்ஞைக்கிரண்டாவது செய்யேன், இப்போது உடன்படுபேனாயின் யாவரும் பழிப்பார்களல்லவா! இம்மொழி கேட்ட சூரியமூர்த்தி ஓ பெண்ணே! என்னோடு கூடுவதனால் உன் கன்னிகை விரதத்திற்குப் பங்கம் வரமாட்டாது, யாவரும் உன்னைப் புகழ்வார்கள், என்னபீஷ்டத்தை நீதடுப்பையாயின் உன்னைச் சபிப்பேன், இம்மந்திரத்தை யுபதேசித்த குருவையுஞ் சபிப்பேன் என்ன சொல்லுகிறாயென்று கேட்க, குந்திதேவி சிறிது அச்சமுற் றவளாய் நம்மால் நமது ஆசிரியருக்குச் சாபம் நேரிடும்படிச் செய்வதுதானா நாம் செய்யும் பிரதியுபகார மென்றெண்ணி ஓ சூரியபகவானே! சாபமிடுவேனென்பதை விட்டுவிடும், உம்முடைய பிரியத்துக்கு நானுரியவளாயிருக்கிறே னென்று கூற, சூரியன் மன மகிழ்ந்தவனாய்க் குந்தியினுடைய இன்பநலத்தைக் குறைவின்றி யனுபவித்துக் காமவிடாயகன்று அவளுக்குப் பலஆசிகள் பகன்று தனது மண்டலம் போய்ச் சேர்ந்தனன். பின்னர் குந்தி தாய்தந்தை முதலிய ஒருவருக்குந் தெரியாமல் கர்ப்பவதியாய்க் கவசகுண்டலத்தோடு இரண்டாவது சூரியனென்று கண்டோர் சொல்லக்கூடிய ஓர் குழந்தையைப்பெற்று அக்குழந்தையைக் கையிலேந்திக்கொண்டு துக்கித்திருக்குஞ் சமயத்தில் அவளுயிர்க்கொத்த தாதி யொருத்தி, நானிருக்கும்போது நீ ஏன் வியசனப்படுகின்றாய் இவ் வற்ப காரியங்களுக்கெல்லாந் துக்கிப்பவருமுண்டோ நீ ஒன்றுக்குங் கவலையுற வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது, குந்தி ஒரு மரப்பெட்டியில் தனது களங்கமுள்ள சேலையைப் பரப்பி அதில் வளர்த்தி அம்பிகையைத் தியானித்து குழந்தையின் திருமுகமண்டலத்தைப் பார்த்து அப்பா குழந்தாய் உன்னைப்பெறும் பாக்கியத்தைப்பெற்றேனேயன்றி உன்னைச் சீராட்டித்தோளிலும் மார்பிலுங் கடத்திப் பாலூட்டித் தொட்டிலில் வளர்த்தி ஊசலாட்டிப் பெறும் புத்திரானந்தத்தை யடையும் பாக்கியத்தைப் பெறாதொழுந்தேன். அந்தோ! இது கஷ்டம்

கஷ்டம். சர்வாபரணசம்பன்னையாயும், பகவதியாயும், சர்வேஸ்வரியாயும், விஸ்வஜநநியாயும், காத்தியாயினியாயும் விளங்கும் அம்பிகையே உனக்குப் பசிவராமல் பாலூட்டிவளர்க்க வேண்டும், அவ்வம்பிகையே உனக்குத் துணையாயிருப்பாள். உன்முகாரவிந்தத்தை நானெப்பொழுது காண்பேன், நான் உன்னைப்பெற்றெடுத்து வளர்க்கும் தாயாகாமல் உன்னைக் கொல்லுங் கொலையாளியாயினேன், என்னைப் போலும் பாவி ஒருத்தி உலகிலுண்டோ, இப்பொழுது பெட்டியைப் பூட்டி மநுடசஞ்சாரமில்லாத விடத்திற் கொண்டுபோய் போட வுத்தேசித்திருகிறேன், நான் ராஜஸ்திரீயாயிருந்தும் சேரஸ்திரியைப் போல் இக்கொடுந்தொழிலைச் செய்வதற்காயினேன், இப்பாவந் தேவியைத் தியானித்துப் பூஜித்து வாழ்த்தாமையினால் வந்ததேயன்றி வேறில்லை, இனி நான் என்செய்வேன் என்று அப்பெட்டியைப் பூட்டித் தன்னைப் பாதுகாப்பவளாகிய தோழியிடத்திற் கொடுத்து, ஓ பாங்கியே! என்னுயிரை மாய்க்கத்துணியாது இவ்வருமை மகனது உயிரைமாய்க்காது மாய்க்கத் துணிந்தேன். ஆகையால் என்பால் அன்புடையவளாய் இப்பெட்டியை ஒருவரும் அறியாவண்ணஞ் செய்துவிடென்று கொடுத்துவிட்டு ஸ்நானஞ் செய்து பரிசுத்தையாய்த் தன்பிதாவினுடைய கிருகஞ்சென்று மிகவும் பயத்தோடு கூடினவளாய் வாழ்ந்திருந்தனள். அத்தோழி அப்பெட்டியை அப்படியே செய்ய, அப்பெட்டி அதிரதனென்னுந் தேர்ப்பாகன்கையிற் கிடைத்தது. அவன் அப்பெட்டியைத் தன் மனையாட்டியாகிய ராதைக்குக் காண்பித்து இது பெறுதற்கரிய பெருஞ் செல்வமென்று கானீனனாகிய அக்குழந்தையைப் பாதுகாத்துவந்தனன்.

(ருகூ - ருஅ.) இப்பால் சூரசேனன் குந்திக்கு மங்கைப்பருவம் வருதலை நாடி சுயம்வரம் நாட்ட, பாண்டு மகாராசன் வந்து அக்குந்தியை விவாகஞ் செய்துக்கொண்டு, பின்னர் மாத்திரியையும் இரண்டாவது மனைவியாக்கிக்கொண்டு வாழுநாளில் ஓர் நாள் வேட்டை நிமித்தமாய் வனஞ்சென்று மிருகங்களைக் கொன்றுவரும்பொழுது அங்கு குந்தமனென்னு முனிவர் தானும் மனைவியும் மானுருவெடுத்து லீலாவிநோதமாய்ப் புணர்ந்திருப்பதை யறியாது மிருகமென்றெண்ணி பாணப்பிரயோகஞ் செய்தான். அது முனிவர்மேற்பட அவர்மரணாவஸ்தை யடைந்து கோபங்கொண்டு அரசனைப் பார்த்து ஓமதி கேடா! உன் சரீரம்போல் உன்னறிவும் வெள்ளையாயிற்றே! அட மூடா! இனி உன்மனைவியை எப்பொழுது புணருகின்றனையோ அப்போது மரணமடையக் கடவாயென்று கொடுஞ்சாபமிட்டனர். அதை அரசன் கேட்டுத் துக்காக்கிராந்தனாய் நடுக்கமுற்று இனி என்செய்வோமென்றேங்கி அரசாட்சியை வெறுத்து

வனத்திற்றானே நாள் கழிக்கவெண்ணித் தன்மனைவி யரைப்பார்த்து என்னிரு கண்மணிகளே! எனக்கு நேரிட்ட சாபத்தைக்கேட்டீர்க ளல்லவா இனிநான் உங்களோடு கூடிவாழ்வதற் குரியவனாவனா! ஆகையால் நீங்கள் நகரம்போய்ச் சேருங்கள் நானிங்குள்ள தவசிகளோடு ஒருவனாக விருந்து காலங்கழிக்கின்றேன் என்றான். மனைவியர் நாங்கள் உம்மைப் பிரிந்திருப்பது எங்கள் கற்புக்கு அழகாகுமா! நாங்களும் உம்மைப்போலவே காமாதிகுணங்களைவிட்டு வீரபதி விரதைகளாய்ப் பதிதருமத்தை மேற்கொண்டு உமக்குப் பரிசாரகிகளாய்க் காலங்கழித்து வருகிறோம் என்று அரசன் தடுக்காவண்ணங் கூறி அவனுடன் அவ்வனமே நகரமாக வாழ்ந் திருந்தனர். ஓர்நாள் அரசன் கங்கைக்கரையின் வழியே மனைவியருடன் செல்லும் பொழுது அங்குள்ள ஓ ராசீர்மத்தில் முனிவரெல்லாங் கூடித் தருமசாஸ்திர விசாரஞ்செய்யும் பாகத்தில் "அபுத்ரஸ்யகதிர்நாஸ்தி" என்கிற வாக்கியத்தைச் சொல்லிப் புத்திர னில்லாதவர்க்குக் கதியில்லை யாகையால் அவர் எவ்விதத்திலேனுங் அம்சஜன், கோளகன், குண்டகன், கானீனன் என்பவரைக் கொண்டாவது புத்திரோற்பத்தி செய்துக்கொள்ளல் வேண்டும் என்று உபந்நியசித்துக் கொண்டிருக்க அதைக்கேட்டு மனக்கவலை யடைந்து குந்தியைப் பார்த்து ஓ சொற்றிறம்பாத கற்பிற்சிறந்த நங்காய்! இப்பெரியோர் கூறிய தருமத்தைக் கேட்டனையா? என்னாலெப்படி உங்களுக்குப் புத்திரப்பே றுண்டாகும், ஆகையால் நீ இங்குள்ள முனிவரிடஞ் சென்று புத்திரப்பேறு பெற்றுவருவாய். இது என்னுடைய ஆணையா யிருக்கும்பொழுது உனக்குத் தோஷமுண்டாகமாட்டாது. பூர்வத்தில் மஹானாகிய சவுதாசன் னென்கிற அரசன் வசிஷ்டமுநிவரால் புத்திரோற்பத்தி செய்துக்கொண்டன னென்று எனக்குக் கேள்வி என்றான். குந்திதேவி ஓ அரசனே! எச்சமயத்திலேயும் பலிக்கத்தக்கதாகியும், இஷ்டாபூர்த்தி செய்வதாகியுமுள்ள மந்திரங்கள் முன்னொருசமயம் தூர்வாசர் எனக் குபதேசித்திருக்கின்றார். புத்திரபாக்கியத்தை விரும்பிய எந்நாயகனே! எந்த மந்திரத்தைக்கொண்டு எந்த தேவதையை விரும்புகின்றேனோ அந்தத்தேவதை என்பக்கத்தில் நிச்சயமாகவரும், அந்த தேவதையினாலேயே புத்திரப்பே றுண்டாகுமென்றனள். அரசன் அம்மொழிகேட்டு மிகவும் மகிழந்து அப்படியே செய்வாயென்று விடைகொடுத்தனன். குந்தி தேவி கணவனுடைய ♈ அநுக்ஞைபெற்று தேவசிரேஷ்டனாகிய யமதருமராசனைத் தியானித்து அவன் மந்திரத்தைச் செபிக்க அவன் வந்தனன். அவனுடன் புணர்ந்து யுதிஷ்டிரரையும், அப்படியே வாயுபகவானுக்கு * விருகோதாரனை

* செந் ஈயைப்போலும் வயிறுடையவன். ♈ அநுக்ஞை - உத்தரவு

(வீமனை)யும், இந்திரனுக்கு அருச்சுனனையும், வருடத்துக்
கொருவனாக மூன்றுவருடத்துக்கு மூன்றுபிள்ளைகளைப் பெற்றனள்.
குந்திதேவி புத்திரப்பேறுபெற்ற மகிமையைக் கண்டு மாத்திராதேவி
அரசனை நோக்கி எந்நாயகனே! நான் புத்திரப்பேறு பெற வறியாத
பாவியாயினேன் என்செய்வேன் நீர் எனக்குப்புத்திரப்பே றுண்டாகும்
வகையைத் தேடவேண்டுமென்று மிகவிரக்கத்தோடும்
பிரார்த்தித்தனள். அரசன் குந்தியே இதற்கு வழி காட்டத் தக்கவளென்
றெண்ணி அவளை யழைத்து மாத்திரியினுடைய வேண்டுகோளைத்
தெரியப்படுத்தினான். அந்த வுத்தமி தயையுடன் மாத்திரியை யழைத்து
அஸ்வினி தேவதைகளினுடைய மந்திரத்தை யுபதேசித்தனள். மாத்திரி
நமக்கு இந்த குந்திதேவி ஒரு மந்திரத்தைத்தானே உபதேசித்தாள்
இதற்கு ஒரு பிள்ளை தானே பிறக்கும் என்கிற மனக்குறை
யுடையவளாய் அரசனுடன் தெரிவிக்க அரசன் ஒருபிள்ளையிருந்தால்
போதுமென்றனன். பின்னர் மாத்ரியும் சித்தசமாதான முடையவளாய்
வாழுநாளில் ஓர் நாள் அஸ்வினி தேவதைகளைத் தியானிக்க
அத்தேவதைகள் பிரத்தியக்ஷமாய் வர அவர்களைப் புணர்ந்து
நகுலசகாதேவதைப் பெற்றனள். இவ்வாறு இருவருக்கும் பிறந்த
ஐவரும் பாண்டுபுத்திரரென்றே வழங்கப் பெற்றனர், இச்செய்தி யிங்ஙன
மிருக்க.

(ருகூ - சுரு.) ஓர் நாள் அந்த ஆச்சிரமத்தில் ஒருவரு மில்லா
மற்போக மாத்திரியானவள் மலர்பறித் திருக்கும்பொழுது பாண்டுவுக்கு
மரணகாலஞ் சமீபத்த படியினால் அவளைக்கண்டு என்றுங்
கொள்ளாத காமவெறிகொண்டு அவள்கையைப் பற்றியிழுத்தனன்.
அவள் என்னைத் தொடவேண்டாம் தொடவேண்டாமென்று அநேக
விதமாய்த் தடைசெய்தும் இவன்தடைபடாது அவளைக்கட்டி
யணைத்துச் சுகிக்கும்பொழுது பூமியில் வீழ்ந்திறந்தனன். மாத்திரி ஓர்
விருக்ஷத்திற் படர்ந்திருந்தகொடி அவ்விருக்ஷ முறிந்த காலத்தில்
அக்கொடி அவ்விருக்ஷத்தின்மேல் வீழ்வதுபோல் பாண்டுவின்மேல்
ஓ வென்றலரி அழுதுகொண்டே விழுந்தனள். அக்குரலொலியால்
குந்தியும் ஓடிவந்து இருவரையும் பார்த்து இதுவென்ன
கொடுமையென்று தீராத்துயரங் கொண்டழத் தொடங்கினள்.
இவ்விருவருடைய அழுகையோசையைக் கேட்டுப் பாண்டவரும்
வைதிக நிஷ்டரான முனிகணங்களும் ஓடிவந்து பார்த்துத் தாங்களும்
வருந்தி பின்னரவர்களைத்தேற்றி அப்பாண்டு மகாராசன் நாடோறும்
வளர்த்திவந்த காருகபத்திய முதலிய அக்கினிகளால் அவனை
கங்கைக்கரையிற் கிடத்தி, செய்யவேண்டுவனவாயுள்ள
தகனாதிகருமங்களைச் செய்துவைத்தனர். மாத்திராதேவி யானவள்

வீரபதி விரதைகளுடைய சத்தியவொழுக்கத்தைப் பரிபாவிக்க வேண்டுமென்கிற தருமத்தில் ஆசையுற்றவளாய் நகுல சகாதேவரைக் குந்தியினிடத்தில் ஒப்பிவித்துத் தான் தனது நாயகனுடன் சககமனமாயினாள். முனிவர்கள் யமமூர்த்திக்குக் கொடுக்கத்தக்கதாகிய அர்க்கியதான முதலியவைகளைச் செய்து முடித்துப் பாண்டவரையும், குந்திதேவியையும் அழைத்துக் கொண்டு அஸ்தினாபுரத்தை வந்தடைந்தார்கள்.

(ருகூ - சுரு.) அவர்களைக் காங்கேயர், விதுரர், நகரத்தார் முதலோர்கூடி அழைத்துக் கொண்டுபோய்த் திருதராஷ்டிர னிடத்தில் விட்டார்கள். பின்னர் திருதராஷ்டிரர் முதலியோர் பாண்டுவுக்கு நேர்ந்த சாபந்தெரிந்தவர்க ளாகலான் இந்த குந்திதேவிக்கு ஐவர் ஏதென்று சந்தேகித்தவர்களாய் அந்த தேவியைப் பார்த்து இந்த குழந்தைகள் யாருடையதென்று கேட்டனர். குந்திதேவி இவ்வாறு கேழ்க்கலாயிற்றே என்று சிறிதேங்கி இயமன் முதலிய ஐவரையும் நினைத்தனள்; அவ்வைவரும் ஆகாய மார்க்கத்தில் வந்து இந்த ஐந்து பிள்ளைகளும் தேவாம்சத்தினாற் குருகுலத்திற் பிறந்தவர்களே இவர்களுக்குக் காரணர் நாங்களைவரே என்றனர். இவர் வாக்கியத்தைப் பீஷ்மர் முதலாயினார் கேட்டுச் சத்தியம் சத்திய மென்று கொண்டாடிப் பாண்டு புத்திரரையும், குந்திதேவியையும் அழைத்துக் கொண்டு அஸ்தினாபுரத்தை வந்தடைந்தனர். பீஷ்மர் இந்த குழந்தைகளிடத்தில் மிகவும் பிரீதியுடைய மனமுடைய வராய் எல்லாவற்றானுங் குறைவு வராவண்ணம் திரவியங்களைச் செலவழித்துக் கண்ணிமைபோற் பாதுகாத்து வந்தனர்.

இரண்டாவது ஸ்கந்தம் ஆறாம் அத்யாயம்

திருதராஷ்டிராதி யுத்பத்தி

முற்றிற்று.

ஆஉ அத்யாயம் சு-க்கு ஸ்லோகம் - (ஙருசு.)

முதல் ஸ்கந்தம் (உ0)ம் அத்யாயமும், இந்த (உ)ம் ஸ்கந்தம் (சு)ம் அத்தியாயமும் "திருதராஷ்டிராதி யுத்பத்தி" என்றால் இவ்விரண்டு மொன்றன்று யாதெனின்! முதல் ஸ்கந்தத்தில் "திருதராஷ்டிராதி யுத்பத்தியில்" திருத்திரஷ்டிராதியர் பிறப்பதற்கு ஆதியாயிருந்தவர் காங்கேயர், சத்தியவதீ வியாசர் இவர்களாகையால் அவர்கள்

சரித்திரத்தை ஆரம்பத்தில் பெருக்கமாகவும், திருதராஷ்டிரன், பாண்டு விதுரர் முதலியோர் பிறந்தார்களென்பதை அந்தத்தில் சுருக்கமாகவுஞ் சொல்லிவிட்டபடியால் இந்த ஸ்க்கந்தத்தில் "திருதராஷ்டிராதி யுத்மத்தி" என்று திருதராஷ்டிரன் முதலிய மூவரும் முறையே கண்ணில்லா மற்போவதற்கும், பாண்டு என்னும் நோயை யடைதற்கும், ஞானவானதற்குங் காரணம் இது இதுவாமென்றும், அவருள் பாண்டு அரசியலுக் குரியனாய்த் தன் மனைவியரால் குலவிர்த்தி செய்த முறை இவ்வண்ணமா மென்றும்விரித்துக் கூறப்பட் டிருக்கிறதென்க.

உ

ஸ்ரீதேவ்யைநம:

ஏழாம் அத்தியாயம்

யு தி ஷ் டி ரா தி ச ரி த ம்.

செவிச்செல்வத்திற் சிறந்த ஓ முனிபுங்கவர்காள்! இதுவரையில் யுதிஷ்டிராதியர் பிறப்பின்வகையையும், குந்திதேவியும் மாத்திரியும் மத்திரபலத்தினால் புத்திரப்பேறு பெற்றமையும், பாண்டு சாபவலியான் விதியின் வழியே மதிசென்று மரணமடைந்தமையும், பாண்டவரைவரும் பீஷ்மரால் பாதுகாக்கப்பட்டு வந்தமையும் எடுத்துக் கூறினோம். இனி திருதராஷ்டிரன் தன் பிள்ளைகளுக்கு நல்லகதியுண்டாகு நிமித்தம் தருமராசன்பால் திரவியமும், வீமன்சேனன்பால் செவி கைப்புறுஞ்சொல்லும் பெற்று கங்கையையணுகி எண்ணிய வாறியற்றியதும், குந்திதேவி முதலாயினாரிறந்து போன கர்னன் முதலாயினாரைப் பார்க்கவேண்டு மென்று வியாசரைப் பிரார்த்திக்க அவர் தேவியைத் தியானித்து அவர்களைக் காட்டிய வரலாறுங் கூறுகின்றேன் கேட்பீர்களாக.

(க - சு) மேற்கூறிய பாண்டவ ரைவருக்குந்திரௌபதி என்பவள் அழகிய சுந்தரியாய்ப் பொதுவான மனைவியாயிருந்தனள். பொதுவா யிருந்தபோதிலும் மஹா பதிவிரதை. அப்பதிவிரதைக்குப் பிள்ளைகளைவர். இவர்களுள் அருச்சுனன் கிருஷ்ண மூர்த்தியினுடைய உடன் பிறந்தவளாகிய சுபத்திரயை விரும்ப, ஜயசீலனாகிய அவன் விரும்பியபடியே கிருஷ்ண மூர்த்தி சம்மதித்து அவனுக்கு அச்சுபத்திரையை விவாகஞ் செய்துவைத்தனன்.

அவளுக்கு அபிமன்யு என்கிற ஒருபுத்திரனிருந்தான் அவனுக்கு மனைவி விராட ராசனுடைய பெண்ணாகிய அதி சுந்தரமுடைய உத்தரை; இவன் பாரத யத்தத்திலிறந்தனன், திரௌபதியினுடைய பிள்ளைகளும் இறந்து போயினர். இவ்வாறு பாண்டுவினுடைய *குலம் → க்ஷீணமாய்வருகின்ற அந்தத்தில் அபிமன்யுவினுடைய மனைவியாகிய உத்தரை ஒரு புத்திரனைப் பெற்றனள். அப்பிள்ளையும் அஸ்வத்தாமனுடைய பாணத்தினால் மரணமடைந்தனன். அற்புதசாமர்த்திய முடையவனாகிய அபிமன்யுவினுடைய பிள்ளை இறந்துபட்டானென்கிற செய்தியைக் கேள்வியுற்ற கிருஷ்ண மூர்த்தி தாபத்தை யடைந்தவராய் அப்பிள்ளை பிழைத் தெழுந்திருக்கும் வண்ணஞ் செய்ய, அவனும் எழுந்திருந்தனன். இவன் குலம் க்ஷீணமாகுங் காலத்திற் பிறந்தானாகையால் அக்காரணத்தைக் கருதி "பரிக்ஷித்" என்று உலகெல்லாமறிய நாமகரணஞ் செய்து அழைத்து மங்களங் கொண்டாடினர்.

(எ-க0) *திருதராஷ்டிரன்-யுத்தத்தில் தன் பிள்ளைகளிறந்து போக அதனால் மிகவுந்துக்கத்தை யடைந்தவனாகியும், வீமனுடைய வார்த்தை என்கிற பாணத்தினால் ஒரு கணமேனும் ஓயாமல் பீடிக்கப் பட்டவனாகியும், பாண்டவர்களுடைய அதிகாரத்திற் குட்பட்டவனாகியும் இருந்தனன். இவனைப்போலவே காந்தாரியும் பிள்ளைகளுடைய துக்கத்தினால் மிகவும் பீடிக்கப்பட்டவளாய்க் கண்ணீர் விட்டுக்கொண்டேயிருந்தாள். தருமபுத்திரர் இந்த இரண்டு பேருடைய துக்கத்தைப் பார்க்குந் தோறும் சகிக்கக் கூடாது பெருங் கவலையுடையவராய் அவர்களுக்குண்டாயிருக்கும் புத்திரசோபம் நீங்குமாறு அவர்களுக்குரிய பணிகளெல்லாம் இரவும் பகலுமோய் வில்லாமல் தானே செய்துவந்தார். ஞானதரும் சீலராகிய விதுரர் யுதிஷ்டிரருடைய சம்மதப்படி அந்தகனாகிய அத் திருதராஷ்டிரன் பக்கத்திற்றானே யிருந்தனர். திருதராஷ்டிரன் - விதுரர் கன்னைவிட்டு நீங்கா திருப்பதினாலும், தருமர் மனஞ்சலியாமல் தனக்குச் செய்வதாகிய ஏவலினாலும் புத்திரசோகம் நீங்கினவன் போலிருந்தனன்.

(கக-உ0) தருமருடைய உபசரிப்பினால் திருத ராஷ்டிரன் சோகம் நீங்கினவனா யிருப்பதைப்பார்த்த வீமன் சகியாதவனாய் அடங்காத கோபங்கொண்டு யாவருங்கேட்க மிகவுங் கிழவனாயிருக்கின்ற திருதராஷ்டிரன் உயிர்விட் டிறக்கும்படியாக அடியில் வருமாறு

*தரிக்கப்பட்ட ராஜ்யத்தையுடையவன், யுத்தத்தில் முன்வைத்த காலைப் பின்வாங்காதவன்
→ க்ஷீணமாய் - சிதைந்து

வாக்பாணங்களைப் பிரயோகஞ்செய்யலாயினன். ஓ கண்ணில்லாத குருடனே? உன்னுடைய பிள்ளைகளெல்லாம் யுத்தத்தில் என்னால் கொல்லப்பட்டார்கள்; அவருள் உனக்கும் துரியோதனனுக்கும் மிகவும் பிரியனாயிருந்த துச்சாதனனுடைய உதிரவெள்ளத்தைத் தண்ணீரைப் போற்பருகி ஏப்பமிட்டேன், ஓ சபையார்களே? இந்தக் கிழக்குருடன் வெட்கமென்பது சிறிதுமில்லாமல் என்னால் கொடுக்கப்பட்ட பிண்டத்தைக் காக்கையைப்போலும், நாயைப்போலும் வெறுப் பில்லாமல் தின்று வருகின்றான், இவன் பிழைப்பும் ஓர் பிழைப்பா! இவன் உயிரோடிருப்பதனால் யாருக்கென்ன பிரயோஜனம்! இவன் விருதாவாக ஜீவித்திருக்கிறான் என்று பலவாறான இழிவுரைகளால் வைதனன், இவன் வைவதைக்கேட்ட திருதராஷ்டிரன் தருமரைப் பார்த்து ஓ தருமனே? இந்த வீமன் பேசுகின்றபேச்சை எத்தனை நாள் கேட்டிருப்பேன் என்னால் கேட்கமுடியவில்லை என்றனன். தருமர் ஓ என்னையாவே, அந்த வீமனுடைய வார்த்தையை நீர் ஒரு பொருளாக எண்ணவேண்டாம். அவன் மூர்க்கன் அவன் யார்சொல்லையுங் கேளான் என்று வேண்டிய சமாதானங்களைச் சொல்லிவந்தனன். இவ்வண்ணம் தருமருடைய இனிய வார்த்தைகளையும், வீமசேனனுடைய கடுஞ்சொற்களையுங் கேட்டுப் பதினெண்ணாயிரவருடம் துக்க சீவியாய் வாழ்ந்திருந்து ஓர் நாள் தருமரையழைத்து அப்பா குழந்தாய் நான் இனி ஆரணியவாசஞ்செய்ய விரும்பியிருக்கிறேன் நீ விடைதரல் வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அன்றியும் ஓ தருமனே? நீ மிகவுங் தயாளகுணமுடையவன் இப்பொழுது நானொன்று விரும்பியிருக்கிறேன் என்னையெனில் இறந்துபோன என்னுடைய பிள்ளைகள் பொருட்டு விதிபூர்வகமாய்த் திலோதகம் (தர்ப்பணாதிகள்) செய்யவெண்ணி யிருக்கிறேன் அதற்கு வேண்டிய பொருளுதவியை நீ செய்யவேண்டு மென்றனன். ஏனென்றால் யுத்தத்திலிறந்துபோன என்னுடைய பிள்ளைகளுக்கெல்லாஞ் செய்யவேண்டிய பரலோகக்கிரியைகளை இந்த வீமன் பூர்வ துவே ஷத்தையே மனதிலெண்ணிக்கொண்டு நன்றாகச் செய்யவேயில்லை. அவர்களை இங்கு வாழவொட்டாமற் செய்ததுபோல் அங்கும் வாழவொட்டாமற்செய்யவே விதிப்படி செய்யாதொழிந்தன னென்றறிவாய். நீ நான் கேட்டவண்ணஞ் செய்யாதொழிந்தன னென்றறிவாய். நீ நான் கேட்டவண்ணஞ் தருவையாயின் என் பிள்ளைகளெல்லாஞ் சுவர்க்கலோகப் பிராப்தியடையுமாறு என்னிஷ்டம் போற் செய்துமுடிப்பேன். இதனை யோசிப்பாயென் றனுப்பி விட்டுப் பின்னர் விதுரரையழைத்துத் தன்குறைகளெல்லா மெடுத்துக்கூறிப் பிரபுவாகியும், பரிசுத்தனாகியு மிருக்கின்ற தரும புத்திரரிடத்தில் ஏகாந்தசமயம்பார்த்து நான்

தனம்வேண்டியவனாக விருக்கின்றே னென்பதைத் தெரிவித்துக் கொடுக்கும்படிச் செய்வாயென்றனுப்பினன். அவரும் அவ்வாறே தருமருக்கறிவிக்க, அவர் மிகவிரக்க முடையவராய்த் தன் சம்பந்தமாயிருக்கிற யாவரையு மழைத்து ஓ பூஜ்யமானவர்களே? இப்பொழுது என்னுடைய பெரிய தந்தையாகிய திருதராஷ்டிர மஹாராஜா தன் பிள்ளைகளுக்குச் சுவர்க்கலோகப் பிராப்தி யுண்டாமாறு ✤ திலோதகஞ்செய்ய வுத்தேசித் திருக்கிறபடியால் அதற்குவேண்டிய பொருளுதவியைச் செய்யச் சித்தமா யிருக்கின்றே னென்றனர்.

(உக-ஙசு) அபார பராக்கிரமத்தை யுடைத் தானவர்களான ஐவருக்குள் மூத்தவராகிய தருமர்கூறிய வார்த்தையை இவருடைய சகோதரனும், வாயுபுத்திரனுமாகிய வீமன்கேட்டுக் கோபங் கொண்டவனாய் மிக ஆவேசத்துடன் தமையனைப்பார்த்துப் பேசுவான், ஓ அண்ணாவே? நீர் தருமராஜாவென்பதை இப்பொழுது தானறிந்தேன். உம்மைப்போலுந்தருமமறிந்து செய்யத்தக்கவரை இவ்வுலகின்கண் காண்டல் மிகவும் அரிது, ஹா! ஹா! நீர் கூறிய வார்த்தை மிக நன்று நன்று, துரியோதனனாதிகளுடைய பரலோகத்தைக்கருதி திரவியங் கொடுக்கவா வேண்டும்? நீர் கொடுக்குந் திரவியத்தினாலேயே இந்தக்குருடன் திருப்தியடைவானா? இதுவென்ன மூடத்தனம். உம்முடைய யோசனை ஒவ்வொன்றையும் எண்ணிப்பார்க்கும்பொழுது எவ்வளவு சந்தோஷத்தை விளைவிக்கின்றது. முன்னும் உம்முடைய துராலோசனையினாலன்றோ நாங்கள் துக்கத்தையுடையவர்களாய் வனத்தில் வசிக்கலாயினோம். திரௌபதியும் துஷ்டனாகிய சடாசூரனென்கிற அசுரனாலேகொண்டு போகப்பட்டாள். நல்ல நியாயந் தெரிந்த ஓ புண்ணிய புருஷரே? முன் கூறியது மாத்திரமா, உம்முடைய அனுக்கிரஹத்தினால் நாங்கள் பிழைக்கவகை யற்றவர்களாய் விராடராஜனுடைய கிருகத்தில் வசிப்பும், அவனுடைய ஏவற்றொழிலும் கிடைக்கப் பெற்றோம். நீர் சொக்கட்டானாடினீரே அது ஆடாமற்போவீரானால் நாங்கள் பரதேசியாய்ப்போக வந்தகாலம் எப்படி விருத்தியடையும்? விராடபூபதிக்கு நானெப்படி சமையலாளாக ஆவேன்? புஜபலபராக் கிராமத்திற் சிறந்தவனும், இந்திரகுமாரனுமான அருச்சுனன் வேடதாரியைப் போற் பேடிவடிவங்கொள்வதற்கும், சிறுபிள்ளைகளுக்கு நிருத்தங் கற்பிக்கின்றவனைப்போல் பிருஹன்னளையென்கிற பேருடையவனாய் ஆடல் கற்பிப்பதற்கும் எப்படி யுரியவனாவான்? அன்றியும் அவன் ஆண்மகனாகப் பிறந்து வீரனென்று காண்டீபத்தைத் தாங்கி அழகுபெற்ற அவனுடைய முன்னங்கைகள் வளையல்களால் அழகுபெறும்படியான செல்வத்தைப்

✤ திலோதகஞ் - எள்ளும் நீரும்

பெறுமா? இதைக்காட்டிலும் வியசனகரமான சந்தோஷம் வேறொன்றுண்டா? இது மட்டோ, முடியணியும் அவன் தலையில் பெண்முடியும், அவனுடைய ராஜதிருஷ்டியில் மையையுங் கண்டேனே இன்னம் நான்பார்க்க வேண்டியவை என்னவிருக்கின்றன? இனி நான் உன்முகத்தில் விழிக்கமாட்டேன். வாளைக் கையிற்பிடித்து வெட்டிக்கொள்ளுகிறேன். இதைவிட வேறுசுகம் எனக்கில்லை. எங்களுயிரைச் சூறையிட முன்வந்த ஓ அண்ணாவே? நம்மை யெல்லாங்கொல்லுவதற்கு அரக்குமாளிகைகட்டிக் கொளுத்துவதற்கு புரோசனனை ஏற்படுத்திவைத்தானே அந்த நீதிக்கோ நீரிப்போது பொருள்கொடுக்கத் துணிந்தது, அவனை நான் அனியாயமாய்க் கொன்றல்லவோ போட்டேன், அவனிப்போ திருப்பானாயின் நீ அவனைப் பார்த்து ஓ துரியோதனா இந்த வீமன் உன்னேவலைச் செய்யாமற் போயினானது குற்றமாகும் ஆகையால் இப்பொழுது இந்த வீமனை ஏவலாளியாக வைத்துக்கொள்ளென்று நீதிமொழி கூறி என்னை அடிமையாளாக்கி வேண்டியவளவில் பொருளையுந் தானமாகக் கொடுப்பீர். ஓ ஹோ உம்முடைய மதி என்னதுன்மதி, அந்தோ! துரியோதனனைக் கொல்லவேண்டிய முறையில் ஒன்றல்லவோ தவறினேன். நானுன்னைக் கேளாமலே கீசகர்களை அவர்கள் மனைவியரோடு எவ்வண்ணங் கொன்றேனோ அவ்வண்ணங் கொல்லாமலன்றோ போயினேன், அதனை நினைக்குந்தோறும் எனக்குக் குறையாயிருக்கின்றது, உனக்கு ✿ கீசகர்களை நம்மைக் கேளாமல் கொன்றுவிட்டானே நம்மைக் கேட்டிருப்பானாயின் அப்படி செய்ய நாம் இடங்கொடுப்போமா என்கிறகுறை இருக்குமென்றெண்ணுகிறேன். ஏனிப்படி சொல்லுகிறேனென்றால் வனத்தில் கந்தருவன் துரியோதன்னைத் தேரிற் கட்டிக்கொண்டு போகிறபோது அவனை மீட்பிப்பதற்குக் கந்தர்வனுக்கு மூர்க்கமான சபதத்தைச் சொல்லி ஏமாற்றி அத்துரி யோதனனை நகருக்குப் போகும்படி செய்த தயாளுவல்லவா? இவ்வாறெல்லாம் துரியோதனனுக்குச் செய்த தெல்லாம் நன்மையே, உன்னுடன் பிறந்த எங்களுக்குச் செய்த தெல்லாந் தீமையே, நாங்கள் அந்தத் துரியோதனனுக்கே சகோதரராகப் பிறந்திருப்போமானால் உனக்கு எங்களிடத்தில் விசுவாசமுண்டாயிருக்கும் அவனுடன் பிறக்கும் பாவம் ஏன் செய்யாமற்போனோ மென்று இப்பொழுது மிகவும் யோசிக்கிறேன். நீ தருமனென்று பேர்பெற்றது அவர்களுக்கே எங்கட்கு நீ தருமனன்று. இனி உன்னோடுபோராட என்னால் முடியாது. நீ

✿ கீசகர் - விராடன் பாரியாகிய சுதேஷணையோடு பிறந்த நூற்றுவர் இவருள் மூத்தவர் கீசகன் பாண்டவர் விராட தேயத்திருந்த காலத்தில் துரோபன தயையிழக்க அதுகண்ட வீமன் சீசகா நூற்றுவரையுரை கொன்றான்.

துரியோதனனுடைய நன்மைக்கோ, தீமைக்கோ, புண்ணியத்துக்கோ, பாவத்துக்கோ நான் ஒருகாசளவுங்கொடேன், கொடேன். நீ கொடுப்பேன் கொடுப்பேனென்று எனக்குக் கேட்கப் பெருங்கூச்சலிடவேண்டாம். உன்னை அண்ணாவாகப்பெற்றது போதும்போதும் என்று திருதராஷ்டிரனாகிய குருடன் மனம்புண்படும்படியாய் வாய்சலிக்க வந்தவாறெல்லாம் பேசித்திரும்பிப் பாராமற்போயினான். அவன்போனவுடன் தருமர் பெருஞ்சனிவிட்டதென் றெண்ணினவராய் இனிநம்மைத் தடைசெய்வா ரொருவருமில்லையென்று தீரங்கொண்டு யாவருங் கேட்க முன்கூறியவாறு திருதராஷ்டிரன் மகிழும்படியாக அளவிறந்த திரவியங்களைக் கொடுத்து அக்குருடனிஷ்டப்படியே துரியோதனனாதியருக்குப் பரலோகக்கிரியைகளை வேதவிதிப்படி செய்வித்து பிராஹ்மணோத்தமர்களுக்குத் தானங்கொடுத்து இப்படி ஒருவருக்குஞ் செய்யவேயில்லை என்று அந்தகன் அகமகிழும்படியாகச் செய்து முடித்தனர்.

(நரு-சுக) அந்தகன் ஒருவாறு தெளிந்து வனம்போக வெண்ணி சஞ்சயனால் யாவுந்தெரிந்து கொண்டு குந்திதேவியும், விதுரனும் தன்னுடன்வர, காந்தாரியோடு ஆரணியஞ் செல்லத் தொடங்கும்பொழுது குந்திதேவி தன்பிள்ளைகள்பால் விடைகேட்டனள் பாண்டவர்களுடன் படாது தடைசெய்தனர். அத்தடைக்குட்படாது தன்னுடன்வரத் தலைப்படவும் அழைத்துக் கொண்டு சென்றனன். வீமசேனன் தாயாரைப் பிரிந்திருப்பதற் காற்றாது அழுது கொண்டே சென்றனன். ஏனைய குருவம்சத்தாரும் துக்காக்கிராந்தராய்ச் சிலதூரஞ்சென்று வீமனை யழைத்துக்கொண்டு கங்கைக்கரையைக் கடந்து அஸ்தினாபுரத்தை வந்தடைந்தார்கள். திருதராஷ்டிரன் முதலியோர் கங்கைக்கரையே சென்று சத்யூபருடைய ஆச்சிரமத்தை யடைந்து அங்கு பர்னசாலை யமைத்துக் கொண்டு தவசீலராய் ஆறுவருடம் வாழ்ந்திருந்தனர். அது வரையில் திருதராஷ்டிரா தியருடைய க்ஷேமாதிசயங்களைச் சொல்லத்தக்கருஷி கள் அஸ்தினாபுரத்திற்கு வராமையால் தருமர் அவர்கள்மேல் ஏக்க முடையவரா யிருக்க ஓர்நாள் குந்திதேவியைக் கனவிற் கண்டு மனக்கவலையுடையவராய் தம்பிமார்களை யழைத்து அப்பா தம்பி மார்களே! நான் நம்முடைய தாயைக் கனவின்கண் கண்டேன் மிகவும் இளைத்திருக்கிறாள், பெரிய தந்தையும் அப்படியே, ஆசையினால் நாம் போய்ப்பார்த்து வரவேண்டும் என்மனம் மிகவேக்கங் கொண்டிருக்கிறது. பூஜ்யராகிய விதுரரும், மிகுந்த அன்புடைய சஞ்சயரும் எப்படி யிருக்கின்றார்களோ தெரியவில்லை. நான்போக விருக்கிறேன் உங்களுக்கும் பார்க்கவேண்டு மென்கிற எண்ணி மிருந்தால் வாருங்களென்றார்.

(சுஉ-ருகூ) இந்த வார்த்தையைக் கேட்ட சகோதரர்களும், சுபத்திரா தேவியும், திரௌபதியும், மஹாபூஜ்யனாகிய விராடராஜன் புத்திரியாகிய உத்தரையும், நகரத்தாரும் புறப்பட்டார்கள். பாண்டவர்கள் தாயார் முதலாயினாரைப் பார்க்கப் போகிறோமென்கிற சந்தோஷத்தோடு கூடின வர்களாய் சதயூபருடைய ஆச்சிரமத்தை யடைந்து யாவரையுங் கண்டு களித்தார்கள். அப்பொழுது தருமர் விதுரரைக்காணாமல திருதராஷ்டிரனைப் பார்த்து எங்கள் விதுரரெங்கே என்றனர். அவனிங்கு எங்கிருக்கிறான் அவன் சந்நியாஸியானாய் ஒருவருடைய அபேக்ஷையற்றவனாய் விரக்தியுடையவனாய் ஜிதேந்த்ரியனாய் எந்தவிடத்திலோ புராண புருஷனாகிய சர்வேஸ்வரனை இருதயத்தில் தியானித்துக் கொண்டிருக்கிறான் என்றனன். அதைக்கேட்ட தருமர் மறுநாள் காலையில் கங்கைக்கரையே ஆரணியஞ் சென்று, சரீரம் இளைத்தும் தவத்தில் ஊக்கமுடையவராயும், நியமங்களில் வைராக்கிய முடையவராயும், அசைவற்று யோகத்திலிருக்கின்ற விதுரனைப் பார்த்து யான் தருமன் உம்மைத் தெரிசிக்கவந்தேன் இதோ நமஸ்கரிக்கின்றேன் என்றனர், அவர் இவையெல்லாங் கேளாதிருக்கும் நிலையில் நிற்கின்றனராதலால் மரம்போலிருந்தனர். அது கண்டு தருமர் மயங்கி நிற்கும் அக்ஷணத்துக்குள் அவ்விதுரருடைய முகத்திலிருந்து ஜோதியொன்று வெளிப்பட்டு தருமருடைய முகத்தில் பிரவேசித்தடங்கிற்று. ஓ முனிவர்களே! இருவரும் யமகருமனுடைய அம்சபூதராகையால் விதுரர் உடனீங்குங் காலத்தில் யமாம்சராயிருக்கின்ற தருமரிடத்திற் கலந்ததென்றறி ஃமின்கள். இதுபோலவே இத்தருமரும் யமதருமனிடத்தில் ஒடுங் குவரென்றறிமின்கள் (இது நிற்க) விதுரருக்குப் பிராணன் நீங்குஞ் சமயத்தில் பிராணன் முதலிய பஞ்சவாயுக்களும் நீங்கின. அது கண்ட தருமர் அவரைத் தகனஞ் செய்வதற்குரிய கிருத்தியங்களிற் பிரவேசிக்கும்பொழுது ஓ அரசனே? இந்த விதுரன் விரக்தனாதலால் தகனஞ் செய்யத்தக்கவனன்றென்று அசரீரிவாக் சொன்றுண்டாயது. அந்த வாக்கைத் தருமரேயன்றி, பின்வந்த தம்பிமார் முதலிய யாவருங் கேட்டு நாம் செய்யுங் கட னொன்றுமில்லை என்று தெளிந்து கங்கையில் ஸ்நானஞ்செய்து அவ்விடம்விட்டுத் திருதராஷ்டிரன் முதலியோ ரிருக்கு மிடத்தை யடைந்து விதுரருடைய நிர்யாணத்தைத் தெரிவித்து அவ்வீட்டிலேயே யாவருமிருந்தனர். அச்சமயத்தில் வியாச முனிவரும், நாரதமுனிவரும் வந்தனர். அப்பொழுது நல்ல நோக்கமுடைய குந்தி தேவி வியாசரைப் பார்த்து தவத்தையே தனமாகப் படைத்த பூஜ்யராகிய பிரபுவே? கர்னன் என் மகனல்லவா?

ஃ மின்கள் - ஒளி

அவனைப் பிறந்தபோது பார்த்தேனே யன்றி வேறில்லை. ஆகையால் அவனையும், ஏனையோரையும் பார்க்கவேண்டுமென்று என்மனந் தபிக்கின்ற தென்றாள். காந்தாரி என் மகனாகிய துரியோதனனை யுத்தத்திற்குப் போகிற காலத்திற் கண்டேனேயன்றி அவன் மீண்டுவரப் பார்த்ததில்லை. ஆகையால் அவனையும் ஏனையபிள்ளைகளையுங் காண்பிக்க வேண்டுமென்றாள். சுபத்திரை, ஓ முனிசிரேஷ்டரே! என்னுடைய பிராணனைக் காட்டிலும் மிகுந்த பிரியமுள்ள என்மகனாகிய அபிமன்யுவைக் கண்டேனா? ஆகையால் அந்த மஹா வீரனை எனக்கு இப்பொழுது காண்பிக்க வேண்டுமென்றாள். இவ்வண்ணம் ஒவ்வொருவரும் சர்வஜ்ஞராகிய வியாசரைப் பிரார்த்தித்தனர். வியாசர் இவர்களுடைய பரிதாபவிண்ணப்பங்களைக் கேட்டு மனமிரங்கினவராய்க் கங்கைக் கரையை யணுகிக் காலத்தை நோக்க அப்பொழுது சந்தியாகாலம் சமீபித்ததனால் மகிழ்ந்து திருதராஷ்டிரன் முதலிய யாவரையும் அழைத்து ஸ்நானாதி கிருத்தியங்களை நியமமாகச் செய்துகொள்ளும் படி நியமித்துத் தான் சகலபாவங்களையும் போக்கடிக்கிற கங்கையில் ஸ்நான சந்திகளை முடித்துக்கொண்டு பிராணாயாமஞ்செய்து சநாத னியாகிய தேவியைத் தியானஞ் செய்யத்தொடங்கினர்.

*(சு0-சுஅ) காரணியாயும், பரமாத்*மாவுக்குச் செஞ்செய்கின் றவளாயும், சகுண நிர்க்குண ரூபிணியாயும், மஹாதேவி*யாயும், பிரஹ்ம* சொரூபிணியாயும், ⊱ மணித்வீபத்தில் வசிக்கின்றவளாயும் பிரஹ்மவிஷ்ணு ருத்ரர்களாலும் இந்திரன் அக்கினி யமன் தருமன் வருணன் முதலியோராலும் அறியப்படாதவளாகிய உனக்கு நமஸ்காரம், வாயு ஆகாயம் குணங்கள் இந்திரியங்கள் மநம் புத்தி, சந்திரன் என்று சொல்லப்பட்ட இவைகளாலும் அறியப்படாதவளாகிய உனக்கு நமஸ்காரம், இப்பொழுது இங்குள்ள இவர்கள் வேண்டுகோளின்படி கர்னன்முதலிய வீரபுருஷர்கள் இங்குவரும்படி அனுக்கிரகஞ் செய்யவேண்டும். அவர்களுக் கெல்லாம் தூல சரீரம் போனபோதிலும் கற்பாந்தமளவும் அழியாததாகிய சூக்ஷ்ம சரீரம் இருக்கின்ற படியினால் அவர்களெந்த உலகத்தி லிருந்தபோதிலும் உன்னாஜ்ஞை யுண்டாகுமானால் வருவார்கள். இவ்விஷயத்தில் என்னை மன்னிக்க வேண்டும் என்று பிரார்த்திக்க, தேவிகருணை புரிந்தனள். தேஜோரூபியாகிய வியாசர் குந்திதேவி, காந்தாரீ, சுபத்திரை முதலிய யாவரையும் பார்த்து இதோ நீங்கள் காணவேண்டுமென்று விரும்பிய யாவரும் வந்து விட்டார்கள் பார்க்கலாம் பார்க்கலாமென்று கூற யாவருங்கண்டு களித்தவுடன் அவரெல்லாம் மறைந்து போயினர். ஓ முனிவர்காள்? தேவி தன்னுடைய கருணா விசேடத்தால்

⊱ மணித்வீபத்தில் - பாற்கடலில்

(சுஉ-ருகூ) இந்த வார்த்தையைக் கேட்ட சகோதரர்களும், சுபத்திரா தேவியும், திரௌபதியும், மஹாபூஜ்யனாகிய விராடராஜன் புத்திரியாகிய உத்தரையும், நகரத்தாரும் புறப்பட்டார்கள். பாண்டவர்கள் தாயார் முதலாயினாரைப் பார்க்கப் போகிறோமென்கிற சந்தோஷத்தோடு கூடின வர்களாய் சதயூபருடைய ஆச்சிரமத்தை யடைந்து யாவரையுங் கண்டு களித்தார்கள். அப்பொழுது தருமர் விதுரரைக்காணாமல திருதராஷ்டிரனைப் பார்த்து எங்கள் விதுரரெங்கே என்றனர். அவனிங்கு எங்கிருக்கிறான் அவன் சங்கற்பரஹிதனாய், ஒருவருடைய அபேகைஷயற்றவனாய் விரக்தியுடையவனாய் தனித்தவனாய் எந்தவிடத்திலோ புராண புருஷனாகிய சர்வேஸ்வரனை இருதயத்தில் தியானித்துக் கொண்டிருக்கிறான் என்றனன். அதைக்கேட்ட தருமர் மறுநாள் காலையில் கங்கைக்கரையே ஆரணியஞ் சென்று, சரீரம் இளைத்தும் தவத்தில் ஊக்கமுடையவராயும், நியமங்களில் வைராக்கிய முடையவராயும், அசைவற்று யோகத்திலிருக்கின்ற விதுரனைப் பார்த்து யான் தருமன் உம்மைத் தெரிசிக்கவந்தேன் இதோ நமஸ்கரிக்கின்றேன் என்றனர், அவர் இவையெல்லாங் கேளாதிருக்கும் நிலையில் நிற்கின்றனராதலால் மரம்போலிருந்தனர். அது கண்டு தருமர் மயங்கி நிற்கும் அந்தக்ஷணத்துக்குள் அவ்விதுரருடைய முகத்திலிருந்து அதிசயிக்கத்தக்க சோதியொன்று வெளிப்பட்டு தருமருடைய முகத்தில் பிரவேசித்தடங்கிற்று. ஓ முனிவர்களே! இருவரும் யமகருமனுடைய அம்சபூதராகையால் விதுரர் உடனீங்குங் காலத்தில் யமாம்சராயிருக்கின்ற தருமரிடத்திற் கலந்ததென்றறி ☆மின்கள். இதுபோலவே இத்தருமரும் யமதருமனிடத்தில் ஒடுங் குவரென்றறிமின்கள் (இது நிற்க) விதுரருக்குப் பிராணன் நீங்குஞ் சமயத்தில் பிராணன் முதலிய பஞ்சவாயுக்களும் நீங்கின. அது கண்ட தருமர் அவரைத் தகனஞ் செய்வதற்குரிய கிருத்தியங்களிற் பிரவேசிக்கும்பொழுது ஓ அரசனே? இந்த விதுரன் விரக்தனாதலால் தகனஞ் செய்யத்தக்கவனன்றென்று அசரீரிவாக் சொன்றுண்டாயது. அந்த வாக்கைத் தருமரேயன்றி, பின்வந்த தம்பிமார் முதலிய யாவருங் கேட்டு நாம் செய்யுங் கட னொன்றுமில்லை என்று தெளிந்து கங்கையில் ஸ்நானஞ்செய்து அவ்விடம்விட்டுத் திருதராஷ்டிரன் முதலியோ ரிருக்கு மிடத்தை யடைந்து விதுரருடைய நிர்யாணத்தைத் தெரிவித்து அவ்வீட்டிலேயே யாவருமிருந்தனர். அச்சமயத்தில் வியாச முனிவரும், நாரதமுனிவரும் வந்தனர். அப்பொழுது நல்ல நோக்கமுடைய குந்தி தேவி வியாசரைப் பார்த்து தவத்தையே தனமாகப் படைத்த பூஜ்யராகிய பிரபுவே? கர்னன் என் மகனல்லவா?

☆ மின்கள் - ஒளி

அவனைப் பிறந்தபோது பார்த்தேனே யன்றி வேறில்லை. ஆகையால் அவனையும், ஏனையோரையும் பார்க்கவேண்டுமென்று என்மனந் தபிக்கின்ற தென்றாள். காந்தாரி என் மகனாகிய துரியோதனனை யுத்தத்திற்குப் போகிற காலத்திற் கண்டேனேயன்றி அவன் மீண்டுவரப் பார்த்ததில்லை. ஆகையால் அவனையும் ஏனையபிள்ளைகளையுங் காண்பிக்க வேண்டுமென்றாள். சுபத்திரை, ஓ முனிசிரேஷ்டரே! என்னுடைய பிராணனைக் காட்டிலும் மிகுந்த பிரியமுள்ள என்மகனாகிய அபிமன்யுவைக் கண்டேனா? ஆகையால் அந்த மஹா வீரனை எனக்கு இப்பொழுது காண்பிக்க வேண்டுமென்றாள். இவ்வண்ணம் ஒவ்வொருவரும் சர்வஜ்ஞராகிய வியாசரைப் பிரார்த்தித்தனர். வியாசர் இவர்களுடைய பரிதாபவிண்ணப்பங்களைக் கேட்டு மனமிரங்கினவராய்க் கங்கைக் கரையை யணுகிக் காலத்தை நோக்க அப்பொழுது சந்தியாகாலம் சமீபித்ததனால் மகிழ்ந்து திருதராஷ்டிரன் முதலிய யாவரையும் அழைத்து ஸ்நானாதி கிருத்தியங்களை நியமமாகச் செய்துகொள்ளும் படி நியமித்துத் தான் சகலபாவங்களையும் போக்கடிக்கிற கங்கையில் ஸ்நான சந்திகளை முடித்துக்கொண்டு பிராணாயாமஞ்செய்து சநாத னியாகிய தேவியைத் தியானஞ் செய்யத்தொடங்கினர்.

(சு0-சுஅ) காரணியாயும், பரமாத்மாவுக்குச் செஞ்செய்கின் றவளாயும், சகுண நிர்க்குண ரூபிணியாயும், மஹாதேவியாயும், பிரஹ்ம சொரூபிணியாயும், ✎ மணித்வீபத்தில் வசிக்கின்றவளாயும் பிரஹ்மவிஷ்ணு ருத்ரர்களாலும் இந்திரன் அக்கினி யமன் தருமன் வருணன் முதலியோராலும் அறியப்படாதவளாகிய உனக்கு நமஸ்காரம், வாயு ஆகாயம் குணங்கள் இந்திரியங்கள் மநம் புத்தி, சந்திரன் என்று சொல்லப்பட்ட இவைகளாலும் அறியப்படாதவளாகிய உனக்கு நமஸ்காரம், இப்பொழுது இங்குள்ள இவர்கள் வேண்டுகோளின்படி கர்னன்முதலிய வீரபுருஷர்கள் இங்குவரும்படி அனுக்கிரகஞ் செய்யவேண்டும். அவர்களுக் கெல்லாம் தூல சரீரம் போனபோதிலும் கற்பாந்தமளவும் அழியாததாகிய சூக்ஷ்ம சரீரம் இருக்கின்ற படியினால் அவர்களெந்த உலகத்தி லிருந்தபோதிலும் உன்னாஜ்ஞை யுண்டாகுமானால் வருவார்கள். இவ்விஷயத்தில் என்னை மன்னிக்க வேண்டும் என்று பிரார்த்திக்க, தேவிகருணை புரிந்தளள். தேஜோரூபியாகிய வியாசர் குந்திதேவி, காந்தாரீ, சுபத்திரை முதலிய யாவரையும் பார்த்து இதோ நீங்கள் காணவேண்டுமென்று விரும்பிய யாவரும் வந்து விட்டார்கள் பார்க்கலாம் பார்க்கலாமென்று கூற யாவருங்கண்டு களித்தவுடன் அவரெல்லாம் மறைந்து போயினர். ஓ முனிவர்காள்? தேவி தன்னுடைய கருணா விசேடத்தால்

✎ மணித்வீபத்தில் - பாற்கடலில்

இந்திரசாலம்போல் காட்டி மறைத்தனள். பின்னர் யாவரும் வியாசரைப் புகழ்ந்துகொண்டாட அவர்களிடத்தில் அவர் விடைபெற்றுக் கொண்டு செல்லப் பாண்டவர்கள் யாவரையும் அழைத்துக் கொண்டு அஸ்தினாபுரம் போய்ச் சேர்ந்தனர்.

இரண்டாவது ஸ்கந்தம் ஏழவது அத்தியாயம்
திருதராஷ்டிராதி சரிதம்
முற்றிற்று.

———

ஆஉ அத்தியாயம் எ-க்கு ஸ்லோகம் (சுஉரு)

———

ஸ்ரீ தேவ்யைநம:
எட்டாம் அத்தியாயம்

திருதராஷ்டிராதிமரணம்

———

ஐம்புலப்பகை கடிந்த ஐயன்மீர்! இதுவரையில் அந்தகனாகிய திருதராட்டிரன் தருமர் செய்த உபசரிப்பையும் வீமன் செய்த வட்டிப்பையும் ஏற்று வனம்போய்ச் சோர்ந்ததுஞ் சேர்ந்த பின்னர் குந்திதேவி முதலாயினாருங் காணவந்த கர்னன் முதலாயினாருந் தங்கடங்கள் கதிக்குச் சென்றதும். வியாசருந் தருமராதியாருந் தத்தமதிருக்கையை யடைந்ததுங் கூறினோம். இனி வனத்திலிருந்த திருதராட்டிரன் முதலியோரும், துவாரகையிலிருந்த கிருஷ்ணனாதியரும், அஸ்தினாபுரத்திலிருந்த தருமராதியரும் மரண மடைந்த கதியையும், அவர்கள் சந்ததியில் வந்த மஹாராஜனாகிய பரிக்ஷித்து சாபமேற்ற வரலாற்றையுங் கூறுகின்றோம் கேட்பீர்களாக.

(க-க0) திருதராட்டிர மஹாராஜன் ஆரண்யம் போனபின்னர் தனது மனைவி சகிதமாய்க் குந்திதேவியுடன் காட்டுத் தீயில் பிரவேச மாயினன். சஞ்சயன் அரசனை விட்டுவிட்டுத் தீர்த்தயாத் திரையாகப் போயினன். தருமபுத்திரர் நாரதரால் தன் பெரிய தந்தை பிறந்ததைக் கேள்வியுற்றுத் துக்கத்தை யடைந்தனர். கவுரவ வம்சம் ⊟க்ஷயித்து முப்பத்தாறாவது வருடம் வருகிறபோது பிரபாச தீர்த்தக் கரையில் சகலமான யாதவர்களும் பிராஹ்மன சாபத்தால் நாசத்தை யடைந்தார்கள். பலராமர் கிருஷ்ணர் பார்த்துக் கொண்டிருக்க மகா பலசாலிகளாகிய அந்தயாதவர்கள் மதுபானஞ்செய்து

⊟ க்ஷயித்து - சிதைந்து

வெறிமேலிட்டவர்களாய் ஒருவருக் கொருவர் போர்புரிந்து நாசத்தை யடைந்தார்கள். பலராமரும் தேகத்தை விட்டுவிட்டார். செந்தாமரைக் கண்ணராகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் முன்னோர்ந்த சாபத்தின் படியே வேடனுடைய பாணத்தினால் பீடிக்கப்பட்டிறந்தார். வசுதேவன் பிள்ளைகளிறந்ததைக் கேட்டுப்புவனேஸ்ரியைத் தியானித்துப் பரிசுத்தாதமாவாய்த் தேகவியோக மடைந்தனன். அதன் பிறகு அருச்சுனன் மிகவுந் துக்க முடையவனாய்ப் பிரபாச தீர்த்தக்கரையை யடைந்து அவ்விடத்திலிறந்துபோன யாதவ ரனைவர்களுக்குஞ் செய்யவேண்டிய சம்ஸ்காராதிகளை அவரவ ரனுஷ்டானப்படி செய்து முடித்தனன். பின்னர் கிருஷ்ண மூர்த்தியினுடைய தேகத்தைப் பார்த்து அவருடைய மனைவிமார்களாகிய ருக்மணி, சத்யபாமை, சாம்பவதி முதலிய எட்டுப் பேர்களுடன் அவரைத் தகனஞ் செய்துவிட்டுப் பின்னர் பலராமருடைய சரீரத்தையும் ரேவதி என்னும் அவருடைய மனைவியுடன் தகனஞ்செய்து விட்டுத் துவாரகா புரிக்குப் போய் அங்கிருந்த யாவரையும் அந்நகரத்தினின்றும் வெளிப்படுத்தினான். உடனே சமுத்திர ஜலத்தினால் அத் துவாரகை மூழ்கிப் போயிற்று. பின்னர் அருச்சுனன் துவாரகையி னின்றும் வெளிப் படுத்திய சாவ சனங்களையு மழைத்துக் கொண்டு வரும் பொழுது கிருஷ்ணபகவானுடைய லீலா வினோதத்துக்குரியவராயிருந்த கோபிகாஸ்திரீகள் கள்வரால் பல துன்ப முற்று ஆபரணாதிகளையு மிழந்து இறந்து போயினர்.

(கக - கஅ) மிக்க காந்தியையுடைய பார்த்திபன் இந்திரப் பிரஸ்தத்தை யடைந்து அநிருத்தன் மகனாகிய வஜ்ஜிரனென்பவ னுக்குப் பட்டாபிஷேகஞ் செய்து அவனை அவ்விடத்தில் அரசாளச் செய்துவைத்தான். அப்பொழுது வியாசர் அவ்விடம் வர அவரைக்கண்டு எல்லாருடைய மரணங்களையுங் கூறித் துக்கித்தனன். வியாசரும் மிகவுந் துக்காக் கிராந்தராய் அருச்சுனனைப் பார்த்து ஓ அருச்சுனா! நீயும் கிருஷ்ணபகவானும் எப்பொழுது அவதாரம் பண்ணப் போகிறீர்கள். நீங்க ளொருவரை யொருவர் பிரிந்திருந்த தில்லையே என்று பலவாறான வுபசார வார்த்தைகள் கூறி ஓ அருச்சுனா! உன்னுடைய அதியுக்ர மாகிய வீர தேஜஸானது மறுபடியும் கலியுகாந்தத்தில் உண்டாகப் போகின்றது என்று சொல்லிச் செல்ல அவ்வார்த்தையை அருச்சுனன் கேட்டு அஸ்தினாபுரம் வந்து தருமராஜாவைப் பார்த்து அடங்கப்பெறாத துக்கத்தை யடைந்தவனாய் நடந்த வைகளையெல்லாம் மெடுத்துக் கூறினான். துருமர் பலராமர் கிருஷ்ணருடைய மரணங்களைக் கேட்டுத்தீராத் துயரத்தில் மூழ்கி ஒருவாறு தெளிந்து தன் தம்பியரோடு திரௌபதியுடன் முப்பத்தாறு

வருடம் அஸ்தினாபுரத்தில் ராஜ்யபரிபாலனஞ் செய்து பின்னர் முப்பத்தாறு வயதுள்ள உத்தரா தேவியினுடைய குமாரனாகிய பரிக்ஷித்துக்கு இராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்வித்து இம் மலச்சாரலிலுள்ள வனத்தை படைத்தார். இமாசலம்போன ஆறாம் வருடத்தில் குந்திதேவி புத்திரர்களாகிய பாண்டவர்கள் அவ ரவருடையவேண்டிய கதியை முறைப்படி யடைந்தார்கள். பின்னர் ராஜ ருக்ஷியாகியும் தர்மானுஷ்டான பரனாகியு மிருந்த பரிக்ஷித்து பிரஜைகளைப் பரிபாலித்து வந்தனன்.

(கக்கூ - சுக.) அந்தப் பரிக்ஷித்து ராஜ னீதிப்படி அறுபது வருடம் செங்கோல்செலுத்தி வருநாளில் ஓர் நாள் மிருகவேட்டையாடுவதில் பிரிய முடையவனாய்ப் பெரிய ஆரணியத்திற் சென்று அங்கிருக்குங் காலத்தில் ஓர் நாள் வேட்டையாட வெழுந்து மிருகங்களைத் தேடும் பொழுது உச்சிப்பொழு தாயிற்று. அப்பொழுது மிகவும் பசிதாக முற்று இளைப்புடையனாய் உஷ்ணமிகுதியினால் மிகவுந் தசிக்கப்பட்டுப் போகும் பொழுது நிஷ்டை கூடியிருக்கின்ற ஒரு யோகியைக்கண்டு அவரைத் தாகந்தணியத் தண்ணீர் கேட்டனன். மவுன நிலையில் நீங்காதிருக்கின்ற அந்த யோகி ஒரு வார்த்தையுஞ் சொல்லாதிருக்க, அதனை யோகநிலையென் றுணராது அகங்காரி யென் றெண்ணிக் கோபித்து அங்கு இறந்து கிடக்கும் ஒரு பாம்பினைத் தன் வில் நுனியி லெடுத்து அவர் கழுத்திற் சுற்றிவிட்டான். அப்பொழுதும் அவரதனை யறிந்தவரல்லர். மீண்டும் அரசன் மூர்க்கங்கொண்டு முனிவர் கீழே வீழுமாறு சுற்றிய பாம்பினைப் பற்றியிழுத்தனன். இழுத்தும்த் அவர் சாமாதியினின்றும் சலனப்பட்டாரில்லை அரசனலுத்துத் தன் னிருக்கையை யடைந்தான். மஹாதபஸ்வியும் பசுவின் வயிற்றிற் பிறந்தவருமாகிய மகாசத்தா் என்னும் அவருடைய புத்ரர் வனத்தில் விளையாடிக்கொண் டிருந்தனர். அப்பொழுது அரசனால் தன் தந்தையினுடைய கண்டத்தில் பாம்பு சுற்றப்பட்டுத் தொங்கியிருத்தலைக் கேள்வியுற்றவராய்க் கோபித்துச் சலத்தைக் கையிலேந்திப் பிதாவினுடைய கண்டத்தில் எவனிறந்துபோன சர்ப்பத்தைச் சுற்றினானோ அவன் ஏழுநாளைக்குள் தக்ஷகனென்கிற சர்ப்பராஜனால் கடிக்கப்பட்டு மரணமடையக்கடவன் என்று சபித்தனர். அந்த ருஷியினுடைய சீடர்களில் ஒருவன் அரசனிடஞ்சென்று சிவயோகியாருடைய புத்திரரிட்ட சாப்ததைத் தெரிவித்தான். அபிமன்யுவி னுடைய புத்ரனாகிய பரிக்ஷித்து. பிரமருஷியினால் கொடுக்கப்பட்ட சாபத்தைக்கேட்டு மணிமந்திர அவுஷதங்களாலுந் தடைபடா தென்றெண்ணி விருத்தராகிய மந்திரிகளைப் பார்த்துச் சொல்லுகிறான். ஓ மந்திரிகளே! வேதார்ந்த பரிஜ்ஞான முள்ள சிலரை

நோக்கி ருஷியை நான் செய்த கொடுமையைக் கேட்ட அவருடைய குமாரரால் சபிக்கப்பட்டேனே என்ன அவர் இப்பொழுது நேரிட்ட இந்த ✻மிருத்யு ஒருவரா லுந்தடுக்கப்படாதது என்றார்கள். இதற்கென் செய்வது! இவ்விஷயத்தில் உபாயத்தை யோசிக்க வேண்டியது அவசிய மல்லவா? உபாயந்தெரிந்த புத்திமான்களாகிய சிலர் ஒருவராலுந் தடுக்கக் கூடாததா யிருந்தபோதிலும் பண்டிதர்களைக் கொண்டு சாஸ்திரயுக்தமான பிரயத்தனம் அநேக விதங்களால் செய்யவேண்டு மென்று சொல்லுகிறார்கள். அப்படிச் செய்யும் எத்தனங்கள் புத்தி மான்களுடைய உபாயத்தினால் சித்தியாகின்றன. மூடர் உபாயம் அறியாராகையால் அவர் செய்யும் எத்தனங்கள் சித்தியாகாமற் போகின்றன. மணி மந்திர அவுஷதங்களின் மகிமை புத்திக்கெட்டிய தன்று. நன்றாய்ச் செய்யப்பட் டிருக்கின்ற மணிமந்திரங்களால் சித்தியுண்டாக மாட்டாதென்பது இல்லை. பூர்வத்தில் ஒரு ருஷிபத்தினி விஷந்தீண்டி இறந்து விட்டாள், உடனே பிழைத்தாள். எப்படி யென்றால் இறந்துபோன அந்த அப்சரஸ் ஸ்திரீயினுடையகணவனாகிய ருரு என்னும்மஹருஷி அவளுக்குத் தனது ஆயுளிற்பாதியைத் தத்தஞ்செய்யப் பிழைத் தெழுந்தாள். இவ்வாறு ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய நன்மையைக் கருதிப் பண்டிதர்கள் உபகரித்து வருகின்றார்கள். ஓ மந்திரிகளே! உபகரிக்கிறதாகிய அந்த விஷயத்தில் இது பிரத்யக்ஷமாய் நடந்த சங்கதியாகும். இப்படி ஆயுளைக் கொடுக்கிற புருஷன் சுவர்க்க லோகத்திலாவது இவ் வுலகத்திலாவது மற்றெவ் வுலத்திலாவது காணக் கூடுமா? எவன் முயற்சிசெய்து நன்மையைத் தேடிக் கொள்ள வறியாமல் யாவுந் தெய்வ சங்கற்பத்தின்வழி நடக்குமென்று விரக்தனாய்ச் சோம்பி யிருப்பானோ அவன் அரசனாயிருந்தபோதிலும் ☙பிக்ஷாந்தேகி என்று திரியு நிலைமைக் குரியவனாவான். ✈கிருகஸ்தனா யிருக்கின்றவனுக்கு வேண்டியவை கிடைக்கப் பெறுதல் தனக்கு அறிந்த ஒருவனைக் கொண்டாயினுந் தானறியாத ஒருவனைக் கொண்டாயினுந் தெய்வங் காட்டுமேயன்றித் தெய்வந் தானேவந்து வாயிலூட்டுமா? ஒருவனுக்கு உண்ணத்தக்க பொருள் வாயினிடத்தே வந்தபோதிலும் அதனை விழுங்குவதாகிய முயற்சி செய்யாமற் போவானானால் அது எப்படி உள்ளே செல்லும்? ஆகையால் முயற்சியைக் கொண்டு ஏதேனும் ☞பிரயத்தனஞ் செய்யவேண்டும். அப்படிக் செய்யப்பட்ட பிரயத்தனம் எப்பொழுது சித்திக்காமற் போகிறதோ அப்பொழுது பண்டிதனா யிருக்கிறவன் இது தெய்வத்தின் செயலென்று கொள்ளல்வேண்டு

✻மிருத்யு - மரணம் ☙பிரயத்தனஞ் - நிறைவேற்றுதல்
✈கிரகஸ்தனா - இல்வாழ்க்கை வாழ்பவன் ☞பிக்ஷாந்தேகி - பிச்சைக்காரன்

மென்றனன், மந்திரிகள் ஓ அரசனே! இறந்தபோன ஸ்திரீயைத் தன்னாயுளிற் பாதிகொடுத்துப் பிழைப்பித்தாரென்று சொன்னீரே அந்தருஷி யார்! அந்தஸ்திரீ எப்படி இறந்தாள்! இந்தச் செய்தியை எங்களுக்கு விவரமாய்ச் சொல்லல் வேண்டுமென்று கேட்டனர்.

(சுஉ-சுகூ.) அரசன் கூறுகின்றான். ஓ மந்திரிகளே! பிருகு மகாருஷியினுடைய பத்தினியாகிய புலோமை என்பவளுக்கு யவன ரென்கிற ஞானவானாகிய குமார ரொருவ ருண்டாயினர். அவருக்குச் சர்யாதி என்கிற அரசன் மகளாகிய சுகன்யை என்பவள் மனைவியாயினள். அவளுக்குப் பிரமதி என்பவர் பிறந்தார். அவருடைய மனைவி பிரதாபி என்பவள் அவளுக்கு ருரு என்பவர் பிறந்தார். இவர் அடியில்வரும் மேனகையின் பெண்ணைத் தூல கேசருடைய ஆச்சிரமத்திற்கண்டு காமாதுரராயினார். யாவராலு மதிக்கத் தக்கவளும் எல்லா வுலகங்களினுஞ் சுந்தரியென்ன பட்டவளுமாகிய மேனகை என்னும் அப்சரஸ் ஸ்திரீயானவள் நதிக்கரையில் விசுவாவசு என்னுங் கந்தர்வனோடு கிரீடித்துக் கர்ப்பத்தையடைந்து அவ்விடத்தை விட்டு வெளிப்பட்டு மஹாதபஸ் வியாகியும், சத்யசந்த ராகியும், தர்மாத்மா வாகியும், மகாப் பிர சித்தராகியு மிருந்த ஸ்தூல கேச ராச்சிரமத்தை யடைந்து மூன்றுலகத்தாருங் கண்டு வியக்கத்தக்க போய்ச்சேர்ந்தாள். தூல கேசர் அநாதையா யிருக்கிற அக் குழந்தையைப் பார்த்து எடுத்துக் கொண்டு பிரமத்வரையென்று பெயரிட்டுக்காப்பாற்றி வந்தார். சர்வ லக்ஷணங்களோடு கூடிய அந்தக் குழந்தை காலக்கிரமப்படி யவ்வனத்தை யடைந்தனள். இவள் தான் ருரு என்பவருக்கு மோகத்தை விளைவித்தவள் என் றறிவீர்களாக.

இரண்டாவது ஸ்கந்தம் - எட்டாவது அத்யாயம்

திருதராஷ்டிராதி மரணம்.

முற்றிற்று

———

ஆஉ அத்யாயம் அ - க்கு ஸ்லோகம் (சுஎருஏ.)

———

ஸ்ரீதேவ்யைநம:

ஒன்பதாம் அத்தியாயம்

பரிக்ஷித்சாப நிவர்த் யுபாய சிந்தனை

ஐந்தெழுத் தருணிலை பெற்ற அந்தணர்காள்! இதுவரையில் பரிக்ஷித்து தன், மதிகேட்டினால் சாபமேற்ற உண்மையையும், பின்னர்

அச்சாபத்தை முயற்சிவழியினால் மாற்றிக் கொள்ளலாமென்று ருருமஹா ருஷியினுடைய சரித்திரத்தை மந்திரிகளுக்குக் கூறத் தொடங்கியதையுஞ் சொன்னோம். இனி அவ்வரசன் தான் சர்ப்பத்தினால் இறவாவண்ணங் காவலமைத்துக் கொண்ட வரலாற்றைக் கூறுகின்றோம் கேட்பீர்களாக.

(க-ரு.) ருரு மென்கிற மஹ ருஷியானவர், தூலகேசருடைய ஆச்சிரமத்தில் ப்ரமத்வரையைக் கண்டு மோகித்துத் தன்னுடைய ஆச்சிரமத்திற் சென்று மன்மதனாற் பீடிக்கப்பட்டிளைத்துச் சோர்ந்துறங்கும் பொழுது அவரது பிதாவாகிய பிரமதர் அவரை நோக்கி ஓ ருரோ; நீ யாதுகாரணத்தினால் ப்ரஞ்ஞை யற்றவனாய்க் கிடக்கின்றனை என்று வினவினர். ருரு தன்னுடைய பிதாவைப் பார்த்து என்னையனே, தூலகேசருடைய ஆச்சிரமத்தில் வசித்துக் கொண் டிருக்கிற பிரமத்வரை என்னும் பெயருடைய கன்னிகை எனக்கு மனைவியாக வேண்டுமென்னும் சிந்தனை யுடையவனா யிருக்கின்றே னென்றனன். அது கேட்ட பிதா தனது மகளது மனேபீஷ்டத்தை முடிக்கக் கருதித் தூலகேச ருடைய ஆச்சிரமத்தை அதி சீக்கிரமடைந்து அம் முநி புங்கவரை நமஸ்கரித்து உமது மகளாகவளரும் அழகிற்சிறந்த பிரமத் வரையை என்னருமை மகனுக்குத் தரல்வேண்டு மென்று முக மலர்ச்சியுடன் கேட்டனர். அதற்குத் தூலகேசரென்கிற மஹருஷி உமதெண்ணப்படி நல்ல சுபதினத்திற் றருகின்றே னென்று உறுதிமொழிகொடுத் தனுப்பிப் பின்னர் விவாக நிமித்தம் சேகரிக்க வேண்டிய காமக்கிரியைகளையுஞ் சேகரித்திருந்தனர். குறித்த நன்னாள் குறுகியபடியால் மீளவும் பூஜ்யர்களாகிய பிரமதர் தூலகேசரி என்னும் இரண்டு மஹருஷிகளுங் கூடினார்கள்.

(சு-கக.) அச்சமயத்தில் பன்னசாலை முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த அழகுபொருந்திய கண்களையுடைய பிரமத் வரை யானவள் அங்கு ஓர் பாம்பானது வளையமிட்டுப்பேருறக்கங் கொண்டிருந்ததைப் பாராமல் மிதிக்க அப் பாம்பாற் கடியுண்டிறந்தனள். அங்குவந்திருந்த முநிவர்களெல்லாம் அதுகண்டு ஹா ஹா வென்று பேரிரைச்சலிட்டழுதனர். அவ்வொலியைக் கேட்ட தூலகேசர் என்ன தீங்குவிளைந்ததென் றோடிவந்து பூமியில் வீழ்ந்து கிடக்குந் தன் மகளைப்பார்த்து அந்தோ ? அந்தோ ? தெய்வமே தெய்வமே என்று பிரலாபித்து அழத் தொடங்கினர். அச்சமயத்தில் கன்னிகைக்குக் கணவனாக வேண்டிய ருரு வென்பவர் அவனைக்காணு நிமித்தம்வரும்பொழுது அழுகைக்குரலோசையும் கன்னிகை மரித்தாளென்னும் ஓசையுங் கேட்டு அழுதுகொண்டே அவ்விடம்

வந்து தனக்குப் பிராண நாயகியாய் வர வெண்ணிய கன்னிகை உயிருள்ளவள்போல் வீழ்ந்து கிடப்பதையும், அக் கன்னிகையின்மேல் அவள் பிதா வீழ்ந்து புரண்டலறுவதையும், அவரைச் சூழ்ந்து முனிவர்க ளொல்லாம் பதறிப் பதறிப் புலம்புவதையும் பார்த்து அங்கிருப்பதற்குச் சகியாமல் அப்புறம் போய்க் காமாக்கினியாற் பீடிக்கப்பட்டவராய் அந்தோ! இவளிறந்தது மிகவும் ஆச்சரியம் ஆச்சரியம். இவ்விடத்தில் இந்த ஆச்சரியமான பாம்பு தெய்வத்தினால் ஏவப்பட்டதேயன்றி வேறன்று இது கஷ்டம் கஷ்டம் என் றழுதனர்.

(கஉ-கஎ.) மீண்டும், என்னுடைய பிராண நாயகியாகிய இவள் மரண மடைந்தது எனக்குச்சுகத்தை நாசமாக்கும் பொருட்டுந் துக்கத்தை யுண்டுபண்ணும் பொருட்டுமே யன்றி வேறென்ன, இனி யான் என் செய்வேன் எவ்விடம் போவேன். இவ்வழகியைப் பிரிந்திருக்கப் பெற்ற நான் இனி உயிருடனிருக்க இச்சிக்க மாட்டேன். ஏனெனில், இவள் என்னா லடையப்படும் ஆலிங்கனத்தையும் முக சும்பனத்தையும் பெற்றாளல்லள். நான் யாருங்கண்டு களிப்புறுமாறு பாணிக்கிரஹணஞ் செய்யப் பெற்றதுமில்லை, இவளுடனிருந்து ஓமாக்கினியில் பொறியிடும் பாக்கியத்தைப் பெற்றது மில்லை, இங்ஙனமான அற்ப பாக்கிய முடைய யான் இருந்தாவதென்; அந்தோ! இந்த மாநுட சம்பந்தமான ஆசையைச் சுடவேண்டும். இந்தப்பொழுதே என்னுடையபிராணன் செல்லக்கடவது. என்றெண்ணிப் பின்னர் துக்கானு பவத்தை அனுபவிக்க வேண்டியவன் இறப்பனாயின் அது சுகமாகு மாதலால் அவனை மிருத்யு அடைகிற தில்லை ஆகலான் நாம் பிராணனை விடத் துணிந்தபோதிலும் மிருத்தியு உண்டாக மாட்டா; ஆனால் நாம் இவ்வுலகிலிருந்து இச்சிக்கத்திகுந்த மனோரம்யமான சுகத்தை எப்படி யடையப் போகின்றோம் ஆகையால் பயங்கரமான மடுவிலாவது. அக்கினியிலாவது விழுவோம். அது கூடாதாயின் விஷத்தையாயினும், அக்கினியை யாயினும், விழுங்கியாவது, ஸ்ரீ கண்டத்தில் கயிற்றைக் கட்டிக்கொண்டாவது பிராணனை விடுவோம்; என்றிவ்வாறு ருரு வென்கிற மஹருஷியானவர் சொல்லிச் சொல்லி அழுது மறுபடியும் அடியில் வருமாறு மனதில் சிற்சில வாலோசிக்க லாயினர்.

(கஅ-அங) நா மெண்ணியபடி நமக்கு மரண முண்டாகுமாயின் அதனால் நமக்கு வரும் பலன் யாது. அன்றியும் அந்தத் தூர்மரணத்தினால் வருவது பாவம். அதனை நம்முடைய ஆன்மா கடக்க முடியாதன்றோ, இதுவுமன்றி நம்முடைய பிதா துக்கத்தை யடைவர், தாயோ அவரினும் அதிக துக்கத்தையடைவள். நம்முடைய பிராணநாயகியைக் கொன்ற தெய்வந்தான் நம்மைப் பார்த்துச் சந்தோஷ

ஸ்ரீ கண்டத்தில் - கழுத்தில்

மடையும். இதுபோலவே நாய் நரி முதலிய சீவ சமூகங்கள் சந்தோஷ மடையும் இதிற் சந்தேகமில்லை. அன்றியும் நாம் மரணமடையவதனால் நம்முடைய நாயகிக்குப் பரலோகத்தில் ஏதேனும் உபகார முண்டாமோவென்றால் என்ன உபகாரம் உண்டாகப் போகிறது (ஒன்று மில்லை) இங்கு நாம் துர்மரணத்தை யடைந்து அங்கு நாயகியோடு கூடுவோமென்றாலோ நம்மை அவள் கூடாள். ஏனெனில் மன்மதனாற் பீடிக்கப்பட்டுத் துர்மரணத்தை யடைந்தவனென் றதுயை கொண்டொழிப்பாள் சீவித்திருப்போமாயின் இந்தத்தோஷம் நமக் கில்லையல்லவா என்றிவ்வண்ணமான ஆலோசனைகள் ஆற்றங்கரையி லிருந்தவண்ணம் ஆலோசித்துப் பிராணனை விடும் எண்ணத்தை விட்டு அந்த ஆற்றில் ஸ்நானஞ்செய்து ஆசமித்துப் பரிசுத்தராயிருந்து கையில் சலத்தை யள்ளிவைத்துக்கொண்டு அடியில்வருமாறு கூறிப் பூமியில் விட்டனர்.

(உசு-ஙo) (என்னை யெனில்) என்னால் பத்தியுடன் சத் கிருத்தியமான (கிஞ்சித்) ஈஸ்வரா ராதனையும், ஆசாரியர் பூஜையும், ஓமங்களும், ஜயங்களும், தவசுகளும், சகலவேத அத்யயனங்களும், காயத்திரி ஜபங்களும், சூரிய ஆராதனையுஞ் செய்யப்பட்டிருந்தால் அவை காரணமாக என்னுடைய பிராண நாயகி உயிர்பெற் றெழுந்திருக்கக் கடவள். இக்காரணங்களான் அவளெழுந்திராமற் போவளாயின் இப்பொழுதே பிராணனை விடுகிறேன் னென்று சொல்லி இஷ்டதெய்வங்களை மானசீகமாகப் பூஜித்துச் சலத்தைப் பூமியில்விட்டு அழுதுகொண் டிருக்கும்பொழுது யமதூதனொருவன் சமீபத்தில்வந்து அந்த ருரு மஹருஷியைப்பார்த்து ஓ அந்தணனே? நீ இந்தச் சாகசமான காரியத்தைச் செய்யாதே, இறந்துபோன நாயகி எப்படிபிழைப்பாள்? இறந்தவள் இறந்தவள் தானே? அன்றியும் இவள் உன்னால் விவாகம்பண்ணப்பட்டவளா? அல்லவே ஆகையால் நீ அழகுள்ள அங்கங்களோடு கூடிய வேறொரு கன்னிகையை இச்சிப்பாயாக, மிகவுந் துர்ப்புத்தியுடையவனே? ஏன் வீணாயழுகிறாய்? இறந்துபோன இவளிடத்தில் உனக் கென்னபிரீதி, என்றுகூறிய தூதனை ருருமஹருஷிபார்த்து ஹே காலதூதனே? நான் வேறு ஸ்திரீயை வரிக்கமாட்டேன் (பாணிக்கிரகணஞ் செய்துகொள்ளமாட்டேன்) இவள் இப்பொழுது என்னால் கூறப்பட்டுள்ள ✡ பிரதிஞ்ஞையினால் பிழைப்பளாயின் யானும் பிழைத்திருக்கின்றேன். பிழைக்காமற் போவளாயின் யானும் மரணமடைவேன். நீ என்னுயிரைக் கொண்டுபோவாயென்றான். காலதூதன் ருருமஹ ருஷியினுடைய பிடிவாதத்தையறிந்து சந்தோஷ சித்தனாய் அடியில் வருமாறு கூறினன்.

✡ பிரதிஞ்ஞை - தத்துணிபுரைத்தல்

(௯௧-௯௫.) ஓ பிராஹ்ம ணோத்தமனே? உன் விஷயத்தில் என் மனம் மிகவும் பரிதாபத்தை யடைகிறது; ஆகையால் நானொரு உபாயங் கூறுகிறேன் அவ்வண்ணஞ் செய்வாய் அது சத்தியமாயும் மனோகரமாயும் பூர்வத்தில் தேவர்களால் செய்யப்பட்டதாயுமுள்ளது என்னயெனின்? உன்னுடைய ஆயுளிற் பாதி தத்தஞ் செய்வையாயின் அவள் சீக்கிரத்தில் எழுந்திருப்பள் என்றனன். அது கேட்ட ருருமஹருஷி ஓ தூதனே? இறந்துகிடக்கும் இவள் பொருட்டுச் சலத்திலும் அக்கினியிலும் வீழ்ந்து உயிரை மாய்க்கத்துணிந்த யான் இப்பொழுது என்னாயுளிற்பாதி அவளுக்கு ஒப்பிப்பதில் சந்தேகமு முண்டோ நான் கூறினாய்! ஓ தூதனே, இப்பொழுதே நீ கூறியவாறு தத்தஞ்செய்தேன். எவ்விதத்திலாவது என்பிராணநாயகி உயிருடையவளா யெழுந்தாற்போதும்; என்று ஆவலுடன் கூறும் அப்பொழுது விசுவாவசு என்கிற அவளுடைய பிதாவாகிய கந்தர்வன், சுவர்க்க லோகத்தினின்றும் சீக்கிரமா யவ்விடம்வந்து பிரமத்வரை என்கிற தனது புத்திரி இறந்துகிடந்தலைப் பார்த்து. மனம்புழுங்கி அவளைப் பிழைப்பிக்க வெண்ணி அங்கு நிற்கின்ற காலதூதனையும் அழைத்துக்கொண்டு யமபுரஞ்சென்று இயமனைக் கண்டனன். அப்பொழுது தூதன் ஓ தருமராஜனே? யானொரு விண்ணப்பஞ் செய்துகொள்ளுகிறேன் அதனைக் கேட்டருளுக. இந்த விசுவாவசு என்கிற! கந்தருவனுக்குப் புத்திரியும், ருருவென்கிற மகருஷிக்குப் பத்தினியாகத் தக்கவளுமாகிய பிரமத்வரை என்கிற கன்னிகை யானவள் சர்ப்பத்தினால் தீண்டப்பட்டு மரித்தாள்.

(௯௬-௯௯.) சூரியபுத்திரனாகிய ஓ தருமனே? அவள் மரித்தைக்கண்ட ருருமஹருஷி பட்டபாட்டை என்னென்று கூறுவேன். இரக்கமென்ப தறியாத என்மனமும் இரங்கிற்று. பின்னர் அம்முனிபுங்கவர் தம்முடைய விரதானுஷ்டான மகிமையினால் தனது ஆயுளிற்பாதி தத்தஞ் செய்தனர். ஆகையால் இனி அக்கன்னிகை எழுந்திருக்கும்படி ஆஞ்ஞை செய்வீராக வென்றுபணிந்தனன். தருமராஜனும் மனமிரங்கி ஓ தூதனே? உன் னிச்சைப்படி செய்வாயாக யான்மறுக்கிலன். நீயே போய் இந்த விசுவாவசுவினுடைய பெண்ணாகிய அக்கன்னிகையை அந்த ருருமகருஷி மகிழும்படி எழுப்பிக் கொடுத்துவிட்டு வாவென்றனன். கால்தூதன் தருமனிடத்தில் விடைபெற்றுக் கந்தர்வனோடு அதிக விரைவுடன் வந்து பிரமத்வரையை உயிர் பெற் றெழுந்திருக்கச்செய்து ருருமஹருஷியி னிடத்தில் ஒப்பி வித்தனன். அந்த மகருஷி ஓ தூதனே! நீ இக் கன்னிகையைக் கொண்டுபோகவந்த தூதனன்று இவளை எனக்குக் கொடுக்கவந்த தூதனாமென்று பல இன்னுரைபகர்ந்து.

விடைகொடுத்துப் பின்னர் நல்ல சுபதினத்தில் அக்கன்னிகையை விதிமுறையாக விவாகஞ் செய்துகொண்டு மகிழ்ந்து வாழ்ந்திருந்தனன். விசுவாவசு என்கிற கந்தர்வனும் கண்டுகளித்துத் தன் னுலகம் போய்ச் சேர்தனன்.

(சு0-சுகூ.) ஓ மந்திரிமார்களே? மரித்துப்போன கன்னிகை இவ்வண்ணமான உபாயவழியினால் பிழைப்பிக்கப் பட்டாளன்றோ? ஆகையால் நாமும் சகலசாஸ்திர சம்மதமாகிய உபாயவகைகளை இப்பொழுது நன்றாய்த் தேடவேண்டிய தென்று கூறி உத்தரா தேவியினுடைய குமாரனாகிய பரிக்ஷித்து அந்தக்ஷணமே தன்னை இரக்ஷிப்பதற்குரிய மணி மந்திர அவுஷதங்களினாலேயும், தன்னைக் காப்பாற்றுவதில் கண்ணுங் கவசமும் போன்ற மந்திரிகளினாலேயும் செய்துக்கொள்ளற் பாலன வெல்லாம் எண்ணி அடியில்வருமாறு ஏற்படுத்திக்கொண்டு ஏழுமதில்களோடு கூடிய கோட்டையொன்று அமைவித்து அதில் மந்திரிப் பிரதானிகளுடன் குடிபுகுந்து அரசாண்டிருந்தனன். எங்ஙனமெனின், "கோட்டைக்கு உட்புறம் பான விடங்களில் * அவுஷதங்களில் வல்ல சூரர்களை வைத்தும், கவு ரமுக ரென்கிற மகருஷியை மேற்கூறிய சூரர்க ளனைவரும் தத்தந்தொழிலில் பிறழாதிருக்கச் செய்தலாகிய அதிகாரத்தை மேற்கொண்டிருத்தல் வேண்டுமென்றும், இவ்வாறேவிய என்பாலுள்ள குற்றங்களை மன்னித்தருளல்வேண்டு மென்றும், அவரை யடிக்கடி பிரார்த்தனை செய்து ஏவியும், மந்திரசித்தியுடைய பிராமணோத்தமர்களை அங்கங் கிருக்கின்றவரைப் பரிக்ஷிக்கும்படி ஏவியும், மந்திரி குமாரனைக் காவலோடு கூடிய உப்பரிகையின்மேல் ஒருவருஞ் செல்லா திருத்தற்குக் கோபுரத்துவாரத்தில் மதத்தயானைகளைக் கட்டும்படி ஏவியும், அந்தயானைகள் தங்கள் காதசைவினாலேயேவே றெவ்விடத்துஞ் செல்லுவதற் கிடனின்றி அவ்வழியாகவருங் காற்றைத் தடைபடுத்த வேண்டுமென்ற அவைகளுக் கறிவுறுத்தி நிறுத்தியம், ஸ்நானசந்திமுதலிய நித்திய கருமங்களையும், அறுசுவையோடு கூடிய உணவை உண்ணுதலையும், அவ்விடத்திற்றானே நிறைவேற்றிக் கொண்டும், தன்னருகில் மந்திரிகளை இடைவிடாது வைத்துக்கொண்டு நாள்களை எண்ணியும், சகல ராஜ்ய காரியங்களையுஞ் செய்து வந்தனன்".

(ரு0-ரு0ஏ.) அப்பொழுது மந்திரவித்தையை நன்றாய்க் கற்றுணர்ந்தவனும் வேதபண்டிதனும் முனிசிரேஷ்டனும் திரவிய ஆசை யுடையவனுமான கஸ்யப னென்னும் பெயருடைய ஒரு பிராமணன் - பூஜ்யனாகிய அரசன் சாபமேற் றிருப்பதைக்கேட்டு, அரசன் பிராஹ்மணாளுடன் கூடி எவ்விடத்தி லிருக்கின்றானோ

* அவுஷதங்களில் - மருந்துகளில்

அவ்விடத்திற்கு நாம் போகலாமென்று தன்னு ளெண்ணித் தன் வீட்டினின்றும் புறப்பட்டு வீதிவழியே வந்தனன்.

இரண்டாவது ஸ்கந்தம் - ஒன்பதாவது அத்யாயம்

பரிக்ஷித்சாப நிவர்த்தி யுபாய சிந்தனை

———

முற்றிற்று

ஆஉ அத்யாயம் கூ-க்கு ஸ்லோகம் (ருஉசு.)

———

ஸ்ரீதேவ்யைநம:

பத்தாம் அத்தியாயம்

ப ரி க்ஷி த் தி ன் ம ர ண ம்.

———

அறம் வளர்த்தநாயகிபால் அருணிலை அவாவும் அந்தணர்காள், இதுகாறும் அரசன் ருருமஹ ருஷியினுடைய தபோ வல்லபத்தை மந்திரிகளுக்குக் கூறிக் காவலுட னிருக்கும்பொழுது மந்திர வித்தையிற் சிறந்த கஸ்யபனென்னும் பிராஹ்மணன் அவ்வரசன் பால் போகப் புறப்பட்டமையைக் கூறினோம். இனிஅவ்வந்தணன் போகும் பொழுது சர்ப்பராசனாகிய தக்ஷகன் எதிர்ப்பட்டு அவனைத் தடுத்துத் தான் சென்று அவ்வரசனைக்கொன்ற அற்புதத்தைக் கூறுகின்றோம் கேட்பீர்களாக.

(க-சு.) கஸ்யபனென்கிற மஹருஷி, கருணை யுடையவனாய் அரசன் பால் போகப் புறப்பட்ட அந்நாளிலேயே நாகலோகவாசி யாகிய தக்ஷகனென்னும் சர்ப்பராசனும் "கவிஜாத" ரென்கிறமஹ ருஷியினுடைய சாபப்பிரேரணையினால் போகவெண்ணித் தன்னிருக் கையை விட்டுப் பூலோகத்தை நாடி வெளியே சீக்கிரமாக வந்து விருத்தப்பிராமண வேடங்கொண்டு புருஷரிற் சிறந்தவனாய்ப் போகும்பொழுது அவ்வழியே செல்லும் மந்திரவாதியாகிய கஸ்யபனைப் பார்த்து ஓப் பிராமணரே நீர் யார்? அதி சீக்கிரமாக எவ்விடத்திற்குப் போகின்றீர்? நீர் போகுமிடத்தில் என்ன இச்சித்திருக்கின்றீர்? என்று கேட்டனன். யான் 'பரிக்ஷித்" என்னும் அரசனிடத்திற் போகின்றேன், அந்த மஹாராஜனை தக்ஷகனென்கிற சர்ப்பங் கடிக்கப்போகிறது; அதன் விஷத்தை நாசம் பண்ணத்தக்க மந்திரசித்தி என்னிடத்தி

லிருக்கிறது. ஆகையால் அந்தவரசன் அந்த விஷச் சுவாலையினாற் பீடிக்கப்படாமற் பிழைத்திருக்கும் வண்ணம் செய்வதே நான் கொண்ட இச்சை என்றனன். தக்ஷகன் அந்த கஸ்யபரைப்பார்த்து ஓ அந்தணரே? யான்தான் தக்ஷகன் யான் போவது அந்தக் அரசனைக் கடிப்பதற்கே, அவனைச் சாகச் செய்வதே என்னிச்சை, ஆகையால் அவனைப் பிழைப்பிப்பதற்கு நீர் சக்தியுடையவ ராவீரா? நீர் வந்தவழியே திரும்பிவிடும்.

(எ-கசு.) கஸ்யபன் ஓ சர்ப்பராசனே? 'கவிஜாத' ராலே சபிக்கப் பட்டாலும் உன்னாற் கடிக்கப்பட்டாலும் அந்த வரசனை நான் மந்திரபலத்தினால் பிழைப்பிக்கப் போகிறேன் சிறிதும் சந்தேகமில்லை என்ன. சர்ப்பராசன், நிர்மலனான ஓ பிராமணனே? என்னால் கடிக்கப்பட்டவரசனை நீர் பிழைப்பிக்கச் செய்வது உண்மையேயாயின் இப்பொழுது இதோ இந்த ஆலமரத்தை என்னுடைய விஷப் பற்களால் கடித்துப் பஸ்மீகரப் படுத்துகிறேன். அதனை உம்முடைய மந்திர சக்தியினால் உண்டாக்குவீரா? பார்ப்போம். இதில் உம்முடை வல்லமையைக் காண்பிப்பீரென்ன, கஸ்யபன் அப்படியே இந்த மரத்தைக் கடித்துவிடுநானதை உண்டு பண்ணுகிறேன் இதனால் என்னுடைய மந்திர சித்தியை நன்றாய்த் தெரிந்து கொள்ளலா மென்றனன். சர்ப்பராசன் அந்தக்ஷணமே அந்த மரத்தைக்கடித்து விஷாக்கினியினால் சாம்பராக்கி ஓ பிராமணரே? ஏதோ நீர் உண்டுபண்ணுவதை நானறிகிறே னென்றனன், கஸ்யபன் சாம்பராய்ப் போன அந்த மரக்குப்பையை ஒன்றாகச் சேர்த்து ஓசர்ப் பராசனே நீ பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே இதனைப் பிழைப்பிக்கிறேன் என்னுடைய மந்திரபலத்தையும் ஆலமரத்தின் செழிப்பையும் பார்ப்பாயாக வென்று தன்னுடைய கையினால் சலத்தை யள்ளிக் கொண்டு அபிமந்திரித்து அந்தச்சாம்பர்மேற் புரோக்ஷித்தனன் (தெளித்தனன்) உடனே அந்தச் சாம்பர் முன்னிருந்ததுபோல் மரமாய் அநேகமான கிளைகளோடும், பத்திர புஷ்ப பலாதிகளோடும் வளர்ந்தோங்கியது. சர்ப்பராசன் அதனைக்கண்டு அளவுபடாத ஆச்சரியமடைந்து இவன் அவ்வரசனைப் பிழைப்பிப்பதில் என்ன தடையென்று தன் மனதிலெண்ணி அந்தக்கஸ்யபனைப் பார்த்துக் கூறுகிறான்.

(கரு-உ0.) ஓ கஸ்யபரே! யான் உம்முடைய மந்திர ✤வல்லபத்தைக் கண்டேன் நீர் முன்னே அரசனைப் பிழைப்பிப்பது தான் என்னுடைய இச்சையென்று சொன்னீரல்லவா? அவனைப் பிழைப்பிப்பதனால் உமக்குவரும் லாபமென்ன, உலகில் இலாபத்தை எண்ணாமல் ஒருவரும் ஒரு காரியத்தைச் செய்யமாட்டார்கள். ஆகையால் நீர் அந்த அரசனால் அடையவிரும்பிய ൮ அபீஷ்டம்யாது?

✤ வல்லபம் - வலிமை ൮ அபீஷ்டம் - ஆசை

அதைச்சொல்லும் நானதை முடிவுசெய்கிறே னென்றனன். கஸ்யபன் ஓ சர்ப்பராசனே? யான் கவிஜாதரால் அரசனுக்கு நேர்ந்திருக்கும் சாபத்தைக்கேட்டுத் திரவியத்தி லாசை யுடையவனாய் அவனைப் பிழைப்பித்து. வேண்டிய தனங்களைப் பெறலாமென்றுதான் வந்தேனென்று உண்மையைக் கூற, சர்ப்பராசன், ஓ அந்தணரே? நீர் அரசனால் எவ்வளவு தனம் பெறலா மென் றாசைப்பட்டீரோ அவ்வளவு பொன் இதோ கொடுத்துவிட்டேன். நீ ரெடுத்துக்கொண்டு சந்தோஷ சித்தராக வீட்டுக்குப்போம். என்னுடைய மனோரதமும் இனி நிறைவேறுவதிற் றடையில்லை என்றனன். கஸ்யபன் அந்தத் தக்ஷகனுடைய வார்த்தையைக்கேட்டு இந்த தக்ஷகன் கொடுக்கப்பட்ட திரவியத்தைப் பெற்று அரசனைப் பிழைப்பிக்காமற் போவேமேயானால் நமக்கென்ன கீர்த்தியுண்டாகும். இந்தத் தனத்தாசையை விட்டு நாம் திரும்பாமலும் இந்த தக்ஷகனுடைய வார்த்தையைக் கேளாமலும் அரசனுடைய துர்ம்மரணத்தைப் போக்குவமேயானால் நமக்கு வரும் புண்ணியமும் கீர்த்தியும் தனமும் இவ்வளவின வென்று சொல்லி முடியுமா! அவையழியுமா!

(உக-உசு) பூர்வத்தில் ரகு மகாராஜாவென்ன, அரிச்சந்திர மகாராஜாவென்ன, கர்ன மகாராஜாவென்ன இவர்களெல்லோரும் தனத்தையா பெரிதாகப் பார்த்தார்கள். தனத்தை வாரியிறைத்துக் கீர்த்தியையன்றோ பெருந்தனமாகத் தேடினார்கள். ஆகையால் இந்த அரசனை நாம் எப்படிக் கை விட்டு விடுவது அரசன் பிழைப்பானானால் சகலசநங்களுக்கும் சுகமுண்டாகும். அரசனில்லாமல் போவானானால் சர்வ சநங்களும் நாசத்தையடையும். இதிற சந்தேகமேயில்லை. அரசனுக்கு மரணத்தினா லுண்டாகும் பாவமும், அவன் மரணத்தினால் சநங்களுக்குண்டாகும் பாபமும் நம்மைவந் தடைவதிலுஞ் சந்தேகமில்லை என் றெண்ணிக்கொண்டு வரும்பொழுது ஒரு சிந்தனை யுண்டாயிற்று, அஃதாவது, இந்த அரசனுக்குச் சாபத்தினா லுண்டாகும் மரணம் தீரத்தக்க மரணமா, தீரத்தகாதமரணமா இதனை யறிவோமென்று ஜ்ஞான திருஷ்டியினா னோக்கும் பொழுது தீரத்தகாத மரணமென்று தெளிந்து விதிப்பயனை வெல்வதற்கு ஒருவராலு முடியா தென்னு முண்மையையறிந்தவனாய்ச் சர்ப்பராசனாகிய தக்ஷகனைப்பார்த்து ஓ தக்ஷகனே நீ எனக்குத் தத்தம்பண்ணியதனத்தைத் தந்துவிடு என்று கேட்கத் தக்ஷகன் அந்த கஸ்யபன் போதும் போதுமென்று சொல்லுமளவுந் தனந் தந் தனுப்பினன் கஸ்யபரும் தன்னிடம் போய்ச் சேர்ந்தனன்.

(உஎ-சுஉ) கஸ்யபனை அரசனிடஞ் செல்ல வொட்டாது திருப்பிய தக்ஷகன், பரிக்ஷித்து தனக்குவரும் மரணபய நிவிர்த்தியின் பொருட்டு நூதனமாய்ப் புதுக்கியிருக்கும் நாகசமென்னும் பட்டணத்தைக் குறித்து

அதிவேகமாய்ச் சென்று அரசன் உட்பரிகையின்மே விருப்பதையும், மணிமந்திர அவுஷதங்களினால் இடைவீடாமல் ரக்ஷிக்கப்பட் டிருப்பதையும், என்ன விதத்தில் என்ன தீங்கு வருமோவென்று அதிக சாக்கிரதையோடுங் கூடிச்சோம்பலில்லாம லிருப்பதையுங் கேள்விப்பட்டு அந்தோ! இந்த அரசனுக்குக் கவிஜா தருடைய சாபம் எப்படி தவரப்போகிறது என்று சிந்தாகுல முடையவனாய் இந்த உப்பரிகையின் மீது நாமெப்படிபோவது, அந்தோ! இவன் அந்தக் கவிஜாதருக்குச் செய்த ஒரு தீங்கினா லல்லவா பாபத்தொழிலைச் செய்தவனுமானான், அவர் சாபாக்னியினாலே தகிக்கப்பட்டவனு மானான், பிராம்ஹணனை உபத்ரவித் ததனால் விப்பிரபீடாகரனு மானான், சடனு மானான் இவனைநா னெவ்வண்ணங்கொல்லுவேன். பாண்டவர்களுடைய வம்சத்தி லிவனைப் போலொருவருந் தோன்றவில்லை, எவன்தான் தபசியாகிய பிராஹ்மணனுடைய கழுத்தில்செத்துப் போன பாம்பை எடுத்துப்போடத் துணிவான். இப்படிப்பட்ட துர்ப்புத்தியுந் தோன்றுமா! பாவம் பாவம். இவ்வாறான இழிதொழிலைச் செய்துவிட்டுப் பின்வருங் கதியையு நாடாது அநேக காவலாளிகளை நியமித்து இந்த வுப்பரிகையின்மீ திருக்கின்றானே, மந்திரசித்தி பெற்றவர்களுடைய காவலுக்குள் நா மிருக்கின்றோ மாகையினால் நமக்கு எப்படிமரணம்வரும்வரும் என்று கலக்கமில்லாத நெஞ்ச முடையவனாயு மிருக்கிறானே, இவனுடைய மூடபுத்தியை என்னென்று சொல்லுவேன். மரணத்தை வஞ்சிக்க இவனால் முடியுமா? மணிமந்திர அவுஷதங்கள் தெய்வத்தினால் விதிக்கப்பட்டமிருத்தியுவை ஒருகணநேரமாவது நிறுத்துவதற்கு முடியுமா? அல்லது திருப்புவதற்கு முடியுமா? பாண்டவர்களுக்குத் தாயாதிகளா யிருந்தவரெல்லாம் இருக்கவேண்டு றெண்ணி யிருந்தார்களா? அவர்களெல்லாம் இப்பொழு திருக்கின்றார்களா? இறந்தவர் இறந்தவர்தானே, இது பிரத்தியக்ஷமாகத் தெரிந்திருந்தும் இந்த வரசன் பிழைத்திருக்கலா மென்று சந்தோஷ சித்தனா யிருக்கின்றானே, கவிஜாதருடைய சாபத்தினா லேவப்பட்ட நான் இவனை இறக்கச்செய்யாமற் போவேனா! தனதரும் முதலிய சத் கருமங்கள் அளவில்லனவாகச் செய்வதற்கு அரசன் யோக்யன் அந்தச் சத்கருமங்கள் வியாதி முதலிய மரணங்களைப் போக்கடிக்க முடியுமோ, ஒருநாளு முடியாது, அப்படிப் போக்கடிக்க முடியுமானால் ஆயுள் நிலைபெற்றிருக்கு மல்லவா, ஆயுள் நிலை பெற்றிருக்கின்ற வர்களை இவ்வுலகில் யாரைக்கண்டோம்? ஆகையால் ஸ்நான முதலிய தருமங்களைச் செய்து மரணமடைந்தால் சுவர்க்க லோகத்தை யடையலாம். அத் தருமங்களைச் செய்யாது மரணமடைந்தால் நரகத்தை யடையலாம், இந்த நியாயங்களைச் சமீபத்திலிருக்கிற ஒரு

பிராமணனாவது எடுத்துச் சொல்லக் கூடாதா அந்தோ! பிரமனால் விதிக்கப்பட்ட மிருத்தியுவானது ஒருவராலுந் தடுக்க முடியாதென்று ஒரு வேதியனாவது தெரிவிக்கவில்லையா? யாவருங் கூட்டமாகக் கூடி மரணபயமில்லை யென்பதைத் தாங்கள் செய்யும் செய்கையினால் உணர்த்தி அவனை மகிழச்செய்து கொல்லத் துணிந்திருக்கிறார்களே! இந்த அரசன் அந்தப் பிராஹ்மணருக்குச் செய்த பாபம் விட்டுபோமா? அது பாபமா! வேறா! என்றிவ்வா றெல்லாம் எண்ணித் தன்னருகிலிருக்கும் தன்னினமான நாகங்களைத் தவவேடங்கொண்டு வரும்படி செய்து அவைகளைப் பார்த்து ஓ நாகங்களே? நீங்களனைவரும்பார்ப்பதற்கு அதிரம்யமா யிருக்கிற பலாதிகளைக் கையிலேந்திக் கொண்டு பரிக்ஷித்திருக்கும் அரண் மனைநோக்கிச் செல்லுங்களென்று தன் னெண்ணத்தைக் குறிப்பிட்டுத் தான் அப்பழங்களில் ✠கிருமிரூபமாய்ப் பிரவேசித்தான்.

(சுங-ருசு.) பின்னர் தமோரூபிகளாகிய நாகர்களெல்லாம் பல மேந்தியகைகளோடு அதி வேகமாய் அரசன் மாளிகையடைந்து அங்குள்ளவாயிற் காவலரைப் பார்த்து ஓ காவலர்களே, நாங்கள் தபோவனத்தினின்றும் அரசனைப்பார்க்க வந்தோம். ஏனெனில் இந்த வரசன் மஹாவீரனாயும் அழகுள்ள பார்வை யுடையவனாயும் பாண்டு குலத்திற்குச் சூரியனைப் போன்றவனாயும் விளங்கியிருந்த அபிமன்யு மகா ராஜாவினுடைய புத்திரன். இவனுடைய தீர்க்காயுளை யுத்தேசித்து அதர்வண மந்திரங்களினால் மந்திரோச் சாரணைசெய்து, தீர்த்தங்களில் அபிமந்திரத்து அந்த மந்திர தீர்த்தங்களால் அபிஷேகஞ் செய்து இந்தப் பழங்களையுங் கொடுத்து ஆசீர்வாதமுஞ் செய்து அவனிடத்து நல்விடை பெற்றுப்போக வந்தோம். ஆகையால் எங்கள் வரவை அரசனுக்குத் தெரிவியுங்களென்ன. காவலாளிகள் ஓ ஐயன்மீர்? யாவராயிருந்த போதிலும் உள்ளே விடுவதற்கு அரசனுடைய ஆணையில்லை என்றனர். வஞ்சவேடங் கொண்டுவந்த முனிவர், ஓ காவலாளிகளே; இதுவரையில் இந்தப் பரதவம்சத்தில் எங்களையொத்த முனிவர்களைத் தடை செய்யும்படியான உத்தரவு பிறந்ததாகக் கேட்டதுமில்லை கண்டதுமில்லை. இது புதுமையினும் புதுமையே! எங்களைத் தடைசெய்யும் பக்ஷத்தில் நாங்கள் அரசனை யுத்தேசித்துக் கொண்டுவந்த இந்தப்பழங்களும் அபிமந்திரதமான தீர்த்தங்களும் வீணாய்ப்போம் அப்படிபோக்கத் தக்கவைகளன்று. ஆகையால் நீங்களே பெற்றுக்கொண்டு அரசனிடஞ் சேர்த்துவிடுங்க ளென்றனர். காவலாளிகள் இவர் வஞ்சவுரையை அறியாதவர்களாய் இவர்கள் மெய்ம்மையான பிராஹ்மணோத் தமாகள். இவர்களைப் போன்ற அந்தணர்களைக் காண்பதரிதென மனமிரக்க

✠ கிருமி - புழு

முடையவர்களாய் ஓ முனிவீர்காள்? எங்கள் ராசாதிராசன் கவிஜாதருடைய சாபத்தினால் மிகவும் பயமுற்றவனாய்க் கடுங்காவலோடு கூடிய இக்கோட்டையில் வசிக்கின்றான். இப்பொழு திருக்கின்ற காவற்றிறத்தை என்னவென்று சொல்லப்போகின்றோம். பிராஹ்மணா ளொருவரும் மேலுப்பரிகையில் போகக் கூடாது. ஒருவரும் ஓர் பண்டத்தை வெளியேயிருந்து கொண்டுவந்து கொடுக்கவுங் கூடாது. நாளையதினங் காலையில் மந்திரோச்சாரணை செய்கின்றவர்களா யிருக்கின்ற சகல முனிவர்களும் வரப்போகின்றார்கள் ஆகையால் நீங்களும் அச்சமயம் வருவீர்களாயின் அரசனைக் காண்பதிற் றடைகிடையாது என்றனர். வஞ்ச வேடத்தவராகிய அந்தணர்கள் நாளைக்கு நாங்கள் வருவதா யிருந்தாலும் அரசனை உத்தேசித்துக் கொண்டுவந்த இக்கனி முதலியவைகளை உங்கள் பால்வைக்கின்றோ மென்றனர். காவலாளிகள் ஆனால் அரசனுக்குத் தெரிவித்துப்பின்னர் அவனாணையின்படி செய்கின்றோமென்று சொல்லி அரசன்பாலோடி அடிபணிந்து வஞ்ச வேடத்தாராகிய முனிவர்கள் செய்தியை நடந்தவண்ணம் விண்ணப்பஞ் செய்ய; அரசன்கேட்டு மிகுந்த பக்தியுடையவனாய் ஓ காவலாளிகளே? நீங்கள் அவர்கள் கொடுப்பன வற்றை ஏற்றுக்கொண்டு இன்றைய தினம் பார்க்க முடியாதென்று சொல்லி நாளையதினம் அவர்கள் தரிசனந் தரும்படி பிரார்த்தித்து அவர்களுக்கு என்னா லாகவேண்டுவன எவைகளோ அவை இவைகளென்பதும் நன்றாய்த் தெரிந்துகொண்டு என்னுடைய வந்தனத்தையுஞ் சொல்லக் கடவீர்களென்று விடைகொடுத் தனுப்பினன். காவலாளிகள் விடைபெற்று முனிவர்களிடம் வந்து அரசன் கட்டளையிட்டத்தைக்கூற முனிவர்கள் நாம் வந்தகாரியம் முடிந்ததென்று மனதிலெண்ணிக் கனி முதலியவற்றைக் காவலாளிகளிடம் கொடுத்துவிட்டுப் போயினர். போன பின்னர் காவலாளிகள் அவைகளை அரசனிடம் கொடுக்க அரசன் அதிக பயபக்தியுட னேற்று மந்திரிகளைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்லத் தொடங்கினான்.

(ருஎ-சுஅ) ஓ அன்புள்ள மந்திரிமார்களே, இன்றுவந்த அந்தணர்களால் கொடுக்கப்பட்ட இப்பழங்களைப் பார்த்தீர்களா? எவ்வளவு அருமையாக விருக்கின்றன. இதில் பெரிதான பழத்தை நான் சாப்பிடுகிறேன். மற்றைப் பழங்களை நீங்க ளனைவரும் புக்ஷியுங்களென்று அவ ரவருக்குங் கொடுத்துத் தானுண்ண வெண்ணிய பழத்தை இருபிளவாகப் பிளந்தனன். அதில் கறுத்த கண்ணும், சிவப்புநிறமு முள்ள அதி சூக்ஷமமான ஓர் புழுவைக்

கண்டு அதிசயித்து உடனே மந்திரிகளைப்பார்த்து இப்பொழுது சூரியனஸ்தமிக்கப் போகிறான் விஷத்தினால் ஒருபயமும் வராது என்று சொல்லி அந்த புழுவைப்பார்த்து இது புழுவா? அன்று, இது சாபரூபமே ஆகையால் "கவிஜாத" ராலே கொடுக்கப்பட்ட சாபத்தை அங்கீகரிக்கின்றேன். கிருமிரூபமாகிய இது என்னைக் கடிக்கட்டும் என்று சொல்லி அதனைத் தன் கண்டத்தில் வைத்துக் கொண்டனன், சூரியன் அஸ்தமிக்கும் அப்பொழுது அப்புழுவாயுள்ள தக்ஷகன் காலரூபமாயும் பயங்கர ரூபமாயும் இருக்கிற தன்னுருவங்கொண்டு கவிஜாதருடைய சாபத்தின்படி கண்டத்தை சூழந்துகடித்தான். அதுகண்டமந்திரிமார்களும், மந்திர சித்புருஷர்களும் முனிவர்களும், ஆஹா வென்று பெருங்குறலிட்டழுதனர். அவ்வோசை அக்கோட்டை முற்றும் நிறைந்தது. உத்தரா தேவியின் மகனாகிய அரசன் கலங்கா நிலையனாய்ச் சிறிதுஞ் சலிக்கவில்லை, பேசவுமில்லை, தக்ஷகன் தன் முகத்தினின்றும் வெளிப்படும் விஷாக்கினியினால் அரசனைச் சீக்கிரமாகத்தகித்து ஆகாயமார்க்கமாகச் சென்றனன். அவனைக் கண்ட சனங்களெல்லாம் உலகத்தை யழிக்கவந்த காலனென் றெண்ணித் தூரத்தேவிலகி நடுங்கி நின்றுப் பின்னர் விஷத்தினால் கொளுத்தப்பட்ட விருக்ஷம் போல் வீழ்ந்திருக்கும் அரசனைப் பார்த்துத் துக்கித்தனர்.

இரண்டாவது ஸ்கந்தம் - பத்தாவது அத்யாயம்

ப ரி க்ஷி த் தி ன் ம ர ண ம்

மு ற் றி ற் று

———

ஆஉ அத்யாயம் க0 - க்கு ஸ்லோகம் (ருகூஉநி.)

ஸ்ரீ தேவ்யைநம:

பதினொன்றாம் அத்தியாயம்

() ஜனமே ஜயஸ்ய ராஜ்ய ப்ராப்தி.

———

(க-கக) சூதமுனிவர் சவுநகாதி முனிவர்களை நோக்கி ஓ முனி புங்கவர்களே? பின்னர் மந்திரிமார்க ளெல்லா மொன்றோகக் கூடி அரசன் மாண்டிருப்பதையும், அவன் மகனாகிய ஜனமே ஜயன்

() ஜனமேஜயனுக்கு அரசாட்சி வருதல். * வளர்க்குந் தாய்மார்.

குழந்தையா யிருப்பதையும் பார்த்து மனம்புழுங்கி ஐயோ தெய்வமே! இப்படியும் விதியிருந்ததாவென்று கூக்குரலிட்டமுது நெடுநேரம் மூர்ச்சையாகக் கிடந்த பின்னர் தெளிந்து இனித்துக்கிப்பதனா லாவதென்? செய்ய வேண்டுவன வற்றைச் செய்து முடித்தலே கடனென்றெழுந்து, கங்காதீரத்தில் சந்தனம் அகில் முதலிய கட்டைகளைப் பரப்பி அதில் அரசனைக் கிடத்திப் புரோ கிதர்களால் வேதமுறைப்படி தகனாதி உத்தர கிரியைகளும் துர்மரணப் பிராயச் சித்தாதிகளுஞ் செய்து முடித்துப் பின்னர் குழந்தையாகிய ஜனமே ஜயனுக்கு ராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்வா னெண்ணி நல்ல சுப முகூர்த்தத்தில் அந்தணர்களுக்குக் கோதான சுவர்னதான முதலிய மஹாதானங்களையும், அவர்கள் விலாப்புறம் வீங்க அறுசுவையோடு கூடிய அன்ன தானங்களையும், இவர்க ளந்தணர்களல்லர் அரசராவா ரென்று வியக்கப் பொன்னாடைகளையுங் கொடுத்துச் சிங்காதனத்தில் அக்குழந்தையை ஏற்றிப் பொன்முடி சூட்டினார்கள். நகரத்தாரும் அடிபணிந்து வாழ்த்தினர். பின்னர் ஜனமேஜயன் * செவிலித்தாயர் களால் நாளொரு மேனியாய் வளர்க்கப்பட்டு ராஜ லக்ஷணங்களெல்லாம் நிறைப்பெற்று வாழ்ந்து வருநாளில் புரோகிதர் பதினோராண்டு ஆனமைகண்டு வேதசாஸ்திர முதலிய கலைஞானங்களை யுபதேசித்துக் கற்பித்து வந்தனர். அந்த ஜனமே ஜயனும் பூர்வ புண்ணிய விசேடத்தால் முன் கற்றுணர்ந்தவன் பின்னர் அந்நூற் பொருளைக் கியாபகஞ் செய்து கொள்வதுபோலும், துரோ ணாசாரிய ரிடத்தில் அருச்சுனன் கற்றுணர்ந்ததுபோலும், பரசுராமரிடத்தில் கர்னன் கற்றுணர்ந்தது போலும், சகல வேதாத்ய யனத்தோடு சாஸ்திரங்களிலுள்ள உண்மையான பகுதிகள் இது இதுவென்று அதி நுட்பமாகவும், யாவரையும் வெல்லுதற்குரிய தநுர் வித்தையை அதிக சாகசமாகவும், உயிர்களைப் பாதுகாக்கு முறைமையை யுணர்த்தவல்ல நீதி நூல்களைத் தனக் குயிர்த்துணையாகவுங், கசடறக் கற்றுணர்ந்து பொய்மையைக் கடிந்து, பஞ்சேந்திரியங்களைத் தன் வசப்படுத்தித், தருமராஜன் அறநெறி வழாது ஆண்டு வந்ததுபோல் உலகை ஆண்டுவந்தனன்.

(கஉ-கசு.) காசி தேசாதிபதியாகிய "சுவர்ன வர்னாகர" னென்கிற அரசன் ஜனமேஜயனுடைய கல்வி, நீதி, அறிவொழுக்க முதலியவற்றைக் கேள்வியுற்று அவனுக்குத் தனது மகளாகிய வடிஷ்டையைக் கலியாணஞ் செய்வித்தான். ஜனமேஜயன் பூர்வத்தில் தன்மூதாதையாகிய சித்திரவீரியன் அம்பை முதலியவர்களோடு எப்படி இன்புற் றிருந்தானோ, அருச்சுனன் சுபத்திரையோடு கூடி எப்படி லீலாவிநோதனாயிருந்தானோ, அப்படியே காசிராஜன் மகளாகிய

வபுஷ்டையோடு கூடிச்சசியும் இந்திரனும் போல் சிங்கார வனங்கடோறுஞ் சென்று காமகலா விநோத லீலைகளைப் புரிந்தும், தன் குடையின்கீழ் வாழ்கின்ற குடிகள் எவ்வகையானுந் துன்பமென்ப தறியாமல் வேண்டிய சுகங்களோடுகூடி வாழச்செய்தும், மிகவுஞ் சமர்த்தர்களான மந்திரி மார்களுடன் எவ்விதத்தும் பகையென்ப தணுகாவண்ணம் அரசியல் நடத்தியும் வந்தனன்.

(கஎ-உ0) இவ்வாறு வாழுநாளில் உத்துங்க ரென்னும் "மஹருஷி" பரிக்ஷித்தென்னு மஹாராஜா தக்ஷகனென்னும் சர்ப்பராஜனா லல்லவா இறந்தானென்று மிகவுஞ் சிலேசடைந்து அந்தத்தக்ஷகனான விரோதியைக் கொல்லவேண்டும். அவனை எவன் கொல்லப் போகிறான் என்று யோசித்துக் கொண்டே அஸ்தினாபுரத்தை யடைந்து அந்தப்பரிக்ஷித் மகாராஜாவின் புத்திரனாகிய ஜனமே ஜயன் அரசாண்டுவருதலைக் கண்டு இவன் தான் அவனைக் கொல்லவேண்டு மென்று நிச்சயித்து அவ்வரசனிடஞ் சென்று ஹே மஹாப்ரபோ ? ராஜாதி ராஜனே ? நீ சமயோசிதமாய்த் தெரிந்துகொள்ள வேண்டிய காரியா காரியங்களைத்தெரிந்து கொள்ளவில்லையே ? செய்ய வேண்டியதைச் செய்யாமலும், செய்வதல்லாததைச் செய்தும் வருகின்றனையே ? கோப மில்லாமலும் பிரயத்தினமில்லாமலும் இருக்கின்றனையே ? உன்னை இப்பொழுது எதைக் குறித்துப் பிரார்த்திப்பேன். என்னையெனில் நீ சத்துரு இன்னானென்று அறிந்தாயல்லை, அச் சத்துருவை வெல்லுந் தந்திரம் இதாமென்று யூகித்தாயல்லை, சிறுபாலரைப்போல் சிங்கார வனங்கடோறும் லீலா விநோதமாய்க் காலங்கழித்துவருகின்றனை. யான் உனக்கு யாது புகல்வேனென் றிரங்கிக் கூறினார்.

(உக-உசு.) ஜனமே ஜயன், அம் முனிவரைப்பணிந்து ஓ மகானுபாவரே ? எனக்கு யார் சத்துரு ? அவனை நான் இந்நாள்காறும் அறிந்தவனன்று அவன் யாவன் ? அவனை நான் செய்யவேண்டிய வகை யாதோ ? அதனை யருள் செய்வீராயின் அவ்வண்ணமே செய்கின்றே னென்ன, உத்துங்க மகருஷி ஓ மஹாராஜனே ? உன்பிதா இயல்பாக மரணமடைந்தவனன்று, தக்ஷகனென்னும் சர்ப்பராஜனால் கடிக்கப்பட்டிறந்தான். அதன் வரலாற்றை உன் மந்திரிமார்களைக் கொண்டு தெரிந்து கொள்வாயென்றார், உடனே மந்திரிமார்களை வினவ அவர்கள் ஓ அரசனே ? கவிஜாத ரென்னும் மஹருஷியினுடைய சாபத்தினால் தக்ஷகன் கடித்தானேயன்றித் தக்ஷகன் உன் பிதாவினிடத்தில் பகைமைகொண்டு கடித்தவனன்றென்று சாபம் நேரிட்ட காரணத்தை வரன் முறையாகக் கூற, ஜனமே ஜயன் அதனைக்கேட்டுத் தக்ஷகனிடத்தில் குற்றமில்லாமையைக் கண்டு

உத்துங்க மஹருஷியைப் பார்த்து ஐயா கருணாமூர்த்தியே? தக்ஷகன் என் பிதாவுக்குச் சத்துருவாகத் தோன்றவில்லையே என்றான். மஹருஷி அவனா சத்துரு வாகான்? மாந்திரீக சாஸ்திரத்தில் வல்லவரான கஸ்யபர் அந்தத் தக்ஷகனுக்குத் தன்னுடைய மந்திர வல்லபத்தை ஒரு ஆலமரத்திற்காட்டிப் பரிக்ஷித்தை நா னெழுப்புவேனென்று சொனனபொழுது அந்தத் தக்ஷகன் கஸ்யபரை உன் பிதாவினிடம் வரவொட்டாமல் அளவிறந்த தனத்தைக் கொடுத்துத் திருப்பிவிட்டானே அவன் சத்துருவா? சத்துருவல்லவா? நீயே யோசித்துப்பார்.

(உரு-சுக.) பூர்வத்தில் "ருரு" என்கிற மஹருஷி, தன்மனசினால் நிச்சயிக்கப்பட்ட பத்தினி சர்ப்பத்தினால் கடிக்கப்பட்டிறந்தாள். அவளைத் தான் தபோமகிமையினால் பிழைப்பித்துக் கலியாணஞ் செய்து கொண்டனர். அப்படிச் செய்து கொண்டும் தன் பததினியைக் கொன்றது சர்ப்பமாகையால் அந்தச் சர்ப்பஜாதிகள்மேல் பெரும்பகைகொண்டு எந்தெந்தச் சர்ப்பங்களை நான் எங்கெங்குப் பார்க்கினறேனோ அவைகளை ஆயுதத்தினால் அங்கங்கே கொல்லுகிறேனென்று அதிபயங்கரமான பிரதிஞ்ஞை செய்துகொண்டு ஆயுதத்தைக் கையிலேந்தினவராய் உலகமெங்குந் திரிந்து அங்கு மிங்கு முழல்கின்ற சர்ப்பங்களை யெல்லாம் விடாமல் கொன்று வரும்பொழுது ஓர் பயங்கரமான காட்டில் பால்போன்ற நிறமும் இருபக்கந் தலையுமுள்ள ஓர் கிழத்தன்மை யுடைய "டுண்டுப" மென்னும் சர்ப்பத்தைப்பார்த்துக் கையிலுள்ள தடியைத் தூக்கிக்கொண்டு மிகுந்த கோபத்தோடு மடிக்க அந்த "டுண்டுப" மென்னும்சர்ப்பம் அர்த ருருவைப்பார்த்து ஓமஹருஷியே? யான் உமக்கொரு அபராதமுஞ்செய்யாதிருக்க என்னை என்னகாரணத்தினால் அடித்தீரென்று கேட்டது, அதற்கு அந்த ருரு என்பவர் ஓ டுண்டுபமே? என்னுடைய பத்தினியானவள் உன்னினத்தவரால் கடிக்கப்பட்டிறந்தாள். அச்சமயத்தில் நான் மகாதுக்காக் கிராந்தனாய் சர்ப்பங்களை யெல்லாங் கொல்லுகிறேனென்று பிரதிஞ்ஞை செய்துகொண்டு அதுபோல் செய்துவருகிறே னென்றான். அந்த "டுண்டுபம்" அந்தமுனிவரைப் பார்த்து உம்முடைய பத்தினியைக்கொன்ற சர்ப்பத்தை மாத்திர மல்லவா கொல்லவேண்டும். அதைவிட்டு எல்லா வற்றையுங் கொல்லவேண்டுமென்று கொலைசெய்துவந்த சர்ப்பரூபமாக விருக்கின்றஎன்னையும் இப்பொழுது மடித்தீரே? யான் சர்ப்பமா? என்னைக்கொல்ல உம்மாலாகுமா? என்ன, மகருஷி மானிட வார்த்தையையும் மனதைக் கவர்வதாயுமுள்ள அந்தச் சர்ப்பத்தின் வாய்மொழியைக் கேட்டு நீயார்? யாதுகாரணத்தால்

இச்சரீரம் பெற்றனை? என்ன ஓ மஹரிஷியே? யான் பூர்வஜன்மத்தில் பிராமணன். எனக்கு "மேககன்" என்று ஒரு தோழனிருந்தான் அவன் தருமவான்களுக்குள் சிறந்தவன், சத்யவாதி, இந்திரியங்களைச் செயித்தவன், அவனிடத்தில் என்னுடைய மந்த மதியினால் அஞ்சத்தக்க சில விளையாடலை விளையாடிக்கொண்டு வருவேன். ஓர் நாள் அவன் அக்னிஹோத்திரஞ் செய்யுங் கிருகத்திலிருக்கும் பொழுது சர்ப்பத்தைப்போல் ஒன்றைச் செய்து அந்த கிருகத்திற்போட்டு இதோ பாம்பு பாம்பென்று அலறினேன். அவனும் அதுகண்டு ᳭பிரஞ்ஞை தெரியாதவனாய் மிகவும் பயந்து நடு நடுங்கிப் பின்னர் பொய்ப் பாம்பென்று தெளிந்து என்னைப்பார்த்து அடா மூடா என்ன செய்தாய்? நானெவ்வளவு பயந்து விட்டேன்? இப்படியுஞ் செய்யலாமா? என்னைப் பொய்ச் சர்ப்பத்தைக்காட்டிப் பயப்படுத்திய படியால் நீ மெய்மையான சர்ப்ப சொரூபமாகவே ஆகக் கடவாயென்று சபித்தனன். அச்சாபமேற்ற நான் அச்சமுற்று அந்த சிநேகனாகிய "மேகக" னென்னும் பிராஹ்மணனைப் பணிந்து சிநேக முறைமை பாராட்டிச் சாபவிமோசனஞ் சொல்லவேண்டு மென்று பிரார்த்தித்தேன். அவனுங் குரூரத்தி னின்றுஞ் சிறிது நீங்கிக் கருணையுடையவனாய் ஓ சிநேகனே? பிரமதருடைய புத்திரராகிய "ருரு" மஹருஷியினாலே இச்சாபம் நீங்கப்பெறுவாயென்றனன். அதுபோலவே உம்மால் எனக்குச் சாபம் நீங்கும்படியான காலம் வந்துவிட்டது. இப்பொழுது உமக்கொன்று சொல்லுகின்றேன் கேளும். என்னையெனின்? அந்தணர்களுக்குக் கொல்லா விரதமே மேலானவிரதம், எந்தச் சீவ செந்துக்களிடத்திலுந் தயையிருக்கவேண்டும், யஞ்ஞத்திற் கொலை இல்லையோவெனின், அது யாகத்தகத்திற்செய்யத்தகும். யாகமுகத்தினன்றி வேறெந்த விடத்திலுஞ் செய்யக் கூடாது, மனத்தினும் நினைக்கக்கூடாது. இவ்விஷயத்தில் சந்தேகம் வேண்டாம். என்று சொல்லிச் சர்ப்ப வடிவத்தினின்றும் நீங்கிப் பிராமணவடிவ முடைய னாயினான். ருரு மஹருஷியும் அவ்வேதியானது சாப விமோசனத்தைக்கண்டு மகிழ்ந்தவனாய்ச் சர்ப்பங்களைக் கொல்லுந் தொழிலை அன்று முதல் செய்யாது விட்டு மனைவியோடு வாழ்ந்திருந்தனன்.

(சுஉ-சுசு.) ஓ ஜனமே ஜயனே! ருரு மஹாரிஷி தன்பத்தினியைச் சர்ப்பங் கடித்ததென்று சர்ப்ப ஜாதிகள்மேல் துவேஷங் கொண்டு கொலைசெய்யத் துணிந்தாரென்றால் க்ஷத்திரியனாகிய நீ உன் பிதாவை மரிக்கச்செய்து சர்ப்பசாதிகள்மேற் சிறிதுந் துவேஷங் கொள்ளா திருப்பது என்ன வீரமோ? ஓ பரத ஸ்ரேஷ்டனே? உன்னுடைய பிதா இருப்பதற் கிடமில்லாமல் ஆகாயத்திலலைந்துகொண் டிருக்கிறான். நீ எவ்வளவு

᳭பிரஞ்ஞை - அறிவுடையான்

காலம் சர்ப்பங்களைக் கொல்லாம லிருக்கின்றனையோ அவ்வளவு காலமும் உன் பிதாவுக்குத் துர்க்கதிதான். ஆகையால் நீ சகல சர்ப்பங்களையுங் கொன்று அவன் வீரத்தைப் பூர்த்திசெய்வாய். எவன் பிதாவினுடைய சத்துருவை யறியாம லிருக்கின்றானோ அவன் செத்தவனுக்குச் சமானமாவன். அரசனே? நீ அம்பிகையை யுத்தேசித்து யாகத்தைச்செய். எப்படி யென்றால் உன் பிதாவின் வைரிகளாகிய சர்ப்பங்களை யுத்தேசித்த சர்ப்பயாகமொன்று சங்கற்பித்துக் கொண்டு அந்தயாகத்தைச் செய்தல் வேண்டுமென்றார். ஜனமேஜயன் தன் பிதாவினுடைய துக்கத்தைக்கேட்டு மிகவும் வியசன முற்றவனாய்க் கண்ணீராறாய்ப் பெருகவிட்டு என்பிதா சர்ப்பத்தினால் கடிக்கப்பட்டுப் பயங்கரமான கதியையா? அடைந்தனர். இப்பொழுது நான் சர்ப்பயாகத்தைச் செய்து என் பிதாவுக்குச் சுகஞ் செய்கிறேனென்று சொல்லிச் சர்ப்பங்களைக் கொல்லவேண்டுமென்கிற துவேஷமுடையவனாய் மந்திரிகள் யாவரையும் அழைத்து ஓ மந்திரிமார்களே! சர்ப்பயாகத்துக்கு வேண்டிய திரவியங்களைச் சேகரிக்கவேண்டியது, கங்கா தீரத்தில் நல்ல மங்களமான விடத்தில் அந்தணர்களைக் கொண்டு யாகசாலையை ஏற்படுத்தி அதில் அநேக ஸ்தம்பங்களோடு கூடிய யாகமண்டபத்தை நிர்மாணஞ்செய்து அம்மண்டபத்துக்குள் யாகவேதிகைகளை விதிப்படியமைத்து அந்த சர்ப்பயாகத்துக்கு அங்கபூதமாயுள்ள யஜ்ஞங்களை முன்னே செய்து, பின்னர் தக்ஷகனைப பசுவாகவும் உத்துங்க மஹாமுனியை ஹோதா (ஓமஞ்செய்கின்றவர்) ஆகவும், முற்று முணர்ந்தவர்களாயும் வேத பாரகர்களாயு முள்ள பிராஹ் மணோத்தமர்களை ஏனைய கிரித்தியங்களுக்கு உரிமையுடையவர்களாகவும் இருக்கச் சீக்கிரமாக ஏற்படுத்த வேண்டியதென்று ஆஜ்ஞை செய்தனன். அரச னுத்தரவின்படியே கங்கா தீரத்தில் யாகசாலையை ஏற்படுத்தி யாகத்தை நடத்திவரும்பொழுது தக்ஷகனானவன் தேவேந்திரனிடத்தி லோடி அபயம் அபயமென்று அவனடியில் வீழ்ந்து புலம்பினன், இந்திரன் அவனது துன்பத்தைக்கண்டு ஓ தக்ஷகா? நீ யஞ்சற்க என்று கூறித் தன் னாசனத்தில் அவனைப் பயமற்றிருக்கும் படியாகச் செய்தனன். இச்செய்தியை யாகத்துக்கு ஹோதாவாக விருக்கிற உத்துங்க மஹருஷி யறிந்து இந்த தக்ஷகன் யாரைச் சரணமடைந்த போதிலும் விடுவேனாவென்று மிகவும் துவேஷ முடையவராய் அதிகவிரைவுடன் தமது மந்திரசத்தியினால் இந்திரன் தக்ஷகனோடு யாகசாலைக்கு ஓடிவந்து சேரும்படி செய்தனர். அப்பொழுது தக்ஷகன் யாயாவர குலத்தி லுதித்தவரும் "ஜரத்காரு" மகருஷியினுடைய புத்திரரும் தருமாத் மருமாகிய "அஸ்திக" ரென்னும் முநிவரைச்சிந் தித்தனன். அம்முனிவர் அக்கணமே அந்தயாகசாலையையடைந்து

ஜனமேஜயனை மிகவும் புகழ்ந்து கொண்டாடினர். அரசன் அவர் கூறும் புகழுரையும், அவரது கல்வித் திரத்தையும், இளம்பருவத்தையுங் கண்டு அகமகிழ்ந்தவனாய் அவருக்கு அர்க்ய பாத்யா சமனாதிகள் தந்து அதிக சிறப்புடன் பூஜித்து ஓ முனிபுங்கவரே? என்மனம் உம்முடைய விஷயத்தில் மிகவும் சுவாதீனப்பட் டிருக்கிறது. தேவரீர் இப்பொழுது வந்தகாரண மென்ன, என்னால் தேவரீருக்கு ஆகவேண்டிய காரியம் யாது? அதைச் சொல்லி யருளு மென்றனன். அஸ்திகருஷி ஓ ஜனமேஜயனே? நீ கூறியது உண்மையாயின் இந்த யாகத்தை நிறுத்தல் வேண்டுமென்றனன். சத்தியசந்தனாகிய அரசன் அதனைக்கேட்டு அந்தோ! இதற்கென் செய்வேனென்று துயரமுற்று முனிவருக்குச் சொன்ன மொழியை மறுக்கமாட்டாது சர்ப்பயாகத்தை நிறுத்திவிட்டனன். அப்பொழுது இந்த அரசனது கோபந் தணியுமாறு "வைசம்பாயன முனிவர்" மஹா பாரதத்தைச் சொல்லத் தொடங்கினர். அதனைக் கேட்டும் அரசன் மனவுபசாந்தி யடையாதவனாய் வியாசபகவானை நோக்கி ஐயா? என் மனதுக்குச் சாந்தி எப்படி யுண்டாகும், என் மனம் மிகவுந் தகிக்கப் படுகின்றது. இதற்கு யான் என் செய்வேன். அர்ச்சுன மஹாராஜாவுக்குப் பேரனும் எனக்குப் பிதாவுமாகிய பரிக்ஷித் மஹாராஜா சர்ப்பத்தினால் கடிக்கப்பட்டிறந்தாரே இது வென்னமரணம்! க்ஷத்திரியனுக்கு யுத்தத்தில் மரணம் நேரிட்டால் அது மிக விசேஷமான மரணம். அதுவன்றி கிருகத்தில் நேரிட்டால் அது விதியான மரணம். இந்த விரண்டுமல்லாத துர்மரணமா என் பிதாவுக்கு நேரிடுவது? ஆஹா! இதை எண்ணுந்தோறும் எனக்குண்டாகுங் கஷ்டம் இவ்வளவென்று சொல்லி முடியாது. இனி எண்ணி ஆவதென், என்பிதா மிருத்யுவுக்குச் சுவாதீனராய் ஆகாயத்தி லலைந்துகொண் டிருக்கிறார். அதற்கு நான் என்ன சாந்திசெய்ய வேண்டுமோ அதனையும், அவர் இந்த துக்கதினின்றும் நீங்கி எவ்வண்ணம் சுவர்க்கத்தை யடைவாரோ அதனையும் எனக்குச் சொல்ல வேண்டுமென்று பிரார்த்தித்தனன்.

இரண்டாவது ஸ்கந்தம் - பதினொன்றாம் அத்யாயம்

ஜனமேஜயஸ்ய ராஜ்ய ப்ராப்தி

முற்றிற்று.

———

ஆஉ அத்யாயம் க0-க்கு ஸ்லோகம் (சுருஅஏ.)

———

ஸ்ரீதேவ்யைநம:

பன்னிரண்டாம் அத்தியாயம்

வியாச ஜனமேஜய சம்வாதம்

———

(க-சு) சூதமுனிவர், சவுனகாதியரை நோக்கி ஓமஹருஷிகளே? சத்யவதீ புத்திரராகிய வியாசபகவான் ஜனமேஜயன் கூறிய வார்த்தையைக் கேட்டு அந்தச்சபையில் ஒருவார்த்தை சொல்லுகிறார். ஓ அரசனே! அதி கோப்யமாயும், கேட்குந் தோறும் ஆச்சரியகரமாயும், புண்யகரமாயும், மங்களகரமாயும், அநேக சரித்திரங்களுடன் கூடினதாயு முள்ள புராணமொன்றுளது. அப்புராணத்தைச் சொல்லுகிறேன். அதனை நீ கேட்பையாயின் உனக்கு மனவுபசாந்தியும், உன்பிதாவுக்குச் சுவர்க்கலோகப் பிராப்தியும் உண்டாகும். இப்புராணத்தை முன்னர் என் குமாரனாகிய சுகமுனிவனுக் குபதேசித் திருக்கின்றேன். அதன் பெயர் தேவீபாகவதம். ஓ அரசனே! இந்தப் பாகவதம் தருமார்த்த காம மோக்ஷமாகிய சதுர்வித புருஷார்த்தங் களுக்குக் காரணமாயுள்ளது. இதைச் சிரவணஞ் செய்த மாத்திரத்தில் பரமசுகத்தையும் நித்தியத்வத்தையும் சர்வசம்பத்தையும் கொடுக்கு மென்றனர்.

(ரு-க0) அரசன், ஓ வியாசமுனிவரே? தேவரீரால் சொல்லப்பட்ட பாகவதபுராணத்தைக் கேட்கவேண்டு மென்னும் ஆவலுடையவனாயினும் இப்பொழுது யாகத்தைக் கெடுப்பதற்கு அதிவேகமாய்வந்த இந்த அஸ்திகருஷி யாருடைய பிள்ளை? என்ன நிமித்தம் இந்தயாகத்தைக் கெடுக்கவந்தார்? இந்தச் சர்ப்பங்களைக் காப்பாற்றுவதனால் இவருக்குவரும் பிரயோசன மென்ன, இவற்றை முன்னர் கேட்கவேண்டுமென்று என்மனம் என்னைத் தூண்டுவதால் அவற்றைச் சொல்லவேண்டு மென்று பிராத்தித்தனன். வியாசமுனிவர் ஓ அரசனே? "ஜரத்காரு" என்னும் ஒரு மஹருஷி யிருந்தார். அவர் கிருகதாச்சிரமத்தை விரும்பாமல் பிரமசாரியாச் சிரமத்திற்றானே இருந்தனர். அவர் ஓர்நாள் ஓர்வனத்தின் வழியாகப் போகும்பொழுது அவருடையபிதுர்க்கள் ஓர் கிணற்றில் தலை கீழாய்த் தொங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தனர். அந்தப் பிதுர்க்கள் இந்த ஜரத் காருவைப்பார்த்து ஓ குழந்தாய்? எங்கள் நீ இப்பொழுது பார்ப்பதனால் என்ன திருப்தியுண்டாகும். நீ ஒருகன்னிகையை விவாகஞ் செய்துகொண்டு ஒரு புத்திரனைப் பெற்று அவன் சதாசாரத்தோடு கூடி யிருப்பானோயானால் நாங்கள் படும் இந்த யாதனையை விட்டுச்

சுவர்க்கத்திற்குப் போவோம் என்றனர். அதுகேட்ட ஜரத்காரு, ஓ பிதுர்க்களே! எனக்கு வரப்பட்ட கன்னிகை என் பேருடையவளாயும் என் மனோரதம்போல் நடக்கப்பட்டவளாயும், என்னாலே தேடப்படாதவளாயும் வருவாளானால் நான் விவாகஞ் செய்து கொள்ளுகிறேன் என்று சொல்லி விட்டுத் தீர்த்தயாத்திரைக்குச் சென்றனர்.

(கக-கஅ.) ஓ அரசனே? இவர் செய்தி இங்ஙனமிருக்க காசிபரென் றோர்மகருஷியிருந்தனர். அவருக்குக் கத்துரு, விநதை என்றிரண்டு பத்தினிகளுண்டு. அவர்கள் ஓர் நாள் சூரியன் குதிரையைப் பார்த்தனர். அவருள் கத்துரு விநதையைப்பார்த்து ஓ விநதையே? இக்குதிரை எந்தநிற முடையது? உண்மையாய்ச் சொல்வாயென்றாள். அதற்கு அவள் இந்த நிறமென்றுசொல்லாமல் குதிரைகளில் வெண்ணிறமுடையது தான் சிரேஷ்டமென்று கூறினாள். அதுகேட்ட "கத்துரு" இக்குதிரை எந்த நிறம் என்றாள். இது வெண்ணிறந்தான் என்றாள். பின்னர் விநதை கத்துருவைப் பார்த்து நீயும் இந்தக் குதிரையினிறம் இந்த நிறமென்று உண்மையாய்ச் சொல்லவேண்டும். நான் சொல்லியபடி வெண்ணிறமாக வில்லாமற் போகுமானால் உனக்கு நா னடிமையாகிறேன் என்றாள். அப்பொழுது கத்துருவானவள் வஞ்ச மன முடையவளாய் விநதையைப்பார்த்து ஓ விந்தையே? இந்தக் குதிரை கருப்பு நிற முள்ளதாக நானினைக்கிறேன். அப்படியேதானிருக்கும். எனக்கு நீ வேலைக்காரியாய் ஆகவேண்டியது தான். இதற்குச் சந்தேகமில்லை என்று சொல்லிவிட்டு, அப்புறம்போய்த் தன்னுடைய புத்திராளா யிருக்கின்ற சர்ப்பங்களைக் கூப்பிட்டு நீங்கள் இந்த க்ஷணமே சூரியனுடைய குதிரையைச் சமீபித்து உங்களுடைய விஷச் சுவாலையினால் அதனுடைய ரோமங்களெல்லாம் கறுப்பாகத் தெரியும்படிச் செய்யவேண்டுமென்று கட்டளை யிட்டனள். அம்மொழி கேட்ட சர்ப்பங்களுட் சில அப்படிச்செய்ய எங்களால் முடியாதென்று சொல்லிற்று, அவ்வார்த்தையைக்கேட்ட கத்துரு கோபித்தவளாய் முடியாதென்ற நீங்களெல்லாம் ஜனமே ஜயன் செய்யப்போகிற சர்ப்பயாகத்தில் வீழ்ந் திறக்கக் கடவீர்களென்று சபித்தனள், ஏனைய சர்ப்பங்களெல்லாம் தாய்சொற்றுறக்கக்கூடாது, அவளுக்குச் சந்தோஷத்தை யுண்டுபண்ண வேண்டுமென றெண்ணி ஆகாயத்திற் றாவி சூரியனுடைய குதிரையின் வாலைச் சுற்றிக்கொண்டு தங்களுடைய தேககாந்தியினாலே கறுப்பு நிறமாகத் தோன்றச்செய்தன. அதுகண்ட கத்துரு, மனமகிழ்ந்த வளாய் விநதைபாற் சென்று ஓ விநதையே? நீ சூரியனுடைய குதிரையை வெண்ணிறமென்றாய் யான் கறுநிற மென்றேன் இப்பொழுது நாமிருவரும் அந்தக் குதிரையைப்

போய்ப் பார்ப்போம் வாவென் றழைத்துக்கொண்டு குதிரையினிடஞ் சென்று எந்தநிறமென்றாள். விநதை என் செய்வாள்? அதிக துக்க முடையவளாய் கத்துருவே? உன்வார்த்தை மெய்யாயிற்று. என்வார்த்தை பொய்யாயிற்று. ஆகையால் நான் சொல்லியபடி உனக்கு இப்பொழுதே அடிமையாயினேன் என்றாள். கத்துருவானவள் தன்னுடைய சபதம் முற்றியதென் றிறுமாந்து அந்தவிநதையை இவ்வண்ணஞ் செய்யலா மென்பதின்றி எல்லாச் சிறுமைகளும் அவள்பா லாக்கிச் சிறைப்படுத்தினள்.

(கக்கூ-உகூ.) இவ்வாறு விநதையானவள் சிறையிடைப்பட்டுத் துயருறுங்காலத்தில் சர்ப்பங்களை ஆகாரமாகவுடைய மஹாபலிஷ்டனாகிய கருடன் இந்த விநதையின் மகனாதலால் ஓர்நாள் தன் தாய்படுங் கஷ்டத்தைப்பார்த்துமனமாற்றாது ஒருவார்த்தை கூறினான். ஓ என் அன்றாய்? நீ மிகவுந் தீனையாய் அழுகின்றவளாய்ச் சாண்கின்றனை, நானும், சூரியனுடைய தேர்ப்பாகனாகிய அருணனும் சீவித்துக்கொண் டிருக்கும்பொழுது நீ துக்கப்படவேண்டிய காரணமென்ன, புத்திரரிருக்கத் தாய் துக்கிப்பாளேயானால் அப்புத்திரரா லென்னபயன். இனி எங்களைச் சுடவேண்டும். ஓ மாதாவே? உனக்குத் துக்கம்வந்த காரணத்தைச்சொல், அதனை நான் நிவிர்த்தி செய்விக்கிறே னென்றனன். அவன் தாயாகிய விநதை அப்பா குழந்தாய்? உன் பெரியதாயாகிய என்னுடைய சக்களத்திக்கு நான் அடியாளாயினேன், அவளால் நானடையும் சிறுமை என்னென்று சொல்லுவேன். இதற்கு நீ என் செய்வாய். நீ எடுத்துக்கொள்ளும் கஷ்டம் வீணாகும். இப்பொழுது அவளை நான் தூக்கிக்கொண்டு யாவருங்காண அவள் எங்குபோகச் சொல்லுகிறாளோ அவ்விடத்துக்குப் போகவேண்டுமாம். இந்த அவமானத்துக்கு நான் என் செய்வேன். இதுதான் என்னை இப்பொழுது அழச்செய்கின்றது என்றனள். கருடன் என்னுடைய பெரியதாய் எவ்விடத்துக்குத தன்னைத் தூக்கிக் கொண்டுபோக ஆசைப்படுகின்றாளோ அவ்விடத்துக்கு நான் தூக்கிக்கொண்டு போகிறேன். இதற்காக நீ துக்கிக்க வேண்டாம், உன்னைச் சீக்கிரத்தில் இந்தச் சஞ்சலத்தி னின்று நீக்கி நிச்சல புத்தி யுடையவளாயிருக்குச் செய்கின்றேன் என்றனன். விநதை கருடனை யழைத்துக்கொண்டு தன்னுடைய சக்களத்தியாகிய கத்துருவினிடத்திற் போய் நின்றனள். கருடன் கத்துருவை வணங்கி தாயே என்தாய் உன்னை எவ்வளவு தூரந் தூக்கிக்கொண்டு போகுஞ் சத்தியுடையவள்? அப்பணியை யான் விரும்பிவந்தேன் கட்டளை யிடவேண்டு மென்றனன். உடனே தன் பிள்ளைகளாகிய சர்ப்பங்களுடன் அக்கருடன்மீதேறிக

கடற்கரைக்குப்போவா யென்றனள். அவ ளெண்ணப்படியே அரைக் கணப்பொழுதில் கடற்கரையை யணுகினன். அந்தக் கத்துரு மகிழ்ந்தாள். அப்பொழுது கருடன் இதுதான் நல்ல தருணமென் றெண்ணி அந்தக் கத்துருவினுடைய தாளைப்பணிந்து இரக்கத்திற் சிறந்த தாயே? என்னுடைய தாயானவள் எது செய்தால் இந்த அடியளாயிருக்குந் தன்மையினின்றுந் தடையின்றி விடுபடுவா ளென்றனன். கத்துரு கருடனைப்பார்த்து ஓ கருடனே? அவளொன்றுஞ் செய்யவேண்டாம். மஹா பலீஷ்டனாகிய நீ சீக்கிரமாய் இந்திரலோகம் போய் அங்கிருக்கிற அமிர்த கலசத்தைக் கொண்டுவந்து என்னுடைய பிள்ளைக ளுண்ணும்படிக் கொடுத்துவிட்டு உன்னுடைய தாயைச் சிறையினின்றும் விடுவித்துக்கொள். இதிற் சந்தேகமில்லை என்றனள். பக்ஷிகளுக்குள் உத்தமனான கருடன் கத்துருவை நோக்கி நீ விரும்பிய அமிர்தகலசத்தை இதோகொண்டு வந்து விட்டேனென்று ஆகாயத்திற்பறந்து இந்திரலோகம்போய்க் காவலாளிகள் முதல் இந்திர னிறுதியாகவுள்ள யாவரையும் வென்று அமிர்த கலசத்தைக் கையிலேந்திக் கொண்டு வீராவேசத்துடன் கத்துருவின்பால் வந்து இதோ அமிர்தகலசத்தைக் கொண்டுவந்து விட்டேன் என்று தர்ப்பையைப்பரப்பி அதன்மேல் அக்கலசத்தை வைத்துவிட்டுத் தன் தாயை அடியாள் தன்மையினின்று நீக்கிப் பின் யாதொரு சந்தேகத்துக்கு மிடமில்லாமல் அழைத்துக்கொண்டு போயினன்.

(ங0-ஙஎ.) பின்னர் சர்ப்பங்களெல்லாம் நமக்கு அமிர்தங் கிடைத்ததென் றகமகிழ்ந்து அமிர்தத்தைப் பானம் பண்ணு ❀நிமித்தம் ஸ்நானத்துக்குச் சென்றன. அத்தருணத்தில் தேவேந்திரன் அந்த அமிர்த கலசத்தைக் கொண்டுபோயினன். ஸ்நானஞ் செய்துவந்த சர்ப்பங்கள் கலசத்தைக் காணாது வருந்தித் தர்ப்பை களிற் சிதறிக்கிடந்த சிறிய திவலைகளை நாவினால் நக்கின. அப்பொழுது தர்ப்பையினுடைய கூர்மையால் நா விரண்டாகப்பிளவுபட்டன. இந்தச் சர்ப்பங்களுடைய செய்தி யிப்படியிருக்க, இந்தக் கத்துருவினிடத்தில் சாபமேற்ற ஏனைய வாசுகி முதலிய சர்ப்பங்கள் தங்களுக்கு நேர்ந்த சாபத்தை நிவிர்த்தி செய்துகொள்ளப் பிரமனிடஞ் சென்று அவன் சரணமடைந்து ஓ சிருட்டி கர்த்தரே? நாங்கள் ஜனமேஜய னுடைய சர்ப்பயாகத்தில் இறந்து போகும்படி எங்கள்தாய் சபித்திருக்கின்றாள். இதற்குப் பரிகாரம் தேவரீர் அனுக்கிரகிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தன. பிரமன் அந்தச் சர்ப்பங்களைப்பார்த்து ஓ சர்ப்பங்களே? ஜரத்காரு என்கிற மகருஷிக்கு வாசுகியினுடைய தங்கையைக் கலியாணஞ் செய்துவையுங்கள் அவருக்கு அஸ்திகனென்று ஒரு

❀ நிமித்தம் - முத்தம்

புத்திரனுண்டாவான். அவனால் இந்த மரணபயம் உங்களுக்கு நீங்குமென்றனன். வாசுகி பிரமன் கூறிய மங்கல வார்த்தையைக் கேட்டுக் கவலை நீங்கினவனாய் ஜரத்காரு என்னு மகருஷி இருக்கும் வனத்தைத் தேடிவந்து அவரைக்கண்டு தன் னபீஷ்டத்தைச் சொல்ல அவா் தன்னுடைய ℛ பிதுர்க்களுக்குச் சொல்லிய வார்த்தையை எண்ணி அப்படியே யாகுகவென்று வாசுகிக்குச் சொல்லிவிட்டுப் பின்னா் அந்தக் கன்னிகைக்குத் தன் பெயரிட்டிருப்பதையுந் தெரிந்து மகிழ்ந்து மறுபடியும் அந்த வாசுகியைப்பார்த்து ஓ வாசுகி? இந்தக்கன்னிகை எப்பொழுது எனக்கு அப்பிரியத்தைச் செய்வாளோ அப்பொழுது இவளை விட்டுவிடுவேன். இதுவேதான் பிரமாணமென்ன; வாசுகி அதற் குடன்பட்டவனாய்த் தன் தங்கையைக் கலியாணஞ் செய்துகொடுத்து ஸ்ரீதன முதலியனவுஞ் சிறப்பாகக் கொடுத்துத் தன்னிடம்வந்து சேர்ந்தனன்.

(ருஅ-சுசு.) சத்துரு காதகனாகிய ஓ ஜனமேஜயனே? பின்னா் ஜரத்காரு என்னும் மஹாருஷி அதி பயங்கரமான அந்தக்காட்டில் ஓா் பா்னசாலை யமைத்துத் தன் பத்தினியோடு லீலாவிநோதராய் வாழ்ந்து வந்தனா். ஓா்நாள் பகற்பொழுது போஜனஞ் செய்தபின்னா் சுகமாய் நித்திரை செய்யவேண்டு மென்கிற எண்ணமுடையவளாய்த் தன்சமீபத்திலிருக்கும் மனைவியைப் பார்த்து ஓ பெண்கள் நாயகமே? இன்று எனக்கு நித்திரையில் அதிக விருப்ப மிருக்கிறபடியால் என்னை எழுப்பவேண்டியதாக எந்தக் காரியம் வந்தபோதிலும் நீ என்னை எழுப்பி நித்திரையைப் பங்கஞ் செய்யவேண்டாமென்று சொல்லிவிட்டு அசைவின்றி நித்திரை செய்தனன். சந்தியாகாலம் வந்தது; அதனைக்கண்டமனைவி சந்தியாவந்தனஞ் செய்யுங் காலம் வந்துவிட்டதே இப்பொழுது எழுப்பாமற் போவோமானால் மஹாபாதகம் உண்டாகுமே, இவரோ நித்திரையில் அதிகப் பிரியமுடையவனா யிருக்கின்றே னென்றாரே எழுப்புவோமானால் இவரது பிரியத்தைக் கேடுத்தவளாவோமே அப்படி யாவோமானால் நம்மை நீக்கிவிடுவா ரல்லவா? இந்த வார்த்தையை நம்முடைய தமையனிடத்தில் பிரமாணமாகச் சொல்லி யிருக்கின்றா ரல்லவா என்று பலவிதமாக ஆலோசித்துத் தருமத்தைக் கெடுப்பதில் பயந்தவளாகிய அப்பெண்மணியானவள் சந்தியாகாலம் வீணாய்ப் போவதாகிய தருமநாசத்துக்கு நாம். ஆளாயிருப்பதைப் பார்க்கிலும் அவருடைய பிரியத்துக்கு விரோதியாய் நாம் அவரால் விலக்கப்பட்டுப்போவது பாதகமன்று மேலாகும். நமக்குப் பிரிவுவந்தகாலத்தில் மரணமடைந்துபோவது அதனினு மேலாகும். தருமஹானியானது மனிதருக்கு நரகத்தை யுண்டு பண்ணத்தக்கது என்று தருமங்களை எண்ணினவளாய்த் தனது நாயகனை எழுப்புவதே சரியென்று ஓ

ℛ பிதுர்களுக்கு - தந்தை வழியில் மூதாக்கள்

விரதானுஷ்டான சீலரே, சந்தியாகாலம் வந்துவிட்டது எழுந்திரும் எழுந்திருமென்று எழுப்பினள்.

(சுரு-ருO.) அந்த மகருஷி அதிக கோபத்துட னெழுந்து அந்தக் கன்னிகையைப் பார்த்து நீ என்னுடைய சொற்றவறி நித்திராசுகத்தைக் கெடுத்தபடியினால் இனி என்னுடனிருக்கத்தகுதியுடையவ ளாகாய் உன்னுடைய தமயனிடஞ் செல்லக்கடவாய் நான் போகின்றேனென்ன; அக் கன்னிகை நடுக்கமுற்ற தேகத்தையுடையவளா யொருவார்த்தை சொல்லுகிறாள். அளவிறந்த தேஜசோடுங் கூடிய பிரபாவத்தை யுடையவரே; என்னுடைய தமயன் என்னபயனை விரும்பி என்னை உமக்குக் கொடுத்தான். அந்தச் சந்தானப் பிரயோசனம் இப்பொழுது எனக்கு ஒன்றுந் தோன்றவில்லையே என்றனன். அதுகேட்ட மஹருஷி வேறொன்றுஞ் சொல்லாது "இருக்கிறது" என்று சொல்லிவிட்டு மனையாட்டியின் பிரிவை ஒறு சிறிதும் எண்ணாது வனத்தை நாடிச்சென்றனர். அக் கன்னிகை தன் தமயனாகிய வாசுகியினிடம் போய்ச்சேர, வாசுகி அவளைப்பார்த்து உன்னாயகர் உனக்கு என்ன சொல்லி உன்னைவிட்டுப் பிரிந்துபோயினா ரென்ன, கன்னிகை என்னாயகர் "இருக்கிறது" என்கிற சொல்லிச் சொல்லிவிட்டுப் போயினரென்றாள். வாசுகி அச்சொல்லைக் கேட்டுத் தன் தமக்கையை மிகவும் பிரியத்தோடு காப்பாற்றி வருங்காலத்தில் மாதத்துக்கு மாதம் கர்ப்ப சின்னங்களெல்லா மேலிட்டுப் பத்தாமாண்டில் இத்தருஷியைப் பெற்றனள். ஓ குருவம்ச திலகனே? இந்த மஹருஷியி னுடைய பிதா சொல்லிய 'அஸ்து' என்கிற சொல்லையே இவருக்கு நாமகாரணமாக *"அஸ்திகர்" என்றழைக்கப்பட்டுப் பிரசித்திபெற் றிருக்கின்றனர்.

(ருக-ருஉ) இந்த மகருஷியானவர் தன்னுடைய தாய்வர்க்கம் சர்ப்பங்க ளாதலால் தன் தாய் நிமித்தம் உன்னுடைய யாகத்தில் வீழ்ந்திறக்க வேண்டிய இந்தச் சர்ப்பங்களைக் காப்பாற்றினரென் றறியக்கடவாய். ஓ அரசனே? உன்னுடைய யாகத்தில் சில சர்ப்பங்கள் வீழ்ந்திறந்ததற்குக் காரணம் காசிப ருஷியினுடைய மனைவியாகிய கத்துருவானவள் தன் சொல்லைக் கடந்தனவென் றிட்டசாபமெனவும், சில சர்ப்பங்கள் இறவாமல் பிழைத்ததற்குக் காரணம் பிரமதேவனுடைய அனுக்ரகமென்றும் அறிதி. இக்காரணங்களை அறிந்த நீ இந்த அஸ்திகரிடத்தில் குரோதம் வைப்பதற்கிடமேது. ஆகையால் இவரை நீ நன்றாய்ப் பூஜிக்கவேண்டும் உனக்கு க்ஷேமம் உண்டாகுக.

(ருங-சுசு.) ஓ பூபாலனே! உனக்கொரு வார்த்தை சொல்லுகிறேன். அதனை யூகிக்கக்கடவாய், என்னையெனின்? இதுவரையில் பாரதமாகிய ஐந்தாம் வேதத்தைச் சாங்கோபாங்கமாகக் கேட்டனை, அநேக தானங்களைச் செய்தனை, அநேகம் பெரியோர்களை வழிப்பட்டனை, இதுபோன்ற அநேக புண்ணியகிருத்தியங்களைச்

செய்துவந்தனை; இவையாவுஞ் செய்தவனாயிருந்தும் உன்னுடைய பிதா சுவர்க்கத்தை யடைந்தானில்லை. உன்னுடைய குலமும் பவித்திரத்தை யடைந்துமில்லை ஆகையால் பக்தியோடும் மஹா தேவிக்குப் பெரிய ஆலயமொன்று உண்டாக்கி அதில் தேவியைப் பிரதிஷ்டைசெய்து பேரன்போடு அருச்சனை ஶ்ரீ யாதிகள் உபசாரத்தோடு செய்வையேயானால் உனக்குச் சகல சித்தியையும், சகல சம்பத்தையும், எப்பொழுதும் மங்களத்தையும், குலவிர்த்தியையும், அழிவில்லாத ராஜ்ய சம்பத்தையும் உண்டாக்கும். தேவியைக் குறித்து யாகஞ் செய்வதனால் எந்த பல னுண்டாகுமோ அந்தப்பலத்தைக் கொடுக்கத்தக்க உத்கிருஷ்டமாகிய ஸ்ரீமத் பாகவதமென்னும் புராணத்தைக் கேட்பாயாக. நான் உன்னை மிகவும் பரிசுத்தமாயும் ஜனனமரண துக்கங்களைப் போக்குவதாயும் திவ்யமாயும் அநேகவிதமான ரசங்களோடு கூடினதாயு முள்ள கதைகளைக் கேட்க நன்றாய்ச் சொல்லுகின்றேன்.

உலகில் இப்புராணமேகேட்கத்தக்கது. இதர புராணங்கள்கேட்கத்தகாதது, தேவியினுடையமலர்போன்ற திருவடியே ஆராதனைக்குரியது. ஏனையவெல்லாம் ஆராதனைக்குரித்தல்லாதது. எவ னொருவனுடைய பக்தியினால் நிறைந்திருக்கின்ற சித்தத்தில் தேவிவாசஞ்செய்யப் பெற்றானோ அவன்தான் நல்ல பாக்கியத்தையும், நல்ல ஞானத்தையுமுடையவனாவன். ஓ பரதவம்ச திலகனே! எவனொருவன் மகாமாயா சொரூபியான அம்பிகையை ஆராதிக்கவில்லையோ அவன் மிகவும் துக்க முடையவனாக வுலகில் காணப்படுகிறான். ஹ்பிரமனாதி சகலதேவரும் தேவியை ஆராதிக்க வேண்டுமென்னு மெண்ணத்துட னிருக்கின்றாரென்றால் அத்தேவியை எவன் தான் வழிபடமாட்டான். ஓ அரசனே! தேவியினால் விஷ்ணுவுக் குபதேசிக்கப்பெற்றதும், உத்தமுமான இப்புராணத்தை எவனொருவன் கேட்கிறானோ அவன் அழிவில்லாத எல்லா மங்களங்களையும் அடைகிறா னென்று கூறியிருப்பதால் நீ இப்புராண ஒ சிரவண மொன்றினாலேயே சித்தசாந்தி யடைவாய். உன்னுடைய பிதுர்க்களும் அழிவில்லாத சுவர்க்கபதத்தை யடைவார் நீ யஞ்சற்க. ஓ முனிவர்களே! எவனொருவன் இந்த உபாக்கியானத்தை நாடோறும் சிரவணஞ் செய்கின்றானோ அவன் எல்லா மனோரதங்களையு மடைகிறனென்று சூதமுனிவர் கூறியருளினர்.

இரண்டாம் ஸ்கந்தம் பன்னிரண்டாவது அத்தியாயம்
வியாச ஜனமேஜய சம்வாதம்
முற்றிற்று.

அஉ அத்தியாயம் கஉ-க்கு ஸ்லோகம் (எஉஉஏ.)
ஆஉ ஸ்கந்தம் உ-க்கு அத்தியாயம் (ஙஉ) ஸ்லோகம் (கஃகஎஏ)

உ

ஸ்ரீதேவ்யைநம:

தே வீ பா க வ த ம்.

மூன்றாவது ஸ்கந்தம் அத்தியாய சூசனை.

முதலாவது

ஜனமேஜய க்ருத தேவீ சொரூபாதி பிரஸ்னை.

ஜனமேஜயன் வியாசமுனிவர் முன்சொல்லிய தேவீபாகவதத்தைப் பற்றி அவரையே "அந்தயாகம் எத்தன்மைத்து" என்பது முதல், செய்ய வேண்டிய விதியாது என்பதுவரையிலும், பிரமாண்டவுற்பத்தி எத்தன்மைத்து" என்றும், திரிமூர்த்திகள் சச்சிதானந்தாதி இலக்கண முடையவரென்று கூறினால் அவர்களிடத்தில் காலதத்துவத்துக் குட்பட்டிருத்தலாதி சுதந்தர ஹீனத்துவங் காணப்படுதலால் அங்ஙனங் கூறியது உண்மையா! உபசாரமா! "என்பதுமுதல், அவர்களுடைய லீலாவிபூதி என்ன" என்பது வரையிலும், அதன்பின்னர் "எதனிடத்திலிருந்து பிரமனாதியருற்பத்தி" என்பதுமுதல் "பிரகிருதியுங் கர்த்தாவன்று" என்பது வரையிலும், அதன்பின்னர் "தருமா தரும விசாரத்திலும் ஸ்திரமடையவில்லை" என்பதுமுதல் அதர்மம் என்ன இழிவுடையது" என்பது வரையிலும் கேட்டனவாகிய வினாக்களை எடுத்துக்கூறுதல்.

இரண்டாவது

தேவீ பாக வதாவதரணம்.

முன் அத்தியாயத்தில் "ஜனமேஜயன் கேட்ட வினாக்களுக்கு, வியாசர் தாம் நாரதரை இவ்வண்ணமே கேட்டதாகவும், அதற்கவர் நானொரு காலத்தில் பிரம்மாவைப் பார்த்து பிரமாண்ட வுற்பத்தி யாவரா லாயிற்று என்றும், பூஜிக்கத்தக்கவர் எவரென்றும், யாரைச் சரணாகதி யடைகிற தென்றும், என்மனம் அலைகின்றதென்று கேட்டதாகவும், அதற்கவர் நானொரு சலப்பிரளயத்தில் எல்லாஞ்சூனியமாய்ப்போக நா னொருவனே யிருந்தேன். அப்பொழுது என் மனதில் நம்மைப்படைத்துக் காத்தொழிக்கின்ற கடவுள்யாரென்றது முதலியசிலசந்தேகங்கள் தோன்றியதென்றும் அப்பொழுது நீதவஞ்செய்வாயென்று ஓரசரீரிவாக்கொன் றுண்டாய் அது போல் தவமியற்றுங்கால் மீண்டும் சிருஷ்டி செய்வாயென்று வரக் கொண்டெழ சிருஷ்டிசெய்வது எவ்வாறென்று மயங்கும் பொழுது மதுகைடபர் வந்து தன்னைத் துன்பப்படுத்த அப்பொழுது விஷ்ணுமூர்த்தியைக் கண்டு அவர் நித்திரையிலிருக்க நித்திரா தேவியைத் துதித்தா ரென்றும், நித்திராரூபமாயிருந்த அந்தத்தேவி வெளிப்பட்டு அந்த அசுரர்களைக் கொல்லத் தானும் திருமாலும் பயமற்றுத் தேவியைப்பார்க்கும் பொழுது ருத்திர மூர்த்தியும் வெளிப்படமூவரையும் பார்த்து நீங்கள் சிருஷ்டிதிதி சங்காரங்களைச் செய்யுங்களென்றாளென்றும், அப்பொழுது எங்களுக்கு உலகமே தோன்றாதிருக்க நாங்கள் சிருஷ்டியாதிகளைச் செய்யும் வகை எவ்வண்ணமென்று வினவ அத்தேவி ஓர் விமானத்தை வரித்து அதில் தங்களை ஏறச்சொல்லி ஓ பிரமனாதியரே! உங்களுக்குச் சில மகிமைகளைக் காட்டு கின்றேனென்றும், அவளாணைப்படியே அவ்விமானத்திலிருக்க அதுஅவர்களிருந்த வெள்ளத்திலிருந்து ஆகாயத்தி லெழுந்ததென்றுங் கூறுதல்,

---

௧ யாதிகள்-வழிச்செல்வோன் ௨ பிரமனாதி-பேரீன்ப ௩ சிரவண-உபநிடதம்

உ

ஸ்ரீ திரிபுரசுந்தாயை நம:

தேவீபாகவதம்.

———

மூன்றாவது ஸ்கந்தம்

அத்தியாயசூசனை

உ

ஸ்ரீதிரிபுர சுந்தர்யை நம:

தே வீ பா க வ த ம்.

———

மூன்றாம் ஸ்கந்தம்

முதலத்தியாயம்

ஜனமேஜயகிருததேவீசொரூபாதிபிரஸ்னை

———

"சிந்தித பலபரிபோஷண சிந்தாமணி ரேவகாஞ்சி நிலயாமே
சிரதரசுகரித சுலபாசித்தம் சிசிரயது சித்ஸுகாதாரா"

ஓ திருகாலக்யரான சூதபகவானே! தேவரீர் எங்களுடைய வேண்டுகோளால் சொல்லத்தொடங்கிய சிறந்த தேவீ பாகவதத்தில் இதுகாறும் ஸ்கந்தங்களித்தனை என்பதும், இப்பாகவதம் மஹாபுராணங்களிற் சேர்ந்ததென்றுணர்த்த புராணங்களிவ்வளவென்பதும், பின்னர் சுகருற்பத்தி ஆதியாக திருதராஷ்டிராதியருடைய உற்பத்தி யந்தமாகவரும் திவ்ய சரித்திரங்கள் இது விது வென்பதும் உணர்த்துகின்ற முதல் ஸ்கந்தத்தை எடுத்துரைத்தீர். அதில் சத்தியவதியினிடத்திலும் வியாசரிடத்திலும் எங்களுக்குண்டாகிய சந்தேகந்தெளியுமாறு, மத்ஸ்யகந்தி யுதபத்தி ஆதியாக ஜனமேஜப சம்வாதம் இறுதியாகவரும் இரண்டாவது ஸ்கந்தத்தையும் அதயத்புதமாகக்கூற நாங்கள் எங்களுள்ளங்களிகூரக் கேட்டுவந்தோம். அதுபோலவே இனிமூன்றாவது ஸ்கந்தமும் அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று சவுநகாதியர் பிரார்த்தித்தனர். சூதமுனிவர் மிகவுங் கருணை கூர்ந்தவராய் முப்பத்திண்டு அத்தியாயத்தோடுகூடிய மூன்றாவது ஸ்கந்தத்தைச் சொல்லத் தொடங்கினர்.

(க - க0) ஓ சர்வகலா சம்பன்னர்களாகிய சவுநகாதி மஹரிக்ஷிகாள்! ஜனமேஜயமஹாராசன் வியாசனாவணங்கி, தேவரீர் அம்பாபிதம் (தேவியைக்குறித்த யாகம்.) ஒன்று செய்வாயென்று கட்டளையிட்டீர். அந்தயாகம் எவ்வண்ணமுண்டாயிற்று! அதுயாது! எதனிடத்தினின்றும் எவ்வண்ணமுண்டாயிற்று; அதனுடைய குணமென்ன! அது எப்படிப்பட்டது! அதனுடைய சொரூபமெப் படிப்பட்டது! அது செய்யவேண்டிய விதி எப்படிப்பட்டது! நீர் தயாநிதியாகியும் சர்வஜ்ஞராகியுமிருப்பதால் இவற்றைச் சாங்கோபாங்கமாகச் சொல்லியருளல்வேண்டும். இதுவன்றியும் பிரமாண்ட வுற்பத்தியை விஸ்தாரமாய். எவ்வண்ணங்

கேட்டறிந்திருக்கின்றீரோ அதனையும், ஸ்ருஷ்டி - திதி - சம்ஹாரம் என்னு மும்மைத் தொழிலுடையவராயும், சகுணசொரூபராயு மிருக்கிற இந்த பிரமவிஷ்ணு ருத்திரர் ஸ்வதந்திரரென்றும், மகாத்மாக்களென்றும் தேவர்களிற் சிறந்தவரென்றும், சச்சிதானந்த சொரூபிகளென்றுங் கேட்டிருக்கின்றேன். கேட்டவனேயாயினும், அவர்கள் மரண தருமத்தோடு கூடினவர்களல்லவா? ஆதியாத்மிக ஆதிதெய்வீக ஆதிபவுதிக முதலிய துக்கங்களோடு கூடினவர்களல்லவா? கால தத்துவத்துக்கு சுவாதீனப்பட்டவர்களல்லவா? சுகதுக்கங்களோடு கூடினவர்களல்லவா? நித்திராலஸ்யங்களோடு கூடினவர்களல்லவா? உதிரமுதலிய சத்தாதுக்களோடுகூடிய சரீரத்தையுடைய வர்களல்லவா? இவைகளெல்லா முடையரா? அல்லரா? இவர் வேறு எவ்விதகுணமுடையவர்? எந்த இந்திரியங்களோடு கூடினவர்? அவர்களுடைய போகம் எப்படிப்பட்டது? ஆயுள் பிரமாணம் எவ்வளவு? வசிக்குமிடமெது? அவர்களுடைய லீலாவிபூதி என்ன? இவையனைத்தும் இப்பொழுது யான் கேட்கவேண்டுமென்கிற ஆவலுடையவனா யிருக்கின்றேனாகையால் தேவரீர் சொல்லியருளல் வேண்டுமென்று ஜனமேஜயமஹாராசன் விண்ணப் பஞ்செய்தனன். வியாசபகவான்கேட்டு மகிழ்ந்தவராய்க் கூறுகின்றார்.

(கக-சுரு) ஓ நுண்ணிய அறிவுடைய அரசனே! இப்பொழுது உன்னாலே கேட்கப்பட்டவை எவையோ அவையெல்லா மிகவும் அருமையானவை, யாவருக்கும் புலப்படாதவை, இக்கேள்விகளையே பூர்வத்தில் நான் பிரமபுத்திரராயும், மஹா மேத வியராயும் விளங்கும் நாரதமுனிவரைக்கேட்டேன், அவர் நகைத்து சில சொல்லிப்போயினார். பின்னர் ஓர்கால் கங்காநதிக்கரையில் சாந்தராயும், சர்வஜ்ஞராயும், வேதவித்துக்களுட் சிறந்தவராயு மிருக்கின்ற அந்த நாரதர் அங்கு வரக்கண்டு மனக்களிப்படைந்து அவரை யணுகி திருவடிகளில் வீழ்ந்து வணங்கி அவருடைய ஆஜ்ஞையின்பேரில் ஓர் அரிய ஆசனத்திலிருந்து க்ஷேமாதிசயங்களை வினவிப் பின்னர் என்னுடைய சந்தேகங்களெல்லாம் வினாவலுற்றனன். ஓ அரசனே இன்னும் உனக்குச் சந்தேகம் ஏதேனுமுளவேல் அதனையுங்கூறுவாயாக வென்ன, அரசன் ஓ முனிவரே! எனக்குள்ள சந்தேகம் இவ்வளவினவென்று சொல்லிமுடியாது. தேவரீர் கட்டளையிட்ட படியால் விண்ணப்பஞ் செய்கின்றேன். யான் மிகவும் விஸ்தாரமாகிய சம்சாரத்தில் விகற்பகோடிகளைச் செய்து கரையேறமாட்டாது தடுமாறுவதுபோல் சந்தேகமென்கிற கடலில் மூழ்கி நிலைகாணாது மயங்குகின்றேன். அதனைப் போக்கிக் கரையேற்ற வேண்டும். என்னையெனில் எதனிடத்திருந்து பிரமனாதியருடைய வுற்பத்தி? இப்பிரமாண்டம் எங்கிருந்துண்டாயிற்று? விசாலமாகிய இப்பிரமாண்டத்துக்கு முக்கியமான கர்த்தாயார்? இது ஓரே கர்த்தாவையுடையதா? அநேககர்த்தாக்களையுடையதா? கர்த்தாவையே யில்லாததா? காரியப்படுவதா, காரியப்படாதா?

இதுநித்தியமா, அநித்தியமா? (இதுவன்றியும்) சிலர் சதாசிவமாகியும், மஹாதேவனாகியும், சங்கரனாகியும் விளங்கும் சிவபெருமானை, காரணகாரணனாகவும், உற்பத்தி நாச மில்லாதவனாகவும், சுரேசனாகவும், திரிகுணசொரூபனாகவும், நிர்மலனாகவும், ஹரனாகவும், சம்சாரதாரகனாகவும், நித்யனாகவும், சிருட்டி ஸ்திதி லயங்களுக்குக் காரணனாகவுஞ் சொல்லுகின்றார்கள். சிலர் விஷ்ணு மூர்த்தியை, எல்லாருக்கும் பிரபுவென்றும், ஈஸ்வரன், பரமாத்மா, நாசமில்லாதவன், சர்வசத்திகளோடு கூடினவன், போக மோக்ஷ பதங்களைக்கொடுக்கின்றவன், சாந்தன், எல்லாவற்றிற்கும் ஆதியானவன், எங்கும் பார்வையுடையவன், வியாபகன், பிரபஞ்சத்தினால் சரணமடையத்தக்கவன், அநாதியானவனென்றுங் கூறுகின்றனர். சிலர் பிரஹ்மாவை, "தத்" என்கிறபதத்துக்குரிய பரமாத்மசொரூபன், சிருட்டிகாரணன், சர்வவேத்தா (எல்லாமறிந்தவன்) சர்வபூதப்பிரவர்த்தகன், சதுர்முகன், சுரேசானன், நாபீபத்மபவன், வீபு, சர்வலோகசிருட்டா, சத்தியலோகவாசி என்றுங் கூறுகின்றனர். வேதவித்துக்களான இன்னுஞ்சிலர் சூரியனை சர்வேஸ்வரனென்று காலைமாலைகளிற் சோம்பலில்லாதவர்களாய்த் தோத்திரமுங்கான முஞ்செய்கின்றார்கள். சிலர் சதகிருது (நூறு யாகஞ்செய்தவன்) ஆகிய இந்திரனை, ஆயிரங்கண்ணன், தேவதேவேசன், யாவருக்கும்பிரபு, யஜ்ஞங்களால் பூஜிக்கத்தக்கவன், ·தேவர்களால் பூஜிக்கத்தக்கவன், திரிலோகாதிபதி, எஜ்ஞபோக்தா, சோமப என்னும் யாகஞ் செய்கின்றவர்களிடத்தில் பிரீதியுடையவன் என்று யாகமுகத்தில் துதிக்கின்றனர். சிலர் அவ்வண்ணமே வருணனையும், சோமனையும், அக்கினியையும், வாயுவையும், தனத்தைக்கொடுக்கிற குபேரனையும், சிலர் சர்வகாரியசித்தியை யுண்டுபண்ணத் தக்கவராயும், நினைத்தமாத்திரத்தில் அணிமாதி சித்திகளைச் சித்தி பண்ணுகிறவராயும், எல்லாராலும் விரும்பப்பட்டவராயும், விரும்பினபொருளைக் கொடுப்பவராயும், விரும்பினவருள்ளத்தை யடைகிறவராயும், யானைமுகத்தையுடையவராயும் விளங்கும் விநாயகரையும், பரம்பொருளென்று சொல்லுகின்றனர். சிலபெரியோர்கள் பவானியைச் சகலசம்பத்தையுங் கொடுக்கவல்லவளென்று சொல்லுகின்றனர். பலர்பேக்ஷையுடைய சிலர் ஆதிமாயையாகிய மகாசத்தியே-பிரகிருதி சீவர்களை அநுசரிக்கின்றவள், பிரஹ்மைக்கிய யிருக்கின்றவள், அவளே சிருஷ்டி திதி லயகாரணி, சர்வபூதகாரணி, சர்வபூதங்கட்கு மாதா, அநாதியானவள், நாசமில்லாதவன், பரிபூரண வியாபினி, சர்வலோகங்கட்கும் ஈஸ்வரி நிர்க்குணை, சகுணை, சிவை, வைஷ்ணவி, சங்கரி, பிராம்ஹி, வாசவி (இந்திராணி) வாருணி, வராகி, நாரசிம்ஹி, மகாலக்ஷ்மி, வேதமாதா, ஏகை, வித்தை, பவதரை (பிறவியை நிவிர்த்திசெய்கின்றவள்) சாஸ்வதை, சர்வதுக்கங்களையும் போக்கடிக்கிறவள், போக காமிகள் ஸ்தோத்திரஞ்செய்த மாத்திரத்தில் சர்வபோகங்களையும் கொடுக்கிறவள், மோக்ஷகாமிகளுக்கு

மோக்ஷத்தைக் கொடுப்பவள், யார் எந்தபலனை யபேக்ஷிக் கின்றார்களோ அந்த பலனை யுண்டுபண்ணுகிறவள், திரிகுணாதீதரூபை, அநேக குணங்களை யுடையவள், நிர்க்குணை, சகுணை, என்று தியானஞ்செய்கின்றார்கள். முனீஸ்வரர்கள் பிரஹ்மத்தை, நிரஞ்சனம், நிராகாரம், நிர்லேபம், நீர்க்குணம், அரூபம், வியாபகம், என்று சொல்லுகிறார்கள். சிலர் வேதோபநிஷத்துக்களில் தேஜோமயமாயுள்ளதே பரமென்றுசொல்லப் பட்டதாகச் சொல்லுகிறார்கள். சிலர் அந்தப்பரமபுரஷன் அநேகஞ்சிரசுகள் அநேக முகங்கள் அநேகங்கண்கள், அநேகங்காதுகள், அநேகங்கைகள், அநேகங்கால்களோடு கூடினவனென்றும், உத்தமமான விஷ்ணுபதமென்றும், விராஜம், (பிரகாசமுள்ளதென்றும்) ரஜோகுணமில்லாததென்றும், சாந்தமுள்ளதென்றும், சொல்லுகிறார்கள். பெரியோரானசிலர் புருடோத்தமனே என்று சொல்லுகிறார்கள். சிலர் பிரபுவாகிய ஈஸ்வரன் ஒருவன் தானென்றும், சிலர் இந்தப் பிரமாண்டமெல்லாம் ஈஸ்வரனையுடையதல்ல வென்றும். சிலர் மனதுக்கு எட்டாததாகிய இந்த ஜகத்து ஈஸ்வரனிடத்தி லிருந்துண்டானதென்றும், இந்த ஜகத்து ஈஸ்வரனைக் கர்த்தாலா கவுடையதன்று என்றும், இந்த ஜகத்து தனக்குத் தானே உண்டானது என்றும், இந்த ஜகத்துக்குப் புருஷனும் கர்த்தாவனது, பிரகிருதியும் கர்த்தாவன்று என்றும், சரங்கியரும் கபிலர் முதலிய ரிஷிகளும் சொல்லுகிறார்கள். இப்பொழுது சொல்லிவந்தவைகளும் இவைபோன்ற சிலபக்ஷங்களும் சந்தேகங்களை அநேகமாக உண்டுபண்ணுகின்றன.

(சுசு-ருO) ஓ முனீஸ்வரரே! என்னுடைய மனது இவ்விதமான வேற்றுமைகளால் நாசத்தையடைகிறது. என்னசெய்வேன். இதுவன்றி என்னுடைய மனது தர்மாதர்ம விசாரத்திலும் ஸ்திரத்தை யடையவில்லை. தர்மம் எது? அது எப்படிப்பட்டது தர்மத்தினுடைய லக்ஷணம் எப்படி? யாதொரு அடையாளமுங் காணப்படவில்லை. ஏனென்றால் சர்வகுண சம்பன்னராயும், சத்ய தர்ம குணங்களையுடையவராயுமிருக்கின்ற தேவர்களும் பீடிக்கப் படுகின்றார்கள். பரபோதப்நநராயும், அதன்மமார்க்கத்தி லிருப்பவராகியுமிருக்கின்ற தானவர்களும் பீடிக்கப்படுகின்றார்கள். என்னுடைய வம்சத்திலுண்டானவராயும், தருமமார்க்கப்பிரவர்த் தகராயும், சதாசாரத்தோடுங் கூடினவராயுமிருந்த பாண்டவர்களும் அநேகவிதமான துக்கத்தை யடைந்தனர். இவ்வாறு யாவரும் துக்கத்தையே யடைந்தவர்களாகக் காணப்படுகையால் தருமம் என்ன சிறப்புடையது. அதர்மம் என்ன இழிவுடையது ஆகையால் என்னுடைய மனது இவ்விதமான சமயத்தில் மிகவும் அலைகிறது. ஓ முனிவரே! நீர் சமர்த்தராகையால் என்னுடையமனதிற் றோன்றியிருக்குஞ் இச்சந்தேகங்களெல்லாஞ் சிறிது மில்லாமற் செய்யும். அஞ்ஞான மென்கிற கலங்கிய ஜலமயமாகிய ஸம்ஸாரஸாகரத்தில் மக்னனாய் வீழ்ந்து கிடக்கின்ற என்னை ஞானமாகிய தெப்பத்தி லேற்றிப் பிழைக்கச்செய்வீர் என்றனர்.

தேவீபாகவதாவதரணம்

அத்தியாயம் (2)

வியாசர் கூறுகின்றார் : ஓ பெருந்தோளனே! நீ எந்தெந்தக் கேள்விகளை இப்பொழுது கேட்டனையோ, அவையெல்லாம் நான் முன்னர் நாரதரைக் கேட்டிருக்கின்றே னென்றேனல்லவா? அவர், ஓ வியாசரே! இப்பொழுது உமக்கு என்ன சந்தேகங்கள் தோன்றிக் கவலைக்கிடஞ் செய்கின்றனவோ, அவைகள் பூர்வத்தில் எனக்குந் தோன்றிப் பெருவெள்ளமாய் என்னை யலமறச்செய்தன. அவற்றைப் போக்க பிரமலோகமடைந்து என்னுடைய பிதாவாயும், மஹாதேஜஸ்வியாயும் பிரகாசிக்கும் பிரம்மாவைப் பணிந்து, ஓ பிரபஞ்ச சொரூபியே! ஜகந்நாயகனே! இப்பிரமாண்டம் எங்கிருந்து தோன்றியது? இது உம்மால் உண்டாக்கப்பட்டதா? விஷ்ணுவினா லுண்டாக்கப்பட்டதா? அல்லது ருத்திரராலே உண்டாக்கப்பட்டதா? உங்கள் மூவருள் பூஜிக்கத் தக்கவரும் ஸர்வசிரேஷ்டரும், ஸர்வ வியாபகருமாயுள்ளவர் எவர்? இவற்றுக்கு விடை கூறும். கூறுவதிலெனக்குச் சந்தேகந் தோன்றாதிருக்க விடை கூறும். கூறுவதிலெனக்குச் சந்தேகந் தோன்றாதிருக்க வேண்டும். யான் துக்கரூபமாயும் பொய்யானதாயுமிருக்கின்ற ஸம்சாரபந்தத்தில் மூழ்கினவனாக விருக்கின்றேன். என் மனமோ சந்தேகமென்கின்ற ஒரு சிவிகையின் மேலேறி நிலைபெறாது தெப்பம்போ ல்லைகின்றது. நாடோறுஞ் செய்வதாகிய தீர்த்த ஸ்நானங்களாலேயும் வேதாத்தியயனங்களாலேயும், இதுபோன்ற பல சத்கருமாதிகளாலேயும், உபசாந்தியடைகிறதில்லை. ஏனென்றால் என் மனமானது யாரைத் தியானிக்கின்றது, யாரைச் சரணாகதி யடைகிறது? யாரைப் பத்திர புஷ்பங்களால் அருச்சிக்கிறது, யாரைத் தோத்திரஞ் செய்கிறது, ஜகத் காரணர்களாயிருக்கின்ற கர்த்தாக்களுக்கு ஈஸ்வரனாகவிருக்கின்றவர் யார் என்று நானாத்வமாய் விரிந்து ஒன்றிலுந் தெளிவின்றி ஒன்றைப்பற்றிச் செய்யுஞ் செயலுமின்றி வருந்துகின்றது, என்று கேட்டேன். ஓ சத்யவதியினுடைய புத்திரரே! நான் கேட்டதாகிய இக் கேள்விகள் சாமான்யர்களால் சொல்லக்கூடியவையா? அன்று. ஸர்வலோக சிரேஷ்டராகிய பிரம்மாவானவர் என்னைப் பார்த்து விடை கூறத் தலைப்பட்டனர் :

ஓ நாரதா! இந்த உத்தமமாகிய கேள்விகளினுடைய நிச்சயார்த்தம் என்னாலும் விஷ்ணுமூர்த்தியாலும் அறியக்கூடாததாயிருக்க இது விஷயத்தை உன்னாலே அறியக்கூடியதா? அதனுண்மையை நான் என்ன சொல்லப்போகிறேன்! ஆயினும் ஒருவாறு தெரிந்தவளவிற்

சொல்லுகிறேன். ஓ அறிவிற் சிறந்தவனே! ஸம்ஸாரத்தில் ஆசையுடையவன் இவ்வுண்மையை யறியமாட்டான். ஆனால் அறியத் தக்கவன் யாவனென்றால் தாபத்திரயமில்லாதவனும், பற்றற்றவனும், விரக்தனுமா யுள்ளவனெவனோ அவனே யறியத்தக்கவன். பூர்வத்தில் வெள்ளமாகத் தோன்றிய ஓர் ஜலப்பிரளயத்தில் தாவர ஜங்கமங்களெல்லாம் நாசத்தை யடைந்தன. அப்பொழுது கமலத்திற் பிறந்த நானொருவன் தானிருந்தேன். சந்திர சூரியர்களையும் விருக்ஷசமூகங்களையும் பர்வதாதிகளையும் பார்க்கவில்லை. அச்சமயத்தில் நான் அக்கமலப் பொகுட்டிலிருந்து மனதிலொருவிதமாகச் சிந்தித்தேன். மஹார்ணவமாயிருக்கின்ற இவ்வெள்ளத்தில் நாம் யாவராலுண்டாக்கப்பட்டோம்? நம்மை இவ்வெள்ளத்தில் காக்கின்றவர் யார்? யுகமுடிவில் நம்மை யொடுக்கிக் கொள்ளுகிற பிரபு யார்? பூமியானது இப்பொழுது தோன்றவேயில்லை; இவ்வெள்ளம், எதனை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது? நமக்காதாரமாயுள்ள இந்தப் பங்கஜமும் எதனை ஆதாரமாகக் கொண்டு தோன்றியது? பங்கஜத்துக்கு மூலம் சேரல்லவா? அதற்கு மூலம் பூமியல்லவா? ஆகையால் நாம் பூமியைக் கண்டு பிடிப்போமானால் சேற்றையுங் காணலாம். நாமிதனைக் கண்டு பிடிக்கவேண்டியது அவசியந்தானே என்று நிச்சயித்துப் பூமியினெல்லையைக் காணவேண்டி அவர்களால் அவ்வெள்ளத்தைத் தாண்டித்தாண்டி அநேக ஆண்டாகச் சென்றும் பூமியைக் காணாமற்போயினேன். அப்பொழுது ஆகாயத்தில் நீ தவஞ்செய்யக் கடவாயென்று ஒரு வாக்கெழுந்தது. அதுபோலவே நான் இத்தாமரைக் கமலத்திலேயே ஆயிரம் வருஷந் தவஞ் செய்துவந்தேன். அப்படித் தவஞ்செய்து வரும்பொழுது மீளவும்முன்போல் ஆகாயத்தில் நீ சிருஷ்டிசெய் என்று ஒரு வாக்குண்டாயது. அதனைக்கேட்ட நான் எதனைச் சிருஷ்டிக்கிறது, ஒன்றையுங் காணோமே, என்ன செய்கிறதென்று மயங்கினேன். அப்பொழுது அதிபயங்கர ரூபிகளான மதுகைடபரென்கிற அசுரர்கள் அதிசீக்கிரத்தி லென்னைச் சமீபித்தார்கள். அவ்வெள்ளத்தில் யுத்த நிமித்தமாய்ப் பீடிக்கப்பட்டேன். பின்னர் நான் தாமரையின் நாளத்தைப் பிடித்துக் கொண்டு வெள்ளத்திலிறங்கினேன். அவ்விடத்தில் பரமாற்புதனாயும், மேகஸ்யாமள வர்ணனாயும், பீதாம்பரதாரியாயும், சதுர்புஜராயும், சேஷ சயனராயும், துளபமாலை யணிந்தவராயும் சங்குசக்ரகதாபத்மதாரியாயும், ஜகந்நாதராயு மிருக்கின்ற விஷ்ணுமூர்த்தியைக் கண்டேன். அம்மகாபுருஷர் சேஷனாகிய படுக்கையில் யோகநித்திரையோடு கூடினவராய், அதில் அசை வில்லாதவராய், அதைவிட்டு நீங்காதவரா யிருக்கின்றதைப் பார்த்து, ஓ நாரதனே! அப்பொழுது எனக்கு இது செய்ய வேண்டுமென்று

ஓர் அற்புதமாகிய சிந்தனை உண்டாகி நித்திரா சொரூபிணியாகிய தேவியைத் தியானித்தேன். (11-25)

சிந்திப்பதற்குக் கூடாததாயுள்ள திவ்ய தேஜஸ்வினியாயும், திவ்ய மங்களையாயுமுள்ள அந்தத் தேவியானவள் விஷ்ணு மூர்த்தியினுடைய திருமேனியினின்றும் வெளிப்பட்டு ஆகாயத்தில் பிரகாசித்து நின்றனள். அப்பொழுது திருமால் அச்சக்தியினின்றும் விடுபட்டவராய் திவ்யதேஜஸோடுங் கூடி எழுந்திருந்து மதுகைடபரோடு ஐயாயிர வருஷம் யுத்தஞ்செய்து பளபளப்போடு கூடிய கட்கத்தினாற் சங்கரித்தனர். அவர்களிறந்துபோன பின்னர் நானும் நாராயணருமாக இருந்தோம். எங்கள் மத்தியில் ருத்திரமூர்த்தியும் தோன்றினார். அப்பொழுது எங்கள் மூவராலே பார்க்கப்பட்டவளாயும், நின்மலையாயும், மனோகரையாயும், துதிக்கப் பட்டவளாயுமுள்ள மகாசக்தியாகிய தேவியானவள் சந்தோஷ சித்தர்களாயிருக்கின்ற எங்களைக் கருணாகடாக்ஷம் செய்து, ஓ பிரமவிஷ்ணு ருத்திரர்களே! இவ்வசுரர்கள் சங்கரிக்கப் பட்டார்களல்லவா? இனி நீங்கள் முயற்சியுடையவர்களாய் உங்களுக்குரிய சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரங்களை நடத்தி, உங்களுடைய பதவிகளில் சுவஸ்த சித்தர்களாக வசியுங்கள். நீங்களே எல்லாப் பிரஜைகளையும் சராயுஜ முதலிய நான்கு பிரகாரமாகச் சிருஷ்டித்து கன்மங்களைப் போக்குங்கள் என்றனுக்கிரகஞ் செய்தனள். அந்த மஹாதேவியினுடைய சுகப்பிரதமாயும் மிருதுவாயும் ஸ்பஷ்டமாயுமுள்ள அந்த வார்த்தைகளைக் கேட்டு, ஹே அம்ப! விஸ்தாரமாயிருக்கின்ற பூமியோ காணப்படவில்லை. இந்த ஜலந்தா னெங்கும் விஸ்தரித்திருக்கின்றது. பிரஜைகளெங்கே? நாங்களெப்படி சிருஷ்டிப்போம்? சிருஷ்டிப்பதற்கும் சாமர்த்தியமில்லாதவர் களாயிருக்கின்றோம் என்று அத்தேவியைப் பார்த்துச் சொன்னோம். எங்களுடைய வார்த்தையைக் கேட்டு தேவி புன்சிரிப்புடையவளாய் திவ்யப் பிரகாசத்தோடுங் கூடிய ஒரு விமானம் ஆகாயத்தினின்றும் வரச்செய்து எங்களைப் பார்த்து, நீங்கள் மூவரும் பயமில்லாதவர்களாய் இந்த விமானத்தில் நன்றாயுட்காருங்கள். இப்பொழுது சில அற்புதங்களைக் காட்டுகிறேனென்றாள். நாங்கள் மூவரும் அத்தேவியின் வார்த்தையைக் கேட்டு பிரணவாத்மகமாயிருக்கின்ற அப்பகவதியைத் தியானித்து இரத்னகசிதமாயும், முத்துமாலைகளோடு கூடினதாயும், கண்டாமணிகளால் சப்திக்கப்பட்டதாயும் தெய்வக்கிரகம் போலுள்ளதாயும், ரமணீயமாயுமிருக்கின்ற விமானத்தில் சங்கையில்லாமல் இந்திரிய நிக்ரஹ முடையவர்களா யுட்கார்ந்தோம். அப்பொழுது தேவி தன்னுடைய சக்தியினால் ஆகாயத்தில் விமானத்தைத் தூண்டினாள். (26-40)

பிரஹ்மாதீனாம் புவநேஸ்வரீ சந்தர்சனம்

அத்தியாயம் (3)

வியாசர் கூறுகின்றார் : ஓ அரசனே! இனி புவனேஸ்வரியாகிய அத்தேவி அவர்களுக்குக் காட்சி கொடுத்த மஹிமாதிசயங்களைக் கூறுகிறேன், கேட்பாயாக.

மனோவேகத்தையுடைய அவ்விமானத்தைத் தூண்டவும் அது ஓரிடத்திற்போய்ச் சேர்ந்தது. அவ்விடத்தில் ஜலத்தைப் பார்க்க முடியவில்லை. விஸ்தாரமாய்ப் பரவியிருக்கின்ற பூமியையும், அதில் பத்திரபுஷ்ப பலங்களோடு கூடினதாயும், குயில்களுடைய ஓசைகள் நிறைந்துள்ளதாயும், செழுமையோடு கூடினதாயுமுள்ள விருக்ஷங்கள், பர்வதங்கள், வனங்கள், உத்யானவனங்கள், நதிகள், கானாறுகள், நடபாவிகள், கிணறுகள், தடாகங்கள், குட்டைகள் முதலியவற்றையும், மிருகங்களையும், புருஷர்களையும், ஸ்திரீகளையும், திவ்யப்பிராகாரங்களா லலங்கரிக்கப்பட்டும் அநேக கிருகங்களால் அழகுசெய்யப் பெற்றும் யக்ஞசாலைகளால் நிறையப்பெற்றும் பிரகாசிக்கின்ற, பார்ப்போரது மனத்தைக் கிரகிக்கும் ரம்யமாகிய, நகரத்தையும் அங்கு வேட்டையாடி வருகிற தேவசமானனாகிய ஓர் அரசனையும் பார்த்து, அந்தோ! ஜலமன்றி வேறறியாத நாம் இவ்வற்புதங்களை எவ்வாறு காணப்பெற்றோமென்கிற அடங்காத வதிசயமும், நாம்கண்ட இந்நகரம் மஹாற்புதமாகிய சுவர்க்கமல்லவா? இது யாராலே நிருமிக்கப்பட்டது என்கிற ஐயமும் எங்கள் மனதிற்றோன்றியது. அப்பொழுது எங்களுக்கெதிரில் அந்தரத்தில் முன் காட்சிகொடுத்த தேவி மீளவும் யாங்கள் காணக் காட்சி கொடுத்தனள். அத்தேவியைப் பார்ப்பதற்கு முன் ஆகாயத்தில் வாயுமண்டலத்தில் ஸஞ்சரிக்கின்ற எங்கள் விமானம் ஒரு முகூர்த்த காலத்துக்குள் மிகவும் மனோகரமாகிய மற்றோரிடத்திற் சென்றது. அந்த விடத்தைப் பார்த்தோம். (1-7)

அவ்விடத்தில் நந்தவமொன்றும், அவ்வனத்தில் பாரிஜாத விருக்ஷ நிழலில் காமதேனுவும், அக்காமதேனுவினுடைய சமீபத்தில் நான்கு தந்தங்களோடு கூடிய ஐராவதமும் அவ்விடத்திலேயே ஆடல் பாடல் அபிநயங்களோடு கூடிய நாட்டிய விசேஷங்களால் கிரீடித்துக் கொண்டிருக்கிற மேனகை முதலிய அப்ஸர ஸ்திரீகளுடைய சமூகங்களும், மந்தார விருக்ஷத்தின் மத்தியில் பாடிக்கொண்டு ரமித்திருக்கிற அநேக யக்ஷ வித்யாதர கந்தரு வரும், அவ்விடத்தில் சசி சமேதனாயிருக்கின்ற இந்திரன், வருணன், குபேரன், யமதருமன், சூர்யமூர்த்தி, அக்னி மற்றுமுள்ள தேவர்கள் முதலியோரும்

இருக்கப்பார்த்து ஆச்சரியமுடையவராயினோம். அப்பொழுது அந்த திவ்யாலங்காரத்தோடு கூடிய சுவர்க்கத்தினின்றும் இந்திரனைப்போல் மகாதீரனாகிய ஒரு அரசன் வெளிப்பட்டு மானிடர் சஞ்சரிக்கும் பூமியில் நின்றனன். அவனை இன்னானென்று அறிவதற்குமுன் எங்கள் விமானம் மகாவேகத்தோடு மற்றொரிடஞ் சென்றது. அங்கு பிரமனுலகமும், பிரமன் சபையும், அச்சபையில் சர்வதேவதைகளால் நமஸ்கரிக்கத்தக்கவனாயிருக்கின்ற பிரமனும் இருக்கக் கண்டோம். அவனைச் சூழ்ந்து வேதங்களும் வேதாங்கங்களும், தெய்வ வடிவங்கொண்டிருந்தன. இவைகளேயன்றி கடல்கள், நதிகள், பர்வதங்கள், தேவசர்ப்பங்கள், அஷ்டநாகங்கள் முதலியவைகளும் உருக்கொண்டிருந்தன. அப்பொழுது அரனாரும், அரியும் அந்தச் சபையையும், பிரமனையும் பார்த்து அதிசயமடைந்து என்னைப் பார்த்து சதுர்முகத்தோடிருக்கின்ற இந்தப் பிரம்மா யாரென்றார். அப்பொழுது சிருஷ்டி கர்த்தாவாகிய இவர் யாரோ நானறியேனென்றேன். பின்னர் நான் என் மனதில் நாமார், நமக்கு மேற்பட்டவர்களாய் நம்முடனிருக்கின்ற இந்த அரி அரர் யார்? இந்தப் பிரமனும் இவனுக்கு முன்கண்ட இந்திரனும் இவருலகமும் நமக்குத் தோன்றுகின்றன வல்லவா? இது சித்தப்பிரமையோ அல்லது உண்மையோவென்று சிந்தித்திருக்கும்பொழுது விமானம் மற்றோரிடஞ் சென்றது. (8-18)

அவ்விடம் அநேக யக்ஷர்களாலே வசிக்கப்பட்டதாயும், கிளிகுயில் முதலிய பக்ஷி ஜாதிகளால் சப்திக்கப்பட்டதாயும், வீணை மிருதங்கம் முதலிய வாத்தியங்களால் கோஷிக்கப்பட்டதாயும், சுகப்பிரதமாயும், மங்களகரமாயும், ரமணீயமாயுமிருக்கின்ற ஸ்ரீ கைலாயங் காணப்பட்டது. நாங்கள் போன அச்சமயத்தில் திவ்யமங்களமாகிய ஆலயத்தினின்றும் திரிநேத்திரதரராயும், பஞ்சமுகத்தோடுங் கூடினவராயும், தசக்கரங்களை யுடையவராயும், சந்திரசேகரராயும், வியாக்ரசர்மத்தை அந்தரீயம் (இடையில்) உடுத்தவராயும் கஜசர்மத்தை உத்தரீயமாக வுடையவராயும் பிரகாசிக்கின்ற பகவானாகிய சம்பு விருஷபாரூடராய் வெளி வந்தனர். அவரது வலமிடங்களில் மகாவீரராகிய கஜானனரும் ஷடானனருமாகிய இரண்டு புத்திரரும் வந்தனர். பின்புறத்தில் நந்திதேவர் முதலிய பிரமதகணங்கள் ஜயஜய வென்று கோஷித்துக் கொண்டு வந்தனர். ஓ நாரதனே! அந்தச்சங்கரரை நாங்கள் மூவரும் பார்த்து ஆச்சரியமடைந்தோம். பின்னர் அவ்விடத்தில் பராசக்தியின் அம்சபூதங்களா யிருக்கின்ற சக்திபேதங்களைக் கண்டு ஸம்சயசித்தராயிருந்தோம். அப்பொழுது வாயுவேகத் தோடுங் கூடிய எங்கள் விமானம் அப்புறஞ்சென்றது. (19-25)

அவ்விடமோ வைகுண்டம். ஓ நாரதனே! நாராயணருடைய ஆஸ்தானமாகிய அவ்வைகுண்டத்தில் மனசினால் இத்தன்மைத் தென்று யூகித்தற்கும் அரிதான சம்பத்துக்கள் காணப்பட்டன. ஸர்வசிலாக்கியமாகிய வைகுண்டத்தில் விமானத்திலிருந்த நாரா யணரைப்பார்த்து ஆச்சரியமடைந்தோம். அச்சமயத்தில் அங்கிருந்த கமலாக்ஷராகிய விஷ்ணுமூர்த்தி எழுந்தருளி அங்குள்ள மகாமண்டபத்தின் முன்னேவந்தனர். சாயாம்பு வண்ணராயும், பீதாம்பரதாரியாயும், சதுர்ப்புஜராயும், திவ்யாபரணாலங்கிருதராயும், கருடவாகனாரூடராயும், லக்ஷ்மிதேவியினால் சாமரை வீசப்பட்டவராயும், ஆதியாயுமிருக்கின்ற அவ்விஷ்ணுமூர்த்தியைக் கண்டோம். கண்ட நாங்கள் ஆச்சரியமடைந்து அவ்விமானத்திலிருந்த வண்ணமாகவே ஒருவரையொருவர் பார்த்து இப்படியும் உண்டோவென்றெண்ணும்பொழுது வாயுவேகமாய் எங்கள் விமானம் மோதுகின்ற அலைகளோடு கூடினதாயும் அநேகவிதமான ஜலசரங்களால் நிறைந்துள்ளதாயுமுள்ள திருப்பாற்கடலை யடைந்தது. (26-30)

அக்கடல் நடுவில் ஒரு த்வீபம் எங்களுக்குத் தூரத்தில் காணப்பட்டது. அது மந்தாரம், பாரிஜாதம், மகிழம், மருதாணி, தாழை, சண்பகம் முதலிய விருக்ஷங்களால் சூழப்பட்டதாயும், அவ்விருக்ஷங்களில் மலர்ந்த புஷ்ப கந்தங்களால் நிறையப்பெற்ற தாயும், வண்டுகளுடைய ரீங்காரத் தொனியும் குயிலோசையும் நீங்கப் பெற்றிலதாயும் விளங்கிற்று. அச்சோலையின் மத்தியில் கட்டிலொன்று காணப்பட்டது. அக்கட்டில் பரமாற்புதமாயும், மங்கள சொரூபமாயும், ரமணீயமாயும், ரத்னங்களா லிழைக்கப் பட்டதாயும் அநேகவித ரத்னமாலைகளா லலங்கரிக்கப்பட்டதாயும், ஆஸ்தரணம் (நானாவித மெத்தைகளால்) அடுக்கிடப்பட்ட தாயும் அநேகவிதமான சித்ரங்களால் சித்திரிக்கப்பட்டதாயும், இன்னும் சொல்வதற்கெட்டாத அலங்காரவகைகளால் நிறைந்துள்ள தாயும் இந்திர தனுசைப்போல் மேற் கட்டினை யுடையதாயும், நானாவிதமான திரைச்சீலைகளோடு கூடினதாயும் கோடி சூர்யப்பிரகாசமாகப் பிரகாசித்தது. (31-36)

சிலாக்கியமாகிய அக்கட்டிலில் மகாபூஜ்யையாகிய தேவீ விற்றிருந்தனள். நாங்கள் எவ்வாறு வீற்றிருக்கக் கண்டோமென்றால் சிவந்த நிறமுள்ள வஸ்திரமும், சந்தனப்பூச்சும் உடையவளாயும், சிவந்த நேத்திரங்களுடையவளாயும், கோடி மின்னல்கள் மின்னுவதுபோல் பளபளப்புடன் பிரகாசிக்கின்ற தேஜோரூபியாயும், சிவந்த தந்தவரிசையோடுகூடிய அதரத்தை யுடையவளாயும், ஆநந்தகரமாகிய முகமண்டலத்தையுடைய வளாயும், கோடி லக்ஷ்மிகளை ஒப்பிடுவதற்குக்கூடாத மங்களத்தை யுடையவளாயும்,

சூரியபிம்பம் போலொளிவிடுகின்ற காந்தியை யுடையவளாயும், அபயம் வரதம் பாசம் அங்குசம் இவற்றை தரித்தவளாயும், ஹ்ரீங்காரமாகிய சக்திபீஜத்தை உச்சரிக்கின்ற பக்ஷிசமூகங்களோடு கூடினவளாயும், சிவந்தநிறமுடைய கருணா மூர்த்தியாயும், பாலையாயும், புதிய யௌவனத்தை உடைய வளாயும், சர்வாலங்காரத்தோடு கூடினவளாயும், புன்னகை யோடுகூடிய முகபங்கஜத்தை உடையவளாயும், சுவர்ணமயமாகிய அங்கதம் கேயூரம் கிரீடம் முதலியவைகளால் அழகுபெற்றவளாயும், பருத்திறுமாந்து தாமரை யரும்பைவென்று பிரகாசிக்கின்ற தனபாரங்களை யுடையவளாயும் நானாவிதமான ரத்னா பரணங்களால் பிரகாசிக்கின்றவளாயும், ஸ்ரீ சக்ரரூபமாயிருக்கின்ற தாடங்கமாகிய காதோலையினால் பிரகாசிக்கின்ற முகார விந்தத்தையுடையவளாயும், ஹ்ருல்லேகை புவனேசி என்கிற நாமங்களை யுச்சரிப்பதில் அன்புடையவர்களா யிருக்கின்ற ஹ்ருல் லேகை முதலிய நாமங்களைப்பெற்ற தேவகன்னிகைகளாலும் அனங்கசூக்ஷ்மை முதலியவர்களாலும் சூழப்பட்டவளாயும், புன்னகையினா லலங்கரிக்கப்பட்ட வாக்குடையவளாயும், சுந்தரவதியாயும், எப்பொழுதும் யாவராலும் கண்டறியாதவளாயுமுள்ள தேவி யந்திரராஜமாய் அஷ்டகோணவடிவமாய் விளங்கும் ஸ்ரீ சக்ரமாகிய பீடத்தின்மேல் வீற்றிருக்கக் கண்டோம். அப்பொழுது நாங்கள் அந்த மகாதேவியைப் பார்த்து ஆச்சர்யமடைந்தவர்களாய் தேவி யென்றறியாது, இந்த ஸ்திரீ யார்? இவள் என்ன பேருடையவள்? ஒன்றுந்தெரியவில்லையே! அன்றியும் இந்த ஸ்திரீ ஸ்திரீயாகத் தோன்றவில்லை. அநேகமுகங்களை யுடையவளாயும் அநேக நேத்திரங்களை யுடையவளாயும் அநேக கரங்களையுடையவளாயும் தூரத்தில் பிரகாசிக்கின்றாள். இதிற்சந்தேகமில்லை. ஆகையினால் அவள் அப்சரஸ்திரீயுமல்லள்; கந்தர்வஸ்திரீயுமல்லள்; தேவ ஸ்திரீயுமல்லள்; இவள் யாரோவென்று சந்தேகத்தை யடைந்தவர் களாயிருந்தோம். ஓ நாரதனே! அப்பொழுது இந்த விஷ்ணு பகவான் புன்னகையோடு கூடிய அந்தத் தேவியைப் பார்த்துத் தன்னுடைய ஞானவிசேஷத்தினாலே ஜகன்மாதாவென்று நிச்சியத்து எங்களைப் பார்த்து அத்தேவியின் பெருமையைச்சொல்லத்தொடங்கினார்:(37-50)

எங்கும் நிறைந்தவளாயும், அற்பமதியுடையவர்களால் அறிந்தடையப்படாதவளாயும், யோக நிஷ்டையினால் அறிந்தடையத் தக்கவளாயும், நம்மாலறியக்கூடாத அநுக்ரஹ சாமார்த்தியத்தை யுடையவளாயும், நித்யா நித்ய பதார்த்த ஸ்வரூபிணி யாயும், புண்ணியக் குறைவுடையவர்களால் ஆராதிப்பதற்குக் கூடாதவளாயும், தேவியென்கிற சொல்லுக்குப் பொருளாயுள்ள வளாயும்,

ஜகந்நாயகியாயும், நித்யமங்களையாயும், வேதங்களுக்கு உற்பத்தி ஸ்தானமாயும், விசாலமாகிய நேத்திரங்களோடு கூடினவளாயும், எல்லாப்பொருள்களுக்கும் ஆதியானவளாயுமுள்ள இந்த ஈஸ்வரியானவள் ஜகத்பிரளயத்தில் சமஸ்தமாகிய பிரபஞ்சத்தைச் ஸம்ஹரித்து எல்லா வான்மாக்களுடைய சூக்ஷ்ம சரீரங்களைத் தன்னிடத்தி லொடுக்கிக்கொண்டு விளையாடுகிறாள். ஓ பிரமருத்திரர்களே! சர்வபீஜாட்சர சொரூபிணியாகிய இந்தத் தேவியானவள் இப்பொழுது நாம்காணப் பிரகாசிக்கின்றாள். தேவியினுடைய பக்கங்களில் திவ்யாபரணங்களால் அலங்கரிக்கப் பட்டனவளாயும், பல சக்திகள் காணப்படுகின்றார்களல்லவா? அவர்களெல்லாம் அந்தத் தேவியினுடைய அம்சங்களாகும். நாம் தேவியினுடைய இந்த சொரூப தரிசனம் கிடைக்கப்பெற்றோ மாகையால் தன்யராயினோம்; மஹானுபாவராயினோம்; கிருத கிருத்யராயினோம். இவ்வாறாவதற்கு நாம் பூர்வத்தில் நீங்காத முயற்சியினாலே தவஞ் செய்திருப்போம். அந்தத் தவத்தினுடைய உத்தமமான பலன் இந்த சொரூப தரிசனம் கிடைக்கச்செய்தது. இல்லாவிட்டால் இவ்வளவு பிரேமையுடன் இந்தத் தரிசனம் எப்படிக் கிடைக்கப்பெறுவோம்? ஏனென்றால், புண்ய சமூகத்தை யுடையவர்களாயும், பண்டிதர்களாயும், விரதானுஷ்டான பரராயும் இருக்கின்றவர் ஒருகால் ஆசையில் வசப்படுவரானால் அவர்கள் திவ்ய மங்கள சொரூபியாகிய இத்தேவியைத் தரிசிக்கப் பெறுவாரா? பெறார். பரசிவத்தோடு கூடியிருக்கிற இம்மகாதேவி மூலப்பிரகிருதி (காரணமாயுள்ளவள்) ஆகையினால் பிரமாண்டங்களைச் சிருஷ்டித்துப் பரமாத்மாவுக்குக் காண்பிக்கிறாள். ஓ பிரம சங்கரரே! எந்தப் பகவான் எல்லாப் பிரமாண்டங்களையும் தேவ சமூகங்களையும் படைத்துப் பார்க்கின்றாரோ அந்தப் பரமேஸ்வரருக்கு ஸர்வ சொரூபிணியாயும், மகாமாயா சொரூபிணியாயும், எல்லாவற்றிற்குந் தலைவியாயும், சர்வான்மாக்களுக்கும் மங்களத்தை நினைப்பிக்கின்ற வளாயு மிருப்பவள் இந்த தேவியே. இவளுடைய பெருமையைச் சொல்ல நானெவ்வளவினன்? மற்றைய தேவர்கள்தா னெவ்வளவினர்? இந்தப் பரமேஸ்வரியினுடைய லக்ஷம் பாகத்தில் ஒரு பாகத்திற்கேனும் ஒப்பிடும் அளவினையுடையே மல்லோம். மகா சமுத்திரத்தில் நாம் முன் கண்ட சிரேஷ்டமாகிய ஸ்திரீ வடிவமுள்ள இந்த மகா தேவியே வலிமை யுடையதா யசை வற்றுக் கட்டில்போலுள்ள ஆலிலையில் முன் நான் சயனித்தவனாய் காற்பெருவிரலைக் கையாற் பிடித்து வாயில் வைத்துச் சுவைத்து மகிழ்கின்றவனாய் இதுபோலும் பாலப் பருவ விளையாட்டோடுங் கூடினவனாய் மிருதுவாகிய சரீரத்தை யுடையவனா யிருந்தபொழுது என்னைப் பெற்றெடுத்த தாய்போற் பார்த்து யான் கண்ணுறங்கு வதற்குரிய ஊசல் முதலிய பாடல்களைப் பாடுகின்றவளாயும் ஆலிலையாகிய தொட்டிலை ஆட்டுகின்றவளாயு

மிருந்தவளாமென்றறிமின். ஓ பிரமருத்திரர்களே! இப்பொழுது நிச்சயித்த ஞானமானது எனக்குத் தரிசனமாத்திரத்தாலுண்டாயிற்று. ஆகையால் இந்தத் தேவியானவள் நமக்கன்னையாவாள். இன்னமும் என்னால் முன்னனுபவிக்கப்பட்டதைச் சொல்லுகிறேன், கேளுங்கள் என்றனர். (37-50)

மூன்றாவது ஸ்கந்தம் மூன்றாம் அத்தியாயம் முற்றிற்று

———

லப்தாஹங்கார தூர்க்கமாயை நம:

நான்காம் அத்தியாயம்

4. *விஷ்ணு கிருத புவநேஸ்வரி ஸ்துதி

———

ஓமஹரிஷிகாள்! இதுகாறுந் தேவியினால் தூண்டப்பட்ட விமானமானது பிரமன், விஷ்ணு, உருத்திரமூர்த்தி இவர்களுடைய உலகங்களுக்குச் செல்ல அவ்விமானத்திலிருந்த பிரமன் முதலிய மூவரும் அங்கங்குள்ள அற்புத விசேஷங்களையும், பிரமணாதியரை யுங் கண்டதிசயித்ததும், பின்னர் தேவி பிரத்தியக்ஷமாய் வர அவளையறியாது மயங்கிநிற்குங்கால் விஷ்ணுமூர்த்தி அத்தேவியினுடைய பிரபாவத்தைச் சொல்லியதும் ஒறுவாறு எடுத்துச் சொன்னோம். இனி அவ்விஷ்ணுமூர்த்தி அத்தேவியினுடையபுகழை எடுத்துக்கூறியதாகிய அற்புதத்தைக் கூறுகிறேன்; கேட்பீர்களாக.

(க-சு.) பகவானும் ஜகன்னாதனுமாகிய அந்த விஷ்ணுவானவர் இவ்வண்ணம் சொல்லிப் பின்னர் ஓ பிரம ருத்திரர்களே! நாமிந்தத் தேவியினுடைய பக்கங்களிலிருந்து அடிக்கடியும் நமஸ்கரிக்கின்றவராக சந்நிதானத்தையடைவோம். பின்னர் பாதசமீபத்தில் பயமற்றவர்களாய் நின்று ஸ்தோத்திரஞ்செய்வோம். செய்வோமாயின் மகாமாயா சொரூபிணியாகிய இந்தத் தேவியானவள் நமது அபீஷ்டங்களை நிறைவேற்றுவள். ஒருசமயம் துவார பாலகிகளா யிருக்கின்ற ❈ பாங்கியர்கள் நம்மைத் திருவடி ∮ சமீபத்திலிருக்கவொட்டாது தடுப்பார்களாயின் நாம் போகாமல் அவ்விடத்திற்றானே இருந்து ஏகாக்கரசித்த முடையவர்களாய்த் தேவியினது ஸ்தோத்திரங்களைப் படிப்போமென்றார். பின்னர் ஆனந்தக்களிப்புடன் ஏகாக்ர சித்தமுடையவராயும் தேவியினுடைய ⊡ சாமீப்பியத்தையடைவதில் மேன்மேல் சந்தோஷம் பொங்கப் பெற்றவராயும் பிரணவோச்சாரணை செய்து மூவரும் விமானத்தினின்றும் போவதற்குத் தீவிரங்கொண்டனர். அப்பொழுது தேவியானவள் தான் வீற்றிருந்த கட்டிலினின்றும் வெளிவந்து துவாரத்தை யடைந்து புருஷ ரூபமாயிருக்கின்ற எங்களைப் பார்ப்பதற்குத் திருவுளத்தில் மிகவும் சங்கையடைந்து புன்னகையோடு எங்கள் மூவரையும் ஸ்திரீ ரூபமாக்கினாள்-என்று மீண்டும் கூறுகின்றார்.

(எ-உ௬.) நாங்கள் சௌந்தர்ய முடையவர்களாகவும், திவ்யாபரணாலங்கிருதராகவும், யௌவன வதிகளாகவும் ஆயினோம். பின்னர் மூவரும் ஒருவரையொருவர் பார்த்து ஆச்சரியமடைந்து தேவியினுடைய சந்நிதானத்தைச் சங்கையில்லாமற் சமீபித்து அஞ்சலிசெய்து திருவடிநோக்கமாக நின்றனம். எங்களைத் திவ்ய திருமேனியோடுங் கூடியிருக்கின்ற தேவி கருணை நிறைந்திருக்கின்ற கடைக்கண்ணால் கடாக்ஷித்தனள். அக்குறிப்பறிந்து நமஸ் காரஞ்செய்தோம். அப்பொழுது திருவடியைத் தாங்கியிருந்த கோடி சூர்யப்பிரகாசமா யொளிவீசும் ரத்ந பாதுகையைக் கண்டெடுத்து அப்பாதுகை நோக்கமாகவே யிருந்தோம். அப்பொழுது அங்குகண்ட அதிசயங்களைக் கூறுகின்றேன் கேட்பாயாக.

ஓ நாரதனே! அநேகந்தோழிகள் அவ்விடத்தில் சிவந்த ஆடைகளை யுடையவர்களாயும், சிலர் நீல ஆடைகளை யுடையவர் களாயும், சிலர் பீதாம்பர ஆடைகளை யுடையவர்களாயும், சிலர் அழகுடைய சரீரங்களை யுடையவர்களாயும், சிலர் விசித்திரமாகிய ஆபரண ▯ பூஷிதர்களாயும், சிலர் சீலமுடையவர்களாயும், சிலர் அந்தத் தேவியினுடைய பணிவிடைகளை அன்புடையவர்களாய்ச் செய்கின்றவர்களாயும், பக்கங்களிற் சூழ்ந்துவிளங்கினர். இவர்களன்றி சிலவகையான பாங்கியர் பாடுகின்றவராயும், ஆடுகின்றவராயும், வீணைபுள்ளாங்குழல் முதலியவற்றை வாசிக்கின்றவராயும், ஆனந்தமே லிட்டவராயு மிருந்தனர். இவர்கள்செய்தி இங்ஙனநிற்க. பாதுகையோடு கூடியிருந்த தேவியின் பாதத்தில் கண்ணாடிபோற் பிரகாசிக்கின்ற நகமத்தியில் அநேககோடி பிரமாண்டங்களும், அவைகளிலுள்ள சராசரங்களும் பிரமனாதி மூவரும், வாயு, அக்னி, யமன், சூரியன், குளிர்ந்த வருணன், துவஷ்டா, குபேரன், இந்திரன், முதலியோரும், மேருமுதலிய பர்வதங்களும், க்ஷீர முதலிய சமுத்திரங்களும், கங்கைமுதலிய நதிகளும், விசுவாவசு, சித்திரகேது, சுவேதன், சித்திராங்கதன், ஆஹா ஊஹூ முதலிய கந்தருவர்களும், அப் சரஸ்திரீகளும், தும்புரு நாரதர் அஸ்வனி தேவதைகள் வசுக்கள் சாத்தியர்கள் சித்தர்கள் பிதுர் தேவதைகள் முதலியோரும், ஆதிசேஷன் முதலிய மகாநாகங்கள் மற்றுமுள்ள சர்ப்பங்களும், கின்னரரும், அசுரர்களும், வைகுண்டம், பிரமலோகம், மஹாகைலாச முதலியவைகளும் சிருட்டியுட்பட்ட ஏனையவுங் காணப்பட்டன. இவைகளேயன்றி எனக்குற்பத்தி ஸ்தானமாகிய பங்கஜமுங்காணப் பட்டது. அதில் சதுர்முகனாகிய நானும், சேஷசாயியும் ஜகந்நாத னுமாகிய நாராயணனும், மதுகைடபரு மிருக்கக்கண்டோம். இவை களையெல்லாம் பார்த்து மிகவும் சந்தேகமுடையவராய் ஆச்சரிய மடைந்து இத்தேவியே எல்லாவற்றிற்கும் ஆதாரமாக விருக்கின்றா ளென்றறிந்தோம். அதுவரையில் வருடம் எனக்கு நூறாயிற்று. அவ்வளவு காலமும் தேவியினுடைய நகமத்தியிலுள்ள அற்புத விநோதங்களைப் பார்த்துக்கொண்டே அந்த அமிர்த மயமாகியும் சுககரமாயுமிருக்கின்ற அந்த த்வீபத்திலேயே விளையாடிக்கொண்டிருந்தேன். அப்பொழுது எங்கள் மூவரையும் தேவியினுடைய ♈ பாங்கிமார்கள்

ℛ சமீபம் - அருகில் ⁂ சாமீப்பியம் - ஒருபத்வியை ♋ சங்கை - அச்சம்
▯ பூஷிகர் - அலங்கரிப்பு ❄ பாங்கியர்கள் - தோழியர்கள் ✡ சுக - இன்ப
♈ பாங்கிமார்கள் - தோழிமார்கள்

ரூபலாவண்ணிய சவுந்தர்யத்தோடு என்றும் அங்கிருக்கின்ற பாங்கிமார்களென்றே வெண்ணி வேற்றுமையில்லாமல் உறவாடினர். நாங்களும் ஸ்திரீரூபத்தில் அருவருப்பில்லாதவர்களாகவே இருந்தோம். ஏனெனில் தேவியினுடைய தரிசனம் விசேஷங்களும் அவ்விடத்திலுள்ள சிருங்காரமான அற்புத விசேஷங்களும் எங்களுக்குப் பெண்ணுருவம் வராமற்போகுமானால் காணப் பெறுவோமா; ஆகலான் மிகவும் ரமணீயமாகக் கிடைத்த பெண்ணுருவத்தில் மோஹமுடையவர்களாக வேயிருந்தோம். இவ்வண்ண மிருக்குநாளில் ஓர் நாள் விஷ்ணுபகவான் மஹாதேவியாயும் ஸ்ரீ புவனேஸ்வரியாயு மிருக்கின்ற தேவியைத் துதிக்கத் தொடங்கினர்.

நமோ தேவ்யை ப்ரக்ருத்யை ச விதாத்ர்யை ஸததம் நம: |
கல்யாண்யை காமதாயை ச வ்ருத்த்யை ஸித்த்யை நமோ நம: ||
ஸச்சிதாநந்தரூபிண்யை ஸம்ஸாராரண்யே நமோ நம: |
பஞ்சக்ருத்யவிதாத்ர்யை தே புவநேச்யை நமோ நம: ||
ஸர்வாதிஷ்டாநரூபாயை கூடஸ்தாயை நமோ நம: |
அர்த்தமாத்ரார்த்தபூதாயை ஹ்ருல்லேகாயை நமோ நம: ||

ஜ்ஞாதம் மயாகிலமிதம் த்வயி ஸந்நிவிஷ்டம்
த்வத்தோ(அ)ஸ்ய ஸம்பவலயாவபி மாதரத்ய |
சக்திச்ச தே(அ)ஸ்ய கரணே விததப்ரபாவா
ஜ்ஞாதா(அ)துநா ஸகலலோகமயீதி நூநம் ||

விஸ்தார்ய ஸர்வமகிலம் ஸதஸத்விகாரம்
ஸந்தர்சயஸ்யவிகலம் புருஷாய காலே |
தத்த்வைச்ச ஷோடசபிரேவ ச ஸப்தபிச்ச
பாஸீந்த்ரஜாலமிவ ந: கில ரஞ்ஜநாய ||

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible] 34

[illegible] 35

[illegible] 36

[illegible] 37

[illegible] 38

[illegible] 39

[illegible] 40

[illegible] 41

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௪௨

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௪௩

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௪௪

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௪௫

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௪௬

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௪௭

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௪௮

[illegible]
[illegible] ௪௯

நமோ தேவ்யை ப்ரக்ரித்யைஸ்ச விதாத்ர்யை ஸததம் நம:
கல்யாண்யை காமதாயைச வ்ருத்யை ஸத்யை நமோநம:
ஸச்சிதானந்த ரூபிண்யை ஸம்ஸாராயை நமோநம:
பஞ்சக்ருத்ய விதாத்ர்யைதே புவனேஸ்யை நமோநம:
ஸர்வாதிஷ்டான ரூபாயை கூடஸ்தாயை நமோநம:
அர்த்தமாத் ரார்த்தபூதாயை ஹ்ருல்லேகாயை நமோநம:

ஞாதம்மயாகிலமிதம் த்வயிஸந்நிவிஷ்டம்
த்வத்தோஸ்ய ஸம்பவ லயாவபி மாதரத்ய
சக்திச்சதேsஸ்யகரணே விததப்ரபாவா
ஞாதாsதுனம் ஸகலலோக மயீதிநூனம்
விஸ்தார்ய ஸர்வமகிலம் ஸதஸத்விகாரம்
ஸந்தர்சய ஸ்ய விகலம் புருஷாய காலே
தத்வைச்ச ஷோடசிபிரேவச ஸப்தபிஸ்ச
பாஸீந்த்ர ஜாலமிவந: கிலரஞ்ஜநாய
நத்வாம்ருதே கிமபிவஸ்து கதம்விபாதி
வ்யாப்யைவ ஸர்வமகிலம் த்வமவஸ்திதாஸி
சக்திம்விநா வ்யவஹ்ருதௌ புருஷோப்யஸக்தோ
பம்பண்யதே ஜனனிபுத்தி மதாஜநேந
ப்ரீணாஸிவிஸ்வ மகிலம் ஸததம் ப்ரபாவை:
ஸ்வைஸ்தேஜ ஸாசஸகலம் ப்ரகடீகரோஷி
அஸ்த்யேவதேவி தரதாகில கல்பகாலே
கோவேததேவி சரிதம்தவ வைபவஸ்ய
த்ராதா வயம் ஜனனி தே மது கைடபாப்யாம்
லோகச்சதேஸுவிததா: கலுதர்ஸிதாயை
நீதா: ஸுகஸ்ய பவனேபரமாம்கோடிம்
யத்தர்ஸனம் தவபவானி மஹாப்ரபாவம்
நாஹம்பவோநச விரிஞ்சிவிவேத மாத:
கோன்யோஹி வேத்தி சரிதம் தவதுர்வி பாவ்யம்
கானீஹஸந்தி புவநாதி மஹாப்ரபாவே
ஹ்யஸ்மின் பவாநி சரிதேரசநாகலாபே
அஸ்மாபிரத்ர புவனே ஹரிரன்ய ஏவ
த்ருஷ்டஸ்ஸிவ: கமலஜ: ப்ரதிதப்ரபாவ:
அன்யேஷு தேவி புவனேஷு நஸந்தி கிந்தே
கிம்வித்ம தேவிவிததம் தவஸுப்ர பாவம்
யாசேம்sபதேசங்க்ரி கமலம் ப்ரணிபத்ய காமம்
சித்தே ஸதாவஸதுரூப மிதம்த வைதத்

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌹𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌵𑌰𑌃 𑌕𑌿𑌲 𑌤𑍇 𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌾𑌤𑍍
𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑌯𑌂 𑌜𑌨𑌿𑌯𑍁𑌤𑌾 𑌨 𑌯𑌦𑌾 𑌤𑍁 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌃 ।
𑌕𑍇𑌽𑌨𑍍𑌯𑍇 𑌸𑍁𑌰𑌾𑌃 𑌶𑌤𑌮𑌖𑌪𑍍𑌰𑌮𑍁𑌖𑌾𑌶𑍍𑌚 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌃
𑌨𑌿𑌤𑍍𑌯𑌾 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌜𑌨𑌨𑍀 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌃 𑌪𑍁𑌰𑌾𑌣𑌾 ॥ ௪௨

𑌤𑍍𑌵𑌂 𑌚𑍇𑌦𑍍𑌭𑌵𑌾𑌨𑌿 𑌦𑌯𑌸𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌪𑍁𑌰𑌾𑌣𑌂
𑌜𑌾𑌨𑍇𑌽𑌹𑌮𑌦𑍍𑌯 𑌤𑌵 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌿𑌗𑌸𑍍𑌸𑌦𑍈𑌵 ।
𑌨𑍋𑌚𑍇𑌦𑌹𑌂 𑌵𑌿𑌭𑍁𑌰𑌨𑌾𑌦𑌿𑌰𑌨𑍀𑌹 𑌈𑌶𑍋
𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌧𑍀𑌰𑌿𑌤𑌿 𑌤𑌮𑌃𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌃 𑌸𑌦𑍈𑌵 ॥ ௪௩

𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌨𑌨𑍁 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌮𑌤𑌾𑌂 𑌨𑌰𑌾𑌣𑌾𑌂
𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌕𑌿𑌲 𑌶𑌕𑍍𑌤𑌿𑌮𑌤𑌾𑌂 𑌸𑌦𑍈𑌵 ।
𑌤𑍍𑌵𑌂 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌮𑌲𑌾𑌮𑌲𑌤𑍁𑌷𑍍𑌟𑌿𑌰𑍂𑌪𑌾
𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌦𑌾 𑌵𑌿𑌰𑌤𑌿𑌰𑍇𑌵 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌲𑍋𑌕𑍇 ॥ ௪௪

𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑌸𑌿 𑌪𑍍𑌰𑌥𑌮𑌵𑍇𑌦𑌕𑌲𑌾 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵
𑌸𑍍𑌵𑌾𑌹𑌾 𑌸𑍍𑌵𑌧𑌾 𑌭𑌗𑌵𑌤𑍀 𑌸𑌗𑍁𑌣𑌾𑌰𑍍𑌧𑌮𑌾𑌤𑍍𑌰𑌾 ।
𑌆𑌮𑍍𑌨𑌾𑌯 𑌏𑌵 𑌵𑌿𑌹𑌿𑌤𑍋 𑌨𑌿𑌗𑌮𑍋 𑌭𑌵𑌤𑍍𑌯𑌾
𑌸𑌂𑌜𑍀𑌵𑌨𑌾𑌯 𑌸𑌤𑌤𑌂 𑌸𑍁𑌰𑌪𑍂𑌰𑍍𑌵𑌜𑌾𑌨𑌾𑌮𑍍 ॥ ௪௫

𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑌮𑍇𑌵 𑌰𑌚𑌯𑌸𑍍𑌯𑌖𑌿𑌲𑌂 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌂
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌗𑌤𑌾𑌃 𑌖𑌲𑍁 𑌯𑌤𑍋 𑌨𑌨𑍁 𑌜𑍀𑌵𑌭𑌾𑌵𑌮𑍍 ।
𑌅𑌂𑌶𑌾 𑌅𑌨𑌾𑌦𑌿𑌨𑌿𑌧𑌨𑌸𑍍𑌯 𑌕𑌿𑌲𑌾𑌨𑌘𑌸𑍍𑌯
𑌪𑍂𑌰𑍍𑌣𑌾𑌰𑍍𑌣𑌵𑌸𑍍𑌯 𑌵𑌿𑌤𑌤𑌾 𑌹𑌿 𑌯𑌥𑌾 𑌤𑌰𑌂𑌗𑌾𑌃 ॥ ௪௬

𑌜𑍀𑌵𑍋 𑌯𑌦𑌾 𑌤𑍁 𑌪𑌰𑌿𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌤𑌵𑍈𑌵 𑌕𑍃𑌤𑍍𑌯𑌂
𑌤𑍍𑌵𑌂 𑌸𑌂𑌹𑌰𑌸𑍍𑌯𑌖𑌿𑌲𑌮𑍇𑌤𑌦𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑍍 ।
𑌨𑌾𑌟𑍍𑌯𑌂 𑌨𑌟𑍇𑌨 𑌰𑌚𑌿𑌤𑌂 𑌵𑌿𑌤𑌥𑍇𑌽𑌨𑍍𑌤𑌰𑌂𑌗𑍇
𑌕𑌾𑌰𑍍𑌯𑍇 𑌕𑍃𑌤𑍇 𑌵𑌿𑌰𑌮𑌸𑍇 𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌾 ॥ ௪௭

𑌤𑍍𑌰𑌾𑌤𑌾 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌮𑌮 𑌮𑍋𑌹𑌮𑌯𑌾𑌦𑍍𑌭𑌵𑌾𑌬𑍍𑌧𑍇
𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌮𑌮𑍍𑌬𑌿𑌕𑍇 𑌸𑌤𑌤𑌮𑍇𑌮𑌿 𑌮𑌹𑌾𑌰𑍍𑌤𑌿𑌦𑍇 𑌚 ।
𑌰𑌾𑌗𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍍𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑍇 𑌵𑌿𑌤𑌥𑍇 𑌕𑌿𑌲𑌾𑌨𑍍𑌤𑍇
𑌮𑌾𑌮𑍇𑌵 𑌪𑌾𑌹𑌿 𑌬𑌹𑍁𑌦𑍁𑌃𑌖𑌕𑌰𑍇 𑌚 𑌕𑌾𑌲𑍇 ॥ ௪௮

𑌨𑌮𑍋 𑌦𑍇𑌵𑌿 𑌮𑌹𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑍇 𑌨𑌮𑌾𑌮𑌿 𑌚𑌰𑌣𑍌 𑌤𑌵 ।
𑌸𑌦𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌂 𑌮𑍇 𑌦𑍇𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌦𑍇 𑌶𑌿𑌵𑍇 ॥ ௪௯

நமோ தேவ்யை ப்ரக்ரித்யைஸ்ச விதாத்ர்யை ஸததம் நம:
கல்யாண்யை காமதாயைச வ்ருத்யை ஸத்யை நமோநம:
ஸச்சிதானந்த ரூபிண்யை ஸம்ஸாராயை நமோநம:
பஞ்சக்ருத்ய விதாத்ர்யைதே புவனேஸ்யை நமோநம:
ஸர்வாதிஷ்டான ரூபாயை கூடஸ்தாயை நமோநம:
அர்த்தமாத் ரார்த்தபூதாயை ஹ்ருல்லேகாயை நமோநம:

ஞாதம்மயாகிலமிதம் த்வயிஸந்நிவிஷ்டம்
த்வத்தோஸ்ய ஸம்பவ லயாவபி மாதரத்ய
சக்திச்சதேsஸ்யகரணே விததப்ரபாவா
ஞாதாsதுனம் ஸகலலோக மயீதிநூனம்
விஸ்தார்ய ஸர்வமகிலம் ஸதஸத்விகாரம்
ஸந்தர்சய ஸ்ய விகலம் புருஷாய காலே
தத்வைச்ச ஷோடசிபிரேவச ஸப்தபிஸ்ச
பாஸீந்த்ர ஜாலமிவந: கிலரஞ்ஜநாய
நத்வாம்ருதே கிமபிவஸ்து கதம்விபாதி
வ்யாப்யைவ ஸர்வமகிலம் த்வமவஸ்திதாஸி
சக்திம்விநா வ்யவஹ்ருதௌ புருஷோப்யஸக்தோ
பம்பண்யதே ஜனனிபுத்தி மதாஜநேந
ப்ரீணாஸிவிஸ்வ மகிலம் ஸததம் ப்ரபாவை:
ஸ்வைஸ்தேஜ ஸாசஸகலம் ப்ரகடீகரோஷி
அஸ்த்யேவதேவி தரதாகில கல்பகாலே
கோவேததேவி சரிதம்தவ வைபவஸ்ய
த்ராதா வயம் ஜனனி தே மது கைடபாப்யாம்
லோகச்சதேஸுவிததா: கலுதர்ஸிதாயை
நீதா: ஸுகஸ்ய பவனேபரமாம்கோடிம்
யத்தர்ஸனம் தவபவானி மஹாப்ரபாவம்
நாஹம்பவோநச விரிஞ்சிவிவேத மாத:
கோன்யோஹி வேத்தி சரிதம் தவதுர்வி பாவ்யம்
கானீஹஸந்தி புவநாதி மஹாப்ரபாவே
ஹ்யஸ்மின் பவாநி சரிதேரசநாகலாபே
அஸ்மாபிரத்ர புவனே ஹரிரன்ய ஏவ
த்ருஷ்டஸ்ஸிவ: கமலஜ: ப்ரதிதப்ரபாவ:
அன்யேஷு தேவி புவனேஷு நஸந்தி கிந்தே
கிம்வித்ம தேவிவிததம் தவஸுப்ர பாவம்
யாசேம்sபதேசங்க்ரி கமலம் ப்ரணிபத்ய காமம்
சித்தே ஸதாவஸதுரூப மிதம்த வைதத்

நாமாபி வக்த்ர குஹரே ஸததம் தவைவ
ஸந்தர்ஸனம் தவபதாம் புஜயோ: ஸதைவ
ப்ருத்யோய மஸ்தி ஸததம்மயி பாவநீயம்
த்வாம் ஸ்வாமிநீதி மனஸானது சிந்தயாமி
ஏஷா வயோரவிரதாகிலதேவி பூயாத்
வ்யாப்தி: ஸதைவ ஜனனீ ஸுதயோரி வார்யே
த்வம் வேத்ஸி ஸர்வமகிலம் புவனப்ரபஞ்சம்
ஸர்வஜ்ஞதா பரிஸமாப்தி நிதாந்த பூமி:
கிம்பாமரேன ஜகதம்ப நிவேதனீயம்
யத்யுக்தமாசர பவாநி தவேங்கிதம் ஸ்யாத்
ப்ரஹ்மா ஸ்ருஜத் யவதிவிஷ்ணு ருமாபதிஸ்ச
ஸம்ஹாரகாரக இயந்துஜனே ப்ரஸித்தி:
கிம்ஸத்யமேத தபிதேவித வேச்சயாவை
கர்தும்க்ஷமா வயமஜேதவ சக்தியுக்தா:
தாத்ரீ தராதர ஸுதேன ஜகத்பிபர்த்தி
ஆதாரசக்தி ரகிலம்தவ வைபிபர்த்தி
ஸூர்யோऽபி பாதிவரதே ப்ரபயாயுதஸ்தே
த்வம்ஸர்வ மேததகிலம் விரஜாவிபாஸி
ப்ரஹ்மாஹ மீஸ்வரவர: கிலதேப்ரபாவாத்
ஸர்வேவயம் ஜநியுதானய தாதுநித்யா:
கேऽன்யேஸுரா: சதமக ப்ரமுகாஸ்சநித்யா
நித்யாத்வமேவ ஜநநீப்ரக்ருதி : புராணா
த்வம்சேத்பவாநி தயஸே புருஷம்புராணம்
ஜானேऽஹ மத்யதவஸந் நிதிக:ஸதைவ
நோசேதஹம் விபுரனாதி ரனீஹஈமோ
விஸ்வாத்மதீ ரிதிதம்: ப்ரக்ருதி: ஸதைவ
வித்யாத்வமேவ நனுபுத்தி மதாம் நராணாம்
சக்திஸ்த்வமேவ கிலசக்தி மதாம்ஸதைவ
த்வம்கீர்த்தி காந்திகமலா மலதுஷ்டிரூபா
முக்திப்ரதா விரதிரேவ மனுஷ்யலோகே
காயத்ர்யஸி ப்ரதமவேத கலாத்வமேவ
ஸ்வாஹா ஸ்வதாபகவதீ ஸகுணார்தமாத்ரா
ஆம்நாயஏவ விஹிதோ நிகமோபவத்யா
ஸஞ்ஜீவநாய ஸததம்ஸுர பூர்வஜாநாம்

மோக்ஷார்த்தமேவ ரசயஸ்ய கிலம்ப்ரபஞ்சம்
தேஷாம்கதா: கலுயதோ நனுஜீவபாவம்
அம்ஸாஅனாதி நிதனஸ்ய கிலாநகஸ்ய
பூர்ணார்ணவஸ்ய விதாதஹி யதாதரங்கா:
ஜீவோயதாது பரிவேத்தி தலைவக்ருத்யம்
த்வம்ஸம்ஹரஸ்ய கிலமேததிதி ப்ரஸித்தம்
நாட்யம் நடேனரசிதம் விததேஸந்தரங்கே
கார்யேக்ருதே விரமஸே ப்ரதிதப்ரபாவா
த்ராதா த்வமேவ மமமோஹமயாத் பவாப்தே
ஸ்த்வாமம்பிகே ஸ்ததமேமி மஹார்திதேச
ராகாதிபிர் விரசிதேவித தேகிலாந்தே
மாமேவபாஹி பஹுதுக்க கரேசகாலே
நமோதேவீ மஹாவித்யே நமாமி சரணௌதவ
ஸதாஞான ப்ரகாசம்மே தேஹிஸர் வார்த்ததேசிவ

தேவியாகிய உனக்கு நமஸ்காரம்; மூலப்பிரகிருதியாகிய உனக்கு நமஸ்காரம்; சிருஷ்டிகர்த்ரியாகிய உனக்கு நமஸ்காரம்; சர்வபீஷ்டங்களையுங்கொடுக்கின்றவளாகிய உனக்கு நமஸ்காரம்; சித்விருத்தி ரூபிணியாயிருக்கின்ற உனக்கு நமஸ்காரம்; ஸம்ஸார ஸாகரத்துக்குத் தோணியாயிருக்கின்ற உனக்கு நமஸ்காரம்; பஞ்ச கிருத்தியங்களையும் நடத்துகின்றவளாகிற உனக்கு நமஸ்காரம்; ஸர்வாதிஷ்டான ரூபிணியாயிருக்கின்ற உனக்கு நமஸ்காரம்; விஷ்ணுகிருத புவநேஸ்வரிஸ்துதி கூடஸ்கையாய் (எல்லாவற்றிலுங்கலந்திருப்பவளாய் இருக்கின்ற உனக்கு நமஸ்காரம், அர்த்தத்துக்கு அர்த்தமாயிருக்கின்ற உனக்கு நமஸ்காரம், ஹிர்லேகை (இருதயத்தில் பிரகாசிக்கின்றவள்) ஆகிய உனக்கு நமஸ்காரம், சித்ஸ்வரூபிணியாகிய உனக்கு நமஸ்காரம், ஹே அம்ப! இவ்வுலகமெல்லாம் உன்னிடத்திலிருக்கின்ற தென்பதும் என்னுடைய உற்பத்திலயம் உன்னிடத்திலேயே என்பதும் உன்றிருவடியிற் கண்டேன். உன்னுடைய பாதத்திற் கண்ட காட்சியினாலேயே நீ அண்டமான மகிமையுடையவளாயும், சர்வப்பிரபஞ்ச ஸ்வரூபிணியாயு மிருக்கின்றாயென்பதும் நான் நான்றாய் தெரிந்துக் கொண்டேன் இது நிச்சயம். சீவகோடிகணிமித்தம் சிருட்டிகாலத்தில் பிரபஞ்சத்தை மித்தம் சிருட்டி காலத்தில் பிரபஞ்சத்தை சதசத விசாரத்தோடு விஸ்தாரமாய் படைக்கின்றாய். பதினாறு ஏழுகின்ற தத்துவ சொரூ பிணியாய் எங்களுடைய சுகானுபவ நிமித்தம் திருவுருவங்கொண்டு பிரகாசிக்கின்றாய். எந்த வஸ்துவும் அடைவதற்கு உன்னைத் தவிர வேறோரிடமுமில்லை) நீயோ எல்லாவஸ்துவிலும்

நிறைந்தவளாயிருக்கின்றாய். எந்த புத்திமானாகிய புருஷனும் விவகார தருமத்தில் உன்னைவிட்டு ஒன்றுஞ் செய்யவறியான். ஹே தேவி! உன்னுடைய பிரபாவத்தினால் எல்லாவுலகங்களையும் சந்தோஷிப்பிக்கின்றாய், உன்னுடைய ஒளியினாலே எல்லாவற்றையும் பிரகாசிப்பிக்கின்றாய், கற்பாந்தத்தில் நீ யழியாமலேயிருக்கின்றாய். வேதமுதலிய கலைகளெல்லாம் ஒருங்கேயறியவல்ல பண்டிதன் உன்னுடைய வைபவமான சரித்திரத்தையும் சீக்கிரத்தில் அறிந்து கொள்ளலாமென் றெண்ணுவானாயின் அவனாலறியக்கூடுமானதோ! எந்தவித்வான்தா னறியவல்லவனாவான்.

(ஙக-ஙகூ.) ஹே அம்ப! மதுகைடபர்களால் பயந்திருந்த நாங்கள் விரிந்திருக்கின்ற உலகங்களைக் கண்டோமல்லவா, அவை உன்னாலே காணப்பட்டனவேயன்றி எங்களால் காணப்பட்டனவா? ஒருவராலும் அடையப்பெறாத பரமானந்தத்தை யடைந்தோமல்லவா, அதுவும் எங்களாலன்று உன்னாலேயாம். ஹே பவாநி! உன்னுடைய தரிசனம் மஹாப்பிரபாவமுடையது. ஹே மாத! சிந்திப்பதற்குக் கூடாத உன்னுடைய சரித்திரத்தையும் நீ செய்கின்ற சிருட்டி சமூகத்திலகப்பட்ட புவனகோடிகளையும் நானுமறியமாட்டடேன், உருத்திரருமஹியார், பிரமனுமறியான். யாங்களே யறியா மற்போவோமாயின் மகாப்பிரபாவத்தோடுங் கூடிய மற்றெவர்தானறியவல்லார். இதுவரையில் நாமே திரிமூர்த்திகளென்று பிரசித்திபெற் றிருக்கின்றோமென் றிருந்தோம். இப்பொழுது நாங்கள் பார்த்துவந்த புவனங்கடோறும் பிரசித்திபெற்றவர்களான பிரமவிஷ்ணு ருத்திரர்கள் காணப்பட்டார்கள். ஹேதேவி! இதுபோலுமுள்ள புவனங்களிலும் இப்படியே திரிமூர்த்திக ளிருப்பார்களல்லவா! சர்வசாஸ்திர பிரதிபாதிதமா யிருக்கின்ற உன்னுடைய திவ்ய மகிமையை என்னவென்றறிந்தபடி. ஹே அம்ப! இப்பொழுது உன்னுடைய பாதாரவிந்தத்தை நமஸ்கரித்து என்னுடைய இஷ்டத்தைப் பிரார்த்திக்கின்றேன்.

உன்னுடையரூபம் என்னுடைய ஹ்ருதயத்தில் எப்பொழுதும் நீங்காம லிருக்கவேண்டும், உன்னுடைய நாமம் என்னுடைய வாக்காகிய குகையி லுவாவிக்கொண்டிருக்கவேண்டும், உன்னுடைய பாதாரவிந்த தரிசனம் என்னுடைய கண்களில் எப்பொழுதும் நீங்காதிருக்கவேண்டும், ஹே தேவி! உன்னுடைய திருவுளத்தில் நம்முடைய அடிமையாகிய இவனொருவ னிருக்கின்றானென் கிறபாவனை நீங்காதிருக்கவேண்டும். அவ்வண்ணம் நீ சிந்திப்பை யேயானால் யான் நம்மை ரக்ஷிப்பதற்குரிய ரக்ஷகி இருக்கின்றாளென்று நானுஞ் சிந்திப்பவனாவேன், ஹே தேவி! தாயானவள்

பிள்ளைகளிடத்திலியல்பா யன்புடையவளாயிருத்தல்போல் என்னிடத்தும் என்மகனாகிய பிரமனிடத்தும் இடைவிடாமல் இப்போதிருப்பதாகிய இந்த சம்பந்தமானது எப்பொழுது முண்டாகவேண்டும், ஹே ஜகதம்ப! நீ எல்லா அண்டகோடிகளையும் அறிவாய், சர்வஜ்ஞத்துவாதி குணங்களுக்கெல்லாம் இடமாயுள்ளவள். அறிவிலியாகிய யான் உன்னிடத்தில் விண்ணப்பஞ் செய்துகொள்ளற்பாலது யாது, ஹேபவானி! எது என்னால் விண்ணப்பஞ்செய்துகொள்ளப்படுமோ அதை அப்படியே அநுக்கிரகிக்கவேண்டும். ஏனெனில் பிறருடைய அபிப்பிராயத்தை உள்ளத்திற்கொண்டு முடிப்பதாகிய இங்கிதம் உனக்கிருக்க வேண்டு மல்லவா?

(சுO-சுகூ) பிரஹ்மா சிருஷ்டிக்கிறார்; விஷ்ணு ரக்ஷிக்கிறார்; உமாபதியாகிய உருத்திரர் சங்கரிக்கின்றார் என்று சொல்வது உலகப்பிரசித்தி, ஹே துஹினஜே! (ஹிமாசலன் மகளே!) இதனுடைய உண்மையாதென்றால் அம்மூவரும் உன்னுடைய இச்சையினால் உன்னுடைய சக்தி யுக்தர்களாய் முன்கூறிய கிருத்தியங்களைச் செய்வதற்குரியவராகின்றனரேயன்றித் தாங்களே செய்யுஞ்சுதந்தரரல்லர். ஓதராதரன் புத்ரியே! இந்தப் பூமியை பூமிதேவி தாங்குகின்றாளென்பர்; அன்று உன்னுடைய ஆதாரசத்திதான் தாங்குகின்றது. ஹேவரதே! சூரியனும் உன்னுடைய தேஜஸுடனே கூடினவனாய்ப்பிரகாசிக்கின்றானேயன்றி வேறன்று. ஆகையினால் எல்லாப்பிரபஞ்சமும் நீயே, நீ வீராட்சொரூபமாய்ப் பிரகாசிக்கின்றாய். உன்னுடைய மகிமையினாலே நானும் பிரஹ்மாவும் உருத்திரரும் எப்பொழுது பிறப்புடையவர்களாயினோமோ அப்பொழுதே எங்கட்கு நித்தியத்துவமில்லாமற்போயிற்று. இந்திராதியர்களாகிய மற்றெந்த தேவர்கள் தானித்தியராகப் போகிறார்கள். ஆகையால் நீயே நித்யையாகவும் பிரகிருதியாகவும் ஆதியாகவுமிருக்கின்றாய். ஹே பவாநி! இப்பொழுது நான் உன்னுடைய சந்நிதானத்தை யடைந்த விசேஷத்தால் புராணபுருஷனாயிருக்கிற என்னை நீ கடாக்ஷிப்பையேயானால் நான் பிரபுவென்றும், அநாதியானவனென்றும், சர்வவியாபி என்றும், ஈசனென்றும், அகண்ட ஞானியென்றுந் தெரிந்துகொள்ளுகிறேன். நீகடாக்ஷஞ்செய்யாமற்போவையேயானால் நான் எப்பொழுதும் அஜ்ஞான சுபாவமுடையவனென்று தெரிந்துகொள்ளுகிறேன். நீ இவ்வுலகத்தில் ஜ்ஞானவான்களுக்கு ஞானமாகியும், சத்திமான்களுக்குச் சத்தியாகியும், தீர்த்திமான்களுக்குக் கீர்த்தியாகியும், காந்தியுடையவர்களுக்குக் காந்தியாகியும், ஸ்ரீமான்களுக்கு ஸ்ரீதேவியாகியும், நிர்மல சந்துஷ்டியுடையவர்களுக்குச் சந்துஷ்டியாயும்,

சிருஷ்டி - படைத்தல் ரக்ஷிக்கிறார் - காத்தல் சங்கரிக்கின்றார் - அழித்தல்

முமூக்ஷுக்களுக்கு மோக்ஷசொரூபியாகியும், விரக்தியுள்ளவர்களுக்கு விரக்தியாயுமிருக்கின்றாய். நீயே பிரமகாயத்திரியாகியும், ஸ்வாஹா, ஸ்வதா, வென்கிற மந்திரசொரூபிணியாகியும், பகவதியென்கிற நாமசகுணார்த்தமாத்திரைக்குயோ கரூட சொரூபிணியாகியும் ஆகிறாய். தேவர் முதலியோருடைய இகபரசாதனத்தின் பொருட்டு உன்னாலே வேதமும் ஆகமமும் விதிக்கப்பட்டன. அகண்டாகாரமாகிய சமூத்திரத்தினின்றுந்தோன்றிய அலைகள் அச்சமுத்திரத்திற்றானே அடங்குவதுபோல் ஆதியந்தமில்லாத பரமாத்மாவினிடத்திற்றோன்றி அவ்விடத்திற்றானே லயப்பட்டிருக்கிற ஆத்மகோடிகள் ஜீவபாவத்தைப்போக்கி சிவபாவத்தைக் கூடுதலாகிய மோக்ஷநிமித்தமாகவே எல்லாப் பிரபஞ்சங்களையும் உண்டுபண்ணுகிறாய். சீவன் எப்பொழுது உன்னுடைய கிருத்தியத்துக்குரியகாரணந் தெரிந்துகொள்ளுகிறானோ அப்பொழுது அவனை இந்தப் பிரபஞ்சத்தினின்று நிவிர்த்திசெய்து பின்னர் இளைப்பாறுகிறாய் ' என்பது சர்வசாத்திர நிச்சயம். எப்படியென்றால், நாட்டியத்தை விரும்பினவருக்கு ஓர் நாடகன் அந்த நாட்டியத்தைக் கற்பித்து அதனாற் பெறும் பயனை அவர் பெற்றபின்னர் அந்த நாடகன் அத்தொழிலைக் கைவிட்டுருப்பதுபோலாம். இவ்வண்ணம் சிற்றின்பத்தை விரும்பிய ஆன்மகோடிகளுக்குப் பிரபஞ்ச நாடகத்தைக் கற்பித்து அவ்வின்பவொழிவில் அவன்பாற் புரியும் சிருட்டியாதி தொழிலை நீக்கி அவனை மோக்ஷத்துக்காளாக்கி விடுகின்றவள் நீயே! ஹே அம்பிகே? உன்னையே சரணமாக அடைகிறேன். மஹாவுபாதிகரமாயும், காமக்குரோதாதிகளால் நிறையப் பெற்றதாகியும், தடைபடாது மேன்மேல் வருவதாகிய துக்கப்பிரதமாகியுமுள்ள அந்தியகாலத்தில் என்னை ரக்ஷிக்கவேண்டும். ஹே தேவி நமஸ்காரம். ஹே மஹாவித்யே உனக்கு நமஸ்காரம். உன்னுடைய பாதங்களைச் சரணாகதியடைகிறேன். சர்வாபீஷ்டங்களையுங் கொடுக்கின்ற ஹே சிவே, எப்பொழுதும் அகண்டஞானத்தைக் கொடுத்தருள்வாய்.

மூன்றாம் ஸ்கந்தம் நான்காம் அத்தியாயம் விஷ்ணுக்கிருதபுவனேஸ்வரீஸ்துதி முற்றிற்று.

———

ஆஉ அத்யாயம் சு-க்கு ஸ்லோகம் (உ0சு)

———

மூன்றாம் ஸ்கந்தம்

———

ஐந்தாம் அத்தியாயம்

———

சி வ க் ரு த பு வ நே ஸ் வ ரீ ஸ் து தி.

———

எமது பெருமாட்டியாகிய மஹாதேவிப் பிரபாவத்தை அனவரதமுங் கேட்கவிரும்பும் மஹரிஷிகாள்! இதுகாறும் தேவியைக் காணப்பெற்ற மூவருள் விஷ்ணுமூர்த்தி தேவியைத் தரிசிக்க வேண்டிய முறைமைகளை எடுத்துக்கூறிச் சமீபித்தவுடன் தேவீ அம்மூவரையும் ஸ்திரீரூபமாக்கியதும், பின்னர் அம்மூவரும் அச்சமின்றி திருவடியில் வீழ்ந்து வணங்கப்பெற்ற காலத்தில் நகமத்தியில் தங்களோடு அண்டரண்ட புவன சராசரங்களைக் கண்டதி சயித்ததும், அங்குள்ள தோழிகளோடு தாங்களும் ஸ்திரீரூபதா ரிகளாய்த் தேவியினுடைய சாம்பராஜ்யங் கிடைக்கப்பெற்றபேற்றைப் பலமுறை வியந்து போற்றி அவளுடைய கிருத்திய தாண்டவத்தை நன்கு விளக்கி அத்தேவியினுடைய திருவருள் நீங்காதிருக்க அகண்ட ஞானத்தைப் பிரார்த்தித்ததும் எடுத்துக்கூறினேம். இனி உருத்திரமூர்த்தி தேவியினுடைய தத்துவங்களைப் புகழ்ந்துபாடி மவுனமுற்றிருப்பப் பிரமனதுகண்டு தேவியைப்புகழ்ந்து "அத்துவிக" மென்கிற வாக்கிய வுண்மையை அனுக்கிரகஞ் செய்து என்னுடைய சந்தேகத்தை யொழிக்க வேண்டுமென்று பிரார்த்தித்த வரலாற்றைக் கூறுகின்றேன்; கேட்பீர்களாக.

(க-கக.) தேவர்களுக்கெல்லாந் தலைவராகிய நாராயணர் முன்கூறியவாறு தோத்திரஞ்செய்து ஆனந்தபரவசராய்மௌன மாயிருக்கும் பொழுது உருத்திரமூர்த்தி தேவி சந்நிதானத்திலிருந்து வணக்கத்துடன் தோத்திரஞ்செய்யத் தொடங்கினர். ஹே! தேவீ! ஹே சிவே! விஷ்ணுவும், பிரமனும் உன்னுடைய சங்கற் பத்தினின்றுந் தோன்றினவர். யான் உன்னுடைய சத்குணரூபி. ஹே ஜநநி? நீ பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசமுதலிய பூதரூப மாகவும். மனம் புத்தி சித்த அகங்காரமுதலிய கரணரூபமாகவும் ஆயினாய். உன்னாலே படைக்கப்பட்டவர்களாகிய நாங்கள் மூவரும் சராசரரூபமாகிய சகத்தைச் சிருட்டித்தும் காத்தும் அழித்தும் வருகின்றோம். இவைகளையே அறிவதற்கும் சொல்வதற்கும் எங்களுக்கே கூடாமையா யிருக்கும்பொழுது ஏனையோர் உன்னுடைய பிரபாவத்தை எவ்வாறு அறிந்து சொல்லவல்லவராவர். பிருதிவி முதலிய பஞ்சபூதங்களாலும் பஞ்சதன்மாத்திரைகளாலும் முக்குணங்களாலும்

பிரபஞ்சகாரியமுண்டாகிறதென்றால் எப்படி உண்டாகும். அவைகள் உன்னுடைய கலையன்றியில் உண்டாகாதென்பது இப்போது பிரகாசமாயிற்று. ஹே அம்ப! நீ உன்னால் சிருட்டிக்கப்பட்ட சராசரமாயிருக்கின்ற இப்பிரபஞ்சமாகவும், பிரம விஷ்ணு உருத்திரராகவும் இருக்கின்றாய். அன்றியும் உலகில் காணப்படும் நானாவிதமான அலங்காரங்களாலும் விலாசங்களாலும் அவைகளாலுண்டாகும் குதூஹலங்களாலும் இஷ்டப்படி ரமிக்கின்றவளாயும் ரமிக்காதவளாயு மிருக்கின்றாய். ஹே தேவீ! பிரமன் முதலாக வெண்ணப்பட்ட நாங்கள் மூவரும் சிருட்டியாதிகளைச் செய்ய எப்போது உத்தேசஞ்செய்கின்றோமோ அப்பொழுது உன் பாத ரேணுவை நாங்கள் சிரமேற்கொண்ட தான் செய்கின்றோம். ஹே மனோன்மநீ! நீ தயையினால் குளிர்ந்த மனத்தையுடையவளாய் இல்லாமற்போவையே யாயின் நாங்கள் மூவரும் சத்துவ ரஜஸ் தமோகுண சம்பந்நர்களாக எப்படி உற்பவமர்வோம். ஹே கருணாகடாக்ஷி! விகற்பரூபமான பலசங்கற்பங்களை நிசங்கற்பிக்காமற் போவையேயானால் இவ்வுலகம் அரசன் மந்திரி சேவகர்முதலானவர்களால் சூழப்பட்டதாகவும் தனிகர் நிர்த்தனிகர்களால் நிறையப்பெற்றதாகவும் காணப்படுகின்ற பின்னாபின்ன ரூபங்களாக எப்படியாகும். நாங்கள் சிருட்டி திதி சங்காரத்துக்குரியவைகளா யிருக்கின்ற உன்னுடைய மூன்று குணங்களோடுகூடி அம்மூன்று தொழிலையுஞ் செய்தற்குரியவராகிய படியினாலன்றோ மூன்றுலகத்திலும் எங்களை இவ்வுலகத்திற்குக் காரணகர்த்தர்களென்று சொல்லுகிறார்கள். காரணர்கள் நாங்களன்று ஏனெனில் விமானாரூடராய் மார்க்கத்தில் வருகிற எங்களால் பார்க்கப்பட்ட நூதனமாகிய புவனங்களை நாங்களாபடைத்தோம்; நாங்கள் கண்டதேயில்லை. இவை யாராலே செய்யப்பட்டன ஹே பவானி! நீயே சொல்வாயாக.

(கஉ-கஎ) உன்னுடைய கலையினாலே எவ்வளவு சகத்தைச் சிருட்டிக்கின்றனையோ ரக்ஷிக்கின்றனையோ அவ்வளவையும் நீசங்கரிப்பதற்கு இச்சிப்பாயல்லவா யான் வேண்டுமா! உன்னுடைய நாயகனாகிய பரசிவத்தை இந்தவிளையாட்டால் எப்பொழுதும் ரமிக்கச் செய்கின்றாய். ஹே சிவே! ஜகதம்பிகே-இவ்வாறான உன்னுடைய பிரபாவத்தை யறியோம். ஹே ஜநநி-ஹே யுவதி! உன்னுடைய பாகவதாளாகிய எங்களுக்குப் பதாம்புஜ சேவையைக்கொடுப்பாயாக. ஸ்திரீரூபத்தோடு கூடியிருக்கின்ற நாங்கள் புருஷரூபத்தையடைவோமாயின் உன்னுடைய பதாம்புஜ சேவை எங்களுக்குண்டாகுமா! அது உண்டாகாமற்போனால் அந்தப் புருஷவடிவத்தால்

நாங்கள் அடையப்போகிற பிரயோசனமென்ன! ஹே அம்ப! ஹே சிவ! உன்னுடைய பாதாரவிந்தத்தை விட்டு நான் இவ்வுலகில் புருஷரூபத்தை யடைவதற்கும் திரிலோகாதி பத்தியத்தை யடைவதற்கும் விரும்பவில்லை. ஹே சுததி! (தந்தவரிசைகளையு டையவளே) உன்னுடைய சந்நிதானத்திற் கிடைத்த இப்பெண்ணுருவம் என்னுடைய கண்களுக்கு உன்னுடைய பாததரிசனங் கிடைக்கச் செய்தமையால் இதில் வெறுப்புண்டாகவில்லை. கிடைக்கச் செய்யாமற்போகுமானால் இதிற் சிறிதும் விருப்பமுண்டாக மாட்டாது. இனிப்புருஷவடிவம் சுகமுடையதென்று எப்படித் தோன்றப்போகிறது! ஏ! அம்பிகே! நான் ஸ்திரீ வுருவத்தை யடைந்து ஜனனபந்தத்தை நிவிர்த்தி செய்வதாகிய உன்னுடைய பதாம்புஜசேவை கிடைக்கப்பெற்றே னென்கிற நிஷ்களங்கமாகிய இந்த கீர்த்தியானது மூன்றுலகத்திலும் பிரகாசிக்கவேண்டும். இவ்வுலகில் ஆத்மகோடிகளுக்கு உன்னுடைய பாதாரவிதை தரிசனம் பிராப்தி இல்லாமற்போகுமானால் அந்த ஆத்மகோடிகளுக்கு யுகந்தோறும் இந்தத் தாபத்தியேத்தோடு மிருக்கின்றதாலம் இப்படியே நடந்துகொண்டே இருக்குமன்றோ. இவ்வுண்மை யுணர்ந்த பண்டிதன் உன்னுடைய சந்நிதான சேவையை விட்டு அகண்டராஜ்யாதி பத்யத்தை யபேக்ஷிப்பனா அபேக்ஷியான்.

(கஅ-உரு) ஹே ஜநநீ! நிர்மலராகிய எந்த முனிவர்கள் உன்னுடைய பாதாரவிந்த பூஜையைவிட்டு வேறாகிய தவத்தில் பற்றுள்ளவராயிருப்பின் அவர்கள் தெய்வத்தினால் வஞ்சிக்கப்பட் டவர்களாவரனறோ! ஏனென்றால் வேறாகிய தவத்தினால் வருவதாகிய பிரபுத்துவமுதலியவைகள் பின்னர் துக்கத்தையே விளைவிக்கி ன்றதன்றோ. ஓ அநாதியானவளே! உன்னுடைய ஸ்ரீபாததீர்த்தத்தில் ஒரு சிறிது ஒருவனுட்கொள்ளுவானாயின் அவன் பிறவிப்பெருங் கடலினின்றும் நீந்துகிறான். அதைவிட்டுச் செய்வதாகிய தபோ யக்ஞங்களாலும், சமதமாதி நிஷ்டைகளாலும், பிறவி நீக்கமாகிய முத்தியுண்டாகமாட்டாது. ஆகையால் என்னிடத்தில் உனக்குத்த யையிருந்தால் நானெண்ணியிருக்கும் வகையாக அற்புதமாயும் அநாதியாயுமுள்ள நவக்ஷரமந்திரத்தை எனக்குபதேசஞ்செய்வாய். செய்வையாயின் நிர்மலமாகியும் உத்தமோத்தமமாகியுமுள்ள அம்மந்திரத்தை நான் ஜபித்து நித்தியாநந்த முடையவனாவேன். பூர்வ ஜன்மத்தில் என்னாலே இம்மந்திரம் அநுட்டிக்கப் பட்டது. இப்பொழுது எனக்கு மறதியாயிருக்கிறது. ஆகையால் அம்மந்திரத்தையே உபதேசஞ் செய்யவேண்டும். ஹே ஜநநீ! ஹே பிரணவஸ் ரூபிணீ! என்னைக் கரையேற்றுவாய் கரையேற்றுவாய். ஓ நாரதனே! அற்புத

தேஜோரூபியான உருத்திரர் இவ்வண்ணம் பிரார்த்திக்கவும் அந்தத் தேவி அவர் வேண்டியவாறே நன்றாயுபதேசித்தனள். உருத்திரர் உபதேசம் பெற்றவராய்பேரானந்தமடைந்து தேவிபாதங்களை நமஸ்கரித்து அவ்விடத்திலேயே நவாக்ஷரசொரூபமாயும் சர்வாபீஷ்டங்களைக் கொடுப்பதாயும் மோக்ஷத்தைத் தருவதாயுமுள்ள அம்மந்திரத்தைப் பிஜாக்ஷர சகிதமாய் விதியுக்தமான உச்சரிப்புடனே செபித்திருந்தனர். ஓ நாரதனே! அப்பொழுது தேவீ பாதசந்நிதானத் திலிருக்கின்ற நான் உருத்திரமூர்த்தி சர்வ லோகங்கட்கும் சுகத்தைச் செய்கின்ற பரமாத்மசொரூபியாய் அந்த செபநிட்டையி லிருப்பதைப்பார்த்து அதிசயித்தவனாய் மகா மாயா சொரூபிணியாகிய தேவியை நமஸ்கரித்து விண்ணப்பஞ் செய்யலாயினேன்.

(உகூ - சுகூ.) சர்வஞ்ஞையாகிய ஹே அம்பா! மூன்றுலகிலும் சர்வா பீஷ்டங்களைக் கொடுக்கின்றவளாயும், சகல யஜ்ஞ ஹோ மங்களில் ஸ்வாஹா என்கிற மந்திரரூபிணியாகியும் இருக்கின்ற நிஷ்களங்கமாகிய உன்னை இந்த உருத்திரமூர்த்தி சர்வாத்ம ஸ்ருஷ்டி கர்த்ரியாக அறிந்தெடுத்துச் சொன்னதுபோல் வேதங்கள் சொல்லவில்லை. எப்பொழுது அவ்வண்ணஞ் சொல்லவில்லையோ அப்பொழுதே இவ்வண்ணந் தோத்திரஞ்செய்வதற்கான நிறைந்த சக்தி யுடையனவாக எனக்குத் தோன்றவில்லை. இவ்வேதம் போலவே உன்னுண்மை யறியாத நானும் ஜகத்கர்த்தா நானே என்றும், விசித்திரமாய் அகண்டாகாரமாய் விரிந்திருக்கும் பிரமாண்டத்தைச் சிருட்டிக்கின்றவன் நானே என்றும், சராசராத்மகமாகிய இம்மூன்று புவனத்தில் என்னைக்காட்டிலும் வேறு சமர்த்தனாகிய புருஷன் எவனிருக்கிறானென்றும், எப்பொழுது பிரமனாய் விட்டேனோ அப்பொழுதே தன்யனாய் விட்டேனென்றும், எல்லாவுலகங்களையுங் கடந்தவன் நானே என்றும், இதிற்சம்சயமேதென்றும் அகங்கரித்திருந்தேன். அக்குற்றத்தினால் அளவிடற்கரிய பிறவிக்கடலில் மூழ்கினேன். அந்தோ! இதுவென்ன பாவம். இது வென்ன கொடுமை. இதுவரையில் நான்கொண்டிருந்த அகங்காரமும் அதுகொண்டு கூறிய கூற்றுக்களும் பொய்மை. இப்பொழுது உன் பாதாரவிந்தத்தினுடைய ரேணுஸ்பரிசத்தா லுண்டாகிய அகங்காரத்தால் இப்பொழுது தன்ய னாய்விட்டேனென் கூறுங்கூற்றுதான் உண்மை. அதுபொய் இதுமெய்யென்று தெரியவந்ததும் உன்னுடைய அநுக்ரகத்தினாலன்றி வேறில்லை. ஆகையால் சம்சாரபந்தத்தைப் போக்கடிப்பதில் சமர்த்தையாகிய உன்னிடத்தி லொன்று யாசிக்கின்றேன். என்னையெனில், உன்னுண்மையறியாத அஞ்ஞானத்தினா லடையப்பெற்ற பெருந்துன்பமாகிய விலங்கை

விடுவித்து உன்னிடத்தில் நீங்காத பக்தியுடையவனா யிருக்க அநுக்கிரகித்தல்வேண்டும். அநுக்ரகிக்காமற் போவையேயாயின் அநிர்வசனம் - (இன்னவிடத்தினின்று உற்பத்தியானதென் றறிவதற்கில்லாத) தாமரை மலரினின்றும் உன்னுடைய கிருபாவீக்ஷணியத்தினால் உண்டாகிய நான் அஞ்ஞானத்தினின்றும் எவ்வண்ணம் விடுபட்டவனாவேன். அன்றியும் ஹே சிவே! நான் உன்னுடைய ஆக்ஞையைச் செலுத்துகின்ற சேவகனா யிருக்கின்ற பொழுது பிறவிக்கடலில் மூழ்கி யிருத்த லழகாகுமா? ஆகையால் என்னை *ரக்ஷிப்பாய். ஹே சாம்பவி! என்னிடத்தில் சில அபராதங்களுண்டாயிருக்கின்றன. என்னையெனில், ஆதியாகியும் பரிசுத்தமாகியுமுள்ள உன்னுடைய சரித்திரத்தை அறியாதவர் யாரோ அவர்கள் என்னை பிரமனாகச் சொல்லுகிறார்கள். அதை நான் கேட்டு மகிழ்ந்ததாகிய அபராதமும், சந்ததமும் உன்னாலே சிருட்டித் தொழிலில் ஏற்படுத்தப்பட்ட நான் சாராயுஜமுதலிய நால்வகைத் தோற்றமாகிய சிருட்டியைச் செய்யும் சதுர்ப்பாட்டை நானொருவனே யறிவேனென்றும், வேறு எவனறிவானென்றும், அகங்காரத்தினா லெண்ணுவதாகிய அபராதமும், இன்னும் இது போன்ற எண்ணத் தொலையாத அபராதமு முள. ஹே ஆதிமாயே! அவையெல்லாம் ▮க்ஷமித்தருள்வாய்.

அந்தோ! உலகில் சுவர்க்க காமிகளாய் யஜ்ஞத்தை விரும்பிச் செய்வதிலும், தேககாமிகளாய் அஷ்டாங்க யோகமார்க்கத்தில் பிரவர்த்தித்திருப்பதாகிய சமாதி அவஸ்தையிலும், எந்த மாநுடர் உழல்கின்றனரோ அவர் வீணராகியே மூடர்போன்று எப்பொழுதும் உன்னுடைய மகிமையையும் மோக்ஷப் பிரதமாகிய உன்னுடைய நாமமாகிய மந்திரத்தை ஓர்காலுச்சரித்தபோதிலும் சகல யோக சாம்பிராச்சியத்தைக் கொடுக்குமென்கிற நாமோச்சாரணையின் பெருமையையும் அறியமாட்டார். ஹேபவாநீ! (பரசிவகுடும்பிநீ) பந்த நிவிர்த்தியாகிய மோக்ஷத்தைக் கொடுக்கிறவள் நியேயாயிருக்க உன்னைத்தோத்திரஞ் செய்வதாகிய தொழிலையொழித்துச் சிவதத்துவ ஞானிகள் பிருதிவிமுதல்நாதாந்தம் தத்துவ விசாரஞ்செய்து அத்தத்துவங்களை நானன்றென்று நியதி செய்வதே மேலான ஞானமார்க்கமென்றெண்ணுகின்றனர். அவரெல்லாம் சிவா, அம்பிகா, சக்தி, ஈச என்கிற பவித்திரமாகிய நாமா வளிப் பிரபாவத்தை அறிந்து ஒருகணப்பொழுதேனு முச்சரித்து அதன் பயனையடையாமல் அஞ்ஞானிகளைப்போல் பிறவிக்கடலில் மூழ்கிக் கிடக்கின்றவராவர். ஹே அம்பிகே! நீ நான்கு பிரிவினை யுடையவர்வப்பிரபஞ்சத்தையும்

*ரக்ஷிப்பாய்-காப்பாய் ▮க்ஷமித்தருள்வாய்-பொறுத்தருள்வாய் *ரக்ஷிக்கின்ற-காக்கின்ற

உன்னுடைய நேத்திரவீக்ஷணிய மாத்திரத்தினால் ஒருகணப்பொழுதில் செய்வதற்குச் சாமார்த்திய முடையவளல்லவா. அங்ஙனமிருக்க ஆதிஸ்ருஷ்டிகாலத்தில் உன்னைச் சிருட்டி கர்த்தாவாகச்செய்தது உன்னுடைய இச்சாமாத்திரமாகிய லீலையென்றெண்ணுகிறேன். என்னைப்போலவே விஷ்ணுவும் ருத்திரரு மாவாரென் றெண்ணுகிறேன். ஏனெனில் அவ்விருவரும் *ரக்ஷிக்கின்றவரென்பதும் சங்கரிக்கின்றவ ரென்பதும் எப்படி! மதுகைடபர் சமுத்திரமத்தியினின்று யத்தஞ்செய்த காலத்தில் விஷ்ணு தனக்கு மரணம் வரவொட்டாமல் ரக்ஷித்துக்கொண்டனரா, உருத்திரர் அவர்களைச் சங்கரித் தனரா இல்லையே! நீயேயன்றோ அவர்களைச் சங்கரித்து என்னையும் விஷ்ணுவையும் ரக்ஷித்தனை. இன்னமும் உன்னுடைய பிரபாவத்தை யெண்ணுபோது உனக்கு எவ்விடத்திலாவது ஜனனமுண்டென்று காணப்படவுமில்லை, கேட்கப்படவுமில்லை. இதனால் நீ ஜனன மரண ரகிதையாயிருக்கின்ற ஆதிசக்தியென்று யாவராலும் அறிந்து கொள்ளத்தக்கவளாயிருக்கின்றனை. அதுமட்டோ சர்வசுதந்தரத்துவ, சர்வஞ்ஞத்துவ, சர்வவல்லபத்துவாதி குணவிசேடங்களெல்லாம் உன்னுடையனவாகவே காணப்படுகின்றன. இவையெல்லாஞ் சிற்றறிவின ரெங்ஙன மறிவார். உன்னுடையகடாக்ஷத்திற்குநானும் விஷ்ணுவும் உருத்திரரும் பாத்திரங்களா வோமானால் சிருஷ்டிக்கவும் ரக்ஷிக்கவும் சங்கரிக்கவுமான சாமர்த்தியமுடையவர்கள் தான். உன்னுடைய கடாக்ஷவீக்ஷணிய மில்லாமற்போகுமானால் இம்முத்தொழிலும் செய்வதற்கு எங்ஙனமுரியராவோம். நாங்கள் மூவரும் ஏனையரும் உன்னை விட்டு முன்னுண்டாவை களு மல்லர். இப்போது நிலையாக இருக்கின்றவர்களுமல்லர். இனி உண்டாகப் போகின்றவர்களு மல்லரெனவும், அற்பவறிவுடையவர்களுக்கு விவாகத்திற்கிடமாய் தனக்கு மேலொரு கடவுளில்லா தவராகியும் சர்வஞ்ஞத்துவாதி குணங்களாற் பிரகாசிக்கின்றவராகியும் சிருஷ்டிக்கு முதன்மையாயிருக்கின்றவராகியும் தாபத்திரயமில்லாதவராகியும் மாயோபாதியில் லாதவராகியும் நித்யானந்தராகியு மிருக்கின்ற பரசிவம் உன்னாலுண்டாகின்ற லீலாவிநோதங்களைச் சுகமாய்ப் பார்க்கின்றன ரெனவும், சர்வசாத்திர சம்பன்னராகிய மெய்ஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஏனெனில் ஓ முனிவர்களே! காணப்பட்ட பிரபஞ்ச ரூபத்தில் மாயாசொரூபிணியாகிய உன்னைக் காட்டிலும் அதீதரா யிருக்கின்றாராகையால் சாக்ஷியா யிருக்கின்றவராயினர். நன்றாய் நூல்களை ஆராய்ச்சிசெய்யப் புகுங்கால் மாயா சொரூபிணியாகிய நீயும் மாயாதீதராகிய பரசிவமும் ஆகிய உங்களிருவருக்கும் அன்னியமாக மூன்றாவது புருஷன் இல்லையென்று நானறிகிறேன்.

ஆயினும் நானிப்போது அபிப்பிராயப்பட்டது வேதவாக்கியத்திற்கு விரோதமானதென்றும், வேதவாக்கியத்தை விபரீதார்த்தமாகச்செய்யக் கூடாதென்றும், என்னிதயத்தில் நீங்காமல் ஓர் சங்கை சங்கித்துக் கொண்டிருக்கின்றன. என்னையெனில் யாதொரு பரசிவமானது "ஏகமே வாத்துவிதீயம்'' என்று வேதங்களிற் சொல்லுகின்றதல்லவா! அத்தன்மையுடையது நீயா! அப்பரசிவமா! என்பதும் நீங்களிருவரும் ஏகமா! துவிதமா! என்பதும் அறியப்படவில்லை. இச்சந்தேகத்தை நிவிர்த்திசெய்யவேண்டும்.

இவற்றில் என்னுடையமனமானது ⁕சம்சயமில்லாமலாகவும் ✱சங்கையடையாமலாகவுமில்லை. இவற்றில் என்மனம் புண்பட்டுப் போகின்றது. ஆகையினால் உன்னுடையவாக்கினால் விடைதர வேண்டும். நீசந்தேகத்தை நிவிர்த்திசெய்கின் றவளாயிருக்கின்றனை. நான் உன்னுடைய பாதங்களிற் சரணாகதியடையவும் பெற்றேன். இதுவும் என்னுடைய புண்ணியவிசேடந்தான். நீ இந்த ஸ்திரீயாயிருக்கின்றனையா! புருஷனாயிருக்கினையா! எனக்கு விவரமாய்ச் சொல்லியருளல் வேண்டும். சத்தியாகிய உன்னுண்மையைத் தெரிந்து கொள்வேனேயாகில் சம்சாரசாகரத்தி னின்றும் விடுபட்டவனாவே னென்றனன்.

மூன்றாம் ஸ்கந்தம் ஐந்தாம் அத்யாயம் சிவக்ருதபுவநேஸ்வரி ஸ்துதி முற்றிற்று.

ஆஉ அத்யாயம் ரு-க்கு ஸ்லோகம் (உருஉ)

ஸ்ரீதேவ்யைநம:

ஆறாம் அத்தியாயம்

---

* பிரஹ்மாதீநாம் ஸ்ரீ தேவி நிஜரூபோபதேசம்.

தேவி கருணைகடாக்ஷத்துக்குரிய மஹருஷிகாள்! இதுகாறும் "அத்துவித" உண்மை விளங்கப் பிரமனால் விஞ்ஞாபனஞ் செய்யப்பட்ட விண்ணப்பத்தைக் கூறினேம். இனி அவ்விண்ணப்பத்தைக் கேட்ட தேவி அவ்வுண்மையை அனுக்கிரகஞ் செய்யத்தொடங்கிய முறைமையைக் கூறுகின்றேன் கேட்பீர்களாக.

---

* பிரம விஷ்ணு ருத்திரருக்குத் தேவியானவள் தன்னுடைய வுண்மை வடிவத்தைக் கூறுதல்.

⁕ சம்சய - சந்தேகம் ✱ சங்கை - ஐயம்

(க-கசு) ஓ நாரதனே! அதிவிநயத்தோடும் வணங்கி விஞ்ஞாபனஞ் செய்துகொண்ட என் விண்ணப்பத்தை ஆதியாயும் பகவதியாய்முள்ள தேவி திருச்செவியேற்று ரமணீயமாய் விடைகூறத்தொடங்கினள். ஓ பிரமனே! எனக்கும் பரசிவத்துக்கும் எப்பொழுதும் ஏகத்துவமே (ஒன்றாயிருக்குந்தன்மையே) பேதமாயிருப்பதில்லை யாதொரு பரசிவமிருக்கின்றதோ அச்சிவமே நான். நானே அப்பரசிவம் எங்களைப் புத்திப்பிரமமுடையவன் பேதமாகக் காண்பான். எங்களிருவருடைய சூக்ஷமமாகிய சமயபேதத்தை எந்த ஞானவானறிகின்றானோ அவன் சம்சார பந்தத்தினின்றும் விடுபடுகிறான். இதிற்சந்தேகமில்லை. நித்தியமாயும் அநாதியாயுமிருக்கின்ற பரப்பிரமமானது "ஏகமேவா" என்றும் "அத்விதீயம்" என்றும் சொல்லப்பட்டிருக்கிற "ருக்குக்குத்" தாத்பரியமென்னையென்று கேட்டனையன்றோ! ஒன்றாயிருக்கின்ற பரப்பிரமமானது துவிதபாவத்தை யடைந்தது எப்படி யென்றால்; கண்ணடியின் மத்தியில் உபாதிசம் பந்தத்தினால் தீபம் இரண்டாகவும், ஒருவனுடைய வுருவம் இரண்டாகவும் பிரதிபிம்பிப்பதுபோல் பிரமஸ்வரூபமாகிய எங்களிருவருடைய வுருவம் இரண்டாகத் தெரிகின்றது. ஓ விதாதா! புனருற்பவகாலத்தில் சிருட்டி நிமித்தமா யிரண்டென்கிற பேதமூண்டானதை எந்த விதத்தினாலெடுத்துச் சொன்னபோதிலும் அது ✲ த்ரிஸ்யம் ▮ அத்ரிஸ்யம் என்கிற பேதத்தையுடையத்தானே யன்றி வேறன்று. சர்வசங்காரகாலத்தில் நான் ஸ்தீரியுமன்று, புருஷனுமன்று, அலியுமன்று, புனருற்பவகாலத்தில் புத்தி, சம்பத்து, தைரியம், கீர்த்தி, நினைவு, ஸ்ரத்தை, தீர்க்காலோசனை, தயை, நாணம், பசி, தாகம், பொறுமை, தேஜஸு, சாந்தி, பானஞ்செய்ய வேண்டுமென்னுமிச்சை, நித்திரை, சோம்பல், நரைதிரைமூப்பு, படுத்வம், ஞானம், அஞ்ஞானம், ஆசை, அபேக்ஷை, பலம், பலவீனம், உதிரம், மச்சை, சர்மம், நேத்ரம், வாக்கு, பொய், மெய், நானாவிதமாகிய நாடிகள், என்று புத்தியினாற் கற்பிக்கப்பட்ட பேதரூபமாயிருக்கின்ற இவைகளெல்லாம் நானாகவேயிருந்து அதனதன் செயலையும், அதனதன்பயனையும், செய்பவளாயிருக்கின்றேன். இந்த விவகாரத்தில் என்னைவிட்டுப் பிரிந்திருக்கிறவஸ்து ஏதேனுமென்றுண்டோ இல்லையல்லவா, ஆகையால் எல்லாப்பொருளும் நானென்றே நிச்சயஞ்செய்து யோசிப்பாய். எல்லாம் நானாகுங்காலத்தில் அவ்வப்பொருளின் வண்ணமாக நான் ஏன் ஆகமாட்டேன் சொல்வாயாக. முன் நான் புனருற்பவகாலத்தில் தேவசமுகத்தி லெண்ணப்பட்ட கௌரி, பிராம்ஹி, ரௌத்ரி, வராகி, வைஷ்ணவி, சிவா, வாருணி, கௌபேரி, நார்சிம்ஹி, இந்திராணி என்கிறநானாவி

✲ த்ரிஸ்யம் - சிவன் ▮ அத்ரிஸ்யம் - பார்வதி தேவி

தமான நாமங்களைத் தரித்தவளாயும், அந்தந்தச் சக்திசொரூபியாயும் அந்தந்தச் சக்திக்குரிய சாமர்த்தியங்களைச் செய்துவருகிறேன். உற்பவமாகிய சகல பதார்த்தங்களும் தொழிற்படுங்காலத்தில் அவைகளை நிமித்தமாய்வைத்துச் சகலகாரியங்களையும் நானே செய்கின்றேன். எங்ஙனமெனில்; சலத்தில் தண்மையாயும், அக்னியில் உஷ்ணமாயும், சூரியனிடத்தில் பிரகாசமாயும், சந்திரனிடத்தில் பனியாயுமிருந்து அவ்வக்காரியங்களைச் செய்து வருகின்றேன். பிரபஞ்சவிவகாரத்தில் சீவகோடிகள் என்னுடைய சம்பந்தத்தை விட்டுச் சிறிதும் அசைவதற்குச் சாமர்த்தியமுடையனவாகமாட்டா. இது நிச்சயம்.

(கள) உன்னிடத்தி லோருண்மை கூறுகின்றேன். இக்குண்ருத்ரர் தைத்தியர்களைச் சங்கரிப்பதற்கு என்னைவிட்டிருப்பாராயின் ➻ சங்கரிக்கும் தன்மையுடையவராவரா! உலகத்தில் பலஹீனமாயிருக்கின்ற ஒருவனைப் பார்த்துச் சக்திஹீனனென்றும் சொல்லுகின்றார்களல்லவா! ✯ அதமனாயிருக்கின்றவனும் மற்ற யாவரும் சக்திஹீனனென்று சொல்வதுபோல் விஷ்ணுஹீனனென்றும் உருத்திரஹீனனென்று சொல்லுகிறதில்லை. கீழேவிழுந்தவன், தடுக்கப்பட்டவன், பயந்தவன், மந்தன், சத்துருவசப்பட்டவன், இவர் போன்றவர்களை யசக்தர்களென்று சொல்லுகின்றார்களேயன்றி அருத்திரன் அவிஷ்ணுவென்றுஞ்சொல்லுகிறதில்லை. நீ எவ்வாறெல்லாம் சிருஷ்டிக்கின்றனையோ அதற்கெல்லாங்காரணம் சக்தி நீ எப்பொழுது சக்தியோடு கூடினவனாகின்றனையோ அப்பொழுது எல்லாவற்றையுஞ் செய்கின்றவனாகின்றாய். உன்னைப் போலவே அரி அரன் இந்திரன் அக்னி சந்திரன் சூரியன் யமன் துவஷ்டா வருணன் வாயு முதலியோரு மென்றறிவாய். இப்பூமி எப்பொழுது சக்தியோடு கூடுகின்றதோ அப்பொழுது எல்லாவற்றையுந் தரித்திருக்கும் நிலைமையுடையதாகின்றது. சக்தியீனமாகின்ற போது ஒரு பரமாணுவையேனும் தரிப்பதற்குக்கூடாத அசக்தத்தன்மையை யடைகிறது. இதுபோலவே ஆதிசேஷன், கூர்மம், மற்றுமுள்ளதிக்கஜ முதலியவைகளும் என்னுடைய அம்சத்தையடைகிற பட்சத்தில் அதன்தன் காரியங்களைச் செய்வதற்குச்சாமர்த்திய முடையவைகளாகும். நான் ஒருக்கால் தத்துவங்களுக்குள்ளேஜலரூபமாகிய சர்வதீர்த்தங்களையும் பானம் பண்ணவேண்டு மென்றிச்சிப்பேனாயின் பானம் பண்ணுவேன். எல்லாவற்றையும் அழிக்கிற அக்னியை யழிக்க எண்ணுவேனாயின் அழித்துவிடுவேன். எல்லாவற்றையும் அசைபிக்கின்ற வாயுவை அசையவொட்டாமல் நிறுத்த நினைப்பேனாயின் அப்படியே நிறுத்துவேன். இவ்வாறு எந்தெந்த

✯ அதமனா - பரலோக இகலோக புத்திகள் இல்லாதிருக்கிற சீவனைக் கொண்ட சரீரம்
➻ சங்கரிக்கும் - அழிக்கும்

பூதங்களை எப்படி எப்படி நடத்த வெண்ணுகின்றேனோ அப்படி யப்படி நடத்துவேன். ஓ பிரமனே! இவ்வுண்மையறியாத *அசத்துக்களுடைய சந்தேகரூபமான அபிப்பிராயத்தை நீ யொருக்காலும் மனதிற்கொள்ளாதை, அணுவணுவாய்ப் பிரித்துப் பரமாணுவாகப் பார்ப்பதாகிய "பிராகபாவம்" (முன் அபாவம்) எனவே, கடம் மிருத்திகையிலும் ஓட்டிலும் முன் எப்படியில்லையோ அப்படியே பிரபஞ்சமு மில்லையாகும், ஆயின் இப்பிருதிவியானது எவ்வாறு சூனியமாய்ப் போய்விட்டது என் றாராயின் மண்மயமாகி பிண்டத்தினின்றும் பிரத்வம்சா பாவமாகப் போயிற்றென் றறியத்தக்கது. ஓ பிரமனே! சாஸ்வதம், க்ஷணிகம், சூனியம், நித்யம் அநித்யம், கர்த்தாவோடு கூடியது, அகங்காரம், என ஏழு பேதங்களாகத் தத்துவங்கள் சொல்லாப்பட்டிருக்கின்றன. இவைகளில் அகங்காரதத்துவம் முதன்மையானது, இந்த அகங்காரதத்துவம் மமகாரதத்துவத்தினின்றுந் தோன்றியது, நீ அந்த அகங்காரதத்துவத்தைக்கொண்டு எல்லாப்பூதங்களையும் முன்போல் சிருட்டி செய்யக்கடவாய்.

(ஙக-ருங) இனி நீங்கள் என்னிடம் விடைபெற்றுப்போய் உங்களுக்குரிமையாகிய ◻ பதங்களைச் ☒ சிருட்டித்து அதிலிருந்து தெய்வத்தை மறவாமல் உங்களுக்குரிமையான காரியங்களைச் செய்து வருவீர்களாக. ஓ பிரமனே! நல்ல சௌந்தரியத்தையும், புன்சிரிப்பையும், வெள்ளாடையையும், திவ்யாபரணங்களையுமுடையவளாயும் ரஜோகுணத்தோடு கூடினவளாயும், சிறந்த ஆசனத்தில் வீற்றிருக்கின்ற மகா சரஸ்வதி என்னும் பெயருடைய ஸ்ரேஷ்டமான இந்த சத்தியை உன்னுடைய சிரீடார்த்தம் மனைவியாகக் கொள்வாய், இந்த மகாசக்தி உன்னைவிட்டு எப்பொழுதும் பிரியாள், என்னுடைய

* பிராகபாவம், பிரத்வம்சாபாவம் என்பன உலகமொடுங்குமுறைமைக்குக் காட்டிய இலக்கணங்களாக விருக்க இவ்வும்மையறியாத வேதாந்திக ளென்றழைக்கப் படுஞ்சிலர் இவ்வபாவ வாக்கியங்களைக்கொண்டு பிரபஞ்ச மென்பது ஏது! சூன்யம், உண்டென்பது பிராந்தி; ஆகையால் ஒரு பொழுதுங்கிடையாது என்று துர்ப்போதங்களைச் சொல்லுவது இயல்பாகலின் அப்போதங்களை உண்மையென்று கொள்ளாதிருத்தற் பொருட்டு "அசத்துக்களுடைய சந்தேகரூபமான அபிப்பிராயத்தை நீ ஒருக்காலும் மனதிற்கொள்ளாதை" என்று தேவி கூறியருளினரென்க. உண்மையாதெனின், "மண்ணிலுண்டாகியபாண்டங்கள் எப்படி மண்ணினிடத்தில் காணப்படவில்லையே அப்படி மாயையினிடத்தில் சர்வசக்தியாகிய தேவி பூதபவுதிகங்களையுண்டக்குவதற்கு முன் சராத்தராத்மகமாகிய பிரபஞ்சங்காணப்படவில்லை. என்றுணர்த்தியதென்க. இதனால் பாண்டமுதலிய வுருவபேதங்கள் மண்ணினுடைய காரியமேயாயினும் அவைகுலாலன் சத்தியினாலன்றி யாகாதது போல் சிவசத்தியாலன்றி யாகாதென்று விரக்கியதென்பக.

◻ பதங்கள் - பொதுவான உயிர்களை ☒ சிருட்டித்து - பிறப்பித்தல்

அம்சபூதையாயும், எல்லாராலும் பூஜிக்கப்பட்டவளாயும் இருக்கின்ற இவளை நீ நமக்கு மனைவியா யிருக்கின்றாளென்று அலட்சியஞ்செய்யாதை, இவளுடன் நீசத்தியலோகஞ்சென்று சீக்கிரமா யுற்பத்தி காரணமாயிருக்கின்ற சராயுஜமுதலிய நான்குவிதமாயுள்ள பீஜங்களை யுண்டுபண்ணக்கொண்டு கன்ம சகிதமாயிருக்கின்ற ஆன்மகோடிகளுடைய முன்னுள்ள சுபாவகுணங்களையறிந்து அவைகளுக்குத் தக்கவாறு கால, கன்ம, சுபாவங்களை நியமனஞ்செய்து லிங்காங்க பகாங்கங்களுடையனவாக முன்போல் சிருட்டித்து வருவாய். மஹாபலிஷ்டராகிய இந்தவுருத்திரர் உனக்குச் சகாயமாக விருப்பார், நீ சுகமுற்றிருப்பாயாகவென்று எனக் காசிபுகன்று பின்னர், விஷ்ணுமூர்த்தியை நோக்கி ஓ விஷ்ணுவே! மநோகரையா யிருக்கின்ற இந்த மஹாலக்ஷ்மியை நீ வரித்துக்கொள்வாய், உன்னுடைய கிரீடா நிமித்தமாய் என்னால் கொடுக்கப்பட்ட சர்வசம் பத்தையுங் கொடுக்கின்ற மங்களகரையாகிய இந்தச்சத்தியானவள் உன்னுடைய மார்பில் எப்போதும் வீற்றிருப்பாள், இதிற்சந்தேகமில்லை. இவள் உன்னால் மனைவியென்றெண்ணப்பட்டு இகழப்பட்டவளல்லள் மதிக்கப்பட்டவள். இனி! நீ இலக்ஷிமீ நாராயணனென்னும் பெயருடையவனாவா யென்றவருக் காசிபுகன்றபின்னர் மீண்டும் என்னைப்பார்த்து ஓ பிரமனே! இந்த லக்ஷிமிநாராயணன் உன்னால் மதிக்கத்தக்கவன், பூஜிக்கத்தக்கவன், சத்துவகுணப்பிரதான. ஆகயால் உன்னிலுமேம்பட்டவன், இவன் எவ்வக்காலங்களில் அசுர ருபத்திரவமும், உலகில் யாவராலுஞ்செய்தற்கரியனவாகிய காரியமும் உண்டாகுமோ அவ்வங்காலங்களில் மாநுடயோனிகளிலாவது திரியக் யோனிகளிலாவது பிறந்து உபத்திரவத்தைப் போக்கிக் காரியத்தைச் செய்து முடிப்பான்.

பின்னர் மூவரையும் பார்த்து உங்களுக்கும் ஏனைய தேவர்கட்கும் போஷணை நிமித்தம் யாகங்கள் ஏற்படுத்தியிருக்கின்றேன், ஆகையால் அந்தணர் அரசர் வைசியர் என்னுமூவரும் பரிசுத்தமுடையவராய் வேதவிதிப்படி தக்ஷிணையோடு யாகாதிகளியற்றி ஆராதித்துவருவார். அந்த யாக அவிர்ப்பாகங்களை நீங்களேற்கும்பொழுது என்னுடைய நாமத்தை யுச்சரித்துத் திருப்தியடைந்து சந்தோஷசித்தராயிருப்பீர்களாக வென்று கூறி என்னையும் அரியையும் பார்த்து அயனரிகளாகிய நீங்களிருவரும் இந்திராதிதேவரும் எந்த யக்ஞத்தினுந் தமோகுணப் பிரதானராகிய உருத்திரருக்கு எந்த வித்திலும் பிரயத்தினப்பட்டு முதலில் அவிர்ப்பாகத்தைக்கொடுத்து சாக்கிரதையாய்ப் பூசித்துவரவேண்டும். அவரெந்த வித்திலு மதிக்கத்தக்க மேம்பாடுடையவர். இது நிற்க

விஷ்ணுமுதலாக வெண்ணப்பட்ட உங்களால் வெல்லக் கூடாத அசுரர்கள் மேலிடுங்காலம் வருமாயின் அக்காலத்தில் என்னிடத்தி னின்றும் வராகி, வைஷ்ணவி, கௌரி, நாரகிம்ஹீ, ரௌத்ரீ முதலியசத்திக் கூட்டங்கடோன்றி அவர்களைச் சங்கரித்து விடுவார்கள். ஆகையால் எப்பொழுதும் தியானிக்கத்தக்க பீஜாக்ஷரத்தோடு நவாக்ஷரமந்திரத்தைச் செபித்து சகலகாரியங்களையுஞ் செய்துவருவீர்களாக. இந்த மந்திரமானது மந்திரங்களுக்குள் உத்தமமான தென்று நீங்களும் அறிந்திருக்கின்றீர்களன்றோ, ஆகையால் சர்வகாம சித்தியின்பொருட்டு அதனை எப்பொழுதும் இதயத்தில் தியானிக்கத்தக்கது, நீங்கள் மூவரும் அவிரோதமுடையவர்களாக விருக்கக்கடவீர். என்னுடைய முக்குணத்தினின் றுந் தோன்றின வராதலால் யாவராலும் மதிக்கப்பட்டவராப் பூஜையேற்குங் கடவுள்களாக ஆவீர்கள். இதிற் சந்தேகமில்லை.

(ருசு-கூசு) இவ்வுண்மையறியாமல் எவராயினும் உங்களை அவமதிப்பாராயின் நரகத்தையடைவர் ஓவிஷ்ணுவே! உனக்குள்ள முக்குணங்களில் முக்கியமான சத்துவகுணம் பரமாத்ம சிந்தனையிலேய ரஜோகுணம் இலக்ஷிமியோடு கூடி கிரிடிப்பதாகியலீலாவிலாசங்களிலேயும், தமோகுணம் அசுரசங்காரங்களிலேயும் இருப்பதாகவைத்து. அவ்வப் பிரயோசனங்களை யடைந்துவருவாய் வாக்பீஜம், தாமபீஜம், மாயாபீஜமென்று சொல்லப்படும் மூன்று பிஜாக்ஷரங்களோடு கூடினதாகியும், பரமார்த்தத்தைக் கொடுப்பதாகியுமுள்ள மஹாமந்திரம் உனக் குபதேசித்திருக்கின்றே னன்றோ அம்மந்திரத்தை இரவும் பகலும் இடைவிடாது செபித்துக்கொண்டு வருவாய், அவ்வண்ணஞ்செய்து வருவையாயின் உனக்கெப்பொழுதும் பயங்கரமான அகாலமரணம் வரமாட்டாது. ஆகையால் இனி நீ வைகுண்டத்தையுண்டுபண்ணி அதிலிருந்து முன் கூறிய செபத்தினாலே உலகை ஓ ரக்ஷிக்கின்றவனாய் சுகஜீவியாய் வாழ்ந்திருப்பாயாகவென்று விஷ்ணுமூர்த்திக் கனுக்கிரகஞ்செய்தனர்.

(சுரு-அருஏ) பின்னர் உருத்திரமூர்த்தியைப்பார்த்து மிக இனிய வார்த்தையோடு நீர்மனோகரையும் மஹாகாளியுமாகிய கௌரியை வரித்துக்கொண்டு ஸ்ரீ கயிலாயத்தையுண்டுபண்ணி அதில் எப்படியிருந்தாற் சுகமோ அப்படியிரும், நீரெப்பொழும் * தமோகுணப் பிரதானராகவேயிரும், உமக்கு முக்கியம் தமோகுணம், சத்வர

* ஆன்மாக்களுடைய தமசை (அஞ்ஞானத்தைப்) போக்கடித்தலாகிய குணத்தில் முற்பட்டிரும்.
ஓ ரஷிக்கின்றவனாய் - காக்கின்றவனாய்

ஜோகுணங்கள் கவுணம் (இரண்டாம்பக்ஷம்) (அங்ஙனமாயினும் சிருங்காரலீலையிலும், அசுரசம்ஹாரலீலையிலும் ரஜோகுண தமோ குணங்களையும், தவத்திலும், பரமாத்மசிந்தனையிலும் சத்வகுணத்தையும் கொள்ளல்வேண்டும். உலகத்திலுள்ள சராசரங்களெல்லாம் முக்குணவசப்பட்டவைகளேயன்றி அவைகட்கு வேறாயுள்ளனவன்று. காணப்படும் வஸ்து எதுவோ அது முக்குணசம்பந்தமுள்ளதே, என்னிடத்தினின்று தோன்றிய பொழுதும் முக்குணரகிதமாக எதுவுந் தோன்றியதின்று. இப்பொழுதுந்தோன்றுவ தில்லை. ஆகையால் அவைகளைத் தொழிற்படுத்துங்கால் அக் குணவசத்தராயிருந்தே செய்யவேண்டியது அவசியமானதென்று உருத்திரமூர்த்திக் கனுக்கிரகஞ்செய்து பின்னர் மூவரையும் நோக்கி ஓ பிரஹ்ம விஷ்ணு ருத்திரர்களே! நீங்கள் ஒவ்வொருவரும் முக்குணங்களைச் செலுத்தவேண்டிய முறைமைகளைக் கூறினோம். ஆயினும் நீங்கள் மூவரும் சிருட்டி திதி சங்காரமென்னுமுத் தொழிலுக்குத் தனித்தனி கர்த்தர்களாகையினால் அவ்வத்தொழிலுக் குரிய குணங்களையே பிரதானமாகக் கொண்டு வாழ்வீர்களாக. நான் சராசராத்மசமாகிய சகலப் பிரபஞ்சங்களையும் எப்பொழுது சங்கரிக்கின்றேனோ அதுவரையில் உங்களுக்கு விதித்த சிருட்டி திதி சங்காரமாகிய என்னுடைய லீலைகள் குறைவின்றி நடந்து வரும், அச்சங்காரகாலத்தில் அவைகளுங் கெடும், நீங்களும் என்னிடத்தில் ஓடுங்குவீர்கள், நான் ஒடுங்கத்தக்கவளல்லள். ஏனெனில் நான்குணங்களோடு கூடுகின்றகாலத்தில் சகுணையாயும், அக்குணங்களுக்கு வேறாகின்ற காலத்தில் நிர்க்குணையாயும் இருக்கின்றவளாகையால் குணரூபங்களாகிய யாவும் ஓடுங்குவதற்கும் உதிப்பதற்கும் காரணமாக விருக்கத்தக்கவளாகும், அழிவதற்கும் ஆவதற்கும் ஏதுவாகிய காரியப்பொருளாவதில்லை. காரியப்படும் பொருள்களெவையெனின்! மகத்தத்துவம், அசுங்காரதத்துவம், குணங்கள், சத்தாதிகள் முதலியன. இவைகள் ஒன்றுக்கொன்று முதலாகுங் காலத்தில் அதுவது காரணமெனப்பெயர்பெறும். ஆகவே யான் காரியப்படாத காரணமெனவும், தத்துவங்கள் காரியப்படுங் காரணங்களெனவும் அறியற்பாலன.

எங்ஙனமெனின், அகங்கார முதலாகக்கூறிய தத்துவங்களுக் கெல்லாங்காரணம் மகத்தத்வம். அதற்குக்காரணம் சிவஸ்வரூபமாகிய யான். காரணமாகிய நான் ஆதியில் காரியப்படுத்தியது அகங்காரதத் துவத்தை, அதினின்றும் சத்துவமுதலிய மூன்றுகுணங்களும், மகத்தத்வாத்மகமாகிய புத்திதத்துவமும் ஏனையவுந்தோன்றின. ஆகவே மகத்தத்துவம் அகங்கார தத்துவத்திற்குக் காரணம், மகத்தத்துவத்தினின்றுங்காரியப்பட்ட இந்த அகங்காரதத்துவம் தன்மாத்திரைகளுக்குக் காரணம், தன் மாத்திரைகள்

பஞ்சபூதங்களுக்குக் காரணம், ஆகாசமுதலிய பஞ்சபூதங்காரணமாகச் சுரோத்திராதி ஞானேந்திரிய பஞ்சகம், வாக்காதி கன்மேந்திரிய பஞ்சகம், மனமொன்று ஆகிய இப்பதினாறுங் காரியகாரணமாகத் தோற்றப்பட்டுவரும். இவ்வாறு ஆதி சிருட்டியில் உற்பத்தியாகின்ற யாவும் இப்பொழுது சொல்லிவந்த முறைப்படியேதான் சிருட்டி யாகுங்கிரமம். (இச்செய்தியிங்ஙனமிருக்க) ஆதிபரமபுருஷராகிய பரமாத்மா (பரசிவம்) காரணமுமன்று, காரியமுமன்று, இந்த பரமாத்மா காணப்படுபொருள் போல் காணப்படார், நீர்க்குணமாச் சர்வவியாபகமாயுள்ளவர். நான் எல்லாவற்றிற்குங் காரணமாகயிருக்கின்ற அக்காரணத்தால் சகுணையாகவும், சீவர்களுடைய இருதயத்தில் நீர்க்குணையாகவும் இருக்கின்றேன். இதனுண்மை எடுத்துச் சொல்லப்புகின் இப்பொழுது முடிவதன்று சிலவற்றைச் சங்கிரகமாகச் சொல்லிமுடித்தேன். இனி நீங்கள் என்னுடைய காரியார்த்தமாக இந்த விமானாரூடராய்ப் போகக்கடவீர்கள், உங்களுக்கு ஏதேனுந் துன்பம் வந்தணுகுமாயின் அக்கணமே என்னை நினையுங்கள் அப்பொழுது நான் தரிசனங்கொடுக்கிறேன். நானும் பரசிவமுமே தியானிக்கத் தக்கவர்கள். உமாமஹேஸ்வர ராகிய எங்களைத் தியானித்தால் சர்வகாரியசித்தியும் சந்தேகமில்லாமல் உண்டாகுமென்று அனுக்கிரஹித்தனள். ஓ நாரதனே! இவ்வாறு தேவியானவள் கருணையுடையவளாய் எங்கள் மூவருக்கும் தத்துவோற்பத்தியையும், சிவதத்துவ சக்திதத்துவ வுண்மைகளையும் அனுக்கிரஹித்து கலைவாணிமுதலிய சத்திகளையுஞ்சேர்த்து நவாக்ஷரி மந்திரத்தால் சம்ஸ்காரமுஞ்செய்து விடைகொடுத்தனள். நாங்கள் மூவரும் அவரவருக்குரிய மஹாசரஸ்வதிமுதலிய சத்திகளோடு பிரயாணப்பட்டு தேவீசொரூபத்தைத் தியானித்து சந்நிதானத்தைவிட்டு வெளிவந்து ஸ்திரீரூபத்தினின்றும் நீங்கி புருஷரூபத்தையடைந்து விமானாரூடராய் வரும்பொழுது அந்த த்வீபமும் தேவியும் சமுத்திரமும் மறைந்துபோயின. நாங்களேறிவந்த விமானமும் மறைந்துபோயிற்று. அப்பொழுது அதிசயித்துப் பார்க்கும் பொழுது முன்மதுகைடபர் எந்தவிடத்தில் யுத்தஞ்செய்தார்களோ அந்தவிடத்தில் நாங்களிருக்கக்கண்டோம்.

முன்றாம் ஸ்கந்தம் ஆறாம் அத்யாயம் பிரம்ஹாதீனம்
ஸ்ரீ தேவி நிஜரூபோபதேசகதனம்
முற்றிற்று.

ஆஉ அத்யாயம் சு - க்கு ஸ்லோகம் ( )

ஸ்ரீ தேவ்யை நம:

ஏழாம் அத்தியாயம்

பிரமாண்டோற்பத்தி

(க-கO) ஓ முனிகணங்காள்! பிரம விஷ்ணு ருத்திரர்கள்முன் கூறப்பட்ட மகிமையோடு கூடிய தேவியையும், தேவி அம்சங்களான சக்திகூட்டங்களையும், தரிசிக்கப்பெற்ற அற்புதத்தைப் பிரமன் கூறக்கேட்ட நாரதர் பரமானந்தமடைந்து அடியில் வருமாறு கூறத்தொடங்கினர். ஆதியாகியும், கெடுக்கப்படாதவராகியும், நாசமில்லாதவராகியும், குணரகிதராயும், நிஷ்கல்மிஷராகியு மிருக்கின்றபுருஷன் (பரமாத்மா) ஒருவனுளனென்று தேவி கூறியதாகச் சொன்னீரன்றோ, அவர் எப்பொழுதாவது தரிசிக்கப்பட்டிருக்கின்றனரா! அநுபவிக்கப்பட்டிருக்கின்றனரா! என் தந்தையாகிய ஓ பிரமதேவரே! முக்குணங்களோடு கூடிய சக்தியானவள் காணப்பட்டனளேயன்றி நிர்க்குணையென்று சொல்லிய அச்சத்தி காணப்படவில்லை அவள் எப்படிப்பட்டவள்! அவ்வுண்மைதெரியவில்லை; ஆகையால் முன் சொல்லியபரமபுருஷனுடைய நிர்க்குணசொரூபத்தையும், நிர்க்குணை யாயிருக்கின்ற சத்தியினுடைய சொரூபத்தையும், எனக்கு சொல்ல வேண்டும். நான் முன்னோர் நிமித்தத்தினால் ஸ்வேத த்வீபத்தில்ஓர் அரிய தவஞ்செய்தேன். அப்பொழுது கோபத்தைச்செயித்தவர்களாகியும், சித்தபுருஷாளாகியும், மஹாத் மாக்களாயுமிருக்கின்ற முனிவர்கள் தரிசனமாயினர். அக்கூட்டத்தில் நீர் சொன்ன பர்மாத்மாவானவர் என்னுடைய திருஷ்டிக்கு அவர்களைப் போலும் விஷயமாகக் காணப்படவில்லை நான் அந்த ஸ்வேத த்வீபத்தில் அடிக்கடியும் தீவிரமாகிய தவத்தைச்செய்திருக்கிறேன். அப்பொழுதெல்லாம் என்றந்தையே! குணசகிதமாகிய சிவமும், அத்யந்தம் மனோரமையாகிய சக்தியுந் தரிசிக்கப்பட்ட னரேயன்றி நிர்க்குணையாகிய சக்தியும், நிர்க்குணராகிய பரமாத்மாவுந் தரிசிக்கப்பட்டார்களில்லை. அவ்வரிய பெரியோருடைய சொரூபங்களைச் சொல்லுமென்று கேட்க, பிரமன் புன்சிரிப்புடன் விடைகூறத் தொடங்கினன். ஓ நாரதனே! குணராகிதராயிருக்கின்ற பரமாத்மாவினுடைய ரூபமானது திருஷ்டிக்குக் கோசரம் ஆகவே மாட்டாது. ஏனெனில் எது த்ருசியம் அது நஸ்யம். ஆகையினாலே அதிர்சியமானது எப்படிகாணப்படும், குணரகிதமாயிருக்கின்ற சக்தியும் சிவமும் அறிவதற்குக் கூடாதவர். அறியவேண்டுமாயின் மஹரிஷிகள் போல் ஞானத்தினாலுணர்ந்து தியானித்தல் வேண்டும்.

(சுக-உக) ஓ நாரதனே! ஆதியந்தமில்லாத அந்த பிரகிருதிபுருஷர் (சக்திசிவங்கள்) அன்பினா லடையத்தக்கவர், அன்பற்றவர்

களாலடையக் கூடாதவர், சொல்லுக்கு அர்த்தமாய்த் தெரிந்துகொள்ள தக்கவர், தேஜோரூபியாயுள்ளவர், அவருடைய தேஜஸானதுசரம அசரமாகிய எல்லாப்பொருளிலும் வியாபகத்தை யடைந்து நித்ய மாயிருக்கின்ற படியால் சிவமும் சத்தியும் எல்லாப் பொருளிலும் வியாபகமாயிருக்கிறதென்று கூறப்பட்டன வென்றறியக் கடவாய் சகத்தில் சிவசத்திகளைப் பிரிந்திருக்கிற வஸ்து வொன்றுமில்லை. எப்பொழுதும் நாசரகிதர்களாகியும், ஒரே வடிவமாக விருக்கின்ற வர்களாகியும், சித் சொரூபிகளாயும், நிர்க்குண ரகிதர்களாகியும், நிர்மலர்களாகியும், பிரியாதவர்களாயு மிருக்கின்ற அச்சிவசத்திகள் தேகமாகிய ஆலயத்தில் தியானிக்கத்தக்கவர்கள். ஓ நாரதனே! பரசிவந்தான் சத்தி, சத்திதான் பரசிவம். இந்தச் சிவசக்திகளுக்குள்ள * அபேதத்தைச் சிறிதேனும் எவனும் அறியமாட்டான். வேதங்களைச் சாங்கமாக அத்யயனஞ்செய்தாலும் அந்தச் சிவசத்திகளாலுண்டாகும் சுகானந்தத்தை யறியலாமேயன்றி அவர்களை எவ்வாற்றானும் அறியமுடியாது. தாவரசங்கமமாகிய சர்வப்பிரபஞ்சமும் அகங்கார தத்துவத்தினின் றுந்தோன்றியது. இந்த அகங்காரதத்துவத்திற்கு வேறாகிய சிவசத்திசொரூபமானது அநேககற்பங்களானாலும் எப்படிகாணப்படுவதாகும், ஏனெனில் குணத்தோடு கூடினவள் நிற்குணமானவஸ்துவை நேத்திரத்தினால் எவ்வண்ணம்பார்ப்பான். ஆகையால் சகுணமூர்த்தியை நீ அறிவுடன் தியானஞ்செய்வாய். பித்த நீரால் வியாபிக்கப்பட்ட நாவானது உறப்புமுதலிய சுவையையும் உருவமுதலியவற்றையும் அறியவுங் காணவுங்கூடுமா! அதுபோல் முக்குணங்களால் சூழப்பட்டிருக்கின்ற மனமானது நிர்க்குணமான பரமாத்மாவை எப்படி தெரிந்துக்கொள்ளும்! குணங்கள் அகங்காரத்தினின்றுண்டாயது, அதனால் அதன் சம்பந்தமுடையது. அந்த பரமாத்மாவோ அகங்காரத்துக்கு அப்பாற்பட்டவர். எதுவரையில் குணசூனிய மாகவில்லையோ அதுவரையில் அந்த பரமாத்மாவினுடைய தரிசனம் எப்படி கிடைக்கும். எப்பொழுது சித்தத்தில் அகங்காரநிவர்த்தியுண்டா கின்றதோ அப்பொழுது அந்த பரமாத்மாவைத் தரிசிக்கலாம். அவர் தூலசூக்ஷமாதி பேதங்களால் இரண்டுருவமுடையவரென்று சொல்லப்படுவர். இரண்டில் சூக்ஷமமென்று சொல்லப்படும் உருவம் ஞானரூபம். அது எப்பொழுது சித்தத்தில் அகங்கார நிவிர்த்தி யுண்டாகின்றதோ அப்பொழுது அந்த பரமாத்மாவைத் தரிசிக்கலாம். ஆகையால் சகுணமூர்த்தியை அறிவுடன் தியானஞ்செய்துவருவாய் என்றனர்.

(உஉ-ருஉ) மூன்று குணங்கள் இது இதுவென்றும், அகங்காரம் <u>சாத்வீகம் ராஜசம் தாமசமென்கிறமூன்று பிரிவினையுடைத்தென்றுங்</u>

* அபேதத்தை - பேதமின்மையை

கேட்டிருக்கின்றேன்; அவைகளுடைய சொரூபங்க ளிதுவிதுவென்று தனித்தனியே சொல்லுவதுமன்றி நான் எதைத் தெரிந்துக் கொண்டால் பந்தத்தினின்றும் விடுபடுவேனோ அந்த ஞானாத் மகமான விஷயத்தையும், பலபலவாய் விரிந்திருக்கிற குணங்களையும், விவரமாகச் சொல்லவேண்டுமென்று பிரார்த்தித்தனர். பிரமன் ஓ பரிசுத்தனே! சத்தி-ஞானசத்தி, கிரியாசத்தி, திரவிய சத்தி என மூன்றுவகைப்படும். இந்த மூன்று சத்திகளும் முறையே சாத்விக முதலிய மூன்றுகுணசம்பந்த முடையவைகளாயிருக்கும். தாமசகுண சம்பந்தமுடைய திரவியசத்தியினின்றும் சத்த பரிச ரூப ரச கந்தங்கள் தோன்றும், இவ்வைந்தினையுந் தன் மாத்திரைகளென்று சொல்லப்படும். இவற்றிற்கு அதிதேவதைகள்-வாயு, சூரியன், வருணன், அசுவினிதேவதைகள். இந்த சத்த முதலிய வைந்தில் தனித்தனியே சத்தகுணாத்மகமான ஆகாசமும், பரிசகுணாத்மகமான வாயுவும், ரூபகுணாத்மகமான அக்னியும், ரசகுணாத்மகமான அப்புவும், கந்தகுணாத்மகமான அக்னியும், ரசகுணாத்மகமான அப்புவும், கந்தகுணாத்மகமான பிரிதிவியுந் தோன்றும், சத்தமுதலிய தன்மாத்திரையைந்துட், ஆகாச முதலிய பூதமைந்து ஆக பத்தும் இவைகளை யனுசரித்துத் தோன்றுமவைகளும், திரவிய சத்தியாகிய தாமச அகங்காரத்தினின்றுந் தோன்றுமவைகளாம். சுரோத்திராதிகளைந்தும், வாக்காதிகளைந்தும் ராஜச அகங்காரத்தினின்று முண்டானவைகளாம். இவை ஞானேந்திரிய கன்மேந்திரியங்களெனப் பெயர் பெறும். இந்திரியபஞ்சகங்களும், பிராணாதிவாயுபஞ்சகமும் ஆகப் பதினைந்தும் ராஜச அகங்கார சிருஷ்டி என்று சொல்லப்படும். இவையெல்லாங் கிரியாசத்தி சொரூபங்கள். இந்தக் கிரியாசத்தியே உபாதானம். இதனுடைய விருத்திகள் மேலே கூறிய தத்துவங்கள். மன முதலிய அந்தக்கரணங்கள் சாத்வீக அகங்கார சிருட்டியென்று சொல்லப்படும். இவற்றிற்கு அதிதேவதைகள்-சந்திரன், பிரமன், உருத்திரர், க்ஷேத்ரஜ்ஞர். இனி பஞ்சீகரணமுறையாவது யாதெனின்; முதலில் ரசதன்மாத்திரையை எடுத்து அப்பு பூதத்தை யுண்டாக்கி அதுபோலவே ஏனைய தன்மாத்திரைகளினின்றுந் தனித்தனியே புத்திதத்துவத்தினால் ஏனைய பூதங்களையுமுண்டாக்கி எல்லாவற்றையுஞ் சலதத்துவத்திலடக்கிப் பின்னர். சீவனைப் பிரவேசிப்பிக்கச் செய்கிறபொழுது நான் என்கிற அகங்காரஞானஞ் சிறிதுண்டாகிறது; இவ்வாறான பூதபஞ்சீகரணஞ்செய்து பிண்டமாக்கி அதில் சீவப்பிரவேசஞ்செய்வதாகிய சிருட்டியைச் செய்பவன்யான். ஆத்மக்கிருகமாகிய அந்த தேகதத்துவத்தை ரக்ஷிக்கின்றவர்

பகவானாகிய ஆதிநாராயணர். இவரால் தநுகரணாதிகள் குறைவின்றி நிரம்பிவரும்பொழுது ஒவ்வொரு தத்துவத்தினுடைய குணங்கள் விருத்தியடைகின்றன. அவற்றுள் ஓரம்சங் கூறுகின்றேன். ஆகாசத்தில் சத்தகுண விருத்தி யொன்றும், வாயுவில் சத்தமும் பரிசமும், அக்னியில் அவ்விரண்டனோடு ரூபமும், அப்புவில் அம்மூன்றனோடு ரசமும், பிரிதிவியில் அந்நான்கனோடு கந்தமும் ஆகிய குணங்கள் விருத்தியை யடைகின்றன.

இவ்வாறு குணவிருத்திகளாவதற்கு இடமாயுள்ள சரீரதாரி களாயுள்ள ஆத்மகோடிகள் எண்பத்துநான்குலக்ஷம் பேதங்களாகவிருக்கும். இப்பொழுது கூறிவந்த அண்டபிண்டங்களாகிய உருவங்களெல்லாம் பாமாத்மாவினுடைய ரூபங்களென்று சொல்லப்படும். இந்த விசாரம் வருமிடத்திற் கூறுகின்றேன். இவ்விடத்தில் பிரமாண்டவுற்பத்தி கூறிவந்தேனாகையால் அதனையே விரிவா யெடுத்துச்சொல்லவேண்டியது அவசியம்; ஆயினும் அந்த பரமாத்மா தூலசூக்ஷமாதி பேதங்களால் இரண்டுருவுடையவராகச் சொல்லப்படுகின்றது; இரண்டில் ஒன்றாகிய சூக்ஷமமாகிய ஞானரூபம் நிராகாரமாகவும், நிதானம் (எல்லாவற்றிற்கும் ஆதி காரணம்) ஆகவுஞ் சொல்லப்படுகின்றது, மற்றொன்றாகிய தூலரூபம் உபாசகருடைய தியானாதிகளில் வருகிற சகளரூபமாகும். அச்சகளரூபம் தூலரூபமென்று சொல்லப்படுமேயன்றி உண்மையயாராயின் காணக்கூடாத சூக்ஷமரூபமேயாம். எங்ஙனமெனின்; அந்த பரமாத்மாவினுடைய சகளரூபம் என்னை முதலாயினாருடைய சூத்திரரூபமாயுள்ள சரீரங்களை யசைப்பிக்கக்கொள்ளும் உருவமேயன்றிக் கன்மசம்பந்தத்தினால் வரும் உருவமன்றாகும், எனவே சிருட்டி முதலிய தொழில்களுக்குக் கர்த்தாக்களா யிருக்கின்றவர் பிரமனாதியர், அவர்களால் சிருட்டிக்கப்படுவோர் எனைய ஆன்மகோடிகள் ஆகவே பிரமனாதியர் *சூத்திரம் (கயிறு) சூத்திரம் போன்றவராகிய பிரமனாதியர் வழியில் சராசராத்மகமாகிய ஆன்மகோடிகள் பதுமைபோன்று நிற்பவர்கள்; ஆகையால் இவ்வான்மகோடிகள் சநநமரணமென்கிற சலிப்பினை (அசைதலை) யடைய, பிரமனாதியராகிய சூத்திரங்களை யசைப்பிக்கக்கொள்ளும் உருவங்களேயாம். ஓ நாரதனே! நீ "எதையுணர்ந்தால் பந்தத்தினின்றும் விடுபடுவேனோ அந்த ஞானாத்மகமான விஷயத்தையும்

* சூத்திரம், பதுமைகள், அசைப்பிக்கின்றவன்; அசைப்பிக்கின்றவனில்னாயின் சூத்திரமும், பதுமைகளுந் தொழிற்படா. அதுபோல் சூத்திரம் பிரமனாதியர், பதுமைகள் - ஆன்மகோடிகள், அசைப்பிக்கின்றவன் - பரமாத்மா, அவனிலனாயின் இவர் காரியப்படாரென்க.

சொல்லவேண்டும்" என்று கேட்டனையாதலால் அது இந்த விஷயந்தானென்று சூசிப்பிக்க ஈண்டெடுத்துக் கூறினேனென்றனர்.

மூன்றாம் ஸ்கந்தம் ஏழாம் அத்யாயம் பிரமாண்டோற்பத்தி முற்றிற்று.

———

ஆஉ அத்யாயம் எ - க்கு ஸ்லோகம் (ஙஅகூற)

———

ஸ்ரீ தேவ்ய்நம:

எட்டாம் அத்தியாயம்

———

* சத்வாதீநாம் சொரூபோபதேசம்.

———

(க-கஎ.) ஓ அப்பனே! இதுவரையில் நீகேட்டவைகளுள் சிலவற்றிற்கு விடை கூறிவந்தேன், இனிக் குணங்களுடைய சொரூபலக்ஷணத்தைச் சொல்லுகின்றேன் ஒருமைப்பட்ட மனமுடையவனாய்க் கேட்பாயாக. சாத்வீகம் ராஜசம் தாமசமென்று சொல்லப்பட்ட மூன்று குணங்களில் சத்வகுணமானது வெண்ணிறமுடையதாய்ப் பிரீதிவடிவமாய்ச் சுகத்தை யாதாரமாகவுள்ளது. அந்தச் சத்துவகுணத்தினின்றுந் தோன்றுவன-மாறுபடாமை, சத்தியம், ஆசாரம், சிரத்தை, பொறுமை, தைர்யம், தயை, நாணம், சாந்தம், சந்தோஷம், தர்மானுஷ்டானத்தில் பிரியத்தைச் செய்தல், எப்பொழுதும் சத்விஷயத்தில் சிரத்தையை யுண்டுபண்ணுதல், அசத் விஷயத்தில் சிரத்தையை நிவிர்த்திபண்ணுதல் முதலியன. இவைகள் அச்சத்துவத்தில் நீங்காதிருப்பன. இவற்றுள் சிரத்தை மூன்றுவிதமென்று தத்வஞானிகள் கூறுவர், அவை சாத்வீக சிரத்தை, ராஜசசிரத்தை, தாமசசிரத்தை என்பன. ரஜோகுணமானது சிவந்தநிறமுடையதாய் அப்பிரீதி வடிவமாய்த் துக்கத்தை யாதாரமாயுள்ளது. அந்த ரஜோகுணத்தினின் றுந் தோன்றுவன - அதிகத் துவேஷம், துரோகம், மாச்சரியம், டம்பம், பேராசை, நித்திரை, அசிரத்தை, மானம், அடங்காமை, கர்வ முதலியன. தமோகுணமானது கருமைநிறமுடையதாய்ப் பிரமிக்கச்செய்யு மியல்பாயுள்ளது. இந்த

* சத்வமுதலிய குணரூபங்கள் இவையென்றுணர்த்துதல்.

தமோகுணத்தினின்றுந் தோன்றுவன - துக்கத்தை விளைவித்தல், பிறருக்குத் தாபத்தை விளைவித்தல், ஆலஸ்யம், அஞ்ஞானம், நித்திரை, தீனபாவம், விவாதம் (சண்டை) கார்ப்பண்ணியம், கபடம், ரோஷம், வைஷம்யம், நாஸ்திகபுத்தி, புறங்கூறுதல், தமோரூப விஷயங்களில் சிரத்தை முதலியன. ஆகையால் புண்ணியத்தை விரும்புகின்றவன் சத்துவகுண விருத்தியை விருத்திசெய்து, ரஜோகுண விருத்தியை யடைக்கியாண்டே தமோகுண விருத்தியை யொழித்தல்வேண்டும். இம்மூன்று குணங்களுடைய விருத்திக ளொன்றுக்கொன்று பொருத்தமுடையன வாகக் காணப்படாமையால் ஓ நாரதனே! விரோதப்பட்ட வைகளாகவே யிருக்கும். இந்த மூன்று குணங்களும் பிரியாமலிருக்கின்ற மிதுனராசியைப்போல். சீவர்களை விட்டிருப்பதில்லை, சீவர்களும் குணங்களை விட்டிருப்பதில்லை. ஆகவே குணங்கள் ஒன்றைப்பற்றியிராம லிருக்கத்தக்கனவன்றென்று அறியற்பாலன. சீவர்களைப் பற்றியிருப்பதாகிய முக்குணங்களும் தனித்தனி இருப்பன அன்று, மூன்றுஞ் சேர்ந்தே யிருப்பன, இவைகளுடைய விருத்திகள் மாத்திரந் தனித்தனியிருப்பன, இதனைப் பின்னர் கூறுகின்றேன். ஒருவனிடத்து சத்வகுணவிருத்தி மேலிட்டு ருக்குமாயின் ஏனைய இரண்டுகுண விருத்திகளும் அடங்கியிருக்கும். அப்படியே ரஜோகுண விருத்தி மேலிட்டிருக்குங்காலத்தில் சத்துவ தமோகுணவிருத்திகளும், தமோகுணவிருத்தி மேலிட்டிருக்குங் காலத்தில் சத்துவ தமோகுணவிருத்திகளும், தமோகுணவிருத்தி மேலிட்டிருக்குங் காலத்தில் சத்வ ரஜோகுண விருத்திகளும் அடங்கியிருக்குமென் றறிவாய். ஓ நாரதனே! இப்பொழுது என்னாலே சொல்லப்பட்ட குணரூப விசாரத்தை உணரக்கடவாய்; மறுபடியும் சந்தேகம வைத்துக்கொள்ளவேண்டாம். இவ்வுண்மைகளும, இக்குணங்களுடைய அனுபவமும் அனுபவத்துக்கு வருங்காலத்தில் நன்றாயறியப்படும். அவ்வனுபவ காலமன்றிக் கேட்பதனாலேயும், சாத்திரங்களைப் பார்ப்பதனாலேயும், சத்கர்மாநுஷ்டா னங்களை யநுஷ்டிப்பதனாலேயும், அறியமுடியா.

(கஅ-ஙஉ.) எப்படியென்றால், பரிசுத்தமாகிய தீர்த்தமாகிமையைக் கேட்ட ஒருவன் ரஜோகுண சம்பந்தமாகிய சிரத்தை யுடையவனாய் அத்தீர்த்தத்தை யடைந்து அதன் றன்மையைப் பார்த்து நீராடி, அவ்விடத்திற் செய்யவேண்டிய தீர்த்தசிரார்த் தாதிகளியற்றி, தானமுங்கொடுத்து, சிலகாலம் வசித்து, பின்னர் முன்னிருந்தது போலவே ரஜோகுணத்தோடு கூடினவனாகவும், ராகத்துவேஷங்கள் நீங்காதவனாகவும், காமக் குரோதங்களாற் சூழப்பட்டவனாகவும்,

தன்னிடம்வந்து சேருவனாயின் அவனுக்குத் தீர்த்தஸ்நாதிகளால் வரும்பலன் வந்தனவோலென்றால் வந்தனவன்று. ஏனெனில் - பயிரிடவெண்ணங்கொண்டவொருவன் விளை நிலமல்லாத களர்நில முதலியவைகளில் மிகவுங் கஷ்டப்பட்டு உழுதும், விதைவிதைத்தும், களைபறித்தல் முதலிய சீர்ப்பாடுகள் செய்தும், மாடு முதலிய மிருகங்களால் கெடுதிவராவண்ணம் இராப்பகல் காத்தும், உண்டாக்கிய பயிர் பிரயோசனப்படுங்காலத்தில் பூச்சிகளால் பக்ஷிக்கப்படுமாயின் அவன் வருத்தமுற்றவனாவானே யன்றிப் பலன்பெற்றவனாவனா? அவ்வுழவனைப் போலவே "ரஜோகுண சம்பந்தமாகிய சிரத்தையுடையவனாய்த் தீர்த்த ஸ்நானத்துக்குச் சென்ற இவனும் வருத்தமுற்றவ னாவனேயன்றிப் பலன்பெற்றவனாகான்". இவ்விருவரும் பெற்றது கஷ்டமொன்றே, ஏனெனில்; விதைவிதைக்கத் தொடங்கினவனும் நிலத்திலுள்ள குற்றங்களை யாராயாது விதைத்தவன், ஸ்நானஞ்செய்யத் தொடங்கினவனும் தன்னுள்ளத்தினுள்ள குற்றங்களை யாராயாது செய்தவன்.

ஆகையால் நிலத்திலுள்ள குற்றங்களை யாராய்ந்தொழித்து, செய்யவேண்டுவனயாவுமுறைப்படச்செய்து, முடிவில் பிரயோசனமாகிய தானியத்தைப்பெற விரும்பும் உழவன் பலன்பெற்றுச் சுகமுறுவன். தீர்த்தபலனைப் பெற விரும்பினவனும் குணபேதங்களையும், குணங்களின் விருத்திபேதங்களையும் ஆராய்ந்து ஒழிக்கவேண்டு வனவற்றை யொழித்துக்கொள்ளவேண்டுவனவாகிய குணங்களைக் கொண்டு பின்னர் செய்யத்தகுவனவாகிய சத்கர்மங்களைச்செய்து அவற்றின் பிரயோசனத்தை ஆரம்பத்திற்றானே பெறவிரும்பாது முடிவிற்பெற விரும்புவனாயின் அவன் அவற்றின் பலன்களைப் பெற்றுச் சுகமுறுவனென்றறிக.

இதுகாறுங் கூறிவந்த உபமான உபமேயங்களால் முன் கூறியவாறு "குணங்களுடைய அனுபவம் தன்னனுபவத்திற்கு வருங்காலத்தில் நன்றாயறியப்படுமன்றி அதற்குமுன் கேட்குங் கேள்வியினாலும், பார்க்கும் பார்வையினாலும், அனுஷ்டிக்கும் அனுஷ்டானங்களினாலும் அக்குணங்களை யறியமுடியா" என்றதனை நான் விளக்கியதாகும். இச்செய்தி யிங்ஙனமிருக்க.

இனி முன்கூறிவந்த சத்துவமுதலிய குணங்களுடைய அனுபவம் - அதனதனுடைய அடையாளங்கள் இதுவிதுவென்று தெரிந்தாலன்றித் தள்ளுங்குணங்களும், கொள்ளுங்குணங்களும், செய்யுங் கருமங்களும் தோன்றாவாகலான் அவற்றைக் கூறுகின்றேன்.

(ஙங-ருக.) சத்வகுணம் இதுவென்றறிதற்கடையாளம் யாதெனின்; புத்தியானது - தர்மானுஷ்டானத்தில் பிரவிர்த்தித்திருக்கச்செய்தலும், தனக்குத் துன்பந்தரும், பாபார்ஜ்ஜிதமல்லாத திரவியத்தைத் தேடச்செய்தலும், யஞ்ஞாதி வேதகருமங்களை விரும்பச்செய்தலும், சாத்வீகமாகிய போகங்களிலே காமத்தைச் செலுத்தச்செய்தலும், மோக்ஷசாதனங்களிற் சிந்தனை யிருத்தச்செய்தலும், ஆன்மலாபத்துக்கு உதவியாகாத ரஜோகுண தமோகுண ப்பிரவிர்த்திகளிற் செல்லாதிருத்தச் செய்தலும், ராஜச தாமச குண ரூபிகளிடத்தில் சேராதிருக்கச் செய்தலும், அக்குணவிருத்திகளை வெற்றிகொள்ளச் செய்தலுமாம்.

ராஜோகுணம். இதுனெறறிதற் கடையாளம் யாதெனின்; சாத்திரா சம்பந்தமாயிருக்கின்ற தருமங்களை விட்டுவிடுவதும், ராஜச சம்பந்தமாயிருக்கின்ற சிரத்தையடைந்து அசாஸ்திரீயமான தருமங்களைச் செய்வதும், புண்ணியம் பாவமென்னும் பகுப்பின்றி திரவியத்தைத் தேடுவதும், ரஜோகுண சம்பந்தமாகிய போகங்களை விரும்புவதும், சாத்வீக தருமத்தை வெறுப்பதுமாம்.

தமோகுணம் இது வென்றறிதற் கடையாளம் யாதெனின்; வேதந்தினிடத்தும், வேதார்த்தை விளக்கவல்ல சாத்திரங்களிடத்தும் அவிஸ்வாசமும், தமோகுண சிரத்தையடைந்து திரவிய நாசஞ்செய்வதும், எல்லாரிடத்தும் துரோக சிந்தனை யுடைத்தா யிருப்பதும், சாந்தியில்லாதிருப்பதும் கோபமேலிட்டிருப்பதும், மூர்க்கமடைந்திருப்பதும், தன்னிஷ்டம்போல் நடப்பதுமாம்.

இவைகளேயன்றி, இம்முக்குணங்களுக்கும் வேறு குணங்களுஞ் சிலவுள, என்னையெனில் சத்வகுணமானது சாத்திர ஆராய்ச்சி யினாலே விருத்தியடையின் அது பிரகாசமுடையதாய் ராஜச தாமச விருத்தி சம்பந்தமான கிருத்தியங்களில் வைராக்கியத்தைச் செய்து ரஜோகுண தமோகுண விருத்திகளையும் நீக்கிவிடும். ரஜோகுணமானது - உலோபசம்மந்தத்தினால் விருத்தியடைந்து சத்துவ தமோகுண விருத்திகளை நீக்கிவிடும். தமோகுணமானது - அஞ்ஞானசம்பந்தத்தினாலே விருத்தியடைந்து ஏனைய இரண்டு குண விருத்திகளையும் நீக்கிவிடும். இவ்வண்ணம் சத்வமுதலிய மூன்று குணங்களில் ஒன்று பிரதானமாகும் பொழுது அது ஏனைய விரண்டு குணங்களையு நீக்கிவிடும்.

இப்பொழுது கூறிவந்த முக்குண வடையாளங்களும் ஒவ்வொருவரிடத்தில் ஒவ்வொருகுண வடையாளங்களிருப்பதன்று. யாவரிடத்தும் மிதுனதர்மம்போல் மூன்று வடயாளங்களாகச் சொல்லப்பட்ட செய்கைகள் யாவுமிருக்கும். ஏனெனில்

ரஜோகுணத்தைவிட்டு சத்துவகுணமும், சத்வகுணத்தைவிட்டு ரஜோகுணமும், இவ்விரண்டு குணங்களைவிட்டுத் தமோகுணமுமிருப்பதன்றென்றும், இம்முக்குணங்களும் சீவர்களை விட்டிருப்பதில்லை என்றும் முன்னமே கூறியிருக்கின்றேனாகையால் அம்முக்குண வடையாளங்களும் சீவர்களை விட்டிருப்பனவன்று. ஆகையால் சீவர்கள் முயலும் காரியப்பாடுகள் எவ்வச்சமயங்களில் எவ்வெவ்விதமாய் வருமோ அவ்வக்காரியப்பாடுகளுக்கேற்றவாறு அவ்வக் குணவடையாளங்க ளுண்டாகும்; ஏனெனில் இம்முக்குணங்களும் * பிரசவுதருமம் (தாயாகும்தருமம்) உடையது. சத்வகுணப் பிரதானனாகவேயிருக்கின்ற ஒருவனிடத்தில் ரஜேகுண மோகுணங்களும், அப்படியே ரஜோகுணப்பிரதானனிடத்தில் சத்வகுண தமோகுணங்களும், தமோகுணப்பிரதானனிடத்தில் சத்துவகுண ரஜோகுணங்களும் மண்ணினிடத்தில் கடகலசாதிகள தோன்றும் வகைபோற் றேன்றுகின்றன. ஆகையால் அறிவுடையவன் தானொடுத்த சரீரத்தைப் பார்த்து இது பர்பகர்மத்தினால் வந்ததல்லவா வென்றாராய்ந்து இப்பாவம் புத்தியின்கணிகழ்வதாகிய குணகன் மங்களாலென் றூகித்து இவைகளொழிக்கற்பாலனவாமென்றெண்ணி அந்தோ! இவைகள் தேவதத்தர், விஷ்ணு மித்திரர், யஜ்ஞதத்தர் முதலான பேருடையவரைப் போலும், ஆண்பெண்ணுருவமா யிருக்கின்ற மிதுனராசியைப்போலும், இருப்பதாகலான் நீங்குவதரிதென்று தெளிந்து சரீரசம்பந்தமுள்ள வரையில் நீங்காதனவாகிய காமம், குரோதம், லோபம், மோகம், ஆசை, துவேஷம், மதம், அசூயை, ஈரிஷை, பொறாமை, மனக்களிப்பு முதலாயினவற்றைத் திநேதிதே புத்தியின்க ணிகழாவண்ணஞ்செய்து சரீரத்தையும், சரீரசம்பந்தியாயிருக்கின்ற ஆத்மாவையும் பரிசுத்தஞ் செய்தல்வேண்டும். ஓ நர்ரதனே! இதுவரையில் ரஜோகுண சம்பந்தமும், தமசுக்கு இவ்விரண்டு குணசம்பந்தமும், சீவர்களுக்கு இம்முக்குணசம்பந்தமும் உடையனவென்று கூறினேனென்றனர். ஓவியாசரே! நான் இவைகளையெல்லாங் கேட்டவனாயிருந்தும் மறுபடியுங் கேட்கவேண்டியவனாகவேயிருந்து கேட்டேனென்றனர்.

மூன்றாவது ஸ்கந்தம் எட்டம் அத்யாயம் சத்வீதனாம் ஸ்வரூபோபதேசம்: முற்றிற்று.

———

ஆஉ அத்யாயம் அ - க்கு ஸ்லோகம் (சுசுO)

———

* ஒன்றிலொன்று தோன்றுகிறது. அஃதாவது பின்றோன்றும் பொருளுக்கு முன்தோன்றிய பொருள் தாயாயிருப்பது (காரணமாயிருப்பது)

ஸ்ரீ தேவ்யைநம:

ஒன்பதாம் அத்தியாயம்

சத்வாதீநாம் லக்ஷண கதனம்

(க-ங) நாரதர் - பிரமதேவனைப்பார்த்து ஓதந்தையே! தேவரீருடைய வாக்கினின்றும் அதிரசமாய்ப் பெருகிய குணலக்ஷண முதலியனவற்றைச் செவி என்கிறவாயினாற்பருகியுந் திருப்தியடைந்தேனில்லை; ஆகையினால் எனக்குத் திருப்தியுண்டாகும் வண்ணமாயும், எந்த விஷயத்தினால் யான் மேலாகிய சாந்தியை யடைவேனோ அந்த விஷயமாயு முள்ளது குணங்களுடைய விசாரஞானமா யிருத்தலால் அந்த ஞானத்தை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டு சிருஷ்டி கர்த்தாவாகிய பிரஹ்மா கூறுகின்றார்.

(சு-கக) ஓ நாரதனே? யான் குணங்களுடைய சொரூபம் இத்தன்மைத்தாமென்று நன்றா யறிந்தவ னன்றாயினும் ஒருவாறு என்னுடைய அறிவுக் கெட்டியவளவில் எடுத்துச்சொல்லுகிறேன். என்னையெனில், முக்குணங்களிற் சிறந்த சாத்வீகருணமே யாவரிடத்திலுஞ் சிறந்திருக்குமென்று நினையற்க. அப்படி ஒருவரிடத்திலும் இருப்பதாகக் காணப்படவில்லை. ஏனெனில், அம்மூன்று குணங்களும் ஒன்றோடொன்று கலந்திருக்குந் தன்மையுடையன வாகையால் எவரிடத்திலுங் கலந்தேயிருக்கும், இதற்குச் சிலதிருஷ்டாந்தங் கூறுகின்றேன்.

சர்வாலங்கார சம்பன்னையாகியும், அபிநயமண்டிதை யாகியு மிருக்கின்ற ஒரு ஸ்திரீயானவள் தன் புருடனுக்குந் தாய்தந்தை முதலிய பத்து வர்க்கங்களும் பிரீதியுடையவளாக விருக்கின்றாள். அவர்களல்லாத ஏனையோர்க்கும் அவள் நன் னடையும், நல்ல நய முடையவளென்றும். கற்பிலக்கண மறிந்து தருமநெறியில் நிற்கும் சாத்வீககுண முடையவளென்றும் எண்ணச்செய்து இன்பத்தை விளைவிக்கின்றாள். அவளே சககளத்தியருக்கு மாத்திரம் துக்கத்தையும், அஞ்ஞானிமாகிய விபரீதச் செயல்களையும் விளைவித்தற்குக் காரணமாகின்றாள். சககளத்தியருக்கு விளைவித்ததுன்பம் ஏனையோர்க்கு விளைவிக்கின்றனளா? அதுபோலும்; அக்கற்புடையவளே கள்வரால் பயந்து சிலர் ஓடிவருவாராயின் அவர்களுக்கு உபசாரஞ் செய்கின்றவளாகவும், அக் கள்வருக்குத் துன்பஞ்செய்யும் உபாயங்களைத் தேடுகின்றவளாகவும், தன் புருடனுக்குப் பரிவாரமா யிருக்கின்ற பரிசனங்களை ரோதனம்

பண்ணு கின்றவளாகவும் ஆகின்றாள். அதுபோலும்; மேகக் கூட்டங்களாலே சூழப்பட்ட துர்த்தினமானது மின்னல் இடி முதலியவைகளோடு கூடினதாயும், இருளா லடையப்பட்டதாயும், எங்கும் பெருகிவரும் பிரவாக முடையதாயும், தாமசரூபமென்று சொல்லப் பட்டதாயும், ஒருவரையும் வெளிவர வொட்டாமற் றடைசெய்வதாயும், சிதிலமான மேற்கூரை யுடையவர்களுக்கும் ஏழைமைக் குடிகளுக்கும், வைக்கோல் விறகு முதலிய பொருள்களைக் கொள்ளுகின்றவர்களுக்குந் துன்பத்தை விளைவிப்பதாயு மிருக்கின்றது. பயிரிடுகின்ற வுழவர்களுக்குச் சுகத்தை விளைவிக்கின்றது அது போலும்; ஓ நாரதனே? சத்துவகுணமானது ரஜோகுண தமோ குணங்களுக்குத் துன்பத்தையும், தன்னினமான விருத்திகட்டு இன்பத்தையுஞ் செய்து கூடிவாழ்ந்து தான் பிரகாசமாகவே யிருக்குமென றறிவாயாக.

(உ0-௯உ) ஓ புத்திரனே? இன்னமும் அக்குணங்களுடைய லக்ஷணங்கள் சில கூறுகின்றேன். சத்துவகுணமாவது, பிரகாச முடையதாய், களங்கமற்ற தாய், நேத்திரமுதலிய இந்திரியங்களுக்கு மனம் எப்பொழுதும் எப்படி விஷயங்களைத் தெளிவாய்த் தெரிவிக்கின்றதோ அப்படி நிர்மலமா யிருக்கின்ற அநேக பரமார்த்தங்களை அறிவிற் கறியச்செய்வதாய் விளங்குவது. ரஜோகுணமாவது கொட்டாவியையும் ஸ்தம்பம்போ லசைவற்று அறிவற் றிருத்தலையும், சோம்பலையும், சித்த சலனத்தையும், உண்டு பண்ணுவதாய், ஊருக்குப் போகவேண்டிய ஒருவன் போகும்வழியை எவ்வண்ணந் தேடுவானோ அவ்வண்ணம் பாபந்தேடும்வழியை நன்றாய்த் தேடச்செய்வதா யுள்ளது. தமோகுணமாவது ஞானத்தை மறைத்துச் சித்தத்துக்குச் சலனமுண்டாக்கிப் போர்புரிவதில் ஆவேசங்கொண்டு தலைப்பட்டிருக்கச் செய்வதாய், இந்திரியங்களுக்குச் சுகத்தைச் சூனியப் படுத்துவதாய், மனமுதலிய கரணங்களைச் சுவாதீனப் படுத்தாததாய், ஓய்ந்துறங்கவுஞ் செய்யாததா யுள்ளது. ஓ நாரதனே? குணங்களுடைய லக்ஷணங்களை இம் முறையாகவும் அறியவேண்டுமென்றார். நாரதர் ஓ தந்தையே! முன் கூறிய திருஷ்டாந்தங்களால் ஒன்றே சிலவற்றிற்குத் துன்பமாயும், சிலவற்றிற்கு இன்பமாயு மிருப்பதுபோல் குணங்க ளிருக்கு மென்று அறியலாயிற்று. இப்பொழுது கூறியலக்ஷணங்களை யோசிக்குங்கால் ஒன்றுக்கொன்று பெருஞ் சத்துருத்துவமாகவே காணப்படுகின்றன. இவைகள் ஒன்றாகக்கூடியிருந்து விவகாரங்களை எவ்வண்ணம் பிரகாசமாய் நடத்தும் அதைவிளங்கச் சொல்ல வேண்டு மென்று வினவ, பிரமதேவர் ஓ புத்திரனே! முற்கூறிய குணங்கள்

தீபவிருத்தியைப்போ லிருப்பன. எப்படியென்றால், தகளியும், திரியும், தைலமும் வெவ்வேறாயும், வெவ்வேறு குணங்களை யுடையனவாயும் இருந்த போதிலும் தீபம் பிரகாசிக்கும் பொழுது அம் மூன்று மின்றிப்பிரகாசிக்கின்றதா? அதுபோல் ஒரு குணம் பிரகாசிக்கும் பொழுது ஏனைய குணங்கள் தகளி முதலியனபோ லிருக்கின்றனவென் றறியற்பாலது என்று கூறவும், நாரதர் அதுவரையில் தான் கேட்டு வந்தவினாக்களுக்கெல்லாம்விடை பெற்று மகிழ்ந்தவராயினார். ஓ மஹருக்ஷிகாள்! பின்னர் நாரதர் தாம் பிரம்தேவரை வினாவியது போலுந் தம்மை வினாவிய வியாசரைப் பார்த்து ஓவியாசரே! நீர் என்னைவினாவிய வினாக்களுக்கு என்பிதா எனக்குச் சொல்லிய வண்ணஞ் சொன்னே னென்றார். வியாசர் நாரதரிடத்தில் தெளிந்தவண்ணம் ஜனமே - ஜயனைப்பார்த்துச் சொல்லத் தொடங்கினார்.

(நஙு-சுஅ) ஓ அரசனே! இதுவரையில் தேவி பிரமனுக்குச் சொல்லியதும், பிரமன் நாரதருக்குச் சொல்லியதும், நாரதர் எனக்குச் சொல்லியதும் முறையாகச் சொல்லிவந்த வகையினால் நீ என்னைக் கேட்ட சந்தேகங்கள் நிவர்த்தியாயிருக்கலாம். ஆயினுஞ் சில கூறுகின்றேன். யாவராலும் பூஜிக்கப்பட்ட பராசத்தியாகிய பரதேவதையானவள் காரியபேதத்தினால் சகுணையாகவும், நிர்க்குணையாகவும், தனக்குமேலொரு கடவுளும், துன்பமு மில்லாமல் சர்வவியாபகராய், நாசரகிதராய், பராபரராயிருக்கின்ற புருஷனாக (சிவரூபமாக)வும் இருக்கின்றாள். இந்த மஹாமாயா சொரூபிணியாகிய தேவியே சதசத்சொரூபமாகிய ஆன்மாக்களைப் படைக்கின்றாள். விநாயகர், சுப்பிரமணியர், பிரமன், திருமால், உருத்திரர், மற்றுமுள்ள தேவர்கள், சூரிய சந்திரர்கள், இந்திராசிதிக்பாலகர், அஸ்வனி தேவதைகள், அஷ்டவசுக்கள், துவஷ்டா முதலாகக் கூறப்பட்ட இவர்களெல்லாரும் சத்தி யம்சபூதர்களாக விருந்தாற்றான் தங்கள் தங்கள் காரியங்களைச் செய்வதற்குச் சக்தியுடையவர்களாவர்; சத்தியம்சம் இல்லாமற் போமாயின் சலிப்பதற்கும் முடியாதவர்களா யின்னமுங் கடவுளராக விரார். ஓ அரசனே? அந்தப்பரமேஸ்வரி தான் சகத்துக்குக் காரணம். ஆகையால் அந்தத் தேவியை நன்றா யாராதனஞ் செய்யக்கடவாய். அந்தத் தேவியினுடைய தந்திரத்தை யனுகரித்துச் சிறந்த பக்தியுடைய தேவி பூஜாத்மகமா யிருக்கின்ற யாகத்தைச் செய்வாய். அந்தச்சத்தியே மஹா லக்ஷிமி, மஹாகாளி, மஹாசரஸ்வதி, சர்வ பூதங்களுக்குந் தலைவி, சர்வகாரண காரணி, சர்வ காமார்த்தங்களைக் கொடுக்கிறவள், சாந்தை, சுக முண்டாகும் பொருட்டுச் சேவிக்கத் தக்கவள், தயையோடு கூடினவள், நாமத்தை

யுச்சரித்த மாத்திரத்தில் *அபீஷ்ட பலன்களைக் கொடுக்கின்றவள், பிர்ஹ்ம விஷ்ணு ருத்திரர்களால் பூர்வம் ஆராதிக்கப்பட்டவள், ஜிதேந்திரியர்களாய் மோக்ஷத்தை ❂யபேக்ஷித்து முனிகணங்களால் ஆராதிக்கப்பட்டவள், புலி முதலிய துஷ்ட மிருகங்களால் பயகம்பனாதிகளடைந்து தேவி திருவுருவத்தைப் பார்த்து ஹே தேவீ என்று முற்றுஞ் சொல்வதற்கு நா வெழாமல் ஏ ஏ என்று குளறுபடையாய்ச் சொன்னபோதிலும் அடைதற்கரிய அபீஷ்டங்களை அளிப்பவள், மந்திர பீஜாக்ஷரத்தைப் பிந்துஹீனமாகச் சொன்ன போதிலும் இஷ்ட சித்தியைக் கொடுக்கின்றவள். இதற்குச் சத்ய விரதனுடைய சரித்திரமே உதாரணமாக விருக்கின்றது. ஓ அரசனே! இந்த சரித்திரமானது வைதிக நிஷ்டராய்ப் பிரம பாவனையிற் சிறந்த எங்களுடைய பிராஹ்மண கூட்டத்திற் சொல்லப்பட்டிருக்கிற சத்திய விரதனுடைய சரித்திரத்தை வரன் முறையாகச் சொல்லக் கேட்டிருக்கிறேன். எங்ஙனமெனில், சத்திய விரதனென்பவன் பிராஹ்மணனாம், எழுத்தென்பதே யறியாத மூர்க்கனாம், அவன் பன்றியினுடைய வாக்கினின்று மெழுந்த தொனியில் தொனிக்கும் எழுத்தைக்கேட்டு அதைத் தான் உச்சரிக்கும்பொழுது பிந்துஹீனாமாக "ஐகாரத்தை" உச்சரித்தனனாம். அதற்குத் தயாவதியாகியும் பாவபேதியாயுமிருக்கின்ற பரமேஸ்வரியானவள் சந்தோஷ மடைந்தவளாய் அந்தப் பிராஹ்மணனைக் கவிராஜ னாக்கினாளாம். இவ் வற்புதத்தை என்ன சொல்லுவேன் அரசனே! என்றனர்.

மூன்றாம் ஸ்கந்தம் ஒன்பதாம் அத்தயாயம்

சத்வாதீனாம் லக்ஷண கதனம்

முற்றிற்று

———

ஆஉ அத்தியாயம் கூ-க்கு சுலோகம் (சுஅஎ.)

———

ஸ்ரீ தேவ்யைநம:

பத்தாம் அத்தியாயம்

சத்தியவிரதோ பாக்கியானம்.

———

(க-ங.) ஜனமேஜயன் வியாசரை வணங்கி ஓ தயாநிதியே? சத்ய விரதனென்கிற பிராஹ்மணன் யார்? எந்த தேசத்திற் பிறந்தவன்?

* அபீஷ்ட - மிக விருப்பமான ❂ யபேக்ஷித்து - கொடுக்கப்பவள்

எப்படிப்பட்டவன்? பன்றியினுடைய சப்தத்தை எவ்வண்ணங் கேட்டான்? அது எப்படி, மந்திர சித்தியையுண்டு பண்ணிற்று? எங்கும் நிறைந்தவளாகியும் சர்வஜ்ஞையாகியும் இருக்கின்ற அந்தத் தேவியானவள் எப்படி சந்தோஷத்தை யடைந்தாள்? இந்த அற்புதமாகிய சரித்திரத்தை விரிவாய்ச் சொல்ல வேண்டுமென்று பிரார்த்தித்தனன்.

(சு-கஙு) வியாசமுனிவர் அரசனுடைய வினாவைக் கேட்டுக் கம்பீரமாகியும், கேட்பதற்கு இன்பமாகியும் உள்ள விடைகளைச் சந்தேகத்துக் கிடமில்லாத சொற்களால் கூறலுற்றனர். ஓ அரசனே! யான் மஹருஷிகளுடைய கூட்டத்தில் எவ்வண்ணங்கேட்டிருந்தேனோ அவ்வண்ணமே புராணபத்ததியாயுள்ள அந்தச் சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. ஓ அரசனே! நான் முன்னொருகாலத்தில் தீர்த்தயாத்திரை செய்து வரும்பொழுது முனிவர்கள் வசிக்கப்பட்ட தாகியும், பரிசுத்தமாகியும் விளங்குகின்ற நைமிசவனத்தை யடைந்து அங்குள்ள *இருடிகளை வணங்கி அவ்விடத்திற்றானே தங்கியிருந்தேன். அங்கு மஹா நியமத்தையுடையவர்களும், சீவன் முத்தர்களுமான பிரஹ்ம புத்திரர்களு மிருந்தனர். அப்பொழுது அவ்விடத்தில் கதாப்பிரசங்கம் நடந்தது. அச் சமயத்தில் சமதக்னி என்னும் மஹருஷி சபையாரைப் பார்த்து மஹானுபாவர்களான ஓ மஹருஷிகாள்! என்னுடையமனதில் ஓர் சந்தேகமிருக்கின்றது. அச் சந்தேகம் மகத்துக்களாகிய உங்கள் கூட்டத்திற்றான் தெளியவேண்டும். பிரஹ்மா, விஷ்ணு, உருத்திரர், இந்திரன், வருணன், அக்கினி, குபேரன், வாயு, துவஷ்டா, சூரியன், அஸ்வனி தேவதைகள், பகன் என்கிற சூரியன், பூஷா என்கிற சூரியன், சந்திரன், ஏனைய கிரகங்கள் ஆகிய இவர்களுக்குள் பூஜிக்கதக்கவரும், அபீஷ்டத்தைக் கொடுக்கின்ற வரும், சுகத்தின் பொருட்டுச் சேவிக்கத்தக்கவரும், சீக்கிரத்தில் சந்தோஷித்து அருள்செய்யத் தக்கவரும் யாவர்? விரைவில் அதனைச் சொல்லுங்களென்றனர்.

(கசு-கஎ) அப்பொழுது அங்கிருந்த லோமசமுனிவர், ஓ சமதக்னி முநிவரே? நீர் கூறியவைகட்கெல்லாம் உரியவர் பராசத்தியாகிய தேவியே யாவள். அவ ளெத்தன்மைய ளெனின் பரா (எல்லாவற்றிற்கு மேலானவள்) பிரகிருதி (காரணம்-ஆதி) சர்வவியாபினி, சர்வதாசிவா (நித்தியமங்களை) தேவர்களிற் சிறந்த பிரமன் முதலிய முத்தேவருக்குந் தாயாயுள்ளவள், தியானித்தாலும் துதித்தாலும் இஷ்டார்த்தத்தைக் கொடுப்பவள், எப்பொழுதும் இரக்கமுள்ள சித்த முடையவள், வரமளித்தற் பொருட்டுச் சேவிக்கத் தக்கவள். அத்தேவிதான் சீக்கிரத்தி

* இருடிகளை - முனிவர்களை

லருள் செய்யத்தக்கவளென் றறிமின். இதற்கு அத்தேவி பீஜாக்ஷர மந்திரத்தை ஹீனமாக வுச்சரித்த அந்தணனுக்குச் சம்பிராப்தமான அற்புதமாகிய ஒரு இதிகாசத்தைச் சொல்லுகிறேன் கேட்பீராக.

(கஅ-ஙசு) கோசல தேசத்தில் தேவதத்தனென்னும் ஓர் பிராஹ்மணன் புத்திரனில்லாதவனாய் நெடுநாள் வருந்திப் புத்திர சந்தானத்தின் பொருட்டுப் புத்திரகாமேஷ்டி யாகத்தை விதிப்பிரகாரஞ் செய்ய வுத்தேசித்து (தமசா) என்னும் சிறந்தநதி தீரத்தையடைந்து சிறப்பாக யாகசாலை மண்டபமமைத்து, சத்கரும விதியுணர்ந் தவர்களாய், வேதாத்தியயன பராளாயிருக்கின்ற அந்தணர்களை வரவழைத்துச் சாஸ்திர விதிப்படி குண்ட நிர்மாணஞ் செய்து காருகபத்திய முதலிய மூன்றக்னிகளையும் பிரதிஷ்டை செய்து, சுஹோத்ரரென்று முநிவரைப் பிரஹ்மா வாகவும், பாஜ்ஞவல்கரை அத்வரி (யஜ்ஞத்தை நடத்துவிக்கின்றவர்) யாகவும், பிரஹ்ஸ்பதியை ஹோதா (ஹோமஞ்செய்கின்றவர்) வாவவும், பைலரைப்பிரஸ்தோதா (வேதங்களால் தோத்திரஞ் செய்கின்றவர்) வாகவும், கோபிலரை உத்காதா (சாமவேதகானஞ் செய்பவர்) வாகவும், ஏனைய முனிவர்களைத் தானப் பிரதி கிரீஹீதா (தக்ஷணை பெறுதற்குரிய சத்பாத்திரர்) வாகவும், இருக்கும் வண்ணம் நியமனஞ் செய்து ✝யஜ்ஞஞ் செய்யத் தொடங்கி யாக கிருத்தியங்கள் தவறாது நடத்திவரும்பொழுது சாமவேதியாகிய "கோபிலர்" உத்காதாவாயிருந்து சாமகானஞ் செய்கின்றவரான படியினால் ஸப்த ஸ்வரத்தோடுங் கூடிய "ரதந்தர" மென்கிற சாமத்தை ஸ்வரிதத்துடன் கானம் பண்ணும் பொழுது தம்முடைய சுவாசத்தை (மூச்சை) யடக்கிச் சொல்லுவதொழிந்து அடிக்கடி சுவாசத்தைத் விட்டு விட்டு சுரபங்கமாகச் செய்து வந்தனர். தேவதத்தன் அதுகண்டு கோபிலரைப்பார்த்துக் கோபித்து ஓ முநி சிரேஷ்டரே! நான் புத்திரா பேக்ஷையினால் நடத்துவதாயிருக்கின்ற இந்தயாகத்தில் நீர் மஹா தேவருக்குப் பிரியகரமா யிருக்கின்ற சாமகானத்தை ஸ்வர ஹீனமாகக் கானஞ் செய்கின்றீர், சுவாசத்தையும் (உஸ்) என்று விடுகின்றீர். இவ்விரண்டும் அமங்கலக் குறியல்லவா! இதுவென்ன மூடத்தன மென்றனன். இந்தவார்த்தைகளைக் கேட்ட "கோபிலர்" தேவதத்தனைக் கோபித்து நீயென்ன கூறினாய்? உஸ்வாச நிஸ்வாச ரூபமாயிருக்கின்ற பிராணவாயுவானது எந்தப் பிராணிகளாலும் அடக்கக் கூடுமானதன்று. அங்ஙனமிருக்க, சிறிது தளர்வுற்றிருக்கின்ற சரீர தருமத்தா லெனக் குண்டாகிய ஸ்வரபங்க விஷயத்தில் சிறிதும் என்னைத் தூஷித்தல் கூடாது. நீ இதனை ஆராயாது என்னை மூடனென்று கூறியபடியினால் உனக்குப் பிறக்கப்போகிற புத்திரன் மூடனாயும், முருட்டுத் தனமுடையவனாயும்,

✝ யஜ்ஞஞ் - கட்டளை

ஊமையாயும் பிறக்கக்கடவன் என்று சபித்தனர். அச்சாபவார்த்தையைக் கேட்ட தேவதத்தன் மிகவும்பயந்து துக்கமெய்தி இனி என் செய்வோமென் றேங்கி மஹாத்மாவாகிய ஓ விப்ரேந்திரரே! நிராபராதியான என்னிடத்தில் நீ ரேன் வியர்த்தமாய்க் கோபிக்கின்றீர், பெரியோர்கள் கோபிப்பது அழகாகுமா? பிறரைத் துன்பமுறச்செய்வது அருளுடைமை யாகுமா? இந்த சிறு குற்றத்திற்கு இவ்வளவு பெரிய சாபம் நீ ரிடலாமா? நான் முன்னமே புத்திரனில்லாதவனாய்த் துக்கத்தில் மூழ்கியிருக்க இப்பொழுது மேலுந் துக்கத்தையே அதிகரிக்கச்செய்தீர். அந்தோ! அந்தோ! இது என்னபாவம். வேதவித்துக்கள் மூட புத்திரனை யுடையவன் புத்திரப்பே றில்லாதவனென்று சொல்லுகின்ற படியால் அவன் எல்லாராலும் இகழப்பட்டவன்றானே? அவன் மிருகத்தைப் போலும் சூத்திரனைப் போலும் விலக்கிவைக்கத் தக்க வன்றானே? அவன் பூஜ்யப்படுவானா? அபூஜ்யன்றானே? அவன் தானபாத்திரனாவனா? அவன் வேதகர்மங்களி னின்றும் விளக்கப் பட்டவன்றானே? இதிற் சந்தேகமு முண்டோ? என்மகன் ஊமையாய்ப் பிறந்தால் அவன் அத்தியயனத் திற்கு யோக்கியனாகாமற் போவானல்லவா? அவனுலகில் வசிப்பானாயின் அவனை அரசன் சூத்திரனைப்போல் தனக்குப் பகுதி கட்டுகிறவனாக எண்ணப் படுவனே யன்றித் தான் ஆசனமிட்டுத் தானங் கொடுக்குஞ் சத்பாத்திரனாக எண்ணப்படுவானா? அப்படியே * பிதிர் யஜ்ஞங்களிலும் தேவ யஜ்ஞங்களாலும் அந்தணர்களால் பூஜிக்கப் படாதவ னாவானல்லவா? எதற்கும் யோக்கியனாகாத அவன் உழவுத் தொழிலுக்கே உரியவனாவனன்றி வேறெந்த சத்கருமங்களுக் குரியவனாவான்? ஆகான்.

(௩எ-௬௩.) மிருதிகளிலும் வேதாத்யயனமுடைய பிராமணன் கிடைக்காமற்போனால் தர்ப்பை கூர்ச்சம்வைத்து சிராத்தஞ் செய்து கொள்ளலாமே யன்றிப் பிராஹ்மணனாயிருந்தாற் போது மென்று மூடப்பிராமணனை வைத்துக்கொண்டு ஒரு பொழுதுஞ் சிராத்தஞ் செய்யக்கூடாதெனவும். அவ் வபண்டிதனுக்குப் பசிக்கு அன்னமாத்திரங் கொடுக்கவேண்டுமன்றி விசேஷதானஞ்செய்யக் கூடாதெனவும், செய்தால் செய்தவனும், செய்யப் பெற்றவனும் நரகத்தை யடைவார்க ளெனவும், எந்த நகரத்தில் கல்வியில்லாதவரும் மூடப்பிராஹ்மணரும் தான சன்மானங்களைப் பெறுதற் குரியவரா யிருப்பராயின் அந்த நகரத்தை விட்டு நீங்க வேண்டிய தெனவும், ஆசனங் கொடுப்பதிலேயும், மரியாதை செய்வதிலேயும், மூடர் பண்டிதரென்கிற பேதமில்லாமல் சமமாகச் செய்யுந் தன்மை யுடையவர் வசிக்குமிடமும் நிந்திக்கப்பட்ட தெனவும், ஆகையால் ஒரு பண்டிதனால் இவன்

* பிதிர் - யாகம் ஐந்தினொன்று

பண்டிதன் இவன் அபண்டிதனென்றறிந்து கொள்ளல் வேண்டுமெனவும், எந்தநகரத்தில் மூடர்கள் தான சன்மானங்க ளடைவதனால் அகங்காரத்தை யடைகின்றார்களோ அந்த நகரத்தில் ஒரு பொழுதும் பண்டிதனாயுள்ளவன் வசிக்கக்கூடாதெனவுங் கூறுகின்றார்கள். இவ் விசாரங்களை எவனறிவினாலறியாமற் போகிறானோ அவன் தான் துர்ஜனன். அவனுடைய ஆர்ஜிதமாகிய திரவியங்களெல்லாம் வேம்பினுடைய பழமானது எப்படிக்காக்கைகளுக்கே வுபயோகப்படுமோ அப்படி அசத்துக்களுக்கே வுபயோகப்படும். சத்துக்களாவார் யாரெனின் வேதாத்தியயனத்தில் வல்ல பிராஹ்மணர்கள். அவர்கள் சத்துக்க ளென்பதற்குப் பிரமாண மென்னையெனின் முற் கூறிய அந்தணர்கள் எவனுடைய அன்னத்தைப் புசித்துப் பின்னர் வேதபாராயணஞ் செய்வாராயின் அப்புண்ணிய விசேஷத்தால் அவ்வன்னங் கொடுத்துவனுடைய மூதாதைகள் சுவர்க்கலோகத்தில் சந்தோஷ சித்தர்களாய்க் கிரீடித் திருப்பார்க ளென்பதேயாம். ஓ கோபிலரே! பிராஹ்மண பண்டிதனுடைய பெருமை இவ்வாறெல்லா மிருக்க எனக்கு நீர் என்ன சொன்னீரையா! சம்சாரத்தில் புத்திரனில்லை என்கிற சோபத்தை யனுபவிப்பதைப் பார்க்கிலும் மூடனைப்புத்திரனாகப் பெற்றுவைத்திருப்பது அதிகதுன்பம். ஆகையால் ஓ மஹானுபாவரே! சாப நிவர்த்தியுண்டாகும் வண்ணம் ஓரனுக்கிரக வார்த்தைசொல்லும். நீர் தீனர்களை ரக்ஷிப்பதில் சாமார்த்தியரென்று நா ன்றிந்தவனாகலான் என்னை ரக்ஷியுமென்று மிகவுந் தீனபாவத்தை யுடையவனாய்க் கண்ணீர்விட்டழுது அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கித் தோத்திரஞ்செய்து புலம்பி நிற்ப, கோபிலா துக்காக்கிராந்தனாய்ச் சரணாகதியடைந்த அத்தேவதத்தன்பால் கருணை கூர்ந்து ஓ தேவதத்தனே! பெரியோர்களுக்குக் கோபமுண்டாகுமாயின் ஒருக்ஷணகால் மிருக்குமேயன்றி நெடுங்காலமிருக்கமாட்டாது. பாவிகளுக்கு மாத்திரம் நெடுங்கால மிருக்கும். ஆகையால் எனக்கு உன்மேலுண்டாகிய கோபாக்கினி "இயற்கையில் குளிர்ச்சியுடைய தண்ணீரானது நெருப்பு வெய்யில் முதலிய உஷ்ணசம்பந்தங்களால் உஷ்ண மாய்த்தோன்றுவது போற்றோன்றி பின்னரந்நீரானது உடனே முன்னிருந்த குளிர்ச்சியையே எப்படி யடைகிறதோ? அப்படிதணிந்து விட்டது. இனி நீ துக்கிக்க வேண்டாம். என்னுடைய சாபத்தின் படி மூடனாகப்பிறந்திருந்து பின்னர் நல்ல வித்துவா னாவாயென்று அனுக்கிரகஞ்செய்தனர்.

(ருO-சுரு) தேவதத்தன் அதிகசந்தோஷத்தையடைந்து யஜ்ஞத்தைப் பூர்த்திசெய்ய வேண்டுமென்றெண்ணி முன்போல்

ஏனைய சடங்குகளையும் விதிமுறையாகச் செய்து முடித்துப் பிராஹ்மணர்களுக் கெல்லாம் சந்தோஷ முண்டாகும் வண்ணங் கொடுப்பனவாகிய எல்லாப்பொருளுங் கொடுத்தனுப்பி வாழ்ந்து வருநாளில் அழகிற்சிறந்த ரோகிணியைப்போல் அழகுடைய ரோகிணி என்னும் அவன்மனைவியாகிய பதிவிரதை கருப்பமடைந்தனள். அதுகண்ட தேவதத்தன் அடங்காத ஆனந்தமடைந்து விதிமுறையே காப்பாதானம்பும் சவனவிதானம் சிருங்காரகாரணம் சீமந்தோந்நயன முதலியவற்றை அவ்வக்காலங்களிற் குறைவின்றி நடத்தித் தானமுதலியவைகளுந் தந்து நாம் செய்தயாகம் இப்பொழுது தான் பிரயோசனமுடைய தாயிற்றென் றெண்ணிப் புத்திரனை எப்பொழுது பார்ப்போமென்று நாளை யெண்ணிக்கொண் டிருந்தனன். அழகிலும் ரோகிணியாயும் பெயரிலும் ரோகிணியாயு முள்ள அந்தக்கர்ப்பிணி ரோகிணி நக்ஷத்திரங்கூடிய சுபதினத்திலேயே புத்திரனைப் பெற்றனள். அப்புத்திரனுக்கு வேதமுறையாக நல்லசுபதினத்தில் சுபலக்கினத்தில் ஜாதகாரணமும், "உதத்தியன்" என்று நாமகரணமும் கர்ப்பாதானத்தொட் டெண்ணத்தக்க எட்டாவதுவயதில் உபநயனச்சடங்கும். அதிக சிறப்பாக நடத்தினன். உபநயனவிரதத்திலிருக்கின்ற அக்குமாரனுக்கு முன்னர் கற்பிக்கவேண்டிய சந்தியா வந்தனத்துக்குரிய அத்தியயனத்தைக் கற்பிக்க அவன் அதனைக்கற்கும் அறிவில்லாதவனாய் மூடனாயிருத்தலைக்கண்டு தன்னுடைய கஷ்டத்தை நோக்காது அநேகப் பிரகாரங்களாலுங் கற்பித்துவந்தனன். அங்ஙனங் கற்பித்தும் அவன் புத்தி அதிற்பொருந்தாமல் மூடத்தன்மையையே அடைதலைக் கண்டுமிகவும் மனம்வருந்தி அப்புத்திரனை அத்தியயனத்தினின்று விடுவிக்கவுந் துணியாதவனா யின்னமும் பார்ப்போமென்று பன்னிரண்டு வருடம் இரவும் பகலும் இடைவிடாது அத்தியயனஞ் செய்வித்து வந்தனன். அவ்வளவுகாலஞ் செய்வித்தும் அந்தவுதத்தியனுக்குச் சந்தியாவந்தன விதியேனுங் கிரமமாய்ச் செய்வதற்குரிய பாடமும் வரவில்லை இனி தந்தை என் செய்வான். அதனால் அவனுக்கு பிராஹ்மண குலத்தாராலும் ஏனைய குலத்தாராலும் இவனைப்போல் ஒரு மூடனும் இருக்கமாட்டானென்கிற இழிந்தசொல் பெரும்பாலு முண்டாயிற்று. அதுவுமன்றி அவ்வனத்தின் வழியாகப் போகின்றவரும் வருகின்றவரும் இவைப்பார்த்து நகைத்து ஏளனஞ்செய்வார்கள். அதைக்காணும் தாய் தந்தையரும் பந்துவர்க்கங்களும் அவர்கள் பேரில்கோபித்து நிந்திக்காமல் தங்கள் பிள்ளையைப்பார்த்து அடாஅடா. ஏன் வெளியிலேவந்து உலாவுகின்றாய் உள்ளே யிருக்கலாகாதா வென்று பயமுறுத்திக் கண்டனஞ் செய்துவருவரேயன்றி இவனை வித்துவானாக்க

வேண்டுமென்கிற எண்ண மில்லாமல் வெறுப்படைந் திருப்பது மன்றி பிள்ளை, குருடாயிருந்தாலும், முடமாயிருந்தாலும் கல்வி யறிவொன் றமைந்திருக்கு மாயின் அவன் தான் சிலாக்கியமானவன் கல்வியறிவில்லாத அழகுள்ளவனா யிருந்தபோதிலும் பிரயோசனமென்னவென்று அவனைப்பார்க்குந் தோறும் நிந்தித்தும் பயப்படுத்தியும் வந்தனர். அப்பிள்ளை அவ்வவமானத்தை ஓர் நாளெண்ணியாவரையும்வெறுத்து வைராக்கியமுடையவனாய் அந்த வனத்தை விட்டு வேறொரு வனத்துக்குப்போய் கங்கா தீரத்தை யடைந்து தன்மனதுக்குச் சுகமான ஓரிடத்தில் மிகவுஞ் சிரேஷ்டமாகிய ஆச்சிரமத்தை யுண்டுபண்ணிக்கொண்டு இவ்விடத்தில் நாம் ஆகாரமாகக் கொள்ளவேண்டியது கந்த மூல பலன்களென்றும் நமக்கு விரதமாக விருக்கவேண்டியது பொய்சொல்லாமை என்றும் நியமம் வைத்துக்கொண்டு வாழ்ந்திருந்தனன்.

மூன்றாம் ஸ்கந்தம் பத்தாம் அத்தியாயம்

சத்யவிரதோபக்கியானம்

முற்றிற்று.

———

ஆஉ அத்தியாயம் க0-க்கு சுலோகம் (ருருஙஏ.)

ஸ்ரீ தேவ்யைநம:

பதினொன்றாம் அத்தியாயம்

சத்யவ்ரதோபாக்கியானம்.

———

(க-அ) அசத்தியஞ் சொல்லுகிறதில்லை என்கிற விரதத்தை மாத்திரம் மேற்கொண்டிருந்தனனே யன்றிப் பிராஹ்மணதரு மத்துக்குரிய வேதாத்தியயனமும், தேவதைகளைத் தியானஞ்செய்யு முறைமையும், அவர்களைப் பூஜிக்குமுறைமையும், மந்திர ஜபமும், அந்தஜபத்துக் கங்கமாகியஆசனம், பிராணாயாமம், பிரத்யாகாரம், பூதசுத்தி, மந்திரம், கீலகம், காயத்திரிமுதலிய இந்த முறைமைகளில் ஒன்றும் அறியான். இவைகளையறியாமற் போனாலும் காலையில் எழுந்து முதல் இன்றியமையாமற் செய்யத்தகுவனவாகிய சௌசம், ஸ்நானம், ஆசமனம், சந்தி, அக்கினிஹோத்திரம், பலிதானம் (பலிகொடுத்தல்) அதிதி பூஜை, முதலியவற்றை விதி முறையறிந்து செய்யவாவது அறிந்துகொண்டவனோ வென்றால்

ஒன்றுமறிந்தானல்லன் அவற்றில் அவையாவுமறியாதொழியினும் அக்னிஹோத்திரஞ் செய்கின்ற வர்களுக்கு வேண்டுவனவாகிய சமித்துக்கள் இது விதுவென்றாவது, அக்னிஹோத்திரமென்பது இத்தன்மைத் தென்றாவது அறிந்தனனோவென்றால் அவை யுமறிந்தானல்லன். இவ்வறிவிலியாகிய பிராணச்சிறுவன் காலையி லெழுந்திருந்து அசத் சூத்திரனைப்போல் தந்தசுத்திசெய்யவும், உடம்பிலுள்ள அழுக்குப்போக நீரில்மூழ்கி எழுந்திருக்கவுங் கற்றுக் கொண்டவனாய் உச்சிப்போதில் தான்தேடாமற் கிடைப்பதாகிய கனிவகைகளை எடுத்துப் புசிக்கத்தக்கது இது புசிக்கத்தகாதது இது வென்றறியும் பான்மையின்றி எல்லாவற்றையும் உண்ணும் வகையில் தெளிவுடையனாயும் நித்திரை செய்வதில் வெறுப்பில்லாதவனாயு மிருந்தான்.

இத்தன்மைய னாயினும் ஒருவரிடத்தும் பொய்யான வார்த்தையைக் குறிப்பிட்டுச் சொல்லாதவனாய், மெய்யான வார்த்தையையே குறிப்பிட்டுரைப்பவனாயிருந்தான், அதனால் "சத்தியதபன், என்று அவனை யாவரும் அழைக்கலாயினர். "பொய்யாமை" என்கிற அவ்வொரு நன்மையன்றிப் பிறருக்கு நன்மை செய்யுங்காரியம் இதுவெனவும் தீ மைசெய்யுங் காரியம் இதுவெனவும் அறிந்து ஒருவருக்கு ஒருநன்மையாவது தீமையாவது செய்வதில்லாமல் இருந்த ஆரண்யத்தில் நிர்ப்பயனா யுலாவி வாழ்ந்திருந்தனன். இவ்வளவு அறியாமையிற்பிறந்த சத்தியதபன் ஓர்நாள் தனக்குத்தானே தன்னுடைய தீனதிசையைப்பற்றி எண்ணலாயினன்.

(கூ-கங) எவ்வாறெனின், நமக்கெப்பொழுதுமானம் வருமோ என்பதும், நாம் இந்தக்காட்டில் மிருகத்தைப்போல் எவ்வளவு காலம் உலாவிக்கொண்டிருப்போமென்பதும் தெரியவில்லை இப்படி சீவித்திருத்தல் மூடர்களுடைய கஷ்டசீவனமல்லவா? இந்த மூடப் பிழைப்பும் ஓர் பிழைப்பாகுமா? இவ்வண்ணமான பிழைப்புடைய என்போலிகளுக்கு நன்மையாவதுயாதெனில் சீக்கிரத்தில் மரணம் வருவதுதானன்றி வேறன்று நமக்கு இந்த மூர்க்கத் தன்மைவந்தது நம்முடைய புத்தி பூர்வத்தினாலன்று தெய்வத்தின் செயலினாலே யென்று தோன்றுகிறது, வேறுகாரணந் தோன்றவில்லை, ஏனென்றால் நாம் உத்தமமாகிய ஜன்மமெடுத்தும் நல்லரூபவதியானவள் மலடியாய்ப் போனதுபோலும் செழிப்புடைய பசு பால் கொடாதது போலும் வீணாய்ப்போயிற்று. ஓ மஹருஷிகாள்! பின்னரும் அந்த சத்தியதபன் நாம் ஏன் தெய்வத்தை நிந்திக்கவேண்டும். நாம் செய்த கன்மம் இவ்வாறாக விருந்தால் என் செய்யலாம் அதனை யோசிக்குங்கால் நாம் பூர்வஜன்மத்தில் உத்தமமான பிராஹ்மணரிடத்தில் மறுபடியுங்

கொண்டுவந்து கொடுப்பதாகப் புத்தகத்தைப் பெற்றுக்கொண்டு கொடாம லிருந்திருக்கலாம், வித்தையை விரும்பி நம்மைக் கேட்டவர்க்கு நாம் வஞ்சனையோடு சொல்லியிருக்கலாம். இந்த பாவங்களால் மூடமும், பிராஹ்மண தர்ம ஹீனமும் உண்டாயிற்றென்று அறியற்பாலது.

(கசு-உ0) இந்தப் பாவகன்மம் செய்ததுபோல் இதற்குப் பரிகாரமாயுள்ள புண்ணியதீர்த்த ஸ்நானமாவது, மந்திர ஜபாதிகளாவது, மகத்துக்களுடைய தரிசனமாவது, திரவியங்களால் திருப்தியுண்டாகும் வண்ணம் பிராஹ்மண பூஜையாவது செய்திருப்போமாயின் இந்த மூடத்துவமாகிய துர்ப்புத்தி நீங்குவதற்கு ஓர் பரிகாரம் நேரிடும். நாம் பரிகாரமானபுண்ணிய கிருத்தியங்களுஞ் செய்யவில்லை, பரிகாரமு முண்டாகவில்லை. அந்தோ! அந்தோ நம்மைப்போன்ற முனிபுத்திரர்களெல்லாம் சகல சாஸ்திர சம்பன்னராக விருக்கின்றார்கள். நாம் மூடப்பிரசன்னனாக விருக்கின்றோம். என்று தனது பூர்வஜன்ம கன்மத்தையும், இந்த ஜன்மத்தில் நேரிட்ட மூடத்தின் கொடுமையையும் பலவாறாக எண்ணி எண்ணி ஏக்கமுற்று இனியாவது பரிகாரந் தேடிக் கொள்ளலாமென்றாலோ பரிகாரமாயுள்ள தவமும், அதற்குரிய விதிமுறையும் ஒரு சாதனமும் அறியாத நாம் என் செய்வோம் இப்பொழுது நாம் எண்ணுவதெல்லாம் அப்பிரயோசனமே நமக்குப் பூர்வபுண்ணியம் நன்றாயில்லை, நமக்குத் தெய்வந்தான் துணை செய்யவேண்டும். அதுதான்மேலானது, அந்தத் தெய்வப்பிரயத்தினமில்லாமல் மானிடன், செய்யும்பிரயத்தினமும் ஓர் பிரயத்தினமாமா சீ! சீ!! மானிடப்பிரயத்தினத்தினாற் செய்யுங்காரியத்திற்குத் தெய்வசகாயம் இல்லாமற்போமாயின் அது வீண்சிரமமாய் முடியும். பிரம்ஹா, விஷ்ணு, உருத்திரர், இந்திரன், முதலியோரெல்லாம் தேவர்களாயிருந்தபோதிலும் உருவத்தோடு கூடினவராகலின் அவர்களெல்லாங் காலதத்துவத்தினுடைய சுவாதீனத்தி லகப்பட்டவர்களேயன்றி அதனைக்கடக்கும் ஆற்றலுடையவராகார், என்றெண்ணிக்கொண்டே உறங்கி நித்திரை செய்தனன். பின் விழித்தெழுந்தும் முன்னெண்ணிய வெண்ணத்தை மறவாமல் இரவும்பகலும் அதனையே மனதில் தர்க்கித்துக்கொண்டு மகா பரிசுத்தமாகிய கங்காதீரத்தில் மாநுடசஞ்சாரமில்லாத தனியிடத்தில் விரக்தனாய் ராகத்துவேஷ மற்றவனாய் பதினான்கு வருடங்காலங் கழித்துவந்தனன்.

(உக-ங) அந்தப் பதினான்குவருடகாலத்தைக் கழித்தும் அவனுக்கு வைதீகதர்மமாகிய பூஜையுமில்லை, ஜபமுமில்லை, மேலாகிய காயத்திரி இதுவென்றறியத்தக்க அறிவுமில்லை. இவ்வாறான

வைதீகதர்மஞ் சிறிதுமில்லாதவனாயினும் பொய்சொல்லாநெறியிற்றவரா திருந்தானாகையால் இவனைக் காணும் யாவரும் இகழாமல் இவர்பொய்சொல்லாதவர் என்கிறபுகழையே கொண்டாடினார்கள். இவன்பால் ஓர் நாள் ஒருபன்றியானது ஒரு வேடனால் அதிவேகமாகவிட்ட பாணத்தினால் அடிக்கப்பட்டு ஒட்டமெடுத்து நடப்பதற்குஞ் சக்தியற்றுப் பயமுற்று வந்து விழுந்தது அதனைச் "சத்தியதபன்" கண்டு ஆ! ஹா!! இந்தப்பன்றி என்ன நடுங்குகிறது உதிரம் எப்படிப் பெருக்கெடுத் தோடுகிறது என்ன வேகமாய் ஓடிவந்தது உடம்பெல்லாம் ரக்தமயமா யிருக்கிறது என்று மிகவும் இரங்கிய மனமுடையவனாய் அடிக்கடி பார்த்து சரீரம் நடுங்கினவனாய் ஊமையாகையான் நன்றாய்ச் சொல்லளவையாற் கூச்சலிடுவதற்குக் கூடாமல் "ஹ்ரு-ஹ்ரு" என்கிற தொனியோடு பயந்து கூச்சலிடத் தொடங்கினன். தொடங்கும்பொழுது அக்காலத்திலுந் தன்னாவினால் உச்சரிக்கக் கூடாததாகியும் காதினால் கேட்கப் படாததாகியும் உள்ள ஸ்ரீ வித்யா மந்திரசம்பந்தமாகிய பீஜாக்ஷர உச்சரிப்பு, பூர்வ புண்ணியவசத்தாலோ தேவியினுடைய கருணா விசேஷத்தாலோ தெய்வகதியாய் வந்து விட்டது. அது வந்தும் அந்தச் சத்யதபன் அது தேவீ பீஜாக்ஷர மென்றும், அதன் சொரூபம் இத்தன்மைத் தென்றும், அறியப்பெற்றிலனாய்ப் பன்றியைப் பார்த்து அப்போ துண்டாகிய கோபத்தோடு தனக்குள்ள மூடநிலைமையையும் எண்ணித் துக்கித்திருந்தனன். அப்பொழுது அந்தப்பன்றியும் எந்தப்பக்கமும் ஓடிப்போவதற்குக் கூடாமல் பாணத்தால் உடம்பெல்லாம் புண்பட்டு மிகவுந்துக்கமுடையதாய் அங்குள்ள ஓர் புதரிற்போயொளித்திருந்தது. ஒளித்துக்கொண்ட ஒருக்ஷணத்துக்குள் அந்தப்பன்றியைப் பாணத்தினாற் புண்படுத்திய வேடன் அதைத் தேடிக்கொண்டு காலனைப்போலங்குவந்தனன். அவன் எத்தன்மையனெனில் கடின்மாகியகுருரதேகத்தையும் வேட்டையாடுவதில் அதிக பிரியத்தையும் . கண்டோர் யமனென்று அஞ்சத்தக்க பயங்கரத்தன்மையையும் தனுசும் பாணமும்நீங்காதகணையும் விசாலமாயுள்ளவனமெங்குந் திரிந்துலாவி எவ்வுயிரையுங் கொலைசெய்வதில் மிகுந்தசாமர்த்தியத்தையும் உடையவன். அந்த மகாமூடனாகியவேடன் அறங்களிற்சிறந்த "பொய்யாமையை" மேற்கொண்டொழுகும் ஒப்பி கந்தசத்திய தபனென்கிற முனிபுங்கவனைத் தார்ப்பாசனத்தில் வீற்றிருக்கக்கண்டு நமஸ்கரித்து எதிரில் நின்று ஓ பிராஹ்மணரே! ஓர் க்ஷணத்துக்குமுன் இவ்வழியாய் என்னுடைய பாணத்தினா லடிபட்டுவந்தபன்றி எவ்வழிபோயிற்று. உம்மைநான் சத்தியவிரதரென்றறிவேன் பொய்சொல்லவேண்டாம்,

என்னுடைய குடும்பமானது பசியினால் மிகவும் வாட்டத்தை யடைந்திருக்கிறபடியால் நான் அதை ரக்ஷிக்கவேண்டியவன், எனக்குப் பிரமன் இவ்விதமான விருத்தியை ஏற்படுத்தி யிருக்கின்றான், சீவிப்பதற்கு வேறுவிதமானவிருத்தியில்லை. இனி நானொரு வுண்மை சொல்லுகிறேன் என்னையெனில் புண்ணியகரம், பாபகரம் என்கிற எந்தவிதமான விருத்தியினாலாவது தன்னுடைய குடும்பத்தை ரக்ஷிக்கவேண்டியது முக்கியமென்று சொல்லியிருக்கிறது ஆகையால் என்னாலே போஷிக்கத்தக்க குடும்பமானது தவித்துக்கொண் டிருக்கிறது இதுபொய்யென் றெண்ணவேண்டாம், நான் பொய்சொல்ல மாட்டேன், நீரும் பொய்சொல்லமாட்டீர் ஆகையால் என்னுடைய பாணத்தினா லடியுண்டு வந்தபன்றி எங்கேயிருக்கிறது, உம்மை நான் மிகவும் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன், சீக்கிரமாகச் சொல்லுமென்று ஒருமுறைக் கிருமுறைகேட்டனன்.

(நசு-சுகூ) அவ் வேடன் வாய்மொழியைக் கேட்ட ருஷிபுத்திரன் ஆலோசிக்கலாயினன். என்னையெனில் இந்தவேடன் குடும்பத்தைப் போஷிப்பதே முக்கியதருமமென்றும் அதற்காகத் தனக்கமைந்ததொழில் கொலைத்தொழிலென்றும், அதுதான் தனக்கு விதித்த விதிஎன்றும் இதுபொய்யல்ல மெய்யென்றுங் கூறுகின்றான். இதுவுண்மையே நாம் அவன்கூறும உண்மையைநாடி நீ தேடிவந்த பன்றி இதோவிருக்கின்றது என்று சொல்லிவிடுவது தான் உண்மை நெறியென்று சொல்லிவிடுவோமாயின் அதுவுண்மையாகமாட்டாது பொய்மையேயாகும், ஏனென்றால் சத்தியம் அசத்தியம் (பொய்-மெய்) என்பது அஹிம்சை, இம்சை என்று சொல்லப்படும் விஷயங்களெவைகளோ அவைதானாகும். எனவே உயிர்களுக்குச் சவுக்கியம் செய்வது (துன்பஞ்செய்யாதிருப்பது) எதுவோ அது அஹிம்சை, அசவுக்கியம் செய்வது (துன்பஞ்செய்வது) எதுவோ அது இம்சை, இந்த இம்சை தான் அசத்தியம், அந்த அஹிம்சை தான் சத்தியம். சத்தியா சத்தியங்களுக்கு இப்பொழுது சொல்லிவந்த ஞாயத்துக்கு வேறாக ஒருஞாயமுங் கிடையவேகிடையாது. நாம் இப்பொழுது பன்றியிருக்கிறது என்று சொல்வோமானால் பன்றிக்கு இம்சையும், வேடனுக்கு அஹிம்சையும் செய்தவனாகிறோம். பன்றியைக் காட்டிக்கொடுக்காமலிருந்தால் பன்றிக்கு அஹிம்சையும் வேடனுக்கு இம்சையும் செய்தவனாகிறோம். இந்தப் பன்றிக்கும் வேடனுக்கும் அஹிம்சை செய்யாதவிதம் எப்படி? சத்தியதப னென்கிற நம்முடையபெயரையுங் காத்துக்கொள்ளும் விதம் எப்படி? இது விருத்ததரும (மாறுபட்டதரும) மாயிருக்கின்றதே என்று தோன்றிய தருமசங் கடமாகியசங்கைகளில் மிகவும் மூழ்கினவனாய் வேடன் கேட்ட கேள்விக்கு யுத்தம னவார்த்தை சொல்ல வறியாமல் பன்றியிருக்கும் புதருக்குச் சமீபத்திற் போய் அதைப்பார்த்து

இரங்கியமனத்துடன் முன்போல் தேவியினுடைய வித்யாபீஜோச்சாரணையைச் செய்ய தேவி கருணை கூர்ந்தவளாய் எழுந்தருளிவந்து யாவராலும் அடையவொண்ணாத வித்தையை அனுக்கிரஹஞ்செய்து மறைந்துபோயினள்.

இவ்வாறு தேவியால் அனுக்கிரகிக்கப்பெற்ற ருஷிபுத்திரன் அப்போதே சகலசாஸ்திர பாரங்கதனாய் பூர்வத்திலுள்ளவராகக் கேள்விப்படுகிற வான்மீகியைப்போல் கவீஸ்வரராய்த் தன்னெதிரில் நின்ற வில்லாளியாகிய வேடனைப்பார்த்து "யாபஸ்யதி" என்கிற சுலோகஞ் சொல்லியருளினர். அந்த சுலோகார்த்தமாவது எவன் பார்க்கின்றானோ அவன் சொல்லுகின்றானில்லை. எவன் சொல்லுகின்றானோ அவன் பார்க்கின்றானில்லை. தேகப்பிரயோசனத்தையே கருதியிருக்கிற ஓ வேடனே! அடிக்கடி என்ன கேட்கிறாய் ஆ! ஆச்சரியம் என்பதாம். இந்த அர்த்தமுடைய சுலோகத்தைக் கேட்ட வேடன் அந்த அருள்வாக்காகிய சுலோகத்தைக் கேட்கப்பெற்ற புண்ணிய விசேடத்தால் அப் பன்றியினிடத்தில் ஆசையற்றவனாய் ஒரு வார்த்தையுஞ் சொல்லாது வீட்டுக்குப் போயினான். தேவியினுடைய அனுக்கிரக சீலராய் விளங்கிய ருஷிபுத்திரர் சத்தியத்திலேயே பிரிய முடையவராய்ச் தர்மாத்மாவாய், சர்வசீவ தயாபரராய் இரண்டாவது வால்மீகி என்னக் கவீஸ்வரராய்க் கங்காதீரத்திலிருந்து ஸ்ரீ வித்தையை விதிமுறையாகச் செபித்து நிறைந்த கல்விக் களஞ்சியமாய் எங்கும் மஹா பண்டிதரென்று பிரசித்திபெற்றனர். இவரது மகிமையைக் கேள்வியுற்ற மஹருஷிகளெல்லாம் இவருடைய தீர்த்திகளைப்புண்ணிய காலங்கடோறும் பாராயணம்போ லெடுத்துப் பாடுகின்றவராயும் இவருடைய சரித்திரத்தை விரிவாயெடுத்துத் தோத்திர ரூபமாகச் செய்து தோததிரஞ் விரிவாயெடுத்துத் தோத்திர ரூபமாகச் செய்து தோத்திரஞ் செய்கின்றவராயு மிருந்தனர். இவ்வற்புதத்தைத் தாய்தந்தையர்களுங் கேள்வியுற்று அதிசயித்தவர்களாய்மிக்க ஆவலோடும் அவராச்சிரமத்தை யடைந்து தமது புத்திர சிகாமணியாரைக் கண்டு அதிக மரியாதையுடன் அழைத்துக்கொண்டு தங்க ளாச்சிரமத்தைப் போய்ச் சேர்ந்தனர்.

(சுஎ-ருஅ) ஓ அரசனே! பன்றி மொருவிய ஒலிக்குறிப்பைக்கண்டு தானும் மொருவ அவ்வொலியைத் தேவியானவள் தன்னுடைய மந்திரபீஜாக்ஷரத்தை யுச்சரித்ததாகத் திருவுளத்தி லெண்ணி அவனைக் கவிவாணனாக்கி யாவராலும் புகழும் வண்ணஞ் செய்தாளென்றால், அவள் கருணையை என்னவென்று சொல்லலாம் ஆகையால் அக் கருணாமூர்த்தியாகிய பரதேவதையே எப்பொழுதுஞ் சேவிக்கத் தக்கவளும், பக்தியுடன் பூஜிக்கத் தக்கவளுமாவள். ஓ அரசனே எல்லா வுலகங்களுக்கும் ஆதிகாரணியா யிருக்கின்ற

அந்தத்தேவீ ✪ யஜ்ஞுத்தை வேதவழியாகச் செய்வையாயின் அது எப்பொழுதும் சர்வா பீஷ்டங்களையுங் கொடுக்கும் இது சத்தியம். அந்தத் தேவி மனதால் நினைக்கப்பட்டவளாகவும், பக்தியுடனே பூஜிக்கப் பட்டவளாகவும், தியானிக்கப்பட்டவளாகவும், உச்சரிக்கப் பட்டவளாகவும், துதிக்கப் பட்டவளாகவும், வேண்டுவார் வேண்டும் அபீஷ்டங்களைக் கொடுக்கத் தக்கவளாகவும் இருக்கின்றா ளாகையால் அத்தேவியைப் பண்டிதர்கள் "காமதா" என்று துதிக்கின்றார்கள். அத்தேவியைத் துதித்தல் உச்சரித்தல் தியானித்தல், பூஜித்தல், நினைத்தல் முதலியன செய்யாதவர்கள் யாரோ அவர்கள் ரோகமுடையவராயும், அன்னமில்லாமற் பசித்தவராயும், ஏற்போருக்குக் கொடுக்கும் பொருளில்லாதவராயும், அறிவில்லாதவராயும், பிறராற் பீடிக்கப் பட்டவராயும், சாஸ்திர வுணர்ச்சியில்லாதவராயும், சத்ருபத்தை யுணரும் உணர்ச்சி யில்லாதவராயும், ஏவலாளிகளுக்கு ஏவலாளராயும், அற்பபுத்தி யுடையவராயும், அங்கஹீனராயும், மந்த புத்தி யுடையவராயும். போஜனத்திலும் போகத்திலும் திருப்திபெறுதற் கில்லாதவராயும், இந்திரியங்கள் போகு மார்க்கத்தைத் தடுப்பதற்குக் கூடாதவராயும், பேராசை யுடையவராயும், அஞ்ஞானத்தாற் பீடிக்கப் பட்டவராயும் இருப்பர். தேவியினுடைய தியான முதலிய வற்றோடுங் கூடினவர்கள், வேதாத்தியயன முதலிய பண்டிதத் திறமையோடும், தேககாந்தியோடும், புத்திர சம்பத்தோடும், ஐஸ்வர்யத்தோடும், திருப்தியான போகத்தோடும், ராஜ்ய லக்ஷ்மியோடும், சூர பராக்கிரமத்தோடும், ஜன வாச்சல்யத்தோடும், சூழ்ந்த பந்துக்களோடுங் கூடியிருப்பர். ஓ அரசனே? இவ்வாறான ஐஸ்வரியங்களைக் கொடுக்கின்ற தேவியைப் பூஜிக் காதவர்கள் யார்? மஹா தாபரூபமாகிய இந்தச் சம்சாரத்தில் தேவியினுடைய அனுக்கிரஹம் பெற்றவர்கள் தாம் சுகமாச விருக்கின்றவர்க ளென்றும், அனுக்கிரகம் பெறாதவர்கள் தாம் முன் கூறியவாறு ரோகமுதலிய வற்றால் பீடிக்கப்பட்டுச் சம்சாரத்தில் துக்கமுற் றிருக்கின்றவர்க ளென்றும் அனுமானிக்கற் பாலது, என்று வியாசமுனிவர் தாம் நைமிசவனத்திற் போயிருந்த பொழுது அங்கிருந்த முனிவர் கூட்டங்களில் உரோமச முனிவர் தேவியினுடைய மகிமையை எடுத்துரைத்ததாக வியாசமுனிவர் ஜனமேஜயனுக்குக் கூறினார்.

மூன்றாவது ஸ்கந்தம் பதினொன்றாம் அத்தியாயம்
சத்யவிரதோபாக்கியானம்
முற்றிற்று

ஆஉ அத்தியாயம் கசு-க்குச் சுலோகம் (சுககஏ.)

✪ யஜ்ஞு - கட்டளை (ஆணை)

ஸ்ரீ தேவ்யைநம:

பன்னிரண்டாம் அத்தியாயம்

தே வீ ய ஜ் ஞ வி தி.

தேவியானவள் தனதருளை மிக வெளிமையாக வழங்கும் திறத்தை இதுகாறுங் கூறியதாகும். இனி இந்த மூன்றாவது ஸ்கந்தம் முதலத்தியாயத்தில் ஜனமே ஜயன் வியாசபகவானை "அம்பாபிதம்" என்கிற தேவி யஜ்ஞத்தைப் பற்றிய விதிமுறைகளை வினாவிய வினாக்களுக்கு அவர் அருளுடையராய் அந்த யஜ்ஞத்தின் உண்மைப் பொருளையும் அதன் விதிமுறையையும் சிவசத்தியின் பிரபாவத்தை மேன்மேலுஞ் சிரவணஞ்செய்ய அவாவி நிற்கும் அந்தணர்களாகிய நைமிசாரண்ணிய முனிவர்களுக்குச் சூத முனிவர் எடுத்துக் கூறிய வரலாறு வருதல் காண்க.

(க-ங.) ஜனமேஜயன் வியாசமுனிவரைப் பணிந்து ஓ வியாச பகவானே? தேவியினுடைய யஜ்ஞவிதியில் கூறப்பட்டுள்ள பூஜா விதியையும், மந்திரங்களையும், ஹோமசாதனத் திரவிய விசேஷங்களையும், பிராம்ஹண சங்கியையும், தக்ஷிணை சங்கியையு மாகிய இவைகளில் ஒன்றேனும் விடாமல் பூர்த்தியாகச் சொல்லல் வேண்டும். அங்ஙனஞ் சொல்லுவீராயின் நான் அந்த விதிகளைக் கேட்டு என்னுடைய சக்திக்கேற்றவாறு செய்கிறேன் என்று விண்ணப்பஞ் செய்ய, வியாசர் ஜனமேஜயனை நோக்கி ஓ அரசனே! நீ கேட்டவாறு "தேவியி" னுடைய யஜ்ஞத்தை விதிமுறையாகச் சொல்லுகிறேன் கேட்பாயாக.

(சு-ரு.) அந்த யஜ்ஞவிதியானது சாத்வீகம், ராஜசம், தாமசம் என மூன்றுவிதமா யுள்ளதென்று நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றுள் அந்தணர்களுக்குச் சாத்வீகயஜ்ஞமும், க்ஷத்ரியர்களுக்கு ராஜசயஜ்ஞமும், அசுரர்களுக்குத் தாமசயஜ்ஞமும், இம் மூவரல்லாத ஞானிகளாகிய முத்தான்மாக்களுக்குக் குணரகிதமாகிய ஞானயஜ்ஞமுஞ் விதித்திருக்கின்றன. இந்தப் பேதங்களை விவரமாய்ச் சொல்லக் கேட்பாயாக.

(சு-கூ.) சாத்வீக யஜ்ஞமாவது, - தேசம், காலம், திரவியம், மந்திரங்கள், பிராம்ஹணர்கள், சிரத்தை ஆகிய இவைகளோடு கூடியதாகும். இவற்றுள் திரவியமும், கிரியையும், மந்திரமும் சுத்தமாயுள்ள பக்ஷத்தில் அதற்குரிய பலன் குறைவின்றி வரும்.

இம்மூன்றில் திரவியம்சுத்தமற்றதாகிய அன்யாயார்ஜ்ஜிதமாயுள்ள பக்ஷத்தில் இம்மையிலும் மறுமையிலும் கீர்த்தியுண்டாக மாட்டா. ஆகையால் இம்மையில் சுகத்தின்பொருட்டும் மறுமையில் பரலோகத்தின் பொருட்டும் இந்தச் சாத்வீகயாகத்தை ஞாயார்ஜ்ஜிதமாகிய திரவியத்தினாலேயே செய்யவேண்டும். ஓ அரசனே? ஞாயார்ஜ்ஜிதத்தாற் செய்வது எதுவோ அதுதான் இகத்திற்கும் பரலோகத்திற்கும் ஏதுவாகும்.

(கO-உஉ) அன்னியாய ✻ஆர்ஜ்ஜிதம் ஆகாதென்பதற்குச் சில வரலாறு கூறுகின்றேன். ஓ ஜனமேஜயனே? குறைவற்ற தக்ஷிணையோடு கூடியதாகியும், யஜ்ஞ ✎சிரேஷ்டமாகியும் விளங்கும் இராஜசூயயாகத்தை உன்னுடைய வம்சத்தவராகிய பாண்டவர்கள் மிகவும் பிரசித்தமாய் நடத்தினார்களல்லவா? அந்தயாகத்தில் சுத்தாத்மாவும், யாதவ சிரேஷ்டரும், சாக்ஷாத் நாராயணருமாகிய கிருஷ்ண மூர்த்தியும், சாங்கமாக அத்தியயனஞ் செய்த பரத்வாஜர் முதலிய பிராஹ்மணர்களும் பிரவர்த்தகர்களாக விருந்தனரல்லவா? இவ்வண்மை எவ்வித்திலுங் குறைவின்றி முடித்த ஒரு மாதத்துக்குள் மஹாகஷ்டமும், வருத்தமாகிய வனவாசமும் அடையப் பெற்றனர். அந்தோ! அவர்களுக்குச் சொக்கட்டா னாடுவதில் அபஜயமும், திரௌபதியினுடைய மானபங்கமும், கஷ்டதரமாகிய வனவாசத்தில் விராடராஜனுடைய சேவகாவிருத்தியும், திரௌபதிக்குக் ❖கீசகனால் மிகவுங் ✯கிலேசமும் வந்து விட்டதல்லவா? அச்சமயங்களில் யாகபலனும், சுத்தமாகிய இருதயமுடைய பிராஹ்மணருடைய ஆசீர்வாதமும், கிருஷ்ணரிடத்திலிருந்த பக்தியும் எப்படிப்போயிற்று? ஓ தருமசீலனாகிய அரசனே? திரௌபதியினுடைய நீண்டு கூந்தலைத் துச்சாச்னன் பிடித்திழுத்தன னல்லவா? அக்காலத்தில் எந்தப்பலனுந் துணை செய்யவில்லையே? தெய்வத்தன்மையுடைய கிருஷ்ண மூர்த்தியும், தருமப்பிரபுவாகிய தருமரும் இருந்தார்களே? இவர்களிருக்கிறபொழுது தருமத்துக்குக் குறைவுவந்த காரணம் எதுவென்று யோசிக்கற்பாலது? ஆனால் நடக்கவேண்டியது எதுவோ அது நடந்தது என்று உலகத்தார் சொல்லுவதுபோல் சொல்லும் பக்ஷத்தில் சாஸ்திரம் நிஷ் பிரயோஜனமாகிறது. வேதமந்திரங்களும், ஏனையவிதிகளும் வீணாகவே முடிகின்றன. இதிற் சந்தேகமில்லை. சந்தேகமில்லையாயின் புண்ணியார்ஜிதங்களுக்குரிய சாதனங்களையும், அவ்வப் புண்ணியங்களுக்கு விதித்த விதிகளையும் எடுத்துக்கூறும் சாஸ்திரங்களெல்லாம் அப்பிரமாண்யமாய் அபலமாவதிற் றடையில்லை. அபலமாகும் பொழுது சுவர்க்க

✻ ஆர்ஜ்ஜிதம் - ஆர்ச்சனம் ✎ சிரேஷ்ட - மேன்மையாய்
✯ கிலேசம் - கவலை ❖ கீசகன் - ஓர் அரசன்

நிமித்தமாகச் செய்யுந் தவமுதலியவைகளும், வருண தருமங்களும் பயனற்றனவாய் முடியும். இதுபோலவே எல்லாப் பிரமாணங்களும் வீணென்று சொல்லுவதற்கே வரும். ஆகையால் தெய்வப் பிரயத்தினமும் மானிடப் பிரயத்தினமும் சிந்திக்கவேண்டும். இதற்குப் பண்டிதர்கள் கூறுவது என்னையெனின், ஒருவன் கர்மாநுஷ்டானஞ் செய்யும் பக்ஷத்தில் அதனால் அவனுக்குவரும் பிரயோஜனம் மாறுபாடாக முடியுமாயின் அதனை அவன்செய்யுந்தொழிலி லுண்டாகிய தவறினாலென்று கூறுவரேயன்றிச் சாஸ்திரங்கள் தவறுடையனவென்று கூறார். ஆனால் கன்மகாண்டமாகிய ஸ்மிருதிகளைச் செய்திருக்கின்ற வித்வான்களாலே சத்கர்மங்களை அநேக விதமாய்ச் சொல்லப்பட்டிருப்பா னேனென்னில், செய்கிறவனுடைய குற்றத்தினாலும், மந்திரதோஷத்தினாலும், திரவிய தோஷத்தினாலும், செய்கையும் அதனால் விளைவதாகிய சுகதுக்கரூபமான பிரயோ ஜனங்களும் பலவகையாய் முடிதலால் அங்ஙனஞ் சொல்லப்பட்டன வென்க.

(உங-ஙஉ) எங்ஙன மெனின், முன்னொரு காலத்தில் இந்திரன் யஜ்ஞஞ்செய்யு நிமித்தம் விஸ்வரூப னென்பவனைக் குருவாகக் கொண்டான். அவன் தேவர்களுடைய சுகத்தின் பொருட்டுச் செய்யத்தொடங்கிய அந்த யாகத்தில் அசுரர்கள் திதியினுடைய புத்திரர்களாதலால் அந்தத் திதியினுடைய சுகத்தையும் உத்தேசித்து "அசுரர்களுக்கும், தேவர்களுக்கும்" மங்களம் உண்டாகுகவென்று அடிக்கடியுஞ் சொல்லிச்செய்து வந்தனன். அதனால் அசுரர்கள் முன்னிலும் விசேஷமான வலியுடையவராயினர். அதனைக்கண்ட இந்திரன் கோபமுடையவனாய் அந்த விஸ்வரூபனுடைய தலையை வெட்டினான். அதனால் அந்தயாகம் விபரீதமாகப்போயிற்று.

"துருபதமஹாராசன்" அதிகமான குரூரத்துடன் துரோணாசாரியரைக் கொல்வதற்கும், புத்திரோற்பத்திக்கும் யாகஞ்செய்தனன். அவனெண்ணியவாறே "த்ருஷ்டத்தூய்மனும்" யாகாக்னியில் திரௌபதையும் உண்டாயினர். "புத்திரஹீனனாகிய தசரத மஹாராசன்" புத்திரகாமேஷ்டியாகஞ் செய்தான். அதனால் நான்கு பிள்ளைகளும் பிறந்தார்கள். இங்ஙனங் கூறிவந்த இவர்களெல்லாம் யாகங்களைச் செய்தவர்களாகவும், அதனதன் பலனைப் பெற்றவர்களாகவும் இருந்தபோதிலும் குற்றம் விளைவித்தவர்களேயாவர்.

எங்ஙனமெனின், "விஸ்வரூபன்" "அசுரர்களுக்கும் மங்களம் உண்டாகுகவென்று கூறியதை எண்ணுங்கால் அவ்வெண்ணம் தேவர்களுக்கு மங்களம் உண்டாக வேண்டுமென்று

எண்ணியதாகுமா? ஆகலான் எண்ணம் வேறுபட்டவனை அதில்வைத்ததனால் அவனாலும் அவன் சொல்லிவந்த மந்திரத்தினாலும் தோஷ முண்டாயிற்றென்றும்; தருமபுத்திரரை யோசிக்குங்கால் அவர்சத்தியவாதி, அவருடைய தம்பிமார்களும் அத்தன்மையாளர், பத்தினியோ மகாபதிவிரதை, இவர்களெல்லாம் அத்தன்மையராயிருந்தும் அவர்கள் சொக்கட்டானாடிய காலத்தில் தோல்வியடையவும், அதுகாரணமாக வனவாச முதலிய அநேக கஷ்டங்களை அனுபவிக்கவும் வந்ததற்குக் காரணம் ராஜசூயயாகத்திற்கு ஆர்ஜித்த திரவியதோஷ சம்பந்தத்தால் அங்ஙனமான விபரீதமாகிய பலங்கள் உண்டாயிற்றென்றும், தசரதனும், துருபதனும் பின்வருங்கெடுதிக்குப் பரிகாரம் யுக்தியினாற் றேடிக்கொள்ளாமற் போனதனால் துக்கங்கள் விளைந்தனவென்றும் அறியற்பாலன.

(ஙங-ஙசு)- ஓ ஜனமேஜெயனே? முன் கூறிய எஜ்ஞத்தை அதி துர்லபமாகவும், க்ஷத்திரியர் முதலியோரால் செய்யப்பட்ட ராஜசயஜ்ஞாதிகள் போல் தோஷமுடைய தல்லாததாகவும், வைகாநசர் முதலியோரால் யுத்தமாகக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட தாகவும், வனத்திலே யுண்டாகப்பட்ட பரிசுத்தமாகிய திரவியங்களோடு கூடினதாகவும் நினைக்கவேண்டும். * புரோடாசபரமாயும், மிகுந்த யூபஸ்தம்ப முள்ளதாயும், மிகுந்த விதி பூர்வகமான மந்திரங்களோடு கூடினதாயும் உள்ள யாகங்கள் எவைகளோ அவைகளையும் சாத்வீக யஜ்ஞங்களென்றே கொள்ளல்வேண்டும். இந்தச் சாத்வீகயஜ்ஞத்தைச் செய்யும் மஹருஷிகள் நாடோறும் சாத்வீக போஜனத்தையே செய்வார்கள்

(ஙஎ-சுஉ) இனி ராஜசயஜ்ஞமாவது, - திரவிய மிகுதியை யுடையதாகியும், பொறாமையோடு கூடினதாயும், பக்ஷபாதத்தோடு கூடினதாயும், க்ஷத்திரிய வைசியர்களால் செய்யப்பட்ட தாயு முள்ளதெனவும், தாமசயஜ்ஞமாவது, - கோபத்தோடும், அகங்காரத்தோடுங், குரூரபாவத்தோடும் கூடினதாயும் உள்ள தெனவும் பெரியோர் கூறுவர். இம்மூவகை யஜ்ஞங்களன்றி மானசீக யஜ்ஞமொன் றுளதென்று கூறுவர். அது, விரக்தர்களாய் மோக்ஷாபேக்ஷிகளாயுள்ள மகத்துக்களாகிய மஹருஷிகள் மனோதர்மத்தினால் சர்வசாதனத்தோடுஞ் செய்யப்படுவதாகும். இந்த மானசீகயஜ்ஞமல்லாத மற்ற யஜ்ஞங்களில் திரவியத்தினாலாவது, சிரத்தையினாலாவது, கிரிய விதியினாலாவது அந்தணர்களாலாவது,

* புரோடாசம் என்பது அவிசுவோமத்தில் ஓர் விதமானபாகம்.

தேசகாலங்களினாலாவது, வெவ்வேறாயுள்ள சாமக்கிரி யைகளினாலாவதுசிறிதாயினுங் குறைபாடுண்டாகும். மானசீகமாகிய அந்தர்யாகமானது யாதொரு குறைவின்றி நடக்கும். அதுபோல் புறம்பே செய்வதாகிய முன் கூறிய பகிர்யாகங்கள் குறைவின்றி நடக்கமாட்டாது. ஆனால் அந்தர்யாகத்தை யபேக்ஷித்த அதிகாரியானவன் முன்னர்முக்குணங்களுடைய விருத்திகள் தோன்றாவண்ணம் மனோசுத்தியைச் செய்யவேண்டும். மனம் சுத்தத்தையடையுமாயின் தேகமும் சுத்தியையடைந்ததேயாம். இதிற்சந்தேகமில்லை. இந்திரியங்களுக்குப் பிரயோஜனமான விஷயங்களினின்றும் நீங்குவதாகிய மனோசுத்தி எவனுக்கு எப்பொழு துணாடாகிறதோ அப்பொழுது தான் அந்தர் யாகத்துக்கு அவன் அதிகாரியாவானென்று பெரியோர் கூறுகின்றனர்.

(சுங-ருஎ) இனி யஜ்ஞவிதியைக் கூறுகிறேன். எங்ஙனமெனில், பிரமத்தியான முடைய பிராஹ்மணன் தன்னுடைய இருதயத்தில் யஜ்ஞத்துக்குரிய விருக்ஷத்தினின்றும் நீண்டதாயும் அழகாகியும் எடுத்துக்கொண்ட ஸ்தம்பங்களால் அநேகயோசனை விஸ்தீர்ணமாக மண்டபத்தைக் கற்பித்துக்கொண்டு அதில் நிர்மலமாகிய குண்டத்தையும், அக்குண்டத்தில் அக்னியையும் ஸ்தாபித்து, அப்பொழுது வேதமூர்த்திகளாகிய அந்தணரநேகர் தன்னுள் வந்ததாகவெண்ணி அவரவரதிகாரத்துக்கேற்றவாறு * அத்வரி, ஹோதா, பிரஸ்தோதா, உத்காதா, பிரதிஹர்த்தா, மற்றுமுள்ள சபிகர்முதலானவர்களாக நியமித்து விதிப்படி பூசித்து, பிராணன் அபானன், வியானன், உதானன், சமானன் என்கிற பஞ்ச வாயுக்களை முறையேகாருகபத்தியம், ஆகவனீயம், தக்ஷிணாக்கினி, அவசகம் சத்யன் என்னும் நாமங்களையுடைய அக்னிகளாகப் பாவித்து அந்த ஓமகுண்டத்தில் பிரதிஷ்டை செய்யவேண்டும். ஏனைய ஓமத்திரவியங்களையும் தோஷமில்லாத தாகவும், மிகவும் பரிசுத்த முள்ளதாகவும், மனதை எஜமானனாகவும், குணரகிதமாகிய பரமாத்மாவை யஜ்ஞத்துக் கதிதேவதையாகவும், பாவித்து; எப்பொழுதும் சர்வ பலத்தையும் சகல சந்தோஷத்தையுங் கொடுக்கின்றவளாய், நித்ய மங்களையாய், வேதசொரூபிணியாய் எல்லாவற்றிற்கும் ஆதார பூதையாய், சர்வவியாபினியா யிருக்கின்ற யாதொரு பராசத்தியோ அந்தச் சத்தியை உத்தேசித்துப் பிராணனாகிய அக்னியில் முன்சொல்லிய திரவியங்களைக் கொண்டு குண்டலி முகமாக ஹோமஞ்செய்தல் வேண்டும். பின்னர் சித்தத்தையும், பிராணாதிவாயுக்களையும் சுத்தமாக்கிச் சுவானுபூதியினால் தன்னாத்மாவோடு அத்வைதமாயிருக்கிற சாக்ஷாத் பராசத்தியைத் தியானித்து

அவ்வருணோக்கத்தோடு சமாதியோகத்தை யடைதல்வேண்டும். சமாதியோகமாவது, பராசத்தியோடத்வைதமாயிருக்கிற பரமாத்மா எல்லாப் பூதங்களிலும் நிறைந்திருக்கிறதாகவும், எல்லாப் பூதங்களும் அப்பரமாத்மாவினிடத்தி லிருக்கிறதாகவும் கண்டதுவாயிருத்தலாம். எவன் சர்வ பூதாத்மாவாகக் காண்டலாகிய நிலையை எப்பொழுது சிந்திக்கின்றானோ அப்பொழுது தான் சச்சிதானந்தசொரூபிணியாகிய அந்தத்தேவியைத் தரிசித்தவனாவன். அவன் தான் பிரமவித்தென்று சொல்லப்படுவான். அவன் தான் மாயாவிலாசத்தைச் சுட்டெரித்தவனாவன். அவன் தேக முள்ளளவும் பிராரத்தானுபவத்தை யனுபவிப்பவனாவான். அனுபவிப்பவனாயினும் அவனைச் சீவன் முத்தனென்றேசொல்லப்படும். தேகாந்தத்தில் இனிப்பிறவா நெறியாகிய மோக்ஷத்தை யடைகிறான். இதனால் எவனொருவன் சகன்மாதாவாகிய பராசத்தியைப் பூஜிக்கிறானோ அவன் கிருதகிருத்தியனாய் விடுவானென்றறியற்பாலது.

(ருஅ-சுங) ஆகையால் எவ்வித பிரயத்தினத்தினாலாவது ஸ்ரீ புவநேஸ்வரியானவள் தியானஞ்செய்யத்தக்கவள். ஆகவே அவளது மந்திரம் குருபதேச மூலமாய்க்கேட்டுச் செபிக்கத்தக்கது. ஓ பூ பாலகனே ? இப்பொழுது கூறிவந்த தேவியினுடைய யஜ்ஞமுறையில் சாத்வீகமாகிய ஓம்மும், சமாதி யுத்தமான தியான சாக்ஷாத்கார தரிசனமும், செய்யப்பெறுமாயின் அந்த யஜ்ஞம் மோக்ஷத்தைக்கொடுக்கும். இவ்விஷயத்திற் சந்தேகமில்லை, இது வல்லாத ஏனைய யஜ்ஞங்கள் காமத்தோடு கூடினவைகளாயும், நாசமடைவதற் கிடமாயும், யுக்தி யுளதாயின் சித்தி கொடுப்பதாயும், அது இலதாயின் சித்தி கொடாததாயும். இருக்கின்றன. ஆனால் பண்டிதர்கள் சுவர்க்காபேக்ஷை யுள்ளவன் சாஸ்திரத்திற் சொல்லியவண்ணம் அக்னிஷ்டோமத்தில் யஜ்ஞஞ் செய்ய வேண்டுமென்று வேதங் கூறுவதாகச் சொல்லுகின்றார்களே என்றால் சுவர்க்காபேக்ஷையுள்ளவன் அதற்குக்கூறியமுறைப்படியஜ்ஞத்தைச் செய்ய அப்புண்ணியவிசேஷத்தால் சுவர்க்கத்தையடைவது உண்மையே; அப்புண்ணியம் க்ஷீணத்தையடையுந் தன்மைத்தாகலின் அங்ஙனம் க்ஷீணமடையுங்கால்முன்போல்பூலோகத்தையடைவன், அடைந்த பின்னர் செய்யற்பாலனவாகிய புண்ணியபாவங்களுக் கேற்றவாறு மரணசமயத்தி லுதிக்கும் மனோசங்கற்பப்படி மீட்டும் நற்கதி துற்கதிகளை யடைவன். இதனால் சாத்வீகமல்லாத ராஜச தாமச யஜ்ஞங்களுக்கு மூலங்காமமெனவும், அந்தக்காமம் நாசரூபமாதலால் அது காரணமாகச் செய்யும் யஜ்ஞமும் அதனால் விளையும் புண்ணியமும் அப்புண்ணியத்தா லடையுங் கதியும்

நாசத்தை யடைகின்றன எனவும், மான சீகமாகிய சாத்வீக யஜ்ஞம் காமமற்றதாகலான் அந்த யஜ்ஞமும், புண்ணியமும் முத்தியாகிய கதியும் நாசாகிதமாய் நித்தியமாய் விளங்குகின்ற தெனவும் அறியலாயிற்று. ஆனால் மானசீகயாகம் சாதிப்பதற் கெளிதானதன்று. ஜயத்தை யபேக்ஷித்திருக்கிற ஓ அரசனே? முன் உன்னால் செய்யப்பட்ட சர்ப்பயாகமும் தாமசமென்றே சொல்லப்படும். ஏனெனில், அந்தயாகத்தில் துராதமாவாகிய தக்ஷகனிடத்தில் வைரங்கொண்டு அநேகஞ் சர்ப்பங்கள் உன்னால் கொல்லப்பட்டன. ஆகவே அந்தயாகத்தில் வைரமும் கொலையுங் காரணமாயிருந்ததேயன்றி வேறில்லை. இந்த இரண்டுகுணமும் தாமசகுணங்க ளாகையால் அங்ஙனங் கூறியதென்க.

(சுசு-கூஎ) ஓ தருமசீலனாகிய அரசனே? இனி உனக்குச் சிருட்டிக்கு முன் எந்த யஜ்ஞஞ்செய்யப்பட்டதோ அந்தத்தேவி யினுடைய யஜ்ஞவிதியை விதி முறையாகச் சொல்லுகிறேன். நான் சொல்லப்போகும் அந்த விதிதவறாமல் நீ செய்யவேண்டும் தேவீயஜ்ஞத்தை விதிவழி யறிந்தவர்களாயும் மந்திரமார்க்கத்தில் சமாத்தாகளாயும் வேதபண்டிதர்களாயு முள்ள அந்தணர்கள் இப்பொழுது மிருக்கின்றார்கள். அவர்கள் உன்னுடையயாகத்தை நடத்தி வைப்பதற் குரியவராவர், நீயும் அந்தயாகத்திற்குத் தக்கவனே, ஆகையால் சாஸ்திரமுறையாக அந்த யஜ்ஞத்தைச் செய்து அதனாலுண்டாகத்தக்க புண்ணியத்தை நரகத்தை யடைந்திருக்கிற உன்பிதாவுக்குத் தத்தஞ்செய்து அவனை அதினின்றுங் கரையேற்றுவாய்.

இதுவரையில் உன்னுடைய வம்சத்தில் உன் பிதா செய்த பாவத்தைப்போல் ஒருவருஞ் செய்ததில்லை, அவனடைந்த தூர்மரணம்போல் ஒருவரு மடைந்ததில்லை. ஓ அரசனே? பிரபஞ்சத் தோற்று மில்லாமல் பிரம நிஷ்டையிலிருந்த பிரஹ்ம ஞானிகளுக்கு மானஹானி யுண்டாகும்படிச் செய்தால் அதனால் விளையும் பாவம் சகிக்கக் கூடுமானதா? அன்று அங்ஙனஞ் சகிக்கக் கூடாததாய் கொடிய நரகத்தைக் கொடுக்கத் தக்கதாயுள்ள வலிய சாபத்தை அந்தப் பிரஹ்மரிஷியினா லேற்று மாயாவிசித்திரமான சர்ப்பத்தினாற் றீண்டப்பட்டு மரணமடையுங் காலத்தி லிருக்கத்தக்க தர்ப்பசயனம், யுத்தமுகம், கங்காதீர முதலிய விடங்களிலோரிடத்திலாவதிருந்து நல்ல மரணத்தை யடையாமல் மேலுப்பரிகையில் ஸ்நானதான சூன்யனாய்த் தூர்மரணத்தை யடைந்தான். இதற்குக் காரணம் யோசிக்குமிடத்து ஒன்றுந் தெரியவில்லை. பிராணிகள் எந்த எந்த விடங்களி

லிருந்தபோதிலும் அவர்கள் தங்களுக்கு நிர்யாணகாலம் வருவதை முன்ன ரறிந்து கொண்டு அதற்குரிய பிராயச்சித்தாதிகருமங்களைச் செய்து கொள்ளல்வேண்டும், அதற்குரிய சாதனங்களுக்குக்குறைவும், தானபராதீனனாய்ப் பரிதவிக்கவும் வருமாயின் ஆத்மானாத்மவிசாரஞ் செய்தல்வேண்டும். செய்வானாயின் பிராயச் சித்தாதிகள் செய்துகொண்டவனேயாவன். அவ்விசாரம் யாதெனின், "இந்தத் தேகம் பிரிதிவிமுதலிய பஞ்ச பூதாத்மகமாயுள்ள தெனவும், துக்கமுடைய தெனவும், இத்தேகக் கூட்டிலுள்ள தத்துவங்களெல்லாம் நாசமுடையன எனவும், இத்தேகம் பூர்வகர்மத்தின்படி நம்மைவிட்டுப் போகட்டும் எனவும், இந்தத் தேகத்தில் நமக்குச்சம்பந்தமேயில்லை நாம் இந்தத் தேகமுமன்று, இந்தத் தத்துவங்களுமன்று, நாம் வேறாயுள்ளோம், குணங்களுக்கும் வேறாயுள்ளோம் எனவும், நாம் நாசமடைய மாட்டோம் எனவும், நாசமடையாத நாம் ஏன் துக்கிக்க வேண்டுமெனவும் எண்ணி, நிர்மலமாயிருக்கின்ற சித்தத்தினால் சுகத்தையடைந்து, பின்னர் நாம் சம்சாரியல்ல, எப்பொழுதும் முத்தத்தன்மை யுடையோம், அநாதியாயுள்ளோம், பிரமசம்பந்த முடையோம் என்று தெளிந்து, நமக்கு இந்தத் தேகம் கன்மத்தினா லுண்டாகியது, அது வுண்டாகவே இதாசிதந்தோன்றியது, அது தோன்றவே புண்ணியபாவப் பலனாகிய சுகதுக்கானுபவம் வந்தது, இப்பொழுது அதிகோரமாய்ச் சம்சார சங்கடமாயுள்ள அக்கன்மானு பவத்தினின்றும் விடுபட்டோம் எனவும், எண்ணுவதாகும். இவ்வித எண்ணத்தோடு கூடிய சிந்தனையுடன் மரண மடைந்தவன் சென்ம துக்கத்தினின்றும் விடுபடுவான்.

(அ0-அஎ.) ஓ தருமசீலனாகிய அரசனே? உன்றந்தையோ பிராயச் சித்தாதி கருமமறிந்து செய்துகொண்டதுமில்லை. ஆத்மானாத்ம விசாரஞ் செய்ததுமில்லை. வீணான விசாரமும், பிரயோஜனப்படாத செய்கையும் செய்து துர்மரணத்தை யடைந்தான். அவனெண்ணியதும் செய்ததும் என்னையெனின், பிராஹ்மணசாபம் நேரிட்டவுடன் தேகம் போய்விடுமே என்றேங்கித் தேகாபிமானங் கொண்டவனாய் என்னுடைய தேகம் இச்சாபரோகத்தை யடையாதிருத்தல் வேண்டுமே? என்னுடைய ராஜ்யம்சத்ரு பயமில்லா திருத்தல் வேண்டுமே? நானெப்படி பிழைப்பேன், ஐயோ மந்திரிகளெங்கே? மாந்திரகர்களெங்கே? மணிமந்திர அவுடதங்களெங்கே? அவைகளைத் தேடவில்லையா? என்று மேலுப்பரிகையில் கதறிக் கதறி அலைந்திருந்தனனேயன்றி, ஸ்நான சந்தியாதிகள் செய்தவனுமன்று, தேவியை ஸ்மரணை செய்தவனுமன்று தெய்வமே துணையென்று பூமியிற் சயனித்தவனுமன்று, இவ்வாறு ஒன்றுஞ் செய்யவொட்டாது

தடைபடுத்திய சாபவசத்தனாய்க் கோரமாகிய அஞ்ஞான சமுத்திரத்தில் மூழ்கினவனாய் ஒருவராலும் அழிக்கக்கூடாத மேலுப்பரிகையி லிறந்துபோயினன். இவ்விதமான மரணத்தால் அவனுக்கு நரக முண்டாய் விட்டாது. ஆகையால் உன் தந்தையை அந்த யமபயத்தினின்றுங் கரையேற்றுவாயென்று வியாசமுநிவர் கூற, ஜனமேஜயன் தன் தந்தையின் பரிபவத்தைக் கேட்டுத் துக்கத்தாற் பீடிக்கப்பட்டுக் கண்ணீராறாய்ப் பெருக்கி நம்முடைய தந்தை நரகத்திலாழ்ந்து கிடக்க நாமிங்கு வாழ்ந்திருப்பது ஆஹா நல்லவாழ்வு, நம்முடைய பிழைப்பும் நல்லபிழைப்பு என் றிகழ்ந்து இனி நான் என்றந்தை சுவர்க்கம் போய்ச் சேரும் மார்க்கத்தைத் தேடுவேனென்று புலம்பிக் கூறினான்.

மூன்றாவது ஸ்கந்தம் பன்னிரண்டாவது அத்தியாயம்

தேவீயஜ்ஞவிதி முற்றிற்று.

———

ஆஉ அத்தியாயம் கஉ-க்குச் சுலோகம் (சுகூஅஏ.)

———

ஸ்ரீ தேவ்யைநம:

பதின்மூன்றாம் அத்தியாயம்

*** விஷ்ணுகிருததேவீ யஜ்ஞவிதி.**

———

தந்தையின் பரிபவத்தைப் போக்க மனோவேகங்கொண்ட பரிக்ஷித்தது வியாசபகவானை வணங்கி என்னுடையதந்தை சுவர்க்காரோகணஞ் செய்ய நானிப்பொழுது எண்ணிய கருமம் தேவரீர் கூறிவந்த தேவீயஜ்ஞமே; அதனினும் சிறந்த சத்கருமம் வேறொன்றில்லை என் றெண்ணுகிறேன். ஆகையால் உம்மால் சொல்லப்பட்ட விஷ்ணுமூர்த்தி அந்த யஜ்ஞத்தை எவ்வண்ணஞ் செய்தனர் என்று கேட்டவரலாற்றைக் கூறுகிறேன் மஹா சாம்பவாளாகிய மஹருஷிகாள் அதனைக்கேட் டுய்வீர்களாக வென்று சூதபகவான் கூறத் தொடங்கினர்.

(க-உஎ) தந்தையைக் கரைசேர்க்க வெண்ணிய அரசன் வியாசரைவணங்கி ஓ பிதாமகராயுள்ள பெரியோரே? சகத்காரண ரூபியாய், ஒப்பிகந்தவராய், பிரஹ்ம தேஜோவாசராய், சர்வ வியாபகராய் விளங்கும் நாராயண மூர்த்தி முன்னர்தேவீயஜ்ஞஞ் செய்தாரென்றீரே, அவ ரெவ்வண்ணஞ் செய்தனர்? அவ ரந்தயாகஞ் செய்யத் தொடங்கிய

காலத்தில் அதற்குச் சகாய பூதர்களாய் வேத தத்வார்த்த முணர்ந்தவர்களாய் ருத்விக்கிகளா யிருந்த அந்தணர்கள்யாவர்? இவற்றை நன்றாயெடுத்துக் கூறுவீராயின் நானவற்றைக்கேட்டு நின்மல சித்தனாய் சாஸ்திரத்திற் கூறியவண்ணம் அந்த யஜ்ஞத்தைச் செய்கிறேன் என்று விண்ணப்பஞ் செய்ய, வியாசபகவான் அந்தஜனமேஜயனை அன்புடனே நோக்கி ஓ மஹா னுபாவனே? விஷ்ணு மூர்த்தியினால் விதிமுறையாகச்செய்த அந்த அற்புதமாகிய யஜ்ஞப் பிரபாவத்தைக் கூறுகிறேன் கேட்பாயாக.

* "முன்னர் பிரஹ்மா விஷ்ணு உருத்திரர்களாகிய மூவரும் பராசத்தியை ஓர் த்வீபத்தில் ஸ்திரீ ரூபங்கொண்டு தரிசித்தார்க ளென்றும், அவர்களுக்கு அத்தேவி சரஸ்வதிமுதலிய மூன்று சத்திகளை அவரவர் தொழிலுக் கேற்றவாறு தந்து விடைகொடுத்தனுப்ப அவர்கள் முன்போல் புருஷரூபிகளாய்த் தெய்வத்தன்மையுடைய விமானாரூடராய்க் கண்டோர்க்குப் பயத்தை யுண்டு பண்ணத்தக்க மஹாப் பிரவாகத்தோடு முன்னிருந்த சமுத்திரத்தை யடைந்தனரென்றும், பின்னர் வெள்ளமாறிப் பூமியைக்கண்டு அதில் நின்று தங்கள் தங்களுக்குரிய சத்யலோகமுதலிய உலகங்களைப் படைத்து அவரவரும் அவ்வவ்வுலங்களில் வீற்றிருந்து சிருட்டியாதி தொழில்களைச் செய்யத் தொடங்கின ரென்றுங் கூறியிருக்கின்றேன். அவற்றுள் சிலவற்றை ஈண்டெடுத்துக் கூற வேண்டியவனா யிருக்கின்றேன் அம்முறையைக்கேட்டு வருவையேயாயின் பின்னர் நீ கேட்க விரும்பிய தேவியஜ்ஞவிதியை எடுத்துக் கூறுகிறேன். என்னையெனின், திரிமூர்த்திகளும் பூலோகத்திற்கு வந்தபொழுது தேவியினுடைய ⎘ ஆஜ்ஞையினால் ℓ நிச்சலையாகிய ஆதார சத்தியானவள் அவர்களுடைய வந்தனள். அந்தச்சத்தி, எல்லாப்பொருளையுந் தரிப்பதனால் "தரை" என்றும், அகண்டமா யிருப்பதனால் "பிரிதிவி" என்றும், ஆதிசேஷனுடைய மத்தகத்தில் தரிக்கப்பட்டிருக்கிற சக்தியினுடைய சிரேஷ்டத் தன்மையை யடைந்திருப்பதனால் "மகீதல" மென்றும் மதுகைடபருடைய மேதையோடு கலந்திருப்பதால் "மேதினி" என்றும், பெயர்பெற்ற இந்த மேதினியிற் கலந்து பூமி சொரூபமாய் விட்டாள். ஓ பூ பாலகனே? பின்னர் இந்தப்பூமி அசையாமலிருத்தற்குப் பர்வதங்களை யுண்டுபண்ணி அப்பர்வதங்களை மரத்துக்கு இருப்பாணி வைத்தடித் திருப்பதுபோல் அதில் ஆழ்ந்திருக்க வைத்தனர். அதனால் அம்மலைகளைப் பண்டிதர்கள் "மகீதர" மென்று கூறுவர். அம் மகீதரமாகிய மலைகளுக்குள் மேருமலை மிகப் பெரிதாயும், பொன்மயமாயும், இரத்தினமயமாயிருக்கின்ற அநேக சிகரங்களால் பிரகாசமாயும், பரமாத்புதமாயு முள்ளது.

* மூவரும் தேவியைக்கண்ட விவரம் ௩-வதுஸ்கந்தம் ௩-வது அத்தியாயத்திற்காண்க.
⎘ ஆஜ்ஞை - ஆணை ℓ நிச்சலை - உறுதி

பூமியின் செய்தி இங்ஙன மிருக்க, மரீசி, நாரதர், அத்திரி, புலஸ்தியர், புலகர், கிருது, தக்ஷன், வசிஷ்டர் என்று சொல்லப்பட்ட இவர்களனைவரும் பிரஹ்மாவினுடைய பிரசித்தமான புத்திரராவர். இவருள் மரீசி காசிபரைப் பெற்றார். அவருக்கு மனைவியாயுள்ளார் தக்ஷனுடைய பதின்மூன்று பெண்கள். அப்பெண்கள் வழியாகவே தேவாசுரர்க ளுண்டாயினர். ஏனையமானிடர், மிருகங்கள், சர்ப்பங்கள் முதலிய பலவகைச்சாதிபேதங்களாயுள்ள உயிர்களெல்லாமு முண்டாயின. பிரமனுடைய சரீரத்தில் வலப்பாதியில் "ஸ்வரயம்புமநுவும்" இடப்பாதியில் "சதரூபி" என்கிற பெண்ணும் உண்டாயினர். சதரூபி என்பவளுக்குப் பிரியவிரதன் உத்தான பாதன் என்கிற இரண்டு பிள்ளைகளும், அதிக சுந்தரவதிகளாயுள்ள மூன்றுபெண்களும் பிறந்தார்கள். இவ்வண்ணம் பிரமவம்ஸம் விருத்தியானபிறகு பிரஹ்மா மேரு பர்வதத்தினுச்சியில் தன் பெயரால் பிரமலோக மொன்றுண்டாக்கிக் கொண்டு அதிலிருந்தனன். பகவானாகிய விஷ்ணு மூர்த்தியானவர் இலக்ஷிமி தேவியினால் விரும்பத்தக்கதும், எல்லா வுலகங்களுக்கு மேலுள்ளதுமான வைகுண்டத்தைக் கிரீடார்த்தமாக வுண்டுபண்ணிக்கொண்டு அதிலிருந்தனர். உருத்திரதேவரும் கைலாசமென்கிற திவ்யமாகிய ஸ்தானத்தை யுண்டாக்கிக்கொண்டு அதில் நந்தியாதி பிரமதகணங்களோடு உல்லாசமாய் உலாவிக்கொண் டிருந்தனர். மேருவினுடைய சிகரத்தில் நானாவித ரத்னமயமா யுண்டுபண்ணப் பட்ட சுவர்க்கம் தேவாதிபதியாகிய இந்திரனுக்கு அமைக்கப் பட்டிருக்கிறது. அந்த சுவர்க்கத்தில் முன் பாற்கடலைக்கடந்த காலத்தில் தோன்றினவைகளா யிருக்கின்ற விருக்ஷங்களுக்குள் சிரேஷ்டமாகிய பாரிஜாதமும், நான்கு கொம்புகளோடு கூடிய ஐராவதமும், உச்சைஸ்ரவ மென்கிற குதிரையும், காமதேனுவும், அரம்பை முதலிய தேவஸ்திரீகளும் பூஷணமாக அமைக்கப்பட்டுள்ளன. அவைகளை இந்திரன் பரிபாலித்துக்கொண்டு அதில் சுகித்திருக்கின்றனன். அந்தச் சுவர்க்க லோகத்திலேயே, பாரிஜாத முதலியவைகள் பாற்கடலிற் றோன்றிய பொழுது தோன்றினவர்களான தன் வந்திரியும், சந்திரனும் பிரகாசித்து வசிக்கின்றனர். பிரஹ்மா விஷ்ணு உருத்திரர் நீங்கலாக ஏனைய சராசாங்க ளெல்லாம் நானாவித பேதங்களாய்க்கற்பிக்கப்பட்டுள்ள தேவ திரியக் மானிடமென்னு மூன்றுவிதமாய்ச் சிருட்டிக்கப்பட்டுக் கன்மங்கட் கீடாய் ✳ சராயுஜம், ✎ அண்டஜம், ✩ சுவேதஜம், ❖ உற்பீஜம் என்னும் நால்வகை யோனிவாய்ப் பட்டு வெளிவருகின்றன.

✳ சராயுஜம் - கருப்பையிற் பிறப்பன
✎ அண்டஜம் - முட்டையிற் பிறப்பன
✩ சுவேதஜம் - வேர்வையிற்பிறப்பன
❖ உற்பீஜம் - நிலத்திற்பிறப்பன

(உஅ-சுங) திரிமூர்த்திகளும் தத்தமிடத்திலிருந்து இவ்விதமான சிருட்டிபேதங்களைச் செய்துகொண்டு வரும்பொழுது அவருள் ஒருவராகியவிஷ்ணுபகவான் தம்மிடமாகியவைகுண்டத்தில் இலக்ஷிமி தேவியோடு கிரீடித்திருக்குஞ் சமயத்தில், முன் பாற்கடலிற்கண்ட இரத்தினவகைகளா லலங்கரிக்கப்பட்டிருக்கின்றத் வீபத்தையும் அதில் மஹாமாயா சொரூபிணியாகிய எந்தத்தேவியைத் தரிசிக்க ஸ்திரீருபத்தை யடைந்து மந்திரோபதேசஞ் செய்யப்பட்டதோ அதனையும், நினைத்து அத் தேவியையுந் தியானித்து வைகுண்டத்தை விட்டுக் கைலாயத்துக்குச் சென்று மஹாதேவரை யழைத்துக்கொண்டு தேவிசம்பந்தமாகிய யஜ்ஞத்தை நடத்துவதற்கு உத்தேசித்து, பிரஹ்மன், வருணன், இந்திரன், குபேரன், அக்னிமுதலிய தேவர்களையும், வசிஷ்டர், காஸ்யபர், தக்ஷப் பிரஜாபதி வாமதேவமுனி பிரகஸ்பதி முதலிய தேவருஷி பிரஹ்மருஷிகளையும், பூதர ஸ்ரேஷ்டர்களையும் வரவழைத்து வைத்துக்கொண்டும், மஹா வைபவத்தோடு கூடினதாகியும், சாத்வீகமாகியும், ரமணீயமாகியும், யஜ்ஞப் பிரயோஜனங்களாகியு முள்ளதிர வியங்களைமிகவும் விசேஷமாக ஏர்ப்படுத்திக் கொண்டும், சில்பிகளால் யாகசாலையை விஸ்தாரமாகச் செய்தும், நல்ல அனுஷ்டானபராளாயும் நல்ல இருதயத்தோடும் இருக்கின்ற ருத்விக்கிகளை வரவழைத்து மண்டலங்களையும் குண்டலங்களையும் அலங்காரஞ்செய்வித்தும், யஜ்ஞஞ்செய்ய ஆரம்பித்துத் தேவியினுடைய மந்திரங்களைப் பீஜாக்ஷரங்களோடும் ஜபிக்கத் தொடங்கினர். முன்கூறிய அனைவரும் அவரவர் செய்யவேண்டிய விதிகளையும் முறை தவறாமற்செய்து வந்தனர். அந்தணர்களும் விதிமுறையாய்ப் பிரதிஷ்டை செய்திருக்கிற அக்னிகளில் ❖அவிசுகளை விசேஷமாக ஓமஞ் செய்துவந்தனர். அச்சமயத்தில் நல்ல சுரத்தோடும், தெளிவான அக்ஷர விளக்கத்தோடுங் கூடிய ஓ ரசரீரிவாக்கொன்றெழுந்தது. அதுவருமாறு, ஓ விஷ்ணுவே ? நீ தேவர்களுக்குள் சிரேஷ்டனாயிருக்கக் கடவாயென்று முன்னர் மங்கலமொழி யொன்றுகூறி மீளவும் இனி நீ யாவராலுங் கொண்டாடத்தக்கவனாயும், ஆராதிக்கத் தக்கவனனாயும், தேவர்களுக்குள் சமர்த்தனாயும், பிரமன் இநதிரன் முதலிய எல்லாத் தேவராலும் பூஜிக்கத் தக்கவனாயும், இவ்வுலகின் கண் நான்கெல்லைக் குட்பட்டவர்களால் உன்னிடத்தில் பக்திசெலுத்தத் தக்கவனாயுமாவாய். அங்ஙனம் செய்கின்றவர்களுக்கு நீ வரங் கொடுக்கின்றவனாயுமாவாய், எல்லாத் தேவர்களுக்கும் வேண்டிய வேண்டியாங்கருள் செய்பவனாயு மாவாய், இதுவேயுமன்றி சிரேஷ்டரென் றழைக்கப் படுவோரில் சிரேஷ்டத்துவமும், சகல

❖ அவிசு - தேவருணவு

ஐஸ்வர்ய சம்பன்னத்வமும், சகல யஜ்ஞங்களில் முக்கிய கர்த்துருத்துவமும், யஜ்ஞஞ் செய்வோரால் பூஜ்யத்துவமும் உடையவனாயுமாவாய். அன்றியும்; எல்லாச் சனங்களும் ஆத்மார்த்தமாகப் பூஜிக்கவும், அங்ஙனம் வழிபடுவோருக்கு வேண்டியாங்கருள் புரியவும், அசுரர்களால் பாதிக்கப்பட்ட அமரர்கள் உன்னை அடைக்கலம்புகுங்கால் அவர்களுக்குச் சுகத்தைக் கொடுக்கவும் உரியவனாயுமாவாய். இங்ஙனங்கூறிவந்த விசேடணங்க ளமைவதனால் ரக்ஷகமூர்த்தி என்றும் பேர் பெறுவாய். இப்படியே சர்வ புராணங்களாலேயும் வேதங்களாலேயும் பூஜிக்கப் பட்டவனாயு மாவாய். அவைகளாலுனக் குண்டாகுங் கீர்த்திக் களவேயில்லை. அன்றியும் உலகின்கண் எப்பொழு தெப்பொழுது தருமத்துக்கு ஹானி வருகின்றதோ அப்பொழு தப்பொழுது உன்னுடைய ஓ ரம்சத்தினாலே பூமியி லவதரித்துத் தர்மரக்ஷணஞ் செய்து வருவாய். அவ்வவதாரங்கள் சிறுமை யுடையனவா யிருந்தபோதிலும் அவையெல்லாம் இகழப்படாமல் மிகவும் புகழப்பட்ட வைகளாகவும், மகத்துக்களால் கொண்டாடத் தக்க வைகளாகவுமிருக்கும்.

(சுசு-ருஅஏ) ஏனெனில், நீ எந்த அவதாரங்க ளெடுத்தபோதிலும் அவ் வவதாரங்களில் என்னுடைய அம்சங் கலந்திருப்பதால் அந்த வரதாரங்களிற் செய்யுங் காரியங்கள் சித்தியாய்ப்புகழப்படுகின்றன. என்னுடைய அம்சத்தினின்றும் சனிக்கின்ற சத்திகளெவையெனின், வாராஹி, நராசிம்ஹி முதலிய பல பேதங்களாயுள்ள சத்திகளாகும். அச்சத்திகள் உன்னுடன் கலந்திருந்து எல்லாவற்றையுஞ் செய்து உனக்கே புகழையுங் கொடுத்துப் போகின்றபடியால் நானாவிதமான இழிந்தயோனிகளிற்பிறந்தபோதிலும் அவை உனக்குப் பிரசித்தமான புகழையே கொடுக்குமென்பதிற் சிறிதுஞ் சந்தேகிக்கவேண்டாம். ஓவிஷ்ணுவே? முன் கூறிய வாராஹி முதலிய சத்திகளுடையரூபலாவண்ய முதலியவற்றைக்கேட்டு அந்தச் சத்திகளுடைய பலத்தால் எல்லாக் காரியங்களையுஞ்செய்து முடிப்பாய். அச்சத்திகளை ஒருவராலு மதிக்கக் கூடாதரூபலாவண்ணி யத்தோடுங் கூடினவர்களாயும், சர்வாபரணா லங்கிருதர்களாயும், அநேக ஆயுதங்களை யுடையவர்களாயும் தியானித்து அவர்களுடைய கலப்பினால் சாதிக்கப்படாத தேவகாரியங்களையும் எளிதற்சாதித்து விடுவாய். இவையாவும் நான் உனக்குக்கொடுத்த வரங்களாகும். நீ எப்பொழுதும் சிறிதேனும் அகங்காரத்தையடைந்து அந்தச் சத்திகளை அலக்ஷியமாய் நினையற்க. பரதகண்டத்தில் அந்தச் சத்திகள் சர்வாபீஷ்டங்களையுங் கொடுக்கத் தக்கவர்கள். அவர்களே எவ்வித பிரயத்தினத்தினாலும் பூஜிக்கத் தக்கவரும், கொண்டாடத்தக்கவருமாவர்.

இது நிச்சம். ஒ திருமாலே? உனக்கும் அந்தச் சத்திகளுக்கும் பேதமில்லை ஆகையால் அந்தச்சத்தி விக்ரஹங்களையும், உன்னையும் சப்த த்வீபங்களிலேயும் த்வீபாந் தரங்களிலேயுமுள்ள மானிடர்கள் பிரசித்தமாய் நானாவிதமான இகபோகத்துக் குரிய கோரிக்கைகளின் பொருட்டுப் பூஜித்து வருவார்கள். அவ்வண்ணம் பூஜிக்கும் சுவர்க்காதி புவனாபேக்ஷிகளாகிய அவர்கள் தங்களபீஷ்ட சித்தியின் பொருட்டு விசேடமான வேதமந்திரங்களாலேயும், சஹஸ்ரநாம ஜபங்களாலேயும், ஆராதிக்கற் பாலராவர். அன்றியும் பூலோகத்தாராலும் சுவர்க்க லோகத்தாராலும் உனக்குச் செய்யப்பட்ட பூஜையினால் மகிமை விர்த்தியடையும். என் றிவ்வண்ணம் ஆகாயத்தி லெழுந்த வாக்கு அனுக்கிரகஞ் செய்து நின்றுவிட்டது. பகவானாகிய அந்த விஷ்ணு மூர்த்தி அந்த வரங்களைக்கேட்டு ஆனந்த பரவசராய் யஜ்ஞத்தை விதிப்படி நிறைவேற்றித் தேவ சமூகங்களையும் பிரஹ்ம புத்திரர்களாகிய முநிவர்களையும் ஏனைய அந்தணர் முதலியோரையும் அவரவரிடம்போய்ச் சேரும்படி விடைகொடுத்து நாராயணர் தம்முடைய பரிவாரங்களுடன் வைகுண்டம் போய்ச் சேர்ந்தனர். விடைபெற்றுப் போகத்தொடங்கிய அனைவரும் ஒருவருக்கொருவர் அசரீரிவாக்கை எண்ணி எண்ணி அதிசயித்து அவற்றைப் பலமுறை எடுத்துச் சொல்லிக் கொண்டும் தங்களுக்கு இந்த யஜ்ஞத்தி லிருக்கவந்த புண்ணியத்தையும், அதனோடு அசரீரி வாக்கைக் கேட்டு மகிழவந்த பாக்கியத்தையும், புகழ்ந்து கொண்டும், இந்தவாக்கைக் கேட்ட தற்குவரும் புண்ணியம் எவ்வளவோவென்று கூத்தாடியும், கேட்பதற்கு ரம்மியமாயும் நல்ல விளக்கமாயுமெழுந்த இந்த வாக்கைப்போல் இதுவரையில் யாராவது கேட்டிருப்பார்களா வென்றும், கேட்டிருந்த போதிலும் அத் தேவிவிஷயத்தில் பக்தியுண்டா யிருக்குமாவென்றும் சொல்லிச் சொல்லித் தேவியினுடைய பக்தி யுடையவர்களாய்ச் சகல பலன்களையும் கொடுக்கின்ற அந்தப் பராசத்தியினுடைய பூஜையைச் செய்து வருவோமென்று சென்று அவ்வண்ணமே யாவரும் செய்துவந்தனர்.

மூன்றாவது ஸ்கந்தம் பதின்மூன்றாவது அத்தியாயம்

விஷ்ணுகிருததேவீ யஜ்ஞவிதி முற்றிற்று.

———

ஆஉ அத்தியாயம் கங-க்குச் சுலோகம் (எருஎ.)

———

உ

ஸ்ரீ தேவ்யைநம:

பதினான்காம் அத்தியாயம்

* த்ருவசிந்தூ பாக்கியர்ணம்

———

(க-ங) ஜனமேஜயன் வியாசரைநோக்கி நாராயணராலே செய்யப்பட்ட யஜ்ஞத்தில் அவருக்குத் தேவி வரமளித்த பிரபாவத்தைத் தேவரீர் விரிவாய்ச்சொல்லக்கேட்டேன். அதனால் எனக்கு இன்னமும் தேவியினுடைய மகிமையைக்கேட்கவேண்டுமென்கிற ஆவலுண்டா யிருக்கிறது. ஆகலான் தேவரீர் அத்தேவியின் மகிமையைச் சரித்திரரூபமாய்ச் சொல்லி யருள்வீராயின் அதனைக்கேட்டுப் பின்னர் ✝ சிலாக்கியமாகிய அத்தேவி யஞ்ஞத்தை உம்முடைய அநுக்கிரகத்தினாற் செய்து பரிசுத்த னாவேனென்று அன்பாளனாய்க் கேட்க வியாசபகவான் அரசனை நோக்கி ஓ அரசனே! நீ விரும்பியவண்ணம் உத்தமமாகிய தேவியின் சரித்திரத்தைக் கா்மகாண்டப் பிரதிபாதகமாகிய இதிகாச சம்மதமாகவும் ஞானகாண்டப் பிரதிபாதகமாகிய புராண சம்மதமா கவுஞ்சொல்லுகிறேன் கேட்பாயாகவென் றருளிய உண்மையை இதிகசாதிபுராண சாரங்களை யுணரவல்ல மஹரிஷிகள் உங்களுக்கு எடுத்துச் சொல்லுகிறேனென்று சூதபகவான் கூறத்தொடங்கினார்.

(சு-கசு) கோசல தேசத்தில் சூரியவம்சத்திற் றோன்றினவனாயும், புண்ணிய புத்திரனாயும், மிக்க தேஜோரூபியாயும், தருமாத்மாவாயும், சத்ய சந்தனாயும், நல்ல அநுஷ்டான பரனாயும், வருணாச்சிரம தருமங்களில் அவரவரைத் தவறாது நடப்பிக்கின்றவனாயு முள்ள த்ருவசிந்து என்னும் அரசன் எல்லா வளங்களு நிறைந்த அயோத்தியில் அரசாக்ஷி செய்துவந்தனன். அவனாளுகையிலுள்ள அந்தணா் க்ஷத்திரியா் வைசியா் சூத்திரா் முதலிய நால்வரும் ஏனைய சங்கரசாதியருந் தங்கள் தங்களுக்கு விதித்த விருத்தியிலிருந்து தருமந் தவறாதிருந்தனா் பொய் கொலைகளவு கட்காம முதலியவற்றில் உழல வல்லவரும் தூா்த்தருமாகிய யாவரும் அப்பொய் முதலானவற்றை யொழித்துச் சாதுக்களாகவே யிருந்தனா். அன்றியும் டம்பம், மூா்க்கம், நன்றி மறத்தலாகிய தீயகுணங்களை யொருவருமறியார். இவ்வண்ணம்

---

* த்ருவசிந்து என்னும் அரசனுடைய சரித்திரம்.

✝ சிலாக்கிய - புகழ்ச்சியாகிய

யாவரும் நீதிவழியினிற்கச் செங்கோல் செலுத்திவரும் அவ்வரசனுக்கு நல்ல ரூபலாவண்ணியத்திலும் சாமர்த்திய குணத்திலும் சிறந்த மனோரமை, லீலாவதி என்கிற இரண்டு ஸ்திரீகளுளர். அவருள் மனோரமை தர்மபத்னியாயும், லீலாவதி * காமக்கிழத்தியாயு முள்ளவர்கள். அவ் விருவரோடுந் த்ருவசிந்து என்கிற அரசன் தன்னரண்மனையிலோயும், மற்றுமுள்ள உப்பரிகை களிலேயும், உத்யான வனங்களிலேயும், கிரீடார்த்தமா யிருக்கிற மாளிகைகளிலேயும், நடபாவிகளிலேயும் அநேகவிதமான விநோதங்களுடந் கிரீடித் திருத்தனன். இவ்வாறிருக்கு நாளில் தருமபத்தினியாகிய மனோரமையானவள் நல்ல சுப முகூர்த்தத்தில் அரச லக்ஷணத்திலும் அரசியல் செலுத்து முறைமையிலுஞ் சிறந்த ஓர் புத்திரனைப் பெற்றனள். அப்புத்திரனைப் போலவே எல்லா லக்ஷணங்களும் வாய்ந்த ஓர் புத்திரனை முப்பதுநாளில் லீலாவதி என்கிற காமக்கிழத்தி பெற்றனள். இருவரும் அரியமக்களைப் பெற்றதனால் அரசன் பேரானந்தப் பெருக்கடைந்து அந்த இரண்டு புத்திரர்களுக்கும் ஜாதகன்ம முதலிய சடங்குகளை விதிமுறையாகச் செய்து தர்மபத்தினியாகிய மனோரமையினுடைய பிள்ளைக்கு சுதர்சனன் என்றும், லீலாவதியினுடைய பிள்ளைக்குச் சத்ருஜித் தென்றும் நாமம் வைத்து அந்தணர்களுக்குச் சுவர்னதான முதலிய பல தானங்களுங்கொடுத்து அகமகிழ்ந்து இவன் தர்மபத்தினி யினுடைய மகனென்று அவன்பால் மிக்க அன்பும், இவன் காமக்கிழத்தி மகனென்று அவன் பால் அன்பின்மையுங் காட்டாது இரு மக்களிடத்தும் எக்காலத்தும் வேற்றுமை சிறிதுமின்றி அன்புபாராட்டி வளர்த்து வந்து சௌளகர்ம முதலியவற்றையும் அதிக சிறப்புடன் நடத்திவர; அவ்விருமக்களும் தந்தை மேன்மேல் மகிழ அழகிய உருவத்தாலும் உருவத்துக்கேற்ற சத்குணங்களாலும், அக்குணங்களுக்கேற்ற நன்னடைகளாலும், மேன்மையையே விளைவித்துவந்தனர். தந்தைக்கேயன்றி ஏனையோர்க்கும் அவ்வாறே சந்தோஷத்தை விளைவிக்கின்றவர்களாகவே யிருந்தனர்.

(கஎ-ருங) இவருள் லீலாவதியாகிய இளையவள் குமாரனாகிய சத்ருஜித் தென்பவன் மிகவும் சாதுர்யவானாகவும் மிருதுவான இனிய சொல்லை யுடையவனாகவும் பார்ப்பதற்கு மிகவும் அழகுடை யவனாகவும் மந்திரிகளுக்கும் நகர வாசிகளாகிய குடிகளுக்கும் இஷ்டனாகவும் இருந்த சிறப்பால் அரசனும் அவன்பால் மிக்க

* அரசர் மரபில் அரசனுக்கு இரண்டு மூன்றுபேர் பத்தினிகளாகவே யிருப்பினும் அவருள் முதலாயுள்ளவளே அரசியலுக்குரிய தர்மபத்தினி என்றும், ஏனையரெல்லாம் காமக்கிழத்தியரோ டெண்ணப் பட்டவரென்றுங் கூறுவது விதியாம்.

அன்புடையனாகவும், சுதர்சனனுடைய அதிர்ஷ்ட ஹீனத்தால் அவன்பால் மிகுந்த பிரியமில்லாதவனாகவு மிருக்குங்கால் ஓர் நாள் வேட்டையாடுவதில் பிரிய முள்ளவனாய்ப் பயங்கரமான வனமத்தியிற்சென்று சிறுத்தை காட்டுப்பன்றி முயல் காட்டெருமை சரபப்பக்ஷி மான் முதலிய இவைகளை வேட்டையாடும் பொழுது ஓர் சிங்கம் மிகுந்த கோரத்தோடும் ஓர் புதரிலிருந்து பாய்ச்சலாகவர அரசன் அதனைக்கண்டு பாணத்தினாலடிக்க அது மிகவும் கோபத்தோடும் மேகம்போற் கர்ச்சித்து வேகமாய்வந்து அரசனைப் பார்த்து உறுத்துத் தன் வாலைமேலே யுயர்த்தி முகத்தைச் சூழ்ந்திருக்கின்ற ரோமங்களைச் சிலுர்த்து அதிகபராக்கிரமத்தோடும் பாயும்பொழுது அரசன் அது பாய்வதற்கு முன் வலக்கையிற் கத்தியும் இடக்கையிற் கேடகத்தையுந் தாங்கி அதைக்கொல்ல எத்தனித்தனன். அவன் சேனைத்தலைவர்களும் அந்தச்சிம்ஹத்தைச் சூழ்ந்து பாணங்களை விசேஷமாக விடுத்தனர். விடுத்த அப்பாணங்களின் ஓசையும், விடுக்கும்பொழுது சேனைகள் கூச்சலிடும் ஓசையும் இவ் வளவிற்றென்று சொல்லி முடியாது. அரசன் சேவகத்தையும் சேனைகளின் ஆரவாரத்தையும் பாணப்பிர யோகங்களின் ஓசையுங்கண்ட அச்சிங்கம் சிறிதும் அஞ்சாதுபாய அரசன் கத்தியினால் வெட்டினாள். வெட்டியபொழுது அச்சிங்கம் தன்நகங்களினால் அரசனைப் ❁பூரியது அரசனும் மாண்டனன். அரசன் மாண்டதைக்கண்ட சேனைகள் நகரத்திலோடி மந்திரிகளிடத்திற் சொல்ல அவர்கள் அச்செய்தியைக்கேட்டு வசிஷ்டர் முதலானவர் களையும் பந்து சனங்களையும் அழைத்துக்கொண்டு வனத்திற்குப் போய் அரசனைக் கண்டு துக்கித்து அவன் பரலோக சுகத்தை யடையும்பொருட்டு அபரக்கிரியைகளை விதிமுறையாக நடத்திப் பின்னர் வசிட்டரும் மந்திரிமார்களும் எந்தப் பிள்ளைக்குப் பட்டங் கட்டலாமென்று யோசிக்கும்போது மந்திரிகள் சுதரிசனன் தர்மபத்தினியின் பிள்ளையாயிருத்தலாலும், அரசியலுக்குரிய சாந்தகுணமுதலிய குணங்களிலும் நல்ல ரூபத்திலும் சிறந்திருத்தலாலும், அவனுக்கே பட்டாபிஷேகஞ் செய்யலாமென்று கூறினர். வசிஷ்டரும் அதுவே சரியென்று ஒத்துக்கொண்டனர். பின்னர் மந்திரிகள் அதுபோல் செய்வதற்கு யோசித்திருக்குஞ் சமயத்தில் உஜ்ஜனி என்னும் பட்டணத்திற் கரசனும் லீலாவதிக்குப் பிதாவுமாகிய யுதாஜித் தென்பவன் கேள்விப்பட்டுத் தன் பேரனாகிய சத்ருஜித்து என்பவனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்யவேண்டுமென்னு மெண்ணத்துடன் வந்து சேர்ந்தனன். கலிங்கதேசத்துக் கரசனும் மனோரமைக்குப் பிதாவுமாகிய வீரசேன னென்பவனுந் தன்பேரனாகிய

❁ பூரியது - கிழித்தது

சுதர்சனனுக்கே பட்டங்கட்டி வைத்து வந்து சேர்ந்தனன். அவ்விருவர் சேனைகளும் எண்ணிறந்தனவாய் மிக்க வயிரங்கொண்டு அவர்களுடன் வந்து சேர்ந்தன. வந்த பின்னர் இவ்விரண்டரசர்களும் யாருக்குப் பட்டாபிஷேகஞ் செய்வதென்று ஒருவரை யொருவா வினாவினர். யுதாஜித் தென்பவன் இருவரில் மூத்தவன் எவனோ அவன் தான் ராஜ்யத்தை யடைவானன்றி இளையவன் எப்படி யடைவானென்றனன். வீரசேனன் யுதாஜித்தைப் பார்த்து உன்னால் சொல்லப்பட்டவனா பெரியவன்? பண்டிதர்களால் நான் கேட்டிருக்கின்றபடி தர்மபத்தினியின் குமாரனே ராஜ்யத்தையடையத் தக்கவன் என்றனன். அதைக்கேட்ட யுதாஜித்து மீளவும் நீ கூறிய தர்மபத்னியின் புத்திரன் பெரியோனாயிருந்தபோதிலும் இராஜலக்ஷணமாகிய சாம தானபேததண்டங்களாகிய சதுர்வித உபாயங்களைச் செலுத்தும் மேன்மை யாளனாகக் காணப்படவில்லை; ஆகையால் அவன் பட்டத்துக் குரியவனாகான் என்றனன். இவ்வாறு ஒருவருக்கொருவர் தங்கள் தங்கள் பேரனுக்குப் பட்டாபிஷேகமாக வேண்டுமென்றுகலகம் விளைத்தனர். அப்பொழுது சபையார்கள் இக்கலகத்தை நிவர்த்திசெய்ய வல்லவர்கள் யாவரென்று யோசித்துக் கொண்டிருக்குஞ் சமையத்தில் யுதாஜித்து மந்திரிகளைப் பார்த்து இந்த வீரசேனனுடைய எண்ணம் எப்படியோ அப்படியே உங்களுக்கு மிருக்கின்றதல்லவா ஆஹா நன்றாயிருக்கின்றது. நீங்கள் சுயலாபத்திலேயே ஆசை யுடையவர்களாதலால் அறிவில்லாத வனாகிய சுதர்சனனுக்குப் பட்டங்கட்டி ராஜ்ய சம்பத்தைக் கொள்ளைகொள்ள இச்சித் திருக்கின்றீர்கள். அதனை இப்பொழுது உங்களிடத்தில் விளங்கும் கண்காட்டல் முதலிய இங்கிதச் செயல்களால் நன்றாய்த் தெரிந்து கொண்டேன். வீரசேனைகளோடு கூடி யிருக்கின்றவனாகிய நான் உயிருடனிருக்கும் பொழுது குணத்திலும் பராக்கிரமத்திலுஞ் சிறந்தபெரியவனை விட்டுச் சிறியவனுக்குப் பட்டங்கட்ட எவனாவது வருவானாயின் நான் யுத்தம் நடத்துவதிற் சந்தேகமில்லை. என் வாள்முனையினால் இப்பெரிய பூமி இரண்டு பிளவாகப்பிளக்கப்படுமானால் நீங்களனைவரும் இவ்வாளுக்கு என்னாவீர்கள் என்றான். அதுகேட்ட வீரசேனன் யுதாஜித்தைப் பார்த்து வார்த்தை சொல்வதிற் சதுர்ப்பாடுடைய ஓ அரசனே! இந்த இரண்டுபிள்ளைகளும் குணத்திலும் ராஜலக்ஷணத்திலும் சமான மானவர்களாகவே எனக்குக் காணப் படுகின்றார்கள். அவர்களிடத்தில் நீ எப்படி பேதங்கண்டனையென்றான். இவ்வாறு இரண்டரசரும்மேன்மேல் வைரங்கொள்ளும் வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருக்குஞ் சமையத்தில்

அச்சபையிலுள்ள பெரியோர்களும் ஏனைய நகரத்தார்களும் வியாகுலமடைந்த மனமுடையவர்களாக விருந்தனர். இவர்கள் கலகங்களை முன்னமே யறிந்தவர்களும் அளவிறந்த சைனியங்களை யுடையவர்களும், பிறருக்குக் கேடுசெய்வதிற் பிரியமுள்ளவர்களும் எந்த நகரத்திலாவது கலக முண்டாயிருக்குமாயின் அச்சமையமறிந்து சண்டையை விரும்பி இச்சமயத்தில் நானொருவனே வென்று விடுவேன் நீ வேண்டுமாவென்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளும் வஞ்சகச் சொற்களை யுடையவர்களுமான பகை யரசர்களாகிய சிருங்கபேர புரத்திலுள்ள வேடர்குல மன்னவரும் அரசன் இறந்து போனமையைக்கேட்டு அவனுடைய திரவியத்தைக் கொள்ளை கொண்டு போவதற்கு வந்து சேர்ந்தனர். இவர்களேயன்றிப் புத்திரர்கள் பாலியரா யிருப்பதையும் அவர்களுடைய பாட்டன்மார்கள் பட்டாபிஷேக விஷயத்தில் கலகப்பட் டிருப்பதையும்" கேள்வியுற்ற தேசாந்தரங்களிலுள்ள வஞ்சகக் கள்வர்களும் வந்து சேர்ந்தனர். இவ்வாறு கூடியயாவரும் யுத்தத்துக்கு ஆரம்பிக்குஞ் சமயத்தில் யுதாஜித்தும் வீரசேனனும் அச்செய்தியறிந்து தங்களுடைய பேரன்மார்களைக் குறித்த பட்டாபிஷேக விவாதத்தை மறந்து அவர்களோடு யுத்தஞ்செய்யத் தலைப்பட்டனர்.

மூன்றாவது ஸ்கந்தம் பதினான்காம் அத்தியாயம்

த்ருவசிந்தூபாக்கியானம் முற்றிற்று.

———

ஆஉ அத்தியாயம் கசு-க்குச் சுலோகம் (அக௦.)

உ

ஸ்ரீ தேவ்யைநம:

பதினைந்தாம் அத்தியாயம்

* யுதாஜித் வீரசேனையோர் யுத்தம்

———

(க-சு) ஒருத்தருந கொருத்தர் பேசுஞ்சொல்லிற் கோபமுடையவராயும், ராஜ்யசம்பத்தைக் கொள்ளை கொள்ள வேண்டுமென்கிற பேராசை யுடையவர்களாயும், யுத்தத்தை மேற்கொண்ட சர்வாயுத பாணிகளாயுமுள்ள யுதாஜித்து வீரசேன னென்கிற அவ்விரு மன்னர்களுடைய சேனைகள் தடிகளைச் சுழற்றிச் சுழற்றி மேன்மேலும் விட்டு எங்குந் தடிமயமே யாக்கினர். அப்பொழுது

யுதாஜித்து வில்லைத் தாங்கினவாய்த் தான் ஜயமடையத் தக்கவனென்கிற அடையாளத்தைக் காட்டுவதாகிய கொடியை முன்னுயர்த்தி கடத்தி, அதன்பின்னர்த் தான் வரவழைத்திருக்கிற திரண்ட சேனைகளைக்கொண்டு யுத்தஞ் செய்வித்துச் செயத்தை யடைய வேண்டுமென்கிற எண்ண முடையவனாதலால் அவர்களை முன்னே போக்கித் தான் அவர்களுக்குச் சமானமாகிய வீரதேஜ சையுடையவனாகிய வீரசேனன் யுதாஜித்தோடு யுத்தஞ்செய்ய வேண்டுமென்று மெண்ண மில்லாதவனா யிருந்தும் அவன் சொற் போரையொழித்து விற்போருக்கு வந்தனனாதலால் எதிர்த்தவனோடு எதிர்த்துப் போர் செய்வது க்ஷத்திரியதரும மென்பதையும், தன் பேரனுக்குரிய க்ஷேமத்தைத் தேடுவது தருமசீல மென்பதையும் நீதியாக வெண்ணி யுத்தஞ் செய்யத் தலைப்பட்டு மகாகோப முடையவனாகியும் ஒருவராலும் கெடுக்கப்படாத பராக்கிரமத்தை யுடையவனாகியும் சிங்கம்போற் கெர்ச்சித்து யுதாஜித்தைப் பார்த்துச் சிறிதுமஞ்சாமல் மேகங்கள்மலைமேல் நீரைப் பொழிவதுபோல் பாணவருஷங்களை அமோகமாகப் பொழிந்தும், கூர்மையாகியும் அதிவேகமாய்லக்ஷியந் தவறாமல் கொல்லத்தக்க ஆற்றலுடைய தாகியு முள்ள விசிகமென்கிற ஓர்வகைப்பாணங்களை ஒன்றிரண்டு பலவாக விட்டு அசையாமற் கட்டினன். அவைகளையுதாஜித்தென்பவன் அதிவேகமாய்ப் பாயத்தக்க சிலீமுக பாணங்களால்வெட்டினான். இவர்க ளிவ்வாறிருக்க, பார்ப்பதற்கு அதிபயங்கரரூபிகளா யிருக்கின்ற யானைவீரர்களோடு யானைவீரர்களும், குதிரை வீரர்களோடு குதிரை வீரர்களும் தேர் வீரர்களோடு தேர் வீரர்களும் சமயுத்தஞ் செய்தனர். இவ்வாறு அவ்விரு அரசரும் செய்வதாகிய போர்த்திறத்தையும்; அவர் சேனைகள் செய்வதாகிய போரின் சதுர்ப்பாட்டையும் எங்குங் கண்டிலோமென்று ஆகாயத்திற் றேவர்களும், யுத்த களத்தைச்சூழ்ந்து ருஷிகள் மாநுடா முதலியோரும் அதிசயித்துப் பார்க்கவும், மாமிசங்களைப் பக்ஷிக்க வேண்டுமென்கிற கழுகுகள் எங்கும் வட்டமிட் டுலாவுதலுமா யிருந்தன.

(எ-கஎ) அந்த யுத்தகளத்தில் பாவமிகுந்த பிராணிகளுடைய கண்களுக்குப் புலப்படுவதாகியும், மகா பயங்கரமாகியு முள்ள யமலோக்திற்குப்போகு மார்க்கத்தில் வெள்ளங்கொண்டோடும் வைதரணி நதியைப்போல் கஜதுரக பதாதிகளுடைய உதிரவெள்ளம் பெருக்கெடுத் தோடிற்று. ரோமங்களால் சூழப்பட்டுள்ள நரவீரர்களுடைய தலைகள் அங்குள்ள மணற்குன்றுகளில் பரவியிருக்க அவைகளை அவ் வுதிரவெள்ளம் அடித்துக்கொண்டு போயிற்று. அதைப்பார்க்குங்கால் நதிக்கரையின் கண் விளையாடும் சிறுவர்கள்

அக்கரையிலுள்ள தும்பீபலமென்னும் பழத்தைப்பறிக்கும் பொழுது அந்நதியிற்றவறிவீழ்ந்து ஒன்றோடொன்றடிபட்டுப்புரண்டுபுரண்டு செல்வதுபோலிருந்தன. ரதத்தினின்று பூமியில் வீழ்ந்திறந்துபோன ஒரு வீரனை ஓர்கழுகானது மாம்சபக்ஷண நிமித்தம் அவன்மேற்றங்கி அவனங்கமுற்றும் உலாவித்திரிந்து மயங்கிற்று. அதனை நோக்குங்கால் அவ்வுடம்பை விட்டுப்போன வீரன் வீழ்ந்து கிடக்குந் தன் சரீரத்தைப் பார்த்து இவ்வுடம்பைவிட்டு எப்படிப் போவதென்றெண்ணி மீளவு மவ்வுடம்பில் எவ்வழியாய்ப் பிரவேசிப்பதென்று பார்ப்பதுபோ லிருந்தது. ஓ அரசனே! இதுவென்ன ஆச்சரியம். யுத்தத்திலிறந்துபோன் வோர் வீரன் விமானரூடனாய் ஓர் தேவஸ்திரீயுடன் ஆகாயத்திற் போம்போது தன் மடியிலிருக்கின்ற அவளைப் பார்த்துப் பாணத்தா லடிபட்டுப் பூமியில்வீழ்ந்து கிடக்கின்ற ரமணீயமாகிய என்னுடம்பைப் பார்ப்பாயாக வென்று தன்மனதிற் றோன்றும் தன் சரீரத்தின் சுந்தரங்களை யெல்லாஞ் சொல்லத்தொடங்கினன். ஒரு வீரன் சத்துருக்களா லடிக்கப்பட்டிறந்து ஒரு தேவஸ்திரீயோடு கூடி வீர சுவர்க்கத்தை யடைந்தனன். அவனைப் பிரிந்திருக்க அறியாத அவன்மனைவி அக்கினியில் அவனை வளர்த்தித் தானுஞ் சகசமனஞ் செய்து அவ்வுலகிலுந் தன் கணவனோடு கூடிப்பிரியா திருந்தனள். அந்த யுத்தகளத்திலிறந்து போன இரண்டு வீரர்கள் சுவர்க்கலோகத்தை யடைந்த பொழுது அவர்களை நோக்கி ஓர் அப்சரஸ்திரீவர அவளைக்கண்ட அவ்விருவரும் எனக்குனக்கென்றுவாதிட்டுக் கலகங்கொண்டு ஆயுதங்களை யேந்தி அங்குமிங்கு முலவிப் போர்புரியத் தலைப்பட்டனர். ஒரு வீரன் உருவத்திற் சிறந்தவளாயும் மகா குணவதியாயுமுள்ள ஒரு அப்சர ஸ்திரீயையடைந்து மிகவும் பிரிஃபமுடையவனாய்த் தன்னிடத்தில்மோகங்கொள்ளத்தன்னுடைய இயற்கையானகுணங்களை விரிவாய்ச் சொல்ல முயற்சி யெடுத்துக்கொண்டனன். ஒரு வீரன் சுவர்க்கத்தை யடைந்தகாலத்தில் அவனை நோக்கி நல்ல சுந்தரவதியாகியும் நல்லன்புள்ளவளாகியுமுள்ள ஓ ரப்சர ஸ்திரீயான வளடைந்தும் அவன் அவளை யங்கீகரிக்காமல் தான் யுத்தத்தில் ஜயமடைய வெண்ணிய வெண்ணம் பழுதுபட்டமையால் இவளால் வருஞ் சுகம் நமக்கென்ன பிரயோஜனமாமென்று மோகங் கொள்ளாது கிலேசங்கொண்டிருந்தனன். வீரர்கள் செய்தி இங்ஙனமிருக்க. அந்த யுத்தகளத்தினின்று மெழுந்த தூசுகள் ஆகாய மளாவிச்சூரியன் தோன்றாவண்ண மிருளாக்கின. பின்னர் தெய்வ கதியாய்ச் சமுத்திரத்தில் விழுந்துவிட்டன. அதுகண்ட சூரியன் ஆனந்த முடையவனாய் முன்னையினும் அதிகப் பிரகாசமாய்ப் பிரகாசித்தனன். இவ்வண்ணமான அரியயுத்தத்தில்

யுதாஜித் தென்பவன் மூன்றுபாணங்களால் வீரசேனனைத் தலையில் மோதத்தலை யுடைபட்டுப் பூமியில் வீழ்ந்திறந்தனன். அவனைச் சேர்ந்த சேனைகளும் நடுக்கமுற்றுப் போர்செய்யும் பலமற்று நான்கு பக்கங்களிலு மோடிப்போயின.

(கஅ-சுரு) இச்செய்தியை இவன் மகளாகிய மனோரமைகேட்டு அந்தோ! அந்தோ! என்றிரங்கி யேங்கி இப்பொழுது நம் பிதாவைக் கொன்ற யுதாஜித்து கெட்ட வெண்ணமுடையவன், பாபாத்மா, இவன் ராஜ்யாபேக்ஷையினால் நம்முடைய புத்திரனையும் நம்முடைய பிதாவைக் கொன்றதுபோல் கொன்றுவிடுவானென்பதிற் சந்தேகமுமுண்டோ! இதற்கு நாமென்செய்வோம், எவ்விடத்துக்குப் போவோம், நமக்குப் பிதாவும் போயினார். பர்த்தாவும் போயினார். புத்திரனோமிகவும் பாலனாயிருக்கிறான். இந்தயுதாஜித்து நம்முடைய புத்திரனுக்குப் பட்டமாகக் கூடாதென்று கொண்ட லோபகுணமானது மிகவும் நீசமானதல்லவா; அந்த நீசகுணமானது எவனுக்குத்தான் கெடுதியையுண்டாக்கமாட்டாது. அது எந்த பாவத்தொழிலைத்தான் செய்வதற்குத் துணியச்செய்யாது. அந்த லோபகுணமுடைய மாநுடர்கள் தந்தைதாயர்களையும் உடன்பிறந்தாரையும் பந்துசனங்களையும் ஆசாரியனையும் அடைக்கலாம் புகுந்தவர்களையும் கொலை செய்வதற்கு ஏன் துணியார்கள். இதில் நாம் என்னயோசனை செய்ய வேண்டிய திருக்கிறது. ஒன்றுமே யில்லையென்று ☒சிந்தாகுல முற்று மீண்டும் சிந்திக்கத் தொடங்கினள்.

இந்தப் பாவியாகிய யுதாஜித்து லோபகுண முடையவனா யிருத்தலினால் இவன் புசிக்கக் கூடாதவற்றைப் புசிப்பான். புணரக் கூடாத ஸ்திரீயைப் புணர்வான். தருமத்தையு மிழப்பான். இந்த நகரத்தில் நமக்குப் பலீஷ்டனாகிய சகாய புருஷ னெவனிருக்கின்றான். நாம் எவனுடைய ஆதரவிலிருந்து புத்திரனை ரக்ஷிக்கலாம். அவனால் புத்திரன் கொல்லப் படுவானானால் நா மென்ன செய்யலாம். இப்போது நம்மை ✪ரக்ஷிக்கத்தக்கவர் ஒருவருமில்லையே, அந்தச் சக்களத்தியாகிய லீலாவதியும் இனி எப்பொழுதும் விரோத முடையவளாய்ப் பெரும்பாலும் பகையாளியாகவே யிருப்பாள். அவள் நம்முடைய புத்திரனிடத்தில் தயையுடையவா யிருப்பாளா. அந்த யுதாஜித்து யுத்தகளத்திலிருந்து நகரத்துக்கு வருவானேயானால் நம்மை யிந்தவிடத்தில் வைப்பானா! வையான் துறத்தியே விடுவான். குமாரனையாவது பரிபாலிப்பனோ வென்றால் அவனைப் பாலனென்று நினைத்துச் சிறையிற்றான்வைப்பான்.

நாம் பூர்வத்தில் தாயார் கர்ப்பத்திலிருந்த சிசுவானது இந்திரனால் ஏழுதுண்டங்களாகக் கண்டிக்கப்பட்ட தென்றும் பின்னர் அவ்வேழு

✪ ரக்ஷிக்க - காக்க ☒ சிந்தாகுல - மனக்கவலை

துண்டங்களும் சப்த மருத்துக்களாக ஆயிற்றென்றும் கேட்டிருக்கின்றோம். சிலரால் அவ்விந்திரன் தாய் கர்ப்பத்திற் பிரவேசித்து வச்சிராயுதத்தைக் கையில் சூக்ஷுமமாய்த் தாங்கி அங்கிருந்த சிசுவைப் பல துண்டங்களாக வெட்ட அத் துண்டங்கள் நாற்பத்தொன்பது மருத்துக்களாக ஆயிற்றென்றுங் கேட்டிருக்கின்றோம். சிலரால் சககளத்தியாகிய ஒரு ராஜஸ்திரீ கர்ப்பத்திலிருக்கும் சிசு நாசமடையும் பொருட்டு விஷத்தைக் கொடுத்தாளென்றும் அக்குழந்தை அதனாற் சாகாமல் அந்த விஷச்சுவாலையுடன் பிறக்க அவன் * சகரனென்கிற பெயருடையவனாய்ப் பிரசித்தி பெற்றிருந்தானென்றும், ஒரு ராஜஸ்திரீயால் பெரிய குமாரனாகிய ராமன் வீட்டை விட்டுப்போக அவன் பிதாவாகிய தசர தன் இறந்தானென்றுங் கேட்டிருக்கின்றோம். இவ்வாறான துர்மரணங்களும் கஷ்டமான அநுபவங்களும் சககளத்தியிருடைய போராட்டத்தினால் வருவதல்லவாவென்று பலவாறாக வெண்ணித் துக்கசாகரத்தில் மூழ்கினவளாய் நம்முடைய நாயகன் இறந்தகாலத்திலும் நம்முடையபிதா யாருக்குப் பட்டங்கட்டுகிறதென்று கேட்டகாலத்திலும் சுதர்சனனுக்கே கட்டவேண்டு மென்று சொல்லிய மந்திரிகளெல்லாம் இப்பொழுது இந்த யுதாஜித்தினுடைய சுவாதீனர்களாயும் சுதந்தர மற்றவர்களாயு மிருக்கின்றன ரல்லவா. நமக்கிந்த கஷ்டந் தெய்வகதியாய் நேரிட்டதன்றி வேறில்லை ஆயினும் நாம் ஏங்கியிருக்கக் கூடாது எந்தவிதமான பிரயத்தனத்தையாவது முயற்சிக்கவேண்டும் அதன்மேல் நமக்கு வரவேண்டிய சித்தியானது தெய்வகடாக்ஷத்தா லுண்டாகும் நாம் தீவரத்தில் புத்திரனை ரக்ஷிக்கவேண்டிய பிரயத்தனத்தைத் தேடல் வேண்டுமென்று அந்தமனோரமையானவள் தன் மனதுக்குள் சில ஆலோசனைகளைச் செய்து அதனை ஆலோசித்தற் குரியார் யாவரென்று யோசிக்கும்பொழுது நமக்குப் பிதாவு மில்லை இந்தக்கஷ்டத்தை நிவிர்த்தி செய்யத்தக்க சூரனாயிருக்கின்ற ஒ ருபகார புருஷனு மில்லை. இது கஷ்டம்! கஷ்டம்!! ஆயினும் எல்லாக் காரியங்களிலும் சமர்த்தனாயும் யோசனையிற் சிறந்தவனாயுமுள்ள ஓர் மந்திரியை வரவழைப்போமென் றெண்ணி அதுபோலொருவனை யழைத்து அவனை ஏகாந்தத்தில் வைத்துக்கொண்டு வெகுதுக்கத்தோடு கூடினவளாய்ப் புத்திரனைக் கையிற் பிடித்துக்கொண்டு குன்றிய மனத்தோடுஞ் சொல்லத் தொடங்கினள். ஒ மந்திரி? யுத்தத்தில் என்னுடைய தந்தை இறந்துபோயினர். புத்ரனோ மிகவும் பாலியன். என்னுடைய பிதாவைக்கொன்று என் மகனைப் பரிதபிக்கச் செய்யவந்த

* கரம்-விஷம். சகரன்-விஷத்துடன் பிறந்தவன்.

யுதாஜித்தோ மிகவும் பலவானா யிருக்கின்றான். ஆகையால் யான்செய்யத்தக்கது இதுவென்று நீசொல்லவேண்டு மென்றனள். மந்திரி அந்த மனோரமையைப் பார்த்து ஓ அம்மணி! நீ இவ்விடத்தி லிருக்கக்கூடாது. காட்டுக்குப்போய்விட வேண்டும். அல்லது காசிக்குப் போகவேண்டும். அக் காசியில் மஹாபலீஷ்டனாகியு முள்ள "சுபாஹு" என்கிற என்னுடைய அம்மானிருக்கின்றான். நீ அவனிடம் போவையாயின் அவன் உன்னை ரக்ஷிக்கத்தக்கவனாவான். இப்பொழுத நீ வெளியேபோவதற்கு ஓ ருபாயஞ் செய்யவேண்டும். என்னையெனின், நீ உன்னுடைய சககளத்தியினிடஞ் சென்று உன்னுடைய பிதாவாகிய "யுதா்ஜித்தை" யான் பார்க்க வேண்டுமென்று சொல்லிவிட்டு அவனைப் பார்ப்பதற்கு வெளியே போவதுபோல் அரண்மனையை விட்டு வெளிப்பட்டு ரதத்திலேறிக்கொண்டு போகவேண்டும். போவையேயாயின் உனக்கு நன்மை யுண்டாவதிற் சம்சயமில்லை என்றான். மனோரமை அந்த மந்திரி சொல்லியபடியே லீலாவதியினிடத்திற் சொல்லிவிட்டு "விதல்ல" னென்கிறவனையும், தனக்கொத்த ஒருதாதியையும் அழைத்துக்கொண்டு மகனோடு தேரிலேறி நகரத்தைவிட்டு வெளியேவந்து மிக்க துயரத்தோடு நாம் வனத்துக்கு எவ்வாறு போவதென்று பயந்து துக்கித்தும், மனம் பீடிக்கப்பட்டுத் தீன தசையை யடைந்தும், பிதா சோகத்தில் மூழ்கியும், இவ்வா றொன்றின்மே லொன்றாக வியாகுல மேலிட்டும், ஒருவருக்குந் தெரியாமல் கபடமா யுத்தகளத்திற்குப்போய் "யுதாஜித்தைப்" பார்த்து அப்புறம்போய் வீழ்ந்து கிடக்குந் தன்பிதாவைக்கண்டலறித் தகனாதிகளை அதிசீக்கிரமாய் நடத்தி அவ்விடத்தையும் விட்டு வனத்தை நோக்கிச் சென்றாள். செல்லும்பொழுது கள்வர்களிற் றலைமைபெற்ற துஷ்டர்களாகிய வேடர்கள் கண்டு வழிமறித்து அவளிடத்திலிருந்த ஆபரண முதலிய சகல திரவியங்களையும் பறித்துக்கொண்டு ரதத்தையும் பிடிங்கிக்கொண்டு உயிரைமாத்திரங் கொல்லாது விட்டு ஓட்டினார். ஓ அரசனே ? அந்த ராஜஸ்திரீயானவள் உயிர் தப்பியது போதுமென்று தன் மகனையும், காவலாளிகளையும் அழைத்துக்கொண்டு கங்காநதிக்குப் போகும் மார்க்கத்தை நாடித் தேம்பித் தேம்பியழுது ஓ ராடையுட னடந்து இன்னமும் அக்கள்வர்கள் எவ்வழியாய் வருவார்களோவென்று பயந்து பயந்து அதிவேகமா யோடும் பொழுது தாதியானவள் அவளுடைய பரிதாபத்தைக் கண்டு அம்மணீ நீ பயப்படாதே என்று அணைத்துக் கொண்டுவர இரண்டு நாளில் கங்கைக் கரையை வந்தடைந்து தெப்பத்திலேறி மஹா பரிசுத்தமாகிய அக்கங்கையைத் தாண்டித் திரிகூட பா்வதத்திற்குப்போய் பரத்துவாச ராச்சிரமத்தைக்கண்டு அங்குள்ள முனிகணங்களைப் பார்த்துப் பயமற்றவளாய் நின்றனள்.

(சுசு-சுக) பரத்துவாஜருஷி, அந்த "மனோரமைய்யப்" பார்த்து ஓ கமலக்கண்ணாளே? நீயார் ? தேவமங்கையா? பூலோக மங்கையா? நீ யாருடைய மனைவி? உனக்கு எந்தவிதமான கஷ்டம் நேரிட்டதனால் இந்தபாலனை யழைத்துக்கொண்டு இக் கானகத்துக்கு வந்தனை? உன்னைப்பார்த்தால் ராஜ்யத்தினின்றும் விடுபட்டு வந்தவள்போற் காண்கின்றாய்? உன்னுடைய சரித்திரமென்ன? உண்மையைச் சொல்வாயென்று கேட்டனர். அந்த மனோரமையானவள் ஒன்றுக்கும் விடை கூறாமல் அவர் பாதத்தில் வீழ்ந்து புலம்பிப் புலம்பித் தேம்பித் தேம்பிப் பெருங்குரலிட்டழுது ரோதனஞ்செய்து ஒருவாறு தெளிந்து ஒன்றையும் விடாது சொல்லவல்ல தோழிக்குச் சொல்லும்படி சொன்னாள், அவள் அந்த மகருஷியைப்பார்த்து எங்களுக்குத் தெய்வம் போல் வீற்றிருக்கின்ற ஓ தவசிரேஷ்டரே? சூரிய வம்சஸ்தனும், மஹா பலிஷ்டனுமான "த்ருவசிந்து" என்னும் ஓ ராசனுளன். அந்த அரசனுடைய தருமபத்தினியாகும். இந்த அம்மணி, இவள் "மனோரமை" என்னும் பெயருடையவள். இவளைப்போலும் அந்த அரசனுக்கு லீலாவதி என்கிற வேறொருமனைவியு முளள். இவள் நாயகனாகிய அந்த அரசன் வனத்தில் வேட்டையாடச் சென்று சிங்கத்தா லிறந்தனன். இந்தப்பாலன் அவன் மகனாகும். இவன் சுதர்சனனெகிற பெயருடையவன். இவனுடைய பாட்டன் நல்ல தருமாத்மா. அவன்தன் பேரனாகிய இவனுக்குப் பட்டங் கட்டவந்து யுத்தத்தில் மரண மடைந்தனன். அச்செய்தியைக்கேட்ட இந்த மனோரமை இனி நாமும் நம்முடைய மகனும் பிழைத்திருப்பது கஷ்டமென்று பயந்து மானிடசஞ்சார மில்லாத வனத்தின் வழியாக உம்முடைய ஆச்சிரமத்தை வந்தடைந்து தானடைந்திருந்த கவலையையொழித்துத் தேவரீருடைய சரணமே சரணமென்று இப்பொழுது அடைக்கலம் புகுந்திருக்கின்றாள். ஆகலான் தேவரீர் இவ்வம்மணியை ரக்ஷிக்க வேண்டும். ஏனெனில் தீனதசை யடைந்திருப்பவரையும், எந்த காரணத்தினாலாவது பயந்திருப்பவரையும் ரக்ஷிப்பது யஜ்ஞஞ் செய்யும்புண்ணியத்தைக் காட்டிலும் மேலானதென்று சொல்லப்பட்டிருக்கின்ற தல்லவா? என்றனள். அவள் வாய்மொழியைக்கேட்ட மஹருஷி மிகவும் இரக்க முடையவராய் மனோரமையைப் பார்த்து ஓ கற்புடையாளே? இனி நீ பயமற்றவளாய் என்னுடைய ஆச்சிரமத்திலிருக்கலாம். சத்துருவாகிய யுதாஜித் தென்பவனா லுண்டாகிய பயத்துக்கு நீ சிறிதும் அஞ்சவேண்டாம். அதி சுந்தரனாகிய உன்னுடைய குமாரனை நன்றாய்ப் பாதுகாத்து வருவாய். அவன்தான் அரசனாகப் போகிறான். இது விஷயத்தில் நீ சந்தேகித்துத்

துக்கிக்கவேண்டாம். இப்பொழு துண்டாகிய வருத்தம் போல் எப்பொழுதும் உனக்குண்டாகமாட்டாது. இன்பமேயுண்டாகு மென்றனர்.

அவரது வாய்மையாகிய வார்த்தைகளை மனோரமைகேட்டுச் சிந்தாகுல மற்றவளாய் அந்த மஹருஷியினாலே ஏற்படுத்தப்பட்ட பர்னசாலையில் யாதொரு துக்கமுமின்றித் தாதியோடு சுகமாய் வசித்திருந்து தனது அரிய குமாரனைப் பாதுகாத்து வந்தனன்.

மூன்றாவது ஸ்கந்தம் பதினைந்தாம் அத்தியாயம்

யுதாஜித் வீரசேனையோர் யுத்தம் முற்றிற்று

———

ஆஉ அத்தியாயம் கரு-க்குச் சுலோகம் (அளக.)

———

உ

ஸ்ரீ தேவ்யைநம:

பதினாறாம் அத்தியாயம்

* யுதாஜித: பரத்வா ஜாஸ்ரம கமனம்.

———

ஓ மகரிஷிகாள் இதுவரையில் மனோரமையினுடைய துக்க சோகத்தையும், அது நிவிர்த்தியான வரலாற்றையும் எடுத்துக் கூறினோம். இனி அவள் பகைவனாகிய யுதாஜித் தென்பலனுடைய செய்தியைக் கூறுகின்றோமென்று சூதபகவான் சொல்லத் தொடங்கினர்.

(க-கூ) வியாசமுனிவர் ஜனமே ஜயனைப்பார்த்து ஓ பூ பாலகனே! மகாபலிஷ்டனாகிய யுதாஜித்து யுத்தகளத்தைவிட்டு அயோத்தி நகரத்துக்குப் போய் மனோரமையினுடைய குமாரனாகிய சுதர்சனனைக் கொல்லவேண்டு மென்னுந் துர் அபிப்பிராயத்தினால் மனோரமை எங்கே? அவ ளெங்குப் போயினள்? என்று அடிக்கடிப் பலமுறையுங் கேட்டு அவ ளங்கில்லாமையை யறிந்து பின்னர் திக்குகடோறும் தூதர்களை யனுப்பி எவ்விடத்து மில்லாமையை யறிந்து, தன் பேரனாகிய லீலாவதியினுடைய குமாரனை நல்லசுபதினத்தில் வசிஷ்டரா லுச்சரிக்கப்பட்ட அதர்வண சம்பந்தமாகிய மந்திரங்களால் ஜபிக்கப்பட்ட தீர்த்தங்கள் நிறைந்திருக்கின்ற கும்பங்களை

* யுதாஜித் தென்னும் அரசன் பரத்துவாஜருடைய ஆச்சிரமத்துக்குப் போதல்.

மந்திரிகளைக் கொண்டு அபிடேகஞ் செய்வித்துச் சிங்கா தனத்திலேற்றிச் செங்கோலளித்துப் பின்னர் பேரிகைகள் கொட்டச் சங்கங்கள் முழங்க மற்றுமுள்ள பல வாச்சியங்கள் கோஷிக்க நகர்வலம் வருதலாகிய பட்டாபிஷேக மஹாத்ஸவத்தை நடாத்தினான். அந்த மஹோத்சவ சமயத்தில் எழுந்த அந்தணர்களுடைய ஆசிர்வாத வசனங்களாலும், கட்டியக் காரர்களுடைய ஸ்தோத்திரங்களாலும், மங்களகரமாகிய ஜய சப்தங்களாலும் எழுந்த பேரோசையை நோகுங்கால் அயோத்திமாநகரம் தன்னிடத்தில் நூதனமாக அரசன் ஏற்பட்டபடியால் தானுந் திருப்தியடைந்து மிகழ்ந்து சோபனம் பாடியதுபோலு மிருந்தது. அன்றியும் அரசன் புதிதாய்த் தோன்றிப் பிரகாசிப்பதால் அவனுக் கொற்றுமையாத் தானும் வீணா வேணு மிருதங்கமுதலிய வாச்சியங்களோடுங் கூடித் தானும் புதிதாய்ப் பிரகாசிப்பதுபோலு மிருந்தது.

இவ்வாறான அரிய சிறப்புடன் நகரம் பிரகாசித்திருந்தபோதிலும் அந் நகரவாசிகளும் சில பெரியோர்களும் நம தரசனுடைய மூத்தமகனாகிய "சுதர்சனன்" எவ்விடஞ் சென்றானோ! அவன் தா யெங்குச்சென்றாளோ! புத்திரனோடு தான் போயினாளோ! ஒன்றுந் தெரிய வில்லையே! இவள் பிதாவாவது இருக்கின்றானோ வென்றால் அவனும் ராஜ்யா பேக்ஷையோடுங் கூடிய சத்துருவினால் யுத்தகளத்தி லிறந்துபோயினான்; என்று தங்கள் தங்கள் வீடுகடோறுந் துக்கத்தையே கொண்டாடு கின்றவர்களாக விருந்தனர். இவர்களெல்லாம் அந்த யுதாஜித்தினுடைய சுவாதீனத்திலிருப்பவர்களே ஆயினும் தருமபுத்தி யுடையவர்க ளாதலால் மேற் கூறியவாறெல்லாம் என்ணித் துக்கிக்க லாயினர்.

(க0-ஙஎ) இவர்கள் செய்தி இங்ஙன மிருக்க. யுதாஜித்துத் தன்பேரனுக்கு ராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்தபோதிலும் அவன் அரசியல் செலுத்தும் பருவ முடையவ னல்லனாகலின் அரசாக்ஷியை அமைச்சர் வசமாக்கித் தான் தந் நகரம்போய்ச் சேர்ந்தனன். சிலநாள் சென்ற பின்னர் "சுதர்சனன்" தன் தாயுடன் பரத்து வாஜருடைய ஆச்சிரமத்தி லிருப்பதாகக் கேள்வியுற்று அவனைக் கொல்ல வேண்டுமென் றெண்ணிச் சிருங்கபேர புரத்துக் கதிபதியாயும், மஹாசூரனாகியு முள்ள "தூர்த்தரிசனன்" என்னும் வேடராஜனைச் சேனைகளுடன் யழைத்துக்கொண்டு சித்திர கூடம்போய்ச் சேர்ந்தனன். அச் செய்தியை மனோரமை கேள்வியுற்றுப் பயங்கரமுடையவளாய்க் கண்ணீர்விட்டழுது இனி நான் என் செய்வேன் : எவ்விடம் போவேன் என்று மனங்கலங்கி நடுக்க முற்றுப்

பரத்துவாசரிடஞ் சென்று பணிந்து ஓ சுவாமிகாள்! சத்துருவாகிய யுதாஜித்து என் தந்தையைக் கொன்ற பின்னர் தன் பேரனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்துத் தன்மகளைவாழ்வித்து இப்பொழுது என் மகனைக்கொன்று என் வாழ்வைக் குலைக்க வெண்ணித் திரண்ட சேனைகளுடன் சித்திரகூடம் வந்திருக்கின்றான். இன்னம் ஓர் கணத்துக்குள் இவ்விடம் வந்து சேர்வான் சேர்ந்தவுடன் என்னைப் பலாத்காரமாக அபகரித்துத் தீங்குசெய்வதிற்றடையில்லை என் றேங்கிக் கூறி, ஐம்புலன்களை வென்ற ஓ மகருஷியே! என்னை எவ்வெண்ணம் பாதுகாக்க வல்லீ ராவீர்? பூர்வத்தில் பாண்டவர்கள் திரௌபதியுடன் வனவாசத் திற்குச் சென்ற பொழுது அங்கு மகருஷிகளுடைய ஆசீர்மத்திற் றங்கியிருந்து திரௌபதிக்கு அந்த மகருக்ஷிகளையே காவலாகவெண்ணி வெளியே போவதும் வருவதுமாக விருந்தார்க ளென்றும், அவ்வண்ண மிருக்குங்காலத்தில் ஓர்நாள் தருமனாதியர் வேட்டைக்குப் போக அந்தப்பாஞ்சாலி தனது தோழியருடன் தௌமியர்-அத்திரி-காவலர்-பைலர்-ஜாபாலி-கௌதமர்-பிருகு-அத்திரிகோத்ரர் கண்ணுவர்-சதக்ருது-வீதிஹோத்ரர்-சுமந்து-யக்ஞதத்தர்-ராசரசனர்-வத்ஸவர்-ககோடர்-யவக்கிரீயர்-யக்ஞகிருது சைவரிஷியாகிய பாரத்துவாசர் முதலிய மகருஷிகளும், வேதபாராயணஞ் செய்கின்ற ஏனைய ருக்ஷிகளுங் கூடியிருக்கும் அவ் வாச்சிரமத்தில் பயமற்றவளா யிருந்தாளென்றும், அச்சமயத்தில் சைனியத்தோடுங் கூடி வழியே போகின்றவனாகிய சைந்தவனென்னும் அரசன் அங்கெழுந்த வேத வோசையைக் கேட்டு அப்புறஞ் செல்லத்துணியாது ரதத்தை விட்டிறங்கிச் சமீபித்து மகா முனிவர்களாகிய அப் பெரியோர்களுடைய வேதத் தொனியை நன்றாய்க் கேட்டு இரண்டு தூதர்களுடன் சென்று அங்கு வீற்றிருக்கும் பெரியோர்களை யெல்லாம் பார்த்து மிகுந்த பக்தியுடையவனாய் அவர்கள் சந்நிதானத்தில் அஞ்சலி யஸ்தனாய் நின்று வேதசொரூபிகளா யிருக்கின்ற ஓ மகருஷிகாள்! உங்க ளடியவனா யிருக்கின்றயான் ஜயத்திரதன் என்னும் நாமமுடையேனென்று பணிந்து மகிழ்ந்திருந்தன னென்றும், அப்பொது அந்த ஆச்சிரமத்திலிருக்க ருஷிபத்தினிகள் அந்த அரசனுடைய வந்தனை வழிபாடு முதலிய வொழுக்கங்களைச் சிலரால் கேள்வியுற்று அந்தராஜன் யார்? என்று ஒருவருக் கொருவர் சொல்லிக்கொண்டு அவனைப் பார்க்க யாவரும் புறப்பட்டார்க ளென்றும், அப்பொழுது மகா பதிவிரதையாகிய திரௌபதையும் அவ்விருடி பத்னிகள் மத்தியில் வந்தனளாமென்றும், இவர்கள் வருகையைப் பார்த்த ஜயத்திரதன் ருஷிபத்தினிகள் மத்தியில் இலக்குமியைப்போல் பிரகாசிக்கின்ற

பாஞ்சாலியைப் பார்த்து இவள் ருஷிபத்தினிகளோடு சேர்ந்தவளல்லள். இவள் தேவகன்னிகையைப் போலுங் காணப்படுகின்றாள். இந்த ஐயத்தை யொழித்துக் கொள்ள வேண்டுமென்று தவுமியரைப்பார்த்து இந்திராணியே பூ மண்டலத்தை யடைந்தவள் போலும் எவ்வனத்தோடு ரூபலா வண்ணியத்தையு முடையவளா யிருக்கின்ற இந்த ஸ்திரீயாருடைய மகள்? யாருடைய மனையாட்டி? இவள் பெயரென்ன? அரம்பையைப் போலும் பிரகாசிக்கின்ற இத்தேவ மங்கை ராக்ஷஸ அம்சங்களை யடைந்திருப்பவள் போலுஞ் சிறிது உருவபேதத்தை யடைந்திருக்கின்றாள். வனத்தில் வசிக்கக் கூடாத இவள் இந்தவனமத்தியில் வசிக்கின்றாள். மகானுபவரே! உங்க ளினத்தவராகிய ருஷி பத்தினிகளைப் போல இவளும் ஒரு ருஷிபத்தினி யென்று எண்ணத்தக்கவளன்று. ராஜபத்தினி என்றே எண்ணத்தக்கவள். நீர் உண்மையைச் சொல்லுமென்று வினவினா னென்றும், அதற்கு அத்தவுமியர் ஓ அரசனே! இவள் பாஞ்சாலதேசத் தரசன்மகள் பாண்டவர்கள் பத்தினி, திரௌபதை என்னும் பெயருடையவள் இப்பொழுது நேரிட்ட சமயபேதத்தால் இவ்வனத்தில் வசிக்கின்றாள், இவளுக்கு எங்களுடைய ஆதரவு கிடைத்திருப்பதால் பாண்டவர்கள் மனவருத்த மில்லாதவர்களாய் வன சஞ்சாரிகளா யிருக்கின்றன ரென்று கூறினாரென்றும், அப்பொழுது அந்த அரசன் பாண்டவர்களைப் பார்க்க விரும்பி இப்பொழுது எவ்விடம் போயினார்களென்று கேட்கத் தவுமியர் அவர்கள் தேரேறி வேட்டையா டப்போயிருக்கிறார்கள். வேட்டையாடியபின்னர் மிருகங்களை எடுத்துக் கொண்டு உச்சிப்பொழுதுக்கு இவ்விடம்வந்து சேரப் போகிறார்களென்று அவர் கூறினாரென்றும், அவ்வார்த்தையைக் கேட்ட அரசன் எழுந்திருந்து திரௌபதி சமீபத்திற்போய் வந்தனஞ்செய்து ஓ பதிவிரதையே! நீ க்ஷேமந்தானா; மகாவீரர்களான உன் பாத்தாக்கள் எங்கே போயினார். நீங்கள் வனவாசஞ் செய்யும்படி ஏற்படுத்திய பன்னிரண்டு வருஷத்தில் பதினொருஷம் ஆய்விட்டதல்லவா? என்று க்ஷேமலாபங்களை விசாரித்தனன்.

(ங அ-சு0.) திரௌபதி இவனது நன்னடையைக்கண்டு சந்தோஷித்து ஓ ராஜகுமாரனே! உனக்கு மங்களமுண்டாகுகவென் றாசீர்வதித்து நீ சிறிதுநேரம் இவ்விடத்தில்வந்த இளைப்பாறியிருப் பையேயாயின் ஓர் கணப்பொழுதில் பாண்டவர்கள் வருவார்களென்று சொன்னாளென்றும், அதனை யங்கீகரித்த அரசன் அந்தத் திரௌபதியை நன்றாய்ப்பார்க்க நேரிட்டபடியால் காமாந்தகனாய் நீதியை மறந்து அங்கிருந்த மஹா பெரியோர்களையும் அலக்ஷியஞ் செய்து அவ்வளை யபகரித்தானென்றுங் கேட்டிருக்கிறேன். ஓ முனிவரே! ஒருத்தி

ஐந்துபேரைக் கணவர்களாகப்பெற்று அவர்களுடைய வீரக்காவலை யுடையவளா யிருந்தும், அவர்களேயன்றி அநேக மகருஷிகளுடைய நீங்காத காவலைப் பெற்றவளாயிருந்தும், ஒரு சிறிய அரசனால் அபகரிக்கப் பட்டாளென்றால் எனக்குள்ள ஒரு கணவனுமற்று உம்முடைய ஒரு காவலிலிருக்கின்ற நான் என் பகையாளியால் பங்கமடைவே னென்பதற்குச் சந்தேகமு முண்டோ? ஆகையால் பெண்களுக்குக் காவலாகவுள்ள பண்டிதர்களாகிய புத்திமான்கள் அப்பெண்களிடத்தில் புருஷர்களா யிருக்கின்றவர் யாவராயினும் அவர்களை ஒருகணமுநெருங்கி விசுவசிக்கவண்ணஞ் செய்தல் வேண்டும். விசுவசிக்கும்வண்ணஞ் செய்வாராயின் இருவருக்குந் துக்க முண்டாகும். இந்த நியாயத்தை என்னைக் காக்கவல்ல தேவரீர் ஆலோசனைசெய்து யுதாஜித்து இவ்விடத்துக்கு வருவானாயின் அவனை விசுவசித்து நீர் இடந்தரவேண்டாம். அன்றியும் ஒ ஞானசீலரே! அறிவிலியாகிய எனக்குத் தோன்றும் சில நியாயங்களைத் தெரிவிக்கின்றேன். அவைகளிலுள்ள சூக்ஷமங்களைத் தேவரீரே அறிந்துகொண்டு என்னை ரக்ஷிக்கவேண்டும். என்னையெனின், உலகின்கண் பெண்மண் பொன் என்கிற முப்பொருளிடத்தும் ஆசை கொள்ளாதவர்கள் பொன் என்கிற முப்பொருளிடத்தும் ஆசை கொள்ளாதவர்கள் ஒருவருமில்லை. அதனால் வஞ்சகச் செயலையும் அதற்கேற்ற பாவச்செயலையுஞ் செய்யத் துணிகின்றார்கள். இந்தவிதமான காரியங்களில் திருமால் முதலியோரும் தன் பொருட்டே யன்றிப் பிறர்பொருட்டும் செய்ததாகச் சில கேட்டிருக்கின்றேன். அவற்றுள் இப்பொழுது வேண்டிய சிலவற்றை விண்ணப்பஞ் செய்கிறேன் கேட்டருள்வீராக.

மகாபலி, பிரகலாதன் மகனாகிய விரோசனனுடைய குமாரனல்லவா? அவன் பெருமையை என்னவென்று சொல்லக்கூடும். மகா தர்மாத்மா, சத்யசந்தன். விசேஷ சாம்பிராச்சிய முடையவன், எப்பொழுதும் எஜ்ஞங்களைச் செய்கின்றவன், கொடை யாளியா யெவரையும் ரக்ஷிப்பவன், பெரியோர்களுக் கெல்லாம் பிரியமானவன், அதர்மத்தில் எக்காலத்திலும் மனங் கொள்ளாதவன். இத்தன்மையனாகிய மாபலிச் சக்கிரவர்த்தி விசேஷ தக்ஷிணைகளோடுங் கூடிய தொண்ணூற் றொன்பது எஜ்ஞங்களைச் செய்து முடிதது நூறாவது எஜ்ஞஞ் செய்யத் தொடங்குங்கால் சத்துவகுண முள்ளவரும், யோகிகளால் சேவிக்கப்பட்டவரும், பகவானாருமாகிய நாராயணர் அவனிடத்தில் ஒரு துவேஷமில்லா தவராயிருந்தும் தேவகார்யநிமித்தங் காசிபருடைய புத்திரராகிக் கபட நிறைந்த வாமனரூபராய்வந்து கடல் சூழ்ந்த வுலகமுழுவதையும் ஓர்

ஐ எஜ்ஞங்களை - யாகங்களை

போக்குக்காட்டித் தானமாகப் பெற்றுக்கொண்டனர். பலிச்சக்கிரவர்த்தியோ சத்தியவாக் கொன்றையே எண்ணிக் கீழடங்கினவனாயினான். கபடமற்று ரக்ஷிக்க வேண்டிய விஷ்ணு மூர்த்தியே இவ்வாறு கபடஞ் செய்தாரென்றால் மற்றெவர்கள் தான் இவ்வாறான வஞ்சனையைச் செய்யத் துணியார்கள்? ஆனால் இவரைப்போலும் ஒருவருஞ் செய்யத் துணியாரென்று மெண்ணுகிறேன். ஓ மஹருஷியே! குணங்களிற் சிறந்த சத்துவகுண மூர்த்தியென்று யாவராலுங் கொண்டாடப்பட்ட திருமால் எஜ்ஞத்தைக் கெடுக்கு மெண்ண முடையவராய்க் குணங்களில் மிகச் சிறியதென்று பெரியோர்களா லிகழப்பட்ட வஞ்சகத்தை மேற் கொண்டு வாமனமூர்த்தி யாயினரல்லவா! இது பிறர்பொருட்டுக் கொண்ட மண்ணாசையினாற் செயததல்லவா!

ஓ முநிவரே! யாவருக்காயினும் மனதில் உலோபகுண முண்டாகுமாயின் பயத்தைக் கொடுப்பதாகிய பாவம் எம்மாத்திரம்? ஆகவே அவர்கள் பாவஞ்செய்யத் துணிகிறார்கள். அவர்களுக்குப் பரலோகமில்லாமற் போகுமே என்கிற பயமு முண்டாகிறதில்லை. அவர்கள் அன்னியருடைய பொருள்களை யபகரிக்க வேண்டுமென்றே மனவாக்குக் காயங்களால் முயற்சிக் கின்றவர்களாகலான் அவர்க ளெவ்விதத்துங் கெடுதியடைவார்கள். இவர்களேயன்றித் தெய்வத்தை வழிபடு கின்றவர்களுக்கும் பொருளாசை விட்டுநீங்காமல் அப்பொருளுக்கே தெய்வத்தை வழிபடுவதினால் அத்தெய்வமும் வர்த்தகஞ் செய்வோனுக்கு வர்த்தக மூலத்தினாலும், தானமாக ஏற்பவனுக்குத் தானமூலத்தினாலும், நாயகமற்ற பொருள்களுக்கு நாயகமாகுங் காரணத்தாலும் அன்னியரைக்கொண்டு அன்னியருடைய பொருளையே அவர் வேண்டியவாறு கொடுப்பதல்லாமல் தான் கொடுப்பதில்லை. ஏனெனில் பொருளாசையுடையவர்களுக்குப் பிறரிடத்தில் விசுவாச முண்டாகிறதில்லை. அதுவுண்டாகாதவர் களிடத்தில் தெய்வங்களுக்கு விசுவாச முண்டாகிறதில்லை" "பொருளாசை யுடையவர்களுக்கு விசுவாச முணடாகிறதில்லை" என்பதற்குச் சில நியாயங் கூறுகிறேன். என்னையெனில், வர்த்தகத்துக்குரிய வைசியர்கள் வியாபாரஞ் செய்யு நிமித்தம் தானியம், ஆடை முதலிய அநேக வஸ்துக்களைச் சேகரித்துக் கொண்டு ஓ கடவுளே எனக்கு இவைகளால் விசேஷலாபமும் சாம்பிராஜ்யமும் உண்டாக வேண்டுமென்று பிரார்த்திக்கின்றனர் அவ்வண்ணம் பிரார்த்திக் கின்றவர்கள் ஓ கடவுளே நீ எனக்கு லாபங்கொடுக்கும் பொழுது பிறரை வஞ்சித்தாவது, வருத்தியாவது கொடுக்க வேண்டாமென்று பிரார்த்திக்கின்றனர் அவ்வண்ணம் பிரார்த்திக் கின்றவர்கள் ஓ கடவுளே நீ எனக்கு லாபங்கொடுக்கும் பொழுது பிறரை வஞ்சித்தாவது, வருத்தியாவது கொடுக்கவேண்டாமென்று

பிரார்த்திப்பதுண்டா? பொருளைச் சம்பாதிக்குஞ் சமயங் கூடும்பக்ஷத்தில் பிறர்பொருளைக் கொள்ளும் ஆசையுண்டாகாமற் போகிறதா! அப்பொழுது தான் அதிகவிலை கூறி எவ்வித்திலாவது பிறர்பொருளைக் கொள்வதற்கு ✿ அபேக்ஷிக்கின்றார்கள். இவ்வண்ணம் விரும்புவது ஒரு சமயமன்று எப்பொழுதுமேயாம். ஓ ஆசையற்ற முநிவரே? இவர்களுக்குப் பிறரிடத்தில் விசுவாசம் எங்கே யுண்டாயிற்று? நிலையில்லாத பொருளில் ஆசையும், பரகதியை விரும்பாத அஞ்ஞானத்தையுமுடைய இவர்கள் தீர்த்தயாத்திரை செய்வதும், தான தருமங்களைச் செய்வதும், வேதாத்தியயன முதலியவற்றைச் செய்வதும் வீணாக முடியுமேயன்றிப் பயன்படமாட்டா. ஆகையாலிவர்கள் மேற்கூறிய தீர்த்தயாத்திரை முதலியவற்றைச் செய்தாலும் செய்யாதிருந்தா லென்ன பிரயோசன முண்டாகுமோ அந்தப் பிரயோசனந்தானுண்டாகும். ஓ சாந்தகுணமுடைய பெரியோரே! இதுவரையில் நான் கூறிவந்த ஆசை யுடையவர்களில் இப்பொழுது வரப்போகிற யுதாஜித்து முதன்மை யானவனாகும். ஆகையால் ஓ மகானுபாவரே! அந்த யுதாஜித்து வருவானாயின் நீர் அவனை வீட்டுக்குப் போம்படிச் செய்யவேண்டும். நான் புத்திரனோடு உம்முடைய ஆச்சிரமத்திற்றானே சீதாதேவியைப் போல் வசிக்கிறேனென்று பிரார்த்தித்தனள். பரத்துவாசர் அவளபிப் பிராயத்தை யங்கீகரித்தவராயிருக்கும்போது யுதாஜித்தும் வந்து விட்டனன். அவன் வருகையைக்கண்ட முனிபுங்கவர் எதிரே சென்று அவனைச் சமீபித்து ஓ அரசனே! நீ யுத்தேசித்து வருவதை நானறிவேன் நான் சொல்வதை நீ நம்புவாயாக. மனோரமை என்னுடைய ஆச்சிரமத்துக்கு வரவேயில்லை நீ உன்னிடம் போகலாமென்று சொல்ல யுதாஜித்து ஓ முனிவரே! ஏன் பொய் சொல்லுகின்றீர். மனோரமை உம்மிடத்திற்றா னிருக்கின்றாள் நீ ரவளிடம் தாக்ஷணியப்படாமல் கண்டிதமா யென்னிடம் துறத்திவிடும் துறத்தாமற் போவீராயின் யான் பலாத்காரமாகக் கொண்டு போவேனே யன்றி அவளை விட்டுப்போகே னென்றனன். தவசிரேஷ்டராகிய பரத்துவாசர் பூர்வத்தில் விஸ்வாமித்திரன் வசிட்டருடைய பசுவை எப்படி யபகரித்தானோ அப்படியே உனக்குச் சக்தியிருக்குமாயின் அந்த மனோரமையை யபகரித்துக்கொண்டு போகலாமென்றனர்.

மூன்றாம் ஸ்கந்தம் பதினாறாம் அத்தியாயம்

யுதாஜித: பரத்வா ஜாஸ்ரம கமனம்

முற்றிற்று.

———

ஆஉ அத்தியாயம் கசு-க்குச் சுலோகம் (கூஙக.)

————

✿ அபேக்ஷிக்கின்றார்கள் - எதிர்பார்க்கின்றார்கள்

உ

ஸ்ரீ தேவ்யைநம:

பதினேழாம் அத்தியாயம்

* சுதர்சனஸ்ய காமபீஜப்பிராப்தி :

———

ஓ மஹருஷிகாள்! யுதாஜித்தென்று மரசன் தன் பேரனுக்குப் பட்டங் கட்டியதும், பின்னர் சுதர்சனனைத் தேடிக்கொண்டு பரத்வாஜரிடஞ் சென்றதும், அவர் அவ னெண்ணம்போல் உடன் படாமல் நீ விசுவாமித்திரன்போல் செய்யலாமென்று சொன்னதும் கூறிவந்தோம். இனி சுதர்சனனுடைய வரலாற்றைக் கூறுகின்றோமென்று சூதபகவான் சொல்லத் தொடங்கினார்.

(க-ரு.) மகருஷியினுடைய வீரமொழியை யுதாஜித் துக்கேட்டும் மனோரமையைக் கொண்டு போவதற்கே ஊக்கமுள்ளவனாய்ப் பெரிய மந்திரியை யழைத்து ஓ மந்திரி! புத்திரனோ டிருக்கின்ற மனோரமையை இந்த மகருஷி யனுப்புவதாகத் தோன்றவில்லை ஆகையால் அவளைப் பலாத்காரமாகக் கொண்டு போகலாமென்றெண்ணுகிறேன். புத்திமானாகிய நீ இதற்கென்ன செய்யத் தக்கதோ அதைச் சொல்வாயாக. எதையு மெண்ணிச்செய்ய வேண்டியது அவசியமாகலானும், ஷேமத்தை யடைய ஜ அபேக்ஷை யுள்ளவன் அதற்கு விரோதமான பகை அற்பமா யிருந்தபோதிலும் அதனை அலக்ஷியஞ் செய்யக்கூடாதாகலானும், செய்வானாயின் அது ❁க்ஷயரோகம் போல் விருத்தியடைந்து முடிவில் தான்சாகுந் துயரத்தைத் தருமாகலானும், பகையைச் சிறிதாக வெண்ணிப் போகக்கூடா தென்பதே என் னபிப்பிராயம். ஆகையால் என்பேரனுக்குச் சத்ருவாகி இவ் வாசீர்மத்தி லிருக்கின்ற சுதர்சனனை இழுத்துக் கொண்டுவந்து கொல்லவேண்டும். கொல்வேனாயின் எவன் என்னை இங்குத் தடுக்கக் கூடியவன். அவனுக்குச் சேனை முதலியவை யிருந்தாலல்லவோ யுத்தஞ் செய்ய வருவார்கள் ஒரு வருங்கிடையாது. ஒருவரு மற்ற சுதர்சனன் மரணமடைவானாகில் என்னுடைய பேரன் பகைவர் பயமற்று ராஜ்யத்தைச் சுகமாக ஆண்டு வருவான். ஆகையால் அதனையே செய்யவேண்டுமென்று எத்தனிக்கிறேன் நீ என்ன சொல்லுகின்றா யென்று மீண்டுங் கேட்டனன்.

---

* சுதர்சனன் காமபீஜ மென்னுட் மந்திரவெழுத்தைச் சொல்லப் பெறுதல்.

ஷ க்ஷேமம் - சுகம் ஜ அபேக்ஷை - ஆசை ❁ க்ஷயரோகம் - ஒரு நோய்

(சு-உசு) மந்திரி ஒ அரசனே! இந்த சாகசமான செயலைச் செய்ய வேண்டாம். மகருஷி சொல்லிய வார்த்தையை நீ யோசித்தவனாகத் தோன்றவில்லை. அவர் விஸ்வாமித்திரனைத் திருஷ்டாந்தமாக வெடுத்துக் கூறினாரல்லவா? அவன் செய்தி நீ யறிந்திலாய் போலும். பூர்வத்தில் விஸ்வாமித்திர னென்பவன் காதிராஜனுடைய குமாரனாயும் ராஜ ஸ்ரேஷ்டனாயு மிருந்தவன். அவன் ஓர் கால் தேசசஞ்சாரஞ் செய்து வரும்போது வசிஷ்ட ராசீர்மத்தையடைந்து அவரைப்பணிந்து அவர்கொடுத்த ஆசனத்தி லிருந்தனன். மகாத்மாவாகிய வசிஷ்டர் அவனைநோக்கி இன்று உன்சேனைகளுடன் ♈ போஜனஞ் செய்து போகவேண்டு மென்று சொல்லிக் காமதேனுவை யழைத்து அதனால் அவரவர் ✠ அபேக்ஷைக்குத் தக்கவாறு அறுசுவையோடு கூடிய ♍ வுண்டிகளை யுண்டாக்கி அவரவரையு முண்பித்துத் திருப்தி செய்வித்தனர். விஸ்வாமித்திரன் இவை யாவும் காமதேனுவின் பிரபாவமென்றறிந்து அக்காமதேனுவையுத்தேசித்து வசிட்டரை நோக்கி ஓ சாந்தகுணமுள்ள சீலரே! கும்பம்போலும் மடிபடைத்த ஆயிரம் பசுக்களை உமக்குத் தானமாகக் கொடுக்கின்றேன், நீர் இக் காமதேனு ஒன்றை மாத்திரம் கொடுமென்று பிரார்த்தித்தனன். வசிஷ்டர் ஓ அரசனே? இக்காமதேனு எனது ஹோமார்த்தமாக வுள்ளதாகையால் அதனை யொருபொழுதுங் கொடுக்கமாட்டேன் நீ எனக்குக்கொடுக்க வுத்தேசித்த ஆயிரம் பசுக்க ளெனக்கு வேண்டாம் நீயே வைத்துக் கொள்ளென்றார். விஸ்வாமித்திரன் அவர் கூறிய வுண்மையை யறியாது மறுபடியும் உமக்காயிரம் பசு போதாதென்றிருக்கு மாயின் பதினாயிரமாவது லக்ஷமாவது இவ்வளவன்றி உம்முடைய மனதிற் றோன்றுகின்ற அவ்வளவாவது கொடுக்கின்றேன். நீர் இக்காமதேனு ஒன்றை மாத்திரந் தடையில்லாமற் கொடும். அப்படி நீர் கொடாமற் போவீரானால் யான் பலாத்காரமாகக் கொண்டுபோவதிற் றடையில்லை யென்றான். வசிட்டர் ஓ அரசனே! என்னிடத்தி லிருக்கும் பசுவை என்னுடைய மனப்பூர்த்தியாகக் கொடுக்க மாட்டேன். நீயே உன்னிஷ்டப்படிக் கொண்டுபோகக் கூடுமானால் கொண்டு போகலா மென்றார். உடனே விஸ்வாமித்திரன் மகா பலசாலிகளாகிய தன் சேனைகளைப் பார்த்து இக் காமதேனுவை நீங்கள் பிடித்துக்கொண்டு போங்களென்று ♐ ஆக்ஞை செய்ய, பலத்திலும் அகங்காரத்திலு மிக்க அவர்கள் காமதேனுவை இலேசாக வெண்ணிப் பிடிக்கத் தொடங்கியபொழுது, அக் காமதேனு கண்ணீர்விட்டழுது நடுக்கத் தோடும் வசிட்டரைநோக்கி, ஓ முனி சிரேஷ்டரே! எந்தக் காரணத்தினால் என்னை இவர்களிடம் விட்டுவிடத் துணிந்தீர்

✠ அபேக்ஷை - விருப்பம் ♈ போஜனம் - சாப்பாடு
♍ வுண்டிகளை - உணவுகளை ♐ ஆக்ஞை - கட்டளை

இவர்களோ என்னை யிழுக்கின்றார்கள். உம்முடைய சம்மதம் யாதென்று கேட்க, வசிஷ்டர் யான் ஏனுன்னை விடுகிறேன் மனதினாலும் விடுவதற்கு இச்சை கொள்ளேன். இந்த விஸ்வாமித்திரன் என்னால் செய்யப்பட்ட வுபசாரத்தை பேற்றுப் பின்னர் அவ்வுபசாரத்திற் கெல்லாங் காரணம் நீயென்றுணர்ந்து உன்னைப் பலாத காரமாகக் கொண்டுபோகப் பிரயத்தனப்பட் டிருக்கிறான் யானென்செய்வே னென்றார். அவரது கருணைமொழிகளைக் கேட்ட காமதேனு ஓர் உங்காரத் தொனியை யாவரு மஞ்சச் சத்தித்தது. உடனே மகாகோர ரூபத்தோடுங் கூடிய ராக்ஷசர்கள் சரீரத்தில் கவசமும் பூண்டவர்களாயும், ஆயுதங்களேந்திய கரங்களை யுடையவர்களாயும் அக்காமதேனுவின் சரீரத்தினின்றும் வெளிப்பட்டுச் சூழ்ந்திருக்கின்ற சைனியங்களை யுறுத்துப்பார்த்து நில்லுங்கள் நில்லுங்களென்று சொல்லிக்கொண்டே யாவரையுங் கொன்று மறைந்தார்கள். காமதேனுவும் பயமற்று வசிட்டரிடத்தில் சுகமாகத் தங்கிவிட்டது. விஸ்வாமித்திரன் இதுவென்ன வாச்சரியமென்று மனவருத்தமுற்று அக் காமதேனுவி னிடத்தில் பயபக்தி யுடையவனாய்த் திரும்பிச் சேனைகள் மாண்டதை யெண்ணிக்கலக்க முற்று க்ஷத்திரியருடைய மந்திரசத்தி என்ன வன்மையுடைத்தென்று நிந்தித்துப் பிரமருஷிகளுடைய மந்திரசத்தியே வன்மையுடைத்தென்று புகழ்ந்து அந்த மந்திர வீரியத்தைத் தானடைய வெண்ணிப் பின்ன ரது கைகூடுத லரிதென்றுநினைத்து, அரிதாயினும் அதனையே தேடவேண்டுமென்று மீண்டுங் கருதி நகரத்துக்குச் செல்லாது அநேக வருடகாலம் வனத்திலேயே கடினமாகிய தவத்தைச் செய்து க்ஷத்திரியருக்குண்டாகும் * தேஜோபலத்தை யொழித்து பிரஹ்ம தேஜோபலத்தை யடைந்தான்.

(உரு-ஙக.) ஆகையினால் ஓ அரசனே! தவசிகளை இலேசாக நினைத்து அவர்கள் விரோதத்தைக் கொள்ளவேண்டாம். அவர்களை வெற்றிகொள்ள ஒருவராலு முடியாது. அவர்களுடைய கோபம் குலநாசத்தை யுண்டுபண்ணும். இதனை யாலோசித்து மஹாதபஸ்வியாகிய பரத்துவாசரை நமஸ்கரித்து இனிய மொழிகூறி உன்னுடைய நகரை யடையும் வழியை தேடுவாய். நீ பகையாளியாக நினைக்கும் பாலனாகியசுதர்சனனுக்குத் தனமிருந்தா லல்லவா அவன் உனக்கு வருத்தத்தை யுண்டாக்குவன். அவனிடத்திலென்ன விருக்கின்றது? அவனென்ன செய்யப்போகின்றான்? நாதனில்லாதவனாயும் பலஹீனனாயு மிருக்கின்ற அவனிடத்தில் நீ வைரங்கொள்வது வீண்தானே? யாவரிடத்திலுந் தயை யிருக்க வேண்டும். யாவரும் ஒரு தெய்வத்தின் சுவாதீனத்தி

* தேஜோபல மென்பது-மந்திர வீரயம்

லிருக்கின்றவர்களே யன்றி வேறில்லை. ஒருவரை யொருவர் ஏதேனுஞ் செய்வதற்கு முடியுமா? ஒருவருக்கு எதுவரத்தக்கதோ அது அவசியம் வந்தே தீருமல்லவா அதனைத் தடுக்கமுடியுமா? ஆகவே ஒருவர் சுகத்தைப் பார்த்துப் பொறாமைப் படுவதினால் வரும் பிரயோஜன மென்னை? தெய்வத்தின் பலமிருந்தால் ஒரு சமயம் வச்சிராயுதமும் ஓர் புல்லுக் கொப்பாகும். அற்பமாகிய முயலும் புலியைக் கொல்லும் அதுபோலவே சிறிய வோர் மசகமும் யானையைக் கொல்லும். அஃ தில்லையாயின் திரணமாகிய ஓர் புல்லும் வச்சிராயுதமாகும். ஏனையவும் அப்படியேயாகும் புத்திமானாகிய ஓ அரசனே? எனது இதமாகிய வார்த்தையை அங்கீகாரஞ்செய்து கோபத்தைத் தணித்துச் சுதர்சனன் இந்த வனத்திலேயே சுகமாய் வசிக்க விட்டு நாம் போவோமென்று கூற, யுதாஜித்து ஒருவாறு கோபந் தணிந்து மந்திரி வார்த்தையின்படி பரத்துவாசரை வணங்கித் தன் னகரம்போய்ச் சேர்ந்தனன்.

(ஙஉ-சுக.) பின்னர் இச்செய்தி யெல்லாம் மனோரமை யறிந்துத் தனது புத்திரனுடன் வாழ்ந்திருக்கும்போது சுதர்சனன் யாதொரு பயமில்லாமல் ஐந்துவயதளவும் அங்குள்ள முனிபுத்திரர்களோடு விளையாடிக்கொண்டிருந்தனன். ஓர்நாள் ஓர் முனிபுத்திரன் மனோரமையோ டிருக்கின்ற பேடி யைப்பார்த்து, ஓ க்லீபனே (நபும்ஸகனே) இங்கு வாவென் றழைத்தனன். க்லீபனென் றழைக்கும் போது சுதர்சனன் அப்பதத்தின் முதலெழுத்தைத் தனக்கு விவரமாயும் நன்றாயுந் தெரியும் வரையிற் கேட்டு அதில் மிகவும் பிரியமுடையவனாய் அடிக்கடியும் * அநுஸ்வாரத்தோடுச்சரித்து வந்தனன். காமராஜ மென்கிற பீஜாக்ஷரம் அதுவாதலால் அதனை யுச்சரித்துவந்த பாலியனாகிய சுதர்சனனுக்குப் பூர்வ புண்ணிய வசத்தால் அதனை யுச்சரிப்பதில் மனதுக்கோ ராதரவும், அதன் பயனை அடையவேண்டிய சம்பந்தமிருப்பதால் ஒருவருடைய ஏவுதவில்லாமல் இயல்பாகவே அதனை மறவாதிருத்தலாகிய திறமும், மந்திரத்துக்குரிய ருஷி - சுந்தஸு - தியானம் - நியாசமுதலிய உணர்ந்திலனாயினும் அது சாரமுள்ளதென்றுணர்ந்த அறிவுடையனாயும் அவ் வக்ஷரத்தைமாத்திரம் இடைவிடாது பதினொருவயதளவும் ஜபித்து வந்தனன். அப்பருவத்தில் பரத்துவாச முனிவர் உபநயனஞ் செய்துப் பின்னர் வேதாத்தி யயனத்தையும் தனுர்வேதமுதலிய சகலகலைகளையுங் கற்பித்து வர அவன்

* அநுஸ்வாரம் என்பது 0 இக் குறியுடையது. அதனைத் தமிழில் மகரவொற்றாக வுச்சரிக்கப்படும்.

ஜபித்துவரும் மந்திரபலத்தால் விதிப்படி யாவையுமெளிதி லுணர்ந்து மற்றோரிடத்திற் சென்று அங்குள்ள முனிவர்களிடத்தில் இன்ன நூலைக் கற்றுணர வேண்டுமே என்கிற ஏக்கமுமற்று இருந்த விடத்திற்றானே சர்வ சாஸ்திர பண்டிதனாய்த் தன் தாயை மறவாது அவளுக்குரிய பணிவிடைகளைச் செய்து நதிக்கரையில் சஞ்சரித்துக் கொண்டிருந்தனன். ஓர் நாள் அவன் முன்னே ☼ரக்த வஸ்திரத்தோடுங் கூடினவளாய், ரக்தவர்ன முடையவளாய், ரக்தவர்ன முள்ள ஆபரணங்களைப் பூண்டவளாய், கருடவாகனத்தி லெழுந்தருளி யிருக்கின்ற அற்புதமாய் விளங்கும் விஷ்ணுசத்தியாகிய மகாலக்ஷ்மி சொரூபிணியாய்த் தரிசனந் தந்து தநுசையும் மிகவுங் கூர்மையாகிய அநேக பாணங்களையும் அம்பறாத் தூணியையும் வச்சிர கவசத்தையுங் கொடுத்து மறைந்தனள் அச்சமயத்தில் அவ்வழியாய் வந்த காசிராஜனுடைய தூதர்களிற் சிலர் சுதர்சனனுடைய பேரழகைக்கண்டு தங்கள் அரசன்மகளாகிய சர்வலக்ஷணங்களோடுங் கூடிய சசிகலை என்னுங் கன்னிகையிடத்திற்சென்று அவனுடைய அங்கவிசேஷணங் களையும், இரண்டாவது மன்மதனென்று சொல்லும்படி யமைந்துள்ள சவுந்தரியத்தின் பெருமையையும், வீர பராக்கிரமத்தினுடைய மிகுதிப்பாட்டையு மெடுத்துக் கூறினர். அக்கன்னிகை அவர்களால் சொல்லப்பட்டன வெல்லாங் கேட்டு அப்பொழுதே அவனைக் கண்டவள்போலு மகிழ்ந்து அவனைத் தனக்குக் கணவனாக மனத்தினால் நிச்சயித்து மன்மதனுடைய பாணத்துக் கிலக்காயினள். உலகமாதாவாகிய தேவி ஓர்நாளிரவில் அக்கன்னிகையின் சொப்பனத்தில் பிரசன்னையாய் ஓ பெண்ணே! நீ கேள்விப்பட்ட சுதர்சனனென்கிற ராஜபுத்திரன் என் பக்தன்; அவனைப் புருஷனாக நீ வரித்துக் கொள்வையேயாயின். அவனே உனக்குச் சர்வா பீஷ்டங்களையுங் கொடுக்குங் கடவுளாவானென் றனுக்கிரகஞ் செய்து மறைந்தனள். சசிகலை தேவியினுடைய மனோகரமாகிய திருவுருவத்தைச் சொப்பனத்தில் தரிசிக்கப் பெற்றமையும் அவள் தன் னெண்ணம்போல் அனுக்கிரகித்தமையும் நினைத்து விழித்து நமதெண்ண முடிந்ததென்று சந்தோஷித் தெழுந்து என்று மில்லாத முகமலர்ச்சி யுடையவளாய் உள்ளே யடங்கப்பெறாத ஆனந்தத்தோடு முலாவிக்கொண்டிருந்தனள். அது கண்ட அவளன்னை பார்த்து நீ இவ்வளவு சந்தோஷத்தோடுங் கூடி யிருப்பதற்குக் காரண மென்னவென்று கேட்கக், கன்னிகையானவள் நாண முடையவளாய் அக்காரணத்தைச் சொல்லாமல் தான்கண்ட சொப்பனத்தை யடிக்கடி எண்ணிச் சந்தோஷித்துத் தனக்குத்தானே சிரித்துக்கொண்டு தன்னுயிர்த் துணையாயுள்ள ஒரு

☼ ரக்த - சிவப்பு

தோழியைப்பார்த்துச் சொப்பனத்தைக் கண்டவண்ணம் சொல்லிவிட்டுப் பின்னர் தோழிகளோடு விளையாடுதலை யெண்ணி யழைத்துக் கொண்டு சண்பக மரங்களால் பிரகாசிக்கின்ற உத்யானவனத்தை யடைந்து அங்கொரு சண்பகவிருக்ஷத்தின் கீழ் நின்று அம்மரத்திலிருக்கும் புஷ்பங்களைப் பறித்துக்கொண்டிருக்குஞ் சமயத்தில் ஓர் பிராமணன் அம்மார்க்கத்தில் அதிவேகமாய்வர அவனை நமஸ்கரித்து, ஓ மகானுபாவரே! நீர் எந்த தேசத்திலிருந்து வருகின்றீரென்று இனிய மொழிகளாற் கேட்டனள். அதற் கந்தப் பிராமணன் ஓ யௌவனவதியாகிய கன்னிகையே! நான் பரத்து வாச ராச்சிரமத்திலிருந்து ஓர் காரியத்தை யெண்ணி வருகிறேன். நீ ஏன் என்னையாரென்று கேட்கின்றாய். அதனைச் சொலென்றான்.

(ருஅ-சுஉ.) சசிகலை தனக்குத் தேவி யநுக்கிரகஞ் செய்த கணவன் அந்த ஆச்சிரமத்திலிருப்பதாகக் கேள்வியுற்றிருக்கின்றா ளாதலால் அவன் பெருமையை அந்தப் பிராமணனால் நன்றாயறிந்து கொள்ளலாமென் றெண்ணி, ஓ மஹானு பாவரே! நீர் சொல்லிய அந்த ஆச்சிரமத்தில் கண்களால் அதிசயித்துக் காணத்தக்கதாகியும், வாக்கினாற் புகழ்ந்து சொல்லத்தக்க தாகியும், உலகத்தி லில்லாததாகியு முள்ள விசேஷங்க ளேதேனுமிருக்கக் கண்டதுண்டோவென்றாள். அந்தப்பிராமணன் ஆஹா அவ்விடத்தில் நான் கண்டதொன்றுண்டு. ஆனால் அது அஃறிணைப் பொருளன்று, உயர்திணைப் பொருளாகிய ஒரு மகாபுருஷனாகும். அவன் யாரெனின், த்ருவசிந்து வென்னும் அரசனுடைய புத்திரன், * சுதர்சன னென்னும் பெயருடையவன். அந்த ஸ்ரீமானுடைய நாமமெப்படியோ அப்படியே ரூபலாவண்ணிய முதலியனவும் அவனுக் கமைந்திருக்கின்றன. ஓ கன்னிகையே! புருஷ சிரேஷ்டனாகிய அந்த சுதர்சனனை எந்த மாநுடனுடைய கண்கள் காணப்படவில்லையோ அக்கண்கள் பிரயோஜன மற்றனவாம். ஆண்மக்களுக்கே இந்த கதியாயின் பெண்களுக்கு நான் வேறுசொல்ல வேண்டுமா? ஏனிவ்வண்ணஞ் சொல்லுகின்றே னென்றால் சிருட்டியி லாசையுடைய பிரஹ்மா குணங்களிற் சிறப்பாகச் சிலரையும் உருவங்களிற் சிறப்பாகச் சிலரையும் இவ்விரண்டிலும் ஈனமாகப் பலரையும் எண்ணாது படைப்பதுபோல் இவனைப் படைக்காமல் எல்லாமும் இவனிடத்திலேயே அமைந்திருக்க வெண்ணிச் சிருட்டிக்கப் பட்டவனாய் விளங்குகின்றான். ஓ சுந்தரவதியே! இப்பொழு தொன்றெண்ணுகிறேன். என்னையெனின் குணங்களுக்கெல்லாம் இடமாயிருக்கிற அந்தமகாபுருஷனைச் சந்தோஷத்துடன் நீ பார்க்க

* சுதர்சனன் பார்பதற் கழகுள்ளவன்

வேண்டுமென்பதேயாம். யோக்யனாகிய அந்தராஜபுத்திரன்றான் உனக்குத் தலைவனாதற் குரியவனாவான். நீ தான் அவனுக்குத் தலைவியாதற் குரியவளாவாய். புருடரிற் சிறந்த சுதர்சனனைப் பிரமன் படைக்கும்பொழுது புருடருக்குரிய எல்லா லக்ஷணங்களும் அவனிடத்திலேயே அமைந்திருக்கச் செய்தானென்று சொல்லியது போல் பெண்களிற்சிறந்த உன்னையும்படைக்கும்பொழுது பெண்களுக்குரிய சகல லக்ஷணங்களும் உன்னிடத்திலேயே யமைந்திருக்கச் செய்தானென்றே சொல்லவேண்டியதாயிருக்கின்றது. ஆகையால் உங்களிருவருக்கும் சம்பந்தம் உண்டாகுமானால் அது சுவர்ணமும் மாணிக்கமும் ஒன்றாகக் கலந்து அழகுசெய்வதுபோ் லாகுமென்று கூறினான்.

மூன்றாம் ஸ்கந்தம் பதினேழாம் அத்தியாயம்

சுதர்சனஸ்யகாம பீஜப்பிராப்தி

முற்றிற்று

———

ஆஉ அத்தியாயம் கஎ-க்குச் சுலோகம் (கூஉகூஉங)

———

உ

ஸ்ரீ தேவ்யைநம:

பதினெட்டாம் அத்தியாயம்

*** சசிகலா ஹ்வயம் வரம்.**

———

ஓ மஹ ருஷிகாள்! யுதாஜித்துத் தனது மந்திரியினால் விசுவாமித்திரனுடைய செய்திகளெல்லாங் கேட்டுத் தான்கொண்ட வெண்ணத்தை மாற்றிப் பரத்துவாசரை வணங்கிப் போனபின்னர் சுதர்சனன் கவலையற்று வாழுநாளில் காமராஜ மென்கிற பீஜாக்ஷரத்தை யுச்சரிக்கப்பெற்றுத் தேவிகடாக்ஷத்தினால் சர்வகலாசம் பன்னனாய்ச் சகல ஆயுதங்களைப் பெற்றதும், இவனுடைய பிரபாவங்களைச் சசிகலை என்பவள் கேள்வியுற்று அவனிடத்தில் மோகங்கொண்டிருக்குங் காலத்தில் அங்குவந்து ஓர் பிராஹ்மணனால் அவனழகை நன்றாயறிந்ததும், பின்னர் அவனந்தச் சசிகலையைப்

* சசிகலை என்னும் ராஜஸ்திரீயினுடைய திருமணத்தைக் குறித்து நாட்டிய சுயம்வரம்.

பார்த்து உனக்கு அந்தச் சுதர்சனன் கணவனாகத் தக்கவனென்று சொன்னதுங் கூறிவந்தோம். இனிச் சசிகலையினுடைய வரலாற்றைக் கூறுகிறோமென்று சூதபகவான் சொல்லத் தொடங்கினார்.

(க-அ) யௌவனவதியாகிய சசிகலையானவள் முன்வந்த பிராஹ்மணன் வார்த்தையைக்கேட்டுச் சுதர்சனன்பால் முன்னையினும் மிகுந்த பிரேமை யுடையவளாய் மயங்கி நிற்ப அந்தப்பிராஹ்மணன் இராப்பொழுது வந்துவிட்டபடியால் கோரங்கிக் குச்சியைக் கொளுத்தி விளக்கொளியாகக் கையிற் கொண்டு தன்னூருக்குப் பிரயாணப்பட்டுப் போயினன். மயங்கி நின்ற சசிகலையானவள் காமவிகாரங் கொண்டவளாய்ச் சரீர வாட்டமடைந்து தன்னெண்ணத்தைக் குறிப்பாலறிந்து முடிக்கவல்ல தோழியைப்பார்த்து ஓ தோழி! இங்குவந்த அந்தணனால் சொல்லப்பட்ட புருஷனுடைய ரூபலாவண்யாதி விசேடங்களை நான் உன்னிலும் அதி ரசமாக நன்றாய்க் கேட்டவளாயிருந்தும் அவைகளை ஓ ருவமானங்காட்டி உனக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென் றெண்ண முடையவளாயிருந்தும் அவனுடைய ரூபலாவண்ணியங்களுக் கேற்ற பொருள் இதுவாமென்று எடுத்துச் சொல்லக் கூடாதவளாயிருக்கின்றேன். இதனால் நீ அவன் என்னால் பார்க்கப்பட்டவனென்று எண்ணற்க. இப்பொழுது இந்த அந்தணன்சொல்லக்கேட்டேனேயன்றி வேறில்லை. ஆனால் இப்பொழுது என்மனம் என்னவிதமா யிருக்கிற தென்று கேட்பை யேயாயின் அவனைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டதுபோல் சபலத்தை யடைகிறது. மன்மதனும் நாயகனைப் பிரிந்த நாயகியை வருத்துவது போலவே என்னைக் காமத்துக் குள்ளாக்கி வருத்துகிறான். நான் கண்ணாற் கண்டறியாத அந்தச் சுதர்சனனும் இரண்டாவது மன்மதன்போல் என் கனவில்வரத் தலைப்பட்டான். நானென்ன செய்வேன் எங்கே போவேன். என் மனமும் காமலீலையில் ஆகுலத்தை யடைந்து தபிக்கிறது. என் தேகத்தில் இப்பொழுது சந்தனத்தை அப்பியிருப்பது-விஷத்தை அப்பியதுபோலும், பூமாலை களைசைவது-சர்ப்பங்க ளூறுவதுபோலும் சந்திர கிரணம் வீசுவது-அக்னியானது சுவாலை வீசுவது போலுமிருக்கின்றன. உப்பரிகை உத்யானவனம் நடபாவி பர்வதமுதலிய விடங்களில் பகற்பொழுது மிராப்பொழுது மிகுந்து மிருதுவான படுக்கைகளாலும் தாம்பூல முதலிய சுகவாசங்களாலும் கான முதலிய வாத்தியங்களாலுஞ் செய்து கொள்ளறபாலன வெல்லாஞ் செய்தும் அவைகளெல்லாம் என் மனத்தையும் கண்களையும் திருப்தி செய்யவில்லை.

(கூ-ஙரு) என்னை இவ்வாறு காமத்தால் பீடிக்கச்செய்கின்ற சுதர்சனன் எந்தவனத்தி லிருக்கின்றானோ அந்த வனத்திற்கு இனி நான் போகின்றேன். போவதற்குங் கூடவில்லை. ஏனெனில் குல தருமமாகிய லச்சையும், தந்தையினுடைய காவலும் என்னைப்பயப் படுத்தி ஒருவழியிலும் தெளியவொட்டாமற் செய்கின்றன. என் தகப்பனாராவது என்னெண்ணமறிந்து சுதர்சனனாகிய ராஜபுத்திரனுக்குக் கொடுக்கின்றே னென்று சுயவரம் நாட்டுவாரா? அது செய்யார்; ஏனெனில் நிறைந்த சாம்பிராச்சிய முடையவர்களாகிய அரசர்கள் அநேகரிருக்க அவர்களை யெல்லாம் விட்டு ராஜ்ய மில்லாம லிருக்கின்ற சுதர்சனனுக்கு எப்படி என்னைக் கொடுக்க நினைப்பார் நினையார். எனக்கோ சுதர்சனன் ராஜ்யஹீனனா யிருந்த போதிலும் அவன் தான் எனக்கு இஷ்டனாயிருக்கிறான். மற்றயரெல்லாம் எனக்குப் பிரியப்படவில்லை. இதற்கு நான் என்ன செய்வேனென்றாள். ஓ அரசனே! சுதர்சனன் ஜபிப்பதாகிய வாக்பீஜத்தினுடைய ஜபசித்தியினால் அந்தச் சசிகலையானவள் ஒருவனாகியும் தன மில்லாதவனாகியும் உபபல மில்லாதவனாகியும் வனத்தில் வசிக்கின்றவனாகியும் கந்தமூலபவங்களைப் புசிக்கின்றவனாயு மிருந்தபோதிலும் அவனையே தன்னுடைய மனதி லெண்ணிக் கொண் டிருப்பவ ளாயினளென் றறிவாய்.

இவன் செய்தி யிங்ஙனமிருக்க, அச் சுதர்சனன் தேவியினுடைய தியானபரனாய் உத்தமமாகிய மந்திரத்தை இடைவிடாமற் செபித்து வரும்போது ஒருநாள் எங்கும் நிறைந்தவளாயும், உலக மாதாவாயும், சிந்திப்பதற்குக் கூடாதவளாயும், சர்வசம்பத்தையுங் கொடுக்கின்றவளாயு முள்ள மஹாதேவி விஷ்ணுமாயா சொரூபிணியாகிய இலக்ஷிமி தேவியாக சுவப்பனத்தில் வரக்கண்டனன். மறுநாள் சிருங்க பேரபுரத்துக்கு அரசனாகிய வேடராஜன் அந்த சுதர்சனன்பால்வந்து ஜயசாலியாகத் தெரிந்து அவனுக்குத் துவஜனங்களையும் பதாகைகளையும் நான்கு குதிரைகள் பூண்டு சர்வசாதனத்தோடுங் கூடிய சிரேஷ்டமாகிய ரதத்தையும் சில திரவியங்களையுங் கொடுத்தான். சுதர்சனனும் அவ்வேடனிடத்தில் சிநேக பாவங் கொண்டவனாய் அவனைத் தழுவி அன்பு பாராட்டி வனத்திலுள்ளனவாகிய கந்தமூல பலங்களினால் உபசரிக்க அதனை அந்த வேடராஜனேற்று மிக மகிழ்ச்சியோடு அவன்பால் விடைபெற்றுப் போயினன். பின்னர் அங்கிருந்த முனிவர்கள் சுதர்சனனுக்கு நேரிட்ட ராஜ சின்னங்களைப்பார்த்துச் சந்தோஷ முடையவர்களாய் ஒவ்வொருவரும் அச் சுதர்சனனை நோக்கி ஓ ராஜகுமாரனே! சிறிது நாட்களில் உனக்குண்டாகும்

பிரதாபத்தினால் உன்னுடைய ராஜ்ய முற்றும் அடையப் போகின்றாய். இதிற் சம்சயமில்லை. பிரவஞ்ச மோகினியாகிய தேவியானவள் உன் விஷயத்தில் பிரசன்னையாயிருக்கின்றாளாதலால் இவ்வேடன் சகாய புருஷனாகக் கிடைத்தான். இதுபோலவே எல்லாங் கைகூடும். இனி நீ சிந்தா குலப்படவேண்டிய தொன்றுமில்லை என்று சொல்லிப் பின்னர் மனோரமையைப்பார்த்து உன் குமாரன்றான் பூபதியாகப் போகிறான் என்று மகிழ்ந்து கூறினார். மனோரமையானவள் அந்த மஹருஷிகளைப்பணிந்து ஓ மஹருஷிகாள்! உங்களுடைய ஆசீர்வாதப் படியே நல்ல பலத்தைத் தரல்வேண்டும். இந்தக் குழந்தையானவன் சத்துக்களாகிய உங்களுக்குத்தாசனாய் உங்களை யுபாசிக்கின்றவனா யிருக்கும்பொழுது ராஜ்யசம்பத்து கிடைப்பதில் ஆச்சரிய மென்னவென்ற பிரியவார்த்தைகள் கூறி, ஓ சுவாமிகாள்! என்னுடையகுமாரனுக்குச் சேனைகளும் மந்திரிப்பிரதானிகளும் அகண்ட செல்வமும் பிறருடைய சகாயமுமில்லையே இவனுக்கு எந்தச் சம்பந்தத்தால் ராஜ்யம் வரும்? ஆனால் நீங்கள் மந்திரசித்தியுடைய மூர்த்திகளா யிருக்கின்றவராதலால் உங்கள் வாக்கினாற் சொல்லிய ஆசீர்வாதப்படியே தவறாமற் சித்தியாகு மென்றும் நம்புகிறேன். இனிச் சந்தேகமில்லை என்றனள். புத்திமானாகிய சுதர்சனன் வேடனால் கொடுக்கப்பட்ட ரதத்தி லாரோகணித்தவனாயுலாவத் தலைப்பட்டு எந்தெந்த விடத்திற் போகின்றானோ அவ்விடங்களிலெல்லாம் அவனைச் சூழ்ந்து ஒரு அக்ரோணி சேனைகள் போவதுபோல் அவன் அன்போடு செய்யும் மந்திரப் பிரகாசத்தினால் காணப்பட்டது.

ஓ ஜனமே ஜயனே! அச்சுதர்சனன் அவ்வளவு சிறப்புடன் காணப்பட்டது யாதினாலென்றால் அந்த மந்திர பீஜத்தினுடைய பிரதாபத்தினாலென்றறிவாய். ஆகையினால் எந்த புருஷன் குருமூர்த்தி ஸ்வரூபிணியாகிய மஹாதேவினுடைய பீஜாக்ஷரமாகியும், அற்புதமாகியு முள்ள காமராஜமென்கிற மந்திரத்தை யுபதேசிக்கப் பெற்றுச் செபிக்கின்றானோ அவன்பரிசுத்தனாகி மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் அடையக்கூடாத காமரூபமாயிருக்கின்ற வஸ்துக்களெல்லாம் பிரசன்னையாகிய மகாதேவி கடாக்ஷத்தினால் கிடைக்கப் பெறுவான். ஆகலான் அத்தேவியால் அடையக் கூடாததாகிய பொரு ளொன்றுமில்லை என்பது திண்ணம். எந்த மாநுடர்களுக்குத் தேவிபரமாகிய உபாசனையில் பிரீதியில்லையோ அவர்கள் தான் புத்தியீனர்களாயும் தரித்திரர்களாகியும் ரோகங்களினால் பீடிக்கப்பட்டவர்களாயும் பிறந் துழல்கின்றனர். ஏனெனில் தேவியானவள் எல்லா ஆத்மாக்களிடத்தும் புத்திரூபமாகவும்

கீர்த்திரூபமாகவும் தைரிய ரூபமாகவும் சம்பத்ரூபமாகவும் சத்தி ரூபமாகவும் சிரத்தை ரூபமாகவும் ஞான ரூபமாகவும் ஸ்மரணை ரூபமாகவும் பிரத்திபக்ஷ மானவள்போல் பிரகாசித்துக்கொண்டிருக்க அவளைஉபாசிக்காராயின் அவர்கள் என்னை கேட்டைத் தானடையார்கள். அந்தத்தேவியை வேதங்கள் சிருட்டிகாலத்தில் சர்வ தேவதைகளுக்கும் உற்பத்தி ஸ்தானமாக எந்தப் பராசத்தியைச் சொல்லப்பட் டிருக்கின்றதோ அந்தக்காரணம் விளங்க அந்தச் சத்தியை ஆதிமாதாவென்று சொல்லப்படுமென்று கூறுகின்றன. எந்த மாநுடர்கள் மகா மாயையினால் இவ்வுண்மையை யறியாது தர்க்கம் பண்ணுகிறார்களோ அந்த மாநுடர்கள் லோக நாயகியாகிய மஹேஸ்வரியை உபாசனை செய்யார்கள். பிரம விஷ்ணு ருத்ரரும் இந்திரனும் வருணனும் யமனும் வாயுவும் அக்னியும் குபேரனும் துவஷ்டாவும் சூரியனும் அசுவனி தேவதைகளும் பகனும் எண்கோடி வசுக்களும் பதினொருகோடி ருத்திரர்களும் பன்னிரு ஆதித்யகோடிகளும் மற்று முள்ள இரண்டு கோடி விஸ்வதேவர்களும் இவர்களுக்குக் கீழ்ப்பட்ட தேவாம்ச முடையவர்களான யக்ஷகின்ன ராதியர்களும் சிருட்டி திதி சம்ஹாரஞ் செய்கின்ற அந்தப் பரமாத்ம ரூபமாகிய தேவியைத் தியானிக்கிறார்கள். புத்தியிற் குறைந்த பருவத்திற் சிந்தித்த சுதர்சனனுக்கே ராஜ்ய சாம்பிராஜ்யத்தைக் கொடுத்தாளென்று அவன் சரித்திரத்தாற் றெரிகின்ற பொழுது சகலப் பிரயோஜனங்களை யுங் கொடுக்கின்றவளாய் விளங்கும் பரமாத்ம சொரூபமாகிய அந்த மஹேஸ்வரியைப் புத்தியிற் சிறந்திருக்கின்ற எவன்றான் சிந்தித்து வணங்கா திருப்பான்.

(ஙசு-சுங) அத்தேவிதான் "ஏகமேவா" என்று சொல்லப்பட்ட பிரமப்பொருளாகியும் வேறாகவறிந் தடையக் கூடாதவளாகியும் வித்யாசொரூபிணியாகியும் மோக்ஷத்தை ✠யபேக்ஷிக்கின்றவர்களுக்கு யோகமார்க்கத்தால் அடையக் கூடியவளாகியும் பராசத்தியாகியும் பிரகாசிக்கின்றாள். யாதொரு மஹேஸ்வரியானவள் சிருட்டியாதி முத்தொழிலைச்செய்து சர்வவியாபியாகிய பரசிவத்துக்குக் காண்பிக்கின்றாளோ அவளைத் தவிர பரமாத்ம, சொரூபமாகிய அப் பர்சிவத்தை அறிவதற்கு எவன்தான் சமர்த்தனாவன். அப்படிப்பட்ட தேவியை மனதினால் தியானித்தலே ராஜ்யலாபத்தைக் காட்டிலும் மேலான லாபமென் றெண்ணி வனத்திலிருக்கின்ற சுதர்சனனை அந்தச் சசிகலை எண்ணி மன்மதபாணத்தால் பீடிக்கப்பட்டும் அத்துன்பம் நீங்குமாறு செய்யும் உபசாரங்களினால் மிகவும் வருத்தப் பட்டுக்கொண்டிருக்கிற சரீரத்தோடுங் கூடினவளா யிருந்தனள்.

✠ யபேக்ஷிகின்றவர் - விரும்புகின்றவர்

(சுO-சுங) அதனை அவளுடைய பிதாவாகிய சுபாகுவானவன் தெரிந்துகொண்டு அவளபிப்பிராயத்தைப் பூர்த்தி செய்வதில் மிகுந்த தீவரமுடையவனாய்ப் பண்டிதர்களால் சொல்லப்பட்ட மூவகைச் சுயம்வரத்தில் இச்சாசுயம்வரத்தை நாட்டினான். ஒ அரசனே! சுயம்வரம் மூன்றுவித மென்றது என்னையெனின்; இச்சா சுயம்வரம், பந்தயச் சுயம்வரம், வீரசுயம்வரம் எனமூன்று. இம் மூன்றுவிதமாகிய சுயம்வரங்களும் அரசர்களுக்கு யோக்யமாக விதித்தவைகளேயன்றி ஏனையோர்க்கு விதித்தவைகளன்று.

இவற்றுள் இச்சாசுயம்வரம் - தமயந்தியைப்போல் கன்னிகையினால் விரும்பப்பட்ட புருடனுக்கு மாலையிடுவது. பந்தயச்சுயம்வரம் - ஸ்ரீ ராமரைப்போல் கன்னிகையைக் கொள்வதற்குக் குறித்த பந்தயத்தை முடித்து அக்கன்னிகையைக் கொள்வது. வீர சுயம்வரம்-பீஷ்மரைப்போல் வீர தருமத்தினால் கன்னிகையை வரிப்பதென்றறிவாய்

(சுசு-ருரு) இச்சா சுயம்வரத்தை நாட்டிய சுபாகு பின்னர் சிற்பிகளைக்கொண்டு சபா மண்டபங்களும் அம் மண்டபங்களில் அவரவர்களுக்குரிய முறைப்படி உயர்ந்த பட்டாடை முதலியவற்றால் மெத்தென் றமைக்கப்பட்டுள்ள பலவிதமான சிங்காதனவகைகளும் மற்றுஞ் செய்யவேண்டுவனவாகிய அலங்காரங்களும் அழகாகச் செய்துவரும்போது சசிகலையானவள் துயரமுற்றுத் தன்னைப் பிரியாத தோழியைப்பார்த்து ஒ தோழி! திருவசந்தியின் குமாரனாகிய சுதர்சனன்றான் என் சித்தத்தில் வரனாக அமைந்தானேயன்றி வேறொருவரும் அமையவில்லை. இதனை என் தாய் தனித்திருக்குஞ் சமயத்தில் தெரிவிப்பாய். அவனையே பராசத்தியாகிய தேவியும் கணவனாகக் கொள்ளும்படிக் கட்டளையிட்டிருக்கின்றாள். ஆகையால் நீ இப்பொழுதே சென்று சொல்வாயென்றேவ அவள். விதர்ப்பதேசத் தரசன் மகளாகிய அவள் தாயிடஞ் சென்று அவளைத் தனியேயழைத்து, ஒ அன்னாய்! உன் மகளாகிய சசிகலை உன்னிடத்தில் சில மதுரமான தன் னபிப்பிராயததைச் சொல்லும்படி ஏவினாள்; அதனைச் சொல்லுகின்றேன். நீ அந்த இதமான விஷயத்தைக்கேட்டு அப்படியே செய்யத் தீவரமுடையவளா யிருத்தல் வேண்டும். என்னையெனில் மகா பரிசுத்தமாகிய பரத்துவாச ராச்சிரமத்தில் த்ருவசிந்து வினுடைய குமாரனிருக்கின்றான். அவனைத்தான் உன்மகள் கணவனாகக் கொள்ளப் பல காரணங்களால் நிச்சயித் திச்சித்திருக்கின்றாளேயன்றி வேறொருவனைக் கணவனாகக் கொள்ள இச்சையில்லாதவளா யிருக்கின்றாள். ஆகலான் நீ அவனே

அவள் கணவனாகவருவதற்குரிய முயற்சியைத் தேடுவாயென்று கூறிச்சென்றாள். பின்னர் அன்னை தன்னாயகனை வரவழைத்துத் தன்மகளுடைய எண்ணத்தை உண்மையாய்த் தெரிவித்தாள். அவ்வார்த்தையைக் கேட்ட அரசன் அடிக்கடி சிரித்து மனைவியைப் பார்த்து, ஓ சௌந்தரிவதியே! உன்மகளெண்ணியதும் அதனை யருமைபாராட்டி தோழி உன்னிடத்திற்சொன்னதும் அதைக்கேட்ட நீ உன் மகளால் விரும்பியிருக்கப்பட்ட அந்தராஜபுரத்திரனுடைய செய்தி யின்ன தென்று தெரிந்துகொள்ளாமலே எனக்குச் சொல்லவந்ததும் எண்ணிபார்க்குங்கால் விளையும் ஆச்சரியத்தை என்னவென்று சொல்வேன் அவன் செய்தியை உனக்குக் கூறுகின்றேன். அந்தோ! உன் மகளுடைய புத்தி இப்படியும் போகுமா! அந்த ராஜபுத்திரன் நகரத்தை விட்டு வனத்தில் தன்தாயுட னிருக்கின்றான். அவனுக்கு ஆதரவாகவுள்ளா ரொருவருமில்லை. அவன் தந்தை சிங்கத்தினாலிறந்த பிறகு இந்தச் சுதர்சனன் பொருட்டுப் பாட்டனாகிய வீரசேனனும் யுதாஜித்துவினால் கொல்லப்பட்டு யாதொரு திக்குமி லாமலிருக்கின்றான். அவனெப்படி நம்மகளுக்குக் கணவனாகலாம் நாளையதினம் சுயம்வரத்தில் மகா பிரபுக்களாகிய அரசர்களெல்லாம் வரப்போகிறார்கள். அந்தச் சமயத்தில் உன் மகளுக்கு உனக்கும் என்ன தோன்று கின்றனவோ அவற்றைச் சொல்லுங்களென்றான்.

மூன்றாம் ஸ்கந்தம் பதினெட்டாம் அத்தியாயம்

சசிகலா ஸ்வயம் வரம்

முற்றிற்று

———

அஉ-அத்தியாயம் கஅ-க்கு சுலோகம் (க0சுஅ.)

உ

ஸ்ரீ தேவ்யைநம:

பத்தொன்பதாம் அத்தியாயம்

* **சுதர்ஸனஸ்ய ஸ்வயம்வரப் பிரஸ்தானம்.**

———

ஓ மஹருஷிகாள்! சசிகலையானவள் பிராஹ்மணனுடைய வார்த்தையினால் சுதர்சனன்பால் தன்னால் அடக்கக்கூடாத காம கொண்டதைத் தோழிக்குத் தெரிவித்துத் தன் குறைகளையெல்லாம் எடுத்துக் கூறியதும். சுதர்சனனுக்குத் தேவியினுடைய தரிசனங்

கிடைத்ததும் அவள் கடாக்ஷத்தால் வேடராஜனொருவன் ரதமுதலியன தந்ததும், சுதர்சனனுக்கு நேரிட்ட தேவி கடாக்ஷத்தை மஹருஷிகளெல்லாம் கொண்டாடி மந்திரப்பிரபாவத்தைக் கூறியதும், பின்னர் சசிகலையாவள் தன் தாயாரும் தன் னெண்ணத்தைத் தோழியினாற் றெரிவிக்க அதனை தந்தையுந் தெரிந்துகொண்டு சுதர்சனனுடைய குறைபாட்டை கூறியதும் எடுத்துச் சொன்னோம். இனிச் சுதர்சனன் சுயம்வரதுக்கு வருதல் முதலிய வரலாற்றைக் கூறுகிறோமென்று சூதவான் கூறத்தொடங்கினர்.

(க-சு) சுபாகுவின் சொல்லைக்கேட்ட அவன் மனைவியானவள் கணவன்சொல்லிய வார்த்தைகளை எண்ணிப்பார்த்துப் புன்னகையுடைய மகளையழைத்து மடியில்வைத்துக்கொண்டு முத்தமிட்டுக் கொண்டாடிச் சில இனியவார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினாள். நீ என்னிடத்திற் பிரியமில்லாத வார்த்தைகளைச் சொல்லத் தோழியை யனுப்பினாய் அவளா லெல்லாமறிந்தேன் இது வென்ன வீணானவார்த்தை இந்த வார்த்தையினால் உன் பிதாவும் நானும் துக்கமடைந்தோம். ஏனெனில் உன்னால் குறிக்கப்பட்ட சுதர்சனன் கெட்டதசையடைந்து ராஜ்யாதிகாரமுதலியன சம்பத்தையு மிழந்து சேனைகளையும் பந்துக்களையுங் கைவிட்டுத் திக்கில்லாதவனாய்த் தாயுடன் வனத்திற்குச் சென்று கந்தமூல பழங்களைப் புசித்துக்கொண்டு சரீரபோஷணையற்று மிக வெளியனாய் வனத்திலேயே வசிக்கின்றான். அவனா உனக்குக் கணவனாக வரத்தக்கவன்? ஒ புத்திரியே! விவேகத்தில் மேலானவராயும் உருவத்தி வழ கமைந்தவராயும் செல்வத்தில் ராஜ சின்னத்தோடு கூடிய சிறப்புடையவராயும் மதிப்பில் யாவராலும் குறைகூற வியந்த ஆண் தன்மை யுடையவராயு முள்ள ராஜகுமாரர்கள் உன்னருமைக்கு யுக்தமானவர்களா யிருக்கின்றார்கள். அவர்களெல்லாம் உனக்குப் பிரியப்படாமற் போவாராயினும் அந்தச் சுதர்சனனுக்குத் தம்பியாகிய சத்ருஜித்து ராஜ்ய பட்டாபிஷிக்தனாயும் ரூபவானாயும் கோசலதேசத்தை ஆள்கின்றவனாயு மிருக்கிறான். அவனையாவது கணவனாகக் கொள்வாய்.

(எ-௩௨எ) ஒ அறிவிற்சிறந்தவளே! உன்னால் விரும்பப்பட்ட சுதர்சனனே உனக்குங் கணவனாவானென்பது எனக்குச் சந்தேகம். ஏனெனில் அவனுடைய செய்திகள் உன்றந்தை சொல்லக் கேட்டிருக்கின்றேன். என்னையெனில் யுதாஜித்தென்பவன் தன் பேரனுக்கு அரசாக்ஷி வரும்பொருட்டு வீரசேனனோடு மஹாயுத்தஞ் செய்து அவனைக்கொன்று மந்திரிகளோடு யோசித்துத் தன் பேரனுக்கே பட்டங்கட்டி அரசாளவைத்துப் பின்னர் சுதர்சனன்

பரத்துவாச ராச்சிரமத்தி லிருப்பதையறிந்து அவனைக்கொல்ல அவ்விடத்துக்குப்போய் அம்முனிவராற்றடுக்கப்பட்டுத் தன்னகரம் போய்ச் சேர்ந்தனன். அன்று முதல் மரணகாலத்தை எதிர்பார்த்திருக்கும் இயமனைப்போல் நெடுநாளாய்ச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கின்றா னென்று சொல்லக்கேட்டிருக்கிறேன். ஆகையால் யுதாஜித்து அவனைக் காண்பானாயின் கொல்வதிற் சந்தேகமில்லை என்றாள். சசிகலை ஓ அம்மணி சுதர்சனனைப் பற்றி நீ என்னசொன்னபோதிலும் என் மனதுக்கு அவன் தான் பிரியமானவனா யிருக்கிறான். ஆகையால் நான் சரியாதிராஜனுடைய புத்ரியாகிய சுகன்னி சவனரென்கிற ருஷியைக் கணவனாகக்கொண்டு அவருடைய பணிவிடையில் எப்படி அன்புள்ளவ ளாயினளோ அப்படி ஆவேனென்று நீ நினைப்பாயாக. ஏனெனில் மகாதேவி என் சொப்பனத்தில் அவனை வரனாகக்கொள்ள ஆக்யாபித்ததேயன்றி என் சித்தமாகிய சுவரில் எழுதியும் விட்டாள். இனி நான் அவனைத்தவிர வேறொருவனை எப்படி வரனாக நினைப்பேன். அந்த இஷ்டனாகிய புருடனைவிட்டு வேறொருவனை விவாகஞ் செய்து கொள்ளமாட்டேன். அல்லாமலும் ஸ்திரீகள் தங்களால் பதியாகக்கொண்ட புருஷனுக்குக் கபடமில்லாமல் பணிவிடை செய்வாரயின் அதுதான் அவர்களுக்கு இம்மையிற் சகலசம்பத்தையும் மறுமையில் மோக்ஷத்தையுங் கொடுத்துச் சுகத்தைச் செய்வதாகும். இது நிச்சயம். ஓ அம்மணி இனி நீ ஒன்றுஞ் சொல்லவேண்டாமெறாள். இவ்வாறு அநேக திருஷ்டாந்தங்களுடன் சசிகலை மொழி கூறியதை அவள் தாய்கேட்டுத் தன் கணவனிடத்தில் யாவும் விடாது சொல்லி இருவரு மாலோசித்திருந்தனர்.

அப்போது சசிகலை புத்திமானாகிய ஓரந்தணரை யழைத்து ஐயரே! என்பால் தயவுசெய்து என்பிதாவுக்குத் தெரியாமல் பரத்துவாச ராச்சிரமத்திலிருக்கும் சுதர்சன மகாராஜனிடத்திற் போய்வரவேண்டும். அந்தச்சுதர்சன மகாராஜனிடத்தில் நீர் சொல்லவேண்டியவை சிலவுள. என்னையெனின், என்னிமித்தமாய் என் தந்தை சுயம்வரம் நாட்டப்போகின்றாரென்றும் அக்காலத்தில் சதுரங்கசேனைகளோடு அநேக அரசர்கள் வரப்போகிறார்களென்றும் அரண்யவாசியாகிய அவனுக்கு அவசியம் வரவேண்டுமென்றும், வரவேண்டுமென்கிற அபிப்பிராய முடையவள் நானென்றும் சொல்லும். சொல்லும்பொழுது அந்த ராஜகுமாரனுக்கு இடையிற் சந்தேகங்களுண்டாகும். அவைகட்குச் சில உறுதிமொழி கூறுகிறேன். அவைகளை மறவாமற் சொல்லல்வேண்டும் என்னையெனின், என் சுயம்வரத்துக்கு அநேக அரசர்கள் வந்தபோதிலும் நான் மனதில் நீங்காத பிரியத்துடன் வரனாக

வசித்துக்கொண்ட சுதர்சனனையன்றி வேறொருவனை வரனாக வரித்துக்கொண்ட சுதர்சனனையன்றி வேறொருவனை வரனாகக் கொள்ளேனென்றும் என் னெண்ணப்படியே என் சொப்பனத்தில் தேவியும் ஆக்ஞை செய்திருக்கிறாளென்றும் ஓர்கால் என்னுடைய உறுதியும் அவளுடைய ஆக்ஞையும் தவறவருமாயின் விஷத்தைப் புசித்தாயினும் சுவாலித்துக் கொண்டிருக்கிற அக்கினியில் விழுந்தாயயினும் இறப்பேனென்றுங்கூறுவீர். இப்பொழுது நான் கூறிவந்த உறுதிமொழி சொல்லளவாகக் கூறியதன்று மனப்பூர்த்தியாகக் கூறியதாகும். அஃ° துண்மையாமென்று நீர் கொள்வதற்கு நான்சரீர வாட்டமுற்றுச் சகலசுகங்களுந் துன்பமாய்ப் பரிதவிப்பதொன்றே போதும். இதனையும் அவனுக்குக் கூறுவீர். இவையாவுங்கேட்டு அந்த ராஜ குமாரன் ஓர் கால் நீ கூறுவதெல்லாஞ் சரியே அவளுடைய தாய் தந்தையர் வேறொருவனை வரனாகக்கொள்ளத் தூண்டுவா ராயின் அவ ளென்செய்வாளென்று வினவுவானாயின் பகவதியாகிய அன்னை சொப்பனத்தின்கண் வந்துதூண்டிய அதுக்கிரஹம் பொய்த்துப் போயினாலன்றோ இவர்களுடைய தூண்டுதல் பொய்யாகாது மெய்யாகும். ஒருநாளும் அநுக்கிரஹமும் பொய்யாகாது அவளுக்கு நீ கணவனாவதும் பொய்யாகாதென்றுங் கூறுவீர். அப்பொழுதுஞ் சந்தேசிப்பானாயின் தெய்வபலமே பெரிதானதென்று தீர்மானித்து நீ சுயம்வரத்துக்கு வரவேண்டுமென்றும் சரா சராத் மகமாயிருக்கின்ற ஆத்மகோடிகளும் பகவதியின் சுவாதீனமாயிருப்பன. இந்திராதியரும் அத்தன்மையராயிருப்பவர். ஆகையால் அவளுடைய ஆணைக்கு அன்னியமாக ஆகுங்காரியங்களும் உளவோ; ஆக்குங் கர்த்தாக்களுமுளரோ என்றும் சில ஞானமொழி கூறுவீர். ஓ அந்தணரே! அவனும் இந்த ஞான உண்மையை யறிந்தக்கவன். ஆனால் நீர் இவைகளையெல்லாம் அதிரகசியமாய்ச் சொல்லவேண்டுமேயன்றிப் பிறரறியச் சொல்லப் போகின்றீர், நீர் தாமசஞ் செய்யவேண்டாம். என்னுடைய உத்தேசத்தை முடிக்க வல்லவரும் அறிவுடையவரும் நீரே, என்று பலவுபசார நயமொழிகளைக்கூறி வேண்டிய தக்ஷணையுங்கொடுத் தனுப்பினாள்.

அந்தப்பிராமணன் அவளிடத்தில் விடைபெற்றுப் பரத்து வாச ராச்சிரமம்போய்ச் சுதர்சனனைக்கண்டு சசிகலை சொல்லிய வண்ணம் யாவும் விடாதுசொல்லி அவனிசைவுபெற்றுத் திரும்பினான். பிறகு சுதர்சனன் யாவையும் ஆலோசித்து அதில் தெய்வபலம் இருப்பதை நன்றாயறிந்து பரத்துவாசரிடம்போய்த் தேவிகடாக்ஷித்த செய்திகளைக் கூறி அவரது அநுக்கிரகமும், ஆணையும் பெற்றுப் பிரயாணப்பட்டுப் போவதற்கு நிச்சயித்தனன். பிரயாண முயற்சியையறிந்த மனோரமை

நடுக்கமுற்றவளாயும் பீடிக்கப்பட்ட மனவருத்த முடையவளாயும் மிகுந்தபயத்தை யடைந்தவளாயும் கண்களில் தாரை தாரையாய் நீரைவிட்டு அப்பா குழந்தாய்! நீ எங்கேபோகத் தலைப்பட்டாய்? சுயம்வரத்தை நாடிவருகிற மஹாராஜசபையில் நீ போவதற்குத் துணியலாமா? தனியாயும் விரோதத்திற்குப் ❖ பாத்ரியாயுமிருக்கின்ற உன்னுடைய நிலையைமறந்து என்னயோசனை செய்துகொண்டு பிரயாணப்பட்டாய் உன்னைக் கொல்லவேணுமென்கிற கருத்துள்ள யுதாஜித்து அந்த ராஜசபைக்கு வராமற்போவானா; அந்தோ! அவன் உன்னை பார்த்தால் கொல்லாமல் விடுவானா; அந்தக் கூட்டத்தில் உனக்குச் சகாயபுருஷன் எவன்; ஆகையால், ஓ என்னிரு கண்மணியே! நீ போகவேவேண்டாம் உனக்கு மனையாட்டியில்லாமற் போனாலும் போகட்டும் நான் ஏகபுத்ரனை யுடையவளாகிய துர்த்தசையுள்ளவள் நீ மரணத்தையடைந்தால் எனக்கு ஆதரவாயுள்ளவர் யார்? நான் எல்லாச் செல்வங்களையு மிழந்தவளா யிருந்தும் உன்னொருவனால் எல்லா முடையவள்போ லிருக்கிறேன். என்னருமைச் செல்வனே! இப்பொழுது சொல்லியதசையிலிருக்கின்ற என்னை ஆசையற்றவளாகப் பண்ணுவதற்கு நீ ஆசைப்படாதே. உன்னுடைய சத்துருவாகிய யுதாஜித்து என்னுடைய பிதாவைக் கொன்றான். அந்தத் துஷ்டன் தனியேபோகிற உன்னை அந்தச்சபையில் கொல்லப்போகிறான். ஓ சுதர்சனா! நீ போகவேண்டாமென்றனள். தாயினுடைய பரிபவத்தைக்கண்ட சுதர்சனன் அம்மா! நீ அஞ்சவேண்டாம் நடக்கவேண்டியது எப்போதும் நடந்தேதீரும். இவ்விஷயத்தில் ✠ விசனப்படுவது அழகன்று. அன்றியும் உலகமாதாவாகிய தேவியின் ஆக்ஞையால் இப்போது நான் சுயம்வரத்துக்குப் போகிறேனென் றறிவாய். க்ஷத்திரிய ஸ்திரீயாயிருக்கின்ற நீ துக்கப்படுவது முறையாகுமா? தேவியினுடைய அநுக்கிரகத்தினால் நான் எப்போதும் பயப்படமாட்டேனென்று சொல்லிவிட்டு ரதத்திலேறிக்கொண்டு அதிவேகமாய்ப் போகவேண்டு மென்கிற அபேக்ஷையுட னிருக்கும்போது மனோரமை புத்திரனுடைய தீரவார்த்தையையும் பிரயாணத்தில் தீவரத்தையும் பார்த்துத் தீனசுபாவ மொழிந்தவளாய்ச் சந்தோஷத்துடன் தேவியைத் தியானஞ்செய்து * அத்தேவி அவனைமுற்றும் ரக்ஷிக்கு நிமித்தங் கவசத்தைச் சொல்லத் தொடங்கினாள்.

* அக்ரதஸ் தேம்பிகாபாது பார்வதீ பாதுப்ருஷ்டத. வராஹீ விஷமே மார்க்கே துர்க்கா துர்க்கேஷு கர்ஹிசித், காளிகா கலஹேகோரே பாதுத பரமேஸ்வரீ. பூமண்டலே தத்ரமாதங்கீ த்தசவும்யா ஸ்வாம் பூமத்யோது பாதுத்வாம் பவமோசநீ. கிரிஜா கிரிதுர்க் கேஷ் சாமுண்டா சத்வரேஷுச, காமகா காநநே ஸ்வேவம் ரக்ஷதுத் சநாத். விவாதே வைஷ்ணவீ சக்தி ரவதாத்வாம் ரகூத்வஹ, பைரவீ சரணேசவும்ய சத்ருணாம்வை சமாகமே. சர்வதா சர்வதேவேஷு பாதுத்வாம் புவநேஸ்வரீ, மஹாமாயா ஜகத்தாத்ரீ சச்சிதானந்த ரூபிணீ.

✠ விசன - துன்ப ❖ பாத்ரியாயு - பலிபாத்திரம்

(நகு-ருங) ஓ புத்திரனே! உன்னை அம்பிகையானவள் முன்னும்பார்வதியானவள் பின்னும் ரக்ஷிக்கட்டும். வராகியிடர் செய்வதாகிய மார்க்கங்களிலும், துர்க்காதேவி அடைவதற்குக் கூடாத காரியங்களிலும், மகாகாளி கோரமாகிய யுத்தத்திலும், பரமேஸ்வரி மகாசபையிலும், மாதங்கி சுயம்வரத்திலும், பவானிதேவி ராஜமத்தியிலும், சம்சார துக்கத்தை நிவர்த்திபண்ணுகிற கிரிஜை பர்வதங்களிலுள்ள குகை வழிகளிலும், சாமுண்டி நாற்சந்திகளிலும், அனாதியா யுள்ளவளாகிய காமகை காடுகளிலும், வைஷ்ணவி விவாதகாலத்திலும், பைரவி சத்துருக்களுடைய யுத்தத்திலும், மகாமாயா சொரூபிணியாகியும், சகத்தைப்படைத்தவளாகியும் சச்சிதானந்த சொரூபிணியாகியு முள்ள ராஜ ராஜேஸ்வரி எல்லா தேசங்களிலேயும் மற்றெப் போதுமரக்ஷிக்கட்டும். என்னும் பொருளமைந்துள்ள கவசமாகிய ஆசிகூறிப் பின்னரும் மகனைப் பிரிந்திருக்க ஆற்றாதவளாகி சுயம்வரத்தில் என்னை விளையுமோ வென்கிற பயத்தால் மனங் கலங்கி நடுக்கமுற்றுத் தன்னருமை மகனைப்பார்த்து என்னை வாழ்விக்கவந்த வாழ்வே நானு முன்னோடு கூடவருகிறேன் உன்னைவிட்டு அரைநிமிஷமும் இங்கிருக்க மாட்டேன்.

உனக்கு எங்கே போகவேண்டு மென்று மனமிருக்கிறதோ அவ்விடத்துக்கு என்னையும் அழைத்துக் கொண்டு போவாயென்று சொல்லித் தாதியுடன் பிரயாணப்பட்டாள். மகருஷிகளும் ஏனையோரும் மங்கள முண்டாகுக வென்று ஆசீர்வதித்து அடங்காத ஆனந்தத்துடன் புறப்பட்டனர். சுதர்சனன் யாவரையுந் தடுக்காது அழைத்துக்கொண்டு ஒரு தேரோடு காசிநகரத்தைப்போய்ச் சேர்ந்தனன். இவன் வந்துசேர்ந்த செய்தியை தூதர்களால் சுபாகு அறிந்து எதிர்கொண்டு சென்று அர்க்கிய பாத்யா சமனங்கங் கொடுத் துபசரித்து ஓர் விடுதியமைத்து அதில் அறுசுவையோடு கூடியவுணவுகளை வகுத்துச் சேவகர்முதலிய பரிசனங்களையுஞ் சூழவைத்துப்போயினன். அச்சமயத்தில் கருஷதேசத்தரசன் மத்திரதேசத்தரசன் சிந்து தேசத்தரசன் யுத்தத்தில் சிறந்த மாகிஷ் மதிதேசத்தரசன் மலைநாட்டி லுள்ளவனாகியும் சௌந்தர்யமுடை யவனாகியு முள்ள பாஞ்சாலதேசத்தரசன் கர்னாடதேசத்தரசன் சோழதேசத்தரசன் பலிஷ்டனாகிய விதர்ப்பதேசத்தரசன் என்றெண்ணப்பட்ட சகலதேசத் தரசர்களும் வந்துசேர்ந்தனர். யாவரினும் மேம்பாடுடையவனாக யுதாஜித்துந் தன்பேரனுடன் வந்து சேர்ந்தனன். இங்ஙனங் கூறிவந்த அரசர்களுடைய சைனியங்க ளெல்லாம் ஓ ரக்குரோணியாகத் திரண்டும், சுயம்வரத்தைப்

பார்க்கவந்த நகரத்தவர்களெல்லாம் வெள்ளங்களாகக் கூடியும் நகரமுற்றுஞ் சூழ்ந்தனர்.

இவர்களுள் தேசாதிபதிகளா யிருக்கின்ற அரசர்கள் சுதர்சனைப் பார்த்து வியாகுலத்தோ டிருக்கவேண்டிய இவன் வியாகுல மற்றவனாய்த் தாயாரோடு தனியனாய்த் தேரிலேறிக்கொண்டு விவாக நிமித்தமா யிவ்விடம் வந்திருக்கிறான். இதுவென்னபுத்தி ராஜபுத்திரியானவள் பலசேனைகளோடும் பல ஆயுதங்களோடும் கூடியிருக்கின்ற ராஜகுமாரர்களை விட்டுப் பரதேசியைப்போ லிருக்கின்ற இவனையா வரிப்பாளென்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண் டிருக்கும்போது யுதாஜித்து அந்த அரசர்களைப் பார்த்து ஓ வீரர்களே! கன்னிகை நிமித்தமாய் வந்திருக்கிற இந்த சுதர்சனனை நானடிக்கிறேன் இதிற் சம்சய மில்லையென்று கூறினான்.

(இசு-சுஉ) அப்போது நீதியிற் சிறந்த கேரளதேசத் தரசன் ஓ ராஜனே! கன்னிகையினுடைய இச்சையினால் வரித்துக் கொள்வதாகிய இச்சா சுயம்வரத்தில் யுத்தஞ் செய்வதுண்டா; தங்களுக்குள்ள வன்மையினால் அபகரிப்பதாகிய வீர சுயம்வரம் இவ்விடத்தில் ஏற்படவில்லை. அது இல்லாதபொழுது விவாதமென்ன விருக்கிறது. பூர்வம் நீ இச்சுதர்சனனைத் துரத்திப் பலாத்காரமாக உன்பேரனுக்கு அரசியலைக்கொடுத்தனை. ஓ மகானுபாவனே! இப்பொழுதும் கோசலபதியின் புத்திரனாகிய இந்தச் சுதர்சனன் நிராபராதியாயிருக்க அவனை நீ யடிப்பேனென்றது தருமமாகுமா; உனக் கிப்போதிருக்கும் சரீரபலத்தினால் விளையும் பாவவிளைவை யறியாமல் ஏன் அகங்காரத்தை யடைகின்றாய். அது அநீதியால்வரும் பாவபலத்தை உனக்குக் கொடுக்குமேயன்றிப் பிறருக்கு எள்ளத்தனை தீங்குங் கொடுக்க முடியாது.

யாரையும் ரக்ஷிக்கின்ற ஜகதீஸ்வர ரொருவர் பல்லாண்டு பல்லாண்டா யிருக்கிறார் அவர் தர்மம் சத்யம் என்கிற இரண்டை ஏற்படுத்தி அவ்விரண்டையு முடையோர்க்குஜயத்தையும் அவ்விரண்டையும் விட்டவர்க்கு அபஜயத்தையுந் தருகிறார். ஆகையால் அதர்ம புத்தியினாற் செய்வதாகிய பாவத்தொழிலைவிடு. ரூபவானாயும் ராஜ்யத்தோடு கூடினவனாயும் ஸ்ரீமானாயு மிருக்கின்ற உன்பேரனும் சிரேஷ்டர்களாகிய மற்றுமுள்ள ராஜபுத்திரர்களும் ஒன்று மில்லாதவனாயிருக்கின்ற சுதர்சனனும் இங்கு வந்திக்கின்றனர். சுயம்வரத்தில் ராஜகன்னிகை வருவாளானால் இவர்களுள் ஒருவனைத் தான் விரும்பி மாலைசூடி சுவீகரிப்பாளேயன்றி யாவருக்கும் மாலைசூடி யாவரையுமா விரும்பி சுவீகரிப்பாள். அன்றியும்

மாலை சூடுவது கன்னிகையினுடைய இச்சையா யிருக்கிற பொழுது உன்னிச்சையாவது மற்றை யாருடைய இச்சையாவது நுழைவதற் கிடனுண்டா இவைகளை யெல்லாம் எண்ணிப்பாராமல் நீயேன் சண்டையைத் தேடுகிறாய். ஓ அரசர்களே! இப்பொழுது நான் சொல்லிவந்ததில் ஏதேனும் பிழையிருந்தாற் சொல்லுங்கள். நீங்க ளெல்லோரும் அறிவாளிகளேயன்றி வேறல்லர். அறிவாளிகள் ஒருத்தருக்கும் விரோத முண்டாகும்படிச் செய்கிறதில்லை என்று கூறினான்.

மூன்றாம் ஸ்கந்தம் பத்தொன்பதாம் அத்தியாயம்

சுதர்ஸநஸ்ய ஸ்வயம்வரப் பிரஸ்தானம்

முற்றிற்று

———

ஆஉ அத்தியாயம் ககூ-க்குச் சுலோகம் (கககO.)

———

உ

ஸ்ரீதேவ்யைநம:

இருபதாம் அத்தியாயம்

*** ராஜ்ஞாம் சுதர்ஸநஸ்ய சம்வாதாதிகதனம்.**

———

ஓ மகஹருஷிகாள் சுதர்சனனுடைய தீனதசைகளை யெல்லாம் தந்தையாகிய சுபாகுவினால் சசிகலையானவள் நன்றாயறிந்த வளாயிருநதும் தன்னிலையிற் பிரியாதவளாய் அவனையே வரித்துக் கொள்வதற்கு ஓ ரந்தணனை அவன்பாலனுப்பித் தன் னெண் ணத்தைத் திரமாகத் தெரிவித்ததும், பின்னர் சுதர்சனன் சுயவரத்தைநாடிப் பிரயாணப்படும் பொழுது அவன் தாயஞ்சித் தடுத்துத் தேவிகவசங் கூறியதும், பின்னர் மனோரமைமுதலிய யாவரும் அவனுடைய பிரயாணமாய்க் காசிக்குப்போனதும். அவ்விடத்தில் சுயம்வரத்துக்கு வந்திருக்க அரசர்களுக்கும் சுதர்சனனுக்கும் நடந்தசம்வாதமும், பின்னர் கேரளதேசத்தரசன் யுதாஜித்தையும் ஏனைய அரசர்களையும்பார்த்து சுதர்சனனை யுத்தேசித்துச் சிலஞாயங் கூறியதுஞ் சொல்லிவந்தோம். இனிச் சுதர்சனன் ராஜசபையில் சொல்லும் வரலாற்றைக் கூறுகின்றோமென்று சூதபகவான் சொல்லுகின்றனர்.

* சுதர்சனன் அரசருடைய சபையிற் சொல்லும் வார்த்தை

(க-கஉ) கேரளதேசத்தரசன் இவ்வண்ணம் சொல்லுகிற போது யுதாஜித்து அவனைப்பார்த்து இப்பொழுது நீ சொல்லிவந்த காரணத்தால் நீ தருமமுஞ் சத்தியமுமுடையனாகவும் நானில் லாதவனாகவு மேற்பட்டது. அவைகள் என்னிடத்தி லில்லையாயினும் நீ யுடையவனைப்போல் எண்ணியிருக்கின்றனை யாதலால் இச்சபையில் அந்த நிதியை எடுத்துச்சொன்னாய். இது நிற்க, கன்னிகை நிமித்தமாய்ச் சுதர்சனன் வந்தது அநீதியென்று நான் சொல்லிவந்தேன். நீ நிதியென்று சொல்லவந்தனை அது எப்படி யாகும்? மிருகராஜமாகிய சிம்ஹத்தினுடைய உணவுக்குக் குள்ள நரி யோக்கியமாகுமா? அதுபோல் இந்த ராஜகன்னிகை அனுபவிப்பதற்குச் சுதர்சனன் யோக்யனாவனா? வேதமானது அந்தணர்க்குப் பலன் கொடுக்குமேயன்றி அரசர்களுக்குப் பலன்கொடுக்குமா? அதுபோல் நம்மையொத்த அரசர்களுக்கும் கன்னியாரத்தினமாகிய அவள் பலன்படத்தக்கவளேயன்றி இந்த அயோக்கியனுக்குப் பலன்படத் தக்கவளா? இந்த நீதியை நானெண்ணிப்பார்த்துக் கூறிய அதை நீ அநீதியென்று கூறியது நியாய விரோதமாகும். நீ சொல்லிய நியாயம் உனக்குத்தான் சரியாயிருக்குமன்றி ஏனையோர்க்குச் சரியாயிருக்குமா? ஆகையால் நான் உன்னுடைய நீதியை அநீதியென்று துணிவாய்ச்சொல்லுவேன். இது வன்றியும் இவ்விடத்தில் நாட்டியது இச்சாசுயம்வரமென்றனை, அது அரசர்களுக்கு அவ்வளவு முக்கியமானதென்று நான்சொல்வேன். வீரசுயம்வரமே முக்கியமானதென்பேன். ஆகையால் இப்பொழுது யாவருங்கூடி அதனை ஏற்படுத்தி 'இந்தக்கன்னிகையைப் பலஹீன னாயிருக்கின்றவன் கிரகிக்கக் கூடாதென்று நியமித்தல்வேண்டும். இதுதான் நீதி. இப்படிச் செய்யாவிட்டால் அரசர்களுக்குள்ளே மிகவும் விசேஷமான கலக முண்டாய்விடுமென்றான். இவனைப் போலவே சில அரசர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு கலகஞ்செய்யத் தலைப்பட்டுச்சுபாகுவை அழைத்துச் சபைநடுவிலிருக்கச்செய்து ஓ அரசனே! நீரிப்பொழுது ஏற்படுத்திய சுயம்வரம் எங்களுக்கெல்லாம் யுக்தமாகத் தோன்றவில்லை; ஆகையால் நீதிக்கு விரோதமில்லாமல் நாங்களனைவரும் யோசித்து உமக்கொன்று சொல்லத் துணிந்திருக்கிறோம். உம்முடைய அபிப்பிராயம் எதுவோ அதனைச்சொல்லும். நீர் இச்சாசுயம்வரமென்று நாட்டினீரே அது, இனிக் கன்னிகையாலிச்சிக்கப்படும் புருஷனுக்கென்றா? அல்லது முன்னமே யுத்தேசித் திருக்கும் ஓர்புருஷனுக்கென்றா; அல்லது நீர் முன்னமே யுத்தேசித்திருக்கும் புருஷனுக்கென்றா? அல்லது இனிநீ ருத்தேசிக்கும் புருஷலுக்கென்றா; இவ்வுண்மையைக் களங்கத்திர்

திடமில்லாமற் சொல்லு மென்றார்கள். சுபாகு ஓ வீரமுள்ள அரசர்களே! என் புத்திரியானவள் சுதர்சனனெகிற ராஜபுத்திரனை முன்னமே மனத்தால் வரனாக நினைத்திருக்கிறாள்; ஆகையால் இந்த இச்சாசுயம்வரம் கன்னிகையின் இச்சையைக் குறித்ததென்று கொள்ளப்பாற்று. நானோ உங்களைப்போல் அவன் கூடாதென்று தடுத்தவன். அக்கன்னிகை என் வார்த்தையைச் சிறிது மங்கீகரிக்கவில்லை. அவளுடைய மனமும் என் சுவாதீனத்தி லடங்கியிருக்கு மென்றுந் தோன்றவில்லை நானென்செய்வேன். அரசிய இத்தன்மைத் தாமென் றரியக்கூடாத வனத்திலிருந்த சுதர்சனனும் ஓர் துணையுமின்றித் தனித்து வந்தவனாயிருந்தும் நம்முடைய கூட்டங்களைப் பார்த்து நா மென் செய்வோமென்று ரீ வியாகுல மடைந்தவனாகவுந் தோன்றவில்லை. கம்பீர முடையவனாகவே யிருக்கின்றான். இனிப் பகவதியின் செய லெவ்வாறாமோ அறியேன்.

(கங-கஅ) இவ்வார்த்தையைக்கேட்ட அரசர்களெல்லாம் அரசனைவிட்டுச் சாந்தனாய்த் தனித்திருக்கிற சுதர்சனனையழைத்து ஓ ராஜபுத்திரனே! இச்சுயம்வரத்துக்கு நீயே வந்தனையா? யாராவது அழைக்கவந்தனையா? வந்தநீ தனியனாயிருக்கிறாய். அங்ஙன மிருந்தபோதிலும் சைனியங்கலும் மந்திரிப் பிரதானிகளும் அளவிறந்த செல்வமும் சகாபுருஷரு மிருப்பாராயின் ஒருவாறு வந்தகாரியத்தை முடித்துக்கொண்டு போவாயென்று நினைக்கலாம். ஒன்றுமில்லாமல் வந்திருக்கின்றனை நீ என்னசெய்ய நினைத்திருக்கிறாய்? உண்மையைச் சொல். மிகவும் பலமுடையவனாயும் அதிசூரனாயு மிருக்கின்ற உன்தம்பியும் இந்தக் கன்னிகையினிடத்தில் மஹா மோஹியாய்த் தானே அவளைக்கொண்டு போக வந்திருக்கின்றான். யுதாஜித்தும் அவனெண்ணத்தை முடித்தற்குரிய சகாயங்கள் செய்து அந்தக் கன்னிகை அவனையே சேரும் படிச் செய்வானேயன்றி உன்னைவந்து சேரும்படிச் செய்வானேயன்றி உன்னைவந்து சேரும்படிச் செய்யான். அதற் கிடையூறுவரும் பக்ஷத்தில் யுத்தஞ் செய்யவும் சித்தமாயிருக்கிறான். ஏனையோரும் அந்த நோக்கமாகவே யிருக்கின்றனர். உனக்காக யுத்தஞ்செய்வோரும் அல்லது வேறுசகாயஞ் செய்வோருமில்லை; இது உண்மையான செய்தி. இதனையாங்கள் உன்பாலிரக்கமுற்றுச் சொல்லவந்தோம். இனி உனக்கிருக்கும் பலாபலத்தை நாடி எங்களைப்போல் இவ்விடத்தி லிருக்கலா மென்றிருந்தா லிருக்காலம் இல்லையாயின் இப்பொழுதே போனாலும் போகலாமென்று கூறினார்.

(கக்கூ-ஙO) சுதர்சனன் அந்த அரசர்களைப்பார்த்து நீங்கள் கூறியதெல்லா முண்மையே, எனக்குப் போர்செய்யும் வன்மையும்

ரீ வியாகுல - கலக்கம்

இளைத்தகாலத் துதவிசெய்யும் சகாயபுருஷரும் யாவருமென்னை விரும்பச் செய்யவல்ல திரவியமும் பகைவர் வருதற் கிடந்தராத கோட்டையும் பகைத் திறத்தைக் கூறவல்ல சிநேகரும் இடுக்கண் வருங்காலத்துப் பரிபவப்படத் தக்கவரும் ரதகஜதுரக பதாதிகளை உதவியாகக் கொடுக்கவல்ல அரசருமில்லை. இவைகளொன்று மில்லாத யான் கன்னிகையைக் கொண்டுபோக நீங்களனைவரு மெண்ணுவதுபோ லெண்ண என்ன ஆதரவிருக்கின்றது. ஆகையால் சுயம்வரத்தைக் கேள்விப்பட்டு வேடிக்கைபார்க்க வந்திருக்கும் அநேகருள் நானும் ஒருவனாக வந்திருப்பவனேயன்றி வேறல்லன். அங்ஙனமாயினும் என்னிஷ்ட தெய்வமாகிய பகவதி எனக்குச் சில வபிப்பிராயங்களைச் சொல்லி இங்கு வரும்படிப் ✡ பிரேரித்தபடியால் அதனைப் பார்க்கவேண்டு மென்கிற அவாவினால் வந்திருக்கிறேன். அத்தேவியி னேற்பாடு எதுவோ அதுதா னுண்மையாக நடக்கும். இதிற் சந்தேகமில்லை.

ஏனெனில் தேவர்கள் பஞ்சபூதங்கள் மாநுடர்கள் முதலியோருடைய சாமர்த்தியங்களெல்லாம் அத்தேவியினால் செய்யப்பட்டனவேயன்றி வேறில்லை. பொருளில்லாதவனா யிருக்கின்ற ஒருவனை அரசனாகச்செய்ய வெண்ணுவாளாயின் அவனை அவ்வண்ணமே யாக்குவாள். அதனை மாற்றுதற்குப் பிரம விஷ்ணு ருத்திரரும் சக்தியற்றவராவர். இதனால் ஒவ்வொருவரிடத்தும் நாம் காணப்படும் செயல்களெல்லாம் அவளால் நடத்தப்படுகின்றன வென்று கொள்ளத்தக்கதே யன்றி அச்செயல்களைச் செய்கின்றவரால் நடத்த படுகின்றனவென்று கொள்ளத்தக்கதன்று. இவ்வுண்மையறிந்தவன் எது நடக்கவேண்டியதோ அது நடக்கப்போகிற தென்றும் அதையிப்போது ஒருவராலும் மாறுபடுத்தமுடியாதென்றும் அதுவிஷயத்தில் சிந்திக்கவேண்டிய தொன்றுமில்லை யென்றும் எண்ணிச் சிந்தாகுலமற்றிருக்கவேண்டியது. ஓ அரசர்களே! மகாராஜ்ஜையா யிருக்கின்ற பரமேஸ்வரியையே எவரிடத்திலும் எத்தொழிலிலும் நான்பார்க்கின்றவனா யிருக்கின்றபடியால் இவ்வுலக விவகாரமாகிய சம்சாரத்தில் எனக்குச் சத்ருவாயிருக்கின்றவன் ஒருவனுங்கிடையாது. என்னிடம் எவனாவது சத்ருபாவத்தைக் கொள்வானாயின் அவனைத் தண்டித்தற்கு மஹாவித்யா சொரூபணியாகிய பரமேஸ்வரியே தலைப்படுவாள். ஆகவே எனக்குச் சத்ருவேது நான் தண்டிப்பதேது கிடையாது. இப்பொழுதும் இச் சுயம்வரத்தில் வந்திருக்கிற நான் இக்கன்னிகையைக் கொள்ளவேண்டு மென்றாவதுவிடவேண்டு மென்றாவது எண்ணியிருக்கின்றவனல்லன். என்னுடைய தேவி எதனைச்செய்ய ⁂ அபேக்ஷித் திருக்கின்றாளோ அதனைச்செய்யட்டும்.

✡ பிரேரித்த - காரியப்படுத்தல் ⁂ அபேக்ஷித் - விருப்பம்

அவள் செய்கைக்கு நான் சக்தனா யிருந்தாலென! அசக்தனா யிருந்தாலென்! நான் அவள் செய்வதாயிருக்கின்ற லீலையைக்கண்டு மகிழ்கின்றவனேயன்றி அதிற் சிந்தாகுலப் படத்தக்கவ னல்லன்.

அதுபோலவே நீங்களும் சக்தர்களா யிருந்தாலென்! அசக்தர்களா யிருந்தாலென்! உங்களுடைய சக்தமும் அசக்தமும் யாதொருபயனும் படத்தக்கதன்று. இதனால் நீங்களும் ❁ சிந்தாகுலப்படத் தக்கவரல்லர். இதுதான் என்னுடைய உண்மையான எண்ணம். ஓ அரசர்களே! நா னெப்பொழுதும் தேவியினுடைய சுவாதீனனா யடிமையாளாகவே யிருக்கின்றவனாதலால் இப்பொழுது எனக்குச் செயமுண்டாகாமல் அபசெயமுண்டானாலும் அதனால் வரும் அவமதிப்பு எனக்கில்லை. அது தேவிக்கே யாகுமென்று கூறினன்.

(ஙக-சுகூ) அரசர்கள் அந்தச்சுதர்சனனுடைய வுண்மையான வார்த்தைகளைக்கேட்டு வேறொன்றுஞ்சொல்ல அறியாதவர்களா யொருவரையொருவர் பார்த்து இதுதானுண்மை இதுதானுண்மை இது பொய்யாகாது இது பொய்யாகாது என் றுண்மை யறிந்தவர்களாய் அந்தச் சுதர்சனனைப்பார்த்து வேண்டுதல் வேண்டாமையற்ற ஓ மகானுபாவனே! நீ கூறியவை யுண்மையேயாயினும் யுதாஜித் தென்பவன் உன் விஷயத்தில் ஒரு சிறிதும் இரக்கமின்றி உன்னைக் கொல்வதற்கே எண்ணங்கொண் டிருக்கிறானாகையால் நாங்களனைவரும் துன்பப்படத் தக்கவர்களா யிருக்கின்றோம். அதற்கு ஏதேனும் ஓர் ஆலோசனையை உம்முடைய அறிவாலாலோசித்துச் செய்யவேண்டு மென்றனர். சுதர்சனன் ஓ அரசர்களே நீங்க ளென்பால் மிக்க இரக்கமுள்ளவர்களாயும் சிநேக முறையுள்ளவர்களாயு மிருக்கின்றபடியா லிந்த வுண்மையைச் சொன்னீர்கள் இதற்கு நானே ருண்மை கூறுகின்றேன். தாவர சங்கம ரூபமாயிருக்கின்ற வுலகம் தம்மால் செய்யப்பட்ட கர்மத்தின் சுவாதீனமாயுள்ளது. அது ஆகாமியம் சஞ்சிதம் பிராரத்தமென மூவிதப்பட்டுத் தெய்வத்தின் சுவாதீனமாயுள்ளது. அத் தெய்வம் காலதத்துவத்தைக் கொண்டு அவரவர்கள் கன்மத்துக்கீடா யவரவரைச் சனனமரணப்பட டுழலச்செய்கிறதேயன்றி அக்கால அள்வையைவிட்டுத் தான் சிருட்டிப்பதுமில்லை சங்கரிப்பதுமில்லை. ஆகவே தெய்வத்துக்குத் துணைக்காரணமாயுள்ள அநாதியாகிய காலதத்துவமே ஓர் நிமித்தத்தால் அவரவரை வாழவுமிறக்கவுஞ் செய்யுமேயன்றி ஒருவனால் ஒருவனுக்கு மிருத்யு வருமென்பதில்லை இஃதுண்மை. இதற்கு என்னனுபவமாயுள்ள சில திருஷ்டாந்தங்களைக் கூறுகின்றேன். என்னையெனில், சத்துருசங்காரஞ் செய்வதில் சமர்த்தராகிய என்னுடைய பிதா சிம்ஹத்தினாலிறக்கத் தக்கவரா? அவர்

❁ சிந்தாகுல - மனக்கவலை

அதனாலிறந்தார். என் பாட்டனாரும் தனக் கபஜெய முண்டாகாவண்ணம் கோடி எத்தனங்களைச் செய்தவராயிருந்தும் யுதாஜித்தினா லபசெயப்பட்டிறந்தார். ஆகையால் ஓர் மனிதன் தனது பூர்வகன்மத்தையு மறந்து காலதத்துவத்தையு மெண்ணாது தெய்வத்தையுங் கைவிட்டுந் தத்கால மெண்ணுவதாகிய எண்ணத் தாலுற் செயலாலுந் தன்னை ரக்ஷித்துக்கொள்ள நினைப்பானாயின் அவன் ரக்ஷிக்கப்படுவானா? படான். ஆகலான் இவன் ஶ்ரீ கன்மத்தையறிந்து காலத்தையெண்ணிச் செய்யத்தக்க தெய்வத்தைக் கைவிடா திருப்பனாயின் அத்தெய்வ மிவனைக் கைவிடாது ஓ ரக்ஷணைசெய்யும். அதனால் இவனெண்ணிறந்த கால முலகில் வாழ்வான். ஆகலான் நான் தெய்வமாகிய பரமேஸ்வரியின் ஸ்மரணத்தை இடைவிடாமல் இரவும் பகலும் சிந்தித்துக் கொண் டிருக்கின்றேனாகையால் அந்த வுலகமாதாவாகிய தேவி எனக்கு மங்களத்தையே செய்துவருகின்றாள். அதனால் நான் யுதாஜித்துக்கு ஒருபோதும் பயப்படமாட்டேன்.

பூர்வஜன்ம கன்மார்ச்சிதம் சுகத்துக்கேதுவா யிருந்தாலும் துக்கத்துக் கேதுவாயிருந்தாலும் அதனை அநுபவிக்கவேண்டி வரும் அனுபோககாலத்தில் அறிவாளிகள் சுகத்துக்கு வேறுபடாதிருந்து துக்கத்துக்கு வேறுபடுவாராயின் பிரயோஜன மென்னை; அறிவிலி தங்களைத் துக்கம்வந்தடைந்த காலத்துப் பூர்வகன்மமென்றெண்ணாது அத் துக்கத்துக்கு முன்னிலைபாயிருந்த ஒருவனை விரோதம் பண்ணுகிறான். நான் ஒருவகை முன்னிலையாகக் கொள்ளாதவனாகலான். விரோதத்தையும் துக்கத்தையும் பயத்தையும் அறியேன். எப்பொழுது இவைகளை யறியாதவனாயினனோ அப்பொழுதே களங்கமில்லாதவ னாயினேன். களங்கமற்ற என்னை இந்த ராஜசபையில் நடத்தப்படும் சுயம்வரத்தைப் பார்க்க வேண்டுமென்னு மோரெண்ணத்தினால் வந்தவனாக எண்ண வேண்டுமேயன்றிப் பிரயோஜனத்தை யெண்ணிவந்தவனாக எண்ணுதலடாது. பகவதியின் ஆக்ஞையால் எதுவரத்தக்கதோ அதுவரப்போகிறது. அவளுடைய ஆக்ஞையே எனக்குப் பிரமாணம். அவளுடைய ஆக்ஞைக் குட்பட்டவனாகிய நான் வேறெதையும் பிரமாணமாக அறியமாட்டேன். முன் கூறியவாறு சுகமுந் துக்கமும் யாவருக்கும் அவளாலேயே வருகின்றன. தங்களால் வரச்செய்து கொள்வதன்று. ஆகையால் ஓ அரசர்களே! யுதாஜித்து சுகத்தையே யடையட்டும் அதனால் எனக்கு விரோதமில்லை. என்பொருட்டு எவன் விரோதத்தைச் செய்கின்றானோ அதன்பலத்தை அவனே யடைகிறானென்றனன். இவ்வாறு அந்த சுதர்சனன் சொல்லக் கேட்ட

ஓ ரக்ஷணை - காக்க ஶ்ரீ கன்மம் - இருவினை

அரசர் சந்தோஷத்தையடைந்து தங்கள் தங்கள் விடுதியிற் போயிருந்தனர். சுதர்சனனும் தன்னிடம்போய்ச் சுகமாயிருந்தான்.

(ரு0-சு0) மறுநாள் குறித்த சுபமுகூர்த்தத்தில் சுபாகு அரசர்களையெல்லாம் அதி விசித்திரமாயிருக்கின்ற மண்டபத்தில் வரும்படியழைக்க அவர்களெல்லாம் மங்களகரமான அலங்காரத்தோடுங் கூடினவர்களாய் அச்சபைக்குவந்து அங்கு அதிக சிறப்புடனமைத்திருக்கிற மஞ்சங்களில் விமானத்தின்கண் திவ்யாலங்காரத்தோடும் வீற்றிருக்கின்ற தேவர்களைப்போல் சுவலிக்கின்ற தேஜோரூபிகளாய்ச் சுயம்வரம் பார்க்கவேண்டுமென்னு மிச்சையுடனிருந்து எப்போது ராஜகன்னிகைவந்து நூல்களிற் சிறப்பாகக் கூறும் புண்ணியவானாகியும் பாக்யவானாகியு முள்ள எந்த ராஜபுத்திரனை வரிக்கப்போகிறாளென்றும், ஒரு சமயம்தெய்வச் செயலாய்ச் சுதர்சனனுக்கு மாலை யிடுவாளாயின் அப்பொழுது ராஜாக்களுக்குள் கலகமுண்டாவதிற் சந்தேக மில்லையல்லவா வென்றும் எண்ணிக்கொண்டிருந்தனர். அரசர்களெல்லாம் சுயம்வரமண்டபத்தில் கூடினவுடன் வாத்தியங்களிற் சிறந்த * வீணா வேணு மிருதங்காதிகளுடைய கோஷங்களுண்டாயின. அப்பொழுது மணக்கோலத்துக்குரிய மங்கள ஸ்நானஞ்செய்து வெண்பட்டாடையுடுத்து சர்வாபரணா லங்கிருதையாய் + இலுப்பமலர் மாலையணிந்து மற்றுமுள்ள மணக்கோலத்துக்குரிய அலங்காரங்களெல்லாம் நிரம்பப்பூண்டு வாருணீ தேவிக்குச் சமானமானவளாய்ச் சிறிது சித்தாகுலத்தோடும் அலங்கார மண்டபத்தில் விற்றிருக்கின்ற மகளிடத்தில் பிதாவாகிய சுபாகுவந்து, இரண்டாவது லக்ஷ்மியைப் போல் விளங்குகின்ற ஓ சவுந்தரவதியே! நீ ஏன் சிறிது வாட்டமாயிருக்கின்றனை. கலியாண மாலைகையைக் கையிலேந்திக்கொண்டெழுந்திருந்து சுயம்வரமண்டபத்திற் சென்று அங்குள்ள அரசர்களைப் பார்த்து அவருள் ரூபவானாகியும் குலஸ்தனாகியும் குணபானாகியுமுள்ள எந்த அரசன் உன்னுடைய மனதில் எண்ணத்தக்கவ னாகின்றானோ அவனை நீ கணவனாகக்கொள்வாய். ஆனால் அச்சபையிலுள்ள அரசர்கள் ஒரு தேசத்தவரன்று அநேக தேசங்களிலிருந்து வந்திருக்கின்றவர் அவர்களுள் நீகணவனாக வெண்ணிய அரசன் எந்த தேசத்தரசனோ அதனையுமறிந்து அவனுக்கு மாலையிட்டு உன்வாட்டத்தைத் தவிர்த்துக் கொள்வாயென்றனன்.

---

* வீணைமுதலிய வாத்தியங்களை வாதித்திரமென்று வடநூலாக் கூறுவர்.
+ அவரைடயாளமாலையாயுள்ளது.

(சுக-எக) சசிகலை மாலையிடும் வகையையுணர்த்தும் பிதாவைப் பார்த்து ஓ தந்தையே? தர்மயுத்தமாயும் இனிமையாயுமுள்ள சில வார்த்தைகளைக் கூறுகின்றேன் கேட்பாயாக. என்னையெனின் சபையில் வந்திருக்கிறவர்களெல்லாம் என்னிடத்தில் காமிகளா யிருக்கின்றவராதலால் அவருடைய நேத்திரங்களுக்கு முன்னே நான் வரமாட்டேன். இதுவரையில் ராஜஸ்திரீகளெல்லாம் சுயம் வரத்துக்கு வரவில்லையா? அவர்களை அரசர்கள் பார்க்கவில்லையா? அதனாலவர்கள் குற்றமுடையவ ராயினரா வென்றால் அவர்கள் வருவார்கள் அதற்கெல்லாம் நான் நியாயமுணர்ந்து சொல்லவந்தவளல்லன்-நானொரு தருமங் கேட்டிருக்கிறேன். அதுதா னெனக்குப் பிரியமாயிருக்கின்றது. என்னையெனின், ஸ்திரீயை ஓரே புருஷன்றான் பார்க்கத்தக்கவனென்றும், ஏனையரெல்லாம் பார்க்கத் தகாதவரென்றும், ஒரு ஸ்திரீ பல புருஷர்கள் தன்னைப்பார்க்க வேண்டுமென்று போவாளாயின் அவளுக்குப் பதிவிரதாதருமம் போய்விடுமென்றும் கேட்டிருக்கின்றேன். அது வுண்மையே. ஏனெனில் இவளைப்பார்க்கின்ற ஒவ்வொருவரும் இவள் நமக்கு மனைவியாக வரவேண்டுமென்று எண்ணுவார்களல்லவா? அன்றியும் மாலையைக் கையிற்றரித்து எப்பொழுது சுயம்வரமண்டபத்திற் போகின்றாளோ அப்பொழுதே அந்தக்கன்னிகை நாடகப்பெண்ணுக் கொப்பானவளல்லவா, தாசியானவள் கடைத்தெருவிற் போய் அங்குள்ள புருடர்களைப்பார்த்து அவரவர்களுடைய குணா குணங்களையெல்லாமனதிலெண்ணி ஆலோசித்து அவர்களில் ஒரு செல்வனைத் தன்மனதில் அபேக்ஷித்து ஏனையோரை யெல்லாம் வாச மில்லாமல் அவனைப்போலவே அன்பு பாராட்டுவதுபோல நானும் சுயம்வ்ர மண்டபத்துக்குப்போய் அவளைப்போற் செய்ய வேண்டியவளல்லவா? முன்னுள்ள ராஜஸ்திரீகளாலே செய்யப்பட்டது தருமமா யிருந்தபோதிலும் நான் அதனை இப்போது செய்ய மாட்டேன். நான் பத்தினி விரதத்தைமிகவும் அநுட்டிக்கவேண்டுமென் றிருக்கின்றேன். சாமானியமாகிய ஸ்திரீசாதிகள் முன்னே அநேகரை உத்தேசஞ் செய்துகொண்டு சுயம்வர மண்டபத்துக்குப் போய் அங்கு ஒருவனை வரித்துக் கொள்ளுகிறார்கள். அது போல் நானெப்படி வரிப்பேன். முன்னமே நான் சுதர்சனனைக் கணவனாக எல்லாவிதத்தாலும் வரிக்கப்பட்டிருக்கிறேன். இன்று அவனைத்தவிர வேறொருவனை சபையிற்போய்கொள்வதற் கிச்சிக்கமாட்டேன். ஆகையால் அரசனே! எனக்கு மங்களத்தை இச்சிப்பையேயானால்

நல்ல சுபதினத்தில் கல்யாணவதியாகச் சுதர்சனனுக்கு என்னைக் கொடுத்து உன்னிஷ்டப்படி கன்னிகாதானமுஞ் செய்வாயாக வென்றாள்.

மூன்றாம் ஸ்கந்தம் இருபதாம் அத்தியாயம்

ராஜ்ஞாம் சுதர்சனஸ்யச சம்வாதாதிகதனம்

முற்றிற்று

ஆஉ அத்தியாயம் உ0-க்குச் சுலோகம் (ககஅக.)

———

உ

ஸ்ரீதேவ்யைநம:

இருபத்தோராம் அத்தியாயம்

*** சுபாகுசிந்தா நுவர்ணனம்.**

ஓ மஹருஷிகாள் சுதர்சனன் சுயம்வரத்துக்கு வந்திருப்பதாகிய பெருமிதத்தைச் சுபாகு யுதாஜித்துக்கு எடுத்துச்சொல்ல அவ னதைக் கேட்டுவெகுண்டு பலநிந்தனையானமொழிகளாற் சுதர்சனன் இச்சபைக்கு வருதற்கு யோக்கியனல்லவென்று தடுத்ததும், ஏனைய வரசரெல்லாஞ் சுபாகுவைக்கேட்டு வாதமாடுவதைவிட்டு அந்தச் சுதர்சனனையே வரவழைத்து வினாவத்தொடங்கி யுதாஜித்தினுடைய வீர பராக்கிரமத்தையும், அவனுடைய தீனத்சையையும் எடுத்துச் சொல்லி அவனை அவ்விடம் விட்டுப் போகச்சொன்னதும், அவர் வாய்மொழியைக்கேட்ட சுதர்சனன் அரசர்களைப்பார்த்து நான் தீனதசையை யுடையவனாயினும் தேவியினுடைய பாதாரவிந்தத்தைத் தியானிக்கின்றவனாயும், யாவரிடத்தும் அத்தேயியிருந்து அவரவர் வினைக்கீடாக நடத்தும் செயல்களைப் பார்க்கின்றவனாயும், எனக்குவரும் இடையூறுகளை அவளிருந்து போக்கடிப்பதாகிய அருட்டிறத்தை யறிகின்ற வனாயு மிருக்கத்தக்கவனேயன்றி இந்தச் சுயம்வரத்தில் கன்னிகையைக் கொண்டுபோக வந்தவனன்று என்னுடைய இஷ்ட தெய்வமாகிய தேவி இந்தவிடத்தில் என்னலீலை செய்யப்போகிறாள் அதனைப்பார்க்கலாமென்று வந்தவனாகுமென்று கூறியதும், அவனுண்மையையறிந்த பின்னரும் அரசர்களெல்லாம் சுதர்சனைப் போகும்படியே சொல்ல அந்தச் சுதர்சனன் ஒ அரசர்களே! எனக்குச் சுயம் வரவேண்டுமென்கிற வெண்ணமும், அபசெயம் வரக்கூடாதென்கிற எண்ணமுங் கிடையாது. ஏனெனில் எதுவும்

* சுபாகுவானவன் பலவாறாக சிந்தனைப்படுதல்.

அவள் செய்வதா யிருக்கின்றபடியால் அவள் செயலில் எனக்கு இது வேண்டும் வேண்டாமென்பது கிடையாது. அவள் செயலெல்லாம் எனக்கு வேண்டியதே. அவ்விரண்டுசெயலும் எனக்குப் பலன்கொடுக்கத்தக்கதென்று சொல்லிவிட்டுத் தன் விடுதிக்குப் போனதும் அவன்போன பின்னர் அவரவரும் தங்கள் தங்கள் விடுதிக்குப் போனதும், மறுநாள் சுயம்வரமண்டபத்தில் யாவரும் வந்து கூடியிருக்க, சுபாகு தன் மகளிடத்திற்போய் அவளைச் சுயம்வர மண்டபத்திற்கு வந்து மாலையிடும்படி வேண்டியதும் அவளதற்குடன் படாது நான் தாசியைப்போன்றவ ளல்லவென்று பல நியாயங்களைக் கூறித்தடுத்து ஓ தந்தையே! நான் க்ஷேமமா யிருக்கவேண்டுமென்கிற எண்ணம் உமக்கிருந்தால் என்னை அந்தச் சுதர்சனனுக்கே கொடுமென்று கூறியதும் சொல்லிவந்தோம். இனிச் சுபாகுவானவன் மகள் வார்த்தையையும் மன்னர் வார்த்தைகளை யுங்கேட்டுச் சிந்தாகுலப்படுவதாகிய வரன்முறையைக் கூறுகிறோங்கேட்பீர்களாக வென்று சூதபகவான் சொல்லத்தொடங்கினர்.

(க-எ.) சுபாகுவானவன் தன் மகளாகிய சசிகலை நீதி யுத்தமாய்ச் சொல்லிய வார்த்தைகளைக்கேட்டு இனி நாம் செய்யத்தக்கது எதுவென்று அடியில்வருமாறு எண்ணிச் சிந்தாகுலமுடைய வனாயினான். என்னையெனின், இந்தச் சுயம்வரமண்டபத்துள் மேற்கட்டோடு மிருக்கின்ற பீடங்களில் மகாபலவான்கரையும், அநேக திரவிய சாதனங்களோடு சைனியங்களை யுடையவர்களாயும் வீற்றிருக்கின்ற அரசர்களெல்லாம் ஒன்றுசேர்ந்து யுத்தஞ் செய்யவெண்ணி யிருக்கிறார்கள். இச்சமயத்தில் அவர்களிடத்தில் நம்முடைய மகள் சொல்லியதைச் சொல்லுவோமாயின் அப்பொழுதே துர்ப்புத்தி யுடையவர்களாகிய அந்த அரசர்களெல்லாங் கோபமுடையவர்களாய் முன்பலிகொடுக்க நம்மையடிப்பார்கள். இவர்களுக் கமைந்திருப்பதுபோலும் நமக் கவ்வளவு சைனியமும், மலை முதலிய நால்வகை யரணோடு கூடிய கோட்டையுமில்லை. ஒன்றுமில்லாத நாம் எந்த ஆதரவினால் இந்த அரசர்களை நோக்கி நம்முடையமகள் சொல்லிய விடையைச் சொல்லத்துணிவோம். சுதர்சனனாவது எல்லாப்பலங்களுமுடையவனோ வொன்றால் ஒன்றுமில்லாத வொற்றாயாளாயும், ஒருவருடையசகாய மில்லாதவனாயும் பொருளில்லாதவனாயும் பாலப்பருவமுடையவனாயு மிருக்கின்றான். இதற் கென்னசெய்யலாம்! நம்முடைய அளவையும் அவனுடைய அளவையும் எவ்வளவு யோசித்தபோதிலும் துக்கசாகரத்தில் மூழ்கிப்போக இடமாகவிருக்கின்றதேயன்றிச் சுகத்துக் கிடமில்லை. இனித் தெய்வந்தான் துணையென்று சிந்தாகுலத்தோடும்

அரசர்களுடைய சமீபத்திற் சென்று மிகவும் வணக்கமுடையவனாய் நமஸ்கரித்து ஓ அரசர்களே! நானும் என் மனைவியும் என்னுடையமகளை இந்தச் சுயம்வர மண்டபத்துக்குக் கொண்டுவர எவ்வளவோ முயற்சிகள் செய்தோம் அவ்வளவும் வீணாய்ப்போயிற்று. அவளிந்தச் சபையில் உங்களைப் பார்க்க வருவதில்லையாம்.

ஓ மன்னர்காள்! நீங்களனைவரும் மகா பாக்யவான்களாயும், மஹா பராக்கிரமசாலிகளாயுமிருந்தும் என்னிடத்தில் மிகவுமிரக்க முள்ளவர்களாக விருக்கின்றீர்களாகலான் நான் உங்களுடைய தாசனாய்ப் பாதங்களில் வீழ்ந்துவணங்கி என் னந்தரங்கமான சிலவெண்ணங்களைச் சொல்லுகிறேன். அவற்றைக்கேட்டு என்னைப் புனிதனாக்கல் வேண்டும். என்பேரில் கோபங்கொள்ள வேண்டாம். இப்பொழுது உங்களுக்கு அநேக ரத்னங்களையும் யானைகளையும் ரதங்களையுங் கொடுக்கிறேன். அவைகளை அங்கீகரித்து என்னிடம் கிருபைவைத்து உங்களுடைய கிருகங்களுக்குத் தயைசெய்ய வேண்டும். என்னுடையமகள் என் சுவாதீனத்தி லிருப்பவளாக எண்ண வேண்டாம். அவ ளிப்பொழுதிருக்கும் நிலையைப்பார்த்தால் தானெண்ணியிருக்குஞ் சுதர்சனனுடைய துக்கத்தினாலேயே மரணமடைவாள்போ லிருக்கின்றது. அப்பொழு நான் தீராத்துபரத்தி வாழ்ந்துவிடுவேன். அத்துக்கத்துக்கு நீங்களெல்லாம் வந்தவர்களாவ ரேயன்றிச் சுயம்வரத்துக்கு வந்தவர்களாகீர். இதுவன்றி மந்தபுத்தியுடையவளாயும் வணக்கமில்லாதவளாயு முருக்கின்ற என்மகளால் வேறுவிசேடம் என்ன உண்டாகப்போகிறது. உங்களுக்கு எவ்விதத்திலும் தாசனாயிருக்கின்ற நான் சொல்லியதை யுண்மையாமென் றெண்ணிப் பிரயாணப்படுவீர்களாயின் என்னை உயிரோடிருக்க அநுக்கிரகஞ்செய் தவராவீர்கள். என்மகளையும் இதுவரையி லெண்ணிருந்ததுபோ லெண்ணாமல் உங்கள்புத்திரியென் றெண்ணுங்கள் என்று மிகவும் பயந்தவனாய்ச் சொல்லும்பொழுது எல்லா அரசர்களும் சுபாகுவின் வார்த்தையைக்கேட்டுப் பதில்சொல்லாதிருந்தனர். யுதாஜித்துமாத்திரங் கோபங்கொண்டு கண் சிவந்து ரோஷத்தோடுஞ் சுபாகுவைப்பார்த்து ஓ அரசனே! நீ என்ன மூடனாயிருக்கின்றாய். இது வரையில ஆண் தன்மையையுடைய அரசர்கள் செய்யும் வழக்கம்போல் சுயம்வரத்தைநாட்டி இப்பொழுது முன்னே உன்கன்னிகை சாவாளென்றும், பின் நீ சாவாயென்றும், எங்களைச் சாவுக்கு வந்தவர்களென்றும், ஆண்தன்மையில்லாத பேடியைப் போல் வாயில்வந்தபடி வதறுகின்றனை. இது என்ன வார்த்தை? உன்மகள்விஷயத்தில் உனக்கு முன்னமே ①சம்சயமிருக்கிறபொழுது இந்தச் சுயம்வரத்தை எப்படி ஏற்பாடு

① சம்சய - சந்தேகம்

செய்தனை? இங்குவந்திருக்கும் அரசர்களெல்லாம் உன்னாலழைக்கப் பட்டவர்களாக விருக்க அவர்களை இப்போது பார்த்துக் கள்ளக்கும்பி டிட்டுக் குழைந்து குழைந்து நீங்களனைவரும் வந்தவழியைப் பார்த்துக் கொண்டு போகலாமென்று கூறுகின்றனை, ஆஹா! நீ நல்ல குழையுங்கள்ளன், வந்த காரிய முடியாமல் ஒருவரும் போதற்குடன்படார்கள். நீ எவ்வளவு குழைந்து சொன்னபோதிலும் நான் உன்வார்த்தையை நம்ப மாட்டேன். நீயே வந்திருக்கும் எல்லா அரசர்களையும் அவமானஞ்செய்யச் சுதர்சனனுக்கு உனது புத்திரியைக் கொடுக்கும் அசங்கதமான இச்சையுடையவனா யிருக்கின்றனை உன்னைப்போலுமூடனைக் கண்டதில்லை. உலகில் சுபகாரியத்தை யோசித்து ஆரம்பிக்கின்றனன். நீ மூடனாகையால் அவ்வண்ணம் ஆலோசனை செய்யாமல் அவமானஞ் செய்தனை, அந்தோ! சைனியங்களோடு கூடியிருக்கின்ற இவர்களையெல்லாம் விட்டு அழைப்பதற் கோராளுமில்லாத சுதர்சனனை வரனாகக் கொள்வதற்கு எப்படி இச்சைகொண்டனை? ஓ மூடனே! நான் முன்ன ரவனைக் கொல்லவுத்தேசித்திருந்தேன் இப்பொழுது முன்னே உன்னைச் சாகவடித்துப் பின்னவனைச் சாகவவடிக்கப்போகிறேன் அப்பொழுது என்ன சொல்லவிருக்கின்றாய்?

நானிருக்கிறபொழுது, மற்றொருவன் உன்னுடையகன்னிகையைக் கொள்வதற்கிச் சிப்பானா? வருவானா? அச்சுதர்சனன் எவ்வளவினன்? தனத்திற் சிறந்தவனா? பலத்தில் மிகுந்தவனா? வயதிற் பெரியவனா? அவனை நான் பரத்துவாச ராச்சிரமத்திற்போன பொழு தேகொன்றிருப்பேன். அப்பொழுது முனி நிமித்தமாய் விட்டுவிட்டேன். இப்போது சிறுவனாகிய அவனை உயிரோடு விடமாட்டேன். உன்னிடத்தில் இன்னும் ஒரு பிழைபொறுக்கிறேன். நான் சொல்லியதுபோல் என்பேரனுக்கு அழகுள்ளவளாகிய உன்மகளைக் கொடுக்கும்படி உன்மனையாளோடு நன்றாயாலோசித்து வந்து யாவருமறிய மனசை ரமிக்கச்செய்யவல்ல உன்புத்திரியைக் கொடுத்து எனக்குச் சம்பந்தியாய் விடுவாய். அப்படி ஆவையாயின் எப்பொழுதும் மேன்மேல் சுகத்தை இச்சிக்கின்றவனாயு மிருப்பாய். என்பேரனைவிட்டு மங்களவதியாகிய அவளை அந்த சுதர்சனனுக்குக் கொடுத்து என்னசுகத்தையடைவாய், அவன் சேனைகளோடும் ராஜ்பாதிகாரத்தோடு மிருந்தாலல்லவா உனக்குச் சுகமுண்டாகும். ஆகையால் உன்சுகத்தையும் சுயம்வரம் நாட்டியதற்குரிய தருமத்தையும் நெடுங்காலமாய்வரும் நீதியையும் ஆலோசித்து யாவருமதிக்கத்தக்க யோக்யமான காரியத்தைச் செய்வாய் அறிவீனத்தா லுண்டாகும் வித்யாசமான காரியத்தைச் செய்வாய். நீ எனக்கு மிகவும்

சிநேகனாயிருக்கின்றபடியால் இந்த இதமானவார்த்தைகளைச் சொல்லுகிறேன். நீ என் சொல்லைத் தவறாது நீராடு மண்டபத்தில் தோழிகளோடிருக்கும் உன் மகளை இந்தச் சுயம்வரமண்டபத்தி வழைத்துவந்து என்பேரனாகிய சத்துருஜித்துக்கு மாலைசூட்டும் வண்ணஞ் செய்விப்பாய் இல்லையாயின் சுதர்சனனைத் தவிர ராஜசெல்வத்தோடுங் கூடியிருக்கின்ற வேறெந்த அரசனுக்காவது மாலை சூட்டும்படிச் செய்வாய். இவ்வண்ணஞ் செய்கிறபக்ஷத்தில் எனக்கும் மற்றையோருக்கும் விரோதமில்லை.

ஏனெனில் சுதர்சனனொருவன்றான் எனக்குப் பகையாளியேயன்றி, மற்றையரெல்லாம் குலம் பலம் செல்வமுதலிய வற்றில் மேம்பாடுடையவர். இப்பொழுது நான் சொல்லுவதை விட்டு உன்மகள்வார்த்தைக்குக் கோணுதலில்லாமல் அவனுக்குக் கொடுப்பாயாயின் உனக்கு ஞாயஞ் சொல்லுவதில்லை. பின்னர் உனக்கும் எனக்கும் நீங்காத விரோதமுண்டாய்விடும். ஓ அரசனே! உன்மகளிடத்திற் போய்வருவாயென் றனுப்பினன்.

(ஙO-ஙசு) சுபாகு துக்கத்தோடு பெருமூச்செறிந்து பேதிக்கக் கூடாதவருத்தத்துடன் மனைவியிடத்திற் சென்று தருமசூக்ஷ மந்தெரிந்த நங்காய், இப்போதுண்டாயிருக்குங் கலக என்னால் சொல்லிமுடியாது. இதற்கு நானென்னசெய்யத் தக்கது. ஒன்றுந்தோன்றவில்லை. நான் யுதாஜித்துமுதலிய அரசர்களுடைய சுவாதீனனாயிருக்கின்றேன். எனக்கென் றோரறிவில்லை என்றுரைத்தனன்.

அதுகண்ட அவன் மனையாட்டி மகளிடத்திற்போய் ஓ குழந்தாய்! உன்பிதா அதிதுக்கமுடையவரா யிருக்கிறார். அரசர்களோ உன்னிமித்தமா யுத்தஞ்செய்யத் தயாராயிருக்கின்றனர். நீ சுதர்சனனைத் தவிர வேறொருவனை வரித்துக்கொள்வையே யானால் ஒரு கலகமுமில்லை. தாய்தந்தைகளா யிருக்கின்ற எங்களைத் துன்பப்படுத்தவேண்டாம். எங்க ளனுமதியைவிட்டு நீ சுதர்சனனைப் பலாத்காரமாய் வரிப்பையே யானால் யுதாஜித்து சேனைகளோடுங் கூடிவந்து உன்னையும் எங்களையும் அந்தச் சுதர்சனனையுங் கொல்வதிற்சந்தேகமேயில்லை. அந்தயுதாஜித்து பலத்திலும் பிரதாபத்திலுஞ்சிறந்தவன். அவன்கலகஞ்செய்கிற பக்ஷத்தில் நாமெல்லோரும் இறக்கவாவதுவரும். அல்லது உனக்கு வேறொரு கணவனாவது வருவான். ஆகையினால் சுதர்சனனைவிட்டு வேறெவனையாவது வரித்துக் கொள்வையேயானால் ஒருகலகமு மில்லையென்று மறுபடியுங் கூறினள். அப்பனும்வந்து வேண்டியவளவில் போதித்தான்.

பேதிக்க - பகைக்க

(ஙஎ-சுஅ) ✠மாத்ரு பிதுர்க்களுடைய வார்த்தைகளைக் கேட்ட சுசிகலை பயமற்றவளாய் ஓ அம்மையப்பார்காள்! நீங்கள் சொல்லியதெல்லாம் உண்மையே என்விரதத்தை நீங்க ளறிந்த வர்களாயிருந்தும் அதனைமறந்து அறியாதவர்கள்போல் இருவரும் மாறி மாறிப் பேசுகிறீர்கள். நீங்கள் மாறுபட்டாலும் நான் சுதர்சனனைத் தவிர இதரபுருஷனை வரிக்கமாட்டேன். ஓ தந்தையே! நீர் இந்தராஜாக்கள் செய்யுங் கலகத்தைக்கண்டு மருட்சியடைந்த வராய்ப் பயப்படுகின்றபடியால் என்னைச் சுதர்சனனுக்குக் கொடுத்து ஒருவருமறியாமல் எங்களிருவரையும் நகரத்துக்கு வெளியிற் கொண்டு போய் விட்டுவிடும். பின்னர் அந்தச் சுதர்சனன் என்னை ரதத்தில் வைத்துக் கொண்டு எவ்விடத்துக்குக் கொண்டு போகவேண்டுமோ அவ்விடத்துக்குச் சுகமாய்க் கொண்டுபோய் விடுவான். போகும்பொழுது எங்களுக்கு இடையில் எது வரவேண்டியதோ அதுவரும் வராமற்போகாது இதிற் சந்தேகமில்லை அதுவிஷயத்தில் நீர் சிந்தனையுடையவராய்ச் செய்யத்தக்கதொன்றுமில்லை.

தந்தை சசிகலை கூறிய வார்த்தையைக்கேட்டு ஓ விவேக ரத்னமே! இப்போது நீ சொல்லியது புத்திமான்களாலும் வேதார்த்தந் தெரிந்த பெரியோர்களாலும் செய்யத்தக்கதன்று. கன்னிகாதானஞ் செய்கின்றகாலத்தில் அனேசருடைய விரோத முண்டாயிருக்குமாயின் அவைகளைப் போக்கிச் செய்யத்தக்கதேயன்றி விரோதங்களை வைத்துக்கொண்டு செய்வது அழகன்று. கன்னிகாதானஞ்செய்து உங்களை நகரத்தில் வாழவைக்காமல் எப்படி நான் ஓட்டிவிடுவேன். ஒருசமயம் உன்னிஷ்டம்போல் செய்தாலும் விரோதத்தோடு கூடியிருக்கின்ற அயோக்கியர்களாகிய இந்த ராஜாக்கள் என்னதீங்கைச் செய்வார்களோ அறியேன். ஓ குழந்தாய்! நீ என் னபிப்பிராயம்போல் இணங்கும் பக்ஷத்தில் பூர்வத்தில் ஜனகமகாராஜன் சீதைக்குச் சுயம்வரம் வைத்ததுபோல் நானும் ஒருவராலுஞ் சாதிக்கக்கூடாத பந்தயச்சுயம்வரத்தை வைக்கின்றேன். அப்படிச்செய்யும் பக்ஷத்தில் அரசர்களுக்குள் வந்திருக்கிற இந்த விவாதம் சாந்தமடையும். எவனொருவன் நான் வைத்த பந்தயத்தைப் பரிபாலிக்கிறானோ அவன் உனக்குக்கணவனாகிறான். அவன் சுதர்சனனா யிருந்தாலும் சரி, பலவானாகிய அவன்றம்பியா யிருந்தாலுஞ்சரி, இது ஒருவருக்கும் விரோதத்தை யுண்டுபண்ணாது வெற்றியடைந்தவன் இன்னானென்று ஏற்பட்டபின்னர் நான் சுகமாய் உனக்குக் கலியாணத்தைச் செய்வேன். அப்படியல்லாமல் நீ சொன்னதுபோற் செய்தால் அது மூடகிருத்தியமாகும். இது செய்யத்தக்கதென்று தெளியாமல் சந்தேகத்தில் மூழ்கியிருக்கின்ற எனக்கு ஓர் வழி சொல்வாயென்றனன்.

✠மாத்ரு - உறவினர்

(சுகூ-சு0ஏ) சசிகலை ஒ தந்தையே! உம்முடைய மனம் போல் பந்தயத்தை யேற்படுத்துகிற விஷயத்தில் நான் யாவருக்கும் சுவாதீனையாய் விட்டவள்தானே? அப்படியானாலும் பந்தயத்தைப் பரிபாலிக்கவருகின்றவன் வஞ்சகத்தால் ஒருவராவது இரண்டுபேராவது அநேகம்போராவது நான் நீ என்று வருவார்களே யானால் அப்போது விவாதமுண்டாகுமே அதற்கென்னசெய்வீர்? ஆகையால் நீர் அந்தவஞ்சகருடையவார்த்தைகளைக் கேட்டுச் செய்யுங்காரியத்தைவிடும். அது எனக்குச் சமசயத்திற்கிடமாயிருக்கிறது. அதில் என்னுடைய புத்தியைச் செலுத்தமாட்டேன்.

நீ ரிதில் சிந்திக்கவேண்டாம். நான் முன்னர் எந்த சுதர்சனனை மனதிற் றரித்தேனோ அவன்றான் மனத்திலிருக்கின்றான் அவனை வஞ்சிப்பேனாயின் பாவத்துக் காளாவேன். நான் சொல்வதைக் கேளும் புண்ணிய பாவங்கட்குக் காரணம் மனது அந்த மனசினால் எப்படி நினைக்கின்றோமோ அப்படித்தான் பாவபுண்ணியங்கள் வரும் ஆகையால் சுதர்சனனைவிட்டுவிட்டு இதரனை எப்படி வரனாகக்கொள்வேன் ஒருபோதுங் கொள்ளேன். ஆகையால் நீ சுயம்வரமண்டபத்திற்குச்சென்று அஞ்சலியஸ்தனாய் நின்று ஒ அரசர்களே! இன்று போய் நாளையதினம் காலையில் இச்சுயம்வர மண்டபத்துக்கு வரவேண்டியது வந்தால் உம்முடைய இஷ்டம் போல் செய்விக்கிறேனென்று சொல்லி விட்டு இவ்விடம் வந்து, இன்றிரவிலேயே வேதோக்தப்படி விவாகத்தை நடத்திக் கன்னி காதானத்தை யுத்தப்படி செய்து அனுப்பிவிட்டு நீர் கிருகத்தி லேயேயிருக்கலாம். சுதர்சனன் என்னைவரித்துப்போகிறான். ஒரு சமயம் அந்தராஜாக்கள் இதனையறிந்து கோபித்தவர்களா யுத்தம் நடத்த முயற்சியுள்ளவர்களாய் வருவாராயின் அப்போது பகவதி எங்களுக்குச் சகாயம் பண்ணுவாள். சுதர்சனனும் அந்த ராஜ புத்திரர்களோடு யுத்தத்தைப்பண்ணுவான். ஊழ்வகையால் சுதர்சனன் மரணமடைவானாயின் நானும் மரணமடைவேன். நான் அந்தச் சுதர்சனனோடு ரமிக்கவேணுமென்கிற இச்சையால் போகப்போகிற எனக்கு அந்த அமங்களம் உண்டாகமாட்டாது. மங்களமேயுண்டாகும் நீர் போய்வாருமென் றனுப்பினாள். அரசன் மகளுடைய உறுதிமொழியைத் தடுப்பதற்கஞ்சி விசுவாசமுடையவனாய் மகள் சொல்லியதுபோல நடத்துவதற் குத்தேசித்தான்.

இருபத்தோராம் அத்தியாயம்

சுபாகுசிந்தாநுவர்ணனம்

முற்றிற்று.

———

அஉ அத்தியாயம் உக-க்கு சுலோகம் (கஉசுகஏ.)

உ

ஸ்ரீ தேவ்யைநம:

இருபத்திரண்டாம் அத்தியாயம்

சசிகலா விவாகம்

ஓ மஹருக்ஷிகாள்! சுபாகுஎன்னு மரசன் தன்மகளாகிய சசிகலை, சுதர்சனனைத் தன் கணவனாகக்கொள்ளும் விஷயத்தில் உறுதியாயிருத்தலையறிந்து அவளெண்ணத்தை நாம் எப்படி மாற்றமுடியுமென்றஞ்சியதும், அரசர்களுடைய பலத்தை எண்ணியஞ்சி இனி நமக்குத் தெய்வமே துணையென்று அந்த அரசர்கள் பாற்சென்று தன் மகளுடைய அபிப்பிராயத்தை எடுத்துச்சொல்லி இனி நீங்கள் விடுதிக்குப் போகலாமென்று சொல்ல அதைக்கேட்ட எல்லா வரசர்களும் ஒன்றுஞ்சொல்லாதிருந்ததும், யுதாஜித்தென்பவன் சுதர்சனனுக்குப் பகையாளியாதலால் அவனந்த சுபாகுவைப்பார்த்துப் பலவாறாகநிந்தித்து இனியாவது உன்மகளை என்பேரனுக்காவது அன்றி வேறெந்த அரசர்களுக்காவது கொடுத்துச் சுகமாகவாழ்வாய் இல்லாவிடில் சாவாயென் றனுப்பியதும், அதுக்கேட்டசுபாகு தன்மனையாளிடத்தில் குறையிரந்து அவளுந்தானு மகளிடத்திற் சென்று அந்தச்சுதர்சனனையொழிக்கும்படிவேண்டியதந்திரங்களை யெல்லாஞ்சொல்லிவேண்ட அவள் ஒருவரையும் வேண்டாது அவனையே வேண்டி உபாயஞ் சொன்னதும், அரசன் தன்மகளுடைய உறுதிமொழியைத் தடுப்பதற்கஞ்சி. அவளெண்ணப்படிநடத்த உத்தேசித்ததும் சொல்லிவந்தோம். இனிச்சசிகலை சுதர்சனனை வரனாகக்கொள்ளும் அற்புதமாகிய வரலாற்றைககூறுகிறோங் கேட்பீர்களாக வென்று சூதமுனிவர் சொல்லத்தொடங்கினார்.

(க-ங) சுபாகு தன்னுடைய மகள்கூறிய வார்த்தையைக் கேட்டு அதனால் அவளுடைய பதிவிரதா தர்மத்தைமதித்து இனி நாம் அவளுடைய அபிப்பிராயப்படியே செய்வோமென்கிற நல்லெண்ண முடையவனாய் ராஜசபைக்குப்போய் முடிமன்னர் முதலாயினாரைப் பார்த்து ஓ அரசர்களே! இன்று செய்யவுத்தேசித்த விவாகம் நாளையதினம் நடத்துவதாக வுத்தேசித்திருக்கிறேன். நீங்களனைவரும் இப்போது தாகசாந்தி முதலியவை பெறாதுபோதல் நலமன்று. ஆகையால் இப்பொழுது என்னிடத்தில் சந்தோஷமுடையவர்களாய் என்னால் கொடுக்கப்படும் ☉ பக்ஷியங்களையும் ℓ பரமான்னமுதலிய பானவர்க்கங்களையும் அங்கீகாரமாய்ப் பெற்றுத் தாகசாந்தி

☉ பக்ஷியங்கள் - உணவுகள் ℓ பரமான்ன - சருக்கைரையமுது

செய்துகொண்டுபோய் இன்றுபோலவே இந்த மண்டபத்தில் நாளையதினம் யாவரும் வந்திருந்து விவாககாரியங்களை நடத்திவைக்கவேண்டும். இனி உங்கள் விடுதிக்குப் போய் வாருங்கள்.

(சு-சு) ஒ அரசர்களே! இன்று என்மகள் இச்சுயம்வர மண்டபத்துக்கு வரமாட்டாள். இதுமுதல் அவளுக்குச் சொல்ல வேண்டிய புத்திமதிகளையெல்லாஞ் சொல்லிப் புத்தியைச் சமாதானப் படுத்திக் காலையி லழைத்துக்கொண்டுவருகிறேன். உங்களிடத்தில் விதேயனாயிருக்கத்தக்க என்னிடத்தில் புத்திமான்களாகிய நீங்கள் இப்பொழுது சண்டையையுத்தேசிக்காமல் மிகவும் கருணைசெய்ய வேண்டும். பெண்ணைச் சமாதானப்படுத்தி இவ்விடங்காலையில் அவசியம் அழைத்துவந்து உங்களிஷ்டப்படி இச்சாசுயம்வரமாவது, பணச்சுயம்வரமாவது, அவள் மனதுக்குச் சம்மதியானதை முன் னாலோசித்துப் பின்னர் வந்திருக்கிற உங்களிடத்திலுங் கலந்தாலோசித்து அவரவ ரபிப்பிராயங்களை நன்றாய்த் தெரிந்துகொண்டு அதனை யாவரும் வாய்மொழியாகவுஞ் சொல்லும்படியாகவுஞ் செய்து சுயம்வரத்தை நாட்டி விவாகத்தை நடத்துகிறேன். இப்பொழுது யாவருந்தயைசெய்து விடுதியைப் போய்ச் சேருங்களென்று மீளவும் விநயத்துடன் சொன்னான். அதைக்கேட்ட அரசரெல்லாஞ் சிறிதுசந்தேகங்கொண்டவர்களாய் நகரத்தினுடைய நாற்பக்கங்களிலுங் தங்கள் காவலாளிகளைக் காவலாகவைத்து மத்தியானஞ்செய்து கொள்ளவேண்டிய அநுட்டானத்தை முடித்துக் கொண்டு இனிச்சுயம்வரம் எவ்விதமாய் நடக்க விருக்கிறதோவென்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருந்தனர்.

(எ-கஉ) சுபாகு இவர்களை யனுப்பிவிட்டுத் தன்மகளுக்கு விவாகத்தை நடத்திவிட வேண்டுமென்றெண்ணி வேதவித்துக்களை யழைத்து அவர்களோடு தன் மகளபிப்பிராயப்படி நடத்தவேண்டிய அதிரகசியமான விவாக காரியத்தைச் சொல்லி அவர்களிசைவு கொண்டு அதுபோல் நடத்தத்தொடங்கி ஒருவருக்கும் புலப்படாத அந்தரங்கமானவோரிடத்தில் சுதர்சனனையும் சசிகலையையும் வரவழைத்துக் கங்கைமுதலிய புண்ணியதீர்த்தங்களால் மங்களஸ்நானமும் மணக்கோலத்துக்குரிய அலங்காரமும் அதிக சிறப்புடன் செய்வித்துக் கலியாணமண்டபத்திற் றழைத்துக்கொண்டு போய் இரத்னபீடத்திலிருக்கச்செய்து ✡ அர்க்கிய பாத்ய ♈ ஆதமனாதிகள் கொடுத்துப் பின்னர் க்ஷத்திரியதருமப்படி இரண்டு வஸ்திரமும் குண்டலங்களும் பசுவுங்கொடுத் துபசரிக்கச் சுதர்சனன் அவைகளையேற்றுத் தேவியினுடைய கருணையை எண்ணியிருக்கும்

✡ அர்க்கிய - பூசனை முறையுளொன்று மந்திர நீரிறைத்தல்

♈ ஆதமனாதிகள் - கூற்கற்பனை

பொழுது மனோரமை தன்மகனுடைய மணக்கோலத்தைக்கண்டு சிந்தைமகிழ்ந்து இன்று தான் நாம் மக்கட்பேறுபெற்ற பாக்கியசீலமுடைய சிரேஷ்டத்தன்மையை யடைந்தோமென்று மகிழ்கூர்ந்திருந்தனள்.

மந்திரிப்பிரதானிகளும் பயமில்லாதவர்களாய்ச் சந்தோஷ மடைந்து அந்தவரனைக் கலியாணமண்டபமத்தியில் அழைத்துக் கொண்டுவந்தார்கள். அப்பொழுது கலியாணச் சடங்கறிந்தவர்களாகிய ஸ்திரீகள் சர்வாலங்காரத்தோடு மிருக்கின்ற ராஜகன்னிகையைச் சிவிகையிலேற்றிக் கொண்டுவந்து மண்டபத்திலிருக்கும் வரனுடையபக்கத்தி லிருக்கச் செய்தனர்.

(கங-உ0) பின்னர் புரோகிதர் கலியாணமேடையில் பிரதிஷ்டைசெய்திருக்கிற அக்னியில் விதிப்படி செய்யத்தகும் ஹோமத்தையும், மணக்கோலத்துடன் மகிழ்ந்து அதிகப்பிரேமையோடி ருக்கும் வது வரர்களாகிய மணவாளனையும் மணவாட்டியையும் அக்னிமுகமாயிருக்கும்படி ஞாபகஞ்செய்து விதிப்படிச்செய்யத்தகும் பொரிஹோமத்தையும் பின்னர் அத் தம்பதிகளுக்குச் செய்யத்தகும் ஏனையசடங்களையும் விதிமுறையாகச் செய்துமுடிக்கும் அச்சமயத்தில் குலாசாரத்துக்கு சாஸ்திரத்துக்கும் விரோதமில்லாமல் சிறப்பாக்குதிரைகள் பூண்டிருக்கிற இருநூறுரதங்களையும், அநேகபாணங்கள் நிறைந்துள்ளதாகிய ஒருதூணிரத்தையும், மலை போன்ற வடிவத்தோடு மதச்செருக்குடையனவாகிய சுவர்ணாப்ரணத் தாலலங்கவிக்கப்பெற்ற நூறுஆண்யானைகளையும், மனோகரமாகிய நூறுபெண்யானைகளையும், சிந்துதேசத்திற்பிறந்த சிரேஷ்டமாகிய இரண்டாயிரம் குதிரைகளையும், எவ்வளவு பாரத்தையுஞ் சுமக்கவல்ல முந்நூறு ஒட்டைகளையும், பொன்னாபரணம் பூண்ட நூறு தாசிகளையும், அநேகவிதமான ஆயுதங்களினால் நிறைந்திருக் கின்றவர்களாயும் சேவகச் சின்னத்தில் குறைவில்லாதவர்களாயுமுள்ள நூறுதாசர்களையும், விலையுயர்ந்த மாணிக்கங்களையும், அன்னப்பக்ஷிகளுடைய ரோமங்களா லமைக்கப்பட்ட ஒருவிதமான அலங்காரத்தோடுங்கூடிய ஆசனங்களையும், இந்த வகைகளன்றி விசாலமாகியும் விசேஷமான அலங்காரத்தோடுங் கூடியதாகியும் வசித்தற்கு மனோகரமாயுமுள்ள அரண்மனைகளையும், தானியங்களோடு கூடிய இருநூறுபாண்டிகளையும், தக்ஷபுத்திரிக்குச் சமானமான தன் மகளுக்கு அளவிறந்த சந்தோஷத்துடன் கொடுத்தனன்.

(உக-சுஅ) பின்னர் அரசன் இச்சீர்களையெல்லாம் நடத்திமனோரமையை நமஸ்கரித்து எதிரில் அஞ்சலியஸ்தனாய்நின்று

ஓ ராஜபுத்திரியே! உன்தாசனாகிய என்னால் செய்யப்பட்ட இந்தக் கலியாண மஹோற்சவத்தில் ஏதேனுக்குறைபாடுகள் உன்னுடைய மனதில் தோன்றியிருக்குமாயின் அதனை யொளிக்காமற் சொல்லவேண்டுமென்று பிரார்த்திக்க, மனோரமை என்னுடைய ஐஸ்வர்யமாயிருக்கின்ற ஓ அரசனே! மகததேசத்தரசன் மகளாகியும் இப்போதுனக்குச் சம்பந்தியாயுமிருக்கின்ற நான் உனக்கும் உன்னைச் சேர்ந்த பந்துசனங்களுக்கும் அளவிடப்படாத இனியவுபசார வார்த்தைகளைச் சொல்லித் தோத்திரஞ்செய்து யானென்ன கைம்மாறு செய்யப்போகிறேனென்று சொல்லவேண்டியவள். அப்படி நான் சொல்வதற்கு முன் நீ என்னைப்பார்த்து ஏதேனுங் குறையுள தோவென்று கேட்டதற்கு நா னென்ன சொல்லவறிவேன்.

நகரவாசத்தைவிட்டு வனவாசியாயும், தனபதியா யிருப்ப தொழிந்து தனஹீனனாயும், தந்தையோ டிருப்பதொழிந்து தந்தை யில்லாதவனாயும், பரிஜனங்கள் சூழ விருப்பதின்றித் தனியனாயும், அதுசுவையோ டுண்பதொழிந்து கந்தமூலபலங்களை யுண்பவனாயும், யாவருக்கும் பிரயோஜனமா யிருக்குந் தன்மையொழிந்து நிஷ் பிரயோஜனத்தன்மை யுடையவனாயு மிருந்த என்குமாரனுக்குக் குணவதியாயும், ரூபவதியாயுமுள்ள கன்னிகையை எவன்றான் கொடுப்பான். உலகில் அரசர்கள் தங்கள் மகளைக் குலத்திலும் பலத்திலும் திரவியத்திலும் தங்களுக்குச் சமானமாயிருக் கின்றவர்களைப் பார்த்துக் கொடுப்பதேயன்றிப் பாராது கொடுப்பதில்லை. அங்ஙனமிருக்க நீ யாவராலுங் கொண்டாடத்தக்க உன்னுடைய கன்னிகா ரத்தினத்தைச் சிறந்த பலமுடைய மஹா அரசர்களெல்லாம் தங்கள்வசமாக்கிக்கொள்ளப் பற்பலமுபற்சிகள் செய்தும் வீராவேசத்தோடுயுத்தத்திற்குத்தலைப்பட்டும் நீ அவர்களையெல்லாம் பகைத்து அஞ்சாது என்மகனுக்கே கொடுத்து ரத கஜ துரக பதாதீகளாகிய அரசச்செல்வமுந்தந்து மேருபர்வதம்போல் யாவரினும் மேலோங்கியிருக்கச் செய்தனை. இவ்விஷயத்திலுனக்குண்டாகிய தைரியத்தை என்னவென்று சிலாகிப்பேன். இது மிக ஆச்சரியம்! இது மிக அதியசம்!! ஓ அரசனே! என் மகனையும் என்னையும் வாழ்வித்தவுனக்கு மங்களம் உண்டாகுக. உன்னுடைய வம்சமும் வளர்ந்தோங்குக. என்று பலவாசிகள் மனமகிழ்ந்து கூறியபொழுது கைகூப்பிநின்ற சுபாகு ஓ அம்மணி! நானொரு விண்ணப்பஞ்செய்கின்றேன்; என்னையெனில் என்னுடைய ராஜ்யத்தை உனக்கொப்புவித்து நான் சேனாபதியாயிருந்து அரசியல் நடத்துகிறேன்; இல்லையாயின் உன் மகனுக்கே கொடுத்துவிடுறேன். நீ உன்மகனோடு வாழ்ந்திருப்பாயாக. நான் இந்தக்காசியைவிட்டு

ஆரணியம் போகிறேன். இந்த நகரவாசத்தைக் காட்டிலும் ஆரணியவாசமே எனக்கு மேலானது. ஆகையால் என் விண்ணப்பத்தை யங்கீகரித்தல் வேண்டுமென்று சொல்லிவிட்டு இனி நான் அரசர்களெல்லாம் கோபித்திருக்கின்ற படியால் அவர்களிடத்திற் சென்று நால்வகையுபாயத்தில் முன்னர் சாமத்தைச்செய்கின்றேன். அதனைக் கேளாராயின் தாமபேதங்களைச் செய்கிறேன். அதற்கும் வழிவிடாராயின் தண்டமாகிய யுத்தத்தைச்செய்கின்றேன். அதில்வரும் ஜயாபஜயங்கள தெய்வாதீனம். அது சொல்லமுடியாது. அப்படியிருந்தாலும் தருமமார்க்கத்தில் நிற்போர்க்கு ஜயமும், அதர்மமார்க்கத்தினிற் போரக்கு அபசயமு மாகையால் அதர்மிஷ்டர்களாகிய அவர்களுக்கு ஜயமுண்டாவது அரிதென்று மனோதைர்யத்தோடும் சந்தோஷத்தோடும் சொல்லுகின்ற சுபாகுவினுடைய வார்த்தையை அந்த அரசனால் பெருமையும் புகழுமடைந்து மகிழ்ந்திருக்கும் மனோரமைகேட்டு ஓ அரசனே! நீ எதனை எதனை எண்ணிச் செய்கின்றனையோ அதனாலெல்லாம் உனக்குச் செயமும் மங்களமு முண்டாகக்கடவது. நீ பயப்பட வேண்டாம் என்மகனுக்குக் கொடுப்பதாகச்சொன்ன உன்னுடைய ராஜ்யத்தை நீ உன்புத்திரனோடு மிருந்து அரசியலைநடத்திச் சுகமாக வாழ்ந்திருப்பாயாக.

எங்கள் வனவாசத்தையொழித்த நீ வனத்துக்குப் போதல் நன்றன்று; என்குமாரன் அயோத்தி நகரத்திற்குப்போய் ராஜ்ய சம்பத்தை யடையப்போகிறபடியால் யாங்கள் போய்வர நீ விடை தருவாய். மஹேஸ்வரியையிடைவிடாமல் தியானித்துக் கொண்டிருக்கிற எங்களுக்கு ஒருசிந்தையும் வரமாட்டாது. நீயும் மகேஸ்வரியைத் தியானஞ்செய்துசிந்தையற்றிருப்பாய். என்றிவ்வாறு அமிர் தமயமாகிய வார்த்தைகளை ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு இராப்பொழுது கழித்தனர். விடிந்தவுடன் சுயம்வரத்துக்கு வந்திருந்த அரசர்கள் இரவில் நடத்த விவாகத்தைக் கேள்விப்பட்டு எப்படி நடந்திருக்குமென்று சந்தேகித்து ரோஷத்தோடும் பட்டணத்துக்கு வெளியே வந்து முற்றுகைசெய்து எங்களுக்கு அவமானஞ் செய்த அந்த சுபாகுவை இப்பொழுதே துவம்சஞ்செய்து சுதர்சனனைச் சின்னாபின்னப்படுத்தி லக்ஷ்மிதேவிக்குச் சமானமாகிய சசிகலையைக் ❋ கிரகிப்போம். இது செய்யாமல் நம்முடைய நகரங்களுக்குப் போவோமாயின் நாணமற்றவர்களாவோமல்லவா என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருக்கும்பொழுது வாசிக்கிற வாத்யகோஷங்களும் சங்கநாதங்களும் நானாவிதமாகிய சப்தகானங்களும் வேதகோஷங்களுங் கடலொலி போலெழுந்தன. அவ்வோசையைக்

❋ கிரகிப்போம் - ஏற்றுக் கொள்வம்

கேட்ட அரசர்கள் மருண்டு ஆஹா! இதுவென்ன வாச்சரியம். விவாகம் நடப்பதாகத் தெரிகின்றது மிருதங்கங்களுடைய சப்தங்கள் நம்மைத் தோல்வியடைந்தவரென்று சொல்லி அவமானப்படுத்துவதாகத் தெரிகின்றது. ஓ அரசர்களே! அந்த சுபாகு நம்மைப் பிரியவசனங்களால் வரவொட்டாமற் செய்தனுப்பிவிட்டுச் சுதர்சனனுக்கு விதிமுறையாகப் ✠பாணிக்கிரகணத்தைச் செய்து விட்டான் இதிற் சந்தேகமில்லை. இப்போது நாம் என்ன செய்யத்தக்கது அதனை யோசித்து அவரவர்கள் புத்தி சாதுர்யத்தைத் தெரிவியுங்களென்று சொல்லிக்கொண்டிருக்குஞ் சமயத்தில் சுபாகு சமீபத்தில் வந்தனன். அரசர்களெல்லாமொன்றுங் கேளாது கோபத்தால் மௌனமாயிருக்க, சுபாகு அவர்கள் குறிப்பறிந்து நமஸ்கரித்து அஞ்சலிசெய்து இன்று என்கிருகத்தில்யாவரும் போஜனஞ்செய்து போகவேண்டுமென்றுப் பிரார்த்தித்து ஐயா! உங்களுக்கெல்லா மோர் விண்ணப்பம், என்னாலும் வஞ்சனையில்லை சுதர்சனனாலுங்கெடுதியில்லை என்னுடைய கன்னிகையே அவனைவரித்துக்கொண்டாள். பிரமன் விதித்தவிதி அப்படியிருக்குமாயின் என்சேய்வேன். இதுவிதியின் பயனென்றுணர்ந்து பொறுத்துக்கொள்ளவேண்டும். பெரியோர்களா யிருக்கின்ற நீங்களெல்லாந் தயையுடையவர்களா யிருத்தல்வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அவனது உபசாரவார்த்தைகளைக்கேட்ட அரசர்கள் ஓசுபாகுவே! நீர் எங்களை வரவழைத்து எங்களிஷ்டப்படி எல்லாக்காரியங்களையும் நடத்திவிட்டீராகையால் இனிநாங்கனனை வரும் போஜனஞ்செய்து போகாத குறையொன்று தா னிருக்கின்றது அக்குறையுமில்லாமற் செய்யத்தான் இப்போது வந்தீர்போலும் மிகவுஞ் சந்தோஷமாயிற்று. எங்களுக்கு எல்லாம் நடந்தது போல் போஜனமும் நடந்துவிட்டது. இனி அவரவரிடம்போய்ச் சேரவேண்டியது தான் வேறென்னவேலை யிருக்கிறது. இதுவரையில் எங்களுக்காக நீர் மிகவும் சிரமமெடுத்துக்கொண்டது போதும் போதும். இனி உம்முடைய ஆஸ்தானம்போய்ச்சேர்ந்து மற்றும் நடத்தவேண்டி யகாரியங்களை யெல்லாம் குறைவில்லாமல் நடத்தும் என்று அதிககோபத்தோடுங் கூறினார்கள். சுபாகு இவையாவுங்கேட்டு அச்சமுற்று இவர்களெல்லாம் மிகவும் கோபமுள்ளவர்களாயும், மனவருத்த முடையவர்களாயு மிருப்பதால் இனி என்ன செய்யப்போகின்றார்களோ நாமறியோமென்று சந்தேகங்கொண்டவனாய் அரண்மனையைப் போய்ச் சேர்ந்தான். பிறகு அரசர்களெல்லாம் சுதர்சனன் எவ்வழியாவது வருவானல்லவா; வருவானாயின் அவனை வழிமடக்கி யடித்து கன்னிகையைக் கொண்டுபோவோமென்று சமயத்தை எதிர்பார்த்திருந்தனர். ஒருவராவது அந்த சுதர்சனனோடு

✠ பாணிகிரகணம் - விவாகம்

நமக்கென்னபோரென்று சொன்னாரல்லர். இனி நடக்கும் மங்களத்தைப் பார்த்துப்போங்களென்று ஒருவரையும் வெளியேபோக விடாமல் தடுத்துக்கொண்டு சுதர்சனனை எதிர் பார்த்திருந்தனர். இவர்களிவ்வாறிருக்க சுபாகு மருகனுக்கு நடத்தவேண்டிய விருந்து முதலியவற்றைச் சிறப்பாகச் செய்யத்தொடங்கினன்.

இருபத்திரண்டாம் அத்யாயம்.

சசிகலா விவாகம்

முற்றிற்று

— —

ஆஉ அத்தியாயம் உக-க்கு சுலோகம் (கஉஅகூஏ.)

உ

த்ரிபுரசந்தர்யைநம:

இருபத்துமூன்றாம் அத்யாயம்

* சுதர்சனயுதாஜித்தோர்யுத்தம்

ஓ மஹருஷிகாள்! சுபாகு தன் மகளெண்ணத்தை நிறைவேற்றத்துணிந்து ராஜசபைக்குப்போய் வஞ்சனையாகிய எண்ணத்துடன் அரசர்களைப்பார்த்து ஓ அரசர்களே இன்று விவாகமில்லை. ஆகையால் நாளைக்குயாவரும் வரலாமென்று சொல்லியதும். அதைக்கேட்ட அரசர்கள் நகரத்தை முற்றுகை செய்திருக்கச் சுபாகு தன் மகளுக்கு அன்றிரவே விவாகத்தைச் செய்துமுடித்துச் சீதனங்கொடுத்தும், அதுகண்டமனோரமை அவனை வாழ்த்தி எங்களுக்கு யாதொரு குறையும் வரமாட்டாதென்றதுங் கூறினோம். இனிச்சுதர்சனன்விடைபெற்றுப்பிரயாணப்பட்டதும், அரசர்களனைவரும், யுதாஜித்தும், சுபாகுவோடெதிர்த்துப் போர் செய்யும்போது தேவி பிரத்திபக்ஷமாய் அந்த யுதாஜித்தையும் அவன் மருகனையுங்கொன்று சுபாகுவுக்கும் சுதர்சனனுக்கும் வேண்டிய வரமளிக்கவினவியதுங் கூறுகிறோங் கேட்பீர்களாகவென்று சூதபகவான் சொல்லத்தொடங்கினர்.

(க-ககூ) சுபாகு அரசர்களை விட்டுத் தன்னரண்மனைக்குவந்து சுதர்சனனுக்கு விருந்திடவெண்ணி அதுபோல அதிகசிறப்புடன் ஆறுதினம் அதிக பிரேமையுடன் திருப்தியுண்டாகும்படி நடத்தி

* சுதர்சனனுக்கும் யுதாஜித்துக்கும் போர்.

அப்பொழுது செய்யவேண்டிய பாரிபர்ஹம் (மரியாதைகளையுஞ்) செய்து மந்திரிகளையழைத்து நாம் மருகனுக்குச் செய்யவேண்டியவை யெல்லாம் இதுவரையில் செய்தாய்விட்டது. இனி தம்பதிகளையனுப் பலாமென்றால் அரசர்கள் நம்முடைய கோட்டை வழியைச் சேனைகளால் முற்றுகை செய்திருப்பதாக நம்முடைய சேவகர்களால் கேள்விப்படுகிறோம். இதற்கென்ன செய்யலாமென்று மனவருத்தமடையும்போது தேவி அநுஷ்டான பரனாகிய சுதர்சனன் மாமனாரைப்பார்த்து நீரேன் துயரப்படுகின்றீர். எங்களைச் சீக்கிரத்தி லனுப்பியும், நாங்க ளந்தவரசர்களுக் கஞ்சாமற் போய்ப்பரிசுத்தமாகிய பரத்வாசராச்சிரமத்திதையடைந்து . அவ்விடத்தில் சந்துஷ்டர்களாக வசித்திருப்போம். இதற்கோரிடையூறும் வரமாட்டாது. நீர் சிறிதும் விசாரப்படவேண்டாம். விசாரப்படத்தக்க தொன்றுமில்லை, சகன்மாதாவாகிய மஹேஸ்வரி உமக்கும் ஒருவருத்தம் வரவொட்டாமல் சகாயஞ் செய்யப் போகிறாளென்றனன். சுபாகு மருமகப்பிள்ளையின் அபிப்பிராயத்தை நன்றாயறிந்தவனாய் வேண்டிய திரவியங்களையுஞ் சேனைகளையுங் கூட்டி யனுப்பச் சுதர்சனனும் விடைபெற்று வரிசையாகவந்த ரத கஜதுரக பதாதிக ளெல்லாஞ் சூழ்ந்துவரச் சசிகலைசமேதனாய் ரதத்திலாரோகணித்து மிகவும் விரைவாய்ப் புறப்பட்டு அரசர்கள் சூழவிருக்கு மார்க்கத்தில் பயமற்றுப் போகும்போது ராஜாக்களுடைய சைனியங்கள் அணியணியாய்த் திரண்டு வருவதைப் பார்த்துத் தன்னுடைய ஹ்ருதயலாசியாயிருக்கின்ற தேவியைச் சித்தத்தாலெண்ணி நானுன் னடைக்கலமென்று ஆனந்தமாகச் சரணமடைந்து இந்த அரசர்களை எவ்வாறு செயிக்கப்போகிறோ மென்கிற பயமுமில்லாமல் பிராணஹானி வருமே என்கிற விசனமுமில்லாமல் சிரேஷ்டமாகிய காமராஜமென்னும் ஓ ரக்ஷரமாகிய மந்திரத்தைச் செபித்திருந்தான். வழிவிடவந்த சுபாகுமாத்திரம் ❖ சிந்தாகுலமடைந்திருந்தான். அரசர்களெல்லாம் சுதர்சனன் சசிகலையோடு வருவதைப்பார்த்து சேனைகளைக் கூட்டிக்கொண்டு கோலாகலஞ்செய்து கன்னிகையைக் கொள்ளை கொள்ளும் இச்சையுடையவர்களாகக் கிளம்பினார்கள். சுபாகு அவர்களைப் பார்த்து யுத்தஞ்செய்யவேண்டுமென் றெண்ணும்பொழுது ஜயத்தையடைய வேண்டியவனாகிய சுதர்சனன் தடுத்தனன். தடுத்தும் அவன் றடைபடாது சைனியங்களோடெதிர்த்துவர அவர்களும் இவனோடெதிர்த்து ஒருவரையொருவர் வெற்றிகொள்ளவேண்டு மென்னும் அவாவுடன் சங்கம் பேரிகை துந்துபி முதலிய வாத்தியங்களை முழங்கும்படிச் செய்தனர்.

❖ சிந்தாகுல - மனக்கவலை

சத்துருஜித்தென்கிற சுதர்சனனுடைய சகோதரன் தன்தமையனைச் செயிக்கவேண்டுமென்கிற எண்ணமுடையவனாய்த் தனது பாட்டனாகிய யுதாஜித்தைத் தன்னோடு துணையாகவரும்படி யழைத்துக்கொண்டு வந்தனன். வரும்பொழுது சிலவரசர்கள் அவர்களைப் பார்த்து இவர்கள் மஹாபலசாலிகளா கையால் இவர்களே வெற்றியடைவார்க ளென்றெண்ணி அவர்களுடன் கலந்து சைனியங்களையுங் கூட்டிக்கொண்டு யாவருஞ் சுதர்சனனை எதிர்க்கச் செல்லும்பொழுது இடையே கூட்டமாயிருந்த சேனைகளைக் கண்டு மஹாகோபங்கொண்டு அவைகளைத் துவம்சஞ்செய்யும்பொருட்டு பாணசமூகங்களை ஒன்று நூறு ஆயிரமாக ஒன்றின்பின் னொன்றாகவிட்டு எங்கும் பாணவருஷங்களாக்கினர். அதுகண்ட சுபாகு நமது மருகன் நமக்குத் துணையாக வருவானானால் இவர்களை வெல்லலாமென் றெண்ணித் தன்னுடைய பரிவாரங்களாயுள்ள யாவரையு மழைத்துக்கொண்டு சுதர்சனனைச் சமீபித்து ஓ தேவித்தியானத்திலிருக்கின்ற மஹாபுருஷனே! இப்பொழுது அதிபயங்கிரமாயும் மகாவீரர்களுக்கும் உடலம் நடுங்கும்படியாயுமுள்ள யுத்தம் நடந்து வருகின்றது. ஆகையால் என்னுடன் நீ துணையா கவரவேண்டுமென்று சொல்லும்பொழுது அந்தச்சுதர்சனனுக்குத் துணையாயுள்ள மஹாதேவி திவ்ய வஸ்திரந் தரித்தவ ளாயும், மந்தாரபுஷ்பமாலை சூடிக்கொண்டிருக்கிறவளாயும், திவ்யாபரண அலங்கிருதையாயும், நானாவிதமான ஆயுதங்களைத் தரித்தவளாயும், சிங்கவாகனாரூடையாயும் பிரசன்னையாயினள்.

(உ0-உருஏ.) அத்தேவியை அரசர்களெல்லாங்கண்டு இது வென்ன ஆச்சரியம்! சிம்ஹத்தின் மேலிருக்கிற இவள் யார்? எங்கிருந்து வந்தாள்? நமக்கொன்றுந் தெரியவில்லையே என்று தியங்கி ஏங்கியிருக்கும் பொழுது சுதர்சனன் அந்தத்தேவியைத் தரிசித்து சுபாகுவைப்பார்த்து ஓ மாமா! நம்முன் பிரசன்னையாய் அற்புதமாகிய காட்சியைத் தருகின்ற தேவியைத் தரிசனம் பண்ணும். எனக்கிப்போது வேண்டியவற்றை அனுக்கிரகஞ்செய்யக் கருணையுடன் வந்திருக்கிறாள். மிகுந்த பயத்திலிருந்து நான் அந்தப் பயத்தினின்றும் இப்பொழுது விடுபட்டவனாயினேனென்றான் சுபாகுவும் நானும் அப்படியே ஆயினேனென்றான். இவ்வண்ணம் இருவரும் தேவியைப் பயமற்றவர்களாய்ப்பார்த்து நமஸ்காரஞ்செய்து நாங்கள் ☉ கிருதார்த்தராயினோம் என்று கூத்தாடி நிற்கும்பொழுது தேவியினுடைய வூர்த்யாகிய சிம்ஹமானது ஓர் ஹுங்காரஞ் செய்தது அந்தத் தொனியால் பெருஞ்சேனையாயிருந்தயானைக் கூட்டங்களெல்லா முயிரிழந்தன. பின்னர் அச்சிங்கம் ஓர்

☉ கிருதார்தர் - மகிழ்ச்சி பெற்றோர்

பெருமூச்செறிந்து, அது மகாகோரமாகிய பெருங்காற்றாய் மற்றப் படைகளையெல்லாம் அதாகதப் படுத்தித் திக்குகளில் ஒதுக்கியது.

(உசு-ருரு) இவ்வண்ணம் சிம்ஹமான துபடைகளை நாசஞ்செய் கிறபொழுது சுதர்சனன் தனது சேனாபதியைப்பார்தது ஓ சேனாபதி! என்பேரில் கோபமுள்ளவர்களாகியும் தூர்ப்புத்தியுள்ளவர்களாகியும் வந்த அரசர்களெல்லாம் இப்போது எவ்விடத்திலிருந்து என்ன செய்கிறார்கள்? அந்த விவரத்தைத் தெரிந்துவருவா யென்றேவ அவனஞ்சி நின்றான். அவனைப் பார்த்து நம்மைரக்ஷிக்கு நிமித்தம் தேவியானவள் வந்திருக்கிறபோது இந்த அரசர்கள் நெருங்கியிருக்கின்ற இந்த மார்க்கத்திற் போக நீ யேனஞ்சுகிறாய். நான் இந்தப் போர்முகத்தில் வந்து அஞ்சி நினைத்தவுடன் எழுந்தருளி வந்து என் பயமகற்றியதை நீ யறியவில்லையா! நீ அஞ்சாமற்போ வென்றான் சேனாதிபதியும் பயமற்றுப் போய்வரத் தலைப்பட்டு அரசர்கணெருங்கி யிருக்கும் மார்க்கத்திற் போயினான். அப்பொழுது யுதாஜித்து மிகவுங் கோபங்கொண்டவனாய் அரசர்களைப்பார்த்து ஓ அரசர்களே! சிம்மத்தின் மேலுட்கார்ந்திருக்கிற ஒரு பெண் பிள்ளையைப் பார்த்து நடுக்கமுற்று ஏன் பயப்படுகிறீர்கள்? இவள் நம்மை என்ன செய்வாள் நாம் இவளைப்பார்த்து! மருண்டிருப்போமாயின் இப்பொழுது அதிக பலமுள்ளவனாய் நம்மை அவமானப்படுத்தி ராஜகன்னிகையைக் கிரகித்து அவளோடு பயமற்றவனாய் வேகத்துடன் போகத் தலைப்பட்ட அந்தப் பலஹீனனாகிய சுதர்சனனென்னும் பாலன் நம்மை மதிப்பானா? அவன் நம்மால் உதாசீனமாகப் போக்கத்தக்கவனா? அவன் எவ்வளவு பெரிய வேலை செய்திருக்கிறான். ஆகையால் அவனை நாம் அடித்துத்திவ்யாபரணவதியாய் விளங்கும் கன்னிகையை கிரகிப்போம். அவன் அவளைக்கொண்டு போகத் தக்கவனா? சிம்ஹத்தினால் கொடுக்கப்பட்ட ஒரு ஆகாரத்தை இடையே ஒரு நரியான்துவந்து தடுத்துத் தான்கொண்டு போவதற்கு யோக்யமுடையதாகுமா? இவ்வாறெல்லாஞ்சொல்லி அதிக கோபமுள்ளவனாய்த் தன்சேனைகளோடு சத்ருஜித்தை யுமழைத்துக்கொண்டு யுத்தஞ்செய்யவேண்மென்கிற எண்ணத்துடன் அகங்காரத்தோடெழுந்து பூண்கள்கட்டி யிருக்கும் தனுசைக் கையிலெடுத்துக் காதளவுமிழுந்துவளைத்துக் கூர்மையுள்ள சிலீமுகம் விசிகம் என்கிற பாணங்களைச் சுதர்சனனைக் கொல்லும்படி மாறி மாறி விட்டான். அவைகளைச் சுதர்சனன்கண்டு இவைகளை தன்னைக் கொல்லவேண்டுமென்கிற துன்மதியுடைய யுதாஜித்தினால் விடப்பட்ட பாணங்களென் றுணர்ந்து அவைகட்குமாறான்வைகளை விட்டு அப்பொழுதுப்பொழுதுவெட்டி

சிலிமுகம் - அம்பு விசிகம் - புனற்றிரை

வந்தனன். இவ்வண்மை இருவரும் போர்செய்யும் பொழுது அநேக ஆயுதங்களைத் தரித்தவளாய் வந்திருக்கிற உலகமாதாவாகிய மகாதுர்க்கையானவள் மிகவுங்கோபாவேசங்கொண்டு அநேகவுருவங் கொண்டு யுத்தஞ்செய்கிறவள் போல்காட்டி யுதாஜித்தையும் சத்துருஜித்தையும் கொன்றனள். மாண்ட இருவரும் ரதங்களிலிருந்து யாவருமறியப் பூமியில் விழுந்தனர். உடனே சுதர்சனனுடைய சேனைகள் வெற்றிச் சங்கங்களை முழக்கி ஜய ஜய வென்கிற சத்தத்தை யுண்டாக்கினர். இவ்வொலியைக்கேட்ட அரசர்களெல்லாம் அவ்விருபாணங்களையும் பார்த்துமிகுந்த ஆச்சரியமடைந்தனர்; சுபாகுவும் துர்க்கதியை நாசம்பண்ணுகிறவளாகிய துர்க்கா தேவியை மிகுந்த சந்தோஷத்துடன் அடியில் வருமாறு தோத்திரஞ் செய்தனன்.

"நமோதேவ்யை ஜகத்தாத்ரை சிவாயை சததம்நம:
துர்க்காயை பகவத்யை தேகாமதாயைநமோ நம"
"நமஸ்ஸிவாயை சாந்த்யை தேவித்யாயை மோக்ஷதேநம:
விஸ்வவியாயதை ஜகந்மாத ஜகத்தாத்ரை நமஸ்ஸிவே. என்றும்;

குணசகிதனாகிய நான் குணரகிதையாயிருக்கின்ற உன்னுடைய நிலையை என்னுடைய புத்தியினால் எண்ணிப்பார்த்தும் எட்டவில்லை, ஓ உலகமாதாவே! சகலவேதங்களிலும் பிரகாசிக்கின்றவளா யிருக்கின்ற தத்பதலக்ஷ்யார்த்தமாகிய பரப்பிரமம் நீ யன்றி வேறில்லையென் றறிதலாகிய நிச்சயமென்னும் பக்தி யுடையவர்களுக்கு வருந்துன்பத்தைப் போக்கடிப்பதில் மிகுந்த அன்புள்ளவளாகிய பராசத்தியே! என்னை நானென்சொல்லி நமஸ்கரிக்கப்போகின்றேன். வாக்தேவதையாகிய சரசுவதி சொரூபிணியாயிருக்கின்றவளு நீயே, எல்லாருடைய புத்தீந்திரியமாயிருக்கின்றவளு நீயே, மனோரூபிணியா யிருக்கின்றவளு நீயே, சகல ஆத்மாக்களும் அந்தத்திலடையும் இடமாயிருப்பவளும் நீயே, எல்லாருடைய மனோவிகற்பங்களைப் போக்கடிக்கின்றவளு நீயே, இவ்வண்ணமிருக்கின்ற வுன்னை என்னவென்று தோத்திரஞ் செய்யப் போகின்றேன். இந்திரிய கோசரமாகாத என்னுடைய ஆத்ம சொரூபத்தை எப்படி நான் தோத்திரஞ் செய்வேன் பிரமவிஷ்ணு ருத்திரர்களும் ஏனையதேவர்களும் எப்பொழுதும் வேத முதலியகலைகளால் தோத்திரஞ் செய்கின்றவர்களாயினும் அவர்களே உன்குணங்களுடைய சொரூபம் இப்படிப்பட்ட தென்றுதெரிந்து கொள்ளவில்லையென்றால்பேதபுத்தியுள்ளவனாகியும் குணபேதங்களை யுடையவனாகியும் பெரியோர்களால் ஒருண்மையு மறியப் படாதவனாகியும் இருக்கின்ற நான் உன்னுடையமகிமையைத்

தோத்திரம் பண்ணுவதற்கு எப்படியோக்கியனாவேன். இவ்வளவு சிறியனாகிய எனக்குச் சத்துருக்களாலடையத்தக்ககதி எப்படியுண்டாகும் என்னுடைய சித்தமானது உன்னுடைய பிரபாவத்தை விசேடமாகச் சொல்லவேண்டுமென்கிற ஆவலுடையதாயிருந்தும் அதற்கு அது செய்யும்படியான சக்தியமையவில்லை. இப்பொழுது இந்த மருமகன் காரணமாக உன்னுடைய அற்புதமாகிய இந்த தரிசனங் கிடைக்கப்பெற்றேனேயல்லாமல் என்னுடைய புண்ணியத்தாற் கிடைக்கப்பெற்றவனல்லன். பிரமனாதிமும்மைத்தேவரும் இந்திராதிதேவர்களும், முனிவர்களுமாகிய அவர்கள் தத்வார்த்தங்களை யறிந்தவர்களாயிருந்தும் அவர்களுக்கு நீதரிசனமானாயில்லை ஓ தாயே! உன்னுடைய தரிசனமானது சமதமாதி குணங்களால்லலாமல் அடைவதற்குக்கூடாது. அந்தத் தரிசனம் நான் கிடைக்கப்பெற்றேன். அறிவிற்சிறியனாகிய நான் எவ்வளவினன். எனக்குக்கிடைத்த ஜனனமரண வியாதிக்கு மருந்தாயும் ஒப்பிடக்கூடாததாயுமுள்ள உன் காட்சியானது எவ்வளவு அருமையை யுடையது. அவரவெண்ணத்தோடு கூடினவளாயும் பக்தர்களுக்கனுக்கிரகஞ் செய்வதில் ஆசையுடையவளாயும் தேவர்களால் பூஜிக்கப் பட்டவளாயுமுள்ள ஓ தேவி! நீ எல்லாமறிந்தவள், உன் பிரபாவமாகிய இதை நான் என்னவென்று சொல்வேன். ஓ தேவி! பலிஷ்டர்களாகிய இந்த இரண்டரசர்களும் உன்னால் கொல்லப்பட்டு இந்தச் சுதர்சனன் இந்த ஆபத்திலிருந்தும் ரக்ஷிக்கலாயினன். அடியாரிடத்தில் கருணையுள்ளவளே! உன்னுடைய மகிமையானது மிகவும் வேதசம்மதமாயுள்ளது.

ஹேதேவி! இப்போது நடந்த அற்புதத்தை யோசிக்கும் விஷயத்தில் இது ஒரு ஆச்சரியமாகவுந்தோன்றவில்லை. நீ எப்பொழுதும் தாவர சங்கமங்களையெல்லாம் ரக்ஷிப்பதை எண்ணுமளவில் ஒன்றுக்கொன்று ஆச்சரியமாகவே யிருக்கிறது. அவற்றில் எது ஆச்சரியமானதன்று, ஒராச்சரியமொன்றிருக்கின்றது என்னையெனின், எந்தமாநுடனுக்காவது உன்னிடத்தில் பக்திவருமாயின் அதனை நீ பெரிய வாச்சரியமாக வெண்ணி வெளிப்பட்டு வந்து அவனை யாவரும் புகழ்ந்து கொண்டாடும் படியாக்ச் செய்கின்றனையே இதுதானாச்சரியம். ஹே பவானி! உன்னை எப்போதும் துதிப்பதில் இச்சையுள்ள இந்த த்ருவசிந்து மகாராஜனுடைய குமாரனாகிய சுதர்சனனை வாழ்விக்க அவனுக்கு ஜன்ம சத்ருவாயிருந்த யுதாஜித்தைக் கொன்று இப்பொழுது யாவரும்புகழும்படியாகச் செய்தனையே இதனால் இவன் புகழ் வெளிப்பட்டதா? உன்புகழ் வெளிப்பட்டதா? இப்படி நீ தயையினால்

வராமற்போவையேயானால் இச்சுதர்சனன் என்மகளைக் கூடவைத்துக் கொண்டே வந்தெதிர்த்த அரசர்களோடு யுத்தத்தைச் செய்து அழிவில்லாத கீர்த்தியையும் க்ஷேமத்தையும் எப்படியடைவான்? உன்னைத் தியானிக்கும் அன்பர்களுடைய சனனமரணங்களைப் போக்கிப் பேரின்பத்தைக்கொடுக்குஞ் சாமர்த்தியமுள்ள வுனக்கு இப்பகைவர்களை யொழித்துச் சசிகலையோடு இவனைவாழ வைத்தது ஓராச்சரியமா? ஹேஜனனி! உன்னை உன்னடியார்கள் அளவைப்பிரமாணங்களால் அளவிட்டறியக்கூடாதவளென்றும், கர்மபந்தமில்லாதவளென்றும், சகுணையென்றும், நிர்க்குணையென்றும் ஸ்தோத்திரஞ் செய்கிறார்கள். அப்படிப்பட்ட புவனேஸ்வரியாகிய உன் தரிசனத்தினால் நான் சுகிர்தமுடையனாயும் கிருதார்த்தனாயும் தன்யமாகிய சரீரத்தைப் பெற்றவனாயுமாயினேன். ஹே அம்பா! இவ்வளவு பிரயோ ஜனத்தைப் பெற்றநான் உனது பீஜாக்ஷர மந்திரத்தையேனும் தோத்திரத்தையேனும் அறிந்தவனோவென்றால் ஒன்றுமறியாதவன். ஒன்றுமறியாத எனக்கு உன் தரிசனங் கிடைத்தனால் உனது பிரபாவமாகிய மகிமை பிரசித்தியாயிற்று என்று தோத்திரஞ்செய்கின்ற அரசனைப் புன்னகையோடுகூடிய சிவை பார்த்து ஓ நல்லொழுக்கமுடையவனே! உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்பாயாக வென்றனள்.

இருபத்துமூன்றாம் அத்தியாயம்

சுதர்சன யுதாஜிதோர் யுத்தம் முற்றிற்று.

— —

ஆஉ அத்தியாயம் உங-க்குச் சுலோகம் (கஙசுசுநி.)

———

உ

த்ரிபுரசுந்தர்யைநம:

இருபத்துநான்காம் அத்தியாயம்

ஸ்ரீ தேவி மஹிமாதிவர்ணனம்.

ஓ மகருஷிகாள்! சுதர்சனன் தன்மாமனாராகிய சுபாகுவினால் பெறவேண்டிய மறியாதைகளைப்பெற்ற பின்னர் தன் பிரயாணத்தைக்குறித்து வருந்தும் சுபாகு வருத்தத்தைமாற்றி விடை பெற்று அரசர்கணெருங்கியிருக்கும் மார்க்கத்திற்கென்று அங்கு படைகளைக்கண்டு தேவி மந்திரத்தைச் செபித்திருந்ததும், பிரிவாற்றாத

சுபாகு பின்சென்று சிந்தாகூலமடைந் திருக்கும்பொழுது அரசர்களெதிர்க்க இவனும் அவர்களோடெதிர்த்து பெரும்போர் செய்து சுபாகு சிறிதிளைத்து தன்மருமகனிடஞ்சென்று அவனை அழைக்க அப்பொழுது தேவி பிரத்தியக்ஷமாய் ரதங்கள்துரகபதாதிகளை துவம்சப்படுத்தி யுதாஜித்தையும் சத்துருஜித்தையுங் கொன்று சுதர்சனனுக்குச் சயமுண்டாக்கியதும், பின்னர் சுபாகு தேவியினுடைய பிரபாவத்தையும் கருணைப் 'பெருக்கையும் பலவாறா யெடுத்துத்தோத்திரஞ்செய்ய மனங்கனிந்து உனக்குவேண்டியவை யாவையென்று வினாவியதுங் கூறினோம். இனிசுபாகுவுக்கு வேண்டிய வரமளித்ததும் பின்னர் சுதர்சனன் தோத்திரஞ் செய்ததும் அன்னைப் பார்த்து அயோத்திக்குப் போயரசாள விடைதந்து அவ்விடத்தில் அவனும் நகரத்திலுள்ளாரும் தன்னைப்பூசிக்க வேண்டிய முறைகளையும் தனக்குமுக்கியமாயுள்ளதினங்களையும் கூறித் திருவுருக்கரந்ததும் தேவியனுக்கிரகப்படியே மந்திரிமுதலானோரால் அழைக்கப்பட்டு அயோத்தி நகரத்தையடைந்ததுங் கூறுகிறோமென்று சூதபகவான் கூறத்தொடங்கினர்.

(க-ரு) சுபாகுவானவன் அந்த மகேஸ்வரியினுடைய திருவாக்கைக் கேட்டு மிகுந்த அன்புடையவனாய் ஹே தேவி! தேவலோக சம்பத்தை எண்ணினால் அதுவுஞ்சிலகாலவனுபவமா யிருக்கின்றது. பூமண்டல ராஜ்பீசம்பத்தையெண்ணினால் அதுவுஞ்சிலகாலவனுபவமாயிருக்கின்றது. உன்னுடைய தரிசனமாகிய சம்பத்தையெண்ணினால் எப்பொழுதும் நீங்காத வனுபவமா யிருக்கின்றது. ஆகையால் உன்னுடைய தரிசனத்துக்குச் சமானமானசம்பத்து மூன்று லோகத்திலு மிருப்பதாகவெனக்குத் தோன்றவில்லை. ஆகவே எவ்வுலகத்திலும் இல்லாததாகிய உன்னுடைய தரிசனமாகிய சம்பத்தைக் கிடைக்கப் பெற்றபொழுது வேறெந்தவரத்தைக் கேட்கப்போகின்றேன். உலகில் நான் கிருதார்த்த னாயிவிட்டேன். ஆயினும் ஹே அம்பா! சலனமில்லாமலும் பங்கமில்லாமலு மிருக்கின்ற உன்பத்தியானது எனக்கெப்பொழுது முண்டாக வேண்டும். இந்த மனோரதமாகிய வரத்தைத்தான் கேட்பதற கிச்சித்திருக்கிறேன். ஹே அம்பா! இவ்வரத்தைக் கொடுப்ப துண்மையாயின் அடியேனது கிருகத்தில் நீ எப்போது மெழுந்தருளி துர்க்காதேவியென்னும் பெயருடையவளாய்ப் பிரகாசிக்கவேண்டும்.

(சு-கக) ஹே தேவி! சுதர்சனன் சத்துரு சமுகத்தினின்றும் உபாதியில்லாதவனாக எப்படி ரக்ஷிக்கப்பட்டானோ அப்படி நானெப்போதும் இந்தநகரத்தில் சத்துருபயமில்லாமல் உன்னால் ரக்ஷிக்கப்பட்டவனா யிருக்கவேண்டும். ஏ அம்பிகே! பூமியில்

எவ்வளவுகாலம் இந்தக்காசி அழிவில்லாமலிருக்கின்றதோ அவ்வளவு காலமும் நீ இந்தக்காசியைரக்ஷணைசெய்யுந் தெய்வமாக விருக்க வேண்டும். ஹே துர்க்கே! ஹே கருணாகடாக்ஷி! நானிந்த நகரத்துக்கு அரசனாகவிருப்பதால் அதற்கேற்ற ஐஸ்வரியங்களுள் எது வெதுகொடுக்கலாமென்று திருவுளத்திற் றோன்றுகின்றதோ அவைகளையெல்லாங் கொடுத்தனுக்கிரகஞ்செய்வாய் அவைகட்கிடையூறு வாராவண்ணம் என் சத்துருக்களையு நிவர்த்தி செய்வாய். சத்துருக்களல்லாத துஷ்டர்களையும் நிக்கிரகஞ் செய்வாயென்று பிரார்த்தத்திக்குமரானைச் சகலபாவங்களையும் போக்கவல்ல துர்க்காதேவி கருணைகூர்ந்தவனாய்க் கடைக்கண்ணாற் பார்த்துக் கூறுகின்றாய். ஓ அன்புனேன்றனக்குச் சகலசம்பத்துகளும் உண்டாகும், இப்பூமியானது எவ்வளவு காலம் வரைக்குமிருக்கின்றதோ அது வரையில் ❋ சர்வலோகரக்ஷகநிமித்தமாய்ப் பிரகாசிக்கின்ற முத்தி ✳ க்ஷேத்திரமாகிய இவ்விடத்தில் நான் உன் வேண்டுகோளின் படிவசிக்கின்ற னென்றனுக்கிரகஞ் செய்திருந்தனள்.

(கஉ-கரு) பின்பு சுதர்சனன் சந்நிதியினிற்சென்று சந்தோஷசித்தனாய் சமீபித்து நமஸ்கரித்து மிகுந்தபத்தியுடன் தேவியைத் தோத்திரஞ்செய்தனன். உன்கருணை மிக ஆச்சரியமானது; நானென்ன சொல்லப்போகிறேன். எந்தக்காரணத்தால் பத்தியீனனாகிய என்னை ❑ ரக்ஷித்தனை. இதனால் பக்தியீனர்களா யிருந்தபோதிலும் அவர்களை ரக்ஷிப்பதே உனக்குள்ளவழக்கமென்பது தெரியவந்தது. அது தெரியவரவே நீ பக்தர்களிடத்தில் தான் தயையுள்ளவளென்பதேது? ஹே தேவி! நீதான் எல்லாப் பிரபஞ்சத்தையும் சிருஷ்டிக்கிறா யென்றும், சிருஷ்டிக்கப்பட்டதைப் பரிபாலிக்கின்றாயென்றும், பரிபாலிக்கப்பட்டதை ஒடுக்கிக்கொள்ளுங்காலத்தில் சங்கரிக்கின்றாயென்றுங், கேட்டிருக்கின்றேன். இதனால் படைத்தழிக்குந் தொழிலேயல்லாமல் காத்தற்றொழிலையு முடையவளென்று தெரியவந்தது; வரவே நான் எப்போதும் உன்னால் ரக்ஷிக்கப்பட்டவனென்றாயிற்று. ஆகவே இப்பொழுதுதான் என்னை ரக்ஷித்தா யென்றாச்சரியப்படுவது ஆச்சரியமல்ல. என்னை எப்பொழுதும் ரக்ஷித்த உனக்கு நான் வேண்டிய பணிவிடை இது வரையில் செய்யாதிருந்தது தான் ஆச்சரியம், இனியாவது உனக்கு நான் செய்யத்தக்க பணிவிடை யாது? என்னபணி செய்ய வேண்டும்? எங்கேபோகவேண்டும்? அதனைச் சீக்கிரம் அநுக்கிரகஞ் செய்வாய்; உனக்குச் செய்யவேண்டிய பணிவிடையைச் செய்யாத தரித்திரனாயிருக்கிறேன். நான் ✪ உன்னாக்ஞையினால் போகிறேன்

❋ சர்வலோகரக்ஷக - எல்லாவுலகினையிங் காக்க ✳ க்ஷேத்திரம் - நகரம்
❑ ரக்ஷித்தனை - காத்தனை ✪ உன்னாக்ஞையினால் - உன் கட்டளையினால்

இருக்கிறேன் விளையாடுகிறேன் உன்னையன்றி யானொரு செயலும் இங்குச் செய்ததில்லை என்று தோத்திரஞ் செய்கிற சுதர்சனனை தயாமூர்த்தியாகிய தேவிபார்த்து திருவாய் மலர்ந் தருளுகின்றாள்.

(கசு-உசு) ஓ மகனீயனே! நீ அயோத்திக்குச் சென்று உனது குலதருமத்துக்கு யுக்தமாகிய ராஜதருமத்தை நடத்திவருவாய். எப்போதும் என்னை மறவாமல் அவசியமாய்த் தியானித்தும் நாடோறும் பூசித்தும் வருவையேயாயின் உன்னுடைய ராஜ்யத்துக்கு வேண்டிய சுகத்தைச் செய்து வருகின்றேன். எனக்கு விசேட தினங்களாயுள்ள கிருஷ்ணபக்ஷ அஷ்டமியிலும், நவமியிலும், சதுர்த்தியிலும், பலிதான முதலியவற்றோடு விதிமுறையாய் நம்முடைய பூசையைச் செய்துவருவாய். இவ்வண்ணம் உன்னுடைய அயோத்திமாநகரத்தில் நித்தியம் மூன்று காலபூஜையும், அஷ்டமிமுதலிய புண்ணிய காலங்களில் விசேஷபலியோடு பூஜையும், பக்திபூர்வகமாய் மிகமுயற்சியோடு நடத்தும்படி ஏற்படுத்துவாய். சரத்துருதுவில் வரும் நவராத்திரியிலும், சைத்ரம், ஆஷாடம், ஆஸ்வீஜம், மாகம் என்னும் இம்மாதங்களிலும் கிருஷ்ணபக்ஷம்அஷ்டமி, சதுர்த்தசி என்னுந் தினங்களிலும், என்னிடத்தில் அன்புள்ளவர்கள் என்னுடைய ஆகமத்திற்கூறியிருக்கும் பூஜையை அவசியமாய் அந்தந்தக் காலத்திற்கு விதித்திருக்கும் விதிப்படி விசேஷமாய்ச் செய்யுதுவர நீ விதிக்கவேண்டுமென் றநுக்கிரகித்து அந்தர்த்தான மாயினள். மறைந்துபோன அந்தத் தேவியைத் தரிசித்த அரசர்களெல்லாம் சுதர்சனனைச் சமீபித்து இந்திரனைத் தேவர்களெல்லாம் நமஸ்காரஞ் செய்வதுபோல் நமஸ்கரித்தார்கள். மாமனாராகிய சுபாகுவும் அந்தச் சுதர்சனனை வணங்கிச் சந்தோஷசித்தனாயெதிரிலிருந்தனன்.

(உரு-ஙங) அரசர்களெல்லாம் அயோத்தியாதிபதியாகிய சுதர்சனனை நோக்கி நீயே எங்களுக்குப் பிரபு, நீயேரக்ஷககர்த்தா, யாங்களனைவரும் உனக்கு அடிமையாளா யிருக்கத்தக்கவர்கள், இனி அயோத்தியில் செங்கோல் செலுத்தி எங்களைப்பரிபாலனஞ்செய்ய வேண்டும். ஓ மகாராஜனே! உன்னுடைய அநுக்கிரகத்தால் புருஷார்த் தங்களாகிய அறமுதலிய நான்கையுங் கொடுக்கின்றவளாயும், ஆதிசத்தியாயும், பிரபஞ்சநாயகியாயுமிருக்கின்ற மகேஸ்வரியானவள் தரிசனமாயினாள். எந்தக்காரணத்தினாலோ இவ்வுலகின்கண் ஆதிசக்தியாகிய பரமேஸ்வரியை நீயுந் தரிசனஞ்செய்து எங்களையுந் தரிசிக்கச் செய்தபடியினால் நீயேதன்யன் நீயே கிருத கிருத்தியன் நீயே வெகுபுண்ணியமுடையோன். ஆனால் அந்தப் பரமேஸ்வரி யாதுகாரணத்தினாலுனக்குப் பிரசன்னையாயினாளோ அறியோம். ஓ ராஜனே! தேவியினுடையமாயையினால் மோகிக்கப்பட்டுத் தமோகுண

முடையரா யிருக்கிற நாங்க ளுன்னுடைய பிரபாவத்தை எப்படியறிவோம். நாங்களெல்லோரும் பொன்னிலும் பெண்ணிலும் பிள்ளையிலும் சிந்தனையும், ஆசையு முடையவர்களாய்க் காமக் குரோத லோப மோக மத மச்சரமென்னுமிவைகள் நிறைந்துள்ள கோரமாகிய இந்தச் சம்சாரத்தில் மூழ்கிக்கிடக்கின்றோம். ஓ மஹாநுபாவனே ஜ்ஞானவானே! நீ சர்வக்ஞனாகின்றாய்; நீ யறியாததொன்றுமில்லை. ஆகையால் இந்தச்சக்தியார்? எங்கிருந்து வந்தவள்? எவ்விதமான மகிமையுடையவள்? என்ன பிரபாவமுடையவள்? எவ்விதமான சொரூபமுடையவள்? எதிலிருந்து ஜனித்தவள்? இவை முழுவதுங் கேட்பதற்கு இச்சையுடையவர்களா யிருக்கின்றோம் நீ சொல்லல்வேண்டும். சம்சார சாகரத்தில் வீழ்ந்துகிடக்கும் எங்களுக்கு நீ ஓரோடம் போலிருக்கின்றனை. அன்றியும் நீ மகாபெரியோன். ஆகவே தயைகூர்ந்து சிரேஷ்டமாகிய தேவிமான்மியத்தைச் சொல்லல்வேண்டுமென்று மீளவும் பிரார்த்தித்தனர்.

(ருசு-சுரு) த்ருவ சிந்துவின் குமாரனாகிய சுதர்சனன் அந்த அரசர்கள் மிகவும் வணக்கத்தோடு கேட்பதற்கிரங்கித் தேவியை மனதிற்றியானித்து சந்தோஷ சித்தனாய்ச் சொல்லத்தொடங்கினன். ஓ அரசர்களே! அத்தேவியின் சரித்திரத்தை என்னவென்று சொல்லப்போகிறேன். பிரமதேவர் முதலிய தேவர்களும் அறியமாட்டார்கள். எல்லாவுலகங்களுக்கும் ஆதியாய் மேலாயிருக்கின்ற பராசத்தியானவள் திரிகுணாதீதமாகிய சுத்தத்துவ குணப்பிரதானையாய் அழிவில்லாதமோக்ஷ சம்பத்தையும், முக்குணத்துளொன்றாகிய ரஜோகுணப்பிரதானையாய்ச் சிருட்டியையும், சத்வகுணப் பிரதானையாய்ப் பரிபாலனத்தையும், தமோகுணப்பிர தானையாய்ச் சங்காரத்தையுஞ் செய்துவருகின்றாள். இவ்வாறு அவரவர் வேண்டியாங் கருள்புரிந்து நிர்க்குணையாகிய பராசத்தியாய்ப் பிரமனாதியருக்குக் காரணமாயிருக்கின்றாள். ஓ அரசர்களே! தேவி யினுடைய நிர்க்குணசொரூபத்தைப் பெரும்பாலும் யோகிகளாலு மறிவதற்குச் சாத்தியமாகாது. ஆனால் பண்டிதர்களாகிய ஞானிகள் எப்போதும் தேவியைச் சகுணயாகவே தியானித்துச் சுகமாய் வணங்குவரென்று சொல்லியதைக்கேட்ட அரசர்கள் ஐயா நீர் பாலியத்தில் யுதாஜித்துக்குப் பயப்பட்டு வனத்தை யடைந்திருந்த காலத்தில் இந்தப் பராசத்தியை எப்படியறிந்து உபாசித்துவந்தீர்? அவளெப்படிப் பிரசன்னையாயினாள்? இவ்வளவு சீக்கிரத்தில் எப்படிச் சகாயஞ்செய்யவந்தனளென்று வினவினர். சுதர்சனன் ஓ அரசர்களே! பால்யனாயிருந்துபோது அந்தத் தேவியினுடைய சாஸ்திரசம்பந்தமாகிய

காமபீஜமென்கிற மந்திரத்தைத் தெய்வீகமாய்க் கேட்கப்பெற்று ஜபித்துத் தியானித்துக் கொண்டிருந்தேன். பின்னர் ருஷிகளால் அம்மந்திர அதிதேவதையாகிய மகேஸ்வரியினுடைய பெருமையை சொல்லக்கேட்டு மிகுந்தபக்தியுடன் அகோராத்திரம் தேவியைத்தியானித்துச் செபித்துக் கொண்டிருந்தேன். அதனால் அவள் கருணையைக் கிடைக்கப்பெற்றேனென்றான். அரசர்கள் மிகுந்த பக்தி யுடையவர்களாய் அந்தச் சுதர்சனனுடைய வாக்கைக்கேட்டுப் பராசத்தியைப் பரப்பிரம ரூபிணியாக நினைத்துத் தங்களுடைய கிருகங்களுக்குப் போயினர். சுபாகு சுதர்சனனைக் கொண்டாடிக் காசிநகரத்தை யடைந்தான் தருமாத்மாவாகிய சுதர்சனனும் கோசலதேசத்தையடைந்தான்.

(சுசு-ரு0) மந்திரிமார்களும், மற்றுமுள்ளநகரவாசிகளும், சுதர்சனன் தன்னோடுயுத்தஞ் செய்யவந்த யுதாஜித்தையும், சத்ருஜித்தையும், வென்றுவருவதைக் கேள்வியுற்று ஆனந்தக்கடலில் மூழ்கினவர்களாய்ப் பூரணகும்ப முதலியவற்றைச் சிறப்புட னெடுத்துக் கொண்டு சென்றார்கள். அரசர்களெல்லாம் த்ருவசிந்து குமாரனென்று தெரிந்துக்கொண்டு நர்னாவிதமான முத்தார முதலியவற்றைத் தாங்கள் செய்யத்தகுங் கையுறையாகக்கொண்டு சென்றார்கள். இவ்வாறு யாவரும் எதிர்கொள்ளச் சுதர்சனன் சசிகலைசமேதனாய் அயோத்தி நகரத்தையடைந்து யாவரையும் நன்மொழியினாற் கொண்டாடி ஆஸ்தானத்தையடைந்து கட்டியக்காரர்கள் புகழெடுத்துப்பாடவும், மந்திரிகள் வணங்கவும், மங்களப்பெண்கள் ஆலங்களைச்சுற்றிப், புஷ்பங்களை மாரியாகப் பொழியவும் அங்குவீற்றிருந்தனன்.

இருபத்து நான்காம் அத்தியாயம்

ஸ்ரீ தேவி மஹிமாதிவர்ணனம் முற்றிற்று.

———

ஆஉ அத்தியாயம் உசு-க்குச் சுலோகம் (கஙகூசஎ.)

———

உ

திரிபுரசுந்தர்யைநம:

இருபத்தைந்தாம் அத்தியாயம்

சுதர்சனஸ்ய பைத்ருக ராஜ்யப் பிராப்தி.

———

ஓ மகருஷிகாள்! அயோத்தியையடைந்து சுதர்சனன் தனது சிறியதாகிய லீலாவதியினிடஞ் சென்று யாவுந்தெய்வாதீனமாயுள்ளது.

இங்கொருவருக்கும் ஒரு செயலுமில்லை என்று உண்மையான சில அனுபவங்களை எடுத்துக்காட்டி அவளுக்குண்டாயிருந்த துக்கத்தைப் போக்கி நானே உனக்குப் புத்திரனா யுள்ளேனென்று சொல்லிவிடை பெற்றுப்போவதும், பின்னர் மந்திரிமுதலாயினாரை வரவழைத்துத் தேவியைச் சிங்காதனத்தில் விக்ரகரூபமாய் யமைத்த பின்னர் அரசியல் புரிவே னென்பதையுணர்த்துவதும், அவ்வாறே அமைச்சரமைத்துத் தேவியினுடைய மகேற்சவத்தைக் கொண்டாட அவனரசியல் புரிந்து எந்தத் தேசத்திலும் தேவியினுடைய பூஜையும் புகழுமே பரவச் செய்வதுமாகிய வரலாற்றை இனி எடுத்துக் கூறுகின்றேனென்று சூதபகவான் சொல்லத் தொடங்கினர்.

(க-ககூ) இராஜாதிராஜனாகிய சுதர்சனன் அயோத்தியையடைந்து தனது இஷ்டஜன குடும்பசமேதனாய்த் தன்றந்தையிருந்த விடத்திற்போய்த் தந்தையை நினைந்து அப்புறஞ்சென்று மிகுந்ததுக் கமுடையவளாகிய சத்துருசித்தின் தாயாகிய லீலாவதியை நமஸ்கரித்து ஓ அம்மணி! உன்குமாரனும் பிதாவும் யுத்தத்தில் துர்க்கா தேவியினால் இறந்தார்களேயல்லாமல் என்னால் கொல்லப்பட்ட வர்களல்லர். உன் பாதங்களி லாணையிடுகிறேன், இவ்விஷயத்தில் என்னால் ஒரு குற்றமும் நடந்ததில்லை. அநுபவிக்கவருவதை ஒருவன் கஷ்டமென் றறிந்துகொண்டு அதனையனுபவிக்காமல் நிவிர்த்தி செய்ய வேண்டுமென் றெண்ணுவானாயின் அது நிவர்த்தியாகுமா ஆகா? ஓ அம்மா? இறந்துபோன உன்புத்திரனுடைய விஷயத்தில் நீ துக்கப்பட வேண்டிய தொன்றுமில்லை. ஆன்மாக்கள் தாந்தாம் செய்த வினைக்கீடாயெடுத்த சரீரசுகங்களை யனுபவிக்கின்றார்கள். என் தாயாகிய மனோரமைக்கு நானெப்படியோ அப்படியே உனக்குப் புத்திரனாயும் தாசனாயுமிருக்கின்றேன். எனக்கு உங்களிருவரிடத்திலுஞ் சிறிதும் பேதமில்லையென்று சொல்லுந்தோறும் லீலாவதிக்குண்டாகுந் துயரத்தைப்பார்த்து ஓ என்தாயே! புண்ணிய பாவங்களாகிய வினையை யனுபவிக்க வேண்டிய தவசியமாகையால் ஒருபொழுதுஞ் சுகதுக்கங்களைக் குறித்து இன்பதுன்பங்களடையவுங்கூடாது. அவைகளிற் புத்தியைச் செலுத்தவுங் கூடாது, செலுத்தினால் * துக்கத்தில் அதிகதுக்கத்தையும் சுகத்தில் அதிகசுகத்தையும் பார்க்கவேண்டுமேயன்றிச் சத்துருத்துவமா

* துக்கத்தில் அதிகதுக்கத்தைப் பார்த்தலாவது - இப்போது வந்த துக்கத்துக்கு ஏதுவாயிருந்தது பூர்வஞ் செய்த்பாவமல்லவா வென்று எண்ணிப்பார்த்தல், அதுபோலக் சுகத்துக்கேதுவாயிருந்தது பூர்வஞ்செய்த புண்ணியமல்லவாவென்று எண்ணிப்பார்த்தல், இவ்வாறெண்ணிப்பார்க்குங்கால் பாவத்தில் அதிகதுக்கமும், புராணியத்தில் அதிக சுகமும் தோன்றுமென்க.

யிருக்கின்ற அவைளில் புத்தியைச் செலுத்தக்கூடாது. தாயே! நான்வனத்தில் வசித்திருந்த காலமளவும் இந்தவிடத்தில் எது அநுபவிக்க வேண்டுமோ அது அநுபவிக்க வேண்டுமென்று அறிவுடனிருந்தேனேயன்றி இந்த ராஜ்யசுகத்தை யெண்ணித் துக்கித்தவனன்று.

இந்தச் சராசரமாயுள்ள வுலகமெல்லாம் தெய்வாதீனமாயி ருப்பதல்லாமல் ஒருபோதுஞ் சீவர்களுடைய அதீனமாயிருப்பதல்ல. இவ்வுண்மையறிந்த புத்திமான் ஆத்மாவைச் சுகதுக்கமாகிய சோபத்தினால் தபிக்கச்செய்யமாட்டான். மரத்தினாற் செய்த பெண்பாவையானது தன்னை ஆட்டிவைக்கின்றவனால் எப்படி யாடுகிறதோ அப்படிச் சீவராசிகளை அவர்கள் கன்மமானது ஆட்டிவைக்கின்றது. இப்பொழுது என்வினை என்னையாட்டிவைத்தது நீயு மறிந்ததுதானே ஆயினும் சொல்லுகிறேன்.

இங்கு என் தாயாரைப்பெற்ற பாட்டனா ரிறந்துபோய்விட்ட பொழுது என் தாய்துக்கித் துப்பயந்தவளா யென்னை அழைத்துக் கொண்டு மகாரணியத்தினுழைந்து போயினாள்; போகும் அவ்விடத்தில் திருடர்கள் புரட்டிப் புரட்டியடிக்க வஸ்திரஹீனையாய் வழிச்செலவுக்குள்ள பொருளுமிழந்து அவ்வளவு துன்பத்திலும் பாலனாகிய என்னைக் கைவிடாமல் ஆதரவற்றவளாய்ப் பரத்து வாசராச்சிரமத்தையடைந்தனள். என் தாயுடன் சகாயமாய் வந்த பேடியும் தாதியுங்கூடவந்தனர். யாங்களனைவரும் கருணாசாலிகளாகிய முனிவர்களாலும் முனிபத்தினிகளாலும் கொடுத்துவந்த கந்தமூலபலங்களாலுஞ் செந்நெல்முதலிய தானிய வகைகளாலும் உயிரைப்பாதுகாத்து இவ்வளவு காலமும் அங்கேயிருந்தோம். அதுவரையில் நான் வருந்துக்கத்தைப் பார்த்து அதையனுபவித்து வந்தேனேயல்லாமல் நான்துக்கமடையவில்லை. அது போலவே ராஜ்யத்துக்குவந்த இப்பொழுதும் சந்தோஷமடையப் போகிறதில்லை. இதனால் என்சித்தத்தில் விரோதமும் பொறாமையும் சுகமும் துக்கமும் முண்டாவதில்லை. நான்வனத்தில் செந்நெல்லைப் புசித்திருந்ததை இப்பொழுதெண்ணுங்கால் இந்த ராஜ்ய போகத்தைக் காட்டிலும் அது சிறந்ததென்று தோன்றுகிறது. இந்திரிய சமூகத்தை வென்றவன் எப்படி நரகத்தை அடையமாட்டானோ அப்படி செந்நெல்லாகிய தானியத்தைப் புசித்தவன் நரகத்தை யடையமாட்டான்.

(உ0-உசு) இவ்வண்ணம் சுதர்சனன் சொல்லக்கேட்ட லீலாவதி யானவள் மிகுந்த லச்சை யடைந்து புத்திர சோகத்தை விட்டுக்

லடசை - வெட்கம்

கண்ணீர்விட்டழுது அந்தச் சுதர்சனனை நோக்கி ஒகுழந்தாய்? இப்போது உன்னால் செயிக்கப்பட்ட என் தகப்பனாகிய யுதாஜித்து உன்பாட்டனாரைக்கொன்று ராஜ்யத்தை யபகரித்தான். அந்தச்சமயம் என் பிதாவாகிய யுதாஜித்தையும் என்குமாரனையும் தடுப்பதற்குச் சக்தியில்லாதவளாயிருந்தேனாகையால் நானும் அந்த அபராதத்தை யுடையவளானேன். ஆனால் அவர்களெண்ணியதுபோல் நானெண்ணங் கொண்டவளன்று. யுதாஜித்துச் சிறிதுமெண்ணாது செய்த தீவினைக் கீடாக அவனும், சகோதரத்துரோக முண்டாகுமே என்றஞ்சாததனால் என்குமாரனும் மரணத்தை யடைந்தார்களேயன்றி நீ அவர்களைக் கொன்றவனல்லவென்பது எனக்கு நிச்சயந்தான். என்புத்திர னிறந்தானென்று துக்கிக்கவில்லை. அவன் செய்த துனமார்க்கத்தைக் குறித்துத் துக்கிக்கின்றேன். ஒ சுதர்சனா! நீ தான் எனக்குப் புத்திரன். உன்றாய்தான் என்னுடன் பிறந்தவள். உன்னிடத்தில் எனக்குச் சிறிதேனுமகோபமும் வருத்தமுங்கிடையாது. இனி நீ தேவியினுடைய அநுக்கிரகத்தால் சத்துருபாதையில்லாமல் கிடைக்கப்பெற்ற இந்த ராஜ்யத்திலிருந்து செங்கோல்செலுத்தி அந்தணர்களைப் பரிபாலித்து ஏனையரையும் ♦ ரக்ஷித்து வருவாயென் றாசிபுகலச் சுதர்சனன் லீலாவதியை நமஸ்கரித்து முன் தன்தாயிருந்தவிடத்துக்குப் போயினன்.

(உஎ-சுரு) பின்னர் எல்லாமந்திரிகளையும் சோதிடர்களையும் வரவழைத்து ஒரு சுபமுகூர்த்த தினத்தைக் கேட்டுப் பின்னரவர்களைப் பார்த்து ஓ பெரியோர்களே! நான் சுவர்ணமயமாயும் மணிமயமாயுமுள்ள சிங்காதனமொன்றைச் செய்வித்து அதில் தர்மார்த்த காமமோஷங்களைக் கொடுக்கின்ற தேவியைப்பிரதிஷ்டைசெய்து சர்வோபசாரத்தோடும் பூசித்துப் பின்னர் இராமனாதியர்களால் நடத்தியிருக்கப்பட்ட இந்த ராஜ்யத்தைப் பரிபாலிக்கின்றேன். என்னைப் போலவே நகரவாசிகளனைவரும் தேவியைப்பூசித்துவரவேண்டும். அவள்தான் சர்வகாமார்த்தசித்திகளைக் கொடுப்பவளென்று சொல்லவும், மந்திரிகள் அரசனாணையைக் கடத்தற்கஞ்சி அவனிஷ்டம்போல் சில்பிகளால் மனோகரமாகிய மண்டபத்தை யுண்டாக்கி நல்ல சுபதினங்கூடிய சுபமுகூர்த்தத்தில் தேவியினுடைய திருவுருவத்தைச் செய்வித்துச் சோதிடர்களையும் பிராமணர்களையும் வரவழைத்துத் தேவியினுடைய தந்திரப்படி பூசித்து யக்ஞ முதலியவற்றையும் விதிவத்தாய் நடத்தி மண்டபத்தில் சுதர்சனனைக் கொண்டு ஸ்தாபனஞ்செய்தனர். அப்பொழுது பிராமணர்களுடைய வேதகோஷங்களும், வாத்தியகோஷங்களும், நானாவிதமான கானகோஷங்களும், அவ்விடத்திலொன்றாய்க் கடலோசைபோற்

♦ ரக்ஷித்து - காத்து

கோஷிக்க வேதவித்துர்களாகிய பிராமணர்களால் விதிவத்தாய்ப் பரமேஸ்வரிக்குச் செய்யவேண்டிய திருவிழாவாகிய மஹோற்சவமுஞ் செய்வித்துத் தேவிபூசையைக் கொண்டாடினர்.

அதன்பின்னர் சுதர்சனன் பிதுரார்ச்சிதமாகிய ராஜ்யாதிகாரத்தைச் செலுத்திச் சந்தோஷ சித்தனாயிருந்தான். ஜகன்மாதாவாகிய பரமேஸ்வரியுங் கோசலதேசத்தில் மிகவும் பிரசித்தியாயிருந்தனள். தருமமார்க்கத்தினாற் சயசாலியாயிருந்த சுதர்சனன் சத்ருக்களை யெல்லாம் தன்னாணையி னிற்கச்செய்து பூர்வத்தில் ரகு மகாராஜன் திலீபன் ராமமூர்த்தி முதலாயினார் அந்தணர் முதலாயினார்க்கு எப்படி சுகமுண்டாக்கினரோ அப்படியேசுகமும் சத்தியமும் மரியாதையும் வருணாச்சிரம தருமங்களும் வளர்ந்தோங்கும்படிச் செய்தனன். உலகில் யாவரும் அதன் மத்தில் பிரவேசிக்கமலிருந்தனர். எல்லாவரசர்களும் தங்கள் தங்களிடங்களில் தேவிக்கு ஆலயநிர்மாணஞ் செய்து அயோத்தியில் எவ்வண்ணம் பூசையாதிகள் நடந்து வருகின்றனவோ அவ்வண்ணம் நடத்தி வந்தார்கள். சுதர்சனன் மாமனாராகிய சுபாகுவும் தன்னுடைய நகரத்தில் தேவியினுடைய விக்ரஹத்தைச் செய்வித்துப் பக்தியுடன் பிரதிஷ்டைசெய்து ஆராதித்து வந்தனன். அந்நகரவாசிகளும் மிகுந்த அன்போடு விசுவநாதருக்கு எவ்வாறு பூசையாதிகளை நடத்திவருகின்றனரோ அவ்வாறே மகேஸ்வரிக்கும் நடத்திவந்தனர். ஓ ஜன மேஜயமகாராஜனே! அரசர்களெல்லாம் மஹேஸ்வரியினுடைய பூஜாதுரந்தராளாக விருந்தபடியால் இப்பூமண்டல முற்றும் மகேஸ்வரியே பிரசித்தமாயிருந்தனள். அவளுடைய பக்தியும் அவ்வாறே பிரசித்தியடைந்திருந்தது. அத்தேவியைப் பூசிக்காத வருணத்த வரும் ஆச்சிரமிகளுமில்லை, அப்படியே யோசிகளும் தேவிபத்தி யுள்ளவர்களாய் அவளுடைய ஆகமங்களிற் சொல்லப்பட்ட ஸ்தோத்திரங்களோடு செபத்தியான முதலியவற்றையும் அன்போடு செய்துவந்தனர்.

இருபத்தைந்தாம் அத்தியாயம்.

சுதர்சனஸ்ய பைத்ருக ராஜ்யப் பிராப்தி முற்றிற்று.

— —

ஆஉ அத்தியாயம் உரு-க்குச் சுலோகம். (கசுஙகூஏ)

— —

உ

திரிபுரசுந்தர்யைநம:

இருபத்தாறாம் அத்தியாயம்

நவராத்திரிபூஜா விதி.

ஓ மகருஷிகாள்! சுபாகுவானவன் தேவிசொல்லிய வனுகிரகத்தின்படியே நவராத்திரிவிரத னுஷ்டித்ததை ஜெனமே ஜெய மகாராஜன் வியாசமுனிவரைக்கேட்க, அவர் அந்த விரதத்தை அநுஷ்டித்தற்குரிய காலங்களையும், பூஜாமண்டபமுதலிய கிரமவிதிகளையும் எடுத்துக் கூறியவாறு இனி உங்களுக்குக் கூறுகிறோமென்று சூதபகவான் சொல்லத் தொடங்கினர்.

(க-ங) ஓ முநிஸ்ரேஷ்டரே! சரத்காலத்தில் நவராத்திரி வருகிறபோது என்னசெய்யவேண்டும்? அதைவிதிப்படிச் சொல்லும்? அந்தப் பூஜை செய்வதனா லென்னபயன்வரும்? இவற்றைக் கருணையுடன் விரிவாகச் சொல்லவேண்டுமென்று பிரார்த்தித்தனன். ஓ அரசனே! விசேஷமாகச்சொல்லப்பட்ட சரத்காலத்தில் பரிசுத்தமாய் நடத்த வேண்டிய நவராத்திரி விரதத்தைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. அந்த நவராத்திரி பூஜையை வசந்தகாலத்திலேயும் அன்புடன் செய்யவேண்டும்.

(சு-ஙள) வசந்தருது சரத்ருது என்னு மிரண்டு ருதுக்களும் இயமனுடைய இரண்டு கோரப்பல்லுக்குச் சமானமாயுள்ளன. அந்த இரண்டும் மாநுடர்களுக்குத் தெய்வானுக்கிரகத்துக் கிடங் கொடாமற் றடைசெய்யும் பகையாய் ரோகத்தைச் செய்து நாசம் பண்ணுவதாகும். ஆகையால் பண்டிதர்கள் இம்மை மறுமையின் பங்களை வேண்டிய மாநுடர் இவ்விரு ருதுக்களிலு முண்டாகுஞ் சரீரதருமமாயிருக்கின்ற இடையூறுகளுக் கிடங்கொடாமல் தேவியைப்பூசித்தல் வேண்டுமென்று கூறுவர்.

நவராத்திரிபூசைக்கு விதித்திருக்குஞ் சகலத்திரவியங்களையும் அமாவாசை தினத்திலேயே சேகரித்துக்கொண்டு அன்று ஒரு வேளை போஜனத்துடன் உபவாசியாயிருந்து மறுநாள் பிரதமை முதல் பூஜைக்காரம்பித்தல் வேண்டும். அப்பூஜைக்குரியமண்டப வேதிகைகளுடைய அளவைப் பிரமாணமுதலியன எத்தன்மைத்தெனின்? மண்டபஸ்தானமானது சமமாயும், பார்ப்பதற்குச் சுகமாயும், பசுவின் கோமயத்தால் மெழுகிச் செம்மண்ணிட்டதாயும்,

நான்கு மூலைகளிலும் பதினாறு முழமுள்ள நான்குஸ்தம்பங்களைத் துவஜத்தோடு நாட்டப்பட்டதாயும், மேற்கட்டோடுகூடியதாயும், விசித்திரமான தோரணங்களா லலங்கரிக்கப்பெற்றதாயும் மண்டபமிருத்தல் வேண்டும். அதன்மத்தியில் நான்கு முழநீளமும் ஒருமுழ வுயரமுமுள்ள சமானமான ※வேதிகை யொன்றமைத்தல் வேண்டும்.

(நஅ-சுந) வேதிகை யமைத்த பின்னர் பராசக்தியாகிய தேவியினுடைய பூஜாதந்திரங்களையும், தத்துவார்த்தங்களையும் உண்மையா யுணர்ந்தவர்களாயும், ஆசாரநிஷ்டர்களாயும், சாதுக்களாயும், விதிமுறையாக வேதமந்திரங்களைச் சொல்லத் தக்கவர்களாயுமுள்ள அந்தணர்கள் ஒன்பதின்மராவது, ஐவராவது, மூவராவது, ஒருவராது, பிரதமைமுதல் பூசாந்தம்வரையில் நாடோறும் வரும்படியாகப் பிரார்த்தித்து அவர்களலங்கார பூஷணத்தோடிருக்க திரவியமுடையவனா யிருப்பானாயின் விசேடமாயும், அஃதின்றாயின் தன்னளவுக் கேற்றவாறாயும், ✱உலோபமில்லாமல் அவர்மன மகிழும்படியாய் வஸ்திராபரணங்கள் தந்து *மனமகிழ்ந்து வந்திருக்கச் செய்து பிரதமை முதல் சாஸ்திரரோக்தமாய் ஐந்து நாழிகைப் பொழுதி லெழுந்திருந்து சவுசாதிகளை முடித்துக்கொண்டு நதியிலாவது நதத்திலாவது தடாகத்திலாவது நடபாவியிலாவது கிணற்றிலாவது கிருகத்திலாவது விதிப்படி ஸ்நானஞ்செய்து நித்திய கன்மாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு பூஜார்த்தமாய் முன்வரித் திருக்கிற அந்தணர்களுக்கு மதுசம்பந்தமான அர்க்கிய பாத்தியா சமனங்கள் தந்து அவர்களுடன் பூஜாமண்டபஞ்சென்று அவ்வந்தணரெல்லாம் வேதகோஷஞ்செய்யவேதிகையின் மேல் வெண்பட் டிட்டிருக்குஞ் சிங்காதனத்தைத் தாபித்து அதன்மேல் சங்கு சக்கர கதாபத்மங்களைத் தாங்கியிரா நின்று சதுர்ப்புஜத்தோடு கூடிய தேவி ரூபமாகவாவது, பதினெண் கரத்தோடிராநின்ற தேவி ரூபமாகவாவது திவ்யமாகிய வஸ்திரவகைகளாலும், ரத்னா முத்தார முதலிய ஆபரணவகைகளாலும், மலர்மாலை முதலிய மாலை வகைகளாலும், அலங்காரஞ்செய்து எழுந்தருளச்செய்தல் வேண்டும். பின்னர் கும்ப பூஜை நிமித்தமாய்ச் சிங்காதனத்தின் பக்கத்தில் கலசஸ்தாபனஞ்செய்து அதில் புண்ணிய தீரத்தத்தை நிறைத்து சுவர்ணம் இரத்ன முதலியவைகளையிட்டு மாவிலைமுதலிய ஐந்துவகைத் தளிர்களை மேலேவைத்து வேதமந்திரங்களா

* அந்தணர்கள் மனமகிழ்ச்சியில்லாமல் எது செய்தாராயினும் அதனால் வரும்பயன் சித்தியாகாமத போகுமாதலான் அவர் எவ்விதத்திலாவது மனமகிழ்ந்திருக்கச் செய்தல் வேண்டும்.

※ வேதிகை - மேடை ✱ உலோப - கஞ்சனக்

லேமேந்திரித்தது மங்கலவாத்தியங்கள் கோஷிக்கப் பூஜாத்திரவியங்களைக் கொண்டு பூஜித்தல் வேண்டும்.

அதன்பின்னர் ஹே அம்பா! சிரேஷ்டமாகிய நவராத்திரி விரதத்தைச் செய்கிறேனென்றும். எனக்கு யாதொரு இடையூரும் வராமல் வேண்டிய சகாயஞ் செய்யவேண்டுமென்றும், இந்தப் பூஜையை என்னுடைய சத்தியளவாகச் செய்கிறே னென்றுஞ் சங்கற்பித்துக்கொண்டு சந்தனம் அகில் பச்சைகர்ப்பூரங்கஸ்தூரி முதலியவாசனைத் திரவியங்களாலும், மந்தாரம் சண்பகம் சாதிமல்லிகை முதலிய வாசனையுள்ள மலர் வகைகளாலும், வில்வ பத்திரங்களாலும், உலகமாதாவாகிய தேவியைத் தூப தீபங்களோடு மந்திர பூர்வகமாய் விதிப்படி பூஜித்து நவாவரண பூஜையுஞ்செய்து, நானாவிதமாகிய பழரசங்களால் அர்க்கியங்கொடுத்து, இளநீர் மாதுளை வாழை பலா மா முதலிய பழவகைகளை விசேஷமாக வைத்து மிகுந்த அன்போடு அன்ன நிவேதனஞ் செய்தல் வேண்டும். பூஜிப்பவர் மாமச போஜனஞ் செய்பவரா யிருப்பின் மகிஷபலி, மேஷ பலி வராக பலி, முதலியவைகளைத் தந்து அதன் பின்னர் ஹோமார்த்தமாய் ஒருமுழ நீளமும் அகலமுமுள்ள திரிகோணகுண்ட மமைத்து அதில் தண்டிலமிட்டு ஓமத்தைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

ஓ ஜனமேஜய மகாராஜனே! மனோகரமாகிய நவ ராத்திரி பூஜையை அநேகத் திரவியங்களால் முன்சொல்லியவாறு நிர்த்தகீத வாத்தியத்தோடு சிறப்புடன் மூன்றுகாலமுஞ்செய்தல்வேண்டும். அந்த ஒன்பதுநாளும் விரதமிருப்போன் உபவாசியாயிருந்து பூஜித்துப் பின்னுண்டு சயனசுகாதிகளைவிட்டுத் தரையிற் படுத்தல் வேண்டும். பிரதமைதிதியில் அஸ்த நட்சத்திரங் கூடுமாயின் அது விசேட மென்றும், அத்தினத்தில் தேவியைப் பூசித்தால் சகலா பீஷ்டங்களையுங் கொடுப்பாளென்றும் பெரியோர் கூறுவர்.

ஓ அரசனே! தேவியையுத்தேசித்துப் பலிகொடுக்கும் மகிஷமுதலியவைகள் சுவர்க்கத்தை யடையுமேயன்றி நரகத்தையடையா. அதனைக்கொன்றவர்களும் அக்கொலையால் அடையத்தகும் நரகத்தை யடையார். ஏனெனில் கீவபரமாக எதைச்செய்யினும் அது பாபத்தைவிளைவிக்குமென்றும், அருட்பரமாக எதைச்செய்யினும் அதுபுண்ணியத்தை விளைவிக்குமென்றும்பிரமாணங் கூறுகின்றது. அது அப்பிரமாணமோவெனின் ஆகா சீவன் அஞ்ஞானியாதலால் அஞ்ஞானசம்மந்திக்குச் செய்வதெல்லாம் அஞ்ஞான விளைவாகியபாவத்தைக் கொடுக்குமன்றிப் புண்ணியத்தைக் கொடுக்கமாட்டா, அருள் இரக்கமுடையதாதலால்

நத - ஆண்யாறு

அருட்சம்பந்தத்திற்குச் செய்வதெல்லாம் அருள்விளைவாகிய புண்ணியத்தைக் கொடுக்குமேயன்றிப் பாபத்தைக் கொடுக்கமாட்டா. ஆகையால் அந்த அருட்சொரூபிணியாகிய தேவிக்குச்செய்வது அஹிம்சையாகிய பரமதருமமாமென்றும் இம்சையை யடையும் அந்த வுயிர்களும் பரமபதத்தையே யடையுமென்றும் அறிவாயாக.

இது நிற்க, கும்பபூஜை முதல் ஹோமாந்தம் வரையில் செய்யத் தகுவனவெல்லாஞ் செய்து முடித்துப் பின்னர் கன்னிகைகளைப் பூஜித்தல்வேண்டும். இந்த பூஜைக்குரிய கன்னிகைகள் யாவரெனின் சுகந்தமுதலியவைகளை யறியத்தக்க இரண்டு வயது முதல் பத்து வயதளவுமுள்ள கன்னிகைகளாகும். இக் கன்னிகைகளுக்கு முறையே குமாரி திரிமூர்த்தி கல்யாணி ரோகணி காளிகாசண்டிகா சாம்பவி துர்க்கா சுபத்திரா என்று ஒவ்வொரு கன்னிகைக்குப் பெயராகும். அப்பெயர்களால் அவர்களை ஸ்ரீரஸ்து, ஸ்ரீயுக்தம் என்கிற பதங்களை முதலாகவுடைய வேதமந்திரங்களாலும் அது அறியாதான் பீஜ மந்திரங்களாலும் பூசித்தல் வேண்டும். இவர்களன்றி ஒரு கந்தமும் அறியப்பெறாத ஒரு வயதுள்ள கன்னிகையும், பத்து வயதுக்கு மேற்பட்டவர்களும் பூஜைக்கு யோக்கிய மாகார். குமாரி முதலாகச் சொல்லப்பட்ட ஒன்பதின்மரில் தினம் ஒவ்வொரு கன்னிகையாவது அல்லது முதல்நாள் ஒரு கன்னிகையும் இரண்டாநாள் இரண்டு கன்னிகையுமாக ஒவ்வொரு நாளுக்கு ஒவ்வொரு கன்னிகையை அதிகமாக வருவித்துவைத்துப் பூஜையை நடத்தல் வேண்டும். ஓ ஜனமே ஜயனே! இந்தப் பூஜையில் தனக்கமைந்திருக்குஞ் செல்வத்துக் கேற்ப விசேடமாகச் செய்யவேண்டுமேயன்றி லோபகுணத்தால் ⁕லோபமாகச் செய்தல் கூடாது.

(சுசு-சுஉ) இனி அந்த ஒன்பது கன்னிகைகளையும் பூசிப்பதால் வரும்பலனைக் கூறுகின்றேன். ஓ பூமண்டலாதிபனே! குமாரியைப் பூசித்தால் தரித்திரநாசமும், சத்துரு க்ஷயமும், ஆயுள் விருத்தி தனவிருத்தி முதலிய பலவிருத்திகளு முண்டாகும், திரி மூர்த்தியைப் பூஜித்தால் தர்மார்த்த காமியமும், தனதானியவிருத்தி புத்திரபௌத்திராதி விருத்தியுமுண்டாகும். கல்யாணியைப் பூஜித்தால் வித்தை ஜயம் ராஜ்யசுகம் இவைகளுண்டாகும். ரோகணியைப் பூசித்தால் ரோக நாசமுண்டாகும். காளியைப் பக்தியுடன் பூசித்தால் சத்துருநாசமுண்டாகும். சண்டிகையைப் பூஜித்தால் ஐஸ்வரியமுண்டாகும், சாம்பவியை நாடோறும் பூஜித்தால் யுத்தத்தில் விஜயமும் துக்கயேதுவாயிருக்கின்ற தரித்திரநிவர்த்தியும் ராஜசம் மோகமு முண்டாகும். துர்க்கையைப் பூஜித்தால் குரூரமாகிய சத்துரு நாசமும், நடத்துவதற்குக் கூடாத ⁎கிருத்தியத்தை நடத்தும் ஆற்றலும், பரலோகசுகமு முண்டாகும். சுபத்திரையைப் பூசித்தால் மனோரதசித்தியுண்டாகும்.

⁕லோப - கஞ்ச ⁎கிருத்தியம் - கிரியை முறை

இவ்வண்ணம் அவரவர்வேண்டும் பலன்களைக் கொடுக்கவல்ல குமாரி முதலிய திருநாமங்களால் கன்னிகைகளைப் பூசித்தலென்றால் அந்த நாமங்களுக்கு மூலகாரணியாயுள்ள பரதேவதையை அடியில் வரும் தியான சுலோகங்களால் தியானித்தலாகும்.

குமாரஸ்யச தத்வானி யாஸ்ருஜத்ய பிலீலய
காதீநபிச தேவாம்ஸ்தான் குமாரீம் பூஜயாம்யஹம். (1)
சத்யாதிபி ஸ்திரிமூர்த்திர்யாத் தர்ஹிநாநாஸ்ருபிணீ
த்ரிகால வ்யாபிநீ சக்தி ஸ்திரிமூர்த்திம் பூஜயாம்யஹம். (2)
கல்யாணகாரிணீ நித்யம் பக்தானாம் பூஜிதாநிசம்
பூஜையா மிசதாம்பக்தியா கல்யாணீம் சர்வகாமதாம். (3)
ரோஹயந்தீச பீஜாநி பிராக்ஜன்ம சஞ்சிதாநிவை
யாதேவீ சர்வபூதானாம் ரோஹிணீம் பூஜையாங்யஹம். (4)
காளிகாலயதே சர்வம் பிரஹ்மரண்டம்ஸ சராசரம்
கல்பாந்த சமயேயாதாம் காளிகாம் பூஜையாம்யஹம் (5)
சண்டிகாம் சண்டரூபரஞ்ச சண்டமுண்ட விநாசிநிம்
தாம்சண்ட பாபஹறிணீம் சண்டிகாம் பூஜையாம்யஹம் (6)
அகாரணாத் சமுத்பத்திர் யந்மயை : பரிகீர்த்திதா
யஸ்யாஸ்தாம் சுகதாந்தேவீம் சாம்பவீம் பூஜையாம்யஹம் (7)
துர்க்காத்ராயதி பக்தம்யா சதாதுர்க்கதிநாசனீ
துர்ஙேயா சர்வதேவானாம் தாம்துர்க்காம் பூஜையாம்யஹம்(8)
சுபத்திராணிச பக்தானாம் குருதேபூஜிதாசதா
அபத்ரநாசிநீம் தேவீம் சுபத்திராம் பூஜையாம்யஹம் (9)

(இ-ள்.) சிசுவினுடைய கிரீடா விநோதங்களைப்போலும் எவள் செய்கின்றனளோ, பிரமனாதி தேவர்களை எந்தச்சத்தியின் விலையினால் சிருஷ்டிக்கின்றனளோ அந்தக் குமாரியாகிய சத்தியை நான் பூசிக்கிறே னென்றும், சத்துவமுதலிய முக்குணங்களால் அநேக ரூபிணியாய்ச் சிருஷ்டி திதி சங்காரமென்கிற மூன்றுகாலங்களிலும், அன்றிகாலை உச்சி மாலை என்கிற மூன்று காலங்களிலும் எந்த சத்தியினால் வியாபித் திருக்கின்றனளோ அந்தத் திரிமூர்த்தியாகிய சத்தியை நான் பூசிக்கின்றேனென்றும், பக்தகோடிகளால் எப்பொழுதும் பூசிக்கப்பட்டு அவர்களுக்கு எந்தச்சத்தியினால் மங்களத்தைச் செய்கின்றனளோ அந்தக்கலியாணியாகிய சத்தியை நான் பூசிக்கிறேனென்றும், எண்பத்து நான்கு லக்ஷம் பேதமாயுள்ள சகல பிரயாணிகளுடைய பூர்வஜன்ம சந்திதங்களாகிய பாபவித்துக்களை எந்தச் சக்தியினால் நிவர்த்தி செய்கின்றனளோ. அந்த ரோகிணியாகிய சத்தியை நான்பூசிக்கிறே னென்றும், பிரளயகாலத்தில் சராசராத்மகமாகிய சகல பிரமாண்டங்களையும் எந்தச் சத்தியினால் சங்கரிக்கின்றனளோ அந்தக் காளியாகிய சத்தியை நான்

பூசிக்கிறேனென்றும், சண்டமுண்டர்களைச் சங்கரித்து மகாபாதகங்களை எந்தச் சக்தியினால் நிவர்த்தி செய்டன்றனளோ. அந்தச் சண்டிகையாகிய சத்தியை நான் பூசிக்கிறே னென்றும் யாதொரு தேஜோரூபியாகிய பரமாத்மாயி னிச்சைவண்ணம் எந்தச் சத்தியினால் திருவுருவங்களைத் தருகின்றனளோ அந்தச் சாம்பவியாகிய சத்தியை நான் பூசிக்கிறேனென்றும், துர்க்கதியைப் போக்குகின்றவளாய்த் தேவசமூகங்களா லறியக்கூடாதவளாய்ப் பக்தர்களை ரக்ஷிக்கின்றவளாய் எந்தச் சத்தி விளக்குகின்றனளோ அந்தத்துர்க்கா தேவியாகியசத்தியை நான் பூசிக்கிறேனென்றும், தன்னைப் பூசிக்கின்றவர்களுக்கு மக்களங்களைச் செய்து அமங்கலங்களை எந்தச் சத்தியினால் போக்கடிக்கின்றனளோ அந்தச் சுபத்திரையாகிய சத்தியை நான் பூசிக்கிறேனென்றுங் கூறுவதாகும். இவ்வாறு பண்டிதர்கள் கன்னிகைகளைத் தியானித்து கந்தபுஷ்ப வஸ்திராதிகளால் அதிக சிறப்பாகப் பூசித்து வருகின்றனர்.

இருபத்தாறாம் அத்தியாயம்

நவராத்தி பூஜாவிதானம் முற்றிற்று.

———

ஆஉ அத்தியாயம் உசு-க்குச் சுலோகம் (கரு0கஏ.)

———

உ

திரிபுர சுந்தர்யை நம:

இருபத்தேழாம் அத்தியாயம்

நவராத்திரி மகாத்மியகதனம்

———

ஓ மகருஷிகாள்! இதுவரையில் நவராத்திரி பூஜாவிதிகளைக் கூறிவந்தோம். இனி அந்த விரதத்தில் கன்னிகையினுடைய பூஜைக்குரிய கன்னிகைகள் இவரென்றும், உரிமையாகாத கன்னிகைகள் இவரென்றும், அசத்தர்களாயுள்ளார் செய்யவேண்டிய நாள்கள் இவையென்றும், இந்த விரதத்தை யநுஷ்டிக்காதவர்களே உலகில் துன்பப்படத்தக்கவரென்றும், அதனை விளக்கும் இதிகாசம் இதுவென்றும், உங்களுக்குக்கூறுகின்றோம் என்று சூதபகவான் சொல்லத் தொடங்கினர்.

(க-ங) அங்கஹினையையும், குஷ்டம்பிடித்தவளையும், புண்ணுள்ளவளையும், துர்வாசனையுள்ளவளையும், கட்டுப்பாடில்லாத குலத்திற் பிறந்தவளையும், பிறவிக்குருடியையும், குரூபியையும், தேகத்தில் ரோமமுடையவளையும், சுகந்த புஷ்பங்களைத்

தரித்தவளையும், குண்டகியையும், கோளகியையும், கானீனையையும், எல்லாப் பூஜைகளிலேயும் விலக்கல் வேண்டும்.

(சு-எ) ரோகமில்லாதவளாயும், நல்ல அழகுள்ளவளாயும், அவயலக்ஷண முடையவளாயும், புண்ணில்லாதவளாயும், ஓரே வம்சத்திற் பிறந்தவளாயுமுள்ள கன்னிகையையே பூஜிக்க வேண்டும். எவ்விதமான இஷ்டசித்திகளுக்கும் பிராமண கன்னிகை விசேடமாகும். அன்றி ஜயத்தை விரும்பினவர்களுக்கு க்ஷத்திரிய கன்னிகையும், லாபம் வேண்டியவர்களுக்கு வைசிய கன்னிகையும், சூத்திர கன்னிகையும் விசேடமாகும். ஆகையால் எவர்கள் எதனை விரும்புகிறார்களோ அவர்கள் அதற்குரிய கன்னிகையைப் பூஜித்தல் வேண்டும்.

அங்ஙனமாயின் ஒருவன் ஜய முதலியவற்றை விரும்புவானாயின் தனக்குகீழுள்ள குலத்தினரைப் பூஜித்த லடுக்குமோவெனின் அடாது. ஆகையால் பிராமணன் எதை விரும்பின போதிலும் பிராமண கன்னிகையாயும், க்ஷத்திரியர் தன்னினத்திலுள்ள கன்னிகையையும், தனக்கு மேலுள்ள பிராமண கன்னிகையையும், வைசியர் தன்னினத்திலுள்ள கன்னிகையையும் தனக்குமேலுள்ள இரண்டு குலக் கன்னிகைகளையும், சூத்திரர் தன்னினத்திலுள்ள கன்னிகையையும் தனக்கு மேலுள்ள மூன்று குலக்கன்னிகைகளையும் பூஜித்தல்வேண்டும். அங்ஙனம் பூசிக்கப்படுவோர் நல்ல வம்சத்தி லுற்பத்தியானவர்களா யிருத்தல் வேண்டும்.

ஒருவன் நவராத்திரியில் நியமமாய்ப் பூசைபண்ணுவதற்கு அசக்தனாயிருப்பானாயின் அஷ்டமிதினம் அவசியம் பூசை செய்ய வேண்டும். ஏனெனின் பூர்வம் தக்ஷயாகததை அழித்தவளாகிய பத்ரகாளியானவள் அநேக கோடி யோகினிகளோடு தோன்றிய தினமாகையால் அன்று கந்தபுஷ்பங்களாற்பூஜித்து அநேகவிதமான அன்னங்களையும், பாயசம் பழமுதலியவைகளையும் நிவேதனஞ் செய்து ஹோமாக்கினியில் ஓமமு நடத்திப் பின்னர் பிராமண சந்தர்ப்பணை செய்வித்து தேவியைத் திருப்திசெய்தல் வேண்டும்.

(அ-உகூ) அசக்தர்களாயுள்ளார் நவராத்திரி விரதத்தில் சப்தமி அஷ்டமி நவமி ஆகிய இம்மூன்று தினங்களில் முன்சொல்லியவாறு உபவாசத்தோடிருந்து பூஜிப்பாராயின் அவர்களுக்கு ஒன்பது நாளுஞ்செய்த பலனுண்டாகும். ஓ அரசனே! அந்த நவராத்திரியில் தேவிக்குப் பூசைகளாலேயும், ஹோமங்களாலேயும், கன்னிகா பூஜைகளாலேயும், பிராமணசந்தர்ப்பணைகளாலேயும், திருப்தி செய்தலேவிரதபூர்த்தி என்று சொல்லப்படும். இதரவிரதங்களும்

அநேகவித தானங்களும், சகல சம்பத்தையுங் கொடுக்கும்படியான நவராத்திரி விரதத்துக்குச் சமானமாகமாட்டாது. எக்காலத்திலேயும் இவ்விரதமானது தனதானியங்களையும் நல்ல சந்தானங்களையும் ஆயுளையும் ஆரோக்கியத்தையும் வித்தையையும் அரசாட்சியையும் சுவர்க்க மோக்ஷங்களையும் கொடுப்பது.

இந்த மகிமையறிந்து எவரெவர் எதை எதை விரும்பிச் செய்கின்றனரோ அதை யதை அவர்களுக்குக் கொடுக்குந்தன்மை யுடைய இவ்விரதத்தை நடத்தல் வேண்டும். எவர்கள் பூர்வ ஜன்மத்தில் உத்தமமாகிய இந்தவிரதத்தைச் செய்யவில்லையோ அவர்கள் இந்த ஜன்மத்தில் வியாதியுடையவர்களாகவும், தரித்திரர்களாகவும், புத்திரனில்லாதவர்களாகவும் இருப்பர். அன்றியும் மலடியாகவும் விதவையாகவும் இருக்கின்ற ஸ்திரீகள் எவர்களோ அவர்களும், தனமில்லாதவர்க ளெவர்களோ அவர்களும் இந்த விரதத்தைச் செய்யவில்லையென்று யூகிக்கவேண்டியவர். எவன் இவ்வுலகில் பிரசித்தமாகச் சொல்லப்பட்ட நவராத்திரி விரதஞ் செய்யவில்லையோ அவன் இம்மையில் சம்பத்தையடைந்து எப்படி சந்தோஷத்தை யடைந்து வாழ்வான். மறுமையிலும் எப்படி பரலோகத்தை யடைவான். செந்நிறமுடைய சந்தனத்திற்றோய்த்தமிருது வாகிய வில்லபத்திரங்களால் எவன் மஹேஸ்வரியைப் பூசிக்கின்றானோ அவன் பூமியில் அரசனாக வாழ்ந்திருப்பான். உலகில் சிரேஷ்டையாயும், சர்வசித்திகளையுங் கொடுக்கின்றவளாயும், துக்கங்களையெல்லாம் போக்கடிக்கின்றவளாயும், ஆதியாகியுமிருக்கின்ற மகேஸ்வரியை எவன் ஆராதிக்கவில்லையோ அவன் இவ்வுலகில் துக்கமுடையவனாகவும், சத்ரு சம்பந்தமுள்ளவனாகவும் தரித்திரனாகவும் அலைந்துலாவுவன் இது நிச்சயம். தேவியைப் பிரமவிஷ்ணுருத்திரும் இந்திராக்னி குபேர வருண அரக்கரும் தியானஞ்செய்து சிருட்டியாதி சகல பாக்கியங்களையும் அடைந்து ஆனந்தித்திருக்கின்றாரென்றால் அந்த மஹேஸ்வரியை மாநுடராயுள்ளார் ஏன் உபாசிக்கமாட்டார்கள். தேவராயுள்ளாரும், பிதுர்த்தேவராயுள்ளாரும், சுவாஹா ஸ்வதா என்கிற மந்திரப் பிரபாவங்களாலே திருப்தியடைகிறார்கள். யக்ஞங்களில் மகருஷிகள் வேதோச்சாரணையோடு தேவியினுடைய அந்த இரண்டு நாமத்தை உபாசிக்கின்றார்கள். யாதொருதேவியி னிச்சையினால் பிரமதேவன் இச்சகத்தை சிருஷ்டிக்கின்றான். விஷ்ணுமூர்த்தி அநேக அவதாரங்களைச் செய்கின்றனர், ருத்திரமூர்த்தி சகத்தைப்பஸ்மமாகச் சங்கரிக்கின்றனர். அவ்வண்ணந்தன் தொழிலைத் தந்து அவரவர்க்குச் சுகத்தைக்கொடுக்கிற தேவியை மாநுடன் ஏன் உபாசிக்கமாட்டான்.

எந்த புவனங்களிலேயும் தேவமாநுடமிருக பக்ஷிசர்ப்பங்களாக எவனிருந்தாலும், கந்தர்வராக்ஷச பைசாச முதலிய யோனிபேதங்களா யெவனிருந்தாலும், அவனெல்லாம் அந்தச்சத்தி சம்பந்த மில்லாமல் தன்னிஷ்டப்படி சத்தியுள்ளவனாய்ச் சலிப்பதற்குமுடியாது. ஆகவே சர்வ காமியார்த்தங்களையுங் கொடுக்கின்ற அந்த மகேஸ்வரியை எவன் சேவிக்கமாட்டான். தருமார்த்த காமமோக்ஷங்களை யிச்சித்தவன் அந்தத் தேவியின் நவராத்திரி விரதாநுஷ்டானத்தை ஏன் செய்யமாட்டான். அந்தவிரதானுஷ்டான முடையவன் மகாபாதகமுடையவனாயினும், அவன் பாதங்களினின்றும் ஏன் விடுபடமாட்டான். இதி லாலோசனையில்லை.

(ஙഠ-சுங) ஓ ஜனமேஜயனே! பூர்வத்தில் கோசல தேசத்தில் சுசீலனென்கிற ஒருவைசியன் தனஹீனனாயும். அதனால் துக்கமுடையவனாயும், சந்ததிவிருத்தி யுடையவனாயுமிருந்தான். அவனுடைய பிள்ளைகளெல்லாம் அன்னமில்லாமல் மிகுந்தபசியினால் வாடி அந்திப்பொழுதி லேதேனும் பிறராற் கிடைக்கும் சிலபலகாரவகைகளாகிய சிற்றுண்டிகளைப் புசித்துக் காலத்தைக்கழித்து வருவார்கள். அந்த வைசியனும் ஜீவிக்கு நிமித்தம் தனக்குக் கீழ்ப்பட்ட குலத்தவரிடத்து ஊழியஞ்செய்து தன்வயிற்றை வளர்த்துக் கொண்டு தன்னாலியன்றவளவில் குடும்பத்தையும் பாதுகாத்துவருவான். இவ்வளவு வறுமை யுடையவனாயினும் தருமத்தி லாசையுள்ளவனாயும், சதாசாரமுடையவனாயும், சத்தியவாக் குள்ளவனாயும், கோபமில்லாதவனாயும், வறுமையாலுண்டாகுஞ் சித்தசபலமில்லாதவனாயும், குரோத மில்லாதவனாயும், பொறாமையில் லாதவனாயும், நாடோறும் தேவர்கடன் பிதுர்க்கடன்களைக் கழித்து அதிதிபூஜையை நடத்திப் பின் போஜனம் பண்ணுவதாகிய நியமத்திற் றவராதவனாயுமிருந்தனன்.

குணசாலியாகிய அச் சுசீலன் அவ்வாறு வாழுநாளில் ஓர் நாள் ஒன்றுங்கிடையாமல் மிகவும் பசித்தவனாய் தரித்திரத்தை யெண்ணி வாட்டமுற் றிருக்கிறபொழுது சாந்தனாகிய ஓர் பிரமணர் அங்கு வந்தனர். அவரைக்கண்டு பணிந்துநின்று ஓ அந்தணரே! இத்தரித்திரம் எப்படிப் போகும்? அந்தவுண்மையைத் தயவுசெய்து சொல்லும். ஆனால் நான் பணக்காரனாகவேண்டுமென்பது மன்று, திரவியத்தையே யபேக்ஷித்து அதனையேதேடி என்னுடைய ஆயுளைக் கழிக்க வேண்டுமென்னு மெண்ணமுடையவனுமன்று, குடும்ப ✻ போஷணை நிமித்தம் அதனை வேண்டுகின்றேனே யல்லாமல் வேறல்ல. இன்று எனது பாலியனாகிய பிள்ளையும் பெண்ணும் புசிப்பதற் கொன்று

✻ போஷணை - பராமரிப்பு

மில்லையேயென்று ஓயாமலழுகின்றனர். அன்னம் இருக்கிறபக்ஷத்தில் ஒருபிடி யன்னமாவது கொடுப்பேனல்லவா? அவ்வளவு கூடவில்லை. இப்படியே மற்றொரு குழந்தையழ அவனைத் துறத்திவிட்டேன். அவனழுது கொண்டே போயினான். இவைகளை எண்ணியெண்ணி என்மனம் மிகவும் வாட்டமடைகிறது. இதற்கெல்லாம் பணமில்லாமல் என்ன செய்வேன். மற்றொரு பெண்ணுக்கோ கலியாணம் செய்யுஞ் சமயம் வந்திருக்கிறது பணமோயில்லை. என் செய்வேன் எங்கள் குலத்தில் பத்துவயதுக்கு மேற்பட்டால் கலியாணத்துக்கு யோக்கியமில்லை. காலம் தவறிப்போகிறது. ஓபிராமணரே! இவைகளால் மிகவுந்துக்கிக்கிறேன். நீரெல்லாந்தெரிந்தவராகையால் இவ்வறுமை விட்டொழிய தவமாவது தானமாவது விரதானுஷ்டானமாவது மந்திரசெபமாவது சொல்லும், என்னால் போஷிக்கவேண்டிய குடும்பத்தை நான் போஷிக்கவேண்டும். அது மேற்கூறியவற்றுள் எது செய்தாலாகும்? தனத்தை யதிகமாக அபேக்ஷிக்கவில்லை. குடும்பபோஷணைக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வுளவே நான்விரும்புவது. ஆகையால் எதையாவது சொல்லுவீரானால் உம்முடைய அநுக்கிரகத்தால் என் குடும்பம் சுகத்தையடைந்ததாகவேற்படும். நன்றாயோசித்து நானெது நடத்தத் தக்கதோ அதைச்சொல்லுமென்று பலவாறு இரங்கிக் கேட்டனன்.

(சுசு-ருள) இவ்வாறு அந்த வைசியன் சொல்லக்கேட்ட வராகிய பிராமணோத்தமா மிகவுஞ் சந்துஷ்டராய் அந்த வைசியனைப்பார்த்து ஓ வைசிய சிரேஷ்டனே! நீ தவமுதலியவற்றி லொன்றுஞ் செய்யவேண்டாம். மங்களப் பிரதமாகிய நவராத்திரி விரதத்தையநுட்டித்துத் தேவியினுடைய பூஜையும், ஹோமமும், பிராமண போஜனமும், தேவி மந்திர ஜபமும், அந்த ஜபம் சித்தியாவதற்கு ஹோமமும், தர்ப்பணமும் உன்சத்தியளவாக நடத்து வையேயாயின் நீ உத்தேசித்த காரியமாகிய தனலாப முண்டாகிறது. ஓ வைசியனே! இதைக்காட்டிலும் வேறுவிரதம் இப்பூ மண்டலத்திலில்லை. இந்த விரதம் மகிமையுடையதுஞ் சுகத்தைக் கொடுப்பதுமாயுள்ளது. எவனாவது இந்த நவராத்திரி விரதத்தை விடாது அநுட்டிப்பானானால் அவன் ஞானத்தை விரும்பினாலும் சத்துருநாசத்தை விரும்பினாலுங் கொடுக்கும் பெருமையுடையது.

முன் ராமமூர்த்தி ராஜ்யத்தையிழந்து ஆரணியஞ்சென்று அவ்விடத்திற் சீதையையுந் தொலைத்துக் கிஷ்கிந்தையையடைந்து காமபீடிதராய் அவ்வக்னியால் கொளுத்தப்பட்டு மகாதுக்கத்தை யடைந்திருக்குஞ் சமயத்தில் நவராத்திரி விரதத்தை யநுட்டித்து

விதிவழியாகத் தேவியைப்பூசித்து அவளுடைய அநுக்கிரகத்தைப் பெற்றுத்தீரமுடையவராய்ச் சேதுபந்தனஞ்செய்து மண்தோதரித் தலைவனாகிய ராவணனையும், மகாபலிஷ்டனாகிய கும்பகர்ணனையும், அவர்களுடைய மக்கள் முதலிய யாவரையுஞ் சங்கரித்து விபீஷணனைரக்ஷித்து அயோத்தியை வந்தடைந்து அகண்டராஜ்யாதிபதியாய் இவ்வுலகைச்சுகமாகவாண்டு வந்தனர். ஓவைசியனே! ராமமூர்த்திக்கு நேரிட்ட காதுக்கத்தைப்போக்கி மிக்கசந்தோஷத்தைக் கொடுத்தாகும் இந்த நவராத்திரி விரதமென்றுசொல்ல, அதைக்கேட்ட வைசியன் அவரையே தன்னுடைய குருவாகக்கொண்டு மாயாபீஜ சகிதமாகிய தேவிமந்திரத்தையுபதேசஞ்செய்யப்பெற்று மிகுந்தபத்தியோடும் நவராத்திரிவிரதத்தை மேற்கொண்டு தேவிபூஜையை நானாவித திரவியங்களால் திருப்தியாகச் செய்யத் தொடங்கி ஒன்பதுவருடம் அந்தமாயாபீஜ ஜபத்தோடு செய்துவந்தனன். ஒன்பதாவது வருடம் மஹாஷ்டமிதிதியில் அர்த்தராத்திரியில் மகேஸ்வரி வெளிப்பட்டுத் தரிசனங் கொடுத்து அவன் வேண்டியவரங்களெலலாந்தந்து அவனை என்றும் வறுமையணுகா வண்ணங் கிருததிருத்தியனாக்கிச் சென்றனள்.

இருபத்தேழாம் அத்தியாயம்

நவராத்திரி மகாத்மிய கதனம் முற்றிற்று.

ஆஉ அத்தியாயம் உஎ-க்குச் சுலோகம் (கருருஅஏ)

உ

திருபரசுந்தர்யை நம:

இருபத்தெட்டாம் அத்தியாயம்

ஸ்ரீ ராமசரிதம்

ஓமஹருஷிகாள்! இது காறும் நவராத்திரி விரதபூஜையில் கன்னிகைகளைத் தியானித்து வழிபடுதலாகியாகிய விரதபூர்த்தியின் விதிமுறைகளையும், சுசீலனென்கிற வைசியன் ஸ்ரீ ராமமூர்த்தி நவராத்திரிவிரதத்தை யநுஷ்டித்தபின்னரே இழந்த சீதையையும், ஒழிந்த ராஜ்யத்தையும் பெற்று அகண்டமண்டலாதிபதியாய்

வாழ்ந்திருந்தாரென்கிற சரித்திரத்தை ஓரந்தணரால் கேள்வியுற்றுத் தானும் அவ்விரதத்தை யனுஷ்டித்துத் தன்னைவிட்டுப் பிறியாதிருந்த வறுமைக்கு விடைகொடுத்துத் தன்னிடம் வருவதற்கஞ்சியிருந்து செல்வந் தன்னை விட்டு நீங்காதிருக்கத் தேவியனுக்கிரகம் வரப் பெற்றுயந்த வரலாற்றினைச் சொல்லி வந்தோம் இனி, ஸ்ரீ ராமமூர்த்தி இந்த விரதத்தை யனுஷ்டித்ததற்குக் காரணமும், அனுஷ்டித்த பின்னர் அவர் சீதையையும் ராஜ்யசெல்வத்தையும், பெற்ற வரலாறும் மூன்று அத்தியாயத்தாற் கூறுகிறோமென்று சூதபகவான் சொல்லத்தொடங்கினர்.

(க-கஅ) ஜனமேஜயன் வியாசமுநிவரைநோக்கிச் சுகத்தைக் கொடுப்பதாகிய தேவிவிரதத்தை ஸ்ரீராமமூர்த்தி எவ்வாறு அநுஷ்ட்டித்தார்? எவ்விதமாக ராஜ்யத்தை இழந்தார்? என்ன காரணத்தால் மனைவியாகிய சீதையை இழந்தார்? இவற்றைச்சொல்ல வேண்டுமென்று கேட்க வியாசமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

பூர்வம் சூரியவம்சத்திற் பிறந்தவனாயும், தெய்வபக்தி பிராமண விசுவாச முதலியவற்றில் மறவாத அறிவுடையவனாயும், அயோத்தியாபுரவாசியாயும், ஸ்ரீ மானாயுமுள்ள தசரதனென்னும் ஓராசனிருந்தான். அந்த அரசனுக்கு உலோகமெல்லாம் பிரசித்தியாய்ப் புகழ ராமலக்ஷ்மண பரத சத்ருக்னர்களென்று நான்கு குமாரர்கள் பிறந்தார்கள். அவர்களில் கௌசலைகுமாரன் ராமமூர்த்தி, கைகேசி குமாரன் பரதன், சுமித்திரை குமாரர்கள் இரட்டைப்பிள்ளைகளாகிய லக்ஷ்மண சத்ருக்னர்கள். அந்நால்வருக்குணத்திலும் ரூபத்திலும் சமானர்களாய்த் தனுர்வித்தைமுதலிய நானாவித்தைகளில் தந்தை மகிழத்தக்க சமர்த்தர்களாய் உபநயனசம்ஸ்காரம் பெற்றவர்களாய் வாழும்நாளில் விஸ்வாமித்திர முனிவர்வந்து தசரதனைப் பார்த்து உன்னுடைய மூத்தகுமாரனாகிய ராமனை என்னுடனனுப்ப வேண்டுமென்று காரணத்துடன் சொல்லத் தசரதன் அவரை யனுப்புவதற்குடன் படாது மனம்நொந்து பின்ன ரவருக்கஞ்சி அவர் வேண்டியபடியே பதினாறு வயதுள்ள ராமனை லக்ஷ்மணருடன் கூட்டி விஸ்வாமித்திரர் வசம் ஒப்புவித்து விடை கொடுத்தனர். முனிவரும் இவர்களை யழைத்துக்கொண்டு போகும்போது மார்க்கத்தில் கோரரூபிணியாயும் ருஷிகளுக்குத்துக்கத்தை விளைவிக்கின்றவளாயுமுள்ள தாடகை என்கிற ராக்ஷசியை ஸ்ரீ ராமமூர்த்தி ஒரே பாணத்தால் சங்கரித்துச் சுபாகு என்னும் ராக்ஷசனை யடித்து மாரீசனென்பவனைத் தன் பாணவேகத்தினால் இறந்து போனவனைப் போலாக்கினர்.

இங்ஙனமான பெரிய கிருத்தியங்களை ராமலக்ஷ்மணர்கள் செய்து யாகத்துக்கோ ரிடையூறில்லாம னடத்தி விஸ்வாமித்திர ரோடு மிதுலைக்குப் போகும்போது ராமர் மார்க்கத்திலிருந்த முனி பத்தினியாகிய அகலிகையைச் சாபத்தினின்று விடுவித்து அவளைப் புனிதமாகிய மங்கையாக்கி மிதுலா நகரத்துக்குப்போய் சனக மகாராஜாவினால் பந்தயமாக நியமிக்கப்பட்ட ருத்திர மூர்த்தியினா லெறியப்பட்டதனுசைமுறித்து இலக்குமி அம்சமாகியும் ஜனகபுத்திரியாகிமுள்ள சீதையை விவாகஞ்செய்து கொண்டனர். பின்னர் சனகமகாராஜன் தான்பெற்ற பெண்ணாகிய ஊர்மிளையை லக்ஷ்மணருக்கும், தன் சகோதரனாகிய குசத்துவசனுடைய இரண்டு பெண்களை அழகுள்ளவர்களாகிய பரதர் சத்ருக்கனர்களுக்குங் கொடுத்துக் கலியாணஞ்செய்து வைத்தான். கலியாணமுடித்த பின்னர் தசரதன் ஸ்ரீ ராமருக்கு ராஜ்ப்பட்டாபிஷேகஞ்செய்ய வசிஷ்டர் முதலியோரிடத்தில் ஆலோசித்து அதற்குரிய சம்பாரங்களைச் சேகரிக்கின்றபொழுது கைகேசி அவைகளைப் பார்த்துத் தன் சுவாதீனத்திலிருக்கின்ற தசரதனை நோக்கி முன் உம்மால் எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள இரண்டுவரங்களை இப்போது கொடுக்க வேண்டும்அவை யென்னெனில், என்குமாரனாகியபரதனுக்கு ராஜ்மும், ராமனுக்குப் பதினான்கு வருடகாலம்வரை வனவாசமு மாமென்றாள்.

(கக௧-உஅ) அச்செய்தி யறிந்த ராமமூர்த்தி சீதாலக்ஷ்மணரோடு அரக்கர்கள் சஞ்சரிக்கின்ற தண்டகாரணியத்தை யடைந்து வன சஞ்சாரியாயிருந்தனன். தசரதன் புத்திரனைவிட்டுப் பிரிந்ததனால் துக்கித்து முன் தனக்கு நேரிட்ட சாபத்தையுஞ் சிந்தித்துப் பிராணனை விட்டான். இச்செய்தி அறிந்த பரதன் தாயாரால் இவ்வளவு தீங்கு நேரிட்டதென்று தந்தையைப்பார்த்து மனநொந்து பின்தன் தமையனாகிய ஸ்ரீ ராமமூர்த்தியினிடஞ்சென்று அவர்சந்தோஷிக்கும் வண்ணம் அரசாங்கத்தைத் தானாளவெண்ணாதகுறிப்பை நன்றாய்க்காட்டிப் பின்னரவராணையால் அயோத்தியை யடைந்து அரசாண்டு வந்தனன். பரதன்செய்தி யிங்ஙனமிருக்க. வனவாசியாய்ப் பஞ்சவடியில் வசித்துக் கொண்டிருக்கிற இராமமூர்த்தியினிடத்தில் சரவணன் தங்கையாகிய சூர்ப்பனகை காமமிகுதி கொண்டு வர, அவளை மூக்கறுத்து அங்கஹீனையாக்கித்துறத்த, அவளங்கங்குலைந்திருப்பதைக் கரன் முதலானவர்கள் பார்த்து அளவிறந்ததே ஜசோடும் விளங்குகின்ற மகாவீரராகிய ராமமூர்த்தியோடு மகாயுத்தஞ்செய்யத் தலைப்பட்டார்கள். அதுகண்ட சத்தியபராக்கிரம சாலியாகிய ராமமூர்த்தி, மகருஷிகளுக்கு க்ஷேமத்தையுண்டுபண்ணு மெண்ண முடையவராய் மகாபலசாலிகளாகிய அவர்களைக் கொன்று சூர்ப்பனகையையும்

அங்கிராவண்ண மோட்டினர். அவளோடி இலங்கையையடைந்து கரதூஷணானை ராமன் கொன்றனென்று இராவணனிடஞ் சொல்ல, அவன் அவர்களிறந்தாரென்று கேட்டமாத்திரத்தில் அடங்காத குரோத முடையவனாய் ரதத்திலேறி மாரீசனிடஞ்சென்று ஓ மாரீசனே நீ உன்மாயையினால் சீதைக்கு ஆசைவிளையும் வண்ணம் ஓர்பொன்மானாய்ப்போவாயென்று சொல்லியனுப்ப, அதுபோலவே அம்மாரீசன்பொன்மானா யுருவங்கொண்டு மகாமாயனாய் ஆச்சரியப்படத்தக்க அவயவத்தோடும் சீதை கண்களாற்காணுமாறு அவள்முன்வந்து * சமீபத்திலுலாவினன்.

(உகூ-சுசு) சீதை யூழாற்றூண்டப்பட்டு நாயகனைப்பார்த்து ஓ என்னாயகனே! அந்த மானினுடைய தோல் என்ன காந்தியாயிருக்கிறது, அவனை நீ என் சுவாதீனப்படுத்த வேண்டுமென்று மிகுந்த ஆசையுடன் கேட்க, இராமரும் ஆலோசனை யற்றுத்தன் தம்பியாகிய லக்ஷ்மணரைச் சீதைக்குக் காவலாக வைத்து வில்லையும்பாணத்தையு மெடுத்துக்கொண்டு அந்தமானை நோக்கிச் செல்ல, அது அவரது கண்ணுக்குத்தோன்றுவது போற் காட்டிப் பின்மறைதலும். மறைந்து போயிற்றே என்று பார்க்கும்பொழுது தோன்றுதலுமான மாயவித்தைகளைக் காட்டி நெடுந்தூரம்போய் அங்கு இவர் கைக்கு அகப்படுவது போல் நின்றது. உடனே ராமமூர்த்தி கோபங்கொண்டு தன் கைவசப்பட்டது போல் நினைத்துக் கபடமாகிய அந்தமானைக்குரூரமாகிய பாணத்தாலடிக்க மாயாவியாயும் இறக்கத் தக்கவனாயும் துஷ்டனாயுமுள்ள மானுருவங்கொண்டமாரீசன் அந்த ராமரடித்த அடியால் நொந்து அதிகதுக்கத்தோடு ஹா! லக்ஷ்மணா!! நானிறக்கிறேன். ஹே! சீதா!! நானிறக்கிறேனென்று இராமர் கூச்சலிடுவதுபோல் ஹீனஸ்வரத் தோடும் பெருங் கூச்சலிட்டனன்.

அவ்வோசை சீதையினுமய காதிற்புக, அவள் அவ்வோசையைத் தன்னாயகனோசையே யாமென்று நினைத்து மனவருத்த முற்றவளாய் இலக்ஷ்மணனைப்பார்த்து ஓ லக்ஷ்மணா! உன்தமையன் உன்னையழைக்கும் ஈனஸ்வரத்தோடு கூச்சலிட்டு இறக்கின்ற செய்தி யறிந்தனையா! சீக்கிரத்திற் போவாய். அதோ கேட்டனையா, இனி நில்லாதே, நீ அவருக்குத் தம்பியல்லவா? அதிவேகமாகச் சென்று வேண்டிய சகாயஞ் செய்வாயென்று மனங்கலங்கிச் சொல்ல. லக்ஷமணர் ஓ அம்மணீ! இவ்வுலகில் ராமனை அடிக்கும் புருஷனு மிருக்கின்றானா! அவன் ஒருவனடிக்க இறப்பானா! நா னெண்ணவில்லை நீ தயிரியத்தை விடாதே, இது இங்குவந்த பொன் மானினுடைய மாயவஞ்சனையென்றெண்ணுகிறேன். அன்றியும் இந்த

* சமீபம் - அருகில்

ஆச்சிரமத்தில் சகாய மில்லாம லிருக்கின்ற வுன்னை விட்டு நான் போகக்கூடாது. என்னுடைய அண்ணனும் இவ்விடத்திலேயே இருவென்று ஆக்ஞைசெய்திருக்கின்றார். நா னவராச்ஞையைக் கடக்க அஞ்சுகின்றேன். அந்தமாயமானால் நேரிட்டவஞ்சனையைப் பெரிதாகவெண்ணி உன்னைத் தனியாகவிட்டுப் போகேன். உன்னுடைய சமீபஸ்தானத்திலே பேயிருப்பேன், இதைவிட்டு ஓரடியேனும் எடுத்து வைக்கமாட்டேன். அவரிருவென்ற ஆணையைக் கடக்கேன் கடக்கேனென்றனன். சர்வ லக்ஷணத்தோடுங் கூடியிருக்கின்ற சீதை குணமுடையவளாயிருந்தபோதிலும் ஊழினுடைய பிரேரேபணையினால் அழுது புலம்பி ஏங்கி லக்ஷமணரை நோக்கி அடியில் வருமாறு சில குரூரமான வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினாள்.

ஓ லக்ஷமணா! இவ்விடத்திற் காவலிருக்கிறது போல் இருக்கின்ற வுன்னை உன் தமயனுக்குத் துணையாக வந்தவனென்றும், பரதனும் அவ்வண்ணமாக அனுப்பினானென்றும் எண்ணவில்லை. வேறென்ன வெண்ணுகிறே னென்றால், என் னிமித்தமாகவே அந்தப் பரதனு மனுப்பினானென்றும், நீயு மதுபோலவே என்னிடத்தி லாசையுள்ளவனாய் வந்திருக்கிறாயென்றும் எண்ணுகிறேன். ஓ துர்ப்புத்தியுடையவனே! நா னப்படிப்பட்ட விபசாரியல்லள் இராமமூர்த்தி யிறந்திருப்பாரானால் பிராணனை விடுவேனேயல்லாது அவரிறப்பை எதிர்பார்த்திருக்கின்ற வுன்னைக் காமத்தினாற் பர்த்தாவாகக் கொள்ள அபேக்ஷிப்பேனா! ஒருக்காலும் அபேக்ஷிக்க மாட்டேன். நான் சீவித்திருப்பேனா! இரேன்! என்று விதிர்விதிர்த்து மிகவுந் துக்கித்து மீண்டும் ஓலக்ஷ்மணா! நீ போனாற்போ இருந்தாலிரு உன்னுடைய அபிப்பிராயம் எதுவோ தெரியவில்லை. தருமாத்மாவாகிய தமையனாரிடத்தில் நீ வைத்திருந்த சிநேகம் எப்படிப்போய் விட்டதோ அறியேனென்று வாய்போசாதிருந்தனள்.

(சுரு-சுக) லக்ஷமணர் சீதையின் வார்த்தையைக்கேட்டு மனவருத்த முடையவராய் சீதையைப் பார்த்து விக்கி விக்கி அழுது ஹே சீதே! என்னிடத்தில் மிகவும் கர்ண கடூரமாயுள்ள வார்த்தையைச் சொன்னாயல்லவா? இது ஏதோ பின் விளைவைத் தெரிவிக்கின்றது, அது இப்போதறியக்கூடவில்லை. அது விளையும் போதறிவேன். நீ இப்போது சொல்லக்கூடாத மிகவும் குரூரமானவார்த்தையெல்லாம் சொல்லுகிறாயென்று மிகவும்ரோதன துவனமுது இருப்பதற் கஞ்சிச் சீதையைவிட்டுப் போயினான். லக்ஷமணன் போனவுடனே கபடரூபம் வகித்த இராவணன் சன்னியாசி வேடம் பூண்டவ்விடம் வந்தான்.

சீதை அந்த ராவணனைச் சன்னியாசி என்றே நினைத்து அன்புடன் அர்க்கிய பாத்தியங்கொடுத்து. கந்தமூல பலங்களாகியபிக்ஷையளித்து நிற்க, துஷ்டனாகிய இராவணன் ஹே சீதே! நீ யார்? உன் பிதாயார்? உன் புருடன் யார்? இவ்வனத்தில் மூடஸ்திரீகள் போல் ஏன் றனியே யிருக்கின்றாய்? தேவஸ்திரீக்குச் சமானமாகிய நீ உப்பரிகையில் வாசஞ்செய்ய வேண்டியவள். அதைவிட்டு இந்தப்பர்ணசாலையில் ருஷி பத்னியைப்போல் யாருமில்லாத காட்டில் ஏன் வாசம்பண்ணுகிறாயென்று மிக்கவினயத்துடன் மிருதுவான வார்த்தையோடு கேட்க, சானகி கபட சன்னியாசி யென்றறியாமல் தெய்வகதியாய் நேரிட்ட சன்னியாசியென்று நினைத்து அந்த இராவணனைப் பார்த்து ஓ முநி ஸ்ரேஷ்டரே! என்பிதா ஜனகமாராஜன், என் பெயர் சீதை, என்னாயகன் தசரதனென்கிற இராஜாவி னுடைய நான்கு குமாரர்களில் மூத்தவராகிய ஸ்ரீ ராமமூர்த்தி, கைகேயினிமித்தமாய் லக்ஷ்மணரோடு காட்டில் பதினான்கு வருஷம் இருக்கவேண்டி வந்த காரணத்தால் வனத்தில் வந்திருக்கின்றேன். எனது நாயகருடைய தோள்வலியால் பயமில்லாமல் தனியே யிருக்கின்றேன். என் வேண்டுகோளால் அவர் ஓர் பொன்மானைப்பிடித்துவர வெளியேபோயிருக்கின்றார். அவர் தம்பியாகிய லக்ஷ்மணரும் தமையனாருடைய தொனியைக் கேட்டு இப்போது தான் போயினார். அவ்விருவருடைய தோள்வலியிருக்கும்போது எவ்விடத்தில் நான் தனியேவசித்தாலும் பயமில்லை. என் கற்புநிலை கொடாது, நீர் அவர்களைப் பார்க்கவேண்டும். இதோ வந்துவிடுவார்கள். அவர்களும் உம்மைக்கண்டால் மிகவும் பிரியத்துடன் உமக்குப் பூசை விதிப்படி நடத்துவார்கள்.

உம்மைப்பார்த்தால் சாக்ஷாத் விஷ்ணுஸ்வரூபம்போ லிருக்கின்றது. அதனால் நானும் பூசித்தேன். கோரமாகிய ராக்ஷசர்கள் நெருங்கியிருக்கின்ற இந்த வனத்தில் முனிவர்களுடைய ரக்ஷணையின்பொருட்டு இவ்வாச்சிரமம் முக்கியமாயேற்படுத்தியதால் சற்றிரும். பயமில்லாமல் உம்மையொன்று கேட்கிறேன். திரிதண்ட தாரியாய் வந்திருக்கிற நீர்யார்! என்முன்னிலையில் உண்மையைச் சொல்லு மென்றனள்.

(சுசு-சுகூ) நான் இராவணன், ஸ்ரீமானாகியும் மண்டோதரிக்கு நாயகனாகியுமுள்ள லங்காதிபதி. உன் னிமித்தமாய் இவ்வடிவத்தோடு வந்திருக்கிறேன். என் தங்கையாகிய சூர்ப்பனகையால் ஜனஸ்தானத்தில் என் தம்பிமாராகிய கரதூஷணர்க ளிறந்தார்களென்று கேள்விப்பட்டு அவளுடைய பிரேரேபணையால் யான் இவ்விடம்

வந்தேன். ஓ சீதையே! நீ ராஜ்யமிழந்தவனாயும், தரித்திரனாயும், பலஹீனனாயும், வனவாசியாயும், மாநுடனாயு முள்ள ராமனை விட்டு என்னைப் புருஷனாகவரித்துக்கொள். கொள்வை யேயாயின், மந்தோதரிக்கு மேல் நீ பட்டஸ்திரீயாக விருக்கலாம். நானவளுக்கு நாயகனாயிருப்பதுபோல உனக்குத்தாசனாக விருப்பேன். நீ எனக்கு எஜமானியாயிருக்கலாம். திக்பதிகளைச் செயித்தவனாகிய நான் உன் பாதங்களில் இதோ விழுகிறேன். என்னைப் பாணிக்கிரஹணஞ் செய்து கொள்வாய். ஓராஜஸ்திரியே, பூர்வத்தில் நான் உன் பிதாவினிடத்திலேயே உன்னையாசித்தேன். அவர் பணயச்சுயவரம் செய்திருக்கிறேன். அது உன்னால் கூடும்பக்ஷத்தில் நீ சீதையைப் பெறலாமென்றனர். நான் சைவதனுசென்கிற பயத்தினால் சுயம்வரத்திற்கு வரவில்லை, அது முதல் என் மனம் உன்னை நினைந்து நினைந்து விரகதாபமடைந்திருக்கிறது. இவ்வனத்திலிப் போதிருக்கிறதாகக் கேள்விப்பட்டு முன்கொண்டிருந்த ஆசையைப் பூர்த்திசெய்துகொள்ள அதிவேகத்தோடும் வந்தேன். இனியேனும் என்னுடைய சிரமத்துக்குக் கூலி கொடுப்பாயென்று கூறினன்.

இருபத்தெட்டாம் அத்தியாயம்

ஸ்ரீ ராமசரிதம் முற்றிற்று

ஆஉ அத்தியாயம் உஅ-க்குச் சுலோகம் (கசுஉஎஏ)

உ

திரிபுரசுந்தர்யை நம:

இருபத்தொன்பதாம் அத்தியாயம்

இ து வு ம து.

(க-கூ) இவ்வாறு இராவணன் கூறியவார்த்தையைச் சீதா தேவி கேட்டுப் பயந்து இந்தராக்ஷசன் என்ன செய்வானோவென்று நடுங்கிச் சிறிது மனதைத் திடஞ்செய்து இராவணனைப் பார்த்து ஓ பௌஸ்தியனே! நீ காமமோகிதனாய்ப் பிரயோசனமற்ற வார்த்தைகளைச் சொல்லுகிறாய். இதுவென்ன மடமை? ஜனக வம்சத்திற் பிறந்தவளாகிய நான் விபசாரத்தொழிலுக்கு வருவேனா! நீ லங்கையைப்போய்ச் சேருவாய் இப்போது ஸ்ரீ ராமர் வருவாராயின் உன்னைக்கொன்றுவிடுவார். என் வார்த்தையைத்தடுத் திங்கிருப்பையாயின் என்னிமித்தமா யுனக்குமரணம் வருவதிற

சம்சயமில்லை, என்று சொல்லிக் கொண்டே பர்ணசாலைக்குள்ளே நுழைந்து ராமருடைய நித்தியாக்கினியைத் துணையாக நினைத்து அவ்வக்கினி சந்நிதானத்தினின்று இராவணை நோக்கி ஓராவணா! நீ போய்விடு என்றுசொல்ல. இராவணன் தன்னுடைய நிஜமான ரூபத்தைத்தாங்கி, உள்ளத்திற்பயந்து கண்ணீவிட் டழுகின்ற அந்தச்சீதையைச் சமீபித்துப் பலாத்காரமாய்க் கிரகித்து வெளியேவர, அச்சீதை ராமா ராமர்வென்றும், லக்ஷ்மணா லக்ஷ்மணா வென்றும் அடிக்கடிகூச்சலிட்டுப்புலம்பினள், அந்தப் பாபிஷ்டன் சிறிதும் மனமிரங்காது ரதத்தில் வைத்துக்கொண்டு அதிவேகத்துடன் போயினான். போகின்றபொழுது அம்மார்க்கத்தில் அருணன்குமாரனாகிய சடாயுகண்டு இது வென்னமோசமென்று தடுக்க இராவணனு மெதிர்த்து அச்சடாயுவோடு அந்த வனத்தில் யாவரும் கண்டஞ்சும்படியான பெரும்போர்செய்து ஜடாயுவினுடைய சிறகுமுறிய அடித்துச் சீதையைக்கைவிடாமல் தன்னுடைய லங்காபுரிக்குப் போய் அசோகவனத்தில் எண்ணிறந்தவசுரர்கள் சூழ்ந்திருக்க அவர்கள் மத்தியில் சீதையை இருக்கச்செய்தனன். அவளென்செய்வாள் அந்தோ! அந்தோ! என்று குருவி போல் கூவிக்கொண்டிருந்து ராவணன் தன்னிடம் வந்து தன் காமத்தை வெளியிடுந்தோறும் சாம தான முதலியவைகளால் அவனைத்தடுத்துத் தன்னுடைய பதிவிரதா தருமத்தைக் கைவிடாமல் கொஞ்சமேனுஞ் சலிக்காமல் அவ்வசோகவனத்தில் வாழ்ந்து கொண்டிருந்தனள்.

(க0-ககூ) இவள் செய்தி இங்ஙனமிருக்க, இராமர் அந்தமானை யடித்து இந்தமான்றோல் சீதைக்குச் சந்தோஷத்தை விளைவிக்கு மல்லவாவென்று மகிழ்ந்து அத்தோலை எடுத்துக்கொண்டு வரும்போது மார்க்கத்தில் எதிரே லக்ஷ்மணர் வருதலைப்பார்த்து ஓ தம்பீ! ஏனிப்படிச் செய்தனை? பாபாத்மாவாகிய மாரீசன் செய்த மாயவோசையைக் கேள்வியுற்றா என்னைப் பாதுகாக்கும் பொருட்டு என் மனையாட்டியைத் தனியேவிட்டு வந்தனை என்று சொல்லிக் கொண்டே விரைவாய்வர, சீதையினுடைய வாக்பாணத்தால் மிகவும் நொந்திருக்கிறலக்ஷ்மணா ஹே ராமப்பிரபோ! ஏதோ ஒரு தீங்கானகாலம் சமீபித்திருக்கிறபடியால் நான் வந்துவிட் டேனேயல்லாமல் இல்லாவிடில் நான் வருவேனா! இதிற் சந்தேகமில்லையென்று சொல்லிக்கொண்டே தானும் விரைவாய்ப் பர்ணசாலையை நோக்கி வந்தனன். அங்கு இருவரும் சீதையைக்காணாமல் மிகுந்த வருத்தமுடையவர்களாய் அவளைத் தேடப்பிரயத்தனப்பட்டுத் தேடித்தேடி சடாயுவிழுந்திருக்கிற விடஞ் சேர்ந்து அந்தச்சடாயு சிறிது பிராணனுடையவனாய்ப் பூமியில்

வீழ்ந்திருப்பதைப் பார்த்து வருந்த, அவன் ஓராமா! சீதையை இப்பொழுது தான் இராவணன் கொண்டுபோகக் கண்டு நான் கூடியவரையில் தடுத்து யுத்தஞ்செய்தேன்; செய்தும் அவனை வெல்வதற்குக் கூடாமல் விழுந்துவிட்டேன். அவனிதோ போகிறான். அவனைப்பாருங்களென்று சொல்லிவிட்டுயிர் விட்டனன். இராமமூர்த்தி அவன் தன்பால்வைத்த அருமையினால் யுத்தஞ்செய்ததை எண்ணி ஏக்கமுற்று அவனுக்குச் செய்யவேண்டிய தகனாதி கிரியைகளை யெல்லாங் குறைவற நடத்தி அங்கிருந்து புறப்பட்டு மார்க்கத்தில் நேர்ந்த கபந்தாசுரனைச் சங்கரித்து அவனைச் சாபத்தினின்றும் விடுவித்து அக் கபந்தன்சொல்லிய வார்த்தையினால் கிட்கிந்தையில் சுக்ரீவனைச் சிநேகித்து அவன் வேண்டுகோளால் மகாவீரனாகிய வாலியைக் கொன்று சிரேஷ்டமாகிய கிஷ்கிந்தையினுடைய ராஜ்யசம்பத்தைத் தன்னைச் சரணமடைந்து சுக்ரீவனுக்குக் கொடுத்து அந்த வனத்திலேயே லக்ஷ்மணருடன் மழைக்காலமாகிய நான் குமாதங்களையுஞ் சீதையை நினைத்து நினைத்துப் போக்கினார்.

(உய-ரு) ஓர் நாள் சீதைவிரகத்தினால் வருத்தப்படும் இராமமூர்த்தி லக்ஷ்மணரைப்பார்த்து ஓலக்ஷ்மணா! கைகேசி, தன்னெண்ணம்பூர்த்தியாயிற்றென்று மகிழ்ந்திருப்பாள். ஏனெனில், இராவணன் கொண்டு போன சீதை இவன் கைக்கு அகப்படுவாளா! அவளகப்படாமற்போனால் அவன் பிழைப்பானா! பிழைத்திருப்பதற் கெண்ணாம லிறக்கத்துணிபவன் இந்த அயோத்திக்கு வருவானா வென்று எனக்குண்டாகப் போகும் துக்கத்தை யெல்லா மெண்ணுவாளல்லவா? அவ ளெண்ணப்படியே எனக்கு ராஜ்யம் போய் வனத்தில் வாசம் நிலைத்தது. ராஜ்யம் வரவேண்டுமென் றெண்ணிய தந்தையோ இறந்து போய்விட்டார். மனைவியோ வெளிப்பட்டு துஷ்டனாகிய ராவணனால் மானஹானியடைந் திருக்கின்றாள், இன்னமும் சர்வேஸ்வரன் என்னசெய்யப் போகின்றாரோ அறியேன். மேல் வரப்போகிறதை மானுடர்களால் எப்படி அறியக்கூடும். ஆகையால் இராஜகுமாரர்களாகிய நம்மிருவருக்கும் இன்னமும் துக்ககரமாகிய கதி என்னவரப்போகிறதோ தெரியவில்லை. நாம் மநுவம்சத்திற் பிறந்து வனத்தில் துக்கத்தைய நுபவிக்கின்றோமே இதுமுன்செய்த வினையல்லவா, நீயும் ஊழ்வகையால் போகங்களை விட்டு என்னோடு வெளிப்பட்டுவந்து சகிப்பதற்குக் கூடாமையாகிய என் துக்கத்தை யநுபவிக்கிறாய், நம்மைப்போலும் நம்முடைய குலத்தில் ஒருவரும் அனுபவித்திரார். இதுவரையில் என்னைப்போல் துக்கத்தையடைந்தவராகவும், தரித்திரராகவும், எதற்கு முதவாதவராகவும். *விசாரம் பிடித்தவராகவும் முன்னெவரு

* விசாரம் - கவலை

மிருந்திருக்கமாட்டார். பின்னொருவரும் வரவுமாட்டார். ஹே லக்ஷ்மணா! துக்கசாகரத்தில் மூழ்கிவிட்டேன். நா னென்னசெய்வேன். சகாயமில்லாமலிருக்கிற எனக்குக்கரை யேறுமுபாயமில்லை. எனக்குச்சகாயன் நீ ஒருவன்றான்.

என்னால் செய்யப்பட்ட வினையின்பயனை நானனுபவிக்கிற விஷயத்தில் யாரிடத்தில் கோபிக்கிறது. இந்திரசபையினுஞ்சிறந்த ராஜ்யம் என் கைவசப்படுகிற சமயத்தில் தவறிப்போய் இந்த வனவாசம் கைவசப்பட்டு நிலைத்துப்போய்விட்டதே. தெய்வ நிர்மாணத்தை எவனறிவான்! நம்மிருவருடைய பால்யதசையினால் யௌவனவதியாகிய சீதை தவறிப்போகவும், அவள் துக்கத்தை யனுபவிக்கவும் வந்தது காலத்தின் கொடுமையா? வேறா? ராவணன் மேன்மேலும் விரும்பத்தக்க யௌவனவதியாயும் நல்ல ஆசாரமுடையவளாயுமிருப்பதால் அவன் காவலிலிருக்கின்ற அவளுக்கு என்னவிதமான துக்கங்களுண்டாகுமோ அறியேன். ஓ லக்ஷ்மணா! அவ்வசுரன் எவ்வளவு பலாத்காரஞ் செய்தாலும் என்னிடத்தில் மிகவும் பிரீதியுள்ளவளாதலால் பதிவிரதா தருமத்தை விடுவாளா விடமாட்டாள். அவனுக்குச் சுவாதீனமுமாக மாட்டாள், அவள் ஜனகனுடைய புத்திரியாதலால் விபசாரியுமாகாள்? அவன் நிர்ப்பந்திப்பானாயின் பிராணனைவிட்டு விடுவளேயல்லாமல் இராவணனுக்கு ஒருக்காலுஞ் சுவாதீன மாகமட்டாளென்பது என்னுடைய மனோநிச்சயம். சீதை மரணமடைவாளேயானால் நான் பிராணனை வைப்பேனா வைக்கமாட்டேன். சீதைபோனபின் இந்தத் தேகத்தினால் என்னை பிரயோஜனம்? என்றிவ்வாறு பிரலாபிக்கின்ற ராமரைப்பார்த்துத் தருமாத்மாவாகிய லக்ஷ்மணர் அடியில் வருமாறு சத்யராகிய சிலசொற்களால் சமாதானப்படுத்திச் சொல்லுகிறார்.

(ஙசு-ருரு) ஓ மகாவீரரே! மருட்சியைவிட்டுத் தைரியத்தைக் கொள்ளும், நானந்தநிசனாகிய ராக்ஷசனைக்கொன்று சீதையை யழைத்துக்கொண்டு வருகிறேன். அறிவாளியாகிய புருஷர்கள் தைரியத்தினால் ஆபத்திலேயும் சம்பத்திலேயும் சமபாவமுள்ள வர்களாய்த் தீரமாகவேயிருப்பார் மூடபுத்தியுள்ளவர்கள் அவ்விரண்டிலும் ஏகதேசப்பட்டு அதிலதில் மூழ்கினவர்களாயிருப்பார். ஒருவரோ டொருவர் கூடியிருப்பதும் பிரிந்துபோவதுமாகிய இந்த இரண்டும் தெய்வத்தினுடைய அதீனமாயிருக்கும்போது சோகமெப்படி யுண்டாகும்? அன்றியுங் கூடுதலும் பிரிதலும் தேகத்தினிடத்திலன்றி ஆத்மாவினிடத்திலில்லை. தீயகாலம் வந்த போது ராஜ்யத்திலிருந்த நமக்கு வனவாசம் எப்படி சித்தித்ததோ, சீதாவியோகம் எப்படி

நேரிட்டதோ, அப்படியே நல்லகாலம் வருகிற போது ராஜ்யலாபமும், சீதாதேவியின் வரவு முண்டாகுமல்லவா! சுகமநுபவித்தல் அநுபவியாதிருத்தல், துக்கம்அநுபவித்தல் அநுபவியாதிருத்தலாகிய அநுபவம் வரும்போது அவைகளை அனுபவித்தே தீரவேண்டும். இவை ஒரு பொழுதும் மாறுபடுவனவல்ல. ஓ அண்ணா! சீதையின் சோகத்தை விடு. இப்பொழுது நமக்கு வானரர்கள் பெருங்கூட்டங்களாக விருக்கின்றனர். அவர்கள் நாலுதிக்கிலுஞ் சென்று சீதையைக் கண்டு பிடித்து அவளுடைய க்ஷேமசமாசாரத்தையுந் தெரிந்துகொண்டு வருவார்கள். அதுவுமன்றி நாம்போகவேண்டியமார்க்கத்தையு மறிந்து கொண்டு வருவார்கள். அவர்கள் வந்தபின்னர் நாம் அந்தவிடத்துக்குப் போய் நம்முடைய பராக்கிரமத்தைச் செலுத்தி மகாபாபிஷ்டனாகிய இராவணனைச் சங்கரித்து சீதையைக் கொண்டு வருவோம். இன்னம் நமக்குச் சகாயம் வேண்டுமானால் நம்முடைய சகோதரனாகிய பரதனைச் சைனியத்தோடு வரவழைத்து யாவரும் ஒன்றாகச்சேர்ந்து சத்துருவாகிய ராவணனை அடிப்போம். வீணாக ஏன் துக்கிக்கிறீர். பூர்வத்தில் ஒற்றைத்தேருடைய ரகுமகாராஜன் அஷ்டதிக்கிலுஞ் சென்று யாவரையுஞ் செயித்திருக்கிறார். அவர்வம்சத்திற் பிறந்த நீர் ஏன் பயத்தையடைய வேண்டும். தனிமையா யிருக்கின்ற நானொருவனே தேவாசுரர்களையெல்லாஞ் செயிப்பதாற்குச் சமர்த்தனாயிருக்கிறேன். அண்ணன் மாராகிய நீரும்பரதனும் தம்பியாகிய சத்ருக்னனும், வானரரும் எனக்குத் துணையாய் வரும் பக்ஷத்தில் நீசனாகியராவணனைச் செயிப்பதற்கு என்ன ஆக்ஷேபமிருக்கின்றது. இன்னனும் சகாயம் வேண்டுமானால் சனகமகாராஜனையும் வரவழைப்போம். எவ்விதத்தினாலாவது துராசாரமுள்ள வனாகியும், தேவசத்ருவாகியுமிருக்கின்ற ராவணனைக் கொல்வது நிச்சயம். சுகத்துக்குப்பின்னர் துக்கமும் துக்கத்துக்குப் பின்னர் சுகமும் சகடக்கால்போற் சுழன்று வருவதேயல்லாமல் ஒன்றாவது நிலைத்திருப்பதல்ல. எவனுக்குச் சுகதுக்கங்க ளுண்டாகிற விஷயத்தில் மனமருட்சியுண்டாகிறதோ அவன் சோகமென்கிற சாகரத்திலேயே மூழ்கவேண்டியவனேயன்றி ஒருக்காலும் சுகமடையான் சுகதுக்கங்கள் மாறிவருமென்பதற்கு ஓர் திருஷ்டாந்தங் கூறுகின்றேன்.

ஓ ராமமூர்த்தி பூர்வத்தில் தேவர்களெல்லாங்கூடி நகுஷனுக்கு இந்திரபட்டங்கட்டியபொழுது அவனுக்கு முன்னிருந்த இந்திரன் விசனமுற்றுப்பயந்து தன்னுலகைவிட்டுத் தாமரை நாளத்தில் அநேக நாள் ஒளித்திருந்தனன். பின்னர் அந்த நகுஷன் இந்திராணியை யபேக்ஷித்து மகருஷிகளை யவமதிக்க அகஸ்தியர்கோபித்துச் சர்ப்பமாகெனச்சபிக்கவும், அவ்வுலக வாழ்க்கையையிழந்து அவன்

மலைப்பாம்பாய்ப்பூமியில் வீழ்ந்தனன். ஒளித்திருந்த இந்திரன் முன்போல் தன்னுலகடைந்தனன். இவ்விருவரும் சுகத்தையாவது துக்கத்தையாவது ஒருபடித்தாயனுபவித்தார்களா? இதனால் இந்திரனாயிருப்பினும் சுகதுக்கம் மாறிமாறிவருமென்பது நிச்சயமாயிற்று.

ஆகையால் வருத்தம் வந்தபோது துக்கப்படாது அது நீங்குதற்குரிய பிரயத்தனத்தில் மாத்திரம் புத்திவைத்திருக்க வேண்டும். ஓ மகானுபாவரே! நீர் சர்வக்ஞராயிருக்கின்றீர். அப்படிப்பட்டநீர் அறிவில்லாதவர்போல் சித்தத்தில் சோகம் ஏன்கொள்ளுகிறீரென் றிவ்வண்ணம் இலக்ஷ்மணர் கூறியஞானமொழிகளைக் கேட்டு ராமர் துக்கத்தைவிட்டு மிகவும் நிர்மலசித்தத்தையுடையவராயினர்.

இருபத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

ஆஉ அத்தியாயம் உகூ-க்குச் சுலோகம். (கசுஅஉஏ)

உ

ஹ்ரீங்காரபோதிதாயைநம:

முப்பதாம் அத்தியாயம்

இ து வு ம து.

(க-உசு) ஓ ஜனமேஜயனே! இவ்வண்ணம் ஞானவிசாரத்தாக் கவலைப்படுகிறதில்லை யென்கிற பிரதிக்ஞையோடு எப்போது இராமர் செயலற்றிருந்தனரோ அப்போதே ஈஸ்வராக்ஞையால் நாரதர் மகதி யென்கிற வீணையைத் தடவி பிரஹத்ரதம் என்கிற சாமத்தைக் கானம் பண்ணிக்கொண்டு இராமரிடத்தில் வர ஸ்ரீராமர் அவரைப் பார்த்து எழுந்திருந்து பரிசுத்தமான ஆசனங்கொடுத்து நமஸ்கரித்து நின்றனர்.

நாரதர் அவரைப் பாரத்து சமீபத்திலிருக்கலாமென் றாக்ஞாபிக்க அப்படியே யிருந்தனர் நாரதர் ஓ ராமமூர்த்தி! நீயும் உன் தம்பியும் மனவருத்தத்தோ டிருப்பதாகத் தெரியவருகின்றது. உங்களுடைய க்ஷேமம் யாது? ஹே ராகவா! அறிவற்றவரைப் போல் ஏன் துக்கப்படுகின்றாய். சீதையைத் துராத்மாவாகிய இராவணன் அபகரித்ததை யாநுமறிந்தேன் யான் சில காரிய நிமித்தமாய்க் சுவர்க்கலோகம் போனபொழுது அங்கு நடந்த சில காரியங்களைத் தெரிந்துகொண்டு உன்னிடம் வந்தேன். என்னையெனின், இராவணன் தனக்கு நேரும் மரணவகை யறியாமல் அஞ்ஞானத்தால் சீதையை யபகரித்தானென்றும், நீ அவதரித்தது அவனைச் சங்கரிக்கும்

பொருட்டென்றும், அது சமீபித்தபடியால் சீதையை இராவணன் கொண்டு போனானென்றும், இராவணனுக்குச் சீதையினிடத்திலுண்டான மோகம் பூர்வ ஜன்ம சம்பந்தமென்றும், அதாவது முன் ஜன்மத்தில் சீதை தவத்திற் சிறந்த ஓர் முனிமகளாய் வனத்திற் றவஞ்செய்து கொண்டிருக்குஞ் சமயத்தில் இராவணன் கண்டு மோகித்து நீ என் மனைவியாக வேண்டுமென்று பிரார்த்திக்க அவனிணங்காமல் கோபித்தலைக் கண்டு அவன் பலாத்காரமாய் அவளுடைய கையைப்பிடித்திழுத்தனனென்றும், அந்த க்ஷணமே அவனைப் பார்த்து ஓ துராத்மாவே! உன்னைக் கொல்லு நிமித்தம் அயோநிஜையா யிவ்வுலகில் வந்து பிறப்பேனென்று கடுஞ்சாபமிட்டு இவனால் தொடப்பட்ட இந்தத் தேகத்தையும் வைத்திரேனென்று அக்கினியிற் பிரவேசித்துத் தேகத்தை விட்டனளென்றுங் கேள்வியுற்றேன்.

அதுபோலவே பாம்பையெடுத்துத் தன் கழுத்திற் போட்டுக் கொண்டதுபோல் அந்த ராவணன் தன் குலமெல்லாம் நாசமடையச் சீதையைக் கொண்டுபோயினான். நீயும் தேவர்களுடைய பிரார்த்தனையால் விஷ்ணுமூர்த்தியினுடைய அம்சத்தோடும் அஜமகாராஜன் வம்சத்திற் பிறந்தனை. இனி இராவணன் சம்ஹாரமாவதிலென்ன சந்தேகமிருக்கிறது, ஓராமா! பதிவிரதையாயும், தருமத்திலூக்கமுள்ளவளாயுமுள்ள சீதை அசோகவனத்தில இராப்பகல் உன்னையே தியானித்துக் கொண்டிருக்கிறாள் அவளுக்கு ஆகாரமாக இந்திரன் காமதேனுவின் பாலை ஓர் பாத்திரத்தில் விட்டு அனுப்பியிருக்கிறான், அவள் அதை உண்டு பசிதாக மில்லாமல் சுகமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறாள். நானும் பார்த்தேன். நி அவள் பொருட்டாகக் கவலைப்படவேண்டாம் தைரியமாயிருப்பாய்.

ஓராகவா! அந்த இராவணனைச் சங்கரிப்பதற் கேதுவாகிய உபாயத்தை இனிச்சொல்லுகிறேன். இப்போதுநடப்பது ஆஸ்வீஜ மாதமாகையால் இம்மாதத்தில் பகவதியினுடைய பிரீதியாக நவராத்திரி விரதத்தை நடத்துவாய், அந்த ஒன்பது இராத்திரியும் உபவாசமாயிருந்து மகேஸ்வரியினுடைய பூஜையும், ஜபமும் ஹோமமும், செய்து வருவையேயாயின் அது எல்லாச் சித்திகளையுங் கொடுக்கும். அன்றியும் அந்தப்பூஜையில் அஜபலியும், பலிக்குப்பத்து ஹோமமும் செய்யும் பக்ஷத்தில் வீர பராக்கிரம சாலியாவாய். இந்த விரதத்தைப் பூர்வத்தில் திரிபுரத்தைச் சங்கரிக்க ருத்திரரும், மதுவைச் சங்கரிக்க மேருபர்வதத்தில் விஷ்ணுவும், விருத்திராசுரனை வதைக்க இந்திரனும், ஏனையதேவர்களும், விசுவாமித்திரர், பிருகு வசிட்டர், காசிபர், மனைவியையிழந்த பிரகஸ்பதி முதலியமுனிவர்களும் அநுஷ்டித்து அவரவர் வேண்டியவற்றைப் பெற்றனர்.

ஹே ராமா! சுகத்தை அபேக்ஷித்தவன்மங்களகரமாகிய இவ்விரதத்தை யநுஷ்டிக்க விரும்புவான், கஷ்டத்தையே

யபேக்ஷித்தவன் விரும்பான் ஆகையால் ஒ ராமா! ராவணனை வதை செய்வதற்குரிய ஊக்கத்தோடு முயற்சி யுள்ளவனாய் விதிப்படி விரதத்தை நடத்துவாயென்றனர். ஸ்ரீ ராமர் நாரதரைப்பணிந்து அந்தத் தேவியானவள் யார்? என்ன மகிமையுள்ளவள்? எல்லா நுருவங்கொண்டவள்? என்ன பெயருள்ளவள்? அவளுடைய விரதம் எப்படிப்பட்டது? தேவரீர் சர்வக்ஞராகையால் இவையெல்லாம் விதிமுறை யாகச் செல்லவேண்டுமென்று பிரார்த்தித்தனர்.

ஒ ராமா! என்னால் சொல்லப்பட்ட தேவி யாரெனின்? எக்காலத்தும் நித்தியமா யிருக்கின்ற ஆதிசத்தி. அவள் மகிமை யென்னையெனின், துக்கங்களைப் போக்கடிப்பவள், சகலகாமங்களையும் கொடுப்பவள், யாவராலும் பூசிக்கத்தக்கவள், பிரமன் முதலிய சேதனர்களுக்கெல்லாம் காரணமாயுள்ளவள், யாவரும் அவளுடைய சத்தியைவிட்டுச் சலிப்பதற்குச் சக்தியில்லாதவர், பிரபஞ்சத்துக்கு அதீதையாகிய அந்தப்பரமேஸ்வரி யாவரிடத்தும் எவ்வாறிருக்கின்றாளெனின், என் தந்தையினிடத்தில் சிருஷ்டிக்கிற சத்தியாயும், விஷ்ணுவினிடத்தில் பரிபாலிக்கிறசத்தியாயும், உருத்திரரிடத்தில் சங்கார சத்தியாயும், சத் அசத்தாயிருக்கிற பதார்த்தங்கள் எவைகளோ அவைகளிடத்தில் அவைகட்குரிய சத்தாகிய சக்தி வடிவாகியு மிருக்கின்றனள். இவ்வாறு பிரம்மாதி பிபீலி காந்தம் நிறைந்துள்ள சக்திபேதங்களெல்லாம் அந்தப் பராசத்தியினின்று தோன்றிய சத்திகளாகும். ஆகவே அப் பராசத்தியை விட்டு எவையும் வேறு எவ்விடத்தினின்று தோன்றும்? தோன்றுதற்கிடமில்லை. அந்தப் பராசத்தியினுடைய வியாபக மில்லையாயின் பிரமனேது, திருமாலேது, ருத்திரரேது, இந்திரனேது, தேவர்களேது, பூமியேது, பர்வதமேது, எவையுமில்லை, எவருமில்லை, சர்வசக்திமயமா யிருக்கின்ற அந்தப்பரரசத்தி பர்மாத்மாவாகிய பரசிவத்தோடு கூடிக் கிரீடிருத்திருப்பாள். இன்னும் அவளுடைய மகிமை பலவுள.

இனி அவளுருவங்கொள்ளும் வகை யென்னையெனின், பரசிவத்தோடு அபின்னையாகக் கூடியிருக்கும் அப்பராசத்தி பிரபஞ் சோற்பத்தி காலத்தில் சகுணையாய் முன்போல் மூன்று புவனங்களையுஞ் சிருட்டித்துப் புவன கர்த்தராகிய பிரமனாதியரைப் படைத்து அவர்களிடத்தில் தன் சத்திகளைப்பதிவித்து தனது சிருஷ்டியாதி கிருத்தியங்களைச் செய்விக்கின்றனள். அவளே வேதத்துக்கெல்லாம் ஆதியாயும், வேதமாதாவாயு முள்ளவளென்று யாவராலுந் தியானிக்கத்தக்கவள்.

இனி அவள் நாமம் என்னையெனின், பிரமனாத்யரும் அந்த மகேஸ்வரியினுடைய அருட்குணங்களையும், அருட் செயல்களையு ங்குறித்து அகாரமுதல் க்ஷகாரம் வரையில் கூடியிருக்கிற அக்ஷரங்களால் கணக்கிடமுடியாத அநேகவிதநாமங்களைக் கூறி

யிருக்கின்றனர். அவைகளெல்லாம் இவ்வளவினவென்று எவ்வாறெடுத்துச் சொல்லத்தக்கவனென்று கூறினர்.

(நஅ-சுரு) ஸ்ரீ ராமமூர்த்தி நாரதரை நோக்கி ஓ மகருஷியே! உம்மாற் சொல்லப்பட்ட தேவி இன்னாளென்றும், இன்னமகிமை யுடையவளென்றும் அக்ஷர சமூகங்க ளெல்லாம் அவளுடைய நாமங்களென்றுங்கேட்டு மிக்க மகிழ்ச்சியடைந்தேன். இனி அந்த மகாசத்தியினுடைய விரதத்தின் விதியை விரிவாய்ச் சொல்ல வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன். சொல்வீராயின் அவ்விரதத்தை இவ்வருடமே அநுட்டித்துப் பூசித்து அவளனுக்கிரகத்தைப் பெற்றுய்யலாமென்று தீவரவெண்ணத்தோடு மிருக்கின்றேன் விரைவாய்ச் சொல்லியருளல் வேண்டுமென்றனர்.

நாரதர் அவரது அதிதீவர பக்குவத்தைப் பார்த்து ஓராமா! உலகமாதாவாகிய தேவியைச்சமமாகிய விடத்திற்றாபித்து நவராத்திரி பூஜையை உபவாசத்தோடிருந்து விதிப்படி பூசிப்பாய். இந்தப்பூசையை முடிப்பதற்கு நானே ஆசாரியனாகவிருந்து தேவர்களுக் கனுகூலசித் தியுண்டாகும் வண்ணம் உனக்கு உற்சாகத்தை விளைவித்துப் பூர்த்தி செய்விக்கின்றேன் என்று நாரதர் கூறிய வார்த்தையைப் பிரதாபசாலியாகிய ராமமூர்த்தி சத்தியமாக நம்பி அவரால் பூஜாவிதிகளையெல்லாம் நன்றா யுபதேசஞ்செய்யப் பெற்று சகலத்திரவியங்களையுஞ் சேகரித்துக்கொண்டு அந்தமால்யவான பர்வதத்தில் நித்யகன்மானுஷ்டான மியற்றிப் பின் தேவிக்கு விதிமுறையாகப் பூஜைசெய்யத்தொடங்கி சமமானபூமியில் மங்களகரமான பீடத்தை ஸ்தாபனஞ்செய்து மகேஸ்வரியைத் தாபித்துப் பூஜா ஹோம பலி முதலியவைகளைக் குறைவின்றியும், நாரதர் சம்மதப்படியும், உபவாசத்தோடிருந்து பிரதமைமுதல் நடத்தி வரும் போது தேவி மகிழ்ந்தவளாய் அஷ்டமிதினம் அர்த்தராத்திரியில் அந்த மலையினுச்சியில் சிம்ஹவாகனத்தி லெழுந்தருளிவந்து தரிசனங் கொடுத்து ஸ்ரீராமரைப் பார்த்து மேகந்தொனிப்பது போலும் கம்பீரமாகிய வாக்கினால் அடியில் வருமாறு சொல்லத் தொடங்கினாள்.

(சுசு-ருகூ) ஓ ராமா! நீ லக்ஷமணனோடு என்னிடத்தில் பக்திப் பிரபாவத்தோடு செய்துவரும் இந்த விரதத்துக்கு நான் சந்தோஷித் தவளாயினேன். உனக்கு வேண்டுவனவற்றைக் கேட்பாயாக. இராவணனை யொழிக்கும் பொருட்டுத் தேவர்களெல்லாம் விஷ்ணுவைப் பிராத்திக்க அவரம்சமாய்த் தசரதனுக்கு மகனாகப் பிறந்திருக்கின்றனை. இப்படியே பூர்வத்தில் மச்சமாகப் பிறந்து குரூரனாகிய ராக்ஷசனைச் சங்கரித்து வேதங்களை ரக்ஷித்தனை கூர்மவுருவமெடுத்து மந்தரபருப்பதத்தைத் தூக்கிமத்தாக நாட்டி தேவர்களைக் காத்தனை. வராகவுருவமெடுத்துக் கோரதந்தத்தால் பூமியைத் தூக்கினை, நரசிம்ஹமாக வெளிப்பட்டு இரணியகசிபனைச் சங்கரித்து உனக் கன்பனாகியபிரகலாதனை ரக்ஷித்தனை.

இந்திரனுக்குச் சகோதரனாய் தேவர்களுக் கநுகூலியாய் வாமனனாகப் பிறந்து பலிச்சக்கிரவர்த்தியைப் பாதலத்திலடக்கினை. ஜமதக்கினிருஷிக்குப் புத்திரனாகப்பிறந்து க்ஷத்திரியருடைய பூமியெல்லாம் காசிபருக்குத் தானமாகக் கொடுத்தனை. இப்போது தசரதனுக்குப் புத்திரனாகப் பிறந்து ராவணனைச் சங்கரிக்கப் போகின்றனை. நீ விஷ்ணு அம்சமாக வந்தது போல் இந்தவானரக் கூட்டங்களும் தேவர்களுடைய அம்சங்களாகும். இந்தக் கூட்டங்களெல்லாம் உனக்குச் சகாயமாயிருக்க் என்னுடைய சத்தி அம்சத்தைக் கொடுக்கின்றேன். உன் தம்பி ஆதிசேஷனுடைய அம்சம். அவன் இந்திரஜித்தைக் கொல்லப்போகிறான். நீயும் ராவணயுத்தத்தை வசந்தகாலத்தில் சிரத்தையுடன் செய்து வெற்றியடைந்து சுகமாய் அயோத்திக்குப் போய்ப் பதினாயிரவருடம் ராஜ்யபரிபாலனஞ்செய்து, பின்னர் பரமபதத்தையடைவாயென் றனுக்கிரகஞ்செய்து மறைந்து போயினள்.

(சு0-சுங) தேவி யனுக்கிரகம் பெற்ற ராமர் சந்தோஷமடைந்து விரதத்தைப் பூர்த்திசெய்து அநேகதானங்களைக் கொடுத்து நாரதரைப் பணிந்து ஐயா? நீ ரெனக்காசிரியராயெழுந்தருளியபடியினாலல்லவா விரதபூர்த்தியும் தேவியனுக்கிரகமுங்கிடைக்கப் பெற்றேன். இனிச் சீதையையுங் கிடைக்கப்பெறுவேன். இவ்வரிய உதவிசெய்த தேவரீருக்கு அடியேன் என்ன கைம்மாறு செய்ய வல்லேனென்று வணக்கத்துடன் சொல்ல, நாரதர்மகிழ்ந்து ஓ ராமமூர்த்தி? உனக்கு வெற்றியும்மங்களமுமுண்டாகுகவென்று ஆசீர்வதித்துப் போயினர். ராமர் சந்தோஷ சித்தராய் தசமிதினம் பிரயாணப்பட்டு யாவராலுந் துதிக்கப்படுங் கீர்த்திபெற்றுத் தம்பியினிடத்தில் மிகுந்த இஷ்டமுடையவராய் மகாசத்தியா லனுக்கிரகிக்கப்பட்ட வானரசைன்யங்கள் சூழ்ந்துவரக் கடற்கரையை யடைந்து சேதுபந்தனஞ் செய்து இலங்காபுரிக்குப்போய் தேவசத்துருவாகிய ராவணனைச் சங்கரித்துச் சுகமுற்றனர். எவன் பரமேஸ்வரியினுடைய அனுக்கிரகவிசேஷத்தை வளர்க்கும் பக்தியோடு இந்தச் சிரேஷ்டமாகிய சரித்திரத்தைக் கேட்கின்றானோ அவன் சகலமான போகத்தையு மிவ்விடத்தி லனுபவித்துத் தேகாந்தத்தில் பரமபதத்தை யடைவான். ஓ அரசனே மிகவும் பெரிதா யநேகபுராணங்களிருந்த போதிலும் இந்தப் பாகவதத்துக்குச் சமானமாகா வென்பது என் னபிப்பிராயமென்று வியாசமுனிவ ரருளியவாறு சூதபகவான் மகருஷிகளுக் கெடுத்துக்கூறினார்.

மூன்றாம் ஸ்கந்தம் முப்பதாம் அத்தியாயம்

ஸ்ரீ ராமசரிதம் முற்றிற்று.

ஆஉ அத்தியாயம் ஙு0-க்குச் சுலோகம். (களசுருஏ.)

உ

திரிபுரசுந்தர்யை நம:

தேவீ பாகவதம்

நான்காம் ஸ்கந்தம்

காஞ்சி ஆலாலசுந்தரம் பிள்ளை டிரஸ்ட்

உ

ஸ்ரீ திரிபுர சுந்தர்யை நம:

தேவீபாகவதம்

நான்காம் ஸ்கந்தம்

முதலத்தியாயம்

* ஜனமேஜயகிருத ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாதிகாரணப்பிரஸ்னை

குடிலகசம் கடினகுசம் குந்தஸ்மித காந்தி குங்குமச்சாயம்
குருதே விஹ்ருதிம் காஞ்சியாம் குலபர்வத சார்வபௌம சர்வஸ்வம்.

ஓ பரசிவசத்தி சொருப விசாரத்திற் றெள்ளிய மனதுடைய எங்களையராகிய சூதமுநிவரே! நாங்கள் முன்னர் மூன்றாம் ஸ்கந்தஞ் சொல்லியருளல் வேண்டுமென்று பிரார்த்தித்த வண்ணங் கிருபை கூர்ந்து ஜனமேஜயன் தேவீ சொரூபத்தை வினாவியதும், பாகவத வுற்பத்தியும், திருமூர்த்திகள் தேவியைக் கண்டதும் பின்னர் அம்மூவருந் தோத்திரஞ்செய்ததும். அதன்பின்னர் பிரமாண்டவுற்பத்தி, முக்குணங்களின் சொரூபம், அவற்றுள் தமோ குணவிசேட முதலியனவும், அதன்பின்னர் தேவீ மந்திர மகிமை விளக்குவதாகிய சத்திய விரதனுடைய சரித்திரம், சுதர்சனனுடையசரித்திரங்கள் முதலியனவும், அதன்பின்னர் தேவியினுடைய யஜ்ஞவிதிகளும், தேவியினுடைய மஹிமாதிவர்ணனமும் நவராத்திரி பூஜாவிதியும், அந்தப் பூஜையைச் செய்து வேண்டிய சித்திகளைப் பெற்ற ஸ்ரீராமர் முதலாயினாருடைய திவ்ய சரித்திரங்களும் அடங்கியுள்ளனவாகிய மூன்றாவது ஸ்கந்தத்தை நன்றாயருள் செய்தீர். அதனால் எங்களுடைய வுள்ளத்தில் பராசத்தியினுடைய சொரூப முதலியன நிலைக்கப் பெற்றுய்யலானோம். இனி அப்பரதேவதையினருளால் ஏனையவும் கேட்டுமகிழத் தேவரீருடைய அனுக்கிரஹத்தை எதிர்ப்பார்க் கின்றவர்களா யிருக்கின்றோ மென்று சவுனகாதியர் பிரார்த்திக்கச் சூதபகவான் நான்காவது ஸ்கந்தத்தி லடங்கியுள்ள அற்புத சரித்திரங்களைச் சொல்லத் தொடங்கினர்.

(க-க0) ஜனமேஜயமகாராஜன் வியாசரை நோக்கி ஓசர்வக்ஞ மூர்த்தியே! எங்களுடைய குலத்தை விர்த்திசெய்தவரே! இன்னமுந் தேவரீருடைய வாக்கினால் பூர்வத்தில் நடந்த திவ்யசரித்தி ரங்களையே கேட்கும் இச்சையுடையவனா யிருக்கிறேன்.

* ஜனமேஜயன் கிருஷ்ணர் முதலாயினா ருடைய ஜன்மங்களைப் பற்றிவினாதல்.

சூரசேனனுடைய குமாரராகிய ஆனக்துந்துபி என்கிற வசு தேவர் ஸ்ரீமானாயும், தருமத்தினிடத்தில் அபேக்ஷையுள்ளவராயும், அதனால் பிரதாபமுடையவராயும், தேவர்களால் கொண்டாடத்தக்கவராயும், தேவகிதேவியை மனைவியாக வுடையவராயு மிருந்தாரென்று சொல்லக் கேட்டிருக்கிறேன்.

இதுவுமன்றி இவ்வருஞ்சிறப்பினையுடைய இவரையும் இவர் மனைவியையும் யயாதிவம்சத்திற் பிறந்த கம்சன் விலங்கு பூட்டிக் காராக்கிருகத்திலடைத்தனனென்றும், அவனே அந்தக்காராக் கிருகத்தில் அவர்களுக்குப் பிறந்து ஆறுகுழந்தைகளையும் வாளினால் வெட்டினானென்றும், பின்னர் ஏழாவது பெண் பிறந்ததென்றும், அப்பெண் குழந்தையை அந்தக்கம்சன் ஓர்கற்பாறையின் மீது மோதும் போது அது ஆகாயத்திற்போய் அஷ்டபுஜத்தோடுங் கன்னிகையாய் நின்றதென்றும், அதன் பின்னர் விஷ்ணுமூர்த்தி எட்டாவது பிள்ளையாகப் பிறந்தாரென்றும், பின்னர் அவர் யாதவ குலத்தில் வளர்ந்தாரென்றும், அதன்பின்னர் யௌவனதிசையில் அநேகங் கோபிகாஸ்திரீகளுடன் அநேகலீலைகள் செய்தாரென்றும், அதன் பின்னர் மரணமடைந்தாரென்றுங் கேட்டிருக்கின்றேன்.

ஓ வியாசமுநிவரே! வாசுதேவராகிய நாராயணருக்குக்கர்ப்ப வாசம் வர வேண்டிய காரணமென்னை? பிறக்கவந்தவர் வசுதேவருக்குற்தேவகி தேவிக்கும் மகனாக வருதற்கும், வந்த பின்னர் யாதவ குலத்தில் வளர்வதற்கும், வளர்ந்த பின்னர் அநேகங்கோபிகாஸ்திரீகளிடத்தில் லீலை புரிவதற்குங் காரணமென்னை? இவருக்கு வசுதேவருந் தேவகிதேவியும் தாய்தந்தைய ராதற்கும், இவரைப் பெறும் புண்ணியமுடைய அவர்கள் காராக்கிருகத்தி லிருத்தற்குங் காரணமென்னை? இவைகளெல்லாம் எனக்கு நன்றாய்ச் சொல்லுவதோடு கிருஷ்ணமூர்த்தி அவதரித்து நடத்திய லீலாவிபூதியையும் நடந்தவண்ணம் எடுத்துரைப்பீரென்று பிரார்த்திக்கிறேன். நீ ரெடுத்துச் சொல்லுவதனால் விஷ்ணுமூர்த்தி பிறந்து அநேகஸ்திரீகளோடு லீலை புரிந்தாரென்கிற விஷயத்தில் உண்டாயிருக்கிற புத்திப் பிரமை தெளிதல் வேண்டும்.

(கக-உ0) இப்பொழுது வினாவியவினாக்களேயன்றி இன்னமுஞ் சிலவினாக்களுள. என்னையெனில், பழமையானவராயும், ருஷி சிரேஷ்டர்களாயும், தர்மதேவதையினுடைய புத்திரர்களாயும், மகாத்மாக்களாயும், விஷ்ணுவி னம்சபூதர்களாயு மிருந்த நர நாராயணர்கள் மோக்ஷார்த்தமான தபஸ்ஸித்திகளை யுடையவராய் உலகக்ஷேமநிமித்தம் பதரிகாச்சிரமத்தில் ஆகாரசூன்யர்களாய் ஆசையற்றுக் காமக்குரோதாதிகளை யொழித்து அநேகவருஷகாலம்

உத்தமமான தவத்தைச் செய்தார்களென்றும், மகாபலிஷ்டராகிய அந்த நரநாராய்ணர்களே கிருஷ்ணார்ச்சுனர்களாகப் பின்னர் அவதரித்தார்களென்றும் நாரதாதிமகருஷிகளால் நன்றாய்ச் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

ஓ வியாசமுனிவரே! அநேககாலம் பிரமருஷிகளாகவேயிருந்து யோகசித்திகளைப் பெற்று தேஜோரூபிகளாய்ப் பிரகாசித்த அவர்கள் வேறுதேகத்தை யடைந்து கிருஷ்ணார்ச்சுனர்களாக க்ஷத்திரிய குலத்திற் பிறக்க வேண்டிய காரணமென்னை? சூத்திரன் தன்குலாசாரத்திற் றவறாம லிருப்பானாயின் அவன் மறுபிறப்பில் க்ஷத்திரியனாகவும், க்ஷத்திரியகுலத்திற் பிறந்தவன் தன் குலா சாரத்திற்றவறாதிருப்பானாயின் அவன் மறுபிறப்பில் பிராமணனாகவும், பிராமணனாகப் பிறந்தவன் ஆசையற்றவனாயும் ராகத் துவேஷ மில்லாதவனாயு மிருப்பானாயின் அவன் சனனமரண ரகிதனாவா னென்றுஞ் சொல்லியிருக்க இந்த நரநாராயணருடைய ஜனன விசேஷம் விபரீதமாகவன்றோ விருக்கின்றன. ஐயா தவத்தினால் வலியசரீரத்தை யுடையவர்களாயும் சாந்தர்களாயுமிருந்த அந்த நர நாராயணர்கள் எந்த சாபத்தினால் க்ஷத்திரியர்களாகப் பிறந்தார்கள். அந்தோ! பிராமணர்களான அவர்கள் க்ஷத்திரியராகப் பிறந்த காரணத்தைச் சொல்லும்; இன்னமுஞ் சில கேள்விகளும் சில சந்தேகங்களுமிருக்கின்றன.

(உக-உசு) முநிவரே! யாதவருடைய குலம் நாசமடைதற்குக் காரணம் பிராமணசாபமென்றும், கிருஷ்ணருடைய குலக்ஷயத்துக்குக் காரணம் காந்தாரியினுடைய சாபமென்றும், பிரத்யும்னன் சம்பராசுரனாலே கொல்லப்பட்டானென்றுங்கேள்வி. அவன் அந்தவசுரனால் எவ்வண்ணங்கொல்லப்பட்டான். தேவசிரேஷ்டராகிய வசுதேவ குமரராகிய கிருஷ்ணர் பிரசவக் கிருகத்திலிருக்கும் பொழுது அவருடைய அபஹரமணானது, மிகவுங் கஷ்டமென்று கேட்டிருக்கிறேன், இவையன்றி அந்தக்கிருஷ்ணர் துவாரகாபுரியிற் போவதற்குக்கூடாத கோட்டை மத்தியிலுள்ள கிருகத்தில் நடந்த செய்தியை ஏனறியாமற்போயினார். பிறராவது சொல்லியிருப்பார்களே? அவர்கள் சொல்லாமற் போனபோதிலும் தம்முடைய யோகதிருஷ்டியினாலாவது தெரிந்துகொள்ளலாமே! ஓ பிராமணரே! இந்தச் சந்தேகங்கள் மிகப்பெரிதாவிருக்கின்றன.

(உஎ-ஙசு) இன்னமும் கிருஷ்ணருடைய பத்னிகள் திருடராலடிக்கப்பட்டு கொள்ளையிடப் பட்டார்களாம். தேவதேவேச ராகிய கிருஷ்ணமூர்த்தி சுவர்க்கமடைந்தபொழுது இவைகளெல்லா மெப்படி நடந்தன. இவையாவும் நினைக்கின்றபொழுது என்

சித்தத்துக்குக் கலக்கமுண்டாகிறது. விஷ்ணுவினுடைய அம்சமே பூபாரம் போக்கக் கிருஷ்ணராய் இப்படிவந்ததென்று சொல்லுகிறார்கள். அப்படியானால் அந்த விஷ்ணுவாகிய கிருஷ்ணர் பயத்தினால் மதுராநகரத்தைவிட்டு துவாரகையில் சைனியங்களோடும் சிநேகர்களோடும் போய்ச்சேர்ந்தாரென்கிறார்களே இது எவ்வளவு குறைவானது. அன்றியும் அந்தக்கிருஷ்ணமூர்த்தி பாவத்தைப் போக்கடிக்கவும், தருமஸ்தாபனஞ் செய்யவும் அவதரித்தா ரென்கிறார்கள். அப்படியானால் அவர் சர்வஜ்ஞரும் சத்யசந்தருமாயிற்றே! அவர் தன்னுடைய பத்தினிமார்களை மானபங்கஞ் செய்யத்தக்கவர்களான அக்கள்வரைப் பாரதயுத்தத்தில் யாவரையுங் கொன்றபொழுது ஏன் கொன்றிருக்கக்கூடாது! கொல்லத் தக்கவர்களாகிய கள்வரைக் கொல்லாது கொல்லத்தகாதவர்களாகிய பீஷ்மர் துரோணர் முதலாயினாரைக் கொன்று சமாதானங் கூறியிருக்கின்றாரல்லவா ? உத்தமர்களாகிய பாண்டவர்கள் யாவராலுங் கொண்டாடத்தக்க பிரசித்தியுடையவர்களென்றும், தருமத்தி லாசக்தி யுடையவர்களென்றும், எப்பொழுதுங் கிருஷ்ணரையே ஆச்ரயித்து அவரிடத்தில் பக்தியுடையவர்களா யிருந்தார்களென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. அவர்கள் யக்ஞ ஸ்சிரேஷ்டமாகிய ராஜசூயத்தை விதிப்படிச்செய்தும், பிராமணர்களுக்கு அவர்கள் கேட்ட அளவன்றி அதிகமாகத் தானங்கொடுத்தும், சகிப்பதற்குக் கூடாமையான் துக்கத்தை யேனடைந்தார்கள். அந்தப் புண்ணியம் எங்குப்போய்விட்டது. இவர்களுக்கு அது ஏன் சித்திக்கவில்லை. அவர்கள் புண்ணியத்தைக்கீழ்ப்படுத்திய அந்தப்பாவம் எத்தன்மையது எந்தக்காரணத்தினால் அத்தன்மையாகிய துன்பத்தை யடைந்தார்கள்.

(ஙரு-ஙஅ) இவர்கள்நிற்க. திரௌபதியோ மஹானுபாவிநி! அக்னிகுண்டலத்திலவதரித்தவள். லக்ஷ்மியினுடைய அம்சீபூதை நல்லொழுக்கத்திற் சிறந்தவள். கிருஷ்ணரிடத்தில் பக்தியுள்ளவள் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். அவ்வளவு மகிமையோடு கூடியதிரௌபதியானவள்* ரஜஸ்வலையாய்த் தனி வஸ்திரத்தோடு மிருக்கிறபொழுது துச்சாதனன் கூந்தலைப்பிடித்திழுத்துவந்து சபையில் மிகவும் பயத்துட னிற்கச்செய்து சேலையை யிழுத்தானென்றும், விராடதேசத்தரசனிடத்தில் ஊழியஞ் செய்தாளென்றும், அவ்விடத்திற்றானேகீசகனால் இம்சிக்கப்பட்டுக் கூக்குரலிட்டழுதாளென்றும், ஓர் சமயம் சயத்ரதனால் அபகரிக்கப்பட்டுப் பின்னர் பலிஷ்டர்களாயுள்ள பாண்டவர்களால் விடுபட்டாளென்றும், இதுபோலும் அநுபவிக்கக்கூடாத பலவிதமான

* மாதவிடாய்

பங்கங்களையும், அதிகோரமான பல துக்கங்களையும் அடிக்கடி யடைந்தா ளென்றுங் கேட்டிருக்கிறேன்.

(ஙகூ-சு அ) இப்படிப்பட்ட துன்பங்களெல்லா மவளநுபவிப் பதற்குப் பூர்வஜன்மத்திற்செய்த பாவங்களுடைய சொரூபம் எப்படிப் பட்டதோ தெரியவில்லை. என்னுடைய முன்னோர்களாகிய தேவாம்சமுடைய பாண்டவர்கள் யக்ஞசிரேஷ்டமாகிய ராஜசூயத்தைச் செய்து அநேகமான துக்கத்தை யநுபவிக்கவந்தது பூர்வஜன்ம பாவசம்பந்தத்தினா லுண்டானதென்கிற விஷயத்தில் எனக்கு அதிக சந்தேக முண்டாயிருக்கின்றது. நல்லொழுக்கமுள்ள குந்திபுத்திரரும் ஞானமுள்ளவருமான பாண்டவர்களால் தூரியோதனனாதியர் கொண்ட பொருளாசை நிமித்தமாகக் கபடத்தினால் பீஷ்மத் துரோணாதிகளெல்லாம் இம்சிக்கப் பட்டிருக்கிறார்கள். இன்னமும் அநேக ராஜாக்களெல்லாம் நாசத்தையடைந்தார்கள். இவர்களெல்லாம் இவ்வாறு இம்சையடையவும் ரணக்களத்திலிறக்கவும், குலநாசமாய்ப் போகவும், பரமாத்மாவென்று சொல்லப்பட்ட வசுதேவகுமாரராகிய கிருஷ்ணர் பிரேரக கர்த்தாவாயிருந்தாரென்றுங் கேட்டிருக்கிறேன். உலகில் பெரியோர்களுக்குச் சீவனோ பாயமானது பிக்ஷான்ன போஜனமென்றும், அதுவுங் கூடாதாயின் பொருளாசையினால் ஒருவரைத் துன்பப்படுத்தாமல் ஏதேனு மொருதொழில் செய் துண்ண வேண்டுமென்றுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கிருஷ்ணர் இந்த விதங்க ளொன்றினாற் சீவித்து நாள்கழிக்கக் கூடாதா? நாசத்தையடைந்துபோன இந்த வம்சமானது உத்தாரணமாக வேண்டுமென்று கோளகர்களாகிய மகாவீரமுடைய திருதராஷ்ட ராதியரை நீருண்டாக்கிரக்ஷித்தீரல்லவா?* அந்தவம்சமானது இந்தக் கிருஷ்ணமூர்த்தியினாலே நாசத்தையடைந்து அதிற்றப்பிப்பிழைத்த உத்தராதேவியினுடைய குமாரராகிய பரீக்ஷித்து சிலகாலத்துக்கு முன் மகருஷியினுடைய கண்டத்தில் சர்ப்பத்தைப்போட்டு துர்மரணத்தை யடைந்தார். என் தந்தையாகிய அவர் மோனநிலையிலிருந்த மகருஷி விஷயத்தில் என்ன தீங்கு செய்தார்! இதுவென்ன வாச்சரியம்! க்ஷத்திரிய வம்சத்திற்பிறந்த எவனும் பிராமணனைத் தூஷிக்க மாட்டான். இப்படிப்பட்ட சந்தேகங்களால் என்மனது சிறிதுஞ் சுகமடையவில்லை. ஓ தயாநிதியே! நீர் சர்வக்ஞராகையால் என்மனத்தைச் சுகப்படுத்துமென்று பிராத்தித்தனன்.

முதலத்தியாயம்

ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாதிகாரணப் பிரஸ்னை முற்றிற்று.

முதலத்தியாயம் சுலோகம் (சுஅ.)

---

* காத்தீரல்லவா - ரஷித்தீரல்லவா

உ

ஸ்ரீ திருபுர சுந்தர்யை நம

———

இரண்டாம் அத்தியாயம்

சகல பிரபஞ்சோத்பதௌ கர்மண : காரணத்வம்.

(க-கஎ) ஓ முநி கணங்காள்! புராணமுதலிய நூல்களின் உண்மையைச் சொல்வதிற் சதுர்ப்பாடுடைய வியாசர் பரிக்ஷித்தென்னும் மகாராஜனுடைய குமாரனும், இந்திரிய நிக்ரஹனுமானஜனமே ஜயனுடைய சந்தேகங்களெல்லாம் நிவர்த்தியாம் வண்ணம் விடை கூறத்தொடங்கினார்.

ஓ அரசனே! கர்மத்தினுடைய பலப்பிராப்தியானது அளவிடக் கூடாததா யிருக்கின்றது. அதனை நா னென்னவென்று சொல்லுவேன். இப்பிரமாண்டம் முக்குணசம்பந்தமா யுண்டானது. அது எப்பொழுது முக்குணசம்பந்தமாக உண்டாயிற்றோ அப்பொழுதே தேவமாநுடராதியாயுள்ள சகல ஆன்மாக்களும் கன்மகதியிலகப் பட்டவைகளே அந்த கன்மகதியை அறிவதற்குக்கூடாமையாயிருக்கிறது. ஆகவே நீ சொல்லி வந்தவர்களுடைய கன்மகதியைப்பற்றி என்ன விசாரஞ்செய்வதற்குக் கூடும். எவருடைய தேகோற்பத்தியும் கன்மத்தை விட்டாவதில்லை. இதிற்சந்தேகமுமில்லை. சீவகோடிகளோ ஆதியந்தமில்லாதன. இவைகள் கன்மபீ ஜத்தினால் பலமுறை அநேகவிதமான யோனிகளிலே பிறக்கின்றன. மரணமடைகின்றன. கன்மசம்பந்தமில்லாமல் உற்பத்தி நாசங் கிடையா. சகத் துற்பத்திக்குக் காரணமாகிய நல்வினை தீவினை ரூபமான புண்ணியபாவ மிச்சிரமமாயுள்ள கன்மங்கள் சஞ்சிதம் ஆகாமியம்பிராரப்தமென மூன்று விதமாயிருக்குமென்றுதத் வார்த்தந் தெரிந்தவர்களாகிய பண்டிதர் சொல்லுவார். இம்மூன்றோடுங் கூடியதே தேகம். ஆகவே தேகதாரிகளாகிய பிரமன் முதலிய யாவரும் அந்தச் சஞ்சிதாதிகளுக் குட்பட்டவராவரேயன்றி அவைகளுக்கு அப்புறப்பட்டவராகார். எப்படியென்றால் அவர்களிடத்தில் சுகம் துக்கம் மூப்பு மரணம் சந்தோஷம் பிறரைப்பற்றியசோகம் ஆகிய இவைக ளுண்டாயிருத்தலைக் காண்கிறோம். ஓ அரசனே! காமக் குரோத லோபங்களும் மற்ற முள்ள குணங்களும் சரீரதாரிகளா யிருக்கிற யாவரிடத்துங் கால வசத்துக்கீடா யுண்டாகின்றன. இந்த குணங்களுக்குரிய செய்கைகள் இவ்வுலகில் எப்படிக்காண்கின்றோமோ, அப்படியே இராகத்துவேஷாதிகளுடைய செய்கைகளெல்லாஞ்

சுவர்க்காதி லோக பேதங்களிலு மிருக்கின்றன. இதனால் தேவயோனி மாநுடயோனி திரியக்யோனிகளாயுள்ள எந்த யோனிகளிலுந் தேகமுண்டாகிறபொழுதே இப்பொழுது சொல்லிவந்த குணவிகாரங்காளல்லாம் உண்டாகத் தக்கவைகளென்று அறியற்பாலது. அதற்கு சில வநுபவங்கூறுகின்றேன். முன் சன்மசம்பந்தத்தி லுண்டாகிய துவேஷத்துக்கீடாகவும். சிநேகத்துக்கீடாகவும், இந்தச் சன்மத்தில் அவரவர்க்கவையுண்டாகின்றன. இவ்விதமான கன்மசம்பந்த மில்லாமல் பிராணிகளுக்கு உற்பத்தி யுண்டாகிறதில்லை. சூரியன் உலகைச் சுற்றிவருவதும், சந்திரன் க்ஷயரோகியா யிருப்பதும், சாஸ்வதமா யிருக்கின்ற தாவர சங்கமமாகிய சகலப்பிரபஞ்சமும் அசைதலும் அசைவில்லாதிருத்தலுங் கன்மமே. இதனால் யாவுங் கர்மசம்பந்தமாகவே யுள்ளனவென் றறியற்பாலது. இவைகளுடைய நித்தியா நித்திய விசாரத்தில் முநிவர்களும் மூழ்கிக்கிடக்கின்றார்கள். ஏனெனில் பிரத்யக்ஷமாய்க் காணப்படுகிற மகாமாயையினால் அநித்தியத்தையடைகிற ஜகத்தே நித்தியமாய் காணப்படுகிறது. அதனால் நித்தியமானது இன்னதென்றும், அநித்தியமானது இன்னதென்றும் அறிவதற்கில்லை. ஆயின், நித்தியமெது! அநித்தியமெதுவெனின்! மாயையுங் கன்மமும் நித்தியம். கன்மத்துக்கீடாய் மாயையினின்றுங் காரியப்படும் சகத்து அநித்தியம். இந்த நித்தியமாகிய மாயையைக் காரணமென்றும், அநித்தியமாகிய சகத்தைக் காரியமென்றுங் கூறுவர். பண்டிதர்களால் எப்பொழுதும் சிந்திக்கத்தக்கதாகிய நித்தியமாகிய கன்மமானது பீஜமா (காரண யிருக்கின்றபொழுது காரியத்துக்கு அபாவ (இல்லாத) லக்ஷணம் எவ்வாறு சொல்லக்கூடும்.

(அ-உஉ) ஓ அரசனே! அளவிறந்ததேஜஜசோடுங்கூடிய விஷ்ணு மூர்த்தியானவர் தருமநிமித்தமா யுகங்கடோறும் அவரிச்சைப் படியே நானாவிதமான இழிந்தயோனிகளில் சனித்தனரே அது நானாவிதமான கன்மப்பிரேரேபணையினா லல்லவா? அந்தப் பிரேரே பணையில்லையா யின்வைகுண்டத்திலுள்ள அநேகமாகிய சுகபோகங் களையும். அவ்விடத்தில் தானும்பத்தினியுமாய்ச் செண்டாடுவதையும் சலக்கிரீடை, செய்வதையும், சுகாசனத்தில் வீற்றிருப்பதையும் விட்டு ஈனயோனிகளில் பயந்தவராய் மலமூத்திரமயமாகிய கர்ப்பத்திலேன் பிறக்க வேண்டும். அந்தோ! அதிலெவன்றான் வசிப்பான் தேவசில் பியினால் மிகவும் மிருதுவாக நிர்மிக்கப்பட்ட அம்சதூளிகா மஞ்சத்தை விட்டுக் கர்ப்பமாகிய கிருகத்தில் வசிப்பதற்குப் புத்திமானாயுள்ளவ னெவன்றான் அபேக்ஷிப்பான். எவன் நானாவிதமான சிருங்கார பாவங்களொடு கூடிய கானத்தையும் நாட்டியத்தையும் விட்டு

நரகஸ்தானத்தில் தலைகீழாயிருத்தலாகிய அதோமுகவாசத்தை எப்படி அபேக்ஷிப்பான். எவன் அற்புதமா, யெண்ணத்தக்க இனிமையாகிய பாற்கடலில் வசிப்பதாகிய, வசிப்பைவிட்டு நரகத்தில் வசிக்க இச்சிப்பான். எந்த புருஷன் மலமூத்திர சம்பந்தமான ஸ்தன்னிய பானத்தை எப்படி யிச்சிப்பான். இந்த மூன்றுலகத்திலும் கர்ப்பவாசத்தைக் காட்டிலும் வேறான நரகமு முண்டோ. இதையறிந்தன்றோ முனிவர்கள் கர்ப்பவாசத்திற்குப் பயந்து ராஜ்யத்தையும் போகத்தையும் விட்டு வனத்திறகுப்போய் திடசித்தர்களாய்ச் செய்தற்கரிய தவத்தைச் செய்கின்றார்கள். எந்த முழுமூடன்றான் பயத்தை விளைவிக்கத் தக்க கிருமிகள் துளைக்கவும், சடராக்கினி கொளுத்தவுமாயுள்ள கர்ப்பஸ்தானமாகிய துக்கவாசத்தை எந்தக்காரணத்தினால் ஆச்சிரயிப்பதற் கிச்சிப்பான் ஓ அரசனே! அந்தக் கர்மஸ்தானமானது ஒரு சிறிய பையி லிருக்கப்பட்டது போல் மிகவும் நெருக்கத்தையுண்டாக்குவதாகலான் அது என்னசுகத்தைக் கொடுக்கும். இதிற் கட்டுப்பட்டிருப்பதைப் பார்க்கினும் விலங்கைக் காலிற்பூட்டிக் கொண்டுலாவுவது சுகமென்று நீநினைக்கத்தக்கது. இதனினும் யமலோகத்தில் வசிப்பது மிகவுஞ்சுகம். ஆகையால் இந்தக் கர்ப்பவாசம் ஒருபொழுதும் சுகத்தைக் கொடுப்பதன்று. அதில் வசிக்கும் ஒருகணப்பொழுதை ஒரு கற்பகாலமாகச் சொல்லல்வேண்டும். இவ்வளவு கஷ்டமாகவிருக்கும் அதில் பத்துமாதம் வசிப்ப தென்றால். அது எவ்வளவு பெருந்துன்பமென்று சொல்லலாம். அதனினும் அச்சிறிய யோனித்துவாரத்தி னின்றும் வெளிப்படுவது மிகவுங் கஷ்டமாகும்.

(உகூ-ஙகூ) இவ்வளவு கஷ்டத்தோடும் பிறந்த பின்னராவது சுகமுண்டோவெனின்; சிசுப்பிராயத்தில் பேசவறியாமல் அஞ்ஞானமயமாயிருப்பதாகிய துக்கமும், பசி தாக முதலியவற்றைத் தெரிவிக்கக் கூடாத துக்கமும், தன்னறிவால் செய்து கொள்ளற்பாலன சிறிதுமின்றிப் பரதந்திரமாய் மாதா பிதாக்களுக்கு மிகவும் பயந்திருத்தலாகிய துக்கமும், இதுவுமன்றி அந்தக் குழந்தைப் பருவத்தில் பசியினால் அழுகிறபொழுது தாய் பசியினாலென் றறியாமல் நோய் வந்துவிட்டதென்று *சிந்தாகுலமுடை யவளாய் வியாதியே வந்ததென்று நிச்சயித்து மருந்து கொடுப்பதற்குத் திடமாகத் துணிந்து அது உண்பிக்குங்காலத்தில் படுந்துன்பமும், இதுபோலும் அவ்வப்பருவங்களில் மென்மேலும் விளைவதாகிய துக்கங்கள் எண்ணத்தொலையா. இவ்விதமான துன்பத்துக்கு நிலைக்களமாகிய பிறப்பில் என்ன சுகமிருக்கிறதென்று தேவர்களா யுள்ளவர்கள் இதனை யபேக்ஷிப்பார்கள்? பிறவித்துன்பத்தையுமறந்து தேவர்களோடு

* சிந்தாகுல - மனக்கவலை

கூடியிருக்கின்ற சுகத்தையும் விட்டுத் துன்பத்தைக் கொடுப்பதாயும், சுகத்தைக் கெடுப்பதாயுமுள்ள யுத்தத்தைச் செய்வதற்கு எந்த மூடன்றானிச்சிப்பான். ஓ அரசனே! பிரம்மாதி தேவர்களெல்லாந் தாங்கள் தாங்கள் செய்த கன்மப் பகுதிகளுக்கீடாகச் சுகதுக்கங்களை யனுபவிக்கின்றார்கள். புண்ணியகர்ம சுகானுபவம் எப்படி அநுபவிக்கின்றோமோ அப்படியே பாவகர்மதுக்கானுபவமும் அவசியமா யநுபவித்துத் தீரவேண்டியதாகும். எப்படியென்றால் மாநுடனா யுள்ளவன் அரியதவங்களையும் தானங்களையுஞ்செய்து இவ்வுலகவாழ்வை விட்டு இந்திர பட்டத்தை யடைகிறான். அவ்வுலகில் இந்திரனாயிருந்தவன் புண்ணியக்ஷய முண்டாகுங்காலத்தில் அவ்வுலக வாழ்வைவிட்டுக் கருமபூமியில் வந்து வீழ்கிறான். இதில் சந்தேகம் வைத்துக் கொள்ள வேண்டாம் உண்மையே. இதற்குச் சிலதிருஷ்டாந்தங் கூறுகின்றேன். ராமாவதாரத்தில் தேவர்களெல்லாங் குரங்குகளாய்ப் பிறந்தார்கள். அது போலவே கிருஷ்ணாவதாரத்தில் யாதவர்களாகப் பிறந்தார்கள். இவ்வண்ணமே யுகந்தோறும் நாராயணர் தருமபரிபாலன நிமித்தம் பரமேஸ்வரனால் பிரேரிக்கப்பட்டவராய் நானாயோனிகளில் தசாவதாரமும் ஏனைய அவதாரங்களும் அடிக்கடி தேருருளையைப் போல் ஆச்சரியகரமாகப் பலமுறையு மெடுத்து வருகின்றனர். ஆனால் மகாத்மாவாகிய விஷ்ணுவினுடைய அம்சங்கள் அவதாரபுருஷர்களாகப்-பூமியிற்பிறந்துவருவதெல்லாம் அசுரர்களைச் சங்கரிக்கும் பொருட்டேயாகும். அது அவரது காவற்றொழிலுக்கு முக்கியமான தருமமென்றறிதல் வேண்டும்.

(சு0-சுங) ஓ அரசனே! இனி க்ஷேமகரமாகிய கிருஷ்ணாவதார வைபவத்தைச் சாங்கமாகச் சொல்லுகிறேன் கேட்பாயாக. பகவானாகிய அந்த விஷ்ணுவே கிருஷ்ணமூர்த்தியாக யாதவகுலத்தில் அவதரித்தனர். வசுதேவர் காசிபருடைய அம்சம், அவருக்கு முன் நேரிட்டசாபத்தால் பசுக்களை மேய்த்தலாகிய தொழில்வந்தது. அந்தக்காசிபருடைய பத்தினிகளாகிய அதிதியும் சுரசையும் வருணன் கோபத்தினால் கொடுக்கப்பட்ட சாபத்தால் அதிதியானவள் தேவகி என்றும், சுரசையானவள் ரோகணியென்றும் சகோதரிகளாகப் பூமியிற்பிறந்தனர்.

(சுசு-சா0) வியாசமுநிவர் இவ்வாறு சொல்லவும், அரசன் அவரைப் பார்த்து ஓ சர்வக்ஞரே! மகருஷியாகிய காசிபர் எவ்விதமான பாவஞ்செய்து யாவரால் சாபமேற்றுத் தன் மனைவிகளுடன் எப்படி பூமியிற் பிறந்தார்? அதனைச் சொல்லவேண்டும். வைகுண்டத்தில் வசிக்கின்றவராயும் இலக்ஷ்மீ நாயகராயும் அகண்டிதராயும்

பகவானாயுமுள்ள விஷ்ணுமூர்த்தியானவர் அந்தக்கோகுலத்தில் எப்படி யுண்டாயினார்? நாசமில்லாதவராயும் சிருட்டிக்காதியும் தேவசிரேஷ்டராயும் பகவானாயுமிருக்கின்ற நாராயணரான யாருடைய ஆக்ஞையினா லிருக்கின்றார்? ஒருவருடைய ஆஞ்ஞையி லில்லாதவராயின் தன்னுடைய ஆஸ்தானத்தைவிட்டுக் கர்ப்ப சம்பந்தமுடைய மானுடன்போலயோனியில் எந்தக்காரணத்தால் சனனமெடுத்தார்? இந்த விஷயத்தில் எனக்கு மிகவும் சம்சயமா யிருக்கிறது. மானுடதேகத்தை எப்பொழுதடைந்தனரோ அப்பொழுதே பிறவிக்கேற்றதொழிலைச் செய்திருப்பாரல்லவா? துஷ்டசன்மமாகிய மானுடசன்மத்தில் நானாவிதமான குணபாவங்களை யுடையவராயிருப்பாரல்லவா? காமம் குரோதம் அசூயை துக்கம் வைரம் பிரீதி சுகம் பயம் சோகம் தீனத்வம் சொல்லிய வண்ண மிருத்தல் பாவவசனம் புண்ணியவசனம் கொல்லுதல் பாதுகாத்தல் புத்திசலனப்படுதல் தாபம் நம்பகம் ஓயாமல் வீண்வார்த்தையாடல் ஆசை டம்பம் அஞ்ஞானம் கபடம் பிறருக்கு வருத்த முண்டு பண்ணுதல் இதுபோலுமுள்ள அநேக குணபாவங்கள் மானுடசன்மத்தி லுண்டாகின்றன. அந்த மானுட சன்மத்தை அந்தப்பகவானாகிய விஷ்ணுமூர்த்தி சாஸ்வதமாகிய சுகத்தைவிட்டு ஏனெடுத்தனர். ஓ முநீஸ்வரரே! அவர் மனிதப் பிறப்பை யடைந்து என்ன சுகத்தைக் கண்டனர். சாக்ஷாத்நாராயணர் எந்த நிமித்தமாய் ஒரு சுகமுங்காணப் பெறாத அந்தப் பிறப்பை எடுத்தற்குக் கர்ப்பவாசத்தை யடைந்தனர். கர்ப்பதுக்கம் ஜனன துக்கம் பாலப்பருவத்திலுண்டாகும் அஞ்ஞான துக்கம் என்று சொல்லப்பட்ட இவைகளுக்கெல்லாம் யௌவனமுடையவனாய்க் கிருகஸ்தாச்சிரமத்தி லிருக்கும் போதுண்டாகுங் காம துக்கம் அதிகமான துக்கமாகும்.

பகவானாகிய விஷ்ணு மானுடயோனியில் அவதாரங்களைச் செய்து இந்தத் துக்கங்களை ஏனடைந்தனர்? அந்தோ! வேதமூர்த்தி யாகியநாராயணர் ராமாவதாரத்தில் மிகவும் பயங்கரமான வனங்களில் அதிக துக்கத்தையடைந்தார். அதாவது சீதையைவிட்டுப் பிரிந்தபோதும் அடிக்கடி யுத்தம் நேரிட்டகாலத்தும், அதனால் ராக்ஷசவிரோத முண்டாய் மனைவியைக் கொண்டுபோன காலத்து முண்டாகிய துக்கங்களாகும். இந்த அவதாரந்தா னிப்படி போன போதிலும் கிருஷ்ணாவதாரத்திலாவது சுகமுண்டோவெனின் பிறந்தது க்ஷத்திரியர் வீட்டில், வளர்ந்தது இடையர் வீட்டில், விளையாடியது மாடுகளிடத்தில், கம்சனைக்கொன்றது கஷ்டப்பட்டு, மதுரையை விட்டுக் குடிபுகுந்தது துவாரகை. இவ்வாறெல்லாம் பகவானாகிய அவர் நானாவிதமான இந்தச்சம்சார துக்கத்தை ஏன் அனுபவித்தார்.

ஞானவானாயு முக் தாத்மாவாயு முள்ளவன் தன்னுடைய இச்சையினாலே துக்கங்களை அபேக்ஷிப்பானா? ஓ சர்வக்ஞரே! என்னுடைய சித்தந்தெளியும் வகையாகச் சந்தேகங்களை நிவிர்த்தி செய்யவேண்டுமென்று ஜனமேஜயன் வியாச பகவானை வினவியதாகச் சூதமுநிவர் சௌனகாதியர்கட்குக் கூறினார்.

இரண்டாம் அத்தியாயம்

சகல பிரபஞ்சோத்பத்தௌ கர்மண : காரணத்வம்.

முற்றிற்று.

———

ஆஉ அத்தியாயம் உ-க்குச் சுலோகம் (க0அ.)

————

உ

ஸ்ரீதிரிபுர சுந்தர்யை நம

மூன்றாம் அத்தியாயம்

* வசுதேவாத் யவதார காரணம்

———

(க-உ0) வியாசமுனிவர் ஜனமேஜயனை நோக்கி விஷ்ணுவினுடைய அவதாரத்திற்கும் ஏனையோருடைய அவதாரங்கட்குங் காரணங்கள் அநேகமிருக்கின்றன. அவையெல்லா நிற்க. இப்பொழுது வசுதேவர், தேவகி தேவி, ரோகிணி என்று சொல்லப்பட்டவர்களுடைய அவதார காரணத்தைச் சொல்லுகிறேன் கேட்பாயாகவென் றருளியதைச் சூதபகவான் மகருஷிகளுக்குக் கூறத் தொடங்கினார்.

ஓர் காலத்தில் மகானாகிய காசிபர் யாகநிமித்தமாய் வருணனுடைய பசுவை அபகரித்தனர். பின்னர் அந்த வருணன் காசிபரையடைந்து பலவிதமாய்க் கேட்டும் யாசித்தும் அவர் கொடுக்கா திருக்கப் பிரமனிடம்போய் நமஸ்காரஞ்செய்து தீனசுபாவத்தோடும் நின்று ஓ ஐயா! காசிபர் என்னுடைய பசுக்களை அபகரித்தனர். அதை நானறிந்தவனாய் அவரிடஞ் சென்று கேட்டேன். கேட்டும் கொடுப்பதில்லை யென்று சொல்லுகிறார். இனி நானென்ன செய்வேன். இனிநா னவரைச் சபிக்கப் போகிறேனென்று சொல்லிவிட்டு

அக்காசிபர் மாநுடயோனியில் யாதவனாய்ப் பிறக்கக் கடவரென்று சபித்தனன். பின்னரும் கோபந்தணியாது அவருடைய மனைவியரிருவரும் மானுடசன்மத்திற் பிறந்து தாயைப் பிரிந்த கன்றைப் போல் அளவுபடாத துக்கத்தையடையக் கடவர்களென்று அவர்களையுஞ் சபித்தனன்.

ஓ அரசனே! இருவரில் இவ்வுலகில் அதிதியானவள் பிறந்தவுடன் துர்மரணத்தையடையத்தக்க குழந்தைகளை யுடையவளாகவும், அதிக துக்கத்தை விளைவிக்குங் காராக்கிருகத்தில் வசிப்பதாகிய வசிப்பையுடையவளாகவுமாயினள். ஓ பூபாலனே பிரமதேவன் அந்த வருணனுடைய சாபத்தைக்கேட்டுக் காசிபரை வரவழைத்து ஓ மஹானுபாவனே! எந்தக் காரணத்தினால் நீ திக்பாலகனாகிய வருணனுடைய பசுக்கூட்டங்களை யபகரித்தனை. மறுபடி கேட்கும்போதும் ஏன் கொடுக்கவில்லை! இதுவென்ன அநியாயம்! நீ நீதி தெரிந்தவனா யிருந்தும் பரதிரவியாப கரணத்தை எப்படி செய்யத் துணிந்தனை! இதுமிகவும் அநீதியானது. மேலும் நீ எல்லாமறிந்தவன் அந்தோ! இந்தலோபத்தினுடைய குணம் ஆச்சரியம்! ஆச்சரியம்!! இதுவல்லவா நரகத்தைக் கொடுப்பதாகிய பாபரூபமாய்ப் பெரியோர்களுக்கு அசம்மதமாயுள்ளது. இது எவரையும் விடுகிறதில்லையல்லவா வென்றெண்ணி இந்தக்காசிபனும் அந்த லோபகுணத்தை விடுவதற்குக் கூடாதவனாயிருக்கிறான் நாமென்ன செய்கிறது. எந்த விதத்திலும் லோபகுணமானது யாவராலும் விடுவதற்குக் கூடாமையா யுள்ளதென்று நிச்சயிக்கிறேன். சாந்த சித்தத்தை யுடையவர்களாய்ப் பிறரிடத்தில் யாசிக்காதவர்களா யிருக்கின்ற வைகானசர் முதலிய பெரியோர்களே இந்த லோபகுணத்தைச் செயித்தவராகையால் அவர்கள் தான் தன்யர்களென்றும் சாந்தர்களென்றுஞ் சொல்லப்படுவார். சம்சாரத்தில் பலிஷ்டமாகிய சத்துருவானது லோபகுணமே. அசுத்தத்திற்கு முதன்மையானதும் அதுவே. இந்தக்காசிபன் துஷ்டத்தொழிலைச் செய்தானல்லவா வென்று கோபித்துப் பின்புத்திரனல்லவாவென்று சிறிது மனமிரங்கிக் காசிபனைப்பார்த்து நீ பூமியில் ஓ ரம்சமாக யாதவகுலத்தில் உன்மனைவியரோடு சனித்துக் * கோக்களை மேய்த்து ரக்ஷித்துவருவாய் என்று ரக்ஷிக்கவேண்டுமென்கிற வெண்ணத்துடன் சபித்தனர். காசிபர் வருணனாலேயும் பிரமனாலேயும் பூபார நிவிர்த்தியின் பொருட்டு அவ்வாறுசபிக்கப்பட்டவராயினர். அவ்வண்ணமே அவருடைய பத்தினிகளாகிய திதியையும் அதிதியையுஞ் சபித்தனர். அவருள் அதிதியை நோக்கி உனக்குப்புத்திரர் எழுவருண்டாவர் அந்த எழுவரும் பிறந்து பிறந்து

* கோ - பசு

அப்பொழுதப்பொழுதே இறந்து போகக் கடவார்களென்றனர். அதைக்கேட்ட ஜனமேஜயன் ஓ வியாசரே! இந்திரனுடையமாதாவாகிய திதிக்குத் தங்கையாகிய அதிதியானவள் எந்தக்காரணத்தினால் சோகமேலிட்டிருப்பதாகிய கர்ப்பத்தைப் பெறலாயினள், அதனைச் சொல்லல் வேண்டுமென்று ஜனமேஜயன் வினாவிய விண்ணப்பத்தை வியாசர் கேட்டு மனவெழுச்சியுடன் அதன் காரணத்தை அடியில் வருமாறு சொல்லத்தொடங்கினர்.

(உக-ஙசு) ஓ ஜனமேஜயனே! உத்தமர்களாகிய திதி அதிதி என்கிற இரண்டு ஸ்திரீகளும் தக்ஷப்பிரஜாபதியினுடைய பெண்களாகும். இவர்கள் காசிபருக்கு மனைவியானார்கள். அதிதிக்கு இந்திரன் மகனாகப்பிறந்து அதிபராக்கிரம சாலியாயுலாவினான். அவனைக் கண்ட திதியானவள் அவனைப் போலும் ஓர் புத்திரன் தனக்குண்டாக வேண்டுமென் றபேக்ஷித்து ஓர் நாள் தந்நாயகனைப் பார்த்து எனக்கு மேன்மையைத் தரத்தக்க நாயகனே! இந்திரனுக்குச்சமானமான பராக் கிரமத்தையுடையவனாயும், மகாவீரனாயும், தர்மாத்மர்வாயுமுள்ள ஓர் புத்திரனுண்டாக வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தனள். காசிபர் கருணை யுடையவராய் ஓ என்னன்புடையாளே உனக்கு நானொரு விரதத்தைச் சொல்லுகிறேன். அந்த விரதத்தை என்னாணை கடவாமல் நடத்துவையாயின் அந்த விரதபூர்த்தியில் உன் வேண்டுகோளின்படி இந்திரசமானனாகிய புத்திரன் உனக்குண்டாகிறானென்று அநுக்கிரகஞ் செய்தனர். அதுகேட்ட திதியானவள் தேவரீர்சொல்லுகிறபடியே செய்கிறேனென்று சொல்லி அவரால் விதிக்கப்பட்டபடியே பரிசுத்த முடையவளாய்த் தியானநிலையினின்று ஆகார நிவிர்த்திசெய்து பாலருந்தி உறங்கும் போது பூமியிற்கிடந்துறங்கி வேறு சிந்தனையின்றி விரதத்தை முடித்தனள். அவ்விரத பலத்தால் மனோகரமாகிய கருப்பமுண்டாய் அது நாளுக்கு நாள் மிக்க வீரியத்தோடு வளர்ந்துவர, திதியானவள் ஒளிவீசும் அழகிற்சிறந்தவளாய்க் கர்ப்ப சின்னங்களெல்லாம் நிறையப் பெற்றுலாவுவதை அதிதிபார்த்து துக்கமடைந்து இந்த திதிக்குப் பிறக்கப்போகிற பிள்ளை மகாபலவானாயும் இந்திரசமானனாயு மிருப்பான். அப்பொழுது நம்முடைய பிள்ளை சிறுமை யடைந்திருப்பானல்லவா என்று சிந்தா குலமடைந்து தன்மகனாகிய இந்திரனைப்பார்த்து உனக்கொரு சத்துரு உண்டாகப்போகிறான். அவன் அதிபராக்கிரமமுடையவனாய்த் திதியினுடைய கர்ப்பத்தில் இப்பொழுது வசிக்கிறான். ஆகையால் அவனை நாசஞ்செய்வதற்கு ஏதேனும் ஓ ருபாயத்தை ஆலோசனையோடு தேடல் வேண்டும். அந்தவுபாயமானது என்னையெனின் திதிக்குண்டாயிருக்குங்

கர்ப்பத்தை அழித்தலே யாகும் அது வன்றி வேறுபாய மென்ன விருக்கின்றது. சககளத்தியாகிய அவளை நான் பார்க்கும்போதெல்லாம் என்சித்தத்தில் சந்தோஷமென்பது சிறிதுந் தோன்றாமல் சிந்தாகுலமானது பெரிதுந்தோன்றி என்னை வாட்டுகின்றது. கர்ப்பத்தில் வசிப்பவனாகிய உன்னுடைய சத்துரு கர்ப்பத்திலேயே நாசமடையாமற் போவானாயின் பின்னரவன் க்ஷயரோகம்போல விருத்தியடைந்து உன்னைநாசஞ் செய்வான். உலகிலறிவுடையவன் சத்துருத்துவம் அங்குரிக்கும் பொழுதே அதனை அழித்து விடுவதியல்பு. ஓ இந்திரனே! திதியினுடைய கர்ப்பமானது என்னுடைய வயற்றில் சிலாக்கைச்சொருகி யிருக்கிறதுபோ லென்னுள்ளத்தை வாட்டுகின்றது. ஆகையால் எவ்விதத்திலாவது கர்ப்பத்தை அழித்துவிடுவாய். ஓ மஹாநுபாவனே! தாயாகிய எனக்கு இஷ்டபூர்த்தி செய்விக்கவேண்டு மென்றுனக்கு இஷ்டமிருக்கும்பக்ஷத்தில் சாமபலத்தினாலாவது வேறு எவ்விதமான உபாயத்தினாலாவது அவளை நீ சுவாதீனப்படுத்தி அந்தச் சிசுவை நாசஞ்செய்தல் வேண்டும் என்ன சொல்லுகிறாயென்று கேட்டனள்.

(ருரு-ருகூ) இவ்வாறு சொல்லக்கேட்ட இந்திரன் தாயாருடைய வார்த்தையை யங்கீகரித்தவனாய் அதற்குரிய ஆலோசனையைத் தன்னுள்ளெண்ணி விடைபெற்று ஓ அரசனே! பாவ புத்தியுள்ளவனாகிய இந்திரன் பெரிய தாயாருடைய சமீபம் போய் அதிகவினயத்துடன் வணங்கிப் பகையாளிகளுடையவார்த்தை வெளியேமிக வினிமையாயும் உள்ளே விடமாயுமிருப்பதாகலான் அதுபோலும் சிலவார்த்தைகளை அடியில்வருமாறு சொல்லத் தொடங்கினான். ஓ தாயே! நீ விரதத்தினாலிளைத்ததேகத்தை யுடையவளாயும், பலஹீனையாயுமிருக்கும் புண்ணிய சாலியாகையினால் உன்னுடையபாதசேவை செய்வது எனக்குப் பெரும்பாக்கியமென்று நினைத்துவந்தேன். உனக்கு நான் என்ன செய்ய வேண்டுமோ அதைக் கட்டளையிட வேண்டும். ஓபதிவிரதையே! நான் உன்னுடைய பாதத்தைவருடுகிறேன். தந்தையாருடைய பணிவிடையைப்பார்க்கிலும் தாயாருடைய பணிவிடை மிகவும் புண்ணியமானது. அது கிடைக்கப் பெற்றவன் நாச ரகிதமாகிய பரகதியை அடைகிறான். எனக்கு உன்விஷயத்தி லொருபேதமுமில்லை உனக்கென்பேரி லேதேனுஞ் சந்தேகமிருக்கும் பக்ஷத்தில் என்தாய் பேரி லாணைவைக்கிறே னென்று சொல்லி அவளுடைய காலைத் தன் துடையின் மேல் வைத்துக் கொண்டு பிடித்தனன்.

(சு0-ரு0) வீரபதிவிரதையாகிய அவள் இவன்பால் விசுவாசமும் பிரியமுமுடையவளாய் அவன் பாதம்பிடிப்பதை மறுக்காமையான் விரதத்தினால் மெலிந்திருந்தசரீரத்தி லாரோக்கிய முண்டாய் நித்திரை செய்தனள். அச்சமயம் பார்த்து இந்திரன் இதுதான் நல்லசமய மென்று தீவரங்கொண்டு ஆயுதபாணியாய் சூக்ஷ்ம சரீரமெடுத்து யோகபலத்தினால் கர்ப்பத்திற் பிரவேசித்து வச்சிராயு தத்தினால் சிசுவை * ஏழு துண்டங்களாய்க் காரணந் தெரியாமலே வெட்டினான். அப்பொழுது அக்குழந்தையழ அதைப் பார்த்து அழாதேயென்று மெதுவாகச் சொல்லிப் பின்னர் ஏழாகவெட்டிய வொவ்வொரு துண்டங்களையும் எவ்வேழாகவெட்டினான். அத்துண்டங்களெல்லாம் நாற்பத் தொன்பது மருத்துக்களாயின. திதியும் விழித்துக்கொண்டு இது வஞ்சனையோடும் வந்திருந்த இந்திரன் செய்த கொடுந் தொழிலென் றறிந்தவளாய் அளவிறந்த துக்கத்தோடும் மனவேகங் கொண்டு இவனிவ்வாறு செய்வதற்குக் காரணம் தங்கையினுடைய போதனையா மென்றறிந்து மகாகோபத்தோடும் அதிதியையும் இந்திரனையும் சபிக்கத் தொடங்கி இந்திரனைப் பார்த்து நீ உன் தாயினுடைய கெட்ட வார்த்தையைக் கேட்டுப் பரிகாரத்துக்கிடமில்லாத சூதானபாவத்தைச் செய்தாயாகையால் நீதிரிலோகாதிபத்தியத்தையிழைக்கக்கடவாய் ஓ அதிதி! உன்னுடையகுமாரனால் என்னுடைய கர்ப்பமானது எப்படி சேதிக்கப்பட்டு நான் துக்கத்தையடைந்திருக்கின்றேனோ அப்படியே பாபிஷ்டியாகிய நீ வேறொருசன்ம மெடுத்து காராக் கிருகத்தி லடைக்கப்பட்டு அவ்விடத்தில் பிறப்பனவாகிய பிள்ளைகள் பிறந்து பிறந்து அப்பொழுதப்பொழுது சேதிக்கப்பட்டு மரணமடைந்துபோக நீவிசனமடைந்தவளாய் சோகமுற்றிருக்கக்கடவாயென்று சபித்தனள்.

(ருக-ருரு) இவளிட்ட சாபத்தை காசிபர்கேட்டு அவளைச் சமீபித்து இப்படிச்சபிக்கலாமாவென்றுகேளாமல் நீ கோபிக்க வேண்டாம், மகாபலமுடைய உன்னுடைய புத்திரரனை வரும் மருத்துக்களாய் இந்திரனுக்குச் சமானமாகப் பிரகாசிப்பார்கள். ஓ திதியே! இப்போது அதிதிக்கு நீ இட்டசாபம் இருபத்தெட்டாவது சதுர்யுகத்தில் வரும் துவாபரத்தில் நடக்கப் போகிறது. ஓ பெண்ணே! எனக்கும் வருணனாலும் பிரமனாலும் ஓர் காரணத்தாற் சாபம் நேரிட்டிருக்கிறது அப்பொது அவளுக்கும் சாபமிட்டிருக்கிறார்கள். இப்போது உன்னுடைய சாபமும் நேரிட்டிருக்கிறது. ஆகையால் அத்தியானவள் ஓரம்சத்தினால் மாநுடப் பிறப்பையடைந்து சாபத்தின்பலனையனுபவிப்பாள் நானும் அந்த சாபத்தின் படியே மாநுடனாகப்பிறந்து அதன் பிரயோஜனத்தை

* ஏழுதுண்டங்களாக வெட்டினானேயல்லாமல் ஏழாகவெட்டுவதற்கு காரணமறிந்தவ னல்லனாம்.

யடையப் போகிறேன். எங்களிரண்டு பேருக்கும் சாபத்தினனுபவம்விடாது என்று சொல்லவும் திதியானவள் ஒருவாறு சமாதானப்பட்டவளாய் சந்தோஷமடைந்து அதிதியினிடத்திலிருந்த கோபமாறி எப்பொழுதும் சிறிதும் பிரியமில்லாத வார்த்தை சொல்லாதவளாய்க் கலந்திருந்தனள். ஓ ஜனமேஜயனே! பூர்வத்தில் நடந்த சாப வரலாற்றை யிப்போதுனக்குச் சொன்னேன். இதனால் தேவகி தேவியானவள் அதிதியினுடைய அம்ச பூதையென்று அறியத்தக்கவளாகுமென்று வியாசபகவா னருளியவாறு சூதமுனிவர். முனி கணங்கட்குக்கூறினார்.

மூன்றாம் அத்தியாயம்

வசுதேவாத் யவதார காரணகதனம் முற்றிற்று.

———————

ஆஉ அத்தியாயம் ங-க்குச் சுலோகம் (கசுஙஏ.)

உ

ஸ்ரீ திரிபுரசுந்தர்யை நம:

நான்காம் அத்தியாயம்

* சம்சார விமுக் த்யுபாய கதனம்.

————

(க-கசு) ஓ முநிகணங்காள்! தேவகிதேவி முதலாயினாருக்குப் பூர்வசன்மத்திலுண்டான சாபகாரணத்தை ஜனமேஜயனறிந்து வியாசமுனிவரைப் பார்த்து ஓசர்வஞ்ஞமூர்த்தியே! இப்பொழுது சொல்லி வந்த சரித்திரத்தைக் கேட்டு ஆச்சரியப்படுகிறேன். பாபரூபமாகிய சம்சாரபந்தமானது ஐயா எப்படி விடுதலையாகுமென்று வினவியவாறு யான் கூறுகிறேனென்று சூதமுநிவர் சொல்லத் தொடங்கினர். அரசன்! அந்தோ! காசிபருடைய குமாரனாகிய இந்திரன் திரிலோகசாம்பிராஜ்ய முடையனாயிருந்தும் அவன் சிசுச்சேதமாகிய கொடுந்தொழலை எவ்விதமாய்ச் செய்யத் துணிந்தனன்? இச்செய்கையை எவ்வளவு தாழ்ந்தன்மையுடையவனும் நினைவினாலும் செய்ய நினையான். தாயாரிடத்திற்சென்று உனக்கு நான் பணிவிடை செய்கிறேனென்று வஞ்சனையாற் சில இனியவார்த்தைகளைச் சொல்லி நம்பத்தகுந்த தாகிய ஆணையுமிட்டு அவளுறங்குஞ்சமயத்தில் கர்ப்பதிற

* சம்சார அபிமானத்தை விடும் உபாயத்தைக் கூறுதல்.

பிரவேசித்துச் சிசுவதைசெய்யத் துணிந்தானல்லவா! இதனினுங்கொடியது உலகத்தி லென்னவிருக்கின்றது? இந்திரன் தேவராஜாவாயிருக்கும்பொழுது இவன் றருமங்களைப் பாதுகாத்து அதர்மஞ்செய்வோரைத் தண்டிக்க வேண்டியவன். அன்றியும் திரிலோகத்துக்கும் அதிபதி. இவன் இந்த நீசகாரியத்தைச் செய்யலாமா? இந்த அயோக்கியமான காரியத்தை எவனுஞ்செய்யான். இவன் செய்தி இங்ஙனமிருக்க. ஓ முனிவரே; என்னுடைய பாட்டன்மார்கள் குருக்ஷேத்திரத்தில் மிகவும் பயங்கரமாகிய யுத்தத்தையும் மிகவும் ஆச்சரியப்படத் தக்கதாகிய அதிகுரூரமான செய்கைகளையுஞ்செய்திருக்கிறார்கள் இவர்களேயன்றி பெரியோர்களாயிருந்த பீஷ்மர் துரோணர் கிருபர் முதலாயினாரும் கிருஷ்ணராலே தூண்டப்பட்டவர்களாய் கர்ணன் தருமபுத்திராதியரோடு கலந்து அதர்மமான பலகாரியங்களைச் செய்திருக்கிறார்கள். இவர்களெல்லாம் கனவான்களாயிருந்தும் தேவாம்சமுடையவர்களாயிருந்தும் தர்மானுஷ்டானபரராயிருந்தும் சம்சாரத்தில் சாரமில்லை யென்பதையறிந்தவர்களாயிருந்தும் அப்படி ஏன் செய்ய வேண்டும்? தேவரிற்சிறந்த இந்திரனும் தருமநீதியிற் சிறந்த தருமனாதியருந் தெய்வத்தன்மையிற்சிறந்த பீஷ்மராதியரும் எந்தக் காரணத்தினால் அதர்மத்திற் பிரவேசித்தனர். இனித் தர்மத்தினிடத்தில் பிரமாணம் எவ்வாறு நிச்சயிக்கக் கூடும்?

ஓ வியாச முநிவரே! இதுவரையில் தங்களால் சொல்லக் கேட்டு வந்தவைகளினாலெல்லாம் எனக்குச் சித்தசலன முண்டாயிற்றேயன்றிச் சித்தோபசனமன முண்டாகவில்லை. ஆனால் இவையெல்லாம் ஆப்தனாகிய கிருஷ்ணமூர்த்தியின் வாக்கியத்தைக் கொண்டு தருமனாதியர் செய்தார்களென்று சொல்லுவீராயின் அந்த ஆப்தனென்று சொல்லுகிற கிருஷ்ணன் வனிதாதிவிஷயங்களில் ஆசையுடையவனாயும் பெரும்பாலும் பாரபக்ஷஞ்செய்யும் ராகமுடையவனாயு மிருந்தானென்று அவனுடைய சரித்திரத்தால் வெளியாகின்றது. அன்றியும் அவன் இவர்களுடைய வம்சஸ்தனுமல்லன். அவனெவ்விதத்தால் ஆப்தனானான் பொருள் நஷ்டத்தை விளைவிப்பதாகிய ராகமும், அசத்தியவார்த்தையை விளைவிப்பதாகிய துவேஷமும் எவனிடத்திலிருந்தபோதிலும் அவை அவனுக்கு அவ்விரண்டையு முண்டாக்குமல்லவா? நீர் ஆப்தனென்று கூறிய கிருஷ்ணனிடத்தும் அவன் வாக்கியத்தை நம்பினவரிடத்தும் அவ்விரண்டுகுணமு நிலைபெற் றிருந்தமையைக் கூறுகின்றேன். என்னையெனின் ஜராசந்தனைக் கெடுக்கவேண்டிய நிமித்தம் சத்துவமூர்த்தி என்கிற கிருஷ்ணன் கபடமாகப் பிராமணவடிவத்தை

யெடுத்தனனே அது சத்வகுண சாலியா யிருக்கின்றவனுக் குரியதா? இப்படிப்பட்ட குணமுடையவ னெப்படி ஆப்தனாவான்? அப்படியே அருச்சுனனும் யாககாரியார்த்தமாய்க் கடவடிவங் கொண்டானல்லவா? அது சாத்வீக தருமமாகுமா? சாத்வீகதருமமல்லாதயாகமும் ஒரு யாகமாகுமா? அந்தோ! இதுதானா தருமம். தருமம் நான்குபாதமா யுள்ளதன்றோ, அதில்முதற்பாதம் சத்தியமென்றும், இரண்டாம் பாதம் ஆசாரமென்றும், மூன்றாம்பாதம் தயையென்றும், நான்காம்பாதம் தானமென்னும் வேதங்களால் பலமுறை சொல்லப்பட்டனவென்று உண்மையுணர்ந்த பௌராணிகர்க ளெடுத்துக்கூறுகின்றனர், இவர்கள் செய்த யாகத்தில் இந்தநான்கு தருமமுமில்லை; இந்தயாகம் பெரியோர்களுக்கெவ்வண்ணம் சம்மதமாகும்; தருமசூனியமாகிய அந்தயாக கிருத்தியத்தில் தருமத்தின் பலன எப்படிவரும்? யோசிக்கும்பொழுது இவர்களுக்குள் ஒருத்தருக்காயினுந் தருமத்தினிடத்தில் நிச்சயமானபுத்தி யிருந்ததாகக் காணப்படவில்லை.

(கஎ-ங0) இப்படியே சகத்துக்கெல்லாம் பிரபுவாகிய விஷ்ணுமூர்த்தி கபடமாய் வாமனவுருவங்கொண்டு பலிச்சக்கரவர்த்தியை வஞ்சித்து மூன்றுலகத்தையுங் கொண்டனரே அவனென்ன அநீதிமானா? பலிச்சக்கரவர்த்தியோ இந்திரனை வெல்லும்படியான பராக்கிரமத்தை யுடையவன், வேதவிதியாயிருக்கின்ற யாகங்களை நடத்துகின்றவன், தர்மாத்மா, இல்லையென்னாது கொடுக்கும வள்ளல், சத்தியசந்தன், இந்திரியவசீகரன். இந்தமகாநுபாவனை எந்தக்காரணத்தினால் ஸ்தானப் பிரஷ்டம் பண்ணினார். ஓவியாசரே அந்த விஷ்ணு மூர்த்தி பலியை வஞ்சித்தபோதிலும் ஜயத்தையடைந்தவர் யாவர்? விஷ்ணுமூர்த்தி கபடத்தினால் வஞ்சித்துச்செயித்தவராகத் தெரிய வருகிறது. நானிவ்விதமான அளவிறந்த சந்தேகமுடையவனாக விருக்கிறேன். நீர் புராணகர்த்தராகவும், சகலதருமங்களையு மறிந்தவராகவு மிருக்கின்றீர். ஆகையால் உண்மையைச் சொல்ல வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்ய வியாசர் ஓ அரசனே! எந்தக் காரணத்தினாலாவது பலிச்சக்கரவர்த்தியே கொடுத்தவனாயிருக்கின்ற படியினால் அவனே ஜயமுடையவன். விஷ்ணுவோ வாமனாவதாரங் கொண்டுபோனார் திரிவிக்கிரமராக வளர்ந்து வந்தாரென்கிற சொல்லளவில் பிரசித்தியடைந்தவரேயன்றி வேறில்லை. ஆனால் அந்த மகாபலியை விஷ்ணுமூர்த்தியானவர் தம்முடைய வைகுண்டத்தில் துவாரபாலகனாக விருக்கவருளினார். இது நிற்க.

ஓ அரசனே! சத்தியந் தருமத்துக்கு அன்னியமானதல்ல அது சத்தியத்துக்கு மூலமாயுள்ளது. ஆனால் மாநுடர்களுக்குச் சத்தியமா யிருப்பதென்றால் மிகவும் கஷ்டம். ஏனென்றால் இந்தவுலகம்

மாயையால் நிர்மிக்கப்பட்டது. அந்த மாயையோ முக்குணமாயும் அநேகவிதமான வடிவங்களாயும், கெடாதவலியுள்ளதாயும், ஆன்மாக்களுடைய பேதங்களுக்குத் தக்கவாறு விளங்கும். அவ்வவ்வறிவை வஞ்சித்தலாகிய வஞ்சச்செயலையுடையதாயு முள்ள தாகையால் தருமத்தையும் சத்தியத்தையும் விளக்குந்தருமத்தை அதுஉடையதாயிருத்தல் எவ்விதத்துங்கூடாது. ஆனால் இவ்வுலக மெவ்வாறு நடக்குமெனின், வஞ்சச்செயலுடைய மாயையும்; முக்குணங்களுங் கூடியிருத்தலால் சத்தியத்தில் அசத்தியமும் அசத்தியத்தில் சத்தியமுங் கலந்து நடப்பதே அநாதியாயுள்ள வழக்கு. இவ்வுண்மையுணர்ந்த வைகானசர் முதலிய சிலமகருஷிகள் தான் மாயைக்குங் குணாதிகட்கும் வன்மைசெய்வதாகிய ராகத்து வேஷாதிகளை விட்டவர்களாய்ப்பிறரிடத்தி லொருபொருளும் வேண்டுவதொழிந்து சத்தியமுந் தருமமுமே பொருளெனக்கொண்டு அவாவுக் கிடஞ்செய்யாமல் மாயாதீதராகியும் குணதீதராகியும் வாழ்கின்றார்கள். அவர்கள் தான் உய்யுநெறி யிதுவாமென்று உலகினாறிய நிர்மிக்கப்பட்டிருக்கின்றவர்கள். அவர்கள் நீங்கலாக ஏனையோரெல்லாம் முன்கூறிய குணாதிகளால் ஆவரிக்கப்பட்டே யிருப்பார். ஆகையினாற்றான் வேதங்களிலேயும் உபப் பிராம்மணங்களாகிய புராணங்களிலேயும் ஒரோ வழியாய்க் கூறாமல் பலவழியாய்க் கூறியிருக்கின்றன. அது போலவே குணசம்பந்திகளால் செய்யப்பட்டிருக்கிற தர்மசாஸ்திரங்களிலேயும் குணங்களோடு கூடினவன் குணத்தோடு கூடிய கிருத்தியத்தையே செய்வான், நிர்க்குணபரமாயிருக்கின்றவன் ஒரு கிருத்தியத்தையுஞ் செய்யானென்று கூறியிருக்கின்றன. ஆகவே ஒன்றோடொன்று கலந்திருப்பனவாகிய குணங்களைக் கலந்திராத சீவகோடிகளெங்குமில்லை. ஆகையால் கபடமற்றதாயும் குணசூன்யமாயும் ஸ்திரமாயும் வேதங்களிலேயும் வேதோபப்பிராம்மணங்களாகிய புராணங்களிலேயும், சுருத்யர்த்த ஸ்மாரகமாகிய ஸ்மிருதிகளிலேயும் சொல்லப்பட்டிருக்கிற தருமங்களுக்கு வேறுபடாமலுள்ள தர்மத்திலறிவு நிலைபெற்றிருத்தலரிதாகும்.

(ஙக-சு0) ஓ ஜனமே ஜயனே! மாயையினால் சம்சாரத்தில் மோகத்தை யடைந்திருக்கிற சீவனை இந்திரியங்கள் தங்கள் வசமாக்கி யாளுகின்றன. மனமோ அந்த இந்திரியங்கள் போகும்வழியே போகுந் தன்மையையுடையது. சீவனோ அந்த மனமுதலிய குணங்களாலே பிரேரேரிகப்பட்டவனாய் அநேகவிதமான எண்ணங்களை மாறி மாறி எண்ணும் நிலைமையினன். இவ்வனுபவம் பிரம்ஹாதி ஸ்தம்பபரியந்தமுள்ள ஸ்தாவரசங்கமங்களாகிய சகல சீவர்களிடத்தும்

பார்க்கலாம். இதனால் மாயைக்குட்பட்ட சீவர்களிடத்து அந்தமாயையானது விளையாடிக்கொண்டிருக்கிறது. அதாவது யாவரையும் வெவ்வேறு விதங்களாக மோகப்படுத்திக் கொண்டிருக்கிறதென் றறியற்பாலது.

ஓ அரசனே! பிராணிகள் மாயை விளையாடுதற்கிடமாயிருக் கின்றபடியால் அவர்கள் சத்தியத்தை யறியாமல் அசத்தியத்தில் பிரவர்த்திக்கின்றனர். பிரவர்த்தகராய் வெளிவந்தபின் இந்திரியப் பிரவர்த்தகங்களுண்டாய் விஷயாதிகளைச் சிந்திக்க வருகின்றனர், சிந்தனையுண்டானபோது அதற்குறியபொருள்கள் கைகூட முயலுகின்றனர், அப்பொருள்கள் கைகூடாதபொழுது அவை கூடும் வண்ணம் கடட்முதலியவைகளை மேற்கொண்டு பாவத்தொழிலில் பிரவேசிக்கின்றனர். அதிற் பிரவேசிக்கின்ற பொழுது காமக்குரோத லோபாதிகளாகிய பகைமைக்குணங்கள் ஓயாமல் அவருள்ளே புகுந்து அவர்களைச் சுவாதீனப்படுத்தி இது செய்யத் தக்கது இது செய்யத் தகாதது என்றறியும் அறிவினை மறைக்கின்றன.

இவர்களுக்கு ஐஸ்வர்யம் அதிகப்படுங்கால் அகங்காரமேலிட்டு அவ்வகங்காரத்தால் அஞ்ஞானத்தையடைந்து அந்த அஞ்ஞானத்தால் இம்மைமறுமைப் பிரயோஜனங்களையிழந்து மரணப்பிரயோ ஜனத்தையடைகிறார்கள். மரணப்பிரயோசக்ராகிய இவர்கள் மரணத்தை மறந்து அநேக்சங்கற்பங்களைச் சங்கற்பிக்கிறார்கள். அச்சங்கற்பங்கள் நிறைவேறாமற்போமாயின் ஈரிகைஷ அசூயை துவேஷம் ஆசை பேராசை தீனபாவம் டம்பம் அதர்மபுத்தி இவைகளெல்லா முண்டாகின்றன. இக்குணங்களெல்லாம் நீங்கும் பொருட்டேயாகம் தானம் தீர்த்தஸ்நானம் விரதாதிகளாகிய நியமங்கள் நியமிக்கப் பட்டிருக்கின்றன.. இவைகளையுமுன்சொன்ன ஈரிஷை முதலியவைகளை விடாமல் அகங்கார வெண்ணத்தோடு கூடித் தினந்தோறுஞ் செய்துவருவாராயின் அவையெல்லாம் பெரியோரால் நிந்திக்கப்பட்டுப் பலத்தைக் கொடுக்கமாட்டா.

(சுக-சுள) ஆசையினாலேயும் லோபத்தினாலேயும் செய்யப்பட்ட சத் கருமங்களனைத்தும் சுத்தியாகமாட்டா. அறிவாளிகளாயுள்ளவர்கள் தாம் செய்யத்தொடங்கும் தர்ம கருமங்களுக்குரிய திரவியம் சுத்தியுள்ளனவா? இல்லனவாவென்று முன்னர் ஆராய்தல் வேண்டும். பிறருக்குத் துரோகஞ்செய்யாமல் ஆர்ஜிக்குந்திரவியமே சுத்தியான திரவியம். அந்தத்திரவியந்தான் தர்மகருமங்களுக்கு முக்கியமானதென்று சொல்லப்படும். துரோகஞ்செய்து வருவது எதுவோ அதுவே அசுத்தியுடையதாகும். அதைக்கொண்டு ஒருவன் தர்மகருமங்களைச்

செய்வானாயின் அவை அவனுக்குப் பிரயோஜனமாகுங் காலத்தில் விபரீத மான பலத்தைக் கொடுக்கும். எந்தப்புருடனுடையமனமானது துரோகமற்று எவ்வளவு நிர்மலமாயிருக்கிறதோ அவ்வளவு நல்லபலனைப் பெறுவான். எவனுடையமனமானது நிர்மலத்தை யடையவில்லயோ அவன் செய்யுந் தர்மங்களால் வரும்பலன் சாஸ்திரத்திற்சொல்லியவா றுண்டாகா. திரவியமெப்படி சுத்தியாயிருத்தல் வேண்டுமென்றேனோ அப்படியே சத்கருமங்களைச் செய்கின்ற ருத்விக்கு முதலாகிய ஆசாரியர்களும் சுத்தமானமனமுடையவராயிருப்பாராயின் அந்த சத்கருமம் பூர்ணபலனைக் கொடுத்துவரும் ஆகையால் தேசமுங்காலமுங் கிரியையுந் திரவியமுஞ் செய்கின்றவரும் மந்திரங்களும் அவ்வவற்றிற்குக் கூறிய சுத்தியோடுங்கூடி யிருக்க வாராய்ந்து எந்த சத்கருமமாவது நடத்துவாராயின் அது பூர்ணபலத்தைத் தரும். அந்தப்பலத்தால் நல்லசுகத்தைக் கர்த்தாவடைவான். இவ்வாறன்றிச் சத்துருக்களுக்கு நாசத்தையுத் தேசித்தும் தனக்குமாத்திரம் விசேஷவிருத்தியையபேக்ஷித்தும் எவராவது சத்கருமத்தைச் செய்வாராயின் அது விபரீத பலனைத் தான் கொடுக்கும். எவர் தற் பிரயோசனத்தை விரும்பிச் செய்கின்றாரோ அவர் எப்பொழுதும் நன்மையறியமாட்டார். எவர் தெய்வாதீனராய்ச் சத்கருமங்களைச் செய்கின்றாரோ அவர் எப்பொழுதுந் தீமையை அறியார். அங்ஙனமாயினும் ஒருவருந் தெய்வாதீனமாய்ச் செய்யார்.

(சுஅ-ருஉ) ஓ அரசனே! சகலதேவரும் அசுரரும் பிரமனித்தி லிருந்தே உற்பத்தியானார்கள். எவ்வாறெனில் பிரமன் சத்வகுண த்தினின்று தேவர்களையும், ரஜோகுணத்தினின்று மாநுடர்களையும், தாமசகுணத்தினின்று அசுரர்களையும் திரியக்குகளையு முண்டாக்கினன். அவ்விருவவும் தவம் யாகம் முதலியவற்றைச் செய்தவர்களாயினும் தீமையை விளைவிப்பதாகிய துவேஷாதி குணங்களைக் கொண்டு செய்தனரேயன்றி நிர்மல மனதுடன் தெய்வாதீனமாய்ச் செய்தவர்களன்று. தியக்சாதிகளுக்கும் அந்தத் துவேஷாதிகள் விட்டனவோவென்றால் அவைகளுக்கும் விட்டனவல்ல. இதுவென்ன வாச்சரியம்! இதுவென்ன கொடுமை! யாவரினுந் தேவர்கள் சிறிதேனும் நன்மைக்குணத்தோடு கூடினவரல்லவர், அவர்கள் எப்பொழுதும் துவேஷசிந்தனை யுடையவர்களாய் யார் தவஞ்செய்த போதிலும் அவர்கள் தவத்துக்கு விக்னஞ் செய்கிறதே தொழிலாகக் கொண்டிருக்கிறவர் சந்தோஷஞ் சிறிதுங்கிடையாது. எப்பொழுதும் துவேஷமுடையவர்கள் ஒருவருக்கொருவர் விரோத வெண்ணமேவுடையவர்கள். ஓ அரசனே! இந்தச் சம்சாரமானது அகங்காரத்தினின் றுண்டானதென்று

சொல்லப்படும் பொழுது அதிலிருப்பவர்கள் எப்படி துவேஷம் நீங்கினவர்களாக விருப்பார்களென்று வியாசமுநிவர் ஜனமேஜயனுக்குக் கூறியவாறு சூதமுநிவர் சவுநகாதியர்கட்குக் கூறினார்.

நான்காம் அத்தியாயம்

சம்சார விமுக் த்யுபாய கதனம் முற்றிற்று.

ஆஉ அத்தியாயம் சு-க்குச் சுலோகம் (உகருஏ.)

உ

ஸ்ரீதிரிபுர சுந்தர்யை நம:

ஐந்தாம் அத்தியாயம்

---

* இந்திரகிருத நரநாராயண தபோலிக்னம்.

வியாசமுனிவர் உலகினராகியதேவர்கள் முதலிய யாவரும் ராகத் துவேஷாதிக ளற்றிருத்தலரிதென்று கூறியும் ஜனமே ஜயன்தேவர்களிடத்திருக்குந் தீமையான குணங்களைப் பற்றி அவர் பால் மீண்டும் வினவியதைச் சௌனகாதியர்களுக்குச் சூதமுனிவர் கூறத்தொடங்கினர்.

(க-எ) வியாசர் ஓ அரசனே! இச்சம்சாரவிஷயத்தை விவரித் துரைப்பதனாற் பலனென்னை! துரோகபுத்தியுள்ளவன் எப்படி தர்மாத்மாவாவன். உத்தமர்களாகிய சத்புருஷர்களுக்குக் கிருதயுகம் உரித்தானதென்றும், அதர்மர்களாகிய அசத்புருஷர்களுக்குக் கலியுகம் மிகச்சிறந்ததென்றும், இவ்விருவருமல்லாத மத்திமர்களாகிய ஏனையோர்களுக்குத் தருமாதருமப் பிரவர்த்தகமாயுள்ள இரண்டு யுகங்களும் உரித்தென்றும், கலியில் ஒருக்கால் ஒருவன் சத்யதர்மத்தை யநுசரித்தவனாக விருப்பானாயின் அவன் உலக த்தவரால்பரிகாசஞ் செய்யத்தக்கவ னாவானென்றும், மற்ற யுகங்களில் யாவரும் தர்மயுக்தராயிருக்கின்றவராகையினால் பரிகாசஞ் செய்வதின்றி மேன்மையாகக் கொண்டாடத்தக்கவ னாவனென்றும் பெரியோர் கூறுகின்றனர். அஃதுண்மையே யாயினும் கிருதயுகத்திலுந் தாவர ஜங்கமங்களாயுள்ள எல்லாப் பிரபஞ்சமும் ராகத் துவேஷத்தோடு

* நர நாராயணர்களுடைய தவத்தை இந்திரன் கெடுத்தல்.

கூடி விவரிக்கப் பட்டிருக்கின்றமையைக் கேட்டிருக்கின்றோம். ஆகவே சகல தோஷங்களுங்கூடியுள்ள இந்தக்கலியுக சமயத்தில் அக்குணங்கள் தாண்டவமாடுவதற்கு என்ன விசாரமிருக்கின்றது. தேவர்களுடைய குணாதிசயங்களை இன்னம் விசாரிக்கப் புகுமளவில் அசூயையோடும் துரோக சிந்தனையோடுங்கூடினவர்களாயும், கபட வியாபாரத்தில் எப்பொழுதும் ஆசக்தியுடையவர்களாயு மிருக்கின்றார்கள். இவர்களேயிப்படி யிருப்பாராயின் அசுரர்களுக்கும் மாநுடர்களுக்கும் என்ன நியாயஞ்சொல்லலாம். உலக நடையில் துரோக சிந்தனை யுடையவரிடத்தில் துரோக சிந்தனை யுடையவராயிருத்தல் நியாயம்; துரோக சிந்தனையில்லாத சாந்தகுணமுடையவரிடத்தில் துரோக சிந்தனையெண்ணுவது தூர்த்த சுபாவமல்லவா ? அங்ஙனமிருக்க யாரோ ஒரு ரிஷி ஜபத்திலும் தியானத்திலும் ஆஸக்தியுடையவராயும் இராகத் துவேஷாதிகளை நிக்கிரகஞ் செய்வதில் வைராக்கிய முடையவராயுமிருக்க அவருக்குத் தேவர்களென்று சொல்லப் படுவோரும் தேவேந்திரனும் மிகவும் விக்கினத்தைச் செய்தனர்களாம். இஃதுவென்ன கொடுமை! (1-7)

ஓ அரசனே! எப்பொழுதும் தருமம் விளங்குவதற்குக் காரணம் பூர்வஜன்ம வாசனையாகும். அந்தப் பூர்வஜன்ம வாசனை, மலினப்படும் பக்ஷத்தில், தருமமும் நாசத்தையடையும். ஆனால் அந்த வாசனை மலினப்படுவதற்குக் காரணம் தருமத்தினாலடைய வேண்டியவற்றை யடைவதற்குரிய பிராப்தியில்லாமையினாலேயாம். இதனால் பூர்வஜன்ம வாசனையும் பிராரப்தமும் ஒருவனுக்கு ஒத்திருக்கின்ற பக்ஷத்தில் அவன் எந்த யுகத்தில் பிறந்தாலும் தருமத்தை விடானென்றறிதல் வேண்டும்.

ஓ ஜனமேஜயனே! பிரமனுடைய இருதயத்திலிருந்து தருமனென்று ஒரு புத்திரன் பிறந்தான். அந்தப் புத்திரன் சத்தியசம் பன்னாயும் எப்பொழுதும் தருமத்தினிடத்தில் ஆஸக்தியுள்ள வனாயுமிருந்தான். சத்தியவான்களில் மேலானவனாயிருந்த அவன் தக்ஷப் பிரஜாபதியினுடைய பெண்களில் பதின்மரை விதிமுறையே விவாகஞ் செய்துகொண்டு கிருகஸ்தாச்சிரமியாய் மனைவிமாரைக் கூடிக்கலந்தின்ப நலனுகர்ந்து புத்திரப்பேறுடையவனுமானான். அப்புத்திரருக்குள் அரி என்றும், கிருஷ்ணரென்றும் இருவருளர். அவ்விருவரும் நரநாராயணர்களென்று பெயர் பெற்று மஹரிஷிகளாய உலகத்தில் பிரசித்தி பெற்றிருந்தனர். அவ்விரண்டு பேரும்

யோகாப்பியாசத்திலேயே யிருக்கும் இச்சையுடையவராய் இமோத் பர்வதத்தை யடைந்து கங்கைக் கரையிலுள்ள பதரிகாச்சிரமத்தில் சதாகாலமும் யோகப்பியாசத்திலிருத்தலாகிய உத்தமத் தவத்தைச் செய்துவந்தனர். அவர்கள் செய்த தவத்தின் திறம் எத்தன்மைத்தெனின், எல்லாப் பொருட்கும் வேறு பட்டதாயும் 'தத்' என்னும் பதத்துக்கு அர்த்தசொரூபமாயுள்ள பரமான்மாவினிடத்தில் ஒன்று பட்டிருத்தலாகிய சதுர்ப்பாட்டையுடையதாம். அவர்கள் விஷ்ணுவினுடைய அம்சீபூதர்களாதலால் அவ்வரிய தவத்தில் ஆயிர வருஷகாலம் நிலைபெற்றிருந்து முனிவர்களுக்குள் சிறப்புடையவராய்ச் சகல சித்திகளையும் பெற்று அத்தவத்தையே செய்து வந்தனர். (8-15)

அந்தத் தவாக்கினியினால் சராசராத்மகமாகிய ஸர்வ பிராணிகளும் தாபத்தையடைந்தன. அதைக் கண்ட இந்திரன் கலக்கத்தை யடைந்து சிந்தாகுலமுற்றுத் தருமனுடைய புத்திரர்களாகிய நரநாராயணரை நாமென்ன செய்யலாமென்று யோசித்தனன். என்னையெனில், இவர்களுடைய தவம் நிறைவேறுகிறபக்ஷத்தில் நம்முடைய சிம்மாசனத்திலிருக்க வருவார்கள். ஆகையினால் இவர்களுடைய தவம் எவ்விதத்திலாவது கெடுக்கத் தக்கதே; அதனை எப்படிச் செய்யலாமென்று தனக்குளெண்ணி மிகவுங் குரூரமாகிய காமத்தையும் கோபத்தையும் லோபத்தையும் அடைந்து ஐராவதத்தின் மேலேரோகணித்து அதிவேகமாய் இமோத்பர்வதத்துக்கு வந்து அங்குள்ள அவர்களாச்சிரமத்திற் பிரவேசித்துத் தவத்தினால் வன்மை பெற்றிருக்கிற சரீரத்தை யுடையவர்களாயும் இரண்டு சூரியர்களுதித்தது போலும் இரண்டக்கினிகள் கொழுந்து விட்டெரிவன போலும் பிரகாசிக்கின்ற தேஜஸையுடையவர்களாயும் காணப்படுகின்ற அந்த நரநாராயணரைப் பார்த்து இவர்கள் பிரம்ம விஷ்ணுக்களோவென்றையுற்று இவர்கள் தவம் செய்யவேண்டிய காரிய மென்னையோவென்றாலோசித்து அவர்களிடத்தில் அடியில் வருமாறு வார்த்தை சொல்லத் தொடங்கினான் : (16-22)

மஹானுபாவர்களாயும் தருமனுடைய புத்திரர்களாயுமிருக்கின்ற ஓ மகரிஷிகாள்! நீங்களெண்ணியிருக்குங் காரியத்தை எனக்குத் தெரிவியுங்கள். உங்கள் தவத்திற்கு மிகவும் சந்தோஷமுற்றுக் கொடுக்ககூடாத வரங்களாயிருந்தபோதிலும் கொடுக்க வேண்டுமென்றிச்சை கொண்டு வந்திருக்கிறேன். ஆகையால் உங்களெண்ணத்தை வெளியிட்டு வேண்டிய வரங்களைக்

கேட்பீர்களாக வென்று அவர்களெதிரே நின்றவனாயடிக்கடி வினாவினன். திடசித்த முடையவர்களாய் யோக மார்க்கத்திலிருக்கின்ற அந்த நரநாராயணர்கள் ஒரு வார்த்தையும் சொல்லாதிருந்தனர். சொல்லாதிருக்கவே, இந்திரன் அவர்கள் பயந்து பிரமிக்கத்தக்கனவாகிய சில மாயைகளைச் செய்யத் தொடங்கினன். என்னையெனில், ஓயாமல் மழை பெய்யவும் காற்றடிக்கவும் அக்கினி நாற்புறமும் சூழ்ந்தெரிக்கவுஞ் செய்து பின்னர் ஸர்ப்பம், நாய், ஸிம்மம், புலி முதலியவற்றை யுண்டுபண்ணி அவைகளை அடிக்கடி தூண்டி அவர்கள் பயந்து நடுங்கத்தக்க மாயைகளைச் செய்தனன். செய்தும் தருமனுடைய புத்திரர்களாகிய அவ்விருவரும் அஞ்சாதவர்களாய் அவன் வசப்படாதிருந்தனர். (23-27)

(உஅ-ஙங) அது கண்ட இந்திரன் நரநாராயணருடைய திடத்தைப் பார்த்துத் தன்னுலகம் போய்த் தனியிடத்திலிருந்து அந்தோ! அவ்விருவரும் ருஷிகளாகவிருந்தும் தேவராஜனாகிய நம்மைப் பார்த்து மதிக்காமற் போயினர். அதுவுமன்றி நாம் எவ்வளவோ ஆசைப்படுவதற்குரிய விஷயங்களை யெடுத்துச்சொல்லியும் ஒரு பொருளிலும் ஆசைப்படவில்லை. அஞ்சத்தக்க அநேக காரியங்களைச் செய்தும் அவைகட்கும் அஞ்சவில்லை. அவர்களஞ்சாமற் போனபோதிலும் நாம் ஏவிய புலி சிங்கமுதலிய துஷ்டமிருகங்களாவது அவர்களை யேதேனுந்துன்பஞ் செய்ததோவென்றால் ஒன்றுஞ்செய்வில்லை. அவர்களாவது நம்முடையதவத்துக்கு இடையூறு வந்துவிட்டதென்றெண்ணி யோகநிலையினின்றுஞ் சிறிதுநீங்கி அந்த ஆச்சிரமத்தைவிட்டுப் போயினாரில்லை. என்றாலோசனை யிலிருந்தனன். ஓ அரசனே! அந்த நரநாராயணர்களுடைய நிலையை நானென்னவென்று சொல்லுவேன். என்னாற் சொல்லவெளிதானதன்று. இந்திரன் செய்தமாயை அவர்களிடத்தில் செல்லாமைக்குக்காரண மென்னை யெனின் சர்வலோகங்கட்கும் மாதாவாயும் அநாதியாயும் திவ்யமங்களையாயும் மகாவித்யாசொரூபிணியாயும் மூலகாரணியாயு மிருக்கின்றபராசத்தியைத்தியானித்தும் அவளுடைய வாக்பீஜ காமபீஜமாயாபீஜமாயுள்ள மந்திரங்களை யுச்சரித்தும் வருகின்றவராதலின் அவர்களை யாருடையமாயை தான் என்ன செய்யக்கூடும். உலகத்தில் அநேகவிதமாகப் பரவியிருக்கும் மாயாவிசேடங்களும், தேவர்களாலேயும் அசுரர்களாலேயுஞ் செய்யப்பட்ட சகலமாயைகளும் எந்தவஸ்துவை மூலமாக வுடையனவோ அந்தவஸ்துவைத் தியானஞ்செய்கின்றவர்களுக்கு

இடையூறு செய்ய எவன் யோக்கியமுடையவனாவான்? எவன் சக்தியுடையவனாவான்? அவர்கள் தான் எப்படித்துன்பத்தை யநுபவிப்பவராவர்? ஓ அரசனே! இதனால் பாபரகிதனாகிய எவனுடைய உள்ளத்தில் பராசத்தியினுடைய மந்திரங்கள் ஸ்புரிக்கின்றனவோ அவனுக்கிடையூறு செய்வோருமில்லை இடையூறுவருவதுமில்லை என்றறியற்பாலது.

(ஙசு-சுசா) இந்திரன் மாயையினால் அறியாமையுடையவனாய் அவர்களுக்கு மறுபடியும் வேறு இடையூறுகளைச் செய்வதற் கெண்ணி மன்மதனை வரவழைத்து ஓ மன்மதா! நீ வசந்தகாலத்தில் ரதிதேவி சமேதனாய் அரம்பையர் கூட்டத்துடன் இமோத் பர்வதத்துக்குப் போய் அங்குப் பதரிகாச்சிரமத்திலுள்ள நரநாராயணரென்கிற முனிவர்கள் ஏகாந்தமாகத் தவஞ்செய்கின்றார்களாகையால் அவர்கள் சமீபத்திற்சென்று உன்னுடைய பாணங்களாலே மோகத்தையுண்டாக்கிப் பின்னர் உச்சாடனஞ் செய்து அவர்கள் காமத்தில் மூழ்கும் வண்ணம் உன்னுடைய பாணங்களை அதிவேகமா யடிக்கடிவிட்டு அடித்து அவர்களை உன்சுவாதீனஞ் செய்வாய். இப்பொழுது நீ எனக்குச் செய்யதக்க காரியம் இதுவன்றி வேறில்லை. ஓ மஹானுபாவனே! இவ்வுலகத்தில் தேவனா யிருந்தபோதிலும், அசுரனா யிருந்தபோதிலும், உன்னுடைய பாணங்களாலடிக்கப்பட்டு உன்னுடைய சுவாதீனமாகாமற் போனவன் யார்? பிரமாவும், விஷ்ணுவும், சந்திரனும், அக்கினியும் நானும் உன்னால் மோகிக்கப்பட் டிருக்கிறோமல்லவா? நாங்களே மோகிக்கப்பட்டிருக்கிறபொழுது ஓ மன்மதனே! உன்னுடைய பராக்கிரமமாகிய பாணங்களுக்கு இவர்களெவ்வளவினர். நீ அவர்களைச் செயிக்கக்கூடாதவனென் றெண்ணவேண்டாம். ஆகையால் நீ என்னுடைய ஆணையைக் கடவாதவனாய்ப் போக வேண்டும். இதோ இருக்கிற அப்சரஸ்திரீகளைச் சகாயலெணமாயழைத்துக் கொண்டுபோ அவ்விடத்திற்கு அரம்பை முதலியவர்களுக்குள்ளே சிறந்த அழகுள்ளவளாயும், அந்த அரம்பை செய்யவேண்டிய காரியமெதுவோ அதைத் தான் சாதிக்கும் யோக்கிய முடையவளாயு மிருக்கின்ற திலோத்தமை வருவாள். இந்தக் காமசாதனங்களைக் கொண்டு காமத்தை விளைவிப்பதற்கு நீதான் தகுந்தவன். ஓ மஹானுபாவனே! என்னுடைய காரியத்தைச் சீக்கிரமாய்ச் செய்வாய். உனக்கு வேண்டிய அபீஷ்டத்தைக் கொடுக்கிறேன். நான் முன்னர் தபசிகளாகிய அந்த நர

நராயணர்களிடத்திற் போய் வரந்தருகின்றேனென்று மிகவும் ஆசைகாட்டி யிருக்கிறேன். அவர்கள் வெறுப்பு விருப்புற்றவர்களா யிருப்பதனால் தங்கள் நிலையினின்றுந் தவறவில்லை. என்னுடைய கஷ்டம் வீணாய்ப்போயிற்று. வேறொருவராயின் நான்செய்த விசேடமாகிய மாயைக் கஞ்சித் தேகரக்ஷணையில் ஆசக்தி யுடையவர்களாய் அவ்வாச்சிரமத்தைவிட்டு எங்கேயாயினும் போய்விடுவார். அவர்கள் அவ்விடத்தினின்றும் எழுந்திருக்கவேயில்லை; என்று கூறிய இந்திரனுடைய வார்த்தையை மன்மதன்கேட்டு ஓ இந்திரனே! இப்பொழுது சொல்லிவந்த இந்தக் காரியந்தவிர வேறுனக்கிஷ்டமான காரிய மேதேனு மிருந்தாற் சொல்லுவாய் அதனை நான் செய்கிறேனென்று சொன்னான்.

(சுஎ-ருக.) காம சாதனங்களால் விஷ்ணுவையும் பிரமாவையும் சூரியனையும் உன்னையுஞ் சுவாதீனஞ் செய்வதற்கு நான் சக்தன்றான். நரநாராயணர்கள் உங்களைப்போலும் சுவாதீனப்படுகின்றவர்களா? ஏனென்றால் காமராஜ மென்கிற மஹா பீஜா க்ஷரத்தை மானசீகமாக எப்பொழுதும் ஜபிக்கின்றவர்களாயும் அம் மந்திராதி தேவதையாகிய பராசக்தியைத் தியானிக்கின்றவர்களாயும் இருக்கிறபொழுது அந்தப் பகவதியினுடைய பாகவதர்களை வெல்லுவதற்கு நான் சக்தனாவனா ஒருபொழுதுமாகேன். என்னுடைய பாணங்கள் அவர்களை யொன்றுஞ் செய்யமாட்டாவென்று மன்மதன் சொல்ல, ஓ மஹா நுபாவனே! நீ ஒன்றுஞ் சொல்லாதே உனக்கு வேண்டிய வுபகரணங்களோடும் போவாய் சாதிப்பதற்குக் கூடாதவற்றைச் சாதிப்பது தான் எனக்குச் சந்தோஷத்தையும் சிறப்பையுந் தரும். இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டியவன் நீயே யென்று இந்திரன் சொல்ல் மன்மதன் அதைத் தடுப்பதற்கஞ்சித் தருமகுமாரர்களாகிய அந்த நரநாராயண எந்த விடத்திற் செய்வதற் கருமையாகிய தவத்தைச் செய்கிறார்களோ அந்தவிடத்தில் யாவருடன் சென்றனனென்று வியாசமுனிவர் அரசனுக்குச் சொன்னதைச் சூதபகவான் சவுன காதியருக்கருளினர்.

ஐந்தாம் அத்தியாயம்

இந்திரகிருத நரநாராயண தபோவிக்னம் முற்றிற்று

———

ஆஉ அத்தியாயம் ரு-க்குச் சுலோகம் (உசாசாஏ)

உ

ஸ்ரீ திரிபுரசுந்தர்யை நம:

ஆறாம் அத்தியாயம்

---

* நர நாராய ணாஸ்ரமே வசந்தாதி ப்ரவேசம்

ஓ மஹாருஷிகாள்! இந்திரன் நர நாராயணர்களால் அவமதிப்படைந்து மன்மதனை யேவிய பின்னர் நடந்த செய்திகளை எம்முடைய ஆசிரியர் கூறியவாறு கூறுகின்றேன் கேட்பீர்களாக வென்று சொல்லத்தொடங்கினர்.

(க-ரு) ஓ அரசனே! மன்மதன் ஆச்சிரமத்துக்கு வருவதன் முன்னம் அந்த இமோத் பர்வதத்தில் வசந்தருதுவானது பிரவே சித்தது. அதுபிரவேசித்தமாத்திரத்தில் சகலவிருக்ஷங்களும் புஷ்பித்து. அவைகளில் வண்டுக் கூட்டங்கணெருங்கின. மா, மகிழும், முருக்கு, திலகம், தேக்கு, புனை, இலுப்பை முதலிய மரங்கள் புஷ்பித்தன. அம்மரங்களினுனியிற் றங்கியிருந்த குயில்கள் மனோகரமாகக் கூவின. கொடிவகையான மலர்களெல்லாம் விகசித்தன. இன்னம் அநேகவிதமான விருக்ஷங்களெல்லாம் மலையச்சூழ்ந்து பிரகாசித்தன. அங்குள்ள பிராணிகளெல்லாந் தங்கள் தங்கள் மனைவிகளிடத்தில் காமவிகாரங்கொண்டவைகளாய் மோகித்து மதத்துடன் கூடிக்கிரீடித்திருந்தன. நறுமணங்கமழ்ந்து நற்பரிசத்தைக்காட்டும் காற்றுகள் பலமுகத்திலும் மெல்லென விசின அங்குள்ள முனிவர்களுடைய இந்திரியங்களும் கலக்கமுறத் தொடங்கின.

(சு-உஉ) அதன் பிறகு ரதிதேவி சமேதனாகிய மன்மதன் பதரிகாச்சிரமத்தில் அதிவேகமாய்ப் பிரவேசித்துத் தனது பஞ்சபாணங்களைத் தொடுக்கத் தலைப்பட்டனன். கானத்திற் சமர்த்தர்களாகிய அரம்பைமுதலிய அப்சரஸ்திரீகள் அந்த ஆச்சிரமத்தை யடைந்து ஸ்வரத்தோடுங்கூடிய கானத்தைச் செய்தார்கள். அந்த நரநாராயணர்கள் மதுரமாகிய கானத்தையும் குயில்களுடைய நாதத்தையும் வண்டுகளுடைய ரீங்காரத்தையுங் கேட்டு அகாலத்திலுண்டாகிய வசந்தருதுவையும் புஷ்பங்களோடு கூடிய வனத்தையும் பார்த்து ஆலோசிக்கத் தொடங்கினர். சிசிர ருதுவினுடைய பூர்த்தியானது முடியவேண்டிய சமயமாயிருக்க அது

---

* நர நாராயணர்களுடைய ஆச்சிரமத்தில் வசந்தகாலமுதலியன போதல்.

இப்பொழுது முடிந்த தெவ்வண்ணம்? எல்லாப் பிராணிகளும் காமத்தினாலே பீடிக்கப்பட்டுப் புத்தி சுவாதீன மற்றவர்களாய்க் காணப்படுகின்றன. இந்தக் காலதர்மத்தினுடைய வித்யாச மெவ்வாறுண்டாயிற்று. இந்தக் காமவிகாரம் இப்பொழுது வரப்பட்ட காலமல்லவே யென்று நாராயணரென்கிற ருஷியானவர் காமவிலாசங்களை யெல்லாம் ஆச்சரியமாய்ப் பார்த்து நரனென்கிற ருஷியை நோக்கி ஓ சகோதரனே! இங்குள்ள விருக்ஷங்களெல்லாம் புஷ்பித்திருப்பனவாயும் குயில்களெல்லாங் கூவுகின்றனவாயும், வண்டுகளெல்லாம் நெருங்கி ரீங்காரஞ் செய்கின்றனவாயுங் காணப்படுகின்றன. இவைகளை நீயும்பார் இப்போது நல்ல வசந்த ருதுவென்கிற சிம்மமானது சிசிரருதுவென்கிற பயங்கரமுடைய யானையை முருக்கமலராகிய நகங்களால் கீரியதாகத் தோன்றுகிறது. ஓ தேவரிஷியே! இந்த ஆச்சிரமத்தில் ரக்தவர்னமா யிருக்கின்ற அசோகவிருக்ஷங்களே கைகளாகவும், கலியாண முருக்கமரங்களே பாதங்களாகவும், சாரசப்பக்ஷிகளுடைய ஒலிகளே நூபுரங்களாகவும், நீல நிறமுள்ள அசோகவிருஷங்களே கூந்தலாகவும், மலர்ந்த தாமரைகளே முகமாகவும், கருநெய்தல்களே கண்களாகவும், வில்வபலங்களே தனங்களாகவும், குருக்கத்தி மலர்களே தந்தவரிசைகளாகவும், பூங்கொத்துகளே காதுகளாகவும், கோவைப் பழங்களே உதடாகவும், செந்நெறிகதிர்களே நகங்களாகவும், ஆண்குயில்களுடைய ஓசையே துவனியாகவும், கடப்பமரங்களே ஆடையாகவும், மயிற்கலாபங்களே ஆபரணவகைகளாகவும், மல்லிகை விருக்ஷங்களே ஒட்டியாணமாகவும், மதத்த அன்னப்பட்சிகளே நடையாகவும், புத்திரசீவாம்சமென்னும் விருக்ஷங்களே உந்திமுதல் நிதம்பத்தளவு முள்ள ரோமராசிகளாகவும் அமையக கொண்டு யவ்வனவதியாகிய வசந்த லக்ஷ்மியானவள் வந்திருக்கிறாள். ஓ தேவருஷியே! தவத்துக்கு விக்னஞ் செய்கின்ற வளாகிய வசந்த மென்கிற மங்கையானவள் அகாலத்தில் வந்திருக்கிறாள் இதுவென்ன காரணம்? எனக்கு மிகவும் ஆச்சரியமாகவிருக்கிறது. இதனை நீயும் யோசனைசெய்குவாய், தியானத்தைக் கெடுப்பதாகிய தேவஸ்திரீகளுடைய இசைகளுங் தியானத்தைக் கெடுப்பதாகிய தேவஸ்திரீகளுடைய இசைகளுங் கேட்கபடுகின்றன. இவைகளெல்லாம் நம்முடைய தவத்தை செய்யும்பொருட்டுத் தேவேந்திரனால் செய்யப்பட்டதும் இது நிச்சயம். அவன் மாயையாக இல்லாமற் வசந்த ருதுவானது காலமல்லாத காலத்தில் எப்படி யுண்டுபண்ணும்! முன் செய்வதற் கஞ்சிப்போன

அசுரவைரியாகிய இந்திரனாவே இந்தவிக்னம் செய்யப்பட்டதே யன்றி வேறில்லை. இதோ காற்று நல்ல வாசனை யுடையதாய்க் குளிர்ந்து மனோகரமாய் வீசிக்கொண்டு வருவதைப்பார்ப்பாய். இவையெல்லாம் இந்திரனுடைய செயலாகுமேயன்றி வேறொருவருடைய செயலாகமாட்டாதென்றறிவாய்.

(உங-ஙங) மகாத்மாவாகியும், திவ்ய தேஜஸுடையவராகியும் பிராமணசிரேஷ்டராகியு முள்ள நாராயணர். இவ்வண்ணஞ் சொல்லிக் கொண்டிருக்கிறபொழுது மன்மதன் முதலாகிய யாவருங் கண்களுக்குத் தோற்றமாய்வர, பகவானாகிய நானும் நாராயணரும் பார்த்து ஆச்சரியமடைந்த மனதுடையவரா யிருந்தனர். வந்தவர் யாவரெனின்; மன்மதன் மேனகை அரம்பை திலோத்தமை புஷ்பகந்தி சுகேசி மகேஸ்வதை மனோரமை பிரமத்வரை கிருதாசி சந்திரப்ரபா வித்யுன்மாலினி காஞ்சனமாலினி அம்பு ஜாக்ஷி என்று சொல்லப்பட்டவர்களாம், இவர்களே யல்லாமல் மாயையில்வல்லவர்களாகியும் புன்னகை நீங்காதவர்களாகியும் இசையில் குயில்போன்ற ஓசையுடையவர்களாகியுமுள்ள ஏனைய அப்சரஸ்திரீகளும் சமீபத்தில் தோற்றப்பட்டார்கள். அவர்களோ பதினாயிரத்து ஐம்பதின்மர். இவர்களேயன்றி மன்மதனுடைய சேனா சமுத்திரங்களும் வந்தன, நரநாராயணர்கள் அடுக் கடுக்காய் வருகின்றஸ்திரீசமூகங்களைப் பார்த்து ஆச்சரியமடைந்தனர். திவ்யமாகிய ஆபரணங்களாலும் நறுமணங்கமழும் நல்ல மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டவர்களா யிருக்கின்ற அந்தஸ்திரீகளெல்லாம் நர நாராயணருடைய சந்நிதானத்தை வந்தடைந்து நமஸ்கரித்து அவர்களை வஞ்சிக்கவேணுமென்கிற வெண்ணத்துட னெழுந்து தங்களுடைய அங்கங்களெல்லாம் நன்றாய்த் தோன்றும்படியாய் அபிநயத்தோடு நடனஞ்செய்து காமாதிகுணங்களை விருத்திசெய்ய் வல்ல சங்கீதங்களும் பாடத்தலைப் பட்டனர். பகவானாகிய நாராயணரும் உங்களுக்கு அற்புதமாகிய நல்லவிருந்து செய்விக்கிறோமென்று சொல்லிவிட்டு நாராயணர் தன்னுள் இந்திரன் நம்முடைய தவத்துக்கு விக்னம் பண்ண வேண்டுமென்கிற இச்சையினால் ஏவப்பட்ட தாகும் இவர்களென்று சிறிதெண்ணிக் கோபத்தை யுடையவராய்த் தன்னுள் அடியில் வருமாறு எண்ணுகிறார்.

இந்த அரம்பையர்கள் என்னரூபலாவண்யமுடைவர் களென்று இவ்விடத்துக்கனுப்பினான்? இவர்களினுஞ் சிறந்த என்னுடைய தபோபலத்தைக் காண்பிக்கிறேனென்று நாராயணர் தன்னுடைய

தொடையைக் கையினாற்றட்டினார். தட்டியவுடன் சர்வாங்கலக்ஷணத்தோடுங் கூடிய ஒரு ஸ்திரீ வெளிவந்தனள், அவள் தான் ஊர்வசியென்னும் பெயருடையவளாயினாள். அவளைத் தேவதாசிக ளனைவரும் பார்த்து மிகுந்த ஆச்சரியமடைந்து நாணமுற் றிருக்கும்பொழுது முன்வந்த பதினாயிரத்து ஐம்பதினமராகிய தாசிகளும், சங்கீதகானத்தைச் செய்து புன்னகைகாட்டி காணுதற்கரிய நானாவிதமான பழவர்க்கங்களைக் கையிற்றாங்கிக் கொண்டு அவர்களைச் சமீபித்து அஞ்சலிசெய்து வணங்கினார்கள். அந்தச் சமயத்தில் நாராயணர், பிரமன் ஊர்வசியைப் படைத்துத் தானே மயங்கியது போல் மயங்காமல் தாம்படைத்த ஊர்வசிக்கு ஏவற்பணிவிடை செய்யத் தன்னை நோக்கி வந்த தேவதாசிகள் போல் மறுபடியும் பதினாயிரத்து ஐம்பதின்மராகிய அப்சரஸ்திரீகளைச் சிருஷ்டித்தனர். அவர்களைத் தாமரை மலர்போலும் முகசோபை யுடையவர்களாகிய தேவலோக அப்சரஸ்திரீகள் பார்த்து நாராயணருடைய தபோமகிமையாலுண்டாக்கப் பட்ட இவர்கள் தான் காண்போரை மயக்கவல்ல அப்சரஸ்திரீகளாவார். இவர்களன்றி நாமல்லவென்று மிகவும் பிரமைகொண்டு புளகாங்கிதமடைந்து இது செய்யலாமென்கிற வெண்ணமுந்தோன்றாமல் அந்த நரநாராயணருடைய தபோமகிமைக்குவியந்து அவர்களை நோக்கி ஓ மகருஷிகளே! உங்களிடத்தில் மகிமையான தவம் எவ்வள விருக்கின்றதோ அவ்வளவு தயையுமிருக்கின்றது. எங்களுடைய கடைநோக்கமாகிய விஷபாணத்தால் எவன்தான் எரிக்கப்படாமற் போயினான். பூஜ்யர்களாகிய உங்களுடைய இருதயந்தான் எங்களால் யாதொருகளங்கத்தையு மடையாமலிருக்கின்றன. மகருஷிகளாகிய நீங்கள் நரஹரியினுடைய பரமாம்சீபூதர்களென்றும், சமதமாதி குணங்களுக்குக் கடலாகவிருக்கின்றவர்களென்றும் அறிந்திருந்தும் நாங்களனைவரும் இந்திரனுடைய காரியார்த்தமாக வந்தோமேயன்றி உங்களுடைய தரிசனநிமித்தம் இங்குவந்தவர்களால்லர். துர்க்குணமுடையராய் வந்தவெங்களுக்கு உங்களுடைய தரிசனம் எந்த புண்ணிய பாக்கியத்தினாற் கிடைக்கப்பெற்றோமோ அதுதெரியவில்லை. அபராதமுடையவர்களாயிருக்கின்ற எங்களிடத்தில் உங்களுக்குக் கோபமுண்டாகவேண்டும். அதுவுண்டாகாமலும் சபிக்காமலும் எங்களைவேறாக வெண்ணாமலும் உங்களுக்குரிமை யானவர்களாகவே அங்கீகரித்து விருந்திடவேண்டுமென்று கூறியதை எண்ணுந்தோறும் மிகுந்த ஆச்சரியமுண்டாகிறது. மகான்களாகிய பண்டிதர்கள் பாவபலனைக் கொடுப்பதாகிய சாபத்தினால் தாம் செய்யுந் தபசுக்கு நாசத்தைச் செய்துகொள்ள மாட்டார்கள். ஏனெனில்

சபிக்கவேண்டுமென்கிற எண்ணம் வந்தபொழுதே கோபமுண்டாகின்றது. அது வுண்டானபொழுதே தவத்துக்கு நஷ்டமுண்டாகின்றது. ஆகையாற் சபியார் என்று தங்களைக் கோபத்தினால் அவர்கள் சபிக்காவண்ணம் பலவாறாகத் தோத்திரஞ் செய்யும்பொழுது; தபோவிசேஷத்தினாற் பிரகாசிக்கின்ற காந்தியைப்படைத்த சரீரமுள்ளவர்களாகியும் காமாதி குணங்களைச் செயித்த வீரர்களாகியுமிருக்கின்ற நரநாராயணர்கள் அந்த ஸ்திரீகளுடைய விநயவார்த்தைகளைக் கேட்டுச் சந்தோஷ சித்தர்களாய் முகமலர்ந்து ஓ அப்சரஸ்திரீகளே! உங்களுக்கு வேண்டிய அபீஷ்டங்களைச் சொல்லுங்கள். நாங்கள் சந்தோஷகரமாகக் கொடுக்கின்றோம். ரமணீயமாகிய நேத்திரத்தையுடையவளாகிய இந்தவூர்வசியை உங்களுக்குப் பரிசாகக் கொடுக்கின்றோம். இவளை யழைத்துக் கொண்டு இப்பொழுதே உங்களுடைய சுவர்க்கலோகத்துக்குப் போய்வாருங்கள்.அவ்விடத்துக்குப் போன பின்னர் இந்திரனைப் பார்த்து ஐயா நரநாராயணர்கள் நீங்கள் செய்த வுபகாரத்துக்கு உங்களுக்குச் சந்தோஷமுண்டாக இந்த ஊர்வசியைக் கொடுத்து தேவர்களுக்கெல்லாம் மங்களமுண்டாகுகவென்று கூறினார்களென்று சொல்லுங்கள். ஓ நங்கைமார்களே! இனி உங்களிஷ்டப்படி போகலாமென்று விடைதந்தனர்.

(சுஎ-ருஅஏ) அவர்கள் வாய்மொழியைக் கேட்ட அந்த ஸ்திரீகள் ஓ மஹானுபவரே! தேவஸ்ரேஷ்டராகிய ஓ நாராயணரே! நாங்கள் மிகுந்த பயபக்தியோடும் சந்தோஷத்தோடும் உம்முடைய பாதாரவிந்தத்தை யடைந்தோம். இனி நாங்கள் எவ்விடத்துக்கும் போகமாட்டோம். தேவரீர் உங்களபீஷ்டமென்ன வென்று கேட்டீரல்லவா? அதுபோல ஓ நாதரே! மனக்களிப்புடையவர்களாய் நாங்கள் கொண்டிருக்கும் அபீஷ்டத்தைக் கொடுப்பீராகில் அதனைச் சொல்லுகிறோம். ஓ தவஸ்ரேஷ்டரே! என்னையெனில் தேவரீர் எங்களுக்கு நாயகராக வேண்டும். நாங்கள் உம்மை அனுபவிப்பதற்குப் பிரீதியுடையவர்களாக விருக்கிறோம். உங்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்கிறோம். இந்த வரங்களைக் கொடும். எங்களுக்குப்பதிலாக உம்மால் சிருட்டிக்கப்பட்ட அழகிய நேத்திரத்தையுடைய இந்த ஊர்வசி முதலிய ஸ்திரீகள் சுவர்க்கத்துக்குப் போகும்படி ஆஞ்ஞைசெய்யும். தேவலோகத்திலிருந்துவந்து இந்தப்பதினாயிரத்து ஐம்பதின்மர்களாகிய ஸ்திரீகள் இவ்விடத்திற்றானே யிருக்கவேண்டும் ஓ மாதவரே! எங்கள் மனோரதப்படியே அநுக்ரகஞ் செய்யும். முன் எங்களுக்குக் கொடுத்த

வாக்கைத் தவறுதல் செய்யவேண்டாம். சத்தியத்தில் நில்லும். காமாதுரர்களாயிருக்கின்ற ஸ்திரீகளுக்கு ஆசையைக் காட்டிக் கொடுப்பது பாவமென்று தர்மவித்துக்களாகிய தத்துவ தரிசிகளால் சொல்லப்பட்டிருக்கிறது. நாங்கள் பூர்வ புண்ணியவிசேஷத்தால் சுவர்க்கத்திலிருந்து வந்து உம்மிடத்திலன்புடையவராகவு மிருக்கின்றோம். சமர்த்தராயிருக்கின்ற நீர் எங்களைவிடும்படியான வெண்ணங்கொள்ளக் கூடாதென்று பிரார்த்திக்கநாராயணர் அழகிற்சிறந்தஸ்திரீகளே! நான் அநேக வருடகாமல் நிறைந்ததவத்தைச் செய்துள்ளேன் இந்திரியங்களைச் செயித்தவனாயுமிருக்கின்றேன். ஆகையால் இப்பொழுது எவ்வாறு தபோபங்கத்தைச் செய்யத்தக்கவனாவேன். பரமசுகத்தையும் தருமத்தையுங்கெடுப்பதாகிய காமசுகத்திலெனக்குப் பிரியமில்லை. பாவசம்மந்திகளாயுள்ள ஆத்ம கோடிகளால் சகசமாய் விரும்பப்பட்ட இந்திரிய விஷயசுகத்தை இந்திரியவர்ச்சிதனாகிய புத்திமான் எப்படி விரும்புவானென்று கூற அப்சரஸ்திரீகள் சப்தம்முதலாகச் சொல்லப்பட்ட பஞ்சதன் மாத்திரைகளால் விளையுஞ்சுகங்களில் பரிசசுகமே சிரேஷ்டமான சுகம். ஆனந்தரசத்தை மூலமாகவுடைய அந்தப் பரிசசுகத்தைக் காட்டிலும் சுகமென்பது வேறேது ஒன்று மில்லையே. ஓ மஹாப்பிரபோ! ஆகையினால் எங்களுடைய வார்த்தையைப் பெரும்பாலும் அங்கீகரித்தல் வேண்டும். நீர்இந்திரயசுகங்களை இப்பொழுது பரிகரித்துப் பின்சுவர்க்கத்திலடையப் படுவதும் இந்திரிய சுகந் தானே! அந்தச்சுகம் இவ்விடத்திற்றானே வந்திருக்கும் பொழுது அதனை நன்றாயநுபவித்து இந்த மலையிலேயே யிருக்கலாமன்றோ. நீர் ஓர் கால்சுவர்க்கத்தையே யபேக்ஷிப்பீராயின் அது இதற்குச் சமானமானதன்று. ஆகையால் சுககரமாகிய இவ்விடத்தில் இந்த அப்சரஸ்திரீகளோடுமிருந்து நல்லசுகத்தை யநுபவித்திருமென்று கூறினார்களென்று வியாசர் அரசனுக்குரைத்ததைச் சூதபகவான் முனிவர்கட்குக் கூறினார்.

ஆறாம் அத்தியாயம்

நர நாராயணாஸ்ரமேவசந்தாதிப் பிரவேசகதனம் முற்றிற்று.

ஆஉ அத்தியாயம் ரு-க்குச் சுலோகம் (ஙஉரு)

———

உ

ஸ்ரீ திரிபுரசுந்தர்யை நம:

ஏழாம் அத்தியாயம்

* நாராயண : கிருத சம்சாரதத்வ விசாரம்.

சூதபகவான் ஓ மஹருஷிகாள்! இதுகாறும் நாராயணருடைய தவத்தைக் கெடுக்குமாறு இந்திரன் மன்மதனையும் அப்சரஸ்திரீகளையுமனுப்ப நாராயணர் அவர்களைப் போல் தான் படைத்து வந்தவர்களை நாணும்படியாகச் செய்ய, அவர்கள் நாணமுற்று உங்களைவிட்டுப் போகோமென்று சொல்லியவரையிற் சொல்லி வந்தோம். இனி நாராயணரால் சொல்லப்பட்ட சம்சார நித்தையைக் கேளுங்களென்று சொல்லலுற்றனர்.

(க-கஉ) வியாசர் அரசனைப்பார்த்து ஓ அரசனே! நாராயணர் அந்தஸ்திரீகள் உங்களைவிட்டுப் போகோமென்று சொல்லிய வார்த்தையைக்கேட்டு நாமிப்பொழுது என்ன செய்யலாமென்று சிந்தித்து இது நமக்கு அகங்காரத்தினால் வந்த துக்கம். இதற்குவிசாரமேன். தீயகுணங்களில் முதன்மையாகக்கூறப்பட்ட அகங்காரமானது தவத்தைக் கெடுப்பதற்குக் காரணமாயுள்ளது. இதனை மகத்துக்கள் சம்சாரமாகிய விருக்ஷத்துக்குப் பீஜமென்று சொல்லுகின்றனர். நாம் இந்த ஸ்திரீகளுடைய வரவைப்பார்த்து ஏன் மௌனத்தையடைந்திராமற் போனோம். அப்படி இராமையினால் துக்கங்களுக்கெல்லாம் பாத்திரமாயிருக்கிற தாசிகளுடைய கூட்டமானது நம்மைச்சேர்ந்தது. அதுவுமல்லாமல் நாம் ஸ்திரீகளையுண்டுபண்ணி நம்முடைய தவமாகிய தர்மத்தை நாசமாக்கிக் கொண்டோம். தேவஸ்திரீகளோவென்றால் இப்பொழுது காமபீடிதராய் நம்மைப்பாதை பண்ணுவதற்கு ஏற்பட்டிருக்கின்றார்கள். சிலந்திப் பூச்சியைப்போல் நாம் செய்த இந்த ஜாலம் நமக்கே தீங்கைச்செய்யும் திண்ணியபாசம்போல் நம்மைக் கட்டுண்டிருக்கச் செய்யவுமாயிற்று. நாம் இனிச் செய்யவேண்டியவை என்ன? அன்றி இவ்வாறு *சிந்தாகுலப் படுவதைவிட்டு இந்த ஸ்திரீகளை விட்டுவிடுவோமாயின் இவர்களெல்லாந் தங்களபீஷ்டம் நிறைவேறாமற் போனபடியினால் நம்மைச் சபிப்பார்கள். நாம் கோபஞ்செய்வோமாயின் அது தாபத்தை யுண்டாக்குமல்லவா?

* சிந்தாகுல - மனக்கவலை

அன்றியும் காமத்துக்கு இரண்டாவது சத்துருவாயுள்ள தல்லவா ஆகையால் இந்த ஸ்திரீகளிடத்தில் நாம்கோபத்தைக் காட்டாமல் இவ்விடத்தினின்று நீங்கள் ஏகாந்தத்திலிருந்து தவத்தைய நுட்டிப்போமென்று தம்மு ளாலோசித்து சுகோற்பத்திக்குச் சாதனமாயள்ள சித்தத்தில் விசாரஞ்செய்தனர்.

உலகத்தில் காமத்தினும் லோபத்தினும் அதிகமான தீங்கையுடையது கோபம். கோபமுடையவன் பிறருக்குப் பிராணனைப் போக்கடித்துக் கொள்வதாகிய இம்சையை விளைவிப்பான். ஆகையால் அது எல்லாப் பிராணிகளுக்குந் துக்கத்தைக் கொடுப்பது. அன்றியும் நரகமென்கிற உத்தியானவனத்துக்கு நடபாவியாயுள்ளது. மேலும் மரங்களொன்றோடொன்று உராய்தலினாலுண்டாகும் நெருப்பு அந்த மரங்களையே எப்படி எரித்து விடுகிறதோ அப்படியேகோபம் நம்மிடத்திலேயே தோன்றி நம்மையே சுட்டெரித்து விடுமென்று மிகவும் வியாகுலமுடையவராயிருக்கின்ற தமையனுக்குத் தம்பியாகிய நரன் சொல்லத் தொடங்கினான்.

(கங-ஙங) ஓ ஞானவானாகிய நாராயணரே! கோபததையடககும், கெடுக்குந் தீயகுணங்களுக் கெல்லாம் பெரிதாகிய அகங்காரத்தை நிவிர்த்தித்து சாந்த பாவத்தை யடையும், பூர்வத்தில் அகங்கார தோஷத்தினால் தேவவருடத்தில் ஆயிரம் வருடம் பிரகலாதனென்கிற அசுரனோடு யுத்தஞ்செய்து நம் மிருவருடைய தவமும் நஷ்டத்தை யடைந்திருக்கிற தல்லவா ? ஓ தேவ ஸ்ரேஷ்டரே! அந்தயுத்தம் நடந்த விஷயத்தில் மிகுந்த துக்கமும் உண்டாய் விட்டதன்றோ ? ஆகையினால் கோபத்தைவிட்டுச் சாந்தராய் விடுமென்று நரனென்பவர் கூறினார், ஜனமே ஜயன் வியாசர் கூறியதைக்கேட்டு ஓ முநிஸ்ரேஷ்டரே! எனக்கிது சம்சயமாயிருக்கிறது. விஷ்ணு பக்தனாகியும் சாந்த சித்தனாகியும் மகாத்மாவாகியு மிருந்த பிரகலாதன் பூர்வம் இந்த நரநாராயணரென்கிற மகருஷிகள் தாம் ஏன் யுத்தஞ்செய்தார்கள்? சாந்தசித்தமுடைய இந்த *இருடிகளுக்கும் அசுரனாகிய அந்தப் பிரகலாதனுக்குஞ்சந்திப்பு எப்படியுண்டாயிற்று. இவ்விருவரும் என்னவிதமான யுத்தஞ் செய்தார்கள். பிரகலாதனை விசாரிக்குமிடத்து அவன் மிகவுந் தர்மாத்மாவென்றும் ஞானாத்மாவென்றும் விஷ்ணுபக்தனென்றுந் தெரியவருகின்றது. நரநாராயணரென்கிற ருஷிகள் அந்தப் பிரகலாதன் போலவே சத்வகுணத்திலேயே யிருக்கின்றவர்களென்று தேவரீர் சொல்லிவந்ததனால் தெரியவருகிறது. இவ்விருவருக்குமே விரோதமுண்டாய்ப் போர் நேரிட்டிருக்குமானால் அவர்

* இருடிகளுக்கும் - ரிஷிகளுக்கும்

கட்குத்தவத்தினாலுந் தருமத்தினாலுஞ்சரீரத்துக்குச் சிரமம் வுண்டானதேயன்றி வேறென்ன பிரயோசன முண்டாயிற்று. அந்தச் சத்தியயுகமாகிய கிருதயுதத்திலேயும் செபமுந்தவமும் நடந்திருக்குமென்பது எப்படி? சாதுவிருதியி லிருப்பவர்கட்கு யுத்தம் நேரிட்ட தென்றால் அப்பொழுது கோபத்தினாலும் அகங்கார முதலியவற்றாலுஞ் சூழப்பட்ட சித்தவிருத்தியுண்டாயிருக்குமே? தத்துவ ஞானிகளென்று சொல்லப்படுவோர் ஜயிக்கவேண்டியவைகள் அவைகள் தாமே! அகங்காரமாகிய அங்குரத்தை விட்டுக் கோபமுதலியவைகள் வளரமாட்டா தல்லவா? அதுபோலவே காமக்குரேரத முதலியவைகள் அகங்காரத்தி னின்றுந் தோன்றியவைதாமே. சூரியோதயத்தில் அந்தகார மெப்படி யில்லையோ அப்படி அகங்காரவுதயத்தில் ஆயிரங்கோடி வருடம் மிகவும் கஷ்டப்பட்டுத் தேடிய தவமாகிய புண்ணியமு மிருக்கமாட்டாது.

அங்ஙனமிருக்கப் பிரகலாதனும் நரநாராயணரும் யுத்தம்பண்ணினாரென்றால் அவர்கள் இவ்வுலகில் தீர்க்க காலமாய்ச் செய்த புண்ணியங்க ளெல்லாம் வியர்த்தந்தானே? பிரகலாதனாவது அரசன், சாந்தர்களாகிய நர நாராயணர்கள் ருஷிகள்? இவர்கள் தவத்தைவிட்டு எப்பொழுது யுத்தஞ்செய்தார்களோ அப்பொழுதே சாந்தமும் செய்ததவமும் எவ்வண்ணம் நிலைத்திருக்கும். சத்வகுணத்தோடுங் கூடினவர்களாகிய இவர்களாலேயே அகம்பாவத்தைச் செயிப்பதற்குக் கூடாமற்போகுமானால் நம்மை யொத்தவர்கட்கு அகங்காரநாசம் ஆகவில்லை என்பதில் என்னவாத மிருக்கின்றது. (நம்மால் முடியவே முடியாது) ஆகவே இம்மூன்றுலகத்திலும் அகங்காரத்தை விட்டவ னெவனுமில்லை. அந்த அகங்காரத்தினால் விடப்பட்டவனும் பெரும்பாலு முன்னுமில்லை பின்னுமில்லை. தொழுவாகிய விலங்கி லகப்பட்டவனும் ஓர்காலத்தில் விடுபடுகிறான். அகங்காரமாகிய விலங்கிலகப்பட்டவன் ஒருபொழுதும் விடுபடுகிறதேமில்லை. தாவரசங்க மாத்மகமாயுள்ள எல்லாவுலகும் அகங்காரத்தினாலேயே மூடப்பட்டிருப்பதனால் மலமூத்திரங்களினால் அருவருக்கத் தக்கதாயிருக்கிற இந்தச் சம்சாரத்தில் பிரமித்துக் கொண்டேயிருக்கிறது இயல்பாகவிருக்கின்றது அது இயல்பாகவே அஞ்ஞானத்தினால் சூழப்பட்ட சம்சாரத்தி லிருப்பவனுக்குப் பிரமஞானம் எப்படியுண்டாகும். மகான்களும் காமக் குரோதாதிகளோடு கூடியிருக்கின்றவர்களேயென்று மீமாஞ்சகருடைய வுண்மையானமதம். அதுதான் பிரகாசமாய் எனக்குந்தெரிகின்ற வுண்மை. மகான்களுடைய கதியே அப்படி யாகுமானால் இக்கலியுகத்தில் நம்மனோருடைய

கதியைச்சொல்லவேண்டுமா! ஓ அரசனே! நானொன்று சொல்லுகிறேன் காரியமானது காரணத்தினால் எப்படி பின்னப்படும் படமாட்டா.

(ஙசு-ருரு) எங்ஙனமெனின், கடகமுதலாகிய காரியங்கள் காரணமாகிய பொன்னினாற் கெடுமென்பாருமுண்டா? ஆகவே காரணாகிய பொன்னிருக்குமளவும் அதன் காரியமாகிய கடக குண்டலாதிகளு முண்டென் றறிவது போலும்? நூல் மயமாகிய வஸ்திரம் அந்நூலில்லாதொழியின் வஸ்திரமேதென் றறிவதுபோலும், காரணமாகிய அகங்காரங்கொடதிருக்குமளவும் காரியமாகிய காமக்குரோதாதிகளிருக்குமெனவும், அகங்காரமயமாகிய காமக்கு ரோதாதிகள் அவ் வகங்காரமில்லாதொழியின் அவைகள் எங்ஙனமிருக்கு மெனவும் அறியற்பாலது. இதனால் பொன் காரணம் கடகமுதலியவைகள் காரியமெனவும், நூல் காரணம் வஸ்திரங்காரியமெனவுந் தெற்றென அறியவருவதுபோல் அகங்காரங் காரணமெனவும், காமக்குரோதாதிகள் காரியமெனவும் அறிந்து எங்கே காமாதிகுணங்க ளிருக்கின்றனவோ அங்கே அகங்காரமிருக்கின்ற தெனவும், எங்கே காமாதிகுணங்கள் வெளிப்படடவில்லையோ அங்கே அகங்காரமில்லை எனவும் அறியற்பாலது. இந்த விசாரத்தால் பிரகிருதிகுண சம்பந்தமாயிருக்கின்ற திரணமுதல் ஸ்தம்ப பரியந்தமாயுள்ள சகல சகத்தும் அகங்காரத்தினின்றுந் தோன்றியதாகலான் அகங்கார காரியமாகிய காமக்குரோதாதிகள் ஒருவரையும் விடமாட்டாவென்றும், அவை விடக்கூடாதனவாகவே தவமுதலியன ஒருவர் இயற்றியபோதிலுங் காமக்குரோத அகங்காரமுதலியவைகள் நசித்துப்போயிற்றென்று அறியற்பாலதன் றெனவும், மற்றென்னெனின் தவமுதலியனவியற்றுங்கால் அவையடங்கிநின்று அவைதோன்றும் இடம் வந்துழி வெளிப்பட்டு வருவனவெனவும் ஐயமின்றி அறியற்பாலனவாம்.

ஓ அரசனே! முனிவர்களும் இந்தச் சம்சாரத்தில துன்பத்தை யடைந்தவர்களாய்ச் சஞ்சரிக்கின்றார்கள். மூன்றுலகத்திலும் இப்படிப்பட்ட மாயாகுணங்களினின்றும் விடுபட்டவராயும், சாந்தத்தையடைந்திருக்கிற மனதையுடையவராயும், பேரின்ப சாகரத்தில் நிலைபெற்றவராயுமிருக்கப்பட்டபுருடர் எவருமில்லை. காமக்குரோதாதிகளும் தேகத்தோடு கூடியிருக்கின்றவர்களை விடுகிறதில்லை. ஒருவன் வேதங்களையும் சாஸ்திரங்களையும் அத்தியயனஞ்செய்து புராணங்களையெல்லாம் ஆராய்ந்தும் வனிதாதி விஷயங்களில் பற்றுள்ளவனாகவே யிருந்து தீர்த்தயாத்திரை தானம்

தேவதாபூஜை வேதாத்தியானம் இதுபோலுமுள்ள கர்மாநுஷ்டானங்களைச் செய்வானாயின் அவன் திருடனைப் போற்செய்கிறவனாவான். முன்னர் கிருதயுகமுதலிய மூன்று யுகங்களிலும் சர்வசாஸ்திரசம்பன்னராயிருந்தவரும் காமக்குரோத முதலிய வைகளோடு கூடினவராகவே யிருந்தார்களன்றி அந்தக் குணங்களையொழித்து சாந்தவிருத்தியிலிருந்தவரல்லர் அந்தச் சர்வஸாஸ்திர சம்பன்னமான குணங்களெல்லாம் கெட்டுப் போயிருக்கின்ற இக்கலியுகத்தில் அந்த விசார மெற்றுக்கு. இந்தக் கலியுகத்தில் எப்பொழுதுந்துரோகமும் விரோதமும் லோபமும் கோபமும் நிறைந்திருக்குமென்பது சித்தம். எந்தயுகத்திலும் சம்சாரலக்ஷண மாத்திரம் இத்தன்மையாகவே யிருக்கின்றது. இந்த விஷயத்தில் விசாரம் பண்ணுவது யுக்தமாகக் காணப்படவில்லை. குரோதம் விட்டவர்களாயும் பொறாமையற்றவர்களாயும் மாச்சரியமில்லாதவர்களாயும் உலகத்தார்க்குச் சாக்ஷிபூதமாயுமுலாவிக் கொண்டிருந்த மகான்கள் இப்பொழுதே தேடத் தக்கவர்களாக விருக்கின்றார்கள் மதம் முதலியகுணங்களை விட்டவர்களாயும் இந்திரிய நிக்ரகமுடையர்களாயும் சதாசார சம்பன்னர்களாயு மிருக்கிற புண்ணியசாலிகளே தன்யர்கள் அவர்கள் தாம் மூன்றுலகத்தையுஞ் செயிக்கத்தக்கவர்கள். இப்பொழுது மகாத்மாவாகிய என் தகப்பனாருடைய பாதகத்தை நினைத்து வருத்தப் படுகின்றேன். தப்ஸ்வியாகிய மகருஷியினுடைய கண்டத்தில் ஒருகுற்றமு மில்லாமலே இறந்துபோன பாம்பைச் சுற்றினார். ஓ வியாசரே! அதனால் அவருக்குண்டாகிய பாவத்தைப் போக்க என்னால் என்னபரிகாரஞ் செய்யவேண்டுமோ அது என்மனதிற் றோன்றவில்லை. என் பிதா செய்ததை யோசிக்குங்கால் மதுபானஞ்செய்ய அபேக்ஷித்தவன் தனக்கு வரும் அபாயத்தை எப்படியறியானோ அவன்போ லறியாதவராயினார். அவர் நரககத்துக்குப் பயப்படாமலே நிந்தையான கிருத்தியத்தைச் செய்துவிட்டார்.

என்பிதாவினுடைய செய்தி நிற்க. நீர் சொல்லிவந்த பிரகலாதனோடு நரநாராயணர்களுக்கு யுத்தமெப்படி நேரிட்டது. அதை விவரமாகச் சொல்லவேண்டும். பிரகலாதன் பாதாளத்திலிருந்து எப்படி வந்தான்? அவனுக்கும் சரஸ்வதி நதிக்கரையிலுள்ள பதரிகாச்சிரமத்தில் வசிக்குஞ்சாந்தர்களாகிய நரநாராயணர்களுக்குந் திரவிய நிமித்தமாகவா, ஸ்திரீநிமித்தமாகவா யுத்தம் நேரிட்டது? ஒரு பொருளிலும் இச்சையற்றிருக்கிற அவர்கள் ஒரு காரணமில்லாமலா பெரிய யுத்தத்தை நடத்தினார்கள்? தர்மாத்மாவாகிய பிரகலாதனுக்கு அவர்கள்மிகவும் பெரியோர்களென்று தெரிந்திருந்தும் அவன்

அவர்களோடு எப்படி யுத்தஞ் செய்தான். ஓ வியாசரே! இவைகளெல்லாம் காரணங்களோடு கேட்க அபேக்ஷித்திருக்கிறேனென்று வியாசமுனிவரைப் பிரார்த்தித்ததாகச் சூதபகவான் முநிவர்கட்குக் கூறினார்.

ஏழாம் அத்தியாயம்

நாராயணகிருத சம்சார தத்வவிசாரம் முற்றிற்று.

ஆஉ அத்தியாயம் எ-க்குச் சுலோகம் (ங௮0)

உ

ஸ்ரீ திரிபுரசுந்தர்யை நம:

எட்டாம் அத்தியாயம்.

---

* பிரகலாத நாராயண சமாகமம்.

(க-சு) ஓ மஹருஷிகாள்? வியாசபகவான் அரசனுடைய விண்ணபத்தைக்கேட்டுத் தன்னிருக்கைக்குப் போயினர். அவர் போன பின்னர் தர்மாத்மாவாகிய ஜனமே ஜயன் தன் பிதாவாகிய பரிக்ஷித்தினுடைய சித்தத்தைப் பாவரூபமாக வெண்ணி மிகவுந் துக்கத்தையடைந்து நம்முடைய பிதா பிரமருஷிக்குச் செய்த அவமானத்தால் விளைந்த சாபத்தினால் சர்ப்பந்தீண்டப்பட்டு விடமேறி ஸ்நானதான முதலியன வொன்றுமின்றி உப்பரிகையிலிறந்து யமலோகத்துக்குப் போய் அங்கும் இங்குண்டாகிய பாவவிளைவால் நரகத்தை யடைந்தனரல்லவா? அவரை நாம் கரையேற்றவேண்டும். ஏனென்றால் எந்தப்புத்திரன் புத் என்கிற நரகத்தினின்றுந் தன் தகப்பனைக் கரையேறச் செய்கின்றானோ அந்தப் புத்திரனுக்குத்தான் புத்திரனென்கிற பேரானது உண்மையாகச் சொல்லக்கூடுமென்று பெரியோர் கூறுகின்றன ரென்று பிதாவினுடைய கதியைக் குறித்து மனக்கவலையையும், பய கம்பனத்தையு மடைந்து துக்கித்திருக்குஞ் சமயத்தில் வியாசர் கிருகத்தினின்றும் வருவதைப் பார்த்து எதிர்சென்று வணங்கி ஆசனமளித்து நரநாராயணருடைய சரித்திரத்தைச் சொல்ல வேண்டுமென்று கேட்க வியாசர் சொல்லத் தொடங்கினார். அதனைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

---

* பிரகலாதனும் நாராயணரென்கிற ருஷியும் சந்தித்தல்

(எ-ங உ) குரூரனாகிய இரணியகசிபு என்கிற அசுரன் நரசிங்கமூர்த்தியினா லெப்பொழுது கொல்லப்பட்டானோ அப்பொழுது அவனுடைய குமாரனாகிய பிரகலாதன் ராஜ்யபட்டாபிஷேக முடையவனாய்த் தேவர்களாலும் அந்தணர்களாலும் கொண்டாடப்பட்டு வாழ்ந்திருந்தனன். அப்பொழுது உலகில் அரசரெல்லாம் நீதிகளைச் சிரத்தையோடு நடத்திவந்தார்கள். அந்தணர்கள் தவம் சத்கருமானுஷ்டானம் தீர்த்தயாத்திரை முதலியவற்றில் தவறாமலும், வைசியர் பிறர்பொருளுந் தம்பொருள்போ லெண்ணிச் செய்தலாகிய வாணிபத்திலும், சூத்திரர் மூன்றுவருணத்தாருக்குரிய பணிவிடைகளிலுந் தவறாதிருந்தனர். பின்னர், நரசிங்க மூர்த்தியினால் பாதாளலோகத்தில் தாபிக்கப்பட்டு அவ்விடத்திலிருந்தே பிரஜைகளை *ரக்ஷித்து ராஜ்யபரிபாலனஞ் செய்து வந்தனன்.

பின்னர் ஒருசமயம் பிருகு புத்திரராகிய சவனர் புண்யப்ரதமாய் விளங்கும் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்வதற்கு யாத்திரையாகப் போகும்போது ரேவாநதியைப்பார்த்து அதில் ஸ்நானஞ்செய்து அந்தநதியைத் தாண்டுகிற சமயத்தில் பயங்கரமாகிய விடத்தோடுங்கூடிய ஒருசர்ப்பமானது கவ்விப் பதாளலோகத்தை யடைந்தது. அப்போது அந்தச் சவனர் திகிலடைந்து தேவசிரேஷ்டராகிய நாராயணரை ஓ ஜனார்த்தனா! தேவதேவா? புண்டரீகாக்ஷா! இந்த விஷத்தைப் போக்கடிக்க வேண்டுமென்று தோத்திரஞ் செய்தமாத்திரத்தில் விஷச்சுவாலை யடைங்கிப் போனது மல்லாமல் பாதாளலோகபரியந்தம் போனதனாலுண்டாகிய துக்கமும் நீங்கிப்போயிற்று. அப்பொழுது அந்தச் சர்ப்பமானது இனி இந்தருக்ஷி நம்மைச்சபிப்பானென்று பயந்து விட்டுவிட்டது. பின்னர் அந்தச்சவனர் அங்குள்ள நாகராலும் அசுரராலும் நாககன்னிகைகளாலும் பூஜிக்கப்பட்டு வாழ்ந்திருந்தனர்.

ஓர் நாள் அந்தருஷியைத் தர்மசிந்தனையுள்ள பிரகலாதனாகிய அசுரேந்திரன் பார்த்து அர்க்கிய பாத்தியாதிகள் தந்து பூஜித்து அவரை நோக்கி நீர் இவ்வுலகில் எப்படிவந்தீர்? அசுரத் துவேஷியாகிய இந்திரன் என்னுடைய ராஜ்யத்தைப் பார்க்கவேண்டுமென்கிற இச்சையா லனுப்ப நீர் வந்தீரா? உண்மையைச்சொல்லுமென்று கேட்க மகருஷி ஓ அரசனே! இந்திரனால் எனக்காக வேண்டிய காரியமென்னை? நானவனுக்கு ஏவலாளியா? உன்னுடைய நகரத்தில் தூது வருவதாகிய தொழிலையா செய்யவந்தேன்? ஓ அசுரேந்திரா!

* ரக்ஷித்து - காத்து

என்னைப் பிருகுவம்சஸ்தனாகவும், தர்மாநுஷ்டான பரனாகவும், என்னுடைய இச்சையினால் வந்தவனாகவும் அறிந்துகொள்வாய். என்னிடத்தில் வேறுசந்தேகங் கொள்ளவேண்டாம். ஆனால் என்னுடைய விருத்தாந்தம் ஒன்றுளது யான் ஸ்நானநிமித்தமாக நதியை யடைந்தபொழுது சர்ப்பத்தினால் பிடிக்கப்பட்டு இவ்விடம் வந்தேன். அப்பொழுது யான்செய்த விஷ்ணுஸ்தோத்திரத்தினால் அந்தச்சர்ப்பமானது விஷமில்லாத தாயிற்று. நானும் அந்தச் சர்ப்பத்தினின்றும் விடுபட்டேன். ஓ ராஜேந்திரனே! இவ்விடத்தில் விஷ்ணுபக்தனாகிய எனக்கு அந்த விஷ்ணுபக்தனாகிய உன்னுடைய தரிசனமுங் கிடைத்ததென்று கூறியபொழுது பிரகலாதன் அவருடைய மதுரமாகிய வார்த்தைகளைக் கேட்டு மிகுந்த அன்புடனே ஐயா முநி ஸ்ரேஷ்டரே! தீர்த்தமகிமையைக் கேட்க விரும்பியிருக்கின்றே னாகையால் பூமியிலும் பாதாளத்திலும் அந்தரமார்க்கத்திலும் உள்ள புண்ணிய தீர்த்தங்க ளெவைகளோ அவைகளையெல்லாம் விரிவாகச் சொல்லவேண்டுமென்று கேட்டனன்.

ஓ அரசனே! மனம் வாக்குக் காயமென்கிற மூன்று காரணங்களுஞ் சுத்தமாக விருக்கப்பெற்றவர்களுக்குச் சுத்தமாயுள்ள தீர்த்தமானது ஒவ்வோர் காலடிதோறு மிருக்கிறது. அந்த மூன்று கரணமுஞ் சுத்தமில்லாதவர்களுக்குக் கங்கையும் புழுக்களோடு கூடிய அசுத்தமுடையதேயாகும். முன்னர் பாவமில்லாமலிருக்கிற சுத்தமான மனது ஒருவருக் குண்டாகுமேயானால் அவர்கட்கு எந்தத் தீர்த்தங்களும் பரிசுத்த முடையவைகளாகவேயிருக்கும். கங்காதீரத்தில் நகரங்களும் அநேக கிராமங்களும் ஆயர் முதலியோர் பாடிகளும் சிற்றூர்களு மிருக்கின்றன. அதுவுமன்றி வேடர் வலைஞர் ஊணர் மிலேச்சர் முதலியோருடைய குடிகளுமிருக்கின்றன. அவர்கள் சிவசொருபமாகிய கங்காதீர்த்தத்தில் எப்பொழுதும் ஸ்நானமும் எப்பொழுதும் பானமுஞ்செய்கிறார்கள். ஓ அரசனே! அவர்களெல்லாம் ஒருகாலமன்றி மூன்று காலமும் ஸ்நாந முதலியவற்றைச் செய்தவர்களா யிருந்தபோதிலும் அவர்களில் ஒருவனாவது மனோசுத்தம் பெற்றிருப்பனோவென்றால் ஒருவனும் பெற்றிருக்க மாட்டான். ஆகையால் பிரபஞ்ச விஷயங்களால் கெட்டிருக்கும் மனமுடையவர்களுக்குத் தீர்த்தத்தினுடைய பலனேது! என்றால் இந்திரியவிஷயங்களில் மயங்கிக்கிடக்கும் அவர்களுக்குத் தீர்த்தபலன் கிடையாதென்பதாம்.

(ஙங-ஙகூ) ஓ அரசனே! இந்த விஷயத்தில் மனோசுத்தியே காரணமாயுள்ளது. அதற் கன்னியமானது இல்லையென்று

யோசிக்கவேண்டும். எப்பொழுதுஞ் சுத்தியை யபேக்ஷிக்கிறவன் மனோ சுத்தியை முன்னர்த் தேடவேண்டும். தீர்த்தக்கரையில் வசிக்கிறவன் பிறரைவஞ்சித்தல் முதலிய தீத்தொழிலைச் செய்வானாயின் அவன் புண்ணியவானாய் விடுவானா? ஆகலான் புண்ணிய தீர்த்தக் கரையிற் செய்யப்பட்ட பாவம் திநே திநே விருத்தியடையும். பரி சுத்தமாகிய தீர்த்தஸ்நானஞ் செய்கின்றவன் மனோசுத்தியில்லா திருப்பானாயின் அவனை அதுசுத்திசெய்கிறதில்லை. தீமையானவெண்ணம் படைத்தவன் புண்ணிய தீர்த்தத்தில் கோடி முறை ஸ்நேனஞ் செய்தபோதிலும் அவன் சுத்தனாகமாட்டான். ஆகையால் சுத்தியை யபேக்ஷிக்கிறவன் மனோசுத்தியை முன்னர்ச் செய்து கொள்ள வேண்டியது. மனமானது சுத்தமா யிருக்குமேயானால் உபகரணங்களும் சுத்தியையடையும். வேறுவிதத்தால் சுத்தியையடைகிறதில்லை. ஆசாரசுத்தி என்பதும் அதுவேயாகும். அந்த மனோ சுத்தி யுடையவர்களாற்றான் தீர்த்தங்களும் மகிமைகெட்டுப் போகாமல் பிரசித்தத்தை யடைகின்றன. மனோசுத்தியீனமாய்ச் செய்யும் வேறுவிதமான அநுட்டானங்க ளெல்லாம் சீக்கிரத்தில் வியர்த்தத்தை யடையும். முக்கியமான மனோசுத்தியாவது தன்னுடைய புத்தியினாலேயும் செய்கையினாலேயும் பிறரஞ்சத்தக்கவை செய்யதிருத்தலேயாகும்.

(சு0-சுஎஏ) ஓ அரசனே! மகிமை பொருந்திய தீர்த்தங்களைக் கேட்டபடியினால் அவைகளிற் சிலவற்றைச் சொல்லுகிறேன். மிகவுஞ் சிறப்புடைத்தாகிய நைமிசாரணியத்தில் சக்கரதீர்த்தமெனவும், புஷ்கர தீர்த்தமெனவு மிருக்கின்றன. அதுபோல பூமியில் அளவில்லனவாகிய தீர்த்தங்களும், க்ஷேத்திரங்களு மிருக்கின்றனவென்று கூறப் பிரகலாதன் அவருடைய வார்த்தையைக்கேட்டு நைமிசாரணியத்தை யடைவதற்குப் பிரயத்தனஞ்செய்து தன்னுள் அடக்கக்கூடாத சந்தோஷத்தை யுடையவனாய் அசுரர்களைப் பிரயாணப்படுத்தி அவர்களைப் பார்த்து ஓ மஹாநுபாவர்களே! எழுந்திருங்கள் இப்பொழுது நைமிசாரணியத்தை யடைவோம் அங்குப் பீதாம்பரதாரியாய் கமலலோசனராய் வீற்றிருக்கின்ற விஷ்ணு மூர்த்தியைத் தரிசிப்போமென்று சொல்ல மஹாபலிஷ்டர்களாகிய அசுரர்களுந் தனவான்களும் ஒன்றாகக்கூடிப் பாதாளலோகத்திலிருந்து மிகுந்த சந்தோஷத்துடன் விஷ்ணுபக்தனாகிய அந்தப் பிரகலாதனோடு பிரயாணப்பட்டு நைமிசாரணியம்போய் மிகுந்த பக்தியோடு ஸ்நானஞ் செய்தார்கள்.

பிரகலாதன் அந்த அசுரர்களோடு கூடி அங்கங்குள்ள புண்ணியதீர்த்தங்களிலெல்லாம் ஸ்நானஞ்செய்து பின்னர் மகாபுண்ணிய சொரூபமாகிய நிர்மலமான தீரத்தையுடைய சரஸ்வதி என்கிற நதியைத் தரிசித்தான். ஓ ஜனமேஜயனே! அந்தத் தீர்த்தத்தைப் பார்த்தபொழுதே மகாத்மாவாகிய பிரகலாதனுடைய புத்தியிலோர்தெளிவுண்டாய் சாஸ்திர முறைப்படி ஸ்நானமும், ஸ்நானார்த்தமாயுள்ள தானமுதலியனவுஞ் செய்தானென்று வியாசமுனிவர் கூறியதைச் சூதபகவான் முனிவர்களுக்கெடுத்துரைத்தனர்.

எட்டாம் அத்தியாயம்

பிரக்லாத நாராயண சமாகமம் முற்றிற்று.

ஆஉ அத்தியாயம் அ-க்குச் சுலோகம் (சுஉஎஏ)

———

உ

ஸ்ரீ திரிபுர சுந்தர்யை நம:

ஒன்பதாம் அத்தியாயம்

பிரகலாத நர நாராயண யுத்தம்

———

ஓ மஹருஷிகாள்! பின்னர் பிரகலாதன் நர நாராயணரைச் சந்தித்து யுத்தஞ்செய்தவரலாற்றை வியாசபகவான் அரசனுக்குக் கூறியதைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

(க-க0) வியாசமுனிவர் அரசனை நோக்கி ஓ ஜனமே ஜயனே! பிரகலாதன் அந்தச் சரஸ்வதி நதிதீரத்தில் விதிமுறையே ஸ்நான முதலியன செய்துமுடித்துப் பின்னர் எதிரில் நிழலோடுங் கூடிய ஆலமரமொன்றையும், அதில் கழுகின் சிறகுகளோடு கூடியதாகிய அதிவேகத்தைக்காட்டும் நானவிதமான பாணங்களையும் பார்த்துப் புண்ணியப் பிரதமாயும் அதிபரிசுத்தமாயு முள்ள இச்சிறந்த புண்ணிய தீர்த்தக் கரையில் மகருஷிகளுடைய ஆச்சிரமத்தில் காணப்படும் பாணங்கள் யாருடையதென்று சிந்தித்தான்.

பின்னர் கிருஷ்ணாஜின தாரிகளாய் நீண்ட சடைமுடியோடு கூடித் தியான நிலையினிற்கும் தருமருடைய புத்திரர்களாகிய நர நாராயணரையும், அவர்களுக்கு முன்னே சர்வலக்ஷண யுக்தமாய்

வெண்ணிறத்தோடு பிரகாசிக்கின்ற சார்ங்கம் ஆஜவகம் என்கிற இரண்டு தனுசுகளையும், அக்ஷயமாகிய இரண்டு தூணீரங்களையும் பார்த்து இவர்கள் தர்மவிரோதமாகிய இந்த டம்பமான காரியத்தை ஏன் செய்யவேண்டுமென்று கோபித்து இரண்டு கண்களும் சிவந்து அவர்களைப் பார்த்து இந்தப் பிரபஞ்சத்தில் உங்களைப் பார்த்தால் தவமார்க்கத்தில் தீவிரநோக்க முடையவர்களாய்த் தெரியவருகிறது. நீங்கள் விற்களைத் தாங்கியிருப்பதென்? இது தவத்துக்கு விரோதமான அங்கமல்லவா? இவ்வாறு தவத்தி லிருப்பவர்களைக் கண்டதுமில்லை கேட்டதுமில்லை. இதுகிருதயுகத்தில் நடக்கத் தக்கதன்று இது கலியுகத்துக்குரிய தருமம். யுகதருமங்களுக்குமாறாக நடப்பது நீதியானதன்று. பிரமருஷிகளாகிய பிராணர்களுக்குத் தபசு யுக்தமானதென்று சொல்லப்பட்டிருக்கிற தேதவிர தனுசைத் தாங்கியிருப்பது தவாங்கமென்று சொல்லவில்லை. அங்ஙனமிருக்க நீங்கள் தாங்கியிருக்குங் காரணமென்னை? யோகபாவத்தை யடைந்திருக்கிற உங்களுடைய சரீரத்தில் சடாதாரணமெங்கே? தூணீரமெங்கே? இவ்விரண்டும் ஒரு சரீரத்திலிருக்கத்தக்கதா? எவரெவர்கள் எந்தெந்த நிலைமையி லிருக்கின்றார்களோ அவரவர்கள் அந்தந்த நிலைமைக்குரியவற்றை ஆச்ரயிப்பது யுக்தம். அல்லாதது அயுக்தமென்று சொல்லப்பட்டிருக்கிறதென்று பிரகலாதன் கூறினன்.

(கக-கஅ) அந்த வார்த்தையை நான்கேட்டு ஓ அசுரேந்திரனே! இவ்விடத்தில் எங்களுடைய தபசில் உனக்கேன் வீணான விசாரமென்று கூறினான். சாமர்த்திய மிருக்கும்பக்ஷத்தில் எவன் எந்த காரியத்தைச் செய்தபோதிலும் அவனுக்கு அது சுவதீனப் படுவதில் என்ன ஆக்ஷேபமிருக்கிறது. ஓ மூடனே! உலகப் பிரசித்தியா யிருக்கின்ற நாங்கள் வீரத்திலும் தவத்திலுஞ் சமர்த்தர்கள். நீ என்னசெய்யப் போகிறாய். நீ உன்னிஷ்டப்படி வந்த வழியைப் பார்த்துக்கொண்டு போவாய். இவ்விடத்தினின்று வீணானவார்த்தைகளை நீ பினத்துவதற் கென்னகாரணம். நீ எங்கள் முன்னேயிருப்பதற்குக் கூடாது. இருந்தால் எங்களுடைய பிரமதேஜஸைச் சகிக்கமாட்டாய் அதன் பெருமையை மூடனாகிய நீ அறியமாட்டாய் உலகசுகத்தை யபேக்ஷிக்கின்ற பிராணியா யிருக்கின்ற நீ பிரமருஷிகளுடைய தர்மா தர்ம விசாரஞ்செய்ய வந்தது தருமமாகுமா! நீ போபோ வென்றனர்.

அந்த வார்த்தைகளைக் கேட்ட பிரகலாதன் இந்த நர நாராயணர்கள் மந்தபுத்தியுடையவர்கள் இவர்களிடத்தில் பொய் வார்த்தையும் அகங்காரமும் நிறைந்திருக்கின்றன. இவர்கள் நம்மை

அலக்ஷியமாய்ப் போவென்று சொன்னாலும் தருமத்தை நிலை நிறுத்தும் அசுரேந்திரனாகிய நாம் போவது தருமமல்ல. ஏனென்றால் நாமிருக்கிறபொழுது தீர்த்தக்கரையில் பிரம ருஷிகளாயிருக்கின்ற இவர்கள் க்ஷத்திரிய தருமத்தை இன்னமும் அநுட்டித்திருத்தல் யுக்தமானதன்று. இது பரதர்மம். இது துக்கத்தை விளைவிக்குமென்றெண்ணி ஓ முனிவர்களே! உங்களுக்கு யுத்தத்திலும் சக்தியிருக்கிறதென்று கூறினீரல்லவா! அதனை இப்பொழுது காட்டுங்களென்று பிரகலாதன் கூற நரனென்பவர் உனக்கு யுத்தஞ் செய்யவேண்டுமென்கிற அபிப்பிராய மிருக்கிற பக்ஷத்தில் என்னுட னிப்பொழுதே யுத்தம்பண்ணுவாய் ஓ அசுரருக்குள் பிரயோசனமற்ற நீசமானவனே! உன்னா லென்னவாகும் நான் உன்னுடைய சிரசை இப்பொழுது பொடியாக்கி விடுகிறே னென்றார்.

(கக-உச) அவ்வார்த்தையைக் கேட்ட பிரகலாதன் கோபித்து இவர்களை எந்த விதத்தினாலாவது யுத்தஞ்செய்து செயிக்கவேண்டுமென் றெண்ணித் தவத்தாற் சரீரத்தைவாட்டிப் பெருமை பெற்றிருக்கும் அந்த நரனைப்பார்த்து உன்னைச் செயிப்பது எனக்கோர் பெருங்காரியமாவென்று பிரதிக்ஞை செய்து வில்லைக்கையிலேந்தி வளைத்துக் குணத்தொனி செய்தனன். நானும் வில்லை வளைத்து வேகத்தோடுங் கூடிய அநேகபாணங்களைப் பிரயோகஞ் செய்தனன். அவைகளைப் பிரகலாதன்பார்த்துக் கோபங்கொண்டவனா யெதிரே நின்று பொன்கட்டுகளோடு கூடிய அநேக பாணங்களை வேகமாய்விட்டு அவைகளையெல்லாம் வெட்டினான். நான் தன்னால் விடப்பட்ட பாணங்கள் வெட்டுப்பட்டு முறிந்துபோனமையைக்கண்டு மிகுந்தரோஷத்தோடும் வேறு பாணங்களைச் சீக்கிரமாய் விட்டனன். பிரகலாதன் அந்தப் பாணங்களையும் கொடிய வேகத்தோடுங்கூடிய பாணங்களால் வெட்டி அந்த நரனை மார்பிலடித்தான். நரனும் கோபித்தவனாய் ஐந்து பாணங்களால் பிரகலாதனைத் தோளிலடித்தான். இவ்விருவருடைய யுத்தத்தையும் இந்திரன் முதலிய தேவர்கள் விமானங்களிலேறிக் கொண்டு ஆகாய வீதியில் வந்து பார்த்து இருவருடைய பராக்கிரமங்களையும் மேன்மேலுங் கொண்டாடினார்கள்.

(உரு-ருச) நரனால் அடிபட்ட பிரகலாதன் அதிகவீரத்தோடும் மேக வருஷம்போல் பாணங்களைப் பொழிந்தனன். நரனும் சார்ங்கமென்கிற தனுசைவளைத்துத் தீக்ஷணமாகிய பொன்கட்டுகளோடு கூடிய பாணங்களை விட்டான். செயத்தையபேக்ஷித்திருக்கிற இவருடைய யுத்தமும் நீங்குதலில்லாமல்

அதிகரித்தது. ஆகாயத்திலிருந்து தேவர்கள் சந்தோஷத்தை யடைந்த மனமுடையவர்களாய்ப் புஷ்பங்களை வருஷித்தார்கள். மறுபடியும் இருவரும் மாறிமாறி விடுவதும் ஒருவர் பாணங்களை யொருவர் வெட்டுவதும் முறிப்பதுமாய்ப் போராடிப் பின்னர் இருவருடைய போரையும் பார்த்துக்கொண்டு சுகாசனராய் வீற்றிருக்கின்ற நாராயணர் மேல் பிரகலாதன் நரன்மே லெவ்வாறு பாணப்பிரயோகஞ் செய்தனனோ அதுபோல் பாணப்பிரயோகஞ் செய்தனன். அது கண்ட நாராயணரும் பிரகலாதனை எதிர்த்து அவன் திக்பிரமை யடையும்படியா யெண்ணிறந்த பாணங்களை விட்டு ஆகாயமெங்கு முறைத்தனர். அதுவுமன்றி அப்பாணங்கள் ஆகாயத்திலிருக்கின்ற தேவர்களைப் பார்த்து ஓ தேவர்களே! வாய்மூடிக்கொண்டிருப்பதற்கா இங்கு வந்தீர்கள் நாராயணருடைய ஜயத்தைச் சொல்லுங்களென்று தூண்டுவதுபோ லவர்கள்பேரிற் றைத்து நெருங்கின. அதனால் செயகோஷத்தைச் செய்கின்ற தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பகற்பொழுதிற்றானே இராப்பொழுதுக்குச் சமானமான இருள்பரவியது. அப்பொழுது யுத்தத்தைப் பார்க்க வந்த தேவர்கள் அடியில் வருமாறு சொல்லத் தொடங்கினர். எப்பொழுதும் பார்த்திராத அதி பயங்கரமாகிய யுத்தம் இப்பொழுது நடந்து வருகிறது. இந்த யுத்தத்தைக் காணுநிமித்தம் கந்தர்வர் யக்ஷர் கின்னரர் நாகர் வித்யாதரர் சாரண ரென்பவரும் வந்திருக்கின்றனறென்றும், நாரதரும் பர்வதரும் ஆச்சரியமடைந்து பூர்வத்தில் தாரகாசுர யுத்தமும், விருத்திரா சுரயுத்தமும் இப்படி நடந்ததில்லை என்றாரென்றும், விஷ்ணுவினால் செய்யப்பட்ட மதுகைடவ யுத்தமும் இத்தன்மைத்தான் தன்றென்று அதிசயித்தனரென்றுங் கூறினர்.

இவ்வண்ணம் யாவரும் அதிசயிக்கும் படியாகத் தினந்தோறும் பகலேயன்றி இரவிலும் விடாது செய்து வருங்கால். ஒருநாள் பிரகலாதனுடைய தனுசை நாராயணர் இரண்டு துண்டமாக்க அவன் வேறொருதனுசை யெடுத்துப் பாணங்களைப் பிரயோகஞ்செய்ய அவைகளையும் நாராயணர் ஓர்பாணத்தால் முறித்தெறிந்து அந்தத் தனுசையும் வெட்டினர். இவ்வாறு நாராயணர் வெட்டுந்தோறும் பிரகலாதன் வெவ்வேறு தனுசையெடுத்து யுத்தஞ்செய்து வந்தனன். அவன் வேறுவேறுதநுசை எடுத்து யுத்தஞ்செய்யுந்தோறும் நாராயணர் கோபங்கொண்டவராய் அதிவேகமான பாணங்களால் வெட்டிக் கொண்டே வந்தனர்.

இவ்வாறு எடுக்கும் விற்களெல்லாம ஒடிந்துபோக மானம் பொறாது பிரகலாதன் பரிகமென்கிற ஆயுதத்தையெடுத்து மிகுந்த

கோபத்தையுடையவனாய் நாராயணருடைய மார்பில் மோதியடித்தான். பலிஷ்டராகிய அந்த நாராயணர் தன்மார்பிற் றைத்திருக்கிற வதனைப் பிடுங்கியெறிந்து ஒன்பதுபாணங்களை விட்டனர். அந்தப் பாணங்களைப் பிரகலாதனும் ஒன்பது பாணங்களால் வெட்டி ஓர் இருப்புமயமாயிருக்கிற கதாயுத்ததை யெடுத்துக்கோஷஞ்செய்து நாராயணருடைய முழங்காலில் வேகமாக அடித்தான். அதற்கவர் சிறிதும் அசையாமல் பர்வதம்போல் திடசித்தராயிருந்து பிரகலாதனுடைய திண்ணிய கதையைப் பாணங்களால் வெட்டினார். அதனை ஆகாயவாசிகள் கண்டு ஆச்சரியமடைந்தனர். பின்னர் சத்துருதுவம்சகனாகிய பிரகலாதன் சத்தியாயுதத்தை யெடுத்து அதிகோபத்தோடும் மிக்கபலங்கொண்டு நாராயணருடைய மார்பில் வேகமாக விட்டான். அதனை நாராயணர் ஓர் பொருளாக வெண்ணாமல் விளையாடுவதுபோல் ஓர் பாணத்தினால் இரு துண்டாக்கினார். அதனைப் பிரகலாதன் ஏழுபாணங்களால் அதிவேகமாய்ப் பொடியாக்கினான்.

ஓ ஜனமேஜயனே! இவ்வா றிருவரும் ஆகாயவாசிகள் பலமுறையும் அதிசயிக்கத் தேவமானத்தில் ஆயிரம் வருடம் அந்தயுத்தத்தை நடத்திவந்தனர். அப்பொழுது பீதாம்பரதாரியாயும், கதாதரராயும், பத்மநாபராயும், இலக்ஷ்மிபதியாயுமிருக்கின்ற விஷ்ணு வானவர் அவ்விடத்துக்குவரப் பிரகலாதன் பிரத்யக்ஷராய் வந்த நாராயணரை நமஸ்காரஞ்செய்து மிகுந்த பக்தியுடனே அஞ்சலியஸ்தனாய் நின்று அடியில் வருமாறு சொல்லுகின்றான். ஓ தேவ தேவா! ஜகந்நாதா! பக்தவத்ஸலா! மாதவா! யுத்தத்தில் நான் இந்த ருஷிகளை ஏன் ஜயிக்காம லிருக்கிறேன். ஓ தேவனே! நான் நூறுவருடத்துக்குக் குறையாமல் தேவர்களோடு யுத்தஞ் செய்திருக்கிறேன்.

அங்ஙனமிருக்க என்னகாரணத்தினால் இவர்களிடத்தில் எனக்கு ஜயமுண்டாகவில்லை. இது மிகவும் ஆச்சரியகரமாயிருக்கிற தென்று விண்ணப்பஞ்செய்ய விஷ்ணுமூர்த்தி ஓ சத்துருதுவம்சகனே! மனோலய முடையவரா யெவராலுஞ் ஜெயிக்கப்படாதவராய் மஹாதபஸ்விகளாய் சித்தபுருஷர்களாயிருக்கின்ற நரநாராயணர்களாகிய இவர்கள் என்னுடைய அம்சங்களா யிருக்கின்ற பொழுது அவர்களை நீ ஜயிக்கக்கூடாமலிருப்பது ஓ ராச்சரியமா! ஓ புத்திமானே! நீ இந்த ருஷிகளோடு விரோதஞ் செய்ய வேண்டாம். நீ பாதாளத்துக்குப்போய் என்னுடைய பக்தியை ஸ்திரமாகச் செய்வாயென்று கட்டளையிட்டனர். அவராணையின்படி பிரகலாதன் அசுரர்களோடு போய்விட்டான். நர

நாராயணரென்கிற ருஷிகள் மறுபடியும் தவத்தைச்செய்யத் தலைப்பட்டனர் என்று வியாசமுநிவர் ஜனமேஜயனுக்குக் கூறினார்.

ஒன்பதாம் அத்தியாயம்

பிரகலாத நர நாராயண யுத்தம் முற்றிற்று.

ஆஉ அத்தியாயம் கூ-க்குச்சுலோகம் (சுஅஙஏ)

உ

திரிபுரசுந்தர்யை நம:

பத்தாம் அத்தியாயம்

---

* ஹரயேபிருகுகிருத சாபகாரணம்

ஓ மஹருஷிகாள்! நரநாராயணருக்கும் பிரகலாதனுக்கும் நடந்த யுத்தவிசேடமுதலியவற்றை எடுத்துச் சொன்னோம். இனி விஷ்ணு மூர்த்திக்குச் சாபம்வந்தகாரணத்தை வியாசமுநிவர் அரசனுக்குச் சொல்லிய அற்புதத்தைக் கூறுகிறோம் கேட்பீர்களாக.

(க-கக) ஜனமேஜயன் வியாசரைநோக்கி ஓ முநிஸ்ரேஷ்டரே! இப்பொழுது தாங்கள் சொல்லிவந்த சரித்திரத்தில் எனக்கொரு பெரியசந்தேக மிருக்கிறது. என்னையெனில், நரநாரர்யணர்கள் சாந்தர்களாயும், விஷ்ணு அம்சமுடையவர்களாயும், தபஸ்விகளாயும், புண்ணியதீர்த்தத்தை யடைந்தவர்களாயும், கந்தமூலபலன்களை யாகாரமாகக் கொள்பவராயும், சத்வகுணசம்பன்னராயும், சத்தியசந்தர்களாயுமிருக்கின்றவர்கள். இவர்கள் யுத்தம் நேரிட்டகாலத்தில் அதிலாசையுடையவர்களாய்ச்சிரேஷ்டமாகிய தங்கள் தவத்தைவிட்டு யுத்தத்தை அமோகமாகச் செய்த காரணமென்ன? ராகத் துவேஷமற்று ஒருவருக்குந் தீங்குசெய்யாமல் சோகம் பாவனையாகிய பரமானந்த சுகத்தி லாழ்ந்திருக்க

* விஷ்ணுமூர்த்திக்கு பிருகுருஷியினாலிடப்பட்ட சாபத்துக்குக் காரணங் கூறுதல்.

வேண்டியவர்கள் ராகத்துவேஷமுடையவர்களாய்த் தேவவருடத்தில் ஆயிரவருடகாலம் தங்களுக்குக் கீழ்ப்பட்டவனாகிய பிரகலாதனிடத்தில் சமமா யுத்தஞ்செய்த அவசியமென்னை? ஒருவராலுஞ் செய்தற்கருமையாகிய தவத்தைச்செய்து அதனால் மனோலயம் வந்து பரமாத்மவையிக்கியத்தை யடையவேண்டிய சமயத்தில் தமோகுணப்பிரதானிகளுக்கு ஏற்றக்கதாகிய யுத்திபுத்திகள் எப்படி வந்தன?

தவமானது போகமோக்ஷப் பிரதமாயிருக்கின்ற சர்வ பலத்தையுங் கொடுக்கத் தக்கதாகையால் இவர்கள் போகார்த்தமாயுள்ள ஸ்திரீமோகத்தை யுத்தேசித்தா? அதுவன்றி வேறுவிதமான சுகபோகங்களையநுபவிக்கவா? அதுவுமன்றிச் சுவர்க்கத்தை யடைவதற்கா? இவற்றிலெதனை யுத்தேசித்துத் தவத்தைச் செய்தனரோ தெரியவில்லை. ஆனால் அவற்றிலேதேனும் ஒன்றையாவது அடையப்பெற்றார்களோ வென்றால் ஒன்றையும் பெறாதவர்களாகவே தெரியவருகின்றனர். ஆகவே இவர்கள் பெற்றது தவத்தினால் மிகவும் மெலிவடைந்திருக்கிறசரீரத்தையும், ஆயிரவருடகாலம் ஓயாமல் யுத்தமியற்றிய தனாலுண்டாகிய கஷ்டத்தையுந்தான். இதுவன்றி ராஜ்யபலத்தையாவது, ஸ்திரீகளையாவது, கிருகங்களையாவது பெற்றாரின்று. ஒன்றையும் பெறவிரும்பாது சாந்த சித்தர்களாயிருந்த இவர்கள் எந்த பலத்தைத்தா னடைந்தார்களோ தெரியவில்லை ஒருபலத்தையும் அடைய அபேக்ஷியாதவர்களென்றால் மகாபலிஷ்டர்களாகிய அசுரர்களோடு எதற்காக யுத்தஞ் செய்தார்கள்? அநாதியாயுள்ள யுத்ததர்கமமானது தேகத்துக்குத் துக்கத்தைக் கொடுக்கத்தக்கதென்று தெரிந்துகொண்ட புத்திமான்கள் அதைவிட்டுச் சுகத்தைக் கொடுப்பதாகிய கிருத்தியத்தையே எப்போதுஞ் செய்து வந்தனர்.

(கஉ-கசு) அங்ஙனமிருக்க, இந்த நரநாராயணர்களை விஷ்ணுவினுடைய அம்சவான்களென்றும், எல்லா மறிந்தவர்களென்றும், அளவிறந்த தவத்தைச்செய்தவர்களென்றுஞ் சொல்லுவதெல்லாம் வீணாகும். உண்மையென்று சொல்லும்பக்ஷத்தில் அவர்கள் அந்தத்துக்கமான காரியத்தைச் செய்யாதிருத்தல் வேண்டும். அங்ஙனமன்று சொன்னவையெல்லாம் நம்பத்தக்கவைகளே யென்றால் துக்கசம்பந்தமாயுள்ள யுத்தாதிகளை யொழிக்கத் தக்கதாயும், சுகத்துக்கு உத்யானவனம் போன்றதாயும், மோக்ஷத்தைக்கொடுப்பதாயுமுள்ள தவத்தை அநேக காலமாய்ச் செய்து வந்து அப்பொழுது அதனைவிட்டுத்துக்கத்தை விளைவிப்பதாகிய யுத்தத்தை ஏன் செய்யவேண்டும்?

ஓ வியாசரே! பயங்கரமாகிய யுத்தத்தை மூடனுஞ் செய்யான். ஏனெனில் யயாதி என்கிற அரசன் அநேக யாகங்களைச் செய்தவனாயும், கொடையாளியாயும் தர்மாத்மாவாயுமிருந்து சுவர்க்க பதவியையடைந்தும், அகங்காரத்தினால் ஓர் சொல்லைச் சொல்லிய மாத்திரத்தில் இந்திரன் அவனைக்கீழே தள்ளிவிட்டானென்று கேட்டிருக்கிறேன். ஆகையால் எவ்விதமான சிறப்புடையவராயினும் அகங்காரத்தோடு எந்தச் சொல்லைச் சொல்வாராயினும் எந்தத் தொழிலைச் செய்தாராயினும் அவர்கள் கெடுவரென்பது நிச்சயம். ஆகவே மகருஷிகளாயிருந்த இவர்கள் அகங்காரங்கொள்ளாமல் எப்படி யுத்தஞ்செய்யத் தலைப்பட்டார்கள்? எப்பொழுது அகங்காரங்கொண்டார்களோ அதனால் அவர்களுக்குக் கிடைத்தபலன் புண்ணிய நாசமேயன்றி வேறென்னையுள.

(கஎ-ஙஉ) என்றிவ்வாறு வினவிய அரசனைநோக்கி வியாசர் கூறுகின்றார். ஓ அரசனே! தர்மத்தில் நிச்சயமுள்ள சர்வஞ்ஞர்களா யிருக்கின்ற முநிவர்கள் இப் பிரபஞ்சத்துக்கு மூலமாயுள்ளது அகங்காரமென்றும், அது சாத்வீக அகங்காரம் ராஜஸ அகங்காரம், தாமச அகங்காரமென மூன்றுவிதமாயிருக்குமென்றுஞ் சொல்லியிருக் கின்றனர். ஆகையினால் நர நாராயணர்கள் தேகத்தைத் தாங்கியிருக்கின்றவர்கள் தானே அவர்கள் அந்த அகங்காரத்தை விடுவதற்கு முடியுமா? ஓ அரசனே! காரணமன்றிக் காரியமுண்டாகுமா? இது நிச்சயம். முன்கூறிய மூவகை அகங்காரத்தில் தவம் தானம் தேவயக்ஞம் பிதுர்யக்ஞ முதலிய சத்கர்மா நுஷ்டானங்களை விதிபூர்வமாயும் ஞானபூர்வமாயுஞ் செய்கின்றவர்கட்குச் சாத்வீகாங்காரங் காரணமெனவும், மேற்கூறிய தவ முதலியவைகளை விதியற்றதாயும் ஞானசூன்யமாயும் செய்கின்றவர்களுக்கு இராஜசாங்காரங் காரணமெனவும், பொய் சொல்வோருக்கும் கலகஞ் செய்வோர் முதலியோருக்கும் தாமச அகங்காரங் காரணமெனவுங் கூறுவர். ஓ ஜனமேஜயனே! நல்லனவுந் தீயனவுமா யிருக்கின்ற எந்தக் கிரியையும், இந்த அகங்காரங்களை விட்டு நடவாது. இந்தப் பிரபஞ்சம் அகங்காரத்தோடு கூடினதேயல்லாமல் அகங்காரத்தைவிட்டு இந்தப் பிரபஞ்சம் எப்படியுண்டாகும்? பிரம விஷ்ணு ருத்திரர்களும் அகங்காரமிலராயின் சிருட்டியாதி தொழிலை அவர்களெவ்வாறு நடத்தியிருப்பர். திரிமூர்த்திகளே அகங்காரத்தோடு கூடினவர்களென்றால் மகருஷிகள் முதலாகச் சொல்லப்பட்டவர்கள் எவ்வாறு அதனை விட்டிருக்க முடியும். ஏனெனில் உலகத்திலெவரெவர் நாமரூபத்தோடுங் காணப்படுகின்றனரோ அவர்களெல்லாம் பெத்தான்மாக்களே யாவர்.

பந்தமில்லாதவ ரெவருமில்லை. ஆகவே அவரெல்லாம் அகங்காரமயமான சுபாவத்தோடுங் கூடிக் கன்மத்துக்கீடாய்த் தேவதிரியக் மாநுடமா யிருக்கின்ற அச்சுக்களில் மாறிமாறித் தேருருளையைப்போல் இறந்தும் பிறந்தும் வருகின்றவரேயாவர். அந்தோ! விஷ்ணுமூர்த்திக்கு அகண்டமாயிருக்கின்ற இச்சகத்தில் உத்தமம் அதமமாயிருக்கின்ற யோனிகளில் நேரிட்ட சனன மரணங்களுடைய கணக்கை இவ்வளவினவென்று எந்தப்புருடன்றா னறிவான். ஒருசமயம் மச்சமாகவும், ஒருசமயம் ஆமையாகவும், ஒரு சமயம் பன்றியாகவும், ஒரு சமயம் நாரசிங்கமாகவும், ஒரு சமயம் வாமன்மாகவும், இவ்வா றனேகவிதமாக யுகந்தோறும் அவதாரஞ் செய்திருக்கிறார். அவருக்கு இப்பொழுது சொல்லி வந்த பிறவிகள் தானென்று நினைக்கவேண்டாம். இந்த வைவஸ்வத மந்வந்திரத்திலேயே பிருகுவினுடைய சாபத்தா லிவரெடுத்திருக்கிற சனனங்க ளிவ்வளவினவென்று சொல்லி முடியாது.

அவைகளைச் சொல்லுகிறேனென்று வியாசர் கூறியபொழுது அரசன் ஓ வியாசரே! விஷ்ணுமூர்த்தி பிருகுவினுடைய சாபத்தால் அநேக அவதாரங்க ளெடுத்திருக்கிறாரென்று சொல்லிய விஷயத்தில் எனக்குச் சந்தேகந் தோன்றியிருக்கிறது. என்னையெனில் விஷ்ணுவாகிய பகவான் பிருகுவினால் ஏன் சபிக்கப்பட்டார்? அம்முனிவருக் கென்ன அபராதஞ் செய்தார்? தேவர்களால் வணங்கத்தக்கவராகிய அந்த விஷ்ணுமூர்த்தியை இம்மகருஷி எப்படிச் சபிக்கத்தக்க ராயினர்? என்று வினவிய அரசனை நோக்கி வியாசர் கூறுகின்றார்.

(ஙங-சுசு) பூர்வத்தில் காசிபருடைய புத்திரனாகிய இரணியகசிபனென்னும் அசுரன் தேவர்களோடு யுத்தஞ் செய்யும்பொழுது இவ்வுலகமெல்லாம் பெருந்துன்பமடைய அப்பொழுது அந்த விஷ்ணுமூர்த்தி அவனைக் கொன்றனர். அவனுக்குப் பின்னர் அவன் மகனாகிய பிரகலாதன் பட்டத்துக்குரியவனாய் அரசாண்டு வரும்பொழுது தேவர்கள் மிகவுந் துன்பமடைய அப்பொழுது இந்திரனெதிர்த்து நூறுவருடகாலம் உலகத்தில் ஆச்சரியப்படத்தக்க பயங்கரமாகிய யுத்தத்தைச் செய்து அவனை அபசெயப்படுத்தினன். அபசெயமடைந்த பிரகலாதன் மிகவுந்துக்கத்தை யடைந்து பூர்வீகமாயுள்ள தர்மத்தை யாலோசித்து வீரோசனன் மகனாகிய பலிக்குப் பட்டாபிஷேகஞ் செய்துவிட்டுத் தவஞ்செய்யு மெண்ணமுடையவனாய்க் கந்தமாதன பர்வத்துக்குப் போயினான்.

ஸ்ரீ மானாகிய பலிச்சக்கிரவர்த்தி தேவர்களோடு போரியற்றக்கலக்ஞ் செய்யத்தலைப்பட்டான். அதனால் அசுரர்கட்குஞ் சுரர்கட்கும் மகாபலமானயுத்தம் நேரிட இந்திரனும் விஷ்ணுவும் தேவர்களுக்குத் துணையாயிருந்து அசுரர்களுக்கு அபசயத்தை யுண்டாக்கி அவர்கள் தங்கள் ராஜ்யத்தை யிழந்து போகும்படிச் செய்தார்கள். பின்னர் அசுரர்கள் சுக்ரரைச் சரணாகதி யடைந்து ஓ பிராமணோத்தமரே! தவத்திற் பிரசித்திபெற்றிருக்கின்ற நீர் எங்களுக்குச் சகாயமான கிருத்தியத்தை ஏன்செய்யாமலிருக்கிறீர். சர்வமந்திர வேத்தாவாகிய தேவரீர் எங்களை ரக்ஷிப்பதற்குச் சகாய பூதரா யாகாமற் போவீரேயானால் நாங்க ளிப்பூவுலகி லிருப்பதற்குச் சத்தி யில்லாமையான் பாதாளஞ் சேருகிறோ மென்றனர். சுக்ரர் அசுரர்களைப்பார்த்து ஓ அசுரர்களே! நீங்கள் பயப்படவேண்டாம் என்னுடைய தபோவன்மையால் உங்களை ரக்ஷிக்கிறேன். எப்படியென்றால் மந்திரங்களாலேயும் ஓ ஷதிகளாலேயுமுங்களுக்குச் சகாயஞ் செய்கிறேன். ஆகையால் மனதிலிருக்கிற வருத்தத்தைவிட்டுச் சந்தோஷ முடையவர்களாக விருங்களென்று சொல்ல அசுரர்கள் சுக்ரரை யடைக்கலம் புகுந்ததனால் பயமற்றவர்களாயினர்.

(சுரு-ருO) சுக்ரருடைய மந்திரப்பிரபாவத்தினால் தேவர்களுடைய மனதுக்கு நிஷ்காரணமாய்ச் சந்தோஷமற்றுத் துன்பமுண்டாயிற்று. அதனைத் தேவர்களெண்ணி இது அசுரமாயையென்று நிச்சயித்துத் தூதர்களால் சுக்ரருடைய செய்தியை யறிந்துகொண்டு இந்திரனிடஞ்சென்று நமக்கிந்த அரசியலிருக்கும் பொழுதே சீக்கிரத்தில் யுத்தஞ்செய்வதற்குப் புறப்பட்டு முன்னோடிப் போனவர்கள்போக விருக்கின்ற அசுரர்களைத் துறத்தி யடித்து ஓட்டிவிடவேண்டுமென்று ஆலோசித்துக் கோபங்கொண்டு ஆயுதபாணிகளாய்த் தங்களைத் தூண்டினவராகிய விஷ்ணு மூர்த்தியோடு அசுரரிடத்திற்போய் அடித்துத் துறத்த அவ்வசுரர்கள் பயமுற்றவர்களாயும் நடுக்கமுற்றவர்களாயும் தங்கள் குருவாகிய சுக்ரரைச் சரணாகதியடைந்து எங்களை ரக்ஷிக்கவேண்டும் எங்களை ரக்ஷிக்கவேண்டுமென்று முறையிட்டனர். சுக்ரர் மகாபலிஷ்டராயிருந்த அசுரர்களெல்லாம் தேவர்களால் மிகவும் பீடிக்கப்பட்டு மெலிந்திருப்பதைப்பார்த்து மந்திரமும் அவுஷதமுமிருக்கின்றது நீங்கள் பயப்படவேண்டாமென்று மிகுந்த தொனியோடு சொல்லவும் அந்தத் தொனியை அசுரரைப் பின்றொடர்ந்து வந்து தேவர்களெல்லாம் கேட்டுப் பயமடைந்தவர்களாய் வந்த வழியே பார்த்துக்கொண்டு

வோட்ட மெடுத்தார்களென்று அரசனுக்கு வியாசபகவான் கூறியருளினார்.

பத்தாம் அத்தியாயம்
ஹரயபிருகுகிருத சாபகரணம் முற்றிற்று

———

ஆஉ அத்தியாயம் க0-க்குச் சுலோகம் (ருஙஙஏ)

———————

உ

திரிபுரசுந்தர்யை நம:
பதினோறாம் அத்தியாயம்

——————

இதுவுமது.

ஓ மஹறுருஷிகாள்! இதுவரையில் விஷ்ணுமூர்த்திக்குச் சாபம் வருவதற் கேதுவான சுராசுரர்களுடைய யுத்தவரலாற்றைச் சொன்னோம். இனி அந்த விஷ்ணுமூர்த்திக்குச் சாபம் வந்த காரணத்தைச் சொல்லுகின்றேம் கேட்பீர்களாக.

(க-சு) வியாசர் அரசனைப்பார்த்து ஓ அரசனே! பின்னர் சுக்ரர் அந்த அசுரர்களை நோக்கி ஓ அசுரர்களே? முன்னர் பிரமனால் சொல்லப்பட்டிருக்கிற செய்தியொன்றுண்டு. அதனைச் சொல்லுகிறேன் கேளுங்கள். விஷ்ணுமூர்த்தி முன் வராகாவதாரஞ் செய்து இரணியாக்ஷதனையும், நரசிங்காவதாரமெடுத்து இரணியகசிபனையும் எப்படிச் *சங்கரித்தனரோ அப்படியே அசுரர்களை யெல்லாஞ் சங்கரிக்கும் விஷயத்தில் முயற்சி யுடையவராய்ச் சங்கரிக்கப் போகின்றாராம். இதிற் சந்தேகமில்லை. ஆகையால் விஷ்ணுமூர்த்தியைச் செயிப்பதற்குரிய மந்திரசித்தி இப்பொழுது எனக்கில்லை. என்னால் ரக்ஷிக்கப்பட்டவர்களாகிய நீங்கள் தேவர்களைச் செயிக்கமாட்டீர்கள். சிலகாலம் பொறுத்திருங்கள். ஓ அசுரர்களே! நானிப்பொழுது மந்திரோபதேச நிமித்தம் மஹாதேவரிடத்திற்போய் உபதேசம் பெற்றுவருகிறேன் வந்தபின்னர் உங்களுக்கும் அதை உபதேசிக்கின்றேனென்றனர்.

அசுரர்கள் ஓ மகருஷியே! நீர் சிவனாரிடத்துப் போய்வருமளவும் அபஜயப்பட்டவர்களாயும், பலஹீனர்களாயு மிருக்கின்ற நாங்கள்

* சங்கரி - அழித்தல்

இப்பூமண்டலத்தி லிருப்பதற்குத் தைரியமுள்ளவர்களாவோமா! ஏனென்றால் எங்களுக்குள் பலமுள்ளவராயிருந்த அசுரர்களெல்லா மாண்டுபோயினர். இப்பொழு திருக்கின்றவர்களோ மிகவும் பலஹீனர்கள். ஒரு சமயம் அமரர்களெதிர்த்தால் இவர்களெதிர்ப்பதற்கு யோக்கியமானவர்களாவென்று கேட்டனர்.

(கூ-கசு) சுக்ரர் ஓ அசுரர்களே! நான் சங்கரரிடத்தில் மந்திரோபதேசம் பெற்றுச் சித்தியாய் வருமளவும் நீங்களனைவரும் சாந்தவிருத்தி யுடையவர்களாய்த் தவத்தைச் செய்து கொண்டிருங்கள். ஏனெனில் பண்டிதனாயும் ஞானவானாயும் வீரனாயு முள்ளவன் காலந் தேசந் படைத்துணை தன்சரீரசக்தி முதலியவற்றை யோசித்து அதற்குத் தக்கவாறான சமயோசித மறிந்து சாமபேத முதலியவற்றைச் செய்யவேண்டுமென்று பெரியோர் கூறியிருக்கின்றனர். அறிவாளிகளாகிய வீரர்கள் காலவசத்தால் மெலிவடைந்திருக்கும் பொழுது க்ஷேமத்தையடையவேண்டு மென்கிற வெண்ண முதிக்குமாயின் சத்துருவாயிருக்கிறவனுக்கும் பணிவிடை செய்யவேண்டியசமயத்தில் அதைச்செய்யவேண்டும் தனக்கு வலிவானது மேலிடுங்காலம்வரும்பொழுது அவனையே முன்பின் பாராது கொல்லவேண்டும். ஆகையால் நீங்கள் நன்மையான வார்த்தையோடு கபடமாகிய வினயத்துடன் நான் சொல்லியவாறு சமயத்தையறிந்து பகையாளிகளையெதிர்க்காமல் நான் எப்போது வருவேன்வருவே னென்று எதிர்ப்பார்த்துக் கொண்டு உங்களுடைய வாசஸ்தானத்தில் வாழ்ந்திருங்கள்.

ஓ அசுரர்களே! நான் சொல்லியது போல் நீங்க ளிருப்பீராயின் முன்சொல்லியதுபோல் தேவர்களை யுத்தத்திலேசெயிக்கும்படியான மந்திரசித்தியை நானடைந்து வருகிறேனென்று சொல்லி அவர்களை யனுப்பிவிட்டுத் தானெண்ணிய வெண்ணத்தில் நிலையுடையவராய் எண்ணியவாறெய்த மாதேவரிடத்திற சென்றனர்.

(கரு-உ0) அவர் சென்றபின்னர் அசுரர்கள் பிரகலாதனைப் பிராத்தித்து, நீர் தேவர்களிடத்திற் போகவேண்டும். தேவர்கள் உம்மை சத்தியவாதி என்றும் மனதில் யாதொரு களங்க மில்லாதவரென்றும் மதித்து உம்மிடத்தில் நம்பிக்கை யுடையவர்களா யிருக்கின்றாராகையால் நீ ரெதைச்சொன்னபோதிலும் நம்புவரென்று சொல்லிய விண்ணப்பத்தை யங்கீகரித்துச் சில அசுரர்களுடன் சுரர்களிடத்திற் போய் மிக வணக்கத்துடன் அவர்களைப் பார்த்துத் தலைவணக்கத் தோடுநின்று ஓ தேவர்களே! நாங்க ளனைவரும் இனி ஆயுதங்களை யெடுப்பதில்லை மரவுரி யெடுத்துத் தவஞ்செய்ய

உத்தேசித் திருக்கின்றோம். இதிற் சந்தேகமில்லை என்று சொல்லவுந் தேவர்கள் இவன் சொல்லுவ துண்மையே யென்று அவன் வார்த்தையை நம்பி யுத்தஞ் செய்யும் எண்ணத்தையும் அவர்களிடத்திற்கொண்ட குரோதத்தையும் விட்டுச் சந்தோஷ சித்தர்களாய்த் திரும்பினார்கள். சில காலஞ் சென்றபின்னர் அசுரர்கள் சொல்லியதுபோ லிருக்கின்றார்களா இல்லையா வென்று தேவர்கள் போய்ப் பார்க்க அவர்கள் சொல்லியது போல் தவத்திற்றலைப்பட்டிருத்தலைக்கண்டு மிகவும் நம்பிக்கை யுடையவர்களாய்த்தங்கள் தங்க ளிடம் போய்ச் சேர்ந்து சுகமாய்க் கிரீடித்துக் கொண்டிருந்தனர். அசுரர்கள் மகாடாம்பீகமாகத் தவவேடம்பூண்டு தவசிகளைப் போல் நியமத்திற் சிறந்தவராய்ச் சுக்ராசாரியருடையவரவை எண்ணிக்கொண்டு காசிபருடைய ஆச்சிரமத்தி லிருந்தனர்.

(உகஙு-உ) இவர்களிப்படி யிருக்கச் சுக்கிரர் கயிலாயத்தையடைந்து மகாதேவரை நமஸ்கரித்து நிற்க மகாதேவர் நீ யாதுகாரணமாய் வந்தனையென்று வினவினர். சுக்ரர் ஓ மகாதேவரே! தேவரீரிடத்தில் மந்திரோபதேசம் பெற விரும்பி வந்தேன். ஆனால் அம்மந்திரங்கள் சுரர்களுக் கபஜயமும் அசுரர்களுக்கு ஜயமும் விளைவிப்பதா யிருத்தல் வேண்டும். அன்றியும் தேவர்களுடைய பக்ஷமாயிருக்கின்ற பிரகஸ்பதியினிடத்தில் இதை மாற்றும்படியான மந்திரங்களில்லாதனவா யிருத்தல் வேண்டும்.

சர்வஞ்ஞரும் சங்கரருமான சிவபெருமான் சுக்ரனுடைய வார்த்தையைக் கேட்டு இந்தச்சுக்ரன் தேவர்களிடத்திற் துரோகபுத்தியும் அசுரர்களிடத்தில் க்ஷேமபுத்தியு முடையவனாய் வந்திருக்கிறான். ஆனால் அசுரர்களுக்குக் குருவாகையினால் அவனெண்ணியதுஞ் சரியே சரியாயிருந்தபோதிலும் தேவர்களுக்குத் துன்பம் விளைவிக்கவெண்ணுவது சரியன் றாகையால் இதற் கென்ன செய்வதென் றாலோசித்துப் பின்னர் நாம் தேவர்களுக்கு க்ஷேமஞ்செய்வதே நமது கடமையாமென்று திருவுளத்தில் நிச்சயித்துச் சுக்ரனைப் பார்த்து ஒருவராலும் செய்தற்குக் கூடாமையாகிய மிக அரிய விரதத்தைச் செய்தல் வேண்டும். என்னையெனின் ஆயிரவருஷந் தலைகீழும் கால்மேலுமாயிருந்து ஓமாக்கினியி லுண்டாகும் புகையை ஆகாரமாகச் சிறிது கொண்டு தவஞ்செய்து வரவேண்டும் வருவையேயாயின் உனக்குப் பரிபாகமுண்டாகும். அதன் பின்னர் மந்திரோபதேசம் பெறலாமென்று சொல்லவும் சுக்ரர் மகாதேவரை நமஸ்காரஞ் செய்து தேவரீர் ஆஞ்ஞையின் படி அந்த

விரதத்தைச் செய்கிறேன். அவ்வாணையை மறுக்கவல்லேனல்லே னென்று விண்ணப்பஞ்செய்து விடைபெற்றுத் தூமத்தையே ஆகாரமாகக் கொள்பவராயும், ராகத்துவேஷாதி குணவர்ஜிதராயும், என்ன இடையூறு வந்த போதிலும் சிவபெருமான் சொல்லியவண்ணம் செய்தே தீரவேண்டுமென்னும் நியதியுடையவராயும், அந்த உத்தமமாகிய விரதத்தைச் செய்து வந்தனர். சில காலஞ் சென்ற பின்னர் சுக்ரர் செய்யுந் தவத்தை தேவர்களறிந்து இதுவென்ன வாச்சரிய மென்றெண்ணி இவர் இது செய்வது அசுரர்கள் க்ஷேமார்த்தமேயன்றி வேறில்லை ஆகையினாற்றான் அசுரர்களெல்லாம் மகாதபசிகள் போல் பட்டங்கட்டிக்கொண்டு இவர்வரவை எதிர்பார்த் திருக்கிறதாகத் தெரியவருகிறது இதற்கு நாமென்னசெய்யலாமென் றாலோசித்துப் பின்னர் பல்லயமென்னும் ஆயுதத்தைத் தாங்கித் தவவேடம் பூண்டிருக்கிற அசுரரிடத்தில் யுத்தஞ்செய்யத்தலைப்பட்டனர். அசுரர்கள் தேவர்களெல்லாம் ஆயுதபாணிகளாய் நான்குபக்கமும் சூழ்ந்து வருதலைப்பார்த்து நாமென்செய்வோமென்று பயமுற்று யாவருமொருங்குகூடிச் செருக்கடைந்திருக்கிற தேவர்களைப்பார்த்து முன்னடைந்த செய்தியை அடியில்வருமாறு சொல்லத் தொடங்கினர்.

(ஙங-சு0) ஓ தேவர்களே! நாங்களனைவரும் இளைத்து உங்களைச்சரணாகதியடைந்தபோதும் நீங்க ளிரக்கமுடையவர்களா யுத்தஞ் செய்வதில்லையென்று அபயந்தந்து போனீர்களல்லவா? போன நீங்கள் இப்பொழுது ஆயுதபாணிகளா யுத்தஞ் செய்யவந்திருக்கிறீர்கள். இது தருமமாகுமா? நாங்களோ அப்பொழுது சொல்லியதுபோல் ஆயுதங்களைத் தொடாமலே தவத்தி லிருக்கின்றோம். எங்க ளாசிரியராகிய சுக்ரரும் ஏதோ ஒரு விரதத்தி லிருக்கிறார். ஓ தேவர்களே! உங்களுக்குச் சத்தியம் எங்கே போயிற்று அந்தோ! யுத்த தருமத்தில் நிராயுதபாணிகளா யிருக்கின்றவர்களையும், யுத்தஞ் செய்வதற் கஞ்சி யோடுகின்றவர் களையும், சரணாகதிய டைந்தவர்களையும் கொல்லக் கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நியாயத்தையும், தெரிந்து கொள்ளாம லிருக்கின்றீர்களே என்று சொல்லிய வார்த்தைகளைத் தேவர்கள் கேட்டு ஓ அசுரர்காள்! ஏன் பொய் வார்த்தை சொல்லு கின்றீர்கள் சுக்ரரை நீங்களெல்லோருங்கூடித் தானே இப்பொழுது செய்கிற விரதத்துக்கு அனுப்பி யிருக்கிறீர்கள். அவரும் எங்களுக்கு அபஜயமும் உங்களுக்கு ஜயமு முண்டாக்கத்தக்க மந்திர சித்தியைப் பெறுதற்குத்தானே போயிருக்கின்றார். இவ்வளவு வஞ்சச் செயலைமேற்கொண்டிருக்கிற நீங்களா தவத்திலிருப்பவர்? ஓ அசுரக் கூட்டங்களே! நீங்கள் செய்யுந் தவத்தை நாங்களறிவோம். இனி உங்களை விடுவதில்லை யுத்தஞ்

செய்தேதீருவோம் சத்துருக்களாகிய உங்களிடத்தில் நாங்கள் நீதியைப் பார்க்க வேண்டியதில்லை இது அநாதியாயுள்ள வழக்கந்தான். ஆகையால் ஓ அசுரர்களே! நீங்களும் ஆயுத பாணிகளா யுத்தஞ்செய்யச் சித்தமாய் வாருங்கள்.

என்று தேவர்கள் சொல்லியதை அசுரர்கள்கேட்டு ஒருவருக்கொருவர் ஆலோசனைசெய்து ஒன்றுந்தோன்றாமல் பயமடைந்தவர்களாய் நாமனைவரும் ஓடிப்போவதே நல்ல யோசனை யென்று பேசிக்கொண்டு ஓடிப்போய் தங்களாசிரியருடைய அன்னையைச் சரணஞ் சரணமென்று சரணாகதியடைந்தனர். அவ்வன்னையானவள் மிகவும் கஷ்டத்தையடைந்திருக்கிற அசுரர்களைப் பார்த்து ஓ அசுரர்களே! நீங்கள் பயப்படவேண்டாம் என்னுடைய முன்னிலையி லிருக்கின்றவர்களுக்கு யாதொருபயமும் வரமாட்டாதென்று அபயந்தந்து இனிப்பயத்தை விட்டுவிடுங்களென்று சொல்லினள். அந்த வார்த்தையை அசுரர்கள் கேட்டு அவ்வாச்சிரமத்தில் அவ்வம்மையின் முன்பாக நிராயுதபாணிகளாகவும் மனக்கலக்க மற்றவர்களாகவும், யாதொரு துன்பமு மில்லாதவர்களாகவு மிருந்தனர்.

(சுக-சுகூ) தேவர்கள் அசுரர்க ளோடிப்போவதைப் பார்த்து இவர்களெங்கே போகின்றார்கள் பார்ப்போமென்று அவர்களைப் பின்றொடர்ந்துபோய் அடைக்கலமென்று புகுந்த அந்த விடத்தினுடைய பலாபலத்தை யோசிக்காமல் இவர்களெந்த விடத்துக்குப் போனால்தா னென்னவென்று பலாத்காரமாய் அவ்வாச்சிரமத்துக்குள்ளே நுழைந்து அசுரர்களை யழைக்கத்தலைப்பட்டனர். அது கண்ட அவ்வம்மை ஓ தேவர்களே! அடைக்கலம் புகுந்த அசுரர்களைக் கொல்லவேண்டாம் கொல்லவேண்டாமென்று தடுக்கவும், அத்தடைக்குட்படாது மென்மேலும் அந்த அசுரர்களை யடித்துக்கொண்டேயிருந்தனர். அப்பொழுது அசுரர்கள் சகிக்காமல் அபயந்தந்த அம்மையைப்பார்த்து ஓ அம்மணி! அந்தோ! அந்தோ!! தேவர்களெங்களை யடித்துக் கொல்லுகின்றார்களே. நாங்களென்னசெய்வோம். எங்களுக் குன்னைவிட வேறுபுகலிடமில்லையே எங்களை ரக்ஷியென்று பரிதபித்துப் பிரார்த்திக்கின்றபொழுது அந்த அம்மை ஓ அசுரர்களே! நீங்கள் பயப்படாதீர்கள். நானிப்போது என்னுடைய தவத்தினால் நித்திராதேவியைப் பிரேரேபித்துத் தேவர்களை யெல்லாம் தூக்கத்தில் விழும்படிச் செய்கிறேனென்று சொல்லி உடனே நித்திராதேவியைத் தூண்டவும் அது இந்திரன் முதிலிய சகலதேவர்களிடத்திலுஞ் சென்றது செல்லவும், யாவரும் ஊமையாளரைப்போல் ஒருவார்த்தையு மின்றிமயக்கமுடையவராயினர்.

அப்பொழுது விஷ்ணுமூர்த்தி அங்குவந்து மயக்கமடைந்திருக்கும் இந்திரனைப் பார்த்து ஓ தேவராஜனே! நீ என்னிடம் வந்து சேருவையாயின் உன்னை நான் ரக்ஷிக்கிறே னென்று சொல்லவும் இந்திரன் ஒருவாறு மயக்கந்தெளிந்தவனாய் அவர் சொல்லியபடியே சமீபிக்க நித்திரை மயக்கமுஞ் சிறிது நீங்கப்பெற்றுப் பயமற்று அவரால் ரக்ஷிக்கப்பட்டனன். இவ்வண்ண மிருக்கின்ற இந்திரனை அசுரரக்ஷகியாயிருக்கின்ற அம்மைபார்த்து ஓ இந்திரா! இவ்விடத்திற்சூழ்ந்திருக்கும் தேவர்களெல்லாம் நித்திரையின் மயக்கத்தால் மயங்கிக்கிடந்தனர்; அவர்களெல்லாம் இப்பொழுது சிறிது இறுமாப்படைந் திருப்பதாகத் தெரியவருகிறது ஆகையால் உன்னோடு அவர்களையும் இந்த விஷ்ணுவையும் என்னுடைய தபோபலத்தால் விழுங்கி விடுகிறேன் என்னுடைய தபோபலத்தை இந்த தேவகூட்டத்திற் பார்ப்பாயாக. அதனாலேயே எனக்கும் இந்த விஷ்ணுவுக்குமுள்ள வலிமையும் என்னொருத்தியினுடைய தவவலிமையும் நன்றாயறிந்து கொள்வாயென்று சொல்லி முன்தேவர்கள் மேற் பிரயோகித்த நித்திராதேவியை விஷ்ணுவின் மேலும் இந்திரன் மேலு மேவினள். உடனே அவ்விருவரும் சக்தியற்றவர்களாய் அறிவுமயங்கிக் கம்பம்போல் அசைவற்று நின்றனர்.

(ருO-ருஎ) அப்பொழுது தேவர்களெல்லாமயங்கித் துன்பத்தோடிருக்கிற இந்திரனையும் விஷ்ணுவையும் பார்த்து உற்சாக மற்றவர்களாய் ஆஹா ஓஹோ! வென்று கூச்சலிட்டனர். அவரிடுங் கூச்சலை இந்திரன் சிறிதுணர்ந்தவனாய் விஷ்ணுவை நோக்கி ஓமது சூதனா! உம்மைப்பார்க்கினும் நான் பாதை யடைகின்றே னாதலால் இப்பொழுது நம்மைப் பாதைப்படுத்துகின்றவளா யிருக்கின்ற இவள் இனி நம்மைச் சுட்டெரிப்பதற்கு முன் இந்தத் துஷ்டையைச் சங்கரித்துவிடும் அவளைச் சங்கரிக்கினற விஷயத்தில் ஸ்திரீ அத்தி வருமென்றாவது மாமியாயிற்றே யென்றாவது யோசனை செய்ய வேண்டாம். வருத்தப்படுகின்ற என்னைப் பாருமென்று இந்திரன் சொல்லவும் விஷ்ணுமூர்த்தி நீதியைமறந்து தயாள குணத்தையு மொழித்துத் தன்னுடைய சக்கரத்தை நினைத்தனர். உடனே அச்சக்கராயுதமானது அவர்கையில்வந்து தங்கியது. அதனை இந்திரன் பார்த்து ஓ ஸ்வாமி! இதோ வந்து விட்டதே ஏன் சும்மாவிருக்கிறீர் என்று தூண்ட அந்த க்ஷணமே கோபமேவிட்டுச் சக்ராயுதத்தினால் அந்த அம்மையினுடைய சிரத்தைச் சேதம்பண்ணினார். அதைக்கண்ட இந்திரனும் தேவர்களும் துன்பமொழிந்தவர்களாய் ஆனந்தத்தோடு ஜய ஜய வென்று விஷ்ணுவைக் கொண்டாடினார்கள். பின்னர் அந்த விஷ்ணுவும் இந்திரனும் நாம்ருஷிபத்னியைக்

கொன்றோமே அவரிதனை யறிவராயின் அவர் சாபமிடுவரே இட்டாராயின் நம்மால் மாற்ற முடியாதே யென்று சங்கையுடையவ ராயினரென்று வியாசர் ஜனமேஜயனுக்குக் கூறினாரென்று சூதபகவான் சௌநகாதியர்கட்கு கூறினர்.

¯ னோறாம் அத்தியாயம்

ஹரயே பிருகுகிருத சாபகாரணம் முற்றிற்று.

ஆஉ அத்தியாயம் கக-க்குச் சுலோகம். (ருகூ0ஏ)

உ

திரிபுரசுந்தர்யை நம:

பன்னிரண்டாம் அத்தியாயம்

சுக்ரம்பிரதி ஜயந்தி பிரஸ்தானம்

சூதபகவான் மகருஷிகளுக்கு! விஷ்ணு மூர்த்திக்குப் பின் னேர்ந்ததையும், ஏனையவற்றையும் அரசனுக்கு வியாசமுனிவர் கூறியவா றுரைக்கின்றேனென்று சொல்லத் தொடங்கினர்.

(க-அ) வியாசமுநிவர் அரசனைப்பார்த்து ஓ அரசனே பிருகு முனிவர் பிருகு தனது பத்னிசக்கராயுதத்தால் சேதிக்கப்பட்டு வீழ்ந்திருப்பதைப் பார்த்து கோரமாய் அடியில் வருமாறு சொல்லுகின்றனர். ஓ விஷ்ணுவே! நீ மகாபுத்திமானாயுள்ளவன் இது நீக்கத்தக்க பாவம் இது நீக்கக்கூடாதபாவமென்பனவற்றை யறியத்தக்கவன் அப்படிப்பட்ட நீ இந்த அகிருத்தியத்தைச் செய்தாயல்லா? பிரமணஸ்திரீயினுடைய ஹத்தியானது மனதிலெண்ணுவதற்கும் யோக்கியமல்லவே ஸ்திரீயத்தி செய்யுங்குணமுடைய உன்னை சாத்வீ கருணமுடையவனென்றும், பிரமனை ராஜஸகுணமுடையவனென்றும், ருத்திரரைத் தாமசகுணமுடையவ வென்றுஞ் சொல்லுகின்றனரே! அது என்ன விபரீதமோ தெரியவில்லை. இப்பொழுது நீ மிகவும் நீசமாகிய தொழிலைச் செய்கின்றவனா யிருக்கிறபொழுது உன்னைத் தாமசகுண முடையவனென்று ஏன் சொல்லக்கூடாது? இது நிற்க உனக்கொரு

* சுக்ரரிடத்தில் ஜயந்தி என்பவளை அனுப்புதல்

குற்றமுஞ் செய்யாதவளாயும், உன்னால் தண்டிக்கத்தகாதவளாயு முள்ள இவளை நீ எந்த ஞாயத்தினாற் கொன்றனை? துராசாரமுடையவனே! உன்னைச் சபிக்கிறேன். இதுவன்றி உன்னை யான் என்னசெய்யப் போகிறேன். ஓ பாபிஷ்டனே! இந்திரன்பொருட்டு இவளைக் கொன்று என்னைப் பத்தினி ஹீனனாக்கினை? இதற்கு இந்திரன் காரணமென்று அவனைச் சபிக்கமாட்டேன் உன்னை யேசபிக்கிறேன் ஓ விஷ்ணுவே? நீ எப்பொழுதும் ஜனன மரணத்தோடு கூடினவனாய் இழிவான யோனிகளிற் கட்டுண்டிருந்து பிறந்து பிறந்து இறந்து இறந்து இப்பொழுது செய்த துஷ்ட செய்கையையே எப்பொழுதுஞ் செய்துவருவாய். இனி எந்த முநிவராவது உன்னைச் சத்வகுணமுள்ளவ னென்றுசொல்வாராயின் அவர்கள் முழுமூடராகக்கடவர். தீயநடக்கையுள்ளவனாகிய நீ எப்பொழுதும் தாமசகுண முடையவனாய்த் தாமசத்தொழிலையே செய்துவருவாயென்று சபித்தனர்.

ஓ ஜனார்த்தனா! உன்னைத் தாமசனென்று நான் சொல்லியது இப்பொழுது நேரிட்ட கோபத்தினாற் சொன்னதன்று உன்னிடத்தில் உண்மையிலுள்ள குணமுமதுவே. ஓ விஷ்ணுவே! என்னுடைய சாபத்தினா லுனக்குண்டாகப்போகிற சன்மங்க ளெல்லாம் மண்ணுலகத்தாரெல்லாமறிய பூலோகத்திலேயே உண்டாகக்கடவது. அந்த ஜன்மங்கள் வேறொரு விதங்களால் வருவதன்று ஒவ்வொரு சென்மமும் மலமூத்திர சம்பந்தமாயிருக்கின்ற கர்ப்பவா சத்தினின்றே வரவேண்டியது என்றனர்.

ஓ அரசனே! பிருகு முநிவருடைய இல்லறதருமத்தை விஷ்ணுமூர்த்தி கெடுத்தனராகையால் அவர் மாநுடயோனி முதலிய யோனிகளிற் பிறக்கும்படியாய் வந்தது. ஆனால் ஒவ்வொரு பிறப்பும் உலகத்துக்கு உபகாரார்த்தமாக முடிந்தன வென்று சொல்லவும் அரசன் ஓ வியாசமுநிவரே! விஷ்ணுவினுடைய பிரகாசமாகிய சக்கரத்தினால் அந்த அம்மணி யிறந்துபோன பின்னர் அந்தப் பிருகுருஷி எப்படி கிருகஸ்தராயினர். அதனை சொல்லவேண்டுமென்று கேட்க வியாசர் ஓ அரசனே! பிருகு முநிவ ரிவ்வண்ணஞ் சபித்தபின்னர் மனைவியை யெழுப்பும் வகையைச் சிந்தித்து வெட்டுண்டதலையை எடுத்துவந்து சரீரத்திலொன்றாகச்சேர்த்து ஓ பெண்ணே! நானிதுவரையில் அநுட்டித்துவந்த தருமங்களை விதிவத்தாகவும், அவை பரமேஸ்வரருக்கு ஒப்பாகவுமிருக்கும் பக்ஷத்தில் விஷ்ணுவினால் கொல்லப்பட்டிருக்கிற நீ எழுந்திருக்கலாம். "பரமேஸ்வரனுக்குப் பிரீதியாகவிருக்குமானால்" என்று சொல்லியது சத்தியமானால் அந்த ஒரு சத்தியத்தினாலேயே நீ சீவப்பிரவேசமுடையவளாகலாம். சத்தியம்,

ஒழுக்கம், வேதாத்தியயனம், தவவீரியம் என்று சொல்லப்பட்ட இந்த வலிமைகள் என்னிடத்தில் உண்மையாயிருக்குமானால் யான் புரோக்ஷணஞ்செய்யும் இந்த தீர்த்தத்தினால் நீ பிழைத் தெழுந்திருப்பாய் என்னுடைய சைவத்தின் பெருமையைப் பசுத்தவமுடைய தேவரெல்லாம் பார்க்கட்டுமென்று தீர்த்தத்தால் புரோக்ஷித்தவுடன் உயிர்பெற்று மிகவும் சந்தோஷசித்த முடையவளாயும் புன்னகையோடுங் கூடினவளாயுமெழுந்திருந்து உறங்கியிருந்து பின்னுறக்கநீங்கி எழுந்திருந்து வருகின்றவனைப் போல வருகின்ற அத்தேவியை நான்கு புறத்துஞ் சூழ்ந்திருக்கின்ற தேவர்களெல்லாம் பார்த்து இது அற்புதம்! அற்புதம்!! என்று பிருகுமுநிவரையும் அவர் மனைவியையும் புகழ்ந்து கொண்டாடினர்.

(கஎ-ஙரு) பின்னர் இந்திரனும் தேவர்களும் இதுவென்ன வாச்சரியமென்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டு மீண்டும் இந்திரன் தேவர்களைப்பார்த்து ஓ தேவர்களே! இந்த வீர பதிவிரதை இம்முநிவருடைய தபோபலத்தினா வெழுந்தனள். இது நல்லதேயாயினும் மந்திரவேத்தாவாகிய சுக்ரர் கோரமாகிய தவத்தை முடித்துக்கொண்டு இவ்விடம் வருவாராயின் நாம் செய்த இந்த அனியாயம் தெரியுமல்லவா? தெரிந்தால் அவரென்ன செய்வாரோ அறியோம். முன் இந்த அம்மையால் பிரேரேபிக்கப்பட்ட துன்பத்தையடைந்தோம் அதுபோயிற்று இப்பொழுது சரீரவேதனையற்று அரோகிகளாயிருக்கின்றோம். இனிவரப்போகிற சுக்ரனால் என்ன துன்பமடைய விருக்கின்றதோ அறியோம். அவரோ இப்பொழுது மந்திரசித்தியின் பொருட்டு அதி கோரமான தவத்தைச் செய்கின்றார். மந்திரசித்திபெறுங் காரணமும் நாமறிந்திருக்கிறோம். இனி என்னசெய்யலாமென்று ஆலோசித்து யவ்வன வதியாய்ப் புன்னகையோடு கூடியிருக்கின்ற ஜயந்தி என்னுந் தன்மகளைப் பார்த்து ஓ சுந்தரீ! உன்னை நான் சுக்ரருக்குத் தத்தஞ்செய்துவிட்டேன் நீ அவரிருக்குமிடம்போய்ச் சேர்ந்து அவருக்குரிமையாகிய பணிகளைச் செய்து எனக்கு அவர் சுவாதீன ராகும்விதத்தைச் செய்வாய் நான் உனக்குச் செய்யும் உபகாரம் அவரை உனக்குப் பர்த்தாவாக்கியதுதான். அதற்கு நீசெய்யும் உபகாரம் அவரை எனக்குச் சுவாதீனப்படுத்துவது தான். ஓ பெண்ணே! இன்னமுஞ் சொல்லுகிறேன் கேள். நீ அவருடைய ஆச்சிரமத்துக்குப் போய் அவருடைய மனதுக்குப் பிரியமாயும் அவர்செய்யுந் தவத்துக்குரிமையாகியு முள்ள உபசாரங்களைச் சமயமறிந்து ஆலோசனையோடு செய்து சீக்கிரத்தில் நானடைந்திருக்கிறபயத்தை நிவர்த்தி செய்வா யென்றனா். இந்திரன் மகளாகிய சயந்தி தந்தையின் வார்த்தையைக் கேட்டு

அவனாணையைக் கடவாது சுக்ரரிடத்திற்போய் அவராச்சிரமத்திலிருந்து அவர் தூமத்தை ஆகாரஞ்செய்துகொண்டு தபோமயமாயிருப்பதைப்பார்த்து இவ்வரிய தவத்திலிருக்கும் சுக்ரருக்குத் தந்தைசொல்லியபடி செய்வதற்கு என்னகாரணமிருக்கின்றது ஆயினும் நாம்வந்துவிட்டோமாகையால் வந்தகாரியத்தை முடித்துத் தீரவேண்டுமென்றெண்ணி அவரது மெலிந்திருக்குஞ் சரீரத்துக்கேற்பவாழைக்குருத்தைக் கொண்டு வந்து விசிறினாள். மிகுந்தபக்தியுடன் தாகசாந்தியின்பொருட்டு குளிர்ச்சியாயும் வாசனையாயும் தெளிவாயுமுள்ள தீர்த்தத்தைக் கொண்டு வந்து எடுப்பதற்கு லேசாயுள்ளபாத்திரத்தில் வைத்தும், உச்சிப்போது வந்தகாலத்தில் பர்ணசாலைசிதலப்பட்டு சூரியகிரணம் மேலே படுவதைப்பார்த்துக் கிரணங்களை ஓர் வஸ்திரங்கொண்டு மறைத்து நிழலைச்செய்தும், அவருக்கு ஆகாரநிமித்தம் அற்புதமாயும், புசிப்பதற்குச் சுகமானதாயும், இனிப்புள்ளதாயும், பசிக்கு யோக்கியமானதாயு மிருக்கின்ற பழவகைகளைக் கொண்டுவந்து எதிரில்வைத்தும், அதன்பின்னர் ஹரித் வர்னமாயும், (சீகராம்பொடி) கிளிவர்னமாயுமிருக்கின்ற தர்ப்பைகளைப் பவித்ரத்திற்கும் சங்கற்பத்திற்கும் ஓமாக்கினிக்கு நாற்பக்கத்திலுமிடும் பரிஸ்தரண முதலானவைகட்கும் விதித்திருக்கும் அளவாகச்செய்து அதனோடு நல்லமலர்களை எதிரில் வைத்தும், பின்னர் மேன்மேலுண்டாகும் அன்பினால் அவருக்குச் சயனநிமித்தம் இளந்தளிர்களைப் பரப்பிய ஓர் படுக்கையைச்செய்தமைத்தும், இவையெல்லாம் அமைத்தபின்னர் முன்போல் விசிறி இளைப்பாற்றியும் இவ்வாறு தான்செய்யும் பணிவிடை தருமத்திற் றவறாதிருந்தனளேயன்றி காமவிகாரத்திற் கேதுவாகிய அபிநயமுதலியவற்றைச் செய்தாளல்லள். அது தவத்துக்கு விரோதமாய்ச் சுக்ரருடைய சாபத்துக்கிடஞ் செய்யுமாகலின் அச்சாபத்துக்கஞ்சி அவை யொன்றுஞ் செய்யாமல் அவர் தவத்துக்கு விரோதமில்லாமலும் தன்னிடம் பிரியம் வருவதற்கேதுவாயுமிருக்கிற நல்ல சுகசனிதமாகிய தோத்திரங்களைச் செய்துவருவாள். அப்பொழுது அந்தச்சுக்ரர் யோக சமாதியினின்று சாக்கிரத்துக்கு வருவார். அக்குறிப்பறிந்து ஆசமனபாத்திரத்தில் தீர்த்தத்தைக் காட்டுவாள். இந்தப்படி அவருடைய மனதுக்கிதமாக எப்பொழுதுங் கோபமற்றவளாயும் அஸ்ரத்தை யில்லாதவளாயும் வைதிகாசாரத்திலேயே வூசையுள்ளவளாயும் அநேககாலம் பணிவிடைசெய்து வந்தனள்.

(நசு-சுஉ) சமர்த்தனாகிய இந்திரனும் ஜிதேந்திரியராகிய அந்தச் சுக்ரருடைய மனோபாவத்தையறியவேண்டுமென்கிற இச்சையுடை

யவனாய்த் தூதர்களையடிக்கடி யனுப்பிக்கொண்டே யிருந்தனன். ஆனந்த பரமாத்மாவாகிய சிவபெருமானார் சொல்லியவாறு ஆயிரவருஷம் பூர்த்தியாகின்ற சமயத்தில் சந்தோஷமடைந்தவராய் அந்தச் சுக்ரருக்குப் பிரத்தியக்ஷமாய் ஓ பிருகு நந்தனா! எப்பொழுதும் யாருக்குஞ் சொல்லத் தகாத தாகிய மந்திர சமூகங்கள் எவ்வள விருக்கின்றனவோ அவ்வளவையும் ஒருங்கே யறிதலாகிய முற்றுமுணர்தற்றன்மையை நீயடைவாய். எவராலும் எவையாலும்கொல்லப்படமாட்டாய். பிராமணசிரேஷ்டனாய்ப் பிரமனுநிகுச்சமானனாயிருப்பாய். இவைகளுனக்குண்டாகு மென்பதிற் சந்தேகமில்லையென்றனுக்கிரகஞ்செய்து அவ்விடத்திற்றானே மறைந்தருளினர். அதன் பின்னர் சுக்ரர் இந்திரன் புத்திரியாகிய ஜயந்தியைப்பார்த்து அடியில் வருமாறு வார்த்தை சொல்லத் தொடங்கினர். ஓ சுந்தரவதியே! நீ யாருடைய மகள்? யாது காரணமா யிவ்விடம் வந்தனை? உன்னெண்ணமென்ன? அதனைச் சொல்? நீ வந்த காரியத்தையுந் தெரிவிப்பாய்? ஓ அழகிய கண்களையுடையவளே! நீ எதை அபேக்ஷிக்கின்றனையோ அது நடத்துவதற்குக் கூடாமையாயிருந்தபோதிலும் நானிப்பொழுதே நடத்துவிக்கிறேன். எனக்குரிய பணிவிடைசெய்வதில் மிகுந்த சிரத்தையுடையவளே! உன் விஷயத்தில் நான் சந்தோஷத்தை யடைந்தவனாயிருக்கின்றவனாகையால் உனக்கு வேண்டியவரத்தைக் கேட்பாயாக வென்று கேட்டபோது அந்த ஜயந்தியானவள் முகமலர்ச்சியுடையவளாய் ஓ பகவானே! என்ன பிப்பிராயத்தை உம்முடைய தபோபலத்தினால் நன்றாயறிந்து கொள்ளலா மென்றாள். சுக்ரர் நீ சொல்லியபடிநானே யறிந்துகொண்டேன்; ஆயினும் நீயே வாய்விட்டுச் சொல்லவேண்டும் எனக்கு நீ அருமையான பணிவிடையைச் செய்திருக்கின்றாயாகையால் உன்னிடத்தில் நான் கொண்டிருக்கும் பிரியத்துக்களவில்லை உனக்கு மங்களத்தையே செய்கிறேனென்றனர்.

(சுங-ருகூ) அதற்கு ஜயந்தியானவள் ஓ பிராமணரே! நான்தே வேந்திரன் மகள். என்னை உமக்கு அவர் தத்தஞ்செய்துவிட்டனர். என்பெயர் ஜயந்தி, ஜயந்தனுக்கு நான் தங்கை, ஓபிரபுவே! நான் உம்மிடத்தில் காமவிகாரத்தை யடைந்தவளாயிருக்கிறேன் ஆகையால் என்னபிப்பிராயத்தை நீர் நடத்தவேண்டும். ஓமஹா நுபாவரே! பதிவிரதாதர்மப்படி நானும் உம்மிடத்தில் பிரீதியுடையவளாய் ரமித்திருக்கிறே னென்றனள். சுக்ரர் அவள் சொல்லிவந்ததைக் கேட்டு ஓ நங்காய்! நீ இதுமுதல் பத்துவருடகாலம் ஒருவர்கண்ணுக்கும் புலப்படாமல் என்னுடைய கிரீடா விலாசமா யிருவென்று சொல்லி

அந்த ஜயந்தியினுடைய கரத்தைப் பிடித்துக் கொள்ளலாகிய பாணிக்கிரகணஞ்செய்து தம்முடைய பூர்வஸ்தானத்துக்குப் போய்ப் பத்துவருஷகாலம் தம்முடையமாயையினால் சகலப்பிராணிகளுக்குந் தெரியாமல் கிரீடித்துக் கொண்டிருந்தனர். அசுரர்கள் தங்களாசிரியர் சர்வமந்திரங்களையும் அறிந்தவராயும், அறிந்தவண்ணம் அவைகளை ஆளத்தக்கசித்தியுடையவராயு மிருக்கப் பெற்றுத் தம்முடைய ஆச்சிரமத்தை யடைந்திருப்பதைக் கேள்விப்பட்டு அவரைத் தரிசிக்க வேண்டுமென்கிற வெண்ணமுடையவர்களாய்ச் சந்தோஷத்தோடுங் கூடி அவருடைய ஆச்சிரமத்துக்கு வந்து அவரைத்தேடிப் பார்க்க ஜயந்தியுடன் கிரீடித்துக்கொண்டிருக்கிற அவர் இவர்கள் கண்ணுக்குக் காணப்படவில்லை. காணப்படாமற்போகவும் அசுரர்கள் மனக்கலக்கமடைந்து சிந்தாகுலப்பட்டுத் தீனபாவமுற்று அடிக்கடி மருண்டுமருண்டு மயங்கி எந்தக்காரியஞ்செய்வதற்கும் யோசனையற்றவர்களாய்ச் சத்துருபயத்தை மேற்கொண்டு பலபலவாகச் சிந்தனை செய்து ஒன்றுந்தோன்றாமல் தங்கள் தங்கள் கிருகங்களுக்குப் போய்விட்டனர். இந்திரனோ தன்மகளுடன் சுக்கிரன் ரமணீயமாய் ரமித்துக் கொண்டிருப்பதையறிந்து கொண்டு தனது குருவாகிய பிரகஸ்பதியினிடஞ்சென்று நடந்தசெய்திகளைத் தெரிவித்து இனி என்ன செய்யலாமென்று கேட்டனன். இவனுடைய கேள்விக்கு அவர்விடை கூறுவதற்குமுன் ஓ ஆசிரியரே! தேவரீர் இப்பொழுது அசுரரிடத்திற்சென்று அவர்களெல்லாம் உம்முடைய சொல்லின்வழி நிற்க ஓர் கபடஞ்செய்து ஏமாற்றல்வேண்டும். இதுவன்றி அவ்விஷயத்தில் தேவரீருக்கு எதுசொய்தால் காரியசாதகமாகுமென்று தோன்றுகிறதோ அந்தச்சாதகமானகாரியத்தை எங்களுக்குச் செய்யுமென்று சொல்லியதைத் தேவகுருவானவர்கேட்டு அசுரகுரு ஒருவர்கண்ணுக்குந்தோன்றாமல் ஜயந்திபால் ரமித்திருப்பதையறிந்து அவருருவத்தைத்தானெடுத்து அசுரரிடஞ்சென்று அவர்களுடைய காரியசித்தியாய்விட்டதென்று காட்டும் அபிநயபாவமாகிய பிரியத்துடனழைக்க அவ்வசுரர் ஆசிரியர் வந்து விட்டார் வந்து விட்டாரென்று யாவரும் ஒருங்குகூடிச் சமீபத்தில் வந்து தங்களுடைய ஆசிரியருக்கு எவ்வண்ணம் உபசரிக்கின்ற வழக்கமோ அவ்வண்ணமே அர்க்கியபாத்தியஆசமனாதி உபசாரங்கள்செய்து சுக்ரராகவேண்டுகளித்துத் தரிசித்துச் சுக்ரரல்லரென்கிற ஞானஞ் சிறிதுமில்லாமல் இவரே சுக்கிரரென்கிற ஞானத்தோடுங்கூடி முழுமோசம் போனவர்களாய் நமஸ்கரித்து எழுந்து கைகூப்பி நின்றனரேயன்றி அவருள் ஒருவனாவது அவர் கபடத்தை யறிந்தவனல்லன். மறைப்பைச் செய்கின்றமாயையினால் சுக்ர

வடிவங்கொண்டுவந்த குருவானவர் அசுரர்களை நோக்கி ஓ அசுரர்காள்! உங்களுடைய க்ஷேமத்தின் பொருட்டு வந்துவிட்டேன் நம்முடைய சீடர்களெல்லாம் க்ஷேமந்தானாவென்று வினவி ஓ அசுரர்களே! உங்களுடைய க்ஷேமத்தின் பொருட்டு நான் செய்ததவத்தினால் சம்புவானவர் சந்தோஷித்துப் பிரசன்னமாயினர். நான் அவரால் மாயையற்ற மந்திரத்தை உபதேசிக்கப் பெற்றேன். அதனை உங்களுக்குபதேசிக்கிறேனென்றனர். அந்த அசுரர்களுக்குள் சிறந்தவரா யிருக்கின்றவர்கள் அவருடையவார்த்தையைக் கேட்டு மனக்களிப்படைந்து நமது ஆசிரியர் கிருதகிருத்தியராயின ரென்று சந்தோஷித்து இனி நமக்குப்பயமேது மனக்கவலையேது சல்லிய மேது தேவர்களுடைய துன்பமேது யாவும்விட்டதென்று மகிழ்ந்து சந்துஷ்டர்களாய் நமஸ்கரித்தனரென்று சூதபகவான் சவுனகாதியருக்குக் கூறினார்.

பன்னிரண்டாம் அத்தியாயம்

சுக்ரம்ப்ரதி ஜயந்தீ ப்ரஸ்தானம் முற்றிற்று.

ஆஉ அத்தியாயம் கஉ-க்குச்சுலோகம் (காசுகூஏ.)

உ

திரிபுரசுந்தர்யை நம:

பதின்மூன்றாம் அத்தியாயம்

* குருக்ருதாசுரப்ரலோபனம்.

ஓமஹருஷிகாள்! இனி பிரகஸ்பதி அசுரர்களை வஞ்சித்தவிநோதத்தை வியாசபகவான் அரசனுக்குக் கூறியவாறு சொல்லுகிறேன் கேளுங்கள்.

(க-கசு) ஜனமேஜயன் வியாசரைநோக்கி புத்திமானாகிய பிரகஸ்பதி சுக்கிரரூபத்தைத்தாங்கி அசுரர்களிடத்தில் கபடகுருவாய் வந்து ஆசீர்வதித்த பின்னர் என்செய்தார்? ஐயா தேவகுருவானவர் சகலபிரமவித்தைக்கும் நிதியாயுள்ளவர். முனி ஸ்ரேஷ்டராகிய ஆங்கீரசருடைய புத்திரர். இவர் எவ்வண்ணங் கபடஞ்செய்யத் தொடங்கினார்; சகல தர்மசாஸ்திரங்களிலும் தருமத்துக்கு மூலம்

* குருவினாலே செய்யப்பட்ட யோகத்தால் அசுரர் அவர் வசப்படுதல்.

சத்தியமேயென்று பெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தச் சத்தியத்தினாற்றான் பரமாத்மாவாகிய பரமசிவனும் பிரத்யக்ஷமாகின்றனர். அங்ஙனமிருக்க வாக்பதியாகிய தேவகுருவே அசுரர்களைக்குறித்துப் பொய்சொல்லவந்தாரானால் உலகின் கண் சமம்சாரத்திலிருக்கின்ற எவன்றான் சத்தியசந்தனா யிருக்கப் போகிறான். உலக வைபவத்தில் ஆகாரத்தைக்காட்டிலும் அதிகமான சுகம் வேறொன்றில்லை அந்த ஆகாரத்தை வெறுப்பவர் முனிவர்கள். அங்ஙனமிருக்க முனிவர்கள் அப்படி பொய்யொழுக்கத்தில் பிரவர்த்திக்கத்துணிவார்கள். துணியார்! ஆகவே இவர் எந்தச் சுகத்தை விரும்பிப் பொய் சொல்லத் துணிந்தனர்? இவர் இவ்வாறு கபடமான வார்த்தையைச் சொல்வாராயின் பொய்சொல்லாமை முதலிய ஒழுக்கத்தினின்றுந் தவராத சிஷ்டாசாரத்தினின்றுந் தவறினவராகவே முடிவரல்லவா! இவருக்கு வேறு விசேடமான பாவங்க ளுண்டாகமற் போனாலும் சொல்லுஞ் சொல்லளவுக்கேற்ற தோஷமுண்டாகு மல்லவா! அது வேயுமன்றி இந்தக் கபடமார்க்கத்திற் பிரவேசித்ததனால் அவருக்கதுவரையி லுண்டாயிருந்த புகழுரையெல்லாப் பிரயோசன மற்றதா யொழிந்துபோமல்லவா? உற்பத்திகாலத்தில் தேவர்கள் சத்வகுணத்திற் றோன்றினவர்களென்றும், மாநுடர் ராஜசகுணத்திற் றோன்றினவர்களென்றும், திரியக்குகள் தாமசகுணத்திற் றோன் றினவைகளென்றும் பெரியோர் கூறுகின்றனர். ஆகவே சத்வகுணப் பிரதானரென்று ஏற்பட்ட தேவர்களுக்கு இவர் சாக்ஷாத் குருவாயுள்ளவர். ஆகவே இவர் எவ்வளவு சாத்வீகப் பிரதானராயிருத்தல் வேண்டும். அங்ஙனமிருக்க இவர் தாமே பொய்சொல்லத் துணிந்தனரேயானால் ரஜோகுண தமோகுண சம்பந்தமாயுள்ள சீவர்களுக்குள் எவன்றான் பொய்சொல்லாதவனாக விருப்பான். இவர் இப்படி நடந்ததற்கு என்ன சமாதான மிருக்கின்றது. இது விஷயத்தில் சந்தேகமே; மூன்றுலகத்திலுமுள்ள விஷ்ணு மூர்த்தி, பிரமன், இந்திரன், அக்னி, சந்திரன் முதலிய தேவர்களுடைய சரித்திரங்களையுங், வசிஷ்டர், வாமதேவர், விஸ்வாமித்திரர், இந்தப் பிரகஸ்பதி முதலிய தபசிகளாகிய முநிவர்களுடைய சரித்திரங்களையும் விசாரிக்குங்கால் காமக் குரோதாதிகளுக்கு வசப்பட்டு அவாமீக்கொண்டு வேறுபட்ட அறிவுடையவராய்ப் பிறரால் காணக்கூடாத கபடத்தொழிலில் சாமர்த்தியம் வகித்துப் பிறர்மனை விரும்புதல், பொய்மைகூறுதல் முதலிய கூடாவொழுக்கத்திற் றலைப்பட் டுழன்றவர்களாகவே தெரிய வருகின்றன. இவர்களெல்லாம் இவ்வா றிருப்பாராயின் ஒழுக்கத்தினின்றும் இழுக்காத நன்னடக்கையை யாரிடத்திற் காண்பது! இனி மானுடர்களுக்குள்

இவன் பொய்மையுடையவன் அஃதில்லாதவன். இவன் பிறன்மனையாளை விரும்புந் தீயகுணமுடையவன் அஃதில்லாதவன் என்று யாரை யாராய்வது? இவர்களுக்கெல்லாம் என்னகதி யுண்டாகும், இனி யாருடையவாக்கை உபதேசமாகக் கொள்வது என்றான்.

(கரு-ஙO) ஓ அரசனே! விஷ்ணுவாயிருந்தாலென் பிரமனாயிருந்தாலென் இந்திரனாயிருந்தாலென் எப்பொழுது தேகதாரிகளா யிருக்கின்றார்களோ அப்பொழுதே குணவிகார முடையவரா யிருத்தற்குச் சந்தேகமென்ன? விஷ்ணுமுதலாகச் சொல்லப்பட்ட இவர்களெல்லாம் ஆசையுடையவர்களாகவே இருந்தபோதிலும் தங்களுடைய உபாசகர்களுக்கு உபாசியர்களா யிருந்து வேண்டியாங்கருள் செய்வதாகிய சாமர்த்திய விசேஷத்தால் விதேகியாகிய பரமாத்மாவைப்போல் தோற்றப் படுகின்றனரேயன்றி அவர்கட்குச் சங்கடங்கள் வருகின்றகாலத்தில் குணங்களால் அவர்கள் பாதைப்படாம லிருக்கத்தக்கவரல்லர். ஏனென்றால் அவர்களுக் கெல்லாம் பிரகிருதி சம்பந்தமாகிய குணங்கள் காரணமாயிருப்பதால் அவைகளின் காரியமாகிய உபாதிவசத்தராகவே யிருக்கத்தக்கவராவர் அவர்கட்குச் சரீரமும் இருபத்துநான்கு தத்துவ சமூகங்களேயாகும். அவர்கள் வேறுவிதமான சுத்தமாயா காரியமாகிய சரீர முடையவரல்லர் அவர்களெல்லாம் எப்பொழுது பிரகிருதி சம்பந்தமான சரீர முடையவர்களாயினரோ அப்பொழுதே காலத்துக்கீடாய் மரணத்தை யடையத்தக்கவர்களே யாவர்.

ஆனால் பிறருக்குத் தத்துவார்த்தத்தை யெடுத்துச் சொல்லுகின்றார்களே என்றால் சொல்லுகிற ☆ பக்ஷத்தில் நன்றாய்ச் சொல்லத்தக்கவர்களே. தங்களுக்குரிய காரியங்கள் எதிர்ப்படுகின்ற பொழுது அதற்குரியகுணவிகாரங்கள் அப்பொழுதப்பொழுது வெளிப்பட்டுக்கொண்டிருக்குமேயன்றி அவை வெளிப்படாமற்போகா. ஆகையால் இவர்களுக்கெல்லாம் யான் இப்பொழுது சொல்லிய காரணமன்றி வேறு காரணம் விசாரிக்கவேண்டியதில்லை; ஆகவே நீ அவர்களிடத்தில் விசாரிக்குங்குணங்களெல்லாம் அவர்களுக்குள்ள சுபாவமென்றேயறிவாயாக. தேகதாரியா யிருக்கின்ற எவன்றான் அவைகளை அடக்கவல்லவனாவான்? ஓ ஜனமேஜயனே! இந்தச் சகத்தானது இவ்விதமாகவே இருக்குமென்று நினைக்க வேண்டும். இவ்வுலகில் தேவ மாநுடர்களா யிருக்கின்றவர்க ளெல்லாம் சுக துக்கங்களோடு கூடியே யிருப்பர். இவ்விரண்டையும் விட்டிருப்பவ ரொருவருங் கிடையா. இதற்குச்சில திட்டாந்தங் கூறுகின்றேன், ஒரு

☆ பக்ஷத்தில் - விஷயத்தில்

சமயம் பகவானாகிய விஷ்ணுமூர்த்தி கடினமானதவத்தையும், ஒரு சமயம் அநேகயஜ்ஞங்களையுஞ்செய்கிறார். ஒரு சமயம் லக்ஷ்மிக்கு ஸ்தானமாகிய அந்தப்புரத்தில் அவளோடு கூடி லீலாவினோதராயும், ஒரு சமயம் லக்ஷ்மி சமேதராய் வைகுண்டத்தில் பக்தானுக்கிரக நிமித்தமா யிருக்கின்றவராயு மிருக்கின்றார். ஒரு சமயம் தானவர்களோடு மகா குரூரமாகிய யுத்தஞ்செய்து அவர்களுடைய பாணங்களால் அபஜயமடைந்தவராயும், ஒரு சமயம் தன்னுடைய பாணங்களால் அசுரர்களை வெற்றி கொள்ளுகின்றவராயும், ஒரு சமயம் ஆதிசேஷன் மீது பள்ளிகொண்டு சுகதுக்கந்தோன்றாததாகிய யோகசமாதியி லிருக்கின்றவராயும், ஒரு சமயம் அந்த யோக நித்திரையினின்று வெளிப்பட வேண்டிய காலமெதுவோ அக்காலத்தில் சாக்ராவஸ்தையை யடைகின்றவராயுமிருக்கின்றார். இதனால் விஷ்ணுமூர்த்தியும் சுகதுக்காநுபவ முடையவராகவே யிருக்கின்றவ ரென்றறிவாய்.

இதுவுமன்றி இந்த விஷ்ணுவும் பிரமருத்திர இந்திராதியரும் மகான்களாகிய முனிவர்களும் ஆகிய இவர்களுக்கு விதித்த நிர்ணயப்படி அதிகமான ஆயுளையுடையவர்களாய் அவர்களுடைய காலவளவின்படி யுலாவிக்கொண்டிருப்பரேயன்றி அவ்வளவையைக் கடந்திரார். இப்படியே தாவரசங்கமங்களாயுள்ள யாவும் இயங்கப்பட்டிருக்கின்றன. அந்தத்தையடையுங்காலத்தில் மேற்சொல்லிய தாவரசங்கமங்களோடு பிரமனாதிதேவர்களும் நாசத்தை யடைகிறார்கள். இதிற்சாதேசமில்லை. மீண்டும் பிரமன் முதலியயாவரு முண்டாகின்றார்கள் ஆகையால் தேகமுடையவர்களெல்லாம் அந்தமாதியையுடையவராயும் காமாதிகுணங்களை யுடையவராயுமிருப் பாரேயன்றி அவைகளையொருபோதும் விட்டிரார்.

(ஙக-சுஉ) ஓ ஜனமே ஐயனே! உனக் கிதுகாறுஞ் சொல்லி வந்த ஞாயவிசாரத்தால் அரி யயன்முதலாகச் சொல்லப்பட்ட யாவரும் பிரபஞ்சிகளென்றும், அந்தப் பிரபஞ்ச தர்மமா யிருக்கின்றராகத் துவேஷ காமக் குரோத முதலாகச் சொல்லப்பட்ட சகல குணங்களையு முடையவராய் அவைகளால் வியாபிக்கப்பட்டு அவைகட்குரிய செயல்களோடு கூடியேயிருப்பரென்றும் வெளியாக்கியதாகும். இவ்விஷயத்தில் இனி உனக்கு ஒருபொழுதும் ஆச்சரியம் வேண்டாம். அவர்களை ஆன்மவர்க்கங்களின் வேறாக வெண்ண வேண்டாம். ஆகையால் காமாதி விஷயங்களை விட்டுப் பரமார்த்த ஞானத்தை யுடையவரா யிருத்தல் யாவர்க்கு மரிது. காமாதிகளுக்கு எவர் பயப்படுகின்றனரோ அவர்கள் அவைகளுக்கு மூலமாயுள்ள

ஸ்திரீகளை அங்கீகரிக்கா திருத்தல்வேண்டும். அங்ஙனமிருப்பாராயின் அவர்கள் தான் சர்வசங்க பரித்யாகிகளாய் நிர்மல சித்தரா யுலாவிக்கொண் டிருப்பவர்.

ஓ அரசனே! பிரகஸ்பதியின் மனைவியைச் சந்திரன் மோகித்ததையும் அதனால் விளைந்த விளைவையும், பிரகஸ்பதிகள் சகோதரன் மனைவியை விரும்பி யவமதிப்படைந்ததையும் முன்னமே சொல்லியிருக்கிறேன். மேலோர் கீழோரென்று சொல்லப்பட்ட யாவரும் இச்சம்சாரமாகிய சக்கரத்தில் காமாதி குணங்களாற் சுழன்று கொண்டிருப்பரென்பதற்குச் சந்தேகமுமுண்டோ. கிருகஸ்த தர்மத்தை எப்போது ஒருவன் அடைகின்றானோ அவன் எப்படிமுக்தனாவான். ஆகையினால் எந்த விதத்திலும் சம்சாரிக தர்மத்தைவிட்டுச் சச்சிதானந்த சொரூபிணியாகிய மஹேஸ்வரியை யாராதித்தல் வேண்டும். ஏனெனில் இச் சம்சாரமானது பராசத்தியினுடைய மாயாவிலாசத்தினால் எவருடைய அறிவையும் மறைத்துப் பித்துப்பிடித்தவர்போலும் மதுபானஞ் செய்தவர்போலும் பிரமித்திருக்கச் செய்வதாகும். இந்தப் பிரமையை யறிந்தவன் தேவி ஆராதனத்தினால் அக்குணங்களை நிவர்த்தித்து மோக்ஷசாதனங்களுக்குரியனாய்ப் பேரின்பவீட்டை யடைகிறான். இந்தப் பிரபஞ்சமயக்கமொழிந்து பேரின்பவீட்டை யடைதற்குத் தேவியாராதனையன்றி ஆவதில்லை. அந்தத் தேவியை அவளுடைய அநுக்கிரக முண்டாகுமளவும் ஆராதித்துவரவேண்டும். ஏனென்றால் அத்தேவியைப்போலுந் தயாசமுத்திரமாயுள்ளவர்க ளெவரிருக்கின்றனர். அவளுடைய அநுக்கிரகத்தா லுண்டாகும் சுகம்போலும் யாருடைய வனுக்கிரகத்தா லுண்டாகும். ஆகையால் கருணைக் கடலாகிய தேவியை வஞ்சனையில்லாமல் உபாசித்துவரவேண்டும். எவனாயினும் தேவியினுடைய உபாசானையாற்றான் சீவன் முத்தனாகவேண்டும். கிடைத்தற்கருமையாகிய மாநுடசன்மத்தை யெடுத்துத் தேவியைப் பூசிக்காமற் போவானாயின் அவன் உன்னதமான ஸ்தானத்திலிருந்து கீழே விழுந்தவன்போ லாவனென்று தீர்மானித்தல் வேண்டும். முக்குணத்தோடும் அகங்காரத்தோடுங்கூடி அசத்தியத்தினால் பின்னலிடப்பட்டிருக்கிற இந்தச் சகத்தினுடைய மாயாவிலாசமானது அருள்விலாச ரூபிணியாயிருக்கும் தேவீகடாஷமன்றி வேறெவ்விதத்தினாற் போயொழியும், ஆகையால் மோக்ஷகாமியானவன் சகலதுர்க்குணங்களையும் விட்டுப் புவனேஸ்வரியையே பூசித்தல் வேண்டும்.

(சுங-சுசா) என்று சொல்லியபொழுது அரசன் தேவியினிடத்திற் பக்தியுடையவனாய்த் தியானித்துப் பின்னர் வியாசபகவானைப் பார்த்து அசுரரிடஞ் சென்ற பிரகஸ்பதி பின்னர் என்ன செய்தார்? அவர்களிடத்தினின்றும் எப்போது மீண்டனர் என்று கேட்க, வியாசர் ஓ அரசனே! பிரகஸ்பதி அசுரரிடஞ்சென்று அவர்களுக்கிதமாகிய அசுரஞானத்தைப் போதிக்க அசுரர்கள் அவர் செய்யுமோ கஜாலத்தினால் அவரைத்தங்கள் குருவாகவே எண்ணி அவரிடத்தில் அதிக விசுவாசமும் அவர்சொற்படி நடக்கவேண்டுமென்னு முறுதியு முடையவர்களாய் அன்புடன் அவரிடத்திற் பெறவேண்டிய மந்திரோபதேச நிமித்தம் சரணாதியடைந்தனர்.

(சுஎ-சாஉ) ஓ அரசனே! மோகசாலத்தால் யார்தான் மோகிக்கப்படமாட்டார்கள். இவர்செய்தி யிங்ஙனமிருக்க. சுக்ரர் ஜயந்தியினிடம் கிரீடார்த்தமாய்ச் சொல்லியிருந்த பத்துவருடமும் முடிந்தவுடன் தன்சிஷ்யர்களாகிய அசுரர்களை நினைத்து அந்தோ! அசுரர்கள் நம்மிடத்திலுள்ள ஆசையினால் நம்வரவை எதிர்ப்பார்த் திருப்பாரல்லவா, தேவர்களால் பயந்திருக்கிற அவர்களை நாம் பார்க்கவேண்டும். நம்முடைய பக்தர்களுக்குத் தேவர்களால் ஒருபயமு மில்லாதிருக்கும்படிச் செய்யவேண்டுமென்று நினைத்து, காமவிகாரத்திற் சென்றிருந்த மனதைத் தன் சுவாதீனப்படுத்திச் சயந்தியைப்பார்த்து ஓ ஜயந்தீ! உன்னிடம் சொல்லியிருந்த பத்துவருடமும் முடிந்துவிட்டது இப்பொழுது என் சீடர்கள் தேவர்களைச் சந்தித்திருப்பார்கள். ஆகையால் சீடர்களைப் போய்ப்பார்த்து மறுபடியும் சீக்கிரத்தில் உன்னிடம் வருகிறேனென்று சொல்லத் தருமந்தெரிந்த சயந்தி அந்தச் சுக்ரரைப்பார்த்துத் தேவரீருடைய தருமத்தைக் கெடுக்க மாட்டேன். உம்முடைய இஷ்டப்படி போய்வரலாமென்றனள்.

அதன்பிறகு சுக்ரர் சயந்தியிடம் விடைபெற்று அசுரரிடஞ்சென்று அங்கு அசுரர்மத்தியில் கபடரூபதாரியாய்த் தேவகுருவிருந்து ஓ தேவசத்துருக்களே! அஹிம்சையே முக்கியமான தருமமென்றும், உயிர்களைக் கொல்வதில் ஆசையுள்ளவர்களைக் கொல்ல வேண்டுமென்னும் க்ஷமணதருமமே மேலான தருமமென்றும், அதனையே அநுட்டிக்கவேண்டுமென்றும் இதுவன்றிப் போகத்திலாசையுள்ள பிராமணர்கள் தங்கள் நாவின்ருசிக்குத் தக்கவாறு வேதத்தில் பசுஹிம்சையாகிய யாகத்தைச்சொல்லப்பட்டிருக்கிறதென்று காட்டி அதனைச்செய்யவேண்டுமென்று கூறும் அந்த அறிவில்லாத பிராமணர்களையும் அந்த அநுஷ்டானங்களையும் கைவிட வேண்டும்

என்று சொல்லிக்கொண்டிருக்கிறதைப் பார்த்து ஆச்சரியமடைந்து நமக்குத்து வேஷியாயிருக்கிற இந்தத் தேவகுருவினால் நம் சீடர்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள். இது விஷயத்தில் சம்சயமில்லையென்று சிந்தித்து இவர் இவ்வாறு வஞ்சனையாக வுபதேசிப்பதற்குக் காரணம் பாவத்துக்குவித்தாகியும் நிரயத்துக்கு வழியாகியும், ஒருவரையும் விடாததாகியுமுள்ள லோபமாகிய ஆசையல்லவா? சீ! சீ!! இது போலுங்கெட்டது எதுவிருக்கின்றது. பாபாத்மாவாகிய இந்திரனால் பிரகஸ்பதி தூண்டப்பட்டு இப்படிப் பொய்சொல்லுகின்றாரே இது வென்ன கொடுமை! இப்போது இவர் சொல்லிவருகின்ற வார்த்தையை எவன் பிரமாணமாகக் கொள்ளுகிறானோ அவன் பாஷண்டனாவனல்லவா? தருமசாஸ்திரப் பிரவர்த்தகராயும், தேவர்களுக்கெல்லாம் ஆசிரியராயு மிருக்கின்ற இவர் இப்படிப்பட்ட மலினமான மனமுடையவாயிருப்பாரானால் இவர் எந்தத் தோஷத்தைத்தானடையார். உலகத்திலிருக்கின்ற ஏனைய ஆசிரியர்களும் இவர்சொல்லியதைப் பிரமாணமாகக் கொண்டு பாஷண்டர்களாவார்க ளல்லவா? பிரமருஷியாகிய இவர் நாடகத்தில் வரும் வேஷதாரிகளைப் போல் நடை நொடி பாவனை முதலிய எல்லாவற்றையு மறைத்து மூடர்களாகிய நமது சிஷ்யர்களை என்னமோசஞ்செய்கிறார். என்றெண்ணியதாக அரசனுக்கு வியாசர் கூறினார்.

பதின்மூன்றாம் அத்தியாயம்

குருகிருதாசுர ப்ரலோபனம் முற்றிற்று

———

ஆஉ அத்தியாயம் கங-க்குச் சுலோகம் (எககஏ)

———

உ

திரிபுர சுந்தர்யை நம:

* தைத்யானாம் சுக்ர சம்ப்ராப்தி

அசுர குருவாகிய சுக்ரர். பின்னடத்தியவற்றை அரசனுக்கு வியாசரருளியவாறு சூதமுனிவர் மகருஷிகளுக்குக் கூறலுற்றனர்.

(க-கரு) ஓ மகருஷிகாள்? தேவகுருவினுடைய வஞ்சத்தை முன் சொல்லியவாறு சுக்ரர் மனதிலாலோசித்து அசுரர்களைப் பாரத்து ஓ அசுரர்களே! என்னைப்போலுருவமெடுத்து வந்திருக்கிற பிரகஸ்பதியினால் மோசம்போய் விட்டீர்களா? அந்தோ! என்று

* அசுரர்கள் சுக்ரரைக்காணுதல்

நகைத்துக்கொண்டே அவனல்ல சுக்ரன் நான் தான். அவன் தேவர்களுக்கு க்ஷேமத்தை விளைவிக்கின்ற குருவாகும். என் சிஷ்யர்களாகிய நீங்கள் அவனால் மோசம் போனீர்கள். இதிற் சந்தேகம் வேண்டாம். ஓ சீடர்களே! அவன் வேஷக்காரன். அவன் சொல்லும் வார்த்தையில் நம்பிக்கை கொள்ளவேண்டாம். ஓ அன்பர்களே! என்னுடன் வாருங்கள். பிரகஸ்பதியைத் துரத்திவிடுங்கள் என்று சொல்லி வருவதை அந்த அசுரர்கள் கேட்டு உருவத்திற் சிறிதும் பேதமில்லாமலிருக்கின்ற இருவரையும் பார்த்து மிகுந்த ஆச்சரிய மடைந்து தங்களாசிரியரையே ஆசிரியரென்றறிய வந்தும் சித்தப்பிரமை யுடையவர்களாய் மறுபடியும் மயங்கி நிற்கும் பொழுது தேவகுருவானவர் ஓ அசுரர்களே? நீங்க ளேன்மயங்குகிறீர்கள். இப்பொழுது வந்தவன் தேவகுருவாகிய பிரகஸ்பதி. உங்களை வஞ்சிக்கும்பொருட்டு என்னைப்பொ லுருவங்கொண்டனன். ஓ அசுர சிரேஷ்டர்களே? இவன் உங்களை மோசஞ்செய்து தேவர்களுடைய காரியத்தைச் சித்தி பண்ணுவதற்கு இவ்வாறு சொல்லுகின்றான். ஆகையால் அவனிடம் விசுவாசம் வைக்கவேண்டாம். அவன் சொல்லுஞ் சொல்லில் நம்பிக்கை சிறிதுங்கொள்ளவேண்டாம். மஹாதேவரால் எனக்கு மந்திரோபதேச மாயிருக்கிறது அதை உங்களுக் குபதேசிக்கின்றேன். தேவர்களா லுங்களுக் கபசயம்வாராமல் செயத்தை யுண்டுபண்ணுகிறேன். நான் இப்போது சொல்லிவருவதிற் சம்சயங் கொள்ளவேண்டாமென்று சொல்ல அந்த அசுரர்கள் கேட்டு பிரமையொழிந்து இவர்தான் நம்முடைய உண்மையான குருவென்று மிகுந்த விசுவாசமுடையராயினர்.

சுக்ரர் மறுபடியும் அநேக வுபமானங்களால் அவன் நானல்ல பிரகஸ்பதியென்று எடுத்துக்காட்டியும், அந்த பிரகஸ்பதியினுடைய வாக்சாதுர்ய விசேடத்தால் அவரையே சுக்ரரென்றும், சுக்ரரையே பிரகஸ்பதியென்றும், கால வித்தியாசத்தினால் நிச்சயித்து உண்மையறியாது உண்மையான சுக்ரரைப்பார்த்து தர்மாத்மாவாயும் ஞானத்திற் பிரதாபராயும், க்ஷேமங்களை யநுக்கிரகிக்கின்ற வராயுமுள்ள இவர் எங்களிடம் சொல்லிப்போனபடியே தபசு முடிந்த பின்னர் எங்களிடம் வந்து அன்று முதலின் நனவாகிய பத்துவருஷ காலம் எங்களை ரக்ஷித்துக்கொண்டு வருகின்றாராகையால் இவர்தான் உண்மையாய் வந்த சுக்ரர், நீர்தான் கபடியாய் வந்தசுக்கிரர். ஆகையால் எங்களுக்கு நீர் ஆசிரியரல்லர் நீர் போய்வாருமென்று மூடர்களாகிய அசுரர்கள்சொல்ல, சுக்ரர் உங்கள்குரு நான்தானென்று அடிக்கடி முறையிட்டனர். அவர்கள் அதனை நம்பாது ஏனையா கூச்சலிடுகின்றீர். போமையா போமென்று மிரட்டி

விட்டுப்பிரகஸ்பதியைப் பார்த்து இந்தக் கபடிசொல்லும் வார்த்தையில் நாங்கள் மாறுபடுவோமென்று நீர் குற்றங் கொண்டு கோபிக்க வேண்டாமென்று பலமுறை வணங்கி யுபசரித்தனர். அப்போது சுக்ரர் பிரகஸ்பதியின் போதனாசக்தியினால் இந்த அசுரரனைவரும் அவர் வசப்பட்டு மோசமடைந்து நம்மைப் பழிக்கின்றார்க ளல்லவா வென்று கோபங்கொண்டு அவர்களைப்பார்த்து ஓ அசுரர்களே? இந்தப் பிரகஸ்பதி எவ்வளவு தான் உங்களுக்குப் போதித்தபோதிலும் நான் பிரகக்ஷயமாய் வந்து அவன் கூறிய மோகனவார்த்தையைத் தடுத்து நானே குருவென்று பலமுறைசொல்லியும் அதை யறியாமல் என் ஆக்ஞையை உல்லங்ஙனஞ் செய்தமையால் நீங்களனைவரும் ஞான சூன்யத்தையும் யுத்தத்தில் அபசயத்தையும் அடையக் கடவீர்கள். ஓ அறிவிலிகளே! நானிட்ட இந்தச்சாபம் உங்களுக்குச் சீக்கிரத்தில் பயன்படும். இந்தக் கபடியினுடைய மோசமும் சீக்கிரத்தில் வெளியாகுமென்று சபித்துக் கோபத்துடன் போய் விட்டனர்.

(கசா-ருஉ.) பின்னர் தேவகுரு அசுரர் கூட்டத்தில் தாம் வந்தகாரிய முடிந்ததென்று சந்தோஷத்துடனிருந்து குருசாபமேற்ற இவர்களால் தேவர்களுக்கோர் இடையூறும் வரமாட்டாதென்று நினைத்து அவர்களிடம் விடைபெற்றுத் தாம்கொண்டிருந்த பொய் வேடத்தைமாற்றித் தம்முருவங்கொண்டு இந்திரனிடம்போய் நான் போன காரியம் முடிந்துவிட்டது. என்னையெனின், அசுரர்களுக்கு அவர்களுடைய குருவாகிய சுக்ரரால் சாபம் நேர்ந்து விட்டது. அதை மாற்ற ஒருவராலும் முடியாது. நானும் வந்துவிட்டேன். ஓ தேவேந்திரனே! நான் குருசாபத்தை யேற்கும்படி அசுரர்களைச் செய்து விட்டேனாகையால் நீ தேவர்களோடு இச்சமயத்தில் நிராதரவாயிருக்கின்ற அவர்களிடத்திற்சென்று யுத்தஞ்செய்யப் பிரயத்தனப் படுவாயென்று சொல்லிவிட்டுத் தன்னிடம் போய்ச் சேர்ந்தனர். தேவேந்திரன் முதலிய தேவர்கள் குருவார்த்தையைக் கேட்டு அவரைக் கொண்டாடி ஆனந்தக்களிப்படைந்துயாவரும் ஒன்றாய்க் கூடி ஆலோசித்து அசுரர்களை நோக்கிச் சென்றார்கள். அசுரர்கள் பலிஷ்டராகிய தேவர்கள் யுத்தத்திற்குப் பிரயத்தனப்பட்டுவருவதையும், ஆசிரியர் மறைந்திருப்பதையு மெண்ணிச் சிந்தாகுல முடையவர்களாய் ஆஹா அந்தப் பிரகஸ்பதியினுடையமாயையினால் மோசம்போன நம்மால் ஞானவானாயும் மஹாத்மாவாயும் முள்ள நமது ஆசிரியர் மனதிற் கோபமுள்ளவராய்ப் போய்விட்டார். இதற்கென்ன செய்வோமென்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு அந்தோ! கபடத்திற் பண்டிதனாயும் பாபிஷ்டனாயுமுள்ள பிரகஸ்பதி, நம்மை இப்படி

மோசஞ் செய்துப் போய்விட்டானே! அவனெப்படிப்பட்டவன் சகோதரனுடைய மனைவியை யனுபவித்தவனல்லவா! அவனிது தானா செய்வான்! மனதி லசுத்தமுள்ள அவன் வெளியில் சுத்த முள்ளவன் போல் நடிக்கின்றான். நாம் அவன் வஞ்சனையை யறியாமற்போயினோம். நம்மால் கோபத்தையடைந்திருக்கிற சுக்கிரரைத் தரிசிப்பதற்கு எவ்வாறு போகலாம். மந்திரப் பிரசன்னராயிருக்கின்ற அவர் நம்மிடத்தில் சந்தோஷமுடையவராய் நமக்காகவேண்டிய சகாயங்களைச் செய்ய நாமென்னவுபாயஞ் செய்யலாம். அவரெப்பொழுது வருவாரென்று அசுரர்களெல்லாம் ஆலோசித்துப் பயமுடையவர்களாய் ஒன்றுகூடிப் பிரகலாதனை முன்னிட்டுக் கொண்டு சுக்கிரரிடம் சென்று நமஸ்கரித்தார்கள். சுக்ரர் கோபத்தால் கண் சிவந்து அந்த அசுரர்களை நோக்கி அடியில் வருமாறு சொல்லுகின்றார். ஓ அசுரர்களே! நீங்கள் என்னுடைய சீடர்களென்று அநேக நாளிருந்து ஏகதேசத்தில் பிரகஸ்பதிவந்து செய்த மாயையினால் மோகிக்கப்பட்டு அவனுக்குச் சீடர்களாய் அவன் வசப்பட்டு என்னை மதிக்காமல் மதோன்மத்தரா யிருந்தீர்களல்லவா ? அப்பொழுதே நீங்கள் பிரஷ்டராய் விட்டீர்கள். அப்படியிருந்தும் நான் கருணையினால் கோபிக்காமல் வஞ்சனையின்றி இதமாக அனேகவார்த்தைகளைச் சொல்லியும், அவைகள் உங்கள் காதுக்குள் நுழையாமற் போய்விட்டதல்லவா! அப்பொழுது என்னை அவமானப்படுத்தி யதனால் இப்பொழுது வந்தபலனை அநுபவியுங்கள். என்னிடத்தில் உங்களுக்கு என்ன வேலை ? கபடவேஷதாரியாகிய குரு எந்த விடத்திலிருக்கின்றானோ அந்தவிடத்துக்குப் போகும்வழியைத் தேடுங்கள்.

தேவர்களுடைய க்ஷேமத்தைவிரும்பி யுங்களிடம் கபடமாய் வந்த மோசக்காரனாகிய அந்த குருதான் பிரஷ்டர்களாகிய உங்களுக்குச் சரியானவன். நானோ அவனைப்போல் மோசக்காரனல்லன். என்றிவ்வாறு அங்கீகார முடைமையையு மில்லாமையையுங் காட்டுஞ் சொற்களைச் சொல்லுகின்ற சுக்ரரிடத்தில் அசுரர் ஒன்றுஞ்சொல்லவறியாது மயங்கி நிற்கப் பிரகலாதன் அவருடைய பாதங்களில் வணங்கி எங்கள் பெருமானாகிய ஓ சுக்ரரே! இப்போது தேவரீருடைய சீடர்களாயும், விதேயர்களாயும், மனவருத்தமுடையவர்களாயும் வந்திருக்கிற அசுரர்களாகிய எங்களை நீர் கைவிடுவது அழகல்ல. உங்களுக்கு நாங்கள் புத்திரர்களல்லவா. தேவரீர் மந்திர நிமித்தமாய்க் கைலாயத்திற்குப் போயிருந்த காலத்தில் வேஷக்காரனும் துராசாரனுமான பிரகஸ்பதி தேவரீரிடத்தில் எங்களுக்குத் துவேஷம் வரும்படி வசனித்துவந்த வசன சாமர்த்தியத்தினால் நாங்கள் மிகவும் மோசம்போனோம். இது எங்கட்கு

அபுத்தி பூர்வகமாய் நேரிட்ட தோஷமாகலான் சாந்தமூர்த்தியாகிய தேவரீர் கோபங்கொள்ளக் கூடாது. ஓ சர்வஞ்ஞரே! எங்கள் மனம் தேவரீரிடத்தில் லயித்திருக்குமேயன்றி வேறுயாரிடத்தி லயிக்கும். அதுவுந் தேவரீ ரறிவீர். ஓ ஞானமூர்த்தியே! இப்போது சொல்லியவை பொய்யோ மெய்யோ என்பதை உம்முடைய தபோவிசேஷத்தாலறிந்து கோபத்தை விட்டுவிடும். பெரியோர்களாகிய சாதுக்களெல்லாம் க்ஷணகாலம் கோபமுடையவரா யிருப்பரேயன்றித் தீர்க்ககாலம் அதனையுடையவரா யிரார்கள்.

எங்ஙனமெனில் சலத்திற்கு இயல்பானகுணம் சீதளம். அது அக்னியினுடைய சம்பந்தத்தா லுஷ்ணமாகிறது. அந்த அக்னிசம் பந்தம் நீங்குமானால் பூர்வமிருந்த சீதளத்தையே யடைகிறது எப்படியோ அப்படிப்போலென்று சொல்லுகிறார்கள். கோபமானது சண்டாள ரூப முடையதாகலான் அதனைப் பெரும்பாலும் பண்டிதர்கள் கொள்ளார். ஆகையால் நீர் கோபத்தைவிட்டு அநுக்கிரகஞ் செய்யவேண்டும். நீர் கோபத்தை விடாமலிருக்கிற பக்ஷத்தில் மன வருத்தத்தோடு மிருக்கிற எங்களைச் சீடர்களல்லரென்று விட்டு விடும். உம்மால் விடப்பட்ட நாங்களும் பாதாள லோகத்தைப் போய்ச் சேருகிறோம். பின்னர் தேவரீர் யாருக்குக் குருவாயிருந்துலாவுவீரோ அறியேனென்று கூறிய பிரகலாதனுடைய வார்த்தையைக்கேட்டு சுக்ரர் யோகதிருஷ்டியினால் எதிர்காலச் செய்கையை யறிந்து கோபந்தணிந்து நல்ல மனமுடையவராய்ச் சிரித்துக் கொண்டு ஓ அசுரர்களே! பயப்படவும் வேண்டாம். பாதாளம்போகவும் வேண்டாம். உங்களைத் தடையின்றிப் பிரயோஜனத்தைக் கொடுப்பதாகிய மந்திரங்களால் ரக்ஷிக்கிறேன். எனது யோக்யதாதர்மந் தெரிந்தவர்களே! நீங்கள் காலவித்யாசத்தால் தேவர்களால் அபசயத்தையடைந்து பலஹீன ராய் விடுவீர்களென்று பிரமதேனால் பூர்வம் சொல்லக்கேட்டிருக்கிறேன். அதைச் சத்தியமாய் நம்புங்கள். வரவேண்டிய சுகதுக்கரூபமாகிய அநுபவம் வரவேண்டிய காலத்தில் வந்தேதீரும். காலத்தைத் தடைபடுத்துவதற்கு எவனுஞ் சமர்த்தனாகமாட்டான்.

இதுவரையில் தேவர்களுடைய சிகை உங்கள கைவசப்பட்டிருக்கப் பத்துயுகமளவும் நிகரின்றி அரசாக்ஷிசெய்து சகலசம்பத்தோடுங்கூடிய ராஜ்யத்தை யனுபவீத்துவந்தீர்கள். இப்பொழுது சிலகாலம் பாதாளலோகத்திற் போயிருங்கள். இனிவரும் சாவர்னிகமநுவினுடைய காலத்தில் மறுபடியும் அந்த ராஜ்யசம்பத்து உங்களுக்கேவரும். ஓ பிரகலாதனே! அப்பொழுது மறைந்திருக்கின்ற

உன்பேரனாகிய பலி மூன்றுலோகத்தையுஞ் ஜயித்து ராஜ்யாதி பத்தியத்தையடையப் போகிறான். ஜயசாலியாயும் தேவஸ்ரேஷ்டராயுமிருக்கின்ற விஷ்ணுமூர்த்தி வாமனராய் பலியிடந் திரிலோகங்களையுந் தானமாகப் பெற்றுக் கொண்ட காலத்தில் பலியைப் பார்த்து அனுக்கிரகமொன்று செய்திருக்கின்றார். அது என்னையெனின்? ஓ பலியே இப்பொழுது தேவர்களுடைய வேண்டுகோளால் எவ்விதத்தினாலோ இம்மூன்றுலோகத்தையும் நான் கிரகித்துவிட்டேன் நீயும் எனக்கு நல்ல எண்ணத்தோடுந் தானஞ்செய்துவிட்டனை. அந்தப்புண்ணியம் வீண்போகக் கூடாதாகையினால் இனி அடுத்துவரப்போகிற சாவர்னிகமநுவினுடைய காலத்தில் நீயே இந்திரனாவாயென்று சொல்லியிருக்கிறார். ஓ பிரகலாதனே! இப்பொழுது அந்தப் பலியானவர் கண்ணுக்குந் தோன்றாமல் பயந்தவனைப்போல் மறைந்திருக்கிறான். அவனுடைய காலபலத்தைக் கேளுங்கள், ஓர் சமயம் அவன் இந்திரனுக்குப் பயந்து கழுதையுருவங்கொண்டு பாழடைந்த ஓர் சுவரின் பக்கலில் மறைந்துக்கொண்டிருந்தான். அச்சமயத்தில் அவனைத் தேடிக்கொண்டு வந்து அவனிருப்பிடத்திற்காணாமல் அவ்விடத்திற்பார்த்துச் சர்வலோகாதிபத்தியஞ் செய்த பிரபுவாகிய நீ இந்தக்கார்த்தபரூப மென்னகாரணத்தினாலெடுத்தனை? மகாவீரர்களாகிய அசுரர்கள் மத்தியி லிருக்கத்தக்க நீ இந்தக் குட்டிச்சுவரின் மத்தியிலிருக்கின்றனையோ? பலிச்சக்ரவர்த்தி யென்றழைக்கப் பட்டிருந்த நீ கார்த்தபமென் றழைக்கப்பட்டிருக் கின்றனையே! இவ்வாறெல்லாம் ஏனிருக்கவேண்டுமென்றுகேட்கப் பலி ஓ இந்திரா! இந்த வடிவ மெடுத்ததனால் எனக்குத் துக்கமொன்றுமில்லை. உலகப்பிரசித்தியாயிருக்கின்ற விஷ்ணுமூர்த்தி என்னகாரணத்தினால் மீனானார்? ஆமையானார்? நீ பிரமஹத்திசெய்து தாமரை நாளத்தில் ஏன் மறைந்திருந்தனை? அதுபோல் நானும் இந்தக்காலத்தில் இந்த ரூபமுடையவனா யிருக்கின்றேன். ஓ இந்திரா! விஷ்ணு தானென்ன நீதானென்ன நான்தானென்ன, நாமெல்லாம் காலமென்கிற தெய்வத்துக்குச் சுவாதீனப்பட்டவர்களா யிருக்கிறோம். அது நம்மைக் கழுதையாக்கினாலும் ஆக்கலாம் மீன் முதலியநீர்வாழ் வனவாகிய செந்துக்களாக வாக்கினாலு மாக்கலாம். ஒளித்திருக்கச் செய்தாலுஞ் செய்யலாம், வெளிப்பட்டிருக்கச் செய்தாலுஞ் செய்யலாம். எவ்வண்ணஞ் செய்தாலுஞ் செய்யலாம். அது துக்கமாயிருந்தாலு மிருக்கலாம். சுகமாயிருந்தாலு மிருக்கலாம். அந்தக் காலம் எப்படி இச்சிக்கிறதோ அப்படி நடத்துகிறது. தேவாசுரராயும்,

மாநுடராயுங்காணப்பட்ட இந்தச் சகத்து அதன் வசப்பட்டிருக்கத்தக்கதென்று சொல்ல இந்திரனுஞ் சரியென் றொப்பி இருவரும் நல்ல ஞானவிசேஷத்தை யடைந்தவர்களாய்த் தங்க ளிருப்படத்தை யடைந்தனரென்று சுக்ரர் பிரகலாதனுக்குக் கூறினாரென்று வியாசர் அரசனுக்குக் கூறியருளினார்.

பதினான்காம் அத்தியாயம்

தைத்யானாம் சுக்ர சம்பிராப்தி முற்றிற்று.

ஆஉ அத்தியாயம் கசு-க்குச் சுலோகம் (எசாஙஏ.)

உ

திரிபுரசுந்தர்யை நம:

பதினைந்தாம் அத்தியாயம்

* தேவீகிருத தைத்யதானவ யுத்தசாந்தி கதனம்.

(சு-உக.) ஓ மகருஷிகாள்! பிரகலாதன் முதலியோர் செய்த வகையை வியாசமுநிவர் அரசனுக் கெடுத்துச்சொன்னதைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

மகாத்மாவாகிய சுக்ரர்வார்த்தையைப் பிரகலாதன்கேட்டு அவருடைய ஆலோசனைக்குச் சந்தோஷித்து, காலமானது பலமுள்ள தென்றே மனதில் நிச்சயித்து அசுரர்களை நோக்கி ஓ அசுரர்களே! நாம் இப்போது யுத்தம் நடத்துவோமாயின் ஒருக்காலும் ஜயமுண்டாகமாட்டாது ஆகையால் பாதாள லோகம் போகலாமென்றான். அப்பொழுது மதகர்வ முள்ளவர்களாயும் தேவர்களைச் செயிக்க வேண்டுமென்னு மெண்ணமுடையவர் களாயுமுள்ள அந்த அசுரர்கள் ஓ ஐயா! யுத்தஞ்செய்வதற்குக் காலம் வேண்டுமென்பதை நாங்களறியோம். முயற்சி யில்லாதவர்கள் யாரோ அவர்கள் தான் காலம் வர வேண்டும் காலம்வரவேண்டுமென்று காலத்தைக் கழிப்பார்கள். அவர்களுக்குத்தான் முக்கியமாய்க் காலம்வேண்டும். முயற்சியுடையவர்கள் அதனை யெதிர் பார்க்கவேண்டிய அவசியமில்லை. அன்றியுங்காலத்தைப்பார்த்தவர் யார்? அது எங்கேயிருக்கிறது? அதனுடையசொரூபமென்ன? யாவரால்

ஏற்படுத்தப்பட்டது ஓ தைத்யசிரேஷ்டரே! புத்தியிற்சிறந்த நீர் இதை நம்பவேண்டாம் உம்மெதிரில் இப்போது நாங்களே சேனையோடுசென்று யுத்தஞ்செய்கிறோமென்றுசொல்லக்கேட்டு அவர்களபிப்பிராயத்தை மறுக்கமுடியாமல் சேனாதிபதியாய்ச் சென்று தேவர்களையழைத்தான். தேவர்கள் யுத்த முயற்சியாய் வந்திருக்கிற அசுரர்களைப்பார்த்து சகல சந்நாகத்தோடும் இந்திரன் பிரகலாதனை எதிர்த்து பார்ப்போர்க்குப் பயத்தையும் ஆச்சரியத்தையும் விளைவிக்கும்படியாய் நூறுவருடம் யுத்தம் நடத்தினன். பிரகலாதன் முதலிய அசுரர்கள் இளைக்காமல் அவர்களோடு போராடி செயத்தை யடைந்தனர். அபசெயத்தை யடைந்த இந்திரன் தன் குருவினிடத்திற்சென்று குறையிரக்க அவர் சகலதுக்கங்களையும் நிவிர்த்திசெய்து போக மோக்ஷப்பிரதமா யிருக்கின்ற சகல ஐஸ்வர்யங்களையுமெளிதிற்றரவல்ல மகேஸ்வரியை நீ தியானிப் பையாயின் சகலசித்தியும் பெறுவையென்றனர். அவராணையின்படி அடியில் வருமாறு தேவியைத் துதிக்கத் தொடங்கினர்.

"ஹே மகாமாயாசொரூபிணீ! சூலத்தைத் தாங்கினவளே! சங்குசக்ரகதாபத்மங்களைத் தாங்கியிருக்கின்றவளே! ஹே அம்பிகே! சரணமடைந்தவர்களுக் கபயப்பிரதந் தருகின்றவளே! எங்களுக்கு ஜயமுண்டாம் வண்ணம் செய்யவேண்டும் சர்வ புவனங்களுக்கும் அதிபதியா யிருக்கின்றவளே! சர்வ புத்திகளுக்கும் மாதுர் ஸ்தான மாயுள்ளவளே! தச தத்வசொரூபமா யிருக்கின்றவளே! மகாபிந்து ஸ்வ ரூபிணியாயிருக்கின்றவளே! சச்சிதானந்த சொரூபிணியா யிருக்கின்றவளே! பிராணாக்னிஹோமத்தில் தோன்றுகிறமகாவித்யே! தீப சிகைபோல் பிரகாசிக்கின்றவளே! பஞ்சகோசாந்தத்தி லிருக்கிறவளே! பரமாத்ம சொரூபமாயிருக் கின்றவளே! ஆனந்த சொரூபமாயுள்ளவளே! சர்வ உபநிஷத்துக்களாலு மாராதிக்கப் பட்டவளே! என் விஷயத்தில் சுமுகமாய் அநுக்கிரகஞ்செய்யவேண்டும். ஹே அம்பா! அசுரர்களால் அபஜயமடைந்து பலஹீனர்களாயிருக்கும் எங்களை ரக்ஷிக்கவேண்டும். சர்வதுக்கங்களையும் போக்கவல்ல சதுர்ப்பாடுடைய ஓ தேவி! நீ சகலபுவன ரக்ஷகியாயிருக்கின்றனை! சகலசங்கடத்தோடுங் கூடினவர்களா யிருக்கின்ற எவர்களுன்னைத் தியானிக்கின்றார்களோ அவர்கள் அந்தச்சங்கடங்களினின்றும் நீங்கிச் சகல சுரங்களையுமனுபவித்துச் சுகிகளா யுலாவுவர். சர்வசங்க பரித்தியாகிகளாய் மோக்ஷத்தையபேக்ஷிக்கின்றவர் சம்சாரமாகிய கடலை உன்னைத்தியானித்துக் கடக்கின்றார்கள். ஓ சகன்மாதாவே! சர்வவேத புராணங்களிலும் பிரசித்தியடைந்திருக்கிற நீ

* தைத்யரும் தானவரும் தேவர்களோடுசெய்த போரைத் தேவீ சமாதனப்படுத்தல்

ஆன்மாக்களை ரக்ஷிக்கின்ற காலத்தில் எட்டுணையும் துன்பம் வராமல் காக்க வல்லவளென்கிற பிரதாபமுடையவளா யிருக்கின்றனை! சங்காரகாலத்தில் ம்ருத்யுரூபமாயிருந்து ஒன்றையும் விடாதழிக்கின்றனை. பிரம விஷ்ணுருத்திரேந்திராதி சகல தேவர்களாலும் வேதபுருடனாலும் அப்படியே அறிவிற் சிறந்தவர்களாலும் ஒப்பிடக்கூடாத உன்னுடைய பிர பாவமுற்றும் அறிவதற்குக் கூடாமையாயிருக்க அறிவிற் சிறியவர் எவ்வாறறியப்போகின்றனர். உன்னிடத்தில் பக்தியுள்ளவர்கள் பிரபஞ்சாபிமானம் விட்டு உன்னுடைய தியானானந்தத்தில் மூழ்கித் தன்னியராவர். உன்னிடத்தில் பக்தியில்லாதவர்கள் பிரபஞ்சப் பற்றொழியாதவராய் ஜனன மரணமென்கிற அலைகளில் மொத்துண்டு துக்கசாகரத்தில் மூழ்கிக் கரையேறாது பரிதபிப்பார்கள். இவ் வுலகின்கண் எவர்கள் சிவிகை யூர்ந்து சாமரையிருபாலு மசைக்க யாவராலு நன்கு மதிக்கப்பட்டுச் சகல சம்பத்தோடும் வாழ்கின்றனரோ அவர்கள் பூர்வசன்மத்திற் சகல திரவியங்களாலு முன்னை யாராதித்தவர்களென்றும், எவர்கள் கஜாரூடர்களாயும், ரூபவதிகளாய்க் குணத்திற் சிறந்து அநேகஸ்திரீகளா லுப சரிக்கப்பட்டவர்களாயும், சத்ருக்களால் வணங்கப்பட்டவர்களாயும், எவ்விடத்திலும் பெருமையுள்ளவர்களாயு மிருக்கின்றார்களோ அவர்கள் பூர்வசென்மத்தில் உன்னை விசேடமா யாராதித்து வந்தவர்களென்றும் நிச்சயமாய் நினைக்கின்றேன்."

(உஉ-ங்க) என்றிவ்வாறு தோத்திரஞ்செய்ய விஸ்வேஸ்வரியாகிய தேவி அதிவேகமாய்ச் சங்குசக்கர கதாபத்மங்களைத் தாங்கி யிருக்கின்ற சதுர்ப்புஜத்தோடும், சிவந்த ஆடையா பரணங்களாலும் மலர்மாலைகளாலும் அலங்கரிக்கப்பெற்ற திருமேனியோடும், திருமுக மலர்ந்தவளாய்ச் சிங்கவாகனத்தி லெழுந்தருளிவந்து தேவர்களை நோக்கிக் கம்பீரத்தோடும் ஓ தேவர்களே! பயப்பட வேண்டாம். இப்பொழுதே உங்களுக்குச் சுகத்தைச் செய்கிறேனென் றனுக்கிரகஞ்செய்து பலவான்களாகிய அசுரர்க ளிருக்குமிடத்தை யடைந்து பிரகலாதன் முதலிய அசுரர்கள் முன்னே நின்றனள். அத்தேவியை அசுரர்கள் பார்த்து இனிச்செய்வதென்னென்று பயந்து ஒருவரையொருவர் பார்த்து ஓ அசுரர்களே! இந்தத்தேவி மஹாபலசாலிகளாகிய சண்ட முண்டர்களையும், மதுகைடபர்களையுங் கொன்றவளல்லவா? இவளிப்பொழுது தேவர்களுடைய பக்கலில் வந்திருக்கிற பொழுது அவளை நாம் வெல்லுவோமா? அவள் நம்மை வெல்லுவளா? நமக்கு மரணகாலம் வந்துவிட்டது, சம்சய மில்லையென் றெண்ணும்பொழுது பிரகலாதன்

அவர்களைப்பார்த்து இனி நாம் யுத்தஞ் செய்யக்கூடாது ஓடிப்போவதுங் கூடாதென்றான். நமுச்சி என்னும் அசுரன் ஓடிப்போவதில் முயற்சியாயிருக்கின்ற அசுரர்களைப் பார்த்து ஓ வீரர்காள்! நீங்கள் ஓடுவீர்களானால் ஜகன்மாதாவாகிய தேவி மிகுந்த கோபங்கொண்டு பாணங்களை விட்டடிப்பாள். ஆகையாலொரு வரும் போகவேண்டாமென்று அவர்களைத் தடுத்து பிரகலாதனைப் பார்த்து ஓ பிரகலாதனே! நாம் இப்போதே அந்தத் தேவியைத் துதித்து அவளிடம் விடைபெற்றுப் பாதாளம் போய்விடுவோம். இதுதான் நமக்குச் சுகஞ்செய்யும், முக்கியமாய் நமக்குத் துக்கம் வராம லிருக்கவேண்டியதுதானே என்று சொல்லப் பிரகலாதன் அடியில்வருமாறு துதிக்கத் தொடங்கினன்.

(ஙஉ-சாங) இவ்வுலகத்தைப் படைத்தளித் தழிக்கின்றவளும் இவ்வுலகுக்குத் தாயாயிருப்பவளும் சரணமடைந்தவர்க்கு ஆபத்தைப் போக்கும் புகலிடமாயிருப்பவளும் யாவரையும் மயக்க வல்ல மாயையை யடக்கியாளும் வல்லபமுள்ள மகாமாயா சொரூபிணியா யுள்ளவளுமான வுன்னைத் தோத்திரஞ் செய்கின்றேன். ஹே அம்பா! சர்வத்துக்கும் அதிஷ்டானமாயிருக்கின்ற உன்னிடத்தில் இந்தத் தாவரசங்கமங்கள் சர்ப்பமாலைகள் போல் பிரகாசிக்கின்றன. அவைகளுள் உன்னால் இயங்குவன இயங்குகின்றன, இயங்காதன இயங்காதிருக்கின்றன. பிரமன் முதலிய மூவரும் உன்னுடைய ஏவலாளிகளா யுள்ளவர்கள். ஹே தேவி! ஹே மகாமாயே! நமஸ்காரம். நீ யாவருக்கும் தாயாயிருக்கின்றவள் நாங்களும் அசுரர்களும் உன்னுடைய மக்களாயிருக்கின்றவர்கள். ஆகவே எங்களிருவரிடத்தும் உனக்கென்ன பேதம். நாங்கள் யோக்யரா யிருந்தாலும் அயோக்யரா யிருந்தாலும் நீ எங்க ளிருவரிடத்தும் சமபாவனையா யிருத்தல்வேண்டுமல்லவா; ஓ தாயே! உனக்குப் புத்திரர்களாகிய தேவர்களிடத்திற் பிரியமிருந்தால் அதுபோல் எங்களிடத்தும் பிரியமிருக்க வேண்டுமல்லவா; புராணங்களிலும் உன்னைச் சர்வலோகத்துக்குந் தாயாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தேவர்களும் சுவப்பிரயோஜனத்தில் ஆசையுள்ளவர்களாக விருக்கிறார்கள். அவர்களைப் போலவே நாங்களு மிருக்கிறோம். பிரயோஜனத்தை யடையாமல் விடுவதற் கிடமில்லை. ஆகவே நீ பேதஞ்செய்ய நினைப்பது ஞாயமாகவிருக்கிறதா? சம்பத்திலும் ஸ்திரீமுதலிய போகங்களிலும் இரவும் பகலும் நாங்களும் ஆசையுள்ளவர்களாக விருக்கிறோம். அப்படியே தேவர்களுமிருக்கிறார்கள். எங்களுக்குள் நீ பேதம் எவ்வாறாகப் பிரித்தனை? இருவரும் காசிபருடைய பிள்ளைகளே. அங்ஙனமிருக்க ஹே அம்பா! ஒருவரிடத்தில்

விரோதமும் ஒருவரிடத்தில் பக்ஷமும் உனக்கெப்படி யுண்டாயிற்று? எல்லாவுலகத்துக்கும் உற்பத்தி ஸ்தானமாகிய நீ சிலரிடத்தில் விருப்பும் சிலரிடத்தில் வெறுப்பும் வைப்பதற்கிடமேது? ஹே மாதா! எங்களிருவரிடத்தும் நீ சுமுகமாயிருக்கவேண்டும் நாங்களனைவரும் குணபேதத்தால் தோன்றினவர்களாயும் சரீரத்தோடுங் கூடினவர்களாயு முள்ளவர்களேயன்றி வேறல்ல.

ஆகவே காமக்குரோத லோபமோகாதிக ளிருவரிடத்து மிருக்கின்றன. இவ்வாறிருக்கின்ற எங்களில் நீ யாரை அங்கீகாரம் பண்ணுகிறது? யாரை அங்கீகாரம் பண்ணாதுவிடுவது ஹே தேவி! உனக்குத் தோன்றிய ஓர் வித உற்சாகத்தால் புத்திரர்களாகிய நாங்கள் யுத்தஞ்செய்யப் பார்க்கவேண்டு மென்னு மிச்சையால் எங்களையிப்பொழுது பேதப்படுத்திவிரோதப் படுத்தினாய் போலும் மங்களவதியாகிய ஹே தேவி! நீ அவ்வாறு செய்யாவிட்டால் சகோதரர்களாகிய எங்களுக்குள் விரோதம் ஏது! ஹே சாமுண்டே! நீ யுத்தத்தைப் பார்க்க விச்சை கொள்ளாதிருக்கும் பக்ஷத்தில் எங்களுக்குள் விரோத முண்டாகமாட்டாது. சர்வ தருமமுந் தெரிந்தவளே! நான் தர்மங்களெல்லாம் அறியாதவனா யிருந்தபோதிலும் சிறிது தருமந் தெரிந்துள்ளேன். நூறு அஸ்வமேதஞ் செய்வதனாகிய இந்திரனும் சிறிது தருமந் தெரிந்தவனென்றே நினைக்கின்றேன். தருமந்தெரிந்த எங்களுக்குள் விரோதம் வருவதற்குப் பெரும்பாலு மிடமில்லை. ஹே அம்பிகே! நீயோ யாவரிடத்து மிருக்கின்றவள். உன்னைத்தவிர இருக்கின்றவர் எவருமில்லை. ஆகவே நீ யாவருடைய வேண்டுகோளையும் நிறைவேற்றி வைக்க வேண்டியவள் உன்னையன்றி எவர் உரிமையுடையவராவர் இதனை நீ யோசித்தல்வேண்டும். முன் தேவாசுரர்கள் திருப்பாற்கடலைக் கடைந்தபொழுது அதிற்றோன்றிய அமிர்தத்தையும் கவுஸ்துவ மணியையும் அமர சுந்தரியாகிய லக்ஷ்மியையும் விஷ்ணுமூர்த்தி லோபகுணத்தாற் கொள்ளையடித்தனர். இந்திரனும் ஐராவதம் என்கிற யானையையும், உச்சைஸ்ரவ மென்கிற குதிரையையும், கற்பக விருக்ஷம் காமதேனு முதலியவற்றையுங் கிரகித்தான். மிகுந்த கவுரவசாலியாகிய விஷ்ணுமூர்த்தி தான் கொள்ளையடித்த தல்லாமல் சகலசம்பத்தையுந் தேவர்கள் பரமாகச்செய்ய, அவர்களும் சிறிதும் நீதியை யோசிக்காமல் அங்கீகரித்தார்கள். அசுரர்களாகிய நாங்கள் ஒன்றுமடையாமற் பரதேசிகளாய்த் திரும்பினோம்.

இப்பொழுது அவர்களுக்காகப் பரிந்து வந்த நீ அப்பொழுது வந்தனையா? அந்த விஷ்ணுவினிடத்தில் என்ன தர்மானுஷ்டான

மிருக்கக் கண்டனை? அவர் செய்தகாரியம் ஒன்றாயினும் யோக்யமாகுமா? அநீதியாய்க்கிடைத்த சொத்தை ஆண்டிருக்கிற தேவர்களைச் சாதுக்களென்று சொல்லலாமா? அந்தத் தேவர்களிடத்திலுள்ள நீதியைப், பிரத் யக்ஷத்தையே பிரமாணமாகக்கொண்ட மீமாஞ்சகரிடத்தாவது, யுக்தினயத்தையே கொண்ட தார்க்கீகர்களிடத்திலாவது, விதிவாதஞ்சொல்லுகின்ற வைதீகர்களிடத்திலாவது சொல்லலாம். அவர்கள் செய்தியை யார் தான் ஒத்துக்கொள்வார்கள்? முன்சொல்லிய மீமாஞ்சகர் முதலியோர் இவ்வுலகத்தை நடத்த ஒரு கர்த்தா வுண்டென்று சொல்லுகின்றார்கள். அது அறியாமையாய்ச் சொல்லுகின்ற சொல்லென்று நினைக்கின்றேன். ஏனென்றால் இந்த அகண்டமாகிய சகத்துக்குக்கர்த்தா ஒருவனிருப்பானேயானால் ஒரு காரியத்தை இரண்டுபேர் சமமாகச் செய்திருக்கும்போது அந்தக்கர்த்தாவுக்கு ஒருவரிடத்தில் மாத்திரம் விரோதம் ஏன்வரவேண்டும். வேதமும் அறிவுடையதாயொன்றையுஞ் சொல்லவில்லை அவ்வேதத்தைத் தழுவிய சாஸ்திரங்களும் அந்த வேதசாஸ்திரங்களைத் தெரிந்தவர்களும் ஒரு புத்தியாய்ச் சொல்லவில்லை. ஆகையால் உலக தர்மத்தைப் பார்க்குமிடத்துத் தன் தன் சுகத்துக்கேற்றவாறு அப்பொழு தப்பொழுது செய்துகொண் டின்பத்தை யனுபவிப்பதே யன்றி வேறொன்றையுஞ் சிந்திப்பதாகக் காணப்படவில்லை. எவன் ஆசையற்றிருக்கிறவன்? ஆசையற்றவன் உண்டானதுமில்லை. உண்டாகப்போகிறதுமில்லை. சந்திரன் எவ்வளவோ தெரிந்தவனாயிருந்தும் குருபத்தினியைச் சேர்ந்தான். அந்த குருவோ பலாத்காரமாய்த்தன் சகோதரனுடைய பத்தினியைக் கர்ப்பிணியா யிருக்குங்காலத்தில் புணரக்கர்ப்பத்திலுள்ள சிசு இவர் சேராதிருக்கும்படிவிக்னஞ்செய்ய அச்சிசுவைக் குருடாய்ப்போம்படி சபித்தார். கவுதமர்பத்தினியைச் சர்வதருமங்களுந்தெரிந்த இந்திரன் அபகரித்தான். விஷ்ணுநிராபராதியாகியராகுவைச் சக்ரத்தினாற்சேதித்தார். ஹே அம்பிகே! சத்திய விரதனாயும் யாகசீலனாயும் தானவ ஸ்ரேஷ்டனாயும் சர்வ தருமங்களுந் தெரிந்தவனாயும் சாந்தகுணமுள்ளவனாயும் எவ்விடத்திலு மதிப்புள்ளவனாயும் மகாசூரனாயும் ஒரு குற்றமுஞ்செய்யாதிருந்த என் பேரனாகிய பலியினிடத்தில் கபடமாய் வாமனராய் வந்து தர்மந்தெரிந்த சாதுக்கள் மத்தியில் சர்வலோகத்தையும் மோசமாகக் கிரகித்துக்கொண்டார். இவர்களெல்லாம் இவ்வாறு அதர்மமாக நடந்திருக்கப்பண்டிதர்கள் தேவர்களைத் தர்மத்திலிருக்கின்றவர்களென்று சொல்லுகின்றனர். இவர்கள் தருமத்திலிருப்பது எப்பொழுதென்று என்னைக்கேட்டால்

ஜயமுண்டானால். அப்பொழுது தருமமாக விருதுப்பதுமன்றி தரும வார்த்தைகளைச் சுகமாகவும் சாமர்த்தியமாகவுஞ் சொல்லுவர். அபசெயமுண்டானால் அதர்மத்திற் பிரவேசித்து அதர்மவார்த்தையை நன்றாய்ச் சொல்லுவர். இது பொய்யோ மெய்யோ நீயே யோசிக்கவேண்டியது ஓ ஜகன்மாதாவே! உன்னிஷ்டப்படிசெய் அசுரர்களாகிய நாங்களனைவரும் சரணாகதி யடைந்தோம் ரக்ஷித்தாலும் ரக்ஷி பக்ஷித்தாலும் பக்ஷி என்று பிரகலாதன் கூறினன்.

(சாசு-சாஅ.) அது கேட்ட ஸ்ரீ தேவி நீங்களனைவரும் பாதாளம் போய் அவ்விடத்தில் இஷ்டப்படிவாசஞ் செய்யுங்கள். ஓ அசுரர்களே! கோபத்தை விடுங்கள். சம்பத்துக்கும் ஆபத்துக்கும் காலங்காரணமாயுள்ளது. ஆகையால் நீங்கள் க்ஷேமத்தை யடைவதற்குக் காலத்தை யெதிர்பார்த் திருங்கள். சாந்த சித்தர்களுக்கெதுவந்தாலும் எவ்விடத்தி லிருந்தாலும் சுகமே. லோபகுண முள்ளவர்களுக்கு மூன்று புவனத்தை யாளவந்தாலுஞ் சுகமேது பேராசை பிடித்தவர்களுக்கு எவ்வளவு பிரயோசனஞ் செய்தாலுந் திருப்தியேது! சுகமேது! ஆகையால் நான்சொல்லிய ஆஞ்ஞையை யங்கீகரித்து இப்பூமியைவிட்டுப் பாதாளம் போய்ச் சேருங்களென்று திருவாய் மலர்ந்தனள்.

(சாகூ-எக.) இவ்வாறு தேவி அநுக்கிரகஞ்செய்த வார்த்தையின் றிருக்குறிப்பை அசுரர்களுணர்ந்து ஆனந்த சித்தர்களாய் அவ்வாறே செய்கின்றோமென்று சொல்லி நமஸ்கரித்துக் கிருபா நோக்கம் பெற்று பாதாளம்போய்ச் சேர்ந்தனர். மகாதேவியும் மறைந்தனள். அமரர்களும் வயிரத்தைவிட்டுத் தங்களிடம் போயினர். ஓ அரசனே! இந்த உபாக்கியானத்தை யார் கேட்கின்றார்களோ, யார் பாராயணஞ் செய்கின்றார்களோ அவர்கள் சர்வதுக்கங்களினின்று நீக்கி மேலாகியபதத்தை யடைவார்களென்று வியாசர் ஜனமேஜயனுக் கருளினாரென்று சூதபகவான் முனிவர் கட்குக் கூறினர்.

பதினைந்தாம் அத்தியாயம்

தேவீகிருத தைத்யதானவ யுத்தசாந்தி முற்றிற்று.

———————

ஆஉ அத்தியாயம் கரு-க்குச் சுலோகம் (அங்சுஏ)

———

உ

திரிபுரசுந்தர்யை நம:

பதினாறாம் அத்தியாயம்

விஷ்ணு நானாவதாரம்

ஓ மகருஷிகாள்! ஜனமேஜயன் பின் வியாசமுனிவரை வினவியதைச் சொல்லுகிறேன் கேளுங்களென்று சூதபகவான் சொல்லத் தொடங்கினர்.

(க-க0) ஜனமே ஜயன் வியாசபகவானைப் பணிந்து ஓ ஐயா! முநிஸ்ரேஷ்டரே! அற்புதமான கிருத்தியங்களைச் செய்யவல்ல விஷ்ணு மூர்த்திக்குப் பிருகு சாபத்தினால் வரவேண்டிய அவதாரங்கள் எந்த மன்வந்தரத்தி லுண்டாயின? அதனையும், ஓ தர்மஞ்ஞரே! சகல பாவங்களையும் போக்கிச் சகல சுகங்களையுங் கொடுக்கும் அவ்விஷ்ணுவினுடைய பிரசித்தியான அவதார சரித்திரங்கள் எத்தன்மையனவோ அவற்றையும் விரிவாய்ச்சொல்லும் வண்ணம் பிரார்த்திக்கின்றேனென்று கேட்க வியாசர் ஓ ஜனமே ஜயனே! விஷ்ணுவுக்கு எந்தெந்த மன்வந்தரத்தில் எந்தெந்த யுகத்தில் அவதாரங்க ளுண்டாயிற்றோ அவைகளையும் அந்த அவதாரங்களில் என்ன செய்யப்பட்டனவோ அவைகளையுஞ் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன் கேட்பாயாக. சாக்ஷுக்ஷுமன் வந்தரத்தில் முதல் சதுர்யுக கிருதயுதத்தில் தருமரென்பவ ரவதரித்திருந்தார். அவருக்கு விஷ்ணுமூர்த்தி நரநாராயணர்களாகப் பிறந்து பிரசித்தி பெற்றிருந்தனர். பிறகு வைவஸ்வதமன் வந்தரத்தில முதல்சதுர்யுக கிருதயுகத்தில் அத்திரி முனிவருடைய பத்தினியாகிய அநுசூயை தனக்குப் புத்திரர்களாய்த் திரிமூர்த்திகளும் வரப்பிரார்த்தித்த அப்பொழுது நாராயணர் புத்திரராகப் பிறந்து தத்தாத்திரேயரென்று பிரசித்தி பெற்றிருந்தனர். நான்காவது சதுர்யுக கிருதயுகத்தில் இரணியகசிபனைச் சங்கரிக்கு நிமித்தம் ஆச்சரியகரமான நரசிங்கராகத் தோன்றினர்.

(கக-உக.) அதற்கு மறுயுகத்தில் காசிபருக்கு வாமனராகப் பிறந்து பலிச்சக்ரவர்த்தி யக்ஞஞ்செய்யுஞ் சமயத்திற் சென்று ராஜ்யத்தை வஞ்சனையா யபகரித்து அவனைப் பாதாளத்திலமுத்தினர். பத்தொன்பதாவது சதுர்யுகத்தில் வரும் திரேதாயுகத்தில் சமதக்கினி மகருஷிக்குப் பரசுராமராகப்பிறந்து க்ஷத்திரியர்களை எல்லாங் கொன்று சகல ராஜ்யத்தையும் காசிபருக்குத் தானஞ் செய்தனர். அப் பரசுராமாவதாரம் மிகப் பரிசுத்தமானதென்று சொல்லுகின்றனர்.

முன்சொன்ன திரேதாயுகத்தில் ரகுவம்சத்தில் தசரதனுக்கு ராமனாகப்பிறந்தனர். இருபத்தெட்டாவது சதுர்யுக துவாபரத்தில் நர நாராயணர்கள் கிருஷ்ணார்ச்சுனர்களாய்ப் பூபாரத்தை யொழிக்கு நிமித்தந்தோன்றிக்குருக்ஷேத்திரத்தில் பயங்கரமாகிய யுத்தத்தைச் செய்தார்கள். இவ்வண்ணம் யுகந்தோறும் விஷ்ணுமூர்த்தி அந்தந்தப் பிரகிருதிக் கேற்பப் பிறந்து அவ்வப்பிறவிக்குரிய கிருத்தியங்களைச் செய்திருக்கின்றனர். இவரைப்போலவே இவ்வுலகத்திலுள்ள யாவரும் அவரவர் பிரகிருதிக்கேற்றவாறு பிறந்து அவரவர் செய்யவேண்டிய தொழில்களைச் செய்துவருகின்றனர். ஆகவே பிரகிருதிவசப்பட்ட விஷ்ணுமூர்த்தி முதலாகச் சொல்லப்பட்ட யாவரும் அந்தப் பிரகிருதியினால் பிரமிக்கப்பட்டு வேண்டுதல் வேண்டாமையாயுள்ள விஷயகோடிகளாற் சுகதுக்கங்களை யநுபவித்து வருகின்றனர்.

(உஉ-உஎஏ) எல்லா வுலகங்களுக்கும் ஆதியாயும், எங்கு நிறைந்தவராயும், மனதுக் கெட்டாதவராயும், நாசரகிதராயும், ஆதாரமில்லாதவராயும், ரூப மில்லாதவராயும், ஆசை யில்லாதவராயும், பராத்பரராயுமுள்ள பரமாத்மா யாதொரு பிரகிருதியினுடைய *உபாதிபேதத்தால் மூன்றுவிதமாகப் பிரகாசிக்கின்ற மும்மைத் தேவராய் விளங்குகின்றார். சர்வாபீஷ்டப்பிரதையாகிற அந்தத்தேவியும் அந்தப் பிரகிருதியானது சிருட்டிகால விசேடத்தில் பின்ன பின்னமா யெப்படி எப்படி பிரகாசிக்கின்றதோ அப்படியப்படியே சகத்தை நடத்துகின்றாள். அந்த மூன்று ரூபமாயுள்ள சகன்மோகினியாகிய தேவி பிரளயகாலத்தில் சங்கரிக்கின்றாள். பிரம விஷ்ணுருத்திரரும் அந்தச் சங்காரகாரணியோடுங் கூடினவர்களாய்ச் சகத்தைமுத்தொழிற் படுத்திவருகின்றனர். அந்தச் சத்தியேபூர்வத்தில் ராமமூர்த்தியைச் சிருட்டித்துத் தேவர்களை ரக்ஷிக்கும்பொருட்டு ஓரிடத்தில் அசுரர்களைத் தாபித்தனள். இவ்வாறு சகத்தில் சுகதுக்கங்களோடு கூடினவர்களாகிய பிராணிகள் விதியினாலும் தந்திரத்தினாலும் கட்டுப்பட்டவர்களா யுண்டாகின்றனர்.

பதினாறாம் அத்தியாயம்

விஷ்ணோர்நானாவதார கதனம் முற்றிற்று.

ஆஉ அத்தியாயம் கசா-க்குச் சுலோகம். (அசாஉ.)

---

* முக்குணபேதம்

உ

திரிபுரசுந்தர்யை நம:

பதினேழாம் அத்தியாயம்

கிருஷ்ணாவ தாராதி பிரஸ்னை.

ஓ மஹருஷிகாள்! இனி கிருஷ்ணருடைய அவதார முதலியவகளைப் பற்றி ஜனமேஜயன் வியாசரை வினவிய வரலாற்றைக் கூறுகிறோம் கேளுங்கள்.

(க-சா) ஜனமேஜயன் வியாசரை நோக்கிப் பதரிகாச்சிரமத்தில் ராகத்து வேஷரகிதராகிய நரநாராயணருள் சாந்தமூர்த்தியாகிய நாராயணரை அப்சர ஸ்திரீகள் காமமிகுதியினால் அபேக்ஷித்தார்களென்றும், அக்குறிப்பையறிந்த அவர் அவர்களைச் சபிக்க எத்தனித்தாரென்றும், அதனையறிந்த நான் சபிக்கவொட்டாது தடுத்தாரென்றும், அப்போது நாராயணர் என் செய்வதென்று வியாகுல மடைந்தாரென்றுங் கூறினீரல்லவா? பின்னர் அந்த நாராயணர் என்ன செய்தார்? இந்திரன் வேண்டுகோளால் இவரை யபேக்ஷித்த அந்த அப்சரஸ்திரீகளுக்கு என்ன செய்தார்? இந்தச் சரித்திர விவரங்களைக்கேட்க ஆவலுடையவனா யிருக்கிறேன். ஆகையால் தேவரீர் அவைகளை அநுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க வியாசர் ஓ தருமந்தெரிந்த ஜனமே ஜயனே! மஹாத் மாவாகிய நாராயணருடைய சரித்திரத்தை விரிவாகச் சொல்லுகிறேன் கேட்பாயாக.

(எ-உக) சபிக்கவேண்டுமென்கிற எண்ணமுடையவராயும் நரனால் தடுக்கப்பட்டவராயுமிருந்த நாராயணர் சமாதானமடைந்து கோபத்தையொழித்துப் புன்சிரிப்புடையவராய் அந்த அப்சரஸ்திரிகளைப் பார்த்து ஓ அப்சரஸ்திரீகளே! இந்தச் சென்மத்தில் நாங்களிருவரும் ஸ்திரீசம்பந்தஞ் செய்வதில்லையென்று பிரதிக்ஞைசெய்திருக்கிறோம். தருமந் தெரிந்தவர் விரதபங்கஞ் செய்யாரல்லவா? ஆகையால் என் விஷயத்தில் தயைசெய்து சுவர்க்கம் போய்விடுங்கள். காமத்தில் மனஞ்செல்ல வொட்டாது தடுத்திருக்கிற வெனக்குப் புணர்ச்சியென்கிற தொழிலில் எவ்வாறு முயற்சியுண்டாகும். புணர்ச்சிக்கு ஆதாரமாகிய காமமில்லாத நான் உங்களை எப்படி கூடுவேன். காரணமன்றியில் காரிய நிகழாதென்று பெரியோர்கள் சாஸ்திரங்களில் நிச்சயித் திருக்கின்றனரல்லவா? ஸ்திரீ சங்கமமாகிய காரியம் காமமென்கிற காரணமில்லாம லாகுமா? ஓ ஸ்திரீகளே! இனி நான் பூமியில்

எப்போது பிறக்கப்போகின்றேனோ அப்போது உங்களுடைய வஞ்சனையற்ற பிரீதிக்குப் பாத்திரனாய் உங்கள் கணவனாகிறேன். எனக்கப்பொழுது தருமங்கெடாது. உங்களை யநுபவிக்கும் பாக்கியத்துக் குரியவனாகவு மிருப்பேன். ஆகையால் நீங்கள் என்னிடம் இரக்கமுடையவர்களாய் இப்பொழுது என் விரதத்துக்குப் பங்கந்தேடாமல் ரக்ஷிக்கவேண்டும். எனக்கு மறுசன்மம் இருபத்தெட்டாவது சதுர்யுகத்தில்வரும் துவாபரத்தி லுண்டாகப்போகிறது. அப்போது நீங்களுந் தனித்தனியே அரசர்களுக்குப் புத்திரிகளாய்ப் பிறந்து எனக்கு மனைவிமாராக வருவீர்களென்று மிகவு மினியசொல்லோடு சமாதானஞ்செய் தனுப்பி விட்டனர். அந்த ஸ்திரீகளும் மனதில் வருத்த மில்லா தவர்களாய்த் தங்களிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

நாராயணரிடத்தி னின்றும் விடைபெற்றுப்போன அந்த ஸ்திரீகள் சொர்க்கலோகம் போய்ச்சேர்ந்து தங்களரசனாகிய இந்திரனிடத்தில் நடந்த செய்திகள்யாவுந் தெரிவித்தனர். இந்திரன் அந்த நரநாரயணர்களுடைய மகிமையைத் தன்னுடைய அப்சரஸ்திரீகளாற் கேள்விப்பட்டு அதிசயமடைந்து அவர்களைப் பார்த்து நான் அழகிற்சிறந்த அப்சரஸ்திரீகளாகிய உங்களையனுப்ப அவர்கள் உங்களைக்கண்டுமயங்காம லிருந்தார்களல்லவா? ஆஹா அவர்களுடைய தைரியமே தைரியம். அவர்களுடைய தபோபலமே தபோபலம் என்று சந்தோஷமடைந்தனன். அங்கு நாராயணரும் ஸ்திரீகளையநுப்பிய பின்னர் தவத்திலிருந்தனர்.

(உஉ-உஅ) ஓ அரசனே! இதுவரையில் மகாமுனிவர்களாகிய நர நாராயணர்களுடைய அற்புதமாகிய சரித்திரங்களையெல்லாமெடுத்துச் சொன்னேன். இனிப் பிருகுவினுடைய சாபவசத்தால். நான் அர்ச்சுனனாகவும் நாராயணர் கிருஷ்ணராகவும் மகாவீரர்களாய் அவதரித்த அந்த வரலாற்றைச் சொல்லுகிறே னென்று வியாசமுனிவர் கூறவும் ஜனமேஜயன் ஓ முனிபுங்கவரே! எனக்கிப்போது சிலசந்தேகங்கள் தோன்றியிருக்கின்றன. ஆகையால் நீர் சொல்லத்தொடங்கிய கிருஷ்ணாவதாரத்தின் வரலாற்றை விரிவாய்ச்சொல்லவேண்டும். என்னையெனில் தேவகி தேவியும், வசுதேவரும் மகா பலவான்களாகிய பலராமரையும் கிருஷ்ணரையும் பெறும்படியான பாக்கியம் பெற்றும் கம்சனென்கிறவனால் காலில் விலங்கிடப்பட்டு அநேகவருடகாலம் கஷ்டத்தை யநுபவித்தார்களல்லவா? அவ்விருவரும் விஷ்ணு மூர்த்தியினுடைய அவதாரங்களில் எண்ணப்பட்டவர்களல்லவா? கிருஷ்ணர்

மதுரைமாநகரத்திற் பிறந்து உடனே கோகுலத்தவர்க் கிடமாகிய ரேபல்லையென்கிற விடத்திற்போய் ஏன் வளர்ந்தனர்? இவருக்கு முன்பிறந்த அறுவரும் கம்சனால் ஏன் இறந்து போயின் தாம் பிறந்த மதுரைக் கதிபதியாயிருந்த கம்சனைக் கொன்றபின்னராவது தாம் மதுரையில் வாசஞ் செய்யாமல் துவாரகையில் ஏன் வாசஞ்செய்தனர்? அந்த மதுரையோ தன் தகப்பன் முதலிய மூதாதைகளால் பரிபாலிக்கப் பட்டு வந்ததாயும், சப்தபுரியில் ஒன்றானதாயும், சகல செல்வங்களும் நிறைந்துள்ளதாயு முள்ளது. அந்த அருமையான நகரத்தைவிட்டுச் சாமான்யமான துவாரகையில் ஏன்போய்ச் சேர்ந்தனர்?

(உகூ-சுகூ) இதுவுமன்றி அந்தக் கிருஷ்ணருடைய குலமானது பிரமணசாபத்தினால் ஏன் நாசத்தையடைந்தது? பாவிகளுடைய மிகுதியினால் பூதேவி தாங்கப்பெறாது பாரத்தை யடைந்து துக்கிக்க அதை நிவிர்த்திசெய்யும்பொருட்டுக் கிருஷ்ணமூர்த்தியா யவதரித்துச் சகல சாமர்த்தியமும் படைத்துப்பின்னர் அருச்சுனனை நிமித்தமாக வைத்துக்கொண்டு அந்தப்பூபாரத்தைப் போக்கி உலகிலுள்ளார் சரீரத்தைப் பூமியில்விட்டு மேலுலகம் போவது போல் சரீரத்தை இவ்வுலகில் விட்டுச் சுவர்க்கலோகம் போய்ச் சேர்ந்தனரல்லவா? அவர்போனபின்னர் அவருடைய பத்தினிமார்கள் அடிபட்டு உதைபட மானபங்கத்தையடைந்தார்களல்லவா அப்படி செய்யவல்ல கள்வர்களைப் பூபாரநிவர்த்திச் செய்கிறேனென்று பாபிக ளனைவரையு மொழித்தபோது இவர்களை ஏன் ஒழிக்கவில்லை? பீஷ்மர், துரோணர், கர்னன், பாஹுலிகன், விராடன், விகர்னன், திருஷ்டத்துய்மனன், சோமதத்தன் என்பவரெல்லாம் தவத்திலும் தானத்திலும் நீதியிலும் தருமத்திலுஞ் சிறந்து பூமிக்குப் பூஷணமாக விருந்தவர். இவர்களையெல்லாம் இவர் பூமிக்குப் பாரமாகவெண்ணித் தொலைத்தனரே? இவர்கள் தானா பூமிக்குப் பாரமாயிருந்த பாவிகள்? இவருடைய மனைவிமார்களைப் புரட்டிப் புரட்டி யடித்தவர்களாகிய கள்வர்கள்தானா பூதேவியினாற் றாங்கப்பட்ட புண்ணிய சீலர்கள்? அதனாற்றான் அவர்களைக் கொல்லாமல் விட்டனரோ? கிருஷ்ணருடைய பத்தினிமார்களெல்லாம் பதிவிரதைகளாயிருக்க அவர்கள் அந்தக் கள்வரால் ஏன் துன்பத்தை யடைந்தார்கள்? இவர் பிதாவாகிய வசுதேவர் புத்திரசோகத்தால் வருத்தமடைந்தவராய் துர்மரணமாக ஏன் பிராணனை விட்டனர்? இவருடைய உடன்பிறந்தாளாகிய சுபத்திரையினுடைய குமாரனாகிய அபிமன்யு யுத்தத்திற்போய் ஏன் மாண்டான்? இந்தக்கிருஷ்ணர் எல்லாவிதத்திலும் சமர்த்தருந் தெய்வத்தன்மை யுடையவருமென்று சொன்னால் தெய்வசங்கல்பமாய் நடப்பதாகிய செயலை மாற்றுவதற்கு

ஏன் முடியாமற்போயிற்று? உக்கிரசேனனுக்கு இவரேன் அடிமையாளாயினர்? இவர் குடிபுகுந்த யாதவர்களுக்குச் சாபமும், பிரபாசதீர்த்தக்கரையில் மரணமும், அந்த யாதவபத்னிகளுக்கெல்லாந் திருடரால் உதையும் ஏன் வந்தன? இவ்விடத்திற் பிரீதியுள்ளவர்களாய் இவர் சொல் வழிகோணாது நடந்தவர்களாயிருந்த பாண்டவர்கள் உலகத்தில் ஒருவரும் அநுபவியாததும், மாற்றக்கூடாததுமான பெருந்துன்பங்களை ஏன் அநுபவித்தனர்? இலக்குமியினுடைய அம்சமாயும் அக்னியிற் பிறந்தவராயும் பதிவிரதையாயுமிருந்த திரௌபதி எந்தப் பதிவிரதையும் அடையாததுக்கத்தை ஏன்டைந்தாள்? அந்தோ! அவளடைந்த துக்கத்தை என்னவென்று சொல்லுவேன். பெருங்கூட்டமாகிய சபைநடுவில் வரலாயினள். வந்த சமயமோ ரஜஸ்வலையாய் வரக்கூடாத சமயம். வரக்கூடாத சமயத்தில் வந்தபோதிலும் மரியாதையாக வந்தனளோவென்றால் துஷ்டனாகிய துச்சாதனன் கூந்தலைப் பிடித்திழுத்துவர வந்தனள். இதுநிற்க. வனவாசத்தில் இந்த பதிவிரதையைச் சிந்துபதியானவன் பலாத்காரமாய்க் கையைப் பிடித்திழுத்து ரதத்தி லேற்றிக்கொண்டனன். இப்படியே கீசகனால் பாதைப்பட்டு ரோதனைப்பட்டிருந்தனள். இவ்வாறான துன்பங்களை ஏனனுபவிக்க வேண்டும்? இவர்களுடைய பிள்ளைகளாவது க்ஷேமமாயிருந்தனரோவென்றால் அந்தப் பிள்ளைகளும் பாசறையிலுறங்கிக்கொண் டிருக்கும்பொழுது அஸ்வத்தாமனால் கொல்லப்பட்டனர்.

இன்னமும் இந்தக்கிருஷ்ணர் பூர்வஜன்மத்தில் நாராயணருஷியாக விருந்தகாலத்தில் எல்லாவுயிர்களிடத்தும் சமானமான காருண்ணிய முடையவராயிருந்து இந்தச்சன்மத்தில் அக்குணங்களெல்லாம் மாறுபடுவதற் கென்னகாரணம்? உலகில் யாவரும் சுகமும் துக்கமும் மாறிமாறி யநுபவிப்பது இயற்கை. ஈஸ்வரனென்று பிரசித்திபெற்ற விஷ்ணுமூர்த்தி சீவர்களைப்போலச் சுகதுக்கங்களை யநுபவிக்க எப்படி வந்தது?

ருக்மணியை வீரதர்மத்தால் தான் கொள்ளுகிற காலத்தில் சராசந்தனுடைய பயத்தினால் ஒருவருக்குந் தெரியாமல் துவாரகைக்குத் திருடனைப்போற் போயினர். இந்தக் கிருஷ்ணர்செய்த விவகாரங்களெல்லாம் உலகதருமத்துக்கு விரோதமாகவே யிருக்கின்றன. இவருக்கு ஈஸ்வரசக்தி யுண்டென்று பிரசித்தியாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவுண்மையானால் அசுர்களை அவர்களுடைய ஆயுள்முடிவில் அவர்களை விளையாட்டாகக் கொல்லமுடியாமல் மிகவுங் கஷ்டப்பட்டுச் சங்கரித்திருக்கின்றனர்.

(ரு0-ருரு) ஓ பிராமணோத்தமரே! இவைகட்கெல்லாம் காரணமெதுவோ அதைத் தயைசெய்து சொல்வதோடு அவரிடத்திலெனக்குண்டாகிய சந்தேகங்களெல்லாம் நிவிர்த்தியாம் வண்ணம் அவருடைய சரித்திரங்களை விரிவாய்ச்சொல்லவேண்டும். எல்லாந் தெரிந்தவராகிய ஓ முனிவரே! எனக்குச் சந்தேகங்கள் பலவாயிருந்தபோதிலும் அவற்றுள் ஒன்றுமாத்திரம் என் மனதைவிட்டு நீங்கவேயில்லை. அதை மாத்திரம் அவசியம் நிவிர்த்திசெய்து என்னைச் சந்தேக மற்றவனாய்ச் செய்யவேண்டும். என்னையெனில் திரௌபதை ஐவரைக் கணவனாகக்கொண்ட விஷயத்தில் உலகில் குறைவாக ஏன் சொல்லுகிறதில்லை? சொல்லாதகாரணமென்னை? பண்டிதர்கள் சத்புருஷர்களுடைய சதாசாரத்தைத்தான் பிரமாணமாகச் சொல்லுகிறார்கள். அங்ஙனமிருக்கச் சர்வ சாத்திரங்களாலும் பிரசித்திபெற்ற பாண்டவர்கள் மிருக தர்மத்தைப் போல் ஒருத்தியை எவ்வாறனுபவித்தார்கள்! இவ்வுலகில் வசுவினுடைய அம்சமாகிய பீஷ்மராதியராகிய கோளகர்களையுண்டுபண்ணிவம் சோத்தாரணஞ்செய்யவேண்டியகாரணமென்னை? வியாசரே! பெரியோர்களால் நியமிக்கப்பட்டதர்மம் ஒன்றேனும் நன்றாயில்லை அசங்கதமில்லாத வேறு எந்தவிதத்தினாலாவது புத்திரோற்பத்தியைச் செய்துகொள்ளக் கூடாதாவென்று வியாசபகவானை அரசன் வினவினரென்று சூதபகவான் மகருஷிகளுக்குக் கூறினார்.

பதினேழாம் அத்தியாயம்

கிருஷ்ணாவ தாராதி பிரஸ்னை முற்றிற்று.

———

ஆஉ அத்தியாயம் கஎ-க்குச் சுலோகம் (கூகஎ.)

———

உ

திரிபுரசுந்தர்யை நம:

பதினெட்டாம் அத்தியாயம்

கிருஷ்ணாவதார காரணம்.

(க-கசா) ஓ அரசனே! கிருஷ்ணடைய சரித்திரத்தையும் தேவியினுடைய அற்புத விலாசத்தையுஞ் சொல்லுகிறேன் கேட்பாயாக. பூமிதேவியானவள் அதிபாரத்தினால் சுமக்கலாற்றாது தீனசுபாவத்தையடைந்து புலம்பிக்கோருபதாரிணியாய் மிகபயத்தோடு சுவர்க்கலோகம் போய் இந்திரன் முன்னே நின்றனள். இந்திரனவளைப்பார்த்து ஓ பூதேவியே! உனக்கு என்னபயம்? யார்

உன்னைத் துன்பப் படுத்துகின்றனரென்று கேட்கப் பூதேவி ஓ தேவராஜனே! என் துயரத்தைச் சொல்லுகிறேன் கேட்டருளுக. மகா பாபிகளான சராசந்தன் சிசுபாலன் காசிராஜன் கம்சன் நரகாசுரன் சாளுவதேசத்தரசன் கேசிராஜன் தேனுகன் வத்ஸகன் என்று சொல்லப்பட்ட இவர்களெல்லாம் சர்வதர்ம சூன்யர்களாயும் ஒருவருக்கொருவர் விரோத முடையவர்களாயும் பாபநடத்தையுள்ளவர்களாயும் மதோன் மத்தர்களாயும் யமஸ்வரூபிகளாயும் உலகில் அரசர்களா யிருக்கின்றன ராகையால் நான் பாரமுடையவளாய் வருந்துகின்றேன். ஓ பிரபுவே! எங்கேபோவேன்! என்னசெய்வேன்!! முன் என்னை இரணியாட்சன் எந்தக்காரணத்தினாலோ அபகரித்துக்கொண்டு மகா சமுத்திரத்தில் மூழ்கினான் அப்பொழுது விஷ்ணுமூர்த்தி வராகரூபமெடுத்து அவ்வசுரனைக்கொன்று என்னை மீட்டு இவ்வுலகில் நிலையாகவாழ்ந் துலாவச்செய்தனர். அவரப்படிச் செய்யாராயின் நான் பாதாளலோகத்தில் சுகமாய்ப் படுத்துறங்குவேன். இப்பொழுது துராத்மாக்களுடைய பாரத்தை வகிப்பதற்கு சக்தியில்லாதவளாய் நான்படும் பாட்டை என்னவென் றெடுத்துச்சொல்வேன். இப்படிப்பட்ட பெருந்துன்பமும் எனக்குவருமா. இருபத்தெட்டாவது கலிபுருஷனான துஷ்டன் வந்து கொண்டே யிருக்கிறான். அவன் வந்துவிட்டாலோ நான் பாதாளந்தான் போய்விடுவேன். ஆதலால் தேவேந்திரனே! துக்க சமுத்திரத்தின் கரையைக் காணாது பாவபாரத்தா லாழ்ந்துகிடக்கின்ற என்னைக் கரையேற்றுவாய் உன்னைக் கும்பிடுகிறேன் என்று புலம்ப இந்திரன் ஓ பூதேவீ! உனக்கு நானென்ன செய்வேன் நீ பிரமனைச்சரணமாக அடைவாய் நானும் வருகிறேன் அவர் உன் துக்கத்தைப் போக்குவாரென்றனன். பூதேவி அதைக் கேட்டு வேகமாய்ப் பிரமலோகம் போய்ச்சேர்ந்தாள். இந்திரனும் சகல தேவர்களோடும் போய்ச்சேர்ந்தான்.

(கஎ-உசு) பிரமதேவன் பூமிதேவியைப்பார்த்து ஓ பூமிதேவியே? எதற்காக அழுகிறாய்? உனக்கென்ன துக்கம் வந்தது? சொல்வாயென்ன அவள் வரப்போகிறகலிபுருஷனுக் கஞ்சினவளாய்ப் பயப்படுகிறேனென்று தன்குறைபாடுகளைப் பலவாறாகவெடுத்துக் கூறப் பிரமன் ஓ பூமிதேவியே! உன்பாரத்தைப் போக்குஞ் சமர்த்தனானல்ல சகலதேவர்களுக்கும் பிரபுவான விஷ்ணுவினிடம் நாமனைவரும் போவோமென்று யாவரையுமழைத்துக்கொண்டுவிஷ்ணு லோகஞ்சென்று அடியில்வருமாறு வேதவாக்யங்களால் மிக்கபக்தியுடனே தோத்திரஞ்செய்தனர்.

(உரு-ருகூ) நீ ஆயிரந்தலையும் ஆயிரம் நேத்திரமும் ஆயிரங்காலு முள்ளவன், நீ வேதபுருஷன், நீ அநாதியானவன், தேவர்களுக்குத் தேவன், எது நடந்ததோ எது நடக்கப்போகிறதோ எது நடந்து கொண்டிருக்கிறதோ அவையெல்லாம் உன்னாலன்றியில்லை. எங்களுக்கு அமரத்துவம் கொடுத்ததும் நீ தான். இவ்வளவு மகிமையும் உனக்குண்டு. இம்மூன்றுலோகத்தில் உன் மகிமையறியா தவனெவனிருக்கின்றான். சகலலோகங்களையுஞ் சிருட்டிக் கின்றவனும் ரக்ஷிக்கின்றவனும் சங்கரிக்கின்றவனும் நீ தான். சர்வத்துக்கும் ஈஸ்வரன் நீ தான் என்று தோத்திரஞ்செய்ய விஷ்ணு மூர்த்தி கருடாரூடராய்ப் பிரசன்னராகித் தரிசனந்தந்து மலர்ந்த முகத்தோடு தேவர்களை நோக்கி அவர்களுடைய யோகக்ஷேமங்களை வினவிப் பின்னர் வந்த செய்தி என்னென்றனர். பிரமன் விஷ்ணுமூர்த்தியை நமஸ்கரித்துத் தேவரீர் பூமிதேவியின் துக்கத்தைக்கேட்டு அதனைப்போக்கும் வகையை எண்ணி இப்பொழுது துவாபராந்தமாயிருப்பதால் பூமியில் ராக்ஷசாம்சங்களாய்ப் பிறந்திருக்கிற துஷ்ட மன்னர்களைக் கொன்று பூபாரத்தைக்கழிக்க வேண்டுமென்றனன்.

விஷ்ணுமூர்த்தி ஓ பிரமனே! இவ்விஷயத்தில் நான் சுதந்தரனல்ல நீயுமாகாய் உருத்திரருமாகார் ஏனைய இந்திராதியருமாகார் இப்பிரபஞ்சம் யோகமாயா சொரூபிணியாயுள்ள மகாதேவியின் வசமல்லவா! அவள் முதலில் எவ்வண்ணம் செய்யவேண்டுமென் றிச்சிக்கின்றாளோ அவ்வண்ணஞ் செய்கிறாள். ஆகவே எனக்கென்ன சுதந்தரமிருக்கின்றது, எனக்குச் சுதந்தரமிருக்கும் பக்ஷத்தில் மகாசமுத்திரத்தில் கூர்மமாகவும் மச்சமாகவும் ஆவேனா! அந்தத் திரியக்யோனிகளில் என்ன சுகம்! என்ன கீர்த்தி! என்னபோகம்! என்ன புண்ணியம்! வராகமாகவும் நரசிங்கமாகவும் எதனாலானேன்! சமதக்னிக்குப் புத்ரனாகப் பிறந்த நான் பூமியில் பாவகர்மமென்று சொல்லத்தக்க கொடுஞ்செயலை மேற்கொண்டுக்ஷத்திரியவம்சமே யில்லாமற் போகும்வண்ணம் கர்ப்பத்திலிருந்த சிசுவையும் ஏன் கொன்றுதொலைத்தேன். இராமனாய்ப் பிறந்து பொன்னாடையிழந்து மரவுரிதரித்து மணிமுடிபோக்கிச்சடைமுடிபுனைந்து காலால் நடந்து தண்டகவனம் புகுந்து மாநுட சஞ்சாரமில்லாத காடெல்லாஞ் சகாயமில்லாமற் திரிந்து அன்னமென்பதே யில்லாமல் நாணமென்பது சிறிதுங்கொள்ளாமலுலாவினேன். அதுமட்டோ மாயையினால் வந்த பொன்மானை மாயையென்றறிந்து கொள்ளும் வகையற்றுச் சீதையைக் குடிசையில் விட்டு அதன்பின்றொடர்ந்துபோனேன். லக்ஷ்மணனும் என்னைப் போலவே அந்தச் சீதையைவிட்டு மாயாமோகத்தால்

வந்துவிட்டான். கபடனான ராவணனும் சன்னியாசி வேடங்கொண்டு துக்கித்துக் கொண்டிருக்கிற சீதையை எடுத்துக்கொண்டு போய்விட்டான். அதற்கு நான் துக்கிதனாய்க்காடெல்லாமழுதேன். பின்காரியசாதனத்தின் பொருட்டுச் சுக்ரீவனைச் சினேகஞ்செய்து கொண்டேன். வாலியை அனியாயமாய்க் கொன்று வானராளை யெல்லாஞ் சேர்த்துக்கொண்டு லங்கைக்குச்சென்று அங்கு நாகபாசத்தால் இருவருங் கட்டுப்பட்டிருக்க வானரங்கள் எங்களைப் பார்த் தாச்சரியமுற் றிருக்குந்தருணத்தில் கருடன் எங்களிருவரையும் விருவித்தான். அப்போது நான் ராஜ்யத்தைப் பரிகொடுத்தோம், காட்டில் வசித்தோம், பிதா இறந்துபோயினர். இஷ்டையான மனைவியையும் ராக்ஷசன் கவர்ந்து கொண்டனன், யுத்தமோ கஷ்டத்தையே கொடுக்கிறது, இனித் தெய்வமென்னசெய்யப் போகிறதோ தெரியவில்லை என்று மகத்தான சிந்தாகுலமுடையவ னாயினேன்.

ஓ தேவர்களே! முதலில் ராஜ்யமில்லாமல் காட்டுக்குப்போகும் படியான பெருந்துக்க முண்டாயிற்று. அப்பொழுது ராஜபுத்திரியான சீதையுடன் காட்டைநோக்கிப் புறப்படுகிற எனக்குத் தகப்பனார் ஒரு சொத்தைக்காசுங் கொடுக்கவில்லை. கால்நடையாய்ச் சகாயமில்லாமல் தனஹீனனாய்க் காட்டுக்குப்போய் க்ஷத்திரியதர்மத்தைவிட்டுப் பதினான்குவருடம் வேடனைப்போல் காலங்கழித்தேன். தெய்வவசத்தால் ராக்ஷசனாகிய இராவணனைக் கொன்று சீதையை மீட்டு அயோத்திக்குவந்து சிலநாள் சம்சார சுகத்தைப் பூர்ணமாயனுபவித்தேன். இப்படி யநுபவித்திருக்கும்போது லோகாபவாதத்திற்குப் பயந்து சீதையைக்காட்டில்விட்டு மறுபடியும் மனைவியைப் பிரிந்ததனாலுண்டாகிய துக்கத்தையடைந்தேன். பின்னர் அந்தச் சீதையும் பூமியைப் பிளந்துக்கொண்டு பாதாளம்போய் விட்டாள். இவ்வாறு ராமாவதாரத்தில் மகத்தான துக்கத்தை யநுபவித்தேன். இவையெல்லாம் பரதந்திரத்தால் நேரிட்ட துக்கமல்லவா? சுதந்தரமுடையவனாயிருப்பேனானால் அவ்வாறான துக்கத்தை அநுபவிப்பேனா? பிறகு காலவசத்தால் சகோதரர்களுடன் சுவர்க்கத்தையடைந்தேன். இவ்வாறு பரதந்திரனாயிருக்கிற நான் சொல்லத்தக்கது என்னவிருக்கிறது? ஓ பிரமனே! கேளும். நீயும் அப்படித்தான் ருத்திரரும் அப்படித்தான் சமஸ்ததேவர்களும் அப்படித்தானென்று விஷ்ணுமூர்த்தி பிரமனை நோக்கிக் கூறினர்.

பதினெட்டாம் அத்தியாயம்

கிருஷ்ணாவதார காரணம் முற்றிற்று

ஆஉ அத்தியாயம் பதினெட்டுக்குச் சுலோகம் (கூஎசா)

உ

திரிபுரசுந்தர்யை நம:

பத்தொன்பதாம் அத்தியாயம்

விஷ்ணுவாதி கிருததேவீ ஸ்துதி

இனி விஷ்ணுமூர்த்தி பிரமனைநோக்கித் தேவியினுடைய மகிமையை எடுத்துக்கூறி நாமனைவரும் அந்தத்தேவியைத் துதிப்போமென்று துதித்து அனுக்கிரகம் பெற்றவரலாற்றைக் கூறுகிறேனென்று சூதபகவான் கூறத்தொடங்கினர்.

(க-கூ) விஷ்ணுமூர்த்தி பிரமனைநோக்கி யாவருஞ்சுந்தரஹீன ரென்று சொல்லிப் பின்னுஞ் சொல்லுகின்றார். ஓ பிரமனே! மாயையினால் மோகிதமான ஆன்மாக்களனைவரும் உண்மையை யறிகின்றாரில்லை. நாமும் மாயாக்கிராந்தாளாய்ச் சாந்தராயும் சச்சிதானந்த சொரூபராயும் அழிவில்லாதவராயும் ஜகத் குருவாயுமிருக்கின்ற அந்த உண்மையாகிய புருஷரை நினைக்காமல் நான் பிரமா நான் விஷ்ணு நான் ருத்திரன் என்றெண்ணச்செய்யு மோகமடைந்தவர்களாய் மூலகாரணமா யிருக்கின்ற அவரை யறியாம லிருக்கின்றோ மல்லவா? யான் யாதொரு மூலபுருஷனுடைய மாயையினால் மோகிக்கப்பட்டு அந்த மாயாவியான பரமாத்மாவினுடைய சுவாதீனனாய் மரப் பதுமையைப்போ லிருந்து கொண்டிருக்கிறேன். கற்பத்தினுடைய ஆதியில் நீயும் நானும் ருத்திர மூர்த்தியும் பாற்கடலில் மந்தாரவிருக்ஷங்கள் நிறைந்துள்ள மணித் வீபத்தினடுவே விளங்கும் சபாமண்டபத்தில் பரமாத்மா மாயாவிபூதியைச் செய்தற்குச் சத்தியாய்ப் படைத்திருக்கிற பராசத்தியை பார்த்திருக்கிறோமல்லவா? ஆகையால் மங்களஸ்வ ரூபிணியாயும் சர்வ காமத்தையும் கொடுப்பவளாயும் விளங்கும் அந்த ஆதி மாயாசத்தியை நாமனைவரும் இப்போது ஸ்மரிக்க வேண்டுமென்று விஷ்ணுமூர்த்தி சொல்லப் பிரமன்முதலிய தேவர்கள் அநாதியான அந்த லோக மாயாதேவியை மனத்தினால் சிந்தித்துத் தியானித்தனர். தியானித்த மாத்திரத்தில் தேவியானவள் பாசாங்குசத்தையும் அபயமுத்திரையுங் தரித்தவளாய்ச் செம்பருத்திமலர் போலுஞ் சிவந்த நிறமுடையவளாய்த் தரிசனங் கொடுத்தனள். தேவர்கள் அந்தமனோகரமான தரிசனத்தைக்கண்டு ஆனந்தமடைந்தவர்களா யடியில்வருமாறு தோத்திரஞ் செய்யத் தொடங்கினர்.

(௧0-௨0) *சிலந்திப்பூச்சியினின்று நூலான எப்படி வெளிப்படுகிறதோ அக்கினியிலிருந்து நெருப்புப்பொறிகள் எப்படிசிதறுகின்றனவோ அப்படி இவ்வுலகெல்லாம் எந்தத் தேவியினிடத்திலிருந்து புறப்பட்டதோ அந்தத்தேவியை நமஸ்கரிக்கின்றோம், எந்தத்தேவியினுடைய மாயாசத்தியினால் இந்தத் தாவரசங்கமமான சகலசகத்தும் கட்டப்பட்டிருக்கின்றதோ, எந்தத்தேவி உலகத்துக்கெல்லாம் ஈஸ்வரியாயும் கருணைக்கடலாயு மிருக்கின்றனளோ அந்தத்தேவியை நமஸ்கரிக்கின்றோம். எந்தத்தேவியை யறியாமலிருக்கின்றதனால் சம்சாரோற்பத்தி யுண்டாகிறதோ, எந்தத்தேவியை யறிந்துகொள்வதனால் சம்சார நிவிர்த்தி யுண்டாகிறதோ அந்த ஞான ரூபமான தேவியை நமஸ்கரிக்கின்றோம். அந்தத்தேவி எங்களைச் சன்மார்க்கத்தில் செலுத்தட்டும். அவளை மகாலக்ஷ்மியாகவும் சர்வசத்தியாகவும் நினைக்கிறோம். அந்தத்தேவி எங்களை நல்லமார்க்கத்தில் பிரேரேபிக்கச் செய்யட்டும். ஓ தாயே! உலகிலுள்ள பீடையை யொழிக்கின்றவளே! உன்னை நமஸ்கரிக்கின்றோம். நீ எங்கள் விஷயத்தில் கருணை வைத்து எங்களுக்குக்ஷேமமுண்டாகும் வண்ணஞ்செய்வாய், இரக்கத்தினா விளகியமனமுடையவளே! எங்கள் காரியத்தை நடத்துவாய். ராக்ஷசக்கூட்டங்களைக் கொன்று பூபாரத்தை யொழிப்பாய். ஓ மகேஸ்வரியே! சாதுக்களுக்குச் சுகத்தைக்கொடுக்குந் தாமரை மலர்போன்ற கண்ணுடையாளே! எங்கள்பா லெப்பொழுதுங் கருணையுடைய நீ எங்கள் விஷயத்தில் தயைசெய்யாமற் போவையேயாயின் போர்க்களத்தில் சத்துருக்களைப் பாணங்களா லடிப்பதற்கு எங்களுக்கு என்ன சத்தி யிருக்கின்றது? நீயேயக்ஷரூபங்கொண்டு வந்து காட்டுத்தீப்போன்ற வார்த்தைகளினால்

* "ஊர்ணநர பாத்தியதா தந்தூர் விஸ்புலிங்கா விபாவ்ஸோ: ததா சகத்யதே தஸ்ய நிர்க்க தந்தரம் நதாவயம், யந்மாயா சக்திசங்கிலிப்தம் சகத் சர்வம் சராசரம். தாமசிதாம் புவனாதிசாம் ஸ்மராம: கருணார்னவாம், யதஜ்ஞானாத் பவோத்பத்திர் யஜ்ஞானாத் பவநாசனாம். சம்வித்ரூபாஞ் சதாம்தேவீம் ஸ்மராம: ஸாப்ரசோதயாத், மஹாலக்ஷ்மை சலித்மஹே சர்வசக்தியைச தீமஹீ தன்னோதேவிரூப்ர சோதயாத். மாதானதாஸ்ஸபுவனார்த்தி ஹரேப்ரசீத ஸந்தோவிதேஹிகுருகார்ய மிதம் தயார்த்ரே. பாரம் ஹரஸ்வ விநிஹத்ய சுராரிவாக்கம் மஹ்யாமஹேஸ்வரி சதாம்குரு ஸம்பவானி. யத்யம் புஜாக்ஷிதயசேன ஸ்யாந் கதசித் கிம்தேசக்ஷூ மாரண முகேசி சரை: ப்ரஹர்த்தும், ஏதத்த்யைவ கதிதம் நுயக்ஷரூபம் திருத் வாத்ருணம் தஹஹூதாச பதாபிலாபை:

இந்த வுவமானத்தை வேதாந்த மயக்குடையார் எடுத்துக்காட்டிப் பிரமமே பிரவஞ்சத்துக்கு உபாதானகாரணமென்று கூறுவர். அவ்வபிப்பிராயமேகொண்டு ஈண்டுக்கூறியதென்று கொள்ளற்க. வேறுயாதெனின் பிரவஞ்சம் வெளிப்படுமியல்பைக் கூறியதேயன்றி உபாதானமென்று கூறியதில்லை.

அசுரர்களைத் திரணமாகச் சொல்லியிருக்கின்றனையல்லவா? ஓ தேவி! இப்பொழுது கம்சனும், குசனும், எவனேசனுடைய பிள்ளையான கேசியும், பிரஹத்ரதனுடைய பிள்ளையும், பகாசூரனும், பகி என்னு மசுரனும், கரனும், சாளுவனும், இன்னும் அநேகர்களும் பூலோகத்திற் றுன்பத்தை விளைவிக்கின்றனர். ஆகையா லவர்களைக்கொன்று பூபாரத்தைச் சீக்கிரத்தில் நிவர்த்திசெய்ய வேண்டும். எவர்கள் விஷ்ணுவினால் கொல்லப்படவில்லையோ, எவர்கள் திரிபுரதகனராகிய சங்கரரால் சங்கரிக்கப்படவில்லையோ, அவர்களெல்லாம் மாகாசந்தோஷத்தை விளைவிக்கின்ற உன் றிருமுகத்தைப் பார்த்தவளவில் நீ லீலையாக அவர்களைப் பாணங்களாற் கொன்றிருக்கின்றனை. உன் சத்தியன்றி ஹரிஹராதி தேவர்கள் சரிப்பதற்கும் சமர்த்தராவாரா? சந்திரகலையைச் சிரோபூஷணமாக வுடையதேவியே! உன் சத்தியல்லாமல் ஆதிசேடன் பூமியைத்தரிப்பதற்கும், வாக் தேவியின்றிப் பிரமன் சிருஷ்டிப்பதற்கும், இலக்குமியன்றி விஷ்ணு மூர்த்தி ரக்ஷிப்பதற்கும், பார்வதியைவிட்டு உருத்திரமூர்த்தி சங்கரிப்பதற்கும், சமர்த்தராவாரா? மூவரும் சரஸ்வதிமுதலிய மூன்று சத்திகளோடு கூடியே சமர்த்தர்களா யிருக்கின்றனர். அன்றியும் மூன்றுலகத்திலுஞ் செலுத்தத்தக்க பிரபுத்துவமாகிய அரசாக்ஷியை நடத்துவதற்கு உன் னம்சமில்லாமல் அவர்களால் நடத்தக்கூடுமா? நீயோ எல்லாச்சத்திக்கும் ஈஸ்வரியாய்ப் பிரகாசிக்கின்றாயென்று தோத்திரஞ்செய்தனர்.

(உக-சுசாஏ) தேவி அத்தேவர்களைநோக்கி ஓ தேவர்களே! உங்களுக்கு நான் என்னகாரியஞ் செய்யவேண்டும் அதனைச் சங்கடப்படாமற் சொல்லுங்கள். இப்போதே செய்கிறேன். அது இவ்வுலகத்திற் செய்வதற்கு அசாத்தியமா யிருந்தபோதிலும் அதனைச்செய்து உங்களிஷ்டத்தைப் பூர்த்திசெய்கிறேன். ஓ தவசிரேஷ்டர்களே! உங்களுடைய அபீஷ்டத்தையும், பூமியி லுண்டாயிருக்குங்கஷ்டத்தையுஞ்சொல்லுங்களென்று கேட்கும்போது பூமிதேவி கொடுங்கோன் மன்னரால் பீடிக்கப்பட்டு அநேகம் பாபிகளால் சிறப்பொழிந்து அழுதுகொண்டே தாழ்ந்தடங்கி வந்திருக்கின்றனள். ஓ புவனேஸ்வரியே! அந்தப் பூதேவியின் பாரத்தை நீக்கவேண்டும் எங்களுடைய அபீஷ்டமும் அதுதான். ஓ ஜகன்மாதாவே! ஓர்காலத்தில் மகிஷனையும், அவனுக்குச் சகாயமாய்வந்தகோடிகோடி அசுரர்களையும், அப்படியே சும்பன், நிசும்பன். ரக்தபீஜன், சண்டமுண்டன், தூம்பரலோசனன். துஸ்ஸகன், கராளன் என்பவரையுங் கொன்றருளியது போல் இப்போது வந்திருக்கிற அசுரர்களை யுங்கொன்று எங்களைக்காத்தருளல் வேண்டுமென்று

பிரார்த்திக்கத்தேவி சிரித்துச் சொல்லுகிறாள். ஓ தேவர்களே! பூமியில் மகத தேசமுதலிய விடங்களிலிருக்கிற அரசர்களெல்லாம் ராக்ஷச அம்சங்கள்; அவர்களையெல்லாம் என் சத்தியினாற்கொல்லுகிறேன். நீங்களும் பூமியிற்பிறந்து என் சத்தியினால் பூபாரத்தை நீக்க வல்லவராவீர்கள். காசிபனும் தன் மனைவியுடன் யாதவகுலத்தில் ஆனக துந்துபி என்கிற பெயருடையனாய்ப் பிறப்பான். அப்படியே பிருகுசாபத்தினால் விஷ்ணுவும் தன்னம்சத்தினால் வசுதேவனுடைய புத்திரனாகப்பிறக்கப்போகிறான். என்னுடைய மாயாசத்தியும் யசோதைவீட்டில் ஓர் பெண் குழந்தையாய் வரப்போகின்றாள். ஓ தேவர்களே! அப்போது உங்கள்காரிய முழுமையும் முடிந்துவிடும். சிறைச்சாலையில் பிறந்த விஷ்ணுவை என் சக்தியினால் கோகுலத்திற்குக் கொண்டுபோகும்படிச் செய்வேன். ஆதிசேஷனும் ரோகணிகா்ப்பத்திற் பிறப்பான். என் சக்தியோடு கூடிய அவ்விருவரும், இந்திராம்சமாக அருச்சுனனும், யமனம்சமாக உதிஷ்டிரனும், வாயுவினுடைய அம்சமாக பீமனும், அஸ்வனி தேவாம்சங்களாக நகுலசகாதேவர்களும், வசு அம்சமாக பீஷ்மரும், துவாபராந்தத்திற் பிறந்து துஷ்டராஜாக்களைச்சங்கரிக்கப் போகின்றார்கள். ஓ தேவசிரேஷ்டர்களே! நான் விஷ்ணு முதலாகச் சொல்லப் பட்டவர்களை நிமித்தமாகச்செய்து கொண்டு என் சத்தியினால் குருக்ஷேத்திரத்தில் முன் சொல்லியவாறு சகலராஜாக்களையுமழித்துப் பூபாரத்தையொழிக்கப் போகிறேன். நீங்களனைவருஞ் சுகமாயிருங்கள். பூமிதேவியும் நிலையாகவிருப்பாள்.

யாதவர்கள் அசூயையோடும் கலகபுத்தியோடும் ஆசையோடும் நாமென்கிற அகங்காரத்தோடும் செயிக்க வேண்டுமென்கிற இச்சையோடும் காமத்தோடும் மோகத்தோடும் இன்னுமனேக தோஷங்களோடுங் கூடியிருக்கப் போகிறார்கள். அப்பொழுது பிராமண சாபத்தால் வம்சநாசமுண்டாகப் போகிறது. கிருஷ்ணனும் சாபத்தினால் இச்சரீரத்தை விடப்போகிறான். ஆகையால் நீங்களனைவரும் ஸ்திரீகளுடன் மதுராபுரியிலும் கோகுலத்திலும் பிறந்து விஷ்ணுமூர்த்திக்குச் சரீரசகாயஞ் செய்து கொண்டிருங்களென்று சொல்லிப் பரமாத்மாவினுடைய அந்த யோகமாயை யானவள் மறைந்துவிட்டாள். தேவர்களும் பூதேவியும் தங்களிடஞ்சென்றார்கள். மாயாதேவியின் வார்த்தையினால் பூதேவி சந்தோஷமாய்ச் சலனமற்றிருந்தாள். அப்பொழுது ஓ ஷதிகளெல்லாங் கொழுந்து விட்டுவிருத்தியடைந்திருந்தன. உலகிலுள்ளாரெல்லாஞ்சுகிகளா யிருந்தனர். பிராமணர்களும் முனிவர்களும் விருத்தியாயும்

சந்துஷ்டர்களாயும் தருமத்தி லாசக்தியுள்ளவர்களாயுமிருந்தனர் என்று வியாசமுனிவர் ஜனமே ஜயனுக்குக்கூறியருளினர்.

பத்தொன்பதாம் அத்தியாயம்

விஷ்ணுவாதிகிருத தேவீஸ்துதி முற்றிற்று.

ஆஉ அத்தியாயம் ககூ-க்குச் சுலோகம் (க0உஉஏ)

உ

திரிபுரசுந்தர்யை நம:

இருபதாம் அத்தியாயம்

தேவீமஹாத்மாதி வர்ணனம்.

ஓ மகருஷிகாள்! இனிவியாசமுனிவர் பிரமனாதியருக் கிருக்கும் சுதந்தரஹீனத்தையும், அவர்களுடைய நிலையாமையையும், மதுராபுரியின் வரலாறு முதலிய வற்றையும் எடுத்து அரசனுக்குப் போதித்ததைச் சொல்லுகிறோங் கேட்பீர்களாக வென்று சூதபகவான் சொல்லத் தொடங்கினார்.

(க-உ0.) ஓ ஜனமேஜயனே! பூபார நிவர்த்தியின் பொருட்டுக் குருக்ஷேத்திரத்தில் யோகமாயையினால் செய்யப்பட்ட அற்புதவிநோதங்களைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. ஓ அரசனே! பிரம விஷ்ணு முதலானவர்களை அந்த மாயாதேவியானவள் உலக சிருஷ்டிதிதி நிமித்தம் அவ்வக்காலத்துக்கேற்றவாறு ஆட்டிவைக்கின்றாளென்பது என்னுடைய நிச்சயம் சத்வரஜஸ்தமோ குணமுடைய மற்றவர்களையாட்டி வைப்பதைக் கேட்கவேண்டுமா! மலமூத்திராதிகளோடுங் கூடின கர்ப்பவாசத்திலுண்டான துக்கம் லீலாவிசேட முள்ள எந்த மாயாதேவியினால் விஷ்ணுவுக்குண்டாக்கப் பட்டதோ அந்த மாயாதேவி மற்றையோரை மோகத்தினால் துன்பப்படுத்திவைப்பளென்பதற்குச் சொல்லவும் வேண்டுமா? இன்னமும் அந்தத் தேவியினுடைய லீலையை என்னவென்று சொல்லுவேன். முன் ராமாவதாரத்தில் வானரர்களைக் கிழத்தனமில்லாமல் செய்தனள். அந்தராமரை என்னுடைய தென்கின்ற அகங்கார மமகாரங்களாகிய திடமான மாயாபாசத்தால் துக்கத்தையும்

மோகத்தையும் அடையச் செய்தனள். ஓ அரசனே! இவ்வாறான அவளுடைய மகிமையை யுணர்ந்த யோகிகளும் முமூட்சுக்களும் விஸ்வேஸ்வரியான அந்தத் தேவியை யுபாசிக்கின்றார்கள். எந்தஜெந்துவாயினும் பராசக்தியினுடைய பக்தியின் லேச லேசாம்சத்திற் சிறியதினும் சிறிது அடையப்பெறுமாயின் அந்தச் ஜெந்துமுத்தத்தன்மை யடையுமென்றால் அப்படிப்பட்ட தேவியை எவன் சேவிக்கமாட்டான். அந்த மாயாதேவியானவள் ஓ புவனேஸ்வரியே! என்று சொன்னமாத்திரத்தில் மூன்று லோகத்தையுங் கொடுத்துவிடுகிறாள். என்னை ரக்ஷிக்கவேண்டும் என்கிற வார்த்தையை சொல்லிவிட்டால் அதற்குக்கொடுக்கத் தகுந்ததில்லாமல் கடன்காரியாய் விடுகிறாள்.

ஓ அரசனே! அந்தத்தேவிக்கு வித்தையென்றும் அவித்தையென்றும் இரண்டுருவங்களுள. அவற்றுள்ள வித்தியாவுருவத்தினால் ஆன்மாக்களைச் சம்சாரத்தினின்று விடுவிக்கிறாள். அவித்தியாவுருவத்தினால் சம்சாரத்திற் கட்டுண்டிருக்கச் செய்கிறாள். ஆகையினால் பிரமனாதியரும் கயிற்றாற் கட்டுண்டிருப்பது போல் அவித்யா சொரூபிணியாகிய தேவியினால் மாயாவசப்பட்டு அதனாற்கட்டுண்டு சனனமரணப்பட்டுப் பின் வித்யாசொரூபிணியாகிய தேவியினால் அவற்றினிற்று நீங்கிவிடுகின்றார்கள். இதற்குச் சில அனுபவங் கூறுகின்றேன். விஷ்ணு மூர்த்தியானவர் சில சமயம் வைகுண்டத்திலும் பாற்கடலிலுஞ் சுகத்தையநுபவிக்கின்றனர். சிலசமயம் ராக்ஷசர்களோடு யுத்தஞ்செய்கின்றனர் ·சிலசமயம் மிகவும் பெரிதானயாகங்களைச் செய்கின்றனர். சிலசமயம் புண்ணியதீர்த்தங்களில் தீவிரமானதவங்களைச் செய்கின்றனர். சிலசமயம் யோக நித்திரையுடையவராய்ச்சயனிக்கின்றனர். இதனால் விஷ்ணுவானவர் எப்போதாவது சுவாதீனமுடையவரென்று தெரியவருகின்றதா? இவரைப்போலவே பிரமனாதிதேவர்களும் சனகாதிமுனிவர்களும் வசிஷ்டராதிருஷிகளும் பிரதுமைபோல் சுதந்தரமற்றவர் களாயிருப்பதுமன்றி எஜமானனாயுள்ளவன் எருதை மூக்காங்கயிறு குத்தி அது செல்லத்தக்க விடங்களில் இழுத்துக்கொண்டு செல்வதுபோல் தேவியானவள் சகலதேவர்களையும் மாயாபாசத்திற் கோத்து இழுத்துக்கொண்டுபோகின்றனள். சுகதுக்காதிகளும் நித்திரை சோம்பல் மந்தத்தன்மைமுதலியவைகளும் எப்போதுஞ்சகல தேகங்களினு மிருக்கின்றன. ஆனால் தேவர்கள் கிழத்தனமில்லாதவர்களென்று நூல்களிற் சொல்லப்பட்டடிருக்கின்றனவே வெனின் அவர்களுக்கு உற்பத்தி திதி நாசங்கள் சொல்லப்பட்டிருக்கின்றபொழுது கிழத்தனம் ஏனில்லாமற்போகும்.

கிழத்தனமில்லையாயின் அவர்களுக்குச் சாவில்லாம லிருக்கவேண்டும். அவர்கள் பிறந்தும் வாழ்ந்தும் வரக் காண்கின்றமையான் சாவையுங் கிழத்தனத்தையும் எப்படி யிலலாதவராவர். கிழத்தனமும் சாவு மில்லாதவர்களாயின் சிலவேளையில் அவர்கள் ஆயுள்முடிந்துவிட்டதே இனி நமக்கு மரணம்வருமே என்று ஏன் துக்கத்தினால் பீடிக்கப்பட்டவர்களா யிருக்கின்றனர்.

(உக-ருங) இதுவன்றித் தேவர்களுடைய செயலெல்லாங் கிரீடையென்று சொல்லுவர்; கிரீடையா யிருக்குமாயின் அவர்கள் செய்யுஞ் செயலில் துக்கம் விளைந்து ஏன் துன்பத்தையனுபவிக் கின்றனர். அன்றியும் அவர்களிடத்தில் ஒருகணத்துக்குள் உற்பத்தியும் நாசமுங் காணப்படுகின்றன. இவற்றிற் சந்தேகமில்லை. மச்சம் மசகம் கிருமி முதலிய அற்பசெந்துக்களுக்கும் அந்தத் தேவர்களுக்கும் ஆயுள்முடிவாகும் விஷயத்திற் சமமே. அது சமமாயிருக்கும் போது அவர்களெப்படி அமரர்களென்று சொல்லப்படுவர். அவர்கள் அமரர்களாகின்ற பக்ஷத்தில் ஒருவருடமிருந்து சாகின்றவர்களும் நூறுவருடமிருந்து சாகின்றவர்களும் அமரர்களாவரல்லவா ? இதனால் பூலோகத்திலிருப்பவரிலும் இந்ராதிதேவர்கள் அதிகநாளிருப்பவர், அவர்களினும் பிரமதேவர் அதிகநாளிருப்பவர், அவரினும் திருமா லதிகநாளிருப்பவர், அவரினும் ருத்திரர் அதிகநாளிருப்பவர். இவ்வாறு அவரவரும் வரிசைக்கிரமமாயிருந்து அவ்வாறேமுன்பின்னாக நாசத்தையும் விருத்தியையு மடைகின்றவரென்று அறியற்பாலராவர். ஆகவே தேகமுள்ளவனுக்கு நாசமும் இறந்தவனுக்குற்பத்தியு முண்மையென் றறியற்பாலது. ஓ அரசனே! சகல ஆன்மாக்களுக்கும் சனனமரணங்கள் சக்கரம் போற் சுழன்று வருவதாகும் இதிற்சந்தேகமில்லை. மோகவலையினாற் கட்டப்பட்டிருக்கிற ஆன்மாக்கள் ஒருபொழுதும் சம்சாரத்தினின்றும் விடுபடார். அந்த மோகம் மாயை யிருக்கும்பொழுது நாசமடையாது. அம்மோகவலையிலுள்ளார் உற்பத்திகாலத்தில் உற்பத்தியையும் அப்படியே நாசமடையவருங் காலத்தில் நாசத்தையும் அடைகின்றனர். அப்படியே கற்பாந்தத்தில் பிரமனாதியரும் நாசத்தை யடைகின்றனர். எவரெவர் நாசத்துக்குக் காரணமாகின்றனரோ அவரவர் எவ்விதத்தினாலாவது மரணத்தை யடைகின்றனர். அது தெய்வத்தினால் நியமிக்கப்பட்டதென் றறிதல் வேண்டும். அந்தக் கட்டளைக்கு மாறாக ஒன்றும் நடக்கமாட்டா. சனனம் மரணம் நரை வியாதி துக்கம் சுகம் காமம் இவைகளெல்லாம் விதித்தபடியே நடக்கும் இவற்றிற் சந்தேகமில்லை. யாவருக்குஞ்சுகத்தைக் கொடுக்குஞ் சந்திர

சூரியர்களும் சத்துரு பீடையுடையவரா யிருக்கின்றனர். அவர்களனுபவிக்கும் பீடைக் கழிவுண்டா? சூரியனுடையபிள்ளையோ மந்தன், சந்திரனோ ரோகத்தினால்களங்க வுருவத்தோடு கூடியுள்ளவன், ஓ அரசனே! விதித்திருக்குங் கட்டளையை மகான்களாலுந் தாண்டத்தக்கதன்று. வேதத்தைப் படைத்தவனாயும் உலகங்களை யெல்லாம் தரித்திருக்கின்றவனாயும் ஞானத்தை யுபதேசிக்கின்றவனாயுமுள்ள நான்முகனும் தன்னிடத்திற்றோன்றிய சரஸ்வதியைப் பார்த்து காமாதுரனாயினன்றோ!

ஆதிபுருஷனாயும் சர்வலோக வியாபியாயும் ஞானவானாயுமுள்ள விஷ்ணுமூர்த்தி தன்னுடைய சர்வஞ்ஞத்துவமும் பிரபுத்துவசக்தியும் போனவிடந் தெரியாமற்போனபடியினாலல்லவாபொன்மானாய் வந்த மாரீசனை மாரீசனென் றறியாமற் போயினார். ஓ அரசனே! இன்னமும்மாயாபலத்தைப்பார். அந்தராமர்காமமோகிதராய் அழுது மரங்களைப்பார்த்துச் சீதை எங்கேபோனாளென்றும்; அவள் எவனாலாவது பக்ஷிக்கப்பட்டாளா அல்லது தூக்கிக்கொண்டு போகப்பட்டாளா வென்றுங் கேட்டனரல்லவா? அதுவுமன்றி அழுது கொண்டே ஓலட்சுமணா! சீதையினுடைய விரகதுக்கத்தினால் நான் இறந்துபோய் விடுவேன்; ஓ தம்பீ நீயும் என் துக்கத்தினாலிறந்து போகப்போகிறாய்; நம்மிருவருடைய மரணத்தைக்கேட்டு என்தாயா ரிறந்துபோகப் போகிறாள்; சத்துருக்கனோ பிராணனை வைத்திருக்க மாட்டான்; நா மனைவரும் இறந்து போனதைப்பார்த்து சுமித்திரையு மிறந்துபோவாள்; கைகேசியொருத்தி மாத்திரந்தன் பிள்ளையோடுகூடி மிகுந்த சந்தோஷமுடையவளாய் வாழ்வாளென்று சொல்லி மறுபடியும் ஓ சீதையே! மன்மதனாய் பாதைப் படுகின்ற என்னைவிட்டு நீ எங்கே போயினை? நுணுகிய இடையை யுடையாளே! மான்போன்ற கண்களையுடையாளே! ஓடிவா! ஓடிவா!! என்னைப் பிழைக்கும்படிச்செய்! என்ன செய்வேன்! எங்கே போவேன்! என் பிராணன் உன் சுவாதீனமா யிருக்கின்றதே! ஓ ஜனகராஜன் பெண்ணே! தீனமாய்க்கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற உன்பர்த்தாவாகிய என்னைச் சாந்தப்படுத்துவாயென் றழுதுகொண்டே காடுகடோறுந்திரிந்து சீதையைக்காணாது மாயாமோகிதராய் வானர்களைச் சரணாகவடைந்து அவர்கள் சகாயத்தினால் சமுத்திரத்திலணைகட்டி இலங்கைக்குப்போய் மகாவீரனான இராவணனையும் அவன் சகோதரனாகிய கும்பகர்னனையும் அடித்துச் சீதையை யழைத்துவந்து அவளுடைய கற்புநிலை யறியாமல் சந்தேகமுடையவராய் துராத்மாவான இராவணனா லபகரிக்கப்பட்ட படியினால் அக்கினிப் பிரவேசஞ் செய்விக்கவேண்டுமென்று

அவளைச் செய்வித்துப் பின்னர் அவளுடன் சிலநாள் காலங்கழித்து வந்தனரல்லவா? ஓ மகாராஜனே! யோகமாயையின் பலமானது மிகப்பெரிது என்ன சொல்லுவேன். அந்த மாயா சொரூபிணியால் இப்பிரபஞ்சம் எவ்வாறு சுழற்றப்படுகிறதோ அவ்வாறு சுழலுகின்றதல்லவா? இப்படியே அந்த விஷ்ணுமூர்த்தி நானாவிதமான அவதாரங்களிலும் சாபத்துக் குட்பட்டவராய் நானாவிதமான சேஷ்டைகளைச் செய்தவராய்த் தெரியவருகின்றது. *சர்வமாயாவி முக்தராகிய சிவனாருடைய சதி என்கிற சத்தியும் யோகாக்னியால் கொளுத்தப்பட்டாளென்றும், அவளைப்பிரிந்த சிவனாரும் காமாக்னி மேலிட்டவராய்க் காளிந்தி என்னும் நதியில் மூழ்க அதுவுங் கறுத்துப்போய்ப் பின்னர் அமிர்த நடபாவி யொன்றைப் பருகினாரென்றும், அவரைத் தாங்குவதற்கு இந்திரன் விருஷபமாய் வந்தானென்றும், பின்னர் ஓர்காலத்தில் தாருகாவனத்தில் பிக்ஷாடன கோலங்கொண்டு சென்ற பொழுதில் அங்கிருந்த முனிவர்களெல்லாம் தங்களுக்கும் தங்கள் பத்னிமார்களுக்கும் தபோபங்கமுண்டாயிற்றென்று மனங்கொதித்திருக்க அவருள் பிறகுமுனிவர் சிவனாரைநோக்கி முனிந்தா ரென்றுஞ் சொல்லக்கேட் டிருக்கின்றோமல்லவா. இனி இவ்வுலகத்தில் தேவகாரியத்தைச் சாதிப்பதற்காக அவதரித்த கிருஷ்ணருடைய சரித்திரத்தைச் சொல்லுகிறேன்.

(ருசு-அக) காளிந்தி நதியின் மணல்மேட்டில் ஒரு பெரிய மதுவனமொன்றிருந்தது. அவ்வனத்தில் லவணனென்கிறமதுபுத்திரனான அசுரனிருந்தான். அவன் தான்பெற்ற வரத்தின்வலியால்

---

* சிவனார் ஆதியீறு (உற்பத்திநாசம்) இல்லாதவரென்றும் நன்றுதீது இகழ்ச்சி வேட்கை நட்பு இகல் என்னும் இவற்றை விளைக்கவல்லதாயிருக்கிற மாயையை வென்றவரென்றும் வேதங்களெல்லாம் ஆங்காங்குப் பலமுறைப் பறையறையுமுண்மையையறிந்தவர் சிவனார் காமவேட்கையினாலாவது வேறெவ்விதத்தினாலாவது பலதுன்பப்பட்டனரென்றும் பிருகுவினால் சாபமேற்றனரென்றும் ஏனையதேவர்களுக்குக்கூறியதுபோல் கூறப்பட்டிருப்பினும் அச்சிவபெருமானாரை அவ்விகாராதிகளையெல்லாம் உண்மையிலுடை யாரெனவெண்ணி நரகத்திலாழ்ந்திடர்ப்படுவதற்கு வழிதேடார். அச்செய்கை "ஒன்றினைச்செய்கை, செய்யாதொழிகைவேறொன்று செய்கை ஆகிய பிரபுத்வசாமர்த்தியமென்று கொள்வர். இதனை வடநூலார் கர்த்தும் அகர்த்தும் அந்யதாகர்த்தும் என்பர். எனவே விதிமுறையாய்ச் செய்யவேண்டிய தொன்றைச் செய்தலும் அதனைச் செய்யாது விடுதலும் செய்யக்கூடாததாகிய ஒன்றைச் செய்தலும் தனக்கு மேலொரு கடவுளில்லாத கடவுளுடைய பிரபுத்துவமாம். ஆகவே பிறப்பிறப் புடையவரும் மாயாவசப்பட்ட வருமான ஏனைத்தேவர்கள்போல் இந்தப் பிரபுவும் ஈண்டுச் செய்தனரென்பதை அந்யதாகர்த்து மாகக்கொள்க. இந்நூலில் இக்கருத்தை ஆங்காங்கு நன்கு விளக்கியிருத்தலினுங்காணலாம்.

அகங்காரமுடையவனாய் மகருஷிகளுக்குத் துக்கத்தை யுண்டுபண்ணிக்கொண்டிருக்க ஓர் சமயம் லக்ஷ்மணருக்குத் தம்பியான சத்துருக்னன் அந்த அசுரனையுத்தத்திற்கொன்று அவ்வனத்தைப் பட்டணமாக்கி மதுராபுரியென்று நாமகரணமிட்டு அதில் தன் னிருபிள்ளைகளை யுந் தாபித்துச் சுவர்க்கமடைந்தான். சூரியவம்சம் நசித்தபோது மோக்ஷத்தைக் கொடுக்கும்படியான அம் மதுரா பட்டணத்தில் யாதவர்கள் வந்தடைய யயாதி புத்திரனான சூரசேனன் பிரபுவாயிருந்து ரக்ஷித்துவந்தான். அந்தச் சூரசேனனுக்கு வருணன் சாபத்தினாற் காசிபர் பிள்ளையாய்ப் பிறந்து வசுதேவரென்கிற பெயருடையவராய்ப் பிரசித்திப் பெற்றிருந்தனர். அந்தச் சூரசேனன் இறந்த பின்னர் அவர் வைசியவிருத்தியில் சீவித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது உக்ரசேனனென்பவன் அப்பட்டணத்தை யரசாண்டு வந்தான். அவனுக்குப்பலசாலியான கம்சனென்பவன் பிறந்தான். காசிபருடைய பத்தினியாகிய அதிதியும் அந்த வருணனுடைய சாபத்தினாலேயே தேவகனுக்குப் புத்திரியாய்ப் பிறந்து தேவகியென்று பெயர்பெற்றிருந்தனள். அவளுக்கும் வசுதேவருக்கும் விவாகம் நடத்தும்போது ஆகாயத்தில் ஓ மகாநுபாவனாகிய கம்சனே! இத்தேவகியினுடைய எட்டாவது கர்ப்பம் உன்னைக் கொல்லப்போகிறது என்றசரீரி யுண்டாயிற்று.

அவ்வார்த்தையைக் கம்சன்கேட்டு ஆச்சரியமடைந்து சிந்தாகுலப்பட்டு இப்போது இதற்கென்ன செய்யலாமென் றாலோசித்து இப்பொழுதே கொன்றுவிட்டால் நமக்கு மிருத்தியு வில்லையென்றும், இந்த ஸ்திரீயினிடத்திற் பிறக்கும் பிள்ளையினா லுண்டாகுமரணத்தை மாற்றிக்கொள்ளுவதற்குவே றுபாயங் கிடையாதென்றுந் தீர்மானித்துப் பின்னர் இவள் நமக்குச் சிறந்த அத்தையா யிருக்கின்றாளே எப்படிக் கொல்வதென்றுஞ் சிந்தித்து மீளவும் மரணமானது நமக்குப் பெரிதாய் நேர்ந்திருக்கிறபடியால் எப்படிக் கொல்லாது விடுவது, என்ன செய்வது என்று யோசித்து அடியில் வருமாறு சிந்தித்துக் கொல்லத்துணிந்தனன். அறிவுள்ளவனாகிய பண்டிதன் பாவஞ்செய்தாவது சரீர ரக்ஷணை செய்துகொள்ளவேண்டுமென்றும் அந்தப் பாவத்துக்குப் பிராயச்சித்தத்தினாலாவது வேறெவ்விதத்தினாலாவது சுத்தியுண்டாகிறதென்றும் சொல்லப்பட்டிருக்கிறதல்லவாவென்று ஆலோசனைசெய்து பாவியான அந்தக்கம்சன் கத்தியையுருவிக் கொண்டு விரைவாய்ப்புதிய மணக்கோலத்தோடிருக்கிற அந்த உத்தமஸ்திரீயின் தலைமயிரைப்பிடித்திழுத்தான். அப்பொழுது வசுதேவரைச் சேர்ந்த சூரர்களெல்லாம் விடு விடு வென்றுசொல்லி அந்தத்தேவியை விடுவித்துப் பின்னர் அவர்களும் கம்சனும் மகத்தான

யுத்தஞ்செய்தார்கள். அப்போது யாதவகுலதிலகராகிய பெரியோரெல்லாம் கம்சனைப் போரினின்றும் விலக்கி ஓ வீரனே! சிறுபெண்ணான இவள் உனக்கு அத்தையல்லவா! மேலும் விவாஹமகோற்சவகாலத்தில் கொல்லத்தக்கவளாவளா? ஸ்திரீ யத்தியானது சகிக்கத்தக்கதா? கீர்த்தியை நாசஞ்செய்து விடுமே! பாவங்களுக்குள் இது மிகப் பெரிதான தல்லவா! அசரீரிவாக்கைக் கேட்டமாத்திரத்தில் அதனுண்மை யொன்று மறியாதவனாய் நீ இவளைக் கொல்லலாமா? இது அசரீரிவாக்கன்று. உனக்கும் வசுதேவருக்கும் அனர்த்தத்தை விளைவிக்கும் பொருட்டு உன் சத்துருவினாலாவது வசுதேவருடைய சத்துருவினாலாவது இவ்வாறு ஒருவருக்குந் தெரியாமல் மறைந்திருந்து சொன்னதாக ஏன் நினைக்கக்கூடாது. உன் கீர்த்தியைக் கெடுப்பதற்காகவும், வசுதேவர்களத்திரத்தை நாசஞ் செய்வதற்காகவும், மாயாவித்தை யறிந்தஒரு சத்ருவினால் சொல்லப்பட்டதென்றே துணிவாய் உன்கீர்த்தி முழுமையுங் கெடுப்பதற்குச்செய்த உபாயமென்றே யெண்ணுவாய். நீ மகா வீரனாயிருந்தும் இந்தப் பூதவாக்குக்குப் பயப்படுகின்றாய். அத்தை உன்னால் கொல்லத்தக்கவளல்லவே, அப்படியிருந்தாலும் விவாகசமயத்திற் கொல்லலாமா? ஓ மகாராஜனே! எது நடக்க வேண்டுமோ அது உண்மையாய் நடந்தேவிடும். அதனை வேறுவிதமாய் எவ்வண்ணம் மாற்றமுடியும்.

(அஉ-அஅஎ) இவ்வண்ணம் யாதவவிருத்தர்கள் போதனை செய்தும் அவன் கொல்லவேண்டுமென்கிற நினைவை விடாதவனாயிருந்தான். அந்நினைவையறிந்த வசுதேவர் கம்சனைப்பார்த்து ஓ கம்சனே! நானிப்போது சத்தியமாய்ச் சொல்லுகிறேன் மூன்று லோகமும் சத்தியத்தை ஆதாரமாகவுடையது ஆகையால் தேவகியிடத்தி லுண்டாகும் பிள்ளைகளையெல்லாம் பிறக்கும்போதே உன் கையில் கொடுத்து விடுகிறேன். ஓ பிரபுவே! பிறக்கும்பிள்ளைகளை நான் கொடாமற் போவேனானால் என் பூர்வ பிதுர்க்களெல்லாங் கும்பீபாக நரகத்தை யடையக்கடவர் என்று சொன்னபோது அங்கிருந்த மகாத்மாக்களெல்லாம் அந்த வுண்மையான வார்த்தையைக் கேட்டு விரைவாய்க்கம்சனை நோக்கி இதுவே சரி! சரி!! இதுவே நல்லது! நல்லது!! என்று அடிக்கடி சொல்லி மகாபுத்திமானான வசுதேவர் எங்கும் பொய்சொன்ன தில்லை ஓ மகாபாகனே! இந்தக் கஷ்டமானபாவத்தை விட்டுவிடு, ஸ்திரீஹத்தி மிகவும் பெரிதல்லவா? என்றிவ்வாறு சொல்ல அவர் வார்த்தைகளைக் கேட்ட கம்சன் குரோதத்தைவிட்டுச் சத்திய வாக்கியத்தினாற் சந்தோஷ மடைந்திருந்தான். பிறகு துந்துபி வாதத்யமும் சங்கீதமும்

வாசித்தார்கள். இப்படி வசுதேவர் கம்சனைச் சந்தோஷப்படுத்திக் கலியாணப் பெண்ணாகிய தேவகியை விடுவித்துக்கொண்டு தன்னினத்தவரெல்லாஞ் சூழ்ந்துவரப் பயமில்லாமல் தன் கிருகம்போய்ச் சேர்ந்தனரென்று வியாசமுனிவர் அரசனுக்குக் கூறினர்.

இருபதாம் அத்தியாயம்

தேவீ மஹாத்மாதி வர்ணனம் முற்றிற்று.

———

ஆஉ அத்தியாயம் இருபதுக்குச் சுலோகம் (உகசு)

———

உ

இருபத்தோராம் அத்தியாயம்.

கம்ஸகிருத தேவகீ சப்தசுதவதை.

ஓ மஹருஷிகாள்! பின்னர் தேவகியினுடைய பிள்ளைகள் போனவகையைக் கேளுங்களென்று சூதமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

(க-களஎ) வியாசமுனிவர் அரசனை நோக்கி ஓ ஜனமேஜயனே! பிறகுதேவகியானவள்யௌவனத்தையடைந்து தேவதாரூபமுள்ளவளாயிருக்கும்போது விதிவத்தாய் வசுதேவர்சங்கமமுண்டாய்க் கருப்பமடைந்து பத்துமாத முடிந்துபின் மகாரூபத்தோடு கூடின உத்ததமமான வோர் பிள்ளையைப் பெற்றனள். அப்பொழுது வசுதேவர் தாம் சொல்லிய சத்யவாக்கியத்தை நினைத்துத் தேவகியை தேவமாதாவான அதிதியாகப் பாவித்துச் சொல்லுகிறார். உத்தமமான லக்ஷண முள்ளவளே! நான் பிள்ளையைக் கொடுத்துவிடுகிற விஷயத்தில் செய்திருக்கிற ஏற்பட்டை நீ யறிந்திருக்கிறாயல்லவா? அவ்வண்ணம் நான்சொன்னது கம்சன் உன்னைக கொல்வதற்காகப் பிடித்திழுத்துத் துன்பப்படுத்தும் சமயத்தில் உன்னை விடுவித்தற்கல்லவா? ஆகையால் இப்பிள்ளையை உன் மருகனுக்குக் கொடுத்துவிடுகிறேன். விசித்திரமான கர்மானுபவமானது பிரமத்தை யறியாதவர்களால் செயிக்கத்தக்கதல்ல. காலபாசத்தை யநுசரித்திருக்கிற சர்வப்பிராணிகளும் தாம் தாம் செய்யப்பட்ட நல்வினை தீவினையென்கிற இவ்விரண்டானும் வருவதாகிய கர்மங்களைச் சர்வப்பிர காரத்தாலும் அநுபவித்தே தீரவேண்டு மென்றனர். அதுகேட்ட தேவகி ஓ பிரபுவே! ஜன்மாந்தரத்திற்செய்த கர்மத்தை

மாநுடர்கள் அநுபவித்தே தீரவேண்டுமா! புண்ணிய தீர்த்த ஸ்நானங்களாலும் தபசுகளாலும் தானங்களாலும் அக்கர்மம் ஏன் கழியமாட்டாது? ஓ எந்நாயகனே! ஜன்மாந்தரத்திற் செய்யப்பட்ட பாவத்தைக் கழிப்பதற்கல்லவா தர்ம சாஸ்திரங்களில் மநுமுதலிய மகான்கள் பிராயச் சித்தாதிக ளெழுதிவைத் திருக்கின்றனர். பிராமணனைக் கொன்றவன், சுவர்ணத்தைத் திருடினவன், மத்யபானஞ் செய்தவன், குருபத்னியைப் புணர்ந்தவன் என்று சொல்லப்பட்ட இவரெல்லாம்பன்னிருவருடம் மநுவாதிகளால் விதித்தவண்ணம் விரதமநுட்டிப்பாராயின் அவர்கள் அப்பாவத்தினின்றுஞ் சுத்தி யடைகிறார்களல்லவா; ஆகையால் மனிதனாயுள்ளவன் பிராயச்சித்தஞ்செய்து பாவத்தினின்றும் விடுவிக்கப் படுவானா? படானா? உண்மையைப் பிரகாசப்படுத்துகிற தர்ம சாஸ்திரப் பிரவர்த்தகர்களான யாஞ்ஞுவல்கர் முதலான முனிவர்கள் பொய்வாக்குடையவர்களா? ஓ பிரபுவே! கர்மாநுகுணமாய் நடக்கவேண்டியது நடந்தே தீர வேண்டுமென்பது நிச்சயமானால் ஆயுள்வேதமும் மந்திரவாதங்களும் பொய்தானே? எல்லாப் பிரயத்தனமும் வீண்தானே? தெய்வத்தினால் நியமிக்கப்பட்ட எல்லா சாஸ்திரங்களும் நடக்கிறது நடந்தே தீருமென்றால் அவை அவலந்தானோ, அவ்வாறாயின் ஒருவன் ஒரு காரியத்தில் பிரவர்த்திப்பதும் வீண்தானோ? சுவர்க்கத்தைக் கொடுக்கத்தக்க தான அக்னிஷ்டோமாதிகளும் பயனற்றுதுதானோ? தருமத்தைச் சொல்லுகிறசொல் வீணாய்ப் போகுமானால் அந்தத் தருமத்துக்கு நாசமுண்டாகாதோ? இதனை மாநுடன் விசாரிக்கத்தக்க தல்லவா? ஆகையால் குழந்தையைப் பாதுகாத்தற்குரிய காரிய சித்தி எனக்குப் பிரத்யக்ஷமாய்க் காணப்படுகிறது. அதனை நீர் செய்து என் குழந்தை எவ்வித்தத்தினால் க்ஷேமமாய்ப் பிழைத்திருப்பானோ அந்த நன்மையை விரும்பி நீ ரவனிடஞ் சொல்லிய வார்த்தையைப் பொய்யாக்கி அதற்குச் செய்துகொள்ளவேண்டிய பரிகாரத்தைச் செய்துகொண்டு நாம் சுகமுற்றிருக்கவேண்டும். அந்த விஷயத்திற் பண்டிதர்கள் தூஷிக்கமாட்டார்கள் என்று சொல்லிய தன் மனைவியைப்பார்த்து ஓ மஹாநுபாவையே! உனக்குச் சத்தியமாய்ச் சொல்லுகிறேன் கேட்பாயாக.

(கஅ-ஙங) நீ சொல்லியபடி பிரயத்தனம் அவசியஞ் செய்ய வேண்டியதே. அதற்குரியபலனோ தெய்வாநுகூலமாய்த் தானிருக்கும். முன்னுள்ள பெரியோர்கள் புராணங்களிலும் ஆகமங்களிலும் பெத்தான்மாக்களுடைய கர்மங்களை ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தமென மூன்றுவிதமாகச் சொல்லுகிறார்கள். அவற்றுள்

அநுபவத்துக்கு ஏதுவாயுள்ளது சஞ்சிதம். அநுபவிக்கவருவது பிராரத்தம். இவ்விரண்டிற்கும் இடமாய்ப் பெரிதாயுள்ளது ஆகாமியம். இந்த மூன்றனுள் ஆகாமியம் சஞ்சிதப் பிராரத்தங்களுக் கிடமாயிருத்தலால் அதன் விவரத்தைச் சொல்லுகிறேன் கேட்பாய். ஆகாமியமானது இன்பத்துன்பம் – இதம் அகிதம். நல்வினை தீவினை என மூன்று பிரிவினையுடைத்தா யிருக்கும். இம்மூன்றனுள் புலன்களான் அநுபவிக்கவரும் விஷயங்களைச் செயல் வகையான் அனுபவிக்குங்கால் அவ்வாறு பவ ரூபமாயுள்ளவை இன்பத் துன்பங்களை. அவ்வழியாலுண்டாகும் கருத்துவகையான சஞ்சிதத்துக் கிடஞ்செய்யும் வகையாயுள்ளவை இதம் அகிதங்கள். அவ்வித மகிதங்காரணமாக அநேகம் பிறவிக்களுக் கிடமாயுள்ளவை நல்வினை தீவினைகள். ஆகவே ஆகாமியமானது சஞ்சிதத்துக்கு வித்தாய்ப் பிராரத்தத்துக்கு அதில் விளையும் பலமாய் முத்தியெய்து மளவும் இடையறவுபடாது தொடர்ச்சியாய்த் தொன்றுதொட்டுவரும் இயல்புடைய தாகலான் ஆன்மாவானவன் முற்பிறவிகளில் சேகரித்த விளைக்கீடாய் திவ்யதேகத்தினால் சொர்க்கானு பவத்தையும், யாதனா தேகத்தினால் நரகானுபவத்தையும், அநுபவித்து அவ்விரண்டி னொழிவில் பிறவியெடுக்குஞ் சமயத்தில் அறிகருவியாயுள்ள தத்துவ சமூகமாகிய லிங்கதேகத்தையடைந்து இருவினைகளுக்கீடான ஆகாமிய வினையை மீட்டுஞ் செய்து முன்போல் இதமகிதங்கொண்டு இன்பத் துன்பங்களையடைந்து பிராரத்தத்தை யநுபவிப்பான். ஓ அழகிய கண்ணுடையாளே! பிராயச்சித்தத்தினால் முன் கூறியவாறு செயல்வகையான கன்மங்கள் நீங்காவாம். ஆகலான் அவற்றை யநுபவித்தே யொழிக்கவேண்டுமென் றறிவாய். ஆகையால் உனது குழந்தை எவ்விதத்தினாலுங் கொடுக்கத்தக்கதே. என்து வார்த்தை உலகத்தில் நிந்திக்கத் தக்கதாகவும் பொய்யாகவு மாகமாட்டது. நிலையில்லாத இச் சம்சாரத்தில் மகாத்மாக்களெல்லாம் தருமத்தைத்தான் சாரமாகக் கொள்வார்கள். சனனமரணமோ தெய்வாதீனமாயுள்ளது. ஆகலான் இவ்விஷயத்தில் வியர்த்தமாக நீ சோகமடைதல் யுக்தமன்று. எவன் சத்தியத்தை விடுகிறானோ அவனுடைய பிழைப்பு வீணாகும். ஆன்மகோடிகளிவ்வுலகத்தை விட்டால் அவ்வுலகத்தை யடைவார்கள். இதனை நீ ஆலோசித்துக் குழந்தையைக் கொடுப்பையாயின் நான் கம்சனிடத்தில் கொடுக்கிறேன். சத்யத்தை நினைப்பதால் மேலைக்குச் சுகமுண்டாகும். சுகம் நேரிட்டாலும் துக்கம் நேரிட்டாலும் புண்ணியத்தையே செய்யவேண்டும் என்று வசுதேவர் சொல்லியபொழுது தடுக்கமாட்டாது துக்கித்து நடுங்கிக்கொண்டே குழந்தையைக் கொடுத்துவிட்டாள்.

தருமசீலரான வசுதேவரும் அக்குழந்தையை வாங்கிக்கொண்டு கம்சன் வீட்டை நோக்கிப் போகின்றபொழுது அவ்வூரிலுள்ளாரெல்லாம் பார்த்துத் துக்கித்து அந்தோ! தர்மாத்மாவாகிய இந்த வசுதேவரைப் பாருங்கள். ஓ ஜனங்களே! நான் சொல்லிய சத்தியவாக்கின்படி குழந்தையை எடுத்துக்கொண்டு கம்சன் வீட்டுக்குப் போகின்றார் பாருங்கள். பொறாமை யில்லாதவராயும் சத்யசந்தராயு மிருக்கின்ற வசுதேவர் மிருத்யுரூபமா யிருக்கின்ற கம்சனுக்குக் குழந்தையைக் கொடுக்கப்போகிறார் பாருங்கள். இவருடைய தருமத்தையும் சாபல்யமான இவருடைய சீவிப்பையும் அற்புதத்தையும் பாருங்களென்று சொல்லக் கம்சன் வீட்டுக்குப் போய்த் தெய்வரூபமாயிருக்கின்ற அக்குழந்தையை அந்தப் பாதகன் கையிற்கொடுத்தார். கம்சனும் இவர்தைரியத்தைப் பார்த்து மிகவும் ஆச்சரியமடைந்து குழந்தையை வாங்கிச் சிரித்துக் கொண்டே ஒரு வார்த்தை சொன்னான்.

(ஙஅ-ருசு) ஓ வசுதேவரே! உம்முடைய பிள்ளையை நீரே கொண்டுவந்து கொடுத்ததனால் உம்மைப் புண்ணியசாலியென்று இப்பொழுதறிந்தேன். எட்டாவது பிள்ளையல்லவா எனக்கு மிருத்யுவாக அசரீரிவாக்கினால் சொல்லப்பட்டது. ஆகவே இது எனக்கு மிருத்யுவல்ல. இது என்னால் கொல்லத்தக்கதுமல்ல. இது உம்முடைய வீட்டில் சுகமாய் வசிக்கட்டும்.ஓ அறிவிற்சிறந்த வசுதேவரே! எட்டாவது பிள்ளையை மாத்திரங் கட்டாயமாய்க் கொடுத்து விடவேண்டுமென்று சொல்லிக் குழந்தையை வசுதேவர்கையிற் கொடுத்துவிட்டான். ஓ அரசனே! இக்குழந்தையை வீட்டுக்குக் கொண்டுபோகலாமென்கிற நல்லவார்த்தையைக் கம்சன் சொன்ன பிறகு அக்குழந்தையை யெடுத்துக்கொண்டு வீட்டையடைந்தார். கம்சனும் மந்திரிகளைப் பார்த்து எட்டாவது பிள்ளைதானே எனக்கு மிருத்யுவாகச் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த முதற்பிள்ளையையும் மற்றையபிள்ளைகளையும் ஏன்வீணாகக் கொல்லவேண்டுமென்று சொல்ல, மந்திரிகளும் இதுவே நல்லயோசனை யென்று சொல்லப்புகழ்ந்து அவனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தங்கள் தங்களிடம்போய்ச் சேர்ந்தார்கள். மந்திரிகள் போன பின்னர் நாரதமுநிவர்வர அவருக்கு அர்க்கிய பாத்யாசமனாதிகள் தந்து யோகக்ஷேமங்களைக் கேட்டபின் வந்த காரணத்தையுங் கேட்டான். அவர் சிரித்துக்கொண்டே கம்சனை நோக்கி ஓ கம்சனே! நான் மேருமலைக்குப் போயிருந்தேன். அங்குப்பிரம தேவன் முதலாயினார் கூடித்தேவகியினிடத்தில் அமரசிரேஷ்டரான விஷ்ணுவானவர் கம்சனைச் சங்கரிப்பதற்கு

அவதரிக்கப் போகிறரென்று ஆலோசித்திருந்தனர். ஆதலால் இப்பொழுது கொண்டுவந்த பிள்ளையை நீதியறிந்து ஏன் கொல்லமால் விட்டனை யென்றனர். கம்சன் ஓ நாரதரே! அவர்கள் சொல்லியபடியே அசரீரியாலும் எட்டாவது பிள்ளை எனக்கு மிருத்யுவென்று சொல்லப்பட்டிருக்கிறபடியால் அந்தப் பிள்ளையைத்தான் கொல்லப்போகிறேனென்றான். நாரதர் அரசனே! நீ ராஜநீதியலறிப்படும் நன்மை தீமைகளை யறியாமலிருக்கிறாய். தேவர்களுடைய மாயாபலத்தையு மறியாமலிருக்கிறாய் வேண்டுமானால் சொல்லுகிறேன்கேள். தன்கதுச் சுகத்தைக் கோறுகின்றவன் அற்பசத்துருவையும் அலக்ஷியஞ்செய்யக்கூடாது.அவ்வெட்டுக் குழந்தைகளையும் ஒன்றாய்ச் சேர்த்துப் பார்த்தால் எல்லாரும் எட்டாவது பிள்ளையாவார்களல்லவா? வசுதேவருடைய பிள்ளைகள் சத்துருவென்றறிந்தும் விட்டமையால் நீசுத்தமூடனென்று சொல்லி விரைவாய்ப் போய்விட்டார். போனபின் கம்சன் நாரதர் சொல்லிய சூட்சுமத்தை யெண்ணிக் குழந்தையை வரவழைத்துக் கற்பாறையிலெறிந்து மனம் நிம்மதி யடைந்தனன்.

இருபத்தொன்றாம் அத்தியாயம்

கம்ச கிருத தேவகீ சப்தசுதவதை முற்றிற்று.

ஆஉ அத்தியாயம் இருபத்தொன்றுக்குச் சுலோகம் (உசாரு)

உ

ஸ்ரீ தேவ்யை நம:

இருபத்திரண்டாம் அத்தியாயம்

* ஜராசந்தாதி ந்ருபாணாம் அம்சோத்பத்தி.

ஜனமேஜயன் வியாசரை நோக்கி ஐயா பிறந்தபோதே கொல்லப்பட்ட அந்தக்குழந்தை என்னபாவஞ் செய்தது, முனிஸ்ரேஷ்டராயும் அறிவுள்ளவராயும் தருமத்திலாசையுள்ளவராயும் பிரமஞானியாயுமிருக்கிற நாரதமுனிவரும் இப்படிப்பட்ட துர்ப்போதனையான பாவத்தை ஏன் செய்தார்? பாவத்தைச் செய்கிறவன் செய்விக்கிறவன் ஆகிய இருவரும் சமமான பாவமுள்ளவர்களென்று பண்டிதர்கள் சொல்லுகின்றார்களல்லவா? அந்த நாரதமுனிவர் அந்தத்துஷ்டனைச் சிசுஹத்தியில் ஏன் பிரேரேபித்தார். இவ்விஷயத்தில் எனக்குப் பெரியசந்தேகமுண்டா யிருப்பதால் அந்தக்காரணத்தை விரிவாய்ச் சொல்லவேண்டும். எந்தக்கர்மபலத்தினால் இந்தக் குழந்தை

* ஜராசந்தன முதலான அரசர்களுடைய அம்சங்களின் வரலாறு.

நாசமடைந்தது என்று வினவ, வியாசர் ஓ அரசனே! நாரதமுனிவர் வேடிக்கை பார்க்கிறவர் எப்போதுங் கலகத்தில் பிரிதியுள்ளவர் இவ்விரண்டும் தேவகாரியத்துக்குச் சாதகமே. ஆகையால் கம்சனிடத்தில் வந்து சொல்லியதுந் தேவகாரியத்திற்குச் சாதகமென்றே அறியற்பாலது. அவர் எக்காலத்தும் பொய் வார்த்தையிற் பிரவேசிப்பதில்லை.

அவர் சொல்லும் பொய்யெல்லாம் நன்மை பயப்பனவே. அவர் தேவர்களுக்குரிய சாதகத்தைச் செய்வதே தமக்காசாரமாகவுடையவர். இவர் செய்தி யிங்ஙனமிருக்கக் கம்சன் அந்த வசுதேவருக்குப் பின்பிறந்த ஆறுகுழந்தைகளையும் பிறந்த அவ்வக்கணங்களிலேயே முன்னுள்ள சாபத்தினாற் கொன்றுவந்தனன். ஓ அரசனே! அச்சாபத்தின் காரணத்தைச் சொல்லுகின்றேன் கேட்பாயாக. சுவாயம்பு மனுவந்தரத்தில் மரீசிருஷியினுடைய பத்தினியாகிய ஊர்னை யென்பவளிடத்திற் பிறந்த ஆறுபிள்ளைகளும் ஓர் காலத்தில் பிரமதேவன் தன்புத்திரியோடு சங்கமஞ்செய்யப் பிரயத்தனப் படுகிறதைப் பார்த்துச் சிரித்தார்கள். அப்போது பிரமன் அவர்களைப் பார்த்து நீங்கள் அசுரயோனியில் பிறக்கக் கடவீர்களென்று சபித்தனன். அவ்வண்ணமே அறுவரும் முன்னர் காலநேமி என்கிற அசுரனுக்குப் பிள்ளைகளாகப்பிறந்துப் பின்னர் ஹிரணியகசிபுக்குப் பிள்ளைகளாகப்பிறந்துப் பூர்வஜன்ம ஞானமுள்ளவர்களாயும், ராட்சச வெண்ணமில்லாமற் சாந்தசித்த முடையவர்களாயுமிருந்து மனோவிகாரமற்றுச் சாவதானமாய்ப் பிரமனைநோக்கித் தவஞ்செய்தனர். பிரமன் சந்தோஷித்தவனாய் அவர்களுக்குப் பிரத்யக்ஷமாய் அவர்களைப்பார்த்து, ஓ குழந்தைகளே! முன் என்னாற் சபிக்கப்பட்ட உங்களிடத்தில் எனக்கிப்போது சந்தோஷமுண்டாயிருக்கிறது. வேண்டிய வரங்களைக் கேளுங்களென்றனன். அவ்வறுவரும் அந்த வார்த்தையைக் கேட்டுக் களிப்படைந்துப் பிரமனைநோக்கி ஓ பிரமதேவரே! நீர் எங்களிடத்தில் சந்தோஷமடைந்த துண்மையானால் தேவராலும் மனிதராலும் சர்ப்பங்களாலும் கந்தர்வராலும் சித்தர்களாலும் எங்களுக்கு மரணமுண்டாகாவண்ணம் வரந்தருமென்று கேட்டனர். பிரமன் அவ்வண்ணமே தந்தனம். உங்களிடம் போய்ச்சேருங்கள். என்வார்த்தையில் சந்தேகங் கொள்ளவேண்டாமென்று சொல்லிப்போயினன். அறுவருஞ் சந்தோஷமடைந்திருக்கும்பொழுது இச்செய்தியை இரணியகசிபு அறிந்துகோபங்கொண்டவனாய் அவர்களையழைத்து நீங்களென்னை விட்டுப் பிரமனைச் சந்தோஷிப்பித்து அவனிடம் வரம்பெற்று எப்பொழுது வன்மையுடையவர்களானீர்களோ அப்பொழுதே என்னை

அவமதித்தவர்களானீர்கள். இனி நீங்கள் என்னிடம் இருப்பீர்களாயின் வெட்டிவிடுவேன். பிழைத்திருக்கவேண்டுமாயின் பாதளம்போய்ச் சேருங்கள். அங்கு ஒருசெயலுமற்று நித்திரை செய்திருந்துப் பின் தேவகிகர்ப்பத்தில் வருடந்தோறும் ஒவ்வொருவரராய்ப் பிறக்கக்கடவீர்கள். அப்பொழுது உங்களை உங்கள் பிதாவாகிய காலநேமி என்பவன் கம்சனாய்ப்பிறந்து கொல்லப் போகிறான் என்று சபித்தனன். ஓ அரசனே! அச்சாபத்தின் வண்ணமே இப்பொழுது நடந்ததென்றறிவாய்.

அந்த அறுவரும் இவ்வாறுபோக ஏழாவது ஆதிசேஷனுடைய அம்சம் தேவகிகர்ப்பத்திற் பிரவேசித்து நான்குமாதம் வளர்ந்து ஐந்தாமாதம் யோகமாயா சொரூபிணியினுடைய மாயையால் ரோகிணி கர்ப்பத்திற் பிரவேசித்தது. பின்னர் தேவகியினுடைய கர்ப்பம் போய் விட்டதென்று பிரசித்தியாயிற்று. அதனைக் கம்சன் கேட்டுச் சந்தோஷமடைந்தனன். எட்டாவது தேவகிகர்ப்பத்தில் பகவானான விஷ்ணுமூர்த்தி வசித்தாரென்று வியாசர்கூற, அரசன் அவ்வரைநோக்கி ஐயா! தேவரீரால் சிலருடைய அம்சங்களெல்லாந் தெரிந்துகொண்டேன். இன்னும் ஏனையோருடைய தேவாம்சங்களையும் நன்றாய் சொல்ல வேண்டுமென்றுகேட்க வியாசமுநிவர் ஓ அரசனே! இதுவரையில் சொல்லிவந்த தேவாசுரர்களின் அம்சங்கள் போக ஏனையோருடைய அம்சங்களைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன் கேட்பாயாக. வசுதேவர் காசிபரம்சம். அவர்பத்தினியாகிய தேவகி அதிதி யம்சம். பலதேவர், ஆதிசேஷனம்சம். கிருஷ்ணமூர்த்தி நாராயண ரம்சம். அருச்சுனன் நரனம்சம். தருமர் யமனுடைய அம்சம். வீமசேனன் வாயுவினுடைய அம்சம். நகுலசகாதேவர் அச்வனிதேவதைகளினம்சம். கர்னன் சூரியனம்சம். விதுரர் யமாம்சம். துரோணர் பிரகஸ்பதி அம்சம். அச்வத்தாமர் ருத்திராம்சம். சந்தனு சமுத்திராம்சம். அவன் மனையாட்டி கங்காதேவி அம்சம். தேவகர் கந்தர் வராஜனுடைய அம்சம். பீஷ்மர் வசு அம்சம். விராடன் சப்தமருத்துக்களம்சம். திரிதராஷ்டரன் அரிஷ்டனுடைய பிள்ளையி னம்சம். கிருபர் மருத்கணாம்சம். துரியோதனன் கலியம்சம். சகுனி துவாபராம்சம். சுவர்ச்சாக்கியன் புதனுடைய அம்சம். திருஷ்டத்தூய்மன் அக்னியம்சம். சிகண்டி ராக்ஷசாம்சம். பிரத்யும்னன் சனற்குமாராம்சம். துருபதன் வருணனம்சம். திரௌபதி இலக்குமி அம்சம். இளம்பஞ்சபாண்டவர் விச்வதேவாம்சம். குந்தி சித்தி அம்சம். மாத்ரி திருதி அம்சம். காந்தாரி மதி அம்சம் கோபாலஸ்திரீகள் இந்திரனுடைய அப்சரஸ்தீரீகளம்சம். ஏனைய ராஜாக்கள் அசுராம்சம். சிசுபாலன் இரணிய கசிபனம்சம். சராசந்தன் விப்ர சித்தியினுடைய அம்சம். சல்லியன் பிரகலாதனுடைய

அம்சம் கம்சன் காலநேமியினம்சம். கேசி அயசிரசினுடைய அம்சம். அரிஷ்டன் பாணாசுரனுடைய அம்சம். திருஷ்டகேது அநுல்லாத னம்சம். பகதத்தன் பாஷ்கலாம்சம். பிரலம்பன் லம்பனம்சம். தேனுகன்கரனம்சம். சாணு முஷ்டிகன் என்கிற இருவரும் வராஹன் கிசோரனென்கிற இருவருடைய அம்சம். அரிஷ்டன் திதிபுத்திரனுடைய அம்சம். குவலயன் கஜாசுரனம்சம். பகியும் பகனும் பலியினுடைய அம்சம். துரோணபுத்திரன் யமன் ருத்திரன் காமன் குரோதன் என்னு நால்வருடைய அம்சம். அசுராம்சமாகப் பிறந்தவர்களெல்லாம் முற்பிறந்தவர்கள். தேவாம்சமாகப் பிறந்தவர்களெல்லாம் பின்பிறந்தவர்கள். ஓ அரசனே! இதுவரையில் சுராசுரர்களுடைய அம்சங்களெல்லாம் பூலோகத்திற் பிறந்தவகையைக் கூறிவந்தேன். பிரமன் முதலியோருடைய பிரார்த்தனைக்கு விஷ்ணுமூர்த்தியால் வெண்கேசமும் கரியகேசமும் கொடுக்கப்பட்டபடியால் கரியகேசாம்சமாக வந்து கிருஷ்ணமூர்த்தி கரியநிறமுடையவராகவும் வெள்ளியகேசாம்சமாக வந்தபலராமர் வெண்ணிற முடையவராகவு மிருந்தனர். இந்த அம்சங்களுண்டானதை எவன் பக்தியோடு கேட்கின்றானோ அவன் சர்வபாபத்தினின்றும் விடுபட்டவனாய்ப் பந்துசனத்தோடுங் கூடிச்சந்தோஷத்தை யடைகிறான். சுலோகம் (ருஉ)

இருபத்திரண்டாம் அத்தியாயம்

ஜராசந்தாதி ந்ருபாணாம் அம்சோத்பத்தி முற்றிற்று.

ஆஉ அத்தியாயம் இருபத்திரண்டுக்குச் சுலோகம் (ஙசுஎ)

உ

திரிபுரசுந்தர்யை நம :

இருபத்து மூன்றாமத்தியாயம்

கிருஷ்ண சன்ம கதனம்

வியாசமுனிவர் ஜனமேஜயனைப்பார்த்து ஓ அரசனே! கம்சன் தேவகிக்குப்பிறந்த ஆறுகுழந்தைகளையும் நாம்கொன்றுவிட்டோம். ஏழாவது கர்ப்பம் தோன்றியது போறறோன்றிப்போயிற்று. இனி நாரதர் சொல்லியவண்ணம் எட்டாவது பிள்ளைபிறக்குமல்லவா? அதுதான் நமக்கு மரணரூபமாயுள்ளதென் றாலோசித்து அந்த எட்டாவது பிள்ளையைக் கொல்லவேண்டுமென்றெண்ணிக் கர்ப்பத்தை ரக்ஷிப்பதற்கு வெகுசாக்கிரதையாய்ப் பிர்யத்தனஞ்செய்திருந்தனன். இவ்வாறிருக்குஞ் சமயத்தில் விஷ்ணுமூர்த்தி முன்னர் வசுதேவரிடம் பிரவேசித்துக் கிரமமாய் தேவகிகர்ப்பத்திற் பிரவேசித்தார்.

யோகமாயையும் யசோதையினிடத்திற் பிரவேசித்தார். பலராமர் ரோகிணியினுடைய புத்திரனாகக் கோகுலத்திற்பிறந்தார். ஓ அரசனே! கம்சனுடைய பயத்தினாற் பயந்திருக்கிறதேவகி முன்னையினுங் காவலோடிருக்கலாயினள். வசுதேவர் அவளிடத்தில் நீங்காத பிரியமுடைய வராகையானும் புத்திரோற்பத்தி சமயமாயிருத்தலானும் அவளை விட்டிருப்பதற்கஞ்சி அச்சிறைச்சாலையிற்றானே தானுமிருந்தனர். தேவகியினுடைய கர்ப்பமானது நாளுக்குநாள் விருத்தியடைந்து வந்தது. பத்தாவது மாதமாகிய சிராவணமாதம் கிருஷ்ணபக்ஷ அஷ்டமிதிதியும் ரோகிணிநக்ஷத்திரமுங் கூடியிருக்கு மச்சுபதினத்தில் கம்சன் நாளையெண்ணிக்கொண்டிருக்கிறவ னாகையால் இன்று தான் எட்டாவது பிள்ளைபிறக்கவேண்டிய நாளென்று நிச்சயித்துக் கடுங்காவலர்களைப் பார்த்து ஓ காவலாளிகளே! யாவரும் இன்று தேவகியினுடைய சிறைக்களத்தில் கண்ணிமைகொட்டாமல் சகல ஆயுதத்துடன் சாக்கிரதையாயிருக்க வேண்டியது. இப்பொழுது பிறக்கப் போகிறபிள்ளைதா னெனக்குச் சத்துருவாகவுள்ளது. அந்தச்செய்தி நீங்களுமறிவீர்களே. ஆகையால் அந்தக்குழந்தை வேறு வஞ்சனையால் மறைந்துவிடப்போகிறது. சாக்கிரதையாய்ப் பார்த்திருங்கள். அதைக் கொன்றபிறகுதான் நான் சுகமாய்த்தூங்குவேன். ஏனென்றால் எட்டாவது பிள்ளையும் என்னை விட்டு நீங்காதிருக்கிற துக்கமும் நீங்குமாயின் நான் சுகமாய் நித்திரை செய்வதற்கென்ன ஆக்ஷேபம். ஓகாவற்காராகளே! கத்தியும் பரசாயுதமும் வில்லும்பிடித்தவர்களாய்த் தூக்கமுஞ் சோம்பலு மில்லாதவர்களாய் நான்கு பக்கத்திலுங் கண்ணோடினவர்களாய்ச் சாக்கிரதையா யிருங்களென்று பலமுறையும் ஆக்ஞைசெய்து தன்னிருக்கைக்குப் போய் உறக்கமற்று ஏக்கங்கொண்டு பயம்பிடித்து வாட்டமுற்றுப் பலவாறான சங்கடத்தை யநுபவித்துக் கொண்டிருந்தனன். கம்சனிவ்வாறிருக்கும்போது அந்தராத்திரியில் தேவகியானவள் வசுதேவரைப் பார்த்து ஓ எந்நாயகரே! பிரசவகாலம் வந்துவிட்டது நானென்ன செய்வேன் பாரங்கரூபிகளான காவலாளிகள் அநேகரிவ்விடத்திலிருக்கின்றனர். குழந்தை பிறந்தால் பிழைப்பது கஷ்டம் போலிருக்கிறதே அந்தோ! அந்தோ!! என்றிரங்கி நானொன்று சொல்லுகிறேன் அதனைக்கேளும். என்னையெனின்? நந்தகோபனுடைய பத்தினியானவள் என்னிடம் வந்து உன்னுடைய எட்டாவது பிள்ளை பிறந்தவுடன் என் வீட்டுக் கனுப்பிவிடு அப்பிளையை நான் பாதுகாக்கிறேன் நீ ஒன்று கவலைப்படவேண்டாம். கம்சனுக்கு நம்பிக்கையுண்டாவதற்கு உனக்கு வேறொரு பிள்ளையைக் கொடுக்கிறேனென்று ஒருசங்கேதஞ் சொல்லிப்

போயிருக்கின்றாள். ஓ பிரபுவே! அதுபோல் இப்போது பிறக்கப்போகிற அரியபிள்ளையைக் கொண்டு போவதற்கு நீர் எப்படி சமர்த்தராவீர். நமக்கோ கஷ்டகாலமாயிருக்கிறது. எது செய்யத்தக்கது. சந்ததிக்கு ஆபத்து வந்துவிட்டது. எது செய்வதற்குந் தோன்ற வில்லையென்று சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது கர்ப்பவேதனை மேலிட்டபடியால் நாயகனைப் பார்த்து ஓ சுவாமி! நீர் இனி என் முகமாயிருக்க வேண்டாம் திரும்பித் தூரத்திலிரும் நானென்ன செய்வேனென்று பரிபவப்பட்டுக் கொண்டே ஆச்சரியகரமான தேவதரசொரூபமுள்ள புத்திரனைப் பெற்றனள். அந்தப்பிள்ளையைப் பார்த்து தேவகி அதிசயமுற்றுச் சந்தோஷத்தினாற் பூரித்த சரீரமுடையவளாய்க் கணவனைப் பார்த்துச் சொல்லுகிறாள். ஓ பிரபுவே! உம்முடைய புத்திரனுடைய முகத்தைப்பாரும் இப்பிள்ளை உமக்குக் கிடைக்கத் தகுந்ததா! அந்தோ! இந்தக் குழந்தையைப் பாவியான கம்சன் கொன்று விடப்போகிறானல்லவா? என்று சொல்லிப் புலம்பும் பொழுது வசுதேவர் அக்குழந்தையைக் கையில் வைத்துக்கொண்டு அதிசயத்தை விளைவிக்குங் குழந்தையினுடைய முகத்தைப் பார்த்து இவ்வரிய குழந்தையை நாம் காணப்போகின்றோமா வென்று மிகவுஞ் சிந்தாகுலப்பட்டு என்ன செய்வேன் குழந்தை நிமித்தமாக வுண்டானதுக்கத்தை எப்படி அடக்குவேனென்று ஏங்கிக் கண்ணீர் விடும்போது ஆகாயத்தில் அசரீரிவாக் கொன்றெழுந்தது. ஓ வசுதேவனே! நீயொன்று மஞ்சவேண்டாம். காவற்காரர்களெல்லாம் என்னால் மோகிக்கப் பட்டவர்களாயுறங்குகின்றார்கள். சங்கிலிப் பூட்டுகளும் கதவுகளும் திறக்கப்பட்டருக்கின்றன. ஆகையால் இந்தக் குழந்தையை நீயெடுத்துக் கொண்டு சீக்கிரமாய்க் கோகுலத்துக்குப் போய் நந்தகோபனுடைய வீட்டில் விட்டுவிடு. அவ்விடத்திற் பிறந்திருக்கும் பெண்குழந்தையைக் கொண்டு வந்து இங்கு விடுவென்று கூறியதை வசுதேவர் கேட்டு மகிழ்ந்து அவ்வாக்கின்படியே கதவுகளும் பூட்டுகளுந் திறக்கப்பட்டிருத்தலைக் கண்டு குழந்தையை யெடுத்துக் கொண்டு காவலாளிகளொருவரும் அறியாவண்ணம் வெளியே புறப்பட்டு யமுனாநதி வழியேபோக அது பிரவாகமாய் வருதலைப் பார்த்து மயங்கிநிற்ப அவ்வெள்ளம் இடுப்பளவா யடங்கியது. அது கண்டு மகிழ்ந்து அந்நதியைத் தாண்டி மாநுடசஞ்சாரமில்லாத வழியைக் கடந்து நந்தகோபனுடைய வீட்டுக்குப் போய் அவனுடைய முற்றத்திலிருக்கும் பசுக்களுடைய சம்பத்தைப்பார்த்துக் கொண்டிருந்தார். அப்பொழுது யசோதை பெண் குழந்தையைப் பெற்றனள். பெற்றவுடன் தான் வேலைக்காரியைப்போல் வேடம்பூண்டு அப்பெண்குழந்தையைக் கையிலெடுத்துக் கொண்டு

வெளியே வந்து வசுதேவரிடமிருந்த ஆண் குழந்தையைத் தான் வாங்கிக்கொண்டு தான் கொண்டுவந்த பெண்குழந்தையை அவரிடம் கொடுத்தனுப்பிவிட்டாள். அவரும் அப்பெண்குழந்தையை யெடுத்துக்கொண்டு சிறைச்சாலைக்கு வந்து தேவகியினிடத்தி லக்குழந்தையைக் கொடுத்துவிட்டு இனி என்ன தீங்கு நடக்கவிருக்கிறதோவென்று பயந்து சிந்தாகுலமுடையவரா யிருந்தனர். அக்குழந்தையும் அழத்தொடங்கியது. அவ்வோசையைக் காவலளிகள் கேட்டு விழித்துக்கொண்டு அதிவேகமா யரசனிடஞ்சென்று ஓ அரசனே! தேவகிக்குப் பிள்ளைபிறந்துவிட்டது. சீக்கிரமாயோடி வாவென்று பெருங்குரலிட்டுச் சொன்னவுடன் கம்சன் அதிவேகமாயோடிச் சிறைச்சாலைக்குட்போய்த் துவாரங்களெல்லாம் அடைபட்டிருப்பதையும் காவலாளிகள் அதிசாக்கிரதையா யிருப்பதையும் பார்த்து வசுதேவரை நோக்கி அறிவிற்சிறந்தவரே! தேவகியினுடைய குழந்தையைக் கொண்டுவாரும். இது எட்டாவது குழந்தையல்லவா இதுதானே விஷ்ணுவினுடைய அம்சம் கொண்டு வாருமென்றான். இதுதானே விஷ்ணுவினுடைய அம்சம் கொண்டுவாருமென்றான். வசுதேவர் கொண்டு வந்தேனென்று சொல்லிக் கொண்டே உள்ளே சென்று பெண்குழந்தையைக் கையிலெடுத்துக் கொண்டு விரைவாக வந்து அழுகிறவர்போல் அழுது கொண்டே கொடுத்தார்.

கம்சன் அப்பெண் குழந்தையைப் பார்த்து பெண்ணாபிறந்ததென்று கேட்டு ஆச்சரியமடைந்து அசரீரிவாக்கும் நாரதர்வாக்கும் வீணாய்ப் போயிற்றல்லவா! இந்த வசுதேவர் மாறுபடுத்தி யிருப்பாரென் றெண்ணுவதற்கு மகாநிர்ப்பந்தத்திலிருக்கிற இவர் எவ்வாறு இப்பொய்யான விவகாரத்தைச் செய்யக்கூடும். நம்மால்வைக்கப்பட்ட காவலாளிகளெல்லாம் சாக்கிரதையாகவே யிருக்கின்றனர். இதிற்சந்தேகமில்லை. அங்ஙனமிருக்க, இவ்விடத்தில் இந்தப் பெண்குழந்தை எப்படிவந்தது. இவ்விடத்திலிருந்த ஆண்குழந்தை எப்படி வெளியேபோயிற்று. இதுமிகவும் ஆச்சரியம்! வசுதேவர் பொய்யான காரியத்தைச் செய்யார். இப்படியானது காலத்தினுடைய கொடுமைதான். அப்படியுமன்று ஆண்குழந்தை பிறக்கவேயில்லை. இதிற் சந்தேகமில்லை என்று பலவாறாக நினைத்து அப்பெண் குழந்தையை வாங்கி அதன் காலைப்பிடித்துச் சிறிதுந் தயையில்லாதவனாய் ஒரு கற்பாறையில் மோதத் தொடங்கினன். அப்பொழுது அக்குழந்தை அவன்கையினின்றும் நழுகி ஆகாயத்திற்போய்த் தனது நிசவடிவமாகிய சத்திருபத்தை யடைந்துக்

கம்சனைப் பார்த்து ஓ கம்சனே! நீ என்னைக்கொல்லத் தொடங்கினையே நான் சாவேனாயின் உனக்கு வரும் மரணம் வராமற்போகுமா? ஒருநாளும்போகா. ஆகவே மரணம் வருவதோடு பாவமும் வந்திருக்கும். நான் உன்னால் கொல்லப்பட்டவளா மல்லள். நீ என்னால் கொல்லப்பட்டவனுமல்லன். உன்னைக் கொல்லப் பட்டவன் வேறொருவன் அவன் ஒருவராலும் வெல்லக்கூடாதவன். மரணத்துக்கு அஞ்சியிருக்கும் உனக்கு அஞ்சாது மரணத்தைக் கொடுப்பவன். ஆகலான் மாநுடரில் அதமனான உன்னைக் கொல்லப் போகிறவன் அவனென்றும், அவனே உனக்குப் பலமான சத்துருவென்றும் அறிவாய் என்று இன்னிசையோடு யாவருக்கேட்பச் சொல்லி மறைந்துபோயிற்று.

அசரீரியைப்போலும் அப்பெண்குழந்தை கூறிய வாய்மொழிகளைக் கம்சன் கேட்டுத் தேனுகன், கேசி, பிரலம்பன், வத்சகன் முதலிய அசுரர்களை யழைத்து ஓ அசுரர்களே! நீங்களனைவரும் நந்தகோகுலத்துக்குப்போய் அவ்விடத்தில் யாருக்காயினும் பிள்ளைபிறக்குமாயின் அப்பிள்ளையைப் பிறந்தபொழுதே என்னுடைய காரியசித்தியின் பொருட்டுக் கொல்லக் கடவீர்கள். இந்தப் பூதகியும் அவ்விடத்திற்கே போய்ப் பாலூட்டுபவள் போல் ஊட்டிக் கொல்லக்கடவள். ஓ வீரர்களே! நீங்களனைவரும் என்னுடைய வேண்டுகோளின்படி அந்தக்கோகுலத்திற்றானே நீங்காதிருந்து என்சொல்லைப்பரிபாலித்து வாருங்கள். அவ்விடத்தில் ஒருவருக்காயினும் ஆண்பிள்ளைபிறந்து வாழ்க்கூடாது என்று சொல்லிவிட்டுத் தனியே ஓரிடத்திருந்து முன்னெண்ணி ஏக்கமுற்றிருந்ததுபோல் தனது மரணத்தை எண்ணி எண்ணித் தீனாத்மனாய்க் கவலையுற்றிருந்தனன்.

(சுலோகம் ருஉஏ)

இருபத்துமூன்றாம் அத்தியாயம்

கிருஷ்ணசன்மகதனம் முற்றிற்று.

ஆஉ அத்தியாயம் இருபத்துமூன்றுக்குச் சுலோகம் (ஙகூகூஏ)

———

உ

ஸ்ரீ தேவ்யை நம :

இருபத்துநான்காவது அத்தியாயம்

* ஸ்ரீ கிருஷ்ணலீலாப்ராரம்பம்.

ஓ மஹருஷிகாள்! இனி கிருஷ்ணமூர்த்தியினுடைய லீலா வினோத ரசங்களைச் சொல்லுகிறேன் என்று சூதபகவான் சொல்லத் தொடங்கினார்.

வியாசமுநிவரானவர் ஜனமேஜயனைப் பார்த்து ஓ பூபாலனே! கம்சன் தேனுகள் முதலிய அசுரர்களைக் கோகுலத்துக் கனுப்பிவிட்டு அந்தப் புரத்திற்சென்று சிந்தாகுலப்பட்டுச் சிலவற்றை எண்ணத் தொடங்கினன். அந்தச் சமயத்தில் தூதர்கள் வந்து ஓ பிரபுவே! இன்று காலையில் நந்தனுடைய கிருகத்தில் புத்திரோற்பத்தி மஹோற்சவம் நடந்ததாகக் கேள்விப்பட்டோம் என்றார்கள். முன்னமே நாரதமுநிவரால் வசுதேவருடைய பத்தினி முதலானவர்களும், பசுக்கூட்டங்களும், தாசவர்க்கங்களும், மற்றையர்களும், மற்றவைகளும் நந்தகோகுலத்தில் சேர்ந்திருக்குங் காரணத்தை அறிந்திருக்கின்றவனாகையால் தூதர்கள் சொல்லியதைக் கேட்டமாத்திரத்தில் மனம்பொறாது அன்று நாரதர், வசுதேவரும் அவனினத்தவரும் தேவாம்ச முடையவர்களாதலால் அவரெல்லாம் உனக்குப் பகைவரேயாவரென்று சொல்லியது உண்மையே என்று குலாதமனான கம்சன் அதிக கோபங்கொண்டிருக்கும் பொழுது மீளவும் சிலதூதர்களோடிவந்து ஐயா! நந்தகோகுலத்தில் கிருஷ்ணனுக்குப் பால்கொடுக்கப் போன நமது பூதகி கிருஷ்ணனுக்குப் பால்கொடுத்து யமன்பால் கூலிவாங்கப்போயினாள். கிருஷ்ணன் சிறுகுழந்தையாகலா யிருக்கின்றான் அவன் தான் நமது குலநாசகன். மஹாபலாட்டியனான பகனும் வத்ஸாசுரனும் தேனுகனும் பிரலம்பனும் அவனாலே கொல்லப் பட்டார்கள். பலராமனென்பவனும் அவனைப்போலவே கொலைசெய்வதில் வல்லவனாயிருக்கிறான். கோவர்த்தனமென்னும் மலையை அந்தக்கிருஷ்ணன் ஓர் சுண்டுவிரலால் குடைபோல் தூக்கிவிட்டான். நாங்கள் என்ன சொல்லப்போகின்றோம் அவ்விடத்தில் நம்மவர்கள் படும்பாட்டையும் அவர்கள் ஆடும் ஆட்டத்தையும் என்னென்று சொல்லப்போகிறோ மென்றார்கள். கம்சன் அவைகட்கெல்லாம் பதிலொன்றும் சொல்லாது நமக்கு மரணம் வந்து விட்டது என்று நிச்சயித்துக் கொண்டவனாய் அதனைத் தப்பித்துக்

* ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியினுடைய லீலை ஆரம்பம்.

கொள்ள ஓராலோசனை செய்து (கேசி) என்பவன் கொல்லப்பட்டான் அதற்காகத் தநுர்யாகமென்று செய்யப்போகின்றேன் அதற்கு ராமகிருஷ்ணர்களாகிய நீங்க ளிருவரும் வரவேண்டுமென்று வரவழைத்து அவ்விருவரையுங் கொன்று விடுவோமென்று துணிந்து அக்ரூரரென்னும் முநிவரை வரவழைத்து அவர்களிடம் அனுப்பினான்.

காந்தினீ புத்திரராகிய அந்த முநிவரும் இராமகிருஷ்ணர்களிடத்திற்சென்று கம்சன் அபிப்பிராயத்தைத் தெரிவித்து அவ்விருவரையும் ரதத்தினமே லேற்றிக்கொண்டு மதுரையிலிருக்கும் கம்சனிடங் கொண்டுவந்து விட்டனர். அவ்விருவரும் யாகஞ்செய்யும் சாலைக்குச் சென்றனர். கிருஷ்ணமூர்த்தி அங்கு வைத்திருந்த வில்லையெடுத்து முறித்து யானையையும் சாணூர முஷ்டிக னென்பவரையும் சலன் தோசலன் என்பவரையும் கொன்றுவிட்டு ஓர்லீலையாகக் கம்சனைத் தலைமயிர் பிடித்திழுத்து மோதியறைந்து யமலோகத்துக் கேகச் செய்தனர்.

அவனை யொழித்த பின்னர் தாய் தந்தைகளது சிறையை விடுவித்துத் துக்கமில்லாதவர்களாகச் செய்து உக்கிரசேனனுக்கு ராஜ்யபட்டாபிஷேகஞ்செய்து ராஜ்யத்தை அவன் வசமாக்கினார். வசுதேவர் ராமகிருஷ்ணர்களுடைய வீரத்தைக்கண்டு மகிழ்ந்து அவர்கட்கு மௌஞ்சிபந்தன முதலான விரதங்களைச் செய்வித்தனர். பின்னர் அவ்விருவரும் சாந்திபரிடத்திற் போய்ச் சகல வித்தைகளையுங் கற்றுணர்ந்து அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு மதுரைவந்து சேர்ந்தனர்.

மகததேசாதிபதியான சராசந்தன் ராமகிருஷ்ணர்கள் பன்னிரண்டு வயதுக்குள் சகல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்தவராய் மஹாபலசாலிகளாய் வீரர்களாய் மதுரையில் வசிப்பதையும், தனது மருமகனாகிய கம்சனிறந்து போனதையுங் கேள்விப்பட்டுப் பொறாமையோடு துக்கமடைந்தவனாய்த் தனது சேனைகளைக் கூட்டிக் கொண்டு மதுரைக்கு வந்து கிருஷ்ணமூர்த்தியோடு பதினேழுநாள் போர்செய்து கிருஷ்ணமூர்த்தியை வெற்றிகொள்வதற்கு முடியாமல் தோல்வியடைந்து தந்நகரம் போய்ச் சேர்ந்து மிலேச்சர்கட்கு அதிபதியான காலபவனென்பவனைத் தன்வசப்படுத்தி மதுராபுரிக்கனுப்பினான். அவன் போருக்குவருகிறானென்பதைக் கிருஷ்ணமூர்த்தி தெரிந்துகொண்டு யாதவக்கூட்டங்களையும் பலராமரையும் வரவழைத்து இந்த மதுரையில் நாமிருப்பதனால் நமக்கெப்போதும் சராசந்தனால் கஷ்டங்களுண்டாகின்றன. இப்பொழுது யுத்தத்துக்கு மிலேச்சன் வருகிறான். அவனே பலீஷ்டன்.

துஷ்டன். அவனோடுபோர் செய்ய நம்மாலாகுமா? இனி நாம் என்ன செய்யத்தக்கது. நாம் பிராணனைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். இந்த நகரத்தையும் இங்குள்ள மாடமாளிகையும் தனத்தையும் பார்க்கக்கூடாது எல்லாவற்றையும் விட்டுவிட்டு எந்தத்தேசம் நமக்குச் சத்துருபயத்துக்கிடமில்லாமல் சுகங்கொடுக்கிறதோ அதுதான் பூர்வத்தில் நம்முடைய பெரியோர்கள் தேடிவைத்த ராஜ்யமென்று நினைக்கவேண்டும். இதுவொழிந்து இது நம்முடைய பெரியோர்கள் தேடிவைத்ததாயிற்றே இந்த நாடுநகரமுதலிய செல்வங்களை எப்படி விட்டுப் போகிறதென்று எண்ணுவோமாயின் எப்பொழுதும் சத்துருக்களாலுண்டாகின்ற துன்பங்களுக்கு நாம் என்னசெய்வது? எவன் சுகத்தை விரும்புகின்றானோ அவன் மலையினும் சமுத்திரத்தினும் வாசஞ்செய்யவேண்டும். அறிவுடையோர்கள் எந்த விடத்தில் சத்துரு பயமுண்டாகாதோ அந்த விடத்தைத்தான் தமக்குரிய விடமாகக் கொள்ளுவார்கள்.

சாக்ஷாத் விஷ்ணுமூர்த்தி திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிருப்பதையும், மஹாதேவர் கைலாய மலையில் வீற்றிருப்பதையும் யோசித்துப்பாருங்கள். (சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன் வந்தது வந்தது கூற்று) என்பதுபோல் காலபவன் நமதூரை நோக்கி வருகின்றான். நாம் இனி இங்கிருத்தலடாது துவாரகைக்குப்போவோம். அதுமிக அழகாயும் மனோகரமாயும் உள்ளதென்று கருடன் சொல்லக் கேட்டிருக்கின்றேன். நான் முன் சொல்லிய வண்ணம் பர்வதத்துக்குச் சமீபத்திலும் சமுத்திரக்கரையிலும் உள்ளது; என்று சொல்ல அவரெல்லாம் கிருஷ்ணமூர்த்தி சொல்லுவதெல்லாம் உண்மைதானென்று சொல்லித் துவாரகைக்குப் போகத் துணிந்து தங்கள் தங்கள் குடும்பஸ்தர்களைப் புறப்படும்படியாகச் சொல்லித் திரவியங்களைப் பைகளிற்கட்டிப் பண்டிகள்மேலும் ஒட்டைகள் மேலும் குதிரைகண்மேலும் கடாக்கண்மேலும் ஏற்றிச்சகல பரிவாரங்களுடனும் ராமகிருஷ்ணர்களை முன்னேபோகவிட்டுப் பின்னே சென்று சில நாள் கழித்துத் துவாரகையைப் போய்ச் சேர்ந்தார்கள். சேர்ந்தவுடன் கிருஷ்ணமூர்த்தி அந்தத் துவாரகையைச் சில்பிகளாற் புதுமையாகப்புதுக்கி யாதவர்களெல்லாம் அங்கிருந்து வாழும்படியாகச் செய்து, பலராமரை யழைத்துக்கொம்டு பழையபடியே மதுரைக்கு வந்து, பலவானும் யவனாதிபனுமான காலபவன் அங்குத் தனது சேனைகளோடு குடிகொண்டிருத்தலை யறிந்து உள்ளே போகாமல் வெளியிற்றானே யிருந்து பீதாம்பரதாரியாயும் ஸ்ரீ மானாயும் யாவருங்கண்டதிசயிக்கப் பிரகாசித்தனர். இவர் வரவையறிந்த காலபவன் வெளியேவந்து பார்க்கக் கிருஷ்ணமூர்த்தி முன்னே

போகத்தலைப்பட்டனர். அவனும் பின்றொடர்ந்தான். இவர் பின்றொடரவும் கிருஷ்ணர் அதிவேகமாய் முசுகுந்தரென்கிற ராஜருஷியினுடைய ஆச்சிரமத்திக்குப் போய் மறைந்துபோயினர். பின்னே துரத்திக்கொண்டுவந்த துஷ்டன் வந்த ஆச்சிரமத்துக்குப் போன போது கிருஷ்ணருடைய வஞ்சனையை யறியாது அங்கிறுமாந்து நித்திரைசெய்திருந்த ராஜருஷியைப் பார்த்து இவனுக்கென்ன அகங்காரம் நமக்குமுன்னே வந்த இந்தக் கிருஷ்ணன் பின்னே துரத்தி வருகிற நம்மை ஓர் பொருளாக மதிக்காமல் காலை நீட்டிக்கொண்டு தூங்குகின்றா னல்லவாவென்று அதிககோபங்கொண்டு காலாலுதைத்தான். உதைபட்ட அந்தருஷி விழித்துத் தன்னை உதைத்தவனைக் கண்சிவந்து பார்த்து எரித்துவிட்டனர். கிருஷ்ணமூர்த்தி அந்த க்ஷணமேதோன்ற அந்த மதுசூதனரை ருஷிபார்த்து தோத்திரஞ் செய்து அவரது மாயச்செயலையறிந்து வனத்துக்குப் போயினர்.

கிருஷ்ணமூர்த்தி பலராமரை யழைத்துக்கொண்டு மதுரைக்கு வந்து உக்கிரசேனனை அங்கு அரசனாக நியமித்துத் துவாரகைக்குப் போய்ச் சிலநாள் கழித்துச் சுயம்வரத்தில் ருக்மணியைச் சிசுபாலனுக்கில்லாமல் தான் கிரஹித்து அவளை ராக்ஷசவிதியாயும், சாம்புவதி சத்யபாமை, மித்திரவிந்தை, காளிந்தி, லக்ஷமணை, நாக்னஜிதி, பத்திரை என்கிற எழுவரைத் தனித்தனி விதிமுறையாயும் கலியாணஞ்செய்து கொண்டனர். எண்மருள் ருக்மணி பிரத்யும்னன் என்னும் பிள்ளைப் பெற்றாள். கிருஷ்ணமூர்த்தி பிள்ளைபிறந்தது என்றபோதே ஜாதகன்ம முதலியவைகளெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க மகாபலசாலியான சம்பராசுரன் அக்குழந்தையைத் தன் பட்டணத்துக்குக் கொண்டுபோய் மாயாவதியி னிடத்திற்கொடுத்தான். பிள்ளை காணாமற்போனதை கிருஷ்ணமூர்த்தியறிந்து சோக மேலிட்டவராய் விருத்திராசுரன் முதலிய அசுரர்கள் எந்தத் தேவியினால் லீலையாக அடிக்கப்பட்டார்களோ அந்தத்தேவியைப் பக்தியோடு சரணமடைந்து கெம்பீரமாயும் மதுரமாயும் சுககரமாயு மிருக்கிற தோத்திரங்களால் அடியில்வருமாறு தோத்திரஞ் செய்யத் தொடங்கினர்.

ஓ தாயே! பதரிகாச்சிரமத்தில் தருமபுத்திரனான என்னால் முன் சென்மத்தில் சந்தோஷப் படுத்தப்பட்டாய். புஷ்பங்களா லருச்சிக்கப்பட்டாய். உன் விஷயமாய் எனக்கிருக்கும் பக்தியை அறிந்திலையா. அந்தோ! என் குழந்தையை எவனோ ஒருவன் துஷ்ட எண்ணத்தினாலேயோ வேடிக்கையினாலேயோ என்மானத்தை அபகரிக்கச் சூதிகாக்கிரகத்தி லிருந்து எடுத்துக் கொண்டுபோய்

விட்டான். தேவியே! உன்பக்தனுக்கு இப்படிப்பட்ட அவமானம் நேரிடுவது யுத்தமல்லவே. கோட்டையோ பெரிதாக விருக்கிறது. கோட்டைக்குள் பட்டணமோ நன்றாய் ரக்ஷிக்கப்பட்டிருக்கிறது. அதிலும் என் வீடுநடுவிலிருக்கிறது. அதிலுள்ள அந்த அரை நன்றாய் மூடப்பட்டிருந்தது. அப்படியிருந்தும் குழந்தையை யெடுத்துக் கொண்டு போயய் விட்டானே! இது என் தோஷத்தினால் நேர்ந்ததோ. நான் அயலூருக்குப் போகவில்லையே யாதவர்களும் போகவில்லையே பட்டணத்தை வெளியேகாக்கின்ற மகாவீரர்களும் காக்குந்தொழிலை விட்டுப் போனதில்லையே. ஓ தாயே! உன் மாயை தான் மகாமகிமை யுள்ளதென்று பிரசித்திபெற்றுள்ளது. உன்னிலுஞ்சிறந்த எந்தமாயாவியினால் என்குழந்தை கொண்டு போகப்பட்டதோ? ஓ தாயே! ஒருவராலும் அறியக்கூடாத இந்தமாயையை நானறியாமற் போவேனேயானால் அற்பபுத்தியுள்ள எந்தப்பிராணி இனியறிவான்? குழந்தையைக் கொண்டுபோனவன் எங்குப்போய்விடுவான்? என் காவற்காரர்களாற் பார்க்கப்படமாட்டானா? ஆகையால் அந்தமாயை உன்னால் கற்பிக்கப்பட்ட எந்தமாயையோ? ஆனால் இப்பொழுது நீ செய்த மாயாகாரியத்தில் எனக்காச்சரியமில்லை. ஏனெனில் ரோகிணிதேவி பிரசவித்த பலராமனை என்தாய் கர்ப்பத்திலிருந்து இழுத்து விட்டனையல்லவா? அதைநோக்க இதுவோராச்சரியமா? இதுவுமன்றி நீ திரிகுணசொரூபிணியாய் உலக சிருட்டியெல்லாம் செய்கின்றாய் ரக்ஷிக்கின்றாய் சங்கரிக்கின்றாய். இம்முத்தொழிலால் மலபரிபாகம் வருவிக்கவல்ல உன்சரித்திரத்தை எவனறிகிறான். ஓ தாயே! இவை யெல்லாம் செய்கின்ற நீ தானே இப்பொழுது எனக்குப் புத்திரோற்பத்தியா லடங்காத சந்தோஷத்தையும் புத்திரஹீனத்தால் துக்கத்தையுங் கற்பித்து வேடிக்கையாய் விளையாடுகின்றனை. நீ செய்யாவிட்டால் எனக்குப் புத்திரப்பேறேது? நானடைந்த புத்திரப்பேறு என்னிச்சையாயிருக்குமாயின் ஏனிப்படி நஷ்டமாகும். ஓ தேவி நீ எனக்கு இன்னமுஞ்செய்கின்ற துக்கத்தைச் சொல்லுகிறேன் கேட்பாய். நான் துக்கத்தில் ஓய்ந்து விடுவேனோவென்று இந்தச் சிசுவின் தாயை என்பக்கலில் குரளிப்பட்சியைப்போல் எப்போதும் அழுது கொண்டிருக்க வைத்தனை. சம்சாரதுக்கிதர்களுக்கு நீ சரணமாயிருக்கின்றவளாயிருக்க எனக்கு உன் சரணந் துக்கமாக முடிந்ததற்குக் காரணமென்னை? புத்திரசென்மமானது சுபத்துக்கு ஸ்தானபூதமென்றும், புத்திரநாசமானது துக்கத்துக்கு ஸ்தானபூத மென்றும், பண்டிதர்கள்சொல்வது உண்மைதானே. ஓ தாயே! பிரதமபுத்திரன் நஷ்டமானால் யாதுசெய்வேன்? இனி என் ஹ்ருதயம் துக்கத்தால் பிளந்துபோகும்போ லிருக்கிறதே. ஓ மகாதேவி! உனக்குச்

சந்தோஷகரமான தியானமாவது விரதமாவது பூசையாவது நீ எதனை விதிக்கின்றனையோ அதனைச் செய்கின்றேன். செய்தால் சகலதுக்கங்களையும் போக்கடிக்கின்றவ ளல்லவா? ஓ தாயே! என் குழந்தை பிழைத்திருப்பானானால் சீக்கிரத்தில் நான் காணும்படியாகச் செய். சகல லோகத்தையும் நாசஞ்செய்யும் வல்லமையுள்ள நீ அந்தப் பாவியிருக்கும் ஊரை நாசஞ்செய்யாயா. என்றிவ்வாறு தோத்திரஞ்செய்யத் தேவியானவள் வெளிப்பட்டுச் சொல்லுகின்றாள்.

ஓ கிருஷ்ணனே! இது பூர்வசென்மசாபம். அந்தச் சாபசம்பத்தத்தால் உன் பிள்ளையைச் சம்பராசுரன் கொள்ளை கொண்டு போயினான். ஆதலால் உன்னுடைய பிள்ளை அச்சம்பராசுரனை என்னனுக்கிரகத்தால் நாசஞ்செய்து பதினாறாவது வயதில் உன்னிடம் வந்துசேரப் போகிறானென்று திருவாய் மலர்ந்து மறைந்தனள். கிருஷ்ணமூர்த்தியும் புத்திரசோகம் நீங்கிச் சுகமாயிருந்தனர். சுலோகம் (சாஉ)

இருபத்துநான்காம் அத்தியாயம்

கிருஷ்ணலீலாப் பிராரம்பம் முற்றிற்று.

ஆஉ அத்தியாயம் இருபத்துநான்குக்கு சுலோகம் (சுசாக)

உ

ஸ்ரீ திரிபுரசுந்தர்யை நம:

இருபத்தைந்தாம் அத்தியாயம்

* ஸ்ரீ கிருஷ்ணஸ்யகிஞ்சித் தஜ்ஞத்வகாரணம்.

ஜனமேஜயமகாராஜன் வியாசமுநிவரைப் பணிந்து ஓ முனிஸ்ரேஷ்டரே! தேவரீர் கிருஷ்ணமூர்த்தி விஷ்ணு அம்சம் என்று சொன்னீர். அவர் இத்தன்மைத்தான துக்க மனுபவிப்பதாக இப்பொழுது சொல்லக் கேட்கின்றேன். எனக்குச் சந்தேகமுண்டாயிருக்கிறது. என்னையெனின்? நாராயண ரம்சமாகப்பிறந்த மகாபராக்ரம சாலியான கிருஷ்ணருடைய குழந்தை எப்படி அபகரிக்கப்பட்டது? பலராலும் பலகாவலாலும் காக்கப்பட்டுள்ள சூதிகாகிருகத்தில் அந்த அசுரன் எவ்வாறு பிரவேசித்துக் குழந்தையை யெடுத்துக் கொண்டு போனான்? அதனைக் கிருஷ்ணமூர்த்தி என்ன காரணத்தினாலறியாமற்

* கிருஷ்ணருக்கு அறியாமையாகிய அஞ்ஞான மிருத்தற்குக் காரணம்.

போயினர்? ஓ வியாசரே! இதுமகத்தான ஆச்சரியத்தை விளைவிக்கின்றது என்று அரசன் கூற, வியாசமுனிவர் ஓ அரசனே! மனிதர்களுடைய புத்தியை மோகிக்கச் செய்கிற சாம்பவிமாயையானது ஞானிகளால் நன்றாயறியத்தக்கது. மனுஷ்ய சன்மமடைந்த மனிதர்களெல்லாம் சத்வ ரஜஸ்தமோ குணங்களையடைந்து அஞ்ஞானத்தை ஏனடையமாட்டார்கள். தேவாசுரர் மனிதர்களாய்ப் பிறக்கவருவாரானால் தேவர்களென்றும் அசுரர்களென்றும் தங்களைத் தாங்களறிவார்களோ? பசியும் தாகமும் சிந்தையும் பயமும் சோம்பலும் ஆசையும் சோகமும் சந்தேகமும் சந்தோஷமும் அபிமானமும் நரையும் மரணமும் அறியாமையும் சிரமமும் வைராக்கியமும் பொறாமையும் கோபமும் மதமும் ஆயாசமும் மாநுடருக்கடுத் தவைகளன்றோ. அவையுண்டென்பதற்குச் சான்று கூறுகின்றேன்.

ஸ்ரீ ராமர் எதிரேயிருந்த பொன்மானையும் சீதையின் கொள்ளையையும் சடாயுமரணத்தையும் பட்டாபிஷேக தினத்தில் வனவாசம் போக வந்தமையும் தன் சோகத்தினால் தகப்பன் மரணமடைவாரென்பதையும் ஏன்தெரிந்து கொள்ளாமற் போயினர்? மூடனைப்போல் காடுகளிற்றிரிந்துழன்று வாலியை அநீதியாகக் கொன்று சுக்ரீவனைச் சகாயமாகவைத்துக் கொண்டு சமுத்திரத்தில் சேதுபந்தனஞ் செய்து வானரர்களோடும் சமுத்திரத்தைத் தாண்டி லங்கையை யடைந்து நாற்புறமும் வானரச் சேனைகளை யனுப்பிக் கோரமான யுத்தத்தைச் செய்வித்துத் தானும் மகத்தான யுத்தஞ் செய்தனர். அந்த யுத்தத்தில் நாகபாசத்தால் கட்டுண்டு பிறகு கருடனால் விடுவிக்கப் பட்டார். கும்பகர்ணனையும் இராவணனையும் இந்திரஜித்தையும் நிகும்பனையும் அதிகோபத் தோடுங்கொன்றார். சீதையைத் தோஷமில்லாதவளென்று தெரிந்து கொள்ளாமல் அக்னிப்பிரவேசஞ்செய்வித்தார். பிறகு லோகாபவாதத்துக்குமிகவும் அஞ்சி வனசரரும் அஞ் சத்தக்க காட்டில் விட்டார். தனக்குப் பிறந்த பிள்ளைகளைத் தன்பிள்ளைகளென்று தான் தெரிந்து கொள்வதற்கில்லாமல் ருஷிகள்சொல்லக்கேட்டுத் தெரிந்துகொண்டார். சீதை பாதளம் போனதைத்தெரிந்துகொள்ளாமற் கோபத்தோடுஞ் சகோதரரை அடிக்க எத்தனித்தார். அப்படியே யமன்வருவதை யறிந்து கொள்ளாமற் போயினார். இவையெல்லாம் மாநுடருக்குண்டாகும் அறியாமையுஞ் சேஷ்டையுமல்லவா? ஆகையால் அந்த விஷயம் விசாரஞ்செய்யத்தக்கதல்ல.

இதுபோலவே இந்தக் கிருஷ்ணர் கம்சன் பயத்தால் கோகுலத்தையும், ஜராசந்தன் பயத்தால் துவாரகையையும் போய்ச் சேர்ந்தார். ருக்மிணியைச் சிசுபாலனிடத்திலிருந்து அநியாயமா

யபகரித்து வந்தார். சம்பராசுரனா லபகரித்த சிசுவைப்பற்றித் துக்கித்தார். பின் பிள்ளையின் க்ஷேமத்தை யறிந்து சந்தோஷித்தார். சத்யபாமையினுடைய வுத்தரவினால் தேவர்களோடு சண்டைசெய்தார். தான் ஸ்திரீக்குச் சுவாதீனமா யிருப்பதைப் பிரகாசப் படுத்திக் கொண்டு தேவேந்திரனைத் தோற்கச்செய்து தன்மனைவியைச் சந்தோஷப்படுத்துவதற்காகக் கற்பகவிருக்ஷத்தை யபகரித்தார். இவரைச் சத்யபாமை மரத்திற்கட்டி நாரதருக்குத் தானஞ்செய்து விட்டாள். பின் பொன்னைக்கொடுத்து அந்தக்கிருஷ்ணரை விடுவித்துவிட்டாள். பிரத்யும்னன் முதலிய பிள்ளைகளைப் பார்த்து வருத்தப்படுகிற சாம்பவதியானவள் நல்லபுத்திரப்பேறு வேண்டுமென்று கேட்க அதற்குத் தவஞ்செய்யவேண்டுமென்று பர்வதத்துக்குப்போய் அவ்விடத்திற் றவஞ்செய்துகொண்டிருந்த தீக்ஷாகுருவாகிய உபமன்யுமுனிவரைக் குருவாகக்கொண்டு பாசுபத தீட்சையைப் பெற்றுத் தலையைமொட்டையடித்துக்கொண்டு சிவத்தியானத்தி லாசத்தியுள்ளவராய்ச் சிவமந்திரத்தைச் செபித்து முதல் மாதங் கனிவர்க்கங்களைப் புசித்தும், இரண்டாவது மாதம் சலமருந்தி ஒருகாலில் நின்று தபஞ்செய்தும், மூன்றாவது மாதம் தொடங்கி ஆறாவது மாதம் வரையில் வாயுபட்சணஞ்செய்து கட்டைவிரலூன்றித் தவஞ்செய்தும் வந்தனர். அந்த ஆறாவதுமாதம் பக்தியினால் தியானிக்கப்பட்ட சிவபெருமான் சந்திரசூடராய், உமாசகாயராய், இந்திரன் முதலிய தேவர்களால் சூழப்பட்டவராய், வருஷபவாகனாரூடராய், பிரமவிஷ்ணுக்களோடு யக்ஷகந்தர்வர்களால் சேவிக்கப்படுகிறவராய் பிரசன்னமாய்க் கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்துச் சொல்லுகிறார். ஓ கிருஷ்ணனே! நீ செய்த உக்ரமானதபசினால் யாம் சந்தோஷமடைந்தோம். ஓ யாதவகுலத்தில் பிறந்தவனே! உனது வேண்டுகோளைச் சொல்லுவாயாக. யான் நீ வேண்டியவாறு கொடுக்கின்றேன். சகல காமத்தையும் பூர்த்திசெய்கிற யான் தரிசனமாயிருக்கும்பொழுது உன் வேண்டுகோளுக்குக் குறைவுண்டாக மாட்டாதென் றருள அந்தக் கிருஷ்ணர் சங்கரரைப் பார்த்து பக்தியோடு கூடினவராய்த் தண்டாகாரமாகப் பாதங்களில் வீழ்ந்து மேகசப்தம் போன்ற கம்பீரமான வாக்கினால் அடியில் வருமாறு தோத்திரஞ் செய்யத் தொடங்கினார்.

தேவதேவனே! ஜகத்துக் கெல்லாம் பிரபுவானவனே! சர்வப் பிராணிகளுடைய பீடைகளைத் தொலைக்கின்றவனே! பிரபஞ்சத்துக் கெல்லாங் காரணனே! அசுரர்களை நாசஞ்செய்கின்றவனே! மூன்று லோகங்களையுஞ் சிருட்டிக்கின்றவனே! ஓ நீலகண்டனே! உன்னை அடிக்கடி நமஸ்கரிக்கிறேன். உம்முடைய தெரிசனத்தால் யான்

புண்ணிய சாலியாயினேன். சகல கார்யங்களையும் பூர்த்தி செய்தவனாய் விட்டேன். தாமரை போன்ற உன் பாதங்களை நமஸ்கரித்து என் சன்மம் சபலமாய் விட்டது. ஓ சகத்குருவே! சம்சாரத்தில் ஸ்திரீ ரூபமான பாசங்களால் கட்டுண்டவனா யிருக்கிறேன். ஓ திரி நேத்திரனே! என்னை ரக்ஷிப்பதற்காகத் தேவரீரைச் சரணடைந்தேன். மாநுடசென்ம மெடுத்து நான் துக்கப்படுகிறேன். துக்கநாசகனே! உம்மைச் சரணமடைந்த என்னை ரக்ஷிக்க வேண்டும். மன்மதனை யெரித்தவரே! கர்ப்பவாசத்தில் மகத்தான துக்கத்தை யடைந்தேன். பிறந்த நாள்தொட்டு கம்ச பயத்தால் கோகுலத்தில் வசித்தேன். இடையனுடைய ஆக்ஞையைச் செய்கிறவனாய் நானும் இடையனாய் விட்டேன். மகாரண்ணிய மாகிய பிருந்தாவனத்தில் மாட்டை ஓட்டித் திரிந்து கொண்டிருக்கும் போது என் தலைமயிர் அழுக்கடைந்து விட்டது. மிலேச்ச ராஜாவின் பயத்தினால் துவாரகையை யடைந்தேன். பிதுரார்ச்சிதமான அழகிய மதுரா பட்டணத்தை விட்டேன். யயாதிசாபத்திற் கட்டுப் பட்டுப் பயந்து அவனுக்கு ராஜ்யத்தைக் கொடுத்து விட்டுத் தர்மத்தை ரக்ஷணை செய்யவேண்டுமென்னும் எண்ணமுள்ளவனாய் உக்ரசேனனுக்கு எப்போதும் தாசனாயிருந்தேன். அவனை யாதவர்களுக்கு அரசனாகப் பூர்வீகர்கள் நியமித்து விட்டார்கள். கிருகஸ்த தர்மமானது மிக்க வருத்தத்தை கொடுக்கிறது. ஏனெனின், அந்தக் கிருகஸ்ததர்மம் ஸ்த்ரீகளால் வசீகரிக்கப்பட்டிருக்கிறபடியால் தர்மநாசமுண்டாகிறது. எப்போதும் பரதந்திரனாயிருக்கவேண்டிய யிருக்கின்றது. பந்தமோக்ஷ மென்கிற வார்த்தையே துர்லபமா யிருக்கிறது. ருக்மணிக்குப் பிள்ளை பிறந்தது என்கிற பொறாமையினால் சாம்பவதி என்னைப் புத்திரார்த்தமாய்த் தவசுக்கு அனுப்பிவிட்டாள். புத்திரகாமனாய் இப்போது தவஞ்செய்தேன். உலகத்துக்கெல்லாம் பிரபுவானவரே! உம்மிடத்தில் பிள்ளைவேண்டுமென்று கேட்பதற்குலச்சை யாயிருக்கிறது. மோக்ஷத்தைக்கொடுக்கின்றவராயும் பக்தர்களிடத்தில் பிரீதியுள்ளவராயு மிருக்கின்ற மகாதேவரான உம்மைப்பூசித்துத் துச்சமாயும் காலந்தரத்தில் நசித்துப்போவதாயு முள்ள சம்சாரப் பிரயோசனத்தை எந்தமூடன் கேட்பான். நான் மாயாசம்பந்தத்தால் மூடபுத்தி யுள்ளவனாய் புத்திரசுகத்தைக் கேட்கலுற்றேன். ஓ சர்வஜ்ஞமூர்த்தியே! சம்சாரம் துக்கத்தைக் கொடுப்பதென்றும் அநித்தியமாய் நசித்துப் போவதென்றும் அறியவந்தும் விரக்தி யுண்டாகாமல் ஸ்திரீயினால் பிரேரேரிக்கப்பட்டு அதனையே கோருகிறேன். நாராயணாம்சமான நான் சாபத்தினால் பூமியிற்பிறந்து வெகுவிதமான துன்பங்களை அனுபவிக்க மாயாபாசத்தினால்

கட்டுப்பட் டிருக்கிறேன். இவ்வாறான மனவருத்தத்தோடு சொல்லுகின்ற கிருஷ்ணனை மகேச்வரர் பார்த்து உனக்கின்னும் பிள்ளைகள் பிறக்கப்போகின்றன. எண்ணூறாயிரம் ஸ்திரீகள் உனக்குப் பத்தினிகளாக வரப்போகின்றனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் பலமுள்ள பத்துப்பிள்ளைகள் பிறக்கப்போகின்றனவென்று வரங்கொடுத்து மௌனமுற்றிருந்தனர். அவ்வரமேற்று நமஸ்காரஞ் செய்கிற கிருஷ்ணரைப் பார்வதியார் பார்த்துச் சொல்லுகிறார்.

ஓ கிருஷ்ணனே! நீ கிருகஸ்தர்களுக்கெல்லாம் சிரேஷ்டனா யிருக்கப்போகிறாய். நூறுவருடத்துக்குப்பின் பிராமண சாபத்தினாலும் காந்தாரி சாபத்தினாலும் குலக்ஷய முண்டாகப்போகின்றது. உனது பிள்ளைகள் சாபத்தினால் மோகிக்கப் பட்டவர்களாய் ஒருவரையொருவ ரடித்துக்கொண்டு யுத்தத்தில் நாசமடையப் போகிறார்கள். யாதவர்களும் அவ்வண்ணமே மரணமடையப் போகிறார்கள். அப்போது தேகத்தை விட்டுச் சுவர்க்கத்துக்கு வரப் போகிறாய். நடக்க வேண்டியதைப் பற்றித் துக்கிக்க வேண்டிய தில்லை. கட்டாயமாய் நடக்கப்போகிற விவகாரங்கள் ஒன்றுந் தடைபடாது. அந்த விஷயத்தில் துக்கம் வைப்பதற்குக் காரணங்கிடையாது. அது என் வசமாயுள்ளது. அஷ்டவக்ரர் சாபத்தால் உன் பத்தினிகள் கள்வர்களால் அபகரிக்கப் படுவார்கள். என்றிவ்வாறு தேவிகூறியவுடன் சம்புவானவர் தேவர்களோடு மறைந்தருளினர். பின்னர் கிருஷ்ணர் தமதாசிரியராகிய உபமன்யுபகவானை நமஸ்கரித்துச் சிவானுக்ரஹத்தை விண்ணப்பஞ் செய்து விடைபெற்றுத் துவாரகையை யடைந்தார்.

ஓ அரசனே! இவ்விசாரத்தால் பிரமாமுதலான தேவர்களெல்லாம் அனைவர்க்கும் பிரபுக்களாயிருந்தும் மாயாவேகத்தால் கலங்கிய மனமுடையவர்களாய் மாயை விளையாடும் மரப்பாவை போலாய் அதற்குச் சுவாதீனப் பட்டவர்களா யிருக்கிறார்கள். பரப்பிரம்ஹ சொரூபிணியான மாயாதேவி அவரவர் களுடைய பூர்வ ஜன்ம கன்மானு குணமாய்த் தேகங்களை யுண்டு பண்ணுகின்றனள். புவனேச்வரியாகிய தேவிக்கு உயிர்களிடத்தில் பக்ஷபாதமும் தயையின்மையுங் கிடையா. அவள் எவ்வுயிர்களையும் சம்சாரபந்தத்தினின்றும் விடுவித்து முக்தியை யடைவிக்கும் பிரயத்தன மொன்றையே செய்து வருகின்றவள். அவள் சிருட்டிக் காமலிருப்பாளானால் தாவரசங்கம ரூபமான இப்பிரபஞ்சம் சடமாகவே யிருக்கும். தயையை ஆச்ரயித்துச் சேதனாசேதனங்களை ரக்ஷணை செய்கின்றாள். அவைகளை எப்போதும் காரியததில் பிரேரேபிக்கிறாள். ஆதலால் பிரமன் முதலானோருடைய மோக விஷயத்தில் சந்தேகப்

படவேண்டியதில்லை. எல்லாச் சுராசுரர்களும் மாயையில் வீழ்ந்தவர்களாய் அம்மாயைக்குச் சுவாதீனர்களா யிருக்கின்றார்கள். அந்தத் தேவி ஒருத்தியே ஒருவருக்குஞ் சுவாதீனமின்றிச் சுதந்தரியாய்ச் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறவள். ஓ அரசனே! புவனேச்வரியை மாத்திரம் நமஸ்கரிக்கவேண்டும். அந்தப் புவனேச்வரிக்கு மேற்பட்டவஸ்து மூன்றுலகத்தினுங் கிடையாது. இந்தச் சத்தியினுடைய அதிகமான ஸ்ரீபாதஸ்மரணை சன்ம சாபல்லியத்தைக் கொடுக்கத்தக்கது. எந்தக் குலத்துக்குத் தேவி குலதெய்வமல்லவோ அந்தக் குலத்தில் பிறக்கவேண்டாம். நான் தேவியைக் காட்டிலும் வேறானவனல்லன். நான் துக்கமடைகிறவனல்லன். இப்படி பேதமில்லாமல் தேவியைச் சிந்திக்க வேண்டும். இவ்வுண்மையைக் குருமுகத்தினாலும் வேதாந்தச் சிரவணங்களாலும் அறிந்து பரமாத்ம சொரூபிணியான தேவியைத் தியானித்தல் வேண்டும். அவன் முக்தனாய் விடுகிறான். அப்படிக்கின்றிக்கோடிதருமஞ் செய்தாலும் முக்தனாகான். நிர்மலமான மனதுள்ள சுவேதாச்வதரர் முதலான ருஷிகளெல்லாம் தேவியை ஆத்மசொரூபமாகத் தியானித்துச் சம்சார பந்தத்திலிருந்தும் மோக்ஷ மடைந்தனர். பிரமவிஷ்ணு முதலானவர்களும் சரஸ்வதி லக்ஷ்மி முதலானவர்களும் சச்சிதானந்த ரூபிணியாகிய அந்தத் தேவியைத் தியானஞ் செய்கின்றனர். ஓ அரசனே! உன்னால் எது எது கேட்கப்பட்டனவோ அவைகட்கெல்லாம் விடை சொல்லப்பட்டன. வேதத்துக்குச் சமமாயும் சர்வபாபத்தையும் போக்கடிப்பதாயும் அதியாச்ர்யகரமாயும் இருக்கிற அநாதியான இப்புராணத்தை எவன்நித்தியமாய்க்கேட்கிறானோ அவன் சர்வபாபத்தினின்றும் விடுபட்டவனாய்த் தேவியினுடைய லோகத்தில் பூஜிக்கப்படுகிறான்.

சுலோகம் (ருங)

இருபத்தைந்தாம் அத்தியாயம்

ஸ்ரீ கிருஷ்ணஸ்யகிஞ்சித்தஜ்ஞத்வகாரணம்.

முற்றிற்று.

ஆஉ அத்தியாயம் இருபத்தைந்துக்குச்சுலோகம் (ருகள.)

ஆஉ ஸ்கந்தம் நான்குக்கு அத்தியாயம் (அஎ)

சுலோகம் (சுகஅ0)

———

விஷ்ணுவினுடைய அவதாரமாகிய கிருஷ்ண மூர்த்திக்கு அஞ்ஞானம் உள்ளது என்பதற்கும், உபமன்னியமுநிவரிடத்தில் தீக்ஷை பெற்றாரென்பதற்கும், சிவபெருமானிடத்தில் தமது குறைகளைக் கூறினாரென்பதற்கும் வடமொழிச் சுலோங்கள் வருமாறு :-

யதாஹேம ம்ருகம்ராமோ நபுபோத புரோகதம், ஜானக்யா ஹரணஞ்சைவ ஜடாயுமரணம் ததா.(க0) அபிஷேக திநேராமோ வனவாசம் நவேதச:, ததான ஜ்ஞாதவாந்நாமஸ்ஸ்வசோகான் மரணம் பிது: (கக) அஜ்ஞவத் விச சாராசௌ பச்யமாநோவனே வனே, ஜானகீம் நவிவேதாத ராவணேன ஹ்ருதாம் பலாத் (கஉ) சஹாயான் வானரான் க்ருத்வா ஹத்வா சக்ர சுதம் பலாத், சாகரே சேது பந்தஞ்ச கிருத்வோத் தீர்ய சரித்பதிம் (கங) ப்ரேஷயா மாச சர்வாசு திக்ஷூதான் கபிகுஞ்சரான், சங்க்ராமம் கிருதலான் கோரம் துக்கம் ப்ராப ரணாஜிரே. (கசு) பந்தனம் நாகபாசேன ப்ராபராமோ மஹாபல:, கருடான் மோக்ஷணம் பஸ்சா தந்வபூத் ரகுநந்தந: (கரு) அஹனத் ராவணம் சங்க்யே கும்பகர்ணம் மஹாபலம், மேகநாதம் நிகும்பஞ்ச குபிதோ ரகுநந்தன: (கசா) இத்தொடக்கத்தனவாகிய சுலோகங்கள் ஸ்ரீ ராமரைக் குறித்தன.

இனி, கிருஷ்ணருடைய கஷ்டங்களைக் குறித்தும் உபமன்யுமுநிவரிடத்தில் தீக்ஷைபெற்றுத் தவஞ்செய்து சிவதரிசனங்கிடைக்கப் பெற்றமையைக் குறித்தும் வரும் சுலோகங்கள்.

ததைவ மாநுஷான் பாவாந் நாத்ர கார்யா விசாரணா, பூர்வம் கம்ச பயாத் ப்ராப்தோகோகுலே யதுநந்தன:(உஉ) ஜராசந்த பயாத் பச்சாத் த்வாரவத்யாம் கதோஹரி:, அதர்மம் க்ருதவான் கிருஷ்ணோ ருக்மிண்யா ஹரணஞ்சயத் (உங) சிசுபால ஹ்ருதா யாச்ச ஜானந்தர்மம் சனாதனம், சுசோசபாலகம் கிருஷ்ண: சம்பரேண ஹ்ருதம் பலாத், (உசு) முமோத ஜானன் புத்ரந்தம் ஹர்ஷசோக யுதஸ்தத: சத்யா பஜ்ஞயா யத்து யுயுதே ஸ்வர்க்கத:கில. (உரு) இந்த்ரேண பாத பார்த்தந்து ஸ்திரீஜிதத்வம் ப்ரகாசயன், ஜஹார கல்ப விருக்ஷம்ய: பராபூய சதக்ரதும். (உசா) மானினீமான ரக்ஷார்த்தம் ஹரிச்சித்ர தர: பரபு:, பத்வா வருக்ஷேஹரிம் சத்யா நாரதாய ததௌபதிம். (உள) தத்வாத கநகநம் கிருஷ்ணம். மோசயா மாசபாமினீ, த்ருஷ்ட்வா புத்ரான் புருகுணான் ப்ரத்யும்ன ப்ரமுகாநத. (உஅ) கிருஷ்ணம் ஜாம்பவதீ தீனா யயாசே சந்ததிம் சுபாம், சய யௌ பர்வதம் கிருஷ்ண ஸ்தபஸ்யாக்ருத நிச்சய: (உகூ) உபமந்யுர் முநிர்யத்ர சிவபக்த: பரந்தப:,

உபமந்யுங் குரும் க்ருத்வா தீக்ஷாம் பாசுபதிம் ஹரி: (௩0) ஜக்ராஹ புத்ர காமஸ்து முண்டீ தண்டீ பபூவஹ, உக்ரம் த்த்ர தபஸ்தேபே மாசமேகம் பலாசந:, (௩க) ஜஜாபசிவ மந்த்ரந்து சிவத்யான பரோஹரி:, த்விதீ யேது ஜலாஹார ஸ்திஷ்டன் னேகபதாஹரி: (௩உ) த்ரிதீயே வாயு பக்ஷஸ்து பாதாங்குஷ்டாக்ர சம்ஸ்தித:, ஷஷ்டேது பகவான்ருத்ர: ப்ரசன்னோ பக்திபாவித:

இனிச் சிவபரஞ்சுடரினிடத்தில் கிருஷ்ணமூர்த்தி தனக்குள்ள குறைகளைக் கூறும் சுலோகங்கள்.

(சுசு) ஜன்மத: கம்சபயஜ மனுபூதஞ்ச கோகுலே, ஜாதோஹம நந்த கோபாலோ பல்லவாஜ்ஞா கரஸ்ததா (சுரு) கோரஜ: கீர்ணகே சஸ்து ப்ரமன் ப்ருந்தாவனேகனே, ம்லேச்சராஜ பயத்ரஸ்தோ கதோ த்வாரவதீம்புந: (சுசா) த்யக்த்வா பைத்ரியம் சுபந்தேசம் மாதுரம் தூர்லபம் விபோ, யயாதிசாப பந்தேன தஸ்மைதத்தம் பயாத்விபோ. (சுஎ) ராஜ்யம் சுபுஷ்ட மபிச தர்மரக்ஷா பரேணச, உக்ரசேனஸ்ய தாஸ்யத்வம் கிருதம்வை சர்வதாமயா. (சுஅ) ராஜாஸௌயாதவாநாம்வை க்ருதோந: பூர்வஜைகில, கார்ஹஸ்த்யம் துக்கதம் சம்போ ஸ்திரீவஸ்யம் தாமகண்டனம். (சுகூ) பாரதந்திரியம் சதாபந்த மோக்ஷவார்த் தாத்ர தூர்லபா, ருக்மண்யா ஸ்தனயான் த்ருஷ்ட்வா பார்யா ஜாம்பவதீமம். (ரு0) ப்ரேரயா மாச புத்ரார்த்தம் தபசே மதனாந்தக, சகாமேன மயாதப்தம் தப: புத்ரார்த்த மத்யவை (ருக) லஜ்ஜாபவதி தேவேச ப்ரார்த்தனாயாம் ஜகத்குரோ, கஸ்த்வா மாராத்ய தேவேசம் முக்திதம் பக்தவற்சலம். (ருஉ) ப்ரசன்னம் யாசதேமூட: பலம் துச்சம் விநாகியத், ஸோயம் மாயா விமூடாத்மா யாசேபுத்ர சுகம் விபோ. (ருங) காமின்யா ப்ரேரிதச்சம்போ முக்தித்ம்த்வாம் ஜகத்பதே, ஜாநாமி துக்கதம் சம்போ சம்சாரம் துக்கசாதனம். (ருசு) அநித்யம் நாசதர்மாணம் ததாபிவிரதிர்னமே, சாபான் நாராயணாம் சோஹம் ஜாதோஸ்மின் க்ஷிதிமண்டலே. (ருரு) போக்தும் பஹுதரம்து:க்கம் மாயாபாசேன யந்த்ரித:

இங்ஙனம் எடுத்துக் காட்டிய சுலோகங்களுக்கும் காட்டாது விட்டசுலோகங்களுக்கும் உள்ள அர்த்த விசேடங்கள் இவ்வத்தியா யவசனத்தின் கண் வந்தனவேயாம்.

———

ஸ்ரீ திரிபுரசுந்தர்யை நம:

தேவீபாகவதம்.

ஐந்தாவது ஸ்கந்தம்

உ

ககாரரூபாயை நம:

தேவீபாகவதம்

ஐந்தாம் ஸ்கந்தம்

முதலத்தியாயம்

*சிவகிருஷ்ண யோருத்கர்ஷாபகார்ஷ விசாரம்

பஞ்சசர சாஸ்திர போதன பரமாசார்யேண த்ருஷ்டி பாதேந
காஞ்சீ சீம்னிகுமாரீ காசநமோஹயதிகாம ஜேதாரம்.

சர்வக்ஞ சம்பந்நன் பசுபதியென் றுணர்த்தும் பரமபோதகராகிய சூதமுனிவரே! தேவரீர்கூறிவந்த நான்காவது ஸ்கந்தத்தால் கிருஷ்ணசன்மாதி காரணப்பிரஸ்னையும், சகலப் பிரபஞ் சோற்பத்திக்குக் கர்மகாரணங்களையும், வசுதேவர் முதலியோரது அவதார காரணங்களையும், சம்சார நிவிர்த்திக் குபாயத்தையும், நரநாராயணரது தவத்துக்கு இந்திரன் விக்னம் விளைத்தமையும், அவர்களது ஆச்சிரமத்தில் வசந்தாதிகள் பிரவேசித்தமையும், அவர்களக்காலத்தில் சம்சாரதத்வ விசாரஞ் செய்தமையும், அங்கு பிரகலாதனும் நரநாராயணருஞ் சந்தித்தமையும், சந்தித்த சமயத்தில் அவர்கள் யுத்தம் விளைத்தமையும், நாராயணருக்குப் பிருகுவினால் வந்த சாபகாரணத்தையும், சுக்ராசாரியினிடம் ஜயந்தியை யனுப்பினமையும், தேவகுரு அசுரகுருவாய் அசுரரியும் வந்தமையும், பிறகு சுக்ரர் அங்கு வந்தமையும்,தைத்யரது யுத்தத்தில் தேவிசாந்தஞ் செய்தமையும், விஷ்ணு நானாவதாரஞ் செய்தமையும், கிருஷ்ணாவதார முதலியன வந்தமையும், விஷ்ணுவாதியர் தேவியைத் துதித்தமையும், தேவி மஹிமையைப் பற்றி வர்ணித்தமையும், தேவகியினுடைய ஏழுகுழந்தைகளைக் கம்சன் வதைசெய்தமையும், ஜராகந்தன் முதலியோர் இன்னாரின்னாரம்சமென்பதையும், ஸ்ரீகிருஷ்ண சென்மம் அவரது லீலை அவரிடமஞ்ஞான மிருப்பதற்குக் காரணமிவையா

* சிவபெருமானுக்கும் கிருஷ்ணமூர்த்திக்கு முள்ள உயர்வு தாழ்வுகளைப் பற்றிய விசாரம்.

மென்பதையும் நன்றாயறியலானோம். இதுபோலும் இன்னமும் தேவிசம்பந்தமான மகிமாதிசரிதம் அநேக மிருப்பதாகத் தங்கள் வாய்மொழியினால் தெரியவருகின்றபடியால் அவைகளையுங் கேட்டின் புறுமாறு தேவரீரது சரணகமலங்களை நமஸ்கரிக்கிறோமென்று வணங்க சூதபகவான் ஐந்தாவது ஸ்கந்தத்திலுள்ள தேவியினது திவ்யசரித்திரங்களைக் கூறலுற்றனர்.

சவுனகாதியர் தாம் வேண்டியவாறு சூதமுனிவர் அன்புடன் சொல்லத் துணிந்தனராதலால் அதுகாறுங்கேட்டு வந்தவைகளுள் தங்களுக்கிருந்தவையங்களையொழித்துக் கொள்வானெண்ணி ஞான போதகராய் விளங்கும் எங்களையரே! ஸ்ரீகிருஷ்ண பகவானுடைய சர்வ மங்களகரமாயும் சிரேஷ்டமாயுள்ள பல அற்புத சரித்திரங்களை விரிவாயெடுத்துரைத்தீர். அதில் எங்களுக்குப் பலசந்தேகங்கள் தோன்றியிருக்கின்றன. அவைகளுட்சில வினாவுகின்றோம். கிருஷ்ணரோ விஷ்ணு அம்சமாயுள்ளவர். அவர் ஆரண்யத்தில் செய்தற்கருமையாகிய சில பூஜையைச் செய்தாரென்றும், பராசத்தியாகிய பார்வதியினால் அனுக்கிரகிக்கப் பெற்றாரென்றுஞ் சொல்லப்பட் டிருக்கின்றதல்லவா? அந்த கிருஷ்ணருக்கு என்ன குறைவு வந்தது? அதனைப் போக்கடிக்கத் தக்கவர் சிவனார்தானா? சிவனாராயிருந்தபோதிலும் அவரிடத்தில் இந்தக் கிருஷ்ணர் தாசபாவத்தை யடைந்து ஆராதனை செய்துதானா தன் குறையைப் போக்கடித்துக் கொள்ளல்வேண்டு மென்றற்றொடக்கத்தனவேயாம். அதற்குச் சூதமுநிவர் ஓ மஹருஷிகாள்! நீங்கள் என்னை வினவியவாறே என் சூதாசிரியராகிய வியாசமுநிவரை ஜனமேஜயன் வினவியிருக்கின்றான் அதற்கவர் விடைகூறியிருக்கின்றார். அவ்வினாவிடைகளைக் கூறுகின்றேன் கேட்பீர்களாக.

ஜனமேஜயன் வியாசபகவானைப்பார்த்து ஓ சகல தத்வார்த்த போதகரே! ஸ்ரீ கிருஷ்ணர் விஷ்ணுமூர்த்தியினுடைய அம்சந்தானே? அவருடைய அம்சமானபொழுது அந்த விஷ்ணுமூர்த்தியினுடைய பிரபாவகுண சீல சுபாவங்களெல்லாம் இவருமுடையவர் தானே? பெரியோர்களும் கிருஷ்ணபகவான் செய்த எல்லாச் செய்திகளையும் விஷ்ணுமூர்த்திக்கே ஏற்றிப்புகழ்ந்து கொண்டாடுகின்றார்களல்லவா? அங்ஙனங் கொண்டாடுவதனால் விஷ்ணுமூர்த்தியே கிருஷ்ணமூர்த்தி என்பதற்குச் சந்தேகமு முண்டோ? ஆயின்விஷ்ணுமூர்த்தியானவர் சர்வாத்மாவா யுள்ளவர், சர்வசித்தியையுங் கொடுங்கின்றவர், சர்வேஸ்வரனாயுள்ளவர், சிருஷ்டிஸ்திதிலயமென்கிற முத்தொழிலைச் செய்கின்றவர் என்றற்றொடக்கத்தனவாகிய கடவுட்டன்மைக்குரிய

பிரபுத்வ குணாதிசயங்க ளெல்லாம் உடையரல்லவா? அவர் வனத்தின்கண் சிவனாரைத் தனக்கு மேலொரு கடவுளாகக் கொண்டு சிற்றறிவுடைய சிற்றுயிர்களைப்போல் பூசித்து வழிபட்டாரென்றும் அருமையான உக்கிரமாயுள்ள தவத்தைச் செய்தாரென்றும் பார்வதியா லனுக்கிரகிக்கப் பெற்றாரென்றும் இப்பொழுது தேவரீரால் சொல்லப்பட்ட கிருஷ்ணருடைய வுபாக்கியானத்தில் கேட்கப்பட்டே னன்றோ? அந்த விஷ்ணு மூர்த்தியாகிய கிருஷ்ணமூர்த்தி தவமும் சிவபூஜையும் செய்வதற்குக் காரணமென்னை யென்றனன்?

ஓ ஜனமேஜயனே! நீ சொல்லிவந்தனவெல்லாம் உண்மையே. விஷ்ணுவானவர் தேவர்களுடைய காரியங்கட்கெல்லாம் அனுகூலராயிருந்து அசுரர்களைச் சங்கரிக்கின்ற தொழிலுடையவரல்லவா? தேவகாரியமாகவன்றோ கிருஷ்ணராக அவதரித்தது? அவ்வவதாரம் மநுஷ்ய அவதாரமல்லவா? மாடநுராய்ப் பிறந்தபொழுது வருணாச்சிரமாதி தருமங்களைக் கைக்கொண்டு ஒழுகுதல் அவசியமான தருமமல்லவா? ஆகலான் கிருஷ்ணமூர்த்தி அனேகம் பெரியோருடைய பூஜையும் குருபாதசேவையும் பிராஹ்மண சிஸ்ரூஷையும் செய்திருக்கின்றனர். இவையெல்லஞ் செய்தவர் சிவபூஜையைத் தானாசெய்யக் கூடாது? அன்றியும் விஷ்ணுவானவர் குணரூபரேயன்றி நிர்க்குணரூபரன்றே. ஆகவே குணரூபரானவர் குணசம்பந்தமான மாநுடாதி சரீரங்களை யடைவதற்குச் சந்தேகமென்னை! அந்தச் சரீரங்களை எடுக்கும்பொழுது அதற்குரிய சுகதுக்காதி பலவிகாரங்களை யடைவதற்குத் தடையென்னை? இத்தனை விகாரச் செயல்கட்கு உரியரானவர் நிர்க்குணராய் நிர்விகாரியாயிருக்கின்ற சிவனாரைத்தானா பூசிக்கக்கூடாது; கிருஷ்ணர் பாண்டவர் முதலியோருடைய சம்சர்க்கத்தில் துக்ககாலத்தில் துக்கித்தும் சந்தோஷ காலத்தில் சந்தோஷித்தும் வாதம் வந்த காலத்தில் வாதங்கள் செய்தும் ஸ்திரீகளைக் கண்ட காலத்தில் காமவிகாரம் கொண்டு இவ்வண்ணமே குரோதலோபாதிக ளுண்டாகுங் காலங்களில் அவ்வச்செயல்களைச் செய்தும் காந்தாரி சாபத்தாலும் பிரா ஹ்மண சாபத்தாலும் தனக்கு மரணாவஸ்தையும் தன்னைச் சார்ந்த யாதவர்களுக்கு நாசமும் தன் மனைவியர்களுக்குச் சோரபயமும் தன்னைத் துணையாய்க் கொண்டிருந்த அருச்சுனனுக்குக் காண்டீபத்தைத் தாங்கிச் சோரர்களைப் போக்கடிப்பதற்குக் கூடாத சக்தியீனமும் தனது கிருகத்திலிருந்த பிரத்யுமனன் அனிருந்தன் இருவர்கள் அபகரிக்கப்பட்டுப் போனமையை யுணராமையும் ஆகிய சிற்றறிவும் சிறிதொழிலுமுடைய இவர் பேரறிவாளரும் முடிவிலாற்றலுமுடைய சிவனாரைப் பூசித்தா

ரென்பது ஓர் ஆச்சரியமாகுமா? அன்றியும் இவர் நாராயணரென்னும் ருஷியினுடைய அம்சமாயுள்ளவர். ஈசரோ பரமாத்ம சொரூபமாகிய மஹேஸர், விஷ்ணு முதலானவர்களைத் தன்னிடத்தில் லயப்படுத்திக் கொள்ளுகின்றவர் தான் லயமாதற்குத் தனக்கு மேலொரு நாதனில்லாதவர். நாதராகிய தன்னிடத்திருந்தே பலமுறையும் விஷ்ணுவைத் தோற்றுவிக்கின்றவர். இத்தன்மையர் கிருஷ்ண மூர்த்தியால் ஏன் பூசிக்கப் படமாட்டார். சிவனார் பூஜிப்பதற்குரியரானாற்போலும் பார்வதியார் ஏன் அனுக்கிரகிப்பதற் குரியராகாமற் போகார்? பிரஹ்மா அகார ரூபமென்றும், விஷ்ணு உகார ரூபமென்றும், உருத்திரர் மகாரரூபமென்றும் மஹேஸ்வரியாகிய பார்வதியார் அம்மூவெழுத்தினர்த்த மென்றும் சொல்லப்பட்டிருக்கின்ற பொழுது ஒருவருக்கொருவர் மேலானவ ரென்று நன்றாய் விளங்குகின்றது. அக்காரணத்தால் சர்வசாஸ்திரங்களும் சர்வ சிரேஷ்டமாகிய அர்த்த சொரூபமாய்க் காணப்படும் இச்சத்தியையே உத்தமோத்தமாராகிய மஹேஸ்வரன் மஹேஸ்வரி என்று தோத்திரஞ்செய்கின்றன. இங்ஙனங் கூறிவந்த விசேஷணத்தால் மஹா ருத்திரராகிய பரமசிவனாரும் பார்வதியாரும் பூஜிப்பதற்கும் அனுக்கிரகிப்பதற்கும் உரிமையானாரென்பது நிச்சயிக்கப்பட்டது. அன்றியும் பிரமனைக்காட்டிலும் விஷ்ணு அதிகரென்றும் அவரினும் உருத்திரரதிகரென்றும் ஏற்பட்டபடியால் தன்னிலும் அதிகராகிய உருத்திரரைக் கிருஷ்ணர் பூஜித்தாரென்பதிற் சந்தேகமில்லை. இந்த ருத்திரரே பிரமனுக்கு வரமளிக்குநிமித்தம் தமதிச்சாமாத்திரத்தினால் அவனுடைய முகத்திற்றோன்றி அவனுக்கு வேண்டிய வரங்களை அநுக்கிரகஞ் செய்திருக்கின்றனர்.

ஓ அரசனே! இனி கிருஷ்ணர் சிவனாரைப் பூசிக்கலாமாவென்று வந்த சந்தேகத்தை விடுவாய். இனி மஹாசத்தியினுடைய பெருமையைக் கேட்பாயாக. பிரமன் முதலிய மூவருக்கும் அதிகர் நிர்க்குணராகிய மஹாருத்திர ரென்றும், அவரை யுடைமையாக வுடைய யாதொரு சத்தியோ அதுவேமஹாசத்தி என்றும் அறிவாய். அம்மஹாசத்தி தனது கண்ணிமைகொட்டுவதற்குள் பிரபஞ்சத்தை ஆக்கி அளித்து அழிக்கின்றாள். அவளுடைய சங்கல்ப சத்தி இத்தன்மைத்தென்று ஒருவராலும் அறியப்பட்டதன்று. அங்ஙனம் அறியக்கூடாத சங்கற்பசத்தியை யுடைய அத்தேவியே எக்காலத்தும் அவ்வச்சமயங்கட் கேற்றவாறு பிரஹ்மவிஷ்ணு ருத்திரர்களை அநந்த விதமாக படைத்து தனது மாயாயோக பிரபாவத்தால் அநந்த விதமாக அவர்களை 'யாட்டுகின்றாள். ஆகலான் அம்மூவருள் ஒருவராகிய விஷ்ணுமூர்த்திக்கு யுகங்கடோறும் பலவேறு அவதாரங்களுண்டாகின்றன.

அவற்றுளொன்றாகிய கிருஷ்ணாவதாரத்தில் அவரைப் பிரசவகிருகத்தினின்று ஒரு வருமறியாவண்ணம் வெளிவரச்செய்ததும், நந்தகோபனுடைய கிருகத்தில் ரக்ஷித்ததும், மதுரா நகரத்தை யடையச்செய்ததும், பயந்த சித்தத்தை யுடையவராக்கித் துவராகையை யடையச்செய்ததும், தன்கலையினின்று பதினாயிரத்தைம்பது ஸ்திரீகளையுண்டாக்கி ஒவ்வொருவரிடத்தில் ஒவ்வொருவனாகவிருந்து அவர்களுடைய லீலா வினோதங்களுக்குரியனாகி அவர்களிடத்தில் தாசபாவத்தோடு லீலா வினோதங்களுக்குரியனாகி அவர்களிடத்தில் தாசபாவத்தோடு சுவாதீனனா யிருக்கச் செய்தது மாகிய இவையெல்லாம் அந்த மஹா சத்தியினுடைய மாயாயோக பிரபாவமென்றே அறிவாய். அதனுடைய பிரபாவமன்றாயின் உலகில் சாமர்த்திய முடைய ஒரு புருஷனுக்குச் சாமான்ய மாகிய ஒரு ஸ்திரீ விலங்குபோன்று அவளைத் தடைபடுத்தி. வேறொருவர்பால் செல்ல வொட்டாது துன்ப முறுத்துகின்றனள். பூனைவாயி லகப்படும் கிளிபோன்ற கிருஷ்ண மூர்த்தியொருவர் அந்த அளவிறந்த ஸ்திரீகளுக்கு எம்மாத்திரமாவர். அந்தப் பிரபாவத்தினாற்றான் அத்தனை ஸ்திரீகளாலுந் தானொரு துன்பமு மடையாமல் அவ்வவர்களுக்கும் பிரியராய் அவர்களா லனுபவிக்கப்படுவனவாகிய கிரீடைகளுக் கெல்லாம் ரசிகராயிருந்தனர்.

இதுவரையில் மஹாசத்தியினுடைய மாயாயோகப் பிரபாவத்தால் கிருஷ்ணமூர்த்தி குண்டாகிய பிரபாவத்தைக் கூறினேன்.

இனி கிருஷ்ணமூர்த்தியினுடய குணவிசேடத்தால் விளைந்த கோலாகல களேபரப்பிரபாவத்தைக் கூறுகின்றேன் கேட்பாயாக. அனேக தருமானுஷ்டான விதிகளைச் செய்யவேண்டுமென்று பூமியிற் பிறந்த இவர் சிசுபாலன் முதலாயினாரைக் கொன்றபின்னர் விதர்ப்பதேசத் தரசனாகிய வீமன் கன்னிகையை அபகரித்து விவாகஞ் செய்துகொண்டார். அன்னியனுடைய மனைவியை அபகரிப்பது எந்த விதியை சாரும்?

இப்படியே இவரியற்றிய விதிகடந்த அவிதியான கிருத்தியங்கள் பலவுள. அவைகளை நாமும் முன்னரெடுத்துக்காட்டி யிருக்கிறோம். நீயுங் கேட்டிருக்கின்றாய். இனி ஆங்காங்குங் காட்டுகின்றோம்.

சரீரமுள்ளவன் அகங்கார வசப்பட்டவனாய் நன்மை தீமைகளைச் செய்கின்றான். ஏனெனில் அஞ்ஞான சமூகத்தால் அறிவு மூடப்பட்டு அறியாமை மேலிடுவதனால் அவிதியைச் செய்யத் தலைப்படுவனே யன்றி வேறென்செய்யத் தலைப்படுவன். இப்பிரவஞ்சம் மூலப்பிரகிருதியினின்றுந் தோன்றிய தாமச அகங்கார ரத்தி னின்றும் வெளிவந்துள்ளது. இப்பிரபஞ்ச சம்பந்தமான

முத்தொழிலும் அகங்கார சம்பந்தமுள்ளது. அதனால் அத்தொழில் செய்யும் மும்மைத் தேவரும் அச்சம்பந்த முள்ளவர். அம்மூவரும் அச்சம்பந்த மிலராயின் அத்தொழிலைச் செய்ய இயல்புடைய ராகமாட்டார். எவனொருவன் அகங்காரம் இத்தன்மைத்தென் றுணர்ந்து அதனினின்றும் விடுபடுகின்றானோ அவன் முத்தனாகின்றான். முத்தனாவனேயாயின் புத்திர மித்திர களத்திராதிகளாகிய பந்தத்தி னின்றும் விடுபடுவதற் குரியவனாவான் அகங்காரமுடையவனே பந்தன். அது வொழியப் பெற்றவனே முத்தன். ஆகவே பந்தஞ் செய்வது அகங்காரமே. அகங்காரம் என்செய்வதெனின்? நான் கர்த்தா பலிஷ்டனாகிய என்னால் இது செய்யமுடியும் நான் மநுஷ்யன் நானிது செய்திருக்கின்றேன் இது செய்கிறேன் இது செய்யப்போகிறே னென்று எவ்வவற்றினும் முற்பட்டு வரச்செய்யும். இவனாலொன்றும் ஆகாதிருப்ப ஆவதுபோற் காட்டி அவற்றில் கட்டுப்படச் செய்வதனால் அகங்காரம் பந்தமாயிற்று. மண்ணாகிய காரணமன்றிக் கடாதிகளாகிய காரியம் எப்படி உண்டாக மாட்டாதோ அதுபோல அகங்காரமாகிய காரணமன்றிச் செய்வேன் போவேன் வருவேன் ஆக்குவேன் காப்பேன் அழிப்பேன் என்கிற வாசகங்கள் உண்டாகமாட்டா.

இவ்வண்ணம் விவகரிப்பதற் கிடஞ்செய்வதாகிய பிரபஞ்ச விவகாரத்தில் சுத்தமாகிய அபிப்பிராயமுள்ளவன் தலைப்படுவதற்கு முயல்வானா! விஷ்ணுவானவர் இரக்ஷிக்கிறாரென்றால் நான் இரக்ஷிக்கிறேனென்று அகங்காரத்தை மேற்கொண்டு இரக்ஷகத்தொழிலைச் செய்கின்றாரே யன்றி அகங்காரத்தைவிட்டா அதனைச் செய்கின்றார். அதனைவிட்டு அத்தொழிலைச் செய்வாராயின் அத்தொழிலை யுத்தேசித்துச் சனனமாகிய பிரவாகத்தில் மூழ்கிவந்தலைய வேண்டுவதில்லை. அப்படிச் செய்கின்றவர் முன்கூறிய திரிகுணாதீதராகிய மஹாருத்திரரொருவரே. அவரொழிந்த எனையரெல்லாம் அகங்காரத்தாற் செய்கின்றவரே. அகங்காரத்திற்கு மூலம் மோகமாகிய அஜ்ஞானம். அதனாலுண்டாவது சம்சாரம். அகங்காரத்தை விட்டவர்க்கு மோகமில்லை. அஃது இல்லாதவர்க்குச் சம்சாரமுமில்லை.

தத்துவார்த்தமுணர்ந்த பெரியோர்கள் உலகின் கண்ணுள்ள மாநுடர்கள் சாத்துவீகர்கள் இராஜசர்கள், தாமசர்கள் என்று அழைக்கப்படுவார்களென்றும் அப்படியே மும்மூர்த்திகளும், துர்க்காலக்ஷிமி சரஸ்வதிகள் என்றெண்ணப்பட்ட மும்மைத்தேவியரும் மூன்றுலகிலுமுள்ள ஏனைய ஸ்திரீஜனங்களும் அப்படியே அழைக்கப்படுவார்களென்றுங் கூறுவர். மாயையினால் ஆவரிக்கப்பட்டவராயும் மந்தபுத்தியுடையவராயு மிருக்கின்ற பண்டிதர்

சிலர் பரவாசு தேவராகிய விஷ்ணுமூர்த்தி யானவர் தமதிச்சையினால் அநேக விதங்களாய் லோகரக்ஷணார்த்தம் அவதாரங்களைச் செய்கின்றாரென்று சந்தேகமற்றவராய்க் கூறுகின்றார்கள். அந்தோ! எவ்வளவு மூடனா யிருந்தபோதிலும் துக்கசமூகங்கள் நிறைந்துள்ள அத்தியந்த சங்கடமாகிய கர்ப்பவாசத்தில் புத்தியை வைப்பானா வைக்க மாட்டான். இந்த வாசத்தில் ஞானமுள்ளவரும் பிரசித்திபெற்ற வருமான விஷ்ணு மூர்த்தியானவர் எப்படிப் புத்தியை வைப்பார். கௌசலை தேவகி இவர்களுடைய கர்ப்பம் ஏனையருக்குள்ளது போல் கேவலம் மலமயமாயுள்ளதேயன்றி சுத்தமாயுள்ளதா ? அந்த கர்ப்பத்தில் சுவேச்சையினால் அடைந்தா ரென்று குருட்டுப்பண்டிதர்கள் சொல்லுகின்றார்களே இதுவென்ன ஆச்சரியம்.

அதிபரிசுத்தமாகிய வைகுண்ட பதத்தைவிட்டு துக்கப்பிரதமாகியும் அதிகசிந்தனைகளை விளைவிப்பதாகியும் விஷத்தினுங்கொடிய விஷமாகியும் இருக்கின்ற அபரிசுத்தத்திற் சிறந்த அந்தகர்ப்ப குண்டங்களில் எப்படி பிரவேசிக்கத் துணிவார்.

உலகில் அநேக விதமான தவங்கள் தானங்கள் யஜ்ஞங்கள் முதலியவற்றைச் செய்து கர்ப்பவாசம் வராவண்ணம் பிரார்த்திக்கின்றார்களே யல்லாமல் அந்தவாசம் வேண்டுமென்று பிரார்த்திப்பாரில்லையே ? விஷ்ணுவானவர் தான் சுதந்தரராயிருப்பாரானால் ஏன் கர்ப்பவாசஞ் செய்யப் பலமுறையும் வருகின்றார். சுவாதீன தருமம் அவருக்கிருக்குமே யானால் கர்ப்பவாசத்தில் எப்படி ருசியுண்டாகும்.

ஓ புத்திமானாகிய அரசனே! பிரஹ்மாதி ஸ்தம்பபரியந்தமாயுள்ள தேவர் மாநுடர் திரியக்குகளாகிய இந்தப் பிரபஞ்சம மஹாசக்தியினுடைய மாயாயோக வசத்தில் கட்டுப்பட்டு ஆடுகின்றன வென்று அறியக்கடவாய். பிரஹ்மவிஷ்ணு வாதியரை மாயைக்கு அதீதப்பட்டவரென்று சிலர் பிரமிக்கின்றார்கள். நீ அவர்களை நான் சொல்லிவந்த முறையால் சிலந்திப்பூச்சி தான் செய்யுந் தொழிலால் தானே கட்டுண்டிருத்தல்போல் தங்கள் தொழிலால் தாங்களே கட்டுண்டிருப்பவரென் றறிவாய்.

முதலாம் அத்தியாயம்

சிவகிருஷ்ண யோருத்கர்ஷாபகர்ஷ விசாரம் முற்றிற்று.

அத்தியாயம் ஒன்றுக்குச் சுலோகம் (ருசு.)

உ

கல்யாண்யை நம:

இரண்டாம் அத்தியாயம்

மகிஷா சுரோற்பத்தி.

———————

அரசன் வியாசபகவான் சொல்லி வந்ததைக் கேட்டு விஷ்ணு மூர்த்திக்கும் மஹேஸ்வரிக்குமுள்ள உயர்வு தாழ்வுகளை நன்குணர்ந்து ஈஸ்வரியினுடைய பிரபாவத்தைக் கேட்பதில் ஆசையும் அன்புமுடையனாய் ஓ வியாசபகவானே! தேவியினுடைய சரித்திரத்தைக் கேட்பதற்கு நான் மிக ஆவலுடையவனா யிருக்கிறேன். இச்சரித்திரத்தைக் கேட்க விரும்பாதவரு முலகிலுண்டோ. தேவியினுடைய மகிமையை அறிவதை விட்டு அவளிடத்துத் தோன்றிய சராசராத்மகமாகிய உலகவிவகாரத்தை அறிவதென்றால் எவனால் முடியுமென்று சொல்லக்கேட்ட முனிபுங்கவர் ஓ அரசனே! கேட்பதில் சிரத்தை யுள்ளவனாயும் அறிவதில் சாந்தகுண முடையனாயு மிருப்பவனுக்கு எவன் கேட்பதைச் சொல்லா தொழிகின்றானோ அவன் மூடனென்று சொல்லப்படுவான். ஆகையால் நீ விரும்பியவண்ணம் தேவியினுடைய சரித்திரங்களைக் கூறுகின்றேன் கேட்பாயாக.

பூர்வம் மகிஷனென்னும் ஓரசுரன் அரசாண்டுவருங்காலத்தில் சுராசுரர்களுக்கு அதிகோரமாகிய யுத்தம் நேரிட்டது. அது கண்ட மகிஷன் மேருமலைக்குப் போய்ப் பிரமதேவனை இருதய கமலத்தில் தியானஞ்செய்து யாவரும் அதிசயிக்கத்தக்க வுக்கிரமான தவத்தைப் பதினாயிரவருடஞ் செய்தனன். பிரமதேவன் அவன்றவத்திற்கு மகிழ்ந்து அம்சவாகனரூடனாய் அவனெதிரே அவன்றவத்திற்கு மகிழ்ந்து அம்சவாகனரூடனாய் அவனெதிரே வந்து ஓ தவச்சிரேஷ்டனே! நீ வேண்டிய வரங்களைக் கேட்பாய் யான் தருகின்றேனென்ன, அசுரன் அப்பிரமனைக் கண்டுகளித்து எல்லாவற்றையும் படைத்தருளும் வள்ளலே! யான் மரணமடையாதிருக்கவேண்டுகிறேன் எப்படியானால் எனக்கு மரணபயம் வராமலிருக்குமோ அப்படியனுக்கிரகஞ்செய்வாய். ஏனெனில் ஜன்மமெடுத்தவன் மரணமடைவது நிச்சயம். ஜனனமெடுத்த யான் மரணமடைய வேண்டியவனாயிருத்தலால் அது வராவண்ணம் நீர்அனுக்கிரகஞ் செய்வதுதான் விசேடம். சனன மரணமடைவது யாவருக்கும் உள்ளகாரியமே தவஞ்செய்ததனால் யானடையும் விசேஷமென்ன வென்று கேட்டபொழுது பிரமதேவன் அசுரனைப்பார்த்து உலகில் சரமாயும் அசரமாயுமுள்ள

எல்லாப்பிராணிகளும் காலதத்துவமென்னும் ஓரளவையில் நிற்கின்றவர். அக்காலதத்துவமன்றி பிராணிகள் ஓரணுவளவும் அசைதற்கு முடியா. அக்காலமோ ஜனனகாலம் மரணகாலம் என இருவகைத்தாயிருக்கும். அந்தக்காலவகையை மாற்றுவதற்கு யான் கடவுளாவனா! யானும் அதற்குட்பட்டவனே. ஆகலான் மரணகாலத்தைக் கடத்தலாகிய அந்த வரமொழிந்து மற்றெந்தவரம் வேண்டினாலுந் தருகின்றே னென்றான். அசுரன் ஆனால் எனக்குத் தேவர்களாலும் மாநுடராலும் தைத்தியர்களாலும் மற்றெவராலும் மரணமுண்டாகக் கூடாது. இவரல்லாத எந்தஸ்திரீ என்னைக் கொல்லப் போகின்றாள். அதனால் அவர்களை நான்குறிக்கவில்லை. நீஸ்திரீயினால் மரணம் எனக்கு வரச்செய். இவ்வுலகில் எந்த ஸ்திரியானவள் என்னைக் கொல்வதற்கு வருவாள் எவ்வண்ணம் சாமர்த்திய முடையவளாவாள். பிரமன் பராசத்தியாகிய ஒருஸ்திரீ இருக்கின்றாளென்பதை யுணராது "ஸ்திரீயினால் எனக்கு மரணம் வரச்செய்" இவ்வுலகில் எந்த ஸ்திரீயானவள் என்னை கொல்வதற்கு வருவாள் எவ்வண்ணம் சாமர்த்திய முடையவளாவாள் பிரமன் பராசத்தியாகிய ஒருஸ்திரீ இருக்கின்றானென்பதை யுணராது "ஸ்திரீயினால் எனக்கு மரணம் வரச்செய் என்று மகிஷன் கேட்டவரத்துக்கு மிகவும் மகிழ்ந்தவனாய் ஓ மகிஷாசுரனே! ஒருக்கால் எப்போதாவதுஸ்திரியினால் உனக்குமரணமுண்டாகும். புருஷர்களால் மரணமில்லை என்றனுக்கிரகஞ்செய்து போயினன். அசுரனும் தன்னிடத்தைப் போய்ச் சேர்ந்தன னென்று வியாசமுநிவர் கூறியபொழுது அரசன் ஓ சுவாமிகாள்! மகிஷாசுரன் எவன்மகன்? எவ்வண்ணம் பலிஷ்டனாயினான். அவனுக்கு மகிஷரூபம் எப்படி வந்ததென்று வினாவினன். வியாசர் ஓ அரசனே! பூமண்டலத்தில் "தநு" என்பவனொருவ னிருந்தான் அவனுக்கு "ரம்பன்காம்பன்" என்று இரண்டு குமாராகளிருந்தனர். அவ்விருவருள் காம்பனென்பவன் பஞ்சநதமென்னுந் தீர்த்தத்தில் மூழ்கியும், ரம்பனென்பவன் அந்தத் தீர்த்தக்கரையிலுள்ள ஆல்மரத்தடியில் பஞ்சாக்னி மத்தியிலுமிருந்து நன்மக்கட்பேறுவேண்டி அரியதவத்தைச் செய்துவந்தனர். இவர்களது தவச்செயலை இந்திரனறிந்து துக்காக்கிராந்தனாய் முதலையுரு வெடுத்துப் பஞ்சநதி தீர்த்தத்துட்சென்று காம்பன் காலையிழுத்துக் கொன்றான். அவன் மரணமடைந்ததைக் கண்ட தமயனாகிய ரம்பன் மனம் சகிக்கலாற்றாது தன் தலையையறிந்து அக்னியில் ஓமம் பண்ணு வதற்கெண்ணி உக்கிரங்கொண்டு இடக்கையால் தனது சிகையைப் பிடித்துக்கொண்டு வலக்கையால் வாளை எடுத்து சிரசைவெட்டத் தொடங்கியபொழுது அக்னிதேவன் பிரத்தியக்ஷமாய்வந்து ஓ அசுரனே! நீ அசுரர்களுக்குள் மூடனாயிருக்கின்றாய் நீ செய்யத்துணிந்த

இச்செய்கை ஆத்மகாதகமல்லவா. அது பெரும்பாவமல்லவா? இதனைச் செய்ய எப்படி துணிந்தாய்? சாகாதே, சாவதினா லென்னகாரியமாகப்போகிறது உன்னபீஷ்டமென்ன அதனைக் கேளென்று அக்னிதேவன் கேட்டபொழுது ரம்பனென்பவன் பிடித்த சிகையை விட்டு அக்கினி தேவனைப்பார்த்து எனதுதவத்துக்கு நீர்மகிழ்ந்திருப்பீராயின் என் மனோரதமாகிய வரத்தைத் தந்தருளும். என்னையெனின்! மூன்றுலகத்தையும் வெல்லத்தக்கவனாயும் சத்துரு சங்காரனாயும் தேவர் மாநுடர் அசுரராதியரால் வெல்லக்கூடதவனாயும் காமரூப மெடுப்பதற்குச் சத்திமானாயும் மஹாபராக்கிரமசாலியாயும் யாவரானும் நமஸ்கரிகத்தக்கவ னாயுமுள்ள ஓர் புத்திரனைத் தரல்வேண்டுமென்று கேட்க அக்கினிதேவன் நீ எண்ணியபடியே குமாரனுண்டாவான். நீ மரணமடைய வேண்டாமென்றேக ரம்பனும் அக்கினிதேவனை வணங்கித் தன்னிடஞ்சென்றான்.

ஓர் நாள் ரம்பன் யக்ஷர்களால் சூழப்பட்டதாகியும் அதிசுக கரமாகிய மங்களத்தோடு கூடியதாகியுமுள்ள ஓராலமரத்தடியில் மதச்செருக்கும் மிக்க அழகுள்ள ஒரெருமையைக்கண்டு வினைவசத்தால் காமவெறிகொண்டு அதனைச்சமீபிக்க அதுவும் இவனிடத்தில் சந்தோஷமும் ஆசையுமுடையதாய்ச் சமீபித்தது. ரம்பன் அக்கணமே அதனைப்புணர அது கருப்பமடைந்தது. பின்னர் ரம்பன் எருமையை அழைத்துக்கொண்டு பாதளத்தையடைந்து தான் மனைவியாகக்கொண்ட அந்த எருமையினிடத்தில் வேறொரு கடர்வும் வந்துசேரவொட்டமற்றடுத்து அதனைக்காத்து வந்தனன்.

ஓர் நான் ஒருகடா அந்த எருமையின்மேல் மிக்க காமங் கொண்டு அதைத்துறத்த அதைக்கண்ட ரம்பன் அதைத் துறத்தித் துறத்தி நன்றாய் மோதியடித்து வோட்டினன். அது காமவெறியோடு கோபவெறியுங்கொண்டு அந்த ரம்பனைத்தனதிரு கொம்புகளாலும் மார்பிற்குத்திற்று. அவன் பூமியில் வீழ்ந்திறந்தனன். அவனிறந்ததைக் கண்ட எருமை மிகவும் பயந்து மருட்சிகொண்டு அந்தப் பாதளத்தைவிட்டுத் தான் முன்னிருந்த ஆலமரத்தடியில் யக்ஷர்களைச் சரணமடைந்தது. அவ்விடத்தினும் காமக்கடாசென்று எருமையைப் பின்றொடர யக்ஷர்கள் கடா மேற்சென்று வருவதையும் அதற்கு எருமை இடங்கொடாது தங்கள்மாட்டு வருவதையும் பார்த்து அந்தோ! இந்த எருமையை ரக்ஷித்தல்வேண்டுமென் றிரங்கி அந்தக் கடாவை விலக்கி அதனோடு பெரும் போர்செய்து பாணத்தை விட்டு அக்கடாவைக் கொன்றனர்.

பின்னரந்த எருமை தன்னாயகனாகிய ரம்ப னிறந்துபோனதை யெண்ணித் துயருறுங்காலத்தில் யக்ஷர்கள் பாதாளத்திற் கிடந்த பிரேதத்தைக் கொண்டுவந்து சிதை (பாடை) கட்டி அதிலவனை வளர்த்திய பொழுது அவனோடு அந்த எருமை அக்கினிப்பிரவேச மாவதற்கு எத்தனித்தது. அதனெண்ண மறிந்தயக்ஷர்கள் அதனைத்தடுத்தும் அது அவர்கள் தடையிற்றடைபடாது தீப்பற்றி எரிகின்ற கணவன் மேற்பாய்ந்து. அப்பொழுது அதன் கர்ப்பத்திலிருந்த ரத்தபீஜனாகிய "மகிஷன்" என்கிற அசுரன் அச்சிதாமத்தியிலிருந்து வெளிப்பட்டனன். பின்னரவ்வசுரன் அநேக அசுரர்களால் சூழப்பட்டு ராஜ்யபட்டாபிஷித்தனாய் தேவாசுரர்களாலும் ஜயிப்பதற்குக் கூடாதவனாய் அரசாண்டு வந்தனன்.

இரண்டாம் அத்தியாயம்

மகிஷாசுரோற்பத்தி முற்றிற்று.

———

சுலோகம் - (௫0)

ஆக அத்தியாயம் உ-க்குச்சுலோகம் (௧0௬.)

———

உ

கல்யாணகுண சாலிந்யை நம:

———

மூன்றாம் அத்தியாயம்

மகிஷாசுர விருத்தாந்தம்.

———

ஓ அரசனே! மகிஷாசுரன் இராஜ்ய பட்டாபிஷித்தனாய்த் தனது புஜபலபராக்கிரமத்தால் கடல்சூழ்ந்த பூமண்டலத்தைத் தன் கைவசமாக்கித் தன்னொரு குடையின்கீழ் வாழ்வோர் சத்துரு பயமுதலிய பயமற்று நிர்ப்பயமுள்ளவராக வாழச்செய்து சக்ஷுரன், மஹாவீரியன், மதோத்கடன், தனாத்யக்ஷன், தாம்பரன், அசிலோமன், உதர்க்கன், பிடாலாக்யன், பாஷ்கலன், திரிநேந்திரன், காலன், பந்தகன், என்பவரைச் சேனாதிபதிகளாக்கி தனதாளுகை முற்றும் அவர்களையே நிறைந்திருக்கச் செய்தனன். அங்கங்குள்ள மஹா வீராதிவீரரான எல்லா அரசர்களும் அவனடிக்கீழ்ப்பட்டுத் தத்தமக்குரிய

பகுதிகள் கட்டி வாழ்ந்திருந்தனர். அந்தணரெல்லாம் அவனுக்குச் சுவாதீனராய் யஜ்ஞபாகங்களைக் கொடுக்கின்றவர்களாக விருந்தனர். இவ்வண்ணம் ஏகசக்கிராதிபதியாய் வாழ்ந்து வருநாளில் ஓர் சமயம் சுவர்க்கலோகத்தை வெற்றிக்கொள்ள நினைந்து ஓர் தூதனையழைத்து ஹேவீரா! நீ இப்பொழுது சுவர்க்கலோகம் போய் அங்கு தேவசபையிற் பயப்படாமற் சென்று இந்திரனைப்பார்த்து ஓ இந்திரா! நீ இந்த சுவர்க்கத்தை விட்டுவிடு உனதிஷ்டப்படி எங்கேனும்போ அல்லது எங்கள் பிரபுவாகிய மகிஷாசுரனுக்குத் தொண்டுசெய் அப்படித் தொண்டனாகில் ராஜா உன்னை ரக்ஷிப்பார். இல்லாவிட்டால் வச்சிராயுதபாணியாய் போருக்கெழுந்திரு. நீ எங்கள் பூர்வீகர்களால் ஜயிக்கப்பட்டவன்றானே! உனது ஆண்பிள்ளைத் தனத்தை நானறிவேன். ஓ அகலிகையிடத்திற் சோரம்போய்ப் பூனையானவனே! உனது பராக்கிரமம் உலகமெல்லாமறியும் யுத்தத்திற்கெழுந்திரு ஏன் விழிக்கின்றாய் என்று பலவாறாகச் சொல்லி அவனபிப்பிராயத்தைத் தெரிந்து வாவென்று ஏவினான். அத்தூதன் அவ்வாறே இந்திரனிடத்திற் போய்ச்சொல்ல அவ்விந்திரன் கேட்டு மனம் புழுங்கிப் புன்னகை செய்து ஓ மூடா! கர்வம்பிடித்தவனே! நீ யார்? உன்னை நானிதுவரையி லறியேனே? உன்னுடைய எஜமானனுக்குப் பிடித்திருக்கிற மதகர்வமாகிய ரோகத்துக்கு நான் சிகிச்சை செய்கிறேன். அதற்குமேல் ராக்ஷசமூலத்தை வேருடன் பறித்தெறிகின்றேன். ஓ தூதனே! இனி ஒருவார்த்தையுஞ் சொல்லாமற்போ என் வார்த்தைகளை உன்னை யனுப்பிய கடாவுக்குச்சொல். ஓ கடாவுக்காக வந்த கருங்கடாவே! உன்னையேவிய எருமைக்குப் பிறந்தவனுக்கு யுத்தஞ்செய்ய விருப்பமுளதாயின் சீக்கிரமா யோடிவரச்சொல் கடா ஓடிவரத் தொடங்கினால் அதனை மடக்க ஒருவராலு முடியாது. அவன் பூனை ஆகிருதியுள்ளவனன்று கடா ஆகிருதியுள்ளவன். ஆகலான் அவன் என்னிலும் பெரியவனே! யான் சிறிய அமுதண்பவன் அவன் சுமைசுமையாய்ப் புல்தின்பவன். யான் சிறிய வச்சிராயுத முள்ளவன் அவன் நீண்ட கொம்புள்ளவன். அவன் எவ்வாறிருந்தபோதிலும் கடா நான் ஆயிரங்கண்ணனாயினுந் தேவராசன். நானோ எக்காலத்தும் அழிவில்லாத தெய்வ பலமுள்ளவன். அவனோ சிந்நாளில் அழிவுறும் வரபலமுள்ளவன். நானோ எல்லாந்தரும் கற்பகமுடையவன் அவனோ எல்லா மழிக்குங் கர்வமுடையவன். நானோ மஹா தேவியினால் ரக்ஷிக்கத்தக்கவன், அவனோ அத்தேவியினால் பக்ஷிக்கத்தக்கவன். என்னடியால் அவனடிபட்டுப் போகப்போகிறான். அவனடியால் நான் எந்நாளும் வாழப்போகிறேன். அடா தூதா இனி நீ இங்கு நில்லாது ஓடிப்பிழை தூதாக வந்த உன்னைக் கொல்லுவது தருமமன்றென்று

உயிரோடு விட்டேன் ஓடிப்போ! ஓடிப்போ!! என்று அவனைத் துரத்திவிட்டனன். ஓடிப்போன தூதன் மகிஷாசுர னிடத்திற்போய் நமஸ்காரஞ் செய்து ஓ அசுரேந்திரனே! தேவேந்திரன் உங்களைச் சிறிதும் மதிக்கவில்லை தேவ சைனியத்தோடுங் கூடியிருக்கின்ற தன் பலத்தையே விசேடமாக எண்ணியிருக்கிறான். இந்திரனால் எது சொல்லப்பட்டதோ அதை இச்சபையின்கண் எடுத்துச் சொல்லத்துணியேன். வேறேதேனுஞ் சொல்லச் சொன்னால் சொல்லுகின்றேன். க்ஷேமத்தை விரும்பினவன் பிரபுவினுடைய சந்நிதானத்தில் பிரபுவினால் விரும்பத்தக்க இனிய மொழிகளும் பிரபுத்துவ விசேடங்களும் எடுத்துச் சொல்லுதல் நீதி யன்றென்று அரசநீதியிற் கூறுகின்றதல்லவா! ஒற்றாடல் என்கிற நீதியை யனுசரித்துத் தேவரீர் விரும்பிக் கேட்கும் பக்ஷத்தில் உமது ஆணைக்கஞ்சித் தேவரீர் விரும்பிக் கேட்கும் பக்ஷத்தில் உமது ஆணைக்கஞ்சிச் சொல்லுகிறேன் அதனாற் குற்றமொன்றுமில்லை. இந்திரன் உமக்குச் சத்துருவதலால் இயமன் கொக்கரிப்பதுபோல் விஷத்துக்குச் சமானமாகிய வார்த்தைகளைச் சோனைமாரிபோற் பொழிந்தான். அவற்றிலொன்று சொல்லவும் என்னாவெழவில்லை அவற்றிலொன்று நீர் கேட்டாலும் உமக்கு என்ன கோபமுண்டாகுமோ அதுவுந் தெரியவில்லை. ஆயினும் ஒன்று கூறுகின்றேன் யான் அசுரேந்திர னனுப்பிய தூதனென்றேன் அதற்கு அவன் அசுரேந்திரனா அவன்கடாக்களிற் பெரிய கடா வல்லவா! புல்லைத் தின்னுகிற மாடல்லவா! என்றான் என்று சொல்லுவதற்கு முன்னமே கோபாவேச முடையவனாய்வாலைத் தூக்கிக்கொண்டு மூத்திரம்பெய்து அசுரர்சேனைகளைக் கூவி ஓ அசுரர்களே! இந்திரன் யுத்தஞ்செய்யச் சித்தனாயிருக்கின்றானாம் நீங்கள் போர்க்கோலங்கொண்டு முன்னே செல்லுங்கள். ஒரு இந்திரனல்ல கோடியிந்திரர் வந்தாலும் அவர்கள் என்முன் படப்போகிற பாட்டைப் பாருங்கள். எனக்கு முன்னே சூரனென்று எவன்றான் வருவான். இனி இந்திரன் எவ்விடத்தில் ஓட்டம்பிடித்தாலும் நான் விடேன். கொல்லதறகஞ்சேன்.

இந்திரனுடைய சூரத்துவம் எங்கே என்றால் சாதுக்களிடத்திலும் தவஞ்செய்வோரிடத்திலும் கபடிகளிடத்திலும் விடாளிடத்திலுந்தான். சுத்தவீரனாகிய என்போன்றவரிடத்தன்று. அவன் செய்தியறியீர்களா! பரஸ்திரீகளை அபகரிக்கின்றவனல்லவா! அப்சரஸ்திரீகளைக் கொண்டு தவஞ்செய்வோரைக் கெடுக்கின்றவனல்லவா! ஒரு ஆயுதத்தைப் பிரயோகஞ்செய்வதுபோற் காட்டி வேறு ஆயுதத்தைப் பிரயோகஞ்செய்கிறவனல்லவா! எப்பொழுதும் விசுவசிக்கின்றவனைக் கொல்ல நினைக்கின்ற பாவியல்லவா? அவனைப்போலும்

பிரஷ்டனுமுண்டா! துஷ்டனுமுண்டா! அப்சர ஸ்திரீகளுடைய பலத்தினால் சற்றே கர்வத்தையடைந்திருக்கிறான். நம்மவரில் நமுச்சி என்கிற அசுரன்றான் அக்கள்வனால் கொல்லப்பட்டான்.

விஷ்ணுவோ வென்றால் இவனண்ணன்றானவனும். கபடத்தில் ஆசார்யபட்டம் வகித்தவன். மஹா மோசக்காரன். பொய்ச்சபதத்துக்கு முதலாளியாயுள்ளவன். அநேகவிதமான மாயாரூபமெடுத்து வஞ்சிப்பதில் சமர்த்தன. பலமுள்ளவன் போல் டம்பங்காட்டுவதில் மஹாபண்டிதன். நம்மவரில் இரணியாக்ஷனைப் பன்றியுருவெடுத்துக் கொன்றவன். இரணியகசிபனை சிங்கவுருவெடுத்துக் கொன்றவன். இவனுக்கும் அந்த இந்திரனுக்குமா நான் வசப்பட்டவனாவேன்? ஆகேன் இது நிச்சயம். தேவர்கள் தேவரென்று பெயருடையவரேயன்றி மஹாவஞ்சகர். அவர்களிடத்தில் எனக்கு ஒருபொழுதும் விசுவாசங்கிடையாது. யுத்தபூமியில் இவர்களெல்லாரும் என்னை என்ன செய்வார்கள். உருத்திரரும் என்னைச் செயிப்பதற்குச் சத்தியுடையவ ராகார். ஏனையதிக்குப் பாலகர் என்னை நினைக்கவேமாட்டார்கள். சுவர்க்கலோகம் எனக்குச் சுவாதீனமாகப் போகிறது தேவர்களுக்குரிய யஜ்ஞபாகங்களெல்லாம் இனி நம்முடையனவேயாம். நம்மினத்தவ ரோடுங்கூடி உல்லாசமாய்ச் சோமபானமுஞ் செய்யலாம். யான்தேவராலும் மாநுடராலும் மற்றெவராலும் சாகாவரம் பெற்றுள்ளேன். ஆனால் ஒருஸ்திரீயினாலுண்டென்று சொல்லக் கேட்டிருக்கின்றேன். அவளால் என்னைக்கொல்லமுடியுமா? அவளால் என்னயுத்தஞ் செய்யமுடியும். ஆகையால் நீங்கள் யுத்தத்துக்குப் பின்னிட வேண்டாம். இன்னமும் பாதாளத்திலுள்ள பர்வதவாசிகளாகிய ராக்ஷசவீரர்களையும் வரவழைத்து அவர்களையும் சேனாதிபதிகளாக்கொண்டு சீக்கிரத்தில் போர்க்குப் புறப்படுங்கள் நீங்களஞ்சவேண்டாம் நானொருவன்றான் தேவகூட்டங்களை வெல்லத்தக்கவன் உங்களை நானழைப்பது அலங்காரார்த்தமேயன்றி வேறன்று. தேவர்களைச் செயிப்பதற்கு எனக்கு அஸ்திர சஸ்திரங்கள் வேண்டாம். என்னிரண்டு கொம்புகளே போதும். யுத்தமுடிந்தபின்னர் நாமனைவரும் அங்குள்ள நந்தனவனத்திலிருந்து மந்தாரமாலைகளைச் சூடிக்கொண்டு தேவஸ்திரீகளோடு சல்லாபமாயிருப்போம். காமதேனுவின் க்ஷீரத்தைப் பானஞ்செய்வோம். மத்யபானமுஞ்செய்வோம். காந்தர்வருடைய நாட்டியவிசேடத்தையுங் கண்டுகளிப்போம். ஊர்வசிமேனகை அரம்பை திலோத்தமை கிரதாசி பிரமத்துவரை மகாசேனை மிச்சிரகேசி மதோத்கடை விப்பிரசித்தை என்பவர் ஆடலிலும்பாடலிலும் வல்லவர்கள். அவ்விரண்டிலும் அவர்களைப் போலொருவருங் கிடையாது. நாமவைகளை நன்றாய்க்

கண்டுகளிக்கலாம். அவர்கள் நமக்கு நானாவிதமான பானவர்க்கங்களை யூட்டுவார்கள். பலவிதசந்தோஷகரங்களை விளைவிப்பார்கள். இதுபோலும் எந்நாளும் பலவாறானபோகங்கள் நாம் அங்கு அனுபவிப்பதில் ஒருசற்றும் சந்தேகங்கிடையாது என்று மகிஷாசுரன் வீரப்பிரதாபங்களையும் தனது வரப்பிரதாபங்களையும் யுத்தமுடிவில் விளையப்போகும் சந்தோஷப் பிரதாபங்களையும் பலபலவாக எடுத்துக்கூறி அசுரவீரர்களை யுச்சாகப்படுத்தி சுவர்க்கபுரிக்குப் போகும்படி கட்டளையிட்டுப் பின்னர் தங்கள் குலகுருவாகிய சுக்கிரைவரவழைத்து அவரையாராதித்து யுத்தத்தில் பாதுகாக்கும் வண்ணம் வேண்டிக் கொண்டு தானும் அதிக சந்தோஷத்துடன் யுத்தத்துக்குப் புறப்பட்டனன்.

மூன்றாம் அத்தியாயம்

மகிஷாசுரவிருத்தாந்தம் முற்றிற்று.

சுலோகம் - (ருகூ)

ஆக ஆத்தியாயம் ங-க்குச் சுலோகம் (கருஎ.)

உ

கல்யாணசைலநிலயாயை நம:

நான்காம் அத்தியாயம்

* இந்திரகிருத விமர்சனம்

ஓ ஜனமேஜயனே! இதுவரையில் மகிஷாசுரன் தனது சேனைகளை யுற்சாகப்படுத்தி இந்திரன்மேற் போர்க்கெழும்படிச் செய்த வரலாற்றைச் சொல்லக்கேட்டு வந்தனையல்லவா? இனி இந்திரனுடைய முயற்சியைக் கூறுகின்றேன் கேட்பாயாக.

தேவேந்திரன் மகிஷாசுரனுடைய தூதன் தன்னிடத்து வந்து போனபிறகு தேவர்களையும் இயமன் வாயு வருணன் குபேரனாகிய ரையும்வரவழைத்து அவர்களைப்பார்த்து இப்பொழுது மகிஷாசுர னென்கிற அசுரன்தோன்றி உலகாண்டு வருகின்றானென்பதும், அவன்

ரம்பனென்பவனுடைய மகனென்பதும், அவன் வரம்பெற்றபலத்தினால் அதிகர்வங்கொண்டுள்ளா னென்பதும், அவன் அநேக விதமானமாயைகளில் வல்லவனென்பதும், நீங்கள் றிந் தனவன்றோ? அவன் நம்முடைய சுவர்க்கத்தை யபகரிக்கவெண்ணி ஒரு தூதனை யனுப்பினான். அவன் என்னைப் பார்த்து அஞ்சாது அடா இந்திரா நீ இந்த சுவர்க்கத்தை விட்டுவிடு, இஷ்டப்படி ஓடிப்போய்விடு, போனால் உன்னைத் துன்பப்படுத்துவதில்லை. ஓடிப்போகாமல் அவனுக்குப் பணிவிடைசெய்யத் துணிவையாயின் நீ நல்லக்ஷேமத்தை யடைவாய். எங்க ளசுரேந்திரன் சரணடைந்தவரைக் காப்பதில் மிக்க தயவுள்ளவன். உனக்கு எவ்விதமான சீவனோபாயம் வேண்டுமோ அவ்விதமான உபாயவிருத்தியைத் தேடுவாள். அடிமையாகிய உன்னிடத்தில் எப்பொழுதுங் கோபங்கொள்ளான். இது உனக்குச் சம்மதமில்லையாயின் யுத்தத்துக்குப் பிரயத்தினஞ் செய். அதில் உனக்கு வெற்றியுண்டாவதில்லை. நான்போவதுதான் றடை. என்னைப் பார்த்தவுடன் மகிஷாசுரன் போருக்கு வருவதிற் றடையில்லை. வந்துவிட்டா ரென்றே யெண்ணுவாயென்று சொல்லிப் போயிருக்கின்றான்.

ஓ தேவர்காள்! இதற்குமேல் நடத்தவேண்டிய யோசனையைச் சொன்மின். சத்துரு துர்ப்பலனா யிருந்தானாயினும் அவனை நாம் துர்ப்பலனா யெண்ணுதல் கூடாது. அங்ஙனமெண்ணாது எப்பொழுதும் பிரயத்தினத்தைச் செய்கிறவன்றான் பலவான். அதனைத் தன் புத்தியும் தனக்குள்ள படைத்துணை முதலியவற்றின் பலமுமெண்ணிப் பார்த்தே செய்தல் வேண்டும். அப்படிப் பிரயத்தினஞ் செய்த போதிலும் ஜயாபஜயம் செய்வாதீனமாயுள்ளது. சந்திசெய்யலாமெனின் அசுரன் யுத்தஞ்செய்யு முயற்சியி லிருக்கின்றதனால் அது நடவாதகாரியம். அன்றியும் அவன் துஷ்டனானபடியினால் அவனிடத்தில் சந்தியை யுத்தேசிப்பது நிஷ்பலம். சந்தி எல்லாம் சாதுக்களிடத்திற்றான் செல்லும். இப்பொழுது நான் யுத்தத்துக்குப் போவதும் மற்றொருவரும் போகாதிருப்பதும் முறையல்ல போகவேண்டுமவ ரெவ்வாறிருத்தல் வேண்டுமெனின்!

சோம்பலை எக்காலத்துங் கொள்ளாதவரும், போரையேவிரும்பிப் பயமின்றிப் பிரவேசிக்கத் தக்கவரும், பிரவேசிக்குங் காலத்தில் எதிரியின் அங்கபாவத்தினாலேயே அவனது மனோபாவத்தை யறியத்தக்கவரும், அறிந்தபின்னர் சிநேகமுறைமையை நோக்காத வரும், அதனோடு மனைவி மக்கள் முதலாயினாரிடத்து ஆசையற்ற வரும் ஆசைமுதலியன அற்றாலும் சத்தியந் தவறாதவருமா யிருத்தல்

வேண்டும். இத்தன்மையானவரை நம்முடைய காரியசித்தியின் பொருட்டும் ஜயத்தின் பொருட்டும் எவ்விதமாய்ப் பிரயாணப் படுத்தவேண்டுமோ அவ்விதமாய்ப் பிரயாணஞ்செய்தல் வேண்டும். மகிஷாசுரனுக்குரிய வீரர்களுடைய பலாபலங்களும் நம்மவீரர்களுடைய பலாபலங்களும் இவ்வளவினவென்று நன்றாயறிந்து கொண்டு நீங்களும் சீக்கிரமாய் போய்வாருங்கள். பின்னர் நானும் வரவேண்டுமானால் வருகிறேன். அஃதில்லையாயின் அவனிங்கு வராவண்ணங் காவலைச் செய்கிறேன். இச்சமயத்தில் நாம் சோம்பலுற் றிருப்போமாயின் துக்கம் விளையும். ஆகையால் செய்யவேண்டுவன செய்தல்வேண்டும். எதற்கும் பெரியோரைத் துணைக்கோடல் நன்றாகலான் பண்டிதர்களாகிய பெரியோர்களையுங் கலந்து யோசித்துச் செய்யத்தக்கதைச் செய்வோம். அது பெரும்பாலும் சுகத்தையே கொடுக்கும் பெரியோர்களுக்கு நான்கு விதமான உபாயங்களுந் தெரியவரும். ஆனால் அசுரரிடத்தில் பேதமென்கிற உபாயஞ் செல்லாது. எனக்கொன்று தோன்றுகிறது இப்பொழுது நம்மில் சிலரைத்தூதாக அனுப்புவோம். அவரால் தத்காலம் அவருக்கிருக்கும் பலாபலங்களை யறிந்து பின்னர்காரிய பாகம் அறிந்தவர்களைக் கொண்டு நியாய விரோதமின்றி நடத்துவோம். இதுவன்றி வேறுவிதமாய்ச் செய்வோமாயின் அது "நோயொன்றிருக்க மருந்தொன்று கொடுப்பதுபோ" லாகுமென்றனன். இந்திரன் மனோபாவத்தை அறிந்த தேவர்கள் தூதுவரை யனுப்பினர். அவர்கள் அதிவேகமாய்ச் சென்று மீண்டு தேவேந்திரனைப் பார்த்து அவர்களுடைய பலங்களைத் தெரிவித்தனர். அவ்விந்திரன் அவர்களால் அறிய வேண்டுவன வெல்லாம் அறிந்து ஆச்சரிய மடைந்து உடனே பிரகஸ்பதி பகவானை வரவழைத்துப் பொற் பீடத்திலிருத்தி வந்தனை செய்து என்னாசிரியரே! ஓ சர்வஜ்ஞரே! இப்பொழுது எனக்கு நேர்ந்திருக்குந் துன்பம் அறிந்திருப்பீரே! இதற்கு நானென்ன செய்வேன் என்ன செய்யவேண்டும் நீர் தான் எனக்குக் கதி. நடத்தவேண்டிய காரியத்தில் நீர்தான் துணை மதத்தோடு கூடினவனாயும் மகாவீரனாயுமுள்ள மகிஷாசுரன் அநேக அசுரவீரரோடு என்னுடன் யுத்தஞ்செய்ய வருகின்றானாம். யோசனையறிந்த நீர் அதற்கெப்படி நடத்தவேண்டுமோ அப்படி நடத்தும். அசுரர்களுக்குச் சுக்கிரர் இடையூறு வராவண்ணம் காத்தும் வந்தாலொழித்தும் மற்றும் வேண்டியவற்றை யுபகரித்தும் வருகின்றார். அவர்போலல்லவா எனக்கு நீரும். உம்மைவிட எனக்குப் பிரியமானவர் வேறு யாவரென்று பிரார்த்திக்க, பிரகஸ்பதி பகவான்சில வுபாயங்களைத் தம்மனத்தி லெண்ணி ஊக்கமுடையவராய் ஓ இந்திரா! நீ தைரியத்தை வகித்துச்

சுகியாயிரு. வியாகுலம் நேரிட்டபோது தைரியத்தை விடக்கூடாது. ஜயாபஜயம் இருதிறத்தாருக்கும் பொது. அது தெய்வாதீனம். அதனால் போரிற்போகும் புத்திமானுக்குத் தைரியம் நீங்காதிருத்தல் வேண்டும். நடக்கவேண்டுவது நடந்தாலும் தைரியம் விடாதிருப்பதனால் வரும் நஷ்டமென்னை; விடுவதனால் வரும் இலாபமென்னை; ஆகலான் பிரயத்தின மாத்திரம் தன் வலிவுக்குத் தக்கபடி நடத்தவேண்டும். மோக்ஷ காமிகளாகிய மகருஷிகளும் அதற்குரிய சாதனங்களில் முயலுங்கால் எத்தனை இடுக்கண்வரினும் தாம் கொண்ட சாதனப்பிரயத்தினம் விடாம லிருக்கின்றனரே யன்றி அதனை விடுகின்றனரா? நம் செய லொன்றுமில்லை எல்லாந் தெய்வச்செயலென் றுணர்ந்தவரும் சும்மா விராமல் முயற்சி கைகூடச் செய்யுமென்று தியானமாகிய முயற்சியைச் செய்கின்றனர். ஆகையினால் போகார்த்தமா யிருக்கின்ற ராஜவிவகாரத்தில் செய்யவேண்டிய பிரயத்தினம் அவசியஞ் செய்யவேண்டு மல்லவா? அப்படிச் செய்வதனால் சுகமுண்டானாலும் உண்டாகாமற் போனாலும் துக்க மாத்திரம் உண்டாக மாட்டாது.

ஓ இந்திரா! நல்வினை தீவினைப்பயனாகிய சுகதுக்கங்களை நாமனுபவிப்பதற்குக் கடவுள் நம்மிடத்தில் கொடுத்திருக்கிற கருவி முயற்சியென்றறிவாய். முயற்சியும் கடவுளுடைமையாய் நிற்பதனால் நம் செய லொன்றுமில்லை யென்று பெரியோர் கூறிவருகின்றனர். இந்தவுண்மையையறிந்து முயற்சி செய்வதில் என்னதுன்பம். கடவுள் யாவரிடத்துங் கொடுத்திருக்கும் முயற்சியன்றி எவனுக்கு எதுசித்திக்கும். புருஷன் பிரயத்தினஞ்செய்தும் காரியசித்தி யுண்டாகாமற்போகுமானால் குருடன் போலவும் முடவன் போலவும் சந்தோஷத்துக் கிடமில்லாமலல்லவா போகும். தெய்வத்தால் சரீரமும் முயற்சியும் படைக்கப்பெற்று அதுகொண்டு அவன் எத்தொழிலுஞ் செய்யுங்கால் அதனுடைய லாப நஷ்டவிஷயத்தில் அவனைத் தூஷிப்பதில் யாதொரு பிரயோசனமு மில்லை. தெய்வத்தாற் கூடத்தக்க முயற்சி யன்றி சைனியங்களாலும் உன்யோசனைகளாலும் உனக்கு வேண்டியவர்களின் யோசனைகளாலும் ரதகஜ துரகபதாதிகளாலும் காரியசித்தி யாவதில்லை. யாவரும் தெய்வத்துக் குட்பட்டவர்கள். உலகில் பலவானா யுள்ளவன் சுகமுடைய வேண்டியவனாயிருப்ப அவன் துக்கமடைகின்றான். பலஹீனன் துக்கமடைய வேண்டியவனாயிருப்ப அவன் சுகமடைகிறான். இவைபோலவே புத்திமான் பசியோடிருக்கின்றான். மூடன் பசியற்றுத் திருப்தனாயிக்கின்றான். பேடியாயுள்ளவன் வெற்றியடைகிறான். சூரனாயுள்ளவன் தோல்வியடைகிறான். இவைபோல்வன வெல்லாம்

தெய்வத்தின் செயலல்லவா? இவையிற்றில் என்ன விசாரமிருக்கின்றன். ஆகையால் விசாரமற்று நடக்கவேண்டிய விதத்தை எண்ணி அதற்குரிய முயற்சியில் சித்தத்தைச் செலுத்தவேண்டுமே தவிர அதனால்வருந் துக்கத்திலாவது சுகத்திலாவது சித்தத்தைச் சேர்ப்பித்தலாகாது. சத்துருக்களின் வழியில் எப்படி புத்திமானொருவன் சுவாதீனப்படாம லிருக்கின்றானோ அப்படிச் சுகதுக்கமாகிய சத்துருக்களின்வழி அகப்படாமல் சுகமுண்டாகுங் காலத்தில் அச்சுகத்தில் அதிகசுகத்தையுந் துக்கமுண்டாகுங்காலத்தில் அதிக துக்கத்தையுங் காண்டல் வேண்டும். இந்தவிதமாய் இவ்விரண்டையும் பார்த்தொழித்து முயற்சிசெய்தலாகிய தைரிய மொன்றனையே கைக்கொண்டிருத்தல் வேண்டும். அந்தோ! ஒருவனுக்கு அதைர்யத்தில் எவ்வளவு துக்கமுண்டாகிறது அதுபோல் தைர்யத்தில் ஏன் சந்தோஷ முண்டாகிறதில்லை. இரண்டு முண்டாகிற காலத்தில் அவ்விரண்டிலும் சமமாய்ச் சகித்திருப்பது கஷ்டம். எவனுக்குச் சுகதுக்க முண்டாகிரதில்லையெனின் புத்தி நிச்சயமுடையவனுக்கு நிச்சயம் யாதெனின்? துக்கமென்பது எது? அது யாருடையது? அது வினையின்குணம். யான் நிர்க்குணன் எனவே அந்தக்குணமுடையவன் நானன்று. நான் நாசமில்லாதவனா யிருக்கின்றேன். எனவே அந்தத்துக்கம் நாசமடைகின்றது நான் நாசமடைகிறதில்லை. நான் தேகேந்திரிய முதலிய மாயாகாரியங்கட்கு அப்பாற்பட்டவன் எனவே அவைகட்கு வேறாக ஆன்மாவை யுணர்ந்தவன். அதனால் துக்கம் சுகம் பசி தாகம் சோகம் மோகம் மூர்ச்சை முதலியயாவும் சரீரத்தைச் சார்ந்தனவாகின்றன. என்னுடைய சிந்தனையி லென்ன விருக்கின்றது. எனவே இவையாவும் சரீரத்திலுள்ளனவாகும். காமக்குரோதமுதலிய ஷட்பாவ விகாரங்கடந்து ஐஸ்வர்யாதிஷட்குணத்தோடு கூடிய சிவத்தோடு கூடியுள்ளவனாகிய முத்தன் நான். நானெப்பொழுதும் சிவோஹம்பாவனையி லுள்ளவன். அதனால் நான் தேகமுமல்ல தேகசம்பந்தியுமல்ல. இருபத்து நான்கு தத்துவங்களுமல்ல நான் பிரகிருதியுமல்ல. விகிர்தியுமல்ல. நானெது வுமரனவனல்ல. நான் சோகம் பாவனையினால் சுகியாகவே யிருக்கின்றேனென்பன. இங்ஙனங் கூறிவந்தவாறு அறிவினாலறிந்து அவ்வண்ணமே நிற்பவன்றான் புத்தி நிச்சயமுள்ளவன். ஓ இந்திரா! துக்கநாசத்திற்கு மூலமாகவுள்ள உபாயம் இதுவே. மமதைதான் துக்கம் அதனை விடுவதுதான் சுகம். அதுதான் சுகதுக்கத்துக்கு ஸ்தானம். அதனைவிடுவதற்கு ஞானமில்லையாயின் அதுவருதற்குரிய ஞானவிசாரணைசெய்ய வேண்டும். கன்மநாச மானது போகானுப வத்தாலுண்டாகாது ஞானானுபவத்தா லுண்டாகும். பிராரத்தகன்மத்தில்

எது நடக்க வேண்டிய திருக்கின்றதோ அது நடக்கிறது. அது நடக்குங்காலுண்டாகுஞ் சுகதுக்கங்களிலென்ன சிந்தனை.

ஓ இந்திரா! இப்பொழுது யான் சொல்லிவந்த ஞானவிசாரந்தான் உனக்குச் சகாயமான தென்றறிவாய். இது வொழிந்த ஏனையோருடைய யோசனை என் செய்யும். முடிவாயொன்று கூறுகின்றேன். ஒருவனுக்குப் புண்ணிய நாசத்தின்பொருட்டுச் சுகமும், பாவநாசத்தின் பொருட்டுத்துக்கமும் உண்டாகிறது. ஆகையினால் பாவநாசத்தோடு புண்ணியபலனையும் விரும்பாதவர் துக்கத்தோடு சுகத்தையும் விரும்பார். நினைவில் சுகமொழியவருமானால் சந்தோஷமடைவார். அவர் போல் சுகம்வேண்டுமானால் சுகநாசத்துக்கு நீ கவலை கொள்ளாதே. நேரிட்ட யுத்தத்துக்கு விதித்தபடி முயற்சி செய்வையாயின் நடக்க வேண்டியபடி நடக்குமென்று தேவகுரு இந்திரனுக்குக் கூறியருளினார்.

நான்காம் அத்தியாயம்

இந்திரகிருத விமர்சனம் முற்றிற்று.

———

சுலோகம் -(ரு0)

ஆக அத்தியாயம் சு-க்குச்சுலோம் (உ0எ.)

உ

கமநீயாயை நம:

ஐந்தாம் அத்தியாயம்

* தைத்யசைன்னிய பராஜயம்.

———

ஓ ஜனமேஜயனே! இந்திரன் பிரகஸ்பதி சொன்னவார்த்தையைக் கேட்டு என்னையனே! தேவரீர் கூறியவெல்லாம் சுகம். அவை ராஜ்யம் கீர்த்தி முதலியவற்றை வெறுத்தவனுக்கே யாம். யான் அவைகளெல்லாங் கொண்டிருக்கத்தக்க அகங்காரத்தை யுடையவனா யிருக்கின்றபொழுது எனதென்னும் மமகாரத்தைவிட்டு எவ்வண்ணம் நான்வாழ அறிவேன்.

சந்நியாசமாகிய நான்காவது ஆச்சிரமமுடையார்க்கு தேவரீர் கூறியபடி ஞானம் பூஷணம். அந்தணர்களுக்குச் சந்தோஷமாகிய

* அசுரர்கள் தோல்வியடைதல்.

திருப்தி பூஷணம். ஐஸ்வர்யாதிகளை விரும்பிய க்ஷத்திரியருக்குச் சத்ருசங்காரம் பூஷணம். சங்காரமென்கிற பிரயத்தனத்தை விட்ட க்ஷத்திரியனைப் பிரயத்தின மாத்திரமுள்ள பலஹீனன் அதிசுலபமாய் வென்றுவிடுவான். ஆகலான் பிரயத்தனமில்லாதவனை அறிவிற்சிறியாருங் கொண்டாட மாட்டார். ஓ ஆசிரியரே! முன்னர் பிரயத்தின மொன்றினாலல்லவா துவஷ்டாவின் குமாரனாகிய விசுவன் நமுச்சி பலன் என்கிற வசுரர்கள் கொல்லப்பட்டனர். அதுபோலவே இந்த மகிஷாசுரனையுங் கொல்லல் வேண்டும் தேவரீர் கூறியபடி நடக்கவேண்டியது எதுவோ அது நடப்பதாயிருந்தாலும் எனக்கு உத்தமமாகிய வச்சிராயுதமா யிருக்கவேண்டியவர் தேவாசாரியராகிய நீர் தான். எனக்குச் சகாயமாயிருக்க வேண்டியவர் விஷ்ணுமூர்த்தி தான். அதற்குமேல் எனக்கு நாசம் வராவண்ணம் காக்க வேண்டியவர் உமாபதிதா னென்று சொல்லி விட்டு ஓ சுவாமிகாள்! இப்பொழுது "ரக்ஷோக்னம்" என்னும் வேத பாகத்தை என்பொருட்டுப் பாராயணஞ் செய்வீராக. நான் சேனைகளை ஆயுத்தப்படுத்துகிறேனென்று சொன்னபொழுது புன்னகையோடு ஓ தேவராசனே! இவ்விஷயத்தில் உனக்கு ஜயமாவது பஜயமாவது ஒன்றை வருமென்று நிச்சயமாகச் சொல்லுவதற்குச் சந்தேகமா யிருக்கிறது. அதனால் நானுன்னை யுதத்துக்குப் பாகவுஞ் சொல்லமாட்டேன். தடுக்கவுமாட்டேன். சுகமோதுக்கமோ ஒன்றுண்டாகப் போகிறது. எது உண்டானபோதினும் உனக்குச்சிறிதும் தூஷண முண்டாக மாட்டாது. வரப்போகிறதாகிய சுகமுந் துக்கமும் என்னால் தெரிந்துகொள்வதற்கு முடியாது. ஓ இந்திரனே! எனக்கு என் மனைவியினால் நேரிட்ட துன்பத்தை நீ அறிவாயல்லவா! அந்தோ! எனக்கு மாணாக்கனாயும் சிநேகனாயு மிருந்த சந்திரன்றானே என் மனைவியைக் கொண்டுபோயினான். அதனால் எனக்கு எல்லாச் சுகங்களும் போகும்படியான துக்கமுண்டாயிற்றல்லவா! யான் எல்லா வுலகங்களிலும் புத்திமானென்று பிரசித்தியா யிருக்கின்றவனல்லவா? புத்தியிற் சிறந்தவனாகிய நான் புத்தியில் அற்பர்களைப்போல் இப்பெண் காமநெறியில் நிற்பவள். இவ்வாண் மகன் காமநெறியிற் செல்பவன் என்றறியாமற் போயினனே! காமநெறியில் நிற்கும் பெண்ணலமுடையார் தன் மகளென்றும் தன் சகோதரனென்றும் இவர்போலும் ஏனைய முறையுடையார் இவரென்றும் பாரா ளென்பதையும், அதுபோலவே காமநெறியிற் செல்லும் ஆண்மகன் தாய் இவளென்றும், தாய் முறை யுடையார் இவரென்றும் சகோதரி இவளென்றும் அம்முறையுடையார் இவரென்றும் உணராரென்பதையும் நானறிந்து கொள்ளுவது ஓர் கஷ்டமா? தன் மனையாளை அயல்மனையினோக்கும் மதியிலியைப்

போல் மதியின்பால் என் மனையானைப் பார்க்கலாயினனே! அம்மதியின்பால் மதிகெட்ட அம்மாதினழகை மீண்டும் மதிக்கலாயினனே! என் மதியெல்லாம் இவ்வாறு போனவழி தெரியாமற் போயிற்றே! ஆகையால் இவையெல்லாம் ஊழின்வகை யென்றறிவாய். அறிவுடையார் ஒவ்வொரு காரியசித்திகளும் ஊழின்வகை யென்றேமதித்து அறிவின்வழி நிற்பரன்றி அவ்வூழ்வகையான் வரும் சுகதுக்கங்களினில்லார். ஓ வச்சிரதரனே! இந்த அவசரத்தில் ஐயாப ஐயங்களை நீ எண்ணவும் வேண்டாம். நீ என்னை எண்ணிச் சொல்லவுங் கேட்கவேண்டாம். உபாயங்களை மாத்திரம் நீயும் எண்ணலாம் நானும் எண்ணிச் சொல்லலாமென்று ஆசிரியர் சொல்லியபொழுது இந்திரன் அவையெல்லாம் நீதியான உண்மை யென்றெண்ணி அவரை அழைத்துக்கொண்டு பிரமதேவனிடஞ் சென்று அவரைச் சரணடைந்து ஓ தேவசிரேஷ்டரே! மகிஷன் எனது ஆட்சியாயுள்ள சுவர்க்கத்தைத் தான் அபகரிக்கும் எண்ணமுடையவனா யநேக விதமான பிரயத்தினங்களைச் செய்து வருகின்றான். அவனுடைய சைனியங்களோ யுத்தஞ் செய்வதிலும் அதற்குவேண்டிய பராக்கிராமத்திலும் பராக்கிரமத்தைக் காட்டற்குரிய யுத்த விச்சையிலும் சிறந்தவர்கள். ஆகையினால் நான் மிகவும் பயந்தவனாய்த் தேவரீருடைய சமீபத்தை யடைந்தேன். நீர் என்னிலுஞ் சிறந்த அறிவுடையவர் அவ்வக்காலத்துவரும் துன்பங்களைப் போக்குதற்குரிய உபாயங்களெல்லாம் நன்றாயறிவீர் நீர்தான் எனக்குச் சகாயம் அவசியஞ் செய்யவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தனன்.

பிரமதேவன் இந்திரன் விண்ணப்பத்தைக்கேட்டு இரக்கங் கொண்டவனாய் ஓ இந்திரா! நாமனைவரும் சீக்கிரமாய்க் கைலாசத்துக்குப் போகவேண்டும். நமக்கெல்லாம் தலைவராயுள்ளவர் உருத்திரமூர்த்தி. அவருடைய அனுக்கிரகத்தை நாம் முன்னர்ப்பெற வேண்டும். அவருடைய அனுக்கிரத்தைப் பெற்றபின்னர் திருமாலிடத்திற் போவோம். அவர் அசுரர்களிடத்தில் போர்செய்யும் பலத்தையும் வகையையு முடையவர். ஆகையால் அவரையுங்கலந்து நாம் செய்யத்தகுவனவாகிய காரியத்தை முன்னரெண்ணிப் பின்னர்த் துணிவோம். ஏனெனின் "செய்யத்தக்கன வல்லவற்றைச் செய்தலானும், செய்யத்தக்கனவற்றைச் செய்யாமையானும் கெடும்" என்று நீதிநூல் கூறுகின்றது. செய்யத்தக்கன அல்லவாவன எவையெனின்! பெரிய முயற்சியா யுள்ளனவும் அது செய்தாற் பயனில்லனவும் அது சிறிதாயினவும் ஐயமாயினவும் பின் றுயர்விளைப்பனவுமென இவை. இதன்பொருள் என்னையோவெனின்? ஒரு பெரிய முயற்சியைச் செய்யவெண்ணுங்கால் அம்முயற்சி பின்றுயர் விளைவிப்பனவோ

அல்லவோ வென்றெண்ணல் வேண்டும் அதனை எண்ணிய பின்னர் துயர்விளைவிப்பன வாயினும் அது பயனுள்ளனவோ இல்லனவோ வென்றுணர்தல் வேண்டும், பயனுளவாயின் பெரிதோ சிறிதோ வென்று அதனை மதித்தல்வேண்டும். அம்மதிப்பில் அது பெரிதன்றிச் சிறிதென வெளிப்படின் அது கிடைப்பதிற் சந்தேக முளதென்பதும் இலதென்பதும் தெளிதல் வேண்டும். இம்முறையாக எண்ணுதலினும் உணர்தலினும் மதித்தலினும் தெளிதலினும் தன்னறிவைச் செலுத்தி ஒரு முயற்சியைத் துணிவதொழிந்து தன்னறிவை அவற்றிற் செலுத்தாது செய்யத் துணிவதுவே தகாதன. செய்யத்தக்கன தன்னறிவை அவற்றிற் செலுத்திச் செய்யத் துணிவதுவே செய்யத் தக்கன. ஆகவே செய்யத்தக்கன வல்லவற்றைச் செய்பவனும், செய்யத் தக்கனவற்றைச் செய்யாதவனும், அறிவு ஆண்மை பெருமை யென்னுமூன்றுனையும் அற்றவனாய்ப் பகைவர்க்கெளியவனாவான். ஓ வச்சிரதரனே! நான் கூறியபடி சக்கரதரனோடு கலந்து நமக்கும் பகைவர்க்கும் உளவாகக்காணப்படும் வலி காலம் இடன் என்கிற விவற்றான் அறிய வேண்டுந் திறங்களெல்லாம் முழுவது மெண்ணிப் பகைவர் மேல் போர்க்கெழுவோம். அவ்வண்ணம் எழுவோமாயின் நாம் எய்தற்கரிய பொருள் ஒன்றுமில்லை. இவ்வண்ணத்தை எண்ணாது சில சாகசவித்தைகளைக் காட்டுவோர் கஷ்டத்தைப் பெற்றும். பெறத்தகும் பயனையும் பெறாதொழிவரென்று இந்திரனுக்கு அறிவிக்க வேண்டியவற்றைப் பிரமதேவன் அறிவிக்கவே இந்திரன் அதற்குச் சம்மதித்துத் தன்னோடொத்தவரான இயமன் முதலிய ஏழு திக்பதிகளையும் அழைத்துக்கொண்டு பிரமனுடன் ஸ்ரீ கயிலாயத்துக்குச் சென்று ஸ்ரீ கண்டருத்திர மூர்த்தியைக்கண்டு வணங்கிப் போற்றி அவரருள்பெற்று விடைகொண்டு வைகுண்டத்துக்குப்போய் இலக்குமிநாதரைக் கண்டுவணங்கிப் புகழ்ந்து மகிஷாசுரனால் நேர்ந்திருக்குந் துன்பங்களெல்லாம் எடுத்துக் கூறினன்.

வைகுண்டநாதர் இந்திரனுடைய துயரத்தைக்கேட்டு யாவரையும் பார்த்து நீங்கள் துயருறவேண்டாம். யான் காக்குங் கடவுளல்லவா! வெல்லக்கூடாத அந்தமகிஷனை யான் வென்று விடுகிறேன். நீங்கள் யாவரும் யுத்தத்துக்குப் புறப்படுங்க ளென்றனர். அதுகேட்ட இந்திரன் பிரமன் முதலாயினாரைப் பார்த்து நாமனைவரும் வாகனாரூடராய்ப் புறப்படுவோ மென்று சொல்ல அவ்வாறே அவரவரும் அவரவருக்குரிய ஊர்திகளி லேறிக்கொண்டு கணேசப் பெருமானையும் அறுமுகப் பெருமானையும் எண்ணி விஷ்ணுசகிதமாய் இந்திரனுடன் புறப்பட்டனர். தேவர்களுடைய போர் வரவைப் பராக்கிரமத்தோடு

எதிர்ப்பார்த்திருக்கும் அசுரசைனியங்களறிந்து எதிர்ப்பட்டுச் சென்று பாணம் கத்தி பிராசம் முசலம் கோடாலி கதை பட்டசம் சூலம் சக்கரம் சக்தி தோமரம் முத்கரம் பிண்டிபாலம் கலப்பை என்றெண்ணப் பட்ட ஆயுதவகைகளைப் பிரயோகஞ் செய்யுமுறையாகப் பிரயோகஞ் செய்து போர்புரியத் தொடங்கினர். அமரசைனியங்களும் அசுரர்விடும் ஆயுதவகைகளையே விட்டு ஒருவரை யொருவர் வெட்டியும் முட்டியும் குத்தியும் அடித்தும் பிடித்தும் பிளந்தும் வரும்பொழுது மகிஷாசுரனுடைய சேனாபதியாகிய சக்ஷரன் என்னும் மஹாபலிஷ்டனாகிய வீரன் இந்திரனை எதிர்த்து ஐந்துபாணங்களை விட்டடித்தான். இந்திரன் அவன் விட்டபாணங்களைத் தன் பாணங்களைவிட்டுத் துணித்து ஓரர்த்த சந்திர பாணமெடுத்து அவன் மார்பி லடித்தான். அவ்வடியால் அவன் மூர்ச்சை யடைந்து தானேறி வந்த யானையின்மேல் விழுந்தான். அதுகண்ட இந்திரன் அந்த யானையின் துதிக்கை முறிந்து போம்படி வச்சிராயுதத்தால் மோதி யடிக்கவே அந்த யானை இனி நாமிங்கிருப்போமானால் நாம் சாவதோடு நமது மத்தகத்தின் மேல் வீழ்ந்து கிடக்கும் சேனாதியும் சாகவருமென்றெண்ணி ஓட்டமாயோடி சேனைகளுக்குள் மறைந்து போயிற்று. அதனை மகிஷாசுரன் கண்டு சேனாபதியைக் கடிந்து கோபத்தோடு பிடாலனென்னுஞ் சேனாபதியைப் பார்த்து ஓ வீரா! நீ போய் மதகர்வங் கொண்டிருக்கிற அந்த இந்திரனையும் அவனுடன் வந்திருக்கிற வருணன் முதலாயினாரையும் துவம்சப்படுத்திச் சீக்கிரத்தில் என்பக்கம் வந்து சேருவாயென்றேவினன். பிடாலனுந் தன்னை மகிஷாசுரன் மதித்தானென்று மதகர்வங்கொண்டு ஓர்மதங்கொண்ட யானையின் மேலேறி இந்திரனை எதிர்த்து வரும்போது அவ்விந்திரன் கஜாரூடனாய் வருகின்ற பிடாலனைப் பார்த்து உனக்கும் பீடைபிடித்ததோ வாவா உன்னையும் முன்போன சக்ஷரனோடு சேர்த்து விடுகிறேனென்று அதிதீக்ஷண்ணியமான பாணங்களை விட்டான். பிடாலன் சொற்களும் பாணங்களும் தீக்ஷண்ணியமாய் வருதலைக்கண்டு அவற்றினுந் தீக்ஷண்ணியமுடைய சில பாணங்களால் அப்பாணங்களை முறித்துத்தள்ளி இந்திரன்மேல் ஐம்பது பாணங்களை விட்டனன். அப்பாணங்களைக் கண்ட இந்திரன் இந்தப் பாணங்கள் எனக்கைம்பதா! ஐந்தன்றோ! இவ்வைந்தும் எனக்கு அஞ்சவேண்டியவைகளேயன்றி இவைகட்கு நானஞ்சேனென்று ஓர்பாணத்தை விட்டு அவைகளைப் பொடியாக்கி ஓர் கதையை எடுத்து அவனூர்ந்து வந்த யானையின் மேல் மோதினான். அந்த யானை முன்மொத்துண்டுபோன யானைக்குப் பின் துணையாகப் போவதற்கு எத்தனப்படும்ங் குறிப்பைப் பிடாலன்

பார்த்து இது நன்றாயிருந்ததென்று அதன் மீதிருந்தபடியே ஓர் தேரின்மேற் பாய்ந்து ஓ இந்திரா! முன் யானையோடு போனவனைப் போல் என்னை நினைக்கவேண்டாம் இதோ என் வல்லபத்தைப் பார்ப்பாயென்று பாணங்களைச் சோனைமாரிபோற் பொழிந்தான். அவன் பொழியும் சரவேகங்களைப் பார்த்துச் சிறிது அஞ்சினவனாய்த் தன்மகனாகிய சயந்தனைத் தனக்கு முன்னாக வைத்துக்கொண்டு போர்செய்யத் தொடங்கினன். சயந்தன் தன் தந்தை தன்னை முன்னாகக் கொண்டனனாதலால் தான்வாளா விருத்தல் அழகன்றென்று அதிகுஞ்சரமாகிய ஐந்துபாணங்களையெடுத்து மகிஷாசுரன் மார்பிலடித்தனன். அவ்வடியால் அவன் மூர்ச்சையடைந்து ரதத்தில் வீழ, சாரதி இனி இங்கிருப்போமாயின் பிராணஹானி யுண்டாமென்று ரதத்தை யுத்தகளத்தினின்றுந் திருப்பினான். இரதந்திரும்புதலைக்கண்ட அசுரசேனைக ளெல்லாம் ஓ வென் றலரியோடத் தலைப்பட்டன. அமரசேனைகளை நமக்கு வெற்றியுண்டாயிற்றென்று ஆனந்தக்களிப்படைந்தன. தேவ வாத்தியங்கள் முழங்கின. முனிவர் இந்திரனைப் புகழ்ந்தனர். அரம்பை முதலாயினார் அப்போரை அபிநயம்பிடித்து நடனமாடினர். இந்த ஆடம்பரகோஷங்களைக் கேட்ட மகிஷாசுரன் கோபதோஷங் கொண்டு தாமிரனென்னும் சேனாபதியைத் தூண்டினான். அவன் எண்ணிறந்த சரவருஷங்களைத் தூண்டிக்கொண்டே செல்ல இயமனும் வருணனும் அவனை எதிர்த்துக் கட்கம் முசலம் சக்தி கோடாலி என்னும் இவ்வாயுதங்களால் கோரமான யுத்தஞ்செய்துப் பின் இயமன் தனது தண்டாயுதத்தால் மோதியடித்தான். தாமிரன் மஹாபலிஷ்ட னாகையால் அவ்வடிக் கசங்காது கொடூரமான பல்வகைப் பாணங்களைவிட்டு இந்திராதியரை ஹதஞ்செய்தனன். அவர்கள் ஹதமாய்ப்போகாது மதமுடையவர்களாய் அசுரர்களை எதிர்த்து ஒருவரையும் விடாதடித்து ஓடிப்போகாதீர்கள் நில்லுங்கள் நில்லுங்களென்று மடக்கி மடக்கி யடித்துத் தாமிரனைமூர்ச்சை யடையும்படி மொத்தினர். அசுர சைனியங்கள் இனித் தாமிரன் பிழைப்பதரிதென்று ஓவென்று கூச்சலிட்டோடின.

ஐந்தாவது அத்தியாயம்

தைத்தியசைன்னியபராஜயம் முற்றிற்று.

சுலோகம் - (ருஎ.)

ஆஉ அத்தியாயம் ரு-க்கு சுலோகம். (உசாசு)

உ

கலாவத்யை நம:

ஆறாம் அத்தியாயம்

தேவதானவ யுத்தம்

வியாசர் ஜனமேஜயனைப் பார்த்துக் கூறுகின்றார். ஓ அரசனே! தாமிரன் பிழைப்ப தரிதென்ற கூச்சலை மகிஷன் கேட்டு அந்தோ! இது நன்றாயிருந்தது. யஜ்ஞஞ்செய்யுங்காலங்களில் அவரவர்க்கு வரும் சிற்சிலபாகங்களாகிய மாமிசங்களைச் சிறுவாயாற் றின்னுகின் றவர்களாகிய இந்திரன்முதலிய சிற்றினத்தார்க்கு நம்மினத்தார்களை மூர்ச்சைசெய்விக்கும் படியான பராக்கிரம முண்டானதும், ஓயாது எக்காலங்களிலும் வேண்டியாங்குப் பெரும்பாகமாகப் பல மாமிசங்களைப் பெருவாயாற் றின்பவர்களாகிய நம் பேரினத்தவர்களுக்கு மூர்ச்சையடையும் படியான துராக்கிரம் முண்டானதும் மிக நன்றாயிருக்கிற தென்று வீராவேசங் கொண்டு தேவக்கூட்டங்களை இன்றோடொழித்து விடுகிறேனென்று வேகமாய்ப்போய் இந்திரனை யோர்பெருங்கதைகொண்டு தோளின்மேலடிக்க அவன் தனது வச்சிராயுதத்தால் அக்கதையைப் பொடிப் பொடியாய்ப் போக்க மகிஷன் வாளாயுதத்தை வீச இந்திரனும் வாளாயுத்தை வீச இவ்வண்ணம் பலபலவாயுதங்களை இருவரும் மாறிமாறிவிட்டுப் பெரும்போர் செய்தனர். மகிஷாசுரன் இந்திரன் தன்னோடு சமமாகப்போர் வருதலைப்பொறாது ஓர் மாயவெண்ணத்தையெண்ணிச் சர்வலோகங்களையும் துவம்சஞ்செய்யத்தக்கதாயும் சித்திகளில்வல்ல ருஷிகளெல்லாம் பிரமிக்கத்தக்க மோகத்தைச் செய்வதாயுமுள்ள 'சாம்பரீ' என்பதைச் சிந்தித்துமாயையை விளைவித்தனன்.

அந்த மஹா மோஹச்செய்கையால் மகிஷாசுரனைப்போலும் உருவத்திலும் பராக்கிரமத்திலுஞ் சிறந்த அளவற்ற அசுரகணங்கள் தோன்றி நாற்புறங்களிலுஞ் சூழ்ந்து வளைந்து சுரகணங்களை அடிக்கத்தலைப்பட்டனர். அம்மாயவல்லபத்தை இந்திரன் பார்த்து ஆச்சரியமுற்றுப் போர்செய்யவேண்டு மென்னும் ஆண்தன்மையுமற்று அக்னி இயமன் வருணன் குபேரன் சூரியன் சந்திரன் என்னுமிவர்களோடு ஏனையரையுங் கூட்டிக்கொண்டு நடுக்கமுற்று வோட்டமா யெங்குநில்லாதோடி அசுரகணங்கள் காணக்கூடாத ஓரிடத்தினின்று விஷ்ணுமூர்த்தியை நினைத்தனன். அவர் சக்கராயுதபாணியாய்க் கருடாரூடராய் எதிரேவந்து அபயந்தந்து

மகிஷாசுரன் மாயையைப்பார்த்து சக்கிராயுதத்தைவிட்டு அதனொளியால் அம்மாயையும் அம்மாயையாலுண்டான மாயவசுரர்களையும் பாழ்படுத்தவே தேவர்களெல்லாம் முன்போல் வந்துசூழ்ந்தனர். யாவருஞ்சூழ்ந்ததைக் கண்ட மகிஷாசுரன் பரிகமென்னும் ஆயுதமெடுத்து யாவரையுந் துறத்தத்தொடங்கினன். அப்பொழுது மகிஷன் சக்ஷிரன் உக்கிரன் உக்கிரவீரியன் யுத்தகாமன் அசிலோமன் திரிநேத்திரன் பாஷ்கலன் அந்தகனென்பவர் தேவர்களை நாமேவெல்ல வேண்டுமென்கிற மனவூக்க முடையவர்களாய்த் தநுர்ப்பாணிகளாய் ரதாரூடர்களாய் ஏனைய யுத்தசந்நாகங்களெல்லா முடையவர்களாய்க் கன்றுக்குட்டிகளைச் சூழ்ந்த செந்நாய்களைப் போலுந் தேவர்களைச் சூழ்ந்து போர்செய்யத் தொடங்கினர். அமரரும் போரிற் கலந்தனர். அவருள் அந்தக னென்பவன் விஷ்ணுமூர்த்தியை எதிர்த்து மிகவுங்கூர்மையாய் விடத்திற் றோய்ந்ததாயுள்ள ஐந்து பாணங்களை யெடுத்துத் தநுசிற் பூட்டிவிடுத்தான். அதனை ஹரியானவர் அறுத்துவிட்டார். மீளவும் ஐந்து பாணங்களை விட்டான். அவைகளும் அவரால் அற்றுப்போயின. போகவே கத்தி சக்கிரம் முசலம் கதை முதலிய பலவாயுதங்களை மாறிமாறிப் பிரயோகஞ்செய்து ஐம்பது நாள் யுத்தஞ்செய்தனர். இவரைப்போலவே இந்திரனும் புஷ்கலனும், அக்னிதேவனும் மகிஷாசுரனும், இயமனும் திரிநேந்திரனும், வருணதேவனும் அசிலோமனும், நிதிபதியாகிய குபேரனும் சக்ஷிரனும், இவ்வண்ணம் இருவ ரிருவராக வெதிர்ந்து போர்செய்து வந்தனர். விஷ்ணுமூர்த்தியை எதிர்த்த அந்தகன் அவரூர்தியாகிய கருடனையடிக்க அவனடிபட்டுப் பெருமூச்செறியும் போது விஷ்ணுமூர்த்தி அவனைத்தேற்றி ஓடிப்போகாமல் நிறுத்தத் தனது சார்ங்கத்தை வளைத்துப் பாணங்களைச் சந்தித்து விட அந்தகன் அப்பாணங்களெல்லாம் பொடியாய்ப் போகும்படி செய்து ஐம்பது பாணங்களெடுத்து அவர்மேலேவினன். அவர் சுதர்சனமென்னுந் தனதுசக்கரத்தைப் பிரயோகஞ்செய்ய அதை அந்தகன் தனது சக்கரத்தினால் தடுத்துக் கர்ச்சித்தனன். அந்தகர்ஜனையைக் கேட்ட சுரரெல்லாம் ஏங்கினர். அசுரரெல்லாம் ஓங்கினர். விஷ்ணுமூர்த்தி தேவரேக்கத்தைக்கண்டு கவுமோதகி என்னுங் கதையை எடுத்து அந்தகனைத் துறத்தித் தலைமேலடிக்கவே அவன் மூர்ச்சையாய் விழுந்தனன். அதுகண்ட மகிஷன் விஷ்ணுமூர்த்தியின்மேல் மிக்ககோபங்கொண்டு இவனை மிரட்டியோட்டலாமென்றெண்ணிச் சமீபித்தபோது அவர் அவன் வருங்குறிப்புணர்ந்தவராய்வில்லைக் குணத்தொனிசெய்து பாணவருஷங்களைப் பொழிந்தனர் அவனப்பாணங்களைத் தன் பாணங்களா லொழித்தனன். இவ்வாறு

ஒருவருக்கொருவர் சமயுத்தஞ்செய்து பின்னர் அசுரன்பரிகமென்னும் ஆயுதத்தை எடுத்தோச்சித் தலையிலடித்தனன். விஷ்ணுமூர்த்தி அவ்வடியால் மூர்ச்சித்துப்போகக் கருடன் உடனே தூக்கிக் கொண்டு ஓடிப்போயினன். தேவரெல்லாம் இனி என்செய்யப்போகிறோமென்று கூக்குரலிட்டுப் புலம்பிக்கொண்டிருக்குங்கால் கடாவாகியமகிஷன் தனதுகொம்பைத் திருப்பிக்கொண்டு அவர்கள் மேற்பாய்ந்துகுத்திக் கடாவின் முழக்கத்தைக்காட்டி யுருமியுருத்துப்பார்த்து மலைகளைக் கொம்புகளாற் குத்திக்குத்தி மேலே வீசி வருங்கால் திருமால் முதலாயினார் அவன் வீசும்மலைகளைப் பொடிப்பொடியாய்ப் போக்க அசுரன் மீளாக்கோபமுடையவனாய் மலைகளைக் கொம்புகளாற் குத்தியெடுத்தும் வாலாற்சுழற்சியெடுத்தும் ஓயாது வீசிவரவே விஷ்ணுமூர்த்தியும் உக்கிரங்கொண்டு சக்கிராயுதத்தைச் சுழற்றிச்சுழற்றி அவைகளைப் பொடிப்பொடியாக்கி அவனையும் மோதியடித்து மூர்ச்சித்து விழும்படிச்செய்தனர். ஓர் க்ஷணத்தைக்குள் அவன் மூர்ச்சை தெளிந்து ஒருபெரிய பர்வதம்போல் மாநுட வுருவமெடுத்து ஒருபெரிய கதையைத்தாங்கி மேகம்போலுங் கர்ஜித்து அதிவேகமாய் வந்தனன். திருமால் அசுரன்செய்துவருங் கர்ஜனையைக் கழுதையின் கூச்சலென்று யாவரும் நகைக்கும் வண்ணம் தமது சங்கத்தை எடுத்தூதினர். அந்தச்சங்கத்துவனி அவனது துவனியைப் பங்கப்படுத்திப் பங்கப்படாத அசுரர்களையும் நங்கப்படுத்தி அதுகாறும் பங்கப்பட்டிருந்த அமரர் மனம்பொங்கப்பெற்று வந்துசூழச்செய்தது.

ஆறாம் அத்தியாயம்

தேவதானவயுத்தம் முற்றிற்று

———

சுலோகம் - (ருருஎ.)

ஆக அத்தியாயம் சா-க்குச் சுலோகம் (ஙககூஎ)

உ

கமலாக்ஷயை நம:

———

ஏழாம் அத்தியாயம்

தேவானாம் யுத்தாத்பலாயனம்.

———

ஓ ஜனமேஜயனே! மாநுட வடிவங்கொண்ட மகிஷாசுரன் தன்னுடைய சைனியங்க ளெல்லாம் மங்கியிருப்பதும் தேவசைனி

யங்களெல்லாம் பொங்கி யிருப்பதுங்கண்டு பொறாது போர்முகங் கொண்டு சிங்கரூபனாய்க் கர்ஜித்து முகமண்டலத்தைச் சூழ்ந்த ரோமங்களைச் சிலிர்த்துக் கைகளைவிரித்து நீண்டிருக்கிற நகங்களால் சில தேவர்களைப் புரண்டியும் சிலரைக் கடித்தும் ஓர் பாய்ச்சல் பாய்ந்து விஷ்ணு மூர்த்தியையும் அவரது ஊர்தியாகிய கருடனையும் நகங்களினாற் புரண்டியும் எங்கும் உதிர வெள்ளமாக்கிப் பின்னர் மார்பில் கையாலோங்கி யறைந்தனன். விஷ்ணு மூர்த்தி இனி இவனோடு போர்புரிவ தேதென்று பறவைமீதேறிப் பறந்து பரமபதம் போயினர். அன்னவாகனன் அன்னத்தைத்தேடி அதன் மீதேறித் தன்னண்டம் போய்ச் சேர்ந்தனன். ஏனைய இந்திரன் முதலிய திக்குப்பாலகரெல்லாம் சற்றிருந்து போர்புரிந்து பார்ப்போமென்று ஆயுதபாணிகளாய் எதிர்த்தனர். அவர்களைக்கண்ட சிங்கனாகிய மகிஷன் இந்த அல்பமானவர்களை நாம் சிங்கரூபமாக விருந்தா கொல்லவேண்டும். இவர்களுக்கு நமது கடாவடிவமே போதுமென்று முன்போல் மகிஷவடிவமெடுத்து கொம்புகளாலும் வாலாலும் பெரியபர்வதங்களைப் பெயர்த்துப் பெயர்த்து அவர்கள் மேல் மோதிமோதித் துறத்தியும் கொம்புகளாற் குத்தியும் ஓட்ட அமரரெல்லாம் அவனோட்டிய ஓட்டத்தை நலமென்றெண்ணித் திரும்பிப்பாராது தங்கடங்கள் திக்குகளிற் போயொளித்தனர்.

மகிஷாசுரன் ஆடுமாடுகளை மிரட்டி யோட்டுவதைப் போல் அமரரை யோட்டி ஐராவதத்தை யோடிப்போகவொட்டாமல் மடக்கி அதன் மேலேறிக்கொண்டு இனி இந்திரலோகத்திலுள்ள உச்சைஸ்ரவ மென்கிற குதிரை கற்பகவிருக்ஷ முதலிய இந்திர செல்வங்களைக் கொள்ளைகொள்வோமென் றெண்ணி அங்குசென்று இந்திரனில்லாமையைக் கண்டு ஓ அசுரர்களே! இந்திரனுக்கு இவ்வுலக வாழ்வு போயிற்று அவ்வாழ்வு நமக்கு வந்துவிட்டது. இனிநாமே வாழ்வோமென்று சொல்லி இந்திர சிங்காதனத்தில் வீற்றிருந்து தனக்குரிய மந்திரிப் பிரதானிகளை அந்தந்த ஸ்தானங்களிலிருக்கச்செய்து வாழ்ந்திருந்தனன்.

ஓ பூபாலனே! இவன் வாழ்வு இங்ஙனமிருக்க, வாழ்வை விரும்பிய வானவரெல்லாம் தாழ்வுறு தரணியில் மேவுறு மலைகளிற்புக்குத் தத்தம் விதியைநொந்து நந்தமக்கு அவ்விண்ணுலக வாழ்வில்லாதொழிந்துபோல் மண்ணுல வாழ்வு மொழிந்து மலைமுழையில் வாழும் வாழ்க்கையுளதாயிற்றே இது பாவமன்றோவென்று அம்மலைமுழைகளில் மறைந்து வாழ்ந்து வந்தனர். ஓ சந்திரவம்ச திகைனே! "வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்" என்றாற் போல வாழ்வற்று மண்ணிலும்

மலையிலும் வாழ்ந்த தேவர்கள் சின்னாள் கழித்துப் பிரமலோகஞ்சென்று வேதவேதாந்தங்களில் வல்ல அறிவிற்சிறந்த மரீசிமுதலிய பெரியோரெல்லாஞ் சூழ்ந்திருக்கப் பத்மாசனனாய் வீற்றிருக்கும் பிரமதேவனைப் பணிந்தெழுந்துகின்றனர் கந்தருவர் சித்தர் சாரணரென் றெண்ணப்பட்டவரோடு தோத்திரஞ் செய்து சமீபத்திலே நின்று ஓ கமலோத்பவனே! கமலாசனனே! கலாவல்லி நாதனே! நீர் மகிஷனுடைய யுத்தகளத்தினின்றும் வந்த பின்னர் எங்களுடைய கதி இன்னதென்றறிந்தீரா? மகிஷனுடைய சதி இன்னவிதமென்றுணர்ந்தீரா? யாங்கள் படும்பாட்டை இப்படியும் எண்ணா தொழிவாரு முண்டா! ஏன் கருணை செய்யா தொழிந்திருக்கின்றீர்? யாங்கள் என்ன செய்திருக்கின்றோம்? தந்தையாயுள்ளான் தனையர்கள் குற்றமேசெய்யுங் குணமுடையராயினும் அவர்கள் மீதன்புற்று அவர்களுக்கு வேண்டியசுகஞ் செய்வதற்று அவர்கள் துன்பநிலையிலிருக்கப் பார்ப்பனா? நீர் எங்கட்குத் தந்தையா யுள்ளவரல்லவா? எங்களுலகவின்பம் பகைவன் வசமாயிற்று. அவன் செய்யுந் துன்பங்கள் எங்கள் வசமாயிற்று. அந்தணர்கள் கொடுக்கப்பட்ட அவிர்ப்பாகங்கள் அவர்கள் கொள்ளப்பட்டவராயினர். நாங்கள் தள்ளப்பட்டவராயினோம். அவர்கள் கற்பகமலர் சூடவும் காமதேனுவின்பா லுண்ணவுமாயினர். நாங்கள் சூடாதொழியவும் உண்ணாதொழியவு மாயினோம். நீரே இன்னமும் அவனடைந்திருக்கும் சுகபோகங்களையும் நாங்களடைந்திருக்கும் துக்கரோகங்களையும் உம்முடைய ஞானநோக்கால் அறியற் பாலதேயன்றி எங்களால் இப்பொழுது சொல்லிமுடியுமோ! மகிஷனும் அவனினத்தவரும் உலவாத விடமில்லை. நாங்களெங்கே உலாவுவது. எங்களைப் பாவத்தொழிலிற் சிறந்தவரும் துன்மார்க்கச் செயலிற் றலைவருமான அவர்கள் எங்களைப் பார்ப்பாராயின் பக்ஷிக்கும் பக்ஷணமாவமே யன்றி வேறென்னாவோம். ஆகையால் நாங்கள் வெளிவருதற்கின்றி மலை முழைகளே கதியாகக்கொண்டு வாழ்கின்றனம். இத்துன்பம் நீங்கும் வகை எதுவோ அதனைச் சொல்லும் அதனை விரைவிற்செய்யும். நாங்கள் உமதடைக்கலம்.

இப்பொழுது சிலதூதரை அங்கங்கும் ஏவி அகப்படுந் தேவர்களைப் பிடித்துக் கொண்டுபோய் அவர்களைப் படுத்தும்பாடு இன்னவெனச் சொல்லிமுடியா. இந்தச் சமயத்தில் எங்களை ரக்ஷிக்காமற் போவீராயின் அசுரரென்னுங் காட்டுத்தீயால் தகிக்கப்பட்டிருக்கிற நாங்கள் அன்புள்ளவராயும் இரக்ஷகராயும் ஆதியாயும் சிருட்டி கர்த்தாவாயுமுள்ள வேறெந்தச் சிருட்டி

கர்த்தாவைத் தேடுவோம்? யாரையடையப்போவோம்? எங்கட்கு யாருளாரென்று பிரார்த்திக்கவே, பிரமதேவன் அவர்கள் ஏக்கமுற்றுச் செய்யுந் தோத்திரங்களையும் வாட்டமுற்றிருக்கும் முகங்களையும் அஞ்சலியாகக் கூப்பியிருக்குங் கரங்களையும் பார்த்து மிகவும் மனமிரக்க முடையவனாய் இவர்களுடைய பீடையைப் போக்கும்வகை நம்மிடத்தி லில்லையே என்று தன்னுள்ளே எண்ணி வெளியே அவர்களுக்கப்பொழுதே சுகத்தை விளைவிக்கின்றவன் போன்று ஓ தேவர்காள்! யான் சொல்லும் உபாயத்தைக் கேளுங்கள். மகிஷாசுரன் வரத்திலும் பலத்திலும் சைநியத்திலும் மாயையிலும் அஸ்திர சஸ்திரங்களிலும் இன்னம் மிகுந்தனவாகிய வெல்லாவற்றினு மிகுந்தவன். அவனை வெல்லவாவது வெல்லும் உபாயங்களையாவது யோசித்துச் சொல்ல நானொருவனே போதுமானவனாவனா? நீவிரே யோசித்துப் பார்மின்கள். நாமனைவரும் முன்போல் ஸ்ரீகயிலாயத்துக்குப் போய் "துக்கங்களைப் போக்கடிக்கத் தக்கவர் தாமெனபது தோன்ற ருத்திர" னென்னும் நாமத்தைப் படைத்த பெருமானைச் சரண்புகுந்து அவனது திருவருளைப் பெற்றுப் பின்னர் விஷ்ணு மூர்த்தியினிடம் போய் "நமக்கியலும் வினையையும், அதற்கறிய வேண்டுவதாய வலியையும் அறிந்து, அதன்கண் மனமொழி மெய்களை எப்பொழுதும் வைத்துப் பகைமேற் செல்லுவோர்க்கு முடியாத பொருள் இல்லை" என்று தருமநூல் கூறுகின்றதனால் இவையெல்லாம் எண்ணித் துணிவோம். "இவ்வா றெண்ணித் துணியாது சிலவெண்ணித் துணிவோ மாயின் அம்முயற்சியான் வரும்பயன் பழுதாம்" என்றுங் கூறுகின்றதனால் ஓ தேவர்காள்! அந்த மகிஷன் ஸ்திரீயால் மரணமடையத்தக்கவனாயிருப்பதனை நாமெண்ணித் திண்ணியராய்த் துணிவோ மென்றனன். அமரர்கள் அயனுடைய வார்த்தைகளைக் கேட்டு அப்படியே செய்வோமென்று கைலாயத்துக் கேகினர். இவர் வரவை யறிந்த பெருமானார் அந்தப்புரத்தைவிட்டு வெளியே வந்து யாவர்க்கும் எளிமையாய்க் காட்சி கொடுத்துநிற்ப, பிரமனாதியர் மகிழ்ந்து அடிபணிந்து ஓமஹாதேவனே! இங்ஙனங் காட்சிதந்த எளிமையை எந்நாளும் மறந்து பாழ்படோம். எங்கட்கென்றுங் கருணையே புரிந்தருளல் வேண்டுமென்று புகழ்ந்துபணியும் பொழுது அவர்களுக்கு மேலிட்டிருக்கும் துக்கோபசமனார்த்தம் தமதருகே வந்திருக்கச்செய்து கருணையோடு வந்தகாரணம் என்னென்று வினவினர். பிரமதேவன் அடிபணிந்து நின்று ஓ சர்வஜ்ஞரே! நீர் அறியாதனவு முளவோ! ஆயினுங் கட்டளை யிட்டவண்ணங் கூறுகின்றேன். சுவர்க்கவாசிகளாகிய இவரெல்லாம் மகிஷாசுரனால் மிகவும் பயந்தவர்களாய்த் தகிற்பட்டு மலைமுழைகளில் மறைந்து வசித்து வருகின்றனர்.

அவ்வாசம் அறிவிற் பெரிய பெரியயோர்கட்கும் அறிவிற் சிறிய விலங்கினங்கட்கும் சுகத்தை விளைவிக்குமேயன்றி பெரியோர்பாலும் விலங்கின்பாலும் சேரப்பெறாது சிலபொழுது நிற்கவல்ல சிற்றின்பத்தை விரும்பிப் பலபொழுது பலதுன்ப மனுபவித்தற்குரியாராகிய இவர்க்கு அதுசுகத்தை விளைவிக்குமா! இவர்கள் படும்பாடு சொல்லி முடியுமா. இவர்களுககு யாகத்தில் வரத்தக்கனவாகிய அவிர்ப்பாகங்களையும் அந்த அசுரர்களே கொள்ளுகின்றனர். இவர்களுக்கு வசிக்குமிடத்தோடு உணவும் போயிற்று. இந்திரன் முதலியோர் திக்தேவதைகளா யிருந்தும் இவர்களுக்குத் திக்கு ஒரு தெய்வமுங்காணோம். இனித்திக்காக வேண்டியவர் திகந்தமூர்த்தியாகிய தேவரீரே! உம்மையே சரணமடைந்தனர். தேவரீருடைய கிருபை அவர்களுக்குண்டாக வேண்டுமென்றே யானும் அழைத்துக்கொண்டு வந்து அடிபணிந்தேன் அருள்புரிக. ஹேசம்போ! சங்கரா! தேவேசா! இவர்கள் விதி எவ்வண்ண மிருக்கின்றதோ அவ்வண்ணம் அருள்புரிக. யாவராலுந் தியானிக்கப்பட்ட தியானப்பொருளானவரே! தேவரீர் தான் யாவரையும் பரிக்கத்தக்க அபாரசக்தியுடையவர்; அருள்புரிக. அருள்புரிகவென்று பலமுறையும் பணிந்து பிரார்த்திப்பவே வேண்டியாங் கருள்புரியவல்ல பெருமானார் புன்னகையரும்பி ஓ வாணிகேள்வனே! நீ தானே மகிஷனுக்கு வரங்கொடுத்துத் தேவர்களுக்குத் துன்பத்தை விளைவித்தனை. இப்பொழுது நீயும் அவர்களோடு துன்பப்படுகின்றவன்போற் காட்டி அதற்கு வழி தேடுகின்றனை. என்னைக் கேட்பானேன். நீயும் ஒரு கர்த்தாவென்று பேருடையவனன்றோ? உன்னிடத்தில் வரம்பெற்ற அவன் உனக்கிப்பொழுது வேண்டும் வரங்கள் கொடுக்குங் கடவுளாக இருக்கின்றவன்போல் காண்கின்றதே? உனக்கு அவனிடத்தில் போகமுடியாதோ! ஸ்திரீயினால் மரணமென்றனையே அவனைக் கொள்வதற்கு எந்த ஸ்திரீ இருக்கின்றாள். அவளை நீ அறிவையா? அந்த ஸ்திரீ உன்னிடத்திருப்பவளா? திருமாலிடத்திருப்பவளா? என்னிடத் திருப்பவளா? அல்லது இந்திராணியா? இவர்களல்லாதவளா? அவனை வெல்லத்தக்க பலமுடைய ஸ்திரீயும் சிருட்டியாயிருக்கின்றனளா? உனக்குத் தெரிந்தால் சொல்லுவாய்! இல்லாவிடின் உன் தந்தையாகிய திருமாலைக் கேட்பாய், மகிஷனை வெல்லும் வகையை யுங்கேட்டுத் தெளிவாய் அசுரர்களுக்கு மாயையில் எவ்வளவு வன்மையுண்டோ அவ்வளவு வன்மை திருமாலுக்கு முண்டு ஆகையால் நீவிர் அவனிடம் செல்மினென்று பிரமனாதியர்க்கு விடைகொடுப்ப விடைபெற்றுச் செல்லுவதற்குச் சகுனம் பார்ப்பச் சகுனமும் சரியாய் வரக்கண்டு காரியசித்தி யுண்டாமென்று மகிழ்ந்து ஸ்ரீ வைகுண்டம் போய்ச் சேர்ந்தனர்.

அறிவிற் சிறந்தவனே! அவர்கட்கான சுபசகுனம் யாதெனின்! நல்லசுகந்தத்தோடுகூடிய காற்று வீசியது, பக்ஷிகள் போகும் மார்க்கத்தில் மங்களவொலியா யொலித்தன, ஆகாயமும் திக்குகளும் நிர்மலமாயிருந்தது, இவைகளெல்லாந் தேவர்கட்குச் சுபசகுனமாய்த் தோன்றின.

ஏழாம் அத்தியாயம்

தேவானாம்யுத்தாத் பலாயனம் முற்றிற்று.

———

சுலோகம் (ருசா.)

ஆக அத்தியாயம் எ-க்குச் சுலோகம் (ஙளருஎ)

உ

கல்மஷக்நை நம:

———

எட்டாம் அத்தியாயம்

* தேவீஸ்வரூப பிராதுர்ப்பாவம்.

———

சக்ரேஸ்வரா! நவரத்தினங்களாலிழைக்கப்பட்டுத் தேஜோமய மாய்ப் பிரகாசிக்கின்றதாயும், அனேக மண்டப பிரகார கோபுராதிகளால் பிரகாசிக்கின்றதாயும், நதிகூட தடாகாதிகளாலும் சண்பகம் அசோகு மந்தாரம் மாலதிமுதலிய பலவிருக்ஷசாதிகளாலும் சூழப்பெற்றதாயும், சக்கரவாகம் அம்சமுதலிய பட்சிசாலங்களுடைய ஓசைகளால் நிறம்பப்பெற்றதாயும், மயில் குயில் முதலியன உலாவப்பெற்றுள்ள உத்தியானவனங்களால் அலங்காரமுடையதாயும் இலக்ஷிமிபதியைத் தனக்கு நாயகமாயுடையத்தானதாயும் விளங்கும் ஸ்ரீவைகுண்டத்தை தேவர்களடைந்து அங்கு விஷ்ணுபக்தர்கள் தோத்திரஞ்செய்கின்ற தோத்திரவோசைகளையும், சுநந்தன் நந்தன் முதலிய பிரமதகணங்களுடைய ஆரவாரங்களையும், கின்னர கந்தர்வாதியர்களுடைய கானவோசைகளையும், அரம்பை முதலாயினாருடைய நடன ஓசைகளையும், முனிகணங்களுடைய வேதவோசகளையும், ஏனையோருடைய நமஸ்காரவோசைகளையுங் கேட்டு ஆனந்தமடைந்தவர்களாய். துவாரத்திலிருக்கும்

* தேவி சொரூபம் வெளிப்படுவதற்கான பாவனையைப் பாவித்தல்.

ஜயவிஜயர்களாகிய துவாரபாலகர்களைப் பார்த்து ஐயன்மீர்! எங்கள் வரவை வைகுண்டநாதருக்குத் தெரிவித்துவரப் பிரார்த்திக்கின்றனமென்று சொல்லவே விஜயனென்பவன் அவர்களுக்கு இன்மொழிகூறி நாராயணரிடத்திற்சென் றடிபணிந்து ஹே மஹாராஜா! ரமாகாந்தா அசுர த்வம் சகா! பிரமானாதியர் கடைத்தலையில்வந்து சமயத்தை எதிர்பார்க்கின்றனர். திருவுளக்குறிப்பு யாதோ பிரசாதித்தருளல் வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, கருடத்துவஜர் கிருபையுடையவராய் யாவரையும் வரும்வண்ண மருளி ஆசனங்கொடுத்து இருக்கச்செய்து அவர்களைப்பார்த்து கருணைமுகங்காட்டி நீங்களனைவரும் வந்தகாரணம் என்னையோ? மிகவுஞ் சோகத்தையுடைந்திருக்கின்றவர்களாகவும் காணப்படுகின்றீரென்று மிகுந்த இரக்கமுடையவராய்க் கேட்பத் தேவர்கள் ஓபக்தவற்சலரே! யாங்கள் படுந்துன்பம் நீர் அறியீரா! உம்மையே அந்த மகிஷன் ரக்தப்பிரவாகத்துக் குள்ளாக்கி மூர்ச்சையாய் விழும்படிசெய்தானே! கருடனல்லவோ உம்மைத்தூக்கிக் கொண்டுவந்து சேர்த்தான். நீர் இப்படி யாவீரானால் நாங்கள் அவனால் எப்படியாயிருப்போமோ அதனை நாங்கள் சொல்லவேண்டுமா! இப்பொழுது அந்தப்பாடுகளைப் பேசுவதனால் பிரயோசனமென்ன! எங்கட்குணவாயுள்ள அவியும் அவர்கட்கே யாயிற்று. எங்கட்குணவும் போயிற்று. இனி என்னவிருக்கின்றது. இந்தப்பிரஹ்மாதான் அந்தத்துஷ்டனுக்குப் பலீஷ்டமான வரத்தைக்கொடுத்துவிட்டார். அதனால் அவன் தனக்கு நிகரொருவருமில்லையென்று அகங்கரித்திருக்கின்றான். அவனகங்காரத்துக்கு அன்றுயர்ந்தோங்கி எழுந்த விந்தமலையும் சமானமாக மாட்டாது. இந்த இறுமாப்பாளன் ஒருஸ்திரியினால் மரணமடைவானென்று இந்தப் பிரமதேவர்தான் கூறுகின்றார். இந்த விவரம் எங்கடுக்த்தெரியவில்லை. தேவரீர் எங்கட்கு எப்பொழுதுஞ் சகாயஞ்செய்பவராதலால் இப்பொழுதும் அவன் மரணமடையும் வகை எதுவோ அதனைச்செய்யும் அதனைச் சொல்லுமென்று சொல்லவே மதுசூதனர் யான்செய்யத்தக்கதும் நீங்கள் செய்யத்தக்கதும் ஒன்றுமில்லை. நாமனைவரும் செய்யவேண்டிய வெல்லாஞ் செய்தாயின. நம்முடைய சக்திகளெல்லாம் இவ்வளவுதான். அவைநன்றாய் விளங்கின. இனி நம்மிடத்திலிருந்து சிருட்டிதிதிசங்காரங்களைச் செய்வதாகிய அதிகாரசத்திகளும் ஏனையோரிடத்திலிருந்து ஏனையஏவற்றொழில்களைச் செய்யும் சத்திகளும் ஒன்றாய்த்திரண்டு ஒருருவாகித் தோன்றுமானால் அந்தச் சத்திசமூகமாகிய ஸ்திரீதான் அந்த துஷ்டனைக் கொல்லத்தக்க ஆற்றலுடையவள். அவளைத் தான் பிரமதேவனுஞ்

சொன்னதென்றறிமின். இனி அவள் வருகையை நாமனைவரும் எதிர்பார்த்திருத்தல் வேண்டும். அந்தச்சத்தி நாம் காணும் எந்தப்பொரு ளிடத்திருந்து தோன்றினாலுந் தோன்றுவாள். நாம் காணக்கூடாத பொருளிடத்திருந்து தோன்றினாலுந் தோன்றுவள். இவ்விரண்டிடமன்றி நம்மிடத்திருந்து தோன்றினாலுந் தோன்றுவள். எல்லாவிடமும் அவளிடமே. அவள் சொரூபம் தேஜோரூபம். அந்தத்தேஜோரூபந்தான் நம்மிடங்களில் அத்வைதமாய்க் கலந்து பிரகாசிக்கின்றன. அங்ஙனமிருக்கும் தேஜோசக்தி நாம் எண்ணுவனவாகிய இவையெல்லாம் அறியாதா அது நம்பால்கருணைகூர்ந்து வெளிப்படுமாயின் நாம் வீணேதாங்கி யிருப்பனவாகிய நம்முடைய ஆயுதங்களெல்லாம் அச்சத்திபாலே கொடுத்து விடுவோம். அவை சத்தியற்ற நம்மிடத்திருந்து ஆவதென்ன அவையெல்லாம் சத்தியுடையாரரிடத் திருந்தாலல்லவோ பயன்படும். இனி அவளைத் தியானிப்போம். ஓ தேவர்களே! நாமனைவரும் தியானிப்பதனாலும் பயனில்லை. நம்மிடத்திலுள்ள சத்தி வெளிப்பட்டுவரும்படிச் சங்கற்பிக்க வேண்டியவர் சத்திநாதராகிய சங்கரரே ஆகலான் அவர் நமக்கு வெளிப்பட்டுவருவாராயின் அச்சத்தியும் வெளிப்பட்டு வருவாள். அவள் வருவாளாயின் அந்த அசுரனாகிய கடா மாள்வானென்பதில் யாதோரையமுமில்லை யென்று நாராயணர் கூறும்பொழுது அந்தநாராயணருக்குப் பரமானவராகிய ஹரர் வெளிப்பட்டு வந்தனர். அமரரெல்லாம் ஹரஹரவென்று போற்றி நிற்பச் சர்வதேவதா வியாபினியாகிய மஹாசத்தியானவள் தனித்தனி ஒவ்வொரு தேவர்களிடத்தினின்றும் வெளிப்பட்டு அகண்ட தேஜோரூபியாய்த் தெரிசனந்தந்தனள் தேவரெல்லாந் தொழவந்த அந்தப் பராசத்தியின் சொரூபத்தைக் கூறுகின்றேன் அன்பனே கேட்பாயாக.

பிரமதேவனுடைய முகத்தினின்றுந் தோன்றிய தேஜோராசியானது ரக்தவர்ண முடைத்தாய், பத்மராகம் போன்ற பிரகாசமுடைத்தாய் சீதோஷ்ணங்கலந்த காந்தியுடைத்தாய்ப் பிரகாசித்தது.

விஷ்ணு மூர்த்தியினுடைய சரீரத்தினின்றுந் தோன்றிய தேஜோராசியானது சுவேதவர்ணமாய் சத்துவகுணத்தை யுடைத்தானதாய்ப் பிரகாசித்தது.

சிவமூர்த்தியினுடைய திருமேனியி னின்றுந் தோன்றிய தேஜோராசியானது அவ்விருவருடைய தேஜசினுஞ் சிறந்து அற்புதமான வெண்ணிற முடைத்தாய், இமையா நாட்டத்தானுங் காணக்கூடாத

ஒளியுடைத்தாய் மகிஷாசுரனுக்குப் பயத்தை விளைவிப்பதாய், கோரரூபிகளாகிய அசுரக் கூட்டங்கட்கு அச்சத்தை விளைவிப்பதாகிய மஹா கோரரூப முடைத்தாய், எல்லாருருவத்தினும் மேலோங்கி விளங்கும் பேருருவுடைத்தாய், அன்பர்கட்குக் காணுந் தோறும் ஆச்சரியத்தை விளைவிப்பதாய், அசுரருடைய தாமச கிருத்தியங்களைப் போக்கவல்ல தமோகுணத்தை மேற்கொண்டதாய்ப் பிரகாசித்தது.

இந்திரனுடைய சரீரத்தினின்றுந் தோன்றிய தேஜோராசியானது எண்ணக்கூடாத சித்திரரூப முடைத்தாய், சர்வகுண சம்பன்னமாய்ப் பிரகாசித்தது.

ஏனைய திக்குப்பாலகரினின்றுந் தோன்றிய தேஜோராசி களானவை பல கிரணசமூகங்களாய் ஜ்வாலைகள் விட்டுப் பிரகாசித்தன.

இவ்வண்ணம் தேஜோராசியாய் ஆவிர்ப்பவித்த ஒளிப்பிழம்பைப் பிரமனாதியர் தெரிசனஞ் செய்துகொண்டிருக்குங் காலத்தில் அவ்வொளிப் பிழம்பினின்றும் வெள்ளிய வொளிவீசும் திருமுகமண்டல முடையவளாயும், கிருஷ்ணவர்ணமுள்ள திருக்கண்களுடையவளாயும், பவளம் போன்ற அதரங்களுடைய வளாயும், பதினெட் டாயுதங்களோடு கூடிய பதினெட்டுத் திருக்கரங்களுடையவளாயும், அதுவொழிந்த எண்ணிறந்த திருக்கரங்களுடையவளாயும், சர்வாபரணா லங்கிருதையாயும், சர்வசம்பத் கரியாயும், சத்துவமுதலிய மும்மைக் குணங்களோடு மும்மை நிறமுடையவளாயும், பிரபஞ்ச மோஹினியாயும் நித்திய சவுந்தரிய முடையவளாயும், காணுந்தோறும் பல அற்புதக் காட்சிகளை விளைவிக்கின்ற வளாயும், மனோக்யையாயும், ஒப்பற்ற தேவி தோன்றியருளினாள்.

இவ்வண்ணம் வியாசமுனிவர் கூறி வந்தபொழுது ஜனமேஜய மஹாராஜன் ஓ கிருஷ்ண த்வைபாயனரே! தேவரீர் தேவியினுடைய சொரூபத்தைக் கூறி வந்தவராயினும், அச்சோதி சொரூபத்தின் அங்கபேத விவரணங்களை எனக்கு விளங்கச் சொன்னீரல்லை.

நீர் பிரமன் முதலாயினாரிடத்துத் தோன்றிய ஒளிகளைத்தனித் தனி சொல்லி வந்தீரே யல்லது இன்னாரின்னாரொளி இன்னின்ன அங்கங்களாயிற் றென்றுசொன்னீரா? அதனை விளங்கச் சொல்லும். அதனைக் கேட்கவேண்டு மென்னும் ஆவல் எனக்கு அதிகரித்திருக்கின்றது. அது எனக்குக் கேட்குந்தோறும் அமிந்தமுண்ணுவது போலுமிருக்கின்றது. இதுபோலும்

எனக்குத்திருப்தியை விளைவிப்பது மற்றொன்றில்லை. ஆகலான் அத்தேவியினது அற்புதசரித்திரத்தைச் சொல்லி யருளுமென வேண்டும்பொழுது வியாசமுனிவர் மகிழ்ந்தவராய் அவனுக்கானந்த முண்டாகும் வண்ணம் ஓ குருகுல சிரேஷ்டனே! தேவியினுடைய உண்மைச் சொரூபத்தை எடுத்துச் சொல்லமுக்குணமூர்த்திகளாகிய மும்மைத்தேவராலுமுடியாதென்றால்யான் சொல்லுந்தரமுடையவனா! யாமெல்லாங்காணுமாறு காட்டுந் திருமேனியின் சொரூபச்சிறப்பை மாத்திரம் ஒருவாறு உன்னிஷ்டப்படி என்னறிவில் விளங்கும் வகை யளவாகச் சொல்லுகிறேன்.

தனக்கென றோருருமில்லா நித்தியையாகிய தேவியானவள் சர்வதேவ ஸ்வரூபிணியாயுள்ளவள். அவள் நாடக நடிப்பானொருவன் ஓர்சபையின்கண் சபையார்களிக்குமாறு பலவுருவங் கொள்வதுபோல் தேவகாரிய சித்தியின் பொருட்டு ஒருருவாயும் அநேகவுருவங்களாயு மாகின்றாள். அதுவேயுமன்றி உலகிலுள்ள சர்வான்மாக்களுடைய ஆகாமிய கர்மானுசாரமாக அவரவர்க்குத் தக்கவாறு அனுக்கிரகஞ் செய்வாள். நிர்க்குணையாகிய தான் சகுணையா யநேக வுருவமாகின்றனள். இம்முறையான் அவன் திருமேனி கொள்ளுங்கால் அந்தந்தச் சகுணரூபங்கட் கேற்பப் பிரவிர்த்திபரமான பல நாமங்களும், அந்தந்தச் சகுணங்கட்கு நிவிர்த்திபரமான பல நிர்க்குண நாமங்களு முண்டாகின்றன.

இப்பொழுது மகிஷாசுரனுடைய சங்கார நிமித்தங்கொண்ட சோதியாகிய திருமேனியின் வகை என்னையோவெனின்! திருமுகம் சங்கரருடைய தேஜோராசிகள், மேகநிறமாயும் நீண்டதாயும் நுனி சுருட்டையாயும் மனோரம்யமாயுமுள்ள கேசங்கள் - யமனுடைய தேஜோராசிகள், கருமையாயும் சிவப்பாயும் வெண்மையாயுமுள்ள மூன்று நேத்திரங்கள் -அக்னியினுடைய தேஜோராசிகள், மன்மதனுடைய விற்போலும் வளைந்து கருத்து அழகிய புருவங்கள் - சந்தியாதேவியினுடைய தேஜோராசிகள், மிகவும் நீளமும் குறுகலுமில்லாத காதுகள் - வாயுமின் தேஜோராசிகள், எள்ளின் பூப்போல் குவிந்திருக்கிறமூக்கு - குபேரனுடைய தோஜோராசிகள். சமமான வரிசையுடையத்தாயும் அழுக்கடையாது ஒளிவீசுவதாயும் குருக்கத்திமலர் போல் அழகுடையதாயுமுள்ள தந்தவரிசைகள் - பிரமனுடைய தேஜோராசிகள். கீழுதடு அருணனுடைய தேஜோராசிகள். மேலுதடு முருகக்கடவுளுடைய தேஜோராசிகள். மூங்கில்போன்ற பதினென்புஜங்கள் விஷ்ணுவினுடைய தேஜோராசிகள் செந்நிறமுள்ள நகங்கள் அஷ்டவசுக்களுடைய தேஜோராசிகள். ஸ்தனகும்பங்கள் -

சந்திரனுடைய, தேஜோராசிகள். திரிரேகையோடு கூடிய இடை - இந்திரனுடைய தேஜோராசிகள். துடைகளும் முழங்கால்களும் - வருணனுடைய தேஜோராசிகள். பிருஷ்டபாகங்கள் - பூதேவியினுடைய தேஜோராசிகள். நிதம்பம் - விபுலனுடைய தேஜோராசிகள். இவ்வண்ணம் யாவரிடத்தும் வாழ்ந்திருக்க தேஜோராசிகளெல்லாம் சர்வாவயவங்களாகத் திருமேனிகொண்ட தேவியைத் தேவர்கள்தெரிசித்து ஆனந்தமடைந்திருக்குங்கால் அந்தத் தேவர்களுடைய ஆயுதங்களிலிருந்து தேஜோராசிகளெல்லாம் வெளிப்பட்டன. அவைகளைத் திருமால்கண்டு ஓ தேவர்காள்! இத்தேஜோராசிகளும் தேவியினுடைய சத்திசொரூபங்களேயாகலான் அவ்வம்பிகையினிடத்திலேயே கொடுத்துத் தாங்கும்படிச்செய்து நாம்கண்டுகளிக்கவேண்டும் கொடுங்களென்று சொல்ல ஒவ்வொருவரும் அவரவராயுதங்களைத் தேவியினிடத்திற் கொடுத்து பணிந்து நின்றனர்.

எட்டாம் அத்தியாயம்

தேவி ஸ்வரூப பிராதுர்ப்பாவம் முற்றிற்று.

———

சுலோகம் - (எசா.)

ஆக அத்தியாயம் அ - க்குச் சுலோகம் (சுருகஎ)

———

உ

கருணாம்ருதஸாகராயை நம:

———

ஒன்பதாம் அத்தியாயம்

* தேவ்யா : ஆயுகாதிபிராப்தி :

———

ஓ ஜனமேஜயனே! தேவர்களனைவரும் ஆயுதங்களைத் தேவிக்குக் கொடுத்தார்களென்று சொன்னேனன்றோ? அந்த வகையையுஞ் சொல்லுகிறேன் கேட்பாயாக.

சங்கரர் - அசுரத் துவம்சமாயும் சுரபயஹரமாயும் சுகதர்கரமாயும் பிரகாசிக்கின்ற சூலாயுதத்தையும், விஷ்ணுமூர்த்தி - அசுரருடைய

* தேவி ஆயுதமுதலியவற்றைப் பெற்றது.

சிரங்களை அதிக விரைவில் அறுக்கவல்ல ஆயிரம் ரேகைகளாய்ப் பிரகாசிக்கவல்ல அரிய சக்கராயுதத்தையும், வருணதேவன் - திவ்யகோஷமுடைய சங்கத்தையும், அக்னிதேவன் - அசுரவேகத்தை யடக்கவல்ல சதக்னி என்னும் ஆயுதத்தையும், வாயுதேவன் - பாணங்கள் நிறைந்திருக்கிற தூணீரத்தையும், ஒருவராலும் வளைக்கக்கூடாததாயும் பார்ப்போர்க்குப் பயங்கரத்தைக் கொடுப்பதாயுமுள்ள அற்புதமாகிய தனுசையும், இந்திரன் - குரூரமுள்ள வச்சிராயுதத்தையும், இயமன் - யாவர்க்கும் மரணம் விளைவிக்கும் தண்டாயுதத்தையும், பிரமதேவன் - கங்கையால் நிறையப்பெற்ற கமண்டலத்தையும், வருணன் - பாசத்தையும், மனோகரமாகிய தாமரை மலர்மாலையையும், குபேரன் - மதுவினால் நிறையப்பெற்ற சுவர்ண பாத்திரத்தையும், இவரெல்லாங் கொடுத்தபின்னர் துவஷ்டா - நூறு மணிக ளொலிக்கும் கவுமோதகியை (கதாயுதத்தை)யும், பேதிக்கக் கூடாத வச்சிரகவசத்தையும், அநேக விதமான அஸ்திரங்களையும், பாதங்களி லணியத்தக்க நூபுராதி ஆபரணங்களையும், சூரியன் - தனது காந்திகளையும், விசுவகர்மா - கங்கணங்களையும், நவரத்னமாயமாயுள்ள தோள்வளைகளையும், கூர்மையாகிய பரசாயுத்தையுங் கொடுத்தனர். திருப்பாற்கடல் - நூதனமாயும் அதிநுட்பமாயுமுள்ள உத்தரீயம் அந்தரீய மென்கிற வஸ்திர துவயங்களையும், நிர்மலமாயும் அழகாயுமுள்ள முத்தாரமுதலிய ஆரவகைகளையும், கோடி சூரியப் பிரகாசமாய்ப் பிரகாசிக்கின்ற சடபில்லையும், கம்மலாகிய காதணியையும், மஹா சமுத்திரம் தென்கடலாகிய ரத்தினாகரம் இந்த யிரண்டு கடல்கள் - கண்டிகை வகைகளையும், மோதிர வகைகளையும், மலையரையன் - இரத்னக் குப்பைகளையும் பொன்மயமான சிங்கவாகனத்தையும், ஐராவதம் - நல்ல துவனியோடுங்கூடிய மணியையுங் கொடுத்தன. தேவருங் கடல் முதலியனவுங் கொடுத்தனவாகிய ஆயுதவகைகளையும் ஆபரணாதி மாலை வகைகளையும் அன்புடன் ஏற்றவளாய் இமவான்றந்த சிங்கவாகனத்தின் மேல் ஆரோகணித்து அமரரெல்லாங்கண்டுகளித்து ஆனந்தக்கூத்தாட அற்புதக்காட்சி கொடுத்தனள். அவ்வரிய காட்சியைக் கண்ட தேவரெல்லாம் தோத்திரஞ் செய்த அருமைப் பாட்டுகளைக் கேட்பாயாக.

நமஸ்ஸிவாயை கல்யாண்யை ஸாந்தியை புஷ்ட்யை நமோநம:
பகவத்யை நமோதேவ்யை ருத்ராண்யை ஸததம்நம:
காளராத்ரை ததாம்பாயை இந்திராண்யைதே நமோநம:
ஸித்யை புத்யை ததாவிருத்யை வைஷ்ணவ்யைதே நமோநம:

பிருதிவ்யாம் யாஸ்திதா பிருத்வா நஜ்ஞாதா பிரிதிவீஞ்சயா
அந்தஸ்திதாய மயதி வந்தேதா மீஸ்வரீம் பராம்.
மாயாயாம் யாஸ்திதா ஜ்ஞாதா மாயயா நசதா மஜாம்
அந்தஸ்திதா பிரேரயதி பிரேரயித்ரீம் நமஸ்ஸிவாம்.

இவ்வண்ணந் தோத்திரஞ்செய்து எங்கட்கு கலியாணம் (மங்கள்ததைச்) செய்வாய், சத்துருக்களால் நாசமடைந்திருக்கிற எங்களை ரக்ஷிப்பாய், தனக்குவாய்த்திருக்கும் பிரகாசமான பெருமையினால் மதங்கொண்டு மஹா பலிஷ்டனாயிருக்கிற மகிஷனைச் ☆சங்காரஞ்செய்வாய், நினைத்தவண்ணம் பலபலவுருவங்களெடுக்கப்பெற்றிருக்கும் வரத்தின்பலத்தினால் அநேக மாயாவுருவங்களெடுத்துச் சகலதேவர்களையும் துக்கத்துக்குள்ளாக்கித் தனக்கு நிகரில்லை என்று கர்வித்திருக்கிற அவன் ஸ்திரியினால் மரணமடைவானென்கிற விதியிருக்கின்றமையால் அந்தத் துஷ்டனை நீ கொன்றுவிடுவாய், ஓபக்தவத்சலை! நீ யொருத்தியே சகலதேவர்கட்கும் புகலிடமாயுள்ளவள், எங்கட்கு இப்பொழுது மகிஷனாலுண்டாயிருக்கும் பெருந்துன்பத்தைப் போக்குவாய், உன்னை ஒரு முறையன்றிப் பன்முறையும் நமஸ்கரிக்கின்றே மென்று வணங்கிப் பிரார்த்தித்தனர்.

தேவி அவ்விண்ணப்பங்களைக் கேட்டுமகிழ்ந்து புன்னகை செய்து தேவர்களைக் கருணையுடன் நோக்கி ஓ அண்டர்களே! அறிவாகிய செல்வத்தைப்பெற்றுப் பெறத்தக்கபொருளாகிய செல்வத்தைப் பெறாத வற்பனாய் அந்தமகிஷ னிருக்கின்றமையால் அவனடைந்திருக்கும் மதகர்வமுதலிய வற்றோடு அவனொழிந்துபோவதிற் சந்தேகமுண்டோ, எல்லாப்புகழுக்கும் எல்லாப் புண்ணியங்கட்குந்துணைக் காரணமாகிய செல்வத்தைக் காக்கவல்ல பெருங்காவலாகும் அறிவென்பது. அதனை இழந்தவன் வேறான எத்தன்மையான பெருங்காவலை யுடையவனாயினும் அவையெல்லாம் என்செய்யும். அவை அச்செல்வத்தைக் காக்குமோ! அறிவென்கிற காவலிழந்தவன் செல்வழிழந் தவனேயாவன், அதனோடு புகழ்புண்ணிய முதலியயாவு மிழந்தவனுமாவன். யாவராலும் எள்ளப்படுவனு மாவன். அவன் இன்மைஎன்கிற ஒன்றையே உடையவனாவன். அறிவென்கிற ஒன்றையுடையவன் எல்லாமுடையவனாவன். ஓ அறிஞர்களே! நீங்க ளவனால் அடைந்திருக்கும் துன்பங்கட்கு ஒருசிறிதும் அஞ்ச வேண்டாம். அவன் வாழ்வெல்லாங் கூத்தாட்டவையின் கண்ணே கூடியகூட்டம்போற் போய்விடும். அறத்தைவிட்டு அகங்காரத்தையும் செங்கோன்மையை

☆ சங்காரஞ் - அழித்தல்

விட்டுக் கொடுங்கோள் முறைமையுங் கைக்கொண்டிருக்கிற அந்த மகிஷாசுரனை நான் சங்கரிக்கின்றேன். இனிக்கவலையை விட்டொழிவீர். தவநிலையைக் கைக்கொள்வீர். 'ஒன்னார்தெறலும் உவந்தாரையாக்கலும் எண்ணிற்றவத்தான் வரும்,' என்றனுக்கிரகஞ் செய்து உலகமாதாவாகிய தேவி பிரவஞ்ச வாழ்க்கையைச் சற்று எண்ணி நகைத்தனள். என்னையெனின்? இவ்வுலகினர் தோற்றமுடையனவாகிய பொருள்கள் நிலையுதலில் வென் றுணராது நிலையுதலுடையவென் றுணரும் புல்லறிவுடையவராய்க் கூத்தாட்டவைக்கண்ணே குழாங்கள் கூத்தாட்டுக்காரணமாக வருதல்போலும் அக்காரணம்போய்வழித் தாமும் போமாறு போலும் நல்வினைகாரணமாக வருவதும் அக்காரணம் போயவழித்தானும் போவதுமா யுள்ளது செல்வமென்பதென் றுணராமலும், அச்செல்வத்தை யனுபவித்தற் கிடமாயுள்ள இவ்வுடம்பும் அருவமாகிய காலமென்னும் ஒன்றின் வழித்தாய் நின்று சூரியன் முதலிய அளவைகளான் அக்காலம் அறுபட்டுப் போய்வழித் தானும்போவதுமாயுள்ளதென்ப துணராமலும், போதல்வருதலாகிய அச்செயலும் காலநீட்டிப்பின்றி நெருனலுளனாயினா னொருவன் அவனே இன்றில்லையாயினா னென்னும் செயலை மிகுதியாகவுள்ள தென்பதுணராமலும் போகின்றார்களல்லவா இது வல்லவோ பெரிய ஆச்சரிய மென்றும், இந்த அயனரி முதலிய இந்திராதியரும் இங்ஙனங் கூறிவந்த இயல்பினை யுடையனவாகிய பொருட்செல்வத்தையும் உடம்பினையுமே பலமுறையும் வேண்டி வேண்டிப் பெற்று இந்த மகிஷாசுரனால் அந்த விரண்டிற்கும் இடையூறுக ளுண்டாக இப்பொழுது துன்பப் படுகின்றார்க ளல்லவா இதுவல்லவோ பிரமை என்றும், துன்பமானது இவ்வண்ணம் இவர்களிடத்தில் வந்து இவர்களெண்ணிய இன்பத்தைத் தடுத்தும் இன்னமும் துன்பத்தால் தடைபடும் இன்பத்தையே விரும்புகின்றார்களல்லவா இது வல்லவோ அஞ்ஞானமென்றும், இந்தத் தேவர்கள் இவ்வாறான துன்பப்பட அந்த மகிஷனுக்கு அளவிறந்த செல்வத்தையும் அகங்கார மமகாரங்களையுங் கொடுத்ததுகாலமல்லவா! இதுவல்லவோ ஈஸ்வரனாயுள்ள தென்றும் இவ்வண்ணம் அம்பிகையானவள் உலகியலும் உயிரியலும் சிறிதே திருவுள்ளத்தெண்ணி நகைத்தவளாய்ப் பின் தேவர்களுடைய காரியத்தை யெண்ணி மகிஷாசுரன் முதலிய அசுரரெல்லாம் மேககர்ஜனையைக் கேட்ட சர்ப்பங்களைப் போல் இருந்தாங்கழிவெய்துமாறு அட்டகாசஞ்செய்து கர்ஜனை செய்தனள். அதனால் பரந்த பூமியும் மலைகளும் விரிந்திருக்கும் கடல்களும் மேரு! முதலிய பெரிய மலைகளும் எண்

திக்குகளும் அசைந்து நடுக்கின. இந்த நடுக்கத்தைக்கண்ட அசுரரெல்லாம் அந்தோ! அந்தோ! என்றலரி மகிஷாசுரனித்தி லோடினர். அவனுமதி சயித்து இச்செய்கை செய்தார் யாவர்! இப்போரோசை யாவரோசை! என்று சந்தேகித்துக் கோபத்துடன் தூதர்களைப் பார்த்து ஓ தூதர்களே! இப்பேரொலியாகிய போரொலி செய்தர்யாவர்! அவரெத்திறத்தவர்? அவரெங்குள்ளார் என்பனவற்றை நன்றாய் நீங்களறிந்து வருவதுமன்றி மிகவுக்கிரமாயும் கர்ன கடூரமாயுமிருக்கிற இந்தவொலியைச் செய்தவன் எவனாயிருந்த போதினும், அன்றி நம்மினத்தவராகிய அசுரரில் ஒருவனாயிருந்த போதினும் நம்பகைவராகிய தேவரில் ஒருவனாயிருந்த போதிலும் அந்தத் துராத்மாவாகிய அவனைக் கைப்பிடியாகப் பிடித்துக் கொண்டு என்னிடம் வாருங்கள். நாம் அஞ்சும் வண்ணம் பேரொலியோடு கர்ஜனைசெய்த அம்மதகர்வ முடையவனை நான் கொன்று விடுகிறேன். எனக்கஞ்சாது இப்போரொலி செய்தா னாகையால் அவனறிவுடையவனா? ஆயுளுள்ளவனா? அவன் அற்பவறிவும் அற்பவாயுளும் உள்ளவனாவன். அவனுக்கு மரணம் நெருங்கி விட்டது. அவனைத் தேவரிலொருவ னென்று எண்ணலாமெனின் அவர்கள் என்னால் பயமடைந்து கண்களுக்கும் புலப்படாமல் மலைமுழையில் வசிப்பவ ராயினர். ஆகலான் அவர்கள் இது செய்யார். அசுரர்களிலொருவனா யிருக்கலாமென் றெண்ணலாமெனின் அவர்கள் எனக்குப் பகைவர்களு மன்று என்னுடைய சுவாதீனத்தி லில்லாதவர்களுமன்று ஆகலான் அவர்களும் இது செய்யார். இவ்வொலி செய்தவனுடைய அறிவை யெண்ணுந்தோறு மெனக் காச்சரியத்தை விளைவிக்கின்றது. இவன் செய்த வொலியால் நான் ஏதாவது அஞ்சுவேனென்றா? அன்றி என்னோடு போர் செய்து வெல்லவாமென்றா? அந்தோ! இப்படியும் ஒரு வீணான காரியத்தையுஞ் செய்வானா? பாவம்! பாவம்!! இவனைப் போலும் மூடன் ஒருவனிருப்பானா? ஓ துதர்களே! அந்தத் துரஹங்கார முடையவனை அதிசீக்கிரத்தில் பிடித்து வாருங்கள். நான் அவனைக் கொல்வது நிச்சயமென்று சொல்லி யனுப்ப அந்தத் துதர்கள் கர்ஜனை தோன்றிய விடத்துக்கு நேரே சென்றபொழுது அவ்விடத்தில் தேஜோரூபியா யெழுந்தருளியிருந்த தேவியைக் கண்டு திக்பிரமைகொண்டு உருண்டு புரண்டு திரண்டு ஓடிவந்து மகிஷனைக்கண்டு ஓ மகாராஜனே! நாங்களென்னவென்று சொல்லுவோம். நீர் கேட்ட கர்ஜனை தேவாசுரர்களால் உண்டானதன்று; அது செய்தவள் ஒரு ஸ்திரீ ஐயா! ஆனால் அந்த ஸ்திரீயைப் போலும் நாங்களும் கண்டிருப்போமென் றெண்ணினாலுங் கண்டிருக்க மாட்டோம். நீரும் கண்டிருக்க மாட்டீர்.

இது நிச்சயம். அவளைப் பார்த்து நீயாரென்று கேட்பதற்கும் எங்கட்கு நாவெழாமற் போயிற்று. நின்று காணலாமென்றாலோ அதிவுக்கிரமா யிருக்கின்றாள். அவள் கொண்டிருக்கின்ற கோபத்துக்களவேயில்லை. பதினெட்டுக் கைகளோடுங் கூடியிருக்கின்றாள். ஒரு கையேனும் சும்மாயிருந்ததில்லை. எல்லாக் கைகளும் பதினெட்டு விதமான ஆயுதங்களோடுங் கூடியிருக்கின்றாள். திருமேனியினொளி யோபன்னிரண்டு சூரியர்களும் பின்னிடும்படியான அகண்டசோதியை வீசுகின்றது. அவள் பூண்டிருக்கின்ற ஆபரணங்களோ அந்த அகண்ட சோதியினின்றும் பாய்கின்ற கிரணசமுகங்கள் போல் கிரணங்களை வீசுகின்றன. அந்த ஆபரணங்களைத் தாங்கப்பெற்ற அவயவங்களோ அவ்வொளிகளினுள்ளே வூடுருவி அவைகளை விளக்கஞ் செய்வனவாகக் காணப்படுகின்றன. இவையாவும் உடைத் தாயிருக்கின்ற உருவத்தினுடைய யவ்வனமோ பாலப்பருவத்தி னின்றும் வந்ததாகவும், இனிக்கௌமாரத்தை யடையத்தக்கதாகவும் காணப்படவில்லை. அவளுடைய யவ்வனத்தின் வண்ணம் எவ்வண்ணத்தின் வண்ணமோ அது அறியப்படவில்லை. அவ்வழகி! ஒருபான பாத்திரத்தை வைத்திருக்கின்றாள். அதனைத் தேவர்களுக்குக் காட்டி ஓ தேவர்காள்! இந்தப் பாத்திரத்திற்றான் அசுரர்களைக் கொன்று அவர்களுதிர வெள்ளத்தை முகந்து என்னுடைய பரிவாரங்களாயுள்ள சாகினி டாகினியாதிகள் மதுபானம் போலுண்ண வைத்திருக்கின்றேன் என்கின்றாள். தேவர்களதைக்கேட்டு ஆகாயத்திலிருந்தவண்ணம் ஆனந்த பரவசங்கொண்டு எங்களன்னையே! எங்களுடைய சத்துருவாகிய மகிஷாசுரனை வெற்றிகொள்ள வேண்டும். அவன் இதுகாறும் தோல்விஎன்பது அறியான். நீ எங்களை ரக்ஷிக்க வந்தவ ளாகையால் அவனைப் பக்ஷிக்க வந்தவளென்பதிற் சந்தேகமில்லை. ஆயினும் நீ எழுந்தருளி வந்தும் இன்னமும் அவனுயிரோடிருக்கின்றா னாகையாலெங்கட்கு மனம் பொறுக்கவில்லையென்று உனது கொடுமைகளை எடுத்தெடுத்துப் பலவாறாகக் கூறுகின்றனர்.

அவளோ உமதுபேரைச் சொல்லும்போ தெல்லாம் தனது நன்முகத்தைத் துன்முகமாகக் காட்டுகின்றாள். அதன் காரணமென்னையோ அறியோம். ஓ மஹா சூரனே! இப்பொழுது அவளுடைய வீர பராக்கிரமத்தைச் சொல்லுவோமா! அவளுடைய பராக் கிரமத்தைக் கண்டு ஆனந்த மடைகின்ற அண்டர்களுடைய ஆரவாரத்தைச் சொல்லுவோமா! அவள் தாங்கி யிருக்கும் ஆயுதங்கலுடைய பிரதாபங்களைச் சொல்லுவோமா! இவையெல்லாம் ஒருவாறு சொல்லக் கூடுமானாலும் அவளுடைய அடங்காத

பேரழகையும் அங்க விசேஷங்களையும் எங்களால் ஒருபொழுதுஞ் சொல்லக்கூடுமோ கூடா! அம்மம்மா! அவளை யாள்கின்ற கணவன் எப்படியனோ! எவ்வண்ணத்தனோ! எந்நிறத்தனோ! எவ்விறைவனோ! ஒருவனுளனாயினும் அவன் இவளை ஆள்வனோ! அவனை இவள் ஆள்வளோ! அறியோம் இந்தச்சமயம் ஒருவனாலும் ஆளப்பட்டவளாகக் காணப்படவில்லை. பெண்ணுருவாயிருந்து ஆண்தன்மையைப் படைத்திருக்கின்ற அவளை நீர்காணப் பெறுவீராயின் அவ்ளோடு நீர் போரைக் காணமாட்டீர் அவள் ஏரை (அழகைத்) தான் காண்வல்லீர். அதுவுங் காணவல்லீரோ! வல்லரல்லீரோ! அவளோ உம்மிடத்தில் போரையே காணவல்லவள். அவளோஇளையாள். அவள் ஒருசிங்கத்தை ஊர்தியாகக் கொண்டிருக்கின்றாள். ஐயா! அது உம்மை அங்குள்ளார் சூரனென்று சொல்லும்பொழுது அவன் கடாவல்லவோ அவனெப்படிச் சூரனாவான்? அந்தோ! அந்தக் கடாவுக்குமேல் பராக்கிரமமுள்ள மிருகங்களெத்தனை யிருக்கின்றன. அவைகளைக்கண்டால் நீங்க ளென்னசொலல்லுவீர்களோ யறியேன். அந்தக்கடா இங்கு என் முன்னேயும் வருமா! நான்சிங்கமல்லவா! என்னை யானைகள் கனவிற் காணுமாயின் இறக்குமென்றால் இந்தக்கடா என்முன்வருமாயின் உயிர்பெற்றிருக்குமா! அதனை நீங்களே சொல்லுங்களென்று உறுத்துப் பார்க்கின்றது. அதன் பராக்கிரமமும் சொல்லுக்கடங்காது. இந்தச் சிங்கத்தை அவள் வாகனமாகக் கொண்டிருக்கும் கம்பீரமே கம்பீரம். இவ்வளவு கம்பீரத்தோடும் வந்திருக்கின்ற அவள் இனியென்ன செய்ய எண்ணியிருக்கின்றாளோ அதனை அறிந்திலோம். ஓ பிரபுவே! அவளிடத்தில் நாங்கள் கண்டன வெல்லாம் சொல்லித் தொலைப்போமென்றாலும் தொலையவில்லையே! அவளிடத்தில் சிருங்காரரசத்தோடு வீரரசமும் அதனோடு சொட்டுகிறதையா! அந்த ரசங்கள் சொட்டுவதைப் பார்த்து வந்தவர்களாயினமேயன்றி நீவீர் சொல்லியதுபோல் அவளை யீர்த்துக்கொண்டுவரும் தூதுவ ரல்ல ராயினோம். பொறுத்தல்வேண்டும். இனி நாங்கள் செய்யவேண்டுவது யாதேனுமுளதாயின் கட்டளையிடுமென்று தூதர்கள் சொல்லியபொழுது மகிஷன் சொல்லத்தொடங்கினான்.

ஓ தூதர்களே! இதுவரையில் அகங்காரங்கொண்டேன். இப்பொழுது காமவிகாரங்கொண்டேன். உங்களுக் கிடத்தக்க கட்டளையொன்றுமில்லை நீங்கள் ஏகலாம். ஓ மந்திரி! தூதர்கள் புகன்றனவெல்லாம் உன்புலனுக்கு வந்தனவா! என்னறிவுக்கு வந்தனவெல்லாம் உன்னறிவுக்குப் போந்தனவா! உனக்குப் போந்தனவாயின் அந்தஸ்திரீயினிடத்தில் போரையுத்தேசித்து நாம்

போதலையொழித்து அவள் இங்கு வருவதற்கான வுபாயங்கள் சாம, பேத, தானமென்னுமூன்றனுளொன்றோ அல்லது இரண்டோமூன்றோ அதன் வகையை எண்ணித்துணிந்து அவள்பாற்சென்று துணிந்தவுபாயத்தைச்செய்து அம்மூன்றுபாயத்தானும் வருவதற்கிணங்காளாயின் நான்காவது உபாரமாகிய தண்டத்தைச் செய்ய நீ எண்ணாது என்னிடம் வந்துவிடுவாய். வரும்பொருளுரைக்க வல்ல ஓ மந்திரி! அவளிடத்தில் முன்தண்டத்தைச் செய்யத்துணிந்து ஒற்றரையனுப்பி யநானே இப்பொழுது அதிற் றுணிவுபிறவாதவனா வேனாயின் நீ அதிற்றுணிவது முறைமையாமா அவளிடத்தில் அதனைத் துணிவையாயினது அவள்பாற் றுணிந்ததாகாது என்பாற் றுணிந்ததேயாகும்.

ஓ மந்திரி! உன்னிற்றாழ்ந்தவர்களாகிய தூதர்கள் என்னால் வெறுக்கப்பட்டவளாகிய அவளை என்னாலேயே விரும்பப்பட்டவளாகச் செய்தனர். அவர்களிலுயர்ந்தவனாகிய நீ என்னால் விரும்பப்பட்டவளாகிய அவளை வெறுக்கச்செய்யாம லெனக்குமகிஷியாகச் செய்வதல்லவோ உன்னுயர்வுக்கேற்றதென்று மகிஷன் சொன்னதை மந்திரிகேட்டு ஓராஜாதிராஜனே! நீ அந்தஸ்திரியினிடத்தில் விற்போரைவிரும்பாது அவள் தோளைத் தழுவுதலாகிய மற்போரை விரும்பினீராதலால் அதனை நானவளிடத்திற் சொல்லப்போகும் சொற்போரால் முடித்து வெற்றிகொள்வேன் நீ ரிதற்குச்சிந்தனை செய்தலொழிக வென்று அவன் பால் விடைபெற்றுச் சதுரங்க சேனைகளோடும் புறப்பட்டு அதிவேகமாய்ச் சென்று தேவியைக் கண்டு சற்று தூரத்தேநின்று அதிவிநயத்தோடு சொல்வணக்க முடையவனாய் யா (எந்த) நலத்துள்ளதுமல்லாத நானலத்துடன் கரும்பினும் இன்சுவை வழங்கத்தக்க பொன்னுரையுடையாளே! நீ யாரோ? இங்குவந்த காரணம் என்னையோ? தேவர்களைப் போர் முகத்தில் புறங்காட்டி யோடச்செய்தவனும், ஒருவராலுங் கொல்ல எண்ணக்கூடாதவனும், பிரமதேவனிடத்தில் பெறக்கூடாத பெரிய வரத்தைப் பெற்றவனும், பராக்கிரமசாலிகளாகிய மஹா அசுர வீரர்களுக்கெல்லாம் அரசனாயிருக்கத்தக்கவனும், எக்காலத்தும் எவ்விதத்தானும் இளைக்காதவனும் அழகிலே நிகரற்றவனுமான எங்கள் பிரபுவாகிய மகிஷாசுரன் மனோகரியாயிருக்கின்ற வுன்னுடைய அபிப்பிராயம் ஈதென்பது என்முகமாய்த் தெரிந்து கொள்ள வேண்டுமென்கிற ஆவலுடையவனா யிருக்கின்றான். சுந்தரங்கட்கெல்லாம் அசுந்தரத்தை விளைவிக்கவல்ல சுந்தரி! ஓ மகாத் திரிபுரசுந்தரி! எங்களரசன் மகிஷவுருவின் னென்றெண்ணி யெள்ளல்வேண்டாம். உனது

பெண்ணலத்துக்கேற்ற நல்ல ஆண்மகனாகவே வருவான். அதற்கு நீ ஐயுறல்வேண்டாம். அவன் உன்னுடைய சொரூபலாவண்யாதிகளெல்லாங் கேட்டு உன்னிடத்தி லிச்சிக்க வேண்டியவற்றை யிச்சித்திருக்கிறான். நீ அவனுடைய இச்சைக்கேற்றவாறு உன்னாலெது இச்சிக்கப்படுமோ அதனை நீ அடைவதற் கொருவித ஆக்ஷேபமுமின்று. அவனுக்கு உன்னுடைய கடைநோக்கமொன்று தான் வேண்டும். ஓ மானினோர் விழியாய்! அவன் மன்மத லீலையில் வல்லவன. அப்பண்டிதன்பால் நீ வருதற் கெண்ணமுளதாயின் இந்தப்பொழுதே வரக்கடவாய். அல்லது அவனுன்பால் வருதற் கெண்ணமுளதேல் இக்கணமே வரும்படியாகச் செய்கின்றேன். இன்னமு மென்னாலாகத்தக்கது எதுவோ அதனையும் செய்யத்தக்கது எதுவோ அதனையும் திருவாய் மலர்ந்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தனன்.

ஒன்பதாம் அத்தியாயம்

தேவ்யா: ஆயுதாதி பிராப்தி : முற்றிற்று.

———

சுலோகம் - சா சா ஏ.

ஆஉ அத்தியாயம் கூ - க்குச் சுலோகம் - (ருகஅ)

உ

கதம்பகா நநாவாஸாயை நம:

———

பத்தாவது அத்தியாயம்

தேவ்யாசஹ மகிஷாசுர தூதசம் வாத:

———

ஓ பூபதி! மகிஷாசுரனுடைய மந்திரியானவன் அகலாது அணுகாது நின்று சொன்ன வார்த்தைகளை மகாராணியாகிய தேவி கேட்டு அவனைப்பார்த்துச் சிலவார்த்தைகள் சொல்லத் தொடங்கினாள்.

*சந்தி விக்கிரகங்களில் வல்ல அமைச்சனே! அசுரவம்ச த்வம்சனியாகிய என்னிடத்தில் பொருத்தலுக்குரிய சந்திவார்த்தைகள் நீ பேசியது பெரும் பிழை. என்னை யின்னாளென்று முன்னறிய வேண்டிய

* பொருத்தல் - பிரித்தல்.

முறையா னறிந்து பின் பேசவேண்டிய முறையாற் பேசுதல் வேண்டும். இது பிழையாயினும் இதனால் உனக்கொரு நன்மையுண்டாயிற்றென்று நினைக்கின்றேன். அஃதென்னையெனின், உன்வார்த்தையினால் மகிஷனுடைய மநுஷ்யன் நீ என்றெனக்குத் தெரிந்தவுடன் காலாக்கினிக்குச் சமானமான என்னுடைய நேத்திராக்கினியினா லெரித்திருப்பேன். அதுவொழிந்து உன்னோடு வார்த்தை யாடுவதற் கெண்ணினேனன்றோ இதுதானென்றறிவாய்.

ஓ நரநலமுடையோனே! சிருட்டியிற்பட் டொழிந்தோர்க்கும், சிருட்டியிற்பட்டிருப்போர்க்கும், சிருட்டியிற் படுவோர்க்கும் யான் மாதா, என்னுள் வாழும் எனது நாயகனாகிய இறைவனே யாவர்க்கும் பிதா, நான் வெளிப்பட்டு முதல்வியாய் வருங்காலத்தில் என்னாயகன் என்னுளுள்ளான். அவன் வெளிப்பட்டு முதல்வனாய் வருங்காலத்தில் நான் அவனு ளுள்ளேன். இருவரும் முதலாய் வருங்காலத்தில் ஆண் பெண்ணென்கிற இருபாதியாய் வருவோம். இத்தன்மையளாகிய நான் தனித்திருப்பதைப் பார்த்து அரிய காமுகரை மயக்கவல்ல பூலோக மங்கையருள் ஒருத்தியென்றெண்ணியோ! அன்றி அரிய தவமுடையாரை மயக்கவல்ல சுவர்க்கலோகமங்கையருள் ஒருத்தியென் றெண்ணியோ! உங்க ளசுரரினத்தவரை மயக்கவல்ல மோகினிகணங்களி லொருத்தியென்றெண்ணியோ! மகிஷனாகிய மாட்டுக்கு என்னைப் பொருத்தநினைத்தனை! அந்தோ! நீதி நுட்பமுடைய அமைச்சனாயிருந்தும் மதிநுட்பமறியாத அந்த மாடுபோ லாயினையே! இது பெரும்பாவம்!! எதிராளியாய் வந்தாரிடத்துச் சொல்லுஞ்சொல் * 'பிறிதோர்சொல்லால் வெல்லவல்ல தொருசொல் இல்லாமையறிந்தன்றோ சொல்லல் வேண்டும்' நீ யறியத்தக்கதாகிய அதனை யறியாதொழிந்தனையே! மகிஷனால் துன்ப மிகுதியுடையவர்களாயும், உங்களுடைய வர்க்கத்தவரால் தங்கள் உணவாயுள்ள அவிர்ப்பாகத்தை யிழந்தவர்களாயு முள்ள விண்ணவர் என்னைச் சரணடைந்து எங்கட்குப் பெருஞ் செல்வமளித்து எங்களை வாழ்வித்த வாழ்வாகிய ஓ மஹாலக்ஷ்மியே! எங்கள் வாழ்வைக் கொள்ளையடிக்கவந்த மூதேவிக்கு எங்களை யாளாக்கிவிட்டனையே. நீ 'அசுரவம்சத்வம்சனி' என்னும் பிருதாவளியைப் பெற்றவளல்லவா! என்று என்னைப் புகழ்ந்து மகிஷாசுர சங்காரத்தை வேண்டினார்கள். அவ் வேண்டுகோளுக்கிரங்கி யாதொரு சைநியங்களுமின்றித் தனியாய் வந்திருக்கின்றேன். சங்காரகாரணியாய் வந்திருக்கிற என்னிடத்தில் சம்சார சாகர காரணிகளாகிய மங்கையர் காமுறும்

* "செல்லுகசொல்லைப் பிறிதோர்சொலச்சொல்லை - வெல்லுஞ் சொலின்மையறிந்து" என வருங் குறளானறிக.

காமவார்த்தைகளை வழங்கினையே! அவை என்பாற் பயன் படுவனவா! அல்லவே என்னை எதிரியாயெண்ணிய மகிஷன் இவள் பெண்ணாயிருப்பதால் இவளைக் காமத்தால் மயக்கித் தனக்குரிய பொன்னால் என்னைத் தளைப்படுத்தி வெற்றிகொள்ளலாமென் றெண்ணினனோ? நீயும் அந்த அறிவிலிக்கு அங்கமாயுள்ளவ னாகையால் நீ எண்ணிச் செய்யவேண்டிய 'வினைத்தூய்மையை நாடாது அவன் வேண்டுப வேட்பச்சொலல்' என்பதை நாடி அதனை முடிக்க நீயும் வந்தனையோ? உங்களிருவரெண்ணமு நன்று! நன்று!!

கண்ணுங் கவசமுமாயிருக்கும் அமைச்சுத்தொழிலுடைய அமைச்சனே! யான் உனக்குரிய நீதியொன்றை யறிவுறுத்திப் பின்னர் நீ உன்னரசன் மாட்டுச் சொல்லவேண்டிய சொற்களைச் சொல்லுகின்றேன் கேட்பாயாக.

*"பின்வருங்கேட்டைத் தமது நுட்பத்தாலறிந்து சொல்லினவரது அறிவையுமழித்து, அதனைத் தானும் தன்னறிவானே அறியானேயாயினும் அக்குற்றம் நோக்கி அவ்வரசனை விட்டு நீங்காது அவனுக்குறுதியாயின் கூறுதல் அமைச்சனுக்கு முறைமை" யென்று கூறிய அமைச்சுக்குரிய நீதியை நீ கைக்கொண்டு பின்னர் நீ உன்னரசனிடஞ் சென்று ஓ மகிஷாசுரனே! நீ உயிர்பிழைத்துலகில் வாழவேண்டினாயாயின் உனக்கிடமாயுள்ள பாதளத்துக்குப் போய் விடு. இல்லையாயின் பெருங்குற்றத்துக் காளாய்த் துஷ்டனாயிருக்கின்ற வுன்னை யுத்தகளத்திற் கொல்வது நிச்சயம். இது பொய்யன்று. அது நாளை உன்னுடைய தேகத்தைத் துண்டுதுண்டாய்த் துணிப்படுத்தி யமபுரத்துக் கனுப்பும்போது தெரியவரும். அப்படி செய்யத்தக்க நான் இப்போது சொல்லியது உன்பால் வைத்தகருணையேயாகும். இது கருணையாமென் றெண்ணுவையாயின் பாதளமாவது கிடைக்கும். அகங்காரம் படைப்பையாயின் அதுவுமிழந்து அழிந்து விடுவாய். நான் உன்னைக்கொன்று தேவர்கட்குச் சுவர்க்கலோகங் கொடுப்பது மெய். நீசுவர்க்கலோகம் ஆளலாமென்றெண்ணுவது பொய். இனிச் சொல்லுவ தொன்றில்லை. இனி உன்மேல்விடுவது பாணமே, அதனைப் பார்த்துக் கொள். அதுவருதற்கு முன் பாதளத்துக்குப் போகும் வழியைப் பார்ப்பாய். என் மேற்பழியில்லை. போவதா யிருந்தாற்போ இருப்பதா யிருந்தால் போருக்குவா. உன்னுடைய படைகளனைத்துங் கூப்பிடு, நான் சித்தமாயிருக்கின்றேன். உன்னுடைய முன்னோராகிய வீரரெல்லாம் யுகங்கடோறும் என்னாலேயே கொல்லப்பட்டார்கள்.

* அறிகொன்றறியா னெனினுமுறுதி யுழையிருந்தான் கூறல் கடன். எனவருங் குறட்பாவுரையிற் காண்க.

எனக்கு உன்னைக் கொல்வது ஒரு பெருங்காரியமன்று! நான் பதினெட்டுக் கரங்களிலும் பதினெட்டாயுதங்களை வீணாகச் சுமந்திருப்பானேன். உனக்கும் யுத்தத்தி னிடத்திலேயே ஆசையுள்ளதாகத் தெரியவருகின்றது. அந்த ஆசையைக் கெடுப்பானேன். இதுவன்றியும் என்னிடத்தில் நீ காமத்தைக் கொண்டிருக்கின்றாய். அது உன்னை உயிரோடு வாழவையாது அதுவுண்மை. அதுவன்றியும் நீ எண்ணியபடி உன்னுயிர் என்னுடன் வாழ்ந்தால் வாழுமேயல்லது உன்னோடு அது இங்கு வாழாது யமபுரத்திற்றான் வாழும். நானோ உன்னுயிரோடு வாழத்தக்கவளல்லள். நான் உயிர்க்குயி ரானவனோடு வாழத்தக்கவள். உனக்கு விதியும் என்னுடன் வாழும்படியாகவுமில்லை. என்னால் வாழ்வற்றுப் போகும்படியாகவே யிருக்கிறது. இப்படி எல்லாப் பொருத்தமும் உன் சாவுக்குப் பொருத்தமா யிருக்கின்றதே யல்லது எப்படி யானும் உன் வாழ்வுக்குப் பொருத்தத்தைக் காணேன். நீ மாத்திரம் தேவர்களைப் புறங்கண்ட யாம் ஒரு ஸ்திரீக்குப் புறங்கொடுப்போமா அல்லது சாவோமா என்று தீரனாய் வந்திருக்கின்றாய். உன் தீரத்தைக் கங்காதீரத்திற் போட்டுவிடு. பிரமன் கொடுத்த வரமாகிய வரத்தை யெண்ணிப்பார். வரத்தின்படியே நான் வந்த வீரத்தையும் நினைத்துப்பார். இம்மண்ணுலகத்தில் வாழவேண்டினவர் வைதிக மார்க்கத்தில் தவறாது வாழ்வராயின் வாழ்வர். அம்மார்க்கத்தில் வாழாராயின் வாழார். அதனைச் சிந்தித்துப்பார். சன்மார்க்கத்தில் வாழவிரும்பாதவனாகிய நீ சிந்தித்துப் பார்த்து சர்ப்பங்கள் வாழுமிடமாகிய பாதளத்திலாவது உனக்கிஷ்டமான வேறெவ்விடத்திலாவது வாழப்பாரென்று யான் சொல்லியதாகச் சொல்லக்கடவா யென்று தேவியார் சொல்லியருளினர்.

அதனைக் கேட்டமந்திரி இவள் சொல்லிய வெல்லாம் சரியே இவள் சொல்லியபடி செய்யத்தக்கவளே யன்றி செய்யத்தகாதவளன் ளென்று தன்னுள்ளத்தே எண்ணி மீண்டும் இவள் மானுட மாதன்றித் தெய்வமாதாயினும் இவள் சொல்லியபடி நமதரசனிடத்திற் சொல்வது நமக்கு முறையாமா, ஆகாவாகலான் நாம் தூதாக வந்த *முறையைச்

* தூது முறைமையாவது - பகை யரசனிடத்துச் சென்றபொழுது அவன்பால் பொருளை விரும்பியாவது வேறு ஸ்திரீ காமங்களை விரும்பியாவது அவன் வசப்பட்டு தன்னரசனுக்கு அவை சேராவண்ணஞ் செய்யாமையாகிய தூய்மையும், நமதரசனது வீரபராக்கிரமங்களை எடுத்துக் கூறுவோமாயின் இவர் நம்மை என் செய்வாரோ வென்று அஞ்சிச் சொல்லாமற் போதலை யொழித்துச் சொல்லுதலாகிய துணிவுடைமையும், தன்னுயிர்க்கு வரும் ஏதத்துக்கஞ்சித் தன்னரசனுக்குத் தாழ்வான வார்த்தையை வாய்சோர்ந்தும் சொல்லாமையாகிய திண்மை யுடைமையுமாம். இவற்றை "தூய்மை" எனவும், "விடுமாற்றம்" எனவும் வருந் திருக்குறட்பாக்களாற் காண்க.

சிறிது காட்டிப் போதலே நமக்கு முறையாமென்று மிருகேந்திர வாகனாருடையா யிருக்கின்ற அம்பிகையைப் பார்த்துச் சில சொல்லத் தொடங்கினான்.

ஓ மாதரசே! நீ என்பால் சில குணங்கள் இருப்பனவாகவும் இன்மையாகவுங் கண்டு இன்மையாகிய குணங்களைக் கொள்ளுமாறு சில கூறினை. அதில் எனக்கொரு தாழ்வில்லை. நின்பால் சில வுடைமையாகவும் சிலவின்மையாகவுங் கண்டிருக்கின்றேன். அதனைக் கேட்டல்வேண்டும். நீ யுத்தமுகத்தில் வீரமுடையா ரெடுத்துக் கூறும் சில வீரலக்ஷண தருமங்களாகிய சொற்களைச் சாமர்த்தியமாய்ச் சொல்லக் கற்றனையேயன்றி ஸ்திரீகளுக்குரிய குணதருமங்களைக் கற்றாயல்லை. வீரதீரமுதலிய எல்லாக் குணங்களும் நீயுடைய ளாயினும் ஆண்மக்கள் பால் அவைகளைச் சிறிதுங் காட்டாது (பேதமை)த் தன்மையைப் பெரிதுங் காட்டுவதே "மாதர்க்கணிகலம்" என்று சொல்லப்பட்டிருக்கின்றபடி நீ! காட்டல் வேண்டும்; அது வொழிந்து உனது பேராண்மையைக்காட்டினையே இது உனக்குத் தருமமாகுமா ? யான் என்னரசனுடைய வீரதீர குணசீல தருமங்களைக் கூறுகின்றேன் கேட்பாயாக.

எங்கள் அசுரகுல சிகாமணியாய் ராஜாதிராஜமணியாய் வீர தீரமணியாய் திரிலோக சாம்பிராஜ்யமணியாய் அமரவம்ச த்வம்ச மணியாய் அகண்ட சாம்பிராஜ்யமணியாய் அஷ்டைஸ்வர்ய சம்பன்னமணியாய் அஷ்டாங்க யோகரசமணியாய் நவமணியாய் விளங்கும் எங்களரசனை நீ யாராக வெண்ணினையோ, யுகங்கடோறும் அசுரர்களை நீ வென்றவளாகக் கூறினையே இவனும் அவ்ரகளிலொருவனாக வெண்ணத்தக்கவன்றானோ ? அவர்களால் உனக்கு வெற்றி வந்தது மெய்மையே. இவனால் உனக்கு வெற்றி வருமென்பது பொய்மையே. ஆனால் நீ யுத்தஞ்செய்திருப்பது மெய்மையாயின் சதுரங்கசேனைக ளுனக்கிருக்கவேண்டுமே! நீ ஒருத்தியாக வந்திருக்கின்றனையே! எங்களரசனோ எப்பொழுதும் போர்மேற் செல்பவனாதலால் நால்வகைச் சேனைகளும் எண்ணிறந்தனவாக விருக்கின்றன. நீ வைத்திருக்கும் ஆயுதங்களோ பதினெட்டு; அவன் வைத்திருக்கும் ஆயுதங்களோ அளவிறந்தன. உன்னுடைய சரீரமோ மலரினும் மென்மை; அவன் சரீரமோ வயிரத்தினும் வன்மை. உனக்குள்ளபருவம் போருக்குரிமையல்லாத வாலிபம்; அவனுக்குள்ள பருவமோ போருக்குரிமையுடைய யவ்வனம். ஒருத்தியாயும் ஆயுதங்களற்றவளாயும் சேனைகளற்றவளாயும் மென்மையான சரீரமுடைய வளாயும் வாலிபமாகிய சிறிய பருவத்தை

யுடையவளாயு மிருக்கின்ற நீ பலரோடும் பலவாயுதங்களோடும் வன்மையான சரீரத்தோடும் யவ்வனமாகிய பெரிய பருவத்தோடுங் கூடியிருக்கின்ற அவனோடு போர்செய்யத் துணிதல் சிறுபிள்ளை விளையாட்டாய் முடிந்து துக்கத்துக் கிடஞ்செய்து சுகத்தைப் போக்கிவிடும். ஒருக்கால் நீ யுத்தஞ்செய்து பார்ப்போமென்று பேதமையால் துணிவையாயின் அது மதத்தயானையின்கையில் அகப்பட்ட மலர் மர்த்தனப்பட்டழிந்து போவதுபோல் மர்த்தனப்பட்டழிவாய். இதுவரையில் நான் நீ வெறுக்கும்படியான வார்த்தைக ளொன்றேனுஞ் சொல்லி யிருப்பேனா? இல்லையே, அங்ஙனம் வன்சொல் வழங்காத என்னிடத்து நீ இன்சொல் வழங்காமையை யோசிக்குங்கால் என்னுடைய குற்றமென்றே யெண்ணுகின்றேன். நான் என்னுடைய ஆண்தன்மைக்குரிய வன்சொல்லை வழங்கி யிருப்பேனாயின் நீ உன் பெண் தன்மைக்குரிய இன்சொல்லை வழங்கியிருப்பாய். நான் என்னுடைய அரசன் உன்னிடத்தில் ரசப்பட்டு வசப்பட்டிருக்கின்றானாதலால் அதற்கு மாறாக விரசமான வார்த்தைகளை வழங்காதொழிந்து சாமோபாயமாகவும் தானோபாய மாகவுமுள்ள வார்த்தைகளையே வழங்கி வந்தேன். அரசனுடையமோக அபிப்பிராயம் உன்னிடத்தி லில்லாத பட்சத்தில் ரூபத்தினாலும் யௌவனத்தினாலும் அகங்காரத்தை யடைந்து உன்னுள்ளடங்காத விவகாரங்களை யெண்ணத்தா லெண்ணிக் கொண்டு வாயில் வந்தவா றெல்லா முளறுகிற உன்னை இன்னமு முயிரோ டிருக்கச் செய்வேனா? என்னுடைய பாணத்துக் குன்னுயிரை யிரையாக்கி விடுவேனல்லவோ? உலகத்திலில்லாத உன்னுடைய ரூபலாவண்ணியங்களைக் கேட்டு மோகத்தையடைந்த என்னரசனுடைய மோகமன்றோவுன்னுயிரை யுடலோடு கூடியிருக்கச் செய்தது? அதுவன்றோ அப்பிரியப்படத்தக்க உனது இழிந்த வார்த்தைகளைப் பிரியவார்த்தைகளாக என்னையுங் கொண்டாடச் செய்தது? ஓ விசாலாக்ஷி! இனி அதனைப் பேசுவதனாலென்? மகிஷாசுரன் தன்னுடைய ராஜ்ய முதலிய சகல செல்வத்தைய முனக்குக் கொடுத்துத் தானு மடிமையாவதற்குச் சித்தமாயிருக்கின்றான். அவனிடத்தில் நீ கொண்டிருக்கும் ரோஷத்தைக் காட்டுவையாயின் நீ மரணமடைவாய். உன் மரணத்தைக்கண்ட அவனும் மரணமடைவான். இருவரு மரணமடைவது நலமோ? இருவரும் புணரவிருப்பது நலமோ? இனியேனும் நல்ல வபிப்பிராயத்தை அவன்பால் கொள்வையாயின் நானுமுன்பா லன்புள்ளவனா யுன்பாதத்தில் விழுகின்றேன். நான் வீழ்ந்து வேண்டுவதெல்லாம் என்

மகிஷனுக்கு மகிஷியாயிருப்பதற்கே. மகிஷனாகிய அவனை நீ மணவாளனாகக் கொள்வையாயின் மூன்றுலகிலுமுள்ள அளவிறந்த செல்வங்களெல்லா முன்பாலனவேயாகும். கணவனையும் வேண்டாது செல்வத்தையும் வேண்டாது இவ்விரண்டுடன் கூடி வாழத்தக்கதாயிருக்கின்ற சம்சார நலமும் வேண்டாது போதற்கா நீ பெண்ணாகப் பிறந்தது? பெண்ணுக்குப் பெரு நலம் புருடனே. புருடனுக்குப் பெரு நலம் பெண்ணே. இதுவன்றி உலகில் பெறத்தக்க நலம் வேறுண்டோ? நலமெல்லாந் திரண்டுருக்கொண்டிருக்கும் ஓ நல்லவளே! யானிதுகாறும் கூறிவந்த நலங்களையெல்லாம் சற்று கவனிப்பாயாக வென்றனன். இவனது புன்மொழிகளைக்கேட்ட பெருந்தவக்கொழுந்தாகிய பெண்ணினல்லவள் மந்திரியைப்பார்த்து, ஓ அமைச்சனே! நீ இதுவரையில் சொல்லி வந்தவையெல்லாம் அசாஸ்திரமும் அயுத்தமுமேயாம். சாஸ்திர சம்மதமாயும் யுக்தி சம்மதமாயும் அநுபவ சம்மதமாயு மிருக்கின்ற சில நியாயங்களை நான் கூறுகின்றேன் கேட்பாயாக.

மகிஷனுக்குப் பிரதானனாயிருக்கின்ற வுன்னை மிருகப்புத்தியு டையவனென் றிப்போ தெண்ணுகிறேன். மிருகபுத்தியுடைய வுன்னையும் மிருக வுருவத்தையுடைய அவனையுங் கூட்டிவைத்த பிரமனது புத்தி நுட்பத்தை மிகவு நினைக்கின்றேன். உங்களிருவரையு மொன்றாகக்கூட்டிய வூழையுஞ் சற்றுன்னுகின்றேன். என்னை ஸ்திரீ யென்றும் ஸ்திரீசுபாவமெனக் கிருக்கவேண்டுமென்றுங் கூறினையே உன்னறிவு இதுதானோ? மிருகத்திற்கு மிருககுணமிருக்குமேயன்றி அதற்கு மக்கட்குண முண்டாகுமோ? மக்கட்கு மக்கட்குணமன்றி மிருககுணமுண்டாகுமோ? இது வுலகின்கண் கண்டோமில்லையே. மாறுபடக் கண்டோமாயின் அது குணத்தினாலன்றி உருவத்தி னாலல்லவே. உருவம் பெரிதா? குணம் பெரிதா? உருவத்தால் குணம் வருவதா? குணத்தா லுருவம் வருவதா? குணமிகுதிச் செயலைக் கண்டவிடத்து, அக்குணத்தளவா யுருவத்தையும், உருவ மிகுதிச்செயலைக் கண்டவிடத்து அவ்வுருவத்தளவாய்க் குணத்தையுங் கொள்வது சுருதியுக்தியனுபவமுடைய சிறந்தோரது கொள்கை. அகவே என்னிடத்துக் காணவேண்டிய குணமிகுதிச் செயலைக்கண்டு அதற்குரிய உருவமுடையமையைக் காணவேண்டுவ தொழிந்து உருவமிகுதிச் செயலையுடையாரது குணத்தை யணிவகுத்துக் கூறினையே. ஓ அறிவிலி! நான் சொல்லி வந்ததை நன்றாய் விசாரஞ்செய்வாயாக. நான் உருவத்தால் ஸ்திரீயாயும் குணத்தால் புருஷனாயுமுள்ளவள் என்னுடைய ஸ்திரீவுருவ நலம் வைதிகராகிய தேவருக்கும் எனது புருஷகுண வீரம் அவைதிகராகிய

அசுரருக்கும் பயன்படத்தக்கனவென் றறிவாய். வைதிக அவைதிகங்களை யறியத்தக்கவர் யாரோ அவர்கள் என்னைப் புருஷனென்றும் ஸ்திரீ யென்றும் அறிவார். அவையறியாத வுன்னைப் போல் வார் ஸ்திரீயே யென்றெண்ணி யிடர்ப்பட்டழிவார். இனி நீ என்னை ஆண்தன்மை யுடைமையால் புருடனென்றும் மகிஷன் பெண் தன்மையுடைமையால் ஸ்திரீயென்று மறியக் கடவாய், அவன் ஆண் தன்மையுடைய வரையின. ஆண் தன்மைக்குக் கீழ்ப்பட்டபெண்ணால் மரணமென்று விதிஏற்பட்டிருக்குமா? இராது. உருவத்தால் ஆணுருவமும் தன்மையால் பெண்தன்மையுமுடைய அவனுக்கு உருவத்தால் பெண்ணுருவமும் தன்மையால் ஆண்தன்மையுமுடைய ஒருத்தியால் மரணமுண்டென்பது துணிந்து விதிக்கப்பட்டதென் றறிவாயாக.

ஆண்தன்மையில்லாத மகிஷனை நீ ஆண்மகனென்று சொல்லுவது பெண்தன்மையில்லாத பேடியைப் பெண்ணென்று நினைத்து அழைப்பதுபோலுமாம். "பெண்ணால் மரணமென்பது" பிரமனே விதித்ததன்று. மகிஷனே எனக்கு ஸ்திரீயினால் மரணம் வேண்டுமென்று பிரார்த்தித்தானாகையால் பிரமனும் அதுபோல ஆகுகவென்றனன். இவன் வேண்டியதை யோசிக்குங்கால் சூரனானவன் ஒரு பேடியை விரும்பினது போலாயிற்று. இவனைப் போலும் அறிவில்லாதவனொருவ னிருப்பானா? ஓ மந்திரி! அவன் வேண்டியபடியே நான் ஸ்திரீரூபங்கொண்டு அவனைச் சங்காரஞ் செய்ய வந்திருக்கிறேன். இது உண்மையாகையால் நீ கூறியதெல்லாம் தருமசாஸ்திரத்துக்கு விரோதமாமென்றறிவாய்.

நான் சதுரங்கசேனை யில்லாதவனென்றும் அவன் எல்லா முடையா னென்றுங் கூறினையன்றோ? ஒருவனுக்குத் தெய்வ பல மொன் றுண்டாயின் புல்லும் வச்சிராயுதமாகும். அஃதிலதாயின் வச்சிராயுதமும் பஞ்சுபோலாகும். ஆகவே சேனைகளும் ஆயுதங்களும் என்செயும்? எல்லாஞ் செய்யவல்லது தெய்வமே. அந்தப் பலந்தான் வேண்டும். அவனுக்கு மரணம் சமீபித்திருக்கிறபடியால் நானொருத்தியே போதும். என்னால் அவனுக்கு மரணமேயன்றி அவனால் எனக்கு மரணமில்லை. சரீரசம்பந்த முடையவர்க்கே மரணமன்றி அது இல்லாத எனக்கு அது உண்டாகாது. சரீரசம்பந்தம் சீவர்களுக்கே. அச்சம்பந்தம் எப்போதுண்டாகிறதோ அப்பொழுதுதே சுகதுக்கமு முண்டாகிறது. சுகதுக்கவனுபவ முடையவர்க்கு அவ்வனுபவ முறையான் மரணதுக்கம் எந்தெந்த வகையான் ஏற்படுத்தப் பட்டிருக்கிறதோ அந்தந்த வகையான் அது வருகின்றதன்றி வேறு விதமாய் வருவதின்று. இந்த விதி பிரமனாதி

சகலருக்கு முண்டு மந்தபுத்தியுள்ளவர்களே செல்வ நிலையாமையையும் யாக்கை நிலையாமையையும் அறியாது யானென்தென்று செருக்கடைந்து மரணபயத்தையு மறந்திருக்கின்றவர்கள். இனி நீ உன்னரசன் பாற்சென்று யான் கூறிய முறைப்படி யாவுஞ்சொல்லி அதற்கவன் என்ன வெண்ணி நடத்தச் சொல்லுகிறானோ அதனை நடத்துவாயாக வென்று சொல்லவும், மந்திரியானவன் நமதரசன் இவள்பால் காமங்கொண்டு இவளைத் தன்வசப்படுத்துதற் கேதுவான சாம பேத தானங்களைச் செய்து வருவாயென்று நம்மையேவியிருக்க, அவை யொன்றானு மிவள் வசப்படாது வியர்த்தமாய்ப் போயினமையால் அரசனிடம் நாமெவ்வாறு போவதென்றும், இவளுக் கேதேனும் தீங்குசெய்வோமென்றால் அது அவனுக்காகாமையால் ஒருகுற்றமுஞ் செய்யாமல் வந்தபடி சீக்கிரமாய்ப் போதலே நலமென்றுந் துணிந்து, நமதரசன் புத்தியிற் சிறந்தவனாகையால் இனி நடக்க வேண்டிய காரியத்தில் யோசிக்க வேண்டியவைகளை அவனே யோசிப்பானென்றும், அந்த யோசனைகட்குச் சகாயம் வேண்டுமாயின் நம்மைப்போன்ற மந்திரிகள் அநேகரிருக்கின்றார்களென்றும் நிச்சயித்து, மிளவும் தன் வீரத்தைக் கருதி இவ்விடத்துப் போர்செய்யலாமா வென்றும், போர்செய்தாலும் அப்போ ரிப்போது முடியத் தக்கதல்லவேயென்றும், அதில் வரும் ஜயாபஜயம் அவனைச் சேருவதாயிருப்பதால் நாமேன் வீணோ யவதிப்படவேண்டுமென்றும் வெறுத்து, அரசனிடஞ் சென்று சொல்லித் தொலைப்போம்; அவனிஷ்டப்படிச் செய்யப்போவதை நாம் பார்ப்போ மென்றெண்ணிச் சென்று, மகிஷாசுரனைக் கண்டு பணிந்து ஓ அசுரேந்திரனே! உன்னாஜ்ஞையின் வண்ணம் நீ விரும்பியுள்ள ஸ்திரீயினிடஞ் சென்று உன் வேண்டுகோளனைத்தையும் யான் விடாதுசொல்லியும் அவன் சிறிதும் செவிகொடாமையால் அதனைக் கண்டு, அவள் உம்முடைய வசமாவதால் வரும் செல்வப் பெருக்கினையும் அதிகாரமேம்பாடுகளையும் பெண்ணலத்துக்குரிய போகநலங்களையு மெடுத்துப் பலபலவாய்ச் சொன்னேன். அதற்கவள் புன்னகைசெய்து என்னைப் பார்த்து எருமையினுடைய கர்ப்பத்தி லுண்டானவனாயும் அந்த மிருகத்துக் கிருப்பதுபோல மிகவும் மந்தமதியுடையவனாயும் அசுத்தனாயுமுள்ள மகிஷனாகிய மிருகனை தேவகார்யசித்தியின் பொருட்டுப் பலிகொடுக்கிறேன். ஓ மந்தபுத்தி

யுள்ளவனே! உலகத்தில் எவ்வளவு மூடபுத்தியுள்ளவ ளானாலும் கடாவைக் கணவனாகக் கொள்ள எண்ணுவாளா? அங்ஙனமிருக்க என்னையா அவனைக் கொள்ளச் சொல்லுகின்றாய். அந்தக கொம்புள்ள கடாவை இச்சிக் கத்தக்கது அந்தக் கடாவைப்போலும் கொம்புள்ள எருமையல்லவா மோகங்கொண்டுருமி அதனை நாயகனாகக் கொள்ளவிரும்பும். ஓ மூடனே! என்னிடஞ் சிறிதேனுமச்சமின்றி இவ்வார்த்தைகளைச் சொன்னாயல்லவா? ஓடிப்போ. இங்கு நில்லாதே! அந்தக்கடாவை என்னிடம் சீக்கிரம் வரும்படிச்செய். தேவர்களெல்லாஞ் சந்தோஷத்தோடு சுவர்க்கம் போக இவனைப் பலிகொடுக்கிறேனென்று சொன்னாளையா! அந்த மதம் பிடித்தவளோடு என்னாற் பேசமுடியுமோ? நானவளைக்கொல்ல அடிக்கடி துணிந்தும் நீ அவளைக் கொல்லப் போகிறாய் என்னிடம் வந்து சேருவாயென்று சொல்லியதைப் பல முறையுஞ் சிந்தித்து உயிரோடு விட்டுவந்தேன். உம்முடைய ஆக்ஞையின்றி வியர்த்தமாய் நானொரு காரியத்தைச்செய்யலாமா? ஓ மகாராஜனே! அந்த ஸ்திரீயை நீர் இலேசாக நினைக்கவேண்டாம். அவள் மகாபலமுள்ளவள். அவளென்ன செய்யவிருக்கின்றாளோ அறியேன். அவள் செய்கையால் என்ன முடியவிருக்கின்றதோ அதுவுஞ் சொல்ல முடியாது. எனக்கெண்ணம் உமக்கெவ்விதத்திலாவது கீர்த்தியும் இஷ்டகாமமுமுடியவேண்டு மென்பதே. ஆனால் அது கஷ்ட சாத்தியமாக விருக்கின்றது. இவையெல்லாம் நீரோ சித்துயுத்தம் பண்ணுவது நன்மையோ? பாதாளம் போய்ச் சேருவது நன்மையோ? அவ்விஷயத்தை நீரே நிச்சயித்தறிந்து கொள்ளவேண்டும். என்னை ஒன்றுங் கேட்கவேண்டாம். நானொன்று மறியேன் என்றனன்.

பத்தாம் அத்தியாயம்

தேவ்யாசஹ மகிஷாசுர தூதசம்வாதம் முற்றிற்று.

———

சுலோகம் (சாசா.)

ஆக அத்தியாயம் கO - க்குச் சுலோகம் (ருஅசு)

———

உ

கதம்ப குசும்ப்ரியாயை நம:

———

பதினொன்றாம் அத்தியாயம்

* தேவீம்பிரதிதாம்ர தூதபிரேஷணம்.

———

ஓ ஜனமேஜயனே! தூதாகச்சென்ற மந்திரியினுடைய வார்த்தையை மதத்தில் மிகுந்த மகிஷன் கேட்டு வயதிலும் அறிவிலும் பெரிய ஏனைய மந்திரிகளைப் பார்த்து, ஓ மந்திரிகாள்! இவன் சொல்லியவெல்லாம் கேட்டீர்களல்லவா? இனி செய்யத்தக்கது யாது? அதனை நன்றாயோசித்து அதிசீக்கிரத்தில் நான் நம்பத்தகுந்த தாய்ச் சொல்லுவீர்களாயின் அதனைச் செய்யத் துணிவேன்.

இப்போது வந்திருக்கிற ஸ்திரீ சம்பராசுரனுடைய மகளாகிய மாயை என்பவளைப்போல் தேவர்கள் க்ஷேமார்த்தமாய் வந்ததாகத் தெரியவருகின்றது. அவளிடத்தில் எனக்கு மோகமேவளர்ந்து வருகின்றதன்றி கோபம் சிறிதுந்தோன்றவில்லை. இது தேவர்களுடைய அதிர்ஷ்டமோ! மாயையோ! இல்லாவிடின் அவள் மந்திரியினிடத்தில் என்னைக்கடா வென்றும் மாடென்றும் பலவாறான நிந்தைமொழிகளைக் கூறிவிட்டாளே! அவையெல்லாம் நான் பொருக்கத்தக்கனலாமா? இனி அவற்றைப் பேசியாவதென்? அவள் பெண்ணாயிருப்பதால் அவளைப் பெண்டாட்டியாக்கிக்கொண்டு அவளுடையசுகத்தைக் கைக்கொண்டு பின்னர் அவள் கொண்டிருக்கும் அகங்காரத்தை யடக்கத்துணிய வேண்டுமேயன்றி இப்பொழுது துணிந்தால் அவளிடத்தில் நான் அனுபவிக்கவேண்டியதா யெண்ணியிருக்கின்ற பெரியசுகம் வீணாய்ப் போய்விடுமல்லவா? ஆகையால் மதமுடைய அவள் எனக்குப் பட்டவர்த்தனியாவதற்கான உபாயம் எதுவோ அதனை உபாயங்களிற் சிறந்த நீங்கள் யோசித்து எனக்குச் சொல்லுங்கள். இதனை அநுகூலஞ் செய்யத்தக்கவர்கள் நீங்களன்றி வேறுயாருளார்? நீங்கள் மஹாசமர்த்தர்கள். என் பொருட்டு அவளிடத்தில் எது நடத்த வேண்டுமோ அதனை நடத்துங்கள் எது செய்யவேண்டுமோ அதைச் சொய்யுங்கள் உங்களுக்கு எல்லாச்சுதந்தரமுமுண்டல்லவா வென்றான்.

மகிஷாசுரன் வாய்மொழியைக்கேட்ட மந்திரிகள், தம்மிற்பெரியோராகிய புரோகிதர்களைக்கலந்து ஆராய்ந்து க்ஷேமத்துக் கேதுவான சிலநீதிகளை அரசனுக்குச் சொல்லத்துணிந்து அரசனைப்

பார்த்து, ஓ அரசனே! ஒருவருக்கு ஒன்றைச்சொல்லுவதென்றால் சத்தியமாயும் நன்மையாயுமுள்ளதைச் சொல்லவேண்டுமேயல்லாமல் அசத்தியமாயும் தீமையாயுமிருப்பதை எப்போதுஞ் சொல்லுதல் கூடாது. ஏனையோரிடத்தில் சொல்லுவதைப் பார்க்கிலுமுன்னிடத்தில் சொல்லுவது பெரும்பாவம். ஏனெனின், நீ அரசனாதலின் மலர்தலையுலகிற்கு உயிரெனச் சிறந்துள்ளாய். யாவர்க்கும் உயிராயுள்ள நீ சத்தியமாகிய நற்குணத்தையும் நீதிநூல் வழித்தாகிய நற்செய்கையு முடையனா யிருப்பையாயின் உன்னை நோக்கி உன் வழிப்பட்டிருக்கும் குடிகளெல்லாம் சகல செல்வத்தையும் பெற்றுய்யும். நீ அவை யிழந்திருப்பையாயின் அக்குடிகளெல்லாம் எவ்வித்தினும் துன்பமுற்றழியும். ஆகலான் நாங்கள் உனக்குச் சொல்லப்போவது இப்பொழுது உன்செவிக்குப் பொறாததாய் கைப்பதாயிருந்தபோதினும் அதனைச் சொல்லுதலே எங்கள் கடமை. அதனை விரும்பிச் செவி பொறுத்துக் கேட்பதுவே உனது கடமை. ஆனால் உலக வழக்கு எத்தன்மைத்தெனின், பின் க்ஷேமத்தைத் தருவது எதுவோ அது முன்கேட்பதற்கு அப்பிரியமாயும் பின்கேட்டைத் தருவது எதுவோ அது முன்கேட்பதற்குப் பிரியமாயு மிருப்பது. எதுபோலெனின், பின் தேகத்துக்கு ஆரோக்கியஞ் செய்வதாகிய ஔஷதம் முன் உண்பதற்குப் பிரியமற்றும், பின் ரோகஞ் செய்வதாகிய ஆகாராதிகள் முன் உண்பதற்குப் பிரியமுற்றும் இருப்பக் காண்கின்றோமல்லவா? அதுபோலவே பின் செல்வந்தருவதாகிய சத்தியத்தை முன்னே கொள்ளுவதற்கு அப்பிரியமும், பின்னே கேடுதருவதாகிய அசத்தியத்தை முன்னேகொள்ளுவதற்குப் பிரியமு முடையராயிருக்கின்றனர். சத்தியத்தைக் கேட்கின்றவனும் சொல்லுகின்றவனும் நினைக்கின்றவனும் கஷ்டம்! கஷ்டம்!! அசத்தியத்தைக் கேட்கின்றவரும் சொல்லுகின்றவரும் நினைக்கின்றவருமே எங்குமுள்ளார். உன்னுடைய நினைவும் நன்னெறிப் படாத தீநெறியிற்றலைப்பட்டு அசத்தியத்தில் பிரவேசிக்கமுயலுகின்றது. இச்சமயத்தில் நாங்களென்னவென்று சொல்லுவோம். இவ்வுலகமன்றி எவ்வுலகிலும் வரும் நன்மைதீமைகளை யாவரறிவாரென்றனர்.

மகிஷாசுரன் அந்தமந்திரிகளைப்பார்த்து நீங்களனைவரும் ஒன்றாகக்கூடி ஒருசொல்லாய்ச் சொல்லுவதில் எனக்கு ஒன்றும் நிச்சயிக்கக் கூடவில்லை. தனித்தனியே அவரவர் அபிப்பிராயங்களைச் சொல்லி வருவீர்களாயின் நான் அவைகளையெல்லாம் யோசித்துப் பின்னர் பண்டிதர்களாகிய பெரியோருடைய நீதிகளையும் அறிந்து அதன்பின்னர் என்னறிவால் எதுசெய்யத்தக்கதென்று துணியப்படுமோ

அதனை யுங்கட்குத் தெரிவிக்கின்றேன். மேற்செய்யத்தக்கது எதுவோ அதனைச்செய்மி னென்றனன்.

மந்திரிகளுள் ஒருவனாகிய விரூபாக்ஷ னென்பவன் அரசன் வார்த்தையைக் கேட்டு, அந்தோ! நமதரசன் மிகவுங் கவலை கொண்டிருக்கின்றவனாகக் காணப்படுகிறபடியால் நாமவனைச் சந்தோஷிக்கும்படியாகச் செய்வதுவே முதற்காரிய மென்றெண்ணி அரசனே! இப்போது வந்திருக்கிற ஸ்திரீயானவள் யார்? அவள் மஹாகர்வம் பிடித்தவளாகக் காணப்படுகின்றாள். அவள் உன்னுடைய அருமை பெருமைகளை யறியாது வாயில் வந்தபடி உளறுகின்றாள். சிறுபிள்ளைகளுக்குப் பயமுறுத்த ஓர் பூச்சுக் காட்டுவதுபோல் உன்னை மருட்டுகின்றாள். நீ அதனை மருட்சி யென்றெண்ணாது பூச்சுக்காட்டுவதைக் கொண்டே பயப்படுகின்ற இளஞ்சிறார்போல் பயப்படுகின்றனை இதுவென்னை! ஸ்திரீகளுடைய பொய்யையும் சாகசங்களையும் பார்வை முதலியவற்றால் செய்யத்தக்க சேஷ்டைகளையும் அறிந்தவன் அவர்கட்குச் சிறிதும் பயப்படான். நீ அவையொன்றும் அறிந்திலைபோலும். அறிந்திருப்பையாயின் நமது மந்திரியினிடத்தில் அவள் சொல்லி யனுப்பிய வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்திலேயே இப்படி திகிற்படுவையா! நீ மூன்றுலகத்தையும் வெற்றி கொண்டு இப்பொழுது ஒரு ஸ்திரீக்குப் பயந்தவனாய்த் தீனதிசையையடைந்து யோசனைக்குவந்தது வீரபுருஷனாகிய உனக்குக் கீர்த்தியை விளைவிக்குமா? உனக்கிது பெரியதோ ரபகீர்த்தியாகும்.

இனி யான்சொல்வதைக் கேளும்; நான் ஒருவனாகவே அஸ்திரசஸ்திரங்களோடும் சதுரங்கசேனைகளோடும் அந்த மதகர்வமுடைய ஸ்திரீயினிடத்திற்போய் என்னுடைய போர்த்திறத்தைக்காட்டி அவள் கோபங்கொண்டிருப்பவள் போலும் வீரபராக்கிரமமுடையவள் போலும் காட்டுகின்ற அவளது சேஷ்டைகளையெல்லாம் அடக்கித் தன்னுயிர்பிழைத்தாற் போதுமென்று எண்ணும்படியாகச் செய்கின்றேன். அவள் எங்கே இறந்து போவாளோவென்று நீ மாத்திரம் பயப்படப்போகின்றாய். நீ பயப்படுவாயென்று யுத்தமுகமாகப் போகாமல் முன்போனவன் போல் நானவளிடத்தில் இதமுகமாய்ப்போகமாட்டேன். முன் இதமாய்ப் போனபடியினாலன்றோ அவள் இவ்வளவு அகங்காரங்கொள்ளுவதற் கிடமாயிற்று? நானவளை நாகபாசத்தாற்கட்டி உன் சமீபத்திற்கொண்டு வந்த விடுகிறேன். என்சாமர்த்தியத்தைப்பாரும். நீர் அவளை ஓரடிமையாள்போல் ஆளவல்லவனாவாய். இதுவே என்னுடைய அபிப்பிராயமென்றான்.

ஓ பூபதி! விரூபாக்ஷனென்னு மந்திரி சொல்லியவுடன் தூர்த்தரனென்கிற மந்திரமகிஷனைப்பார்த்துச் சொல்லத் தொடங்கினன்.

ஓ அசுரேந்திரனே! ஸ்திரீகளிடத்தில் இதத்தைக்காட்டலாகா தென்று விரூபாக்ஷன் சொல்லியது மெய்ம்மையே. ஆயினும் நானொரு தருமஞ்சொல்லுகிறேன். சிறிது கேட்பாயாக. சவுந்தரியாதி விசேஷங்களில் சிறிதுங்குறைவில்லாத அந்த ஸ்திரீ அதிககாமமுடை யவளென்று அவள் சொல்லிய சொல்லால் நினைக்கின்றேன். உன்னிடத்தில் யுத்தத்தையுத்தேசித்து வந்திருப்பாளானால் பரிவாரங்களுடன் வந்திருக்கவேண்டும். தனியே வந்திருக்கின்றபடியால் உன்னைத் தன்சுவாதீனமாக ஆக்கிக் கொள்வதற்கென்றே நினைக்க வேண்டும். காமத்திற்சிறந்த மங்கையருடைய சொற்களில் அடங்கியிருக்கும் பாவனைகள் அநேகமுள. அவையறியவல்லவர் காமநூல் வல்லவரேயன்றி ஏனையோரல்லர். அந்தஸ்திரீயினுடைய விதண்டா வார்த்தைகளி லெனக்கு அப்படியே தோன்றுகின்றன.

“யுத்தமுகத்தில் உன்னைப்பாணங்களால் கொல்வேன்” என்றதை யோசித்துப்பார்த்தால் காமரசமாகவே இருக்கின்றது. இப்பொழுது உன்னிடத்தில் ஏதேனும் போர்செய்ததுண்டோ? இல்லையே! அவள் போர்செய்யாமல் உன்னுடைய பராக்கிரமங்களெல்லாம் வாங்கியிருக்கின்றாளா? இல்லையா? இது அவள் யுத்தஞ்செய்யாமல் செய்தயுத்தமல்லவா! அவள்சொல்லிய “பாண” மென்ற சொல்லில் அடங்கியபொருள் காமபாணமென்றும் அப்பாணமாவது தனது கடைநோக்கமென்றும் ஆம். “உன்னைக் கொல்பேன்” என்றது என்னுடைய கடைநோக்கமாகிய பார்வையால் அவன் காமாந்தகனாய் உயிர்விடுந் தன்மையாகச்செய்வே னென்றும், என்னுடைய பார்வையாகிய பாணத்தால் அவன் வருந்தத்தக்கவனேயன்றி ஏனையோர் விடும் பாணங்களால் வரும் வீரங்கொள்ளத்தக்கவனன் றென்றும், அப்பாணங்களும் அவனைக் கொல்லும் வன்மையுடையன வல்லவென்றும், அவையெல்லாம் அவனுக்குப் புஷ்பாஞ்சலி போலாகு மென்றுமாம்.

கடைநோக்கத்தைப் பாணமென்று யான் உலமித்துக் கூறுவதாக நினையற்க. “பெண் தன்மையையுடைய இப்பேதையாகிய பெண்ணுக் குளவாய கண்கள் தம்மைக் கண்டாருயிருண்ணுந் தோற்றத்துடனே மாறுபட்டிருந்தன.” மாறுபட்டிருத்தலாவது - பேதமைத் தன்மையுடையாட்குள்ள கண்கள் பேதமையைக் காட்டாது தன்னைப் பார்க்கின்றவ ருயிரைக் கவர்ந்து துன்பப்படுத்திக் கொடுமையைக்

காட்டுகின்றபடியால் மாறுபட்டிருந்தனவென்றும், இந்தக் கண்ணினுடைய கொடுமையை அதனிடத்துப் பிரியாநட்பினையுடைய புருவங்களறிந்து அப்பார்வையை வளைந்து மறைத்து விலக்கினவாயின் அப்புருவங்களைக் கடந்து இவள் கண்கள் எனக்கு நடுங்குந் துயரைச் செய்யாயென்று புருவங்களைச் சற்றுவெறுத்தும், என்னை வருத்துதலுடைமையாற் கூற்றமோ வென்றும், *காம முறை கூறுமிடங்களிற் வருவனவற்றாற் காண்க.

"அவனுக்கு ஸ்திரீயால் மரணமென்ற விதிப்படி நானே வந்திருக்கின்றேன்" என்றது திருமால்முதலிய தேவரிடத்தில் எனது கட்பார்வை போன்ற பாணங்கள் உளவாயின் இவனை அவற்றால் கொல்லவல்லவராவர். அவரிடத்தில் அஃதின்மையால் எங்ஙனங் கொல்லவல்லவ ராவரென்றும், அவர்போலவே ஏனைய ஸ்திரீகளிட த்தினும் இல்லை யென்பது நிச்சயமாதலால் நானே என்றுமாம்.

'அவன் பிராணனை வாங்குனேன்' என்றது பிராணனென்பது வீரியம் அந்தவீரியம் என்னைக் கண்டபொழுதே அவனுக்கு வெளிப் படுமென்றும், அது வெளிப்பட்ட பொழுதே வேறொன்றும் அவன் செய்யவறியாது யான் எதைச் செய்யும்படி விதிக்கின்றேனோ அவ்விதியைக் கடவாமற் செய்வானென்றும், அந்தச் சமயத்தில் ஏழையர்களாகிய தேவர்களுடைய குறைபாட்டைப் போக்கடிப்பே னென்றுமாம்.

"கடா" என்றது தன்னுடைய வரவையும் தன்னுடைய ரூபலா வண்ணியங்களையும் இவன் கேட்டும் கேட்டுக்காமங்கொண்டும் அந்த ரசத்தை அந்தக்ஷணமே வந்து தன்னிடத்தில் அனுபவிப்பதற் கறியாமல் கடாவைப்போ லிருக்கின்றானேயென்றும், சந்திசெய்ய வந்த வனாயிருக்கின்ற இந்த மந்திரியும் நம்முடைய வார்த்தையில் அறிய வேண்டிய காமரசத்தை யறிந்து அரசனை யழைத்து வந்து விடாமல் அழைத்துவரவா அரசனை? என்று கேட்கின்றானே, வீணான வார்த்தைகளுக் கிடஞ்செய்துகொண்டிருக்கின்றானே இவனும் ஓர் கடா எனப் பொருள்கொண்டு நீயுங் கடாவென்றும், உங்களிருவரையுங் கூட்டிய விதியையும் ஊழையும் மிகவும் வியக்கின்றே னென்றதுமாம்.

இவ்வண்ணம் அவள் சொல்லிவிட்ட சொற்களுக்கெல்லாம் காமரசமாகிய காரணார்த்தங்களை ஆராய்ந்தறியும் வகையறியாமல் விபரீதமான பாவார்த்தங்கள் கொண்டு அம்மந்திரிசொன்னது காம நூலாராய்ச்சியில்லாத குறைபாடென்றே கொள்ளவேண்டும்.

* இவற்றை "கண்டா ருயிருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப்-பேதைக் கமர்த்தன கண்" எனவும், - "கொடும்புருவங் கோடா மறைப்பி னடுங்கவிஞர் - செய்யல மன்னிவள் கண்" எனவும் "கூற்றமோ" எனவும் வருவன வற்றாற் காண்க.

அவள் சொல்லியவெல்லாம் விருப்பமான பிரியசூசனை, நீங்கள் கொண்டதெல்லாம் வெறுப்பான அப்பிரியசூசனை. புருடனை விரும்பிய ஒருஸ்திரீ அப்புருட னிடத்திலுள்ள விருப்பத்தைப்பிற ரறிய விளம்புவாளாயின் அவர்க்கு வெளிப்படையாக ஒரு நாளுங் காட்டாமல் வேண்டாமையாகிய விரசமான வார்த்தைகளையே பெரும்பாலுங் காட்டிக்கொண்டேவருவாள். அவளப்படி பலமுறையுங் காட்டுவதனாலேயே அப்புருடனிடத்தில் பற்றுடையா ளென்பதை யறியவேண்டுமாறுபோல இவள் கூறுவனவெல்லாம் உம்மிடத்தில் பற்றுடைமையைக் காட்டுகின்றனவென் றறிதல்வேண்டும்.

ஓ அரசனே! அவள் முன்னர் விரூபாக்ஷனைக் கடிந்து நீ நிற்க வேண்டாம் போ போவென்று ஓட்டியதும், இவன் நம்முடைய வார்த்தையிலுள்ள காமரசத்தையறியாத அற்பனாயிருக்கின்றான். ஆகையால் இவன் நாம் சொல்லியபடியே அவனுக்குச் சொல்லும் பொழுது அவனாவது நமது பிரியரசத்தையறிந்து வருகின்றானா இல்லையா பார்ப்போமென்று உன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

இனியாவது ஓ மஹாராஜனே! அவள் சொல்லெல்லாம் அபசவ்யமான பொருளுடையனவென்றறிந்து அவள் இப்பொழுது கொண்டிருக்குங் கோபமும் அகங்காரமு மடங்குமாறு காமரசமா யிருக்கின்ற சாமத்தினாலும், அதற்குரிய தானத்தினாலும், அவளை வசப்படுத்தி உன்னிடம் வரும்படியான சாகசமான காரியத்தைச் செய்ய வேண்டும். அது எனக்குத் தெரியும். இனிவேறு பலபேசுவதனாற் பயனென்னை! நான் சொன்னபடியே சாம தானங்களால் அவளை வசப்படுத்தி உன்னிடத்திற் கொண்டுவந்து விடுகிறேன். வந்தபின்னர் வீரபராக்கிரமத்தைக் காட்டாமல் மன்மதன் நீதானென் றெண்ணும்படியான காமப் பிரபாவத்தைக் காட்டுவையாயின் அவள் உனக்குவேலைக்காரியைப்போ லாய்விடுவாள். இதிற் சந்தேகமில்லை. இவைதான் என்னுடைய அபிப்பிராயமென்றான்.

அவன் சொல்லி முடிந்தவுடன் தாம்பரனென்னு மந்திரி சொல்லத் தொடங்கினான். ஓ அரசனே! நாம்படைத்திருக்குங் கண்கள் பிறரது உள்ளக்கருத்தைக் குறிப்பானுணரத் துணைக்காரணமா யுள்ளனவேயன்றி வெளியே சாதாரணமாயுள்ள பொருளை யறிதற்கல்ல. அத்துணைச் சிறப்பாய் கண்களைக்கொண்டு பிறர்குறிப்பினை யுணரமாட்டாது தம்மனத்துட்டோன்றும் கருத்தையே அவர்மனத்துள்ள கருத்தாகக்கொள்ளுவதற்கா அங்கங்களுட்சிறந்த கண்களைப்

படைத்தது! * பிறர்மனக்குறிப்பறியாத கண்களாற் பயனென்னை! அந்தோ! முன் சொன்ன மந்திரி அவளது உருவக் குறிப்புக்குரிய சொற்களையும், இரண்டாவது சொன்னமந்திரி சொற்குறிப்புக்குரிய சொற்களையும் வழங்கினரேயன்றி அவளது உள்ளத்தினிகழுங் குறிப்பு இவ்வண்ணமென்று அறிந்து கூறினாரில்லை.

எனக்குநிகழ்ந்த சில ஏதுக்களான் அவள் வந்திருக்குங் குறிப்பை யுணர்ந்திருக்கின்றேன், அது தருமத்தோடொத்ததாயுமிருக்கின்றது. அந்த ஏதுக்களையும் அவற்றைக்கொண்டு அறிதற்பாலனவாய குறிப்புகளையும் எடுத்துக் கூறுகிறேன். நீ அவற்றையே ரசமுடையனவாகக் கொள்ளல்வேண்டும்.

அந்தஸ்திரீ காமமுடையவளுமல்லள், உங்களிடத்தில் எந்த விதமான அபேக்ஷையுடையவளுமல்லள், சாஸ்திரதருமங்களெல்லாம் நன்றாயுணர்ந்தவள், காமரசத்தையுட்கொண்ட சொற்கள் அவளொன்றுஞ்சொன்னவளல்லள், அவளுடைய சவுந்தரியங்களை யாவது சாமர்த்தியகுணநயவிசேஷங்களையாவது அவள் தாங்கியிருக்கும படைக்கலங்களின் பராக்கிரமங்களையாவது பார்ப்பாரும் சொல்வாரும் பரிப்பாரும் இங்குயாருளார். மூன்றுலகினுமில்லை. இவ்வண்ணம் ஒருவருள்ளாரென்று இதுகாறுங் கேட்டதுமில்லை கண்டதுமில்லை. அவளுடைய சரித்திரங்கள் வாங்மனாதீதமாயுள்ளது. அவள் நம்மை நோக்கிவந்தது விபரீத காலத்துக் கேதுவென் றெண்ணத் தக்கதே யன்றி வேறன்று. நான் இராத்திரி உதயகாலத்தில் கிருகத்தின் முன்புறத்தினடுவில் ஒருஸ்திரீயானவள் ரக்தவஸ்திரந் தரித்துக் கொண்டு நின்றழுதுகொண்டிருக்கக் கனவுகண்டேன். இந்தக் கனா துர்நிமித்தமாயிருப்பதால் துர்மரணமுண்டாமென்பது நிச்சயம். விநாசகாலத்துக்குத்தக்க விபரீதபுத்தியும் உனக்குண்டாயிருக்கின்றது. நான் கனவுக்கண்டு விழித்தவுடன் வீடுகடோறும்பக்ஷிகள் கோரமாகவொலித்தன. இது போலவே அநேகவிதமான உற்பாதங்கள் தோன்றின. இந்தவுற்பாதங்கட்குத்தக்கபடி வந்தஸ்திரீயும் யுத்தத்துக்கே யழைக்கின்றாள். அவள் மாநுடஸ்திரீயுமல்ல, கந்தர்வஸ்திரீயுமல்ல, அசுரஸ்திரீயுமல்ல, இவர்களில் ஒருத்தியுமாகாத அவள் தேவர்களால் நியமிக்கப்பட்ட மாயாரூபிணி. அவள் உன்னால் கொல்லப்படமாட்டாள்.

உனக்கு மரணகாலம் சமீபித்து விட்டபடியால் யுத்தமன்றி நீ சொல்மலுவதாகிய சாமபேததானங்களொன்றும் நடவா? இனி வேறே

* "குறிப்பிற் குறிப்புணராவாயினுறுப்பினுளென்ன பயத்தவோ கண்" எனுந் திருக்குறளாற் காண்க.

எண்ணுவதனாற் பயனென்னை! எதுநடக்கவேண்டுமோ அது நடக்கப்போகிறது. அதனைத்தடுக்க ஒருவராலுமுடையாது. அது சுபமானதோ அசுபமானதோ ஊழின்பாலதேயன்றி மற்றையாவர் பாலுமன்று. பண்டிதராயுள்ளார் இவ்வுண்மையை யுணர்ந்து சுபத்தையும் விரும்பாது அசுபத்தையும் வெறுக்காது வருவதாகிய அவ்விரண்டையும் மனத்திற் கொள்ளாது அனுபவிப்பர். பிழைத்திருப்பதைப்பற்றியும் மரணமடைவதைப்பற்றியும் யார்யோசனை செய்யக்கூடும். அதனை மாற்றத்தக்கவர் மூன்றுலகினுமில்லை. பலபேசுவதனாற்பயனென்! யுத்தத்துக்குப் புறப்படவேண்டு மென்பது என்னுடைய அபிப்பிராயமென்றான்.

தாம்பரன் சொல்லிய உண்மைகளைக்கேட்ட மகிஷன் ஏனையோரை அம்பிகையினிடத்தில் விடுவதற் கெண்ணாமல் அவனையே விடுப்பவெண்ணி ஓ தாம்பிரனே! நீயே அந்த சுந்தரஸ்திரீயினிடத்திற்சென்று நீ யோசித்தவண்ணமே யுத்தத்தை நடத்தி அவளை என்னிடம் கொண்டுவருவாய். என்னிடம் வருவதற்கிசையாமல் யுத்தத்தையே மேற்கொண்டிருப்பாளாயின் அப்பொழுது கொல்லத்துணிவாய். நான் மன்மதனுடைய வீரப்போரில் தலைப்பட்டுள்ளேனாகையால் அவளைக்கொல்ல எனக்கு மனமில்லை. எனது அவாவெல்லாம் அவளைப்பார்க்கவேண்டு மென்பதே, யுத்தத்துக்குரிய போர்வீரத்தையும், காமத்துக்குரிய சோகவீரத்தையும் நீ அறிந்தவன். போர்வீரங்கொண்டவன் உயிரிழக்கான் என்பதும், சோக வீரங்கொண்டவன் உயிரிழப்பான் என்பதும் நீ அறிந்தவன். உயிரிழக்க வந்திருக்கும் எனது சோக வீரத்தைத்தணியச்செய்து என்னைக்காத்தல் உனதுகடமை. எந்தவித வுபாயத்தினாலாவது நானவளைப் பார்க்கும்படிச் செய்யவேண்டும்.

இனி நீ காலத்தைப்போக்காமல் அவளிடத்திற்சென்று எனது வேண்டுகோளுக் கிடந்தரும் பலவகையான வார்த்தைகளைப்பேசி அவள் அவ்வார்த்தைகளைக்கேட்டுச் சொல்லும் சொற்களை யாராய்ந்து அவளது மனோநிச்சயம் இதுவெனத் தெரிந்துகொள்வாய். நீ அவளிட மறியவேண்டியவை எவையெனின், அவள் யாது நிமித்தமாய் வந்தாள்? காமத்தையெண்ணி வந்தவளா? போரையெண்ணி வந்தவளா? தானே வந்தவளா? பிறரால் பிரேரேபிக்கப்பட்டு வந்தவளா? மாயாசொரூபிணியா? உண்மையானவளா? இவற்றில் யாதானுமொன்றைத் தெரிந்துகொள்வோமாயின் பிறகு அதுகொண்டே நாம் அவளெண்ண முற்றுமறிந்து போரையாவது சந்தியையாவது நாம்செய்ய முந்தலாம்.

ஆனால் நீ வார்த்தையாடும்போது தயையில்லாத வார்த்தையையாவது மருளும்படியான காரியத்தையாவது சொல்லவும் வேண்டாஞ் செய்யவும் வேண்டாம். அவள் மனதில் என்னவிதமான அபிப்பிராயங் கொண்டிருக்கிறாளோ அவ்வபிப்பிராயப்படியே நாம் செய்யவேண்டு மென்றனன். மகிஷனுடைய வார்த்தையைக்கேட்ட மந்திரி அவனை நமஸ்காரஞ் செய்து சேனைகளோடு பிரயாணப்பட்டுப் போகும்போது மார்க்கத்தில் யமபுரஞ் சேரத்தக்க பல துற்சகுனங்கள் நிகழ்வதைக் கண்டு இதுவென்ன ஆச்சரியமென்று பயந்து தேவியிருக்குமிடம் போய்ச் சேர்ந்து சிம்ஹவாகனத்தி லெழுந்தருளினவளாயும், அநேகவிதமான தெய்வப்படைகளைத் திருக்கரங்களிற் றாங்கினவளாயும், தேவர்களாற்றுதிக்கப்பட்டவளாயும் இருக்கின்ற தேவியைக்கண்டு அரசன் சொல்லியபடி இவளிடத்தில் வார்த்தையாடிய பின்னரா அவளபிப்பிராயந் தெரிந்துகொள்ள வேண்டும்? இவளைக்கண்டபொழுதே விளங்கி விட்டது. பராக்கிரமத்திற் சிறந்தவளாயும் அதனையே மேற்கொண்டிருப்பவளாயுங் காணப்படுகின்ற இவளா மகிஷனாகிய நமது அரசனை யொருபொருளாகமதித்து அவன் மேலாசைப்படுவாள்! அன்றியும் தெய்வாம் சத்திற்சிறந்த அழகைப்படைத்தவளா விலங்கினத்திற்கடைப் பட்ட மகிஷனை ஒரழகுடையவனாக மதிப்பாள்! அந்தோ! அந்தோ! வென்றஞ்சி இனி இவளிடத்தி வீணானவார்த்தைகளைப் பேசுவதினும் அரசனபிப்பிராயத்தை இவளுக்குத் தெரிவிப்பதே காரியமென்றெண்ணி அம்பிகையைச்சமீபித்து, ஓ வீரசிகா மணியே! அசுரபதியாயும் அகண்ட சாம்பிராஜ்யமுடையவனாயும் இருக்கின்ற எங்களரசன் அமரர்களிடத்தில் சமரைவிரும்பினான். உன்னிடத்தில் ☆பாணிக்கிரகணத்தை விரும்பி யிருக்கின்றான். அப்படிச்செய்தது உன்னுடைய அழகொன்றேயாம். ஓபேரழகியே! நீயும் அவன்பால் யுத்தத்தை விரும்பாது அவனது புஜத்தை யணையவிரும்புவாய். அன்றியும் நீயோ போருக்கேற்றவன்மையான சரீரத்தைப்படைக்காது மென்மையான சரீரத்தைப்படைத்திருக்கின்றாய். இதுபடைத்ததற்கு எங்களரசனைப் பதியாகக்கொண்டு அற்புதமாகிய சிருங்கார வனங்களில் உல்லாசமாய் உலாவிவருவதுவே உயர்வாகும். மென்மையானசரீரம் படைக்கப்பெற்றதேயன்றி மேன்மையான அழகையும் பெற்றிருக்கின்றாய். அதுபெற்றதற்கு அதனாலடைய வேண்டிய எல்லாச்சுகத்தையும் அடையப்பெறுவதுவே அரியசிறப்பாகும். இங்ஙனமான சுகத்துக்கேதுவான சரீரத்தையும் அழகையும்பெற்று பெற்றதற்குரிய பிரயோசனமான காரியங்களை யெண்ணாது அப்பிரயோசனமான இந்தத்துக்கத்துக்கேதுவான

☆ பாணிகிரகணம் - விவாகம்

யுத்தத்தைவிரும்பியது நீ செய்தபாவமோ எங்களரசன் செய்த தவுர்ப்பாக்கியமோ அறியேன். அந்தோ! மலர்போன்ற கைகளில் அரும்பும் மலர்ச்செண்டையுதாங்காது இரும்பினாலாகிய ஆயுதங்களைத் தாங்கப்பெற்றது என்னகொடுமையோ! வீரத்திற்சிறந்த எவரையும் வெல்லுதற்கு புருவமாகிய இரண்டு விற்களும் கண்களாகிய இரண்டுகணைகளும் அங்கத்திற்றானே அமைந்துகிடப்ப வீணாக ஒரு வில்லையும் ஒரு பாணத்தையும் தாங்கியிருப்பது என்ன கருதியோ! புருவங்களும் கண்களும் செய்யாதபோரை இந்த வில்லுங்கணையும் செய்யப்பெறுமோ! இதுவிந்தையினும்விந்தை! இதுபோலும் நிஷ் பிரயோசனமானசெயல் வேறொன்றுங்கிடையாது.

பிரபஞ்ச காமத்துக் கேதுவாயுள்ள சரீரசுகத்தைப் பெற்றவர்கள் அதற்குரிய இன்பத்தை நாடி அதற்கேற்றவரை யணைந்து ஆனந்த முற்றிருப்பதை விட்டு அதற்கு மாறான போரை விரும்பி சுகசரீரத்தைப் புண்படுத்தித் துக்கமடையச் செய்வது போலும் அறிவற்ற செயல் ஒன்றுங் கிடையாது. புத்தியிற் சிறந்த அறிவுடையார் ஒருநாளும் யுத்தத்துக் கிடங்கொடார். அறிவிலிகளும் உலோபகுண முடையவர்களுமே சுகானுபவம் அனுபவிப்பதற்கே துவாகிய செயல்களில் மனதைச் செலுத்தாது துக்கத்துக்கேதுவாகிய செயல்களில் மனதைச் செலுத்துவார்கள்.

நீங்களிருவரும் அத்தகையரல்லரே! அந்தோ உங்களுக்கமைந் துள்ள இளமை நலத்தைப் பாழ்படுத்திக் கொள்ளவேண்டாம். ஓ மெல்லிய திருமேனி யுடையாளே! நீ போரை விரும்பியதுபோலும் எங்களரசனும் விரும்புவானாயின் அவன் விடும் பாணம் உன்மேனி தாங்கப் பெறுமா! உன் மேனியைப் பார்க்கப் பெறுவோர் எவ்வளவு வன்னெஞ்சுடைய ராயினும் பாணத்தை விட்டு அதனைக்கெடுக்க முயல்வார்களா? ஒருபொழுதும் எண்ணவுமெண்ணார். துணிய வுந்துணியார். ஓ தெய்வநாயகமே! உன்னுடைய சரீரசவுந்தரியாதி விசேஷணங்களைக் கேட்ட அக்கணத்திலேயே எங்களரசன் உன்னிடத்தில் போரைவிரும்பாது பாணிக்கிரகணத்தை விரும்பினானே அவனறிவின் விசேஷத்தை நானென்ன வென்று சொல்லுவேன். அவனெண்ணியவாறே நீ அனுக்கிரகஞ் செய்வாய். தேவதாபூஜ்யனான மகிஷாசுரனுக்கு நீ மனைக்கிழவியாவாய். அது உனக்குச் சிறுமையன்று பெருமையே! உன் மனோரதங்க ளெல்லாம் மிகவெளிதாய் நிறைவேறும். உன்னை யாவரும் மகிஷனுக்குரிய மஹாராணி என்று மதிப்பார். அதைவிட நீ பெறத்தக்கது இவ்வுலகில் வேறொன்றுண்டோ. இதில் சந்தேகங் கொள்ளவேண்டாம்.

ஓ பெண்ணரசியே! என்னுடைய வார்த்தையை யங்கீகரிப்பாய். நீ என்றும் நீங்காத சுகத்தையடைய விரும்புவாய். இனியுத்தஞ் செய்வதைவெறுத்து விடுவாய். யுத்தத்தை வெறுக்காது விரும்புவையாயின் உனக்குக் கஷ்டமாகிய தோல்வி யுண்டாகுமேயன்றிச் சுகமாகிய வெற்றியுண்டாகமாட்டாது. சொன்னேன் சொன்னேன். இப்போது எங்களரசனிடத்தில் நீ எண்ணியபோரில் தோல்வியுண்டாவது பொய். எங்களரசன் உன்னிடத்தில் எண்ணிய போரில் உனக்குவெற்றியுண்டாவதுமெய். இதனை எண்ணிப்பார்ப்பாய்.

ஓ சுந்தரீ! நீ அரசநீதியையும் அரசச்செல்வத்தையும் அறிந்த வளாயுங்காண்கின்றபடியால் யான்வேண்டியவாறு எங்களரசனுக்கு மணவாட்டியாய்ப் பல்லாண்டு பல்லாண்டாய் வாழக்கடவாய். உனக்குப்புத்திர சம்பத்தும் உண்டாகும். அவனுக்கு இந்த ராஜ்யசம்பத்தும் உண்டாகும். ஆகலான் நீ இந்த யவ்வனத்தில் எங்களரசனோடு சரச சல்லாபத்துடன் கிரீடித்திருந்துப் பின் புத்திரசம்பத்தையுங் கண்டுமகிழ்ந்து எந்நாளுஞ் சுகமாக வாழக்கடவாயென்றனன்.

பதினொன்றாம் அத்தியாயம்

தேவீம்பிரதிதாம்ர தூதபிரேஷணம் முற்றிற்று.

———

சுலோகம் - (சாள.)

ஆக அத்தியாயம் கக - க்குச் சுலோகம் (சாருக)

———

உ

கந்தர்ப்ப வித்யை நம:

———

பன்னிரண்டாம் அத்தியாயம்

தேவ்யாசஹ தாம்பராசம்வாதம்.

———

ஓ அரசனே! உலகமாதாவாகிய தேவியானவள் தாம்பரனென் றுமமைச்சன் சொல்லிவந்த முறைபிறழ்ந்த வார்த்தைகளைக் கேட்டுச் சிறிதுங் கோபங்கொள்ளாது புன்னகை செய்து அவனைப் பார்த்து

மேகங் கர்ஜனை செய்வதுபோலும் அடாமூடா! என்றதட்டி நீ கூறி வந்ததெல்லாம் ஞான சூனியனாயும் காமாதுரனாயும் அற்பபுத்தி யுடையவனாயும் இப்பொழுதே மரணமடைவதற் கருகனாயுமுள்ள உன்னரசனபிப்பிராய மாதலால் உன்னைக் கோபிப்பதிற் பயனென்னை? இனி யான் சொல்வதை மகிஷனிடத்திற் சொல்வாயாக.

என்னையெனின் உன்னுடைய தாய் சாக்கிரதை என்பதையும் அசூயை என்பதையும் சிறிது முணராத சரீரத்தைப் படைத்த மகிஷி, அவளுண்ணுமுணவோ புல்முதலிய திரணங்கள் நான் உன் தாயைப் போன்ற பெண்ணினத்தைச் சேர்ந்தவளா? அன்றியும் முன்னே எனக்கு நீண்ட கொம்புகளிருக்கின்றனவா? பின்னே நீண்டு வீழ்ந்து கிடக்கும் வாலிருக்கின்றதா? பருத்த வயறிருக்கின்றதா? இந்த லக்ஷணங்களில்லாத என்னை நீ எவ்வண்ணம் விரும்பினாய்? தேவர்களிற் சிறந்த உருத்திர மூர்த்தியையும், பிரமா விஷ்ணு வருணன் குபேரன் அக்னி என்கிற இவர்களையும் அபேக்ஷிக்க மாட்டாத நானா மிருகவடிவனான உன்னை நாயனாகக் கொள்ளுவேன். அடாமதிகேடா! உன்னிடத்தில் என்ன குணமிருக்கின்றது? உன்னை நான் அபேக்ஷிப்பேனானால் உலகம் பழிக்காதா! நான் உன்னைப்போன்ற ஞானசூனியர்கட்குக் காமத்தை விளைவிக்கின்ற சரீரத்தைப் படைத்தவளாயினும் யாவரையும் விரும்பத்தக்கதாக காம குணத்தை யுடையவளாவனா! கற்பிற்சிறந்த நங்கை தனக்கு வாய்க்கப்பெற்ற உருவமுதலிய எல்லாவற்றானும் அடையத்தகும் இன்பம் தனது நாயனாகக் கொள்வாளே யல்லாமல் புணர்ச்சி யின்பம் வேண்டி யாவரையும் விரும்புவாளா! கற்பிலக்கணஞ் சிறிதுமுணராத கயவலனே! நான் நாயகனில்லாதவளல்லன். அவனை நீ யறியாய். அவன் தன்மையைக் கேட்பாய். பிரபு வென்கிற பட்டத்துக் குரியவனாயும் சர்வ கர்த்தாவாயும் சர்வ சாக்ஷியாயும் தனக்கு மேலொரு கடவுளை யறியாதவனாயும் ஆசை யற்றவனாயும் எக்காலத்தும் அழிவில்லாதவனாயும் நிர்க்குண நிரஞ்சன நிராமய நிர்விகல்ப நிராஸ்ரயாதி நிஷ்களசொரூபகுணங்களுடையவனாயும் சர்வபரிபூரண சர்வசாக்ஷித்வாதி பதிலக்ஷணங்களை யுடையவனாயும் நமக்கிதுவுளது நமக்கிது இல்லாதது என்றெண்ணுதலாகிய பசுலக்ஷணங்களை இல்லாதவனாயும் எல்லாவிடத்தையும் தன்னிடமாகக் கொண்டவனாயும் வேண்டுதல் வேண்டாமைக்கிடனாகிய குறைபாட்டை யில்லாதவனாகியும் தன்னைச் சரணமடைந்தோர்க்கு வேண்டியாங்களிக்கும் நிறைவுடையவனாயும், அந்தராதமாவாய் அவரவர்தொழிலைச் செய்விக்கும் ஆற்றலுடையவனாயும், நானென்கிற அகங்காரத்தைக் கொண்டே நானென்கிற பாசவிலக்கணத்தைக்

கடந்தவனாயும், பசு பாசவிலக்கணங்களைக் கடந்தார்க்கு வேண்டுவனவெல்லாந் தானேமுன்னின் றுபகரிக்கின்றவனாயும், யாவர்க்குங் கடவுளாகியும் உள்ள தன்மையன், அவன் நாமம் யாதெனின் பரசிவன்.

இத்தன்மையனாகிய பரமபதியைப் பதியாகவுடைய யான் உன்னிடத்தில் என்னவிதமான தன்மையைக்கண்டு உன்னை நாயகனாகக் கொள்ளவிரும்புவேன்? இனி நீ எனக்கு நாயகனாக விருக்கவேண்டுமென்கிற வெண்ணத்தை நழுகவிட்டு எனக்கு நாயினுங் கடைப்பட்ட அடிமையாளாகவிருப்பதற்கு எண்ணும் எண்ணத்தை மேற்கொள்வாய். இல்லாவிடின் பகைத்திறத்தைக் கொண்டு யுத்தத்துக்கு வெளிவருவாய். வருவையேயாயின் உன்னையமனுக்கு இரண்டாவது கடாவாகவிருக்க அவனுலகத்துக் கனுப்புவித்தாலும் அனுப்புவிக்கின்றேன். இல்லாவிடின் இங்குள்ள உழவர்களுக் குமுதலைச்செய்யுங் கடாக்களோடு சேர்த்தாலுஞ் சேர்த்துவிகிடுன்றேன். இவ்விரண்டிலொன்று செய்வது நிச்சயம்.

நீ மகிஷமாயிருந்தும் மகிஷனென்று அழைக்கப்படாமல் மகிஷாசுரனென்று அழைக்கப்பட்ட அசுரப்பட்டம் உனக்கு நிலையாக விருக்கவேண்டுமென்கிறபக்ஷம் இருக்கும்பக்ஷத்தில் உன்னினத்த வர்களாகிய அசுரரையெல்லாம் அழைத்துக்கொண்டு இந்தக்ஷணமே பாதாளலோகம் போய்ச்சேரக்கடவாய்.

மகிஷசரீரம் பெற்றதுபோலும் மகிஷபுத்தியையே பெற்றுள்ள ஓ மகிஷனே! என்னை ஆசைப்பட்டனையே எனக்கு நீசமானமானவனா? சமானமான சம்பந்தமிருந்தாலல்லவோ சுகத்தை விளைவிக்கும். அது மாறுபடுமாயின் துக்கத்தை விளைவிக்குமல்லவா? லக்ஷணத்தைப் படைத்திருக்கும் நானெங்கே! அவலக்ஷணத்தைப்படைத்திருக்கும் நீ எங்கே! லக்ஷணத்தோடுங் கூடிய எனக்கும் அவலக்ஷணத்தோடு கூடிய உனக்கும் எவ்வண்ணம் சம்பந்தமுண்டாகும். இந்த அசம்பாவிதமான துராசையை விடுவாயாக.

இந்திரனுக்குரிய யஜ்ஞபாகத்தையும் அவனுடைய சுவர்க்க லோகத்தையும் அவன் வசமாக்கிவிடு. நீ பாதளத்துக்குப்போய்விடு. இவ்வண்ணஞ்செய்வையாயின் நீவாழலாம். இல்லாவிடில்சாகலாம். நானுன்னைக் கொல்வேனென்பது நிச்சயம். நீ என்னைவெல்வா யென்பது அநிச்சயமென்று ஓதாம்பிரனே! நீ போய்ச்சொல்ல வேண்டுமென்று பிரளயகாலத்திலிடிக்கும் இடியைப்போல் பெருந்துவனியோடு கர்ஜித்துக்கூறினாள். அந்தக் கர்ஜனைக்கேட்ட

அமைச்சன்கலங்கி நம்க்கழிவுகாலம் வந்துவிட்டதென்றுபயந்து நமதரசன் உயிருடனிருக்கின்றானோ வில்லையோ வென் றேக்கமுற்றோடிப்போய் அவனிடஞ் சேர்ந்தனன்.

அந்தக் கர்ஜனையினால் அசுரகர்ப்பிணிகளும் அசுரர்களும் கலங்கி இதுவென்னவோசை? யாருடைய ஓசையென்று திகிற்பட்டு அந்நகரத்தைவிட்டுத் திரும்பிப்பாராமல் ஓட்டம் பிடித்தனர். பூமியும் பர்வதங்களு மசைந்துசலித்தன. அச்சமயம் அம்பிகையினது ஊர்தியாகிய சிங்கமுங்கர்ஜித்தது. அந்த கர்ஜனையானது ஓடிப் போகின்றவரை ஓடவொட்டாமறறடுத்தும் இருக்கின்றவரை இருக்க வொட்டாமல் ஓடச்செய்துங்கொன்றன. மகிஷனும் இடிமேற்பேரிடியாயும் ஓசைமேல் பேரோசையாயும் மேன்மேல் வருதலைக்கேட்டு மனத்தின்கண் சிறிது ஐயுரவுற்றுத் தன்னிடத்தில் வந்த வீரனாகிய தாம்பிரனையும் அமைச்சர்களையும் பார்த்து ஓ அமைச்சர்களே! இது வென்னவோசை, இதுவென்ன இடி எனக்குச்செவியும் செவிடுபட்டுப் போகின்றது. தைரியமும் அதைர்யத்தையடைகின்றது. நமது கோட்டைவாசற்கதவை யடைத்துவிடுவோமா? வெளியேயுள்ளவர் உள்ளேவராமலும், உள்ளேயுள்ளவர் வெளியே போகாமலும் செய்வோமா? அன்றி இவ்வளவு கலக்கத்துக் கிடஞ்செய்தவளைக் கொல்வதற்குப் போகலாமா? எனக்குக் கண்ணாயுள்ள அமைச்சர்களே! நீங்கள் எவற்றினு முன்வைத்த காலைப் பின்வாங்காத அறிவிற்சிறந்தவர்கள். அன்றியும் உங்களுக்குரியனவாக! அறநூலிற்கூறி யிருக்கும் குணமுஞ்செயலும் நன்றா யாராய்ந்தறியவல்ல பண்டிதத் திறமையுடையவர்கள்.

என்னையெனின்! "தானெண்ணியதொழில் முடியும் வகையால் அமைச்சியல் நடத்தற்கு ஏதுவாய சொற்களைச் சொல்லவல்லனாத லாகிய சொல்வன்மையும், சொல்வன்மையால் முடியுந்தொழில்கள் அறமும் புகழும் பயந்து நன்றாகவேண்டுதற்கு வேண்டுவனவாகிய வினைத்தூய்மையும், அந்தநற்றொழிலை முடிப்பானுக்கு வேண்டுவதாய் மனத்திண்மை என்னும் வினைத்திட்டமும், மனத்திண்மை கொண்டு செய்யுந் தொழிலில் திறமுடைமையாகிய வினைசெயல் வகையும், அச்செயலின் கண் பொருத்துவித்தல் பிரித்துவித்தலாகிய செயல்களுக்கு எதிரிகளின் குறிப்பறிந்து வகுத்துக் கூறவல்ல தூதனும், கூறியவண்ணம் கூறுவோனாகிய தூதனும் ஆகிய இருவகையினரையும் அவ்வம்முறையறிந்து விடுத்தலாகிய தூதவன்மையினையும், இவ்வன்மை வேந்தனால் விரும்பப்பட்ட பண்புடைமை யாகலான் அப்பண்புடைமை வெளிப்படுதற்கு அரசரைப்

பொருந்தி வாழவேண்டியிருத்தலின் மன்னரைச் சேர்ந்தொழுகலும், அரசரோடு அணுகி வாழுங்கால் அவர்கள் கருதுவனவாகிய செயல்களை அவர் கூறாமலறிதலாகிய குறிப்பறிதலும், அரசன் கூறாமலறிந்த குறிப்பினைத் தான் வெளிப்படுத்துங்கால் அரசன் குறிப்பறிதலேயன்றி சபையாரது குறிப்பறிதலாகிய அவையறிதலும், இருவர் குறிப்பையுமறிந்து சொல்லவேண்டியவற்றைச் சொல்லுங்கால் அதற் கஞ்சாமையாகிய அவை யஞ்சாமையும்? தொழில்செய்யுங்கால் அதற்குவேண்டியகருவிகளும், அதற்கேற்றகாலமும், அதுசெய்யும் வகையும், அவ்வகையில் செய்யப்படும் அரிய தொழில்களும் வாய்ப்பவெண்ணுதலும், எண்ணி அதனைச் செய்யுங்கால் அவையிற்றில் அசைவின்மையும், குடிகாத்தலும், நீதி நூல்களைக் கற்றுச் செய்வன தவிர்வனவறிதலும், அதற்கேற்ற முயற்சியும், அம்முயற்சியுள் பிரிக்கவேண்டினாரைப்பிரித்தலும், தமக்கு வேற்றானவரைக் கொடையாலும் இன்சொற்களாலும் பொருத்தலும், தம்மினின்றும் தம்மவரினின்றும் பிரிந்தவரை மீண்டும் பொருத்த வேண்டிற்பொருத்தலும், ஒருசெய்கை பலவாற்றாற்றோன்றின் அவற்றுள் ஆவன ஆராய்ந்தறிதலும், அதுசெய்யுங்கால்வாய்க்குந் திறனாடிச் செய்தலும், சிலரைப்பிரித்தல் பொருத்தல் செயற்கண் அவர்க் கிதுவே செயற்பாலதென்று துணிவுபிறக்கும்வகை சொல்லுதலும், அரசனாற்செய்யப்படும் அறங்களையறிந்து தனக்கேற்ற கல்வியானிறைந்தமைந்த சொல்லையுடையவனாய் எக்காலத்தும் தொழில்செய்யுந் திறங்களை யறிதலுமாகிய குணங்களையும், நூன்முறையான்வினை செய்யுந்திறங்களை அறிந்தவிடத்தும் அப்பொழுது நடக்கின்ற உலகவியற்கையையறிந்து அதனோடு பொருந்தச்செய்தலும், உலகமுடையை நடத்துங்கால் அக்காலத்துக் கேற்றதை அறிந்து சொன்னவரது அறிவையு மழித்துத் தானும் அறியாத அரசனாயினும் அக்குற்றம் நோக்கி அவனை யொழியாது அவனுக் குறுதியாயின கூறுதலும், ஆகிய செயல்களையும் நன்றாயறிய வல்லவர் களல்லவா?

ஆகையால் நம்முடைய காரியசித்தியின் பொருட்டு இப்பொழுது செய்யத்தக்கது எது? அதனை யெண்ணிச் சொல்லுங்கள். அரசியலுக்கு மந்திராலோசனை முக்கியமானது அதனினும் பெரிதானது ஒன்றுமில்லை. அரசனுக்கு வேண்டிய முதற்காரணம் அதுவே இந்த மந்திராலோசனை செய்யுங்கால் அதனைத் தன்னினத்தவர் அறியச் செய்தலுங் குற்றமாகும். இவ்வரிய மந்திராலோசனை அரசனுக் கிருக்குமாயின் அவன் சுகப்படுவான். அதனை யிழந்தவன் தன்னையும் தன்னரசியலையும் தானே கெடுத்துக்கொண்டவனாவான்.

ஆகையால் ஐஸ்வர்யத்தை யபேக்ஷித்தவன் பண்டிதத்ததிறத்திலும் நல்லொழுக்கத்திலுஞ் சிறந்த மந்திரிகளுக்குச் சுவாதீனனாயிருந்து மந்திராலோசனையில் சிரத்தை யுடையவனாயும் அதுகெடும் விஷயத்தில் பயமுள்ளவனாயு மிருத்தல் வேண்டும். ஓ மந்திரிகளே! என்று அவர்களை மிகவும் புகழ்ந்து நீங்கள் இனி தத்காலமிருக்கும் தேசகால வர்த்தமானங்களை எண்ணிப்பார்த்து நீதிக்கு விரோதமில்லாமலும் நம்மினத்தவருக்கோர் கெடுதியில்லாமலுமா யிருக்கின்ற ஆலோசனையைச் சொல்லுங்கள். நாம் முன்னர் ஒன்று யோசிக்க வேண்டியதாக விருக்கிறது. இப்பொழுது வந்திருக்கின்ற ஸ்திரீயானவள் பலத்திற் சிறந்தவளாயும், படைத்துணையின்றித் தனித்தவளாயும், சுதந்தரமென்பதைத் தானே படைத்தவளாயும், தேவர்களால் புகழப்பட்டவளாயும், பாலையாயும், ஸ்திரீ தர்மத்துக்கு மாறான யுத்தத்தை வேண்டினவளாயு மிருக்கின்றாள். இதுவென்ன ஆச்சரியம்! அவளிஷ்டப்படி நாம் யுத்தத்தில் பிரவேசிப்போமானால் க்ஷேமமுண்டாகுமோ விபரீதமுண்டாகுமோ அதனை எப்படி யறியக்கூடும்? அறிவார் மூன்றுலகினுமில்லை. இதுவரையில் நம்மவர்கள் வெற்றியே யடைவார்க ளென்பதுங் கிடையாது. அன்றி பகைவர்தா னடைவார்க ளென்பதுங் கிடையாது. தோல்வி வெற்றிகள் தெய்வாதீனமாயுள்ளன. யாவுந்தெய்வாதீன மென்னும் பிரமாணத்தை விட்டு மநுஷ்யப் பிரயத்தினத்தையே கைக்கொண்டு யாவும் தமது ஆதீனமென்று நினைப்பவர் நாமன்று.

தெய்வத்தைப் பார்த்தவர் யாவரென்றும், அது இருந்தால் கண்ணுக்குப் புலப்படாதோவென்றும், கண்ணுக்குப் புலப்படாதது நம்முடைய செயல்களறிந்து தோல்வி வெற்றிகளை எவ்வண்ணமறிந்து செய்யுமென்றும், அது செய்வதாயிருந்தால் நாம் முயற்சி செய்ய வேண்டுமென்பது எற்றுக்கென்றும், எண்ணுகின்றவரும் சொல்லுகின்றவரு மாவர்.

தெய்வம் வேண்டுமென்பது இல்லையாயின் ஒருதொழிலைச் செய்து முடிக்கும் வன்மையுள்ளவன் சிலசமயம் பயந்திருப்பதும் சிலசமயந் துணிவுற்றிருப்பதும் சிலசமயம் இரண்டுவகையுமின்றிக் கிடப்பதும் அவ்வன்மையில்லாதவன் எப்பொழுதும் பயமில்லா திருப்பதும் துணிவையே மேற்கொண்டருப்பதும் எப்படி எப்படி எண்ணுகின்றானோ அப்படியப்படி யடைவதுமாகக் காண்கின்றோம். அவையெல்லாம் அவரவர் செயலோ? அவரவர் செயலாயின் அவரவர் செய்திக்குத் தக்க திருவையும் மிடியையும் அடைதல் வேண்டும். அங்ஙனமின்றி மடியுடையானுக்குத் திருவினால் வரத்தக்க சுகங்களும்,

திருவுடையானுக்கு மடியினால் வரத்தக்க துக்கங்களும், இவ்வாறன்றித் திருவுடையானுக்கே இன்பங்களும் மடியுடையானுக்கே துன்பங்களும் இம்முறையான் இயல்பாயும் வேற்றுமையாயும் வருதற்குத் தெய்வ காரணத்தை வேண்டாத எந்தச் சாமார்த்திய புருஷனாவது காரணத்தைக்கண்டு வெளிப்படுத்தினனா! இதனை யெடுத்துப் பேசுவதென்றால் நம்மால் முடியுமா?

இதனுண்மையாவது சீவனுக்கு சுதந்தரமற்ற அறிவு உண்டென்பது தோன்ற முயற்சிக்கவேண்டியவனிவனென்றும், சுதந்தரமாகிய அறிவும் அவ்வறிவால் அவரவர் செயலுக்குத்தக்க பயனளிப்பதும் இறைவனுக்குச் சுதந்தரமென்பதுந் தோன்ற எல்லாம் அவதீனமென்றும் பெரியோர் கூறிவருகின்றனர். ஆகையால் யாவர்க்கும் பிரயத்தினமும் தெய்வபலமும் ஒன்றாகக்கூடியே சுகதுக்கானுபவங்கள் அனுபவத்துக்கு வருகின்றன. இதனால் முயற்சியை வேண்டினவன் தெய்வபலத்தையும், தெய்வபலத்தை வேண்டினவன் முயற்சியையும் அபேக்ஷித்தல் வேண்டுமென் றறிமின்கள்.

ஆகவே, இப்பொழுது நடத்தவேண்டியகாரியங்களை நமதறிவால் நன்றாயாலோசித்து முயற்சியுடன் செய்யவேண்டுமென்று மகிஷாசுரன் சொல்லியபொழுது மஹாபுத்திமானாகிய பிடாலனென்னு மந்திரி பலவேதுக்களோடும் பலஞாயங்களோடும் அரசனெண்ணம் பரவியிருக்கின்றதென் றுணர்ந்து அரசனைப் பணிந்து கைகூப்பி நின்று ஓ அசுரேந்திரனே! இந்த ஸ்திரீ வந்த காரணமென்னை? எங்கிருந்து வந்தவள்? யாருடைய மனைவி? இவ்விடம் இவளே வந்தவளா? பிறர் வேண்டுகோளால் வந்தவளா? இவையனைத்தும் சிலமந்திரிகளால நமக்குத் தெரியவந்திருப்பினு மீண்டுந் தெரிந்து கொள்வது அவசியம். இதுவுமன்றித் தேவர்கள் ஸ்திரீயா லுனக்கு மரண முண்டென்பதைத் தெரிந்துகொண்டு தங்களுடைய தவவன்மையால் ஒரு ஸ்திரீயை யுண்டுபண்ணி யனுப்பிவிட்டுத் தாங்கள் ஆகாயத்தில் மறைந்திருந்து யுத்தத்தைப் பார்த்துக்கொண்டு இவளுக்கு வெற்றிவருஞ் சமயத்தில் தாங்களும் வெளிப்பட்டுச் சகாயமாய் வந்து நம்முடைய சைனியங்களையும் நம்மையுங் கொல்வதற் கிருக்கின்றனர். இதுதானவர்க ளபிப்பிராயமென்று நினைக்கின்றேன். ஆனால் நடக்கப்போகிறதெதுவோ அதை நானறியேன். உங்களை யுத்தஞ்செய்ய வேண்டாமென்று தடுப்பதற்கும் நான் தகுதியுடையனல்லேன். உனக்குந் தேவர்களுக்கும் வெற்றி வேண்டுமென்கிற வெண்ணமொன்றேயன்றி தோல்விவருமென்கிற வெண்ணங் கிடையாது. இதற்கு நாங்களொருவரும்

சாக்ஷியாகமாட்டோம். உன்னுடைய அபிப்பிராயமே அதற்கு சாக்ஷியாகவேண்டியது. ஊழியக்காரர்களாயிருக்கின்ற நாங்கள் உன்னுடைய சுகத்தையும் உன்னால் நாங்களடையவேண்டிய சுகத்தையு மாத்திர மெண்ணவேண்டியவர்கள். எங்கள் சுகத்துக்குக் காரணமாயிருக்கின்ற நீ மரணமடையவருமாயின் நாங்களு முன்னுடன் மரணமடைவதுதான் றருமம். இப்போது நேர்ந்திருக்கின்ற சமயத்தையோசிக்குங்கால் யோசனைக் கிடங்கொடாததாயிருக்கிறது. என்னையெனில், யுத்தத்திற்கு வந்திருக்கிறஸ்திரீயோ யாதொருபடையு மின்றிவந்திருக்கின்றாள். படையோடுவந்தாலும் தனியே வந்தாலும் நாம் அவளைக்கொல்வோமாயின் ஸ்திரீஹத்தி என்கிற பாபமுண்டாகும். அப்பாப்திற் கஞ்சி யுத்தஞ்செய்யாதிருப்போமாயின் நாம்பாபத்திற்கஞ்சி யிருக்கின்றோமென்பதை அவளெண்ணாமல் நம்மைத்தோல்வி யடைந்த வராயெண்ணிக் கொல்லத்துணிவாள். நாம் அவளால் கொல்லப்படுவோமாயின் வீர தீர சூரர்களாகிய அசுரர்கள் ஒரு ஸ்திரீயினால் கொல்லப்பட்டார்களென்கிற பழிச்சொல்லை உலகஞ்சொல்லும் ஆகையால் இவ்விஷயத்தில் ஆலோசனை செய்யவேண்டியிருக்கிறது. எனக்கு மாத்திரம் யுத்தத்தில் ஜயமுண்டாகுமென்று தோன்றவில்லை. ஏனெனில் காமாந்தகனாயிருக்கின்ற நீ யவளை யெதிர்ப்பையாயின் வில்லையுமம்பையு மெடுக்கத்தோன்றுமா? நீயங்ஙனமிருக்கின்ற பொழுது அவளுடைய புருவமாகியவில்லில் சந்தித்திருக்குங் கண்களாகிய கணைகள் உனது தோளிற்பாய்ந்து உன்னுடைய வுயிரைக் கொள்ளை கொள்ளாமற்போகுமா? நீகாமாந்தகனென்று தெரிந்தே அவள் யாதொருபடைக்கலமுமின்றித் தனியே வந்திருக்கின்றாள். அவளங்கத்திலுள்ள கண்படையொன்றே போதுமானது. இப்போது காமத்தை விடவில்லையாயின் அவளை வெற்றிகொள்ள வல்லையாவாய் காமத்தைவிடவல்லையல்லையாயின் அவளுன்னை வெற்றிகொள்வதில் வல்லவளாவள். இந்தவுண்மையை விட்டு வேறுயோசனைசெய்து ஓடிப்போவோமென்றால் நமது கீர்த்திக்கானிவரும். இந்திராதியரோடு யுத்தஞ்செய்தகாலத்துங் கீர்த்திக்குப் பங்கமான காரியஞ் செய்ததில்லை. அப்படிப்பட்ட வீரர்களாகிய நாம் இப்பொழுது ஒரு பெண் பிள்ளைக்கஞ்சி யோடுவோமாயின் அது என்னாம். ஆகையால் பழிக்காளாவதைப் பார்க்கிலும் மரணத்துக்காளாவது புகழாகும். இனி ஜயம் வந்தாலும் அப்ஜெயம்வந்தாலும் யுத்தத்திற்குச் செல்வதுவே முறைமை எதுவர வேண்டியதோ அதுவரட்டும். இவ்விஷயத்தில் சகலமுமுணர்ந்த பண்டிதர்கட்குச்சிந்தனை என்னை மரணமடைவோமானால்

கீர்த்திவரும். அந்தக் கீர்த்தியைவிரும்பாது மரணத்துக்கஞ்சியிருப் போமாயின் தேகசுகமுண்டாகும். இதில் எந்தச்சுகம் வேண்டுமோ அதனைச்சொல்வாய். மரணமிருக்கும்பட்சத்தில் எங்கேயோடிப் போனாலும்விடாது. ஆகையால் மரணம்வருமானா லுயிர் போமே என்கிறதுக்கமும் இருந்தால் மானஹானி வருமே என்கிற துக்கமும் இனிவேண்டாமென்றனன்.

இங்ஙனம் துன்முகன் சொல்லிய வார்த்தையைப் பாஷ்கல னென்கிற மந்திரி கேட்டு அரசனைப் பணிந்து அஞ்சலியஸ்தனாய் நின்று ஓ மன்னவனே! நாம் யுத்தத்தில் விருப்பமுடையவர்களேயன்றி வெறுப்புடையவர்களல்லர் நமக்கிஷ்டமாகிய யுத்தம் வந்துபோது நாம் ஏன் பயப்பட்டுக் கைவிட வேண்டும். நானொருவனே சென்று நம்மைப் பார்த்துப் பார்த்துப் புன்னகைசெய்யும் அச்சண்டிகையைக் கொன்றுவிட்டு வருகிறேன். எந்த விஷயத்திலும் எவனுக்கும் உற்சாக மிருக்கவேண்டும். அஃதில்லையாயின் அவன் விலங்கினத்தோ டெண்ணப் பட்டவனாவன். வீரனாயிருக்கின்றவனுக்கு வீரரசம் நிலைத்திருக்க வேண்டுமேயன்றி பீதிரசம் நிலைத்திருக்குமானால் அதுவே சத்ருவாக முடியுமன்றோ. ஓ அசுரேந்திரனே! பயப்படுவதை விட்டுப் பிரபலமாகிய யுத்தத்தைச் செய்து அந்தச் சண்டி கையை யமபுரத்துக் கனுப்பிவிடுகிறேன். இந்திரன் அக்னி யமன் நிருதி வருணன் வாயு குபேரன் சந்திரன் சூரியன் அரியயன் இவர்கள் வந்தெதிர்த்தபோதிலும் நான் பயப்படமாட்டேன். இவர்களைக்காட்டிலு மவள் பெரியவளா? அந்த நாரி என்னை என்ன செய்யப்போகின்றாள். நீ அவளோடு சமமாக நின்று போர்செய்வது தகுதியன்று. நீ இவ்விடத்திலேயே நல்ல ஸ்திரீகளோடு கிரீடித்திருப்பாய். நான் செய்யப்போகிற யுத்தத்தில் என் தோள்வலியைப் பாருமென்று அவன் சொல்லிவந்தபொழுது துர்த்தரனென்கிற மந்திரி! அரசனைப் பார்த்து நீயும் இப்பாஷ்கலனும் போகவேண்டாம் நானொருவனே போய் தேவர்களா லேவப்பட்ட அவளைக் கொன்று விடுகிறேன். அவளை நான் எப்படிக் கொல்லுவானென் றாலோசிக்க வேண்டாம். அவளை உன்னைப் பயப்படுத்துவதற்குத் தேவர்களால் காட்டப்பட்ட ஓர்பயங்கரரூபமென் றறியக்கடவாய். அவளாலாகப் போகின்ற தொன்றுமில்லை. அவள் சிறுபாலர்களுக்குப் பூச்சி காட்டுவது போல் நம்மைக் கொல்லுவேன் வெட்டுவேனென்று பூச்சிக் காட்டுகின்றாள். யுத்தம் இலேசானதா! இவளதனை யறியத்தக்கவளா? இவள் விஷயத்தில் நீ கொண்டிருந்த ஆசையை விட்டுவிடு. மந்திரியாகிய என்னால் சொல்லப்பட்ட யுக்தியைக்கேள். மந்திரிகளாவார் சாத்வீரர்களென்றும் ராஜஸர்களென்றும் தாமசர்களென்றும் மூன்று

வகையாயுள்ளார். சாத்வீகர்கள் அமைச்சியலுணர்ந்து தங்களுடை சாமர்த்தியத்தினால் அரசனுடைய காரியத்திற் கோர் ஹானி யுண்டாக்காமல் அவன் காரியத்தை முடிப்பார்கள். அவர்கள் பொருளி லாசைப்படாத நிர்ம்மலசித்தத்தையும் தருமசிந்தனை யுமுடையவரா யிருப்பர். ராஜஸர்கள் நிலையில்லாத புத்தியுள்ளவர் களாயும் தங்களுடைய காரியத்திலேயே ஆசையுடையவர்களாயும் தெய்வகதியாய் நேரிடும் அரசனுடைய காரியத்தை நடத்துகின்றவர்களாயு மிருப்பர். தாமஸர்கள் லோபகுணம் நிறைந்தவர்களாயும் தங்கள் காரியத்தில் மாத்திரம் ஊக்கமுள்ளவர்களாயும் அரசனுடைய காரியத்தில் தங்கள் லாபத்தை முடித்துக்கொண்டு அவன் லாபத்தைக் கெடுக்கின்றவர்களாயும் தங்கள் வீட்டிலிருந்தபடியே அரசனுக்குப் பகையா யுள்ளவனிடத்திற் கலந்து கபடத்தை மேற்கொண்டு அரசனுடைய குறைபாடுகளைச் சமயம் நேர்ந்தபொழுது தெரிவித்து அவர்களுக்குப் பலமுண்டாக்கி அரசனுடைய காரியங்களை யெப்போதுங் கெடுத்து இருவருக்கும் யுத்தமுண்டாகச் செய்து தன்னரசனுக் கெதிரியின் பலங்களை மிகுதியாகச் சொல்லிப் பயமுண்டாகும்படிச் செய்வார்கள். உனக் கிதுகாறுஞ்சொல்லிவந்தவர்கள் தாமசர்களோ டெண்ணப்பட்டவர்கள். அவர்களோடு நீ விசுவாசம் வைத்தலடாது. வைப்பையாயின் காரியத்துக் கானியும் மேலாலோசனைக்குக் கெடுதியுமுண்டாகும். தாமசகுண முள்ளவர்களாயும் பாவத்தொழிலையே செய்கின்றவர்களாயும் அறிவிற் சிறியவர்களாயும் பேராசை யுடையவர்களாயு மிருக்கின்ற துஷ்டர்களிடத்தில் விசுவாசம் வைத்தால் அவர்கள் நன்மைசெய்ய அறிவார்களோ! ஆகையால் ஓ அரசனே! நீ சிறிதும் சிந்தனைப்பட வேண்டாம் நானே போர்செய்து வெற்றிழந்து துஷ்டையாகிய ஸ்திரீயையுமழைத்து வருகிறேன். என்பலத்தையும் தைரியத்தையும் உன் காரியத்தை முடிக்கும் வல்லபத்தையும் பார்ப்பாயாகவென்றான்.

பன்னிரண்டாம் அத்தியாயம்

தேவ்யாசஹ தாம்பரசம் வாதம் முற்றிற்று.

———

சுலோகம் - (சாரு.)

ஆக அத்தியாயம் கஉ -க்குச் சுலோகம் (எகசா)

————

உ

கந்தர்ப்ப ஜனகா பாங்ஒக வீக்ஷணாயைநம:

———————

பதின்மூன்றாம் அத்தியாயம்

*தேவ்யாசஹ பாஷ்கல துர்முகயோர்யுத்தம்

———

ஓ ஜனமேஜயனே! துர்த்தரன் அந்தஸ்திரீயை யழைத்துக் கொண்டு வருகிறேனென்றும் என்னுடைய பலத்தையும் தைரியத்தையும் பாரென்றுஞ் சொல்லி முடிந்தபின்னர் தோள்வலியினும் மதச்செருக்கினும் அஸ்திரசஸ்திரங்களிற் பயிலவேண்டிய பயிற்சியினும்மந்திரசித்தியுள்ள ஆயுதப்பயிற்சியினுஞ் சமர்த்தர்களாகிய பாஷ்கலன்துர்முகனென்னும் இரண்டசுரர்கள் அம்பிகையினிடம் யுத்தநிமித்தம் செல்வார்போற்சென்று அம்பிகையைப் பார்த்து மேககர்ச்சனை செய்து கம்பீரமாகச் சில வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினர்.

தேவஸ்திரீயைப் போற் காணப்படுகின்ற ஓ நங்காய்! பலிஷ்டனாகிய மகிஷன் இதுகாறும் தேவர்களால் செயிக்கக் கூடாதிருப்பானாயின் இப்பொழுதுன்னால் அவன் செயிக்கப்படுவனோ? நீ ஜெயத்தை வேண்டுவையாயின் அவன் வேண்டியபடி நீ மகிஷியாய்விட்டால் நீ செயித்தவளேயாவாய். அசுரர்களுக்கெல்லாந் தலைவனாகிய அவன் உனக்கு நாயகனாம் பக்ஷத்தில் உனக்கென்ன குறையுளது. நீ ஸ்திரீரூபியாயிருக்கிற படியால் உன்னிடத்தில் வீரத்தைக் காட்டுவானா? காட்டினால் அது வீரமாகுமா? அவன் உன்னைக்காமவழியாலாள்வதுதான் அவனுக்கு வீரமாகும். அவனை நீயும் அக்காமவழியால் அடக்கியாள்வதுதான் உனக்கும் வீரமாகும். இருவருக்குமிம்முறையால் ஒருவாறு தோல்வியும் வெற்றியுமுண்டாவது பிரத்யக்ஷமாகத் தெரியவந்தும் நீ அதற்கிணங்காதிருப்பது பேதமையன்றோ. இனியேனும் அப்பேதமையைவிட்டு யான்சொல்வதைப் புத்திபண்ணிக்கேட்பாயாக. ஆனால் நீ மகிஷனாயிருக்கின்றவனை நாம் நாயகனாகக் கொள்வது எப்படி யென்றெண்ணுவாய் அவன் உனக்கு நாயகனாம்பொழுது மாடாகவிருக்கமாட்டான். சர்வலக்ஷணத்தோடும் சர்வாலங்காரத் தோடும் கோடிமன்மதர்கள் ஒருருக்கொண்டாற் போல் அதிசுந்தரமாய் வருவான். நீ அவனிடத்தில் அன்புள்ளவளாவையாயின் உனக்கு

முப்புவன சம்பத்தும் முன்வந்து நிற்கும். அச்சம்பத்தோடு நீ நல்ல சம்சாரியாய் மனோரதங்களை யெண்ணிய வாறனுபவித்து ஆனந்தமடைவாய். சம்பத்தையும் திருப்தியையும் அடையக்கூடாத ஸ்திரீகளைப்போல் நீயேனாகின்றா யென்றனன். அம்பிகை இருவர் சொல்லையுங்கேட்டு ஓ துஷ்டர்காள்! நான்ஸ்திரீ ரூபிணியாயிருந்தாலும் முறையறியாத காமத்தையும் அறிவென்பது சிறிதுமில்லாத சபலபுத்தியையுமுடைய அந்தக் கடாவையா நான் விரும்புவேன். அவன் மானுடனாய் வந்தாலும் மகிஷனல்லவா! குலஸ்திரீகள் குலத்திலும் சீலத்திலும் குணத்திலும் அழகிலும் சாதுர்யத்திலும் நன்னடையிலும் க்ஷமை முதலிய நற்குணங்களிலும் தன்னிலுமேம்பட்ட புருஷனை விரும்புவரேயன்றி கீழ்ப்பட்ட வனைவிரும்பார். இவனோ மேம்பட்டவனுமல்லன். கீழ்ப்பட்டவனு மல்லன். விலங்கினத்தினுங் கீழ்ப்பட்ட இவனையா நான் விரும்புவேன். ஓ பாஷ்கல துன்முகர்களே! நீங்கள் சீக்கிரமாக யானையைப் போலும் பெருத்த சரீரத்தையுங் கொம்பையுமுடைய உங்களரசாகிய கடாவினிடம் போய் நீபாதாளலோகம் போனாற்போகலாம்; அல்லது யுத்தகளத்தில் வந்தால் வரலாம். இருவரும்போர் செய்யலாம்; நான் போர்செய்து உன்னைக்கொன்று இந்திரனுக்கு நிர்ப்பயத்தை யுண்டாக்கி அவனை வாழவைப்பது என்னுடைய எண்ணம்; நான் வந்தகாரணமும் அதுவே. இனி நீ அண்ட வெளியிற்போனாலும் மலைமுழைகளிற் புகுந்தாலும் மற்றெவ்விடத்திலோடத் தொடங்கினாலும் வீடேனென்று நான் சொன்னதாகச் சொல்லக்கடவீர்கள் இங்கு நில்லாதீர்கள் ஓடிப் போங்களென்று சொல்லவும், இருவருங் கோபங்கொண்டவர்களாய் வில்லேந்தி பாணங்களைச் சந்தித்து வீரகர்ச்சனையைச் செய்து பாணவருஷங்களைப் பொழிந்தனர். அதுகண்டதேவி அவர்களது வீரவோசைக்கு விட்டபாணவருஷங்கட்குஞ் சிறிதுமஞ்சாது தேவர்கள் தங்கள் காரிய சித்தியாய்விட்ட தென்றெண்ணச்சங்கநாதஞ்செய்தனள். அந்தநாதத்தைக்கேட்ட இருவருளொருவனாகிய பாஷ்கலன் சமீபித்தெதிரே நின்றுகட்கமுதலிய பலவாயுதங்களைவிட்டுப் பெரும்போர்செய்ய, தேவியும் மதம்பிடித்த அவன் மீது ஐந்துகூர்மையான பாணங்களை விட்டனள். பாஷ்கலன் அவ்வைந்து பாணங்களையுமுறித் தேழுபாணங்களை விட்டனன். அப்பாணங்களைத் துண்டித்து பத்துபாணங்களாலடித்து வீரநகைசெய்து பின்னர் ஓரர்த்த சந்திரபாணத்தால் அவனது தனுசைத் துண்டித்தனள். புஷ்கலன் பொறாது ஓர் கதை யேந்தி யடிக்கச் சமீபித்தனன். தேவி அவனடிப்பதற்கு முன் தானொருகதையா லவனையடித்துப் பூமியில் வீழ்த்தினள். வீழ்ந்த அவன் ஒரு

முகூர்த்தகாலம் மூர்ச்சையாயிருந்து பின் றெளிந்தெழுந்து கதையைச் சுழற்றி எறிந்தோடி வந்தனன். தேவி கோபமுடையவளாய்ச் சூலாயுதத்தா லவன்மார்பைக்குத்திப் பூமியிற் சாய்க்கவே அவ்ன் வீழ்ந்திறந்தனன். அவன் சேனைகளெல்லா மோடத்தலைப்பட்டன. தேவர்கள் ஜயகோஷஞ் செய்தனர். அதனைக்கேட்ட துன்முகன் கோபதீப்தனாய்க் கண்செவந்து ரதமூர்ந்து சமீபித்து ஓடிப் போதலையறியாத அம்பிகையைப்பார்த்து ஓ பெண்ணே! என் வருகையைப்பார்த்து ஓடிப்போகாதே, நில்லு! நில்லு!! என்றடிக்கடி சொல்லிக்கொண்டு வருகின்றதுன்முகனை தேவிபார்த்து நீ போகும் வழியைக் காட்டுகின்றேனென்று சங்கநாதஞ்செய்து நாணொலி செய்தனள். துன்முகன் அந்தக்ஷணமே பாணங்களைத் தனுசிற் சந்தானஞ்செய்து அதிவேகமாய் விட்டனன்.

தேவி அப்பாணங்களைத் தூள்படுத்தினள். பின்னர் இருவரும் சத்தி கதை முசலம் தோமரமுதலிய பல வாயுதங்களைக் கொண்டு இடசாரி வலசாரியாகப் போர்செய்தனர். அச்சமயத்திற்பெருகிய உதிரவெள்ளமானது பெருக்கெடுத்தோடிற்று. அப்பெருக்கில் அசுரருடைய சிரங்கள் புரண்டுருண்டுச்சென்றன. யமதூதர்களுக்கு அவ்வசுரப் பிராணன்களெல்லாம் தும்பி பலம் போலாயின. அசுரப் பிரேதங்களெல்லாம் செந்நாய்கட்கும் கழுகுகட்கும் கூளிகட்கும் ஏனையவற்றிற்கும் நல்விருந்தாக நெருங்கித் தின்பதற்கும் பிடுங்குவதற்கும் கறிப்பதற்குமாயிருந்தன. அப்பிரேதங்கள்மேற் படிந்த காற்றும் பிணநாற்றத்தை வீசின.

அப்பிணங்களை நல்விருந்தாகவுண்டபக்ஷிசாதிகளெல்லாம் சந்தோஷத்தையடைந்து கில கில வென்கிற பலவொளிகளால் கூச்சலிட்டன. இவ்வமர்க்களத்தைத் தூரத்தே கண்ட துன்முகன் வலக்கையை மேலே தூக்கித் தேவியைப்பார்த்து ஓ சண்டீ! இதோ வந்து விட்டேன் ஓடிப்போவதாயிருந்தால் இப்போதே ஓடிப்போய்விடு. மகிஷனிடத்தி லெண்ணமிருந்தால் அவன் மனையகத்திற் போய்விடு. இவ்விரண்டிலொன்று செய்யாதிருப்பையாயின் உன்னுயிர் போய்விடும். உன்னுயிரைக் கொண்டுபோகும் யமன் நானே யென்று கூறியபொழுது தேவி அடா முடா! உனக்குமரணம் சமீபித்துவிட்டபடியால் விபரீதபுத்தி தோன்றி வாயில்வந்தவாறு பிதற்றுகின்றனை. நீ இப்பொழுதுயிர் வேண்டில் மகிஷன் பாற் செல்வாய். இல்லாவிடில் உனக்கு முன்போன பாஷ்கலன் போனவழியே வுன்னையும் போகச்செய்கின்றேன். நீ போன பின்னர் எருமையின் மகனாகிய மகிஷனையு மனுப்புகின்றேன். அங்கு நீங்களனைவருங் கூடிவாழலாம். இங்கு உங்களுக்கு வாழ்வற்றுப்

போயிற்று. இதிலையுறவேண்டாமென்று தேவிசொன்ன வார்த்தையைக் கேட்டு இனி இவளிடத்திற் சொற்பிரயோகஞ் செய்வதிற் பயனில்லை பாணப்பிரயோகஞ் செய்வதே யுக்தமென்று சோனைமாரிபோற் பொழிந்தனன். அப்பாண வருஷங்களுக் கெதிரான பாணங்களைப் பிரயோகஞ் செய்து வெறு வெளியாக்கி அதிவுக்ரத்தோடும் துன்முகனுக்கு மேன்மேற் குரூரத்தையும் ஏனைய வசுரர்களுக்குப் பயமிகுதியையும் சுரர்களுக்குற்சாக விருத்தியையும் விளைவிக்கத்தக்க விற்போரை விசேடமாகச்செய்து துன்முகன் கையிலிருந்த வில்லைப்போக்கிப் பஞ்சபாணங்களால் ரதத்தை முறித்தனள். தேர் முறியப்பெற்ற துன்முகன் திடீரென்று பூமியிற் குதித்துப் பிறர் தாங்கற்கரிய கதாயுதத்தைக் கையிற்கொண்டு தேவியினுடைய வாகனமாகிய சிம்ஹத்தை மோதியடித்தனன். அது சிறிது மசையாமல் முன்னின்றதுபோலிருந்தது. தேவி அதிகூர்மையான வாளாயுதங் கொண்டு கிரீடத்தினால் பிரகாசிக்கும் துன்முகன்சிரத்தை வெட்டி யெறிந்தனள். தேவர்கள் புஷ்பமாரி பொழிந்து ஜயஜயவென்று ஆனந்தங்கொண்டு போற்றினர். ருஷிகள் சித்தர்கள் கின்னர்கள் முதலிய யாவரும் அசுரமுண்டங்களைப் பார்த் தானந்தக் கூத்தாடினர்.

பதின்மூன்றாம் அத்தியாயம்

தேவாயசஹ: பாஷ்கல தூர்முகயோர்யுத்தம் முற்றிற்று.

———

சுலோகம் (௫0)

ஆக அத்தியாயம் கங-க்குச் சுலோகம் (எசாசா)

———

உ

கர்ப்பூரவீடீசௌரப்ய கல்லோலிதககுத்தடாயை நம:

———

பதினான்காம் அத்தியாயம்

*தேவ்யாச: சிக்ஷுதாம்பரயோர்யுத்தம்.

———

ஓ அரசனே! மகிஷன் தூதர்களால் துன்முக னிறந்ததைக் கேள்வியுற்றுக் கண்சிவந்து மிக்க கோபமுடையவனாய் அசுரர்களைப் பார்த்து போர்க்களத்தில் இப்பொழுது என்ன நடக்கிறது என்ன

* தேவியோடு சிக்ஷுதாம்பரன் என்கிற அசுரர்கள் யுத்தஞ் செய்தல்.

நடக்கிறது என்று அடிக்கடிகேட்டுப் பின் சபையிலுள்ளாரைப் பார்த்து ஓ அசுர வீரர்களே! யுத்தத்தில் மஹா சூரர்களாகிய பாஷ்கல துன்முகர்கள் ஒரு ஸ்திரீயினால் சங்கரிக்கப்படத்தக்கவர்களா ஆஹா! இது தெய்வச்செயலல்லவோ! நல்வினை தீவினை என்கிற இரண்டினுடைய சம்பத்தினால் சுதந்தரமற்றிருக்கிற பிராணிகளுக்குச் சுகதுக்கங்களையுண்டு பண்ணுவது விளைக்கீடானகாலமன்றோ! அந்தக் காலத்துக்குமுன் யாருடைய பலமுஞ் செல்லா தன்றோ! இப்பொழுதனுப்பிய இரண்டசுர சிரேஷ்டர்களும் இறந்து போயினரே! இனிச்செய்ய வேண்டியதெதுவோ அதையாவருங்கூடி ஆலோசித்துச் செய்மின்கள். இப்பொழுது நேரிட்டகாரியமோ மிகவுங் கஷ்டமான காரியமாயிருக்கிற தென்று அசுரேந்திரன் சொல்லுங்கால் சிக்ஷு என்கிற மஹா ரதிகனாகிய சேனாதிபதி மகிஷனைப் பார்த்துச் சொல்லுகின்றான்.

ஓ அரசனே! ஒரு பெண்பிள்ளையைக் கொல்வதற்கா இவ்வளவு யோசனை? அதை நான் செய்து விடுகிறே னென்று சொல்லித் தன்னுடைய சேனைகளை யழைத்துக்கொண்டு ரதாரூடனாய் மஹா பலிஷ்டனாகிய தாம்பிரனைத் தனக்குப் பக்கவீரனாக வைத்துக் கொண்டு அளவிறந்த சேனைகளோடும் திக்குகளும் ஆகாயமும் செவிடுபடும்படியாகக் கொக்கரித்துக் கொண்டு போயினான். பகவதியாகிய மஹா தேவி தன்னெதிரில் வருகின்ற சிக்ஷுவைப் பார்த்து சங்க நாதத்தையும் நாணோசையும் வீரகண்டாநாதத்தையுஞ் செய்தனள். அவ்வோசைகளால் வந்த பெருஞ்சேனைகளெல்லாம் இதுவென்ன ஒன்றுந் தெரியவில்லையே யென்று வாய்குழறி விதிர்விதிர்த்து நடு நடுங்கிப் பயந்து ஓடிப்போயினார். சேனாதிபதி ஓடுகின்ற அசுரர்களைப் பார்த்து ஓ அசுரர்களே! உங்களுக்கென்ன பயம் வந்தது! என்றதட்டிக் கோபித்து அவர்களை அழைத்து நானிப்பொழுதே இச்சிறுபெண்ணைப் பாணங்களாலடித்து விடுகிறேன் நீங்களொன்றுஞ் செய்யவேண்டாம். சும்மாவிருங்களென்று சொல்லி, சேனைகளை யொன்றாகச் சேர்த்து வில்லேந்தி மரணமுண்டாகு மென்கிற பயமற்று தேவியைப் பார்த்து ஓ பெண்ணே! மருண்டோடத்தக்க இந்த அசுரர்களை நீ மருளும்படியாக இந்த நாதங்களைச் செய்தனையோ! ஆஹா இது நல்லவெற்றி என்னை என்ன செய்தாய்? இந்த வெளிப்புரட்டலுக்கு நான் ஏதாவது பயந்தேனா? ஓ பெண்ணே! என் மனதில் ஸ்திரீயை வதை செய்வோமானால் அபகீர்த்தியுண்டாகுமென்கிற ஆலோசனையும், இவளோடு என்ன சண்டை செய்வதென்கிற உதாசீனமும் தோன்றியதால் இவ்வளவு காலம் தாழ்ந்திருந்தேன். உன்னைக்

கொல்லவேண்டு மென்றெண்ணி யிருப்பேனாயின் வந்தபொழுதே கொன்றிருப்பேன். ஆனால் உன்போலொத்த ஸ்திரீகள் உலகத்தில் தங்களுடைய கடைநோக்கத்தாலும் அபிநயங்களாலும் போர்செய்யக் கண்டிருக்கின்றேனேயன்றி ஆயுதங்களால் போர்செய்யக் கண்டதில்லை. நீ ஒருத்திதான் செய்யக்கண்டேன். உன்னுடைய மேனி போர்செய்வதற்கு யோக்யமோ வென்றால் புஷ்பங்கள் பட்டாலுங் குழையத்தக்கதா யிருக்கின்றது. அத்தன்மையாகிய உன் சரீரத்தின்மேல் எப்படி நான் பாணப்பிரயோகஞ் செய்வேன். அன்றியும் உன்னை யொத்த ஸ்திரீகளுடைய சரீரம் மல்லிகை யிதழ்களுடைய பரிசம்பட்டாலும் நோயைச் செய்யத்தக்கது. இத்தகைய உன்மேனி புருடர்களால் பிரியங்கொள்வதற்கு யோக்யமான தாயும் ஆலிங்கனஞ் செய்வதற்கு மிக ரம்யமான தாயு மிருக்கின்றது. அதனை நான் எப்படி வெட்டுவேன். அந்தோ! உன்னுடையமேனி தைலாதி ஸ்நானங்களாலேயும் புஷ்ப விசிரயிலுண்டாகும் நறுமணங் கமழுங் காற்றினாலேயும் இனிய சுவையோடு கூடியவுணவுகளாலேயும் பரிபாலிக்கத் தக்கதாயிருக்க, இப்பொழுது சத்ருபாணங்களா லடிபடுவதற்கு யோக்யமாகுமா? உலகத்தில் யுத்தஞ்செய்து பிழைப்பதாகிய பிழைப்பும் ஓர் பிழைப்பாகுமா? அந்தப் பிழைப்பை நெருப்பிற் சுடவேண்டும். அரசர்கள் தனவான்களாக வேண்டுமானால் கூர்மையாகிய கத்தியினால் வேறோரரசனுடைய தலையை வெட்டி அவனது ராஜ்யசெல்வத்தை யடைகின்றனர். அந்தச் செல்வம் அவனுடைய பரம்பரையார்க்குத் துக்கத்தை விளைவித்து வந்ததாகலான் இவர்களுக்கும் பின்னர் துக்கத்தையே விளைவிக்கும். ஆகையால் அப்படிப்பட்ட செல்வத்தையும் நெருப்பி லிடவேண்டும். ஓ பெண்ணே! நீயும் எதனாலேயோ மூடமடைந்தவளா யுத்தஞ்செய்ய அபேக்ஷித்திருக்கின்றனை. இதனாலென்னசுகம். நீ கட்டிலின் மீதிருந்து புருஷசம்போகத்தால் விளையும் சுகத்தை விட்டு இந்த யுத்தபூமியில் எவ்வித சுகத்தையடைய அபேக்ஷித்திருக்கின்றனையோ தெரியவில்லை. வாளினால்வெட்டுப்பட்டும் யானையினால் மதிக்கப்பட்டும் பாணங்களால் புண்பட்டும் சாகின்றவர்கட்கு நடத்தப்படும் சம்ஸ்காரமாவது நரிகள்வாயினால் கவ்விக்கொண்டு போதலேயாகும். இவர்களை மூடர்களாகிய கவிகள் யுத்தத்திலிறந்தவர்கள் சுவர்க்கலோகப் பிராப்தியை யடைகின்றனரென்று சொல்லுகின்றனர். அது உபசாரமாகச் சொன்னதாகுமே யன்றி உண்மையாகச் சொன்னதென்று நான்நிச்சயிக்கமாட்டேன். ஆகையால் ஓ சிறுபெண்ணே! நீ யுத்தஞ்செய்ய விரும்பியதை யொழித்துச் சத்ருவாகிய மகிஷபூபதியை நாயகனாகக் கொண்டு அவனால் வரும்

சுகத்தை விரும்புவாய். அவனிஷ்டமில்லாத பக்ஷத்தில் உன் மனம் எவனிடம் பிரியப்படுகிறதோ அவனிடம் அந்தச் சுகத்தை யநுபவிப்பாய்.

இவ்வாறு சொல்லுகின்ற அசுரனைத் தேவி பார்த்து ஓ மூடனே! நீ புத்திமானாகிய பண்டிதன்போ லிறுமாந்து வாயில் வந்தவாறெல்லாம் உளறுகின்றனையே இதுவென்ன புத்தி! உனக்கு உலக தர்மமாகிய நீதிசாஸ்திரந் தெரியுமா? மோக்ஷதர்மமாகிய ஞான சாஸ்திரந் தெரியுமா? நீ பெரியோரையடுத்து வழிபட்டிருக்கின்றனையா? நீ ஒன்று மறியாதவனாகக் காண்கின்றனை. ஆகவே உனக்குத் தருமபுத்தியுதிக்க வில்லை. நீ மூடனைச் சேர்ந்தவ னாகையால் மூடனாகவே யிருக்கின்றாய். உனக்கு அரச நீதியேனுந் தெரியுமா தெரியாது. ஒன்றுந் தெரியாத நீ என்முன் னின்று இடக்கான வார்த்தைகளை உளறுகின்றனையே ஓ மூடனே! நானெப்படிப் போவேனென்றால் இந்த யுத்தபூமியில் மகிஷனைச் சங்கரித்து அவனுடைய உதிர வெள்ளத்தினால் பூமியைச் சேறாக்கி அதில் வெற்றியடைந்த கீர்த்தி ஸ்தம்பத்தை நாட்டிச்சுகமாய்ப் போவேன். இப்பொழுது தேவர்களுக்குத் துக்கத்தை விளைவிக்கின்ற துராசாரமுடைய மதகர்விதனாகிய மகிஷனை நான் சங்கரிக்கப் போகின்றேன். நீ யிப்போது ஏதேனும் யுத்தஞ் செய்வதாயிருந்தாற் செய் ஓடிப்போகாதே. ஓ அறிவில்லாதவனே! உனக்கும் மகிஷனுக்கும் பிராணனிடத்தில் அபேக்ஷை யிருக்கின்ற பக்ஷத்தில் நீங்களெல்லாரும் பாதாளம் போய்ச்சேர்மின்கள். உங்கள் மனதில் இறந்து போகவேண்டு மென்கிற எண்ணமிருக்கிற பக்ஷத்தில் யுத்தத்தை நடத்துங்கள். நீங்கள் பாதாளலோகம் போகாத பக்ஷத்தில் யாவரையும் நான் ◆சங்கரிப்பது நிச்சயமென்றனள்.

பலத்தில் நம்மைப்போலுமில்லையென்னுங்கர்வமுள்ள சிக்ஷுர என்பவன் தேவியினுடைய வார்த்தைகளைக் கேட்டு மேக வருஷம் போலும் பாணவருஷங்களைப் பொழிந்தனன். தேவி அவன் விட்ட பாணங்களைக் கொடுமையாகிய தன் பாணங்களால் வெட்டி யொழித்து விஷத்துக்கொப்பாகிய பயங்கரமுள்ள பாணங்களால் அவனை யடித்தாள். இவ்வாறு இருவரும் யுத்தபூமியில் ஆச்சரியகரமாகிய யுத்தத்தைச் செய்துவரும்போது தேவியானவள் ரதத்திலிருக்கின்ற அவனைக் கதாயுதத்தா லடிக்க அவன் பிரக்ஞையற்று இரண்டு முகூர்த்தகாலம் மூர்ச்சித்திருந்தனன். அச்சமயத்தில் சத்துருகாதகனாகிய தாம்பரனென்பவன் நெடுநேரம் மூர்ச்சையடைந்திருக்கிற சிக்ஷுரவைப்பார்த்துத் தான்

◆ சங்கரிப்பது - அழிப்பது

வெற்றியடையலாமென்கிற துராலோசனை யுடையவனாய்த்தேவியை நோக்கி யுத்தஞ்செய்வதற்கு வர அவனைத் தேவி பார்த்து நகைத்து ஓ அசுரனே! வருவாய் நான் உன்னைச் சாவாகாசப்படுத்தாமல் உடனே யமலோகத்துக்குப் பிரயாணப்படுத்துகிறேன். வருகின்ற ஒவ்வொருவரும் அற்பாயுளுடையவராயும் பலமில்லாதவராயு மிருக்கின்றனரேயன்றித் தீர்க்காயுளும் பலமுடையவருமாக வரவில்லை. நீங்களும் அவர்களைப்போல் அற்பாயுளுடையவர்களேயன்றி வேறல்லர். ஆகவே என்ன யுத்தஞ்செய்யப்போகிறீர்கள். மூடனாகிய மகிஷன் வீட்டிலிருந்தபடியே தான்பிழைப்பதற்குச் செய்யும் பிரயத்தனம் இதுதானா? ஆஹா! என்னவிதமாய்ச் செய்கின்றான்! தேவசத்துருவாகிய அந்தத் துராத்மாவை நான் சங்கரிக்காமல் தீனர்களாகிய உங்களைச் சங்கரித்துக்கொண்டிருப்பது வீண்சிரமந்தானே! ஆகையால் நீங்களனைவரும்போய் மகிஷனை அனுப்புங்கள் அந்த மூடன் என்னை எப்படி கேட்டிருக்கின்றானோ அப்படியே என்னை வந்து பார்ப்பானாக.

தாம்பிரன் இதைக்கேட்டு மிகுந்த கோபங்கொண்டு காதளவும் நாணையிழுத்து வில்லைவளைத்துப் பாணங்களைவிட்டனன். தேவியுங் கண்சிவந்து தேவ சத்துருவாகிய தாம்பிரனைக் கொல்லவேண்டுமென்கிற இச்சையுடையவளாய் வேகத்துடன் பாணங்களை விட்டனள். அப்பொழுது பலவானாகிய சிக்ஷுர என்பவன் மூர்ச்சை தெளிந்தெழுந்து ஒரு கணத்துக்குள் வில்லேந்திப் பாணசந்தானஞ் செய்து தேவியினெதிரே நின்றனன். இருவரையும் பார்த்து மகாமாயாரூபிணியாகிய தேவிகோபங்கொண்டவளாய்ப் பாணவருஷங்களை வருஷித்து அவ்விருவருமேயல்லாமல் அசுரக்கூட்டங்களுமணிந்திருக்கிற கவசங்கள் கிழிபடும்படிச்செய்ய அவர்களுடைய சரீரங்களில் ரத்தம்பரவி செந்நிறமாய் விளங்கின. அவற்றை நோக்குங்கால் வசந்தகாலத்தில் வனத்தில் மலர்ந்திருக்கின்ற கலியாணமுருக்கமரம் போலிருந்தன. அசுரர்களெல்லாம் அடங்காத உதிரப்பெருக்குடையவர்களாயிருந்தும் அகங்காரத்தைவிடாது பாணசமூகங்களைவிட்டனர். தாம்பிரனும் தேவியையெதிர்க்க அவளுமெதிர்த்து இருவரும் பெரும்போர்செய்ய ஆகாயத்திலிருந்த தேவர்களதனைக் கண்டதிசயித்தனர். மிக்கவன்மையுடைய தாம்பிரன் இரும்பினாற்செய்த பயங்கரமுள்ள ஒரிருப்புலக்கையையேந்தி தேவியினுடைய வூர்தியாகிய சிங்கத்தின் மேலடித்துச் சரீரங்குலுங்க நகைத்து மேகம்போற்கர்ச்சித்தனன். அதுகண்டதேவி மிகுந்த கோபமுடையவளாய்க் கர்ஜிக்கின்ற அந்தத்தாம்பிரனுடைய சிரத்தைக் கூரிய வாளினாலறுத்துத்தள்ளினாள். அவனுடலங் கீழேவிழாமல்

கையிற்பிடித்திருந்த வுலக்கையுடனே க்ஷணநேரங்கூத்தாடிப் பூமியில்விழுந்தது.

பலவானாகிய சிக்ஷு என்பவன் பூமியில் முண்டமாய் வீழ்ந்து கிடக்கின்ற தாம்பிரனைப்பார்த்து மனஞ்சகியாது இவனை முண்டமாய் விழும்படிச்செய்த அவளை யிதோ வெட்டுகிறேனென்று வாளாயுத்ததைக் கையிலேந்திக்கொண்டு ஓடிவந்தனன். தேவியும் அவனைப்பார்த்து அவன்வரும் வேகத்தினும் அதிவேகமாக ஐந்து பாணங்களைவிட்டு அவ்வைந்திலொன்றால் அவன் பிடித்து வந்தவாளையும் மற்றொன்றால் பிடித்தகையையும் மற்றைமூன்றால் கண்டத்தையும் அறுத்துத்தள்ளினாள் யுத்தத்தில் *துர்மதமும் குரூரமுமுடைய அவ்விருவரும் தேவியினால் சங்கரிக்கப்பட்டுப் போகவும் அவ்விருவருடைய சைனியங்கள் எந்தத்திக்குகளிலுங் கேட்கப்படுந் தேவியினுடைய பாணப்பிரயோக வேகவோசையினால் தேவியே அங்கங்கு மிகுந்த யுத்தஞ்செய்கின்றாளென்றெண்ணிப் பயந்து ஓடிப்போவதற்குத் தோன்றாமல் எங்கெங்கு எப்படி யெப்படி யிருந்தனவோ அங்கங்கு அப்படியப்படியே மாண்டுபோயின யுத்தத்திலிறவாத தன்மையையுடைய தாம்பிரனும் சிக்ஷுவும் அவர்களுடைய சைநியங்களும் இறந்து கிடப்பதை தேவர்கள் பார்த்து ஜய ஜய வென்று வாழ்த்திப் புஷ்பமாரி பொழிந்தனர். முனிவர்களும் கந்தர்வர்களும் சித்த சாரணர்களும் ஹே அம்பிகே! ஹே தேவி! நீயே யாவரையுஞ் செயிக்கவேண்டுமென்று அடிக்கடியும் புகழ்ந்து கொண்டாடினர். வேதாள முதலியவைகள் இப்போர் நற்போரென்று கூத்தாடின.

பதினான்காம் அத்தியாயம்

தேவ்யாச : சிக்ஷுதாம்பரயோர்யுத்தம் முற்றிற்று.

———

சுலோகம் - (ருசா)

ஆக அத்தியாயம் கசு - க்குச்சுலோகம் (அஉஉ)

———

* தனக்கு மேற்பட்டவரிடத்திற் கொள்ளும் மதம்.

உ

கலிதோஷஹராயை நம:

———

பதினைந்தாம் அத்தியாயம்

* தேவீம்பிரதிஅசிலோமபிடாலாதிபிரஸ்தானம்.

———

ஓ ஜனமேஜயனே! தூதர்களால் மகிஷாசுரன் அந்த இரண்டசுரருமிறந்தாரென்று கேள்விப்பட்டுப் பதைபதைத்துத் துடிதுடித்து அவர்களா இறந்தார்கள்! ஆஹா வென்றாச்சரிய மடைந்து தேவியைச் சங்கரிக்கு நிமித்தம் மகா பலசாலிகளாகியும் வச்சரிகவசதாரிகளாயும் மிகுந்த சைநியத்தோடு கூடினவர்களாயு முள்ள அசிலோமன் பிடாலன் முதலிய துர்மதமுடைய அசுரர்களை யனுப்பினான். அந்த அசுரர்களெல்லாம் சிம்ஹவாகன ரூடையாயும் பதினெட்டுத் திருக்கரங்களோடு கூடினவளாயும் கட்க கேடக முதலிய ஆயுதங்களைத் தரித்தவளாயும் சுந்தரவதியாயு மிருக்கின்ற தேவியை யுத்தபூமியிற் பார்த்தனர். அவர்களுள் அசிலோம னென்பவன் அசுரர்களைக் கொல்வதில் மிக வூக்கமுடையவளா யிருக்கின்ற தேவிக்கெதிரே நின்று விநயத்தோடு வணக்கமுடையவனாயும் சாந்தனாயும் நகை முகனாயும் பின்வருமாறு கூறத்தொடங்கினான்.

ஓ சுந்தரவதியாகிய தேவஸ்திரீயே! நீ யாது காரணமாயிவ்விடம் வந்தனை! உனக்கு யாதொரு குற்றமுஞ் செய்யாத அசுரக் கூட்டங்களை நீ கொலை செய்யுங் காரணமென்னை? அந்தவுண்மையை நீ நிச்சயமாகச் சொல்வாய். ஓ பெண்ணே! பெண்களுக்கு ஆசையாயுள்ள பொருள்கள் சிலவுண்டு. அவையாவன, பொன்னாலும் இரத்தினத்தினாலும் ஆகிய அபரணவகைகள் பாத்திர வகைகள் முதலியனவாம். இவைகளைத்தான் நீயும் இச்சித்திருப்பாய் அது உண்மையாயின் மேற்சொல்லிய வகைகளையும் அதுவன்றி நீ இச்சித்திருக்கின்றவை எவைகளோ அவைகளையும் வெளிப்படுத்தி நான் வந்த காரணமிதுவென்றும் சொல்லுவையேயாயின் அவை யாவையும் நாளை யென்பதில்லாமல் இப்பொழுது நானே கொடுத்து உன்னைத் திருப்தி செய்துவித்துப் பின்னர் என்னாற் கொடுக்கப்படும் பொன்மணி முதலியவைகளும் மகிஷாசுரனுடைய நட்பும்பெற்று உன்னிடம் உடனேபோகலாம். இவ்வாறு உன்னுடைய இச்சையை

* தேவியைக் குறித்து அசிலோமன் பிடாலன் முதலியவர்கள் பிராயாணப்படுதல்.

வெளிப்படுத்தி வேண்டியதைப் பெற்றுக்கொண்டு போவதை விட்டு அந்தோ! வீணாக யுத்தத்தை யேனபேக்ஷிக்கின்றாய். இந்த யுத்தத்தாலென்ன சுகம். ஒருக்கால் வெற்றியாகிய சுகம் வந்தாலும் வரும். தோல்வியாகிய துக்கம் வந்தாலும் வரும். முன் சொன்னவற்றில் எப்பொழுதுஞ் சுகமன்றித்துக்கமென்பது கிடையவே கிடையாது. ஆனால் இப்பொழுது உனக்கே ஜயமுண்டாகிறபடியால் நமக்கே ஜயமுண்டாகிறது. இப்படியே இன்னமுமுண்டாகும் இதுவே நமக்குச் சுகமென்றெண்ணுவாய். அப்படி யெண்ணுவதற்குக் கூடாது. அபஜயம் வந்தாலும் வருமே வந்தாலென் செய்வாய். அப்பொழுது துக்கந்தானே யுண்டாகும். ஆனால் பெரியோர்கள் யுத்தமே சர்வசுகங்களையுங் கொடுப்பதென்று சொல்லுகிறார்களே யெனின், அதுமிகவும் மிருதுவாகிய மலர் பட்டாலும் தாங்காத மேனியைப் படைத்திருக்கின்ற உனக்கன்று. உன் மேனியில் இந்தப்பாணங்கள் படுமாயின் என்னகதியாம். இதனை யோசிக்காம லிருக்கின்றனையே என்று மிகவும் ஆச்சரியப்படுகின்றேன். இது ஒரு சாமர்த்தியமா? சாமர்த்தியத்திற்குப் பிரயோஜன மெதுவென்றால் சாந்தமாயிருத்தலும், அமைந்த தொழிலில் திருப்தியுற்றிருத்தலுமாம்.

அது வொழிந்து குரோதத்தோடுங் கூடி துக்கயேதுவாயிருக்கின்ற யுத்தஞ்செய்து பிராணனையிழப்பதா சுகமாகும். உலகதருமம் எதுவென்றால் சுகத்தைக்கொள்ளலும்துக்கத்தைவிடுவதுமாம். அந்தச் சுகம் நித்தியம் அநித்தியமென்றிருவகைப்படும். நித்தியசுகமாவது ஆத்மஞானத்தினா லுண்டாகுஞ்சுகம். அநித்தியசுகமாவது போகத்தினால் விளையுஞ்சுகம். இவற்றுள் வேதசாஸ்திர தத்துவ சிந்தனையுடையவர்கள் அநித்தியசுகத்தை அருவறுத்துவிட்டு நித்ய சுகத்தையே விரும்புவார்கள். அந்நித்தியசுகத்துக்கு யோக்கியமல்லாதார் அநித்தியசுகத்தையே விரும்புவார்கள். நீயும் இதனையே விரும்பத்தக்கவள். ஆகலின் அதனையபேக்ஷிப்பையேல் நீயடைந்திருக்கிற யௌவனதிசைக்குரிய சிறந்தபோகங்களை யனுபவிப்பதேயாம் அதனையநுபவிப்பாய். இப்போகத்தை விரும்புவோமாயின் பரலோகசுகம் போகுமேயென்று சிந்திப்பாய். அதற்கு நானோ ருண்மைகூறுகின்றேன். பரலோகத்திலனுபவிக்கப் போகிற சுகம் இந்த லோகசுகமல்லாமல் வேறாயிருக்குமாயின் அப்பொழுது இந்தப்போகத்தை வெறுக்கவேண்டியதே, இதுவே அங்குமாயின் அதற்குத் தவமுதலியன விரும்பித் தேகத்தை வாட்டி யொழிப்பது அறிவீனமல்லவா? ஆகலின் அந்தச்சுகத்தைக் கிடைக்கப் பெற்ற இவ்வுலகிலேயே சுகமா யிந்தத் தேகத்தாலனுபவிக்கலாம். ஆனால் அந்தச்சுகத்துக்குயௌவனம் முக்கியசாதனமாகலான். அது

தேகத்தில் அநித்தியத்தையடையாமல் நித்தியமாய் நன்றாயிருக்கும் பொழுதே அதற்குரியபோகங்களையநுபவித்தல்வேண்டும். இந்தவுண்மையை யறியாமல் தேகத்தைவாட்டி உயிரைவருத்த லறமாகுமா? பண்டிதர்களாயுள்ளவர்பிறவுயிரைத் துன்பப்படுத்தக் கூடாது. ஏனெனில்! புருடரா லடைத்தக்கது அறம்பொருளின்பம். இன்பமாவது சாமம். ஒன்றற்கொன்று விரோதமில்லாத அம்மூன்றையும் நடத்தவேண்டுமல்லவா? ஆகையால் காமத்துக்கிடமாயிருக்கிற தேகத்தினிடத்தில் எப்பொழுதும் பிரியமுடையராயிருத்தலே அறமாகும். அங்ஙனமிருக்க நல்லசரீரத்தைப் படைத்தவர்களைக் கொல்லநினைதல் அறமாகுமா? இந்த நீதியை மறந்து ஒரு குற்றமுமில்லாத அசுரர்களைக் கொல்லுகின்றனையே ஓமங்கையே! என்னுடைய மதம் என்னையெனின்! சரீரத்தினிடத்தில் பிரியமாயிருத்தலே அறமெனவும். பொய்சொல்லாமையே பிராணனெனவுங்கொள்வதாகும். ஆகையால் பண்டிதர்களாயுள்ளவர்கள் தயையையும், சத்தியத்தையும் பாதுகாத்தல் வேண்டும். ஓ பெண்ணே! உனக்குத் தானவர்களைக் கொல்லவேண்டுமென்கிற காரணமென்ன வென்று அசுரன்கேட்க, தேவி ஓ அசுரா! நீ என்னை என்ன காரணமாய் இங்குவந்தனையென்றாய். நானிங் கிப்போது வந்தே னென்பதுமில்லை இனிப்போவேனென்பதுமில்லை. எங்குந்தானுள்ள வள் அதனை நீயறியாய். அதைச்சொல்லவேண்டிய அவசியமு மிப்போதில்லை. அசுரசம்ஹாரத்திலுண்டாகும் பிரயோஜனமென்னை யென்று ஒன்றுகேட்டனை. நானெத் தன்மையளென்றால் அதனைச் சொல்லுகிறேன். சகலப்பிராணிகளுடைய நீதி அநீதிகளை நடுவு நிலைமையாகப்பார்க்கின்ற சாக்ஷிரூபிணி. ஆகலான் நீ சொன்னது போலப்போக, லோப, வைரங்களை விரும்பத்தக்கவளல்ல. எனக்கு இவ்வுலகில் வேண்டியவர் வேண்டாதவரென்பது கிடையாது ஆனால் நான் அங்குங்கு தர்மார்த்தமாய் வெளிப்படுகின்றவள். எக்காலத்தும் என் மனதுக்குச் சம்மதமாயுள்ள விரதமொன்றிருக்கின்றது. அஃதாவது சாதுக்களை ரக்ஷிக்கும்பொருட்டு அசாதுக்களைத் தண்டித்தல். அசாதுக்களைத் தண்டிக்காமற்போனால் சாதுக்களை ரக்ஷித்தலென்பது ஏது? ஆகவே அதனையே எப்பொழுதும் பரிபாலித்துவருகின்ற வளாதலால் அநேக விதமாய் அவ்வச்சமயங்களுக்கு ஏற்றவா றுருவங் கொண்டு சாதுக்களாகிய தேவர்களை ரக்ஷித்து வருகிறேன். யுகந் தோறும் எவரெவர்கள் அவதரித்து அசாதுக்களைக் கண்டித்து சாதுக்களை ரக்ஷிக்கின்றனரோ அவர்களுடைய வுருவங்களும் நானென்றே யெண்ணுவாய். இச்சமயம் மகிஷன் துர்நடத்தை யுடையவனாயும் தேவதைகளைச் சங்கரிக்கின்றவனாயும்

இருக்கின்றான். ஓ அசுரனே! நானதைத்தெரிந்து கொண்டிருப்பொழுது அவனை வதம்பண்ணு நிமித்தம் வந்திருக்கிறேன். பலிஷ்டனாயும் தீய நடத்தையுள்ளவனாயும் தேவசத்ருவாயு மிருக்கின்ற அவனைச் சங்கரிப்பேன். நீ போனாற்போ இருந்தாலிரு. இப்பொழுது நான் சொல்லிய துண்மை. துராத்மாவாயும் எருமை மகனாயு மிருக்கின்ற அவனிடஞ்சென்று நான்சொல்லியதாகச் சில வார்த்தைகளைச் சொல்வாய். என்னையெனின்! இதரர்களை ஏன்னுப்புகிறாய் நீயே யுத்தத்துக்குவருவாய். என்னுடன் உனக்கு சந்திபண்ணிக் கொள்ள வேண்டு மென்றிருந்தால் எல்லாவசுரர்களும் தேவர்களிடங் கொண்டிருக்கும் வைரத்தை விட்டுப் பூர்வம் அவர்களிடத்தில் யுத்தஞ்செய்து அபகரித்த திரவியங்களை அவரவர்களிடத்தில் கொடுத்து விட்டுப் பாதாளத்தில் பிரகலாதனுக்கு வாசஸ்தானமாயுள்ள விடத்தில் நீங்களும் போய்ச் சேருங்க ளென்று சொல்லுவா யென்று தேவி சொல்லிய வார்த்தையை எதிரே நின்ற அசிலோமன் கேட்டுத் தன்னுடன் வந்து பிடாலனைப் பார்த்து மிகவும் பிரியத்துடன் ஓ பிடாலனே! இந்த தேவஸ்திரீ சொல்லி வந்தத்கைக் கேட்டாயன்றோ? இப்பொழுது நாம் யுத்தஞ் செய்யலாமா? அல்லது சந்தி செய்யலாமா? எது செய்யத்தக்கது அதனை நீ சொல்வாயென்று கேட்க அப்பிடாலன் ஓ அசிலோமனே! இப்போது நேரிட்ட யுத்தத்தில் அரசன் தனக்கு மரணம் வருமென்பது தெரிந்திருந்தும் யுத்தஞ் செய்ய வேண்டுமென்றே அகங்காரங் கொண்டிருக்கின்றான். அதுவுமன்றி யுத்தத்திலிறந்து போனவர்களைப் பார்த்தும் மேன்மேலு நம்மனோரை யனுப்பிக் கொண்டிருக்கின்றான். இதுகாலபலமல்லவா அந்தக்காலத்தைக் கடப்பதற்கு எவன் சாமரத்திய முள்ளவன். ஆகையினால் அவனுக்கோ மரணகாலம் வந்திருககிறது. நாமோ அவர்களுக்குச் சேவகர்களாயிருக் கின்றோம். நமக்கு மானமேது? மானத்தை விட்டவர்கள் தானே சேவகாவிருத்திக்கு வரத்தக்கவர்கள். இப்போது சேவர்களாயிருக்கிற நாம் அவள் சொல்லிய தருமத்தை யாலோசித்து அதுபோல் செய்வ தென்றால் அது சாத்தியமாகுமா? அவன் சொல்லியபடி செய்வதே நமக்குச்சாத்தியம் ஏனென்றால் நாம் அவன் *ஆக்ஞைக் குட்பட்டவர்களாயும் அவன் திரவியத்தைப்பெற்று அதனாலேயே வளர்ந்து சகலசுகத்தையு மநுபவித்தவர்களாயு மிருக்கிறோ மாகையால் நாம் சூத்திரத்தா லசைவிக்க அசையும் பதுமையைப் போல் நடிக்கும் யோக்யுதை யுடையவர்களாயிருக்கின்றோமேயன்றி நாமொன்றைச் சொல்லச் சுதந்தரமுடையோமல்லேம். அவனெதிரிற்போய் நீர் பூர்வத்தில் தேவர்களிடத்தில் கொள்ளையடித்த திரவியமுதலியவற்றை

* ஆக்ஞை - ஆணை (கட்டளை)

அவர்களிடத்தில் கொடுத்துவிட்டு நீர்பாதாளம்போய்ச் சேருமென்கிற இந்தக்கொடூரமான வார்த்தையை எப்படிச் சொல்லுகிறது. உலகத்தில் யாவருக்கும் மேன்மேல் க்ஷேமத்தைச்செய்வதாகிய வார்த்தை பிரியப்படாது. இதுபோலவே உண்மையான வார்த்தையும் பிரியப்படுகிறதில்லை. ஆகவே புத்திமான்களாயுள்ளவர்கள் இந்த இதமானவார்த்தையையும் பொய்சொல்லுவதையும் விட்டுமௌன மாயிருத்தலே யுக்தமென்றிருப்பார்கள். வீரர்களாயுள்ள மந்திரிகள் அரசனிடத்தில் குறைவான வார்த்தைகளைச் சொல்லக்கூடாதென்று நீதிநூலிற் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் அரசனிடம் நாம் அன்புடனே இதமானவார்த்தைகளைச் சொல்வோமென்றுபோதல் யுக்தமன்று ஒருக்கால் போய்ச்சொன்னாலும் கேட்கும்போதே கோபம்வந்துவிடும். அதனையும் பின்வருவனவற்றையும் யோசித்து அவனிடத்ததிற்போவதையும் பிராணஹானி வரமாட்டாதென்கிற வெண்ணத்தையும் விட்டு மரணத்தைத்திரணமாக நினைத்து நம்மரசனுடைய காரியத்தையே விசேடமாக நினைத்துயுத்தஞ் செய்ய வேண்டுமென்று இருவரும் யோசித்து ரதத்தின்மேலேறிவில்லைத் தாங்கி சேனாசமுத்திரஞ் சூழ்ந்துவரச் சென்று முன்னர் பிடாலன் ஏழுபாணங்களைத் தேவியின் மீது விட்டனன். அசிலோ மனென்பவன் அஸ்திரவித்தையில் வல்லவனாயிருந்தும் சமீபத்திலில்லாமல் தூரத்திற்றானேயிருந்து பார்த்துக்கொண்டிருந்தனன். தேவி படாலன் விட்ட பாணங்களைப் பார்த்துத் தான் ஏழு பாணங்களை விட்டுக் கண்டித்து வேறு மூன்று பாணங்களால் பிடாலனை அடித்தனள். அடிக்கவும் அப்பிடாலன் மிகநொந்து மூர்ச்சையடைந்து பூமியில் வீழ்ந்துயிர் மாண்டனன். அசிலோமன் இப்பிடாலனுயிர் மாண்டதைப் பார்த்து யுத்தததில் வீரங்கொண்டவனாய் வில்லேந்தி தேவியின் முன்வந்து இடதுகையை மேலே தூக்கி அதிகமான வார்த்தையைச் சொல்லாமல் அடியில் வருமாறு சிலவார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினான். துஷ்டபுத்தி யுள்ளவர்களாகிய இவ்வசுரர்க ளெல்லாம் மரணமடைவார்க ளென்பதை நானறிந்தவனா யிருந்தும் மகிஷனுடைய சுவாதீனனாயிருப்பதால் யுத்தஞ்செய்ய வேண்டியவனேயாவன். ஏனெனில் மகிஷன் அறிவில்லாதவனாயிருக்கிறபடியால் இதுநல்லது இதுகெட்டது என்கிறதையறியான். அவனெதிரில் நானின்று இதமானவார்த்தைகளைச் சொல்லுவதற்குக்கூடுமாகூடாது. ஆகலான் இப்பொழுது நான் யுத்தஞ்செய்கிறேன் செய்யும் பக்ஷத்தில் ஜயம்வந்தாலுஞ்சரி அபஜயம் வந்தாலும் சரி வீரதர்மத்தைவிடாமல் யுத்தமுகத்திலேயே மரணமடைகிறேன். இதுவரையில் வீரமுடைய அசுரர்கள் உன்னுடைய பாணத்தாலநேகம் பேரிறந்தனர்

வீரத்தாலொன்றுமில்லை அதைநெருப்பிற்சுடவேண்டும் எல்லாம் தெய்வத்ததின்வல்லபமே. அதற்குமுன் ஒன்றும் நில்லாவென்று சொல்லிப் பின்னர் பாணங்களை அநேகமாய்ப்பொழிந்தனன். தேவியும் அப்பாணங்களையெல்லாம்வெட்டி தேவர்களிடம் கிருபாநோக்கம் வைத்து கோபநிறைந்த முகமுடையளாய் வேறுசிலபாணங்களா லவனையடித்தனள். அசிலோமன் அப்பாணங்களாலடிபட்டுச் சரீரமுற்றும் உதிரப்பெருக்குடையவனாய் முருக்கமலர்போல் செந்நிறமாய்ப் பிரகாசித்தான். அப்போது செம்பினாற் செய்த ஓர் கதை யெடுத்துவந்து கோபத்தோடு சிங்கத்தின் தலைமேலோங்கியடிக்க சிம்ஹமும் அவ்வடியைப் பொருட்படுத்தாமல் உதாசீனப்படுத்தி அவன் மார்பில் தன்னகங்களாற் பீறியது. மீளவும் அசிலோமன் கதையோ டெழுந்து பாய்ந்து சிங்கத்தின்மேற்குதித்து அத்தேவியைக் கதையாலடித்தனன். ஓ ஜனமேஜயனே! அவனடித்ததை லக்ஷயஞ்செய்யாமல் கூரிய வாளினால் அவன்றலையை வெட்டித் தள்ள அசிலோமனும் பூமியில் வீழ்ந்தனன். துராத்மாவாகிய அவன் சைனியத்தில் ஓ வென்கிற வோசை பெருக்கெடுத் தொலித்தது. தேவர்கள் உலகமாதாவாகிய அம்பிகையை ஜயஜய வென்று ஸ்தோத்திரஞ்செய்து தேவதுந்துபியை முழக்கக் கின்னரர் கீதம்பாடினர்.

சிம்ஹமானது இறந்து போயிருக்கின்ற பிடாலன் அசிலோமனென்கிறவர்களைப் பார்த்து சேனைகளிலுள்ள சிலரை எட்டிய வரையில் பிடித்து அடித்துக்கொன்று பக்ஷித்தது. காயமடைந்த சிலர் துன்பமுற்று மகிஷனிடத்திலோடி ஓ அரசனே! அசிலோமனும் பிடாலனுமாண்டனர்; எங்களை ரக்ஷிக்கவேண்டும் ரக்ஷிக்க வேண்டும். மகா பலசாலிகளான சேனாவீரர்களைச் சிங்கம் பக்ஷித்து விட்டது. ஒரு வீரனுமில்லையென்று சொல்ல, மகிஷன் கலக்கமுற்று * சிந்தாகுலமடைந்து ஒன்றுந் தோன்றாதவனாய்ப் பிரமித்திருந்தனன்.

பதினைந்தாம் அத்தியாயம்

தேவீம்பிரதி அசிலோமபிடாலாதிப்ரஸ்தானம் முற்றிற்று.

———

சுலோகம் (ருகூ)

ஆஉ அத்தியாயம் கரு - க்குச் சுலோகம் (அஅக)

———

* சிந்தாகுல - மனக்கவலை

உ

கஞ்சலோசனாயை நம:

பதினாறாம் அத்தியாயம்

தேவீ மகிஷசம்வாதம்

ஓ அரசனே! தூதர்களால் வீரர்களிறந்ததை மகிஷாசுரன் கேட்டு கோபமுடையவனாய்த் தாருக னென்னும் ரதசாரதியைக் கூவி நம்முடைய அதிவிநோதமாகிய ரதத்தைக்கொண்டு வருவாயென்று சொல்ல அவன் ஆயிரங் கோவேறு கழுதைகள் கட்டிய தாயும் வெற்றிக் கொடிகளால் அலங்கரிக்கப் பெற்றதாயும் ஆயுதங்களால் நிறைந்துள்ளதாயும் நல்லவேகத்தோடு கூடிய வுருளையை யுடையதாயும் உன்னதமான ஏர்க்காலுடைய தாயுமுள்ள அழகிற் சிறந்தரதத்தைச் சாரதியானவன் அதிவேகத்துடன் கொண்டுவந்து நிறுத்தி ஓ அரசனே! இதோரதத்தைக் கொண்டுவந்தேனென் றறிக்கையிட்டுத்துவாரத்திலிருந்தனன். அதனைச்சர்வாயுதபாணியாய்ச் சிறந்த சிம்ஹாதனத்தில் வீற்றிருந்த மகிஷன் கேட்டு அக்கணமே புறப்பட்டு நாம் பார்ப்பதற்கு அருவருப்புள்ள நீண்டு கொம்புகளோடு கூடிய கடாரூபமாய்ச் செல்வோமாயின் நம்மை அந்தத்தேவி பார்க்கும் பொழுதே நம்மிடத்தில் விருப்பங் கொள்ளும் மனமில்லாதவ ளாய்விடுவாள். உலகின்கண் பெண்களானவர் அழகிற் சிறந்த புருஷனை விரும்புவார்களே யன்றி அரசாக்ஷி முதலிய செல்வங்களைப் பார்த்து விரும்புவரே! ஆகையால் நாம் எந்த வுருவத்தை யெடுத்தால் அவ்வழகுள்ள ஸ்திரீயானவள் மோகத்தை யடைவாளோ அவ்வுருவத்தை யெடுத்து நாம் போதல் வேண்டும். அப்போது தான் அவளால் நமக்குண்டாகத்தக்க சுகமுங் கிடைக்கும் அதுவன்றி வேறு வடிவங் கொண்டு போவோமானால் சுகமுண்டாக மாட்டாதென்று மகாபாபியாகிய மகிஷாசுரன் ஆலோசித்துச் சர்வாயுத பாணியாய் திவ்யாம்பர தாரியாய்ப் பிரத்யக்ஷ மன்மதன் போல் நல்ல யௌவன புருஷனாய்த் தோளணி யணிந்து வெற்றிமாலை புனைந்து தனுர்ப்பாணங்களை யெடுத்து ரதத்திலேறி எவ்வளவு வீர பதிவிரதையாயிருந்த போதிலும் அவள் கண்டமாத்திரத்தில் அதை விடத்தக்க ரூபமெடுத்து நாற்படை களுஞ் சூழ்ந்துவர மதகர்வத் தோடுந் தேவியை நோக்கிச் சென்றனன். மனதினால் இவ்வண்ண மென்று மதிக்கக் கூடாத பேரழகோடும் வருகின்ற மகிஷனைத் தேவி

பார்த்து சங்கத்தொனி செய்தனள். சேனைகளுக் கெல்லாம் ஆச்சரியத்தை விளைவிப்பதாகிய அந்தச்சங்கத்தொனியை அசுரன் கேட்டு சிறிதுமஞ்சாது தேவியினுடைய சமீபம் போய்ப் புன்னகை செய்து சொல்லத் தொடங்கினன்.

ஓ தேவமங்கையே! இவ்வுலகிலுள்ள இச்சம்சாரசக்கரத்தில் புருடர்களும் சுகத்தையே பெரும்பாலும் அபேக்ஷிக்கின்றனர். அந்தச்சுகமானது ஒருவரோடொருவர் கூடுவதனா லுண்டாவதன்றித் தனியாகவிருந்தா லுண்டாவதில்லை. அந்தச் சுகமும் கூடும் கூட்டத்தினளவாயும் விவகாரானுசாரமாயும் பலபலவிதமாய் விளைகின்றன. அவைகளைச் சொல்லுகின்றேன் கேட்பாயாக. நான் சொல்லப்போகிறது மகா ஆச்சரியகரமாயும் சந்தோஷத்தை விளைவிப்பதற்கேது வாயும் அவரவர் பிரியத்துக்குத்தக்கவாறு அநேகவிதமான சுகத்தைவிளைவிப்பதாயுமுள்ளது. எங்ஙனமெனின்! மாதா பிதாக்களுக்குத் தங்களுடைய மக்கண்மெய்தீண்டல் முதலியன நேரிடுங்காலத்திலுண்டாகுஞ் சுகம் நீங்காதிருப்ப தாகலான் அது உத்தம சுகமெனவும், சகோதரர்கள் ஒருவரோடொருவர் கூடுங்காலத்தி லுண்டாகுஞ்சுகம் மத்திமசுகமெனவுங் கூறுகின்றனர். இந்த வேற்றுமைகளை அவரவ ரனுபவத்திலறியலாம். அநேகவிதமான தொழில்களில் சம்பந்தித்திருக்கிற சித்தமுடையவர்களாயும் வீணான பிரசங்கவிஷயத்தில் பிரியமுடையவர்களாயும் இவ்வண்ணமே நூதனமாயப்போதப்போதும் கூடுகின்றவர்களுக் குண்டாகும் சுகம் சுபாவமாகவுள்ள தருமமென்று பண்டிதர் சொல்வார்கள். இப்பொழுது சொல்லிவந்தவையன்றி மிகச்சிறிய சுகமென்றும் மிகப்பெரிய சுகமென்றும் இரண்டுள. என்னையெனின், கனிஷ்ட சகோதரனுடைய சம்பந்தத்தாலுண்டாகும் சுகம் மிகச்சிறிய சுகமெனவும், உலகில் சகலசுகத்தையுங் கொடுப்பதாகிய சையோகத்தலுண்டாகுஞ் சுகம் மிகப் பெரிய சுகமெனவுங் கூறுவதேயாம். இந்த உத்தமமான சையோக சுகந்தான் சம்சாரத்தில் எப்பொழுதும் சுகத்தைக்கொடுக்கிறது. ஓ சுந்தரவதியே! சமானமான வயதுள்ள ஸ்திரீ புருஷர்களுடைய ◆சையோகம் உத்தம சுகமென்றும். அதனினும் சாதுர்யம் வடிவம் அலங்காரமுதலியவைகளும் குலம் சீலம் குணமுதலியவைகளும் அமைந்துள்ளாருடைய சுகம் அளவுபடாத தென்றுங் கூறுகின்றனர். ஓ அன்புடையாளே! நீ ஒன்றுக் கொன்றுயர்ந்தனவாகிய அவையெல்லாம் ஒருங்கேயுடையவளா யிருத்தலால் என்னோடு கூடுவாய். கூடுவையாயின் உனக்கு மிகுந்த சுகங்கிடைக்கும். அதிற் சந்தேகமில்லை. நானோ உன்னுடைய சுகத்துக்கேற்றவாறு நானாவித ரூபங்களை எடுப்பதற்கு ஒருவருடைய அனுக்கிரகமும் வேண்டாம்

◆ சையோகம் - புணர்ச்சி

என்னுடைய ◆ஸ்வேச்சையினாலேயே எடுத்துக்கொள்வேன். இந்திரன் முதலியதேவர்கள் யுத்தத்தில் என்னால் செயிக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களுடைய செல்வங்களெல்லாம் என் வீட்டிலிருக்கின்றன. அவைகளை நீ இஷ்டப்படி அனுபவிக்கலாம். அச்செல்வங்களை நீ மதிக்காது தானஞ்செய்ய வெண்ணினாலும் செய்து விடலாம். இவையெல்லாம் எனக்குப்பெருஞ்செல்வமல்ல. நீ எனக்கு மகிஷியாய் வருதலே நானடையப்பெறாத பெருஞ்செல்வமாம். நான் உனக்குத் தாசனாய்விட்டேன். நீ என்னைப்பார்த்து உனக்குத் தேவர்களிடத்தில் வைரம் வேண்டாமென்று சென்னாலும் அப்படியே விட்டு விடுகிறேன். உனக்கு எதைச்செய்தால் சுகமோ அதைச்செய்கிறேன். ஓ விசாலாக்ஷி! எனக்கு என்ன கட்டளை யிடுகின்றாய். அந்தக் கட்டளையை நான் கடக்கமாட்டேன் என்னுடைய சித்தமானது உன்னுடைய வடிவத்தில் மோகித்து மயங்கிக் கிடக்கின்றது. நான் உன்னுடைய அழகினால் பீடிக்கப் பட்டவனா யுன்னைச் சரணமடைந்தேன் மன்மத பாணத்தால் வருந்துகிறேன் ரக்ஷிப்பாயாக. தருமத்திற் சிறந்த தருமம் சரணாகதி யடைந்த வரை ரக்ஷித்தலல்லவா! ஒநுண்ணிய இடையை யுடையாளே! உனக்கு ஏவலாளிநான். ஆகலான் இனி நீ என்னைப் பார்த்து இறந்து போவா யென்று சொன்னாலும் அதைச் செய்வேனே யன்றி நான் இவள் சொல்லைக் கேட்டு இறந்து போவதா வென்று அச்செயலைச் செய்யாதிறேன். ஆயுதபாணியாய்ப் போர் செய்ய வந்த நான் நிராயுதபாணியாய்ச் சரணம் சரணமென்று உன்சரணம் புகுந்தேனே. இதனையாவது பார்த்திரங்குவாய்! அந்தோ! உன்னிடத்தில் வார்த்தையாடிக் கொண்டிருக்கின்ற போதே என்பேரில் மன்மதன் பாணப் பிரயோகஞ் செய்கின்றானே! உனக்கு என் மாட்டிரக்க மில்லையே தயை செய்வாயாக. ஓ காமரூபிணீ! நான் பிறந்த நாள் தொட்டு மஹாப்ரமுகாளாகிய பிரமனாதிய ரிடத்தும் தீனமாகிய வார்த்தையைச் சொன்னதில்லையே! அப்படிப்பட்ட நான் இப்பொழுது ஒருசிறிய பெண்பாலாகிய உன்னிடத்தில் அதி தீனமான வார்த்தைகளைப் பலகாலுஞ் சொல்லுகின்றேனே! நான் தீனனாய்த் தீனமான வார்த்தைகளைச் சொல்லுதனாலேயே என்னை நீ தீனனென்றே எண்ணினாற் போலும். அந்தோ! இதுவும் என்னுடைய காலந்தான். என்னுடைய வீரபராக்கிரமச்செயலையும் சொல்லையும் யுத்தமுகத்தில் அறிந்தவர் பிரமனாதியரன்றோ. அவற்றை நீ அறிவதற்கில்லாமற் போயிற்றே. நீ அறியவருமாயின் நான் உனக்குச் சரண மென்றபோதே என்னை நீ சந்தோஷப் படித்திருப்பாய். இப்பொழுது அதனை யெடுத்துப் பேசுவதனாலென்! ஓ பூங்கொடி போல்பவளே! நான் உனக்குத்தாசன். என்முகத்தைப் பாரென்று

◆ ஸ்வேச்சையினாலேயே - தன்னிச்சையினாலேயே

காமவெறி கொண்டு பிதற்றுகின்ற அசுரனுடைய வார்த்தைகளை அம்பிகை கேட்டுப் புன்னகை செய்து கூறுகின்றாள்.

ஓ அறிவிலரிற் சிறந்த பெரியோனே! உன் செய்தியை நான் அறியாதவளென்றெண்ணாதே! எல்லாம்மறிந்தவள் தான். நீ தான் என் செய்தியை அறியாதவன். நீ என்னைச் சரணமடைந்தே னென்பதும் எனக்குத்தாச னென்பதும் ஒருருமையா! நான் பரமபுருஷனாகிய பரமசிவப் பிரபுவைத் தவிர வேறொரு புருஷனை இச்சியேன். அப்பரமசிவ சம்பந்தியான நான் சகல ◆சகத்தையுஞ் ✠சங்கரித்து ❄மீளவுஞ் சிருட்டிக் கின்றேன். என்முன் நீ தேவர்களைக் கொன்றே னென்றதனாலும் அவர்களுடைய செல்வம் என்பால் உள்ள தென்றதனாலும் எனக்கென்ன ஆச்சரியம். நீ இன்றுள்ளவன் நான் என்று முள்ளவன். என்னைப் பார்க்க உன்னாலாகுமா! என்னைப் பார்க்கக் கூடாத உன்னை நான் பார்ப்பேனா! என்னைப் பார்ப்பவர் சர்வேந்திரியாமியா யிருப்பவர் தாம். நான் அவருக்கு மங்களைகரையா யிருக்கின்ற ஆஜ்ஞாசத்தி யாகும். அவருடைய சாந்நித்திய விசேஷத்தி னாலேயே என்னிடத்தில் ஞானம் நிலையாயிருக்கின்றது. நானோ பிரகிருதி. பிரகிருதியாகிய நான் அவருடைய சம்யோக பலத்தினால் சேதனத்வ முடையவளாயிருக்கின்றேன். எதுபோலெனின்? காந்த சந்நிதானத்தில் சடமாகிய இரும்பு சேதனத்தை எவ்வண்ணம் அடைகிறதோ அது போலென்க. இத்தன்மையளாய சிவசத்தியாகிய என்னைச் சம்சாரமாகிய பந்தத்திலுழலும் ஓர் பெண்ணாக எண்ணினை போலும். நான் சம்சார சக்தியல்ல, யாவருக்கும் சம்சார துக்கத்தைப் போக்கடிக்கின்ற வளாகும். எனக்குத் துக்கமாகிய சம்சாரத்தில் ஆசையுண்டாகியதே யில்லை. ஓ மூர்க்கனே! உன்னைப் போல் மூடனும் மந்தனும் உலகிலுண்டோ! ஸ்திரீசுகத்தை ஓர்சுகமாக எண்ணுகின்றனையே! மானுடனைக் கட்டுவதற்கு ஸ்திரீயைக் சங்கிலியாகச் சொல்லப்பட்டிருக்கின்றதே அதனை நீ கேட்டதில்லையா! இருப்புச்சங்கிலி ஒரு சமயம் அறுப்பட்டாலும் அறுபடும். ஸ்திரீ என்கிற சங்கிலி எப்பொழுதும் அறுபடாதல்லவா! அந்தோ! துர்க்கந்தமாகிய சிறுநீருக்கிடமாயுள்ள ஸ்தானத்தை என்ன சுகங்கண்டு இச்சிக்கின்றாய். சுகம் வேண்டுமாயின் இந்திரிய நிக்கிரகஞ் செய்து அந்தநிக்கிரத்தால் சுகமடைவாய் ஸ்திரீ சங்கமத்தில் அதிக துக்க முண்டென்பதை யறிந்திருப்பையாயின் நீ ஏன் என்னைக் கண்டு மோகிக்கின்றாய். உனக்குத் தேவர்களிடத்தில் உண்டாயிருக்குந் துவேஷமே மரணத்துக்கு ஹேது வென்றறிந்தேன். இப்பொழுது என்னிடத்திலுண்டாகிய மோகம் அது நிச்சயந்தானென் றறிதற்குப் பிரமாணமாக முடிந்தது. ஓ பேதாய்! இனி நீ பிழைத்திருக்க

◆ சகத்தை - உலகத்தை ✠ சங்கரித்து - அழித்து ❄ மீளவுஞ் -மீண்டும்

வேண்டுவையாயின் தேவர்களிடத்தில் உண்டாயிருக்குந் துவேஷத்தைவிடுவாய். அதனைவிட்டுப் பூலோகத்தில் இஷ்டப்படி சஞ்சரிப்பாய். இல்லாவிடின் பாதாளம் போய்ச்சேர்வாய். அப்படிக்கில்லா விடில்யுத்தஞ்செய். உன்னைக் கொல்லும் பொருட்டுத் தேவர்களால் அனுப்பப்பட்ட நான் பலமுள்ளவளாகவிருக்கின்றேன். இப்பொழு தென்னாற் சொல்லப்பட்ட இதனைச் சத்தியமென்றெண்ணுவாய். சுகமாய்ப்பிழைத்திருக்க வேண்டுமென்று நீ இப்பொழுது என்னைக் கேட்டாலும் விட்டு விடுகிறேன். பிழைத்திருக்க வேண்டுமென்கிற உன்னைக்கொல்லு மெண்ணம் எனக்குக் கிடையாது. ஏனெனில், சத்புருஷர்களா யுள்ளவர் தம்மிடத்து இனிமையாயுள்ள வார்த்தைகளில் ஏழுவார்த்தையாவது ஒருவன் சொல்வானாயின் அவனிடத்தில் அவர்களுக்குச் சினேகமுண்டாகிற தென்று சொல்லப்பட்டிருக்கின்றது. நீயும் நான் உனக்குத் தாசன் நீ சொல்லுஞ்சொல்லை தடுக்கமாட்டேனென்கிற சில இரக்கமொழிகளைக் கூறியிருக்கின்றா யாகையால் உன்னைக் கொல்லாது விடுகிறேனென்கின்றேன். ஓ அசுரனே! உனக்குயுத்தஞ் செய்து மாண்டுபோவது சுகமென்று தோன்றுகிறதா! அது செய்யாது பிழைத்திருப்பது சுகமென்று தோன்றுகிறதா! உன்னிஷ்டத்தைச் சொல்வாயாக. என்னை யுத்தஞ்செய்வதற்குப் பின்னிட்டவளாக நீ நினையற்க. உன்னைக் கொன்றுவிடுவதிற் சந்தேகமே யில்லையென்று கூறினள் பரதேவதை.

இவ்வண்ணஞ் சொல்லக்கேட்ட மகிஷன் காமத்தையே மேற் கொண்டவனாய்த் தேவியைப்பார்த்துசில இனிய வார்த்தைகளைக்கு ரோதமற்றுச் செல்லத் தொடங்கினான். ஓ பேரழகியே எனக்கு யுத்தமென்பது தான் சுகம். ஆயினும் மாநுடரால் மோகிக்கத்தக்க மிருதுவான சரீரத்தைப் படைத்தவளாய்க் காணப்படுகின்றாயாக லான் உன்னைக் கொல்வதற்கு என்னெஞ்சந் துணியவில்லை. அன்றியும், பிரமனாதி தேவர்களை யெல்லாஞ் செயித்து இப்பொழுது பெண்ணாகிய உன்னோடு யுத்தஞ்செய்வது தகுதியாமா! நீ எனக்குச் சொன்னதுபோல் நான் உனக்குச்சில சொல்லுகிறேன். கேட்பாயாக. நீ என்னை விவாகஞ்செய்து கொள்வது சுகமாகத்தோன்றும் பக்ஷத்தில் அதுபோல் செய்துகொள். சுகமில்லையென்று தோன்றும் பக்ஷத்தில் நீ எங்கிருந்து வந்தனையோ அங்கேகுவாய். அப்படிப்போகும் பக்ஷத்தில் உன்னை நான் கொல்லுவதில்லை. இதமாயும் நன்மையாயுமுள்ள வார்த்தைகளை உனக்குச்சொன்னேன். சுகமாய்ப்போ உன்னைக் கொல்வதனால் எனக்கென்ன பெருமையுண்டாகும்! ✡ஸ்திரீஹத்தி செய்தேனென்கிற சிறுமைதானுண்டாகும். ஸ்திரீஹத்தி ⌛சிசுஹத்தி ✿ பிரஹ்ம ஹத்தி முதலிய ஹத்திகளைச் செய்தால் அவைகளால்

✡ ஸ்திரீஹத்தி - பெண் கொலை ⌛ சிசுஹத்தி - சிசுவதை
✿ பிரஹ்மஹத்தி - பிராமணரை கொன்ற தோஷம்

வரும்பாவங்களைத் தாண்டமுடியாது. எனக்கு உன்னிடத்துண்டாயிருக்குங் காமத்தால் நிச்சயமாய் உன்னை எடுத்துக்கொண்டு வீட்டுக்குக் கொண்டுபோய் விடுவேன். கொண்டுபோனாலும் பயனென்னை பலவத்காரத்தால் போக சுகமுண்டாகுமோ! புருடர்களுக்குச்சுகம் ஸ்திரீகளாலும் ஸ்திரீகளுக்குச்சுகம் புருஷர்களாலும் ஸ்திரீ நீங்குவளானால் புருஷனுக்குத் துக்கமும் புருடன் நீங்குலனானால் ஸ்திரீகளுக்குத் துக்கமும் உண்டாகத்தக்கதேயன்றி வேறுவகையினாலில்லை. அந்த நியாயத்தை நான் இன்னமும் யோசித்து உன்னை வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிறேன். எந்த்ச்சத்துருவின் நல்லவஞ்சனையான வார்த்தையினால் என்னை விரும்பாமலிருக்கின்றாய். நீ சர்வாங்க லக்ஷணமும் நிறைந்து சர்வாபரணங்களாலும் அழகுசெய்யப் பெற்றிருக்கின்றதனா லல்லவோ நான் இவ்வளவு துயரப்படும்படியாகவுமாயினேன். அந்தோ! நீ அழகும் அணியும் பெற்றுப் புத்திசாதுர்ய மென்கிற ஒன்றைமாத்திரம் பெறாதிருக்கின்றனையே. இது பெரும்பாவம்!

இனியேனும் உன்னுடைய மூர்க்கத்தனத்தை விட்டு மங்களகரமான விவாகஞ் செய்துகொண்டு என்னிடத்தில் இன்பசுகமுறும் வகையைத் தேடுவாய். அதுசெய்வையாயின் இருவருக்கும் சுகமுண்டாகும். உன்னைப்போலும் சுகமற்றவளை எங்குங்கண்டதில்லை. இலக்ஷுமி தேவியானவள் திருமாலோடும், சரஸ்வதி பிரமனோடும், பார்வதி உருத்திரமூர்த்தியோடும், இந்திராணி இந்திரனோடுங் கூடிச்சுகமனுபவிக்க வில்லையா! எந்த ஸ்திரீதான் பர்த்தாவில்லாம் ஸ்திரமான சுகத்தை யனுபவிக்கின்றாள். அங்ஙனமிருக்க நீ என்ன காரணத்தால் புருஷசுகத்தை எண்ணாமலிருக்கின்றாய். காமாதியாலாகிய மன்மதனும் உன் மேல் ஏன் பாணப் பிரயோகஞ் செய்யாமலிருக்கிறான். அவனும் உன்னைக் கண்டு மதிமயங்கிப் போய் விட்டனனோ? உன் மேல் பாணப்பிரயோகஞ் செய்யாதவன் என்மே லேன்செய்ய வேண்டும். இதனை யாராயுங்கால் எனது சத்துருக்களாகிய தேவர்கள் அவனுக்குத் துர்ப்போதனை செய்து அவனது பாணத்தை அந்தஸ்திரீயின் மேல் விடவேண்டா மென்று தடுத்து என்மேல் விடாது விடும்படிச் செய்தார்கள் போலும்.

மான்போலும் கண்களையும் மிருதுவான மேனியையும் படைத்தவளே! நீ அழகாயும் தனக் கனுகூலனாயுமிருந்த பர்த்தாவை விட்டு மந்தோதரி எப்படி பரிபவப்பட்டனளோ அப்படி ஹிதமாக வந்த என்னைவிட்டுப் பின்பரிபவப்படப் போகின்றாய். பின்னர் அந்த மந்தோதரி ஓர் துஷ்ட பர்த்தாவைப் பெற்றனள் உன்னுடைய

தலைவிதியும் அப்படி தானிருக்கின்றதோ! அறியேன் என்று மகிஷாசுரன் பலபலவாய்ப் புலம்பிக்கிடந்தனன்.

பதினாறாம் அத்தியாயம்

தேவீ மகிஷசம்வாதம் முற்றிற்று.

சுலோகம் - (சாருஏ.)

ஆக அத்தியாயம் கசா - க்குச் சுலோகம். (கூசசளஅ)

உ

கா்மவிக்ரஹாயை நம:

பதினோழாம் அத்தியாயம்

மந்தோதரீ விருத்தாந்தம்

ஓ அரசனே! மகிஷாசுரன் வார்த்தைகளைக் கேட்ட மஹா தேவி மகிஷனைப் பார்த்து ஓ அரசனே! உன்னால் சொல்லப்பட்ட மந்தோதரி என்பவள் யார்? அவளால் விடப்பட்ட கணவன் யார்? பிறகு அவளால் கொள்ளப்பட்ட கணவன் யார்? அவள் துக்கமடைந்த விதம் எப்படி? இவற்றை விரிவாய்ச் சொல்லவேண்டுமென்றனள்.

ஓ காமரூபிணீ! பூலோகத்தில் சிம்மளதேசமென்று ஒரு தேசமுளது. அது சோலைகளால் சூழப்பட்டதும், தனதானிய சம்பத்துக்களால் நிறையப் பெற்றதுமான சிறப்பினை யுடைத்தானது. அந்தத் தேசத்தில் தரும சிந்தனையிற் சிறந்தவனும், நியாயத்துக்கு விரோதமில்லாமல் தருமாதருமங்களை நடத்துகின்றவனும், பிராஹ்மண போஷணையில் மிகச்சிறந்தவனும் சத்தியவசனனும், மிகமேன்மைத் தன்மையனும், கோபமென்பதை யறியாதவனும், நீதிமுறைகளை யறிந்தவனும், சகல கலைகளும் நிறம்பப் பெற்றவனும் தனுர்வித்தையில் வல்லவனுமான சந்திரசேன னென்னும் அரசனிருந்தனன். அவனுக்கு இலக்கணங்களிற் சிறந்த அழகுள்ளவளாயும், கடுமொழி கடந்தவளாயும். இவ்வாழக்கைக்கு வேண்டிய நன்னடைக ளுடையவளாயும், எப்பொழுதுங் கோணாத

முகமலர்ச்சி யுடையவளாயும், கணவனையே தெய்வமாகப்பேணும் ஒழுக்கத்திற் சிறந்தவளாயுமுள்ள குணவதி என்னும் மனையாட்டி யிருந்தனள். அவள் பிரதமத்தில் ஓர் பெண்ணைப் பெற்றனள். குழந்தையை அரசன்கண்டு மகிழ்ந்து அதற்கு சாதகர்மாதிக ளெல்லாம் நடத்தி மந்தோதரி என்று பெயரிட்டனன். பின்னர் அப்பெண் ✡தினேதினே வளரப்பெற்று சர்வாங்க லக்ஷணங்களும் நிறையப்பெற்று வரும் நாளில் தந்தையாகிய சந்திரசேனன் நமது குழந்தைக்குத்தக்க வரன் எவ்விடத்தி லிருக்கின்றானென்று ஏக்கங்கொண்டு கவலையுற்றிருக்ககும்பொழுது புரோகிதருட் சிறந்த சில முதியவேதியர் அரசனைச் ✠சமீபித்து ஓ மஹாராசனே! மந்திரதேசத்துக் கதிபதியான சுதன்மா என்றோரரச னிருக்கின்றான். அவன் மகன் கம்புக்கிரீவன் அவனோ சவுந்தரிய விசேஷங்களிலும் சர்வவித்யா விசேஷங்களிலுஞ் சிறந்தவன். ஆகலான் அவனை உன் மகளுக்கு வரனாகக்கொண்டு உனது கவலையை யொழிப்பா யென்றனன். அரசன் சம்மதித்தவனாய்த் தன் மனையாட்டியினிடத்தில் தெரிவிப்ப அவள் தன் மகளாகிய மந்தோதரியினிடம் சொல்லினாள். தாய் வார்த்தையைக் கேட்ட மந்தோதரி தாயைப்பார்த்து என் தாயே! எனக்குக் கலியாணம் வேண்டாம். எனக்கு சமுசாரத்திற்சிறிதும் ஆசையில்லை. நான்கௌமார விரதத்தை யநுஷ்டித்துக் காலத்தைக்கழித்துவருகிறேன். இதுதான் எனக்குச்சுகம். நான் சுதந்தரமாய்த்தவஞ்செய்து காலங்கழிப்பதை விட்டுச்சம்சாரத்தில் ❄பராதீனையாய்த் துக்கத்தையநுபவிப்பதா சுகம்? இதிற் சிறிதும் சுகங்கிடையாது துக்க மேபெரிது பாண்டிதர்கள் சம்சாரத்தில் பராதீனனாய்ப் போகாது சுவாதீனனாகவே யிருந்து கவலையற்றிருப்பானனால் அவனுக்கு மோக்ஷசுக முண்டாகிற தென்றுசொல்லுகின்றனர். ஆகையால் நான் மோக்ஷசுகத்தையே யடைவேன். புருஷனால் எனக்குப் பிரயோசனமில்லை. நீ பிதாவினிடம் என்னெண்ணத்தைத் தெரிவித்து விடுவாய். நான் உனது ☨அதீனமாகவே யிருக்கின்றேன். நான் விவாகஞ்செய்து கொண்டு கணவனுக்கு ✪சுவாதீன மாவேனாயின் மாமி மைத்துனன் இவர்களுக் கெல்லாம் வேலைக்காரியைப் போலாக வேண்டும். கணவனுடைய மனதை அறிவதென்றால் மிகவும் பெரிய துன்பம். அவன் மற்றொரு ஸ்திரீயை விரும்பி நடப்பானானால் அவளால் விளையுந் துக்கம் இவ்வள வென்று சொல்லி முடியுமா! அப்பொழுது கணவனிடத்தில் கோபமுண்டாகிறது. நான் எத்தனை யென்று சொல்லுவேன், அம்மா!

✡ தினேதினே - கொஞ்ச கொஞ்சமாக ✠ சமீபித்து - அருகில் சென்று
❄ பராதீனையாய் - சுதந்திரமற்று (அடிமையாய்) ☨ அதீனமாக - சார்ந்திருத்தல்
✪ சுவாதீன் - சொந்தம்

சம்சாரத்தில் சுகமேது! ஸ்திரீகளுக்கு எப்பொழுதும் துக்கமே! சம்சாரத்தில் உண்டாகும் சுகம் சுவப்ன தர்மம்போலுமாம். முற்காலத்தில் உத்தான னென்பவ னுடைய புத்திரனாயும் மிகவுத்தமனாயும் சகலதருமங்களையும் அறிந்தவனாயும் துருவனென்பவனுக்குத் தம்பியாயு மிருந்த அரசன் தனது பத்தினி பதிவிரதா கிரோன்மணியாயும் யாதொரு குற்றஞ் செய்யாதவளாய மிருக்க அவளை ஆரணியத்தில் ஓட்டிவிட்டா னென்று கேட்டிருக்கின்றேன். பர்த்தாவினாலேயே இவ்வளவு கேடுண்டாகிறது. அவன் தேசாந்திரம் போவானானால் காமமோ மேலிட்டு இரவும் பகலும் வாட்டுகின்றது. அவனிறந்தாலோ அவளுக்குண்டாகும் அமங்கலத்துவமும் துக்க சோகங்களும் சொல்லுக் கடங்குமோ! விதவை என்கிற பெயருடையவளாய்ப் புருஷர்களே யல்லாமல் ஸ்திரீகளாலும் தள்ளப்பட்டு ✻நீக்ஷேதிக்கப்படுகிறோள். இவ்வளவுக்குங் காரணம் ✡பர்த்தாவை வேண்டுவதே யாகும். ஆகையால் விவாகம் வேண்டா மென்பதே என்னுடைய சம்மதமென்று சொன்னாள். பெண் வார்த்தையைக் கேட்ட தாய் தனது நாயகனிடஞ் சென்று பெண்ணினுடைய வைராக்கிய விசேஷங்களையும் விவாகத்துக்கு இணங்கமாட்டாத காரணங்களையும் நன்றாயெடுத்துச் சொல்லவும் அவன் அவனது அபிப்பிராயத்தை மறுப்பதற்குக் கூடாதவனாய் விவாகத்தை நிறுத்தி விட்டனன்.

பின்னர் அந்தப்பெண் யௌவன பருவத்தை யடைந்தாள். அவளுடைய தோழிகள் ஓ மங்கையர்க்கரசியே! நீ விவாகத்தை வெறுத்திருக் கின்றனையே! உன்னுடைய நல மெல்லாம் வீணாய்ப் போகின்றதே! என்று பலவிதமாய்க் காமமுண்டாவதற் கேதுவான பல பலவார்த்தைகளைச் சொல்லி வந்தாலும் அவள் முன் போல் வைராக்கியமான வார்த்தைகளைப் பேசிவருவாளேயல்லாமல் காமத்துக்குட்பட்டவளாகத் தன்னைத் தெரிவிக்க மாட்டாள். ஓர் நாள் ஓர் உத்தியான வனத்துள் தன்னுடைய தோழிமார்களுடன் சென்று அதிவுல்லாசமாய் அங்கிருக்கும் அரியமலர்களைப் பறித்துக் கொண்டுலாவிவரும் போது கோசல தேசத்தரசன் ரதாரூடனாய்ச் சிலசேனைகள் பின்னேவரத்தான் முன்னே தெய்வகதியாய் அந்த உத்தியான வனத்துக்கு வந்தனன்.

அவனைத் தூரத்தே கண்ட சிலதோழிகள் அதிசயித்து மந்தோதரியைப் பார்த்து எங்கள் தலைவியே! உன்னுடைய பாக்கிய வசத்தால் ஒரு மஹா புருஷன் வருகிறான். உன்னுடைய புண்ணியத்தை நாங்கள் என்னவென்று சொல்லப் போகிறோமென்று

✡ பர்த்தாவை - கணவனை ✻ நீக்ஷேதிக்கப்படுகிறோள் - துன்ப படுகிறாள்

அவனுடைய சவுந்தரிய விசேஷணங்களைச் சொல்லத் தொடங்குவதற்கு முன் அந்த அரசன் சமீபித்து வந்த தோழிகளைப் பார்த்து, இந்த விசாலமான கண்ணைப் படைத்து என்னை மன்மதன் பாற்படுத்திய இம்மங்கையாவள் சீக்கிரமாய்ச் சொல்லுங்க ளென்றான்? தோழியர்கள் அவனது விரைவான வார்த்தைக்கேட்டு சற்றே நகைத்தவர்களாய் ஓ அரசனே! நாங்கள் நீர் இன்னாரென்று அறியாமல் எங்கள் தலைவியினுடைய வரலாற்றைச் சொல்லுவதென்றால் அழகாகுமா! ஆகையால் உம்முடைய வரலாற்றை முன்னர் தெரிவிப்பீராயின் நாங்கள் நீர் கேட்டபடி சொல்லுவதற்கு என்ன தடையிருக்கின்றது. நீர் யார்? உம்முடைய பெயரென்ன? இவ்விடத்துக்கு வந்த காரணமென்ன? உமக்கு என்ன காரியஞ் செய்யவேண்டுமென்றனர்? அரசன் அவர்களைப் பார்த்து ஓ நங்கைமீர்! யான் உலகின்கண் யாவராலும் புகழத்தக்க கோசல தேசாதிபன். என் பெயர் வீரசேனன். சேனைகள் பின்னே வருகின்றன. இவ்விடத்திற்கு வரவேண்டுமென்று வந்தவனன்று. மார்க்கந் தவறிவந்து விட்டேன். இது ஊழ்வகை யென்றனன். தோழியர் ஓ அரசனே! இவள் சந்திரசேனனுடைய பெண். இவள் பெயர் மந்தோதரி. இங்கு எங்களோடு விளையாடிக் கொண்டிருக்கும் விளையாட்டை யுத்தேசித்து வந்தாளென்றனர். அரசன் அவர்கள் வார்த்தையைக் கேட்டுத் தனதெண்ணத்தை இவர்களைக் கொண்டே முடிக்கவேண்டுமென்று துணிந்து அத்தோழியருள் தலைவிக்குச் சிறந்தாளொருத்தியைத் தனியேயழைத்து எனதுயிராயுள்ள உனது தலைவியை எனக்களித்து என்னைப் பாதுகாத்தல் உனது கடமையாமென்று அவளைப்புகழ்ந்து என்னை நீ இலேசாக நினையாதே யான் சிறந்த காகுஸ்த வம்சத்திற்பிறந்தவன். இப்பொழுது காந்தர்வமணம் இருவர்க்கும் உண்டாகும் வகையைத் தேடுவாய். எனக்கு வேறு பத்தினிகிடையாது. எவ்வன வதியாயும் ரூபசம் பன்னையாயும் நல்லகுலத்திற் பிறந்தவளாயுமுள்ள இவள் என்னை வரனாகக் கொள்வதற்கு என்ன ஆக்ஷேபம். அப்படி கொள்ளாமற் போவாளாயின் இவள் தந்தையே விதிப்படி கலியாணஞ்செய்து கொடுக்கும்படிச் செய்கிறேன் சந்தேகமில்லை யென்றனன். தோழிகேட்டு அவனிடத்தில் ஒன்றும் உரையாடாது தலைவியினிடத்திற் சென்று ஓ மந்தோதரியே! இரண்டாவது மன்மதனென்று சொல்லும் படியான அழகனாயும் மனோகரனாயும் உனக்கொத்த பருவமுடையவனாயும் உன்னிடத்தில் மிக்க அன்புடையவனாயும் சூரியவம்சத்திற் பிறந்தவனாயு முள்ள அரசனொருவன் இச்சோலையில் வந்திருக்கின்றான். உன் தந்தையும்

உனக்கு மணப்பருவம் வந்திருந்தும் வைராக்கிய முடையவளா யிருக்கின்றாளேயென்று துக்கித்துக் கொண்டிருக்கின்றார். எங்களை அடிக்கடி யழைத்து பெருமூச்செறிந்து என் பெண்ணுக்கு நல்லபுத்தி சொல்லக் கூடாதாவென்று சொல்லுகிறார். நாங்கள் உனக்குச் சொல்லும் வன்மையற்றவர்களாய் வாளா விருந்து விட்டோம். இப்பொழுது நல்லசமயம் வாய்த்துவிட்டது. ஸ்திரிகளுக்குப் பர்த்தாவினுடைய பணிவிடைதான் முக்கியமான தருமமென்று மநுநீதி கூறுகின்றது. பர்த்தாவைப் படைக்காதவள் நரகத்தையடைவாள். ஓ பெண்கள் நாயகமே நீ விவாகஞ்செய்துகொள் உனக்கொருதுன்பமும் வராதென்றாள்.

மந்தோதரி! தோழியைப்பார்த்து என்ன வாயில் வந்தபடி பிதற்றுகின்றாய். எனக்குக் கணவன் வேண்டாம். வந்தவனைப்போகச் சொல்வாய். அவன் என்னை வெட்கமில்லாமல் ஏன் பார்க்கின்றான். நான் அற்புதமான தவத்தைச் செய்கிறே னென்றனள். தோழி அவளைப்பார்த்து ஏன் அவசரப்படுகின்றாய். மன்மதன் எவராலும் வெல்லத்தக்கவனல்ல. இந்த எவ்வனகாலத்தைத் தாண்டுவது மிகவுங்கஷ்டம். நான் சொல்லும் இதமானவார்த்தையைக் கேட்டு அதுபோற் செய்வாய். அப்படிச் செய்யாமற் போவையே யானால் உனக்குக்கஷ்டம் நேரிடுவது நிச்சயம். இதிற் சந்தேகமில்லை யென்றாள். மந்தோதரி தெய்வகதியாய் எது வந்தாலும் வரட்டும் அது மாற்றமுடியாது. நான் விவாகம் வேண்டுமென்று வேண்டுவானே னென்றாள். தோழி அவள் சொல்லைக்கேட்டு கோசலதேசாதிபன் பால் சென்று ஓ அரசனே அவள் உன்னெண்ணத்துக்கு உடன் படமாட்டாள் நீ கவலைகொள்ளாதே. வலியவந்த வாழ்வை எண்ணாது எப்பொழுது இழக்கத் துணிந்தாளோ இனி அவளுக்கு வருவதை நான் சொல்லவேண்டுமா! அவள் நல்லபர்த்தாவை இச்சிக்க மாட்டாள். நீ அவளிடத்தில் கொண்டமோகத்தை விட்டுவிடுவாயென்றாள். அரசன் அவள் வார்த்தையைக் கேட்டு துக்கப்பட்டு ஆசையை விட்டுச்சேனைகளோடு தன்னகரம் போய்ச் சேர்ந்தனன்.

பதினேழாம் அத்தியாயம்

மந்தோதரி விருத்தாந்தம் முற்றிற்று.

————

சுலோகம் - (சாக.)

ஆஉ அத்தியாயம் கஎ - க்குச் சுலோகம் (கOOஎஏ)

உ

கர்மாதிசாக்ஷிண்மை நம:

பதினெட்டாம் அத்தியாயம்

தேவீ மகிஷாசுரயுத்தம்.

ஓ திவ்யா மங்கள ரூபிணியாகிய தேவி! மந்தோதரி யானவள் கோசல தேசாதிபனை திரஸ்கரித்தபின்னர் வைராக்கிய முடைய வளாகவே வாழ்ந்து வருநாளில் இவளது தங்கையாகிய இந்துமதி என்பவளுக்கு விவாகஞ் செய்யும் பருவம் வர அரசன் சுயம்வர நாட்டி சகல தேசத்தரசர்களையும் வரவழைத்தான். அப்பொழுது அந்த இந்து மதியானவள் தன்னால் இச்சிக்கப்பட்ட ஓரரசனுக்கு மாலையிட்டு வரனாகக் கொண்டனள். அந்தச் சமயத்தில் மந்தோதரியானவள் விடனாயும் துஷ்டனாயும் சாதுர்ய முடையனாயும் என்னும் அரசனைப் பார்த்து மோகங் கொண்டவளாய் தனது வைராக்கியத்தை இழந்து தன் தந்தையைப் பார்த்து எனக்கு இவ்வரசனை விவாகஞ் செய்து வைப்பா யென்று சொல்ல அவன் மிகவும் சந்தோஷித்தவனாய் அவள் வேண்டிய படியே அவனை யழைத்துக் கலியாணஞ் செய்து கொடுத்தனன்.

அந்த சாருதோஷணன் என்பவன் மிக்கமகிழ்ச்சி யடைந்த வனாய் மந்தோதரியோடு தனது தாசி தாசர்களை யழைத்துக்கொண்டு தந்நகரம்போய்ச் சேர்ந்தனன். மந்தோதரி யானவள் அவனோடு கூடி காமரசத்தை வேண்டியவண்ணம் தெவிட்டவுண்டு வாழும் நாளில் ஓர் நாள் தனது நாயகன் ஓர் வேலைக்காரன் மனைவியோடு கூடி கிரீடித்திருக்கிறா னென்று தோழியால் கேள்வியுற்று நகைத்துக் கோபங்கொண்டு அவனை யிகழ்ந்து சிலவார்த்தைகள் சொல்லி அவனைத்தன் வசமாக்கி வைத்திருந்தனள். மற்றொரு காலத்தில் எவ்விதத்தாலோ தன்னையேமாற்றி மற்றொருத்தியோடு எப்பொழுதுங் கூடியிருத்தலைக் கண்டு அந்தோ! இவன் பரஸ்திரிகளுடைய சம்போகமே மேலான போகமென்று சுகித்துவருகின்றான். இவன் செய்தியை அக்காலத்திலறியாமற்போனோமேயென்று மிகுந்த துயரமடைந்து நாம்! இந்த வஞ்சகனால் வஞ்சிக்கப்பட்டோமே? இவன் நாணமென்பது சிறிதுமில்லாதவனாயும் தயையற்றவனாயும் பரமதுஷ்டனாயு மிருக்கும்பொழுது இவனால் நமக்கென்ன சுகமுண்டாகும். இனிச் சம்சாரத்தை விட்டால்தான் சுகமுண்டாகும். நாம் செய்யக்கூடாத காரியத்தைச் செய்து விட்டோம். அது இப்பொழுது துக்கத்தைக் கொடுத்தது. இனி நாம் பிராணனை விட வேண்டும்.

விட்டால் அது ஆத்மஹத்தியாய்ப் பெரிதான பாவத்துக்காளாக்கி விடுமல்லவா! தந்தையாரிடம் போவோமென்றாலோ நாம் வைராக்கியம் பேசக் கேட்டிருந்த தோழிகளெல்லாம் பரிகாசஞ் செய்வார்களல்லவா! என்று பலவாறாக வெண்ணி இனி எண்ணி ஏங்குவதிற் பயனென்னை யென்று எண்ணுவதைவிட்டு காமசுகத்தைக் கைவிட்டு அவ்விடத்திலேயே தன் வாழ்நாளை வீழ்நாளாகக் கழித்து வந்தனள். அவள் கதியைப்போலவே உன் கதியும் ஆகுமென்று தேவியைப் பார்த்து இகழ்ந்து கூறி இனியேனும் என் வார்த்தையைக் கேட்பாய். கேளாமற் போவாயானால் நீ மிகுந்த துயரத்தையடைவாய் சந்தேகமில்லையென்று மகிஷாசுரன் கூறினன்.

தேவி அசுரனுடைய வார்த்தையைக் கேட்டு ஓமூடாத்மாவே! என்னை மந்தோதரியைப் போலவா எண்ணிவிட்டாய். கடாவுக்கு எவ்வளவு அறிவோ அவ்வளவு அறிவு தான் உனக்கிருக்கும். பாதாளத்திற்குப் போவதென்றால் இப்பொழுதே போய்விடு, யுத்தஞ் செய்ய வீரமிருந்தால் யுத்தஞ்செய். நான் உன்னை உன் சேனைகளோடு யுத்தகளத்துக் கிரையாக்கிச் சுகமாய்ப் போகப்போகிறேன். எப்போது சாதுக்களுக்குத் துக்கமுண்டாகிறதோ அவர்கட்கு அத்துக்கத்தைப் போக்கி ரக்ஷிக்கு நிமித்தம் நான் உருவங்கொள்ளத்தக்கவள். எனக்கு உருவமுங் கிடையாது; சனனமுங் கிடையாது. இப்பொழுதும் தேவர்களுடைய ரக்ஷணார்த்தமே இவ்வுருவத்தோடும் வந்திருக்கின்றேன். தேவர்களோ உன்னைச் சங்கரிக்கும்படி பிரார்த்தனை செய்திருக்கின்றனர். அப்பிரார்த்தனையை முடிப்பதற்குச்சித் தமாயிருக்கின்ற நான் சொல்வதை விளையாட்டாக வெண்ணற்க. இது மெய். நின்று யுத்தமாவது செய். பாதளத்துக்காவதுபோ என்றனள்.

இவ்வாறுகூறும் தேவியின் வார்த்தையை அசுரன் கேட்டு யுத்தாவேசங்கொண்டு யுத்தகளத்தினின்று வில்லெடுத்துப் பாணங்களைச் சந்தித்து அதிவேகமாய்த் தேவியின் மீது விட்டனன். அவையெல்லாம் தேவிதடுத்துப் பெரும்போர் விளைத்தனள். அந்த விளைவில் தேவரும் அசுரரும் ஜயம்பார்பாலதோ வென்றுகண்களை விழித்தவண்ணமாகவே பார்த்துக் கொண்டிருந்தனர். அச்சமயத்தில் துர்த்தரன் மலைபோல் வீழ்ந்து மாண்டனன். அதைக்கண்ட திரிநேத்திரனென்னும் அசுரன் தேவியின் பேரில் ஏழுபாணங்களை விட்டு அட்டகாசஞ்செய்தனன் அவைகளைத் தேவிதடுத்து அவனை யடக்க அந்தகனென்பவன் அதிவேகமாய் ஓடிவந்து ஓர் இருப்புலக்கையை எடுத்து தேவியூர்ந்து வந்த சிங்கத்தின்றலைமேல் மோதினன். அது கோபங்கொண்டு அவ்வசுரனை நகத்தாற்பூரி அவனது மாமிசத்தை ஆகாரமாகக் கொண்டது. இவைகளைப் பார்த்து மகிஷாசுரன் ஆச்சரியங்கொண்டு மிக்க கூர்மையுள்ள சிலீ

முகங்களைச் சோனை மாரியாய்ப் பொழிந்தனன். அச்சிலீ முகங்களைத் தேவி ஓர் கணத்துக்குள் துகளாக்கி மகிஷனை கதாயுதத்தால் மார்பிலடித்தனள். அவ்வோரடியால் அவன் மூர்ச்சையடைந்து சிறிது நேரஞ்சென்று தெளிந்தெழுந்து கோபங்கொண்டு ஓர் கதையை யெடுத்துக்கொண்டு ஓடிச்சிங்கத்தின தலைமேலடித்தான். அது ஆவேசங்கொண்டு பாய்ந்து அவனை நகங்களாற் கீர் கீர் எனக் கீறவும், மகிஷன் மானுட வடிவைவிட்டுச் சிங்க வடிவங்கொண்டு அச்சிங்கத்தைக் கீறத்தொடங்கவும் தேவி கோபங்கொண்டு சர்ப்பங்கள் போன்ற பலபாணங்களை விட, அவன் அவ்வுருவை விட்டு யானைவடிவங்கொண்டு மலைகளைப்பிடுங்கி தேவியின்மேல் வீசினான். அவைகளைத் தேவிகண்டு சிலபாணங்களை விடுத்துப் பொடியாக்கிச் சிரித்தனள். சிங்கமுந் தேவியோடு யானைவடிவங்கொண்ட அசுரன் தலைமேற் பாய்ந்து இரு பிளவாகப் பிளந்தது. அசுரன் அக்கணமே அந்தச் சிங்கத்தைக் கொல்ல சரபவடிவங்கொள்ள, அதுகண்ட தேவி அவனை வாளினால் வெட்டினாள். அவனும் தேவியை வெட்ட, வெட்டுப் படாமையைக் கண்டு வெடகமுற்று தனதியற்கை யுருவாகிய கடாவுருக் கொண்டு கொம்புகளா லிடிப்பான் வாலைச்சுழற்சி முகத்திலடிப்பான். அந்த வாலினாலேயே மலைகளைப் புரட்டி எறிவான். எறிந்து சிறிப்பான். ஓ பெண்ணே! உன்னாலென்ன வாகுமென்பான். இந்நேரம் யுத்தஞ் செய்தனாயே; இப்பொழுது ஏன் சும்மாயிருக்கின்றா யென்பான். உன்னைப்போலும் மூடமதியைப் படைத்தா ரொருவ ருண்டோ வென்பான். நீ மஹா பலையென்றனையே அது எங்கே போய் விட்டது. நீ துர்ப்பலையென்று இப்பொழுது நன்றாய் வெளியாக்கி விட்டேன். நீமஹாதுஷ்டை நீ நிற்கும் நிலையைப்பார்த்தால் என்னிடத்தில் மோகங் கொண்டவள்போலத் தோன்றுகின்றது. இனி நான் உன்னிடத்தில் மோகங்கொள்ளேன். உன்னைக்கொன்று பின்னர் என்னைக் கொல்லும்படி உன்னை யேவிய தேவப்பயல்களையும் கொன்றுவிடுகிறேனென்று பெரிய ஆரவாரஞ் செய்தனன். தேவி இவனது ஆரவாரத்தைக் கண்டு புன்னகை யரும்பி ஓ மகிஷமே! ஏன் கத்துகின்றாய் உனது கத்தல் காதுக்கின்பஞ் செய்யுமா! உனது கத்தலை நிறுத்துவாய். உன்னைக் கொன்றுன்னாலுண்டாகிய பயத்தைத் தேவர்களுக்கு இப்பொழுது ஒழிக்கப்போகின்றேன். இதுவரையில் மதுபானஞ் செய்து வெறி கொண்டு சுரஸ்ரேஷ்டர்களுக்கும் முநிஸ்ரேஷ்டர்களுக்கும் துக்கத்தையும் பயத்தையும் விளைவித்து வந்தனை யல்லவா! அவையெல்லாம் இனி உன் பாலதேயென்று சொல்லி சண்டிகை யுருவங்கொண்டு மதுபாத்திர பாணியாய் மகிஷனைக் கொல்லவேண்டுமென்கிற எண்ணமுடைய வளாய் ✡திராக்ஷபழரசமாகிய மதுவையுண்டு சூலாயுதத்தை யேந்தி

✡ திராக்ஷ - திராட்சை

அசுரனைத் துரத்தத் தலைப்பட்டாள். அதுகண்ட தேவர்கள் முநிவர்கள் யோகிகள் சித்தர் ❊கின்னரர் சாரணர் முதலிய யாவரும் ஆனந்த பரவசராய் புஷ்பமாரி பொழிவாரும் தேவ வாத்தியங்களைக் கோஷிப்பாரும் தோத்திரஞ் செய்வாரும் உனக்கு ஜயமுண்டாகுக உண்டாகுக என்பாருமாய் ஆகாயத்தில் நின்றனர்.

கபடத்தில் வல்லவனான மகிஷன் தான் கற்றிருக்கு மஹா மாயையினால் பலவித ரூபங்களை எடுத்தெடுத்துத் தேவியை துன்பஞ்செய்யத் தலைப்பட்டான். தேவி கண்கள் சிவந்து சூலத்தைச் சுழற்றி மார்பிற் குத்தினாள். அசுரன் பூமியில் விழுந்து ஒரு முகூர்த்த காலம் மூர்ச்சித்துக் கிடந்து பின் தெளிந்தெழுந்து தனது முருட்டுக் கால்களால் சண்டைசெய்யத் தொடங்கி அடிக்கடி சிரித்து தேவர்களஞ்சும்படியாகச் சங்கத்துவனி செய்தனன். தேவி மனம் புழுங்கி ஆயிரங்கிரணம் விடும்படியான ஓர் அரிய சக்ராயுதத்தை யெடுத்து மகிஷனைப் பார்த்து மதகர்வங்கொண்டுலாவும் மதிகெட்டவனே! இந்த சக்ராயுதத்தைப் பார்த்தனையா; சிறிதுநேரம் அசைவற்றிருப்பையானாலுன்னை யமலோகத்திற் கொண்டுபாய்ச் சேர்த்துவிடுமென்று சொல்லிக்கொண்டே சக்கரத்தை விட்டனள். அந்தக்ஷணமே அவனது சிரத்தை யறுத்துத் தள்ளி முன்போல் தேவி திருக்கரத்தி லமர்ந்தது.

அவன் கண்டத்திலிருந்து உதிரவெள்ளம் பெருக்கெடுத்தோடிற்று. அவனுடைய முண்டமானது ஆகாயத்திற் சுழன்று பூமியில் விழுந்தது. தேவர்கள் கோஷிக்கும் ஜயசப்தமானது எங்கும் பரவியது. தேவியினுடைய சிங்கமானதுமிகுந்த பசி கொண்டது போல் ஓடிப்போகத் தொடங்கிய அசுரர்களையெல்லாம் சுழன்று சுழன்றுலாவி அறைந்து ✡பக்ஷணம் பண்ணிவிட்டது. அந்தச் சிங்கத்துக்கு அகப்படாது ஓடிப்போன அசுரரெல்லாம் பாதாளம்போய்ச் சேர்ந்தனர். அமரரெல்லாம் பரமானந்த மடைந்தனர். பூவுலகிலுள்ளமுனிவர்களும் சாதுக்களும் ஏனையமானுடரும் கவலையற்று வாழ்ந்தனர். சண்டிகா தேவியும் திருவுருக் கரந்தனள். பின்னர் தேவர்கள் "மகிஷாசுரதீரவீர்ய நிக்ரஹாயை நமோ நம:" என்று நமஸ்கரித்து வாழ்த்தினர்.

பதினெட்டாம் அத்தியாயம்

தேவிமகிஷாசுரயுத்தம் முற்றிற்று

———

சுலோகம் (எ0)

ஆஉ அத்தியாயம் கஅ - க்குச் சுலோகம் (க0எஎஏ)

———

❊ கின்னரர் - தேவருள் ஒரு பாலர் ✡ பக்ஷணம் - பொடி பொடியாக

உ

காரயித்ரை நம:

———

பதினொன்பதாம் அத்தியாயம்

இந்திராதிகிருத தேவீஸ்துதி.

———

ஓ அரசனே! பின்னர் இந்திராதி தேவர்களெல்லாம் நம்மனோரானும் மற்றொருவரானும் இறக்கப்படாத மகிஷனைத் தேவி அதிசுலபமாகக்கொன்று நம்மைரக்ஷித்தனளேயென்று அவளது பெருங் கருணையை நாடித் தோத்திரஞ்செய்யத் தொடங்கினர்.

ஓ ஜகதீஸ்வரி! உனது சக்தியினாலேயே பிரமன் சிருட்டியும் விஷ்ணுமூர்த்தி ரக்ஷகமும் உருத்திரமூர்த்தி யுகாந்தகாலத்தில் சங்காருஞ் செய்துவருகின்றனர். உனது சக்தியில்லா தொழியின் அம்மூவரும் அம்முத்தொழிலையுஞ் செய்வதற்குச் சமர்த்தராகார். ஆகவே நீயே அம்முத்தொழிலையுஞ் செய்கின்றவ ளாகின்றனை. ஹே அம்பா! கீர்த்தி மதி ஸ்மிருதி (கியாபகம்) கதி கருணை தயை சிரத்தை திருதி என்பனவும் நீயே. ஹே புவனேஸ்வரி! பூமி கமலை (இலக்குமி) ஜயை புஷ்டி கலை விஜையை கிரிஜை என்பவரும் நீயே. துஷ்டி பிரபுத்வம் புத்தி உமைரமை வித்யை க்ஷமை காந்தி மேதை என்பனவும் நீயே. இவையொழிந்த சகலமும் நீயே என்றல்லவோ மூவுலகங்களாலும் போற்றப்படுகின்றனை. இவ்வகையான உன் சக்திகளன்றி எவரால் யாதுசெய்வதற்கியலும். தாரணையாகிய நீ யில்லாவிடில் கூர்மன் நாகன் என்னும்வாயுக்கள் இளையென்கிற நாடியைத் தரிப்பதும், பூமியந்தரிக்ஷங்கள் நிலைபெறுவதும் எங்ஙனம்; ஓ தேவி! யாவுமாயும் நீ இன்றி ஒன்றுமமையாததுமாகிய அபாரமகிமை விளங்கிக் கொண்டிருக்க உன்னை மதிக்காமல் சில மூடமனிதர் பிரம்ஹ விஷ்ணு ருத்ர சந்திராக்கினிகளையும் வாயுகணேசர் முதலாயினாரையுந் தோத்திரஞ் செய்கின்றனர். அந்தோ! நீ யின்றி அவர்களால் எந்தக்காரியஞ் செய்யக்கூடும். அவர்களால் செய்யப்படும் அனுக்கிரகங்கள் நீயேயன்றோ? ஹே அம்பிகே! சில அறிவிலிகள் அளவிறந்த அவிசுகளையும் நெய்யையும் அக்னியிற் சொரிந்து தேவர்களைக் குறித்து விசேடமாய் யாகஞ் செய்கின்றனரே! அந்த யாகங்கள் சுவாஹா என்கிற உச்சரிப்பில்லாமல் சித்திப்பதெங்ஙனம். அந்தோ! சுவாஹா

✲ அவிசு - தேவருணவு

என்பது நீயன்றோ. சுவாஹா என்று யாவர்க்குஞ் செய்கின்ற மூடர்கள் உன்னைக் குறித்து யாகஞ்செய்கின்றார்களில்லையே இது பாவமன்றோ? அதற்கேது அவர்களது அறியாமையேயாம். ஓ தேவீ! சகல சராசரங்கட்கும் சுகமளிப்பவள் நீயே! உனதம்சங்களாலேயே எப்போதும் யாவர்க்கும் ஜீவனத்தை யளித்துக்கொண்டிருக்கின்றனை. உனக்காட்பட்டவர்களை எவ்வண்ணம் பரிபாலிக்கின்றனையோ அவ்வண்ணமே ஆட்படாதவர்களையும் பரிபாலித்து வருகின்றனை. ஹேமாதா! ஆட்பட்டவர்களையே யன்றி ஆட்படாதவர்களையும் நீ ரக்ஷித்தலை யாராயுங்கால் அறிவாளிகள் தாமே வைத்துவளர்த்த விருக்ஷங்கள் இலை பூ காய் கனிகளற்று நிஷ்பலமாகவிருப்பினும் அவைகளை வெட்டி யழிக்கமாட்டார்களன்றோ. நீயுமது போல் அசுரர்களை அழிக்காது பரிபாலித்து வருகின்றனை. இவ்வாறுள்ள நீ இப்போது அசுரர்களை யுத்தகளத்தில் கொல்லுகின்றனையே அது யாது கருதியோவெனின், அசுரர்கள் தேவஸ்திரீகளுடன் கூடிச்சுகிக்கவெண்ண அதனைத் தேவர்கள்பொறாது வருந்தி வேண்ட அது காரணமாய் அவர்களிடத்தில் வைத்த கருணையேயாம். இதனால் அவரவர் கோறும் வண்ணம் பரிபூரணஞ்செய்வதே உனது சரிதமென்றறியவந்தது. இச்செய்தி யிங்ஙனமிருக்க, இவ்வசுரர்கள் மிக்க வீரபிரபாவ முடையவரா யிருந்தும் இவர்கள் இறக்கக்கடவரென் றெண்ணிய உனது சங்கற்ப மாத்திரத்தால் உயிரிழந்துபோக அவர்களைக் குறித்து இத்தகைய திருக்கோலங்கொண்ட தெற்றுக்கோ? இதுவும் இவ்வாறாகவேண்டுமென நீலீலாமாத்திரத்தா லெண்ணிய லோர்கிரீடாமாத்திரமன்றி வேறென்னை யிருக்கின்றது. கொடுமை மிகுந்த கலியுகத்தில் புராணங்களில் சாமர்த்தியரான தூர்த்தர்களால் வஞ்சிக்கப்பட்ட சிலர் பிரமன் முதலாயினாரைச் சேவிக்கின்றனரே யன்றி அவர்களை யுண்டாக்கிய வுன்னைச் சேவிக்கின்றா ரில்லையே. அவரெல்லாம் உன்வசப்பட்டவர்களென்றும் அசுரர்களால் துன்பமடைந்தவர்களென்றும் அறிவந்தும் அத்தேவர்களையே பூசிக்கின்றனர். இதுநல்ல பிரகாசமுள்ள ஒருவிளக்கை வைத்துக்கொண்டே பயங்கரமாகிய ஓர் பாழ்கிணற்றில் வீழ்வதற் கொப்பாகின்றது. அந்தோ! சுகத்தைக் கொடுக்கும் வித்தையும் நீயே. அசுகத்தைக் கொடுக்கும் ✽அவித்தையும் நீயே. பிறவிப்பிணியை யொழிப்பவளும் நீயே. முமூட்சுக்களா லாதரிக்கப்படுகின்றவளும் நீயே. இவ்வுண்மை யுணராத ✻போகிகளான சில அறிவிலிகள் உன்னால் வருவது போகமென்றுணராது உன்னடியை யாராதிப்பதில்லை. சிறிதுணர்ந்தன்றோ பிரமாதி தேவர்களெல்லாம் சரண்யமாகிய உனது ❈பாதார விந்தத்தையே சரணம் சரணமென்று சரணடைகின்றனர். அத்தகைய பாதார விந்தத்தை எந்த அற்பமதிகள்

✽ அவித்தை - அஞ்ஞானம் ✻ போகிகளான - சுகத்தை அனுபவிப்பர்களான
❈ பாதார விந்தத்தையே - சீர்பாதத்தையே

✡பஜிக்கின்றார்களில்லையோ அவர்களே சம்சாரச் சேற்றிலமுழுந்துகின்றவர். ஹே சண்டி! உன் றிருவடியி லொட்டிய தூளியினது பிரசாதத்தால் மும்மூர்த்திகளும் முத்தொழிலைச் செய்கின்றவர்களாக விருக்க, தௌர்ப் பாக்யவான்களாகிய சிலர் உன்னை யெண்ணுவதில்லை. சுராசுரர்களுங் கெல்லாம் நீயே வாக்தேவியாகின்றனை, அங்ஙன மிருந்தும் உன்னைக் கூற அவரும் அசதராகின்றனர். நீ அவர்களது முகத்தில் வசிக்காவிடின் மனிதர்களால் எங்ஙனம் ❈பிரஸ்தாபிக்கப்படுவர். உன்னாலல்லாமல் அவர்கடகே உண்மையாயின் பிருகுமுனிவரது கோபத்தால் விஷ்ணு மூர்த்தி சபிக்கப்பட்டு மீனாயும் ஆமையாயும் வராகமாயும் பின்நரசிங்கமாயும் ஏன் பிறந்தனர். பிறக்குங் தன்மையுடைய அவரைச் சேவிக்கின்றவர்களுக்கு மிருத்யுபயம் நீங்கு மென்ப தென்னை? சம்புவினது சொரூபமாகிய லிங்கமானது உனதங்கத்துடன் கூடியிருத்தலாலன்றோயாவரானும் பூஜிப்பதற்கு யோக்யமாயிற்று? இவ்வுண்மையை யுணராது உன்னை விட்டுக் கபாலியைப் பூசிப்பவர்கட்கு இம்மை மறுமைகளிற் சுகமுண்டாவ தெங்ஙனம்? ஆனைமுகத் தோனாயும் கணாதிபதியாயுமிருக்கின்ற கடவுளைச் சுலபமாய்ப் பூசிக்கின்றவரும் உன்னை மறந்து பூசிப்பாராயின் அவர்கள் எல்லாப் பொருள்களையும் அவரால் தந்தருளப் பெறுதல் யாங்ஙனம்? யாவரிடத்தும் ஸ்தூலமாயறியத் தக்க உன்னை அறிவதற்கில்லாதவர் சூக்குமமாகிய உன்னுண்மைச் சொரூபத்தை யறியவல்லவராவரா? ஓ தேவி! மும்மூர்த்திகளும் மோகத்தினா லுனது பிரபாவத்தை யறியவல்லரல்ல ரெனின் அபாரவைபவமுடைய உனதுமாயா குணங்களால் மயக்குற்ற மனிதர் எவ்வாறறியப் போகின்றனர். முனிவர்களும் உனது பாதாம்புயத்தைச் சேவிக்காமல் மூடசித்தர்களாய் சூரிய சந்திராதிகளைச் சேவித்துக் கொண்டு கிலேசமடை கின்றனர். அந்தோ! பலகோடி சுருதிகளறிந்தும் அதன் சாரமாகிய பரமார்த்தத்தை யறிந்தாரில்லையே ஹே தேவி! உனது மஹா மகிமையுடைய குணங்கள் மாயா விலாசத்துட்பட்ட உலகினரை நீ கூறியுள்ள நூலின்வழி பக்திநெறியிற்செல்லவிடாது தத்தம் போதத்தாற் கற்பிக்கப்பட்ட ஆகமங்களைக் கொண்டு பிரம்மாதி தேவர்களிடம் பக்தி செய்யச் செய்கின்றன. ஓ அம்பிகே! அங்ஙனஞ் செய்பவரையும் பிரசித்திபெறச் செய்கின்றனையே யன்றித் தாழ்வு படுத்துவதில்லையே. நான் காவதாகிய கலியுகத்தில் நான் காவதாகிய சீவபோதத்திற்கு வன்மையதிக மாதலின் அப்போதத்தால் அசத்தாகிய ஆகமங்க ளியற்றப்பட்டன. அறிவுடையோர்களும் அவ்வுண்மை யுணர்ந்து

✡ பஜிக்கின்றார்களில்லையோ - புத்திராகளில்லையோ
❈ பிரஸ்தாபிக்கப்படுவர் - வெளிப்படுத்தப்படுவர்

அருளாலியற்றிய ஆகமங்களையும் உன் சொரூபத்தையும் தற்போதமுடையார்க்கு வெளியாக்காது மறைத்து உன்னாலுண்டாக்கப் பட்ட தேவர்களையே உபாசிக்கச் செய்கின்றனர். முக்தியும் யோகசித்தியுமாகிய பிரஹ்மவித்தையை யுணர்ந்து சுத்தசத்வராய் விளங்கும் யாதொரு முனிவர்களோ அவர்கள் உனது பாதாரவிந்தத்தில் லயித்தமனமுடையவர்களாயிருக்கின்றனர். அத்தன்யர்களே கர்ப்பவாச துக்கத்தைத் தாண்டினவராவர்.

சிற்சத்தியாகிய நீ பரமான்மாவினிட மிருத்தலான் அப்பர மான்மாவாகிய பரசிவமும் உலககிருத்தியத்தை நிகழ்த்துகின்றது. உன்னையன்றி அப்பரமான்மா தனதியல்பால் யாதொன்றும் செய்வதற்கும் கிரீடிப்பதற்கும் சஞ்சரிப்பதற்கும் வல்லதாகுமோ. அது போலவே ஜடமாகிய தத்துவங்களும் சித்தாகிய உன்னையன்றிக் காரியப்படுமோ. குணகர்மங்களோடுங்கூடிய இந்திரியாதிகளும் உன்னையன்றி யாதொரு செயலையும் செய்ய அறியவல்லன வாகுமோ. முனிவர்களாற் செய்யப்பட்ட யஜ்ஞங்களில் ✡ அவிர்ப்பாகங்களைத் தேவர்கள் எங்ஙனம் உன்னையன்றிப் பெறுவர். யாகங்களும் சுவாஹா என்கிறபெயருடன் விளங்கு கின்றமையா லன்றோ அவை பயன் படுகின்றன. நீ விஸ்வத்தையும் ஹரிஹரர் முதலிய சகல தேவர்களையும் பாலனஞ் செய்கின்றனை. ஈதெல்லா மாதியி லுன்னாலன்றோ வுண்டாயிற்று. பிரளயகாலத்தில் உண்டாக்கிய அந்த விஸ்வத்தைப் புசிக்கின்றனை. உனது மகிமையைப் பவர்முதலாயினாரு மறிந்திலாராயின் மந்தமதிகளாகிய மனித ரெங்ஙன மறியப்பெறுவர். மகாகோரரூபனாகிய மகிஷனைக்கொன்று தேவர்களாகிய எங்களை ரக்ஷித்தல் உன்னையன்றி யாவராற் கூடும். ஓ ஜனனி! மந்த மதிகளாகிய நாங்கள் உனது துதியுள் எந்தத்துதியை யறியவல்ல வராவோம். துதிக்கத்தொடங்கிய வேதங்களே உனது யாதார்த்த நிலையை யறிந்தில. ஹேமாதா! மஹாகண்டகனாகிய எங்கள் சத்ரு தொலைந்துவிட்டான். உலகத்திற் செய்யவேண்டிய காரியங்க ளெல்லாஞ் செய்தாயிற்று. கீர்த்தி எங்கும்பரவியது. மகாமகிமையுள்ள ஹே அம்பிகே! எங்களைக் கருணைகூர்ந்து காப்பாற்றுவாயாக, வென்று தோத்திரஞ் செய்யுந் தேவர்களைச் ஜகதீஸ்வரிபார்த்து மிருதுவாகிய மொழியுடன் ஓ தேவர்களே! உங்களுக்கு எந்தக்காரியங்கள் சாத்தியமாகாமல் அதனால் ஆபத்து நேரிடுகின்றதோ அந்தப் பொழுதெல்லாம் என்னை ❋ ஸ்மரணை செய்யுங்கள். நானுங்களை ஆபத்தினின்று ரக்ஷிப்பேனென் றனுக்கிரகித்தபோது தேவர்கள் ஓ தேவி! மகிஷ சம்ஹாரத்தால் எங்களுக்குச் சகல வேண்டுகோளும் நிறைவேறிற்றாயினும் உனது பாதபத்மங்களில் நீங்காதிருக்கும்

✡ அவிப்பாகம் - தேவருணவு ❋ ஸ்மரணை - அவதானம்

மெய்யன்பை யெங்குளுக் கனுக்கிரகிக்க வேண்டும். நாங்கள் அப்போதப்போது செய்துவரும் அபராதங்களை அன்னைபோற் க்ஷமித்ததுவரல் வேண்டும். ஏனெனின் தேகத்தில் இரண்டுபட்சிகள் எப்போதும் ஒன்றுக்கொன்று நட்புபாராட்டிக் கொண்டிருக்கின்றன வென்றும்! அவ்விரண்டேயன்றி உபாசிக்க வேண்டியதாகிய மூன்றாவது மித்திரமென் றொன்றுளதென்றும் அம்மித்திரமே சகலாபராதத்தையும் சகித்துக்கொண்டிருக்கிற தென்றும் கூறப்பட்டுள்ள தாதலால் ஓ தேவி! அந்தமித்திரம் நீயன்றோ. ஆகவே ஜீவான்மா வானவன் மித்திரமாகிய வுன்னைவிடுத்து எது செய்வதற்குக் கூடும்? இவ்வுண்மையை யறிந்தவர் உன்னை பூசிக்காமற்போவரோ: தேவர் மாநுடர்முதலிய பெறுதற்கரிய பிறவிகளைப்பெற்றும் உன்னையுபாசிக்காத மந்தபாக்கிய வானிலும் அதமன் வேறொருவனுளனோ. சுகதுக்கமென்னு மிரண்டினும் மனோவாக்குக் காயங்களால் நாங்கள் சரணமடைய வேண்டிய பொருள் நீயேயென்பது சத்தியம். ஓ தேவி! சகல ஆயுதங்களாலும் எங்களைக் காத்தருள்வாயாக. உனக் கன்னியமாய் எங்களை ✡ ரக்ஷிப்பவர் யாவரு மிலையென்று பிரார்த்திக்கத் தேவி அவ்வாறே ஆகுகவென் றருள்புரிந்து திருவுருக்கரந்தனள். தேவர்கள் பரமாச்சரியமுற்று ஆனந்த மெய்தினர்.

பத்தொன்பதாம் அத்தியாயம்

இந்திராதிகிருததேவீஸ்துதி முற்றிற்று.

சுலோகம் - சுங௬

ஆஉ அத்தியாயம் ககூ - க்குச் சுலோகம் (ககஉக.)

உ

கர்மபலப்ரதாயை நம:

இருபதாம் அத்தியாயம்

தேவியந்தர்த்தானோத்தர விருத்தாந்தம்.

ஓமஹருஷிகாள்! ஜனமேஜயன் உலகத்துக்குவேண்டிய திருப்தியைச் செய்துவருபவளான பரதேவதையினுடைய பரத்துவவை பவத்தையும் அதனைச் செவிக்கின்படமாக வெடுத்துப்புகட்டும் வியாச முநிவருடைய பிரபாவத்தையுமெண்ணி மகிழ்ந்து கூறுகின்றான்.

✡ ரக்ஷிப்பவர் - காப்பவர்

ஓ பிராஹ்மணசிரேஷ்டரே! உம்முடைய முகாரவிந்தத்தினின்றும் பெருகாநின்ற கதாரசமாகிய அமிர்தப்பிரவாகத்தை செவிமடுத் துண்ணுந்தோறும் எனக்குத் திருப்தியுண்டாகவில்லை. இன்னமுங் கேட்கவேண்டுமென்கிற ஆவலையே விளைவிக்கின்றது. ஓவியாச முநிவரே! பரமபவித்திரமாகிய தேவியினுடைய புண்ணியசரித்திரம் அற்பபுண்ணியமுடையவர்களால் கேட்கப்படுவதன்றே. மஹாபாக்கிய சாலிகளும் பிறவிப்பிணிக்குமருந்தாகிய திவ்யசரித்திரங்களைக் கேட்பதில் இளைக்காதசெவிகளைப் படைத்தவர்களுமே இதனைத் தேவாமிருதமென்று கொள்ளத்தக்கவராவர். எந்தச்சரிதத்தைக் கேட்டால் தெய்வரூபத்தை யடைகின்றார்களோ அந்தச்சரித்திரத்தை ஆதரவோடு கேளாதவர்களை நிந்திக்கவேண்டும். தேவர் முநிவர்களை ரக்ஷணைசெய்வதாயும் சம்சாரசாகரத்தைத் தாண்டச்செய்வதாயு மிருக்கிற ஜகதம்பிகையினுடைய லீலாப்ராபாவங்களை நன்றி மறவாத பெரியோர் எவ்வண்ணம் கேட்காமலிருப்பர். எவர்கள் முத்தர்களோ எவர்கள் மோக்ஷமடைய விரும்புகின்றனரோ எவர்கள் சம்சாரத்தில் சுகம்விரும்புகின்றனரோ! எவர்கள் ரோகநிவிர்த்தியை அபேக்ஷிக்கின்றனரோ! அவரெல்லாம் வேண்டியாங் கருளவல்ல தேவியினுடைய சரிதங்களைக்கேட்க விருப்பமுள்ளவரே யாவரென்றும், தருமார்த்த காமமோக்ஷங்களில் விருப்பமுள்ள அனேக அரசர்கள் தேவியினது சரிதங்களையே எக்காலத்துங் கேட்கத்தக்க வராவரென்றும் வேதவித்துக்கள் சொல்லக் கேட்டிருக்கின்றேன். அன்றியும் கர்மபலத்தியாகிகளாகிய மோக்ஷகாமிகளுங் கேட்க விருப்பமுடையவர்களெனின் சம்சாரிகள் கேட்கவேண்டிய தவசியமல்லவா?

பூர்வசன்மத்தில் எவர்கள் மல்லிகை சண்பக முதலிய அரிய மலர்களாலும் நல்ல வில்வதளங்களாலும் தேவியை ஆராதனை செய்தார்களோ அவர்களே பூலோகத்தில் மஹா ராஜாக்களாய்ப் போக ஐஸ்வர்யங்களை அனுபவிக்கின்றன ரென்று யூகித்தல் வேண்டும். எவர்கள் தேவியினிடத்தில் பக்தியற்றுப் பூலோகத்தில் பிறந்தார்களோ! எவர்கள் தேவியை அர்ச்சிக்காம லிருக்கின்றனரோ! அவர்கள் தனதானிய சூனியர்களாயும் ரோகபீடிதர்களாயும் சந்ததி யற்றவர்களாயும் பிறரிடத்தில் ஏவலாளிகளாய் அவர்களால் ஏவப்பட்ட ஏவளைச் செய்கின்றவர்களாயும் சுமைகளைச் சுமக்கும் சுமை யாட்களாயும் பொருள்கிட்டாமல் பொருளாசை மேலிட்டு அலைகின்றவர்களாயும் எவ்வளவு அலைந்தபோதினும் வயறு நிரம்புவதற்கேற்ற ஆகாரங் கிட்டாதவர்களாயு மிருப்பர். அன்றியும் எவர் அந்தகர்களோ ஊமர்களோ செவிடர்களோ நொண்டிகளோ

குஷ்டரோகிகளோ துக்கத்துக்குப் பாத்திரர்களோ அவர்களெல்லாம் பூர்வ ஜன்மத்தில் தேவியைப் பூசிக்காத பாவிகளென்றும் எவர்கள் ராஜபோகத்தோடும் நிறைந்த சம்பத்துக்களோடும் அநேகம் பிரசனங்கோடுமிருக்கிறார்களோ அவர்களெல்லாம் தேவியை அன்போடு பூசித்த புண்ணிய சீலர்களென்றும் வித்துவான்களால் நிச்சயிக்கத்தக்கவர்.

ஆகையால் ஓ வியாசமுநிவரே! என்மேல் கிருபை யுடையவராய்த் தேவியினுடைய மகிமாதிசயங்களை விளைவிக்கவல்ல ஏனைய சரித்திரங்களையும் அனுக்கிரகிக்க வேண்டும். மகிஷனைக் கொன்று தேவர்களால் துதிக்கப்பட்டுத் தேஜோரூபிணியாய் விளங்கிய மகாலக்ஷிமிசொரூபிணியான அந்தப்பரதேவதை மறைந்து போனாளென்று சொன்னீரே! அவள்போனது சுவர்க்கத்துக்கோ! அல்லது வைகுண்டத்துக்கோ! இமோத்பர்வதத்துக்கோ! அல்லது யமலோகத்துக்கோ! அல்லது யமலோகத்தில் இலயத்தை யடைந்தனளோ! அந்த வுண்மையைச் சொல்லுமென்றனன்.

வியாசமுநிவர், ஓ ஜனமே ஜயனே! சுவர்க்கம் வைகுண்டம் யமபுரம் என்னுமிடங்களை யடைபவர் ஆன்மகோடிகளேயன்றிப் பரமான்ம சோரூபிணியாகிய மஹாதேவியா யடைவாள். அன்று பூர்வத்தில் உனக்குத் திருப்பாற்கடலின் மத்தியில் மணித்வீப மொன்றிருக்கின்ற தென்றும் அது அம்பிகைக்கு மனோகரமாகிய கிரீடாஸ்தான மென்றும் அவ்விடத்திலேயே எப்பொழுதும் நீங்காது நானாவித வுருவத்துடன் இஷ்டத்தோடு வசிப்பா ளென்றும் பிரஹ்ம விஷ்ணு ருத்திரர்கள் அவ்விடத்தில் ஸ்திரீரூபத்தோடிருந்து தேவி யனுக்கிரகத்தால் பின்னர் புருஷரூபமெடுத்து சிருட்டியாதி கிருத்தியங்களைச் செய்கின்றார்க ளென்றும் சொல்லி யிருக்கின்றேனல்லவா! அவ்விடத்துக்கே மாயா சொரூபிணியாயும் அநாதியாயுமுள்ள அத்தேவி, துதிசெய்தபின் சென்றன ளென்றறிவாய்.

அம்பிகை மறைந்துபோன பின்னர், தேவர்கள் சூரியவம்சத்திற் பிறந்தவனாயும் மஹா பலசாலியாயும் மஹா வீரனாயும் ராஜல க்ஷணங்களோடு கூடினவனாயும் அயோத்தியாபதிக்கு மன்னவனாயு மிருந்த சத்ருக்னனென்னும் அரசனை மகிஷாசுரனுடைய சிங்காச னத்திலேற்றிப்பட்டாபிஷேகஞ்செய்து உலகினையாளும்படி விதித்து யாவரும் அவரவருலகங்களிற் சென்று வாழ்ந்திருந்தனர்.

சத்ருக்னனுடைய அரசாக்ஷியில் தருமங்கள் தவறாது நடந்தன. சகல சனங்களும் சுகமாய் வாழ்ந்தன. மேகங்கள் காலந்தவறாமல் ✿ வருஷித்துவந்தன. தானியாதிகளெல்லாம் செழித்தோங்கின.

✿ வருஷித்து - மழைபொழித்து

விருக்ஷசாதிகளெல்லாம் பத்திரபுஷ்ப பலாதிகளைக் குறைவின்றிக் கொடுத்துவந்தன. பசுக்களெல்லாம் மடிசுரந்து பாற் பெருக்கோடுங்கூடித் தம்மைக் காப்பவர்களுக்குத் திருப்தி செய்துவந்தன. நதிகளெல்லாம் சலப்பெருக்கோடு கூடியும் கிராமங்களை யழிக்காது தனக்குரியமார்க்கத்திற் சென்றும் உண்போர்க்குக் குளிர்ச்சியாயுஞ் சீதளமாயும் பக்ஷிசாதிகள் நிறைந்து வசிப்பதற் கிடமாயுமிருந்தன. பிராஹ்மணர்கள் வேதார்த்த மறிந்தவர்களாயும் யஞ்ஜாதி கருமங்களில் பிரீதியுள்ளவரி களாயு மிருந்தனர். க்ஷத்திரியர்கள் தங்களுக்கு விதித்த தருமங்களிலும் அத்யயன தானாதிகளிலும் தநுர்வித்தையிலும் பிரஜைகளுடைய ரக்ஷணைகளிலும் நியாய யுக்தமான தண்டனைகளிலும் பகைவர் அயலோர் நட்பினரென்னும் இவர்களிடத்தில் இருக்கவேண்டிய சமபுத்தியிலும் தவறா திருந்தனர். வைசியர் ஏற்பதிகழ்ச்சி என்பதைக் கடைப்பிடித் தொழுகுவோர்க்கு வைத்திழக்கும் வன் கண்ணையொழித்து ஈத் துவக்கும் இன்பமுடைய வராயும் கோரக்ஷணையில் சிரத்தையுடையவர் களாயும் இருந்தனர். புலியும் பசுவும் உறவாடுந்தன்மை யுடையனவா யிருந்தன. இவ்வண்ணம் அந்தணர் முதலாயினார் தத்தம் வருணாச்சிரம தருமங்களிற் றவறுதலற்றும் ஏனைய விலங்கினங்கள் பகைமையற்றும் ஸ்திரீசாதிகள் பதிவிரதா தருமங்களில் இழுக்குதலற்றும் ஆசாரதருமங்களில் வழுக்குதலற்றும் அசத்தியமான வசனங்களற்று மிருந்தனர். புத்திரர்கள் தாய் தந்தையர்களிடத்தில் பக்தியுள்ளவர்களா யிருந்தனர். பாஷண்ட மதங்களும் அதர்மங்களு மழிந்தன. எவ்விடத்தும் வேதவாதங்களும் சாஸ்திர வாதங்களும் யாகாதி தருமங்களும் அவைகட் கேற்ற மண்டபாதிகளும் அவைகளில் யூபஸ்தம்பங்களும் தேவீசம்பந்தமான பக்திவிசேஷங்களுமே மிகுந்திருந்தன. பிரயோசன கரமில்லாத கலகங்களற்று யாவரும் சுகமுற்றிருந்தனர். எவருக்கும் ஆபத்தான அகாலமரணங்கிடையா. சினேகவாஞ்சனையுடையோர் கூடிப்பிரிந்தாரல்லர். மழையின்மையினா லுண்டாகுங் கருப்பம் செல்வமிகுதியினாலுண்டாகும் மாத்சர்யாதி தீயகுணங்களும் பூர்வ வினைவழியா லுண்டாகும் ரோகாதி பீடைகளும் ஒருவருக்கு முண்டாயினவன்று. சோரபயமும் வஞ்சனை யாளர்களுடைய வஞ்சனைகளும் கோட்சொல்வோருடைய கோள்களும் மோகத்தை விளைவிக்கின்றவர்களுடைய மோக சாலங்களும் ஆசையை விளைவிக்கின்றவர்களுடைய பாச சாலங்களும் மூடமதிகளால் விளையத்தக்க மூடவிவகாரங்களும் வேதத் துவேஷங்களும் பாபிகளதுதர்மங்களு மில்லாதொழிந்தன. யாவரும் சகல தருமங்களிலும் பிரீதியுள்ளரார்களாகவிருந்தனர்.

ஓ ஜனமேஜயனே! அந்த நகரத்தில் சாத்வீகம் ராஜசம் தாமச மென்னும் மூன்றுவிதமான தருமங்களைக் கைக்கொண்ட அந்தணர்களுமிருந்தனர். சாத்வீகதருமமாவது, - வேதார்த்தங் களையறிதல், சாத்வீககுணத்தையே மேற்கொண்டிருத்தல், சத்தியமார்க்கத்தில் நிற்றல், தானம்வாங்குவதில் பிரீதியில்லாதிருத்தல், கருணை பொறை முதலிய நற்குணங்களோடு கூடியிருத்தல், அதர்மமார்க்கத்தில் மனம் சிறிதுஞ்செல்லாதிருத்தல், சாதுக்களுடைய சங்கத்திலேயே கூடியிருத்தல், பசுக்கொலையில்லாத யஜ்ஞங்களையே செய்தல், தானங்களைச் செய்தல், திரிகாலசந்திகளுந் தவறாதுசெய்தல், எப்பொழுதும் அத்தியயனஞ் செய்தல் முதலியனவாம்.

இராஜச தருமமாவது - வேதசாஸ்திரங்களில் பாண்டித்தியத்தை யடைந்து பண்டிதரென்று பேர்பெற்றிருத்தல், க்ஷத்திரியர்களுக்குப் புரோகிதராயிருத்தல். ஈதல் ஏற்றல் ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தலென்று சொல்லப்பட்ட ஆறுகர்மங்களிலும் பெருமைபெற்றிருத்தல், மாமிசாபேக்ஷையோடு யாகாதிகளைச் செய்து அவற்றைப்புசித்தல் முதலியனவாம்.

தாமசதருமமாவது - பிராஹ்மணனென்பதற்குச் சிறிது அத்தியயனஞ்செய்தல், எப்பொழுதும் கோபமும் ராகத்துவேஷமுங் கொண்டிருத்தல், பிரபுக்களிடத்தில் சேவைசெய்கின்றவர்களாயிருத்தல் முதலியனவாம். இம்மூன்றுவித தருமங்களில் ராஜச தாமச தருமங்களைக் கைவிட்டு அந்தணரெல்லாம் சாத்வீக தருமத்தையே மேற்கொண்டிருந்தனர்.

ஓ அரசனே! அந்நகரம் மகிஷனுடைய கொடுங்கோலொழிந்த பின்னர் சத்துருக்னனுடைய செங்கோலினால் எல்லாப் பொருளாலுந்தழைத்தோங்கிச் சுகமுற்றன. அந்த நகரவாசிகளாகிய சகல வருணத்தவருந்தேவியினதுபக்தியிற் சிறந்துவாழ்வு பெற்றுய்ந்தனர்.

இருபதாம் அத்தியாயம்

தேவியந்தர்த்தானோத்தர விருத்தாந்தம் முற்றிற்று.

———

சுலோகம். (ருO)

ஆக அத்தியாயம் உO - க்குச் சுலோகம் (ககளக)

உ

ஏகாரரூபாயை நம:

இருபத்தொன்றாம் அத்தியாயம்

சும்பநிசும்ப விருத்தாந்தம்.

ஓ சவுனகாதிமுநிகணங்காள்! மகிஷாசுரனால் ஆளப்பட்ட நகரம் சத்துருக்னனுடைய அரசநீதி விசேஷணத்தால் சகல செல்வங்களு முடைத்தாய்த் தருமங்கள் வளர்ந்தோங்கின வென்று வியாச முநிவர் கூறிப் பின்னரும் அரசனைப்பார்த்து ஓ ஜனமேஜயனே! தேவியினது சரித்திரங்களைக் கேட்பதில் நீ மிக்க ஆவலுடையவனா யிருத்தலால் இன்னமுஞ் சொல்லுகின்றேன் கேட்பாயாக. மஹா தேவியினுடைய சரித்திரம் சகலப் பிராணிகளுடைய பாவங்களையும் போக்கி உத்தமமான சுகத்தைக் கொடுப்பதென்றால் பக்தியுடைய உனக்கது என்ன செய்யுமோ அதை நான் சொல்லவேண்டுமா! ஓ அன்பனே! சும்பன் நிசும்பனென்று இரண்டசுரருளர். அவ்விருவரும் சகோதரர்கள். சமமான பலமுள்ளவர்கள். புருஷர்களால் கொல்லப்படாதவர்கள். சேனைகளில் மிக்கவர்கள். எக்காலத்துந் தேவர்களுக் கிடுக்கண் செய்பவர்கள். துராசாரத்தைக் கைகொண்டவர்கள். மதோன்மத்தர்கள். மாயாவிகளான மகா ராக்ஷசர்களைக் கைவசமாகப் படைத்துள்ளவர்கள். இவர்களும் இவர்களைப் போன்ற சண்டன் முண்டன் குரூரன் ரக்தபீஜன் தாம்பரலோசனன் என்பவர்களையும், இமோத்பர்வதத்தில் வசித்திருந்த அசுரக் கூட்டங்களையும் தேவர்களுடைய நன்மையின் பொருட்டுத் தேவியினால் கொல்லப்பட்டார்க ளென்றனர். ஜனமோஜயன் ஓ வியாச பகவானே! சண்டன் முண்டனென்பவர் யாவர்? அவர்களுடைய பலாபலங்க ளெத்தன்மையது? தேவியினிடத்தில் யாரால் ஏவப்பட்டார்கள்? தேவியினால் அவர்களுக்கு மரணம் வரவேண்டிய காரணமென்னை? பிரதமத்திற் சொன்ன சும்பன் நிசும்பனென்பவர் எவனுக்குப் பிறந்தவர்கள்? எவ்விதமாய்க் கொல்லப்பட்டார்கள்? இவையெல்லாம் விரிவாய்ச் சொல்லவேண்டுமென்றனன்.

வியாசர் கூறுகின்றார். ஓ அரசனே! பூர்வத்தில் சும்பன் நிசும்ப னென்பவர் பாதாளத்திலிருந்து பூவுலகில் வந்தவர்கள். அவ்விருவரும் புஷ்கரக்ஷேத்திரத்தையடைந்து ஒருதிவ்யமான விடத்தில் பதினாயிரம்

வருடம் அன்னபானாதிகளின்றிப பிரமனை நோக்கி அரிய தவஞ் செய்து வந்தனர். பிரமதேவன் மகிழந்து அம்சவாகனாரூடனாயவர்களுக்குப் பிரதியக்ஷமா யவர்களைப் பார்த்து ஓ தபஸ்விகளே! நீங்கள் செய்யுந் தவத்துக்கு மகிழ்ந்தேன் எழுந்திருங்கள் உங்களுக்கு வேண்டியவை யாவை? அவற்றைப் பூர்த்தி செய்யவே வந்தேனென்னவும் அவர்கள் விழித்தெழுந்து தவத்தினால் வாடிய சரீரமுடையவர்களாதலால் தள்ளாடித் தள்ளாடிப் பிரதக்ஷணஞ் செய்து தண்டாகாரமாய் பூமியில் விழுந்து நமஸ்காரஞ் செய்து எழுந்திருக்கமுடியா தெழுந்து இனியமொழிகளால் தோத்திரஞ் செய்யத் தொடங்கிப் பிரமதேவனைப் பார்த்து ஓதேவர்கட்கெல்லாந் தேவனே! பக்தர்களுக்கு அபயப்பிரதமானவனே! சிருட்டிகர்த்தனே! கிருபாசமுத்திரமே! எங்களைரக்ஷியுமென்றுசொல்லி நீர் எங்களிடத்தில் சந்துஷ்டராயிருப்ப துண்மையாயின் எங்களுக்கழியா திருக்கத்தக்க தேவவுருவத்தைத் தந்தருளும். உலகில் மரணபயத்தைக்காட்டிலும் பெரிதானபயங் கிடையாது. அது எங்களுக்கில்லாதிருக்கச் செய்யுமென்று கேட்டனர். பிரமன் ஓ தானவசிரேஷ்டர்களே! நீங்கள் கேட்கும்வரம் உலகத்துக்கு விரோதமானது. யாராயினும் மரணபயத்தைப் போக்கும்படியான வரத்தைக்கொடுத்தார்களென்று மூன்றுலகினுஞ் சொல்லப்பெற்றதுண்டோ வில்லை. பிறந்தவனுக்கு மரணம்நிச்சயம். இதுசிருட்டிகாலந்தொட்டுண்டான வழக்கு. பிறந்தவரிறக்க வேண்டியவர். அதிற்சிறிதும் சந்தேகமில்லை. ஆகையால் இவ்வொன்றைக்கேட்பதை விட்டு வேறெதனைக்கேட்ட போதிலும் தருகின்றேனென்றனன். அசுரர்களும் அதனை நன்றாயாலோசித்தவர்களாய்ப் பிரமனை நமஸ்கரித்து நீர் கூறிய துண்மையே! எங்களுக்கு தேவகணங்களாலும் மாநுடர்களாலும் மிருகாதிபக்ஷிகளாலும் மரணம்வராவண்ணம் அனுக்ரகஞ்செய்யும். ஆனால் ஸ்திரீகளைக் குறிக்காதொழிந்தோம். யுத்தத்துக்கு வரத்தக்க ஸ்திரீகள் யாரிருக்கின்றனர். ஸ்திரீகளுக்கு நாங்கள் பயப்படமாட்டோம். ஒரு சமயம் அவர்களிடத்தில் எங்களுக்கதுவுண்டானாலு முண்டாகட்டும். அதனால் குறைவில்லையென்று சொல்லவும் பிரமன் சநி விட்டதென்று மகிழ்ந்து ஓ சும்பநிசும்பர்களே! நீங்கள் கேட்டவண்ணம் வரந்தந்தேனென்று சொல்லித்தன்னுலகடைந்தனன்.

சும்பநிசும்பர்களுந் தங்களிடம் போய்ச்சேர்ந்து பிருகு மநிவரை வரவழைத்து அவரைப் புரோகிதராகக் கொண்டு வழிபட்டு அவரால் நல்ல சுபதினநக்ஷத்திர முதலியவை கூடிய சுபதினத்தில் பட்டாபிஷேகஞ்செய்துகொண்டு சிங்காசனாதிபதிகளாய் வீற்றிருந்தனர். அசுரர்களெல்லாம் நாம் அமரர்களை யடக்கும் நாள் வந்து விட்டதென்று

அகமகிழ்ந்து கூட்டங்கூட்டமாய் வந்து கூடினர். அச்சமயத்தில் முன்சொன்ன சண்டன் முண்டன் முதலிய அசுர ரெல்லாந் தங்கள் தங்கள் ரதகஜதுரகபதாதிகளோடு வெள்ளமாகச் சூழ்ந்தனர். இரக்தபீஜ னென்பவனும் தாம்பர னென்பவனும் இரண்டக்ரோணி சேனைகளுடன் வந்து சேர்ந்தனர்.

ஓ அரசனே! ரக்தபீஜனோடு முன்தேவர்கள் போர்செய்த காலத்தில் அவனது சரீரத்தினின்றும் ரக்தம் விழுமானால் அதினின்று மவனைப்போல் அநேக அசுரர்கள் மஹா குரூரர்களாயும் ஆயுத பாணிகளாயும் தோன்றி யெதிர்த்தனர். அவனுடைய ரக்தமே அசுரர்கள் தோன்றுவதற்குப் பீஜமாயிருந்தத்னால் அவன் ரக்தபீஜனென்று பெயர் பெற்றனன். அவனை யெதிர்த்துப் போர்செய்பவரும் வெல்பவரும் கொல்பவருங் கிடையா. இப்படிப்பட்டவ ரெல்லாம் சும்பநிசும்பர்களுக்குப் படைத்துணையாக விருந்தார்க ளென்றால் அவர்களுடைய பெருமைகளையும் சேனைப் பெருக்கத்தையும் சொல்லிமுடியுமோ. அவர்களால் சகல ராஜ்யமும் பீடிக்கப்பட்டன. ஓர் சமயத்தில் இருவரும் இந்திரனைச் செயிக்கவேண்டு மென்றெண்ணிப் போருக்குச் சென்ற காலத்தில் தேவேந்திரன், அக்னிதேவன் முதலிய திக்பாலகரைச் சேர்த்துக் கொண்டு யுத்தஞ் செய்யும் போது இந்திரன் தனது வச்சிராயுதத்தினால் நிசும்பனை மோதியடித்தலும் அவன் மூர்ச்சையாய் விழுந்தனன். அதனைச் சும்பனறிந்து இந்திரனோடு தேவர்களையும் வளைத்துப் பாணப்பிரயோகஞ் செய்து திரும்பிப்பார்க்க வொட்டாமல் பறக்கடித்து கற்பகவிருக்ஷம் காமதேனு முதலிய சகல செல்வங்களையும் தங்கள் வசப்படுத்திக் கொண்டு அவனுடைய யஜ்ஞபாகத்தையும் தனக்காகும் வண்ணம் நியமித்துக் கற்பகச்சோலையை யடைந்து அங்குள்ள சுகத்தால் மிகவும் மனமகிழ்ந்து அமிர்தபானஞ் செய்து சிறிதுகாலங் கழித்து அளகாபுரிக்குப் போய் குபேரனை யோட்டி அங்குள்ள சகல நிதிகளையுங் கொள்ளைகொண்டு பின்னர் யமன்முதலிய திக்குப் பாலகர்களையும் அடித்துத் துறத்தி அங்கங்கும் தங்களுடைய ஆட்களை வைத்துப் பரிபாலித்து வரச்செய்து சூரிய சந்திரர்களையுந் தங்களாணை கடவாமல் போய்வரும்படிச் செய்து இவ்வாறு எங்குந் தன்னாணையே நிகழும் வண்ணஞ் செய்தனர்.

இந்திராதி தேவர்க ளெல்லாம் பதியிழந்தும் பதித்வமிழந்தும் பணமிழந்தும் பலமிழந்தும் படையிழந்தும் பரதேசிகளாய் மலைகளிலும் குகைகளிலும் வனங்களிலும் புதர்களிலும் நதிகளிலும் புக்கு ஒளிமாழ்கி அறிவு கெட்டு அமிர்தபானம் போய் அலைந்து அசுரர்

கண்களுக்குப் புலப்படாமல் நாளைக்கழித்து வந்தனர். அரசனே! செல்வம் போன வழியைப் பார்த்தனையா! சுகமெல்லாந் துக்கமாய் வந்தவகையைக் கண்டனையா! சுகம் தெய்வாதீன மல்லவோ! பலவான்களா யிருந்தாலும் மகாமகிமை யுள்ளவர்களாயிருந்தாலும் அறிவிற் சிறந்தவர்களா யிருந்தாலும் பெருமையிற் சிறந்தவர்களா யிருந்தாலும் துக்கத்தை யனுபவிக்க வேண்டிய காலத்தில் துக்கத்தையும் சுகத்தை யனுபவிக்க வேண்டிய காலத்தில் சுகத்தையும் அனுபவிக்கின்றார்களேயன்றிக் காலத்தைக் கடந்து சுதந்திராமாய்ச் சுகத்தையே யனுபவித்தார்களென்பதில்லை. காலதத்துவத்தினுடைய வியாபாரமானது மிகவும் ஆச்சரியமாக விருக்கின்றது.

ஓ ஜனமேஜயனே! காலமானது சாமான்யமான ஒரு மாநுடனை மஹாராசாவாகவும், மஹாராஜாவாக வுள்ளவனை ஐயமேற் பவனாகவும், பிறரிடத்தில் ஏற்கும் நிலையையுடையவனைக் கொடுக்கும் நிலையை யுடையவனாகவும், கொடுக்கும் நிலையை யுடையவனை ஏற்கும் நிலைமையுடையவ னாகவும், பலவானைத் துர்ப்பலனாகவும், துர்ப்பலனைப் பலவானாகவும், பண்டிதனை அபண்டிதனாகவும், அபண்டிதனைப் பண்டிதனாகவும், சூரனைப் பேடியாகவும், பேடியைச் சூரனாகவும் செய்து ஆடல் காண்கிறது. அந்தோ! நூறு அஸ்வமேதஞ்செய்தவனை இந்திராசனத்தி லேற்றிப் பின் கல்லின்மேலும் மண்ணின்மேலு மிருக்கச்செய்து துக்கத்துக் காளாக்கிவிட்டதே! ஒருவனைத் தர்மிஷ்டனாகவும் ஞானவானாகவுஞ் செய்து அவனையே பாபிஷ்டனாகவுஞ் சிறிதும் ஞானமில்லாதவ னாகவும் செய்கிறதே! பிரமனாதியரையும் இப்படியே செய்வதென்றால் அந்தக்காலதத்து வத்தைப் பற்றி ஆச்சரியப் படத்தக்கது என்ன விருக்கின்றது.

இருபத்தொன்றாம் அத்தியாயம்

சும்பநிசும்பவிருத்தாந்தம் முற்றிற்று.

———

சுலோகம் (சாக)

ஆஉ அத்தியாயம் உக - க்குச் சுலோகம் (கஉ௩உ)

உ

ஏகாக்ஷர்யை நம:

இருபத்திரண்டாம் அத்தியாயம்

* இமாலயம்பிரதி இந்திராதிகமனம்.

வியாசமுநிவர் ஜனமேஜயனைப் பார்த்து ஓ அரசனே! தேவர்களை யோட்டிய சும்பன் ஆயிரம் வருடம் கொடுங்கோல் செலுத்தி வருநாளில் பதப்பிரஷ்டர்களாய்ப்போன இந்திராதியர் சிந்தா குலப்பட்டு தங்களாசிரியரைச் சரணாகதியடைந்து நீர் சர்வஜ்ஞ ரல்லவா! நாங்கள்படும் துன்பத்தைப் போக்கடிப்பதற்கு ஓ ருபாயமில்லையா! வேத சாஸ்திரங்களனைத்தும் ஆன் மாக்களுக்கு நன்மையைச் சொல்லுகின்றனவாயும் இஷ்ட காமியங்களைப் பிரயோசனப் படுத்து கின்றனவாயும் இருப்பதென்று சூத்திர கர்த்தாக்களெல்லாம் கூறியிருக்கின்றார்க ளல்லவா! ஆகையால் இஷ்டகாம பலப்பிரத மாயிருக்கிற அநேகயாகங்களில் இப்போது எங்களையுத்தேசித்து எது செய்தால் க்ஷேமத்தை விளைவிக்குமோ அதனை நீரேயறிந்து செய்யும். அநுஷ்டான தர்மங்களை விதிமுகமாகக் கூறும். ஆகமங்களை யறிந்து சத்துரு நாசத்துக் குரித்தான அபிசாரயாகத்தை எப்படிச் செய்தால் துக்க நிவிர்த்தியாகுமோ அதனையறிந்து உம்முடைய புத்திக்கேற்ப இப்போதே செய்யுமென்றனர். பிரகஸ்பதி அவர்களைப்பார்த்து ஓ தேவர்களே! மந்திரங்களெல்லாம் தெய்வங்களின் வழியாகப் பலன்களைக் கொடுக்குமே யல்லாமல் தாமாகவே சுதந்தரமாய்ப் பலன்களைக் கொடுக்கவறியா. ஆகவே அம்மந்திரங்களுக்கு அதி தேவதைகளான நீங்களே துக்கத்துக்குப் பிராப்தர்களாய் விட்டால் நான் என்ன செய்வேன்? எந்தயாகஞ் செய்தபோதிலும் அவைகளில் இந்திரன் அக்னி யமன் முதலிய உங்களைத்தானே வைத்துப் பூஜித்தல்வேண்டும். பூஜைக்கு யோக்கியர்களான நீங்கள் ஆபத்தை யடைந்திருந்தால் யாகங்கள் என்ன செய்யப்போகின்றன. யாகங்கள் மந்திரங்களுக் குட்பட்டவை. நீங்கள் காலதத்துவத்தைக் குட்பட்டவர். ஆகையால் காலதத்துவத்தைத் தடை செய்யும்படியானது ஒன்றுமில்லை. ஆனால் அந்தந்த காலத்துக்கேற்ற உபாயமாத்திரஞ் செய்ய வேண்டுமென்பது

---

* இமயமலைக்கு இந்திராதிகள் செல்லுதல்.

பெரியோரது ஆணை. சில புத்திமான்கள் காலத்தைப் பெரிதாகவும் உபாயத்தைக் குறைவாகவும் சிலர் உபாயத்தைப் பெரிதாகவும் காலத்தைக் குறைவாகவுங் கூறுவர். ஓ இந்திரனே! காலபலமும் உபாயமும் ஒன்று சேர்ந்தே ஒருவர்க்கு இஷ்டபலத்தைக் கொடுக்கின்றன. சிலர் தெய்வமே ஊழென்னப்பட்ட காலத்தை எதிர்பார்த்து உபாயத்தைக்கைவிடுகின்றனர்; அது கூடாது. தனது புத்திக்கெட்டிய வரையில் அவ்வக்காலத்துக் கேற்றவாறு உபாயத்தைப் பெரியோர் முகமாய்ப் பெறல் வேண்டுமாகையால் நானொன் றலோசித்துச் சொல்லுகிறேன்.

காலமென்கிற தெய்வத்துக்குமேல் காலதீதமாகிய தெய்வமொன் றிருக்கின்றது. அதற்கு அக்காலம் சுவாதீனப்பட்டது. ஆகவே காலாதீதமாகிய தெய்வத்தின் கிருபையுண்டாவதற் குபாயம் வேண்டுமாகலான் அத்தெய்வத்தையும் உபாயத்தையுஞ் சொல்லுகிறேன் கேட்பாயாக. உங்களால் பூர்வத்தில் துதிக்கப்பெற்று மகிஷனைக் கொன்றது எந்தத்தெய்வமோ அந்தத்தெய்வந்தான் காலாதீதமாகிய தெய்வம். அத்தெய்வம் முன் நீங்களெல்லாந்தோத்திரஞ் செய்தகாலத்தில் உங்களுக்கு எக்காலத்திலாவது ஆபத்துக் களுண்டாகுமானால் அக்காலத்திலென்னைத் தியானித்துத் தோத்திரஞ்செய்மின்கள். நான் அவ்விபத்துக்களை நாசஞ்செய்து உங்களுக்கு வேண்டிய ஐஸ்வர்யங்களைக்கொடுத்து ரக்ஷிக் கின்றேனென்ற தல்லவா! ஆகையால் இப்பொழுது நீங்களனைவரும் அத்தேவியையாராதனைசெய்து தோத்திரஞ்செய்வதுதான் உபாயம். இப்போது அத்தேவி இமயமலையில் வாசஞ்செய்வதாகக்கேள்விப் பட்டேனாகலின் நீங்களனைவரும் அவ்விடத்துக்குப் போய்ப் பக்தியோடு ஆராதனைசெய்மின்கள். உங்கட்கத்தேவியினுடைய பீஜசகிதமான மந்திரங்கள் தெரியுமல்லவா! அந்தமந்திரோச் சாரணையில் சரத்தையுடையவர்களாயிருங்கள். மந்திரோச்சாரணை செய்வதாகிய யோகபலத்தால் தேவிபிரத்தியக்ஷமாவாளென்று தெரிகின்றது. உங்களுடைய துக்கத்துக்கு முடிவு இப்போது தானேற்பட்டது அதிற்சந்தேகமில்லை. தேவி உங்களால் பூசிக்கப்பட்டு உங்களுக்கு வேண்டியவற்றைக் கொடுக்கப்போகிறாள். உங்கள் காரியங்களெல்லாம் சித்தியாகும். நீங்கள் திடமானபக்தியோடு இமயமலையைச் சேர்மின்களென்று ஆசிபுகன்றுபோயினர்.

தேவர்களெல்லாம் ஆசிரியராணையின்படி தேவியைத் தியானித் தவர்களாய் இமயமலைக்குப்போய்ப் பக்தர்களுக்கு அபயத்தைக் கொடுக்கும். மஹா! மாயாதேவியை நமஸ்கரித்துத் தியான பராயணர்களாய்த் தேவியின் மாயாபீஜாக்ஷரமந்திரத்தைப்

பக்திசிரத்தையோடு ஜபித்துவந்து பின்னர் தோத்திரஞ்செய்யத் தொடங்கினர். *ஹேதேவீ! விஸ்வேஸ்வரி பிராணநாதே உனக்கு நமஸ்காரம். ஓ சதானந்தரூபே! சுரர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கின்றவளே! உனக்கு நமஸ்காரம். அசுரர்களை நாசஞ்செய்கின்றவளே! மாநுடர்களுக்கு அநேகவிதமான பிரயோசனத்தைச் செய்கின்றவளே! பக்திகம்யஸ்வரூபிணியா யிருக்கின்றவளே! உனக்கு நமஸ்காரம் உனது நாமத்துக்குக் கணக்கில்லை. உனது சொரூபம் இப்படியென்று எவரும் அறிந்ததில்லை. வேதஸ்வரூபமாகவும் சகலதேவதாஸ்வரூபமாகவும் சகலப் பிராணிகளிடத்தில் சக்தி ஸ்வரூபமாகவும் பிரஜைகளைச் சிருஷ்டிக்கின்ற சக்தியாகவும் சங்காரகாலத்தில் சங்கரிக்கின்ற சத்தியாகவுமிருக்கின்றாய். உனக்கு நமஸ்காரம். ஸ்மிருதியும் த்ருதியு (தைரியமு)ம் நீதான். புத்தியும் கிழத்தனமும் புஷ்டியும் சந்துஷ்டியும் திருதி (தாரணை)யும் நீதான். காந்தியும் சாந்தியும் சிறந்தவித்யாரூபியும் லக்ஷுமியும் கதியும் கீர்த்தியும் ஞானமும் நீதான். இந்தப்பிரபஞ்சத்துக்கு ஆதிகாரணமான பீஜமும்நீதான். உனக்கு நமஸ்காரம். எக்காலத்தில் எவ்வுருவங்களெடுத்து தேவர்களாகிய எங்களுடைய காரியங்களை நடத்திவந்தனையோ அவ்வுருவங்களுக் கெல்லாம் நமஸ்காரம். க்ஷமாசொரூபிணியாயும் யோகநித்திரா சொரூபிணியாயும் தயாசொரூபிணியாயும் விவக்ஷா (பிராணிகளுள்ளத்தில் இதனைச் சொல்லவேண்டுமென்றெழு மிச்சையெதுவோ அவ்விச்சா) சொரூபிணியாயுமிருக்கின்றவள் நீயே. உன்னையன்றி வேறுயாவர். தேவர்களிடத்தி லெப்பொழுதுந் தயை யுடையவளென்று புராணங்களாலும் வேதங்களாலும் புகழப் படுகின்றனை. எங்களுக்கெல்லாந்தாய் நீ யல்லவா! தாயாகிய நீ எங்களை ரக்ஷிக்கின்றா யென்பது ஓராச்சரியமா! பிள்ளைகளைத் தாய் ரக்ஷிப்பது இயல்பன்றோ ஆகலான் இப்பொழுது எங்கட்குச் சகாயஞ் செய்கின்றவளாய் நாங்களெண்ணி யிருக்குங் காரியங்களைப் பூர்த்திசெய்து விடுவாய். சர்வலோகங்களாலும் நமஸ்காரஞ்

* நமோதேவிவிஸ்வே ஸ்வரிப்ராணநாதே சதானந்தரூபே சுரானந்த தேதே, நமோதானவாந்த ப்ரதேமானவானா மனேகார்த்ததேபக்தி நம் யஸ்வரூபே (க)

நதேநாமசங்கியாம் நதேரூபமீத்ருக் ததாகோபிவேதாதி தேவாதிரூபே த்வமேவாஹிசர்வேஷு சக்திஸ்வரூபா ப்ரஜாசிருட்டிசம்ஹார காலேசதைவ.

ஸ்மிருதிஸ்த்வம் த்ருதிஸ்த்வம் த்வமேவாசிபுத்திர் ஜராபுஷ்டிதுஷ்டீ த்ருதி: காந்திசாந்தீ சுவித்யாசுலக்ஷ்மீர் கதி: கீர்த்திமேதே த்வமேவாசிவிஸ்வ ஸ்பீஜ: புராணம்(உ)

எதாயைஸ்வரூபை: சுரோஷீஹகார்யம் சுராணாஞ்சதேப்யோ நயா மோத்யசாந்யை க்ஷமாயோகநித்ரா தயாத்வம் விவக்ஷா ஸ்திதாசர்வபூதேஷு ஸ்தைஸ்வரூபை: (ங) இன்னும்முள.

செய்யப்பெற்ற தேவியே! உன்குணவிசேஷங்களையாவது சொரூப விசேஷங்களையாவது இத்தன்மைத்தென்று அறிவோமா! ரக்ஷிக்கும் வல்லமையுள்ள நீ எங்களை உன் கிருபைக்குப் பாத்திரர்களென்று திருவுளத்திலெண்ணி இப்பொழுது வந்திருக்கும் பயத்தினின்றும் எங்களை விடுவிப்பாய். நீ அசுரர்களைக் கொல்லத் தொடங்கினால் பாணங்க ளெடுப்பதில்லை. முஷ்டி வகையான யுத்தங்களைச் செய்வதுமில்லை. சூலம் கட்கம் தண்ட முதலியவைக ளெடுப்பதுமில்லை. இவைகளொன்று மில்லாமலே சங்காரஞ் செய்யும்படியான சாமர்த்தியத்தை யுடையவளாயிருக்கிற நீ ஆயுதங்களைத் தாங்கி யிருப்பது நாங்கள் கண்டுகளிக்கு நிமித்தம் லீலா மாத்திரமாய்க் கொண்ட கோலமாகுமேயன்றி யவைகளா லென்ன பயனாயிற்று. ஓ தேவி! மூடர்கள் சிலர் இப்பிரபஞ்சத்தை நித்திய மென்கின்றனர். இப்பிரபஞ்சம் காரிய ரூபமாயுள்ளதன்றோ ஆகவே அது அழிவுடைய தாமேயன்றி நித்தியமாகுமா! இதனைக் காரியமென்றதனால் காரணம் வேறொன் றுளதென்றும் அக்காரணத்தி னின்றுங் காரியமாதல் ஒரு கர்த்தாவினா லென்றும் அறிதல் வேண்டும். ஓ தேவி! அந்தக் கர்த்தா நீதானென்று காரியமாகிய பிரபஞ்சத்தைக் கொண்டு அநுமானத்தால் யூகிக்கின்றோம். ஆனால் புராணங்களில் பிரஹ்மாசிருஷ்டிக்கின்றாரென்றும் விஷ்ணு ரக்ஷிக்கின்றாரென்றும் உருத்திரர் சங்கரிக்கின்றாரென்றும் பிரசித்தியாகச் சொல்லுகின்றபடியால் அவர்களன்றோ கர்த்தாக்களாக வேண்டுமெனின்! அவரெல்லாம் மஹாசம்ஹாரத்திலொழிந்துபோய் புனர்சிருஷ்டிகாலந்தோறும் உன்னில் நின்றுந்தோன்றி உன்னுடைய ஆணையைமேற்கொண்டு அம்முத்தொழிலையுஞ் செய்துவருங் கர்த்தாக்க ளாவரேயன்றி உன்னைப்போ லழியாதிருக்கின்றவரல்லர். ஆதலால் சேதனாசேதனப் பிரபஞ்சங்கட்கெல்லாம் நீயே காரணமாக விருக்கின்றனை. உன்னையன்றிவேறில்லை. சிலவித்துவான்கள் திரிமூர்த்திகளும் ஒடுங்கித் தோன்றினாலும் சிருட்டியாதி தொழில்களுக்குச் சுதந்தரராய் அவைகளை அவர்களே செய்துவரும் கர்த்தாக்களென்று வேதங்களிற் கூறப்படுகின்றமையா லவர்களை இப்பிரபஞ்சத்துக்குக் காரணர்களல்லரென்று கூறப்படுமோ வென்பா ரவர்களை யாம் மந்தமதிகளென்று கூறுவோம். ஏனெனின் இவர்கள் தாமாகவே யொடுங்கித் தோன்றும் சக்தியுடையவராயின் ஒருவாறு காரணர்களென்று கூறலாம். அங்ஙனமன்றி ஒடுக்குஞ்சத்தியும் தோற்றுவிக்குஞ்சத்தியும் இவர்களுடைய சுதந்தர்த்துக்குட்படாதனவாய் ஒடுக்குவிக்குஞ்சத்தியொடுக்க இவர்களொடுங்கியும் தோற்றுவிக்குஞ் சத்தித்தோற்றுவிக்க இவர்கள் தோன்றியும் பின்னர் அவரவருக்குரிய

தொழில்களை நடத்துவிக்குஞ்சத்தி நடத்துவிக்க இவர்கள் அத்தொழில்களை நடத்தியும் வருகின்றார்களேயன்றித் தாமாகவே ஒன்றுஞ்செய்தாரில்லை. ஆகலான் சத்திகளே எவ்வாற்றானுமுன்னிற் பனவாகத் தெரியவருகின்றன. இதனால் மஹாசத்தியாகிய நீ யொருத்தியே அவ்வச்சத்தி பேதங்களாய் அவ்வவர்பால் நிறைந்து நின்று அவ்வவர்களை அந்தந்தச் சத்தியுக்தர்களாக்கி அவ்வத் தொழில்களை நடத்திவருகின்றனையென்பது நிச்சயமாயிற்று.

ஆகலான் மேலான பிரஹ்மவித்தியா சொரூபிணியாயும் சர்வகாம பலப்பிரதையாயும் மோக்ஷத்தைக் கொடுக்கின்றவளாயும் தேவகணங்களால் வணங்கப்பட்ட பாதகமலங்களைப் படைத்தவளாய் மிருக்கின்றவுன்னை எந்தயோகிகள் சகன்மாதாவாக வுபாசிக் காமலிருக்கின்றார்களோ அவர்கள் யோகிகளாயினும் ஞானதூனியர் களல்லவா! உன் மகிமையறிந்து தோத்திரஞ் செய்பவர்களுக்கு வேண்டியாங்கருள நீயே கமலா சொரூபிணியாயும், காந்தியாயும் ஸ்திதியாயும் லச்சையாயும் கீர்த்தியாயும் புஷ்டியாய் மிருக்கின்ற உன்னை எந்த வைணவர் களாவது பாசுபதர்களாவது சூரிய உபாசகர்களாவது தியானஞ் செய்யாமலும் தோத்திரஞ் செய்யாமலு மிருக்கின்றார்களோ அவர்களெல்லாம் டம்பாசார முடையவர்களென்று மதித்தல் வேண்டும். அதிற் சந்தேகமில்லை. ஹரி ஹராதிகளாலும் அசுரர் முதலியோராலுஞ் சேவிக்கப்பட் டிருக்கின்ற உன்னை இவ்வுலகின்கண் எந்த மாநுடர்கள் அற்பபுத்தியினால் நமஸ்கரிக்காமலிருக்கின்றார்களோ அவர்கள் தெய்வத்தினால் வஞ்சிக்கப்பட்ட வர்களென்று நினைக்கப் பட்டவர்களல்லவா! லக்ஷுமிஸ்வரூபமா யிருக்கின்ற வுன்னுடைய பாதங்களை விஷ்ணு மூர்த்தியானவர் செம்பஞ்சின் குழம்பால் சிவக்கச் செய்கின்றார். பார்வதி ஸ்வரூபமாயிருக்கின்ற வுன்னுடைய பாததூளியில் உருத்திர மூர்த்தியானவர் மிகவும் ஆசையுள்ளவரா யிருக்கின்றார். இவர்களே இவ்வாறிருப்பவ ரென்றால் ஏனையோருடைய செய்திகளை என்னவென்று சொல்லலாம். அந்தோ! உன்னுடைய பாதபத்மங்களை எவர்கள் தான் நமஸ்கரிக்கிறதில்லை. ராகமோகங்களை விட்டு முநிசிரேஷ்டர்களும் உன்னுடைய தயையையும் க்ஷமையையும் வேண்டுகின்றனர். உன்னுடைய பாதகமலங்கள் நமஸ்கரிப்பதில் எவர்களுக்கு ஆவவில்லையோ அவர்களல்லவோ சம்சாரமாகிய பாழ்ங்கிணற்றில் வீழ்ந்த பதிதர்கள். குஷ்டம் குன்மம் தலைவலி இவைகளோடு கூடினவர்களாகவும், தரித்திரம் தீனபாவனை முதலியன வுடையவர்களாகவும் சுக பரம்பரையில்லாதவர் களாகவும் எவர்கள் காணப்படுகின்றார்களோ அவர்களெல்லாம் உன்னை

நமஸ்கரிக்காதவர்களே! எவர்கள் சாங்கால மளவும் புத்திர சந்தானமும் திரவிய சம்பத்தும் இல்லாதவர்களாய் விரகுசுமையைச் சுமப்பது போல் தேகசுமையைச் சுமப்பதில் சமர்த்தர் களாக விருக்கின்றார் களோ அந்த அற்புத்தி யுள்ளவர்கள் பூர்வசன்மத்தில் எந்தக்காலத்திலாவது உனதுபாதபூஜையைச் செய்யாதவர்களென்று நினைக்கின்றோமென்று தேவர்கள் தோத்திரஞ்செய்து வரும்பொழுது மஹா தேவி கருணைகூர்ந்து யவ்வனமான திருமேனியை யுடையவளாயும் திவ்யமான பீதாம்பரத்தைத் தரித்தவளாயும் நவரத்தினமயமான ஆபரணங்களைத் தரித்தவளாயும் சுகந்தமயமான புஷ்பமலைகள் கஸ்தூரிகளபாதிகள் முதலியவற்றைப் பூசிக்கொண்டவளாயும் ஜகத்தைமோகிக்கச் செய்யவல்ல நல்லபளப்பான காந்தியுடையவளாயும் சர்வலக்ஷணங்களுக்கு லக்ஷயையாயும் அத்விதீய சொரூபிணியாயும் பிரத்தியக்ஷமாய், குகைகளினின்றும் வெளிவந்துகங்காநதியில் ஸ்நானஞ்செய்து நித்தியகர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு பக்தியோடு தியானித்துத் தோத்திரஞ்செய்கின்ற தேவர்களைப் பார்த்து மேககர்ச்சனை போன்றகம்பீரமான திருவாக்கினால் குயிலொலியைப்போலும் இனியமொழியோடு அவர்களிடத்தில் மிகுந்த அன்புடையவளாய்ச் சொல்லத் தொடங்கினாள்.

ஓ தேவர்காள்! நீங்கள் யாரைத் தோத்திரஞ் செய்கின்றீர்கள்? எதற்காகச் செய்கின்றீர்கள்? உங்களுக் காகவேண்டிய காரியங்களென்ன? எதற்காகச் சிந்தாகுலப்படுகின்றீர்க ளென்றனள்? தேவியினுடைய ரூபலாவண்ய சவுந்தரியங்களைக் கண்டு ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்திருக்கின்ற தேவர்கள் அம்பிகையினுடைய வார்த்தைகளைக் கேட்டு ஓ தேவி! பிரபஞ்சகாரணீ! கிருபாசமுத்ரீ! நாங்கள் உன்னைத்தான் தோத்திரஞ் செய்கின்றோம். அசுரர்களால் தபிக்கப்பட்டிருக்கின்ற எங்களைச் சர்வதுக்கங்களினின்று நீக்கி ரக்ஷித்தல் வேண்டும். ஓ மஹா தேவியே! மகிஷனைக் கொன்றபோது எங்கட்கு ஓர் வரங்கொடுத்திருக்கின்றனை! என்னையெனின் என்னை எப்பொழுது நினைக்கின்றீர்களோ அப்போது நான் வந்து அசுரர் களாலுண்டாகும் துன்பங்களை யொழிப்பேனென்றருளியதேயாம். அதனால் இப்போது உன்னை நினைத்துத் தோத்திரஞ்செய்தோம். சும் பநிசும்பர்க ளென்னும் அசுரர்கள் கோரரூப முடையவர்களாயும் சகல சத்கருமங்கட்கு விக்னஞ் செய்கின்றவர்களாயும் ஒருவராலுங் கொல்லப் படாதவர்களாயு மிருக்கின்றனர். ரக்தபீஜ னென்பவனாலும் சண்டன் முண்டன் என்பவர்களாலும் இன்னும் பலவான்களான பல

அசுரர்களாலும் எங்களுடைய ராஜ்யங்கள் அபகரிக்கப்பட்டன்ளன. எங்களுக்கு உன்னைவிட வேறு கதியில்லை. எங்களுடைய காரியத்தை நீதானே செய்யவேண்டும். உன்னுடைய பாதத்தை எப்பொழுதும் நமஸ்கரிப்பதில் ஆசையுடையவர்களாக விருக்கின்றோம். உன்னிடம் பக்தியுள்ள எங்களைத்துக்க மில்லாமல் வைக்க வேண்டு மல்லவா! அசுரர்களால் துக்கத்தை யடைந்திருக்கிற எங்களுக்கு நீயே சரணமாக விருக்கவேண்டும். நாங்கள் மாத்திரமன்று துன்பப்படுவது சகலலோகமு மாகும். ஆகலான் பிரபஞ்ச மனைத்தையும் நீரக்ஷித்தல் வேண்டும். நீ தானே பிரபஞ்சத்தைச் சிருட்டித்தவள். சிருட்டித்தவளாகிய நீ ரக்ஷிக்கா தொழிந்தால் வேறு யாவர் ரக்ஷிக்க வருவர். ஓ அம்பிகே! தானவர்கள் மிகவுங் கொழுத்தவர்களாயும் அதிகபல முள்ளவர்களாயும் உலகத்தை மிகவருத்து கின்றார்கள். சொன்னோஞ் சொன்னோம் ✡ ரக்ஷிரக்ஷி. சரணஞ் சரணமென்றனர்.

இருபத்திரண்டாம் அத்தியாயம்

இமாயைம்பிரதி இந்திரநதிகமனம் முற்றிற்று.

சுலோகம் (ருஎ)

ஆஉ அத்தியாயம் உஉ - க்குச் சுலோகம் (கஉஅகூ)

உ

ஏகாநே காக்ஷராக்ருத்யை நம:

இருபத்து மூன்றாம் அத்தியாயம்

* சும்பநிசும்ப நகரீம்பிரதி தேவீகமனம்.

வியாச முநிவர், அரசனைப் பார்த்துக் கூறுகின்றார். ஓ ஜனமே ஜயனே! சத்துருக்களால் தபிக்கின்ற தேவர்களுடைய தோத்திரங்களைக் கேட்ட தேவியானவள் தன்சரீரத்தினின்றும் ஒரு சத்தியைத் தோற்று வித்தனள். அச்சத்தி, சத்தி சரீரத்தினின்றுந் தோன்றியபடியால் கவுசிகை என்றும், கருமைநிற முடையவளா யிருந்தமை பற்றிக் காளி என்றும் யாவராலும் அழைக்கப்பட்டனள். அன்றியும் மகாகோரரூபிணியாயும் யாவருக்கும் பயத்தை விளைவிக்கின்ற அசுரர்களுக்கு மஹாபயத்தை விளைவிக்கின்றவளாயு

* சும்பநிசும்பர்களுடைய பட்டணத்துக்குத் தேவிசெல்லுதல்.

✡ ரக்ஷி ரக்ஷி - காப்பாற்றுவாய் காப்பாற்றுவாய்

மிருந்தபடியினால் காளராத்திரி என்றும் பெயர் பெற்றனள். இவ்வகையாய்த் துஷ்டநிக்ரகார்த்தங் கொண்ட திருமேனியைப் படைத்தவளாயினும் மனோகரமாயும் சர்வபூஷணாலங்கிரதையாயும் பளபளப்பாயும் பக்தர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுக்குங் கிருபாசமுத்திரையாயுமிருந்தனள்.

இந்தக் காளிகாதேவியை யுண்டாக்கிய மஹாதேவி, தேவர்களைப் பார்த்து நீங்கள்பயப்படவேண்டாம். நான் உங்களுடைய சத்துருக்களாகிய சும்பநிசும்பர்களைக் கொன்றுவிடுகிறேன். உங்களுக்குச் சுகத்தைச் செய்கின்றேன். துஷ்டர்களாகிய அசுரர்களைக் கொல்லுங்காரியத்தையும், சிஷ்டர்களாகிய உங்களை ரஷிக்குங்காரியத்தையும் அவசியம் செய்கின்றேனென்று உறுதிமொழி கூறி, சிஹ்மவாகனமூர்ந்து தன்னாலுண்டாக்கப்பட்ட காளிகாதேவியைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு சத்துருக்களுடைய பட்டணத்தையடைந்து அங்குள்ள ஓர் பூங்காவனத்திலிருந்து சராசரங்களெல்லாம் மோகிக்கத்தக்க ஓர் கானத்தைப்பாடினாள். அந்தக் கானத்தைக்கேட்ட மிருகங்களும் பக்ஷிகளும் மோகமடைந்தன. தேவர்களெல்லாம் ஆகாயத்திலிருந்தவண்ணம் பரமானந்தத்தை யடைந்தனர்.

ஓ அரசனே! அந்தச் சமயத்தில் சும்பனுடைய சேவர்களான சண்டமுண்டர்கள் அக்கானத்தைக் கேட்டு இந்தக் கானத்தைச் செய்கின்றவர்கள் யாவரென்று நாடி மஹா தேவியைப் பார்த்து ஆச்சரியமடைந்து சும்பனிடஞ் சென்று அவனை வணங்கி ஓ ராஜாதி ராஜனே! நம்முடைய உத்தியானவனத்தில் காமமோகினியாயும் ரூபலக்ஷண சவுந்தரிய முள்ளவளாயும் இருக்கிற ஒரு ஸ்திரீ இமாசலத்திலிருந்து சிஹ்மவாகனா ரூடையாய் வந்திருக்கின்றாள். அந்த வுத்தமமான ஸ்திரீயைப்போலும் நாம் தேவலோகத்திலும் கந்தர்வலோகத்திலும் இப்பூலோகத்திலும் பார்த்ததுமில்லை. கேட்டதுமில்லை. யாவரையும் மயக்கும்படியான கானமும் அவளிடத்திலமைந்திருக்கின்றது. அவளிப்பொழுது பாடிய கானத்தால் பசுபக்ஷிகளெல்லாம் சூழ்ந்து மயங்கிக் கிடக்கின்றன வென்றால் ஏனையோர் மயங்குவாரென்பதற்குச் சந்தேகமுமுண்டோ! ஓ அரசனே! இவள் யாருடைய பெண்ணென்றும் எதற்காக இங்கு வந்தாளென்றும் அறிந்துகொள்வாய்; பின்னர் அந்த அழகி உன்னுடைய வீட்டுக்கு வரும் வகையைத்தேடி உனக்குரிய ஸ்திரீயாக அவளையாக்கிக் கொள்வாய். உன்னுடைய அரசச் செல்வத்துக்கு மிகவுந் தக்கவள். இந்த ஸ்திரீ கிடைக்கத் தக்கவளல்லள். தேவர்களிடத்திலிருந்த சகல ரத்னங்களையுங்

கிரகித்து நீ இந்தஸ்திரீ ரத்னத்தை ஏன் கிரகிக்கமாட்டாய். இந்திரனுடைய ஐராவதமும் பாரிஜாத விருக்ஷமும் ஏழுமுகமுள்ள குதிரையும் உன்னால் பலாத்காரமாய்க் கிரஹிக்கப் பட்டனவல்லவா! உனது தபோபலத்தால் அம்சத்துவஜமுடைய ரதம் பிரமதேவனால் கொடுக்கப் பெற்றனையல்லவா! குபேரனுடைய பத்மநிதியும் வருணனுடைய வெண்குடையும் உனது சகோதரனான நிசும்பனால் பலவத்காரமாய்க் கொள்ளப்பட்டனவல்லவா! அப்படியே வருணனுடைய பாசமும் சமுத்திர ராஜனுடைய வாடாத தாமரை மலர்மலையும் நானாவிதமான ரத்தினங்களும் யமனுடைய பாசமும் மயனுடைய தண்டமும் உன்னுடைய பயத்தினால் அவர்களால் கொடுக்கப்பெற்றனையன்றோ! இவ்வண்ணம் உனது மகிமையை நானென்னவென்று சொல்லப் போகின்றேன். சமுத்திரத்தி லுண்டான காமதேனுவேயன்றி மேனகை முதலிய தேவதாசிகளும் உன்சுவாதீனத்தி லிருக்கின்றனர். சர்வசிரேஷ்டமான சகல பதார்த்தங்களும் உன்னுடைய பலத்தினால் கிரகிக்கப்பட்டவைகளா விருந்தும் இந்த ஸ்திரீ ரத்தினத்தை மாத்திரம் ஏன் கிரகிக்காம லிருக்கின்றனை! உன்னுடைய அரண்மனையிலுள்ள இரத்தினம் போன்றவைகளெல்லாம் இந்த ஸ்திரீ ரத்தினத்தினாலேயே சிறப்படையத்தக்கவைகள். மூன்றுலகத்திலும் இந்த ஸ்திரீ ரத்தினம் போல் ஒரு ர்த்தினமுங் கிடையாது. ஆகையால் அந்த ஸ்திரீயை அழைத்துக் கொண்டு வந்து உனது பத்தினியாக்கிக் கொள்வாயென்றனா்.

சண்டமுண்டர்களுடைய வார்த்தையைக் கேட்ட சும்பன்மலர்ந்த முகமுடையவனாய்ச் சமீபத்திலிருந்து சுக்கிரீபனைப்பார்த்து ஓ சமர்த்தனே! இப்போது இவர்களால் சொல்லப்பட்ட ஸ்திரீயினிடம் நீ சென்று அவள் என்னிடம் வரும் வகையான விதத்தை அவளிடம் சொல்லவேண்டும். சிருங்கார ரசத்தில்வல்ல சமர்த்தர்கள் ஸ்திரீகளிடத்தில் சாமதானமாகிய இரண்டு பாயங்களைத் தான் பிரயோகஞ் செய்தல் வேண்டும். பேதோபாயமாவது தண்டோபாயமாவ துபிரயோகப்படுத்தினால் ரசபங்கமுண்டாமென்று சொல்லுகின்றனா். ஆகையால் பண்டிதர்களால் கழிக்கப்பட்டபேததண்டங்களை யொழித்துச்சாமதானமென்கிற இரண்டுபாயங்களைக்கைக்கொண்டு மதுரமான பரிகாசத்தோடுங்கூடிய வார்த்தைகளைப் பிரயோகஞ் செய்தால் எந்தஸ்திரீதான் காமத்தாற் பீடிக்கப்பட்டவளாய் ஸ்வா தீனமாகமாட்டாளென்றுகூறச் சுக்ரீவன் மிக இனிமையாயும் யுக்த மாயுமிருக்கின்ற சும்பன் வார்த்தையைக்கேட்டு ஜகதம்பிகையினிட த்திற்சென்று மலர்ந்த திருமுகமுடையவளாய்ச் சிங்கவாகனத்தின் மேலிருக்கின்ற தேவியைப் பார்த்து நமஸ்கரித்துச் சொல்லுகின்றான்.

ஓ அழகிற் சிறந்தவளே! மன்மதனுக்கு மேலிட்ட அழகுள்ளவனாய்த் திரிலோகங்களையும் வென்றவனாய்ச் சர்வலோகாதி பத்யனாய் விளங்கும் சும்பனென்னும் சூரனாகிய அசுரன் உன்னுடைய சவுந்தரிய விசேஷங்களைக் கேட்டுக் காமபீடிதனாய் முன்னர் உனக்கு நமஸ்காரத்தைச்சொல்லி ஏனையவற்றைப்பின்னே கூறிஎன்னை உன்னிடம் அவ்வார்த்தைகள் சொல்லத் தூதாக அனுப்பினான். ஆகலான் அவற்றைப் பிரீதியோடு கேட்பாயாக. என்னையெனின் நான் சர்வலோகங்களையும் வென்று யாவருக்கும் மஹாராசனாக விருக்கின்றேன். தேவர்களுக்குரிய யக்ஞபாகங்களை இவ்விடமிருந்த படியே கிரகித்துக் கொள்ளுகின்றேன். சர்வசம்பத்துக்கும் இடமாயிருக்கின்ற சுவர்க்கலோகத்தை உபயோக மற்றதாகச் செய்துவிட்டேன். அப்ஸரஸ்திரீகளை யெல்லாம் கிரகித்துக் கொண்டேன். எந்த வுலகத்திலுமுள்ள இரத்தினங்களை யெல்லாம் நானே அனுபவிக்கத்தக்கவனாக விருக்கின்றேன். அசுரர்களும் தேவர்களும் மாநுடர்களும் என் சுவாதீனத்தி லிருக்கின்றனர். இத்தன்மையனாகிய என்னுடைய மனதை உனது சவுந்தரியாதி குணங்கள் என்காதின்வழியாக நுழைந்து சுவாதீனமாக்கிக்கொண்டது. அதனால் நான் உனக்கு ஊழியக்காரனாய் விட்டேனென்செய்வேன். எனக்கு நீ என்ன உத்தரவு செய்கின்றாய். உனக்குச் சுவாதீனனான நான் அதனைச் செய்கின்றேன். ஓ மனோகரமான ரூபத்தையுடையவளே! நான் உனது பணிவிடைக்காரன். காமபாணத்தினால் வருந்துகிற என்னை ரக்ஷிப்பாய். எனக்கு நீ மகிஷியாய் இந்த மூன்றுலகத்திற்கும் நீயே அரசியாயிருந்து எல்லாப் போகங்களையும் அனுபவிக்கக்கடவாய். நான் என்னுடைய மரணபரியந்தம் உனக்கு ஊழியக்காரனாகவே யிருப்பதன்றி வேறுவகையாக ஆவேனென்றெண்ணவேண்டாம். எனக்கோ ஒருவராலும் மரணமில்லை. நீ எப்போதும் தீர்க்க சுமங்கலியாகவே யிருக்கலாம். உனக்கெவ்விடத்தில் கிரீடித்துக் கொண்டிருக்க விருப்பமோ அவ்விடத்தில் கிரீடித்துக் கொண்டிருக்கலாமென்றனன்.

ஓ தேவியே! இங்ஙனங் கூறிவந்த சும்பனுடைய வார்த்தைகளை நீ பரியாலோசனை செய்து நான் அந்த அசுரனுக்கு எதனைச் சொல்ல வேண்டுமோ அதனைச்சொல்லுவாய். நான் அதனை இந்த க்ஷணமே போய்ச் சொல்லுகின்றேனென்றனன்.

தேவர்களுடைய காரியசித்தியின் பொருட்டு எழுந்தருளிவந்த தேவிபுன்னகைசெய்து ஓ தூதனே! உன்னால் சொல்லப்பட்ட சும்பனையும் நிசும்பனையும் நானறிவேன். அந்த சும்பன்

தேவர்களையெல்லாஞ் செயித்திருக்கின்றானென்றும் சத்துருக்களையெல்லாம் நாசஞ் செய்திருக்கிறானென்றும் குணங்களுக்கெல்லாம் ஆதாரமாயிருக்கிறானென்றும் சகல சம்பத்துக்களையும் அனுபவிக்கிறவ னென்றும் மகாதானசாலியென்றும் மன்மத ரூபத்தை யுடையவனென்றும் முப்பானிரண்டு லக்ஷணங்களோடு கூடினவனென்றும் தேவாசுர மனிதர்களால் கொல்லப்படாதவ னென்றும் நானறிந்தே அந்த மகா சூரனைப்பார்க்க வேண்டுமென் றிவ்விடம் வந்திருக்கின்றேன். இரத்தினம் எப்படிப்பொன்னி னிடத்தில் பதிப்பிக்கப்பட்டுப் பிரகாசிக்கின்றதோ அப்படி நான் இந்த சும்பனால் வரிக்கப்பட்டுத் திரிலோகத்திலும் பிரகாசிக்க நெடுந்தூரத்தி லிருந்து வந்திருக்கின்றேன். காந்தர்வரும் தேவரும் மாநுடரும் இந்த சும்பனுக்குப் பயந்து நடுங்கினவர்களாய்த் தெளிவற்றிருக்கின்றனர். இப்போதும் இந்தச் சும்பனுடைய குணாதிசயங்களைக் கேட்டு அவனைப் பார்க்க வேண்டுமென்றும் வந்திருக்கின்றேன். ஆகையால் நான் சிலவார்த்தைகள் சொல்லுகின்றேன் அவைகளை நீ அந்த சும்பனை யாருமில்லாதவிடத்தில் வரவழைத்துச் சொல்லுவாயாக.

என்னையெனின்! மஹாபலசாலியாகவும் சுந்தரனாகவும் தாதாவாகவும் குணவானாகவும் சூரனாகவும் சகலவித்தையிலும் வல்லவனாகவும் சகலதேவர்களையும் வென்றவனாகவும் சமர்த்தனாகவும் சத்துருசம்ஹாரியாகவும் சிறந்தகுலத்திற் பிறந்தவனாகவும் சிறந்தரத்தினங்களையெல்லா மனுபவிக்கத்தக்க ஐஸ்வர்யவந்தனாகவும் உனக்கு மேலொருக்ர்த்தாவையறியாத மேலான கர்த்தாவாகவும் அளவிறந்த சேனைகளையடையுயவனாகவும் இருப்பவனென்று உன்னையறிந்தேன் ஓமஹாபுத்திமானே! உன்னுடைய பட்டணத்துக்கு நானே இஷ்டப்பட்டுவந்துவிட்டேன். ஆனால் விவாகவிஷயத்தில் எனக்கோர் சபதமுண்டு என்னையெனின்! என்னுடைய பாலத்தன்மையினால் தோழிகளுடைய கூட்டத்தில் விளையாடிக்கொண்டிருக்கும்போது அவர்களைப்பார்த்து யுத்தஞ்செய்வதில் நான் மகாபலசாலி, எனக்குவரனாக வரத்தக்கவன் எனக்குச் சமானமான பலமுள்ளவனாய் என்னை யுத்தத்தில் செயிப்பானாயின் அவனை நான் பர்த்தாவாகக் கொள்ளப் போகிறேனென்றேனென்று சொல்லிவிட்டேன். தோழிகள் என் வார்த்தையைக் கேட்டு ஆச்சரியப்பட்டு இவள் ஏன் இவ்வண்ணமான சபதத்தைச் செய்தாளென்று சிரித்தனர். ஓ அசுர சிரேஷ்டனே! நீயும் மஹாபலசாலியாகையால் என்னுடைய பலா பலத்தையறிந்து

உன்பலத்தினால் என்னை வெற்றிகொண்டு விவாகஞ்செய்து கொள்வாயென்கிற இந்த வார்த்தைகளைச் சொல்லுவாயென்றனள்.

இருபத்துமூன்றாம் அத்தியாயம்

சும்பநிசும்ப நகரீம்பிரதி தேவீகமனம் முற்றிற்று.

———

சுலோகம் (சாருஏ)

ஆக அத்தியாயம் உங-க்குச் சுலோகம் (கஙருசுஏ)

உ

ஏதத்ததித்யநிர்த்தேஸ்யாயை நம:

———

இருபத்துநான்காம் அத்தியாயம்

தேவி மஹாத்மியம்

———

ஓ அரசனே! இவ்வண்ணம் தேவி கூறிய வார்த்தைகளைக் கேட்ட தூதன் ஆச்சரியப்பட்டவனாய்த் தேவியைப் பார்த்து ஓ திரிலோக சுந்தரியே! நீ பேசுவதில் மிகவுஞ் சாமர்த்திய முடையவ ளென்று இப்பொழுது சொல்லிவந்த சில நியாயத்தால் தெரிந்து கொண்டேன். ஆயினும் "பேதமையென்பது மாதர்க்கணிகலம்" என்பதையும் உன்பால் காணப்பெற்றே னாகையால் எனக்குவியை விளைவிக்கின்றது. இப்போது நீ என்ன சொன்னாய். "உன்பலத்தினால் என்னை வெற்றிகொண்டு விவாகஞ் செய்து கொள்வாய்" என்றால் சொல்லச்சொன்னாய். நீ சொல்லிய இந்தச் சொல்லால் அவன் உன்னைச் செயிப்பதற்கு முடியா தென்பதல்லவோ உன்னுடைய துணிவு. இந்திரன் முதலாயினாரை வெற்றிகொண்ட அவ்வீரனை நீ வெற்றிகொள்ள எப்படி இச்சித்தாய். யுத்தத்தில் சும்பனை ஜயிப்பவரும் உண்டோ? ஸ்திரீ ஜாதியா யிருக்கின்ற நீ யுத்தலக்ஷணத்தை யறியவல்லையோ! ஓர் கால் அறிந்தவளா யிருந்தாலும் அவனுக்கு முன் யுத்த வார்த்தையைச் சொல்லி நிற்கவல்லையோ! உன்னளவை யறியாமற் சொன்னா யல்லவா! ஒரு வார்த்தையைச் சொன்னால் யோசனை யற்றுச் சொல்லலாமா! "யாகாவராயினும் நாகாக்க, காவாக்காற் சோகாப்பர் சொல்லிழுக்கப்பட்டு" என்னும் நீதி வாக்கியத்தைக் கேட்டதில்லையா! தனது பலத்தையும் எதிரியினுடைய

பலத்தையும் அறிந்தல்லவோ வீரம் பேச வேண்டும். அவனை நீ ஏனையோரைப்போல் இலேசாக நினைக்க வேண்டாம். அவன் உன்னுடைய ரூப லாவண்ணியங்களைக் கேட்டு காம வெறிகொண்டு யுத்தத்தைமறந் துன்னைப் பிரார்த்தனை செய்வதற்காளாயினனேயன்றி யுத்தமுகத்தால் அடையவெண்ணுவனாயின் நீ எவ்வளவு. அவனது சமயத்தை எண்ணிப்பார்த்து விளையாட்டு வார்த்தையைவிட்டு அவனிஷ்டத்தைப் பூர்த்தி செய்வாய். நீ மூர்க்கசுபாவத்தை விட்டு எனது வார்த்தையை நன்கு மதித்து சும்பனையாவது நிசும்பனையாவது அடைவாயாக நா னுனக் கிதத்தைக் கூறுகின்றேன். அஃதாவது சகலப் பிராணிகளாலும் எப்போதும் எல்லாற்றானும் சிருங்காராசமே சந்தோஷத் தோடு ஏற்றுக் கொள்ளத்தக்கது. அதனால் புத்திமான்களும் சிருங்கார ரசத்தையே யுத்தமமாகக் கொண்டு புதிதுபுதிதா யனுபவிக்கின்றனர். ஓ சிருங்காரரச முடையாளே! நான் சொல்லியவாறு நீ இணங்கிவரா விடில் எங்களரசன் கோபித்து வேறு தூதர்களை விடுத்து உன்னைப் பலாத்காரமாய்க் கூந்தலைப் பிடித்திழுத்து வரும்படிச் செய்வான். ஓ ஏலவார் குழலி! அக்கொடியராகிய தூதரும் அப்படியே செய்வர். ஓ மயில் போன்றவளே! நீ சாகசஞ் செய்வதை விட்டு நாணத்தைக் கொள்ள வேண்டிய வளாக விருக்க நாணத்தை விட்டு சாகசத்தைச் செய்கின்றனையே இது பெண்தன்மை யாமோ. இனியேனும் நாணத்தைக் கைக்கொண்டு எங்களரசனருகில் வருவாய். நீ கௌரமாய் வாழ்வதற்குரியவள். உனக்கு அம்புகளைக் கொண்டு செய்யும் யுத்தமெங்கே? கேளிவிலாசமாய்ச் சுகித்திருக்கும் சுகமெங்கே? இச்சாரா சாரங்களை விசாரித்து நான் முன் சொல்லிய வண்ணஞ் செய்வாயாகவென்று கூறிய வசனங்களைத் தேவிகேட்டு ஓ மூடனே! நீ பேசுவதில் மிக்க நிபுணனென் றறிகின்றேன். சும்ப நிசும்பர்கள் மிக்கபலவான்க ளென்பதை நானே யறிவேன். அறிந் தேனாயினும் முன் என்னால் எது பிரதிக்ஞை செய்யப்பட்டதோ அது இப்போது இங்ஙனம் வேறுபடுமா! ஆகலின் நீவிரைவாக அசுரர் பாற் சென்று நான் சொல்வது போற் சொல்வாய். எவ்வளவு பலவானென்று தெரிந்தபோதிலு மென்னிடத்தில் யுத்தஞ் செய்து வெற்றிக் கொள்ளாதவனையும், அழகினால் மாத்திரம் என்னை வெல்ல நினைக்கின்றவனையும் நான் பர்த்தாவாகக் கொள்வதில்லையென்றும், என்னை யுத்தமுகத்தில் வெற்றி கொள்ளத்தக்க வன்மையாளன் எவனோ அவனே எண்ணியவாறு என்னைப் பாணிக்கிரகணஞ் செய்துக் கொள்ள வல்லவனாவ னென்றும், யானோ ஒருவனால் பாணிக்கிரகணமாவதற்கு விருப்பங் கொண்டு வந்தவளல்லள் எதிர்ப்போரது பிராணனைக் கிரகணம் பண்ணுவதற்கே விருப்பங்

கொண்டுவந்தவ ளென்றும், ஆகலின் நீ சக்தி யுள்ளவனாயின் என்னோடு போர் செய்ய வரலா மென்றும், என்னுடைய சூலத்திற்குப் பயங்கொள்வையாகில் சீக்கிரத்தி லிருந்த விடந்தெரியாமல் பாதாளம் போய்ச் சேர்ந்து வாழலா மென்றும், அடா வுனக்குப் பிராணனிடத்தில் விருப்பமுளதாயின் சுவர்க்கத்தையும் பூமியையும் விட்டோடிப் போகலாமென்றும் அஞ்சாமற் சொல்வாய். அவன் நீ சொல்லியவற்றைக் கேட்டு எது செய்தால் உசிதமென்று தோன்றுகிறதோ அதனைச் செய்வானாக. ஓ தருமந்தெரிந்த தூதனே! இத்தன்மையான விவகாரத்தில் தூதாக வருகின்றவனது தருமம் சத்துருவினிடத்திலும், தனது அரசனிடத்திலும் வாய்மைக்கு விரோதமாக ஒன்றுஞ்சொல்லக் கூடாதன்றோ. அதனை எண்ணி நீசிக்கிரமாய்ச் சொல்வாயாகவென்று கூறவே அவன் இவள் சொல்லிய வெல்லாம் நீதியையும் தனது பலத்தையும் கால ஏதுவையுங் காட்டுங் கம்பீர முடையனவென் றாச்சரியமடைந்து அசுரனிடஞ் சென்று அடிபணிந்து கைகூப்பிநின்று வணக்கத்துடனும் விநயத்துடனும் அசுரனுக்குப் பிரியமுண்டாகும் வண்ணம் நீதியுடன் சொல்லத்தொடங்கினான்.

ஓ அசுரேந்திரனே! உண்மையாயும் பிரியமாயுமுள்ள வசனத்தையே கூறவேண்டும். அவ்வண்ணங் கூறுவோர் அருமையன்றோ. உண்மைக்கும் பிரியத்துக்கும் மாறாகப்பேசுவதற்கு என்மனம் மிகவும் வருந்துகின்றது. ஏனெனின் உண்மையைக் கூறினால் பிரியத்துக்கு விரோதமாயும் பிரியத்தைப்பாரட்டினால் உண்மைக்கு விரோதமாயும் இருக்கின்றதனாலென்க. கேட்போர் அறிவின் வசப்பட்டிருப்பராயின் ஒருதீங்கும் உண்டாகா; ஆகவே நான் கூறுவதை யறிவுடன் கேட்பாயாக. இப்போது யுத்தத்துக்கு வந்திருப்பவள் உன்னிடம் வரத்தக்கவள் தானோ! அவள் போர் செய்யுந்திறமற்றவளோ! அவள் செய்யும் சாகசக்கியங்களை என்னாலறிய முடியவில்லை. அவள் யாருக்குப் பத்தினியோ அதனையுங்கண்டு பிடிக்கமுடியவில்லை. யுத்தத்தில் மிகவும் அகங்காரங் கொண்டிறுமாந்து கொடுமையைப் பேசுவதைமாத்திரம் அறியவல்ல னாயினேன். அதனைக் கூறுகின்றேன் கேட்பாயாக. அவளென்னைப்பார்த்து ஓதூதனே! யான்பாலியத்தில் தோழிகளுடன் கூடி விளையாடிக் கொண்டிருக்குங் காலத்தில் என்னையுத்தத்தில் ஜயித்து எனதுகர்வத்தை யடக்குபவன் எவனோ அவனை நான் வரனாகவரித்துக் கொள்வேனென்று ✿ பிரதிக்ஞைசெய்திருக்கின்றேன். அதனை இப்போது மாற்றுவனோ அந்தப்பிரதிஜ்ஞை பொய்த்துப் போகாவண்ணம் இந்த சும்பன் என்னிடத்தில் போர்செய்து வெற்றி கொண்டு, பின் தானென்னணியவாறு என்னையாள விரும்புவானாயின்

✿ பிரதிக்ஞை - தத்துணி புரைத்தல்

யான் தடை சொல்லேனென்றாளையா! இனி இந்தவார்த்தைகளால் என்னவறியவெண்டுமோ அதனையறிந்து எதனைச் செய்ய வேண்டுமோ அதனைச் செய்வாயாக. அவளோ யுத்தத்துக்குத் துயாராய்ச் சர்வாயுதபாணியாய்ச் சிங்கம் போல் இன்னமும் யாவர் வருவர்களென்று எதிர்பார் திருக்கின்றாள். அவளுக்குக் கொஞ்சமும் யுத்தத்தில் பயமில்லை. இனி நீ எதனை விதிக்கின்றனையோ அதனைச் செய்கின்றே னென்றனன். அவைகளைக்கேட்ட சும்பன் அருகிலிருந்த தம்பியைப்பார்த்து ஓ தம்பீ! நீ மிக்க புத்திசாலி யல்லவா! இப்போது யாம் யாது செய்யலாம். யுத்தத்துக்குக் கூப்பிடும் ஸ்திரீயோ ஒருத்தி. ஆகையால் நானாவது போகிறேன் அல்லது நீ யாவதுமோ எது உசிதமோ அதனை இப்போது செய்வா யென்றனன். அவன் ஓ அண்ணா அவளிடத்தில் நீயும் போகக்கூடாது நானும் போகக் கூடாது தூம்பரலோசன னென்பவனை அனுப்புவோம். அவன் அவளைச் செயித்து அழைத்துக் கொண்டு வருவான். அவன் அழைத்து வரும்படியான பலமுள்ளவ னென்று சொல்லவே சும்பன் அதற்கிசைந்தவனாய்த் தூம்பிரனைப் பார்த்து நீ சீக்கிரமாய்ச் சேனைகளுடன் சென்று மதமயக்கத்தால் கர்வங் கொண்டிருக்கும் அவளையும் அடக்கி அவளுக்குத் துணையாகத் தேவராயினும் அசுரராயினும் வேறெத்தகைய ராயினும், வருவராயின் அவர்களையும் அவளுடனிருக்கின்ற காளியையும் கொன்று வருவாய். ஓ தூம்பரனே! நீ யுத்தஞ் செய்யும் போது நான் விரும்பியுள்ள ஸ்திரீ மிருதுவான சரீரமுடையவ ளாதலால் அவள் பேரில் கொடுமையான பாணங்களை விடாமல் ஏனையோர் கண்மேல் கொடூரமான பாணங்களை விட்டு அவருயிர்களை வாங்கி விடுவாய். அந்த ஸ்திரீயை மாத்திரம் வதை செய்யாமலும் வாகை செய்யாமலும் அழைத்துக் கொண்டு வருவாய்.

இங்ஙனம் சும்பனாலேவப்பட்ட தூம்பரலோசனன் உடனே அறுபதினாயிரம் அசுரவீரர்களுடன் யுத்தஞ்செய்யப் புறப்பட்டு அழகிய உத்யானவனத்தின்கண் பிரகாசித்துக் கொண்டிருக்குந் தேவியைக்கண்டு அருகிற்சென்று யுத்தியுக்தமாயும் ரசமுடையதா யுமுள்ள வசனங்களைக் கூறத்தொடங்கி ஓ தேவி! நான் சொல்வதைச் சாவதானமாய்க் கேட்பாயாக. எங்களரசனாகிய சும்பனுன்னைக்கண்டு மோகங்கொண்டு அதனால் மிக்கதுன்பமுற்று ரசபங்கம்வராம லுன்னுடன்கூடிக் களிக்கும்வண்ணம் ஓர் தூதனிடம் தனது சமாசாரஞ் சொல்லி யுன்னிடமனுப்ப அதற்கு நீ இணங்காமல் கூறிய வசனமானது விபரீதமாயிற்று. என்னயெனின்! நீ சொல்லிய வசனங்களிலுள்ள சூக்ஷமார்த்தத்தை அறியாமல் அரசனிடஞ் சொல்லவே அவன் காமமயக்கங்கொண்டு மிகவும்

அல்லற்படுகின்றான். நீ யுத்தம் என்று கூறியதின்பொருள் நானறிவேன் யுத்தம் ரதியாலும் உற்சாகத்தாலும் பாத்திரத்துக்குத்தகுந்தபடி நிகழ்வதாகும். இதில் ரதியால் நிகழும் யுத்தம் பெண்ணாகிய வுன்னிடமும் உற்சாகத்தா னிகழும் யுத்தம் பகைவர்களிடமுமாம். முதலிற் கூறியது சுகத்தையும் பின்னர்கூறியது துக்கத்தையும் விளைவிப்பதாகும். ஓ பெண்மணியே! யான் உனது கருத்தை நன்றாயறிவேன். நீரதி யுத்தத்தை விரும்பியே அவ்வாறு தூதனிடங் கூறிவிடுத்தனை. இதனை நான் அரசனிடங்கூறவே அவன் என்னை உனதிடம் தூதாகவனுப்பினான். யான் அளவிறந்த சைனியங்களுடன் உன்னிடம் வந்தேன். நீ மிகவும் புத்திமதியாதலால் யான் கூறுஞ் சாரமாகிய வசனத்தைக் கேட்டுக்கொண்டு திரிலோகத்துக் கீசனும் தேவர்களது கர்வத்தை யடக்கினவனுமாகிய சும்பனை யடைவாயாக. அடைவையாயின் நீயே மகிஷியாயிருந்து நல்லபோகங்களை யனுபவிப்பாய். பெருந்தோளனாகிய அவன் காமலீலைகளில் பலவானாயுள்ளவன். அதனாலேயே உன்னைச் செயிப்பான் அவனிடம் நீ காமத்துக்குரிய பற்பல சேஷ்டைகளைச் செய்வாய். அவனுமவ்வாறே செய்வான்.. அங்ஙனமான ரதி யுத்தத்திற்கு இக்காளி சாக்ஷியாயிருக்கட்டும். இவ்வாறு நடக்கும் யுத்தயோகத்தில் எனதரசன் உன்னைச் செயித்தவனாக, நீ சிரமமடைந்து படுக்கையிலுறங்கும் படியாவாய். ஆதலின் நீ எனது வார்த்தையை யுக்தமாக வெண்ணி மிகவுந்துக்ககித்துக் கொண்டிருக்கும் எங்களரசனை களிக்கச்செய்வாயாக.

இருபத்துநான்காம் அத்தியாயம்

தேவிமஹாத்மியம் முற்றிற்று.

———

சுலோகம் - (சா0எ.)

ஆஉ அத்தியாயம் உசு - க்குச் சுலோகம் (கசுகரு)

உ

ஏகாநந்தசிதாக்ருத்யை நம:

இருபத்தைந்தாம் அத்தியாயம்

*காளிகயாசஹ தூம்பரலோசனயுத்தம்

ஓ அரசனே! இவ்வண்ணம் தூம்பரலோசனன் சொல்லிப்பேசாமனின்றான். அவனைக்காளிகாதேவி பார்த்துநகைத்து ஓ சிறிதுந் தெளிவில்லாதமூடனே! நீ சொல்லுஞ் சொல்லெல்லாம் கூத்தில் முன்னே வருகிற விகடக்கூத்தாடி சொல்வதுபோ லிருக்கின்றது. அவனுக்கும் உனக்கும் வேற்றுமையில்லை. நீ மனதில் பல வீணான எண்ணங்களை யெண்ணுகின்றவனாயும்பலவானாயும் சேனைகளைப் படைத்தவனாயுமிருக்கிற துராத்மாவால் அனுப்பப்பட்டவனாயுமிருக்கின்றாய். ஓமூடபுத்தியுள்ளவனே! இப்பொழுது யுத்தஞ்செய்தால் செய்க, இல்லாவிடில் ஓடிப்போவாய். வீணானவார்த்தைகளைப் பேசற்க. அச்சும்பனையும் நிசும்பனையும் அவர்களைப்போன்ற பலரையும் உன்னைப்போன்ற பலரையும் இத் தேவியானவள் கொன்று தன்னிடம் போய்ச்சேரப்போகின்றாள். மந்தபுத்தியுள்ள சும்பனுடைய தன்மைஎங்கே! பிரபஞ்ச மோகமற்றதேவினுடைய தன்மையெங்கே! இவ்விருவர்க்கும் விவாகமென்று சொல்லுகின்றவசனம் யுக்தமாகுமா! அயுக்தமான வார்த்தையைச் சொல்லற்க. பெண்சிங்கமானது அதிககாமமுள்ளதாயிருந்தாலும் ஓர்குள்ளநரியைத் தனக்குக் கணவனாகக் கொள்ளுமா! அது போலவே பெண் யானையானது ஒருகழுதையைக் கணவனாகக்கொள்ளுமா! காமதேநுவானது கவய (காட்டுப்பசு) மிருகத்தைவிரும்புமா! அந்தச் சும்பநிசும்பர்களிடத்தில் நான் சொல்லிவந்த இந்த வார்த்தைகளைச் சொல்லுவாய். இல்லாவிடில் பாதாளத்தைப் பார்த்து ஓடுவாய். இந்த அதாசீனமான வார்த்தைகளைத் தூம்பரலோசனன் கேட்டுக் கண்சிவந்து உக்கிரமான கோபத்தோடும் காளிகாதேவியைப் பார்த்து ஓ விகாரமான ரூபத்தை யுடையவளே! உன்னுடைய சரீரவிகாரத்தை மறந்து என்னைப்பார்த்து கூத்தாடியைப் போலிருக்கின்றாய். ஓ கூத்தாடி யென்றா என்னை யழைக்கின்றாய். என்னால் சொல்லப்பட்ட சும்பனுக்கு நீ சொல்லிவந்த வுவமானங்களெல்லாம் மிகவும் நன்றியிருந்தன. ஆஹா! இப்பொழு துன்னையும் இசச்சிங்க வாகனத்தையுங் கொன்று, பின்னா் இந்த ஸ்திரீயைப்பிடித்துக்

---

* காளிகாதேவியோடு தூம்பரலோசனன்யுத்தம்.

கொண்டுபோய் எனதரசனிடம் நிறுத்துவேன். அது ரசமானதல்லவே யென்று பயப்படுகிறேன். இரசபங்க முண்டாகக் கூடாதென்கிற ஞாயத்தை எண்ணாதொழிவேனாயின் கலகப் பிரியையான உன்னை இந்தவாளால் வெட்டிவிடுவேன். ஓ மந்தமதியுள்ள காளீ! எதற்காக உன்னை நீயே புகழ்ந்து பேசுகிறாய். இது வில்லாளிகளின் தன்மையல்ல. உனக்கு ஏதேனும் யுத்தமென்பது தெரிந்திருக்குமாயின் உன்சத்திக்குத் தக்கபடி பாணங்களைவிடு. என்னால் நீ இயமனுடைய சபையைப் போய்ச் சேரப்போகின்றா யென்றுசொல்ல அந்தக்ஷணமே வில்லைவளைத்துக் குணத்தொனிசெய்து பாணவருஷங்களைப் பொழிந்தாள். ஆகாயவாசிகளாயிருந்த தேவரெல்லாம் காளிகாதேவியைப் பார்த்துத் தோத்திரஞ்செய்து உனக்கு ஜயமுண்டாகக் கடவதென்று வாழ்த்தினர். இருவரும் பாணம் கத்தி கதை உலக்கை முதலான பலவற்றை மாறி மாறி விட்டு யாவர்க்கும் பயத்தை விளைவித்தனர். காளிகாதேவி தூம்பரனுடைய ரதத்திற் பூட்டியிருக்கின்ற கழுதைகளை மோதியடித்து ரதத்தையுமொடித்து அட்டகாசஞ்செய்தனள். அந்தத்தூம்பரன் வேறொருதேரமேலேறி அதிகோபங்கொண்டு காளிகாதேவியின்மேல் பாணங்கள் விட்டனன். அவள் அவைகளைத்தடுத்து அவன்மேல் பாணங்களை விட்டு அப்பாணங்களாலேயே அவனுடைய சேனைகளெல்லாம் அடிபட்டோடும் வகையைத்தேடி வேறுசிலபாணங்களைவிட்டு அவனுடைய ரதத்தையுந் தேரையும் முன்போலழித்துவில்லையும் ஒடித்து விட்டுத் தேவர்கள் மகிழும்வண்ணஞ்சங்கத்துவனிசெய்தனள். அது கேட்டதூம்பரன் நாணமுற்றுப் பரிகமென்னும் ஆயுதத்தையெடுத்துக் கொண்டு ஓகாளிகா! இதோ உன்னைக்கொன்றுவிட்டேனென்று சொல்லி ஓ பூனைக்கண்ணியே! என்று பரிகாசஞ்செய்து எறிந்தான். அதுகண்டகாளிகாதேவி! ஓர் ஹுங்காரஞ் செய்தனள். அந்தவளவில் அவன் பஸ்மமாய்ப்போயினான். அதுகண்டசேனைகளெல்லாம் பயந்தோடி நெடுந்தூரஞ்சென்று ஓ அண்ணா! அண்ணாவென்று கதறிக்கதறிக் கூவிச்சென்றன. தேவர்களெல்லாம் புஷ்பமாரி பொழிந்தனர். யுத்தகளமானது யானைகளாலும் குதிரைகளாலும் கழுதைகளாலும் நிறையப்பெற்றுப்பார்ப்போர்க்குப் பயங்கரத்தையும் கழுகு காக்கை நரிகள் முதலியவற்றிற்குச் சந்தோஷத்தையும் விளைவித்தது. காளிகாதேவி யுத்தகளத்தைவிட்டு அப்புறம்போய் நின்று சங்கநாதஞ்செய்தனள். அந்த வொலியைக்கேட்ட சும்பன் வெளியே வந்துகைகளற்றும் கால்களற்றும் அடிபட்டும் உதைபட்டும் பெருங் கூச்சலிட்டு ஓடிவருகின்ற சேனைகளைக்கண்டு தூம்பரலோசன னெங்கே! எங்குப்போயினான்? அவனிருக்க நீங்களெப்படித் தோல்வி யடைந்தீர்கள்? நம்முடைய சேனைகளெல்லாம் எங்கே? ஸ்திரீயை

ஏன்கொண்டுவரவில்லை? என்னசெய்தி சொல்லுங்கள்? சங்கநாதங் கேட்கப்படுகின்றதே அது யாரால் செய்யப்படுகிறதென்று கேட்க ஐயா! கேளும். தூம்பரலோசனனா? யுத்தகளத்திற்குத் தூமமாய்விட்டான். எங்களுக்குத் தோல்வியா! அது வந்தபடியினாலன்றோ நீர் எங்களால் சங்கதியறியலாயிற்று. நம்முடைய சேனைகளா! அவ்வுலகிலன்றோ போயின. ஸ்திரீயை ஏன் கொண்டுவரவில்லையா! நீர்மாளுவதற்காயின் கொண்டுவருகின்றோம். சங்கநாதஞ்செய்வதா! யாவரையுங் கொள்ளை கொள்வதற்கு வந்திருக்கும் காளிகாதேவியாகும்.

ஓ மஹாராஜாவே! சங்கநாதத்தைக் கேட்டீரா இன்னந்து வனியடங்க வில்லையே அந்தத் துவனியானது தேவர்களுக்கு மேன் மேல் சந்தோஷத்தை விளைவிக்கின்றது. தானவர்களாகிய நமக்குப் பயத்தை விளைவிக்கின்றது. அந்தக் காளியினால் யானைமுதலிய படைகள் மாண்டகோலாகலத்தையும் அவளது ஒரு ஹுங்காரத்தால் தூம்பரலோசனன்போன போக்கையு நாங்கள் ஆலோசித்துப் பார்த்தே நமக்குச் செயமுண்டாகா வென்று நிச்சயித்துக் கொண்டோம். நீரும் ஆலோசனையிற் சிறந்த மந்திரிகளோடு ஆலோசனை செய்து யுக்தமான வற்றைச் செய்யும். சேனைகளைத் துணையாகக் கொண்டு வராது தான் தனியாகவே வந்து உம்முடைய யுத்தத்தை விரும்பியிருக்கின்றாளே அந்தஸ்திரீ. இதுவென்னவாச்சரியம்! அவளுக்குப் பயமுண்டோ வென்றால் ஒரு சிறிது மில்லையே! அவள் சிங்கத்தின் மேலேறிக் கொண்டு மதச்செருக்குடையவளா யிறு மாந்திருக்கின்றனளே! இது என்ன ஆச்சரியம். நீர் சீக்கிரத்தில் மந்திராலோசனை செய்து சந்தியையாவது சண்டையையாவது இந்தஸ்தானத்தை விட்டு ஓடிப்போவதை யாவது எண்ணித் துணியும். அவள் தனியே யிருப்பதால் பலமில்லை என்றெண்ண வந்தாலும் தேவர்களெல்லாம் பின்பக்கத்தேயிருந்து பலஞ்செய்கின்றவர்களா கவிருக்கின்றார்கள். அவள் சமீபத்தில் ஹரி ஹரரதிகள் நீங்காதிருக்கின்றனர். திக்பாலகரும் ஏனைய கின்னர கிம்புருட யக்ஷகாந்திருவர்களும் இவ்வுலகிலுள்ள மாநுடர்களும் அவளுடைய பக்ஷமாகவேயிருக்கின்றனர். ஆகலான் அவள் பலமில்லாதவளென்று எண்ணுவதற் கிடமேயில்லை. ஆனால் அந்தத்தேவி இவர்களை யெல்லாம் தனக்குப் பலமாக வெண்ணி யிருக்கின்றாளோ வென்றால் இல்லை. அன்றி இந்த யுத்தமென்கிற காரியத்தை ஒருகாரியமாக வெண்ணியிருக்கின்றனளோ வென்றால் அதுவுமில்லை. ஏனெனில் அவளொருத்தியே ஸ்தாவரசங்கம ரூபமாயுள்ள சர்வப்பிர பஞ்சத்தையும் நாசஞ் செய்யவல்ல சாமார்த்தியத்தைப் படைத்தவளாகக் காணப்படுகின்றாள். அத்தன்மையான அவள் இந்தத்

தானவர்களை யெல்லாம் நாசஞ் செய்யச் சாமர்த்தை யாயிருக்கின்றா ளென்று நாங்கள் சொல்லவும் வேண்டுமா! இவைகளை யெல்லாம் நீர் ஆலோசனை செய்து எதனைச் செய்யவேண்டுமோ அதனைச் செய்யும் ஏனெனின்! "எண்ணித்துணிக துணிந்தபின் எண்ணுவ மென்பதிழுக்கு" என்றதை எண்ணிப்பாரும். நாங்கள் பிரபுவாகிய உம்முடைய க்ஷேமத்தை அனவரதமும் எண்ணுகின்ற அடிமைகளாதலால் இதமான வார்த்தைகளையும் உண்மையான செய்திகளையும் எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியமென்று கூறினர்.

இவர்கள் வார்த்தையைக்கேட்ட சும்பன் *ஒன்றுஞ்சொல்லாது* தனியிடத்துக்குச் சென்று தனதுதம்பியாகிய நிசும்பனையழைத்து ஓ சகோதரனே! காளிகாதேவியினால் நமது வெள்ளமான சேனைகளோடு தூம்பரலோசனன் இறந்துபட்டான். இறந்துபோன சேனைகள்போக எஞ்சிநின்றசேனைகளும் அவளால் அடிக்கப்பட்டு ஓடி வந்துவிட்டன. அந்தகாளிகாதேவிக்குத் தலைவியான ஸ்திரீயோ வெற்றிச் சங்கமெடுத்து ஊதுகின்றாள். இதுவென்னகாலம். சும்பனென்கிற நாமத்தை இதற்குத்தான் படைத்தேனோ! நன்று! நன்று!! அந்தோ! காலவேற்றுமையினுடைய தருமத்தை ஞானிகளுமறியார். திரணம் வச்சிராயுதமாகிறது வச்சிராயுதமும் திரணமாகிறது. பலவான் துர்ப்பலனாகிறான் துர்ப்பலன்பலவானாகிறான். ஒபுத்திமானே! எனக்கோ இப்பொழுது இதுசெய்யத்தக்கதென்று தோன்றவில்லை. உன்னைக் கேட்கின்றேன். இதற்குமே லென்னசெய்யலாம்? அந்தஸ்திரீ என்னால் அனுபவிக்கப்பட்டவளாகத் தெரியவில்லை. இதுநிச்சயம். ஆகையினால் நாம் ஓடிப்போகிறது யுக்தமா? போர் செய்வதுயுக்தமா? விரைவாய்ச் சொல்வாய். நீ சிறியவனாகவிருந்தாலும் இந்தச் சங்கடத்தில் உன்னைப் பெரியவனாக நினைக்கின்றேனென்றான். நிசும்பன் ஓ அண்ணாவே! ஓடிப்போவதும் யுக்தமல்ல துன்பமாகிய சங்கடத்தை நினைத்து நாமதற்குள்ளாவதும் யுக்தமல்ல அவளோடு நாம் யுத்தஞ்செய்வதே நல்லது நான் சேனைகளைக் கூட்டிக்கொண்டு யுத்தத்துக்குப் போகிறேன். உன்னால் கொல்லமுடியாதென்றெண்ணத் தக்கவளாயிருக்கின்ற அந்தஸ்திரீயை நான்கொன்றுவிட்டு உன்னிடம் அதிசீக்கிரத்தில் வந்துவிடுகிறேன். ஒருசமயம் தெய்வகதியாய் நான் அவளால் இறந்துவிடுவேனானால் பின்னர் நீ நன்றாயாலோசித்து எந்தகாரியத்தையும் செய்வாயென்றனன். சும்பன் தம்பியினுடைய வார்த்தையைக்கேட்டு ஓ தம்பி! நீ போகவேண்டாம் சண்டமுண்டர்களைச் சேனைகளோடுகூட்டி யனுப்புவோம். அந்த ஜண்டிக்கு இந்தச்சண்டமுண்டர்களே சரியானவர்கள்.

ஏன்கொண்டுவரவில்லை? என்னசெய்தி சொல்லுங்கள்? சங்கநாதங் கேட்கப்படுகின்றதே அது யாரால் செய்யப்படுகிறதென்று கேட்க ஐயா! கேளும். தூம்பரலோசனனா? யுத்தகளத்திற்குத் தூமமாய்விட்டான். எங்களுக்குத் தோல்வியா! அது வந்தபடியினாலன்றோ நீர் எங்களால் சங்கதியறியலாயிற்று. நம்முடைய சேனைகளா! அவ்வுலகிலன்றோ போயின. ஸ்திரீயை ஏன் கொண்டுவரவில்லையா! நீர்மாளுவதற்காயின் கொண்டுவருகின்றோம். சங்கநாதஞ்செய்வதா! யாவரையுங் கொள்ளை கொள்வதற்கு வந்திருக்கும் காளிகாதேவியாகும்.

ஓ மஹாராஜாவே! சங்கநாதத்தைக் கேட்டீரா இன்னந்து வனியடங்க வில்லையே அந்தத் துவனியானது தேவர்களுக்கு மேன் மேல் சந்தோஷத்தை விளைவிக்கின்றது. தானவர்களாகிய நமக்குப் பயத்தை விளைவிக்கின்றது. அந்தக் காளியினால் யானைமுதலிய படைகள் மாண்டகோலாகலத்தையும் அவளது ஒரு ஹுங்காரத்தால் தூம்பரலோசனன்போன போக்கையு நாங்கள் ஆலோசித்துப் பார்த்தே நமக்குச் செயமுண்டாகா வென்று நிச்சயித்துக் கொண்டோம். நீரும் ஆலோசனையிற் சிறந்த மந்திரிகளோடு ஆலோசனை செய்து யுக்தமான வற்றைச் செய்யும். சேனைகளைத் துணையாகக் கொண்டு வராது தான் தனியாகவே வந்து உம்முடைய யுத்தத்தை விரும்பியிருக்கின்றாளே அந்தஸ்திரீ. இதுவென்னவாச்சரியம்! அவளுக்குப் பயமுண்டோ வென்றால் ஒரு சிறிது மில்லையே! அவள் சிங்கத்தின் மேலேறிக் கொண்டு மதச்செருக்குடையவளா யிறு மாந்திருக்கின்றனளே! இது என்ன ஆச்சரியம். நீர் சீக்கிரத்தில் மந்திராலோசனை செய்து சந்தியையாவது சண்டையையாவது இந்தஸ்தானத்தை விட்டு ஓடிப்போவதை யாவது எண்ணித் துணியும். அவள் தனியே யிருப்பதால் பலமில்லை என்றெண்ண வந்தாலும் தேவர்களெல்லாம் பின்பக்கத்தேயிருந்து பலஞ்செய்கின்றவர்களா கவிருக்கின்றார்கள். அவள் சமீபத்தில் ஹரி ஹரரதிகள் நீங்காதிருக்கின்றனர். திக்பாலகரும் ஏனைய கின்னர கிம்புருட யக்ஷகாந்திருவர்களும் இவ்வுலகிலுள்ள மானுடர்களும் அவளுடைய பக்ஷமாகவேயிருக்கின்றனர். ஆகலான் அவள் பலமில்லாதவளென்று எண்ணுவதற் கிடமேயில்லை. ஆனால் அந்தத்தேவி இவர்களை யெல்லாம் தனக்குப் பலமாக வெண்ணி யிருக்கின்றாளோ வென்றால் இல்லை. அன்றி இந்த யுத்தமென்கிற காரியத்தை ஒருகாரியமாக வெண்ணியிருக்கின்றனளோ வென்றால் அதுவுமில்லை. ஏனெனில் அவளொருத்தியே ஸ்தாவரசங்கம ரூபமாயுள்ள சர்வப்பிர பஞ்சத்தையும் நாசஞ் செய்யவல்ல சாமார்த்தியத்தைப் படைத்தவளாகக் காணப்படுகின்றாள். அத்தன்மையான அவள் இந்தத்

தானவர்களை யெல்லாம் நாசஞ் செய்யச் சாமர்த்தை யாயிருக்கின்றா ளென்று நாங்கள் சொல்லவும் வேண்டுமா! இவைகளை யெல்லாம் நீர் ஆலோசனை செய்து எதனைச் செய்யவேண்டுமோ அதனைச் செய்யும் ஏனெனின்! "எண்ணித்துணிக துணிந்தபின் எண்ணுவ மென்பதிழுக்கு" என்றதை எண்ணிப்பாரும். நாங்கள் பிரபுவாகிய உம்முடைய க்ஷேமத்தை அனவரதமும் எண்ணுகின்ற அடிமைகளாதலால் இதமான வார்த்தைகளையும் உண்மையான செய்திகளையும் எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியமென்று கூறினர்.

இவர்கள் வார்த்தையைக்கேட்ட சும்பன் ஒன்றுஞ்சொல்லாது தனியிடத்துக்குச் சென்று தனதுதம்பியாகிய நிசும்பனையழைத்து ஓ சகோதரனே! காளிகாதேவியினால் நமது வெள்ளமான சேனைகளோடு தூம்ரலோசனன் இறந்துபட்டான். இறந்துபோன சேனைகள்போக எஞ்சிநின்றசேனைகளும் அவளால் அடிக்கப்பட்டு ஓடி வந்துவிட்டன. அந்தகாளிகாதேவிக்குத் தலைவியான ஸ்திரீயோ வெற்றிச் சங்கமெடுத்து ஊதுகின்றாள். இதுவென்னகாலம். சும்பனென்கிற நாமத்தை இதற்குத்தான் படைத்தேனோ! நன்று! நன்று!! அந்தோ! காலவேற்றுமையினுடைய தருமத்தை ஞானிகளுமறியார். திரணம் வச்சிராயுதமாகிறது வச்சிராயுதமும் திரணமாகிறது. பலவான் துர்ப்பலனாகிறான் துர்ப்பலன்பலவானாகிறான். ஓபுத்திமானே! எனக்கோ இப்பொழுது இதுசெய்யத்தக்கதென்று தோன்றவில்லை. உன்னைக் கேட்கின்றேன். இதற்குமே லென்னசெய்யலாம்? அந்தஸ்திரீ என்னால் அனுபவிக்கப்பட்டவளாகத் தெரியவில்லை. இதுநிச்சயம். ஆகையினால் நாம் ஓடிப்போகிறது யுக்தமா? போர் செய்வதுயுக்தமா? விரைவாய்ச் சொல்வாய். நீ சிறியவனாகவிருந்தாலும் இந்தச் சங்கடத்தில் உன்னைப் பெரியவனாக நினைக்கின்றேனென்றான். நிசும்பன் ஓ அண்ணாவே! ஓடிப்போவதும் யுக்தமல்ல துன்பமாகிய சங்கடத்தை நினைத்து நாமதற்குள்ளாவதும் யுக்தமல்ல அவளோடு நாம் யுத்தஞ்செய்வதே நல்லது நான் சேனைகளைக் கூட்டிக்கொண்டு யுத்தத்துக்குப் போகிறேன். உன்னால் கொல்லமுடியாதென்றெண்ணத் தக்கவளாயிருக்கின்ற அந்தஸ்திரீயை நான்கொன்றுவிட்டு உன்னிடம் அதிசீக்கிரத்தில் வந்துவிடுகிறேன். ஒருசமயம் தெய்வகதியாய் நான் அவளால் இறந்துவிடுவேனானால் பின்னர் நீ நன்றாயாலோசித்து எந்தகாரியத்தையும் செய்வாயென்றனன். சும்பன் தம்பியினுடைய வார்த்தையைக்கேட்டு ஓ தம்பி! நீ போகவேண்டாம் சண்டமுண்டர்களைச் சேனைகளோடுகூட்டி யனுப்புவோம். அந்த ஜண்டிக்கு இந்தச்சண்டமுண்டர்களே சரியானவர்கள்.

முயலைப்பிடிப்பதற்கு யானையை அனுப்புவதுயுக்தமாமோ! ஆகையால் அந்த ஸ்திரீயைக் கொல்வதற்கு அவர்களேபோதுமான சமர்த்தர்களென்று தம்பிக்குச் சொல்லி அவனைத்தடுத்து சண்டமுண்டர்களை யழைத்து ஓசண்டமுண்டர்களே! நீங்கள் சேனைகளோடு அந்த ஸ்திரீயினிடத்தில் சண்டைக்குப்போய்ச் சிறிதும் வெட்கமில்லாமல் மதமேற்கொண்டிருக்கின்ற காளிகாதேவியைப் பிடித்துக்கொண்டு அவள் ஓடிப்போகத் தொடங்கினாலும் விடாமல் யுத்தமுகத்தில் கொன்றுவிடுவீர்களாயின் பெரியகாரியமுடிந்தது. அதன்பின் சிங்கவாகன ரூடையாயிருக்கின்ற அந்தஸ்திரீயைப் பிடித்திழுங்கள். இழுத்தும்வராமற் போவாளானால் தீக்ஷண்யமான பாணங்களால் அவளையுங்கொன்றுவிட்டு இருவரும் விரைவாய்வந்துசேருங்களென்று கட்டளையிட்டனன்.

இருபத்தைந்தாம் அத்தியாயம்

காளிகயாசஹ தூம்பரலோசன யுத்தம் முற்றிற்று.

———

சுலோகம் - (சா0)

ஆக அத்தியாயம் உரு - க்குச் சுலோகம் (கசுளரு)

உ

ஏவமித்யாகமாபோத்யாயை நம:

————

இருபத்தாறாம் அத்தியாயம்

* தேவ்யாசஹ சண்டமுண்டயுத்தம்.

———

ஓ அரசனே! மஹாசூரனாகிய சும்பனால் ஆஜ்ஞாபிக்கப்பட்டவர்களா யிருந்த சண்ட முண்டர்கள் எண்ணிறந்த சேனைகளைக் கூட்டிக்கொண்டு யுத்தபூமிக்குப் போய்த் தேவியைப் பார்த்து இளம் பருவத்தோடு கூடியிருக்கின்ற ஓ பெண்ணே! உன்னைப் பார்க்கின்ற பொழுது எங்கட்கு மிகவும் இரக்கமாக விருக்கின்றது. தேவகாதகனான சும்பனையும் தேவேந்திரனை வென்றவனான நிசும்பனையும் ஏன் அறிந்துகொள்ளாம லிருக்கின்றாய். நீ உன்னிலும் ஒரு சிறிய பெண்ணையும் அற்பமாயிருக்கின்ற ஒருசிங்கத்தையும் துணையாகக்

* தேவியோடு சண்டமுண்டர்கள் யுத்தம்.

கொண்டிருக்கின்றாய். இதனால் நீ மிகவுந்துர்ப்பலை என்று தெரிய வருகின்றது. ஓ புத்தியில்லாதவளே! இவ்வளவு துர்ப்பலையா யிருக்கின்ற நீ சர்வபலத்தோடுங் கூடியிருக்கின்ற சும்பநிசும்பர்களை எவ்வண்ணம் வென்று விடலாமென்று எண்ணினாய்? உனக்குப் புத்திசொல்லப் புருஷனாவது உனக்குத் தோழியா யிருக்கத்தக்க ஒரு ஸ்திரீயாவது இல்லையா! தேவர்கள் இந்தக்காரியத்தில் உன்னைத் தூண்டினார்களே நீ நாசமடைவதற்கா! அந்தோ! இப்படியுந் தூண்டுவாருண்டோ! அவர்கள் தூண்டினாலும் நீ எதிரிகளுடைய பலாபலங்களை நன்றாயறிந்தல்லவோ யுத்தத்துக்குவெளிவர வேண்டும். நீ பதினெட்டுக் கைகளைப் படைத்திருக்கின்றனையே! அதுவோ இந்தக்கர்வத்தை உனக்குக்கொடுத்து இது வீணானகர்வம். தேவர்களை யெல்லாம் செயித்த அந்தச் சும்பனுடைய எதிரில் அநேகமாய் நீண்டிருக்கிற உனது கைகளால் என்ன பிரயோசனம்! கைகளில் தாங்கி யிருக்கின்றனவாகிய ஆயுதங்களாற்றான் என்ன பிரயோசனம். ஐராவதத்தினது துதிக்கையை அறுத்தவனாயும் தவத்திற்சிறந்த தேவர்களைச் செயித்தவனாயு மிருக்கின்ற சும்பனுடைய அபேக்ஷையை நீ பூர்த்திசெய்து விடுவாய். அவன் உன்னை அபேக்ஷித்தது உன்னுடைய நல்லகால மென் றெண்ணுவாய். அவன் உன்னை யபேக்ஷிக்காமல் போரை யபேக்ஷித் திருப்பானானால் நீ அவனுக்கு மசகமல்லவோ! ஓ மனோகரமான ஸ்திரீயே! விசாலாக்ஷியே! வீணுக்கு ஏன் கர்வப்படுகிறாய். பிரியத்தை விளைவிப்பதாயும் நன்மையை யுண்டுபண்ணுவதாயும் இப்பொழுதே சுகத்தைக் கொடுக்கிறதாயும் இருக்கின்ற எங்கள்வார்த்தையைக் கேட்பாய். சுகத்தைநாசஞ் செய்கிறதாயும் துக்கத்தை விளைவிக்கின்ற தாயுமிருக்கின்ற காரியங்களெல்லாம் அறிவுடையாரால் தூரத்தே விலக்கத்தக்கவை. சுகத்தைக்கொடுக்கிற காரியங்களே சாஸ்திர மறிந்த பெரியோரால் அனுசரிக்கத்தக்கவை.

குயில்போலும் இன்னிசை யுடையாளே! நீ சமர்த்தையாகவுங் காண்கின்றாய். ஆகலான் நாங்கள் சொல்வதைக் கேட்பாயாக. சும்பனென்பவன் தேவர்களை நாசஞ் செய்வதனால் அதிகமான விருத்தியடைந்து சுகமுற் றிருக்கிறானென்பது ◆பிரத்தியக்ஷம். அவன் பலமுடையவ னென்பதற்கு வேறு சாக்ஷிவேண்டுமா! நீ எண்ணிப்பார். ஒருவன் பிரத்தியக்ஷமான காரியத்தைவிட்டு சந்தேகமான காரியத்தில் பிரவேசிப்பானா! தெளிவுள்ளவன் சந்தேகமான காரியத்தில் ஒருநாளும் பிரவேசிக்க மாட்டான். சும்பன் தேவர்களால் செயிக்க முடியாத பலத்தை சத்துருவா யிருப்பதால் உன்னை அவனைச் செயிப்பதற்குத் தூண்டினார்கள். இது ஆண்தன்மையாகுமா! போருக்கு ஆண்மகன்

◆ பிரத்தியக்ஷம் - காணத்தக்கது

வந்தால் போரை விரும்பலாம். பெண்பால் வந்தால் சுத்தவீரனாயினும் வீரபபோரை விரும்புவனா காமப்போரையே விரும்புவான். இந்த வஞ்சத்தை எண்ணியேதேவர்கள் உனக்கு இதமான வார்த்தைகளைச் சொல்லி இந்த காரியத்தில் உன்னைத் தூண்டி விட்டார்கள். அந்த வுண்மையை நீ அறியாது அவர்களுடைய வஞ்சனைச் செயலுக் குட்பட்டனை! உன்னால் போர் செய்யமுடியுமா! உன்னை வருத்தப் படுத்துவதற்காகவும் தங்கள் காரியத்தைச் சுகப்படுத்திக் கொள்ளுவதற்காகவும் இந்த வஞ்சனையைச் செய்தனர்.

உலகில் காரியமித்திரனென்றும் தருமமித்திரனென்றும் இருவகையர். இவருள காரியசித்தி வேண்டியவர் காரியமித்திரனை விட்டுத் தருமமித்திரனைக் கொள்ளல் வேண்டும். தேவர்கள் தங்கள் காரியத்தை எண்ணுகிறவர்க ளாதலால் அவர்கள் காரியமித்திரர்கள். நாங்கள் உன்னுடைய காரியத்தை யுத்தேசித்து இவ்வளவுஞ் சொல்லுகின்றோ மாகையால் தருமமித்திரர்கள். எங்கள் சொல்லை உறுதியாக நம்பு. தேவர்களுக் கெல்லாம் பெரிய தேவனாயும் சர்வலோகங்களுக்கும் பெரிய பிரபுவாயும் எங்கும் ஐயம் படைத்துள்ள சதுரனாயும் சூரனாயும் சுந்தரனாயும் காமசாஸ்திரத்தில் சாதுர்யனாயுமிருக்கிற சும்ப னென்னும் மஹா வீராதி வீரனை நீ வரனாகக் கொள்வாய். அங்ஙனங் கொள்வையே யாயின் அவனுடைய ஆஜ்ஞையால் சகலலோக சாம்பிராஜ்யமு முன்னுடையனவாகும் உனக்குக் குறையென்பதேது! மனதை உறுதிப் படுத்தி நாங்கள் சொல்வதை யெண்ணிப்பாரென்றனர்.

இவ்வண்ணஞ் சொல்லிவந்ததைக்கேட்ட ஜகதம்பிகையானவள் மேகம்போல்கர்ச்சித்து ஓ மூடனே! ஏன் வீணாய்ப்பேசுகின்றாய், போ. திருமால் முதலான தேவர்களைக்கணவனாகக் கொள்ளாத நான் சும்பனை எதற்காகக்கணவனாகக்கொள்வேன். எனக்கொரு நாயகன் வேண்டியதில்லை. அவனிடத்தில் எனக்கென்ன வேலை. சர்வபூதங்கட்கும் நானே நாயகி. எவரும் என்னாலேயே எல்லா வேலைகளையும் முடித்துக் கொள்கின்றனர். என்னையன்றி ஒருவரும் ஒருசுகத்தையும் அடைந்தாரில்லை. இந்தச்சும்பநிசும்பர்களைப் போல அநேகரை நான் பார்த்திருக்கின்றேன். அநேகம் தயித்தியர்களைக் கொன்றிருக்கின்றேன். தேவர்களால் எனக்கொரு பலமுள்ளதாக நினைக்க வேண்டாம். அவரெல்லாம் யுகங்கடோறும் என்முன்னே நாசமடைகின்றவர்கள்! இப்பொழுது உங்களுக்கு நாசகாலம் வந்திருக்கின்றது. என்னை உங்களுடைய கூட்டங்களை யெல்லாம் கொல்ல வந்த யமனென்றறிவீர். இனி உங்களுடைய சந்ததிகளை ரக்ஷிப்பதற்கு எவ்வளவு பிரயத்தினப் பட்ட போதினும் ரக்ஷித்துக்

கொள்ளுவதற்கு முடியுமா! ஏன் வீணாய்ப் பிரயத்தினப் படுகின்றீர்கள். சந்ததியை ரக்ஷித்துக் கொள்ளும் முயற்சியைத் தேடியுத்தஞ் செய்யுங்கள். வீரதா்ம முணா்ந்த பெரியோர் யுத்தத்தினால் வரப்போகிற மரணபயத்தை யடைவதில்லை. கீர்த்தி யொன்றையே அடைய விரும்புவா். ஆகையால் சும்பநிசும்பா்களால் நீங்கள் அடையப்போகிற பிரயோசன மென்ன! வீரதா்மத்தை ஆச்ரயித்து என்னோடு யுத்தஞ் செய்து வீரசுவா்க்கத்தை யடையுங்கள் நீங்கள் முன்னே போய்ச் சேருவீா்களானால் உங்கள் பின்றொடா்ந்து ஏனைய ரெல்லாம் வந்து சேருவார்கள். நான் இப்பொழுது அசுரா்களை யெல்லாம் கிரமமாய்க் கொல்லப் போகின்றேன். ஓ மந்தாத் மாக்களே! நாமும் நம்மினத்தவரும் நாசமடைய வந்து விட்டதே யென்று துக்கப்படுவதை விட்டுவிடுங்கள். யுத்தஞ் செய்யுங்கள். உங்களுக்கு மேலுலகம் போகும் வழியைக் காட்டிவிட்டு சும்பனையும் நிசும்பனையும் மதோத்கடனான ரக்தபீஜனையும் மற்றையவா்களையுங் கொன்று என்னிடம் போகப் போகிறேன். யுத்தஞ் செய்யச்சத்தியிருந்தால் வாருங்கள். வில்லை எடுங்கள். இல்லாவிடின் நில்லுங்கள். நீங்கள் பயங்காளிகளாக லிருக்கின்றீா்கள். யுத்தஞ் செய்ய வந்தோம் வந்தோமென்று ஏன் பொய்வாா்த்தை பேசுகின்றீா்க ளென்றனள்.

சண்டமுண்டா்கள் அம்பிகையினுடைய வாா்த்தையைக் கேட்டுக் கோபங்கொண்டு தனுசை யெடுத்து நாணொலி செய்தனா். சண்டிகாதேவியும் தசதிக்குஞ்செவிடுபடச்சங்கநாதஞ் செய்தனள். சிங்கமுங் கோபங்கொண்டு கா்ஜித்தது. இவ்விரண்டொலியுங் கேட்ட இந்திரன் முதலிய தேவா்கள் சந்தோஷித்தனா். சண்டிகையோடு சண்டன் போா்தொடங்கிக் கூா்மையான பாணமுதலியவைகளை கூட்டங்கூட்டங்களாக விட்டனன். அவைகளை யெல்லாம் சண்டிகையானவள் பொடிப் பொடியாக்கித் துவம்சம் செய்தனள் முண்டனும் சேனைகளோடெதிா்த்து பாணங்களை அமோகமாக விட்டனன். அதுகண்ட அம்பிகை கோபங் கொண்டனள். கொள்ளவே திருமுகம் மேகம்போற் கருத்தது. இரண்டு கண்களும் சிவந்தனவாய் வாழைப்பூப்போலாயிற்று. அப்பொழுது நெற்றிக் கண்ணினின்றும் காளி என்கிற சத்தி தோன்றி புலித்தோலை ஆடையாகத் தரித்தவளாயும், யானைத்தோலை உத்தரீயமாகப் போா்த்தவளாயும், பிரஹ்ம விஷ்ணுக்களுடைய தலைகளை மாலையாகத் தரித்தவளாயும், நீரில்லாத ஆழ்ந்த கிணற்றைப்போல் கொப்பூழுடையவளாயும், வாள் பாச முதலிய பலவாயுதங்களைத் தரித்தவளாயும், பரந்ததிருமுக மண்டலத்தை யுடைய வளாயும், அடிக்கடி நாவை மடித்து கோபக்குறியைக் காட்டுகின்றவளாயும், விசாலமான நிதம்பத்தைப்

படைத்தவளாயும், பார்ப்போருக்குப் பயங்கரத்தை விளைவிக்கின்ற வளாயும், பார்ப்போருக்குப் பயங்காரத்தை விளைவிக்கின்றவளாயும், அடங்காத கோபத்தை எப்பொழுதும் உடையவளாயும், காளராத்திரியைப்போ னிறம்படைத்தவளாயும் பிரகாசித்தனள்.

இங்ஙனமான கோலத்துடன் விளங்கிய காளிகாதேவி அசுரச் சேனைகளை யெல்லாங் கொன்று அச்சேனைகளின் மஹா வீரர்களா யிருந்தவரை யெல்லாம் கைகளால் வாரிவாரித் தனது வாயிலிட்டுப் பற்களாலிறுக்கினாள். அப்படியே அந்தந்தப் பாகர்களோடும் மணிகட்டிய மதத்த யானைகளையும் குதிரைகளையும் ஒட்டைகளையும் சாரதிகளையும் ஒன்றாகவே விழுங்கி விழுங்கி பற்களால் மென்றுவிட்டனள். இந்தப் பெருங்கொள்ளையைப்பார்த்த சண்டமுண்டர்கள் பாணங்களை வருஷமாகப் பொழிந்து சேனைகள் அவள் கண்ணுக்குத் தோன்றாவண்ணம் அவளை மூடிவிட்டனர். பின்னர் சண்டனானவன் சக்கராயுதத்தைவிட்டுக் கர்ஜனை செய்தனன். காளிகாதேவி கர்ஜிக்கின்ற சண்டனையும் அவனால் விடப்பட்ட சக்கராயுதத்தையும் பார்த்து புன்னகைசெய்து அவன்கொண்டகர்வம் அடங்கும் வண்ணம் ஓர் பாணத்தினால் மூடியபாணங்களை விலக்கிச்சக்கராயுதத்தைப் பொடியாக்கி மற்றொருபாணத்தினால் அவனையடித்து மூர்ச்சிக்கச் செய்தனள். மூர்ச்சையாய்ப் பூமியில் விழுந்து கிடக்கின்ற சண்டனை முண்டன் பார்த்து அதிதுக்கிதனாய்க் காளிகாதேவியின் மீது அநேக பாணங்களைப் பொழிந்து கர்ஜித்தனன். அது கண்ட சண்டிகாதேவி ஈஷிகாஸ்திரமென்கிற ஓரஸ்திரத்தினால் அப்பாண வருஷங்களைப் பொடிப்பொடியாக்கிப் பின்னர் சந்திராஸ்திரத்தால் மகா வீரியமுள்ள அந்த முண்டனையடித்தனள். அவன் அந்த அடியினாலேயே மதமடங்கிப் பூமியில் வீழ்ந்தான். அவன் வீழவும் சேனைகளெல்லாம் ஓவென்று பெருங் கூச்சலிட்டன. ஆகாயத்திலிருந்த தேவரெல்லாம் துக்க நீங்கிச் சந்தோஷித்தனர். முன் விழுந்த சண்டன் மூர்ச்சை தெளிந்தெழுந்து சேனைகளுடைய பயங்கரவோசையும் தேவர்களுடைய நிர்ப்பய வோசையுங்கேட்டு மனம்புழுங்கி பெரியகதாயுத மொன் றெடுத்துக்கொண்டு ஓடிப்போய்க் காளிகாதேவியினுடைய வலது தோளின்மே லடித்தனன். காளிகாதேவி அந்த அடியைத் தாங்காமல் உடனே பாசத்தை எடுத்து மந்திரித்து விட்டு அவனைப் அப்பாசத்தினாற் கட்டி விட்டனள். பின்னர் முண்டன் மூர்ச்சைதெளிந் தெழிந்திருந்து பாசத்தாற் கட்டுண்டிருக்கும் சண்டனைப்பார்த்து கோபங்கொண்டவனாய் ஓர் சக்தியாயுதத்தை எடுத்து ஓடிவந்தான். அவனையும் அந்தத்தேவி பாசத்தினாற் கட்டி விட்டாள்.

பின்னர் அந்தக்காளிகாதேவியானவள் மஹா வீரர்களான அவ்விருவரையும் முயல்களைப்போல் இரண்டுகைகளிலும் ஏந்திக் கொண்டு அம்பிகையினிடம் வந்து, ஓ தேவி! இவ்விருவரையும் இந்தயுத்தமாகிய யாகத்தில் யாகபசுக்களாகக் கொள்ளத்தக்கவர். நீ இந்தயாகத்துக்குப் பதியாயிருப்பதால் இந்தப்பசுக்களை ஏற்றுக்கொள் என்றனன். அம்பிகை காளியைப்பார்த்து மகிழ்ந்து அவ்விருவரும் ஒருசெயலு மற்றிருப்பதைக்கண்டு நகைத்து ஓ காளி நரிகள் போல் ஊழிக்கின்ற இந்த இருவர்களையும் நீ கொல்ல வேண்டாம். உயிரோடு விடவும் வேண்டாம். யுத்தத்தில் பிரியமுள்ளவளே! நீ மஹா சமர்த்தை உனக்குநான் வேறுசொல்ல வேண்டுமா! தேவர்களுடைய காரியசித்தியை நீ செய்யத்தக்கவளென்றனள். காளி அம்பிகையினுடைய குறிப்பை யுணர்ந்து ஓ தேவியே! நான் இவர்களைக் கொன்று திருப்தியடைகிறதில்லை. பிரசித்தமான இந்தயுத்தகளமாகிய யாகசாலையில் யூபஸ்தம்பமாகக் கத்தியை நாட்டியிருக்கின்றது. ஆகையால் யாவருக்கும் இம்சையில்லாதிருக்கும் வண்ணம் இவ்விருவரையும் அந்தக்கத்தியினால் வெட்டி ரத்தபானஞ் செய்து திருப்தியடைகின்றேனென்று அதி வேகமாய்ச் சென்று அந்தக் கத்தியை எடுத்து அவ்விருவர் தலைகளையு மறுத்து அதிக சந்தோஷத்துடன் ரக்தபானஞ் செய்தனள். அதுகண்டு அம்பிகை ஆனந்தங்கொண்டு காளியை நோக்கித் தேவர்களுடைய காரியம் உன்னால் முற்றுப் பெற்றபடியால் உனக்கோர்நல்ல வரத்தை நானேமகிழ்ந்து கொடுக்கின்றேன். நீ சண்டமுண்டர்களைச் சங்கரஞ் செய்தபடியால் "சாமுண்டி" என்று உலகின்கண் யாவரானும் போற்றக்கடவா யென்றருள்புரிந்தனள்.

இருபத்தாறாம் அத்தியாயம்

தேவ்யாசஹ சண்டமுண்டயுத்தம் முற்றிற்று.

சுலோகம் - (சாருஎ)

ஆஉ அத்தியாயம் உசா - க்குச் சுலோகம். (கருசு0எ)

உ

ஏகபக்தி மதர்ச்சிதாயை நம:

இருபத்தேழாம் அத்தியாயம்

இரக்தபீஜ யுத்தம்

ஓ அரசனே! இனிரக்தபீஜனுடைய யுத்தத்தைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. சண்ட முண்டர்க ளிறந்ததைக்கண்ட அசுரச் சேனைகளெல்லாம் சும்பனாகிய தங்களுடைய அரசனை நோக்கிச் சென்றன. கைகால் முதலிய உறுப்புக்க ளொழியப்பெற்றவரும் உதிரவெள்ளத்தில் மூழ்கினவருமான பலர் புலம்பிக் கொண்டே சென்றனர். தூதர்களாயுள்ளார் சும்பனிடம் ஓடிப்போய், ஓ மஹாராஜனே! எங்களை ரக்ஷியும். காளிகாதேவி என்பவளொருத்தி இப்பொழுது வெளிப்பட்டு யாவரையும் பக்ஷித்துக்கொண்டே வருகின்றாள். உன்னையும் பக்ஷித்துவிடுவாளென்று கோலாகலமாய்க் கதறிக்கதறி, ஐயா! சண்டமுண்டர்கள் அவளுடைய கத்தியினால் வெட்டுப்பட்டு அவவுலகஞ் சென்றனர். நாங்கள் உன்னிடம் பயந்தோடி வந்தோம். ரதகஜதுரகபதாதிக ளெல்லாம் ஆயுதங்களால் அழிக்கப்பட்டனவன்று அவள் வாயினால் விழுங்கப்பட்டன. யுத்தகளத்திலுள்ள பிணமலைகளினின்றும் உதிரவெள்ளம் பெருகிப் பெரியநதிகளாய் வாராநின்றன. அந்நதிகளில் மாமிசங்களாகிய சேறும் தலைமயிர்களாகிய வேலம்பாசிகளும் முறிந் தொடிந்துபோன ரதங்களாகிய சக்கரவாகப் பட்சிகளும், அறுபட்ட கைகளாகிய மீன் கூட்டங்களும், தலைகளாகிய * தும்பிபலங்களும் நிறைந்திருக்கின்றன. அவ்வலங்கோலங்களைக்கண்ட அசுரர் அப்பா அப்பாவென்ற லறுகின்றனர். அமரர், அம்மா அம்மாவென்று முகமலர்கின்றனர்.

ஓ மஹாராஜனே! இனி யோசனைசெய்வதையும் யுத்தஞ்செய்யப் புறப்படுவதையும் விட்டு விடு. பாதளத்துக்குப் போகும் வழியைத் தேடி யோடிவிடு. வந்திருக்கிற காளி ரக்தபானஞ் செய்து வெறிகொண்டு உன்னுடைய ரக்தருசியையும் பார்க்கவேண்டுமென்று பெருங்கூச்சலிடுகின்றாள். இப்பொழுது நீ எதிர்ப்பட்டனையாயின் அவளுக்குப் பலியாய் விடுவாய். இதிற் சந்தேகமில்லை. அம்பிகையி னுடைய சிங்கமோ எனக்கு நல்ல விருந்து வந்து விட்டதென்று கர்ஜனை செய்கின்றது. தேவர்களுடைய நல்ல காலம் நீ யுத்தத்துக்குத் தயாராக விருக்கின்றாய். யுத்தத்தில் உனக்கு மரணமுண்டாகுமேயன்றி

* சுரக்காய்.

வாழ்வுண்டாக மாட்டாது. நீ உன் சகோதரனான நிசும்பனது வார்த்தையைக் கேட்டு, காமத்தைத் துணையாகக்கொண்டு யுத்தமாகிய கடலில் ஆழந்தெரியாமல் கால்வைக்கத் துணியற்க.

இப்பொழுது யுத்தத்துக்கு வந்திருக்கிற ஒரு ஸ்திரீயை விரும்பி, இதுகாறும் உனக்குயிர்த் துணையாயிருந்த யாவரையு நாசஞ் செய்கின்றனையே உன்னுடைய குலநாசனியாய் வந்திருக்கிற அவள் என்ன நன்மை செய்யப் போகின்றாள். ஓ ஐயா! ஐயோ! யுத்தத்தில் தோல்வியும் வெற்றியும் தெய்வாதீன மல்லவோ! அறிவுடையான் சிற்றின்பத்தை விரும்பிப் பெருந் துன்பத்தை விளைவித்துக் கொள்ளமாட்டான். உலக மெல்லாந் தெய்வமாகிய எந்த ஊழின் சுவாதீனமா யிருக்கின்றதோ அந்த வூழ் செய்யும் ஆச்சரியத்தைப்பார். ஒரு ஸ்திரீயினால் எல்லா ராக்ஷசர்களுங் கொல்லப்பட்டார்கள். உன்னையும் ஒருபொருளாகமதிக்க வொட்டாது யுத்தத்துக் கழைக்கின்றது. நீ லோக பாலர்களை யெல்லாம் வென்றவனா யிருந்தும் அவ்வெற்றியின் சிறப்பை எண்ணாது ஒரு அற்பமான ஸ்திரீயை ஒரு பொருளாக மதித்து உன்னைச் சேனைகளுடன் வரச்செய்தது. இவைகளை யெல்லாம் யோசிக்குங்கால் ஆச்சரியத்தினும் ஆச்சரியமன்றோ! உனது பிரபாவத்தை இப்போது மறந்திருக்கின்றனை போலும். நீ புஷ்கரத்தீவில் செய்ததவம் எளிதானதோ. அதற்கு லோககர்த்தாவான பிரஹ்மா ஓடிவந்தனரன்றோ! வந்தவர் உன்னை யொன்றும் பரிக்ஷிக்காமல் உனக்கென்ன வேண்டும் வேண்டு மென்று உன்னைப் பிரார்த்தித்தன ரன்றோ! அவரை, உனக்குத் தேவ தானவ கின்னர கிம்புருட யக்ஷகந்தருவ முதலியோராலும் ஏனைய மாநுடராலும் அஃறிணைகளானும் மரணம் வரக் கூடாதென்று கேட்டிருக்கின்றனை யன்றோ! அப்படி கேட்ட நீ இப்பொழுது தம்பிமாரையும் சேனாதிபதிகளையும் யோசனை செய்யத்தக்கவனா யிருக்கின்றாய். இது ஊழ் செய்த ஆச்சரியமன்றோ. இதனால் உனக்கு இதுகாறும் இருந்த வூழ் ஆகூழ். இனிப்போகூழ். ஆகையினால் உன்னைக் கொல்வதற்கு ஒரு சிரேஷ்டமான ஸ்திரீ வந்திருக்கின்றாள்.

ஓ அரசனே! அவளை நான் பார்த்தபொழுது அவள் ஸ்திரீயாகத் தோன்றவில்லை! எனக்கு எப்படித் தோன்றினாளெனின் மகாமாயாப் பிரகிருதி சொரூபிணியாயும், கல்பாந்தத்தில் யாவரையும் சங்கரிக்கும் மகாசக்தியாயும் மீண்டும் அவரையெல்லாம் படைக்கின்றவளாயும் தேவர்களுக்கெல்லாம் பிரபுவாயிருக்கும் பிரபுத்வகாரணியாயும் சத்வரஜஸ்தமோகுண ரூபிணியாயும், பிரகிருதிஸ்வரூபிணியாயும், சர்வசத்திஸ்வரூபிணியாயும், ஒருவராலும் வெல்லக்கூடாதவளாயும், எப்பொழுதும் நாசமடையாத நித்யையாயும், சர்வஜ்ஞையாயும்,

வேதத்துக்கு மாதாவானகாயத்திரியாயும், சந்தியாசக்தி ஸ்வரூபிணியாயும், சுரர்களுக்காலயமாயும், நிர்க்குணையாயும், சகுணையாயும், சித்திஸ்வரூபிணியாயும், சர்வசித்தியாயும் கொடுக்கின்றவளாயும், அவயயமாயும், ஆனந்தத்தையே அனவரதமுங் கொடுக்கின்றவளாயும், தேவர்களுக்கு அபயங் கொடுத்தருளுந் தேவியாயும் தோன்றினாள். ஆகலின் நீ அவளிடத்தில் கொண்டிருக்கும் வைரத்தைவிட்டு விடு. அவளைச்சரணமடை. அடைவையாயின் அத்தேவி உன்னை ரக்ஷிப்பாள். அந்த ரக்ஷகத்தை நீ மேற்கொண்டு அகங்காரத்தை விட்டு அடிமையாளாவாய். ஆவையேல் உனதுகுலமெல்லாம் பிழைக்கும். இப்போது அவளால் கொல்லப்பட்டவர்கள்போக ஏனையரெல்லாம் கொல்லப்படமாட்டார்கள். ஓராஜேந்திரனே! இச்சமயத்தில் எங்களால் செய்துகொள்ளப்பட்ட விண்ணப்பத்தை ஆலோசித்தருளும் என்றனர். சும்பன் அவர்கள் வாய்மொழியைக்கேட்ட போதே அகங்காரங்கொண்டு ஓமந்தபுத்தியுடையவர்களே! போர்க்களத்தில் வெற்றியைக் கொள்ளாது தோல்வியைக் கொண்டு என்னையும் அதற்குள்ளாக்கவந்த அதிசூரர்களே! பேசாமலிருங்கள், பேசியது போதும். உங்களுக்கு இப்பொழுது போரில் ஆசையொழிந்து பிராணனில் ஆசைவந்திருக்கின்றது. நீங்கள் பாதாளம்போகலாம். சர்வ சகத்தும் தெய்வாதீனமாயிருக்குங்கால் இப்பொழுது எனக்குவரப் போகிறதுந் தெய்வாதீனந்தானே! இதற்கு நீங்களும் நானும் சிந்திப்பதென்ன! மற்றைய இந்திராதி தேவர்கள் தான் சிந்திப்பதென்ன! ஒருவர் சிந்தனையும் பயன்படுமாறின்று. தெய்வசிந்தனையொன்றே பயன்படுமென் றறிமின். ஆகலின் எனக்கியாதொரு சிந்தனையுமின்று. யார்யாருக்கு எது எது வரவேண்டுமோ அதற்கேற்ற பிரயத்தனந்தான் அவரவர் மனதிற் றோன்றும். புத்திமான்கள் சர்வப் பிரகாரத்தினாலும் இந்த ஞாயத்தையே யோசித்தவர்களாய்த் துக்கமென்பதைச் சிறிதும் அடையாம லிருக்கின்றனர். அறிவாளிகள் மரணபயத்தை எண்ணித் தங்களுக்குரிய தர்மங்களைக் கைவிடமாட்டார்கள். சுகம் துக்கம் ஆயுள் சாதல் சாகாதிருத்தலாகிய இவையெல்லாம் ஊழாகிய தெய்வத்தால் நியமிக்கப் பட்டுள்ளன வாதலால் அவையெல்லாம் மானுடர் முதலாயினார்க்கு அந்தந்தக் காலங்களில்வந்தே தீருமன்றோ. மரணமென்பது பிரமனைவிட்டதா! விஷ்ணு மூர்த்தியை விட்டதா! ஏனையோரைத்தான் விட்டதா! அவரவர்க்கும் விதித்திருக்கும் அவ்வக்காலங்களில் மரணம் வந்து விடுகிற தன்றோ. அங்ஙனமிருக்க என்னை மாத்திரந்தானா அந்த மரணம் விட்டுவிடும். நானும் அந்தமரண மென்கிற காலத்துக் குட்பட்டவனா! அன்றா! நீங்கள் சொல்லியதை நானுட் கொண்டு போர் செய்யா தொழிவேனாயின்

எனக்கு வரவேண்டிய மரணம் வாராதொழியுமோ! ஓ அறிவிலிகாள்! மரணம் வந்தொழியினும் அவரவரும் அவ்வச்சமயத்திற் செய்ய வேண்டிய தருமங்களை மாத்திரம் விட்டொழிதலாகா! ஆகவே நானிப்பொழுது எனக்குரிய தர்மத்தை ரக்ஷித்துக் கொள்வது ஆவசியம் அது என்னை என்பீரேல், போருக்கஞ்சிப் பின்போதல் தருமமன்று அஞ்சாது முன்னிற்றலே தருமம். ஆகலின் நான் போருக்கே போகின்றேன். அது எனக்கு வெற்றியைத் தந்தாலும் தருக. மரணத்தைத் தந்தாலும் தருக. வெற்றி மரணம் என்னும் இரண்டில் ஒன்று வருவது நிச்சயம். அதனை நான்சம்மதித்து அனுபவிப்பதும் நிச்சயம். ஓ போரைக் கண்டஞ்சிய முழுமூடர்களே! உலகில் முயற்சியையே காரணமாக வெண்ணி அதனைச் செய்கின்றவர்கள் தெய்வத்தைப் பொய்யாக்கித் தெய்வம் தெய்வ மென்பதுவீண் முயற்சியே வேண்டும். முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார். முயற்சியன்றி யாதொரு கோறிக்கையும் சித்திக்காது. என்றுபலயுத்திகள்கூறி வாதாடுகின்றனர். முயற்சிசெய்யப் பயந்தவர் ஊழ்வகையால் எதுவர வேண்டுமோ அதுவரும் நாம் வீணாக முயற்சிவேண்டும் வேண்டுமென் றலைவானே னென்றும், அதிர்ஷ்டம் வேண்டுமென்றும் அதுதான் முக்கியமான தென்றும் உளறுவார்கள். அதிர்ஷ்டமென்பதும் ஊழென்பதும் பிரத்தியக்ஷமாய்க் காணப்படுவதன்று. பிரத்தியக்ஷமாய்க் காணப்படுவது முயற்சியேயாம். இந்த முயற்சியால் அப்பிரத்தியக்ஷமாகிய அதிர்ஷ்டத்தை அல்லது ஊழைப்பிரத்தியக்ஷமாய்க் காணலாம். இம்முயற்சியின்றி எப்படி அதிர்ஷ்டத்தைக் காணக்கூடும். முயற்சியில் சிரத்தை வைக்காமல் அதிர்ஷ்டம் அதிர்ஷ்டம் என்று அதனையே எண்ணி யிருப்பாராயின் அந்த வெண்ணமானது அவர்களைத் துக்கத்தில் வீழும்படிச் செய்து விடுகிறது. குயவனுடைய சமீபத்திலிருந்தி மண், பாத்திரபேதங்களாக வேண்டுமாயின் அவனுடைய முயற்சியாலோ அன்றோ! குயவன் முயற்சியன்றி மண், பாத்திர பேதங்களாவதாயின் ஊழான் வருவதாகிய சுகதுக்கங்கள் முயற்சியன்றி வருமென்று அறியலாம். இங்ஙனங் கூறிவந்த நியாயத்தால் முயற்சியே காரியசித்தியைச் செய்யுமென்று அறிமின். காரிய சித்தி முயற்சி செய்துங் குறைவுண்டாகின்றதே எனின்! அக்குறைவு முயற்சியின் குறைவென்றே எண்ணல் வேண்டும். இதனை விளங்கச் சொல்லுகிறேன் கேளுங்கள். உலகத்தார் முயற்சியைத் தங்களுடைய தாகவும், ஊழைக்கடவுளுடைய தாகவும், எண்ணிப்பிதற்றி வருகின்றனர். அது பிரமாணமன்று. ஊழ் உயிர்களாலியற்றப்பட்டு வரும் வினைத்தொகுதியாம். அவ்வினைத்தொகுதியாயுள்ள ஊழை அவ்வுயிர்க ளனுபவிக்க அவ்வுயிர்களுக்குத் தெய்வத்தால் அப்போதைக்கப்போது கூட்டிவைக்கும் ஓர் துணைக்கருவியா

முயற்சியென்றறிமின். அந்த முயற்சியைத் தேசம் காலம் தனது பலம் எதிரிகள் பலம் இவற்றை அறிந்து செய்யுங் காரியம் எதுவோ அது பிரகஸ்பதி பகவான் கூறிய நீதிப்படி சித்தியாவதில் யாதொரு சந்தேகமுமின்றென்று தூதர்களைப் பார்த்து கூறிவிட்டு ரக்தபீஜனென்கிற அசுரனைச் சேனைகளோடு யுத்தத்துக்குப் பிரயாணப் படுத்தி, மகாபலசாலியாகிய ரக்தபீஜனே! நீ போய் உன் சூரத்தனதத்துக்குத் தக்கபடி யுத்தஞ் செய்வா யென்றனன்.

அந்த மொழியைக்கேட்ட ரக்தபீஜன் ஓ மகாராஜனே! நீ சிறிதுஞ் சிந்திக்கவேண்டாம். நான் அந்த ஸ்திரீயைக் கொண்டு வந்து விடுகிறேன். நான் செய்யப்போகிற யுத்தத்தை நீயே பார்க்கப் போகிறாய். தேவர்களுக்குச் சகாயஞ்செய்ய வந்திருக்கிற அந்த ஸ்திரீ எனக்கு எவ்வளவு. அவளை யுனக்குத் தாசியாகச் செய்கிறேனென்று சொல்லிச் சேனைகளோடு தேவியிடஞ் சென்றனன்.

சேனைகளோடு ரக்தபீஜன் வருவதைக் கண்ட தேவி சங்க நாதஞ் செய்தனள். அந்த நாதத்தைக்கேட்ட அசுரர்களஞ்சினர். அமரர்கள் அகங்களிகூர்ந்தனர். ரக்தபீஜன் மாத்திரம் அஞ்சாமலும் சந்தோஷிக்காமலும் வீரங்கொண்டு சாமுண்டியாகிய தேவியைச் சமீபித்து ஓ பெண்ணே! நீ சங்கநாதஞ் செய்து என்னைப் பயப்படுத்தலாமென் றெண்ணினையோ! பயங்காளியாகிய இறந்து போன தூம்பரலோசனனைப்போல் என்னை எண்ணினையோ! நான் ரக்தபிஜன், என்னைக்கொல்ல உன்னாலாகாது. என்னோடு யுத்தஞ் செய்ய உனக்கெண்ணமிருக்கும் பக்ஷத்தில் என்முன்னேவா, நான் உனக்கஞ்சேன், என் பலத்தைப்பார். இதுவரையில் உன்னிடம் வந்தவர்களில் ஒருவனாக என்னை யெண்ணற்க. என்னோடு யுத்தஞ்செய்ய ஆசையிருந்தால் ஏன் யோசனைசெய்கின்றாய் இப்போதே செய்யத்துணிவாய். நீ பெரியோர்களிடத்திற்பழகி யிருக்கின்றனையா? அவர்களிடத்தில் நீதிநூல்களை ஏதேனுங் கேட்டிருக்கின்றனையா? தனுர்வித்தையினுடைய லக்ஷணம் ஏதேனும் உனக்குத் தெரியுமா? கல்வியாளர்களுடைய சகவாசம் உனக்குண்டா? சாஸ்திரஜ்ஞானமும் அதற்கேற்ற தந்திரயுக்திகளும் உன்னிடமிருக்கும் பக்ஷத்தில் நான்சொல்லுமுண்மையான நன்மைச்சொற்களைக் கேட்பாயாக.

காவ்யங்களில் நவரசங்கள் கூறப்பட்டுள்ளன அவைகளுள் சிருங்காரரசம், சாந்திரசம் என்னும் இவ்விரண்டையுமே கவிவாணர்கள் சிறப்பாகக் கூறுவர்கள். அந்த இரண்டுரசத்தில் உன்னுடைய பிரபுவினுடைய இருதயத்தில் சிருங்காரரசமே

இப்பொழுது நிறைந்திருக்கிறது. ராசிகளாயுள்ளவரெல்லாம் அதனைத் தான் விரும்புவார்கள். விஷ்ணுமூர்த்தி லக்ஷ்மியோடும், நான்முகன் சாவித்திரியோடும், இந்திரன் இந்திராணியோடும் சங்கரர் சங்கரியோடும் கூடியிருக்கின்றார்களே. அவர்கள் இருதயம் சிருங்கார ரசத்தோடு கூடினபடியினார்களல்லவா, நீ இதனை யோசித்துப்பார். இவர்களாவது உயர்திணையார். தாழ்ந்த அஃறிணையைச் சார்ந்த ஆண்கரடியும் பெண்கரடியோடு கூடியிருக்கின்றது. அது மாத்திரமா எல்லா மிருகங்களும் எல்லாப்பறவைகளும் அப்படியே கூடியிருக்கின்ற விஷயத்தில் ஆசத்தியுள்ளவைகளாகவே யிருக்கின்றன. இந்தவிதமான போகசம்பத்தை விரும்பாத மகாமூடர்கள் யாரோ அவர்களைத் தெய்வத்தினால் வஞ்சிக்கப்பட்டவ ரென்றறிதல் வேண்டும். அவர்கள் தங்களை முற்றத்துறந்த சந்நியாசிகளென்று கூறுகின்றனரேயன்றி மதுரமாய்ப் பேசுவதில் சமர்த்தர்களான வஞ்சகிகளால் வஞ்சிக்கப்பட்டு அவர்களோடு கூடியின்புறும் சாந்திரசத்தில் ஆசக்தியைக் கொள்ளுகின்றனரே இவர்கள் துறவு என்ன துறவோ! மன்மதனும், லோபமும், தள்ளக்கூடாத குரோதமும், புத்தியை நாசஞ்செய்கின்றமோகமு மிருக்கும்போது ஞானவைராக்கியங்கள் யாருக்குத்தான் நிலைக்கும் அக்காமரசத்துக்கு அதிதேவதையாய்க் காணப்படுகிற நீ வைராக்கிய ஞானமுடையவள் போல் காட்டுகின்றனையே இது விந்தையினும் விந்தையே! இனி நீ சும்பனையாவது நிசும்பனையாவது கணவனாகக் கொள்ளக் கடவாயென்று ரக்தபீஜன் கூறியவார்த்தைகளை அம்பிகையும் காளிகாதேவியும்கேட்டு நகைத்தனர்.

இருபத்தேழாம் அத்தியாயம்

முற்றிற்று

———

சுலோகம் - சாஙஏ

ஆஉ அத்தியாயம் உஎ - க்குச் சுலோகம் (கசா0சு).

சுலோகம் - சாஙஏ

ஆஉ அத்தியாயம் உஎ - க்குச் சுலோகம் (கசா0சு).

உ

ஏகாக்ரசித்தநிர்த்யாதாயை நம:

இருபத்தெட்டாம் அத்தியாயம்

இதுவுமது.

வியாசமுநிவர் அரசனைப் பார்த்து ஓ ராஜேந்திரனே! ரக்தபீஜனுடைய வார்த்தைகளைக்கேட்டு நகைத்த அம்பிகையானவள் மேகத்தொனி போன்ற கம்பீரமான சிலவினோதவார்த்தைகளைப் பரிகாசமாய்ச் சொல்லத்தொடங்கினாள். ஓமந்தபுத்தியுள்ளவனே! நான் உனக்கு முன்வந்தசிலரிடத்தில் நான் பர்த்தாவாகக்கொள்ளத்தக் கவனித்தன்மையனென்று இதமாகச் சொல்லியிருக்கின்றேன் நீ அதனைக் கேட்டிலைபோலும் கேட்டிருப்பையாயின் சும்பநிசும்பர்களை என்னைப் பர்த்தாவாகக் கொள்ளும்படிச் சொல்லத்துணியாய். யான் சொல்வதைக்கேள். உருவத்திலும் பலத்திலும் சமபத்திலும் எனக்குச்சமானமான ஒருவன் மூன்று லோகத்தி லிருப்பானானால் அவனை நான்பர்த்தாவாகக் கொள்ளுவதற்கு யாதொரு தடையுமில்லை. என்னைச் செயித்தவனையே விவாகஞ்செய்துகொள்வதென்று முன்னே பிரதிக்ஞை செய்திருக்கிறேன். அதுபோல் என்னைச் செயித்துக்கிரமப்படி விவாகஞ்செய்துகொள்ளுகிற பட்சத்தில் நான் சித்தமாகயிருக்கிறேன். நீசும்பனுடைய வுத்தரவினால் அவனுடைய காரியத்தைச் சாதிக்கவந்திருக்கின்றாய். அந்தக்காரியம் யுத்தமாகையால் அதனைச்செய். நீ என்னோடு தனித்துச்செய்வதற்கு அச்சமிருக்குமாயின் அச்சம்பனோடு நீ பாதாளம்போய்ச் சேர்ந்துவிடு. நான்யுத்தஞ்செய்யாதவனை விவாகஞ்செய்து கொள்ளுகிறதில்லை. நீங்களோ யுத்தஞ்செய்யாமல் வாய்ப்பேச்சினாலேயே என்னைவசப் படுத்திக்கொள்ளலாமென்றெண்ணுகிறீர்கள். அது ஒருபோது முடியாதென்றனள். அவளைகளைக்கேட்ட அந்த அசுரன் மகாகோபங் கொண்டு அதிவேகத்தோடும் அவளது வூர்தியாகிய சிங்கத்தின் மேல் பாணங்களைவிட்டனன். ஆகாயத்தில் சர்ப்பங்களைப் போல் வருகிற

அப்பாணங்களை அம்பிகைபார்த்துக் கூர்மையான சிலபாணங்களாலறுத்து அவனையும் மூர்ச்சிக்கும்படிச் செய்தனள். அவன்மூர்ச்சையடைந்து தேரினின்றுங் கீழேவிழும்போது சேனைகளெல்லாம் ஆகாவென்று பெருங்கூச்சலிட்டு நமக்கு முடிவுகாலம் வந்துவிட்டதென்றழுதனர். அவ்வழுகையோசையைக் கேட்டுத் தனது சைனியங்களெல்லாம் தன்னிடம்வரத் தூததர்களைக் கூவி ஓ தூதர்களே! காம்போதிதேசத்திலுள்ள சகலராக்ஷசர்களும் அவரொழிந்த காலகேயர்களும் தங்கள் தங்கள் சேனைகளோடுவந்து சேரும்படிச் செய்யுங்களென்று கட்டளையிட்டனன்.

காளிகாதேவி கண்டாநாதத்தைச் செய்தாள். அம்பிகைநாணொலியையும் சங்கத்தொனியையுமுண்டாக்கினாள். அம்பிகையின் வாகனமாகிய சிங்கமுங் கர்ச்சித்தது. இவற்றைக்கண்ட அசுரர்கள் ஆரவாரத்துடன் அநேகமாயிரம் பாணங்களை விட்டு அநேகநாள் போர்செய்து வந்தனர். அச்சமயத்தில் சகல தேவர்களிடத்திலுமுள்ள சக்திகளெல்லாம் அந்தந்தத் தேவர்களுடைய வாகனரூடராயும் ஆயுதபாணிகளாயும் அம்பிகைக்குப் படைத்துணையாக வந்து சூழ்ந்தனர். அவர்களுள் சிலரைக் கூறுகின்றேன். பிரஹ்மசத்தியானவள் பெண்ணன்னத்தின் மேலேறிக் கொண்டு சபமாலை கமண்டல முதலியவற்றைத் தாங்கினவளாயப் பிரஹ்மாணி என்னும் பெயருடையளவளாயும் விஷ்ணுசத்தியானவள் கருடாரூடையாய்ச் சங்கு சக்ரபாணியாய் கமலக்கையளாப் பீதாம்பரதாரியாய் வைஷ்ணவி என்னும் பெயருடையவளாயும் உருத்திரசக்தியானவள் விருஷபரூடையாய்த் திரிசூலபாணியாய் அர்த்தசந்திரசிகாயியாய்ச் சர்ப்பகங்கணியாய் மாஹேஸ்வரி என்னும் பெயருடையவளாயும், இந்திரசத்தியானவள் கஜாரூடையாய் வச்சிராயுதபாணியாய் சர்வாபரண பூஷிதையாய்ப் பிரசன்ன முகமுடையவளாய் வராகி என்னும் பெயருடைவளாயும், நிருசிஹ்ம சத்தியானவள் வராகரூபமுடையவளாய் வராகி என்னும் பெயருடையவளாயும், யமசக்தியானவள் மகிஷாரூடையாய்த் தண்டாயுதபாணியாய் கோரரூபிணியாய் யாமி என்னும் பெயருடையவளாயும், வருணசக்தியானவள் வாருணி என்னும் பெயருடையவளாயும், குபேரசத்தியானவள் கவுபேரி என்னும் பெயருடையவளாயும் வந்து கூடினர்.

இங்ஙனமான சத்திகளை அம்பிகைகண்டு களிக்கவும் தேவர்கள் ஆனந்தக்கூத்தாடவும் அசுரர்களேங்கவுமா யிருக்குஞ் சமயத்தில் லோகசங்கரராகிய சங்கரர் ஆங்கெழுந்தருளி, சண்டிகையைப்பார்த்து

ஹே தேவி தேவர்களுடையகாரிய சித்தியின் பொருட்டு சும்பன் நிசும்பனென்பவர்களையும் மற்றுமுள்ளவசுரர்களையும் அவருடைய பரிவாரங்களாகிய அசுரக்கூட்டங்களையு நாசஞ்செய்து எல்லாவுயிர்களுநிர்ப்பயமாய் வாழும்வண்ணஞ் செய்வாய். யுத்த முடிந்தபின் சங்கரிமுதலிய சகல சக்திகளும் தங்கள் தங்களிடம்போய்ச் சேரும்படிச் செய்வாய். தேவர்கள் தங்களுக்குரியயஜ்ஞபாகங்களைப் பெற்று வாழக்கடவர். உலகிலுள்ள அந்தணர்கள் யாகாதிதருமங்களை யாதொரு யிடையூற்றுக்கும் அஞ்சாமல் பிரீதியுடன் செயது வரக்கடவர். தாவரசங்கமங்க ளெல்லாம் சந்துஷ்டியுடன் விர்த்தியடைக. உத்பாதங்களெல்லாம் சாந்தியடைக. ஈதிபாதைகளெல்லாம் நாசமடைக. மேகங்கள் காலந்தவறாமல் நீர் பொழிக. பயிர்களெல்லாங் குன்றாதோங்குகவென்றாசியும் ஆணையுங்கூறிக்கொண்டிருக்கும் அந்த க்ஷணத்தில் சண்டிகையினுடைய திருமேனியி னின்றும் மஹாத்புதமாயும் மஹா பயங்கரமாயும் மஹா தீக்ஷண்யமாயுமுள்ள ஓர் சிவசக்தி வெளிப்பட்டது. அச்சிவசத்தி மஹா சக்தனாகிய சிவபெருமானைப் பார்த்து ஓ மஹா தேவரே! சர்வசங்கார மூர்த்தியும் சர்வானுக்ரக மூர்த்தியும் நீரேயாகையால் இப்பொழுது எங்கட்கு நீர் துணையாதல் வேண்டும். அஃதாவது அந்த அசுரேந்திரனிடத்தில் நீர் தூதாகச்சென்று சொல்லவேண்டியவாறு சொல்லி அவனை யுத்தத்துக்காளாக்கி எங்களிடம் வரச்செய்தல் வேண்டுமென்றனள். சக்திநாதனாகிய சங்கரன் அதனை யங்கீகரித்துச் சூலபாணியனாய்த் தூதாகச்சென்று மன்மதனால் பீடிக்கப்பட்டு வருந்தும் சும்பனையும் நிசும்பனையும் பார்த்து நீங்கள் சுவர்க்கலோகத்தை விட்டுபாதலவுலகத்தை யடைமின்கள். தேவந்திரன் இந்தச் சுவர்க்கத்தில் சிங்காசனத்தி லிருக்கக்கடவன். தேவர்களெல்லாம் இங்கு சுகமுற்றிருந்து யஜ்ஞபாகங்களை யடையகடவர். உங்கட்குப் பிராணனிடத்தி லாசையுள்ள பக்ஷத்தில் நான் சொன்னபடி ஓடிப்போய்ப் பிழையுங்கள். ஆசை யற்றிருக்கும் பக்ஷத்தில் யுத்தத்துக்குப் புறப்படுங்கள். என சத்திகளெல்லாம் உங்களுடைய மாமிசங்களைப் பக்ஷணஞ்செய்து திருப்தியடைவர். ஓசும்பநிசம்பர்களே! நான் அம்பிகாதேவியின் தூதன். திரிபுரதனஞ் செய்தவனும் நானே. உனது நன்மையை நாடியே இவ்வளவுஞ் சொன்னேன்! இன்னமுஞ் சொல்லுகிறேன். நீங்கள் சுவர்கத்தையும் பூவுலகையும் விட்டு பிரகலாதனும் பலிச்சக்கிரவர்த்தியு மிருக்குமிடத்தைப் போய்ச் சேருங்கள். இல்லாவிட்டால் சீக்கிரமாய் போருக்கு புறப்படுங்கள். அவள் சொல்லியதுமிவையே! சொன்னேன்று போயினர். ஓ அரசனே!

சிவபெருமானைத் தேவி தூதாக அனுப்பிய காரணத்தால் சிவ தூதியென்று மூவுலகத்தினும் பெயர் பெற்றனள். பின்னர் தூதாக வந்த சிவபெருமான் கூறியவைகளைக் கேட்ட சும்பநிசும்பர்கள் சர்வாயுதபாணிகளாய்ப் போர்களைத்திற்கு வந்து வில்லைவளைத்து நாணேறிட்டுக் கூர்மையான அநேக பாணங்களால் சண்டிகா தேவியையடித்தனர். காளிகாதேவி சூலம் கதை சக்திமுதலிய சிலவாயுதங்களைக் கொண்டு அநேக அசுரர்களைச் சாகவடித்து அவர்களைப் பட்சிக்கிறவளாய்ப் போர்க்களத்திற்றானே திரிந்துகொண்டிருந்தனள். பிராம்ஹணி என்னுஞ் சக்தி அங்கு மூர்ச்சையாய் வீழ்ந்து கிடக்கின்றவர்களை தனது கமண்டலத்திலுள்ள சலத்தைத்தெளித்து இறக்கும்படிச் செய்தனள். மாஹேஸ்வரி என்னுஞ் சக்தி போருக்கெதிர்த்து வருகின்றவர்களைச் சூலத்தினாற்குத்திப் பூமியிற்றள்ளிவிட்டனள் வைஷ்ணவி என்னும் சக்தி சக்கரத்தாலுங்கெதையாலுஞ் சிலரைப்பிராணஹானி செய்தும் சிலரைமுண்டங்களாகவுந்திரியச் செய்தனள். ஐந்திராணி என்னுஞ் சத்தியானவள் வச்சிராயுதங்கொண்டு ஐராவதத்தின்துதிக்கையாலடி பட்டிருப்பவர்களை மோதிப் பூமியிற்றள்ளினர். வராகி என்னுஞ் சக்தி மூக்கினாலும் கோரதங்களி னுனியினாலும் சிலரைத் தள்ளினாள். நாரசிம்ஹி என்னுஞ் சக்தி நகங்களாலிரு கூறாகக்கிழித்து பட்சித்துக் கொண்டே அடிக்கடி ஹூங்காரஞ் செய்து திரிந்தனள். சிவதூதியானவள் வீராட்டகாசஞ் செய்வதாகிய செய்கை யொன்றினாலேயே யாவரும் மூர்ச்சையாய் விழும்படிச் செய்தனள். சாமுண்டியும் காளிகாதேவியும் அதிவேகமாய் மூர்ச்சித்துக் கிடந்தவர்களைப் பட்சித்துவிட்டனர். கௌமாரி என்னுஞ் சத்திபாசத்தினால் அசுரர்களைப்பின் கட்டாகக்கட்டி மூர்ச்சித்து விழுந்து கிடக்கும்படித் தள்ளினள். இவ்வாறு சக்தி கூட்டங்களாகிய மாத்ருகணங்கள் அதிவீர பராக்கிரம்முள்ள அசுரக்கூட்டங்களைப் பலவிதமான ஹிம்சைகள் செய்து மர்த்தனஞ் செய்யும்போது அவர் கைக் ககபாபடாது மிகுந்திருந்த அசுரர்க்கூட்டங்கள் ஓட்டம் பிடிக்கத்தலைப்பட்டன. அதனைக் கண்ட சக்திகணங்கள் வெற்றிச் சங்கமுழங்கின. தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தனர். வெற்றிச்சங்க முழக்கொலிகேட்ட ரக்தபீஜன் ஓடிப்போன தானவர்களைப் பார்த்துக் கோபித்துக் கர்ச்சிக்கும் தேவர்களை யுறுமிக்க கண்சிவந்தெதிர்த்துப் போர்செய்யத் தொடங்கினான்.

இருபத்தெட்டாம் அத்தியாயம்

ரக்கபீஜ யுத்தம் முற்றிற்று.

சுலோகம் - சுரு

அஉ அத்தியாயம் உஅ - க்குச் சுலோகம் - (கசுசுள)

உ

ஏஷண ரஹிதா த்ருதாயைநம:

இருபத்தொன்பதாம் அத்தியாயம்

ரக்தபீஜ வதம்.

ஓ அரசனே! அந்த ரக்தபீஜனென்பவன் தன்னுடைய தேகத்திலிருந்து வீழும் ரத்தபிந்துக்கடோறுந் தன்னைப்போலும் பராக்கிரமமுள்ள அநேக அசுரர்கள் தோன்றுமாறு ருத்திர மூர்த்தியினால் மகா வீரியமுள்ள வரத்தைப் பெற்றுள்ளா னாதலால் காளிகாதேவி முதலிய சக்திக்கூட்டங்களைப் பொருளாக மதியாது அவர்களி லொருத்தியாகிய வைஷ்ணவியைப் பார்த்துத் தலையசைத்துச் சக்தி யாயுதத்தினாலடிக்க, அவ்வைஷ்ணவி கதையினா லச்சக்தியா யுதத்தைத் தடுத்துச் சக்கரமெடுத் தவ்வசுரன் மேல் விடுத்தனள். அவ்வாயுதம் அவ்வசுரன் மேல் பட்டமாத்திரத்தில் மலையினின்று வீழுமருவிபோல் செந்நிறமுள்ள ரக்தப் பிரவாகம் பெருக்கெடுத்தோடிச் சிதறியது. சிதறிய அப்பிந்துக்கடோறும் அநேக அசுரர்கள் தோன்றினார். இதனைக்கண்ட இந்திராணியானவள் அவன் பிந்துக்களினின்றும் உதிக்கின்ற அசுரர்களோடு போர்புரிவதொழுந்து ரக்தபீஜனைப் பிரமதண்டத்தினால் கோபங்கொண் டடித்தாள். மஹேஸ்வரி அறுக்கத் தொடங்கினாள். நாரசிம்ஹி கத்தியினாற் கீறினாள். வராஹிமூக்கினாற் குத்தினாள். கௌமாரி மார்பிலறைந்தாள். இவ்வாறு இச்சத்திகள் செய்யும்போது அவ்வசுரன் கோபங்கொண்டவனாய் அவர்களை யெல்லாஞ் சேர்த்தும் தனித்தும் பாணங்களாலடிக்க அச்சத்திகளும் சேர்த்தும் தனித்தும் அவ்வசுரனைப் பலவாயுதங்களா லடித்தனர். இவர்களடிக்குந் தோறும் பெருக்கெடுத்தோடு முதிரவெள்ளத்தோடு அசுரவெள்ளமும் பெருக்கெடுத் தெங்கும் பரவியது. இவ்வெள்ளத்தைக் கண்ட தேவர்கள் இனியாம் யென் செய்யக் கடவோமென்று தலைகவிழ்த்துக் கொண்டிருப்பதத் தேவர்களதனைக் கண்டு இவ்வசுரக் கூட்டங்கள் பெருக்கெடுத்தது போலும் நமது சக்திகூட்டங்களும் இவ்வாறு பெருக்கெடுத்தாலல்லவோ நாம் பயமற்றிருக்கலாம். சக்திக்கூட்டங்கள் முன்னிருந்ததுபோலிருக்க அசுர கூட்டங்கள் மிகுந்திருக்கிறது. இது மிகவும் கஷ்டம்! கஷ்டம்!! இனி சும்பநிசும்பர்களும் யுத்தத்திற்கு வரப்போகின்றனர். இதனால் பெரிதானகெடுதி நமக்கு நேரிடுமேயன்றி வெற்றியுண்டாத லரிதென்று சிந்தாருல முற்றிருக்கும் போது பரதேவதையாகிய ம்பிகை தாமரை மலர்போலும் மலர்ந்தகண்ணுடைய காளிகாதேவியைப் பார்த்து ஹே

சாமுண்டே! உன்னுடைய முகத்தைப் பரந்தமுகமாக விரித்துக்கொண்டு நான் பாணத்தாலும் சதை உலக்கை தண்டம் முதலிய ஆயுதங்களாலும் அசுரர்களை யடிக்கும்போது அவர்களது உடம்பினின்றும் பெருகுமுதிரத்தை ஓர் பிந்தளவேனும் கீழே விழாமல் நீ பானஞ்செய்ய வேண்டும். அவ்வாறு செய்வையாயின் மீண்டும் அசுரர்களுறபத்தியாகார்கள். இதுதான் அசுர்களை நாசஞ் செய்விக்கு முபாயமென்றறிவாய். இதனை நீ செய்வதுமன்றி நானாந்த ரக்தபீஜனைக் கீழே தள்ளி விடுகிறேன். அப்போது நீ அவனைக் கடித்து அவனுடம்பிலுள்ள வுதிரமுழுமையுங் குடித்துவிடுவாய். உதிரமொழிந்தால் அவனுயிருமொழியும். அவனுயிரொழிந்தால் இந்திரனுக்குச் சயமுண்டாகும். சயமுண்டானால் தேவர்களுக்குச் சொர்க்காதிபத்யமுண்டாகும். அஃதுண்டானால் நாம் நம்மிடம்போய்ச் சேரலாமென்று சொல்ல சாமுண்டியும் அந்த ரக்தபீஜனுடைய வுதிரபானமாகிய பெரிய விருந்தை யெதிர்பார்த்திருக்க, தேவியானவள் சொல்லியது போலவனை உலக்கையினாலும் கத்தியினாலும் அடித்துவர, அவள் அப்போதப்போ துண்டாகும் ரக்தவெள்ளங்களை யுண்டுவந்தனள். தன்னுடைய வுதிரப் பெருக் கொழிவதைக் கண்ட ரக்தபீஜன் அச்சாமுண்டியை அதிக கோபத்தோடடித்தான். அவ்வடியை அச்சாமுண்டிசிறிதும் லஷயஞ்செய்யாமல் ரக்தபானஞ் செய்துவந்தாள். தேவி முன்னர் இவனது ரக்தபிந்துக்களினின்றுந் தோன்றிய அசுரர்களையெல்லாங்கீழேதள்ளி ஆயுதங்களாலவர்களைச் சேதிக்குபோது அச்சாமுண்டிசிறிதும் லக்ஷயஞ்செய்யாமல் ரக்தபானஞ் செய்துவந்தாள். தேவி முன்னர் இவனது ரக்தபிந்துக்களினின்றுந் தோன்றிய அசுரர்களை யெல்லாங்கீழே தள்ளி ஆயுதங்களாலவர்களைச் சேதிக்குபோது அச்சாமுண்டி அவர்களுடையரக்தங்களையுண்டு வருவதேயல்லாமல் அவர்களுட்சிலரை விழுங்கவுந்தலைப்பட்டாள். இவ்வண்ணம் ரக்தங்களையும் ரக்தபீஜோத்பவர்களையும் உண்டும் விழுங்கியும் வந்தாளாகைக்கீழேதள்ளி கத்தியினால் கண்டிக்க மாண்டனன். சாமுண்டியும் அவனது உதிரமெல்லாமுண்டு களித்தனள். ரக்தபீஜனது சாவையும் சாமுண்டியினது சந்தோஷத்தையும் கண்ட அசுரக் கூட்டங்கள் பயந்தோடி ஆஹா ஊஹூ என்று கதறிச் சரீர முற்றும் உதிர மயமாயும் நிராயுத பாணிகளாயும் தங்கள் நிலைமையை மறந்து சும்பனிடம்போய்ச் சேர்ந்து ஓ அசுரேந்திரனை! ரக்தபீஜன் அம்பிகையினால் கொல்லபட்டான். அவனுதிர வெள்ளம் சாமுண்டியினாலுண்ணப் பட்டது. பலசாலியான ஏனைய அசுரர்களெல்லாம் அம்பிகையின் வூர்தியாகிய சிங்கத்தினால் விழுங்கப்பட்டனர். அவருள்ளம் ஒழிந்த சிலவசுரர்கள் காளியினால்

பக்ஷிக்கப்பட்டனர். நாங்கள் தெய்வத்தினால் பிழைக்கப்பட்டபடியினால் இச்செய்தியை யுன்னிடத்திற் சொல்லுவதற்காளாயினோம். ஐயா! தேவிசெய்தயுத்தசரித்திரம் எங்களாற் சொல்லமுடியுமோ. அதுமிகவும் அற்புதம்! அற்புதம்!! இனியாவரையும் நாசஞ்செய்யவந்த அத்தேவிதைத்தியர்களாலும் தானவர்களாலும் அசுரர்களாலும் கந்தர்வர்களாலும் யக்ஷர்களாலும் பன்னகர்களாலும் நாகர்களாலும் மற்றெவராலும் எவ்விதத்தாலும் ஜெயிக்கக்கவளாகாள். இந்திராணி முதலிய சகலசக்திகளும்அந்த யுத்தகளத்தில் கூடியிருக்கின்றனர். அஞ்சியிருந்தசுரெல்லாம் இப்போது யுத்தம்செய்து கொண்டிருக்கின்றனர். நம்சேனைகளெல்லாமொழிந்தன. தேவசேனைகள் வீரங் கொண்டுலாவுகின்றன. ஆகையால் நீமந்திராலோசனை செய்து எது செய்யத்தக்கதோ அதுசெய்வாயாக. சக்தியாக வந்திருக்கிறவள் பலசக்திகளையுமுடையவள். அவளோடு வைரங்கொள்வது சுகத்தைச்செய்யமாட்டாது; சந்தியே சுகத்தைக் கொடுக்கும். இதைக் காட்டிலும் சரணமடைதல் நன்மையிலும் நன்மையாம். அதற்குச் சம்மதிக்காத பட்சத்தில் பாதாளம் போய்ச் சேருவது யுத்தமத்திலுத்தமமாமென்றனர். இவ்வுண்மைகளைக்கேட்டு சும்பன் மரணமடையுங்காலம் சமீபித்து ள்ளானாகையால் உதடு துடிக்க் அதிகோபங்கொண்டு தூதர்களைப் பார்த்து நீங்கள் பாதாளத்துக்குப்போக வேண்டுமானாலும் போகலாம் அல்லது சரணமடைய வேண்டுமானுலுமடையலாம். யானிவ்விரண்டனையுஞ் செய்வேன். நான் ஓர் ஸ்திரிக்குப் பயந்து எப்படிப்பாதளத்துக்குப் போவேன். ரக்தபீஜன் முதலிய அசுரர்களையெல்லாம் அவளால் கொல்வித்துக்கீர்த்தியையும் போக்கடித்துக்கொண்டு பிராணனை மாத்திரம் காப்பாற்றிக்கொள்வதினால் நானடையும் பிரயோஜன மென்னையோ. காலத்தினால் கற்பிக்கப்பட்ட பிராணிகளுடைய மரணமானது தடைசெய்யத்தக்கதோ. மரணபயமானது பிறந்தநாள் தொட்டே யிருக்கிறதல்லவா! மரணபயத்தைக்குறித்துப் பெறுதற்கரிய கீர்த்தியை விட்டுவிடுவாருமுண்டோ. ஆகையால் இப்பொழுதே அந்த அம்பிகையையும் இந்திராணிமுதலிய சக்திகளையும் ஏனைய தேவர்களையுஞ் செயித்துச் சகலராஜ்யங்களையும் ஆண்டு வாழக்கடவேன். இது நிச்சயம். நான் யுத்தத்திற்குப் போகின்றேன். அந்த அம்பிகையென்னால் கொல்லப்படுவாளானால் மீள்கின்றேன். இல்லாவிடில் வாராமலொழிகின்றேன். ஓநிசும்பனே! நீ உன் சேனைகளோடு பின்பக்கத்துத் துணையாய்வருவாய். அந்தஸ்திரீயை நான்யமலோகத்துக்கனுப்பி விடுவேனென்றனன். நிசும்பன் அந்த சும்பனைப்பார்த்து ஓ அண்ணாவே! நான்யுத்தத்திற்குப் போகின்றேன்.

காளிகாதேவிமுதலிய சக்திகளையெல்லாங்கொன்று அந்த அம்பிகையைமாத்திரம் பிடித்துக்கொண்டு வருகிறேன். அந்த ஸ்திரீவிஷயத்தில் நீ ஒருசிந்தனையும் வைக்கவேண்டாம். பிரபஞ்சத்தையெல்லாம் சுவாதீனப்படுத்திக் கொள்ளும்படியான உன்னுடைய புஜபலபராக்கிரமமெங்கே? அவளெங்கே? அவ்வற்பமானவளோடு யுத்தஞ்செய்யப் போகிறேனென்று சொல்வது உனதுகீர்த்துக்கும் புகழுக்குமிழுக்காமன்றோ. நீஸ்ரேஷ்டமான சுகங்களையநுபவித்துக் கொண்டிருப்பாயாக. மகா கர்வமுள்ள அந்த ஸ்திரீயை நான்கொண்டுவருகிறேன். நானிருக்க நீயுத்தத்திற்குப்போவது யுக்தமன்றென்று மூத்தோனைப்பார்த்துச் சொல்லித் தம்பியான நிசும்பன் அதிகர்வங்கொண்டு தன்சேனைகளோடுயுத்தத்திற்குப் புறப்பட்டனன்.

இருபத்தொன்பதாவது அத்தியாயம்.

ரக்தபீஜவதம் முற்றிற்று.

(சுலோகம் சு0)

அஉ அத்தியாயம் உகூக்குச் சுலோகம் (களஉ)

உ

ஏலாசுகந்திசிகுராயை நம:

முப்பதாம் அத்தியாயம்.

தேவ்யாசஹ நிசும்பயுத்தம்.

ஓ அரசனே! நிசும்பன், மரணம் அல்லது ஜயம் என்னுமிவ்விரண்டிலொன்று வருவதுண்மையன்றோவென்று நிச்சயித்துக்கொண்டவனாய்த் தேவிக்கெதிரில் வந்தனன். இவனது சகோதரனும் யுத்தரசத்தில் பண்டிதனுமான சும்பன் நமதுச் ச்சகோதரன் செய்யும் யுத்தத்தைக் காண்போமென்றிந்தனன். தேவர்கள் மேகத்திலொளித்துக் கொண்டு போர்த்திறத்தைப்பார்க்க ஆசை கொண்டிருந்தனர். இவர்களிவ்வாறிருக்க நிசும்பன் அம்பிகையைப் பிரமிக்கச்செய்ய வெண்ணிப் பாணங்களைச் சோனைமாரி போற் பொழிந்தான். சண்டிகாதேவி சிரேஷ்டமான தனுசையெடுத்து நிசும்பன் காணுமாறு அடிக்கடி சிரித்துத் தன்னருகிலிருக்குங் காளிகாதேவியை நோக்கி ஓகாளி! இவ்வசுரர்களுடைய மூடத்தனத்தைப் பார்த்தனையா! இவர்களென்னிடம் வருவது சாவதற்கா பிழைப்பதற்கா! இதுகாறும் அதிகோரமான அசுரர்கதுவதத்தையும் ரக்தபீஜனது நாசத்தையும் பார்த்து

என்னுண்மையை யறியாம லெனதுமாயையினால் மோகிக்கப்பட்டவர்களா யின்னமுந் தமக்கு வெற்றியுண்டாகுமென்னு மாசையுடன் வருகின்றனர். அந்தோ! ஆசையேமிக்க பலமுள்ளது. அது மனிதர்களை யெவ்விதத்திலும் விடுகிறதில்லை. அதற்கோ ரளவுமில்லை. தோல்வியடைந்தவனா யிருந்தாலும் பல மொடுங்கினவனா யிருந்தாலும் மிகவும் நசிந்தவனா யிருந்தாலும் பக்க பலமில்லாதவனா யிருந்தாலும் மெய்மறந்தவனா யிருந்தாலும் அந்த ஆசை விடுகிறதில்லை. என்னால் கொல்லத்தக்கவர்களாகிய இவர்களுக்கு மரணம் சமீபத்துவிட்டபடியால் என் முன் வந்திருக்கின்றனர். ஆகையால் எல்லாத் தேவர்களும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே பாணங்களால் மறைத்துவிட்டனள். நிசும்பனும் அப்பாணங்களையெல்லாம் அறுத்தெறிந்தனன் இவ்வண்ணம் இருவரும் அனேகவிதமான யுத்தங்கள் செய்யும்பொழுது யானைக் கூட்டத்தில் சிங்கம் புகுவதுபோல் அசுரச்சேனையின் மத்தியில் தேவியினுடைய சிங்கமானது பாய்ந்து மதங்கொண்டிருக்கின்ற அசுரர்களைப் பற்களால் கடித்தும் நகங்களால் அழித்தும் உண்டும் வந்தது. இந்தப் பிரகாரம் சிங்கத்தால் அசுரச்சேனைகள் நாசமடைவதைக்கண்ட நிசும்பன் ஓடி வந்தனன். ஏனைய அசுரர்களெல்லாம் பற்களையும் நாக்குகளையுங் கடித்துக் கொண்டு கண் சிவந்து இந்த ஸ்திரீயை விடுவதில்லை யென்று சூழ்ந்தனர். நிசும்பனும் தன் சேனையோடு கூடினவனாய் வந்து முன்னே நிற்கும் இக்காளிகாதேவியைக் கொன்று ஜகதம்பிகையைப் பிடித்துக்கொள்வேவோமென் றெண்ணி ரௌத்திர ரசத்தோடும் சிருங்கார ரசத்தோடுங் கூடியிருக்கிற அந்த மனோகரியைப் பார்த்தனர்.

அந்த மனோகரியை விசாலமான கண்ணுடைய வளாயும் மூன்றுலகத்திலுங் காணக்கூடாத அழகிற் சிறந்த சுந்தரியாயும் கோபத்தாற் சிவந்து நோக்கும் பார்வையுடையவளாயுமிருக்கும் உக்கிரத்தைக் கண்டு இவளா நமக்கு அடங்கத்தக்கவளென்று அவ்வம்பிகையினிடத்தில் தான் கொண்டிருந்த ஆசையையும் ஜயத்தையடைய வேண்டுமென்ற வீரத்தையும் விட்டு நமக்கு மரணம் சமீபித்து விட்டதென்று நிச்சயித்துக் கொண்டு இனி யுத்தஞ் செய்வதே யுக்தமென்று போர் செய்யத் தொடங்கினன். இவன் கொண்ட வெண்ணத்தையும் இவன் நிற்கும் நிலையும் அறிந்தவளாகிய சர்வஜ்ஞை அந்த சும்பனைப் பார்த்து நகைத்து அசுரரெல்லாங் கேட்க ஹேசும்பா! உன்னைப் போலும் ஞானசூன்யனை நான் கண்டதில்லை. உன்னிலுஞ் சிறந்த ஞானசூனியர்கள் உன்னுடைய சேனைகள். இதுவரையில் என்னிடம் வந்தவர்கள் வெற்றியடையலா மென்று

வரலாம்அந்தோ! இனியேனும் நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் கைகளிலேந்தியிருக்கும் ஆயுதங்களை யெல்லாங் கீழே போட்டுவிட்டு உயிர் பிழைக்க வேண்டுமாயின் பாதாளத்திலாவது சமுத்திரத்திலாவது போய் ஒளித்து வாழுங்கள். வீரசுவர்க்கம் வேண்டுமாயின் என் பாணங்களாலடிபட்டு சுவர்க்கம்போய்ச் சேர்ந்து அங்கு சிங்காதனாருடர்ககளாய் அப்சரஸ்திரீகளுடன் கூடி வாழுங்கள். சூரத்தன்மையும் பயத்தன்மையும் ஒருவருக்கும் நிலைத்ததல்ல. என்னுடைய அபயத்தன்மை என்றும் நிலைத்திருக்கும். அதைத்தான் அறிவுடையார் அடைய விரும்புவர் அதுதான் என்றும் நிலையாயுள்ளது. ஆகையால் அந்த அபயத்தை உங்களுக்கு கொடுக்கிறேன். எல்லோரும் சுகமாய்ப் போய் வாழுங்களேன்று தேவி சொல்லியதை நிசும்பன் கேட்டு அகங்காரங்கொண்டு ஓர் கத்தியை யெடுத்தோடி அதனைச் சுழற்றித் தேவியினுடைய சிங்கத்தின் மேல் வீசினான். அதனைத் தேவி கதையினாற்றடுத்துப் பொடிப்பொடியாக்கி ஓர் கோடாலியெடுத்து அவன்றோண் மேலடித்தாள். அவ்வடியை அவன் சகித்துக்கொண்டு அம்பிகையை மறுபடியும் அடித்தான். அவ்வம்பிகை இனி இவனைத் தாமதஞ்செய்யாது கொல்ல வேண்டுமென்று துணிந்து கண்டாநாதஞ் செய்து அதிகமான கோரயுத்தஞ் செய்யத் தொடங்கினள். அவனும் அதற்கிளைக்காமல் செய்து வந்தனன். இருவர் படைகளும் அப்படியே செய்யத் தொடங்கின. ரதகஜதுரகபதாதிகளும் அமோகமாய் நெருங்கின. எங்கும் ரக்தவெள்ளம் பரவிற்று. நாய்களும் நரிகளும் கழுகுகளும் காக்கைகளும் சுழன்று சுழன்று வட்டமிட்டன. சும்பன் வீராவேசங்கொண்டு ஓர் கதையையோச்சி சிங்கத்தை மோதியடித்து நகைத்துத் தேவியையும் அடித்தனன். தேவி புன்னகை செய்து ஓ மந்தபுத்தியுள்ளவனே! இதோ என்னுடைய கையிலுள்ள கத்தியை உன்னுடைய கழுத்தில் வீசப்போகின்றேன். வீசும் அவ்வளவு காலந்தான் நீ உயிருடன் கூடி யிங்கிருக்குங்காலம். வீசிய பின்னர் இயமனுடைய கிருகத்தில வாழப்போகின்றாயென்று சொல்லி அந்த க்ஷணமே அவனது தலையைக் கத்தியினால் அறுத்துத்தெறிந்தனள். பின்னர் கபந்தமாய்ப் போன அவ்வசுரன் கீழே வீழாமல் முன் கொண்ட வீரத்துடனே கதையைக் கையிலேந்திக் கொண்டு அமரெல்லாம் நடுங்க போர்க்களமெல்லாம் சுற்றிச் சுற்றி வந்தனன். தேவிக்கு அது வோர் விளையாட்டாக இருந்தது. பின்னர் தேவி அம்முண்டத்தைப் பார்த்து ஓ முண்டமே! நீ உலாவி வந்தது போதும். உன்னுடைய முண்டைத் தன்மையை யாவரும் அறிந்து கொண்டார்களென்று அம்முண்டத்தினது கைகளையும் கால்களையும் அறுத்துத் தள்ளினாள். அது கீழே விழுந்தது. அவனது சேனைகளெல்லாம் ஆ ஆவென்று

கதறிக் கைகளி லேந்தியிருந்த ஆயுதங்களையெல்லாம் எறிந்து உதிரமயமாயிருக்கும் சரீரத்தோடும் அரசனிடம் போய்ச் சேர்ந்தனர். சும்பன் அவர்களைப் பார்த்து ஓ சேனைகளை! நிசும்பனெங்கே நீங்களேன் தோற்றுப்போனீர்க ளென்றனன். ஐயா! உமது சகோதரனாகிய நிசும்பன் யுத்தகளத்தி லுறங்குகின்றான். இனி எழுந்திருப்பானென்று நினைக்க வேண்டாம். இனி வேறொரு தாய் வயிற்றில் தான் எழுந்திருப்பான். அவனைப் பின்றொடந்தவரெல்லாம் மாண்டு போயினர். இச்சமயத்தில் நீ யுத்தத்துக்குப்போவது சரியல்லவென்று சொல்வதற்கே நாங்கள் வந்தோம். ஏனெனில், இப்பொழுது வந்திருக்கிற ஸ்திரீயானவள் ஏதோ ஒரு பரமசத்தியானவள் தேவ காரியத்தை யுத்தேசித்து இந்த வுருவங்கொண்டு அசுரகுலத்தை நாசஞ்செய்ய வந்திருக்கின்றாளென்று நீ நிச்சயித்துக்கொள்வாய். அவள் சாதரணமான ஸ்திரீயல்ல. தேவர்களாலும் அறியக்கூடாத மகிமையுள்ள மிக வுத்தமமான சத்தி. நானாவிதமான உக்கிரரூபத்தோடுங் கூடியிருக்கின்றாள். மாயாமூல சமர்த்தையானவள். விசித்திரமான பூஷணங்களையும், ஆயுதங்களையுமுடையவள். யாவருக்குஞ் சுகத்தைச் செய்கின்றவள். ஒருவராலும் அறியத்தக்கவள். அவளுடைய சரித்திரம் அதிரகசியமான்து. துஷ்டர்களுக்குக் காளராத்திரி போன்றவள். தேவர்களெல்லாம் அசுர பயமற்றவர்களாய் அவளை ஓ ஸ்ரீதேவி! எங்கும் நிறைந்திருக்கின்றவளே! என்று பலவாறாகத் தோத்திரஞ்செய்கின்றார்கள். நாமெல்லாம் இச்சமயத்தில் ஓடிப்போவதே தருமம். தேக ரக்ஷணையைச் செய்து கொள்ள வேண்டியது அவசியம். இப்பொழுது பிராணனைக் காப்பாற்றிக் கொள்வோமானால் பின்னர் நாம் ஜயத்தையடையலாம். காலமானது ஒரு சமயத்தில் சாமான்ய மனிதர்களையும் பலமுடையவர்களாகச் செய்யும். ஒரு சமயத்தில் பலமில்லாதவராகவுஞ் செய்யும். அவர்களையே மற்றோர் சமயத்தில் பலமுடையவர்களாக்கி ஜயத்தைக் கொடுக்கும். மஹா தாதாவாகவிருக்கின்றவனை யாசகனாக்கும். யாசகனாக்விருக்கின்றவனைத் தாதாவாக்கும். திரிமூர்த்திகளும் இந்திராதி தேவர்களும் காலவசத்தி லிருக்கப்பட்டவர்களே. இவர்களெல்லாம் காலவசத்தினரென்றால் நீ காலவசத்தனென்பது சொல்லவேண்டாமோ. ஆகையால் உனக்கிப்போதிருக்கும் விபரீத காலத்தை யோசித்துப் பார்ப்பாய்.

இச்சமயம் தேவர்களுக்குக் காலம் நன்முகமாயும் அசுரர்களுக்கு துன்முகமாயு மிருக்கின்றது. ஓ அசுரனே! காலமானது ஓர் நிலைமையுடையதன்று. அது நானாவித ரூபந் தரித்திருக்கின்றது. ஆகலான் அந்தக் காலத்தினுடைய விகற்பத்தை நன்றாய்த் தெரிந்து

கொள்ளவேண்டியது. யாவருக்கும் சில காலத்தில் உற்பத்தி சில காலத்தில் நாசம். அந்தந்தத் தொழிலேயே செய்யும். மாறிச்செய்யா. இதனை நீ பிரத்தியக்ஷமாயறியலாம். எவ்வாறெனின்! இந்திரன் முதலிய தேவர்களெல்லாம் உனக்கனுகூலகாலத்தில் பகுதிகட்டி வந்தனர். உனக்கு விரோதமாயிருக்கிற இந்தக் காலத்தில் பலமென்பதை என்றைக்கும் அடைவதற்கு யோகிக்கயமில்லாத ஒரு ஸ்திரீயினால் என்றைக்கும் பலமுடைய அசுரரெல்லாங் கொல்லப்பட்டார்கள். இன்னமும் சாக்ஷிவேண்டுமா? காலமே சுபாசுமாகிய இரண்டையுஞ் செயிகிறது. இந்த வுண்மையால் இப்பொழுமெது நடக்குஞ் செயலுக்குக் காளியுங் காரணமல்ல. தேவர்களுங் காரணமல்ல. நன்றாய் ஆலோசித்துப்பார்க்குமளவில் இப்பொது உனக்குத் தோல்வியென்பதில்லை. ஏனெனில் காலத்தினால் வெற்றியுண்டாகாதிருக்கின்றதேயன்றி நீ எப்பொழுதும் தோல்வியடையத்தக்கவனல்லன். ஆகவே நீ இப்போது யுத்தஞ்செய்யாது பாதாளம்போவதால் தோல்வி வந்துவிட்டதென் றெண்ணவேண்டாம். உனக்கும் இறந்துபோன அசுரர்களுக்குங் காலந்தான் காரணம் வேறு காரணம் இல்லவேயில்லை. இன்னமுஞ் சொல்லுகிறோம் கேட்பாயாக. போரில் இந்திரன் முதலியோர் ஆயுதமில்லாமல் உன்னெதிரில் தோற்றோடிப்போயினர். அவரெல்லாம் இப்போது சர்வாயுதபாணிகளாய் ஒரு ஸ்திரீயை முனைமுகத்தில் நிற்கச்செய்து தாங்கள் யுத்தஞ்செய்வதற்குத் தயாராயிருக்கின்றனர். ஓ ராஜேந்திரனே! யாங்கள் சிறியவராயினும் எங்களால் சொல்லப்பட்ட சொற்களைமாத்திரம் ஆலோசித்துப் பாதாதளம்போய்ச் சேரும் வகையைத் தேடுவாய். அவ்விடத்தில் பிழைத்திருந்து சிலகாலம் பொறுத்திருப்பையாயின் நீயே பின்னர் வெற்றியடையலாம். பாதாளம்போவதை விட்டு இப்பொழுதே யுத்தத்துக்குப் போவையாயின் இறந்துவிடுவாய். உடனே தேவர்களெல்லாம் சந்தோஷத்தோடு வெற்றியுடையவர்களாய் மங்களம் பாடிக்கொண்டு நாற்றிசையுந் திரிந்துலாவிவருவர் இது நிச்சயமென்று தூதர்கள் கூறினர்.

முப்பதாம் அத்தியாயம்

தேவ்யாசஹ நிசும்பயுத்தம் முற்றிற்று.

சுலோகம் - (சுச)

அஉ அத்தியாயம் ரு - க்குச் சுலோகம் (களகூக)

தேவீபாகவதம்

உ ஏந : கூடவிநாசிந்யைநம:

முப்பத்தொன்றும் அத்தியாயம்

சும்பவதாப்ராம்பம்.

வியாசமுநிவர் ஜனமே ஜயனைப்பார்த்து ஓபூபதி! சேனைகளும் தூதர்களும் சொல்லிவந்த சொற்களெல்லாங் கேட்டு, கம்பனானவன் கோபங்கொண்டு கண்சிவந்து சேனைகளைப் பார்த்து ஓ மூடர்காள்! நீங்களனைவரும் என்முன்னே நின்று சிறிதேனு மஞ்சாமல் சொல்லத்தகாத சொற்களெல்லாஞ் சொல்லத்துணிந்தீர்களல்லவா. இது தான் காலத்தின் கொடுமையென் றெண்ணுகின்றேன். யானா இந்த யுத்தத்துக்குப் பயந்து பாதளம் போய்ச் சேர்ந்து பிழைத்திருக்கத்தக்கவன். மந்திரிகளையுஞ் சகோதரர்களையும் ஒருஸ்திரீயினால் கொல்லும்படிச் செய்து நான்மாத்திரம் வெட்கமில்லாமல் உயிருடன் சஞ்சரித்துக் கொண்டிருப்பதா! அந்தோ! வீரரெல்லாம் என்னை என்ன நினைப்பார்கள். நீங்கள் காலதாமத்தைக் கூறினீர்களல்லரா! நான் கூறுகின்றேன். கேட்பீர்களாக.

காலமானது சுபகர்மங்களையும் அசுபகர்மங்களையும் செய்யப் பலமுள்ள பிரபுவாயிருக்கும் பொழுது நான் சிந்திக்கவேண்டியதென்னை யிருக்கின்றது. காலத்தால் எதுவர வேண்டுமா அது வரட்டும். எதைச்செய்ய வேண்டுமோ அதைச் செய்யட்டும்.அது முன்னின்று சாவையும் வாழ்வையும் இயங்கச் செய்வதாயின் அதனைமாற்றும் சக்தியெனக்குள்ளதோ அதனையுடையது அக்காலத்தை இயக்கும் தெய்வத்துக்கேயுள்ளது. எங்ஙன மெனின்! மோகமானது வருஷிக்கவேண்டிய ஸ்ராவண மாதத்தில் வருஷிக்காமலும் வருஷிக்கக் கூடாத மார்கழி தை மாசியில் வருஷித்தும் வருகிறது. இதனை யாராயுங்கால் தெய்வம் நிமித்தமாய் நின்று காலத்தைத் துணையாகக் கொண்டு நடத்துகின்ற தென்றறியக் கிடக்கின்றது. இதனால் காலத்தினும் பலமுள்ளது தெய்வமென்றும், அத்தெய்வத்தினால் நியமிக்கப்பட்டவையே ஜனன மரணங்களெல்லா மென்றும் அந்த நியமத்தை வேறாகச் செய்வதற்குக் காலத்தினாலும் மற்றவையெல்லாம் முடியாதென்றும், ஆகலான் எல்லாவற்றிற்கு மேலாயுள்ள தெய்வமே பிரதான மென்றும் இப்பொழுது நினைக்கின்றேன். இனி தெய்வத்தால் வேற்றுமை யடையத்தக்ககாலம் தெய்வத்தைப் பிரதானமாகக் கொண்டிருக்கும் என்னை என்செய்யும். என்னுடைய பவுருஷத்தைத் தள்ளுங்கள் நெருப்பிற் சுடுங்கள்.

ஏனெனின்! தேவர்களை யெல்லாம் வெற்றிக்கொண்ட நிசும்பனும் ரக்தபீஜனும் இந்தஸ்திரீ கொன்றுவிட்டா ளல்லவா! இனி எனக்குக் கீர்த்தி ஏது! கீர்த்தியைவிட்டு நான் பிராணனிடத்தில் ஆசைவைப்பேனா. உலகில் கீர்த்தி நிற்பதேயன்றி பிராணன் நிற்கின்றதா! உலகெல்லாம் படைக்கின்றவனாகவும் ஆயிரம் சதுர்யுகத்தை ஒரு நாளாகவுங் கொண்டிருக்கின்ற பிரமனும், அந்தப் பிரமனுடைய கால அளவைக்குள் மஹா போகிகளாய் வாழ்கின்ற பதினான்கு இந்திரர்களும், இரண்டாயிரஞ் சதுர்யுகமுடிந்தால் உலகைக் காக்குங் கடவுளாகிய விஷ்ணு மூர்த்தியும், இறந்து போகின்றார்களல்லவா! இறந்துபோனாலும் பிரஹ்மா படைக்குங் கடவுளெனவும், விஷ்ணு காக்குங் கடவுளெனவும், இந்திரன் மஹா யோகி எனவும் கொண்டாடப் பெற்ற கீர்த்தி இறந்துவிட்டதா அது போலவே ருத்திரு மொடுங்குவர். ஏ மூடர்களே! தெய்வநிர்மதமான மரணத்தைப் பற்றிப்பேசுவதனா லென்னபயன். காணப்படுஞ் சூரியசந்திரர்கள் முதலிய யாவும் அழிவுறுதல் சித்தம். பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும் நிச்சயமாகலான் நிலையில்லாத சரீரத்தில் நிலையான கீர்த்தியைப் பாதுகாத்துக் கொள்ளல் வேண்டும். ஓ சேனைகளே! பிராயணப்படுங்கள் யுத்தகளத்துக்குப் போவோம். தெய்வச் செயலின்படி ஜயமாவது மரணமாவது வருவது வருகவென்று சொல்லி விரைவாய்ச் சர்வாயுதங்களை முடையவனாய்ச் சதுரங்க சேனைகளும் பின்றோடர்ந்து வர திரிலோக மோகினியாயும் சர்வபூஷணா லங்கிருதையாயும் சர்வலக்ஷணங்களோடு கூடினவளாயும் தேவ கந்தர்வ கின்னர யக்ஷர்களால் தோத்திரஞ் செய்யப்பட்டவளாயும் சங்கத்தொனி, கண்டாநாதமுதலிய த்வனிகள் மனோகரமாய்ச் சூழ்ந்தோலிக்கப் பெற்றவளாயம் சிம்ஹவாகன ருடையாயுமிருக்கின்ற சகதம்பிகை யிருக்குமிடத்தை வந்தடைந்து அவ்வம்பிகையைப் பார்த்துக் காமோகிதனாய் மன்மத பாணத்தா லடிபட்டவனா யடியில்வருமாறு சிந்திக்கின்றான். இவளுடைய சுந்தரவடிவு மிகவுமாச்சரியமாக விருக்கின்றது. நம்முடைய கண்கள் கூசும்படியானமின்னலை மின்னுகின்றது இவளது உருவம் மேனி என்னுமிரண்டையு நோக்குங்கால் உருவம் மின்னலையும், மின்னல் உருவத்தையும் பகைக்கின்றது. அன்றியும் இவளது வடிவம் மிருதுத்தன்மையையும் இவளிருக்கு நிலை கடினமான தீரத்தன்மையையும் விளக்குகின்றது. இதுவும் மன்மதாவஸ்தையில்லாதவளாய்க் காணப்படுகிறாள். இதுவும், இவளது அழகானது யாவரையும் மயக்குகின்ற மன்மதனை மயக்கும். ரதியை மயக்குகின்ற மகாரதியாயிருக்கின்றது. இதுவும், இந்த

அழகொன்றினாலேயே மகாபலசாலிகளாயுள்ளவர் தன்னைக்கண்ட மாத்திரத்தில் கொன்றுவிடுகிறாள் இதுவும் ஆச்சரியமாக யிருக்கின்றன. இவள் நமக்குச் சுவாதீனமாக என்ன உபாயஞ்செய்யலாம்? இவளை வசியஞ்செய்வதற்கு மந்திரமுமில்லை. மதத்தால் கர்வித்திருக்கிற இந்த மோகினியே சகல மந்திரங்களையு மறிந்தவர்களாய்க் காணப்படுகிறாள். இந்த ஸ்திரீ எப்படி சுவாதீனமாவாள். இவள் மகாபலசாலி யாதலால் சாமதான பேதங்களாலுஞ் சுவாதீனமாகாள். ஆகவே இந்தப் போர்க்களத்திலிருந்து பாதாளம் போவோமென்றால் அது யுக்தமல்ல இங்கு சாவதும் யுக்தமல்ல. ஸ்திரீயின்கையில் செத்தால் கீர்த்தி போய்விடும். என்ன செய்யத்தக்கது. எங்கே போகத்தக்கது. இரண்டு யுத்தவீரர்களில் ஒருவருடைய மரணம் மங்களத்தைத் தருமென்று பெரியோர் கூறுயிருக்கின்றனர். இங்ஙனமிருக்க இவள் தெய்வத்தினால் நூறு மனிதரினும் அதி பலமுள்ளவளாய்க் காணப்படுகின்றனள். வீணுக்காக நாமேன் நல்ல வார்த்தைகள் சொல்லவேண்டும். நானா வித ஆயுதங்களோடு கூடிக் கொல்வதற்கு வந்திருக்கிறவள் நல்ல வார்த்தையினால் பிரீதியடைவாளா இவள் தானத்தால் சுவாதீனையாயினும் வீணாகும். ஆகையால் யுத்தத்தில் மரணம் வருவது மேன்மையும், ஓடுவது சிறுமையையு முண்டாக்கும். இப்போது ஜயமாவது மரணமாவது தெய்வச்செயற்படி நடந்தே றுகவென்று சும்பன் பலவாறாய் ஆராய்ந்து தைரியத்துடன் யுத்தஞ்செய்வதற்குத் துணிந்து அம்பிகையைப் பார்த்து ஓ பெண்கள் நாயகமே! இப்போது நீ யுத்தஞ்செய்யத் துணிவையாயின் அது வீண் பிரயாசையாய் முடியும். அதனை யறியும் அறிவில்லாதவளாயிருக்கின்றாய். ஸ்திரீகளுக்குப் பாணமெடுத்து யுத்யுஞ்செய்யுந் தருமம் எந்த நூல்களிலாவது சொல்லப்பட்டுளதோ. ஸ்திரீகளுக்குக் கண்களே பாணங்கள் புருவங்களே தனுசு. சிருங்கார கிரீடாபாவங்களே ஆயுதங்கள் சமர்த்தனான புருஷனே குறி. சந்தனப்பூச்சே யுத்தமுயற்சி. சம்போகவிச்சையேரதம். மந்தமான வார்த்தையே பேரிகை. இவைகளே பெண்களுக்குரிய யுத்தலக்ஷணம். இவையொழிந்த அஸ்திரமுதலானவைகளைக் கொள்வது வீண். சம்சமயமில்லை. ஸ்திரீகளுக்கு நாணமேபூஷணம். நாணமொழிந்தவரே பூஷணமொழிந்தவர். தைரியங்கொண்டு வெளிவருதலே அபசெயம். அந்தோ! ஸ்திரீயானவள் கடினவெண்ணத்துடன் யுத்தத்துக்கு வருவாளாயின் ஸ்தனங்களை எப்படி மூடிக்கொள்வாள். தனுசை எப்படியிழுப்பாள்? இவளுடைய மெல்லிய நடையெங்கே? தடியெடுத்தோடுவதெங்கே? இன்னமும் செய்யவேண்டிய மற்போர் முதலிய போர்களெங்கே? அந்த விஷயத்தில் உனக்கு புத்தி

சொல்லுகிறவள் காளிகாதேவியும் சாமுண்டாதேவியுமே. சண்டிகை ஆலோசனை ஸ்தானத்தி லிருக்கின்றவள். எல்லா செந்துக்களுக்கும் பயத்தை யுண்டுபண்ணுகிற சிங்கம் வாகனமாயிருக்கிறது. வீணாநாதத்தை விட்டு கண்டாநாதத்தைச் செய்கின்றாய். யௌவனத்துக்கும் அழகுக்கும் இந்தக் காரியம் விரோதமாயிருக்கிறது. ஓ அழகான பெண்ணே! உனக்கு யுத்தஞ்செய்ய வேண்டுமென் றாசையிருக்குமாயின் தொங்குகின்ற அதரமும் அழகில்லாத நகமும் குரூரமான வுருவமும் காக்கை போன்ற கருநிறமும் பெருத்தகாலும் விகாரமான பற்களும் பூனைக் கண்ணுமுடைய குரூபியாய் யுத்தத்தில் ஸ்திரமாய் நின்று கடினமான வார்த்தையைச் சொல்லுவையாயின் யான்யுத்தஞ் செய்யத் துணிவேன். இப்போதிருக்கும் இந்த அழகான வுருவத்தைக் கண்டு நானெப்படித் துணிவேன். நான் துணிந்தாலும் என் கையாடவில்லை யென்றி வண்ணஞ் சொல்வதைக் கேட்டு, தேவி கூறுகின்றாள். ஏ மந்தபுத்தியுள்ளவனே! மன்மதபாணத்தால் மோகிக்கப் பட்டு ஏன் துக்கிக்கிறாய். நீ காளிகையோடாவது சாமுண்டிகையோடாவது யுத்தஞ் செய் நானதனைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன் இருவரும் உனக்குத் தக்கவர்கள். உன்னிஷ்டப்படி நானுன்னோடு யுத்தஞ் செய்ய இச்சிக்க வில்லையென்று அவனுக்குச் சொல்லி காளிகையைப் பார்த்து, இவன் விரும்பிய வண்ணம் நீ குரூரமானரூபமுள்ளவளாயிருக்கிறபடியால் இவனோடு போர்செய்வா யென்றேவ அவள் காலமறிந்து தூண்டப்பட்ட யமன்போல் கதையொன் றெடுத்துக் கொண்டு வரவே அவனுமெதிர்த்து இருவரும் அதிபயங்கரமான யுத்தஞ் செய்தனர். பிறகு சும்பன் கதையால் நோக்கி யடிக்கக் காளியும் அடித்து அவன் ரதத்தையு முறித்து அதிலிருந்த கழுதைகளையும் சாரதியையு மடித்தாள். அவன் பெரிய கதை கொண்டு கோபத்தோடும் அவள் மார்பில் சிரித்துக் கொண்டேயடித்தான். காளிகை கத்தி யெடுத்துக் கொண்டு வேகமாய்ச் சென்று சந்தனமுதலிய கலவைகள் திமிந்திருக்கும் அவனது இடதுகையை யறுத்தனள். கையறுபட்டும் ரதம்பொடி பட்டும் சரீரம் ரக்தத்தினால் பூசப்பட்டும் அவனவற்றால் வருந்தாது மற்றொருகையில் அக்கதையை வாங்கிக் காளிகையையடித்தான். அவளும் வாளினால் கதையோடும் தோள்வளையோடுங் கூடியிருக்கிற அவ்வசுரனது வலதுதோளைச் சிரித்துக் கொண்டே யறுத்து விட்டாள். இரண்டுகையும் போகவே காலினாலுதைப்பதற்கோடி வந்தான். காளிகையும் அதிவிரிவாய் அவனிரண்டு கால்களையு மறுத்தனள். அவன்முண்டம் போலாயும் நில் நில்லென்று காளிகையை மிரட்டுகிறவன் போல் வந்தான்.

காளிகை கழுத்திலிருந்து ரக்தப்பிரவாகம் வடிந்து கொண்டிருக்கிற தலையை யறுத்துத் தள்ளினாள். அது மலைபோல் பூமியில் வீழ்ந்தது. அப்பிணமலையை இந்திராதி தேவர்கள் கண்டு சாமுண்டா தேவியையும் காளிகாதேவியையுந் தோத்திரஞ் செய்தனர். அச்சமயத்தில் காற்று சுகமாய் வீசிற்று. திக்குகள் நிர்மலமாயின. ஓமாக்னி வலஞ்சுழித்தெழுந்தது. ஓ அரசனே! மிகுந்த அசுரர்களெல்லாம் அம்பிகையை நமஸ்கரித்து ஆயுதங்களையெறிந்து பாதாளம் போய்விட்டனர். ஓ அரசனே! தேவியினது உத்தமமான சரிதத்தையும் சும்பன் முதலானவர்களது வதத்தையும் தேவரக்ஷணையையு முனக்குச் சொன்னேன். பூவுலகில் இச்சரிதத்தைக் கேட்பவர்களும் படிப்பவர்களும் புண்யவான்க ளாவர். புத்திரரில்லாதவர் புத்திரரையும் தனமில்லாதவர் தனத்தையுமடையவர். ரோக முள்ளவர்களும் சத்துருபய முள்ளவர்களும் அவ்வவற்றி னின்றும் விடுபடுவர். இவையன்றியும் எல்லாக் காமங்களையு மடைந்து முக்தியுமடையப் பெறுவரென்று வியாசர் ஜனமே ஜயனைப் பார்த்துக் கூறியருளினர்.

முப்பத்தொன்றாம் அத்தியாயம்

சும்பவதாப்ராரம்பம் முற்றிற்று.

சுலோகம் - சு அ உ

அ/உ அத்தியாயம் கூ க - க்குச் சுலோகம் - (கஅருகூஉ)

உ

ஏகபோகாயைந:

முப்பத்திரண்டாம் அத்தியாயம்.

சுரதோபாக்கியானம்

ஓமஹருஷிகாள்! ஜனமே ஜயன் வியாசமுனிவரைப் பார்த்து ஓ மகருஷியே! சண்டிகா தேவியின் மகிமை உம்மால் நன்றாய் வர்ணித்துச் சொல்லக்கேட்டேன். இனி தேவி யாரால் பூஜிக்கப்பட்டாள்? சர்வகாமங்களையுந்தருந் தேவியை எவன் பூசித்துப்பெரிய பிரயோஜனத்தை யடைந்தனன்? ஓ கருணைக் கடலே! அத்தேவியினுடைய உபாசனா விதியையும் பூஜாவிதியையும் விஸ்தாரமாயெனக்குச் சொல்லி யருளுமென்று வினவ, வியாசமுனிவர் அவன் வினாவிய வினாக்களுக்குச் சந்துஷ்டறாய் மஹா மாயாபூசையைப் பற்றிச் சொல்லுகிறார். ஓ அரசனே! முற்காலத்தில் சுவரோசிரஷாந்தரத்தில சுரதனென்று பிரசித்தி பெற்றவனாயும்

சனங்களை ரக்ஷிப்பதி லாசக்தியுள்ளவனாயும் தனுர்வேதத்தின்கரை யறிந்தவனாயும் விரோதிக ளில்லாதவனாயும் மகாதாதாவாயும் பிராமணர்களைப் பூசிக்கின்றவனாயும் தானஞ்செய்கிற சுபாவமுள்ளவனாயும் சத்கர்மத்தில் பிரீதி யுள்ளவனாயும் குருவினிடத்தில் பக்தியுள்ளவனாயுமுள்ள ஓரரசன் ராஜ்யபரிபாலனஞ் செய்திருந்தான். அக்காலத்தில் பர்வதத்தில்வசிக்கிற மிலேச்சர்கள் பல மிகுதியினால் பகை மேற்கொண்டு மதத்து சுரதராசனாலாளப்படும் பூமி முழுவதுங் தங்கள் வசமாக்கிக் கொள்ள வேண்டுமென்னுந்து ரெண்ணத்தால் நால்வகைச் சேனைகளோடும் போர் புரிவதற்கு வர சுரதனும் தனது சதுரங்க சேனைகளோடு மெதிர்த்தனை. அதிபயங்கரமான மிலேச்சர்கள் அரசனது பலத்துக்கு மிகவுங் குறைந்தவர்களாயிருந் தெய்வாதீனத்தால் ஜயமடைந்தார். தோல்வியடைந்த அரசன் உடனே தனது கோட்டையை யடைந்து மந்திரிமுதலானவர்கள் சத்துருக்களாகிய மிலேச்சர்கள் பக்ஷமாயிருப்பதை யறிந்து கொண்டு மனவருத்தமுற்றவனாய் நமக்கு யாவரும் பகைவராயிருக்கின்றபடியால் இனி நல்லகாலம் வருமளவும் அக்காலத்தை யெதிர்பார்த்துக் கொண்டிருக்கலாமா; அல்லது காலத்தை யெதிர்பாராது யுத்தஞ் செய்யலாம்?

எதனையும் ஆலோசிப்பதற்கு நமக்குச் சுவாதீனமான மந்திரிகளுமில்லை யென்ன செய்வோம். நமது மந்திரிகள் துர்மந்திரிகளாயிருத்தலால் ஒருவேளை சத்துருவைச் சேர்த்துக் கொண்டுவந்து நம்மைப் பிடித்து அவர்கள்வசங் கொடுத்து விடுவார்களல்லவா? அப்போது என்ன நடக்குமோ பாபபுத்தியுள்ளவனிடத்தில் விசுவாஞ்செய்தல் கூடாது. லோபத்துக்குட் பட்டவர்கள் துவேஷித் கொள்ளுகின்றனர். அவர்களுடைய எதுதான் செய்யார்கள். சகோதரர் தந்தையார் சிநேகிதர் மந்திரிகள் ஆசாரியர் அந்தணர் ஆகிய இவர்களைப் பேராசை பிடித்தவர் துவேஷித் கொள்ளுகின்றனர் அவர்களுடைய துவேஷத்தாலுண்டாகும் தீங்குகள் பலவென்று பலவாக அரசன் ஆலோசித்து மிகவும் வருந்திய மனமுடையவனாய் இனியிங்கிருத்த லடாதென்று தனியே குதிரையேறிக் கொண்டு நகரை விட்டு ஆரணியம் போய் நாம் எங்கே போகலாமென்று சிந்தித்து மூன்று காதத்தில் சுமேதஸ் என்னும் ருஷியினது ஆஸ்ரமமிருப்பதாகத் தெரிந்து அவ்வழியேவந்து பல விருக்ஷசாதிகளாலும் புஷ்பசாதிகளாலும் பக்ஷிசாதிகளாலும் அழகுபெற்று சொர்க்கபுரியினுஞ் சிறந்திருக்கும் வனத்தைக்கண்டு அதனுள்ளே செல்ல அங்கு சீடர்களுடைய வேதாத்யயன வோசையைக் கேட்டு மகிழ்ந்து அதுகாறுமடைந்திருந்த

பயத்தைவிட்டு இவ்வாச்சிரமத்திலிளைப் பாறுவோ மென்றெண்ணி குதிரையை ஓர் மரத்திற்கட்டி வணக்கமுள்ளவனாய் சாலவிருக்ஷத்தின் நிழலில் மான்றேலாசனத்தில் சாந்தராயும் தவத்தினலிளைத்த திருமேனியுடையவராயும் சத்தியவதியாயும் இந்திரியநிக்ரஹாரயுமிருக்கி சுமேதஸ் என்னும் ருஷியைப்பார்த்துக் கண்ணீர் விட்டழுதுகொண்டே பூமியில் தண்டாகாரமாய் வீழ்ந்திருப்ப. அம்முனிவர் அப்பா எழுந்திரு உனக்கு சுபமுண்டாகுக வென்றார். அப்போதொரு சீடன் ஆசனங்கொடுக்க முனிவரது ஆக்ஞையா லுட் காந்தனன். பின்னர் முனிவர்அவனது மனோ வெப்பம் மகலப் பல வினியமொழிகள் கூறு அர்க்கியபாத்யங் கொடுத்து ஏன் சிந்தாகுல முள்ளவனாயிருக்கின்றாய் நீ அஞ்சற்க. அரசாக்ஷியைவிட்டு இவ்விடம் வந்தகாரணமென்ன? அதனைச் சொல். நீ எண்ணியிருக்குங் காரியம்மிக்க அசாத்தியமா யிருந்தாலும் நான் முடிக்கிறே னென்று வினவவே அரசன் ஓ முனிபுங்கவரே! நான்சுரத னென்னுமரசன் சத்துருக்களால் ராஜ்யத்தையும் எனது மனைவி முதலிய எல்லாச் செல்வங்களையுமிழந்து இங்கு உம்மைச் சரணமடைந்தேன். ஓ சிவஸ்வரூபியே! இனி நீர் எதனை ஆக்யாபிக்கின்றீரோ வதனைப் பக்தியுடன் செய்கிறேன். இப்பூலோகத்தில் உம்மைக் காட்டிலும் என்னை ரக்ஷக்கின்றவர் யாவர். இப்போது எனக்குச் சத்துருபய முண்டாயிருக்கிறது. சரணாகதி யடைந்தவ ரிடத்தி லன்புள்ள ஓ முனிஸ்ரேஷ்டரே! என்னை ரஷியுமென்று புலம்பிச் சொல்லும் போது முனிவர் ஓ ராஜஸ்ரேஷ்டனே! இவ்விடத்தில் நீ நிர்ப்பயமாய் வாசஞ் செய்யலாம். உனது சத்துருக்கள் இங்கு எனது தவவலிமையால் வரமாட்டார்கள். இங்கு அவர்களா லுண்டாகும் இம்சையுண்டாகமாட்டாது. ஆனால் நாங்கள் வனவிருத்தி செய்வது போலும் நீயும் உதிர்ந்துபோன செந்நெல் தானியங்களைப் புசித்து ஜீவிக்கவேண்டு மென்று சொல்லவே அதனைக் கேட்ட அரசன் அப்படியே செய்கின்றே னென்று அவ்வாச்சிரமத்திலுள்ள பழம் வேர்காய் முதலியவைகளைப் புசித்து சீவித்து வந்தான். ஒருநாளந்தவரசன் தனது ராஜ்யாதி சுகங்களை நினைத்து விசார பீடிதனாய் ஓர் மரத்தினீழலி லுட்கார்ந்து கொண்டு அந்தோ! நம்முடைய ராஜ்யம் பாபிஷ்டர்களான மிலேச்சர்களால் கொள்ளை கொள்ளப்பட்டதே. அவர்களால் நமது ஜனங்கள் பீடிக்கப் பட்டிருப்பார்களன்றோ. நமது பரிசனங்க ளெல்லாம் அவர்கள் வசப்பட்டுத் துகக்த்தை யனுபவிப்பார் களன்றோ. நமது செல்வங்களெல்லாம் கொலை கட் காமங்களுக்கேயாகுமன்றோ. அந்தோ சத்பாத்திரத்தில் போகாதன்றோ? இவ்வண்ணஞ் சிந்தித்துக்

கொண்டிருக்கும்போது சம்சாரத்தில் விரக்தி பிறந்த ஒருவைசியன் அங்குவந்தனன். அரசன் அவனைப்பார்த்து பக்கத்தி லுட்காரச்செய்து நீயார்? எங்கிருந்து இங்குவந்தனை? எதனால் நீ தீனனாயிக்கிறாய் நேசனை வழிவிட்டால் ஏழடிதூரம்பின் றொடர்ந்து பின்பிரிய வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆகையால் எனக்குச் சிநேகனாகிய நீ வுண்மையைச் சொல்வாயென்ன வைசியன் நமக்கு நல்லசிநேகங்கிடைத்ததென்று நினைத்து ஓ - அரசனே! நான் வைசியன் என்பெயர் சமாதி. தனமுள்ளவன் தர்மத்தில் சமர்த்தன். உண்மையே சொல்லுகிறவன் பொறாமை யில்லாதவன். இப்படிப்பட்ட நான் தனந்திலாசையுள்ள துஷ்டபுத்திர களத்திரங்களால் துறத்தப் பட்டவனாய்க் காட்டுக்கு வந்தேன். நீரார்? பாக்யவானாகப் பிரகாசிக்ன்றீர் ஓ நண்பரே! உம்முடைய சரித்திரத்தைக் கூறுமென்ன, அரசன் நான் சுரதனன்னும் பெயருள்ள வரசன் நானும் உன்னைப் போல் சத்துருக்களால் பீடிக்கப்பட்டு ராஜ்யமிழந்து மந்திரிகளால் வஞ்சிக்கப்பட்டவனா யிங்குவந்துவிட்டேன். ஓ வைசிய சிருஷ்டனே! எனக்கு நீ தெய்வாதீனமாய் நல்லமித்திரனாகச் சேர்ந்தாய். இக்காட்டில் நாமிருவரும் வசித்திருப்போம் நீ துக்கத்தை விட்டுவிடுவென்று சொல்லியபோது வைசியன் ஓ அரசனே! என் சம்சாரம் யாதொரு துணையு மில்லாதிருக்கின்றாள். நானில்லாமல் மிக்கதுக்க முள்ளவளாயும் அதுவே வியாதியாய்த் துக்கம் தாபம் இவைகளால் வருத்தப் பட்டவளாயு மிருப்பாள். என் மனைவியின் தேகம் சுகமாயிருக்குமா வென்று என் மனது தபித்துக் கொண்டேயிருக்கிறது. பிள்ளையும் மனைவியையும் வீட்டையும் பநதுக்களையும் எப்போது பார்ப்பேன். வீட்டுச் சிந்தையினாலலைந்து கொண்டிருக்கிற மனதுக்குச் சுகமில்லையே யென்றைபோது ஓ வைசியனே! துர்நடத்தை யுள்ளவராயும் பாவபுண்ணியந் தெரியாதவர்களாயுமிருக்கிற எந்த புத்திரகளத்திராதிகளால் துறத்திவிடப்பட்டனையோ அவர்களை மறுபடியம் பார்ப்பதனா லென்ன சுகமுண்டாகப் போகிறது. ஓ பெருந்தன்மை யுள்ளவனே! நன்மையைச் செய்கிற சத்துருக்களே மித்திரர்கள். கெடுதியைச் செய்கிற சத்துருக்கள். ஆனதால் மனதைத் திடப்படுத்திக கொண்டு என்னோடு சஞ்சரித்திருப்பையென்று சொல்ல, ஓ அரசனே! என் மனதானது இப்போது மிக துக்கமுள்ளதா யிருக்கிறது. துஷ்டசுபாவங்களால் விடக்கூடாமலிருக்கிற குடும்பசிந்தனையினால் மனம் வருந்துகின்றது. நான் என்செய்வேனென்றான். அரசனும் ஓ வைசியனே! ராஜ்யதுக்கம் என்மனத்தையும் வருத்தப்படுத்துகிறது. நாமிருவருமிப்போது சோகத்தை நாசம்பண்ணுகிற ஔஷதத்தை ருஷியைக்கேட்போமென்று

அவரைச்சமீபித்து நமஸ்கரித்து இருவருளரசன் அம்முனி புங்கவரிடம் பொறுமையடையவனாய்ச் சொல்லத் தொடங்கினான்.

முப்பதிரண்டாம் அத்தியாயம்

சுலோகம் - (சுநு.)

ஆ/உ அத்தியாயம் ரு உ-க்குச் சுலோகம் (கசுஉஉஅ)

உ

ஏகரசாயை நம:

முப்பத்து மூன்றும் அத்தியாயம்

புவனசுந்தரீ மஹாத்மியம்.

ஓ ஜனமேஜயனே! சுரதனென்னும் அரசன் சுமேதஸ் என்னும் ருஷியை வணங்கி ஓ சுவாமின்! யான் வனத்திற் சஞ்சரித்துக் கொண்டிருக்குந் தருணத்தில் இந்த வைசியன் மனைவிமக்களால் துறக்கப்பட்டு என்னிடம் வந்து மிக்க சிநேகனாயினான். எனக்கோ நிஷ்காரணமாய்வந்த பலவித துன்பங்கள் நேரிட்டு அதனாலுண்டான மனோவிசாரம் நீங்கிற்றில்லை. நான் அடிக்கடியும் குதிரைகளையும் அடிமையாட்களையும் நிதிகளையும் எனது சத்ருக்கள் ஒன்றுகூடி நிமிஷத்துக்குள் கொள்ளைகொண்டமையும் எண்ணி ஏக்கமுற்றுச் சிந்தித்துத் துயரப்பட்டுக்கொண்டிருக்கிறேன். எனக்கு நித்திரை என்பதில்லை. சுகமெப்படி யிருக்குமோ அதனையறியேன். யானோ இவ்வுலகவெல்லாம் ஸ்வப்பனம் மித்தை யென்றறிவேன். அப்படியறிந்தும் என் மனம் நிலைபடாமல் சுழன்று சுழன்று என்னை வாட்டுகின்றது. யான்யாரோ ? எனதென்கிற பதார்த்த கோடிகளெல்லா மெவைகளோ வென்றறிந்தவனா யிருந்தும் அதனைப் பரியோலோசிக்காத சமையத்தில் துக்கத்தை யுண்டுபண்ணுகிறது. இதெல்லாம் பிரமையென்பதை யானறிவேன். அப்படி யிருந்தும் என்மனம் பயிற்சித் தடிப்பால் அவைகளைப் போய்ப் போய்க்கவருகின்றது. இதற்குக் காரணமென்ன ? இது மிகவும் வியப்பைத் தருகின்றது. முனிவரே! நீர் அனைவர்க்கும் மேலானவரா யிருக்கின்றீர் உமக்குத் தெரியாத அம்சம் மொன்றுமில்லை. எல்லாச்சம்சயத்தையும் போக்கும் சக்தியுடையவராதலால் என்மனம் மோக மடைவதற்குக் காரணமெதுவோ அதனை அன்புடன் சொல்வீராக வென்று கேட்க, சுமேத முனிவர் அவ்வரசனிடத்தில் கருணை வைத்தவராய்ச் சோகமோகங்களைப் போக்கும் படியான இதோபதேசத்தைச் சொல்லத் தொடங்கினர். ஓ அரசனே! எல்லாப்

பிராணிகளுக்கும் பந்தமோஷங் களுக்குங் காரணம் மாயை யென்றே கூறுகின்றனர். பிரம்ஹ விஷ்ணு ருத்திரேந்திர வருண வாயுவாதி தேவர்களும் கந்தர்வாதி ராக்ஷசர்களும் மாயாவசப்பட்டவர்களாய்ப் பந்தமோக்ஷங்களுக் கிடமாகின்றனர். சிருஷ்டிக்கப்பட்ட சராசராத்மகமான இவ்வுலகமனைத்தும் மோகனாதி தேவர்களுக்கே இக்கதியினால் மானுடர்களி லொருவனான நீ எம்மாத்திரம் அம்மாயையோ மிக வலிவுடையது ஞானிகளுடைய மனதையும் மோகிக்கச் செய்யும். பிரமனாதி தேவர்களாயினும் ஞானிகளாயினும் பிராரத்த விசேஷத்தால் ராகத் துவேஷாதிகளுக்கு வசப்பட்டவர்களாய்த் திகைத்து மோகிக்கின்றனர். முன் கிருத யுகத்தில் நாராயணர் சுவேத த்வீபத்தையடைந்து சுகதுக்கங்கள் மாறிமாறி வருகின்றமையால் இதனைப் பிரம்ஹானந்தப பிராப்தியாலொழிக்க வேண்டுமென்று கருதி அங்குப் பதினாயிரம் வருடங்கோரமான தவம்புரிந்துவந்தனர். பிரமதேவனும் ஓர்காலத்தில் அஞ்ஞானத்தை விலகிக்கொள்ள வேண்டுமென்கின்ற எண்ணங் கொண்டவராய் மனுஷ்ய சஞ்சாரமில்லாத அரணியத்தை யடந்து அங்குதவம்புரிந்து கொண்டிருந்தனர். நாராயணர் தான் தவஞ் செய்து கொண்டிருந்த சுவேத த்வீபத்தை விட்டு வனாந்தரஞ் செல்லவேண்டுமென்கிற வெண்ண முடையவராய் அந்தத் த்வீபத்தை விட்டு வேறு வசதியான ஆச்ரமத்தைத்தமக்குத் தபோவனமாக அமைத்துக்கொள்ள விரும்பி வனங்களை யெல்லாம் பார்த்துக்கொண்டே வருந் தருணத்தில் பிரமதேவனும் அவ்வாறு தபோவனஞ் செல்லக் கருதிப்போய்க் கொண்டிருக்கும்போது அவ்விருவர்ககளு மோரிடத்திற் சந்தித்து ஒருவரை யொருவர் நீர்யார் நீர்யாரெனன்று வினவ, பிரமன் இவ்வுலகத்தைப் படைக்குங் கர்த்தாநானென்றனன். விஷ்ணு மூர்த்தி ஓ மூடா! யானன்றோ இவ்வுலக சிருஷ்டிகர்த்தா. யான் தெரியுமா? விஷ்ணுவல்லவா? நீ ராஜோகுணத்தை யாஸ்ரயித்தவனாதலால் தாழ்ந்தவன். நீ எனக்கு எம்மாத்திரம்? நான் சத்வகுணத்தை யாஸ்ரயித்தவன் என்னை நீ மறந்துவிட்டனையோ? நீ அநேக முறைராக்ஷசர்களால் பீடிக்கப்பட்ட பொழுதெல்லாம் என்னைச் சரணமடைந்து காப்பாற்ற வேண்டுமென்று பலமுறை வேண்டிக் கொள்ள நான் உன்னை ரக்ஷிக்க அசுரர்களுடன் போர்புரிந்து காப்பாற்றி னேனல்லவா? சமீபகாலத்தில் மதுகைடபர்களைக் கொன்று உனக்கு வந்த ஆபத்தை நிவாரணஞ் செய்தேனே. ஓ மந்தமதியாளனே! அதையும் மறந்து விட்டனையோ! என்னகர்வம்! என்னமோகம்! ஆஹா நன்றாயிருக்கிறது! இம்மோகத்தை விட்டுவிடு. இவ்வுலகத்தி லென்னை விட மேலானவ னெவனிருக்கின்றான் என்றிவ்வண்ணம்

பிரம விஷ்ணுக்கள் கொடுமையாய்ப் பேசிக்கொண்டே கோபம் மேலிட உதடு துடிக்க கண்கள் சிவப்பேறப்பெற்றனர். இவர்கள் மத்தியில் ஓர் சிவலிங்கந் தோன்றிற்று. அது அமிர்தம்போல் வெண்மையாயும் நெருந்துயர்ந்ததாயும் சுந்தரமாயுமிருந்தது. அத்தருணத்தில் ஆகயவாணி நீங்களேன் வாதஞ்செய்து கலாம் விளைக்கின்றீர். உங்கள் மத்தியில் தோன்றியிருக்கும் இம்மகாலிங்கத்தினது அடிமையாவது முடியையாவது எவன் முன்னேகண்டு வருகின்றானோ அவனே சிறந்தவன். ஆதலால் ஒருவன் பாதாளத்தையும் ஒருவன் ஆகாயத்தையுமடைந்து அடிமுடிகளைத் தேடுங்கள். என் வாக்கியத்தை நிராகரணஞ் செய்யாமல் பிரமாணமாக வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக் குண்டாயிருக்கும் விவாதத்தை எவ்விதத்திலாவது சமாதனஞ் செய்யவே இம்மகாலிங்க முண்டாயிருக்கிற தென்று கூறிற்று. இவ்வாறு ஆகாயவாணி கூறியதைக் கேட்ட பிரம விஷ்ணுக்கள் அப்படியே செய்ய விருப்பங் கொண்டவர்களாய் அந்த லிங்கத்தை அளவிடுவதற்காக விஷ்ணு பாதாளத்தையும் பிரம்ஹா ஆகாயத்தையுமடைந்து தேடத்தலைப் பட்டலைந்தனர். இவ்விருவரில் விஷ்ணுமூர்த்தி மிகவும் வருத்தத்துடன் பாதாளம்வரையில் தேடித்தேடி லிங்கத்தி னடியைக் காணமுடியாமல் சிரமத்தினால் திரும்பிவந்துவிட்டனர். பிரமன் ஆகாயத்திற்பறந்து தேடிக் கொண்டிருக்கும்போது தற்செயலாய்ப் பரமசிவன் சிரசிலிருந்து நழுவிவிழுந்த தாழம்பூவொன்றைக் கண்டுமிகவுஞ் சந்தோஷித்துத் திரும்பிவந்து விஷ்ணுமூர்த்தியக்குத் தாழம்பூவைக்காட்டி இது பரமசிவன் முடியிலிருந்து உமக்கு நம்பிக்கையுண்டாக இதைக் கொணர்ந்தேனென்று அசத்தியமான வார்த்தையைச் சொல்லினன். அச்சொல்லைக் கேட்டு அத்தாழைமலரைப்பார்த்து இதனைப் பரமசிவன் முடியிலிருந்து கொண்டவரப்பட்ட தென்பதற்குச் சாக்ஷி யார்? அப்படி சாக்ஷி சொல்பவர் யதார்த்தவாதியாயும் ஆசாரசீலமுடையவராயும் நிஷ்பக்ஷபாதியாயுமிருத்தல் வேண்டும். அப்படிப்பட்ட சாக்ஷியையே விவாதமுண்டாகுங்காலத்தில் மத்யஸ்தமாய்க்கொள்ளப்பட்டுவரென்று சொல்ல, பிரமன் ஓ விஷ்ணுமூர்த்தியே உமக்கென்ன இன்னும்நம்பிக்கையுண்டாகவில்லையா! தூரதேசத்திலிருந்து வந்து உமக்கு யார் சாஷிசொல்பவர்? எதுசத்யமோ அதை இம்மலரே சொல்லுமென்று கூறி, கேதகிமலரைச் சாக்ஷிசொல்லும்படிப் பிரேரேபித்தனன். தாழம்பூ, தன்னைப் பரமசிவன் சிரசிலிருந்து இப்பிரமதேவர் கொண்டுவந்தாரென்றும் இதிற் சிறிதுஞ் சந்தேகிக்க வேண்டியதில்லையென்றுங் கூறிற்று. அதனை விஷ்ணுமூர்த்தி கேட்டு

நகைத்து நீ சொல்லியதை நம்பவேமாட்டேன். எனக்குப் பிரமாணம் பரமசிவனே யென்றனர். பரமசிவனார் கோபங்கொண்டவராய்த் தாழைமலரைப் பார்த்து நீ என் சிரசிலிருந்து விழுந்து நடுமார்க்கத்தில் பிரமன் கையிலகப்பட்டிருக்க, சிரசிலிருந்தே உன்னைப் பிரமன்கொண்டு வந்ததாக அசத்யங் கூறினாயன்றோ. நீ இன்று முதல் எனது பூஜைக்கருகமாகாயென்று சபித்தனர். பிரமன் லஜ்ஜையடைந்து விஷ்ணுமூர்த்தியைப் பிரதக்ஷிண நமஸ்காரஞ் செய்தனன். ஓ அரசனே! மாயையின் வன்மையைப் பார்த்தனையா! பிரமவிஷ்ணுக்கள் யான் சிறந்தவன் யான் சிறந்தவனென ஒருவருக்கொருவர் விவாதஞ் செய்வதற்கும் பரமசிவன் தாழம்பூவைத் திரஸ்கரிப்பதற்கும் காரணமாயிருந்தது மாயையே! இது ஞானிகளையும் மயக்கிவிடுகிறது. தேவர்கள் காரியத்தைச் சாதிப்பதற்கு விஷ்ணுமூர்த்தி அநேக அவதாரங்கள் செய்து அசுரர்களை வஞ்சிக்கின்றனர். இது மாயையின் கொடுமையென்பதற்கையமுண்டோ. ஞானியாயிருக்கிற இவருக்குத் தேவ காரியாம்சத்தில் என்ன சம்பந்தமிருக்கிறது. ஞானிகளையும் பலாத்காரமாய் ஆகரிஷித்து மோகத்தை யுண்டுபண்ணுகிறது. இத்தகைய மோகத்தை யுண்டுபண்ணுவதற்கு அதிஷ்டானமா யிருப்பதும் பந்தமோக்ஷங்களை யுண்டுபண்ணுவதும் சர்வவியாபகமான பராசக்தி யென்றறிவாய். அச்சத்திதான் ஞானத்தை யுண்டுபண்ணி பந்தத்தைத்தொலைத்து மோக்ஷத்தை யுண்டுபண்ணத் தக்கவ ளென்றுகூற அரசன் ஓ முனிவரே! பராசக்தியின் சொரூபத்தையும் அதனது வலிமையும் அச்சத்தியுற்பத்திக்குக் காரணமாயிருப்பதையுஞ் சொல்லவேண்டுமென்று கேட்க, முனிவர் ஓ அரசனே! இச்சத்தி யனாதியாயிருப்பதால் அதற்குற்பத்தி யென்பதில்லை. நித்யமானது. காரணங்களுக்கெல்லாம் காரணமாய் விளங்குவது. எல்லாப் பூதங்களிடத்தும் வியாபித்துச் சேஷித்திருப்ப தென்றறிவாய். அச்சத்தி யில்லாதவன் பிரேதம்போலாகின்றான். சர்வஜந்துகளிடத்தும் சித்ரூபமாய் விளங்கும் சத்திதான் அப்பராசத்திக்கு நிஜமான சொரூபம். அச்சித்சத்தியை உற்பத்தி திரோதானங்கட்காகத் தேவர்களும் மானுடர்களும் எப்போது துதிக்கின்றார்களோ அப்போது பிரஜைகளுடைய துக்கத்தை நாசம் பண்ணுவதற்கு நானாரூபத்தைத் தரித்து நானாசத்தியுடன் சுவேச்சையா யுண்டாகின்றான். அந்தச்சத்தி தேவர்களுக்குச் சுவாதீனப்பட்டவனல்லள். காலத்திற்கும் வசப்பட்டவளல்லன். சகலபுருஷார்த்தையும் எளிதிற்றரத்தக்கவள். கர்த்திருத்வமில்லாத அச்சத்தி திருஷ்டாவாக விருந்து இவ்வுலகமனைத்தையுற் திருசியப் படுத்துகின்றாள். த்ருசியத்துக்கு முதன்மையாய் விளங்குகின்ற அவன்

ஒன்றாகவேயிருந்து பிரமாண்டமென்று நாடகத்தைச் செய்து புருஷனாகிய பரமசிவனை ரஞ்சிக்கச் செய்கின்றாள். புருஷன் ரஞ்சிக்கப்படுங்காலத்தில் எல்லாவற்றையும் சங்கரிக்கிறான். அப்பராசக்தியைக் காரணமாகக் கொண்டுண்டானவர்களே பிரம விஷ்ணு ருத்திராதிகள். இவர்கள் அம்பிகையின் லீலாமாத்திரத்தில் சிருஷ்டியாதி காரியார்த்தமாய் அவ்வக்காலங்கடோறுங் கற்பிக்கப்பட்டவரேயன்றிக் கற்பிக்கபடாமல் நித்தியராயிருப்ப வரல்லென்று நிச்சயிக்கப் படுகின்றனர். பராசக்தி தன்னம்சத்தின தமசங்களை இவர்களிடத்து லாரோபணஞ் செய்து அவர்களுக்கேற்றபடி சரஸ்வதி முதலிய சக்திகளையுங் கொடுக்க வதனையவர்கள் பெற்றிருக்கின்றனர். இவ்வுண்மையால் இவைகளுக் கெல்லாம் காரணமாய் விளங்குபவள் பராசக்தியென மகத்துக்க ளுணர்ந்து அவளே சிருட்டி முதலியகிருத்தியங்களை யியற்றுபவளெனநிச்சயித்துப் பூசித்து நற்கதியடைகின்றனர். ஓ அரசனே! இப்படிப்பட்ட அம்பியையின் சரித்திரத்தை என்புத்திக் கெட்டினவரையுஞ் சொன்னேன்.

முப்பத்துமூன்றாம் அத்தியாயம்

புவனசுந்தரீமஹாத்மிய முற்றிற்று.

சுலோகம் -(சுருஉ)

ஆ/உ அத்தியாயம் ூநூ - க்குச் சுலோகம் - (கசூஅஅ)

தேவீபாகவதம்

உ

ஏகைஸ்வர்யப்ரதாயித்யை நம:

முப்பத்து நான்காம் அத்தியாயம்

தேவீ பூஜாவிதானம்

ஓ ஜனமேஜயனே சரதனென்னும் அரசன், சுதேத முனிவரால் அம்பிகையின் மகிமையைச் சொல்லக்கேட்டு, தேவியினிடத்தில் அன்புடையனாய் ஓ முனிவரே எனக்கு அம்பிகையினது ஆராதனக் கிரமத்தையும், மந்திரமுறையையும், ஓமவிதியையும் தயைசெய்து கூறவேண்டுமென்ன, அம்முனிவர் மனிதர்களுக்குக் காமம் மோக்ஷம் ஞானம் என்பவற்றையும் துக்கநாசத்தையுந் தருவதான தேவியினது சுபகரமாகிய பூஜாவிதியைச் சொல்லுகிறேன் கேட்பாயாக வென்றார்.

பூசை செய்பவன் பிரதமத்தில் விதிப்படி ஸ்நானஞ் செய்து சுசியுடையவனாய் வெண்மையாகிய வஸ்திரந் தரித்து ஆசமித்து நித்தியவிதிகளை முடித்துக்கொண்டு தனது கிருகத்துக்குப்போய் கோமயத்தினால் சுத்தி செய்திருக்கும் நல்லவிடத்தில் உத்தமமாகிய ஆசனத்தின்மேல் உட்கார்ந்து மூன்றாவர்த்தி ஆசமித்து, தனது சக்தியானுசாரமாகப் பூஜாத்திரவியங்களைச் சேகரித்துத் தன் சமீபத்தில் வைத்துக்கொண்டு பிராணாயாமமும் தீதிவார நக்ஷத்திராதிகளைக் குறிப்பதாகிய சங்கற்பமும் பின்னர் பூதசுத்தியாதிகளையுமியற்றி அதுமுடிந்தபின் திரவியசக்தி நிமித்தம் மந்திரதீர்த்தாற் புரோக்ஷித்து அதன் பின்னர் நியாசங்களை விதிமுறையாய் நியசித்து அதன்பின்னர் நல்ல தாம்பரத்தகட்டில் வெண்மையான சந்தனத்தால் முதலில் அறுகோணமும் அதற்கு வெளியில் அஷ்டகோணமும் அக்கோணங்களில் நவாக்ஷர மந்திரத்தினுடைய பீஜங்களையுமெழுதி இவ்வகையான யந்திரப்பிரதிஷ்டை செய்து வேதோக்த விதியாய்ச் சிவோக்தமாகிய மந்திரங்களினா லர்ச்சித்தல் வேண்டும். ஆகமவிதியின் பழியாம் பூஜை செய்யலாம். விதிமுறையாய்ப் பூஜித்தபின்னர் நவாக்ஷர மந்திரத்தைத் தியானபூர்வகமாய் ஜபித்தல் வேண்டும். ஜபத்தில ஓரம்சம் ஹோமமும், பத்தில்ஓரம்சம் தர்ப்பணமும் செய்து பத்தில் ஓரம்சம் பிராஹ்மண போஜனமும் செய்வித்தல் வேண்டும். ஜபஹோமாதிகள் முடிந்த பின்னர் அம்பிகையினுடைய சரித்திரங்களில் மூன்று சரித்திரமாவது பாராயணம் பண்ணி விசர்ஜனஞ் செய்தல் வேண்டும்.

ஓ அரசனே! பகவதியினுடைய பூஜையைப் பிரயத்தனப்பட்டுச் செய்தல் வேண்டும். அன்றியும், மிகவும் மேன்மையிடைய வேண்டியவன் நவராத்திரி பூஜாவிதியில் கூறப்படும் ஓமத்ததில் மந்திரஜபத்தோடு சர்க்கரையும் நெய்யும் தேனுங் கலந்த பாயசத்தையும், சாகமாம்சத்தையும் உபயோகித்தல் வேண்டும். அதற்குபயோகப்படும் பத்திரபுஷ்பங்கள் குற்றங்களில்லாத நல்லபில்வபத் திரங்களும், செவ்வலரிப்பூவும். சர்க்கரையோடு கலந்த எள்ளுமாம். இவை யர்ச்சனக்குரியன. நவராத்திரி தினமாகிய ஒன்பது நாட்களில் அஷ்டமிதிதியும் நவமிதிதியும் சிறந்தன. இவை போலவே சதுர்த்ததிதியும் சிறந்ததென்பர். இந்தப் பூஜையிற் பிராஹ்மண போஜனம் அவசியம் சிறப்பாகச் செய்வித்தல் வேண்டும். இவ்வண்ணம் செய்யப்பெற்றால் தனஹீனன் தனவானாயும், ரோகி அரோகனாயும், வித்யாஹீனன் (ஐயந்திரிவற) நல்லரசஜ்ஞான வித்தியாசாலியாயும் ஆவார்களென்பதில் யாதொரு சந்தேகமில்லை. இவ்வரிய நவராத்திரி உபவாசத்தை அந்தணர் முதலிய

நான்குவருணத்தவரும் பக்தியுடன் செய்யப் பெறுவாராயின் சகத்காரணியாகிய அம்பிகையினுடைய அனுக்கிரகத்தால் சர்வசுகத்தையும்பெறுவர். ஸ்திரீ புருஷ கூட்டங்களை மிகுதியாகப் படைத்தவர் அவர்களால் வருந்தாதிருத்தற்கு நவராத்திரிவிரதத்தைப் பக்தியுக்தராய்ச் செய்வாராயின் அவர்வேண்டியவற்றை அம்பிகை யளிப்பள்.

ஓ அரசனே! சர்வகாமங்களையுங் கொடுக்கத்தக்கது நவராத்திரி பூஜையென்று சொன்னேனல்லவா? அதனது விதியைச்சற்று விரித்துச் சொல்லுகிறேன் கேட்பாயாக.

புரட்டாசி மாசம் சுக்கிலபக்ஷத்தில் வரும் நவராத்திரி பூஜாகாலத்தில் சண்டிகையாகிய தேவிக்குப் பூஜாஸ்தனத்தைக் கற்பித்துக் கொண்டு அதில் விதிப்படி மண்டலமியற்றி வேதமந்திரவிதிமுறையாய்க் கலசத்தைத் தாபித்து, அதன்மேல் யந்திரத்தை வைத்து அக்கலசத்தைச் சூழ்ந்து யவையாகிய தானியத்தைப் பரப்பிப்பின்னர் புஷ்பமாலை முதலியவற்றா லலங்கரித்து தூபதீபாதியுபசாரங்களால் மூன்றுகாலமும் பூஜிக்கவேண்டும்.

ஓ அரசனே தூபதீபநைவேத்திய பலபுஷ்பாதிகளும் கீதவாத்யங்களும் அவைகளோடு கலந்த ஸ்தோத்திரமுறைகளும் விசேஷமாயிருக்க உற்சவாதிகளும் மிக்கசிறப்பாய் நடத்த வேண்டும். இவைகளில் திரவியலோபஞ்செய்தல் கூடாது. இப்போது சொல்லிவந்தனவேயன்றிக் கன்னிகைகளுக்குச் சுகந்தமாகிய தைலம், சந்தனம் புஷ்பம் பூஷணம் வஸ்திரம் பக்ஷயமுதலியவற்றை மனோசம்பந்தமான வுபசாரத்துடன் கொடுத்தல் வேண்டும். நவமிபூஜை முடிந்தவுடன் தசமிதினம் பிராஹ்மண போஜனஞ் செய்வித்துப் பாரணஞ் செய்தல்வேண்டும்.

இந்திரவிரதத்தை பதிவிரதையாகிய சுமங்கலியாவது அசுமங்கலியாவது பக்தியோடு அனுஷ்டித்துச் செய்வராயின் இம்மையில் நினைத்து இஷ்டகாமங்களை அனுபவிக்கப் பெற்று தேகாந்தத்தில் பரமபதத்தையடைவர். அம்பிகையினிடத்தில் நிசமான பக்தியுடையவர் சன்மாந்தரத்திலும்மறவாமல் உத்தமகுலத்திற்பிறந்து நல்லொழுக்கமுடையவரா யிருப்பர். இந்த நவராத்திரி விரதமானது உத்தமோத்தமமான விரதமாகும். சிவையினுடைய விரதமாகிய இது சிறப்பாகிய சகல செல்வங்களையுங் கொடுக்கும். ஆதலால் அரசனே நீ சண்டிகையினுடைய பூஜையைச் செய்வையாயின் சத்துருக்களை ஜயித்து ராஜ்யசம்பத்தை யடைவாய். இந்தத் தேகத்தினாற் பெறவேண்டிய சகல போகங்களையும் பெற்று புத்திரமித்திர

களத்திராதிகளுடன் குறைவின்றிவாழ்வாய் சந்தேகமில்லை, என்று கூறி வைசியனைப் பார்த்து ஓ வைசியனே! விஸ்வேஸ்வரியும் மஹாமாயாசொரூபிணியுமாகியதேவியை நீயும் ஆராதனை செய்வாய். செய்வாயின் உன்னுடைய கிருகத்திலுள்ள உன்னைச் சேர்ந்தவரெல்லாம் மிகவும் பெருமையாய்க் கொண்டாடுவர். நீ இச்சம்சாரத்தில னுபவிக்க வேண்டிய சர்வ சுகங்களையும் அனுபவித்து மறுமையில் தேவியினது சாலோகத்தைப் பெற்றுப் பரமானந்தமெய்துவாய். பகவதியை யாராதிக்காதவனெவனோ அவன் இகலோகத்தில் நானாவிதமான ரோகங்களாற் பீடிக்கப்பெற்றுப் புத்திரபாக்கிய முதலிய பாக்கியங்களற்றுப் பெருந்துக்க மனுபவித்து மீளாநரகத்துக் காளாகின்றனன். எவர் வில்லம் அலரி தாமரை சண்பகமுதலிய நல்ல பத்திரபுஷ்பங்களைக் கொண்டு பவானியை வேதங்களிற் சொல்லப்பட்ட மந்திரங்களால் அர்ச்சிக்கின்றனரோ அவர்கள் இம்மையில் மஹாசுகிகளாய் பரமபுண்ணியர்களாய்த தேவியினிடத்தில் உண்மையான பக்தியுடையவர்களாய்ச் சகல தனங்களுக்கும் ஆதாரராய்மஹாவித்வான்களாய்ராஜஸ்ரேஷ்டர்களாய் இவ்வுலகிற்கோர் திலகம்போன்றவராய் விளங்குவர்.

முப்பத்துநான்காம் அத்தியாயம்

தேவீ பூஜாவிதானம் முற்றிற்று.

சுலோகம் - (சச)

ஆ/உ அத்தியாயம் நூச - க்குச் சுலோகம். (உநூஉ)

ஏகாதபத்ரஸாம்ராஜ்யப்ரதாயை நம:

முப்பத்தைந்தாம் அத்தியாயம்.

தேவீ பூஜாபலம்.

வியாசமுனிவர், ஜனமேஜயனைப் பார்த்து தேவிசரணாவிந்தர சாம்ருதபான திருப்தனே! இவ்வண்ணஞ் சுமேதமுனிவர் சொல்லி வந்ததைக்கேட்ட அரசனும் வைசியனும் விநயத்துடன் அவரை வணங்கி ஆனந்தமிகுதியால் மலர்ந்த கண்களுடையவர்களாய் கைகூப்பிக்கொண்டு ஓ பகவானே! செயலற்றவர்களும் தீனர்களுமாகிய நாங்கள் தேவரீரது திருவாக்கினின்றும் பெருகாநின்ற அமுர்தவசனங்களால் கங்கையால் பகீரதன் பரிசுத்த மடைந்தமைபோல் பரிசுத்தமடையப் பெற்றோம். சாதுக்களாயுள்ளவர் பரப்பிரகிருதியாகிய தேவியையே சரண மடைந்தவர்களாய் கிருத்ரம குணங்களற்று யாவருக்கும் இதத்தையே செய்பவராயிருப்பர்.

மகாதுக்கவிநாச கரமாயிருக்கின்ற இந்த ஆஸ்ரமத்தை யாங்கள் செய்த பூர்வபுண்ணிய மகிமையால் வந்து சேரப் பெற்றோம். தேவரீரும் எங்கள் துக்கம் நிவிர்த்தியாம் வண்ணம் உபாயமுங் கூறியருளினீர்.

உலகில் மனிதருள் தமது பிரயோஜனத்தையே கருதுகின்ற வர்பலர். தேவரீரைப் போன்ற சிலபெரியோரே பிறரது காரியத்தைத் தமதுகாரியமாக வெண்ணுகின்றவர். ஓசுவாமிகள்! யானோ பெருந்துயரத்தி லிருக்கின்றான். இந்த வைசியன் என்னிலும் பெருந்துயரத்திலிருக்கின்றான் யாங்கள்படுந் துன்பத்துக்குச் சம்சாரங்காரணமாகவிருந்தும் அதில்பற்றொழியாமையால் அச்சம்சாரதாபத்தினால் மிகவும் வாட்டமுற்றிருக்கின்றோம். அந்தவாட்டம் தேவரீரைத் தரிசித்ததனால் நீங்கியிருக்கின்றோம். தேவரீரது திருவாக்கைக் கேட்டதனால் தன்யர்களாயினோம். ஓ கருணைக்கடலே! உமது கிருபையால் எங்களைக் காத்தருள வேண்டும். சாந்தராகிய தேவரீரது திருக்கரங்களால் எங்களைப் பிடித்துத் துக்கசாகரத்தினின்றுந் தாண்டச்செய்து மந்திரதானத்தால் கரையேற்று வீரராயின் நாங்கள் மகத்தமாகிய தவத்தைச் செய்து தேவரீரை வந்துதெரிசித்து எங்களிருப்பிடம்போய்ச் சேர்வோம். ஆகையால் தேவரீரது திருவாக்கினின்றும் வந்த தேவியினது நவாக்ஷர மந்திரத்தை யுபதேசிப்பீரோயின் அதனையாங்கள் யாதொரு ஆகாரமுங் கொள்ளாமல் நிராகாரர்களாய் நியமத்துடன் அதனை ஸ்மரிக்கின்றோம் என்று பிரார்த்திக்க, அம்மஹாமுனிவர் தியானபீஜாக்ஷர பூர்வகமாய் அம்மஹா மந்திரத்தை யுபதேசித்தனர். அவ்விருவரும் உபதேசம் பெற்றபின்னர் ஆசாரியரையும் தெய்வத்தையும் தியானித்து, தெளிந்த மனமுடையவர்களாய் ஆகாரமற்ற உதரமுடையவர்களாய் ஓர் புண்ணிய நதிதீரத்தை யடைந்து ஏகாந்தமாயும் சுத்தமாயுமுள்ள ஓர்ஸ்தானத்திலிருந்து ஸ்திரப்பிரஜ்ஞையாய் அம்மந்திரத்தைப் பரமபக்தியுடன் ஜபித்துக் கொண்டும், மூன்று சரித்திரங்களை விடாமல் பாராயணஞ்செய்து வந்தும் ஓர்மாதங்கழிய தங்களுக்குள்ளே ஓர்திருப்துயுடைவர்களாய்த் தேவீயினுடைய பாதாம்புஜத்தில் ஸ்திரபுத்தியுடைவர்களாய் வருநாளில் ஓர்நாள் முனிவரிடம் வந்து அவரது அடியில் வீழ்ந்து அஞ்சலியஸ்தராய்நின்று தவஞ்செய்வதால் தங்களுக்குண்டாயிருக்கும் உள்ளக் கிளர்ச்சியைக் கூறி விடைபெற்றுத் தவத்தில் மிக்கவூக்கமுடையவர்களா இரவும்பகலும் இடைவிடாமல் ஜபமுந் தியானமுஞ் செய்துவந்து ஒரு வருஷம் பலமுதலிய ஆகாரங்களைவிட்டு இலைகளைப்புசித்து மந்திரத்தை ஜபித்தும் அதன் பின்னர் இரண்டு வருஷம் உலர்ந்தசருகுகளைப் புசித்து இந்திரியங்களையடக்கிய மிகவுக்கிரமாய்த் தவஞ்செய்து வந்தனர்.

ஓர்நாள் அவ்விருவருக்கும் கனவின்கண் பகவதியானவள் தரிசனந்தந்தனள். அத்தரிசனத்தைக் கண்ட அவ்விருவருக்கும் கனவின்கண் பகவதியானவள் தரிசனந்தந்தனள். அத்தரிசனத்தைக் கண்ட அவ்விருவரும் சந்தோஷமடைந்து கண் விழித்த பின்னர் இத்தரிசனத்தை கனவின்கண்ணும் காணவேண்டுமென்னும் உறுதியுடையவராய் ஜலமாத்திரம் அருந்தித் தவஞ் செய்து வருவோம்; தேவியார் பிரத்தியக்ஷமாகாவிடில் பிராணத் தியாகம் செய்து கொள்ளுவோமென்று நிச்சயித்துக்கொண்டு எண்ணியபடி அரிய தவஞ்செய்து வந்தனர். தேவி பிரத்தியக்ஷமாகாமையைக் கண்டு வீரவைராக்கியமுடையராய் ஒரு முழம் அகலமும்நிகளமுள்ளதாய் ஓர் முக்கோண குண்டத்தை யரசனமைத்து அதில் அக்னியைவளர்த்தி அந்த ஹோமாக்னியில் தனது தேகவுறுப்புக்களைக் கண்டங்கண்டமாய்ச் சேதித்து அளைகளை ஆகுதியாகக் கொடுத்து உதிரத்தையும் அதில் நெய்யாகச் சொரிந்து ஓமஞ்செய்தனன். அது போலவே வைசியனுஞ் செய்துவர தேவியானவள் பிரத்தியமாய்வந்து, ஓ அன்பனே! நீ அருமையாகச்செய்த தவத்துக்கு நான் மிகவுஞ் சந்துஷ்டியடைந்தேன். உனக்கு வேண்டியவைகளைக் கேட்பாயென்றருளி அப்படிவைசியனையும் பார்த்தருளினள். அரசன், ஓ தேவி! உனது தரிசனத்தால் பரமானந்தமடைந்தேன். எனது ராஜ்யம் சத்துருக்களால் அபகரிக்கப்பட்டுப் போயிற்று. அது எனக்குக் கிடைக்கும் வண்ணம்அனுக்கிரகஞ் செய்யவேண்டு மென்றான். தேவியும், ஓ அரசனே! நீ உனது ராஜ்யத்துக்குப் போவாய். அங்கிருக்கும் உனது சத்துருக்களும் மற்றமந்திரிகளும் பகைமை நீங்கிச் சரணடைந்து எங்களைப் பாதுகாத்தல் வேண்டுமென்று பிரார்த்திப்பர். நீ உனது ராஜ்யத்தை அறுபதினாயிரம் வருடம் பரிபாலித்துத் தேகாந்தத்தில் சூரியனையடைந்து பின்னவனிடமிருந்து பூலோகத்தில்மநுவாய்த் தோன்றுவாயென்றனுக்கிரகஞ் செய்தனள். வைசியன் தேவியை நோக்கி, ஓ தாயே! எனக்கு ஆகவேண்டிய தொன்றுமில்லை; இவையெல்லாம் துக்கத்தை விளைவிக்கும் பந்தத்தைச் செய்வதொழிந்து மற்றெது செய்யவல்லும்! இவையெல்லாம் அழியத்தக்கவைகள். ஆகலான் பந்தத்தைநாசஞ்செய்து மோக்ஷத்தைக் கொடுப்பதாகிய ஞானத்தை எனக்குக் கொடுத்தருள்வாய். அபாரமாகிய இச்சம்சாரத்தில் மூடராகிய பரமரர்களே கிடந்துழல்கின்றவர் இச்சம்சாரத்தினின்று கரையேறமுயன்று அப்படியே யடைகின்றனர். நானிச்சம்சாரத்தை விரும்புவதில்லையென்று கூறதேவி ஓ வைசியனே! நீ நினைத்த வண்ணம் உனக்கு ஞானம் உதிப்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லையென் றனுக்கிரகஞ் செய்தனள். இவ்வண்ணம் அரசனும் வைசியனும் வேண்டியாங் கருள் புரிந்து

தேவி திருவுருக்கரந்தனனள். பின்னர் அவ்விருவரும் தங்கள்பீஷ்டத்தை நிறைவேற்றிவைத்த முநிவரைவணங்கி நிற்ப, அரசனுடைய மந்திரிப்பிரதானிகள் நகரவாசிகள் முதலியயாவரும் அங்குவந்து முனிவரையும் அரசனையும் பணிந்து, ஓ அரசனே! உமது சத்துருக்களெல்லாம் மரணமடந்தனர். நீர் உமது ராஜ்யத்தைக் கைப்பற்றி எங்களை ரக்ஷித்துவர வேண்டுமென்று பிரார்த்திக்க, அரசனும் தேவியினது கருணையை வியந்து முனிவரிடத்து விடைபெற்றுக் கொண்டு தனது நகரம் போய்ச் சேர்ந்து வாழ்ந்திருந்தனள். ஓ அரசனே! வைசியனுக்த் தேவியினது அனுக்கிரகத்தால் ஞானோதயமாய் சர்வசங்க நிவர்த்திவந்து அந்த முனிவரது ஆஸ்ரமத்திலேயே சத்சங்கத்துடன் கூடியிருந்து சிலநாள் கழித்து தீர்த்தயாத்திரை செய்து மீண்டும் வந்து தேவியினது குணானுபவங்களைப் புகழ்ந்துபாடிப் பிரஹ்மானந்த மெய்தி சீவன் முத்தனாய் வாழ்ந்திருந்தனன்.

ஓ ஜனமேஜயனே! உனக்கிதுவரையில் அரனடையப்பெற்ற பொருட்செல்வ மிகுதியையும், வைசியனடையப்பெற்ற அருடசெலவமிகுதியையும் கூறி வந்ததூஉமன்றி, அசுரர்களது வதமும், தேவியினது ஆவிர்ப்பாவ விசேஷங்களும், தன்னைச் சரண்புகுவோர்க்கு அத்தேவி அருள்செய்யும் அனுக்ரகத் திறத்தையங் கூறி வந்தனம். நீ கேட்டு வந்ததாகிய இந்த ஐந்தாவது ஸ்கந்தத்தை எந்தமாநுடன் கேட்கின்றானோ அவன் இச்சம்சார சுகத்தை எவ்வண்ணம் அனுபவிக்கவேண்டுமோ அவ்வண்ணம் அத்புதமாயனுபவிக்கப் பெற்றுக் கீர்த்தியையுஞ் சுகத்தையு முடையனாய் நித்தியசுகத்துக் கேதுவாகிய திவ்யஞானத்தையும் மோஷத்தையு முடையவனாய் நித்யதிருப்தனாய் வாழ்வன். ஓ சவுனகாதியரே! வியாசபகவான் ஜனமேஜயனுக்குக் கூறியபடி சர்வகாமப்பிரதமாயும் சர்வமுக்திப்பிரதமாயும் சர்வதுக்கஹரப்பிரதமாயும் சர்வானந்தப் பிரதமாயுமுள்ள இந்த ஐந்தாவது ஸ்கந்தத்தைக் கேட்டு வந்தீர்களாகையால்களே சகல ஐஸ்வர்ய சம்பன்னர்களாய் வாழ்வீர்களாகவென்று சூதபகவான் கூறியருளினார்.

முப்பத்தைந்தாம் அத்தியாயம் தேவீ பூஜாபலம் முற்றிற்று.

சுலோகம் (ருச)

அஉ அத்தியாயம் கூருக்குச் சுலோகம் (உ()அது)

ஐந்தாம் ஸ்கந்தம் முற்றிற்று.

ஸ்கந்தம் ஐந்துக்கு அத்தியாயம் (கஉஉ)

ஸ்கந்தம் ஐந்துக்குச்

சுலோகம் (சுஉசு)

ஸ்ரீ திரிபுரசுந்தர்யை நம:

தேவீபாகவதம்

ஆறாவது ஸ்கந்தம்.

உ

ஏகாந்தபூஜிதாயநம:

தேவீபாகவதம்.

ஆறாம் ஸ்கந்தம்.

முதலத்தியாயம்

* இந்திரகிருத் திரிசிரவதோபாய சிந்தாகதனம்.

பரயா காஞ்சீ புரயா பர்வத பர்யாய பீந குச பரயா
பரதந்திரா வய மநயா பங்கஜ ஸ ப்ரம்ஹ சாரிலோசனயா.

ஓ சர்வசாஸ்திர ஜ்ஞானசம்பன்னராகிய சூதபகவானே! தேவரீர் கூறிவந்த ஐந்தாவது ஸ்கந்தத்தால் சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் உள்ள ✲உத்கரஷ ❈அபகரஷங்களையும், மகிஷாசுரனுடைய உற்பத்தியும், மகிஷாசுர விருந்தாந்தமும், இந்திரனால் செய்யப்பட்ட விமர்சையும், தைத்யருமுடைய சேனைகளால் வந்த அபஜயமும், தேவதானவயுத்தமும், தேவர்களுடைய யுத்தபலாயனமும், தேவயினுடைய சொரூப ஆவிர்ப்பாவ விசேஷமும், தேவி ஆயுதபாணியாய்வந்ததும், தேவிக்கும் மகிஷாசுரனுடைய தூதனுக்கும் நடந்த சம்வாதமும், தேவியினிடத்தில் மகிஷன் தாம்பரதூதனை ஏவியதும், தேவிக்கும் தாம்பிரனுக்கும் நடந்த சம்வாதமும், தேவிக்கும் பாஷ்கல துர்கமுகர்களுக்கும் நடந்த யுத்தமும், தேவிக்கும் சிஷஒதாம்பரனுக்கும் நடந்தயுத்தமும், தேவியினிடத்தில் அசிலோமபிடலாதி பிரஸ்தானமும், தேவிக்கும் மகிஷனக்கும் நடந்த சம்வாதமும், மந்தோதரி விருத்தாந்தமும், தேவிக்கும் மகிஷாசுரனுக்கும் நடந்தயுத்தமும், இந்திரனால் செய்யப்பட்ட தேவிஸ்துதியும், தேவி அந்தர்த்தானமானதும், சும்பநிசும்பர்களுடைய நகரத்திற்குத் தேவிபோனதும், தேவீமஹாத்மியமும், காளிகா தேவிக்கும் தாம்பரலோசனனுக்கும் நடந்த யுத்தமும், தேவிக்கும் சண்டமுண்டர்களுக்கும் நடந்தயுத்தமும், ரக்தபீஜயுத்தமும், தேவிக்கும் நிசும்பனுக்கும் நடந்தயுத்தமும், சும்பனுடை யவதையும், சுரதோபாக்கியானமும், புவனசுந்தரீமஹாத்மியமும், தேவீபூஜாவிதானமும்,

* இந்திரன் திரிசிரனைக் கொல்வதற்கு உபாயம் சிந்தித்தல்.
✲ உத்கரஷ - மேன்மை ❈ அபகரஷ - சிறுமை

தேவீ பூஜாபலமும் ஆகிய இவையெல்லாம் நன்றா யறியலாயினோம். அதனால் தேவியினுடைய பராக்கிரம விசேஷணங்களையும், அவளுடைய பராக்கிரம விசேஷணங்களுக்கு அசுரர்கள் முன்னிலையாய் நின்றதையயும்; இவர்களது முன்னிலையால் வெளியிடப்பட்ட தேவியினுடைய பராக்கிரமத்தை உலகினரறிந்து வழிபடுவதற்கான ஒருபகாரம் விளங்குவதையும் கண்டுகளித்தோம். இனி இதுபோலும் அவ்வம்பிகையினுடைய வீரப்பிரதங்களைக் கேட்டானந்திக்கத் தேவரீரது திருவருளை எதிர்பார்க்கின்றோம் என்று சவுநகாதி மகருஷிகள் · சூதபகவானைப் பிரார்த்திக்க அவர் ஆறாவது ஸ்கந்தத்திலடங்கியுள்ள அற்புதசரித்திரங்களைச் சொல்லத் தொடங்கினார்.

சவுனகாதியமுனிவர் மீண்டும் சூதமுனிவரை வணங்கி ஓ மஹானுபாவராகிய சூதபகவானே! வியாசமுனிவரால் அருளிச் செய்யப்பட்ட தேவிபாகவத கதாமிர்தத்தை உமது முகமாய் நாங்கள் செவியார உண்ணப்பெற்றதனால் அது தெவிட்டாவமுதாய் மீண்டுமீண்டும் உண்ணவே அவாவை விளைவிக்கின்றது. ஏனெனின்! அது மஹாபுராணங்களிலும் வேதங்களிலும் கூறப்பட்டதாயும் கேட்போர்க்குச் சுபத்தைச் செய்வதாயும் செவியாற் கேட்குந்தோறும் மனத்தால் நினைக்குந் தோறும் இன்பத்தை விளைவிப்பதாயும் சர்வசித்திகளு முள்ளதாயும் சகலபாவங்களையும் நாசஞ்செய்வதாயும் கதாரூபமாயும் இருக்கும் விசேடத்தினாலென்க.

விஸ்வகர்மாவினுடைய புத்திரனும் வீரியவானுமான விருத்திராசுர னென்னும் பிரசித்தன் இந்திரனால் யுத்தமுகத்தில் எப்படிக் கொல்லப்பட்டான்? இவ்வசுரனது பிதாவோ அசுரபக்ஷத்தி லுள்ளவனன்று, சுரர்களுடைய பக்ஷத்திலுள்ளவன். இவனும் அசுரகுலத்திற் பிறந்தவனன்று பிரஹ்மகுலத்திற் பிறந்தவன். இவனை இந்திரன் கொல்லுங்காரணமென்னை? தேவர்கள் சத்வகுணமுடையவ ரென்றும் மனிதர்கள் ராஜஸகுணமுடையவ ரென்றும் திரியக்ககுகள் தாமஸகுணமுள்ளவை யென்றும் புராணமறிந்த பெரியோர்களால் சொல்லப்படுகின்றன. எவரெவர் எவ்வெக்குண சம்பந்தமுடையவரே அவரவர் அவ்வக்குண சம்பந்தமுடையவரா யிருத்தல் வேண்டும். தேவபக்ஷமும் பிரமகுல சம்பந்தமுமுள்ள விருத்திராசுரனைத் தேவனாகிய இந்திரன் வஞ்சனையால் கொன்றானென்றது நிச்சயமல்லவா! விஷ்ணுமூர்த்தியும் அவ்விஷயத்தைப் பிரேரேபித்தவராயும் வச்சிராயுதத்தின் மத்தியில் கபடத்தினால் நுழைந்தவராயுமாயினார். இது சத்வகுணந் தரித்திருக்கின்றவருக்

* பிரேரேபித்தவராயும் - காரியபடுத்துவராயும்

கழகாமா அன்றியும் விஷ்ணுமூர்த்தியும் இந்திரனும் அவனைச் சத்தியந்தவறி யுத்ததர்மத்துக்கு மாறாகச் சந்தியாகாலத்தில் ஜலநுரையால் அவனை யிறக்கும்படிச் செய்தனர். இவர்கள் இப்படிப்பட்டகாரியத்தை இவ்வண்ணஞ் செய்தல் முறையாமா? ஒருவனை இருவர் எப்படி கொலைசெய்யக்கூடும்? இவர்களும் அஜ்ஞானத்தினால் வஞ்சிக்கப்பட்டு பாவபுத்திக்குள்ளாய் அநியாயத்தை நடத்துகின்றவர்களாயினர். சதாசாரத்தால் தேவர்கள் யோக்யதை யடைந்தவர்களானென்றால் அந்தயோக்யதை இவ்வதர்மச் செயலால் இருப்பதாக நினைக்கவிருக்கின்றதா? நம்பியிருந்த விருத்திராசுரனைக் கபடத்தினால் இந்திரன் கொன்று பிர்ஹ்மஹத்தியின் பாபபலத்தை யடைந்தானா? அல்லவா? இதுநிற்க. விருத்திராசுவதம் தேவியினால் செய்திருக்கிறதென்று சொல்லியிருக்கின்றீர். அதிலும் எங்கள் மனம் சந்தேகப் படுகின்றதென்று விண்ணபஞ்செய்யச் சூதர் அம்மஹருஷிகளைப் பார்த்து ஓமஹருஷிகாள்! விருத்திராசுரவதத்தைப் பற்றிய சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

நீங்களிப்பொழுது வினவியவாறே மகாராஜாவாகிய பரீக்ஷித்து வியாசபகவானைப் பார்த்து ஓ பகவானே! மஹான்களுடைய சரித்திரத்தைக் கேட்பதில் எவனுக் காசையடங்கும். ஆதலால் விருத்திராசுரவத வைபவத்தைச் சொல்லியருளுமென்று வினவியிருக்கின்றனன். வியாசமுனிவர் ஓ அரசனே! நீ புண்ணியசாலியாதலால் உனதுபுத்தி புராணத்தைக்கேட்பதி லாசையுடைத்தாயிருக்கிறது. புராணசிரவணத்தால் தேவர்களும் அமிர்தபானஞ் செய்வதனாலுண்டாகும் திருப்தியையடைகிறார்கள். புண்ணியமும் கீர்த்தியுமுள்ள திவ்யசரித்திரங்களை உன்புத்தி கேட்கவேண்டுமென்பதில் ஆக்கமடைந்திருக்கிறது. கேட்கிறவன் எப்போது ஓரேமனதாய்க் கேட்கிறானோ அப்போது சொல்லுகிறவனும் சந்துஷ்டசித்தனாய்ச் சொல்லுவன். நீவினவிய விருத்திராசுரவதம் வேதபுராணங்களில் மிகவும் பிரசித்தியாயுள்ளது. ஓ ராஜேந்திரனே! இந்திரனும் விஷ்ணுவும் கபடத்தினால் விருத்திராசுரனைக் கொன்றார்களென்பதிலென்னவாச்சரியம். போகங்களை வெறுத்துப் பாபத்துக்கஞ்சிய மஹருஷிகளும் மாயாபலத்தால் மோகிக்கப்பட்டு எப்பொழுதும் நிந்தையானகாரியத்தைச் செய்திருக்கின்றனர். விஷ்ணுமூர்த்தி சத்வமூர்த்தியா யிருந்தாலும் போகத்தில் விருப்புடையவராதலால் மிகவும் மோகத்தையடைந்து கபடத்தினால் அசுரர்களை எப்போதுங் கொலைசெய்து வருகின்றனர். மோகநிவர்த்தியாதற்கு யாவரையும் மோகிக்கச்செய்கிற பவானியாகிய

பகவதியை மனத்தினாலாவது ஸ்மரித்தா லல்லவோ அஃதொழியும். அத்தேவியை ஸ்மரித்துஜபிப்பதற்குச் சமர்த்தனா யெவனிருக்கிறான். நரசகாயராயும் மகாமகிமையுள்ள வராயு மிருக்கிற நாராயணரே அநேகயுகங்களில் மச்சக்கூர்மாதி யோனிகளிலும், சம்சாரத்திலும் நியமிக்கப்பட்டவராய் நிந்தையானகாரியங்களையும், இது என் தேகம் இது என்தனம் இது என்வீடு இவர்கள் என்பந்துக்கள் இவர்கள் எனது புத்திரமித்திரகளத்திரங்கள் என்று மோகத்தையடைந்தோர் ஒவ்வோர் சமயத்தில் புண்ணிய பாவங்களைச் செய்வார் போற் புண்ணிய பாவங்களையுஞ் செய்கின்றனர்.

ஓ ராஜஸ், ரேஷ்டனே! இவ்வுலகின்கண் முக்குணங்களான் மோகிக்கப்பட்ட மானிடருள் புத்தியைச் சுவாதீனஞ்செய்து கொள்ளும் வன்மையுடையவனாயும், பரப்பிரமத்தை யறிந்தவனாயும், மோகத்தைப் போக்கடிக்கப்பதற்குச் சமர்த்தனாயும் உள்ளவன் எவனிருக்கின்றான் ஒருவனுங்கிடையாது. ஏனெனின்! இந்திரனும் விஷ்ணுவும் தங்கள் பிரயோசனத்தைச் சாதித்துக்கொள்ளும் எண்ணமுடையவர்களாய் விருத்திராசுரனைக் கபடத்தினாற் கொன்றார்களே! இவர்களைப் புத்தியைச் சுவாதீனஞ் செய்துகொண்டவர்களென்றாவது, பிரமத்தை யறிந்தவர்களென்றாவது மோகத்தை யொழித்தவர்க ளென்றாவது சொல்லுவதற் கிடனியிருக்கின்றதா ?

ஓ அரசனே! இனி இந்திரனுக்கும் விருத்திராசுரனுக்கும் பூர்வத்தில் வைரமுண்டான காரணத்தைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. துவஷ்டப்பிரஜாபதியென்று ஒருவன் மஹா தபஸ்வியாயும் தேவசிரேஷ்டனாயும் தேவகாரியஞ் செய்பவனாயும் பிராஹ்மணப் பிரியனாயு மிருந்தனன். அவன் இந்திரனிடம் வைத்த துவேஷத்தினால் மூன்றுதலையுடைய ஓர்புத்திரனை யுண்டாக்கி விஸ்வரூபன் என்று பெயரிட்டனன். அவனோ பெயரானும் உருவத்தானும் மோகத்தை யுண்டுபண்ணத்தக்கவனாயினான். என்னையெனின் பிரகாசிக்கின்ற அவனது மூன்றுமுகங்களில் ஒன்றால் வேதாத்யயனமும், ஒன்றால் சுராபானமும் ஒன்றால் எல்லாவுலகங்களைப் பார்ப்பதுமாகிய செயலைச் செய்துவந்தனன். இங்ஙனமான அதிசயச் செயலுடைய அவன் போகங்களைவெறுத்து தபஸ்வியாயும் மென்மையாயும் இந்திரியநிக்ரகனாயும் தர்மத்தையே ஆஸ்ரயிக்கின்றவனாயும் சிலகாலம் பஞ்சாக்னிமத்தியிலும் சிலகாலம் மரத்திநுனியிலும் ஹேமந்தருது சிசிரருதுவெனும் இரண்டில் சலத்தினும் நிராகாரனாய் சுவாதீனபுத்தியுள்ளவனாய்ச் சுகப்பிரதமான வஸ்துக்களை நிக்ரஹித்தவனாய் மந்தமதிகளாலுஞ் செய்யக்கூடாத

வன்மையான தவச்செயலைச் செய்து வந்தனன். அதனைப்பார்த்த இந்திரன் மகாதுக்கத்தையடைந்து அவனுடைய தபோவீரியத்தையும் சத்தியத்தையும் பார்த்து சிந்தாக்கிராந்தனாய் விருத்தியடைந்திருக்கிற இந்தத் திரிசிரனானவன் 'நம்மைக்' கொன்றுவிடுவான். விருத்தியடைந்திருக்கிற சத்ருவை அலஷியஞ்செய்தல் பண்டிதர்கள் கொள்கையன்று. ஆகையால் இவனது தவத்தை நாம் நாசஞ்செய்தல் வேண்டும். தவத்தை நாசமாக்குவது காமமொன்றே. ஆகலான் அக்காமத்தில் யாவரென்றெண்ணி ஊர்வசி, திலோத்தமை, அரம்பை, மேனகை என்பவரை வரவழைத்து ஓ தேவதாசிகளே! உருவத்தினால் கர்வமடைந்திருக்கிற நீங்கள் செய்யத்தக்கும் காரியங்கள் வந்திருக்கும் போது அதனைச் செய்து எனக்குப் பிரியத்தையுண்டுபண்ணுங்கள். என்னால் செயிக்கக்கூடாத எனதுசத்ரு எவ்விடத்திற றவஞ் செய்கின்றானோ அவ்விடத்துக்கு நீங்கள்போய் உங்களுடைய ஸ்ருங்காரவேஷங்களாலும் சேஷ்டைகளாலும் காமமுண்டாக்கி மோகத்துக்குள்ளாக்குங்கள். காலதாமதஞ் செய்யவேண்டாம். உங்களுக்குச் சுகமுண்டாகுக. எனது சங்கடத்தைத் தணியச்செய்யுங்கள். நீங்கள் மஹாமகிமையுள்ளவர்கள்! எனது சத்துருவினுடைய தபோபலத்தையறிந்து மனவருத்தமுள்ளவனா யிருக்கின்றேன். அவன் என்னுடைய சிங்காசனத்தை அபகரிக்க விருக்கின்றான். எனக்குண்டாயிருக்கும் பயத்தைச் சீக்கிரத்தில் போக்கடியுங்கள். சமயம்வந்திருக்கும்பொழுது நீங்களனைவரும் எனக்குச் சகாயம் செய்தல் வேண்டுமென்று இந்திரன் கூறிய இரக்கமொழிகளை அப்சரஸ்திரீகள்கேட்டு வணங்கி, நீர் பயப்படவேண்டாம். அவன் மோகத்துக்குள்ளாகும் பிரயத்தினங்களைச் செய்கின்றோம. எதுசெய்தால் உமக்குப் பயமில்லாமற்போகுமோ அதைச்செய்கிறோம். அவனை மோகத்துக்குள்ளாகச் செய்வது ஓர் பெருங்காரியமா! எவ்வகைத்தான் தவத்தையுடையவர்களும் நாங்கள் செய்யுங்கீரிடை, நிர்த்தனம், கானமுதலியவற்றைக் கண்டு மோகத்துக்குள்ளாகாமாற் போவாரே! எங்கள் கடைக்கண் பார்வையாலும் எங்களுடைய அவயவங்களைக் கொண்டு காட்டும் லீலாபேதங்களாலும் உன்னுடைய அவயவங்களைக் கொண்டு காட்டும் லீலாபேதங்களாலும் உன்னுடைய சத்துருவை மோகிப்பித்து நாங்கள் சுவாதீனஞ் செய்துகொள்ளுகிறோம். இவ்விஷயத்தில் நீர் சிறிதும் ஐயங்கொள்ள வேண்டாமென்று இந்திரனிடத்தில் விடைபெற்றுத் திரிசிரனிடத்திற்சென்று காமசாஸ்திரத்திற்கூறியுள்ள சகலலீலாவினோதங்களையும் ஒன்று பலவாகச் செய்து மயக்கத் தொடங்கினர். அத்திரிசிரனோ தவத்தில் வைத்திருக்கும் உறுதியினால்

குருடனைப்போலும் செவிடனைப்போலும் அவர்களுடைய லீலாவினோதங்களைப் பாாரதவனாயும் கீதங்களைக் கேளாதவனாயும் இருந்தனன். அவனது, உறுதியைக் கண்ட அப்சரஸ்திரீகள் உடனே இந்திரனிடம் போவதற்குத் துணியாமல் சிலநாள் அவ்விடத்திற்றானே வசித்துத் தங்களால் கூடிய பலசாகசக்கியங்களைச் செய்துவந்தும் எண்ணம் நிறைவேறாமற்போயிற்று. இனி இங்கிருப்பதனாற் பயனில்லையென்று துணிந்து இந்திரனிடம் வாட்டத்துடன் சென்று மிகுந்த தீனர்களாய் பயத்தை மேற்கொண்டு ஓ இந்திரனே! உன்னுடைய ஆணையின்படி சத்துருவினிடம் சென்று நாங்கள் செய்யவேண்டிய காமச்செயலெல்லாம் செய்தோம் அவன் அச்செயல்களால் சிறிதுங் காமத்துக்குள்ளாயினா னில்லை இனி நாங்கள் செய்யத்தகுங்காரியம் இதுவென்று தெரியாம லுன்னிடம் சொல்லந்தோம், மேல் வேறெதனைச் செய்தால் அவனது தவம் நாசமடையுமோ அதனை விரைவில் செய்யும், தவத்தினால் பிரகாசித்துக்கொண்டிருக்கிற அவனுடைய சாபத்துக்குள்ளாகாமல் நாங்கள் வந்துயார் செய்த புண்ணியமோ, அவன் கலங்காநிலைமையனென்று சொல்ல, இந்திரன் அவர்களது வாய்மொழிகளைக் கேட்டு அவர்களுக்கு விடைகொடுத்துப் போக்கி அச்சபையிலிருப்பதற்கு நாணமடைந்து பாவத்துக்கஞ்சாது பயத்தையும்விட்டு அவனைக் கொல்வதற்கு நாணமடைந்து பாவத்துக்கஞ்சாது பயத்தையும்விட்டு அவனைக் கொல்வதற்கு ஆலோசிக்கலாயினான்.

முதலாமத்தியாயம்

இந்திரகிருத த்ரிசர வதோபாய சிந்தாகதனம் முற்றிற்று.

சுலோகம் (சுO)

உ

ஏதமான்ப்ரபாயை நம:

இரண்டாம் அத்தியாயம்.

விருத்திராசுரோற்பத்தி

ஓ அரசனே! இனி இந்திரனாலோசித்துச் செய்ததைச்சொல்லுகிறேன் கேட்பாயாக. இந்திரன் இந்த விந்திரசெல்வம் இந்தத் திரிசிரனுக்கும் வரலாமாவென்கிற லோபகுணத்தை மேற்கொண்டு ஐராவதத்தின் மேலேறி திரிசிரனிருக்குமிடஞ்சென்று அத்திரிசிரன் ஆசனங்களிற் சிறந்த திடமான வீராசனமுடையவனா யுட்கார்ந்திருப்பதையும்

சப்தவிஷயத்திற் செலுத்தாத சுரேத்திரேந்திரியத்தைப் படைத்திருப்பதையும் தியானயோகத்திலசைவற்றிருப்பதையும், அக்னி, சூரியன் என்னும் இவர்களுடைய பிரகாசத்துக்குச் சமானமான தவப்பிரகாசம் பிரகாசிப்பதையுங் கண்டு அந்தோ! நமக்கு ஆபத்து வந்துவிட்டதே என்றெண்ணிப் பாப்புத்தியில்லாதவனான இவனை நாம் எவ்வாறு கொல்வது! இவனது தபோமகிமையைக்கண்டு நாம் கொல்லாது விடுவோமாயின் இவன் நமதுஸ்தானத்தை யபேக்ஷிக்கிற சத்துருவல்லவா! இவன் எப்படி அலக்ஷியஞ் செய்யத்தக்கவனாவா னென்று பலவாறா யாலோசித்துக் கொல்லத் துணிந்து வச்சிராயுதத்தை யவன்மேல் வீசினான். வீசியமாத்திரத்தில் பூமியில்வீழ்ந்திறந்தனன். இந்திரனுங்கண்டு சந்தோஷத்தினன். ஓ அரசனே! இதுவென்ன கஷ்டம். தபேசியைக்கொன்று சந்தோஷிப்பவனும் உண்டோ! இதுதான் கஷ்டம்! அவ்விடத்திற் சூழ்ந்திருந்த தவசிகளெல்லாம் சங்கடமுற்று அந்தோ! யாதொரு குற்றமுமில்லாத இத்தவசி கொல்லப்பட்டாரே! இந்திரன் தேவனாயிருந்தும் துராத்மாக்களைப்போல் பாவபுத்தியுள்ளவனாய்க் கொலைசெய்து விட்டானே! இந்தக் கொலையினால் வரும் கோஷத்தைச் சீக்கிரத்திலடைவானல்லவா! வென்று பரிபவமுற்றனர். இந்திரனோ நமது சத்துருவைக் கொன்றுவிட்டாமென்று கவலையற்றவனாய்த் தன்னிடம்போய்ச் சேர்ந்தனன். கீழே வீழ்ந்த திரிசிரன் தபோநிதியாயிருந்தவனாகையால் இறந்தவனாயினும் உயிருள்ளவன்போல் பிரகாசித்தனன். தன்னிடம் போய்ச் சேர்ந்த இந்திரன் சிறிது சந்தேகங்கொண்டவனாய் அத்திரிசிரனை மீண்டும்பார்த்தனன். அந்தோ! நாம் இவன் இறந்துவிட்டானென்று எண்ணினோமே இவனது முகம் பிரகாசிக்கின்றதே இறந்திருப்பானாயின் முகம் பிரகாசிக்குமோ ஆகலான் இவனது மூன்றுசிரசையும் அறுத்தெறிதல் வேண்டுமென்று துணிந்து எதிரிலிருந்து விஸ்வகர்மாவைப் பார்த்து, ஓ விஸ்வகர்மாவே! இவன் பிழைத்திருக்கின்றவனாகக் காண்கின்றான். இவன் பிழைத்திருத்தல் கூடாது. ஆகையால் இவனதுசிரங்களைப் பரசாயுதத்தால் சேதித்தெறிவாயென்று சொல்ல, விஸ்வகர்மா இவனது கண்டம் விசாலமானதாயிருப்பதால் பரசாயுதத்தால் சேதிக்க முடியாது. முடியாத காரியத்தை நான் செய்யத் துணிவேனாயின் அது பழிப்பாகும். நீ இவனை உயிருள்ளவனாய் நினைக்கின்றாய். இவன் உயிருள்ளவனென்று இறந்தவனே. இறந்தவனாகக் காணப்படினும் அவனுடைய தவப்பிரகாசத்தை நோக்க. நீ சொல்லியபடி சேதிப்பதற்குப் பயப்படுகின்றேன். இவன் சிரசைச் சேதிப்பதனால் உனக்கு வரும்பிரயோஜனமென்ன? இவன் விஷயத்திலுனக்

குண்டாகும் பயமென்னை என்றுவினவ, இந்திரன் விஸ்வகர்மாவே! இவன் எனக்குச் சத்துருவாயிருப்பதால் இவன் பிழைத்திருத்தல் கூடாதென்று சேதிக்கச் சொன்னேன். இவனது முகம் பிரகாசிப்பதையே நீயே பார்ப்பாயாக. அந்தப் பிரகாசத்தால் உயிருள்ளவன் போல் காணப்படுகிறான். ஆகையால் இவனைக் கொல்லச் சொன்னேனென்றான். விஸ்வகர்மா தவத்திற் சிறந்த இவனைக் கொன்றால் பிரஹ்மஹத்தி என்னைத் தொடராவண்ணம் பிராயச்சித்தாதிகள் செய்து கொள்ளப்போகிறேன். பிராயச்சித்தாதிகளால் பிரஹ்மஹத்தியாதிகள் நிவிர்த்தியாவதில்லை என்றிருந்தாலல்லவோ நான் சத்துருவைக் கொல்லுவதற்கஞ்ச வேண்டும். அன்றியும் சத்துருவாயிருக்கின்றவனை எவ்வித வுபாயத்தினாலவது எவ்வித வஞ்சனையினாலாவது கொல்லச்சொல்லி இருக்கின்றதேயன்றி பயந்துவிடும்படிச் சொல்லவில்லை. பயந்துவிட்டவனுக்கு நரகஞ்சொல்லப்பட்டிருக்கின்றதென்றான். விஸ்வகர்மா! சத்துருவானவன் எதிர்த்து யுத்தத்துக்கு வருவானாயின் அவனை எவ்விதத்தினாலாவது கொல்லத் துணிந்து நீதியாமேயன்றி அவன் தவத்திலிருக்கும்பொழுது கொல்லத் துணிவது நீதியாமா! ஆதலான் நீ இப்பொழுது கொல்லத் துணிவது தவத்தையே யன்றி சத்ருவையன்று. அந்தோ! நீ உலோபகுணத்தால் இப்பாவச் செயலைச் செய்யத் துணிந்தனை நான் ஏன் இந்தப் பாவச் செயலைச் செய்யவேண்டும். இதனால் எனக்கு வரும்பயனென்னை! சொல்லுமென்றான். இந்திரன் ஓ விஸ்வகர்மாவே! நான் யாகத்தில் பசுவின்றலையை உனக்குரிய பாகமாகக் கொடுக்கும்படி ஏற்பாடுசெய்கின்றேன். அதுபோல் தேவர்கள் கொடுப்பார்கள் இதிற்சந்தேகம் வேண்டாம் நான் சொல்லியபடி இவன்றலையை யறுத்து எனக்குப் பிரியம் உண்டாம்படி செய்வாயென்றனன். ஓ அரசனே! இந்திரன் உனக்கு யாகத்தில் பாகம் உண்டென்றுசொல்லிய அளவில் விஸ்வகர்மா தான் சொல்லிவந்த நீதிகளையெல்ல மறந்து வலிவான கோடாலியொன் றெடுத்து அவனது முத்தலையையும் அறுத்துப் பூமியில் வீழ்த்தினன். வீழ்ந்த அத்தலைகளினின்று அநேகம் பக்ஷிகள் வெளிப்பட்டன அவற்றுள் எந்த முகத்திலிருந்து உலகங்களைப் பார்த்தானோ அந்தமுகத்திலிருந்து தீக்ஷண்யமான தேஜசோடுங்கூடிய *தித்திரிபக்ஷிகளும் எந்த முகத்திலிருந்து சுராபனஞ்செய்தானோ அந்தமுகத்திலிருந்து கலவங்கபக்ஷிகளும் எந்தமுகத்திலிருந்து வேதம்படித்தானோ அந்தமுகத்திலிருந்து கபிஞ்சலபக்ஷிகளும் வெளியாயின. இப்பக்ஷி ஜாலங்களைக்கண்ட விஸ்வகர்மா மகிழ்ந்து

* தித்திரி - நெருப்புக்கோழி. கலவங்கம் - மாடப்புறா. கபிஞ்சலம் - மீன்குத்தி.

இந்திரன் சொல்லியபடி யஜ்ஞயாகம் பெற்றுத் திருப்தியடாந்தனன். இந்திரன் மஹாபலசாலியான சத்துருவை கொன்றுவிட்டோம். இனி நமக்கென்ன குறையென்று பின்னே வரப்போகிற பிரஹ்மஹத்தியை எண்ணாமல் இறுமாப்படைந்தனன்.

துவஷ்டப் பிரஜாபதி பரமதார்மிகனான தனதுபுத்திரன் இறந்ததைக் கேள்வியுற்று மஹாகோபங்கொண்டு யாதொரு தீங்கையும் எண்ணாத எனது புத்திரனான திரிசிரனை எவன்கொன்றானோ அவனைக்கொல்வதற்கு மீண்டும் ஓர் புத்திரனைச் சிருட்டிக்கிறேன். எனக்குச் சத்துருக்களாக ஏற்பட்டதேவர்கள் என்பலத்தையயும் எனது தபோபலத்தையும் நன்றாய்ப்பார்க்கட்டும். அந்தப் பாபாத்மாவான இந்திரன் வன்மையுடன் தன்னால் செய்யப்பட்ட கர்மத்தின் பலத்தை முழுவதும் அறிந்துகொள்ளட்டும் என்று பலவீரமொழிகளைக் கூறி அதி வக்ரத்துடன் அதர்வண மந்திரங்களினால் எட்டுநாள் ஓமம் ஒன்று செய்துவந்தனன். சொலித்துக்கொண்டிருக்கிற அந்த ஓமாக்கினியினின்றும் அக்னிசொரூபமாய் ஓர்புருஷன் தோன்றினான்.

அவனைத் துவஷ்டப்பிரஜாபதி பார்த்து, ஓ இந்திரசத்துருவே! என்னுடைய தபோபலத்தால் மஹாசரீரியாய் விர்த்தியையவாயென்று சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே ஆகாயமெங்கும் பரவி பாவம் எப்படி விருத்தியடையுமோ அப்படி விருத்தியடைந்து காலமிருத்யுவுக்குச் சமானமாய் நின்று புத்திரசோகத்தை மேற்கொண்டிருக்கிற பிதாவைப்பார்த்து ஓ பிரபுவே! எனக்கு நாமகரணஞ் செய்யும் நான் செய்யவேண்டிய வேலையும் நீர் சோகமடைந்திருக்குங் காரணத்தையுஞ் சொல்லும். நான் அந்தவேலையைச் செய்து உமது சோகத்ததைப் போக்கடிக்கிறேன். உம்முடைய வருத்தத்தை யொழிப்பதே எனக்கு விரதம். தந்தையானவன் பிள்ளையினால் சுகத்தையடைவானேயன்றித் துக்கத்தையடைவானா? ஆகையினால் துவஷ்டப்பிரஜாதிபதியாகிய எனது தந்தையே! சமுத்திரத்தில் ஓர் திவலையும் நீரின்றி இப்பொழுதே குடித்துவிடுகிறேன். பர்வதங்களையெல்லாம் பொடியாக்கி விடுகிறேன். தீக்ஷண்யமுள்ள சூரியனை எனது கோபாக்கினியால் அப்புறஞ் செல்லாவண்ணம் தடுத்துவிடுகிறேன். தேவர்களோடு இந்தரனையும் ஏனையதிக்குப் பாலகரையும் கொன்று விடுகிறேன். இந்தப்பூமியைத் தலைகீழாக்கி எல்லாவுயிர்களையுஞ் சமுத்திரத்திற் சேர்த்து விடுகிறேன். இப்பொழுது எதைச் செய்யவேண்டுமோ அதைச் சொல்லுமென்றனன்.

துவஷ்டா புத்திரனுடைய வார்த்தைகளைக் கேட்டு மஹாசந்தோஷமடைந்து ஓ புத்திரசிகாமணியே! இப்பொழுது

என்னைத் துக்கத்தினின்றும் ரக்ஷணைசெய்வதற்கு எதனால் சக்தியுள்ளவனாயிருக்கின்றவனையோ அந்தக் காரணத்தால் நீ விருத்திரன் என்கிற பெயருள்ளவனாய்ப்பிரகாசிக்கக்கடவாய். எனது புத்திரனான உனது சகோதரன் மூன்று சிரசுடன்கூடி திரிசிரனென்று ஒருவனிருந்தான். அவன் வேதவேதாந்தங்களெல்லாம் நன்றாயறிந்தவன். சகல வித்தைகளினுஞ் சமர்த்தன். அவன் மூவுலகினரும் அதிசயிக்கத்தக்க மஹாதவத்தைச் செய்து கொண்டிருந்தான். அவனை மஹாபாவியான இந்திரன் தனது வச்சிராயுதத்தாலடித்து மூன்று சிரங்களையும் அறுத்தெறிந்தான். அந்த பிரஹ்மஹத்தியைச் செய்த நாணமற்ற துர்ப்புத்தியுள்ள அந்தத் துஷ்டனைக் கொன்றுவிடுவாய். அவன் நம் விஷயத்தில் குற்றவாளியாயுள்ளவனென்று கூறிக் கத்தி சூலம் கதை சத்தி தோட்டம் முதலிய பல ஆயுதங்களையும், எவ்வளவு பாணங்களெடுத்தாலுங் குறைவுபடாத இரண்டு அம்புறாத்தூணியையும் சுந்தரமான கவசத்தையும், மேகத்துக்குச் சமானமானதாயும் மகாவன்மையுடையதாயுமுள்ள ஒரு ரதத்தையுங் கொடுத்து ஹே புத்திரா! இந்தக்ஷணமே இந்திரனைக் கொல்லக்கடவாயென்று அதிக கோபத்தோடும் விருத்திராசுரனைப் போகும்படி செய்தான்.

இரண்டாம் அத்தியாயம்

விருத்திராசுரோற்பத்தி முற்றிற்று.

சுலோகம் (ருநு)

அத்தியாயம். உ- க்குச் சுலோகம் (ககநு)

உ

ஏஜதநேஜஜ் ஜகதீஸ்வர்யை நம:

மூன்றாம் அத்தியாயம்

* விருத்ரக்ருத தேவாசுர பராஜயம்

ஓ மஹருஷிகாள்! விருத்திராசுரனுடைய உற்பத்தியைக் கேட்டீர்களல்லவா? இனி அவனால் தேவர்களடைந்த அபஜயத்தக்கூறுகின்றேன் கேட்பீர்களாக.

எமது வியாசபகவான், அரசனைப் பார்த்து ஓ புராண சிரவணானந்த ரஞ்சிதனே! துவஷ்டப்பிரஜாபதி விருத்திராசுரனுக்கு விடையளிக்கும் போது வேதபாரங்கதர்களான அந்தணரெல்லாம்

* விருத்திராசுரனால் தேவ சுராளடைந்த அபஜயம்

ஆசிர்வதித்தனர். தந்தையினது ஆணையினையும் அந்தணரது ஆசியையும் பெற்று விருத்திராசுரன் ரதாரூடனாய் வெளியே புறப்பட்டனன். இச்செய்தியை முன் தேவர்களால் தோல்வியடைந்திருக்கின்ற அசுரர்கள் கேள்வியுற்று அவனுக்குப் படைத்துணையாக வந்து சூழ்ந்தனர். இச்செய்தியை தேவதூதர்களுமறிந்து வேகமாயோடி இந்திரனைப்பார்த்து ஓ தேவராசனே! உமக்குப் பலவானான சத்துரு ரதாரூடனாய் வந்துகொண்டே யிருக்கின்றான். அவன் யாரெனில் உன்னைக் கொலை செய்யும் நிமித்தம் துவஷ்டப்பிரஜாபதி செய்த அபிசாரமந்திர யாகத்திற் பிறந்தவன். அவன் பெயர் விருத்திராசுரன். அவனுடன் உம்மால் முன் தோல்வியடைந்து வைரங்கொண்டிருந்த அசுரரெல்லாம் வருகின்றனர்.

*விருத்திராசுரனால் தேவ சுராளடைந்த அபஜயம்.

ஓ மஹாநுபாவனே! அவனைச் செயிக்க உம்மால் ஆகாதென்று நினைக்கின்றோம். ஏனெனில் அவனது சரீரத்தைப்பார்த்தாலோ மேருமந்தரமுதலிய மகாபர்வதங்களுக்குச் சமானமா யிருக்கிறது, அவனது த்வனியோ அதிகோரமாய் அமரரெல்லாம் அந்த க்ஷணமே அழிந்து போகத்தக்கதா யிருக்கிறது. அவனது வருகை பார்த்தாலோ அதிவேகமாயிருக்கிறது. ஆகையால் நீர் பெரியமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தூதர்கள் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது தேவர்களிற் சிலர் ஓடிவந்து ஐயா! நம்முடைய ஸ்தானங்ளில் அநேகமான துர்ச்சகுனங்க ளுண்டாகின்றன. பயங்கரமான சப்தங்க ளுண்டாகின்றன. காகங்களும் கழுகுகளும் இன்னும் சில பக்ஷிகளும் விகாரமான சப்தங்களோடு நம்முடைய வீடுகள் மேலமுகின்றன. சீசீ கூகூ என்கிற சிலசப்தங்கள் ஆகாசத்தில் ஓலிக்கின்றன. பக்ஷிகளுடைய கண்களிலிருந்தும் மிருகங்களுடைய கண்களிலிருந்தும் தாரைதாரையாய் நீர் சிந்துகின்றன. இரவில் அழுது கொண்டிருந்த ராக்ஷசஸ்திரீகளெல்லாம் இப்பொழுது பயங்கரமான ஒலிகளைச் செய்து பயமுறுத்துகின்றனர். மரங்களில் படர்ந்திருக்கின்ற கொடிகளெல்லாம் கீழேவிழுந்து புரள்கின்றன. இவைகளன்றி ஆகாயத்தில் அநேக வுற்பாதங்கள் காணப்படுகின்றன. இந்த வுற்பாதங்கள் இந்தச் சுவர்க்கமாத்திரமல்லாமல் பூவுலகினும் காணப்படுகின்ற கொடிகளெல்லாம் கீழே விழுந்து புரள்கின்றன. இவைகளன்றி ஆகாயத்தில் அநேக வுற்பாதங்கள் காணப்படுகின்றன. இந்த வுற்பாதங்கள் இந்தச் சுவர்க்கமாத்திரமல்லாமல் பூவுலகிலும் காணப்படுகின்றன. மதுராக்ஷஸ ஸ்திரீகளுடைய கனவின்கண்

ராக்ஷசஸ்திரீகளே சிலர்வந்து மிரட்டிப் பயமுறுத்தித் தலைமயிரை யறுக்கின்றனர், சிலர் கறுப்புச்சீலையை யுடுத்திக்கொண்டு விகாரமான முகத்தைக் காட்டி நீங்கள் வீட்டைவிட்டுப் போங்களென்று கூறிக்கொண்டு திரிகின்றனர். இவை போன்ற பல துர்ச்சொப்பனங்களுமின்றி பூகம்பமும் கொள்ளிக்கட்டை விழுதலும் நரிகள் ஊளையிடுதலும் வீடுகள் தோறும் ஓணான்களுடைய கூட்டங்களும் உண்டாயிருக்கின்றன. சரீராங்கங்களில் கண்துடிப்பும் கால்துடிப்பும் உண்டாயிருக்கின்றன் வென்றனர். தூதர்களாலும் தேவர்களாலும் விருத்திராசுரனுடைய வரவையும் துர்ச்சகுணங்களையுங் கேட்ட இந்திரன் *சிந்தாகுலமடைந்து பிரகஸ்பதிபகவானை வரவழைத்து ஓ சுவாமிகள்! இப்பொழுது நம்முடைய உலகில் பயங்கரமான துர்ச்சகுனங்களும், பெருங்காற்றுகளும் உண்டாயிருக்கின்றன. தேவரீர் எல்லாமறிந்தவர். துர்நிமித்தங்களை நாசஞ் செய்ய வல்லவர் சர்வஜ்ஞர். சகலசாஸ்திரார்த்தங்களினுண்மையை யறிந்தவர். எங்களுக்கெல்லாம் ஆசிரியராயுள்ளவர். சாந்தி தருமங்களெல்லா மறிந்தவர். ஆகையால் இப்பொழுது சத்துரு நாசஞ்செய்வதற்கான உபாயத்தையும் துர்ச்சகுனங்களுக்கான சாந்தியையும் இதுவன்றி வேறேதுசெய்தால் எனக்குத் துக்கமில்லாமலிருக்குமோ அதையும் தேவரீரேயோசித்து விரைவில் செய்தருளுமென்றனன்.

பிரகஸ்பதி பகவான் இந்திரனைப் பார்த்து ஓ சஹஸ்ராக்ஷனே! யாதொருகுற்றமுமில்லாத தவசியைக்கொன்று மஹாபாதகத்தைத் தேடிக்கொண்டு இப்பொழுது என்னை என்னசெய்யச் சொல்லுகின்றாய். நீ செய்தபாவம் நான்செய்யும் பரிகாரத்தி லடங்குமா! ஏனெனின் காலாந்தரத்தில் பலனைக்கொடுக்கிற புண்ணிய பாவங்களுமுண்டு, செய்தபொழுதே பலனைக்கொடுக்கிற அதிவுக்ரமான புண்ணியபாவங்களுமுண்டு. இவ்விரண்டு பகுதியில் நீ இப்பொழுது செய்தபாவம் இப்பொழுதே அதியுக்ரமான பலனைக் கொடுக்கத்தக்கது. சுகத்தை விரும்புகின்றவன் எந்தக்காரியத்தையும் விசாரித்தல்லவா செய்ய வேண்டும். ஒருவன் பிறர்வருந்தும்படியான காரியத்தை எப்பொழுதுஞ் செய்தல் கூடாது. செய்வதானாயின் அவன் எப்பொழுதுஞ் சுகமடையான். நீ அஞ்ஞானத்தினாலும் லோபனாகுணத்தினாலும் இந்த பிரஹ்மஹத்தியைச் செய்துவிட்டாய் அது அதிக விரைவாய் வந்துவிட்டது. விருந்திரனென்றும் பெயருடைய இவன் எல்லாத் தேவர்களாலுங் கொல்லக்கூடாதவனாய்ப் பிறந்திருக்கின்றான். அவன் உன்னைக் கொல்ல அநேகமான அசுரக்கூட்டங்களோடும் வருகின்றான். அவனிடத்துள்ள

* சிந்தாகுல - மனக்கவலை

ஆயுதங்களெல்லாம் துவஷ்டப்ரஜாபதியினால் கொடுக்கப்பட்டவை. அவையெல்லா முனது வச்சிராயுதத்துக்குச் சமானமானவை. அவனுக்கு மரணம் வரப்போகிறதில்லை. மரணபயமற்ற அவன் நிகரற்றவனாய் ரதாரூடனாய் வருகின்றான். அவனையசைக்க ஒருவராலும் முடியாது. அவன் யாவரையும் நாசஞ் செய்யப் போகின்றானென்று சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது ஒருவிதமான கோலாகல சப்தமுண்டாயிற்று. இதென்னசப்தமென்று அந்தச்சப்தத்தைக்கவனித்துக் கொண்டிருக்கும்பொழுது கந்தர்வர்களும் கின்னராகளும் யக்ஷர்களும் ஏனைய தேவர்களும் தவத்தையே தனமாகவுடைய முனிவர்களும் தங்களுடைய ஸ்தானங்களை விட்டு ஓடிவருவதைக் கண்டான். கண்டவுடன் இந்திரன் சிந்தாகுலமுடையவனாய்க் கதறித் தூதர்களைக் கூவி ஓதூதர்களே! இந்த க்ஷணத்திற்றானே அஷ்டவசுக்களையும் ஏகாதசருத்திரர்களையும் அஸ்வனிதேவதைகளையும் துவாதசாதித்தர்களையும் இயமன் வாயு குபேரன் வருணன் முதலாயினாரையும் வரவழையுங்கள். தேவசிரேஷ்டர்களை யெல்லாம் ஆயுதபாணிகளாய் விமானங்களிலேறி வரச் சொல்லுங்கள். சத்துருவந்து விட்டான். இதோ நான் புறப்படுகின்றேனென்று அவர்களையனுப்பி கஜாருடனாய்ப் பிரகஸ்பதியுடன் புறப்பட்டான். தேவர்களும் யுத்தஞ்செய்யும் எண்ணமுடையவர்களாய் விருத்திரனைப் பின்றொடர்ந்தனர். இவர்கள் வருகையைக்கண்ட விருத்திராசுரன் தேவர்களுக்கு வாசஸ்தானமாகிய மானசோத்தமென்கிற பர்வதத்துக்கு வந்து சேர்ந்தான். இந்திரனும் அவ்விடத்திற்றானே சென்று யுத்தஞ் செய்யத் தொடங்கினன். இருவரும் கனதகளாலும் கத்திகளாலும் பரிதங்களாலும் பாசங்களாலும் பாணங்களாலும் கோடாலி முதலியவற்றாலும் மானுட வருஷத்தில் நூறுவருடம் ஓய்வில்லாமல் யுத்தஞ்செய்தார்கள். இந்திரன் தோல்வியடைந்து ஓடத்தலைப்பட்டனன். அவனோடத்தலைபடவே ஏனைய தேவர்களும் திக்பாலகரும் சூரியன் முதலாயினாரும் ஒருவர்போன வழி யொருவர் போகாமல் ஓடிப்போயினர். விருத்திராசுரன் ஒருவரும் நில்லாது ஓடுதலைக் கண்டு நகைத்துக் கொக்கரித்து சந்தோஷித்துத் தந்தையினிடஞ் சென்று வணங்கி என்தந்தையே! இந்திரன் முதலிய யாவரும் என்னால் செயிக்கப்பட்டார்கள். அவர்களடைந்த கதியை யானென்று சொல்லுவேன். அதனை நீரே அறிந்து கொள்ளலாம். அவர்கள் பயந்தோடியபடியினா லுயிரோடுவிட்டேன். இதோ இந்திரனுடைய யானையைக்கொண்டுவந்தேன். அதனைப் பெற்றுக் கொள்ளும் உமக்கென்ன இன்னுஞ் செய்யவேண்டுமென்றனன். இந்தவார்த்தையைக் கேட்ட துவஷ்டா மனமகிழ்ந்து அடா குழந்தாய்! நானிப்பொழுதுதான் பிள்ளையையுடையவனாயினேன். என்பிழையும் நல்லபிழைப்பாயிற்று. என்னை நீ புனிதனாக்கினாய். எனது

சங்கடமெல்லாந் துலைந்துபோயிற்று. உனது வீரியத்தைக் கண்டு என்மனத்தி லுண்டாயிருந்த அலைச்சலெல்லாம் அடங்கிற்று. உனக்கொரு நன்மையைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. நீ யாவரிடத்திலும் நம்பிக்கை வைக்கவேண்டாம். மகாகபடசித்தனாயும் மாயாபேதங்களிற் சமர்த்தனா யுமிருக்கிற இந்திரன் உனக்கு சத்ருவாயினான். சம்பத்து வேண்டுமானாலும் அரசாக்ஷி வேண்டுமானாலும் வெற்றியுண்டாக வேண்டுமானாலுன் தவஞ் செய்ய வேண்டும் தவமின்றி எவனுக்கும் ஒன்றுஞ் சித்திக்காது. ஆகையால் நீ சாவதான சித்தமுடையவனாய் வீராசனத்திலிருந்து திடபக்தி யோடும் பிரமனை நோக்கித் தவஞ்செய்வாய்.

உனக்குப் பிரவஞ்ச காரணனான பிரமன் அளவிறந்த தேஜசோடுங்கூடி வெளிப்படுவான். வெளிப்படுங்கால் அவனுள்ளங் களிக்குமாறு போற்றிப்புகழ்ந்து சிரேஷ்டமானவரங்களைப் பெற்று துர்நடத்தையும் பிரஹ்மஹத்தியு முடைய இந்திரனைக் கொன்று என்னுள்ளங்களிக்குமாறு வருவாய். ஓ குழந்தாய்! தவந்தான் எல்லாவற்றையுங் கொடுப்பது. ஆகையால் நீ தவஞ்செய்வாய். பிரமதேவர் வேண்டியவரங்கள் கொடுப்பார். என்னப்பனே! என் பிள்ளையைக் கொன்றதனா லுண்டாகிய வைரம் என் மனதை விட்டு நீங்கவில்லை. நீ அந்த இந்திரனைக் கொல்லுமளவும் நான் துக்கசாந்தியடையேன். சுகமாய்த் தூங்கமாட்டேன். துக்கமென்னுஞ் சமுத்திரத்தில் மூழ்கிக் கிடக்கிற என்னைச் சுகமென்னுங் கரையிலேற்றி விடுவாயென்றனன்.

இங்ஙனங்கூறிய தந்தைமொழியைக் கேட்ட விருத்திராசுரன் விடைபெற்றுக் கோபத்தோடு கூடினவனாய்த் தவத்தைச் சந்தோஷத்துடன் செய்யத் தலைபட்டு கந்தமாதன பர்வதம் போய்ப் பரிசுத்தமான தேவகங்கையில் ஸ்நானஞ்செய்து தர்ப்பாசனத்தில் வீராசனனாயுட்கார்ந்து ஆகாராதிகளைவிட்டு யோகசித்தனாய் பிரஹ்மாவை மனதிற்றியானித்து வந்தனன். இந்திரன் இவன்தவஞ்செய் வதைத் தெரிந்துகொண்டு அவனது தவத்தைக் கெடுக்கக் காந்தர்வகன்னிகைகளையும் அனுப்பினான். அவர்களேயன்றி யக்ஷர்களையும் பன்னர்களையும், சர்ப்பங்களையும் கின்னர்களையும் வித்யாதரர்களையும் அப்சரஸ்திரீகளையும் அநேக தேவதூதர்களையும் அனுப்பினான். அவரெல்லாஞ் சென்று தபசைக் கெடுப்பதற்கான அநேக வுபாயங்களைச் செய்தனர். அவர்கள் எதுசெய்த போதிலும் விருத்திராசுரன் தவத்தில் சலிக்கவில்லை.

மூன்றாம் அத்தியாயம்

விருத்ரக்ருத தேவராசுர பராஜயம் முற்றிற்று.

சுலோகம் - (சுO)

ஆக அத்தியாயம் மூன்றுக்குச் சுலோகம் -(களரு)

உ

ஏகவீராதி சம்சேவ்வாயை நம:

நான்காம் அத்தியாயம்.

* விருத்ரக்ருத தேவபராஜயம்.

ஓ மஹருஷிகாள்! விருத்திராசுரனுடைய தவநிலையேக் கெடுக்கவந்த தேவகன்னியர் முதலிய யாவரும் அவனது மனோதிடத்தைக் கண்டு இனி நாம் செய்யத்தக்க சாமர்த்தியமான வித்தைகள் என்ன விருக்கின்றன. இனி யிங்கிருப்பதனா லென்னபயன்? இவனிடத்தில் நமக்கு வெற்றியுடண்டாகாதென்று ஆசையற்று தேவலோகம் போய்ச் சேர்ந்தனர். அவர்கள் செய்தி யங்ஙனமிருக்க, இங்கு விருத்திராசுரன் நூறுவருஷம் யாதொரு விக்கினமில்லாமல் தவத்தைச் செய்து முடிக்குமளவில் பிரமதேவன் அம்சாரூடனாய் பிரத்தியக்ஷமாய் வந்து ஓ விருந்திரா! உனக்குச் சுகமுண்டாகுக. உனது தியானத்தை நிறுத்து உனக்கிஷ்டமாயும் இன்பமாயுள்ள வரத்தைக்கேள் கொடுக்கிறேன். நீ தவத்தினால் மிகவும் இளைத்துப்போயினை! உனது தவம் எனக்கு அதிகசந்தோஷத்தை விளைவித்தென்றனன். விருத்திரன் மிகத்தெளிவாகவும் அமிர்தமாகவும் கூறும் பிரமனது வார்த்தையைக் கேட்டுத் தவத்தைவிட்டு பிரமனைக் கண்டு களித்து கண்களினின்றும் ஆனந்தபாஷ்யம் பொழிந்து வணங்கி எழுந்துநின்று அஞ்சலியஸ்தனாய்ப் பிரமதேவனை நோக்கி நாத்தழுதழுப்பக் குழறிக்குழறிக் கூறலுற்றனன். ஓ பிரபுவே! உனது தரிசனமெதனால் கிடைக்கப்பெற்றேனோ அதனால் எல்லாத் தேவர்களுடைய ஸ்தானங்களையும் கிடைக்கப் பெற்றவனாயினேன். என் மனதில் அடையக்கூடாததான கோரிக்கையைக் கொண்டிருக்கிறே னதனைக் கேட்டருள்ல் வேண்டும். எனக்கு என்புகளாலும் விருக்ஷங்களாலும் உலர்ந்தவஸ்துக்களாலும் ஈரவஸ்துக்களாலும் மூங்கிலாலும் பல ஆயுதவகைகளாலும் மரணம் வ்ராமலிருக்க வேண்டும். எந்த வீரியமிருந்தால் யுத்தத்தில் சகல பலத்தோடுங் கூடின தேவர்களால் யான் செயிக்கக்கூடாதவனா யிருப்பேனோ அந்த வீரியம் எனக்குண்டாக வேண்டு மென்றனன். பிரமன் நகைத்து ஓ விருத்திரனே! நீ என்னை கேட்கின்றனையோஅது வன்மை யுடையதேயாகும் அதற்கு கெடுதியுண்டாகமாட்டாது. நீ வேண்டியபடி உலர்ந்த வஸ்துக்களாகிய கற்களாலும் கட்டைகளாலும் ஈரவஸ்துக்களாலும் உனக்கு மரணம் வரமாட்டாது. இது சத்தியமென்று சொல்லித் தன்னுலகம் போயினன்.

* விருத்திரனால் தேவர்களடைந்த தோல்வி.

விருத்திரனும் சந்தோஷசித்தனாய்த் தன் தந்தையிடஞ்சென்று தான் வரம்பெற்ற செய்தியைச் சொன்னான். தந்தை கேட்டு மகிழ்ந்து அப்பா! உனக்கு எல்லாமங்களங்களும் உண்டாகுக. எனது சத்துருவான இந்திரனைக்கொன்று அவனது அரசாக்ஷிகைக் கைக்கொண்டு நீ இந்திரனாய் வாழக்கடவாய். அப்பொழுதுதான் புத்திர நாசத்தாலுண்டான என் மனோவியாதி நீங்கும். எனக்கு நீ புத்திரனல்லவா? உனக்குப் புத்திரத்தன்மையைச் சொல்லுகிறேன். தந்தை சீவித்திருக்கும்போது அவனுத்திரவின்படி நடந்துகொள்வதும், அவன் இறந்ததினத்தில் அதிகமான அன்னமிடுவதும், கையில் பிண்டம் போடுவதுமேயாம். ஏனைய புத்திர தருமங்களெல்லாம் இவற்றுளடக்கமென்றறிவாய். ஓ குழந்தாய்! பாவியாகிய இந்திரனால் இறந்துபோன திரிசிரசு என் மனத்தை விட்டு நீங்கவேயில்லை. ஏனெனின்! அவன் நன்னடத்தையிற் சிறந்தவன் சத்தியசந்தன் சர்வசாஸ்திரபாரங்கதன் எப்பொழுதுந் தவத்திலேயே எண்ணமுடையவன். இப்படிபட்ட சத்புத்திரனை யிழக்கச் செய்தவன் வாழ்ந்திருப்பனாயின் என்மனந் தீப்பற்றியெரியாதா! என்றனன். விருத்திரன் தந்தைகூறிய துயரமொழியைக் கேட்டு மனம் புழுங்கி நமக்குத் தந்தையின் துயரத்தை யொழிப்பதைப் பார்க்கிலும் வேறு தவமுண்டோ வென்று அப்பொழுதே சைனியங்களைக் கூட்டிக் கொண்டு ரணபேரி சங்கமுதலிய பல வாத்தியங்கள் முழங்க அதிவேகமாய்ப் புறப்பட்டு, சேனைகளைப் பார்த்து ஓ வீர்களே! இன்று இந்திரனைக் கொன்று நிருபத்திரவமான தேவலோகத்தை என்வசமாக்கிக் கொள்ளப்போகின்றேன். வாருங்கள் வாருங்களென்று பெருங்கோஷஞ் செய்து சென்றனன்.

இவன் வருகையை வச்சிரபாணியறிந்து பயந்து லோகபாலகா முதலிய யாவரையும் வரவழைத்து அவர்களை "க்ருத்ர"(கழுகு) யூகமாக வமைத்து அந்தயூகத்துக்குள்ளிருந்தா னிருந்தனன் இவனை விருத்திரனறிந்து வேகமாய்ப் போார் செய்யத் தொடங்கி தோமரம் பிண்டி பாலம் கத்தி கோடாலி முதலியபல ஆயுதங்களால் இடித்துங் குத்தியும் வெட்டியும் ஆரவாரஞ்செய்யும்பொழுது தேவர்கள் இனி நாம் பிழைப்பது அரிதென்று ஏங்கினர். அசுரர்களெல்லாம் ஆனந்தங்கொண்டு கொண்டாடினடித்தனர். தேவர்கள் ஏக்கமும் அசுரர்கள் ஊக்கமுங் கொண்டிருக்குஞ் சமயத்தில் இந்திரனைத் திடீரென்று பிடித்துக்கசக்கி மொத்தையாகத்திரட்டி வாயில் போட்டுக் கொண்டு அவனிடத்தில் தான் கொண்டிருந்த வயிரத்தை நினைந்து மென்று மென்று சந்துஷ்டனா யிருந்தனன். விருத்திரன்வாயில் இந்திரன் லேக்கியமா யிருத்தலைத் தேவர்கள் கண்டு கூகூ வென்றலறி ஓ

இந்திரனே! ஓ இந்திரனே என்று கதறிப்பதறிப் பிரகஸ்பதியைப் பார்த்து ஓ எங்களையரே! எங்களை ரக்ஷிக்கப்பட்ட இந்திரன் விருந்திரனால் பக்ஷிக்கப்பட்டானே அந்தோ! இனி நாங்கள் என்ன செய்வோம் விஷ்ரவில் நீர் அபிசாரமந்திரத்தைச் செய்யுமென்று தேவர்கள் பரிபவப்பட்டுக் கூறுங்கால், பிரகஸ்பதிபகவான் ஓ தேவர்களே! இந்திரன் விருத்திரனால் பக்ஷிக்கப்பட்டாலும் அவனுக்கிறப் புண்டாகுமோ அவன் அவ்வரசன் வாய்நடுவிலகப்படாமல் கடைவாயில் ஓர்புறம் ஒட்டிக்கொண்டிருக்கின்றனென்று கூறவே, தேவர்களவ்வசுரன் வாய் திறக்கும் வண்ணம் ஜிரும்பிகாஸ்திரமென்றும் ஓரஸ்திரத்தை விட்டனர். அதனாலவ்வரசன் கொட்டாவி விட்டுக் கொண்டு வாயைத் திறந்தனன். அவனது வாய்ச்சந்தை எதிர்பார்த்திருந்த இந்திரன் அவ்வசுரன் வாய்ப் பல்லிற் படாமல் ஓர் சிறிய உருக்கொண்டு வெளியே வந்துவீழ்ந்து அவன் கண்ணுக்குப் புலப்படாமல் ஓட்டம் பிடித்தனன். ஓ ராஜேந்திரனே! அன்று அவ்வசுரனுக்குண்டாகிய கொட்டாவியே இப்பொழுது யாவரிடத்தும் உண்டாய் வருகின்றது. இதனைப் பெரியோர் அவசகுனமென்றும் அநுஷ்டானம் ஜபம் ஈஸ்வராராதனமுதலியன செய்யுங்காலத்தில் இதுவுண்டாதல் குற்றமென்றுங் கூறுவர்.

இந்திரன் வெளியேவந்து ஓடியதைக்கண்ட தேவர்கள் சந்தோஷமடைந்து போர்செய்வதை விடாமல் இவர்களெல்லாம் ஓர் புறமும் விருத்திராசுரனொருவன் மாத்திரம் ஓர் புறமும் நின்று பதினாயிரம் வருடம் போர்செய்து வந்தனர். விருத்திராசுரன் வரத்தால் விருத்தியடையும் பருவமுடையவனா யிருந்தலால் அவன் ஒருவனாகவே யிருந்தும் அவனுக்கே பலமும் வெற்றியு முண்டா யிற்று. தேவர்கள் தோல்வியடையும் பருவமுடையவர்களா யிருந்தலால் இவர்கள் பலராகவிருந்தும் இவர்கட்குத் தூர்ப்பலமும் தோல்வியுமே யுண்டாயிற்று. இதுபோலவே வெற்றி யடையப் பெற்ற விருத்தினுக்குச் சரீரப் பிரகாசமும் மனோசந்தோஷமும் தேவர்களுக்குச் சரீர அம்பிரகாசமும் மனோதுக்கமு முண்டாயின. துக்கமடையப் பெற்ற தேவர்கள் இருப்பதற்கிடனில்லாமல் சகலவாழ்வையும் விட்டோடி மலைமுழைகளிலும் வனங்களிலும் மிருகங்களைப் போல் வாழ்ந்திருந்தனர். சந்தோஷமடையப்பெற்ற விருத்திரன் இருப்பதற் கிடனுண்டாய் சுவர்க்கத்தையடைந்து ஐராவதம் உச்சைஸ்ரவம் கற்பகவிருக்ஷ முதலியபஞ்சதருக்கள் காமதேனு சிந்தாமணி அபசரஸ்திரீகள் முதலிய சகலசம்பத்துக்களையும் தனவசமாக்கிக் கொண்டு வாழ்ந்திருந்தனன். இவன் வாழ்வைக் கேட்டதந்தையாகிய துவஷ்டாவும் அவனிடம் வந்து அளவளாவி வாழ்ந்திருந்தனன்.

பின்னர் இந்திரன் முதலிய தேவர்கள் முனிவர்களோடு கலந்து ஐயன்மீர் இனிநாம் என்செய்யலாம். எல்லாம் செய்யவல்லவனாயிருக்கின்ற சிவன் தான் இப்பொழுது எதைச் செயய வேண்டுமோ அதைச் செயயவேண்டுமென்று யாவருங் கூடிக் கைலைக்குப்போய் அக்கைலநாதனைப் பணிந்து ஓ மஹாதேவனே! கருணையங்கடலே! எங்களுக்கு உன்னால் கிடைக்கப்பெற்ற வாழ்வனைத்தும் விருத்திராசுரன் கொள்ளை கொண்டனன். இனி நாங்கள் போகுங்கதியாது உண்மையைச் சொல்லும் எங்கேபோவோம் எதைச் செய்வோம். ஓ பக்தபராதீனனே! எங்கள் துக்கம் நாசமாகும் ஒருபாயத்தைச் சொல்லியருள்வாய். நீ சகல சீவரக்ஷகனல்லவா! எங்கட்குச் சகாயஞ்செய்து எங்களை ரக்ஷிப்பாய். மதகர்விதனான விருத்திராசுரனைச் ❊ சங்கரியுமென்று பிரார்த்திக்கவே கிருபாளுவாகிய சிவபிரானார் இரக்கமுற்று ஓ தேவர்காள்! நீங்கள் பிரமனை யழைத்துக் கொண்டு விஷ்ணுவினிடஞ் சென்று இப்பொழுது என்னிடஞ் சொல்லியது போல் சொல்லுங்கள். அவன் சக்தியுள்ளவன். அசுரர்களை மோசஞ் செய்யும் வகையெல்லாந் தெரிந்தவன். பலமுள்ளவன். சமயோசிதமான யுக்தியுள்ளவன். தன்னை யடைந்தவர்களைக் காக்குங்குணமுள்ளவன். காரியசித்தி யுண்டாக வேண்டு மானால் அவனையன்றி உங்களுக்கு வேறொருவருமில்லை. ஆகையால் நீங்கள் அவனிடம் போய்ச் சேருங்களென் றனுக்கிரஞ் செய்தனுப்பினர்.

தேவர்களும் எம்பெருமான்பால் விடைபெற்று விஷ்ணுவினிடஞ்சென்று தங்கள் குறையை விண்ணப்பஞ் செய்தனர். அதனைக் கேட்ட அவர் மிக்க விரக்கமுடையவாய் ஓ தேவர்களே! நீங்கள் அஞ்சவெண்டாமென்று அபயந்தந்தருளினர். இவ்வண்ணம் வியாசபகவான் ஜனமேஜயனுக்குக் கூறினாறென்று சூதபகவான் சவுனகாதியருக்குக் கூறியருளினார்.

நான்காம் அத்தியாயம்.

விருத்திரகிருததேவபராஜயம் முற்றிற்று.

சுலோகம் (சுஉ)

அஉ அத்தியாயம் நான்குக்குச் சுலோகம் - (உநூரு)

❊ சங்கரி - அழித்தல்

உ

ஏகப்பிரபாவ ஸாலிந்யை நம:

ஐந்தாம் அத்தியாயம்.

இந்திராதிகிருததேவீஸ்துதி

சூதபகவான் கூறுகின்றார். ஓ மஹருஷிகாள்! வியாசமுனிவர் ஜனமேஜயனுக்குப் பின்னர் சொல்லிவந்த சரித்திரத்தைக் கூறுகின்றேன் கேட்பீர்களாக.

வியாசமுனிவர் அரசனைப் பார்த்து உனக்குத் தேவர்கள் திருமாலைச் சரணமடைந்த வரலாற்றைக் கூறினே னல்லவா! இனி அத்திருமால் தேவர்களை நோக்கிக் கூறியவுபாயத்தைச் சொல்லுகிறேன் கேட்பாயாக.

சகலவஸ்துக்களின் உண்மை யறிந்தவரான திருமால் பயமுற்றுச் சிந்தாகுலமடைந்திருக்கின்ற தேவர்களைப் பார்த்து, ஓ தேவர்களே! நீங்கள் என்னிடம் சொல்லி வந்ததை மற்றொருதரஞ் சொல்லுங்களென்று கேட்டனர். அவர்கள் துக்கமிகுதியினால் ஒன்றும் பேசாமல் வாய்மூடியிருந்தனர். விஷ்ணுமூர்த்தி ஓதேவர்காள்! ஏன் பேசாமலிருக்கின்றீர்கள். நீங்கள் வந்த காரணத்தைச் சொல்லுவீராயின் அது நல்லதோ கெட்டதோ அதனைக் கேட்டு ஆபத்தாயின் அதனை நிவாரணஞ் செய்யுங் காரியத்தில் பிரவேசிப்பே னென்றனர். அதனைக் கேட்ட தேவர்கள் ஓபிரபுவே! உம்மாலறியப்படாதது இம்மூவுலகி லுண்டோ! நீர் எல்லாமறிந்தவரா யிருந்தும் ஒன்றும் அறியாதவர் போல் அடிக்கடி ஏன் கேட்கின்றீர்.

பூர்வத்தில் வாமனவதாரமெடுத்து மூன்றுலகத்தையும் அடியால் அளந்து மாபலியையடக்கி இந்திரனை வாழச்செய்தீர். மோகினி வுருவங்கொண்டு அசுரர்களை மயக்கி அமிர்தத்தையும் இந்திரன் முதலிய எங்களுக்கு வழங்கினீர். இவ்வாறே ஒவ்வோர் சமயங்களிலும் வரும் இடையூறுகளைப் போக்கி பாதுகாத்து வந்தீர். அது போலும் இப்போது எங்களுக்கு வந்திருக்கும் விபத்தை எவ்வித வுபாயத்தினாலாவது போக்கி யெங்களைப் பாதுகாத்தல் வேண்டுமென்று வேண்டவே திருமால் ஓ தேவர்களே! நீங்களொன்றுக்கும் அஞ்சவேண்டாம். விருத்திராசுரனைக் கொல்வதற்கு யானொரு நல்ல வுபாயத்தை எண்ணியிருக்கிறேன். அதனால் உங்களுக்குச் சவுக்கியமுண்டாகும். நான் உங்கள் விஷயத்தில சரீரத்தினாலாவது புத்தியினாலாவது பலத்தினாலாவது

பொருளினினலாவது கபடத்தினாலாவது மற்றெவ்விதத்தினாலாவது நன்மையே செய்வேன். விருத்திராசுரன் பிரமன் கொடுத்தவரத்தால் மிக்கவன்மை பெற்றிருக்கின்றானாதலால் அவனை வெல்லவேண்டுமாயின் பெரியோர்களால் சொல்லப்பட்ட சாமபேத தான தண்டமென்னும் நான்கையும் விட்டு வஞ்சனையாற் கொல்லவெண்டும். ஏனெனின்! அவன் சத்தியனல்ல. அவனுக்கோ பலத்தினால் விருத்தியாகுந் தன்மையுண்டாயிருக்கின்றது. அவனைத் துவஷ்டாவும் எந்தப்பிராணிகளலும் கொல்லா வண்ணம் படைத்திருக்கின்றான். இவ்வண்ணமாக அவனுக்கு வாய்த்திருக்கும் பலங்கள் பல. ஆகலான் அறநூலிற் கூறியவாறு அவனை வெல்லுவோமென் றெண்ணினால் அவன் வெல்லப்பட்டான். நன்மனமுடையாரிடத்துப் பகைமைவரின் அவரப்பகைமையை அறநூலின் வழிநிறுத்துவரே யன்றி அதனைக் கடந்து பகைமை போகும் வழியே போகார். தீயமனமுடையோர் அறநூலின் வழியை அறவேயொழித்துப் பகைமை போகும் வழியே போவார். இவ்வுண்மையை யறிந்தவர் நன்மனமுடையோர்பால் அறநூலையும் தீமனமுடையார்போல் வஞ்சனையையுங்கைக் கொண்டு அவரிடத்து அவ்வச்செயலையே செய்வர். ஓ தேவர்களே! விருத்திராசுரனை முன்னர் வஞ்சனையாற்கலந்து சுவாதீனப்படுத்திக்கொண்டு பின்னர் அவனைக் கொல்ல வேண்டும்.

இனிப்பேசுவதனா லென்னபயன். செய்யவேண்டுவனவற்றைச் செய்யவேண்டும். அஃதாவது அவ்விருத்திராசுரன் எவ்விடத்திலிருக்கின்றானோ அவ்விடத்திற்குக் கந்தர்வர்களை அனுப்பி அவனை உல்லாசப்படுத்தி நாமனைவரும் அவனது சினேகத்தை விரும்புவது போற்காட்டி அவனை நம்வசப்படுத்தி வெகுநாள் அவனோடு கலந்து வாழ்ந்து நம்மிடத்தில் அவன் பகைமை எண்ணாவண்ணஞ் செய்து பின்னர் அவனிடத்தில் நமக்குள்ள பகைமையை மறவாமல் கொஞ்சங்கொஞ்சமாய்க் காட்டி இந்திரனுக்கும் அவனுக்கும் சபதத்தை யுண்டுபண்ணிப் போர்க்குவரச் செய்து போரை நடத்துவிக்கும் பொழுது நான் ஒருவருக்குந் தெரியாமல் இந்திரனுடைய வச்சி ராயுதத்தினுனியில் கலந்திருந்து இந்திரன் வச்சிரத்தை அவன் மேல் விடும்பொழுது அவனைக் கொன்றுவிடுகிறேன். இது நிச்சயம் ஆனால் இப்பொழுது சிறிதுகாலம் அவனுடைய மரணகாலத்தை எதிர்பார்த்திருக்கவேண்டும். ஓ தேவர்களே! நீங்கள் அசுரனோடுறவாடிப் பின்னவனைக் கொல்வது ஞாயவிரோத மென்றெண்ணுவீர்கள். அயோக்யனான சத்ருவினிடத்தில் அயோக்யமானவேலை செய்கிறவனுக்குத் தோஷமில்லை.

யோக்யதையோடு கூடின தூரனிடத்தில் மாத்திரம் ஞாயத்தை யெண்ணிச் செய்யவேண்டும். இந்த அயோக்கியனிடத்தில் நாம் வீரதா்மத்தை யெண்ணுவோமாயின் நமக்கு நாசமுண்டாகு மென்பதிற் சந்தேகமில்லை. அதனை யெண்ணாதொழிவோமாயின் அவன் நாசமடைவதிற் சந்தேகமில்லை. நான் எண்ணுந்தா்மம் உங்களுக்குச் சகாயஞ்செய்யவேண்டுமென்பதொன்றே யன்றி வேறொருதா்மத்தையும் நானெண்ணுவதில்லை. எண்ணியிருப்பேனாயின் வாமனடிவமெடுத்து மாபலியையும் மோகினிரூபமெடுத்து அசுரரையும் வஞ்சித்திருப்பேனா அதனை நீங்களே எண்ணிப்பாருங்கள். இந்திரனும் என்னைத் துணையாக வுடையோனாகையால் காரியமொன்றே யெண்ணுவதன்றிப் பழி பாவங்களை யெண்ணுவதில்லை. எண்ணி யிருப்பானாயின் திரிசிரன் றவத்திலிருக்கும்போது அவனைக்கொல்லத் துணிவானா. நான்றுணிவதும் அவன்றுணிவதும் நான்வஞ்சனைத்தொழில் செய்வதும் அவன் வஞ்சனைத்தொழில் செய்வதும் மற்றையா் செய்வதும் யாவும் சக்தியின் செயலே யாமென்றறிமின்கள். அச்சத்தியின் செயலல்லது நானிப்பொழுது சொல்லிய செயல் நடைபெறுவது யாங்ஙனம். ஆகையால் நீங்க ளனைவரும் தேவியைத் தோத்திரங்களாலும் மந்திரங்களாலுஞ் சரண மடையுங்கள். அந்தயோக மாயை உங்களுக்குச் சகாயஞ்செய்வாள். அவள் பிரகிருதியைக் கடந்த பரமான சாத்வீகசொரூபமா யுள்ளவள். அவள் தான் நம்மால் எப்பொழுதும் நமஸ்கரிக்கப்பட்டவளா யுள்ளவள் சா்வசித்திகளையும் சா்வாபீஷ்டங்களையும் கொடுத்தக்கவளா யுள்ளவள் சா்வசித்திகளையும் சா்வாபீஷ்டங்களையும் கொடுத்தக்கவளாயு முள்ளவள். அவள் சாதாரணமானவா்களால் அடையத்தக்கவளு மல்லள். இந்திரனும் அவளைப்பூசித்தே சத்ருக்களை வென்றிருக்கிறான். மோகிக்கச் செய்ய வல்ல அசுரா்கள் மோகிக்கும் வண்ணஞ் செய்ய வல்ல மஹா மாயையாயுள்ளவள். அம்மகாமாயை இவ்வசுரனை மோகமடையச் செய்வா ளென்பது ஓரதிசயமோ அந்தப்பரதேவதை நீங்கள் செய்யுந்தோத்திரத்திற்குத் திருவுளமிரங்கி சற்று அவ்வசுரனை மோகபடுத்துவளாயின் அவனை நீங்கள் அதிசுலபத்தில் வெல்லத்தக்கவராவீா்கள். இப்பொழுது அச்சத்தி பிரசன்னையாதல் வேண்டும். பிரசன்னையாயின் நமக்குச் சாத்தியமாகாதன வெல்லாம் சாத்தியமாகும் அவளைச் சாத்தியமாகக் கொள்ளாதவன் எவனாயினும் அவனெண்ணுமெண்ணங்கள் கைகூடுமென்றெண்ணன்மின். அவள் எல்லாக்காரணத்திற்குங் காரணியாயும் எல்லாவுயிருள்ளும் அந்தா்யாமியாயுமுள்ளவள். ஆகலான் உலகத்துக் கெல்லாம் மாதாவாயும் சா்வமூல

காரணியாயுமிருக்கிற அத்தேவியைச் சத்வபாவத்தோடு பக்திசெய்து சத்ருநாசம் எங்களுக்குண்டாகவேண்டுமென்று சரணமடைமின். பூர்வகாலத்தில் யான் ஐயாயிரவருடம் மதுகைடபர்களோடு இரவு பகல் யுத்தஞ்செய்தும் வெல்லமுடியாதொழிய அத்தருணத்தில் யான் தேவியைத் தோத்திரஞ் செய்தேன். அவள் கருணைகூர்ந்து எனக்குப் பிரசன்னையாய் நான் மதுகைடபர்களை மோகப்படுத்துகின்றேன். நீ அச்சமயம் அவர்களை வென்று விடுவாயென்றருளியதனாலல்லவா அவர்களை நான் வென்றவனாயினேன். ஆகலான் நீங்கள் அத்தேவியை நான் சொல்லியபடி தோத்திரஞ் செய்வீராயின் அவள் உங்கள் காரியத்தைச் சாதித்து விடுவாளென்றனர்.

இவ்வாறு திருமால் கூறியதைக்கேட்ட தேவர்கள் மேருமலைக்கு வந்த அங்கு ஓர் ஏகாந்தஸ்தானத்திலிருந்து சர்வலோகங்களையும் ரக்ஷித்தும் அவரவர் வினைக்கீடாய்ச் சிருட்டித்தும் சங்கரித்தும் வருகின்றவளாகியதேவியைத் தியானித்து அவளது மந்திரத்தை ஜபித்துத்தோத்திரஞ்செய்யத் தொடங்கினர்.

உனது பக்தர்களுடைய அபீஷ்டங்களை நிறைவேற்றுகின்றவளே! சம்சாரதுக்கத்தைச் சங்கரிக்கின்றவளே! அடியோங்கள் விருத்திராசுரனால் மிகவும் பாதிக்கப்பட்டவர்களாக விருக்கின்றோம். எங்களை ரக்ஷிக்கவேண்டும். எங்கள் விஷயத்தில் நீ சந்தோஷமுடையவளா யிருத்தல் வேண்டும். ஓ துக்கமுடையோரது துக்கங்களை நாசஞ்செய்கின்றவளே! பரமார்த்ததத்துவ சொரூபமாயிருக்கின்றவளே! உனது திருவடி மலரை எப்பொழுதுஞ் சரணமாக வடைகிறோம். சர்வலோகத்துக்குந் தாயாயிருக்கின்ற நீ சத்துருபாதையில் வீழ்ந்து கிடக்கிற எங்களைப் பிள்ளைகளாக வெண்ணி ரக்ஷிக்கக்கடவாய்! ஓ தாயே! இந்த மூன்றுலகத்திலும் நீயறியாததொன்றுண்டோ! எங்களிடத்தில் நீ ஏன் உபேக்ஷையாயிருக்கின்றாய்! எங்களுக்கு இவ்வுலகவாழ்க்கையைத் தந்தவள் நீதானே! பிரமன் முதலிய மூவரும் உன்னம்சத்திற் பிறந்ததனாலன்றோ சகலகாரியங்களையும் நடத்தும் வன்மையுடையராயினர். அவர்கள் செய்யுந் தொழிலில் அவர்களுக்குச் சுவாதீனமுண்டோ அவர்கள் உனது புருவ நெறிப்பின்வழியே ஆடுகின்றவர்களல்லவா! உலகில் அன்னைமார் தன்தன் புத்திரன்மார்கள் துயரப்படுவாராயின் அத்துயரத்தைக் கண்டு மனம்வருத்தி அதனைப்பரிகரித்து அவர்களைச் சந்தோஷிப்பிக்கின்றார்களே! அது உன்னாலுண்டாக்கப்பட்டதல்லவா! ஓ கிருபாசமுத்திரி! உன்பாதகமலங்களைச் சரணமாகவடைகின்ற

குற்றமில்லாத எங்களிடத்தில் ஏன் உபேக்ஷையாயிருக்கின்றாய். இப்பொழுது நாங்களடைந்திருக்கும் பதங்களும் அப்பதங்களாலுண்டாகும் விஷயபோக சுகானுபவங்களும் உன்னை நமஸ்கரித்ததனாலுண்டான தன்றோ! நீ உண்டாக்காதொழியின் நாங்களேன் இந்த அற்ப சுகத்தைவிரும்பி அசுரர்களால் அடிக்கடியும் பெருந்துன்பத்தை அனுபவிக்கின்றவர்களாக விருக்கின்றோம். உன்னால் திரோபவிக்கப் பட்டு நாங்கள் சிற்றின்பத்தையே பேரின்பமாக வெண்ணி அனுபவிக்கும் இத்தருணத்தில் அவைகட்கு இடையூறு வருமாயின் அவைகளையோட்டி அவ்வின்பத்தை எங்கட்கு ஊட்டவேண்டுவது உனது கடமை யன்றோ! நீ எங்களுக்கு இந்தச் சிற்றின்ப சுகத்தை யூட்டாது பேரின்பத்தை யூட்டியிருப்பையாயின் நாங்களேன் இந்தத்துக்கத்துக் காளாவோம்? இப்படிச் செய்தது உன்னுடைய குற்றமா! எங்களுடைய குற்றமா! ஒ மஹாதேவி! இதனை நீயே எண்ணிப் பார்க்கவேண்டும்.

உன்னால் சிருட்டிக்கப்பட்டமோகமானது எங்களுக்குப்பிரபு வாயிருக்கின்றது. கருணையே சுபாவமாகவுள்ளதாயே! எங்களைமயக்க மோகத்தைப் படைத்ததுபோலும் எங்களுக்கு ஞானவைராக்கிய முண்டாக எங்கள்பால் தயையைப் படைக்கலாகாதா? பூர்வத்தில் சகலலோகபயங்கரனான மகிஷனை யெங்கணிமித்தமாய்க் கொன்றுதுபோலும் எங்களுக்கதிபயத்தை விளைவிக்கின்ற விருத்திராசுரனை ஏன் கொல்லாமலிருக்கின்றனை! சும்பநிசும்பர்களையும் அவர்களுடன் வந்த அசுரவெள்ளங்களையுங் கொன்ற நீ இந்தமகாதுஷ்டனான விருத்திரனைக்கொல்லாமல் விருத்தியாக்கின்றனை. ஒகிருபாசமுத்திரீ! எப்படியானால் அவன் ஜீவிக்காமலிருப்பானோ அப்படியை யெண்ணிச் செய்யலாகாதா? அவனால் நாங்கள் வருந்த எங்கள்பால் மோகத்தை வைக்கலாகாதா! எங்கள் சங்கடத்தை நீக்கத்தக்கசக்தியுள்ளவன் எவனிருக்கின்றான். இல்லை என்பது மூன்றுலகினுமுண்டு. நீ ஒருத்திதானிருக்கின்றாய். விருத்திராசுர னிடத்திலும் உனக்குத் யிருக்குமாயின் துஷ்டனாயும் உலகத்துக்குப் பீடையைச் செய்கின்ற வனாயு மிருக்கிற அவனைக் கொன்றுவிடுவாய். அதுதான் தயையாகும். அதனாலவன் பரிசுத்தமடைந்து பாபத்தினின்று நீங்கிவிடு கின்றானாகலா னென்க.

நீ கொல்லாவிடின் அவன் பாபவிசேடத்தால் நரகமடைவான். இதுகாறும் எங்களை அசுரர்களாற் றுன்பப்படுத்தி எங்கட்குப் பக்திஞானவைராக்கியங்களை யுண்டாக்கிப்புனிதமாக்கியும், அசுரர்களுக்குத் தவத்தாலும் வரத்தாலும் அகங்காரத்தை அதிகரிக்கச்

செய்து வாழ்விப்பதுபோல மோகாந்தகாரத் துட்படுத்திச் சங்கரித்துப் புனிதமாக்கியும் வருவதுபோல் ஏனிப்போது செய்யாதிருக்கின்றனை? அந்தோ! ஓ தேவி! இந்த விருத்திரன் நரகத்தில் வீழ்வானாயின் ஏனைய அசுரர்களைப்போல் இவன் மீளத்தக்கவனன்றே ஆகலான் இவனைக் கொல்லுதல் அறமன்றென் றெண்ணி வாளா விருக்கின்றனையோ! நீ இப்போதிருந்தாயானாலும் எப்போதாவது கொல்லாமல் விடப்போகின்றனையோ! இல்லையே அல்லது எங்கட்குச் சத்துருவாகிய இவன் உன்பாதங்களை நமஸ்கரிக்கின்றவனாயும் பக்திபாராட்டுகின்றவனாயுந் தோன்றவில்லை. பாபபுத்தியுள்ள அவன் பக்தியுடையவனா யிருப்பானாயின் எங்களை இம்சித்துப் பீடிப்பானா? ஓ தாயே! இவர்களுடைய இம்சையில் உனக்கு நாங்கள் எப்படிப் பூசைசெய்வோம். பூஜையாதி ஜபங்களும், பூஜாத்திரவியங்களும், மந்திரங்களும், நாங்களும்பராசத்தியாகிய உன்னுடைய சொரூபமே யாதலால் உன் பாதங்களில் வீழ்ந்து வணங்குகின்றோம். இதுவேயாங்களிப்போதுசெய்யும் பூஜையாம். யோகிகளும் மோக்ஷ காமிகளும் உன்னுடைய பாதங்களையன்றோ ராகமோகமற்று எக்காலத்தும்ஸ்மரிக்கின்றனர். அதுதானன்றோ சம்சாரங்கடத்தற்கு ஓடமாயுள்ளது. அந்த மகிமையுணர்ந்து எவர்கள் பக்தியோடு தியானஞ்செய்கிறார்களோ அவர்களன்றோ புண்ணியவான்கள். ஆதலால் நாங்களும் உன்பாதத்தையே வணங்கி விட்டோம். யாகஞ் செய்கிறவர்கள் ஹோமகாலத்தில் தேவர்கள் திருப்தியின்பொருட்டு சுவாஹாமூர்த்தியாயும், பிதுர்க்களுக்குத் திருப்தி செய்யும்பொருட்டு சுவதா மூர்த்தியாயு மிருக்கிறவுன்னை ஸ்மரிக்கிறார்களன்றோ. மேதையும் காந்தியும் சாந்தியும் மனிதர்களுக்குப் பதார்த்தத்தை விளக்குகிற பிரசித்தமான புத்தியும் இம்மூன்றுலத்திலுமுள்ள சர்வசம்பத்தும் நீதா னன்றோ? ஆகலான் உன்னை நமஸ்கரிக்கின்றவர்களுக்கு நீயே சர்வசம்பத்தையும் சிருட்டித்துக் கொடுக்கின்றனையென்று தேவர்களால் தோத்திரிக்கப்பட்டதேவி, அழகான ரூபமுடையவளாய் சர்வாபரண பூஷிதையாய் திருக்கரங்களில் பாசம் அங்குசம் வரதம் அபயம் என்பவைகளையும் இடையில் சப்திக்கின்ற சிலங்கைகளுள்ள ஒட்டியாணத்தையும் திருக்கரத்தில் வளையலையும் திருப்பாதங்களில் தண்டையும் திருமுடியில் பாலசந்திரனோடு ரத்னகிரீடத்தைய முடையவளாய் புன்சிரிப்போடுகூடின தாமரை மலர் போன்ற திருமுகமுடையவளாய் திரிநேத்திரையாய் பாரிஜாதமலரையும் தாமரையிதழையுமொத்த நிறமுடையவளாய் செவந்த சந்தனமணிந்தவளாய் அநுக்கிரகத்தினால் மலர்ந்தமுக முடையவளாய்

கருணைக்கடலாய் ஏனையசிருங்கார வேடங்களில் நிறைந்தவளாய் எல்லோரையும் ரக்ஷிக்கிற சொரூபமுள்ளவளாய் எல்லாமறிந்தவளாய் எல்லாவற்றையுஞ் சிருட்டிக்கிறவளாய் ஸ்தூலப்பிரபஞ்ச சொரூபிணியாய் சர்வவேதாந்தங்களால் நிச்சயிக்கப் பட்டவளாய் சச்சிதானந்த சொரூபிணியாய் தேவியானவள் தேவர்களுக்குப் பிரத்யக்ஷமாயினள். தேவர்களெல்லாம் நமஸ்கரித்தனர். அவர்களைப்பார்த்து உங்கள் காரிய மென்ன வென்று கேட்க அவர்கள் எங்களுக்கு மஹாசங்கடத்தை விளைவிக்கிற விருத்திராசுரன் மோகமடையவும் எங்களிடத்தில் விரோதபாவங்கொள்ளாமல் நம்பவும் எந்த ஆயுதத்தால் கொல்லப்படுவானோ அந்த ஆயுத்திற்கு வன்மையையுங் கொடுத்தருள்வாயென்று பிரார்த்திக்க, அவ்வண்ணமே யாகுகவென்றருளி மறைந்துபோயினள். தேவர்களுஞ் சந்தோஷத்தோடு கூடினவர்களாய்த் தங்கள் தங்களிடம் போய்ச் சேர்ந்தனர்.

ஐந்தாம் அத்தியாயம்

இந்திராதிகிருத தேவீஸ்துதி முற்றிற்று.

———

சுலோகம் - (ருகூ)

ஆஉ அத்தியாயம் ரு - க்குச் சுலோகம் (உகூசு)

———

உ

ஈகாரரூபிண்யைநம:

———

ஆறாம் அத்தியாயம்

விருத்திரவத கதாப்பிராரம்பம்:

———

ஓ ஜனமேஜயனே! இவ்விதமாய் வரம்பெற்ற தேவர்களும் ருஷிகளும் மிகுந்த தேஜஸோடும் பிரகாசித்துக் கொண்டிருக்கிற விருத்திரனைப் பார்த்தனர். அவன் மூன்றுலகத்தையுஞ் சுட்டெரிக்கின்றவன் போலும் தங்களையெல்லாம் விழுங்குகிறவன் போலுமிருக்கிறதைக் கண்டு ருஷிகள் அவனிடம்போய் தேவகாரியஞ் சித்திப்பதற்காய் இன்பமான சில சாமோபாய வார்த்தைகளைச் சொல்லத் துணிந்து சர்வலோகத்துக்கும் பயத்தை விளைவிக்கிற ஓவிருத்திரனே! சகலபிரமாண்டமு முன்னா லாக்ரமிக்கப் பட்டிருக்கிறதல்லவா? இனி இந்திரனோடு வைரத்தை வகிப்பதனா

லுனக்குச் சங்கடத்தைக் கொடுக்குமேயன்றிச் சுகத்தைக் கொடுக்குமா? நீங்களொருவருக் கொருவர் சத்துருக்களாயிருப்பதனால் உங்களுக்கு உறக்கமென்ப துண்டாகாது. நீங்களிருவரும் முன்சண்டையிட்டுக் கொண்டிருக்கும்போதே அதிககாலங் கழிந்துவிட்டது. தேவர்தானவர் மானவர் முதலிய யாவரும் உங்களால் பீடிக்கப்படுகின்றார்கள். இவ்வுலகில் கிரகிக்கத்தக்கது சுகம். விடத்தக்கது துக்கம் என்றறிவாய் துவேஷம் வைத்திருப்பவருக்குச் சுகங்கிடையாதென்பது நிச்சயம். யுத்தரசத்தையறிந்தவர்களாயும் சிருங்கார ரசத்தில் சதுரர்களாயு மிருக்கிற பண்டிதர்கள் சகலேந்திரிய சுகத்தையுந் தடைசெய்கிற யுத்தத்தைப் புகழார்கள். ஓர் விளையாடலைக் கருதி புஷ்பங்களினாலும் யுத்தஞ்செய்யக் கூடாதென்றால் யுத்தத்தைக் கருதி தீக்ஷண்யமான பாணங்களால் யுத்தஞ்செய்யக் கூடாதென்பதைச் சொல்லவும் வேண்டுமா? யுத்தத்தில் ஜயம் சந்தேகம். பாணத்தால் புண்ணுண்டாவது மாத்திரம் நிச்சயம். இந்தப் பிரபஞ்சமெல்லாம் தெய்வாதீனமா யிருப்பதால் தோல்வி வெற்றிகளும் தெய்வாதீன மென்றெண்ணினவர் எப்போதும் யுத்தஞ் செய்ய வெண்ணுதல் குற்றம். காலத்தில் ஸ்நானமுங் காலத்தில் போஜனமுங் காலத்தில் சயனமுஞ் சொற்படி நடக்கவல்ல வேலைக்காரர்களமைவதும் கற்புடைய மனைவி வாய்ப்பதுமாகிய இவையெல்லாம் சம்சாரத்தில் சுகத்துக்கு யோக்கியமாகவிருக்கின்றன. பயங்கரமாகிய யுத்தத்தில் யுத்தஞ்செயய்கிறவனுக்குப் பாணவருஷத்தினாலென்ன சுகமிருக்கரது? ஒருவேளை சத்துருவை நாம் ஜயித்தோமென்கிற சுகந்தோன்றும் இதுவன்றி யுத்தத்தில் மரணமடைந்தால் சுவர்க்க மடையலாமென்கிற வார்த்தையொன்றுண்டு. அது வஞ்சகவார்த்தையென்றறிவாய். அவ்வஞ்சகச்சொல் யுத்தத்தில் பிரவேசிப்பதற்காக ஏற்படுத்தியிருக்கிறதேயன்றி வேறில்லை. யுத்தத்திலிருந்தவுடன் நரிமுதலிய செந்துக்களால் பிடுங்கப்பட்டு துன்பப்படுவது பிரத்தியக்ஷமாய்க் காணக்கூடுமானதாக விருக்கப் பின்னர் இவன் சுவர்க்க சுகத்தை யடைகிறானென்பதை எந்த மூடன்றான் நம்பி அந்தயுத்த மரணத்தைக்கோறுவான். ஆதலால் ஓ விருத்திரனே! இந்திரனோடு எப்போதும் உனக்குச் சிநேகமிருக்க வேண்டும். அது இருந்தால் எப்போதும். இருவரும் சுகத்தையநுபவிப்பீர்கள் நாங்களுங் கந்தர்வர்களும் அவரவ ரிடங்களில் சுகமாய் வாழ்ந்து கொண்டிருப்போம். தைரிய சாலியான விருத்திரனே! உங்களிருவருக்கும் இராப்பகல் யுத்தம் நடந்திருக்கும்போது யாங்களெல்லாம் அடைந்த துன்பம் இவ்வளவினவென்று சொல்ல முடியாது. இப்பவும் யாவருடைய துக்க நிவிர்த்தியின் பொருட்டு நாங்கள்

உங்களுடைய சிநேகத்தைப் பிரார்த்திக்கின்றோம். நீங்களிருவருஞ் சிநேகமாய்விட்டால் நீங்களும் உலகிலுள்ளயாவருஞ் சுகத்தையடை வார்களல்லவா? உங்களிரு வருக்கும் நாங்களே மத்யஸ்தராயிருந்து சபதமூலமாகவே சிநேகமுண்டாக்கு விக்கின்றோம். இந்திரன் நீ எப்படி கேட்கின்றனையோ அப்படி சபதஞ்செய்து கொடுத்து உன்னுடைய மனதைச் சந்தோஷப்படுத்தப் போகிறான். பூமி சத்யத்தையே ஆதாரமாகவுடையது. அதுபோலவே சூரிய சந்திரர்கள் பிரகாசித்துலாவுவதும் வாயுகாலத்தி னளவாய்ச் சலித்து வருவதும் சமுத்திரம் கரையைக் கடவாதிருப்பதும் சத்திய மொன்றினாலேயே யாகலான் உங்களுக்குச் சத்திய முன்னிலையாகவே சிநேக முண்டாய் ஓரிடத்திலேயே படுக்கையும் சலக்கிரீடையும் சிங்காதனத்தில் வீற்றிருப்பதுமாகிய செயல்கள் நடந்தேறி வரவேண்டுமென்று ருஷிகள் சொல்லவே, மகாபுத்திசாலியான விருத்திரன் அவர்கள் வார்த்தையைக் கேட்டுச் சொல்லுகிறான். ஓ தயையிற் சிறந்த தபஸ்விகளே! நீவிர் என்னால் பூசிக்கத்தக்க மகிமையுடையவர்களே! நீவிர் எப்போதும் பொய் சொல்லாமையும் நன்னடக்கையும் மிகப் பெருமையும் உடையீர். ஆதலால் நீவிர் கபடமூலத்தை யறியீர் புத்திமானா யுள்ளவன், வைரம் வைத்தவன் துஷ்டன் அறிவில்லாதவன் காமுகன் காந்தியில்லாதவன் நாணமில்லாதவன் என்னும் இவர்களிடத்தில் சிநேகித்தலாகாது. ஓ மகான்களே! நான் சொல்லி வந்த தீயவையெல்லாம் ஒன்றேனுந் தவறா துடையவன் இந்திரன். அவனிடத்தில் சிநேகஞ்செய்தல் எப்போதுங் கூடாது. நீங்களெல்லோரும் ஞானசமர்த்தர்கள். சாந்தர்கள் துஷ்டதர்மங்களை யறியீர். உங்களுக்குத் துரோகபுத்தி கிடையாது. உயிர்கள் தாம்தாம் செய்யும் சுபாசுபகர்மங்களைத் தாம் தாமே யனுபவிப்பர். ஒருவனுக்குத் துரோகஞ் செய்திறந்தவன் நன்மையை எப்படியடைவான். நம்பவைத்து இம்சிக்கின்றவர் மறுமையில் நரகமடைவ ரென்பதும் இவ்வுலகில் துக்கமடைவ வென்பதும் நிச்சயம். பிரஹ்மஹத்தியாவது சுராபானமாவது செய்தவர்களுக்குப் பிராயச்சித்தமுண்டு. நம்பிக்கைத் துரோகமாவது மித்திரத்துரோகமாவது செய்தவர்க்குப் பிராயச் சித்தங்கிடையாது. ஆகலான் இந்திரன் நம்பிக்கைத் துரோகஞ் செய்வதிற் சிறந்தவன். அவனது நட்பையா னொருபோதும் வேண்டேன் என்று சொல்லவே, முநிவர்கள், ஓ நீதிமார்க்கங்களை யறிந்தசதுரனே! நீ எண்ணியிருக்கும் ஏற்பாட்டை ஸ்திரமாகச் சொல்லுவையேயாயின் அந்த ஏற்பாட்டின்படியே உனக்கும் இந்திரனுக்கும் சிநேகஞ்செய்துவைக்கின்றோ மென்று கூறினர். விருத்திரன் தேவியினது திரோதசத்தியினால் சிறிது மயங்கினவனாய் அவர்களை நோக்கி ஓ முநிவர்காள்! யான் உணர்ந்துள்ள

வஸ்துக்களாலும், ஈரமுள்ள வஸ்துக்களாலும், கல், கட்டை, முதலியவைகளாலும், வச்சிராயுதத்தாலும், இந்திரன் முதலிய தேவர்களாலும் பகல் இரவென்னும் காலங்களில் எனக்கு மரணந்தேடாத பக்ஷத்தில் நீங்கள் சந்திசெய்யுங் காரியத்தை நானொப்புக் கொள்ளுகிறேன். இதற்கு மாறாக வெண்ணும் பக்ஷத்தில் ஒப்புக்கொள்ளேன் என்று சொல்லவே முநிவர்கள் அவனைப் பூஜ்யமான வாசகங்களால் மிகவுந்தோத்திரஞ் செய்து நீ சொல்லியபடியே செய்கிறேமென்று இந்திரனை வரவழைத்து நடந்த ஏற்பாட்டைச் சொல்ல, இந்திர னவ்விஷயத்தில் பயமற்றவனாய் அம்முநிவர் முன்னிலையிலேயே அக்னிசாக்ஷியாய் விருத்திரன் வேண்டியவாறெல்லாம் சபதஞ்செய்து கொடுத்தனன். விருத்திரனும் அவன் வார்த்தையில் பிரமாண புத்திவைத்து நம்பிக்கையடைந்து மிகுந்த் ஆசையுடையவனாய்ப் போகியாகிய இவனே சிநேகி என்று ஒரு கணமும் பிரியாமல் ஓர் சமயம் நந்தனவனத்திலும், ஓர் சமயம் கடற்கரையிலும் உல்லாசமாய்த் திரிந்துலாவி வருவான். இவ்வண்ணம் நடந்துவருங் காலத்தில் விருத்திரன் சிறிதும் வஞ்சனையின்றி அவனிடத்தில் அதிகப் பிரீதியுடையவனா யிருந்தனன். இந்திரனோ விருத்திரனிடத்தில் வஞ்சத்தை உள்ளத்துள்ளே வைத்து இவனை எந்த வுபாயத்தினால் கொல்லலாமென்னும் சிந்தனை மேற்கொண்டு அதற்குரிய சமயத்தை எதிர்பார்த்து அது கிட்டாமையால் மனம் வருந்தி ஏக்கமுற்றிருந்தனன். இந்திரனும் நாளுக்கு நாள் விருத்திரனிடத்தில் விசுவாசகுணமே மேலிட்டும் வந்தன. அநேக நாள் சென்றபின்னர் இவ்விருவரும் நட்பாயிருத்தலை விருத்திரன்றந்தையாகிய துவஷ்டாவறிந்து தன்மகனை யழைத்து, ஓ மகனே! நானிப்போது சொல்லப்புகும் நன்மையான வார்த்தைகளைக் கேட்பாயாக.

வைரம் வைத்தவனிடத்தில் எப்போதும் விஸ்வாசம் வைத்தல் கூடாது. அங்ஙனமிருக்க உன்னிடத்தில் இந்திரன் இடைவிடாமல் வைரம் வைத்துள்ளவனல்லவா! அவன் தன்னின் உயர்வாகப் பிறரைக்காண்பானாயின் பொறாமை கொள்ளுகிறவன். பேராசையினால் மதங்கொண்டு துவேஷத்திலேயே பிரீதியுடையவன். பிறரது துக்கத்தைக்கண்டு சந்தோஷிக்கின்றவன். பிறர் மனையாட்டிகளிடத்தில் பிரீதியுள்ளவன். பாபபுத்தியினால் வஞ்சச்செயலையே செய்கின்றவன். அச்செயலுக்கே சமயந் தேடுகிறவன். துரோகத்தையே செல்வச் செருக்கால் பிரதானமாக உடையவன். மஹாமாயாவி அகங்காரம் படைத்தவன். தாயினுதரத்தில் பிரவேசித்து கர்ப்பத்தையழிக்கத் தொடங்குங்கால் அந்தச்சிசுவானது கதறிக் கதறிப் புலம்பச் சிறிதேனுமிரக்கமின்றி ஏழுதுண்டாகத் துணித்தவன். இப்படிப்

பட்டவனை நீ விசுவசித்து வருகின்றனையே! இஃதென்ன பாவம்! அவனிடத்திலும் விசுவாசம் வைக்கலாமா! ஓ குழந்தாய் பாவஞ்செய்தவனுக்கு மறுபடியும் பாவஞ்செய்வதில் என்னலஜ்ஜை யுண்டாகும். ஆகையால் அப்பாகுழந்தாய் இனி நீ அவனது சிநேகத்தைவிடுவாயாக வென்றனன். விருத்திரன் சமீபித்த மரணமுடையவனாதலால் தந்தைசொல்லிய வார்த்தையில் இலக்ஷிய மற்றவனாய் இந்திரனை முன்போலவே விஸ்வசித்து வந்தனன்.

ஓர்நாள் கடற்கரையில் சந்தியாகாலத்தில் விருத்திரனை இந்திரன்கண்டு இந்தப்பொழுது இவனுக்குநாம் சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கிற காலமன்றல்லவா! இதுவே இவனைக் கொல்வதற்கு நல்லசமயம் இவனுக்குச் சகாயமாய் வரத்தக்க கூட்டத்தாரொருவருமில்லை. இதுபோலும் நமக்குச் சமயம் வாய்க்கப்போகிறதா வென்று கொல்வதற்குத் துணிந்து விஷ்ணுமூர்த்தியை நினைத்தனன். அவரும் ஒருவர்கண்ணுக்குந் தெரியாமல் அவன் முன்னேவந்து அவனபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டு உடனே அவனது வச்சிரா யுதத்தில் பிரவேசித்தனர். அதனையறிந்த இந்திரன் காலவிரோதமுமில்லை, வச்சிராயுதமும் வன்மை பெற்றிருக்கிறது. ஆனால் இதனால் கொல்லப்படாதல்லவா இதற்கென்னசெய்வோம் இனி வஞ்சனையாற் கொல்லாமற் போவோமாயின் நமக்குக் கீர்த்தி கிடைக்குமா! என்றெண்ணி யிருக்குந்தருணத்தில் பரதேவதையினுடைய அனுக்கிரகத்தால் கடலில் தெய்வகதியாய் மலைக்குச்சமானமான நுரையானது உயர்ந்தோங்கி யிருப்பதைக் கண்டான். இது தெய்வச் செயலென்றறிந்து இது ஈரமுமல்ல உலர்ந்ததுமல்ல மற்றெதுவு மல்லவென்று மனத்துள்ளே எண்ணிச் சந்தோஷித்து உடனே அந்த நுரையைத் தனதுகையால் வாரியெடுத்து அம்பிகையைப் பரமபக்தியுடன் தியானிக்கவே தேவிவந்து தன்னம்சத்தை அதிற் சிறிதே கல்ப்பித்தனள். அதனை யறிந்த விந்திரன் மகிழ்ந்து அந்தநுரையை வச்சிராயுதத்திற் பூசி விருத்திரன்மேல் வீசிவிட்டனன். அது அவன்மேல் பட்ட மாத்திரத்தில் பர்வதம்போல் பூமியில் விழுந்தனன். அதனை இந்திரனும் ருஷிகளும் கண்டு ஆனந்தமடைந்தவர்களாய் இச்சத்ரு சங்காரம் தேவியினது அனுக்கிர கத்தாலானதன்றோவென்று பலவாறாய் அவ்வம் பிகையைத் தோத்திரஞ்செய்து ஓர் நந்தவன மமைத்து அதில் ஆலயமொன்று இரத்னமயமாய்ச் சமைத்து அதனுள் மரகதத்தால் தேவியைப் பிரதிஷ்டைசெய்து மூன்றுபோதும் திவ்யமான சகலத் திரவியங்களாலும் பூஜித்து வழிப்பட்டு வாழ்த்தினர். அன்று முதல் தேவியானவள் தேவர்களுக்குக் குலதெய்வமாயினாள். தேவர் முதலாயினார் தேவியைப்

பூஜித்தபின்னர் தங்கள் சகாயராகிய திருமாலையும் பூஜித்து வாழ்த்திப் பரமானந்த மடைந்தனர். காற்றும் சுகமாய்வீசிற்று யக்ஷ கந்தர்வாதியரெல்லாம் விருத்திராசுரனது வதத்தைக் கண்ணுற்று இது பராசத்தி அவனை மோகிப்பித்ததனாலும் நுரையிற் பிரவேசித்ததனாலும் அவன் இந்திரனால் கொல்லப்பட்டானேயன்றி இவனாலேயே கொல்லப் பட்டனனன்றென்றனர். அன்றுமுதல் எவ்வுலகத்தும் விருத்திர னிறப்பதற்குத் துணையாய் நின்றவள் தேவியாகலான் "விருத்திர நிஹந்திரீ" என்று அத்தேவியும், தேயினது துணையைக் கொண்டு கொன்றவன் இந்திரனாதலால் "விருத்ரகன்" என்று இந்திரனும் புகழப்படுகின்றனர் என்று ஜனமேஜயனுக்கு வியாசமுநிவர் கூறியருளினார்.

ஆறாம் அத்தியாயம்

விருத்திரவத கதாப்ராரம்பம் முற்றிற்று

———

சுலோகம் - சுஅ.

ஆஉ அத்தியாயம் சு - க்குச் சுலோகம் (௩0உ)

———

உ

ஈஸித்ரையை நம:

ஏழாவது அத்தியாயம்

இதுவுமது.

———

சூதர் கூறுகின்றார். எனதாசிரியராகிய வியாசபகவன் ஜனமே ஜயனை நோக்கி ஒ அரசனே! விருத்திராசுரன் பூமியில் வீழ்ந்தபின்னர் விஷ்ணுமூர்த்தி வைகுண்டத்துக்குப் போயினர். இந்திரன் பாரசத்தியின் அனுக்ரகத்தால் விருத்திரனைக் கொன்றானாயினும், நம்பியிருந்தவனைக் கொன்றோமே இதுபாவமன்றோ வென்று சிறிது மனதில் பீதியடைந்து தன்னுலகம் போய்ச் சேர்ந்தனன். முனிவர்கள் நாம் நடுவுநிலைமைக்கு விரோதமில்லாமல் நடக்கவேண்டியவர்களாக விருக்க, அந்நிலைமைக்கு மாறாக விருத்திரனிடத்தில் வஞ்சித்துக் கூறியதனாலன்றோ இந்திரனாலவன் கொல்லப்பட்டான். இது பாவமன்றோ! இந்தப் பாவம் இந்திரனது சேர்க்கையால் வந்ததல்லவா? நமக்கு முநிவர்களென்கிற பெயர்கெட்டுப் போயிற்றே. விருத்திரன்

நம்முடைய வாக்கியத்தினாலன்றோ இந்திரனை நம்பினான். விஸ்வாசகாதகன் இந்திரனே யன்றி நாமுமாயினோமே! இந்திரனுடைய வஞ்சனையை யறிந்தும் நம்முடைய மமதையினாலன்றோ இருவர்க்கும் சபதஞ்செய்வித்தோம். அந்த மமதையன்றோ இந்த அனர்த்தத்தை விளைவித்தது. அதனை நாம் நிந்திக்கவேண்டும். பாவத்தொழிலுக் காலோசனை செய்கிறவன், உபாயஞ் சொல்லுகிறவன் அதற்குத் தூண்டுகிறவன், சிநேகமாய்ப் பக்கத்திலிருக்கின்றவன் இவரெல்லாம் பாவத்துக் காளானவர்களே அதுநிச்சயம். விஷ்ணுமூர்த்தியானவர் சத்துவமூர்த்தியா யிருந்தும் இந்த வஞ்சகனாகிய இந்திரனுக்கு உபாயமும் சகாயமுஞ் செய்தார். ஆனால் அவரும் தன் பிரயோசனத்தி லாசையுள்ளவர். இந்திரனும் தன் பிரயோசனத்தி லாசையுள்ளவன். தத்தம் பிரயோசனத்தையே பெரியதா வெண்ணுகின்றவர் பிறருக்குச் செய்யுங் கெடுதியினா லுண்டாகும் பாவத்துக் கொருபொழுதும் அஞ்சார். ஆகலான் தற்பிரயோசனத்தை நாடுகின்றவராகிய விஷ்ணுமூர்த்தியின் சகாயத்தால் இந்திரன் சகலவிதத்தாலும் பாவத்தையே செய்து விருகிறான். புருஷார்த் தங்களுக்குள் தருமம் மோக்ஷம் என்னுமிரண்டே சிறப்புள்ளன. அவ்விரண்டும் இப்போது போயின. மூன்றுலகத்திலும் தருமத்தை நாடலும் மோக்ஷத்தை எண்ணுதலும் அரியனவே. யாவரும் பொருளையும் இன்பத்தையுமே புகழாக வெண்ணுகின்றனர். வாயினாற் சொல்வது மாத்திரம் தருமமே. எண்ணுவது பொருளும் சிற்றின்பமுந்தான். மகத்துக்க ளென்று பெயருடையாரும் டாம்பீக முடையாரே, உண்மையில்லை என்று பலவாறாய்த் தங்கள் மனதிலெண்ணி அடிக்கடி மனங்கலங்கி சகல முயற்சிகளையும் விட்டுத் தங்கள் ஆசரமம் போய்ச் சேர்ந்தனர்.

ஓ அரசனே! இவர்கள் செய்தியிங்ஙனமிருக்க, விருத்திரா சூரனிறந்ததை அவன் தந்தை கேட்டு ஒவென்றலறி அழுது புரண்டு பிரேதத்தைக் கண்டு அந்தோ! அந்தோ! வென்றேங்கப் பின்னர் ஓர்வகையாற் றெளிந்து அவனுக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்களை விதிப்படிசெய்து முடித்துச் சோகபீடிதனாய் மித்திரகாதகனாகிய இந்திரனைச் சபிக்கத் தொடங்கி எவன் என்பிள்ளையை வஞ்சித்துக் கொன்று எனக்குத் தாபத்தை யுண்டுபண்ணினானோ அவன் தெய்வத்தினால் நிர்மிக்கப்படும் பெரியதோர் துன்பத்தை யடையக்கடவன் என்று சபித்து மேருபர்வதத்தை யடைந்து தவஞ் செய்திருந்தனன் என்று கூறியபொழுது, ஜனமேஜயன் வியாசமுநிவரை நோக்கி, ஓ ஐயா! விருத்திரனைக் கொன்றோமே என்று பீதியுடன் சென்ற இந்திரன் சுகமடைந்தானா! துக்கமடைந்தானா! என்று வினாவினன். வியாசர் ஓ மகானுபாவனே! என்ன வினாவுகின்றாய்!

என்ன சந்தேகந் தோன்றிற்று. இந்தச் சந்தேகம் உனக்குத் தோன்றாவண்ணம் இது காறும் பலபலவாய்ச் சொல்லிவந்தும் உனக்கப்போதைக்கப்போது புதுமையாகவே யிருக்கின்றது. என்ன செய்யலாம். உன்னால் வஞ்சனையில்லை. கூறுகின்றேன் கேட்பாயாக. பலவான்களாயினும், பலமற்றவர்க ளாயினும் அவர்கள் செய்யும் சுபாசுபகா்மங்கள் சுவல்பமாயினும் வெகுவாயினும் அவை அவசியம் அனுபவிக்கத் தக்கவைகளே! உயர்ந்தோர் செய்யுங் கருமங்கள் அவ ரனுபவிக்க வேண்டியதில்லை, தாழ்ந்தோர் மாத்திரம் தாம் செய்யுங் கருமங்களைத்தாமேயனுபவிக்க வேண்டியவரென்கிற வேற்றுமை யுண்டோ! ஆகலான் தேவராயினும் மனிதராயினும் செய்த பாவத்தைத் தாம்தாம் அனுபவிக்கவேண்டியவா்களே! அது விடாது. விருத்திரனைக் கொல்வதற்கு இந்திரனுக்கு இந்தவுபாயஞ் சொன்ன வரும் விஷ்ணுமே! பின்னர் அவனது வச்சிராயுதத்திற் கலந்தவரும் அவரே, இரண்டற்குந் துணையாயிருந்தவா், இந்திரனுக்கு ஆபத்து வந்தகாலத்தில் ஏன் சகாயஞ் செய்யவரவில்லை? ஓ அரசனே! தெய்வம் அனுகூலமா யிருக்குங் காலத்தில் எல்லாரும் பந்துக்களாகவே யிருக்கின்றனா். தெய்வம் பிரதிகூலமா யிருக்கும்போது சகாயஞ் செய்கின்றவர் ஒருவருங் கிடையாது. தாய் தந்தை சகோதரா் மனைவி பரிசாரகர் சிநேகர் முதலாயினார் சகாயஞ் செய்யாரோ வெனின் ஒருவருஞ் செய்யார். அவரவர் செய்யும் பாவபுண்ணியங்களே அவரவர்களுக்குச் சகாயமா யுள்ளன. அதனை யானினிச் சொல்வதனாலும் அறிவாய். எல்லாருடைய யோசனையானும் விருத்திரனைக்கொன்ற இந்திரன் ஒளியிழந்தவனாயினான். எல்லாத் தேவரும் அவனை விட்டோடினார். ஓடினவர் சும்மாவிராமல் இவன் பிரஹ்ம ஹத்தி செய்தவனென்றும், அந்தோ! அக்னிசாக்ஷியாய்ச் சபதஞ் செய்துகொடுத்துச் சிநேகிதனாக்கிக் கொண்டவனைக் கொல்ல எந்தப் பாவிதான் இச்சிப்பா னென்றும், இவனால் என்ன பாவஞ்செய்யப் பட்டதப்பாவென்றும், முனிவர்களும் இந்த இந்திரனுடைய வஞ்சனையால் வேதப் பிரமாணத்தை மறந்து பௌத்தர்களைப்போல் வஞ்ச வொழுக்கத்தைக் கொண்டனரே என்றும், எவர்தான் முன்னே ஒன்ரனைச் சொல்லிப் பின்னே ஒன்றனைச் செய்வரென்றும், இந்த விஷ்ணு இந்திரன் முனிவர் முதலியோரைப்போல் எந்த அறிவிலிகளுஞ் செய்யாரென்றும் தேவகந்தர்வ கோஷ்டிகளிலும் மற்றெந்த விடத்திலும் இகழ்ந்து கூறத்தலைப்பட்டனர்.

ஓ அரசனே! தன் கீர்த்தியைக் கெடுக்கும் வார்த்தைகளைப் பிறர்சொல்லக் கேட்டு உலகில் தன்கீர்த்தியைக் கெடுத்துக் கொள்ளுகிறவன் இந்திரனாயினும் அவன் பிழைப்பை நிந்திக்க வேண்டும். ஏனெனின்! இவனது அபகீர்த்தியை எதிர்ப்பார்த்துக்

கொண்டிருக்கும் சத்துருவானவன் அது வெளிப்படுமாயின் அவன் மலர்ந்த முகமுள்ளவனாவ னல்லவா! இதற்குச் சிலசான்று கூறுகின்றேன். பாவஞ்செய்த ராஜருஷியான இந்திரத்துய்மன் கீர்த்தி நாசத்தால் சுவர்க்கத்திலிருந்து விழுந்துவிட்டான். இவனைப் போலவே சிறிய குற்றத்தால் யயாதிமகாராஜனும் சுவர்க்கத்தி னின்றும் வீழ்ந்து பதினெட்டுயுகம் கர்க்கடசமாயிருந்தான். பிருகுமுநிவர் சாபத்தால் விஷ்ணுவானவர் மீன்முதலிய இழிந்த யோனிவாய்ப்பட்டுத் துக்கித்தனர். வாமனாவதாரத்தில் ஏற்பதிகழ்ச்சி யென்பதைமறந்து யாசகத்துக்குப் போயினார். ராமாவதாரத்தில் சீதையை யிழந்து பெருந்துக்கத்தை யடைந்தார் என்று உலகில் இன்றளவுஞ் சொல்லப்பட்டு வருகின்றதல்லவா மேன்மையுடையார் பாவஞ்செய்வராயின் இவ்விதமான நிந்தனையைத் தான் உலகிலடைவர்.

ஓ அரசனே! இந்திரன் தேஜசிழந்தானென்றே னன்றோ, பின்ன ரவன் அறிவிழந்து சபையைவிட்டுத் தனியிடத்தேசென்று பெருமூச்செறிந்து சங்கடப்பட்டுக் கொண்டிருக்கும்போது, அஃதறிந்த இந்திராணி அவனிடஞ்சென்று ஓ பிரபுவே! ஏன் பயப்படுகின்றீர். உமக்குப் பெரிய சத்துருவா யிருந்த விருத்திரனைக் கொன்றுவிட்டீரே இப்பொழுது ஏன் சிந்தனைப்படுகின்றீர். உலகத்துக் கெல்லாம் ஈசனாயிருக்கின்ற நீர் ஒன்றும் தெரியாத மூடனைப்போல் ஏனழுகின்றீர். இனி நீர் கவலைப்படத்தக்க சத்துருவில்லை என்று கூறியபொழுது, இந்திரன் ஓ இந்திராணி! நீ சொல்லியபடி பலவாறாக சத்துருவும் எனக்கில்லை. சுகமுமில்லை. யானிப்போது பிரஹ்மஹத்தியினால் பயந்திருக்கிறேன். எனக்கு இந்திரசபையும் கற்பகச்சோலையும் அமிர்தமும் கந்தர் வருடையகீதமும், அப்ஸரஸ்தீர்களுடைய நடனமும் நீயும் காமதேனுவும் இன்பமாகவும் சுகமாகவுங் காணப்படவில்லை. ஏன் செய்வேன். எங்கேபோவேன். என்னாத்மாவுக்குச் சிறிதுஞ் சுகமில்லை என்று தனதுநாயகிக்குக் கூறி அவ்விடத்தைவிட்டு மானததடாகத்துக்குப் போய் அதிலுள்ள ஓர்தாமரை காளத்தில் பிரவேசித்து அந்நீரில் வாழும் தண்ணீர்ப் பாம்புபோல் யாதொரு சகாயமுமின்றிச் சிந்தாக்கிராந்தனாய் இந்திரிய சத்தியற்றவனாய் பிரஹ்மஹத்தியினால் பீடிக்கப்பட்டு ஒருவருக்குந் தெரியாமல் வாழ்ந்திருந்தனன். பலவுத்பாதங்களும் உண்டாயின. சித்தர் சாரணர் இருடிகள் முதலாயினாரெல்லாம் பயமடைந்தவர்களாய் ஏங்கி என்ன தீங்குவருமோ வென்றொளித்துத் திரிந்தனர். உலகில் மழையுமின்றி க்ஷேமம்போய் க்ஷாம முண்டாயிற்று. நதிகளில் பிரவாகப்பெருக்கமும் தடாகங்களில் நீர்நிறைவும் ஒழிந்துபோயின.

சிலகாலங் கழிந்தபின்னர் தேவரும் முநிவருங்கூடி தேவராஜனில்லாதிருப்பது தகுதியன்றென் றெண்ணி நகுஷ மகாராசனை இந்திரனாகச் செய்தனர். தர்மிஷ்டனான நகுஷனும் இந்திரனாய் வாழுநாளில் ராஜசகுண மேலீட்டான் ஸ்திரீ சுகத்திலாசையுடையவனாய் மன்மத பாணத்தினால் வருந்தி அப்சரஸ்தீரீகளோடு உத்யானவனத்தில் கிரீடித்துக் கொண்டிருக்குஞ்சமயத்தில் இந்திராணியினது சௌந்தரியாதி விசேஷங்களைக் கேள்வியுற்றுக் காமமீதூர்ந்து தவத்திற்சிறந்த மகருஷிகளைக்கூவி இந்திராணியானவள் ஏன் என்னிடம் வராமலிருக்கின்றாள். நான் உங்களாலும் தேவசமூகங்களாலும் இந்திரனாக ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறேனல்லவா. ஆதலால் அவள் என்னைச்சேரும்படிச் செய்வீர்களாக. ஓ தேவர்காள்! முனிகணங்காள்! நானெப்பொழுது தேவேந்திர னாய்விட்டேனோ அப்பொழுதே எல்லா வுலகுக்கும் ஈஸ்வரன் நானே, எனதிஷ்டத்தையறிந்து நீங்கள் முயற்சி செய்வீர்களாயின் சசி என்னிடம் சீக்கிரம்வந்து சேருவாளென்று கூறிய வார்த்தையைக் கேட்டுத் தேவர்களும் முனிவர்களும் சிந்தாகுலமடைந்து இந்திராணியிடஞ் சென்று அவளை நமஸ்சரித்து ஓ இந்திராணியே! துராசாரத்தையுள்ளநகுஷன் உன்னை விரும்பி அழைத்து வரும்படி எங்கள் பேரில் கோபங்கொண் டேவியிருக்கின்றான். என் செய்வோம். நாங்களே இந்திரபட்டங் கட்டிவிட்டோ மாகையால் இனி அவனாணையைக் கடப்பதற்கு முடியுமோ? நாங்களென் செய்வோமென்று சொல்ல, இந்திராணி வருத்தமுற்றவளாய் ஆசிரியராகிய பிரகஸ்பதியினிடஞ் சென்று நமஸ்கரித்து ஓ தேவகுருவே நகுஷனாலெனக்குவரத்தக்க தாயிருக்கிற துன்பத்தை யொழித்து ரக்ஷியும். உம்மைச் சரணடைந் தேனென வருந்தியபொழுது, அவர் ஓ சசியே நீ அஞ்சற்க. அநாதியாய் நடந்து வரப்பட்ட தருமத்துக்கு மாறாக நானுன்னை யவன் வசப்படுத்துவேனா? அன்றியும் சத்ருவுக்கஞ்சிச் சரணமடைந்த வரை அச்சத்ரு சையிற்றானே ஒருவன் கொடுப்பானாயின் அவன் நரனில் அதமனன்றோ. அவன் பிரமப்பிரளயபரியந்தம் நரகத்தில் வீழ்ந்து கிடப்பனன்றோ. ஆகலின் என்னைச் சரணமடைந்தவுன்னை நகுஷன் வசயாய் ஒருகாலத்தும் ஒப்புவிக்கமாட்டேன். நீ அஞ்சேல் அஞ்சேலென்றனர்.

ஏழாம் அத்தியாயம்

விருத்திரவதம் முற்றிற்று.

———

சுலோகம் - (சுஉஏ)

ஆஉ அத்தியாயம் எ - க்குச் சுலோகம் (சஉசுஏ)

———

உ

ஈசித்ரை நம:

எட்டாம் அத்தியாயம்

* சச்சியா? இந்திரதரிசனம்.

———

ஓ ஜனமேஜயனே! நகுஷன், சசியானவள் பிரகஸ்பதியைச் சரணமடைந்தமையைக் கேள்வியுற்று இவனல்லவோ நமது காம சாந்திக்குத் தடைசெய்தனனென்று அடங்காக் கோபங்கொண்டு சிலதேவர்களை யழைத்து ஓ தேவர்காள்! மூடனான பிரகஸ்பதி சசியை என் வசமாக்காது தன்வசம் வைத்திருப்பதைக் கேள்வியுற்றேன். நானவனைக் கொல்வேனென்று அவனகங்காரமாய்ச் சொல்ல, தேவரும் முனிவரும் அவனை நோக்கிச் சிலசமாதான வார்த்தைகள் சொல்லத் தொடங்கி ஓ எங்களரசனே! கோபத்தை யடக்கும். இப்பொழுது தோன்றிய பாபபுத்தியை விட்டுவிடும். பரஸ்திரீசங்கமம் தர்மசாஸ்திரங்களால் நிந்திக்கப்பட்டுளது. நீரிப்போது விரும்பிய இந்திராணி உமக்குப் பரஸ்திரீயேயாவாள். அவளுடைய பர்த்தா இப்போதிருக்கின்றனன். அவனிருக்கும்போது அவள் அவனது பத்னியன்றோ. பதிவிரதா தருமத்தை யொருபோதும் அவள் விடாதவள். அத்தருமமொன்றானே சகல மகிமையும் பெற்றிருக்கின்றாள். அம்மகிமைக்குக் கர்த்தாவா யிருக்கின்ற பர்த்தா சீவித்திருக்கும்போது வேறொரு கர்த்தாவை எப்படி பர்த்தாவாகக் கொள்வாள். நீரும் மூன்று லோகத்துக்குப் பிரபுவாயிருக்க தர்மாதர்மங்களையெண்ணித் தர்மங்களை ரக்ஷித்தல்வேண்டும். தர்மங்களை ரக்ஷிக்காது நீரே அதர்மத்தைச் செய்வீராயின் உலகிலுள்ளார் நசித்துப்போவர். ஓ பிரபுவே! இதிற்சந்தேகமில்லை. எந்தப் பிரகாரத்தினாலும் நன்னடக்கையைக் காப்பாற்றுவதே பிரபுவாயிருப்பவனுக்குத் தக்க செய்தியாகும். இப்போதுமக் குண்டாயிருக்குங் காமத்தைத் தணிவித்துக் கொள்ள வேண்டுமாயின் இந்திராணிக்குச் சமானமான அநேகந் தேவதாசிக ளிருக்கின்றனர். சிருங்கார ரசத்துக்கு ஸ்திரீபு மான்க ளிருவரிடத்து முண்டாகு மாசையென்கிற ரதியே காரணமென்றும் ஒருவரையொருவர் பலாத்காரஞ் செய்யின் அது ரசபங்கமென்றும் பெரியோர் கூறுகின்றனர். உங்களிருவருக்கும் சமமான பிரீதி யிருக்குமாயின் சுகமுண்டாகும். ஆதலால் நீர் சிரேஷ்டமான பதவியைப் பெற்றிருக்க இந்திராணியை விரும்புவதை விட்டு நல்ல

* இந்திராணி இந்திரனைக் காணப்பெறுதல்.

அபிப்பிராயத்தைக் கொள்ளும். ஒருவருக்கு விருத்தியும் நாசமுமுண்டாவது புண்ணிய விருத்தியினாலும் பாவவிருத்தியினாலு மேயாம். இம்முறையுணர்ந்து பரஸ்திரீயை விரும்புவதாகிய பாபவிருத்தியை விட்டு விருமபாததாகிய புண்ணிய விருத்தியைக் கைக்கொள்ளுமென்று கூறவே நகுஷன் ஓ தேவர்காள்! உம்மாலிருக் கின்றவனாகச் சொல்லப்பட்ட இந்திரன் கௌதமரது பத்னியை அனுபவித்த காலத்தும், சந்திரன் பிரகஸ்பதி பத்னியை யனுபவித்த காலத்தும் நீவிரெங்குபோ யிருந்தீர்கள். உலகில் யாவரும் பிறருக்குப் போதிப்பதில் சமர்த்தரேயன்றி போதித்தவாறு நாமும் நின்று நடக்கப்பெறுதல் துர்லபமே. இப்போது இந்திராணியானவள் இந்திரப் பட்டத்துக்குரிய வென்னையடைவதனால் யாதொரு குற்றமுமுண்டாக மாட்டாது. இது விஷயத்தில் நீங்களும் முயலவீராயின் விசேடமான நன்மையடைவீர். நானும் மிக்க சந்தோஷ மடைவேன். உங்களிடத்தில் எனக்குள்ள உரிமையினால் இவ்வளவுஞ் சொன்னேன். இனி நீங்கள் என்னிடம் இருப்பதைவிட்டு இந்திராணியினிடஞ் சென்று அவளை நல்ல வார்த்தையினாலாவது அதற்கிணங்காளாயின் பலாத்காரத்தி னாலாவது சீக்கிரத்தில் என்னிடம் அழைத்து வரவேண்டியது என்று அவன் சொல்லியதைத் தேவரும் முநிவருங்கேட்டு, அவனெண்ணத்தைத் தடுப்பதற்கு முடியாமல் உடன்பட்டவர்போன்று மிகவும் பயந்து ஓ தேவராஜனே! உமதிஷ்டப்படியே நாங்கள் சென்று அவளைச் சாமோபாயத்தினாலேயே வசப்படுத்தி உம்மிடம் கொண்டுவந்து விடுகிறோமென்று சொல்லி அவனிடத்தில் விடைபெற்றுக் கொண்டு, குருவின்பால் சென்று அவரைவணங்கி ஓ ஆசிரியரே! இந்திராணி உம்மைச்சரண் புகுந்திருப்பதாகக் கேள்வியுற்றோம். நகுஷனை இந்திரனாக ஆக்கியபடியால் இந்திராணி அவனிடஞ் சேரத்தக்கவளன்றோ! அவனைப் பர்த்தாவாய்க் கொள்வதனாற் குற்றமென்னை! என்றுகேட்க, பிரகஸ்பதி ஓ தேவர்களே! நீங்கள் சொல்வது சரியே ஆயினும் அவள், இந்திரலோகத்திலுள்ள அரசச் செல்வங்களை இந்திரலோகத்தில் வசிக்கப்பெற்றவரெல்லாம் அனுபவிக்கலாம் அதனால் குற்றம் நிகழ்வதற்குக் காரணமில்லை. அவைகளைப் போல் என்னையும் அனுபவிக்கலாமோ! அனுபவித்தால் எனக்குப் பதிவிரதாதோஷமும், அவனுக்குப் பாவமும் உண்டாகுமன்றோ என்னுங் கருத்தையுட்கொண்டு எனது பதிவிரதாதர்மத்தைக் காப்பாற்றவேண்டுமென்று என்னைச் சரண்புகுந்தாளாகையால் அவளை நான் அவனிடம் அனுப்ப மாட்டேன் என்றனர். தேவர்கள் அங்ஙனமாயின் நகுஷன் கோபத்தையும் துர்நடத்தையும் உடையவனா யிருத்தலால் இந்திராணி

அவனிடம் போகாவிடில் நமக்கு ஏதேனுந தீங்குசெய்வான். அவனது செய்யாவண்ணம் வேறு ஏதேனும் ஒருபாயஞ் செய்யவேண்டும். என்னையெனின்! சசியானவள் அவனிடம்போய்ச் சரசவார்த்தைகளால் அவனைச்சரிப்படுத்திக் கொண்டு ஓ நகுஷனே! நான் இந்திரன் உயிரோடிருப்பதும் இல்லாததுந் தெரிந்துகொண்டு வந்து விட்டேனானால் நாமிருவரும் சுகமாய் வாழலாமென்றுசொல்லி இத்தனை நாளைக்குள் வருகிறேனென்று ஓர் காலவரையரையுஞ் செய்து கொள்வாளானால் அவன் அறிவில்லாதவனாதலின் அவ்வஞ்சமொழியை உண்மையென நம்பிச் சிறிது சாந்தமுற்றிருப்பன் பின்னர் நாம் இந்திரனைத்தேடத் தொடங்குவோம் என்று சொல்லவே தேவகுருவும் அவ்வரலோசனையை ஒருவாறு அங்கீகரித்து அவளையனுப்ப அவளும் தேவர்களும் நகுஷனிடம்போயினர். அவன் இந்திராணியைக் கண்டமாத்திரத்தில் சந்தோஷமடைந்தவனாய் அவளைப்பார்த்து ஓ அழகிய கண்ணுடையாளே நானிப்பொழுது தானிந்திரனாயினேன். என்னிடம் நீ கூடுவதற்குயாது சந்தேகமிருக்கின்றது. யான் சகலதேவர்களாலும் சகலலோகத்தாராலும் பூஜ்யமடைத்தவனாயிருக்கின்றேன் என்று கூற, இந்திராணி ஓ கற்புடையா ளாகையால் நாணமும் நடுக்கமுங்கொண்டு ஓ தேவராஜனே! நீ கூறியதெல்லாம் உண்மையே. நானுன்னைச் சந்தோஷிப்பிக்கச் செய்வதற்கும் யாதொருதடையுமில்லை. ஆயினும் உன்னிடத்தில் நானொருவரம் இச்சிக்கின்றேன். என்னையெனின் இந்திரன் இருக்கிறானென்பதும் இல்லை என்பதும் தெரியவில்லை. சந்தேகமாயிருக்கின்றது ஆகையால் நானே சென்று உண்மையறிந்து உன்னிடம் வருகின்றேன் இது நிச்சயம். அதுவரையில் நீ பொறுத்திருக்கவேண்டும் இதுவே யான்வேண்டும் வரமென்றனள். நகுஷனும்மகிழ்ந்து உண்மையென்று நம்பி விடை கொடுத்தனன். இந்திராணி நமக்கு வந்து ஆபத்து நீங்கிப்போய் விட்டதென்று அவனைவிட்டுத் தேவர்களிடம் வந்து, ஓ தேவர்களே இனி எந்நாயகன் வரும்வகையைத் தேட வேண்டும் என்னசொல்லுகின்றீர்க ளென்று கேட்க, அவர்கள் அவள் சொல்லிய நல்ல வார்த்தையைக் கேட்டு யாவரும் ஆலோசித்து விஷ்ணு மூர்த்தியினிடஞ் சென்று அவரைப் பணிந்து போற்றி ஓஜகன்னாதரே இந்திரன் பிரஹ்மஹத்தியினால் பீடிக்கப்பட்டு ஒருவருக்குந் தெரியாமற் போய் விட்டான். அவனைப் பிரஹ்மஹத்தியினின்று நீக்கிரக்ஷிக்க வேண்டியது உமதுகடமை. நீர்தான்கதி. அவனில்லாமையினால் நாங்களடைந்திருக்கும் ஆபத்தை ஒழிக்கத்தக்கவா நீரன்றி வேறு யாவரிருக்கின்றனர் என்று புகழ்ந்து கூறியதைக் கேட்டு, ஓ தேவர்காள்! எவளை நினைத்தால்

சர்வபாபங்களு நசித்துப்போமோ அவளையுத்தேசித்து நீங்கள் ஓர் அஸ்வமேதஞ் செய்வீராயின் அதனால் அத்தேவி திருப்தியடைந்தவளாய் பிரஹ்மஹத்தியை நிவிர்த்தி செய்வாள். அத்தேவியினால் இந்தப்பாவம் நசித்துப்போகு மென்று சொல்லவும் வேண்டுமா! இந்திராணியும் அத்தேவி பூஜையையே செய்து வரும் படிச்சொல்லுங்கள். அப்பூஜையே சகலசுகத்தையுங் கொடுக்கும். அந்நகுஷனையு மோகத்துக் குள்ளாக்கித் தீமையை விளைவித்து அதனாலவன் நாசமடையும் வண்ணம் பரதேவதை செய்வாள். இந்திரனும் அந்த அஸ்வமேதத்தால் பரிசுத்தனாய்ச் சீக்கிரத்தில் சுவர்க்கத்துக்கு வந்து சேருவானென்று விஷ்ணுமூர்த்திகூறவே தேவர்கள் அவர் வார்த்தைகளைக் கேட்டு இதுநல்ல வுபாயந்தானென்று சிந்தித்து இச்செய்தியை இந்திரனுக் கறிவிப்போமென்று அவனுக்குந்தெரிவித்து அஸ்வமேதத்தைமுடித்துப் பின்னர் பிரகஸ்பதிபகவானை யழைத்துக்கொண்டுபோய் இந்திரனைப் பற்றியிருந்தபிரஹ்ம ஹத்தியை விருக்ஷங்களிலோர் பங்கும், நதிகளிலோர்பங்கும், பர்வ தங்களி லோர்பங்கும், பூமியிலோர்பங்கும், ஸ்திரீகளிலோர் பங்குமாகப் பாகித்துப்போக்கி யவனைப் பரிசுத்தமாக்கினர். இந்திரன் பிரஹ்மஹத்தியினா லடைந்திருந்த பயமற்றுத் தன்னுலகம் போய்ச் சேரும் காலம்வராமையால் முன்போல் தாமரை நாளத்துக்குள் பிரவேசித்து ஒருவருக்குந் தெரியாமல் காலத்தை எதிர்பார்த்திருந்தனன். தேவர்களும் இந்திரலோகம் போய்ச்சேர்ந்தனர். இந்திராணியானவள் நமது நாயகன் பிரஹ்மஹத்தி நீங்கப்பெற்றும் நம்மோடிருப்பதற் கில்லாமல் முன்போலாயினனே கணவனைவிட்டு நாமெவ்வா றிருப்பதென்று அவனையே எண்ணி விரக்தாபமடைந்து ஆற்றாது தேவகுருவின் பாற் சென்று எனதுநாயகன் முன்போல் என்கண்ணுக்குத் தோன்றாம லிருக்கின்றனனே நானெப்போதுகாணப் பெறுவேன் அதற்கோருபாயங் கூறவேண்டுமென்றுப் பிரார்த்திக்க, அவர் ஓ புலோமன் புத்திரியே! இப்போது செய்து வரும் தேவி பூஜையை விடாமற் செய்து வருவையே யாயின் அவள் உனது நாயகனைக் காணும்படிச் செய்வாள். நகுஷனையும் மோகவளைக் குள்ளாக்கி இந்திரபதத்தி லிருந்து கீழே விழும்படித் தள்ளுவாள். இதுதான் உபாயம் என்று சொல்ல அவள் தேவி மந்திரத்தைப் பிரயோகவிதியுடன் அவரிடத்தில் உபதேசம் பெற்றுத் திரிலோக நாயகியாகிய பகவதியை விசேஷமான பலிகளானும் புஷ்பார்ச்சனைக ளானும் சிறப்பா யாராதித்து வந்தனள். சிலநாளைக்குள் தேவி, போக விருப்ப முடையவளாகிய இந்திராணி போகானுபவத்துக்குரிய சுகந்த

புஷ்பாதிகளெல்லாம் வெறுத்துத் தவசிகளைப்போல் தவகோலம் புனைந்து நம்மால் புருஷனைக் காணவேண்டு மென்று நம்மை விசேஷமாகப் பூசித்து வருகின்றாளல்லவாவென்று இரக்கங் கொண்டு த்ரைலோக்ய சுந்தரியாய் அம்சவாகன ரூடையாய் கோடிசூரியப் பிரகாச முடையவளாய் கோடிசந்திர சீதளமுடையவளாய், கோடிமின்னல்கள் மின்னுவது போல் பளபளப் புடையவளாய், நான்கு வேதங்களையே பாசம் அங்குசம் வரதம் அபயங்களாகத் திருக்கரத்தில் தரித்தவளாய், பாதம்வரையில் அசைந்தாடுகின்ற முத்தாரந் தரித்தவளாய், பிரசன்ன மாயிருக்கின்ற திருமுகமண்டல முடையவளாய், திரிலோசனியாய், அன்பர்க்கருளும் திருவுஞ்செல்வமுமாய்ப் பிரகாசிக்கின்ற ஸ்தனகும்பத்வயங்களுடையவளாய், பிரமாதி கீடாந்தங்கட்கு மாதாவாய், கருணாம்ருதசாகரியாய், அநந்தகோடி பிரஹ்மாண்ட நாயகியாய், பரமேஸ்வரியாய், சர்வேஸ்வரியாய், சர்வஜ்ஞையாய், கூடஸ்தையாய், அக்ஷரரூபிணியாய் விளங்குந் தனது திருக்கோலத்தை அவள் காணும்வண்ணங் காட்சிகொடுத்து இந்திராணியை ,நோக்கி மேகம்போலும் கம்பீர த்வனியுடன் ஓ இந்திரவல்லபே! உனக்கு வேண்டிய வரங்களைக்கேள். உன்னால் நான் நன்றாய்ப் பூசிக்கப்பட்டு மிக்க சந்தோஷத்தை யடைந்துள்ளேன். நீ வேண்டியவாறே நான் தருகின்றேன். உனக்குவரங் கொடுக்கவே வந்தேன். வேறுகார் யார்த்தமாக வந்தவளல்ல. என்னுடைய தரிசனம் அநேககோடி ஜன்மாந்தர புண்ணிய மிகுதியால் கிடைக்கத் தக்கது என்று பகவதியார் திருவாய் மலர்ந்தருளியதை இந்திராணி அன்புடன் கேட்டு ஓ தாயே! எனக்குப் பார்த்தாவினுடைய தரிசனம் அதிக துர்லபமாயிருக்கின்றது நான் அவரைக் காணவும், எனக்கு நகுஷனால் உண்டாயிருக்கும் பயம் நாசமாகவும், என்னிடத்தில் நான் வாழவும் அனுக்கிரகஞ்செய்ய வேண்டுமென்றுப் பிரார்த்தித்தனள். அம்பிகை இந்திராணியைப் பார்த்து ஓசசியே! நீ என்னருகி லிருக்கும் தூதியாகிய இவளோடு மானசதடாகத்துப் போவையாயின் அவ்விடத்தில் "விஸ்வகாமை" என்கிற நாமத்துடன் எனது விக்ரஹம் ஒன்றிருக்கின்றது. அந்தவிடத்தி லிருக்கின்றான் இந்திரன் நீ அவனை யங்குக் காண்பாயாக. இன்னம் சிறிதுநாளையில் நகுஷனை மோகாந்தகாரத்துக் குளாச்சிக் கீழேதள்ளப் போகிறேன். ஆகையால் நீ அவனால் யாதொரு துன்பத்தையு மடையாமல் உனது பதத்தில் சுகமாய் வாழலாமென் றனுக்கிரகித்தவுடன் தேவியினது தூதியானவள் இந்திராணியை யழைத்துக் கொண்டுபோய் தேவி சொல்லியவிடத்தில் இந்திரனைக் காணும்படிச்செய்தனள். அவளும் அது காறுங் காணுதற்கரிதாயிருந்த

கணவனை மிகவெளிமையாய்க் கண்டு கண்களிகூர்ந்து ஆனந்தமுற்றனள்.

எட்டாம் அத்தியாயம் இந்திரசந்தரிசனம் மற்றிற்று.

சுலோகம் - (எஉஏ)

ஆஉ அத்தியாயம் அ - க்குச் சுலோகம் (சுகூசுஏ)

உ

ஈஸ்பிதார்த்தப்ரதாயிந்யை நம:

ஒன்பதாம் அத்தியாயம்

* நஹுஷஸ்ய இந்திரபதப்ரச்யுதி:

ஓ ஜனமேஜயனே! பகவதியினுடைய பூஜாபலத்தால் அவளது கிருபை வாய்க்கப்பெற்ற இந்திராணியானவள் தனது நாயகனைக் காணப்பெற்று அதிசயமுற்றிருக்குந் தருணத்தில் இந்திரனும் அவளைப் பார்த்து அதிசயமும் ஆச்சரியமுமடைந்து ஓ விசாலாக்ஷி! நானிங்கிருப்பது ஒருவருக்குந் தெரியாதே! நானொருவராலும் அறியக் கூடாதவனாயிருக்கின்றேனே! நீ இங்கு எப்படி வரப்பெற்றாய் நானிங்கிருப்பது உனக்கு எப்படித் தெரியவந்ததென்று வினாவியபொழுது ஓ பிரபுவே! யான் தேவியினுடைய அனுக்கிரகத்தால் நீரிங்கிருப்பது தெரிந்து வந்தடைந்தேன். நாம் ஒருவரையொருவர் காணப்பெற்றது அவளுடைய அனுக்கிரகமன்றியாமோ! அச்செய்தி அங்ஙனமிருக்க, இப்போது தேவர்களாலும் ருஷிகளாலும் செய்யப்பட்ட முயற்சியினால் நகுஷனென்னும் அரசன் உம்முடைய பட்டத்தை யுடையவனாய் வந்திருக்கின்றான். அந்தப் பாவி என்னைத் தினந்தோறும் தேவர்களுக் கெல்லாம் பிரபுவா யிருக்கின்ற என்னைப் பதியாகக் கொள்வா யென்று வருத்துகின்றான் நானென்ன செய்வேனென்று இந்திராணி துக்கித்தபோது இந்திரன், ஓ கற்புடையாளே! நானோகாலத்தை யெதிர்பாத்திருக்கின்றேன். அப்படியே நீயும் உன்மனதைத் திடப்படுத்திக்கொண்டு காலத்தைப் பார்த்திருப்பாயென்றான். அவள்

* நகுஷன் இந்திரபதத்தினின்று நீங்குதல்.

அதனைக்கேட்டு பெருமூச் செறிந்து நடுங்கித் துக்கத்தோடும் இந்திரனைப் பார்த்து ஒ என்னாயகனே! என் மனோதிடம் அவனை என்னசெய்யும். அவனோ செல்வத்தாலும் சரீரத்தாலும் மதமுடையவனாயும், நாம் இந்திரனாய் வந்துவிட்டோமென்கிற கர்வமுடையவனாயுமிருக்கின்றான். அவனென்னைச் சுவாதீனஞ்செய்து கொள்ளுதல் ஓரருமையானதோ! எனக்குக் காவலாக இருக்கத்தக்கவர் ஒருவருமில்லையே. தேவர் முதலியயாவரும் அவனுக்குப் பயந்தவர்களாகவே யிருப்பதுமன்றி என்னையுநோக்கி நீ அவனைச் சந்தோஷப் படுத்துவாயென்கின்றனர். அவர்களை எப்படி நான் துணையாக நம்புவேன். அவர்களைவிட்டு நமது ஆசிரியரையடை யலாமென்றாலோ அவருக்கு என்ன படைத்துணை யிருக்கின்றது. அவரெப்படி என்னை ரக்ஷிக்கவல்லவராவர். அன்றியும் தேவர்களென்னை அந்தப்பாவிவசமாக்கத் துணிந்து இவரைவந்து ஆலோசனை கேட்டாலும் இவரும் அவர்களிடத்தில் தாக்ஷண்ய முடையவராயிருத்தலால் அவர்கள் ஆலோசனை யைமறுக்கமாட்டார். ஆகலான் நான் மனக்கவலைக் குள்ளாயிருக்கின்றேனேயன்றி வேறில்லை. நானோ ஸ்திரீ ஸ்திரீயா யிருக்கின்ற நான் காவலற்றிருத்தல் தருமமன்று. அன்றியும் நான் சுவர்க்கத்தி லிருப்பதென்றால் அது அவனுடைய சுவாதீனத்திலுள்ள தல்லவா! ஆகவே அவ்விடத்திலுள்ள நான் மாத்திரம் எப்படி சுவாதீன மாகாமற்போவேன். இப்போது நமக்குக் காலம் வித்யாசமா யிருப்பதால் இன்னம் என்ன தீங்குவருமோ! அனாதையா யிருக்கின்ற நா னென்செய்வேன் விபசாரியாயிருப் பேனாயின் எனக்கு யாதொரு கவலையுமில்லை. நான் உன்னையே எதிர்பார்க்கின்றவளா யிருக்கின்றேன். எனது கற்பைக்காத்துக் கொள்ளும் விஷயத்தில் மஹா துக்கிதையாயிருக்கின்ற வென்னைரக்ஷிக்கத்தக்கவர் அவ்விடத்திலில்லையென்று பரிபவப் படுகின்றதை இந்திரன் கண்டு மிகவும் வியந்தவனாய் ஒ சசிபோன்ற முகத்தையுடைய சசியே! உனக்கோருபாயஞ் சொல்லுகிறேன் கேட்பாயாக. நமக்குக் கெட்டகாலமா யிருக்கின்ற தென்றனையே அது உண்மை தான். ஆயினும் காலங்கெட்டதாக வருவது அனுபவிக்கும் போக சுகங்களுக்கேயன்றி அவரவர் நடக்கும் ஒழுக்க நடக்கைக்கன்று. இந்த வுண்மையால் "சிறைகாக்குங் காப்பெவன் செய்யுமகளிர் நிறைகாக்குங் காப்பே தலை" எனக்கூறும் தருமவுரையை நாடிச் சிறையை நாடாது உனது நிறையைநாடு. அந்நிறையே உனக்குச் சிறை அந்நிறையில்லாதொழியின் வேறெந்தச்சிறைகளால் காக்கப் பட்டாலும் நீ கற்புடையவளாக மாட்டாய். இவ்வுண்மையுணராத மனிதர் நம்முடைய ஸ்திரீயை நாம் காவலோடுவைத்திருக்கின்றோம் அவள்

கற்புக்கு மோசம்வராதென் றிறுமாந்து ஆண்சிங்கம் போன்றிருப்பாராயின் நிறையிழந்து காமத்திலுழலும் ஸ்திரீ இவனது சிங்கநடையை நடைபெறுவிப்பாளோ! ஆகலான் நீ காவலில்லையென்று கவலைகொள்ளற்க. காவலாளிகள் உன்னிடத்திலேயேயிருக்கின்றனர். அவர்களை வேண்டிக்கொள். உனக்குநான் என்ன விசேஷஞ்சொல்லவேண்டும். ஆனால் முயற்சியை யனுசரித்து ஓர் வஞ்சனையான வுபாயமொன்று சொல்லுகிறேன். என்னையெனின்! அந்தத்துஷ்டன் உன்னைப் பலாத்காரஞ்செய்ய வருவானாயின் நீ அதற்கிணங்கினவள்போற் காட்டி அவனை ஏகாந்த ஸ்தானத்தில் சமீபமாய் வைத்துக்கொண்டு ஓ அரசனே! நீர் சப்த ருஷிகள் தாங்கச் சிவிகையின்மேல் என்னிடம் வருவீரானால் நான் மிக்க சந்தோஷமுடையவளாய் உம்முடைய சுவாதீனமாகவே யிருப்பேன். முதலில் என்னிடம் இப்படிநீர் வரவேண்டு மென்று நான் விரதங் கொண்டிருக்கின்றேனென்று கூறுவையே யாயின் அவன் காமாந்தகனாய் அறிவிலியா யிருத்தலால் நீ சொல்லியதையெண்ணிப் பாராது ருஷிகளை அவனைத் தாங்கிவரும் வேலைக்கு ஆளாக்கி விடுவான்; அவர்களும் அதற்குடன்படுவார்கள். அவர்களுடன்படும் பக்ஷத்தில் அவர்களால் அவனுக்குச் சாபம்வருவது நிச்சயம். சகதம்பிகையும் உனக்குச் சொல்லி யிருக்கிறபடி துணையாயிருந்து முடிப்பாள். அவளை நினைக்கின்றவர்களுக்கு எப்போதுஞ் சங்கட முண்டாக மாட்டாது. ஒருசமயம் உண்டானாலும் அது நன்மையாக மாறிவிடும். ஆகலான் ஆசிரியர் உனக்குபதேசித்தபடி மணித் வீபத்தில் வீற்றிருக்கின்றவளாகிய அம்பிகையை சர்வப்பிரயத்தினத்துடன் நீ மறவாமற் பூசித்த வருவாயாகவென்றனன். சசியும் கணவன் சொல்லே தெய்வவாக்காகையான் அவ்வாக்கை வுண்மையாகக் கொண்டு நகுஷனிருக்கு மிடத்தைப்போய்ச் சேர்ந்தாள்.

அவள் வருகையைக் கண்ட நகுஷன் மிகவும் மகிழ்ந்தவனா யவளைப்பார்த்து ஓ சத்திய வாக்குடையவளே! சுகமாய் வந்து சேர்ந்தனையா! உனக்கடிமையாயிருக்கின்ற என்னிடத்தில் நான் சீக்கிரமாய் வருவேன் நீ அதுவரையில் உயிர்வாழ்ந்திருப்பாயென்று சொல்லிப்போன அவ்வுண்மைச் சொல்லா லுயிர்வாழ்ந் திருக்கின்றேன். இனி உயிர்வாழப்பெற்றத னாலடையவேண்டிய சந்தோஷத்தையு மடைந்தவனாயினேன். இனி என்னிடத்தில் நாணமுற்றிருப்பதை விடுவாய். நானுன்னிடத்தில் ஆவலுள்ளவனாயிருத்தலால் என்னை நீ சேரவேண்டிய தவசியம். உனக்கிப்போதாக வேண்டிய விஷயமேதேனுமிருக்குமாயி னதனைச் சொல்லுவாய், இப்போதே செய்து முடிக்கின்றேனென்று அவன்

வேண்டவே இந்திராணியானவள் இது நல்லகால மென்றெண்ணி ஓ தேவராசனே! எனக்குவேண்டிய காரியங்களனேகமாய் முடித்துவிட்டாய். அது என்னயெனின்! நானிந்திரனை யிழந்திருக்கின்ற காலத்தில் பூலோகத்திலிருந்து இவ்வுலகத்துக்கு வந்து விட்டாய். வந்த நீ தேவர்கள் முநிவர்கள் முதலாயினாரைச் சுவாதீனஞ் செய்து கொண்டாய். அவர்களைக் கொண்டு பட்டாபிஷேகமுஞ் செய்து கொண்டு உன்னாணையுஞ் செலுத்திவருகின்றாய். அவர்களும் உன்னாணைக் கஞ்சுகின்றனர். என்னையும் அவர்களைக் கொண்டே வுன்னிடம் வருவித்துக்கொண்டாய். இன்னமு மெனக்குச் செய்யவேண்டியதென்ன விருக்கின்றது. இவ்வளவு வன்மையாளனை நான் கண்டதில்லை. ஆனால் எனக்கோர் குறையுளது. அது, நீ இப்போது என்னைநோக்கி "உனக்கேதேனும் ஆக வேண்டிய விஷய மிருக்குமாயின் அதனைச் சொல்வா யென்றும், இப்போதே செய்து முடிக்கிறேனென்றும்" சொன்னபடியினால் அதனைச் சொல்லத்துணிகின்றேன். அதனை முடித்துவிடுவாய். அதன்பிறகு நானொரு சந்தேகமும் யாதொரு தடையுமின்றி யுன்னோடு வாழ்வதிற் றடையேயில்லை யென்றனள். அவள் வாய்மொழியைக் கேட்ட நகுஷன் நீ ஒன்றுஞ் சந்தேகிக்க வேண்டாம் உனது கோறிக்கையைச்சொல் அது கிடைக்கத்தகுந்ததாயிருந்தாலும், கிடைக்கத்தகாததா யிருந்தாலும் அதனை நான் முடித்துக் கொடுக்கிறேனென்று பின்விளைவை யறியாதவற்பன் கூறினான். இந்திராணி அதனைவற்புறுத்தவேண்டி ஓ தேவராசனே! உன்னிடத்தில் சிறிது சந்தேகமிருக்கின்றது நீ முடிப்பாயென்று எனக்கு நம்பிக்கையில்லை. நானெப்படிச் சொல்லுவேன். உலகில் சத்தியவாக்குடையவரரிது. ஆகையால் நீ சொல்லிய துண்மையா யிருக்கும்பக்ஷத்தில் நான் சொல்லுகிறபடி முடிக்கிறேனென்று சபதஞ்செய்து கொடுப்பை யாயின் நீ வுண்மைக்குக் கட்டுப்பட்டவனென்று தெளிந்து பின்னர் என் காரியத்தைச் சொல்லுகிறேன்.

அக்காரியத்தைச் செய்து முடிப்பையேயாயின் யான் உனக்குச் சுவாதீனை யென்பதுஞ் சத்தியமே. இதுவே நான்செய்யும் சத்தியமென்றாள். நகுஷன் ஓ என்மனோரமையே! நீ சொல்வதை நான் செய்யாமற் போவேனாயின் நான் செய்த யஜ்ஞம் தானமுதலிய சகல புண்ணியங்களும் இழந்தவனாவேனென்று சத்தியஞ் செய்தனன். இந்திராணி மகிழ்ந்து ஓ நகுஷனே! இந்திரனுக்கு யானை குதிரை தேர் முதலியன வாகனமா யிருக்கின்றன. விஷ்ணு மூர்த்திக்குக் கருடன் வாகனமா யிருக்கின்றான். உருத்திரருக்கு விருஷபம் வாகனமா யிருக்கின்றது. கணபதி சுப்பிரணியர்களுக்கு மூஷிகமும்

மயூரமும் வாகனமாக விருக்கின்றன. யமனுக்கும் பெரிய கடா விருக்கின்றது. மற்றத் தேவர்களுக்கும் விமானமுதலியவைக ளிருக்கின்றன. உன்னை நான் இவர்களெல்லாரினுஞ் சிறந்தவனாக வெண்ணுகிறேன். ஆகலான் உனக்கு யாவருக்கும் அமையாத வாகனத்தால் ஓர் சிறப்புண்டாக வேண்டுமென்று நினைக்கின்றேன். அஃதென்னையெனின்! நீதவத்திற்சிறந்த சப்தருஷிகளுந்தாங்கச் சிவிகையின் மேல்வரவேண்டும். அவர்கள் ஒருவருக்குந் தாங்கியதில்லை. அவர்கள் உன்னைத் தாங்கப்பெற்றால் உன்னைக் காட்டிலும் உத்தமன் எவனிருக்கிறான். அப்படிப்பட்ட வுன்னைப்பதியாகக் கொள்வதைப் பார்க்கிலும் எனக்குச் சிறப்பு யாதிருக்கின்றதென்றனள். நகுஷன் அதைக் கேட்டு அப்பொழுதே தேவியினுடைய மாயையின் வசப்பட்டுமமதை யடைந்து சிறிதும் ஞானமில்லாதவனாய் இந்திராணியை மிகவும் புகழ்ந்து ஓ இந்திராணியே! உன்னுடைய அறிவின் விசாலத் துக்கு நானென்ன சொல்லுவேன். என்னுடைய தவமுதலியவற்ற மதிக்கத்தக்கவர் இவ்வுலகின்கண் ணெவரிருக்கின்றனர். நீ இப்போது உண்மையைச் சொன்னாய். என் பெருமைக்குத்தக்க நல்லவாகனத்தையும் ஏற்பாடுசெய்தாய். உன்னிஷ்டப்படியே செய்கிறேன். முநிவர்கள் எனதுவாகனத்தைத் தாங்கவருவாராயின் உலகம் எனது தவத்தையும் புகழையும் செல்வப்பெருக்கையும் என்னவி தமாகத்தான் சொல்லிப் புகழாது. இவ்வளவு புகழை எனக்குத் தேடினாயல்லவா! உன்சொற்படிச் செய்து உன்னிடம் வருகின்றேனென்பது அவளைப் போகவிட்டு, சப்தருஷிகளை வரவழைத்து ஓ மஹருஷிகாள்! நான் எதைச் செய்யவேண்டுமென் றெண்ணினாலும் அதனைச் செய்ய வல்ல சர்வசக்தியை யுடையவனா யிருக்கின்றேன். என்னைக் குறித்து என்ன காரியஞ் செய்யவேண்டு மென்று நான் சொன்னாலும் நீவிர் அதனை யாலோசனை யில்லாமற் செய்ய வேண்டும். இப்போது இந்திர ஸ்தானத்தை நான் அடைந்தேனே யன்றி இந்திராணியை யடையப் பெற்றேனில்லை. அவளைப் பெறாதொழிவதற்கா நானிவ்வுலகுக்கு வந்ததும் இந்திரனானதும் அதனை நீங்களே யோசித்துப் பார்மின்கள். அவள் என்னோடு கூடிவாழ்வதற்கு உங்களை நான் வாகனமாகக் கொண்டு வரவேண்டுமென்று என்னை வேண்டிக் கேட்டுக் கொண்டிருக்கின்றாள் இது செய்யக்கூடததா யிருந்தாலும் அவளுடைய வேண்டுகோளுக்காக என்பால் தயவுவைத்து எவ்விதத்திலாவது நீங்கள் செய்யவேண்டும். நான் மன்மதனால் மிகவுந் துன்பப்படுகின்றேன். என்னுடைய துன்பத்தைப் போக்குவது உங்களுக்குப் புண்ணியமும் கருணையுமாமன்றோ. உங்களை

யடைக்கலம் புகுந்தேன். இந்தக் காரியத்தை நடத்தவேண்டு மென்று பிரார்த்தித்தனன். வருங்காலத்தை யுணரவல்ல அகத்தியர் முதலிய அரும்பெருந் தவசிகள் அற்ப மதியாளன் கூறியதை இந்திராணி பால்வைத்த கருணையினால் அங்கீகரித்தனர். நகுஷன் மிகவுஞ்சந்தோஷ மடைந்தவனாய்க் கவலையற்றுச் சிவிகையைக் கொண்டுவரச் செய்து அம்மக ருஷிகள் தாங்கிநடப்ப இந்தநகுஷன் சிவிகையை நடத்தத் தொடங்கினன். இவன்வினையும் தீவிரமாயிவனை நடத்தத் தொடங்கிற்று. அவ்வினையை அம்பிகையினுடைய மாயாசத்தியும் நடத்தத்தலைப்பட்டது. இவ்வாறு மாயையும் வினையும் மேன்மேல் முறுகிமுயலவே அறிவாகியபெருஞ் செல்வமிழந்த நகுஷன் காமம் வெகுளிமயக்க மென்னு மூன்றனுட்பட்டு காமத்தை இந்திராணியி னிடத்தும், மயக்கத்தைத் தன்னறிவி னிடத்தும் வெகுளியைத் தானூர்ந்து வரும் சிவிகையைப் பொறுத்து வருபவருள் ஒருவராகிய அகத்திய முநிவரிடத்து மாக்கினான். ஓ அரசனே! நகுஷனுக்குப் பின்விளைந்த விளைவைக் கேட்பாயாக.

சிவிகையின்மீதேறி அதனைச் செலுத்தத் தொடங்கிய நகுஷன் வினை வசத்தான் அத்தருணம் இன்மையு ளின்மையாகிய அறிவின்மையை நிலைக்களமாய்ப் பெற்றிருந்தன னாதலின் "ஒன்னார்த்தெறலும் உவந்தாரை யாக்கலு" மாசிய பெருந்தவத்தினர் தனது சிவிகையைப் பொறுத்துவரும் அருமையையுணராது ஆகாரமாயுண்ட வாதாவி என்னும் அசுரனைத்தமது வயிற்றினிடத்திலேயே ஜீர்ணமாய்ப் போகக் கரத்தால் வயிற்றைத் தடவினவரும் சமுத்திரநீரை ஒருளுந்தளவாக்கி ஆசமனமாக வுண்டவரும், விந்தகிரியை யடக்கினவருமாகிய அகத்திய முநிவரது திருமுடிமேல் தனது கால் தாங்கும்படித் தொங்கவிட்டுக் கையிலுள்ள பிரம்பால் அவரைத் தாக்கி ஸர்ப்பு ஸர்ப்பென்றான். உடனே அகத்திய முனிவர் நீயா என்னைச் சர்ப்பென்று சொல்லத்தக்கவ னென்று கோபங்கொண்டு எந்தக் காட்டில் சங்கடங்கள் பெரிதாக நேரிடுமோ அந்தக் காட்டில் அநேகமாயிரவருடம் பெருந்தேகமுள்ள சர்ப்பமாய்க் கிடப்பாயாக வென்று சபித்தனர். அதனைக் கேட்ட நகுஷன் நடுநடுங்கி ஐயரே! அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருள்கவென்று வேண்டலும் குறு முனிவர் சற்றிரங்கினவராய் ஓ நகுஷனே! நீ மலைப்பாம்பாகவானாலும் உன்னுடைய பராக்ரமத்தினால் சஞ்சரித்து மீண்டுஞ் சுவர்க்கத்தை வந்தடையப் போகின்றாய். உதிஷ்டிரனென்று பிரசித்திபெற்ற தருமனுன்னைப் பார்த்துக் கேட்கும் கேள்விகளுக்கு நீ விடைகூறும்போது இச்சாபம் நீங்குமென் றனுக்கிரகித்தனர். நகுஷன் அவ்வனுக்கிரகத்தைப் பெற்றுச் சுவர்க்கத்தி னின்றும் வீழ்ந்தான்.

இச்செய்தியை யறிந்த பிரகஸ்பதி வேகமாய் மானதசரசுக்குப் போய் இந்திரனைக் கண்டு நடந்த செய்திகளைச் சொல்ல இந்திரன் கேட்டுச் சந்தோஷமடைந் தவ்விடத்திலேயே யிருந்தனன். தேவர்களும் முனிவர்களும் நகுஷன் பூலோகத்தில் வீழ்ந்ததைப் பார்த்து யாவரும் இந்திரனிருக்கு மிடத்தைச் சேர்ந்து அவனைச் சமாதானப் படுத்தி மரியாதையுடன் சுவர்க்கத்துக் கழைத்துக் கொண்டுபோய் சிம்ஹாசனத்தி லிருத்தி மங்களகரமான அபிடேகஞ் செய்தார்கள். பின்னர் இந்திரன் அந்தப்புரம் போய் மிக்க பிரேமையோடு கூடின சசியோடு நந்தனவனத்தில் கிரீடித்துக்கொண் டிருந்தனன்.

ஓ அரசனே! விருத்திராசுரனால் துன்பமடைந்த இந்திரன் தேவி யனுக்கிரகத் தாலன்றோ தன்னிடம் போய்ச்சுகமாய் வாழப் பெற்றனன் எவன் எந்தக் கர்மத்தைச் செய்கின்றானோ அவன் அந்தக் கர்மபலத்தை யவசியமாய நுபவிப்பான். செய்யப்பட்ட சுபாசுபகர்மம் அநுப வித்தாலல்லது தீருதலில்லையென்றார் வியாசமுனிவர்.

ஒன்பதாம் அத்தியாயம்

நஹுஷஸ்ய இந்திரபதப்ரச்யுதி முற்றிற்று

———

சுலோகம் - (சாஏ)

ஆஉ அத்தியாயம் கூ - க்கு சுலோகம் (ருசாசு.)

உ

ஈத்ருகித்யவிநிர்த்தேஸ்யாயை நம:

———

பத்தாம் அத்தியாயம்

* கர்மணாங்கதி விசேஷவிசாரம்

———

சூதர் கூறுகின்றார். ஜனமேஜயன் வியாசமுனிவரை வணங்கி ஓ சுவாமிகாள்! ஆச்சரியமான நகுஷனுடையசெய்தியும் இந்திரனுடைய செய்தியும் இந்த இந்திரனுக்கும் இந்திராணிக்கும் தேவி துணையாய் நின்று அவர்கள பீஷ்டத்தை நிறைவேற்றிய மகிமையும் தேவரீரால் சொல்லக்கேட்டேன். ஓ ஐயா! நல்ல புண்ணிய விசேடத்தா லடையத்தக்கதாயுள்ள சுவர்க்கலோகத்துக் கதிபதியாயிருக்கும்

* கர்மத்தின் செயலை நன்றாய் விசாரஞ்செய்தல்.

இந்திரன் சுகத்தையே மேன்மேலும் அடைய வேண்டியவனாயிருப்ப அவன் அவ்விடத்தி லனுபவிக்கக்கூடாத ஸ்தானப்பிரஷ்டமுதலிய பலபெருந்துன்பங்களை யனுபவித்தானென்பதைக் கேட்கும் விஷயத்தில் எனக்குச் சந்தேகமுண்டா யிருக்கின்றது. என்னையெனின்! நூறுயாகஞ் செய்து முடித்தபின்னர் இந்திரபதங்கிடைத்தது. அது கிடைத்தபின்னர் தேவர்களுக்குப் பிரபுவாயிருக்குந் தன்மையுங்கிடைத்தது. இவ்விரண்டுங் கிடைக்கப் பெற்றவன் எப்படி ஸ்தானப் பிரஷ்டத்தை யடைந்தான்! இவற்றிற்குக் காரணஞ்சொல்லும். தேவரீர் சகலபுராணங்களையுஞ் சொன்னவராயும் எல்லா மறிந்தவராயு மிருக்கின்ற மகானாயிருக்கிறபடியால் உம்மிடத்தில் பக்தியுள்ள சிஷ்யனாகிய வெனக்குச் சொல்லக்கூடாத சங்கதி யாதுளது. ஆதலால் எனக்குண்டாகிய சந்தேகங்களை நீக்கி யருளுவீரென்று ஜனமேஜயன் கேட்க வியாசர் அரசனைப் பார்த்து அவன் வினாக்களுக்கு விடை முறையாய்ச் சொல்லத்தொடங்கினார்.

ஓ ராஜஸ்ரேஷ்டனே! ஆச்சரியமான கர்மத்தின் காரணத்தைக் கேட்பாயாக. தத்வமறிந்தவர்களால் கர்மங்களின் முறைமையைச் சஞ்சிதம் பிராரத்தம் வர்த்தமானமென மூன்று விதமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. அவற்றுள் சஞ்சிதமானது அநேக கன்மங்களினாலுண்டான தென்றும், அது இராசதம் தாமசம் சாத்விகமென மூன்றுவகை யென்றும், பிறவிகடோறுந் தொடர்ந்துவரத் தக்கதென்றும், சுபமாயும் அசுபமாயும் பாபமாயும் புண்ணியமாயுமுள்ளதென்றும், பிராரத்தமானது. இப்போது கூறிவந்த படி சுபாசுபமாயும் பாவபுண்ணியமாயுமுள்ள அவையப்படியப்படியே அவசியமாயொவ்வொருசென்மத்திலும் அனுபவிக்கவருவனவென்றும், அவ்வாறனுபவித்தாலுங்கல்பகோடி காலங்களானாலும் சேஷப்படாமல் கழிகிறதில்லை யென்றும், வர்த்தமானமானது சுபகிருத்தியமாவது அசுபகிருத்தியமாவது எதைச்செய்கிறானோ அந்தக்கிருத்தியமென்றுஞ் சொல்லப்படுகின்றது. ஓ அரசனே! தேகாரம்ப சமயத்தில்முன் கூறிய சஞ்சிதகர்மத்திலிருந்து சிறிது கர்மமெடுத்து கால நியமப்படி இவனிடத்திலனுபவிக்கவருக்கிறதெதுவோ அதைத்தான் பிராரத்தமென்றும் அவ்வனுபவத்தினாலேயே சஞ்சிதம்சிறிதுசிறிதாய் க்ஷயத்தையடைந்துவருமென்றுஞ் சொல்லப் பட்டிருக்கிறது. ஆகலான் பிராரத்தகர்மம் ஜன்மங்கடோறு மனுபவிக்கத்தக்கது. அதிற் சம்சயமில்லை. இந்தவுண்மையால் தேவராயும் மநுஷ்யராயும் அசுரராயும் யக்ஷர்களாயும் கந்தர்வர்களாயும் கின்னரர்களாயும் பிறந்தாலும் சன்மாந்தரங்களில் நன்மைதீமையாய்ச் செய்யப்பட்ட கர்மங்கள் அவசியமாய் அநுபவிக்கத்தக்கனவென்பது நிச்சயந்தான்.

தேகோற்பத்திக்குக் காரணங்கன்மமே. அக்கன்மம்நாசமானால் பிராணிகளுக்குச் சன்மமும் நாசமாய்விடும் இதிற்சம்சயமில்லை. தேவதானவயக்ஷகின்னரர்களா யிருந்தாலும் அவரெல்லாங் கர்மத்துக்குச் சுவாதீனப்பட்டிருக் கின்றார்களல்லவா. அப்படியில்லா விட்டால் தேகசம்பந்த மெப்படியுண்டாகும். தேகோற்பத்தி சுகதுக்கானுபவங்களுக்குக் காரணமாயிருக்கிறது. ஆதலால் அநேகசன்மங்களிலுண்டாகிய சஞ்சிதகன்மங்களின் மத்தியில் ஏதோ ஒருகர்மத்துக்குக் காலபக்குவ முண்டாகின்றது. அப்பக்குவத்தினால் அக்கர்மத்தில் வேகமுண்டாகின்றது. அதுபாபமாயிருந்தால் அந்தப் பிராரத்த கர்மவசத்தினால் பாவத்தையும் புண்ணியமா யிருந்தாலதனையுஞ் செய்கிறான். இவ்வனுபவவிசேடத்தைத் தேவர்முதலிய யாவரிடத்துங் காணலாம். இதற்கொன்று கூறுகின்றேன். தருமனிடத்திலிருந்து பிறந்த நரநாராயணரிருவரும் கிருஷ்ணார்ச் சுனர்களாகப் பிறந்தார்களல்லவா! இச்செய்தி யிங்ஙனமிருக்க, உலகில் எவன் தேவாம்சமுள்ளவனோ அவன் அதிக சம்பத்துடையவனாயும், அன்னதானமுதலிய தானங்களைச் செய்பவனாயும், ருஷி அம்ச முடையவன் காவியங்கள்ச் செய்யத்தக்கவனாயும், ருத்ராம் சமுடையவன் உருத்திரனைப் பூசிப்பவனாயும், விஷ்ணு அம்சமுடையவன் அரசனாயும் இவ்வண்ணமாகவே இந்திரன் அக்னி யமன் குபேரன் முதலியோருடைய அம்சங்களுடையோர் பிரபுத்துவத்தையும் பிரபாவத்தையும் கோபத்தையும் பராக்கிரமத்தையு முடையவராயிருப்பர். சரீரங்களும் அப்படியே நிர்மிக்கப்படுகின்றன வென்பது நிச்சயம். இந்தமுறைமையை யநுசரித்தே உலகத்தில் பலவான்களாயும் வித்யாவான்களாயும் தானஞ்செய்பவர்களாயும் எவரெவரிருக்கின்றனரோ அவர்களையெல்லாம் தேவாம்சங்களாகச் சொல்லப்படுகின்றனர். ஓ அரசனே! சஞ்சிதகர்மம் பிராரத்தத்துக்கு வரும் விநோதத்தைச் சில கூறுகின்றேன் கேட்பாயாக. பாண்டவர்கள் தேவாம்சங்களாகச் சொல்லப்படுகின்றார்கள். கிருஷ்ணரும் நாராயணாம்ச மென்கின்றனர். பாண்டவர்கள் காட்டிற் பிறந்தார்கள் பிறகு நகரமடைந்தார்கள் பின் புஜபலத்தினால் ராஜசூய யாகத்தையுஞ் செய்தார்கள். அதன்பின்னர் துக்ககரமாகிய வனவாசத்தையடைந்தார்கள். அந்தத்துக்ககரமாகிய வனவாசத்தில் அருச்சுனனால் அருமையான தவஞ்செய்யப்பட்டது. பின்னர் தேவர்களால் வரதானம் பெற்றனர். அருச்சுனன் பின்னரடைந்த அநேக துக்கசமயங்களில் அவனாற்செய்யப்பட்ட தவங்களெவ்விடத்திற்குப்போயிற்று? பூர்வத்தில் பதரி காஸ்ரமத்தில் நரனாயிருந்தபோது செய்த உத்தமமானதவம் அருச்சுனனாய் வந்தபோது எங்கேபோயிற்று? அந்தத்தவம் ஏன்

பலன்கொடுக்கவில்லை? ஆகலான் பிராணிகளுடைய தேகசம்பந்தத்தில் கர்மத்தின் கதிமறைந்திருக்கிறது. அதனை எவ்வித்தினாலும் தேவர்களறிய வேண்டினாலும் அறியமுடியா. ஏனைய மனிதர்களுக்குச் சொல்லவேண்டுமா; கிருஷ்ணரும் அதிகசங்கடமான காராக்கிருகத்தில் பிறந்தார். வசுதேவரால் நந்தகோபரிடம் விடப்பட்டார். பதினொருவருடம் அங்குவசித்தார். மறுபடி மதுராபட்டணத்துக்கு வந்து கம்சனையடித்தார். தாய்தந்தையர்களைக் காராக் கிருகத்திலிருந்து விடுவித்தார். மதுரையில் உக்கிரசேனனை ராஜாவாகச்செய்தார். மறுபடியும் மிலேச்சராஜனுடைய பயத்தால் துவராகைக்கு வந்தார். பெரிதான கர்மங்களையும் கர்மவசத்தால் செய்தார். இதுபோல் துவாரகையில் அநேக காரியங்களைச் செய்து பிரபாச மென்னுமிடத்தில் தேகத்தியாகஞ்செய்து குடும்பங்களோடு கூடச் சுவர்க்கம் போயினார். கிருஷ்ணருடைய புத்திரர்களும் பௌத்திரர்களும் சிநேகர்களும் சகோதரர்களும் குலஸ்திரீகளும் சகல யாதவர்களும் பிராமணசாபத்தால் பிரபாசத்தில் நாசமடைந்தார்கள். ஓ அரசனே! பின் கிருஷ்ணர் வேடன்பாணத்தால் நாசமடைந்தார் இவையெல்லாஞ் சொல்வதற்கு வேண்டிய வினாக்களை நீகேட்டபடியினால் ஒருவராலும் அறியக்கூடாத கர்மங்களின் கதிகளில் வாறாமென்று ஒருவா றெடுத்துக்கூறினேன். நீ இவ்வுண்மையை யுணர்ந்து பிராணிகளுடைய சரீரம் சுகதுக்கங்களுக்குப் பாத்திரமாயிருக்கிற தென்றும் அதனால் பிராணிகள் இடைவெளியில்லாமல் சுகத்தையாவது துக்கத்தையாவது செய்து அவற்றைய நுபவிக்கின்றார்களென்றும் ஒருபிராணியாவது தன் சுவாதீனமாயிருப்பது கிடையாதென்றும் யாவரும் எப்போதும் தெய்வாதீனமாயிருந்து ஜனன மரணங்களையும் துக்கசுகங்களையு மநுபவிக்கின்றார்களென்றும் அறிந்து சாந்தியடைவாயாக.

பத்தாம் அத்தியாயம்

கர்மணாங்கதி விசேஷவிசாரம் முற்றிற்று.

சுலோகம் - சுக.

ஆஉ அத்தியாயம் க0 - க்குச் சுலோகம் (சு0ரு)

உ

ஈஸ்வரத்வவிதாயிந்யை நம:

———

பதினோராம் அத்தியாயம்

யுகதர்மம்.

——

ஜனமேஜயன் கூறுகின்றான். ஓ பிராமண சிரேஷ்டராகிய வியாச முநிவரே! கிருஷ்ணார்ச் சுனர்களுடைய சன்மம் பூபாரங்கழிக்க வந்ததென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது நீர் கூறிவந்தனவற்றை யாராயுங்கால் என் மனதில் சந்தேகமுண்டாயிருக்கிறது அது என்னையெனின், துவாபரயுக முடிவில் பூமிதேவியானவள் அதிபாரத்தத்தினால் பீடிக்கப்பட்டுச் சக்தியீனையாய்த்துக்கிதையாய்க் கோருபந்தரித்துப் பிரமாவைச்சரணடைய அவர் பூ பாரத்தை யொழிப்பதற்கும் சாதுக்களை ரக்ஷிப்பதற்கும் விஷ்ணுமூர்த்தியைப் பிரார்த்தித்தனரென்றும் அவர் பரதகண்டத்தில் வசுதேவரது கிருகத்தில் சகலதேவரோடும் அவதாரஞ்செய்து பூலோகத்திலுள்ள பாவ புத்தியோடு கூடியிருந்த ராஜாக்களையெல்லாங் கொன்றன ரென்றுங் கூறியிருக்கின்றதே. பூமியில் எவ்வளவுபாரம் நீங்கிற்று? பீஷ்மர் துரோணர் விராடன் துருபதன் பாகிலீயன் சோமதத்தன் கர்னன் முதலிய இவர்களெல்லாங் கொல்லப்பட்டார்களே இவர்களேன் கொல்லப் பட்டார்கள்? எல்லாத் தனங்களும் எவர்களால் அபகரிக்கப் பட்டன? கிருஷ்ண மூர்த்தியினுடைய ஸ்திரீகளெல்லாம் எவரால் அபகரிக்கப்பட்டார்கள்? அப்படிப்பட்ட துஷ்டர்கள் இடையர்கள் மிலேச்சர்கள் வேடர்கள் கிருஷ்ணரால் என் கொல்லப்படவில்லை. இவர்களெல்லாங் கொல்லப்படாமலிருக்க அறிவிற்சிறந்த கிருஷ்ணரால் பூபாரம் நீங்கிற் றென்பதென்னை? ஓ மஹானுபாவரே! இவ்வகைத்தான சந்தேகம் என்னுள்ளத்தை விட்டுப்போகவில்லை. கலியில்சகலரும் பாவத்தைச் செய்கின்றவர்களா யிருக்கின்றனரே. பூபாரம் போயிற்றென்பதெங்கே யென் றரசன் கேட்க, வியாசமுனிவர் ஓ அரசனே! எந்த யுகத்தில் எந்தவிதமான சன்மங்கள் காலானுகுணமாக வுண்டாகின்றனவோ அவை வேறாக மாட்டா. அவைகட்கு யுகதருமந்தான் காரணம். எவர்கள் தருமத்தில் மாத்திரம் ஆசத்தியுள்ளவர்களோ அவர்கள் கிருதயுகத்திலும், தருமத்திலும் அர்த்தத்திலும் எவர்கள் ஆசக்தியுள்ளவர்களோ அவர்கள் திரேதாயுகத்திலும், தர்மார்த்த காமமென்னும் மூன்றிலும்

ஆசக்தியுள்ளவர்கள் எவர்களோ அவர்கள் துவாபரயுகத்திலும், அர்த்தத்திலும் காமத்திலும் ஆசக்தியுள்ளவர்கள் இக்கலியிலும் பிறப்பார்கள். ஓ அரசனே! யுகதருமம் வித்யாசத்தையடையவே யடையாது. தர்மத்தையும் அதர்மத்தையுஞ் செய்வது காலந்தானென்று முனிவர்கூறவே அரசன் ஓமஹாநுபாவரே! கிருதயுகமுதலியமூன்று யுகங்களில் தானமுதலிய நற்கருமங்களைத் தவறாதியற்றி வந்தபுண்ணிய சீலர்கள் இப்போது எங்கேயிருக்கின்றனர்? இக்கலியுகத்தில் துர்நடத்தை யுள்ளவர்களாயும் ஒழுக்கமுதலிய நற்கருமங்களை விட்டிருப்பதால் நாணமற்றவர்களாயும் பாபிஷ்டர்களாயும் தெய்வத்தை நிந்திக்கிறவர்களாயு மிருக்கின்றவரெல்லாம் கிருத யுகம்வரும்போது எங்கேபோகின்றனர்? இவையெல்லாம் எனக்கு விஸ்தாரமாய்ச் சொல்லவேண்டும். இந்தத்தரும நிச்சயங்களை அவசியமாய்க்கேட்க ஆவலுடையவனா யிருக்கின்ற னென்றனன்.

வியாசர் ஓ அரசனே! கிருதயுக முதலிய மூன்றினும் அந்தந்த யுகங்கட்குத் தக்கபடி நான்குவருணத்தவரும் தங்களுக்கு விதித்த கருமங்களிலேயே ஆவலுள்ளவர்களாயிருப்பர். அத்தருமங்களாவன. சத்யம் தானம் தயை தன் மனையாளோடு மாத்திரம் புணர்தல் எவரிடத்தும் துரோகஞ்செய்யாதிருத்தல் சகல செந்துக்களிடத்தும் சமபுத்தியாயிருத்தல் முதலிய சாதாரணமான தர்மங்களாம். இவற்றைக் கிருதயுகத்தில் நான்கு வருணத்தவர்களேயன்றி ஏனைய வருணத்தவரும்விடாதவராயும் அவைகளிற் சத்தியபுத்தியுடையவராயும் நடக்கப்பெற்றவராகலான் அவரெல்லாம் சுவர்க்கத்தையடைந்தார்கள். ஏனைய திரேதாயுகம் துவாபரயுகங்களிலும் அப்படியே தான். இக்கலியுகத்தில் முன்கூறிய தருமங்கட்கு மாறாயொழுகும் மனிதர்களெல்லாம் இக்கலியந்தத்திலேயே நரகத்தையடைந்து கிருதயுகமுதலிய மூன்று யுகபரியந்தம் அதிலனுபவிக்கவேண்டிய துன்பங்களையெல்லாமனுபவித்து மீண்டும் அவரெல்லாம் கலியுகம் வரும் போதுமுன்போல் பூவுலகிற் பிறந்துழல்வர். கிருதயுக வாரம்பத்தில் சுவர்க்கத்திலிருக்கும் சத்புருஷரெல்லாம் பூவுலகில்வந்து பிறக்கிறார்கள். ஓ அரசனே! இவ்வண்ணம் தருமங்களிற்றவராத புண்ணியரெல்லாம் கலியுகந்தோன்றி முடியுமளவும் சுவர்க்கத்தில் வசிப்பரென்றும், தருமத்தை யெண்ணாத பாவிகளெல்லாம் கிருதயுக முதலிய மூன்று யுகங்களும் தோன்றி யொடுங்குமளவும் நரகத்தில் வசிப்பரென்று மறிவாய். இப்பொழுது சொல்லிவந்தமுறை மாறிவருவது முண்டு. என்னையெனின் கலிபுருஷாளாகிய சிற்சில துஷ்டர்கள் தெய்வகதியாய்த் துவாபரதிரேதகிருதயுகங்களிற் பிறக்கிறார்கள்.

கிருதயுகத்தில் பிறக்குந் துஷ்டர்கள் நற்கருமத்துக்குரிய அந்த யுகத்திலும் செய்யுங் கர்மப்பிரபாவத்தினால் கலியிற்பிறந்து மிகுந்ததுக்கத்தையடைந்து அக்கலியுக தர்மத்தினால் மறுபடியும் பாப கர்மங்களையே செய்கிறார்கள். அது யுகதருமத்தின் செயல். ஆதலால் காலத்தின்சமாசாரம் எப்போதும் மாறாதென்று கூறவே ஜனமேஜயன் ஓமகானுபாவரே! எனக்கு இந்தயுகதருமங்கள் மூன்றுஞ்சொல்ல வேண்டும் எந்தெந்தயுகத்தில் எந்தெந்தத்தருமங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன அவைகளையப்படியப்படியே கேட்க விரும்புகிறேனென்று பிரார்த்திக்க வியாசமுனிவர் ஓ அரசனே! சாதுக்கள் மனதும் யுகதர் மத்தினால் மாறுபடுகிறதுண்டு அதனை முன்னர் திருட்டாந்த முகமாய்க் கூறுகின்றேன் கேட்பாயாக. உன் றந்தை யயாதிகுலத்திற் பிறந்த க்ஷத்திரியன்; பூலோகத்துக்கெல்லாம் அரசனாயிருக்கிறவன் அத்தன்மையன் தவஞ்செய்கிற பிராமணனுடைய கழுத்தில் இறந்தபாம்பை யெப்படிச் சேர்த்தான். அவனெண்ணம் அப்படிப்பட்ட பாவத்தில் பிரவர்த்தித்த தல்லவோ அது யுகதர்ம மென்றறிந்து கொள்ள வேண்டியது. யுக தருமத்தால் புத்தி மாறுதலுமுண்டு. ஆகலான் அறிவுடையவன் மிகவும் பிரயத்தனத்தால் முன்கூறிவந்த தருமங்களைச் செய்யவேண்டியது. இனி நீ கேட்ட வண்ணம் யுகதருமங்களைக் கூறுகின்றேன். கிருதயுகத்தில் அந்தணர்கள் வேதமறிந்தவர்களாயும் பராசத்தியைப் பூசிக்கின்றவர்களாயும் தேவிதரிசனத்தில் ஆவலுள்ளவர்களாயும் காயத்திரீபிரணவத்திலும் காயத்திரீதியானத்திலும் காயத்திரீஜபத்திலும் மாயாதேவியின் பீஜாக்ஷர ஜபத்திலும் ஆசக்தியுடையவர்களாயிருப்பர். க்ஷத்திரியர்கள் கிராமங்கடோறும் ஆலயம் கட்டிவைப்பதில் பெரு முயற்சியுள்ளவர்களாயும் யாவரையும் தங்கள் தங்கள் கருமத்திலாசத்தியும் சத்யம் சுசி தயையென்னும் இவைகளோடு கூடியுமிருக்கச் செய்பவர்களாயும் அயுக்தகர்மத்தி லாவலில்லாதவர்களாயும் தத்வக்ஞானத்தில் சமர்த்தர்களாயு மிருப்பார்கள். வைசியர்கள் பயிர் வர்த்தகம் கோரக்ஷணம் இவைகளி லாசக்தியுள்ளவர்களா யிருப்பார்கள். சூத்திரர்கள் மூன்றுவருணத்தவரையும் பாதுகாப்பதிலும் ஈஸ்வர சேவையிலும் சமர்த்தர்களாயிருப்பார்கள். இவ்வாறு வருணநெறியிற் பிறழாதநான்கு வருணத்தவரேயன்றி ஏனையோரும் தேவிபூஜையில் ஆசக்தி சிறிதுங் குன்றாதவர்களா யிருப்பர். திரேதாயுகத்தில் கிருதயுகத்திலுள்ள அந்தத்தருமங்களுக்குச் சிறிது குறைவுவரும். துவாபரயுகத்தில் அந்தத் தருமங்கட்கு விசேஷமாய்க் குறைவு வரும். கலியுகத்தில் முந்திய மூன்று யுகங்களில் ராக்ஷசர்கள் எவர்களோ அவர்களே அந்தணர்களாய்ப் பிறந்து பாஷண்டர்களிடத்தில்

பிரீதியுள்ளவர்களாயும் பிரஜைகளை வஞ்சிப்பதில் மிகுந்த பத்தியுள்ளவர்களாயும் அசத்திய வசனமே கூறுகின்றவர்களாயும் வேததருமங்களைவிட்டு டம்பாசாரமுள்ளவர்களாயும் சாமர்த்திய முடையவர்களில் மிக்கசமர்த்தர்களாயும் மேலான தருமஞ்சிறிதுமின்றியே நமக்கு மேலானவ ரெவரிருக்கின்றனரென் றெண்ணுதலாகிய அகங்காரமாத்திர முடையவர்களாயும் வேதாத்தியயனமென்பதே யில்லாதவர்களாயும் சூதர்களுக்கு வேலைசெய்கின்றவர்களாயும் நானாவித அதர்மங்களை நடத்துகின்றவர்களாயும் வேதங்களை நிந்திக்கின்றவர்களாயும் மகாகுரூரர்களாயும் தருமப்பிரஷ்டர்களாயும் தருமத்துக்கு விரோதமாய்ப் பேசுகின்றவர்களாயும் சூத்திரதருமத்தைக் கைக்கொண்டவர்களாயும் தானம் வாங்குவதில் ஆசையுள்ளவர்களாயு மிருப்பார்கள். இவர்களைப்போலவே ஏனைய வருணத்தவரும் தத்தந் தருமங்களைக் கைவிட்டு வாழ்கின்றவர்களாய் அசத்தியமே சொல்லுகின்றவர்களா யிருப்பார்கள். ஸ்திரீகள் விருத்தியடைந்தவர்களாய் தங்கள் மனம் போனபடி சஞ்சரிக்கின்றவர்களாய் காமம் லோபம் மோகமுடையவர்களாய் மகாபலிஷ்டர்களாய் பொய்யே செல்லுகின்றவர்களாய்ச் சீவிப்பதற்கான தொழில்களிற் கஷ்டமான தொழிலுடையவர்களாய்த் தனது நாயகனை வஞ்சிக்கிறவர்களாய்க் கற்புநிலைபேசுவதில் பண்டிதர்களாய்ப் பாவங்கட்கெல்லாங் காரணர்களாயிருப்பர். ஓ அரசனே! எப்போது கலியுகம் விருத்தியடைகிறதோ அப்போதே சகல தரும மூலங்களும் நாசமடைகின்றன. சர்வதரும சூனியமான கலியில் ஒருவரிடத்திலும் ஒருதருமமுங் காணமுடியாது. மகாதருமந் தெரிந்தவர்களும் அதர்மமே செய்வார்கள். அது கலியின்சுபாவம்.அதை எவராலும் விடமுடியாது. விடாது இயற்கையாய்ப் பாவஞ்செய்கிறவர்களுக்குச் சாதாரணமான வுபாயத்தினால் பிராயச்சித்தமுண்டாகாத லரிது. ஓ அரசனே! பிராயச்சித்தமானது சுத்தியடைதற்கு அச்சுத்தி புசிக்கும் ஆகார முதலியவற்றால் சிறிது சிறிதா யுண்டாதல்வேண்டும். ஆகாரசுத்தியுண்டானால் சித்தசுத்தி யுண்டாகிறது. அது வுண்டானால் தருமப்பிரவர்த்தி யுண்டாகிறது. ஓ அரசனே! சித்தசுத்திக்கு முதலொழுக்கமாயுள்ள வாகாரவசுத்திகலியில் மிகுந்திருக்கும். அதனால் தருமப் பிரவர்த்தியில் துஷ்ட செய்கையின் சம்பந்த தோஷ முண்டா யதர்மப் பிரவர்த்தி யுண்டாகிறது. அவ்வதர்மப் பிரவர்த்தியினால் நிச்சயமாய் வருணசங்கர முதலிய சகல சங்கரமுமுண்டாகுமென்றனர்.

யுகதருமங்களைக்கேட்ட ஜனமேஜயன் ஓ பகவானே! சகலதரு மங்களுமறிந்தவரே! சகல சாஸ்திரங்களிலும் வல்லமையுள்ளவரே!

அதர்மமே மிகுந்துள்ள கலியில் மனிதர்களுக்கு ஐயா! எப்படி நல்ல கதியுண்டாகும். கலியில் நல்லகதி யடையத்தக்க வுபாயமிருக்குமானால் அதனைத்தயவு செய்து எனக்குச் சொல்லியருளுமென்றனன் ஓ மகாராஜனே! அந்த விஷயத்தில் ஒரே உபாயந் தானிருக்கிறது. அந்த ஒன்றைத்தவிர வேறில்லை. அதுவே சர்வ தோஷத்தையும் பரிகரிக்கத்தக்கது. அது யாதெனின், தேவியின் திருவடித்தாமரையைத் தியானித்தலேயாம். ஓ அரசனே! தேவிக்கு எப்படிப்பட்ட பாபத்தையும் நாசஞ்செய்யும் வன்மை யிருக்கின்றபடியினாலேயே அவளுக்கு மஹாசத்தியென்று பெயர். அந்தச் சக்திக்குத்தக்க பாவங்கள் கிடையாது. ஆதலால் அரசனே! நீ அதற்காகப் பயப்படவேண்டாம். தேவியினது நாமத்தை நினைக்கவேண்டுமென்கிற வெண்ணமில்லாமல் வேடிக்கையா யுச்சரித்தாலும் அந்த வுச்சரிப்பானது எந்த பலன்களைத் தான் கொடுக்கமாட்டா. அவளது நாமோச்சாரணை கொடுப்பதுபோல் உருத்திரர் முதலாயினாரும் கொடுக்கச்சமர்த்தரல்லர். பாவங்களுக்கெல்லாம் பிராயச்சித்தம் ஸ்ரீதேவியின் நாமஸ்மரணையே. ஓ அரசனே! கலிபயங்கொண்டவன் புண்ணிய க்ஷேத்திரத்தில் நீங்காது வாசஞ்செய்து நிரந்தரமாய் அம்பிகையின் நாமத்தையுச்சரித்துக் கொண்டிருத்தல் வேண்டும். என்தெனப்பற்றும் எல்லாப் பொருளையுமொழித்து நானென்றெழு மகங்காரத்தையு மழித்து எவன் பக்தியோடு தேவியை நமஸ்கரிக்கின்றானோ அவன் பாபத்தினால் நலிவடையான். இது சர்வசாஸ்திர ரகஸ்யமாயுள்ளது. ஆதலால் நீ யான் கூறிவந்தவையெல்லாம் அலோசனை செய்து தேவியினது பாதாம்புஜத்தைத் தியானஞ்செய்துவருவாய். அறிவுடையாரெல்லாம் அஜபாமந்திரமாகிய தேவியினது நாமகாயத்திரியை ஜபஞ் செயவார்கள். அறிவிலிகள் மாயாவைபவத்தினால் மகத்தான தேவியினது மகிமையையறியார்கள். கலியிற்பிறந்து அதற்கஞ்சுகின்ற பிராமணர்களெல்லாந் தேவிகாயத்திரியை இதயத்துள் ஜபஞ்செய்வார்கள். கலியில் மாயாவைபவம் பெரிதாகையால் தேவி மகிமையை யறியார்கள். ஓ அரசனே! உன்னால் எவை கேட்கப்பட்டனவோ அவை என்னால் சொல்லப்பட்டன. இன்னும் யுகதருமங்களில் எதைக்கேட்க விச்சிக்கிறாயென்றார் வியாசர்.

பதினோராம் அத்தியாயம்
யுகதருமம் முற்றிற்று.

———

சுலோகம் - (சாருஏ)
ஆஉ அத்தியாயம் கக - க்குச் சுலோகம (சுஎ0ஏ)

உ

ஈசானாதிபிரம்ஹமத்யை நம:

பன்னிரண்டாம் அத்தியாயம்

தீர்த்தக்ஷேத்திர மகாத்மியம்

வியாசமுனிவர் கூறியதைக்கேட்ட ஜனமேஜயன் ஓ முனிஸ்ரேஷ்டரே! தேவரீர் கலிதோஷம் வந்தணுகாதிருப்பதற்கு முன்னர் க்ஷேத்திர வாசங்கூறினீராதலால் பூலோகத்தில் தேவர்களாலும் முனிவர்களாலும் அடையத்தகுந்த புண்ணிய க்ஷேத்திரங்களே யன்றி புண்ணிய தீர்த்தங்களையும் நதிகளையு மெனக்குச் சொல்லி யருளும். எந்த க்ஷேத்திரத்தில் எந்த தீர்த்தங்களில் ஸ்நானம் தானஞ் செய்வதனால் எத்தன்மையான பலனுண்டாகுமோ அதனையும் தீர்த்தயாத்திரைக்குரிய நியமங்களையும் ஆங்காங்கு நடத்த வேண்டிய கடன்களையும் விசேடமாய்ச் சொல்ல வேண்டுகின்றேனென்று விண்ணப்பஞ் செய்தனன். வியாசமுனிவர் ஓ அரசனே! எந்தத் தீர்த்தங்களில் தேவியினுடைய ஸ்தானங்க ளிருக்கின்றனவோ அந்தத்தீர்த்தங்களைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. நதிகளுக்குள் மிகவுஞ் சிறந்ததாகிய கங்காநதியும் யமுனை சரஸ்வதி நர்மதை கண்டகி சிந்து கோமதி தாமஸா காவேரி சந்திரபாகா வேத்ரவதி சர்மணவதி சரயு தாபீஸா பிரமதியும் ஆகிய இவைகளெல்லாம் பிரசித்தமாயும் தேவி வசிக்கப்பெற்றதாயுமுள்ள சிரேஷ்டமான தீர்த்தங்களாகும். இவைகளல்லாமலும் அநேக நதிகளிருக்கின்றன. அவைகளில் சமுத்திரமடையும் நதிகள் புண்ணியத்தைக் கொடுப்பன. சமுத்திரத்தை யடையாநதிகள் சுவல்ப புண்ணியத்தைக் கொடுப்பன. சமுத்திரத்தையடையப் பெற்ற நதிகளுள்ளும் எந்த நதிகள் எக்காலத்திலும் பிரவாகமுள்ளனவா யிருக்கின்றனவோ அவைமிக்க புண்ணியமுள்ளன. ஆவணிமாதமுதல் இரண்டுமாத பரியந்தம் அந்த நதிகளுக்கு ரஜஸ்வலைகால மென்று கூறுவர். அக்காலங்களில் மழைபெய்யும் சம்பந்தத்தால் கிராமங்களிலுள்ள அசுத்தபதார்த்த சம்பந்த முள்ளவைகளா யிருக்கும். இந்நதிகளே யன்றித் தடாகங்களுக்குள் மிக்க புண்ணியமுள்ள மானதசரசுபிந்து சரசு அக்ஷோதசரசுமுதலிய அநேக புண்ணிய சரசுகளிருக்கின்றன. ஓ அரசனே! இப்போது சொல்லிவந்த

தீர்த்தவிசேடங்க ளிங்ஙனமிருக்க, புஷ்கரக்ஷேத்திரம் குருக்ஷேத்திரம் தர்மாரணியம் பிரபாசம் பிரயாகை நைமிசாரணியம் அற்புதாரணியம் மேருபர்வதம் ஸ்ரீசைலம் கந்தமாதன முதலிய அதிபரிசுத்தமான க்ஷேத்திரங்களு மிருக்கின்றன. இந்த க்ஷேத்திரங்களேயன்றி ருஷிகள் அரியதவமியற்றித் தத்தம் பெயரால் பிரசித்திபெற்ற பதரிகாச்சிரமமுதலிய அநேக ஆசீர்மங்களிருக்கின்றன. அவர்களால் வசிக்கப்பெற்றதா யிருக்கின்ற இவ்விடங்களேயன்றி அவர்களால் பரிசுத்தமென்று சொல்லத்தக்க ஆசீர்மங்களும் அளவிறந்தனவா யிருக்கின்றன. பார்த்த மாத்திரத்தில் பாவங்களைப் போக்கவல்ல இந்த ஸ்தானங்களிலெல்லாம் தேவியினுடைய ஸ்தானங்களிருக்கின்றன. ஓ அரசனே! புண்ணிய தீர்த்தங்களும் தானங்களும் விரதங்களும் யாகங்களும் இவை யொழிந்த அநேகபுண்ணிய கருமங்களும் திரவியசுத்தி கிரியாசுத்தி மனோசுத்தி என்கிற மூவகைச் சுத்திகளால் பரிசுத்தத்தைப் பெறுகின்றனவாம். இச்சுத்திகளுள் சில சமயத்தில் திரவியசுத்தியும் சிலசமயத்தில் கிரியாசுத்தியும் நேரிடும். மனோசுத்தி நேரிடுதல் எச்சமயத்துமில்லை. ஏனெனில், ஓ அரசனே! மனமோ மிகவுஞ் சஞ்சலமுடையது. அநேக விஷயங்களை யாஸ்ரயித்திருக்கின்றது அவ்விஷய ஆஸ்ரயத்தால் நானாவிதமான அபிப்பிராயங்களுண்டா யவைகளாலிழுக்கப்பட்டுளது. இத்தன்மையான மனம் எங்ஙனஞ் சுத்தியைப் பெறும். காமக் குரோத லோப அகங்காராதிகள் அம்மனதுக்குத் துணையாயுள்ளன. இவை தவம் தீர்த்தம் விரதங்கணிகழுங்காலங்களில் விக்னஞ் செய்கின்றவை களன்றோ? ஆகையினாலரசனே! ஒருவருக்கும் இம்சை செய்யாதிருத்தல், உண்மையாயிருத்தல், பிறர்பொருளைக் களவு செய்யாதிருத்தல், ஆசாரத்தோடிருத்தல், ஐம்புலன வழிச் செல்லாதிருத்தல், தாம்தாம கொண்ட தருமங்களைப் பாதுகாத்துக் கொள்ளுதல் முதலிய இவையெல்லா மிருக்கப்பெற்றால் அவையே நல்ல புண்ணிய தீர்த்தஸ்நான பலனைக்கொடுக்கும். தேகஸ்ரம் முதலியவற்றால் தீர்த்த யாத்திரைக்குப் போகின்றவன் நித்திய கர்மத்தை விட்டாலும் ஸ்திரீ சம்சர்க்கஞ் செய்தாலும் தீர்த்த யாத்திரையால் வரும்பலனைப்பெறுவானா! அந்த யாத்திரை வீணான தேயாம் நியமங்களை யொழித்துச் செய்யுந் தீர்த்தயாத்திரைச் சரீரத்திலிருக்கும் மலத்தைக் கழித்தற்கேயாம். ஓ அரசனே! மனதைச் சுத்திசெய்து தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்கின்றவர்கட்கே அது பயனைத் தருமன்றி மனதைச் சுத்திசெய்யாதார்க்கு அது ஒருபயனுந்தருவதின்று. ஆயின் அந்தத் தீர்த்தஸ்நான புண்ணியம் மனதைச் சுத்திசெய்யாதோவெனின் அது செய்வதற்குச் சாமர்த்தியமுடையதன்று உடையதாயிருக்குமாயின்

கங்காதீரத்தில் வசித்துக்கொண்டிருக்கிற முனிவர்கள் ராகத்வேஷமுள்ளவர்களா யேனிருத்தல் வேண்டும்; முனிவர்களிற் சிறந்த வசிஷ்டர் முதலான சாந்தர்களும் விஸ்வாமித்திரர் முதலிய தவத்திற் சிறந்தவர்களும் கங்கா தீரத்தில் வசித்தவர்களாயிருந்தும் ராகத்துவேஷத்தி லாவலுள்ளவர்களாய் காமக்குரோதாதிகளால் கலக்கப்பட்டவர்களா யிருந்தார் களல்லவா; ஆதலால் அரசனே! மனோசுத்தி செய்யத்தக்கவர்களான சத்புருஷர்களுடைய சத்சங்க சம்பந்தம் தெய்வசம்பந்தத்தால் நேரிடுமானால் அந்த ஞானநிஷ்டர்களாகிய சத்சங்கமென்கிற தீர்த்தந் தான் அந்தரங்கசுத்தியாகிய மனோசுத்தியைச் செய்யும் ஓ அரசனே! அதுவொழிந்த வேதசாஸ்திராதிகளும் விரத தானதவாதிகளும் ஏனையகூட்டங்களும் சித்தசுத்தியைச் செய்யத்தக்கனவல்ல. ஏனெனின்! பிரமபுத்திரரும் வேதவித்யா விசாரதருமாகிய விசிஷ்டர் கங்காதீரத்தில் வசித்தவராயிருந்தும் விஸ்வாமித்ரரிடத்தில் அவலமாகிய ராகத்துவேஷமுடையவராய்க் கடுமையான யுத்தஞ்செய்து அரிச்சந்திரன் காரணமாய்க் கொக்காய்ப்போகவுஞ் சபித்தனர். விஸ்வாமித்திரரும் அப்படியே வசிஷ்டரை ஆடியென்னும் பக்ஷியாய்ப் போம்படிச் சபித்தனர். பின்னரிருவரும் மானதசரசில் வசித்திருந்து அவ்விடத்தில் சிங்கங்களைப்போல் மதோன்மத்தர்களாய்ப் பதினாயிர வருடம் மகாகோபத்துடன் நகங்களாலும் மூக்காலும் பயங்கர மானயுத்தஞ்செய்தனர். ஓ அரசனே! கங்கையினும், மானச தீரத்திலும் வசித்தும் அத்தீர்த்தங்கள் அவர்களுக்கு ராகத்துவேஷங்களையொழித்து சித்தசுத்தியை யுண்டாக்கியதா யில்லையேயென்றனர். ஜனமேஜயன் ஓ ஐயா! முனிஸ்ரேஷ்டர்களாயும் தருமத்திலாசை யுள்ளவர்களாயு மிருக்கிற அம்முனிவர்கள் எந்தக்காரணத்தினால் ஒருவருக்கொருவர் வைரங்கொள்ளவும் சபிக்கவும்வந்து துக்கத்துக் காளானார்கள்? இவர்கள் இவர்களால் மனிதர்களுக்குந் துக்கமுண்டாயிற்று. இவர்கள் காரணத்தை எனக்கு நன்றாய்ச் சொல்லவேண்டுமென்று பிரார்த்திக்கவியாசர் கூறுகின்றார். பூர்வம் சூரியவம்சீயனான திரிசங்கு புத்திரனும் ஸ்ரீராமசந்திரருக்கு நெடுங்காலம் முன்னிருந்தவனுமான அரிச்சந்திரனென்றோ ரரசனிருந்தான். அவன் பிள்ளையில்லாதவனாய்ப் பிள்ளை வேண்டுமென்னும் அவாவால் வருணனைக் குறித்து ஒரு வராலுஞ் செய்தற்கரிய நரமேதத்தைச் செய்யப் பிரதிக்ஞைசெய்து சங்கல்பஞ்செய்தமாத்திரத்தில் வருணன் திருப்தி யடைந்தவனாய்ப் புத்திரப்பேறுண்டாகவனுக்கிரகித்தனன். அதனால் மனைவி கர்ப்பவதியாயினள். அரசனும் அதனைக்கேட்டு சந்தோஷ மடைந்து விதிப்படி கர்ப்பசம்ஸ்கார முதலியவற்றை நடத்தினான். பின்னர்

சர்வலக்ஷணத்தோடுங் கூடிய பிள்ளைபிறந்தது. புத்திரப்பேற்றை யடைந்த அரசன் ஆனந்த பூரிதனாய் சாதகர்ம முதலானவற்றை நடத்திச் சுவர்னதானம் கோதானம் பூதானமுதலிய தானங்களை விசேடமாக அந்தணார்களுக்குக் கொடுத்துப் புத்திரமஹோற்சவத்தை நடத்திவந்தனன். அத்தருணத்தில் வருணன் பிராமணவேடங் கொண்டுவர அரசன் அவனை விதிப்படிப் பூசித்துவணங்கி நின்று தேவரீர்யாதுகாரியமா யிங்குவந்தீரென்று கேட்க, அவன் நான் வருணன் உன்னைக்குறித்து வந்தேன். நீ சங்கற்பஞ் செய்து கொண்டபடி புத்திரனைப் பசுவாகக் கொண்டு யாகத்தை நடத்தி சத்யவாக்குடை யவனாய் விளங்குவாயென்றான். அம்மொழியைக் கேட்ட அரசன் மனங்கலங்கித் துக்கிதனாய்ப் பின்னர் துக்கத்தைத் தன்னுளடக்கிக்கை கூப்பி வருணனைப்பார்த்து ஒசுவாமி! நான் பிரதிக்ஞை செய்த வண்ணம் யாகத்தைவிதிப்படிச் செய்து என்னுடைய வாக்கைக் காப்பாற்றிக் கொள்ளுகிறேன். இப்போது எனது பத்னி ஒருமாதம் அசுத்தத்துக் குள்ளாயிருக்குங் காலமாயிருத்தலால் அந்த நாள் கழிந்தவுடன் அவள் சுத்தமாவாள். பிறகு யாகஞ் செய்வதிற்றடையில்லை யென்றான். வருணன் அதைக்கேட்டுத் தன்னுலகம் போய்ச் சேர்ந்தனன். பின்னர் அரசன் சந்துஷ்டனாயும் சிறிது கவலை யுள்ளவனாயு மிருந்தான். ஒருமாதஞ் சென்ற பின்னர் முன்போல் வருணன் வர அவனை அரசன் கண்டவுடன் மிகுந்த பயபக்தி விசுவாசத்துடன் அர்க்கியபாத்ய ஆசமனாதிகள் தந்து வழிபட்டு வணக்கத்துடன் ஒ சுவாமிகாள்! உபநயனமில்லாத பிள்ளையை எப்படி யூபஸ்தம்பத்தில் கட்டுவேன் ஆகையால் உபநயன சம்ஸ்காரத்தால் அவனை க்ஷத்திரியனாக்கி உத்தமமான யாகத்தை முடிக்கிறேன். ஒ தேவனே! யான் உம்முடைய சேவகனாயுள்ளவன் என்னைக் குறித்து இச்சமயம் இவ்வளவு தயவு செய்வீரானால் யானிப்போது சொல்லியபடி யாகத்தை முடிக்கிறேன். உபநயனஞ் செய்யாத பிள்ளைக்கு எந்தக்காரியத்திலும் அதிகார மில்லையே விதியப்படி யிருக்கின்றதே நானென்செய்வேனென்றான். வருணன் அதைக்கேட்டு ஒ அரிச்சந்திரனே! நீ என்னெதிரில் நரயாகஞ் செய்கிறேனென்று சங்கல்பஞ் செய்து என்னை வஞ்சிக்கிறாய். புத்திரனில்லாமலிருந்த வுனக்குப்புத்திரனைத் தந்தபடியினாலன் றோபுத்திர சிநேகம் விடத்தக்கதாயில்லை. நீ இப்போதும் பயந்தவனாய் இனிய மொழியினால் உண்மையாய்ச்செய்கிறேனென்று சொல்லுகிறபடியினால் நான் போகிறேன். சிலகாலங்கழிந்து உன்வீட்டுக்கு வருவேன், அப்போதாவது சத்திய வாக்குடையவனாய் யாகத்தைச் செய்ய வேண்டும். அப்படிச்செய்யாமற் போவையேயானால்

உன்னிடத்தில் என்னுடைய கோபத்தோடு கூடிய சாபத்தை விடுவேனென்றனன். அரசன் ஓ வருணதேவரே! குமாரனுடைய சமாவர்த்தன கர்மமுடிவில் அந்த யாகத்தைச் செய்து அதில் விதிப்படி என் மகனைப் பசுவாக ஹோமஞ்செய்கிறேன். தேவரீர் கோபிக்கவேண்டா மென்று சொல்லவும் வருணன் மிக்க சந்தோஷ முடையவனாய் அப்படியே ஆகட்டு மென்று அதி சீக்கிரமாய்த் தன்னிடம் சென்றனன். வஞ்ச வெண்ணத்தோடு கூடிய அரசனதுமதி நிம்மதியாயிருந்தது. அவன்பிள்ளை லோகிதாஸ னென்கிற பெயர்பெற்றுச் சத்தியத்தில் விருத்தியுள்ளவனாய் மிகவுஞ் சமர்த்தனாய் சர்வ வித்தைகளிலும் வல்லவனாய் வாழுநாளில் பிதா வருணனுக்குச் சொல்லியிருக்கும் யாகத்தின் காரணங்களைச் சாங்கோபாங்கமாய்த் தெரிந்துகொண்டு நமக்கு யஜ்ஞத்தில் மரணமுண்டென்று நிச்சயித்து அதற்கஞ்சி ஒருவராலு மறியக்கூடாத ஓர் மலைக்குகையுள் ஒளித்திருந்தனன். அரசனும் நான் செல்லச்செல்ல பயமடைந்தவனா யிருந்தனன். வருணன் சொல்லியது போல் வந்து அரசனைப் பார்த்து ஓ அரசனே! ஏன் யஜ்ஞம் செய்யாமலிருக்கின்றாய்? இப்போது செய்யென்று கேட்க அரசன் வாடின முகமுடையவனாயும் கலங்கிய கண்ணுடையவனாயும் ஓ தேவசிரேஷ்டரே! என் பிள்ளை என்னையறியாமலோடிப்போனான். அவன் போனவிடந் தெரியவில்லை. நானென்ன செய்வேன் என்னால் வஞ்சனையில்லை யென்றான். வருணன் மிகவும் கோபங்கொண்டவனாய் அசத்திய வாதியான அந்த அரசனைப் பார்த்து ஓ கபடபண்டிதனான அரசனே! எதனால் என்னை வஞ்சித்தனையோ அதனால் உன் தேகத்தில் சலோதரமென்கிற வியாதியானதுண்டாகக் கடவதென்று சபித்துத் தன்னிடம்போய்ச் சேர்ந்தான் பின்னர் அரசன் அந்த வியாதியினால் பீடிக்கப்பட்டுப் பெருந் துன்பமுற்றிருந்தனன். அச்சங்கதியைப் புத்திரன் கேள்விப்பட்டும் வராமல் அக்குகையிலேயே யிருந்தனன். வழிப்போக்கனொருவ னவனைப்பார்த்து உன் தகப்பன் சாபத்தினாலுண்டான ஜலோதர வியாதியினால் துக்கிதனாய்ச் சங்கடமநுபவித்துக் கொண்டிருக்க நீ குகையை விட்டுவராமலிருக் கின்றனையே. ஓ துர்ப்புத்தியுள்ளவனே! நீ பிறந்ததும் பிழைத்திருப்பதும் இலாபமென் றெண்ணுவதற் கிடமுண்டோ எல்லாம் நாசமாய்ப் போயிற்றென் றறிவாய். இந்தச் சரீரத்தினால் உனக்கென்ன பலனுண்டாயிற்று. உனக்குத் தேகத்தைக் கொடுத்த தந்தையைத் துக்கத்துக்குள்ளாக்கி நீ இங்குயிரோ டிருப்பதனால் உன்னைப் போலும் அதமனொருவ னுண்டோ? உன் விஷயமாய் உன் தந்தை வியாதி பீடிதனாய்ப் புலம்பிக்கொண் டிருக்கிறான். சற்புத்திரன் தந்தையின்

விஷயத்தில் பிராண்னைக் கூட விடுவனென்பது நிச்சயமென்று வழிப்போக்கன் கூறியவார்த்தையை லோகிதாசன் கேட்டு மனம்வருந்தித் தந்தையைப் பார்க்க வேண்டுமென் றெண்ணினான். இந்திரன் அதனையறிந்து பிராமண வேடங்கொண்டு மிக்க தயையுள்ளவன்போல் இரகஸ்யமா யவனிடம் போய் ஓ ராஜபுத்திரனே! நீ மூடனாயிருக்கிறாய்; துன்பத்தோடிருக்கிற உன் றந்தையிடத்தில் போவதனா லென்னபயன்? ஏன் வீணாசைப் படுகின்றாய். வியாதியைப் போக்கடிக்க வுன்னாலாகுமா? நீ அறிவற்றவ னாதலாலொன்றையு முணராதவனா யிருக்கின்றாயென்று கூறினான்.

பன்னிரண்டாம் அத்தியாயம்

தீர்த்தக்ஷேத்திரம் மஹாத்மியம் முற்றிற்று.

———

சுலோகம் - (எசு)

ஆஉ அத்தியாயம் கஉ - க்குச் சுலோகம் (எசுசுஏ.)

———

உ

ஈசத்வாத்யஷ்ட சித்திதாயை நம:

———

பதின்மூன்றாம் அத்தியாயம்

அரிச்சந்திரோ பாக்கியானம்.

———

வியாசர் கூறுகின்றார். ஓ ஜனமே ஜயனே! தந்தையைக் காணப் பறப்பட்ட புத்திரனை இந்திரன் தடுத்து விட்டானல்லவா. மீண்டும் இந்திரன் அவனைப் பார்த்து ஓ லோகிதாசனே! உன்றந்தை வருணனுக்கு உன்னை யாகப்பசுவாகக் கொடுக்கிறே னென்றது உண்மையென்றா நினைக்கின்றாய். அவன் பின் விளைவை யறியாமல் சாகசமாய்ச் சொல்லிவிட்டான். அது இப்போது வினையாய் வந்து விட்டது. இந்தச் சமயத்தில் அங்குப் போவையானால் நோயினால் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிற வுன்றந்தை யுன்னைக் கண்டவுடன் யாதொரு யோசனையுஞ் செய்யாமல் உன்னை யூபஸ் தம்பத்தில் பசுவாகக் கட்டி கொஞ்சமேனுந் தயையுமிரக்கமுமின்றிக்

கொல்லப்போகிறான். அப்போது நீ என்செய்வா யென்றான். இவ்வண்ணஞ் சொல்லக்கேட்ட அவன் தேவிமாயையினால் மோகிக்கப்பட்டவனாய்த் தந்தையிடம் போகாமனின்று விட்டனன். பின்னருமவன் றந்தைபாலுள்ள அன்பால் எப்போதெப்போது புறப்படுகிறானோ அப்போதப்போதும் இந்திரன்மறவாமல் தடுத்துவந்தான்.

இவன் செய்தி யிங்ஙனமிருக்க, அரிச்சந்திரன் சர்வக்ஞராகிய வசிட்டரைப்பார்த்து ஓ பகவானே! ரோகத்தினால் பீடிக்கப்பட்டு மிகவும் வருத்தமடைந் திருக்கின்ற வென்னை ரக்ஷியுமென்றான். வசிட்டர் ஓ அரசனே! உனது துரோகநாசத்தைக் குறித்து பயன் சொல்லும் உபாயமொன்றிருக்கிறது. அதனைச்சொல்லுகிறேன் கேட்பாயாக. தருமசாஸ்திரத்தில் புத்திரர்கள் பதின்மூன்று விதமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்பதின்மூவருள்விலைக்கு வாங்கப் பெற்றவனும் ஒருவனாமாகலான் நீயோர் பிராமணப்பிள்ளையை அவன் றாய்தந்தையர் எவ்வளவு திரவியத்தைக் கேட்கின்றனரோ அவ்வளவு திரவியத்தைக் கொடுத்துப் பெற்றுக்கொண்டு வருணனுக்குச் சொல்லியபடி யாகத்தைச் செய்வையாயின் இந்தரோகம் நாசமாய்விடும். வருணனுஞ் சந்துஷ்டியை யடைவானென்றனர். அரசன் அதைக்கேட்டு மந்திரியைப்பார்த்து ஓ புத்திமானே! நமது ஆசிரியர் சொன்னதைக் கேட்டனையன்றோ! நானிந்த மகோதரவலியால் படும் பாடும் நன்றா யறிந்திருக்கின்றனை யன்றோ! ஆகலான் நீ இப்போதே புறப்பட்டுத் தேசங்கடோறுஞ் சென்று அங்கங்கும் அதிகப்பிரயத்தனத்துடன் விலைக்குப் பிள்ளையைத் தரத்தக்க பிராமணனைத் தேடுவாயாக. திரவியத்தி லாசையுள்ள பிராமணன் எவனாவது நேரிடுவான். அவன் பிள்ளையைப் பொருளாக வெண்ணாது பொருளையே பொருளாக வெண்ணுவான். அக்குறிப்பையறிந்து நீ அவன் கேட்கும் பொருளைக் கொடுத்துப் பிள்ளையை யழைத்துக் கொண்டுவருவாய். திரவியத்தில் நீ சிறிதும்லோபங்கொள்ளற்க. ஓ மந்திரி! நீ அம்முயற்சியிற் போவதுமன்றி வேறுசிலரை விடுத்து அவர்கள் யாவருமறிய யராவது அரசன் செய்யும் யஜ்ஞத்துக்கு ஓர் பிள்ளையைக்கொடுத்து வேண்டிய பொருளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று சொல்லும்படியாயுஞ் செய்வாயென்று அரசன் கூற அவனது ஆணையின்படி மந்திரிபுறப்பட்டு பட்டணங்கள் கிராமங்கள் வீடுகள் முதலிய விடங்கடோறுஞ் சென்று விசாரித்து வரும்பொழுது ஓர் தேசத்தில் மஹா தரித்திரனாயும் பொருளாசை யுடையவனாயும் மூன்று பிள்ளைகளை யுடையவனாயு முள்ள அஜீகர்த்த னென்கிற ஓர் பிராமணன் கிடைத்தனன். அவனிடத்தில்

மந்திரி ஜேஷ்டனுங் கனிஷ்டனும் நீங்கலாக நடுவேநின்று சுநஸ்சேபனென்பவனை வேண்டிய பொருள் கொடுத்து அழைத்துவந்து அரசனிடங் கொண்டு வந்தனன். அரசன் அவனைக்கண்டு அந்தியந்த சந்தோஷமடைந்து யாகத்துக்கு வேண்டிய உத்தமமான சாமக்கிரியைகளைச் சேகரித்துக்கொண்டு யாகஞ்செய்யத் தொடங்கினன். அந்தச் சமயத்தில் விஸ்வாமித்திர முநிவர் அங்குவந்து யூபஸ்தம்பத்தில் கட்டியிருக்கிற சுனஸ்சேபனைப் பார்த்து மிகவும் இரங்கிய மனமுடையவராய் அரசனைநோக்கி இந்தப் பிள்ளையைக் கொலை செய்யாதே! இந்தச் சாகசமான வேலையைச் செய்யாதே! யான் சொல்லும் வார்த்தையைக் கேட்பாய் ஓ தீர்க்காயுஷ்மானா யிருப்பவனே! இந்தப் பிள்ளையை விட்டுவிடுவையானால் உனக்குச் சுகமுண்டாகும் உன்னை நான் மிகவும் பிரார்த்திக்கின்றேன். அந்தோ! குழந்தை யழுகின்றான் அவன் விஷயமாய் என்னிடத்திற் றோன்றிய விரக்கமானது என்னை மிகவும் வாட்டுகின்றது. உயிர்களிடத்துக் கொள்ளும் இரக்கத்தைக்காட்டிலும் ஒருவனடைய வேண்டிய தொன்றுண்டோ, உனக்கு ஏனிரக்கமுண்டாகவில்லை. இனியேனும் இரக்கத்தைக் கொள்வாயாக. உன்னைப்போன்ற அரசர்கள் பிறனுடைய தேகத்தை ரக்ஷிக்கும் பொருட்டு இரக்கமுள்ளவர்களா யதனையே விரதமாகக் கொண்டு அதனால் வரத்தக்கதாகிய சுவர்க்கத்தை யபேக்ஷித்துத் தங்களுடைய தேகத்தைக் கொடுத்திருக்கிறார்கள். நீயோ அப்படியன்றி உன்னுடைய தேகத்தை ரக்ஷிக்கும் பொருட்டு பிராஹ்மணக் குழந்தையைப் பலாத்காரமாய்க் கொல்லத் துணிந்திருக்கின்றாய். அந்தோ! இதுவென்ன வாச்சரியம். பிறவுயிரைக் கொலைசெய்தல் பாவமல்லவா! இப்போது நீ அனுபவிக்கும் வயிற்றுவலியும் பாவத்தால் வந்ததல்லவா! பாவத்தால் வந்ததைப் பாவமாபோக்கடிக்கும்? இதுவென்ன மடமை. புண்ணிய மன்றோ பாவத்தையொழிக்கும். புண்ணியமென்பதும் விரதமென்பதும் பிறவுயிரை வருத்தா தொழிவதினும் வேறொன்ருண்டோ! பாவமென்பது இரக்கங்கொள்ளா தொழிவதினும் வேறொன்றுண்டோ! ஓ அறிவில்லாதவனே! இனியேனும் இந்தப்பாலனிடத்தில் இரக்கங் கொள்வாய். இப்போது நீ இவனைக் கொல்லத்துணிந்ததற்குக் காரணன் தேகத்தினிடத்தில் நீ வைத்த இரக்கந்தானே! அதுபோலும் அவனவன் தேகத்திலும் இரக்கமிருக்குமல்லவா! இது நீயும் அறிந்த நியாயந்தானே! இந்த விரக்கத்தைப்பற்றி இப்போது சொல்லி முடியுமோ! இது யான்சொல்வதன்று வேதவுண்மை. அந்த வுண்மையைக் கொண்டே யான் சொல்லுகிறேன். இந்தவுண்மைப் பிரமாணத்தில் உனக்குப் பிரமாண மிருக்கும் பக்ஷத்தில் இந்தப் பாலனை இந்த

யூபஸ்தம்பத்தி னின்றும் அவிழ்த்து விடுவா யென்றனர். அரசன் அவர்வார்த்தையைச் சிறிதுமெண்ணாது அநாதரவுசெய்து பின்னனுபவிக்க வேண்டிய வினை வலியான் தானெண்ணியவாறு முடிப்பதில் முயற்சியுடையவனாயிருந்தனன். அதனையறிந்த விஸ்வாமித்திரர் அவ்வரசன்மேல் கோபங்கொண்டவராய் அவனிடத்தில் வார்த்தையாடுவதையொழித்து யூபஸ்தம்பத்தில் கட்டுண்டிருக்கும் சுனஸ்சேபனாகிய பாலனிடத்தில் வந்து நீயஞ்சாதே! என்று அவனைத்தேற்றி வருணமந்திரத்தை யுபதேசித்தனர். அவன் அம்மந்திரத்தை நலிவாகிய த்வனியொடு உச்சரித்து உச்சரித்துக் கூவினான். வருணதேவன் அவன் கூச்சலைக் கேட்டு இரக்கங் கொண்டு அவனெதிரில்வந்து அவனைக் கட்டவிழ்த்துவிட்டு அரசனுக்கும் வயிற்றுவலியைப் போக்கிப்போயினான்.

விஸ்வாமித்திரமுநிவர் அரிச்சந்திரன் தமதுசொல்லை எண்ணாது அவமதித்தானென்று உள்ளத்துள்ளே சினமுடையவராய் சமயம்பார்த்திருந்தனர். சிலநாள்சென்று அரசன்வேட்டையாடு நிமித்தம் குதிரைமீதேறி ஆரணியத்துக்கு வந்துவேட்டையாடி ஓர் பன்றியைத்துரத்திக்கொண்டு கவுசிகநதிதீரமாய் உச்சிப்பொழுதில் வரும்பொழுது விஸ்வாமித்திரமுநிவர் இது தான் சமயமென்றெண்ணி விருத்தப்பிராமணவடிவங்கொண்டு அவன்பால்வந்து அவனது நாடுநகரமுதலிய செல்வங்களையும் வஞ்சனையாற்பெற்றுக்கொண்டு பின்னர் தனது நிஜவடிவத்தோடும் சிறிதுமச்சமின்றி வந்து நின்றனர். அவரை வசிட்டமுனிவர் நோக்கி ஓ விஸ்வாமித்திரனே! துர்ப்புத்தியுள்ள அதமனே! பிராமணவேடத்தை வீணாகப் பூண்டிருக்கும் வீணனே! முனிவர் தருமத்தைவிட்டு பக்ஷியாகிய கொக்கின் தருமத்தையுடையவனே! ஏன் வீணாகக் கர்வத்தை வகிக்கின்றாய்; முனிவரில் யான்தான் சிறந்தவனென்று டாம்பீகத்தை வகித்திருக்கின்றாய். உலகத்துக்கே யன்றி எனக்கும் எஜமானனாயிருக்கின்ற அரிச்சந்திரமகாராஜனிடம் யாதொரு குற்றமுங் காணாம லவனை நீ அதிகமான துக்கத்துக்குள்ளாக்கி வருந்தச் செய்தனையே! இதுகாறும்நீ கொக்கு, தியானஞ் செய்வதுபோல் கண்மூடியிருந்து திடீலென்று பெருஞ்செல்வத்தை விழுங்கி விட்டனையே. ஆதலால் நீ கொக்காகக் கடவாயென்று சபித்தனர். அச்சாபமொழியைக் கேட்ட விஸ்வாமித்திரர் கோபங்கொண்டு ஓ வசிஷ்டா! நான் நீ யிடுஞ் சாபத்துக் காளாவதுபோல் நானிடுஞ் சாபத்துக்கு நீயும் ஆளாவாயென்று நானெதுவரையில் கொக்கா யிருக்கின்றேனோ அதுவரையில் நீயும் *ஆடிப்பக்ஷியாயிருத்தல்

* தறாவுப்பக்ஷி - இதனைச் சாரரி, ஆதி, ஆடியென்றுங் கூறுவர்.

வேண்டுமென்று சபித்தனர். இவ்வாறொருவருக் கொருவர் சாபமேற்றவர்களாய் மானத சரசில் விஸ்வாமித்திரர் கொக்காயும் அங்குள்ளவோர்விருக்ஷத்தில் வசிட்டமுநிவர் ஆடிப்பக்ஷியாயுமிருந்து முன்னுள்ள துவேஷம் நீங்காது ஒருவருக்கொருவர் நாடோறும் மூக்கினாலும் நகங்களினாலுங் கீறியும் குத்தியும் பலாசமலர்போல் அநேக வருடகாலம் சரீரமுற்றும் உதிரவெள்ளமாய்ப் போம்படிப் போர்விளைவித் திருந்தனர்.

ஓ அரசனே! இதுசித்தசுத்தி யில்லாத குறையன்றோ வென்றனர். அரசன் இவ்விருவர்கதி என்னகதியாயிற்றோ அதனை யறியவேண்டுமென்கிற ஆவலுடையவனாய் ஓ முனிபுங்கவரே! தேவரீர் சித்தசுத்தியின் றன்மை இத்தன்மைத்தென் றறிவிப்பதைப்பார்க்கினும் அம்முனிவரிருவரும் அச்சாபவிமோசனம் எப்படி யெய்துப்பெற்றனரோ ஓ மஹாநுபாவரே! நானதனைக்கேட்க ஆவலுள்ளவனாயிருக் கின்றேனாதலால் அதனைச் சொல்லவேண்டுமென்ன, வியாசர் ஓ அரசனே! சிலகாலஞ் சென்றபின்னர் வசிட்டருக்குப்பிதா பிரமனாதலால் அவர் மனமிரக்கமுற்று இருமுநிவரிடத்தும் வந்து போரை நிறுத்திச் சாபத்தையும் அவர்களாலேயே நிவிர்த்தித்துக் கொள்ளும்படிச் செய்து அவர்களைப்பார்த்து நீவிர்முப்போதும் நீரில் மூழ்கித் தவத்தான் மாட்சிமை யுடையார்போற் காட்டி மாட்சிமையற்ற இத் தீக்குணங்களாகிய மாசினை மனித்தின் கண்ணதாக வாக்கினீரே! இதுநன்று! நன்று!! உங்களுடைய வொழுக்கங்களெல்லாம் வஞ்சக மனத்தாரது படிற்றொழுக்கம் போலாயிற்றே. இப்படிற்றொழுக்க முடையோராகிய உங்களது வான்போலுயர்ந்த தவவேடம் என்ன பயனைச்செய்யும்? இத்தவவேடமாகிய தோற்றம் பசுவானது காவலாளிகள் கடியாமலிருப்பதற்குப் புலியின்றோலைப் போர்த்துக் கொண்டுப் பயிர்களை மேய்வதுபோலும் உலகிலுள்ளாருடைய பொருள்களைச் சுலபமாய்க் கவர்தற்குச் சாதனமாயிற்றே. இனிஇக்கூடா வொழுக்கத்தைவிட்டு சுகமாயிருங்க ளென்று சொல்லிப் பிரமனும் தேவர்களுந்தத்தமிடம் போய்ச்சேர்ந்தனர். முனிவர்களும் தங்களாசிர் மங்களையடைந்து ஒருவருக்கொருவர் சிநேகமாய் வாழ்ந்திருந்தனர். ஓ அரசனே! இவ்வுலகத்தில் தேவனாயிருப்பினும் மனிதனாயிருப்பினும் அகங்காரத்தை ஜயித்துச் சித்தசுத்தியடைந்து சுகமாயிருந்தவனெவன்? அநேகமகிமைகளால் மகான்களென்று பேர்பெற்ற வராலுஞ் சித்தசுத்தி யடையத்தக்கதல்ல. ஆதலால் அந்தச் சித்த சுத்தியொன்றே பிரயத்தனத்தால் சாதிககததகுநதது. சித்தசுத்தியைத் தேடுதலாகிய பிரயத்தனத்தைவிட்டு தீர்த்தம் தானம் தபம் சத்தியமுதலிய காரியங்களில் பிரயத்தனப்பட்டுச்

சாதிக்கமுயலுதல் வீணாகும். சித்த சுத்திக்காகப் பிரயத்தனப்படுதல் யாதெனின்! மனமானது செவிமுதலிய பஞ்சேந்திரியங்களின் வழியாய் விஷய சம்பந்தத்தையடைந்து அதிலுழலப்பெறாமல் புண்ணிய தீர்த்தங்களிலும் புண்ணிய க்ஷேத்திரங்களிலுமுள்ள தேவியைப் பூசைசெய்வதிலாசையையுண்டாக்கி தேவியிருக்கு மிடங்களிலேயே விடாமலிருப்பதற்கும் அவளது நாமங்களை வாயினால் விடாம லுச்சரிப்பதற்கும் அவளுடைய குணங்களைத் தோத்திரரூபமாய்த் தோத்திரஞ் செய்வதற்கும் அவளுடைய பாதங்களைத் தியானிப்பதற்கும் ஆக்கமு மூக்கமுமுடையதா யிருக்கச் செய்வதாகும். இங்ஙனமான பிரயத்தனத்தை எவன் செய்கின்றானோ அவன் கலிதோஷத்தினின்றும் விடுபட்டுப் பயமற்றவனாகின்றான். இங்ஙனமான சித்த சுத்திபெற்றவன் பாபியாயிருந்தாலும் ராகத்துவேஷாதி சம்சாரத்தினின்றும் விடுபட்டவனாகின்றான். ஓ ஜனமேஜயனே இதனை நன்குணர்வாயாக வென்றனர்.

பதின்மூன்றாம் அத்தியாயம்

அரிச்சந்திரோபாக்கியானம் முற்றிற்று.

சுலோகம் - (ருசு)

ஆஉ அத்தியாயம் கங - க்குச் சுலோகம் (எகஉஅஏ)

உ

ஈக்ஷித்ரைநம:

24/12/07

பதினான்காம் அத்தியாயம்

* நிமிசாபேன வசிட்டஸ்ய தேகாந்தரபிராப்தி.

சூதர் கூறுகின்றார். ஜனமேஜயன் வியாசமுனிவரை வணங்கி ஓ மகானுபாவரே! வசிட்டமுனிவர் மகானுபாவராகையால் அவருடைய சரித்திரத்தை யின்னமுங்கேட்க விரும்புகிறேன். அந்தவசிட்டருக்கு மித்திராவருணி என்கிற பெயர் எப்படி வந்தது? அப்பெயர் அவருக்கு நடத்தையினால் வந்ததா? குணத்தினால் வந்ததா? அதற்குத் தகுந்தகாரண மெனக்குச் சொல்லுமென்றனன். வியாசர் ஓ

* நிமிசாபத்தால் வசிட்டருக்கு வேறுதேகம் வருதல்.

அரசச்சிரேஷ்டனே! வசிட்டர் நிமியென்னு மரசனால் சாபம் வரப்பெற்று அதனால் அவர் தேகத்தைவிட்டுப் பிரமனாணையால் மித்திரா வருணிடம் மறுபடியும் பிறந்தார். அதனா லவர் மித்திராவருணி யெனப் பெயர் பெற்றன ரென்றார். ஜனமேஜயன் ஓ ஐயா! நிமி என்னும் அரசன் பிரமருஷியை யேன் சபித்தான்? அவன் சபித்தாலும் அந்தச்சாபம் பிரமருஷியான இவருக்குப் பலிக்கலாமா? இது எனக் காச்சரியமாயிருக்கிறது. ஓ சுவாமிகாள்! அவ்வரசன் இவரிடம் குற்றம் நிகழக்கண்டு சபித்தானா? வேறேதேனுங் காரணத்தால் சபித்தானா? ஓ தருமமறிந்தவரே! சாபமிடவேண்டிய வரின்னார், பெற வேண்டியவரின்னாரென்னும் ஓர்வியவஸ்தையின்றி நடந்து வருகின்றதே; அதற்கு முதற்காரணம் எதுவோ அதனைச் சொல்லுமென்றனன். வியாசர், ஓ நுண்ணிய அறிவுடையானே! நீ கேட்டகாரணம் முன்னென்னால் சொல்லப்பட்ட நகுஷனுடைய சரித்திரத்தினாலேயே யூகிக்கலாம் ஆயினுஞ் சொல்லுகிறேன். இந்தச் சம்சாரமானது சத்வ ரஜஸ் தமோகுணமாகிய முவிதமாயாகுணங்களாலடையப்பட்டுக் கலந்து கொண்டிருக்கின்ற தல்லவா. அம்முக்குணசம்பந்தமான சம்சாரத்தையுடையவர்களே அரசரும் முனிவரும். அரசன் உலகதருமஞ்செய்தாலும் ருஷிகள் யோகதவஞ் செய்தலும் இருவர்க்குமுள்ள மனமானது முக்குணங்களிற் பயின்று அதனால் ஞானமற்று அப்பிரகாசத்தை யடைந்திருப்பதாகும். அவ்வப்பிரகாசமான மனமுடைய அவர்கள் காமக்குரோதலோப அகங்கார முதலானவைகளோடு கூடினவர்களாய்ச் செய்தற்கரிய தருமத்தையும் தவத்தையுஞ் செய்கிறார்கள்.

ஓ அரசனே! க்ஷத்திரியர் சத்துவகுணத்தைவிட்டு ரஜோகுணத்தினால் வியாபிக்கப்பட்டவர்களாய் யாகஞ்செய்கிறார்கள். அதுபோல் முனிவர்கள் ரஜோகுணத்தைவிட்டு சத்வகுணத்தினால் வியாபிக்கப்பட்டவர்களாய்த் தவத்தைச் செய்வார்களாயின் அரசர்களிடுஞ்சாபம் முனிவர்களைப்பற்றாது. சத்வகுணமாத்திர முடைய முனிவர்க ளெவருங்கிடையாது. அரசரும் முனிவராகிய அந்தணரும் ரஜோகுணமுடையவரே. ஆகலான் வசிட்டர் நிமிஎன்னும் அரசனாலும் நிமிவசிட்டராலுஞ் சமமாய்ச் சபிக்கப்பட்டு இருவருஞ் சாபபலத்தால் மகாதுக்கமடைந்தனர். திரவியசுத்தியும் கிரியாசுத்தியும் பிரகாசமானமனச்சுத்தியும் திரிகுணாத்மகமான சம்சாரத்தில் பிராணிகளுக்குண்டாவது துர்லபமென்றறிவாய். அதுபராசத்தியின் மாயாப்பிரபாவமாம். அந்த மாயாசத்தியை எவன் எந்த க்ஷேத்திரத்திலிருந்தாலும் எந்தத்தவஞ் செய்தாலுந் தடை செய்யத்தக்கவல்லனல்லன். எவன் விஷயத்தில் தேவிதயை

செய்கின்றாளோ அவன் பாமரனாயினும் அவனை அம்மாயை யொருக்ஷணத்தில் விட்டுப்போகின்றது. சத்தியசவுசவிரத முதலியவைகளையுடையவனாகின்றன். அவள் தயைசெய்யாளாயின் பிரமவிஷ்ணுருத்திரர்களாயிருந்தாலும் மாநுடருள் பண்டிதனாயிருந்தாலும் அம்மாயை அவர்களைவிட்டுப் போகின்றதில்லை சத்தியவிரத முதலானவைகள் விட்டுப்போகின்றன. ஓ அரசனே அந்த மாயாதேவியின் றிருவுள்ளமறிந்தவ ரெவருமில்லை. சத்ய விரதம் முதலியவையில்லாத பாமரரை அவையுடையபண்டி தராகச் செய்வள். அவையுடைய பண்டிதரை அவையில்லாதபாமரராக் குவாள் இவ்வாறு ஆதலால் செய்யவல்லமஹா மாயா சொரூபிணி, யாருக்குச் சுவாதீனமானவளெனின் தனது பக்தர்களுக்குச் சுவாதீனமானவள். ஆதலால் சகலபாபங்களையும் நாசஞ்செய்வதற்கு அவளிடம் பக்தி செய்ய வேண்டும். அந்தப் பக்தி லோபம் டம்பமுதலானவைகளோடு கூடியிருக்குமாயின் அவள்தயை செய்யாள் கெடுத்துவிடுவாள்.

ஓ அரசனே! இனிவசிட்டருக்குவந்த சாப காரணத்தைச் சொல்றேன் கேட்பாயாக.

நிமி என்பவன் இக்ஷவாகு குலத்திற் பிறந்தவன் அழகிய வுருவத்திலும் சகலநற்குண நற்செய்கைகளிலும் தருமஞானத்திலும் பிரஜைகளை ரக்ஷித்துச் சந்தோஷப் படுத்துவதிலும் சத்யமாயிருப்பதிலும் தானஞ்செய்வதிலும் யாகஞ்செய்வதிலும் பிரம ஞானத்திலுஞ் சிறந்தவன். பிரமணர்களுக்கு வேண்டிய சுகஞ் செய்யும் பொருட்டுச் கௌதமருடைய வாசீர்மத்தில் புரஞ்செய னென்கிற தன்னுடைய பிள்ளையைத் தாபித்தவன். இவ்வாறான நல்லொழுக் கங்களிற்சிறந்த அரசனுக்கு ராஜஸபுத்தியுண்டாய் அதனோடு அநேக காலமாய்ச் செய்யத் தக்கதாயுள்ள யாகத்தினால் தேவியைப் பூஜிக்க வேண்டு மென்கிற ஆவலுமுண்டாய் இக்ஷுவாகுவை வணங்கி அவ னனுமதிபெற்றுச் சாத்திரங்களிற் சொல்லி யிருக்கிறபடி யாகத்துக்குரிய சம்பாரங்களைச் சேர்த்துக் கொண்டு சர்வக்ஞர்களாயும் சர்வகலாசம்பந்நர்களாயும் சமர்த்தர்களாயும் மஹாதபஸ் விகாளாயுமுள்ள பிருகுமுனிவர் ஆங்கீரசர் வாமதேவர் கௌதமர் வசிஷ்டர் புலஸ்தியர் ரிசீகர் புலஹர் முதலிய முனிவர்களையும் வரவழைத்கது தனது ஆசாரியராகிய வசிட்டரை வணங்கி மிக்கவிநயத்தோடு ஓ முனிசிரேஷ்டரே! கருணைக்கடலே! எனக்குத்தேவரீர் ஆசிரியராகையால் யான்செய்ய வெண்ணியிருக்கும் யாகத்தை நடத்திவையும்; அந்தயாகத்துக்கு என்னால் சேகரிக்கப்பட்டசாமக்கிரியை முழுவதுந் தேவரீர் கண்ணுற்று

அவைகளைச்சுத்தி செய்தருளும். அந்தயாகத்தை ஐயாயிரவருஷம் தீக்ஷையோடிருந்து செய்ய வேண்டுமென்று அபேட்சை கொண்டிருக்கிறேன். நான் செய்யவாசை கொண்டயாகம் யார்பொருட்டென்று தேவரீர் கேட்பீராயின் ஜகதம்பிகையாகிய தேவியின் பொருட்டே ஆகலான் எந்தயாகத்தினால் தேவியைப் பூசித்தால் அவள் பிரீதியடைவாளோ அந்தயாகத்தைவிதிப்படிச் செய்யவேண்டு மென்றிருக்கிறே னென்றனன் வசிஷ்டர் ஓ அரசசிரேஷ்டனே! சிலநாளைக்குமுன் தேவேந்திரன் உன்னைப் போலவே தேவிக்குப் பிரீதியுண்டாம் வண்ணம் ஐந்நூறு வருடம் யாகஞ் செய்ய வேண்டுமென்று என்னையழைத்தனன். அதற்கு வருவதாய் நானொப்புக் கொண்டேன். ஓ அரசனே! அதுவரையில் பொறுத்திருப்பையாயின் நான் இந்திரன் வேண்டுகோளின்படி தேவியின் யாகத்தை முடித்துவிட்டு உன்னிடம் வருகிறேனென்றார். அரசன் ஓ எனதாசிரியரே! யக்யநிமித்தமாய் அநேக முனிவர்களை வரவழைத்துவிட்டேன். சர்வசம்பாரங்களுஞ் சேர்த்து விட்டேன். இனி எப்படிநான் அவ்வளவுகாலம் காத்திருப்பேன். இட்சுவாகுகுலத்திற்கு நீர் குருவாயிருக்கிறீர். நீர் எல்லாம் அறிந்தவர் உமக்கு நானென்ன சொல்லுவேன். எங்கள்குலத்துக்கு ஆசிரியராயிருக்கின்ற நீர் என் காரியத்தை நிறுத்திவிட்டு மற்றொருவர் காரியத்தை வரும்பிப்போவது முறையாகுமா? இது தேவரீருடைய நிலைமைக்குத் தகுதியானதன்று நீர்போக்கூடாது. திரவிய ஆசையைக் கொள்ளாதீரென்று தடுத்தனன். முனிவர் திரவிய ஆசையினால் அவன்றடையில் நிற்கப்பெறாமல் இந்திரனிடம் போய்ச் சேர்ந்தனர். அரசனும் மனவருத்தத்துடன் கவுதமரிடஞ் சென்று அவரை யழைத்துக்கொண்டு இமயமலைச் சாரலில் கடற்கரையில் யாகசாலையை யேற்படுத்தி யாகத்தை நடத்த ஆரம்பஞ்செய்து அச்சமயத்தில் அந்தணர்களுக்கு வேண்டிய தானங்களைக் கொடுத்து ஐயாயிர வருடம் யாகஞ் செய்வதாகச் சங்கற்பித்துக் கொண்டு தீக்ஷை வகித்து நடத்திவந்தனன். ருத்விக்குகள் அரசன்கொடுக்குந் தானங்களாலும் பசுக்களாலுஞ் சந்தோஷ மடைந்திருந்தனர். அச்சமயத்தில் வசிட்டர் இந்திரனிடஞ் சொன்னபடி ஐந்நூறுவருடங் கழிந்தமையால் இங்கு வந்துவிட்டனர். அவர் வரும்போது அரசன் மிகுந்த நித்திரையாக விருக்க அவனது சேவகர் அவனையெழுப்பி வசிட்டமுனிவர் வரவைத் தெரிவித்தனர்; தெரிவித்தும் அரசனதனைத் தெரிந்துகொள்ளாதவனா யிருந்தனன். அப்போது வசிட்டமுனிவர் இவ்வரசன் நம்மிடம் பயமும் பக்தியுமற்றவனாகக் காண்கின்றான். அவை யிருக்கும் பக்ஷத்தில் இது சேவர் நமது வருகையைத் தெரிவித்ததும் வராமலிருப்பானா இது நமக்கவமான மன்றோ வென்று கோபங்கொண்டு குல

குருவாயிருக்கின்ற நம்மைவிட்டு வேறொருவனைக் குருவாகக் கொண்டு நம்மை யவமதித்து யாக தீக்ஷை வகித்து அதனைச் செய்யத் தொடங்கினானாதலால், அவன் தேகமில்லாமற் போகக்கடவனென்றும் இப்பொழுதே அவன் சரீரமும் விழக்கடவதென்றுஞ் சபித்தனர் அச்சாபத்தைக்கேட்ட சேவகர் உடனே அரசனிடஞ் சென்று அவனை யெழுப்பி வசிட்டர் வந்தமையும் பின் சபித்தமையுங் கூற அரசன் கோபங்கொண்டவனாய் முனிவரிடம் விரைந்துவந்து தான்கொண்ட கோபத்தை வெளிக்காட்டாது மிக்க விநயத்துடன் ஓ தருமசீலரே! என்னால் யாதொரு குற்றமுமில்லை யான் யாகத்தைத் தொடங்கிய காலத்திலேயே தேவரீரிடம் தெரிவித்து நீர்போவதையும் மறுத்தேன் நீர் போய்விட்டீர். போனவர் மீண்டும்வந்து நீரே என்னிடம் குற்றமிருப்பதாக வெண்ணிச் சபித்துவிட்டீர். நீர்தானா தருமத்தின் முடிவையறிந்தவர்? நீர்தானா வேதவேதாந்தங்களை நன்குணர்ந்தவர்? ஆஹா! நீரிட்ட சாபம் நன்றாயிருக்கிறது. கோபம் சண்டாளனைக் காட்டிலுங்கொடி தென்றெண்ணிப் பெரியோரெல்லா மதனை நீக்கிவிடுகின்றனர். நீர் கொண்ட இக்கோபத்தினால் நீரடையவெண்ணிய பயன்யாது? நீர் முனிவர்களுக் கிருக்கவேண்டிய சூக்ஷம தருமத்தை இதுகாறுந் தெரிந்துகொள்ளாம லிருந்தமைபற்றி நான் மிகவும் வருந்துகின்றேன். நீர் என்னிடங் குற்றங்காணாது சபித்தீர்; நான் உம்மிடங்குற்றங்கண்டே சபிக்கின்றேன். ஓ முனிவரே! நான் தேகமிழப்பதுபோல் நீரும் தேகமிழக்கக்கடவீரென்றான். பின்னரிருவருஞ்சாபமேற்றவராய்த்துக்கமுற்றிருக்க, வசிட்டர் பிரமதேவனிடஞ்சென்று தமக்குச் சாபம் வந்தவிபத்தைக்கூறி ஓ என்றந்தையே! தேகத்தைவிட்டு எங்ஙனஞ்சுகமுற்றிருப்பேன். இனிநான் தேகமடைதற்குக்காரணமாயுள்ள பிதாயார்? அவரால் வேறு தேகம் வந்தால் இப்போதுள்ள ஞானமெனக்குண்டாகவேண்டுமே. நீர் சர்வசிருட்டி வல்லவராகையால் எனக்கிப்போதுண்டாயிருக்கும். மனோதுன்பம் நீங்கப்பெற்று இனிவரவேண்டியதாக வெண்ணுகின்ற இன்பம்வரப்பெற்றவாழ அநுக்கிரகிக்கவேண்டுமென்றுப் பிரார்த்தித்தனர். பிரமதேவன் வசிட்டரது பரிபவத்தைக்கண்டு ஓபுத்திரா! நீ துன்பமொழிக மித்திராவருணருடைய தேஜசில்கலந்து அதில் நிலை பெற்றிருப்பாய். பின்னர் ஓர்காலத்தில் அவரிடமிருந்தே அயோனிஜனாய்ப் பிறந்துதேகவிர்த்தியையடைந்து சகலசாஸ்திரசம் பன்னனாய் யாவரானும் பூஜிக்கப்பட்டவனாய் முநிஸ்ரேஷ்டனாய் வாழக்கடவாய் இதில் நீ ஐயங்கொள்ளற்கவென்றலும் வசிட்டமுநிவர் கவலையற்றவராய் அவரைப் பிரதக்ஷண நமஸ்காரஞ் செய்து விடைபெற்று மித்திராவருணருடைய தேஜசில் கலந்திருந்தனர். இவ்வாறிருக்குநாளில் ஊர்வசியானவள் தற்செயலாய் தன்னுடைய

சகிகளுடன் அந்த மித்திரா வருணருடைய ஆச்சிரமத்திற்கு வந்தனள். அவளை அம்முநிவர் கண்டு காமவசப்பட்டு ஓ ஊர்வசி, நீ இவ்விடத்திற்கு வந்தது என்தவமல்லவோ! வந்த நீ நான் வேண்டிய வின்பததையளித்து என்னை வாழ்விக்க வேண்டும் என்மனம் காமத்தீயால் தபிக்கின்றது. அதனை நீ தணியச்செய்வையாயின் உனக்குப் புண்ணியமுண்டென்று பலவாறாய்வேண்டியனர் அவள் அதற்கிசைந்தவளாய் ஓ முநிவரே! நீர் வருந்துதலொழிக, உமதிஷ்டப்படி இங்குவசித்து உமக்குவேண்டிய இன்பநலந் தருகின்றேனென்று கூறி அவரோடு கூடிப்போகித்து வாழுநாளில் ஓர்நாள் அம்முநிவர் அவளோடு கிரிடித்துக் கொண்டிருக்கிற சமயத்தில் அவருடைய வீரியம் அங்குள்ள ஓர் கும்பத்தில் வீழ்ந்தது. ஓ அரசனே! பின்னர் அக்கும்பத்தினின்றும் அகஸ்தியமுநிவர் முன்னும், வசிஷ்டமுநிவர் பின்னுமாக வெளிவந்தனர். அகத்தியர் அப்பொழுதே வனத்துக்கு போயினார். வசிட்டரோ! சகலகலா வல்லபராய்ப் பரமஞான நிஷ்டராய்ப் பிரகாசிக்க இக்ஷ்வாகு வம்சத்தில் வந்த அரசன் அவரது நல்லொழுக்கத்தையும் அறிவின் விசாலத்தையுங் கண்டுகளித்துத் தனது குலத்துக்கு என்றும் ஆசிரியரா யிருக்கப்பிரார்த்தித்தபொழுது அவரப்படியே யிருந்தனர். ஓ ஜனமேஜயனே! வசிட்டமுநிவருக்கு மித்திராவருணி என்கிற பெயர்வந்த வரலாறிதுவாகு மென்றனர்.

பதினான்காம் அத்தியாயம்

நிமிசாபேனவசிட்டஸ்ய தேகாந்தரபிராப்தி முற்றிற்று.

சுலோகம் - (சாகூ)

ஆஉ அத்தியாயம் கச - க்குச் சுலோகம் (அசுளஏ)

உ

ஈக்ஷணஸ்ருஷ்டாண்டகோட்யைநம:

பதினைந்தாம் அத்தியாயம்

வசிட்டசாபேன நிமேர்த்தேஹாந்தர ப்ராப்திகதனம்.

சூதர்கூறுகின்றார். ஜனமேஜயன் வியாசமுனிவரை நோக்கி ஐயா வசிட்டருடைய தேகப்ராப்தியைச் சொல்லியருளியது போல்

நிமிச்சக்கரவர்த்தி வேறுதேகத்தை யெப்படியடைந்தானோ அதையுமெனக்குச் சொல்லவேண்டுமென்றனன். வியாசமுனிவர், ஓ அரசனே! வசிட்டமுனிவர் மீண்டுந் தேகமடையப்பெற்றது போல் நிமிச் சக்கரவர்த்தியடைந்தானில்லை. இவன் சாபமேற்றவுடன் சரீரமுழுதுங் கொளுத்தப்பட்டவன்போல் தபித்துக் கொண்டிருந்தனன். யாகத்துக்கு வந்திருந்த ருத்விக்குகள் முதலியோர் அவன்படும் பாட்டைக்கண்டு சிந்தாகுலமடைந்து இந்தக்கஷ்டத்தில் நாமென்ன செய்யத்தக்கது. தருமப்பிரபுவாகிய அரசன்தீட்சையோடு கூடியிருக்கிறான். யக்யமோ முடியாமலிருக்கிறது. முடிவதற்குமுன் விபரீதமோவந்துவிட்டது. இந்த விபரீதத்தைக்கண்டு விடலாமோ வென்றால் விடவுங்கூடாது அதுமகாதோஷம். ஆதலால் கட்டாயமாய் நடத்தவேண்டும். இடையில் அரசனுக்குத் தேகம்போய்விட்டால் யாகத்தை நாமெப்படிமுடிப்பது. சாபத்தைதீர்ப்போமென்றால் நாம் சக்தியில்லாதவர்களாயிருக்கின்றோம். ஓ அரசனே! இவ்வாறு யாகமந்திரங்கட்குரிய அந்தணர்கள் பலபலவாயெண்ணிமுடிவில் இவ்வரசனை மந்திரங்களால் காப்பாற்றுவோமென்று துணிந்து உடனே நானாவிதமந்திரங்களால் அந்தப்பிரபுவின் தேகத்தைச் சிறிது சுவாசத்தோடிருக்கும் வகையாகச்செய்து நானாவிதமான சுகந்தகந்தங்களாலும் மலர்மாலைகளாலும் அவன்தேகத்தையடிக் கடிகுளிரச்செய்து விகாரமடையாமல் வைத்துக்கொண்டு யாகத்தைப் பூர்த்திசெய்து வரும்போது தேவர்களெல்லாம் வந்தனர். அவர்கள் வருகையைக்கண்ட ருத்விக்குகள் அவர்களைச்சந்தோஷிக்குமாறு தோத்திரஞ்செய்து அரசனுக் காசிரியரால் வந்ததுன்பங்களை விண்ணப்பஞ்செய்தனர். அவைகளைத் தேவர்கள்கேட்டு நிமிச்சக்கிர வர்த்தியைப்பார்த்து ஓ அரசனே! யாங்களெல்லாம் உன்னால்செய்விக்கப்பட்ட யாகத்தால் சந்தோஷமும் திருப்தியுமடைந்தோம் இனி உனக்குவேண்டிய வரங்களைக் கேட்பாயாக. நீசெய்த இந்தயா கத்தினால் உனக்குவேண்டிய தேகமெதுவோ அந்தச் சிரேஷ்டமான தேகத்தையடையலாம். ஆகையால் உனக்குத் தேவதேகம் வேண்டுமா? மானுடதேகம்வேண்டுமா? எந்தத்தேகத்தை மனதில் கோறுகின்றனையோ அந்தத்தேகம் உனக்குண்டாமாறு நாங்களனுக்கிரகஞ்செய்கின்றோம். உனக்குச் சாபமிட்டமுனிவர் மருத்யுலோகத்திற் சுகமாயிருக்கின்றனர். உனக்கு வேண்டிய வரமென்னவென்று கேட்க, நிமிசந்துஷ்டியடைந்தவனாய்த் தேவர்களைப் பார்த்து எப்போதாவது நாசமடையப் போகிற இந்தத் தேகத்தில் எனக்குக் கோறிக்கையில்லை. ஆகையால்

* வசிட்டசாபத்தினால் நிமிச்சக்கரவர்த்திக்கு வேறுதேகமுண்டாதல்.

சர்வப்பிராணிகளுடைய நேத்திரங்களில் நான்காற்றுருவமாயிருந்து வசித்தல்வேண்டும். இதுவே என்னுடைய வேண்டுகோளென்றனன். அவன் வேண்டுகோளை யுணர்ந்த தேவர்கள் நிமியைநோக்கி ஓமகாராஜனே! சர்வமங்களகரையாயும் சர்வேஸ்வரியாயுமிருக்கின்ற தேவியை நீபிரார்த்தனை செய்வையாயின் உனதுயாகத்தினால் திருப்தியடைந்திருக்கிறதேவி உன்கோரிக்கையை நிறைவேற்றுவாளென்று கூறிச்சென்றனர். அரசன் தேவர்கள் சொல்லியபடி தேவியைப்பக்தியுடன் திவ்யமான தோத்திரங்களால் போற்றிவாழ்த்திப்பிரார்த்தித்தனன். அம்பிகை அவன்பால் கருணை யுடையவளாய்க் கோடி சூரிய ருதித்தாற்போலும் பிரகாசிக்கின்ற திருமேனி யுடையவளாய்ப் பிரசன்னமாயினள். அரசன் அம்பிகையைக்கண்டு ஆனந்தபரவசனாய் ஹே அம்பிகே! எந்த ஞானத்தினால் எனக்கு மோக்ஷமுண்டாகுமோ அந்தஞானமும் சர்வ ஜக்துக்களுடைய நேத்திரங்களில் வாசமுமுண்டாகவேண்டுமென்று பிரார்த்திக்க ஜகன்மாதாவாகிய தேவி அங்ஙனமே ஆகுகவென்றனுக்கிரகஞ்செய்து பின்னர் ஓ அரசனே! நீ சகலப்பிராணிகளுடைய நிமையில் வசிக்கவெண்ணியபடியால் தேவர்கள் நீங்களலாக ஏனைய மனிதர்களும் பசுக்களும் பட்சிகளும் நிமைகொட்டுந் தன்மையை யடையப்பெறுமென்று கூறி அங்கிருந்த எல்லாமுனிவர்களையுங் களிக்கச்செய்து திருவுருக்கரந்தனள். தேவிமறைந்தபின்னர் முனிவர்களெல்லாங்கூடி நமதரசனுக்குச் சந்ததியில்லாமற்போதல் நலமன்றென்றெண்ணி நிமிச்சக்கரவர்த்தியின் தேகத்துக்குச் சமஸ்காரஞ் செய்து அவ்விடத்தில் அரணிக் கட்டையைப் பிரதிஷ்டைசெய்து புத்திரநிமித்தமாய் மந்திரங்களைக் கூறிக் கடைந்தார்கள். அந்த அரணிகடையப்பட்டிருக்கும்போது சர்வலக்ஷணங்களோடுகூடின வேறொரு நிமிச்சக்கரவர்த்தி என்று சொல்லும்படியான தோற்றத்தோடு ஓர் பிள்ளை பிறந்தனன். அரணிக்கட்டை கடைந்ததனால் பிறந்தவனாகையால் அவன் மிதி என்றும், ஜனக நிமித்தமாய்ப் பிறந்தவனாதலால் ஜனகனென்றும் பெயர்பெற்றனன். நிமிச்சக்கிரவர்த்திக்குத் தேகமில்லாமல் போய்விட்டபடியால் அந்தவம்சத்தில் வரும் அரசரெல்லாம் விதேகர்களென்று கூறப்பெற்றனர். பின்னர் நிமிச்சக்கரவர்த்தியின் மகனான மிதியென்பவன் கங்காநதியின் கரையில் மனோகரமாயும் கோபுரம் பிராகாரம் மாளிகை முதலானவைகளோடு கூடினதாயும் தனதான்யாதிகளால் சம்பூர்ணமாயுமிருக்கிற ஓர் நகரம் தன்பெயரால் விளங்க மிதுலாபுரி என்று யாவரானும் வழங்கச் செய்தனன். ஓ அரசனே! அந்தவமசத்தில் எந்தவரசர்கள் பிறக்கின்றார்களோ

அவர்களெல்லாம் ஞானவான்களாய் ஜனகர்களென்றும் விதேகர்களென்றும் பெயர்பெற்றவராய் வருபவரானார்கள். ஓ ஜனமேஜயனே! நீ விரும்பியவண்ணம் நிமிச்சக்கரவர்த்தியின் வரலாற்றைக் கூறினேனென்றார்.

ஜனமேஜயன், ஓ வியாசபகவானே! நீர் கூறும் ஒவ்வொருகதை யினுஞ் சிற்சில சந்தேகங்களெனக்குத் தோன்றுகின்றன. பலமுறையுங் கேட்பதற்கு லஜ்ஜையுடையவனாயினும் தோன்றுஞ் சந்தேகங்கட்கு லஜ்ஜையுண்டாகவில்லை நானென்செய்வேன். தேவரீருங் கருணையுடையவராதலால் நான் கேட்குந்தோறுங் கோணாது விடை கூறிவருகின்றீர். அவ்விடையானது எனக்குண்டாகும் லஜ்ஜையை யொழித்து இன்னமுங் கேட்கச்செய்கிறது. ஓ கிருபாநிதியே! நிமியினால் வசிட்டருக்குண்டாகிய சாபத்தைக் கேட்கச் சந்தேகமுண்டாயிற்று. அஃதென்னையெனின் நிமிச்சக்கரவர்த்தி சகல தருமங்களையுந் தெரிந்து உலகியலைச் செங்கோன்முறையாயென்றும் மாறாது நடத்தவேண்டியவனாயிருக்க. தனது குருவாயும் பிராஹ்மணச் சிரேஷ்டராயும் பிரஹ்ம புத்திரராயு மிருக்கிற வசிஷ்டமுநிவரிடத்தில் பொறுமையாகவிருத்தலை ஏனிழந்தனன்! ஆசிரியன் சபித்தால் மாணவகன் ஆசிரியனைச் சபிக்கலாமா! அன்றியும் யாகத்தைத் தொடங்கி நடத்திவருங்காலத்தில் தன்னுள்ளத்தில் கோபத்துங்கிடங் கொடுக்கலாமா! என்றனன்.

வியாசர் ஓ அரசனே! மனோதருமத்தை வெற்றிகொள்ள வறியாதவரால் பொறுமையடையத் தக்கதல்ல. பொறுமையுடையாரை இவ்வுலகிற் காண்பது மிகவுங்கஷ்டம். அப்பொறுமையோடு ராகத் வேஷங்களுக்கிடமில்லாமல் தாங்குறித்த காரியத்தை முடித்துக் கொள்ளுஞ் சாமர்த்திய முடையாரைக் கண்டாலதனினுங் கஷ்டம். எவராயினும் சர்வசங்க பரித்தியாகஞ்செய்யவும் நித்திரை பசிதாக முதலியவைகளை யடக்கவும் யோகாப்பியாசத்திற் பயிலவும் வன்மையைப் பெறினும்பெறுவர். பொறையுடைமை யொன்றை மாத்திர முடையராகும் வன்மையை யொருவரு மெய்தப்பெறார். ஓ ஞானசீலனே! சர்வசங்கபரித்தி யாகஞ்செய்யத் தலைப்படுவோர் புறத்தேயிருக்குஞ் சங்கங்களை யறிந்து அவைகளைப் பரித்தியாகஞ் செய்ய முயலுவரே யன்றித் தம்மகத்திருக்கும் காமம் குரோதம் லோபம் அகங்காரமென்னு மிச்சங்கங்களையறியவு மறியார் பரித்தியாகஞ்செய்யவுஞ்செய்யார். இந்நான்குமே பொறையுடைமைக்குச் சத்துருவாயுள்ளவை. இந்தச் சத்துருக்களை யறிந்தார் இவ்வுலகில் எவருள்ளார். அவர்கள் முன்பிறந்ததுமில்லை, இப்போது பிறந்திருப்பதுமில்லை, இனி

பிறக்கப்போகிறது மில்லை, இவ்வுலகிலின்மை யுண்மைபோல் சொர்க்கத்திலும் பிரமலோகத்திலும் வைகுண்டத்திலும் கைலாயத்திலும் மற்றெவ்விடங்களிலு மில்லையாம். அஃதெப்படியெனின்! முநிவர்களும் தவசிகளும் முன்கூறிவந்த ஏனையோரும் மூன்றுலகத்தினு முள்ளவரேயன்றி இல்லாதவரன்றே. இவருள்பொறையுடைமை யுடையாரைக் கண்டோமா! இவர்களிடத்திலேயே காணக்கூடாதபோது சாமானியராயுள்ள மனிதரிடத்துக்காணப்போகின்றோமா! மற்றெவற்றைக் காணப் பெறுவோமெனின்! பிரகிருதிசம்பந்தமாயிருக்கின்ற மூன்று குணங்களையும் அம்முக்குணங்களின் விகாரச்செயல்களையுந் தான் காணப்பெறுவோம். கபிலமுநிவரென்பவர் சாங்கியசாஸ்திரத்தில் வல்லவராயும் யோகாப்பியாசத்தில் பயின்றவராயுமிருந்தும் அந்தமஹான் குணவேற்றுமையால் சகராளுடைய புத்திரர்களைத் தீயில்கொளுத்திவிட்டனர். ஏனெனின் எல்லாவுயிர்களுந் தோன்றுதற்குக் காரணம் அகங்காரமாதலால் அவ்வுயிர்களின் செயலாகியகாரியமும் அகங்காரமாகவேயிருக்கும். காரியம் காரணமெத்தன்மைத்தோ அத்தன்மையாயிருக்குமேயன்றி அதற்குவேறாகவிருக்குமா! இவ்வுலகினை ஆக்கியுங் காத்தும் அழித்தும் வருகின்ற பிரமன்முதலிய மூவரும்முக்குணவயப் பட்டுள்ளவரே. அக்குணசம்பந்த மில்லாதொழியின் தாம் தாஞ்செய்யுந்தொழிலில் பிரபுத்வத்தைக் கொண்டிருப்பரா! இப்படியே எல்லாப்பிராணிகளும் ஒருசமயத்தில் சத்வகுணப்பிரதானராயும் ஒருசமயத்தில் ரஜோகுணப்பிரதானராயும் ஒருசமயத்தில் தமோகுணப் பிரதானராயும் அவ்வக்குணங்களின் செயல்களைச் செய்வரேயன்றி இம்முக்குணசம்பந்தமற்ற சுத்தசாத்வீக் குணமாத்திரமாகவேயிருந்து அக்குணத்திற்குரிய செயலைச் செய்யவறியார். துரீயப்பொருளாகிய பரமாத்மாவொருவனே குணரகிதனாயும் குணசகிதர்களாற் காணக்கூடாதவனாயும் நிர்லோபனாயும் அவ்யயனாயும் அப்பிரமேயனாயும் சநாதனனாயுமுள்ளவன். அவனதுமகாசத்தியகிய பராசக்தியும் நிர்க்குணையாயும் பரமாத்மாவினிடத்தினிலை பெற்றவளாயும் அற்ப வறிவுடையவர்களா லறியக்கூடாதவளாயும் சர்வ பூதங்களிடத்தும் வாசஞ்செய்கின்றவளாயு மிருப்பவள். அப்பர மாத்மாவும் பராசத்தியுமாகிய அவ்விருவரும் எப்பொழுதும் நீங்காது ஐக்கியமாகவேயுள்ளவர். இவ்வா றயின்னமாயிருக்கின்ற பர சிவசக்திகளை யறிகின்றவனெவனோ அவனொருவனே சர்வ குண தோஷங்களி னின்று நீங்கியிருக்கத்தக்கவனாவன். வேதாந்தங்களும் அந்தப் பரமாத்ம பராசக்தி தயானத்தினாலேயே மோக்ஷமுண்டா கிறதென்று கூறுகின்றன. திரிகுண சொரூபமான இச்சம்சாரத்தில்

இவ்வேதாந்த வுண்மை ஞானத்தை எவனறிகின்றானோ அவனே மோக்ஷமடைகின்றான். ஓ அரசனே! அந்த ஞானம் சப்த ஜ்ஞானம், அனுபவஜ்ஞானமென இருவகைப்படும். சப்தஞானமாவது வேதசாத்திரங்களை யறிந்த புத்தி பலத்தினால் உண்டாகும் முன்கூறிய வேதாந்த வுண்மை ஞானமாகிய சுத்த சாத்வீக ஞானமாகும். இந்த ஞானமானது ஞானிகளுடைய சங்க மாத்திரத்தினால் உண்டாகத்தக்கது. அந்த ஞானத்தினால் புத்தியினாற் கற்பிக்கப்படும் அநேக சந்தேகங்களை யுண்டாக்கப்படுகின்றது. அநுபவ ஜ்ஞானமாவது சப்த ஞான பலத்தினால் தன்னுள்ளேயிருந்து தன்னை வஞ்சிக்கும் அஜ்ஞானத்தையறிந்து அதன் வஞ்சவழியைக் கண்டொழித்தலாம். இந்த ஜ்ஞானமுண்டாதல் மிகவுங் கஷ்டமாகும். இந்த வனுபவஞானத்தைவிட்டுச் சப்த ஜ்ஞானமாத்திரமா யொருவனிருப் பானாயின் அவனந்தஞானத்தினா லஞ்ஞானத்தை யொழிக்க வல்லவனாகான். இருளைப் போக்கவெண்ணிய வொருவன் தீபம் தீபமென்று வாயினான் மாத்திரஞ் சொல்லுவானாயின் அச்சொல் வன்மையினாலேயே இருள்போகுமோ! அதுபோலாகும் சப்த ஞானத்தின் வன்மையென்க.

ஓ அரசனே! எந்தக் கர்மம் சம்சாரபந்தத்தை நீக்கச் செய்கின்றதோ அதுவே கர்மமெனப்படும். எந்த வித்தை மோக்ஷத்துக்குச் சாதனமாகின்றதோ அதுவே வித்தை எனப்படும். சம்சாரபந்த நிவிர்த்தியைச் செய்யவறியாத கர்மமும் கர்மமல்ல மோக்ஷசாதனத்துக்கமையாத வித்தையும் வித்தையால்ல. இவ்விரண்டும் சரீரப் பிரயாசையையும் காரியத்தில் சாமானியத்தையும் கொடுப்பனவாம். நல்லொழுக்கத்தோடு கூடியிருத்தல் பிறருக் குதவிசெய்தல் கோபமில்லாதிருத்தல் பொறுமையுடையராயிருத்தல் தைரியமுடையராயிருத்தல், சந்தோஷமுடையராயிருத்தல் இவை முதலியனவெல்லாம் மோக்ஷசாதனமாயுள்ள வித்தையினால் வரத்தகும் பலனாம். இந்த வித்தையும் இதைக்கொண்டு செய்யத்தகுந் தபசும் யோகாப்பியா சமுமில்லாமல் காமக்குரோத முதலிய சத்துருக்களுடைய நாசமுண்டாகாது. இந்த நாசமும் இந்தச் சத்துருக்கள் தோன்றுதற்கிடமாயுள்ள மனம் நாசமானாலன்றி அவை நாசமாகா. ஆகலான் நிமிச்சக்கிரவர்த்தி நான் சொல்லியவாறு மனோநாசஞ்செய்திருந்தாலல்லவா தனதாசிரியரிடத்தில் பொறை யுடைமையைப் போற்றியிருப்பன். பூர்வத்தில் யயாதி மஹாராஜன் பிருகுபுத்திரனாகிய சுக்கிராசாரியனால் சபிக்கப்பட்டவனா யிருந்தும் தான்பிரதிசாபம் அந்தச் சுக்கிரனுக் கிடாமல் அவனால் சபிக்கப்பட்டதாகிய கிழத்தன்மையைத் தானடைந்தனன். இதுவன்றோ

பொறையுடைமைக்கழகு. உலகில் ஒருவன் சாதுவாயும் ஒருவன் துஷ்டனாயும் சாதுவானவனே துஷ்டனாயும் துஷ்டனே சாதுவாயும் இருத்தலியல்பு. இவ்வாறிருக்குமாயின் யாரைக் குற்றமுடைய ரென்றும் யாரைக் குணமுடையரென்றுங் கூறலாம். இவற்றையெண்ணத்தக்கவர் பொறையுடையமையை வேண்டுபவரே! பூர்வத்தில் ஹைஹயரென்கிற அரசர்கள் மிக்ககோபங் கொண்டவர்களாய்ப் பிருகு முநிவருடையகுலத்திற் பிறந்தவர்களாயும் புரோகிதர்களாயு மிருந்த பிராஹ்மணர்களைத் திரவியத்தினிடத்தி லிருந்த ஆசையினால் இவர்களை நாம் கொன்று விடுவோமானால் பிரஹ்மஹத்தியினால் பாவம் வந்து முன்னிற்குமே என்று சிறிதுமெண்ணாமல் அந்தப்பாவம் வருமென்ற ஞானத்தைப் பின்றள்ளிவிட்டு அவாவை முன்னாகக்கொண்டு அவ்வந்தணருள் ஒருவரையும் விடாமல் யாவரையுங்கொன்று விட்டார்கள். இத்தன்மையான அறிவின்மைக்கு யாம் யாது செய்யலாமென்றனர்.

பதினைந்தாம் அத்தியாயம்

வசிட்டசர்பேன நிமேர்த்தேஹாந்தா ப்ராப்திகதனம் முற்றிற்று

———

சுலோகம் (சாங)

ஆஉ அத்தியாயம் கரு - க்குச் சுலோகம் (கூஙOஎ)

————

உ

ஈஸ்வரவல்லபாயைநம:

———

பதினாறாம் அத்தியாயம்

* ஹைஹயகிருதவிப்ரவதம்.

———

சூதர் கூறுகின்றார். வியாச முனிவரால் சொல்லிவந்த ஞான விசேஷங்களை யெல்லாங் கேட்டவனாகிய ஜனமேஜயன் இறுதியில் அரசர்களால் பிராமணவதை யுண்டாயிற் றென்கிற விஷயத்தைக் கேட்டு ஆச்சரிய மடைந்தவனாய் ஐயா! பாட்டனாரே! பிரமஹத்தியைப் பார்க்காமல் பிருகு வம்சத்திற் பிறந்த பிராமணர்களை எவர்கள்

* ஹைஹய ரென்கிற அரசர்களால் செய்யப்பட்ட பிராஹ்மணவதை.

கொன்றார்களோ அந்தஹைஹய க்ஷத்திரியர்கள் எக்குலத்திற் பிறந்தவர்கள் அவர்களுக்கு அவ்வந்தணரிடம் பகையுண்டான காரணம் யாது? அதனைச்சொல்ல வேண்டும். அரசசிரேஷ்டர்கள் காரணமின்றிக் கோபிப்பார்களா? அக்காரணஞ் சிறிதன்றிப் பெரிதாயிருத்தல் வேண்டும். அன்றியும் புரோகிதர்களாகிய அவர்களோடு இவர்களுக்கு வைரமுண்டாக வேண்டிய அவசியமேயில்லை. இதனால் அவர்களிடங் குற்றமுள தென்றெண்ணுகின்றேன். இலதாயின் பூஜிக்கத்தகுந்த பிராமணர்களை யெப்படிக் கொல்லுவார்கள். ஓ ஐயா! அந்தணர்களாகிய அவர்கள் குற்றமான செயலை யேன் செய்யவேண்டும்? அப்படி அவர்கள் தான் செய்யினும் பலவான்களாயுள்ள இவ்வரசர் பாபத்திற் கஞ்சாம லேன்கொலை செய்ய வேண்டும்? இவர்கள் செய்யத்துணிந்த கொலையைப் பார்க்கினும் அவர்களாற் செய்யப்பட்ட குற்றம் பெரிதாயிருக்குமா இது எனக்குச் சந்தேகமா யிருக்கின்ற தென்றனன். இவனது கேள்விகளுக்கு முனிவர் மிகவுஞ் சந்தோஷித்தவராய் அந்தச்சரிதத்தை மனதினால் கியாபகப் படுத்திக் கொண்டு சொல்லத் தொடங்கினார். ஓ ஜனமேஜயனே! பூர்வத்தில் கார்த்தவீரிய னென்னும் ஹைஹயராஜனிருந்தான். அவன் ஆயிரங்கை யுள்ளவனாயும் மகாபலசாலியாயும் தருமத்திலூக்கமுள்ளவனாயும் விஷ்ணுமூர்த்தியின் அவதாரமாகிய தத்தாத்திரேயருக்குச் சிஷ்யனாயும் சகலசித்திக ளுள்ளவனாயும் பிருகு வம்சத்திற் பிறந்தவர்களைப் புரோகிதர்களாக வுடையவனாயும் வேதவிதிமுறையாய் யாகஞ்செய்வதில் தர்மிஷ்டனாயும் தானத்திலாவலுள்ளவனாயும் பிராணமர்களுக்கு வேண்டிய தானங்களைக் கொடுக்கிறவனாயு மிருந்தனன்.

அரசனிடத்தில் அந்தணர்கள் பெற்றதான தனத்தினால் மிக்கதனவான்களாயும் சிறந்த குதிரைகள் யூர்திகளாக வுடையவராயும் ரத்னாபரணங்களன்றி வேறோராபரணங்க ளில்லாதவராயும் உலகில் புகழ்பெற்று வாழ்ந்திருந்தனர். இவ்வாறந்தணர்களை வாழ்வித்த கார்த்த வீரியார்ச்சுனன் காலத்தால் சுவர்க்கத்தை யடைந்தனன். பின்னர் அவன் வம்சத்திற் பிறந்த அரசர்கள் பொருளில்லாது எளியராய் வறுமையடைந்து பொருள்வரும்வழி அறியாது தங்கள் தந்தைபால்தானமேற்ற அந்தணர்கள் பெருஞ்செல்வான்களா யிருத்தலால் அவர்கள் பாற்சென்று நமதுவறுமையைப் போக்கிக் கொள்வோ மென்றெண்ணி அப்படியே அந்தணர்பாற் சென்று அவரடிவணங்கி ஓஐயன்மீர்! நாங்களிப்பொழுது தனமற்று தானமேற்க வந்திருக்கின்றோ மாதலான் உமக்குரிய அறுதொழிலில் முதலாயுள்ள ஈதற்றொழிலை யெங்கள்பாற் செலுத்தவேண்டுமென்று பிரார்த்தித்தனர்.

பேருளாசையிற் சிறந்த அவ்வந்தணர்கள் எங்கள் பாற்பொருளேது? உங்களுக்குக் கொடுக்கும் பொருளுடையவர்களாக நாங்களிருப் போமா? அதனை நீங்களறியீரா? போமின் போமின் எங்களிடத்திற் பொருளில்லை யென்று கூறினார்களேயன்றி அவர்களுக்குச் சிறிதேனுந் திரவியங் கொடுத்தாரில்லை. அவர்கள் கடுமொழியைக் கேட்ட அரசகுமாரர்கள் நம்மிடந்தானமேற்போரிடத்து நம்மை யேற்கும்படிச்செய்து வூழைநினைந்து நாம்செல்லத்தக்கவர்களேயன்றி இவர்களைநாம் நோவதனாற் பயனென்னை யென்று சென்றனர். அவர்கள் சென்றதைக்கண்ட அந்தணருட்சிலர் திரவியத்தைப் பூமியிற் புதைத்தும் தம்மினும் தனத்திற் பெரியவந்தணரிடத்து வட்டிக்குக் கொடுத்தும் தத்தம் கிருகங்களை விட்டு ஆரணியங்களிற் சென்று வறியர்போல் மலை முழைகளினும் நதி தீரங்களினும் வசித்து வாழ்ந்திருந்தனர். சிலநாள் கழித்து அரசர்கள் பிருகு வம்சத்தராகிய அந்தணர்களுடைய ஆசிரமங்களிற் சென்று அங்கு அவர்களில்லாமையைக்கண்டு இவ்வந்தணர்களெல்லாந் தேடிய பொருள் இவ்விடத்தி லிருக்கவேண்டுமேயன்றி வேறெவ்விடத்திற் போக்க வறிவார். ஆகையால் நாம் இவ்வாச்சிரமங்களில் பூமியைத் தோண்டிப் பார்ப்போமென்று தோண்டச் சில பொருள் கிடைக்கப்பெற்றுக் கவலையற்று ஆசைப் பெருக்குடையவர்களா யெங்குந் தோண்டி அளவிறந்த பொருளைக் கிரகித்துக் கொண்டு தங்களிடம் போய்ச் செல்வவான்களாய் வாழ்ந்திருந்தனர்.

இச்செய்தியறிந்த பிராமணர்கள் அந்தோ! அந்தோ!! வென்றேங்கி அரசர்கள் பாற்சென்று ஓ அரசர்களே! எங்களை ரக்ஷிக்க வேண்டும் உங்கள் சரண்புகுந்தோ மென்றோலமிட்டலறினர். அவர்களைக்கண்ட அரசர்கள் முன்செய்தகொடுமையை நினைந்து பாணங்களையெடுத்து அதட்டித்துறத்தியோட்டினார்கள். அந்தணரெல்லாம் இனிநாம் இங்கிருப்போமாயின் நமதுபொருள் போனவாறு நம்முயிரும் போமென்றஞ்சி மலைகளையும் வனங்களையும் தேடியோடினர். அரசர்கள் இவ்வந்தணர்க் கருவுகளும் உலகில் வாழக்கூடாவென்று எங்குந் திரிந்துதிரிந்து தம்மிடம் தானம் வாங்கினவரேயன்றி வாங்காதாரையும் விருத்தர் பாலர் முதலாயினாரையுங் கருப்பிணிகளையு மழித்தனர் அக்கொலையால் வரும்பாபத்தைச் சிறிது மெண்ணிலர். அந்தணரெல்லாம் நாமென்செய்வோம். நம்முடைய வம்சமெல்லாம் நாசமடையும்போற் காண்கின்றதே நம்மை ரக்ஷிப்பா ரெவருள்ளாரென்று பலவாறாய் மனங்கலங்கி அரசருட் சிலரைப்பார்த்து ஐயகோ! நாங்களென்ன பாவஞ்செய்தோம். உங்கள் தந்தையால் தானம் நாங்கள் வாங்கினோமில்லை. உங்கள் பொருள் எங்களிட

மில்லையென்பதுண்மை. பிராமணஸ்திரீகளைக் கொல்வது பெரும்பாவம். இத்தருமத்தை நீங்களறியீரா. கோபங்கொள்ளாது எங்களை யுயிரோடு விட்டுவிடுங்கள். பிருகுவம்சத்திற் பிறந்த கற்புடைய ஸ்திரீகளையும் விடுங்களென்று வேண்டியும் அவர்களொருவரையேனும் விட்டாரில்லை. புண்ணிய தீரத்திலுள்ள சில முனிவர்கள் இவர்களை யெதிர்ப்பட்டு ஒ க்ஷத்திரியர்களே! உங்களுடைய க்ஷாத்திர தருமத்தைப் புண்ணியத்தின் வழி செலுத்தாமல் பாபத்தின்வழி செலுத்துகின்றீர்களே! அந்தணரொழியின் உலகம் வாழ்வதெங்கே. ஏனிப்படிச் செய்கிறீர்கள். அந்தணர்களிடம் கோபிக்க வேண்டா மென்றனர். அரசர் முனிவர்களைப் பார்த்து ஒ பெரியோர்களே! நீங்களனைவரும் மகா சாதுக்களாகக் காணப்படுகின்றீர்கள். உங்கள் வாக்குகளில் எங்களால் கொல்லப்படும் அவ்வந்தணர்களுடைய பெயரை வழங்கப்பெறுதலும் பாவம். இவர்களுடைய தீங்கை நீங்களறிந்திலீர்கள். இவர்கள் எங்கள் பூர்வீகர்களை மார்க்கங்களிற்பறிக்குங் கள்வரைப்போல் வஞ்சித்து எங்கள் பொருளையெல்லாங்கொள்ளைகொண்டவர்கள். இவர்களைப் போன்ற வஞ்சகர்களுமுண்டோ இவர்களுடைய வைதீக ஆசாரமெல்லாம் டம்பமே. இவர்கள் கொக்கைப்போல் கண்மூடியிருக்குந் தியானமானது பிறர் பொருளைக் கொள்ளை கொள்வதற்கேற்ற வுபாயங்களை யெண்ணுதலே. ஐயன்மீர்! நாங்கள் வறுமையாளர்களா யிவர்களிடஞ்சென்று எங்கள் குறைகளைக்கூறி எங்களுக்கு வேண்டும் பொருளை இப்போது தருவீராயின் இக்காலவட்டிக்கு அதிகமான வட்டிகொடுக்கின்றோமென்று வேண்டிக்கொள்ள அதற்கவர்கள் நாங்கள் படும்பாட்டையும் வேண்டிக்கொள்ளு மின்னுரைகளையுஞ் சிறிதுமெண்ணாது வழிப்போக்கர்களுக்குக் கூறுவதுபோல எங்கள்பால் பணமேதையா! நாங்கள் யாசிக்கின்றவர்களல்லவா. யாகஞ்செய்வதற்கே பணமில்லாமல் நாங்கள் துக்கப்பட்டிருக்கும்போது உங்களுக்குப் பொருளெப்படி கொடுக்கக்கூடும் போம்போ மென்றார்களையா. எங்கள் கார்த்த வீர்யார்ச்சுனன் இவர்களுக்குப் பொருள்கொடுத்த தெற்றுக்கு? இவர்களும் தங்களைக்காத்துக் கொள்ளற்கும் செய்யவேண்டிய தானதருமங்களையுஞ் செய்தற்குமன்றோ. இவ்வசுரராகிய பூசுரர்கள் ஒரு காசளவேனும் ஓர் யாசனுக்காவது ஓரந்தணனுக்காவது கொடுத்திருப்பார்களா? தாங்களாவது அனுபவித்திருப்பார்களா? பிறருக்குந் தமக்கும் பயன்படாத பொருளுக்குச் சோரபயமும் ராஜ பயமும் அக்னிபயமும் இம்மூன்றுமல்லாத வஞ்சனையாற் கொள்வோரது பயமுமுளவென்று பெரியோர் கூறுவரே. திரவிய

லக்ஷ்மியானவள் தன்னை யறத்தின் வழிச்செலுத்தாதவரையும் தம்பொருளைப் பிறருக்குபகரிக்கப்படும் பிறர் பொருளென் றெண்ணாமல் தம்பொருளென்றெண்ணித் தாமே யனுபவிப்பவரையும் இவர்களை விட்டு நீங்குங்கால மெக்காலமென்று அக்காலத்தை யெதிர்பாராநிற்பள். ஓ முனிவர்களே! நாங்கள் இவர்களைத் தானங் கேட்கவில்லை, உபகாரஞ் செய்யுங்களென்றுங் கேட்கவில்லை. தரும வட்டிக்குங் கேட்கவில்லை, தருமவட்டிக்கு மேல் கால்வட்டி கொடுக்கிறோமென்று கேட்டோம். அதற்கில்லையென்று கூறினார்களே! இவர்கள் அந்தணரென்னுஞ் சொல்லுக்கும் உரியவரா? இவர்களன்றோ அறக்கொல்லும் அசுரரென்று சொல்லப்படுவர். இவர்கள் எங்களுக்குப் புரோகிதராவரா? அந்தணருக்கு ஆசையங்கமாகச் சொல்லப்பட்டி ருக்கிறதா? நிராசையை யொருகாலத்து மெண்ணியிருப்பரா? ஓ ஐயன்மீர்! தனத்திற்கு தானம் போகம் நாசமென்று மூன்றுளதன்றோ. அவற்றுள் அறிவிற்சிறந்த சமர்த்தர்களால் தனத்துக்குத் தானமும் போகமு முண்டாகும். பாபிஷ்டர்களால் நாசமொன்றுமே யுண்டாகும். எவன் தானஞ் செய்யாமலும் தானனுபவிக்காமலும் பூமியிற் புதைத்து வைக்கின்றானோ அவ்வஞ்சகனை அரசன் தண்டிக்கவேண்டு மென்று விதியுளதாகலான் அவ்விதியை நாடி இத்தண்டஞ் செய்து வருகின்றோம். ஓ மகான்களே! எங்களை நீவிர் அநீதிமான்க ளென்றெண்ணா தொழியுங்களென் றுபசரித்துச் சொல்லி பிருகுவம் சோற்பவராகிய ஸ்திரீகளைப் பூமி யெங்குந் தேடித் திரிந்தார்கள். அவ்வந்தண ஸ்திரீகளெல்லாம் இவர்கள் வருகையைக் கண்டஞ்சி அழுதுகொண்டே நடுநடுங்கியோடி இமயமலையடைந்தனர். இவ்வாறு பாபத்தொழிலிற்றலைப் பட்டவர்களான ஹைஹயராஜாக்களால் பிராமணர்கள் பீடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். ஓ அரசனே! மாநுடர்களுக்கு லோபமே சரீரத்திலிருக்கும் பெருஞ்சத்துருவாயும் சர்வதுக்கத்துக்கும் ஸ்தானமாயும் பிராணனைநாசஞ் செய்யத்தக்கதாயும் சர்வபாபத்திற்கும் மூலமாயுமுள்ளது. எவனொருவன் லோபத்தையும் ஆசையையுமுடையவனாயிருக்கின்றானோ அவனெப்பொழுதும் மூன்றுவருணங்களுக்கும் விரோதத்தைச் செய்வான். அவனே சர்வசங்கடத்திற்குங்காரணமாய்ப் பரதருமத்தையும் குலதருமத்தையும் விட்டு மாதாவையும் பிதாவையும் பராதாவையும் பந்துக்களையும் குருவையும் மித்திரனையும் பிராமணனையும் புத்திரனையும் சகோதரியையுங்கொலை செய்வதற்குகஞ்சான். அந்தப்பாபி எந்தக்கெட்டகாரியத்தைத்தான் செய்யான்? குரோதம் காமம் அகங்காரம் என்று மிந்த மூன்று சத்துருக்களைப் பார்க்கிலும் லோபமேபலமான சத்துருவாகும், அதனா லதனையுடையவன் எந்த

வேலையைத் தான் செய்யான். ஓ ஜனமேஜயனே! ஹைஹயராஜாக்களும் அந்தலோபத்தினாலேயே அளவிலடங்காத பாவத்தைச் செய்துவந்தனர். இவனாற் கொல்லப்பட்ட அந்தணர்கூட்டமும் இவ்வண்ண மழிவெய்தற்குக் காரணம் அந்த லோபமே யென்றறிவாய்.

பதினாறாம் அத்தியாயம்

ஹைஹயகிருதவிப்ரவதம் முற்றிற்று.

———

சுலோகம் - (ருக)

ஆஉ அத்தியாயம் கசு - க்குச் சுலோகம் (கூஅகஎ)

———

உ

ஈடிதாயைநம:

———

பதினேழாம் அத்தியாயம்

அவுர்வோற்பத்தியாதிகதனம்.

———

ஜனமேஜயன், வியாசபகவானை நோக்கி ஓ ஐயா! அப்பிருகுவம்ச ஸ்திரீகள் அந்தத் துக்கசமுத்திரத்திலிருந்து எப்படிக்கரையேறினார்கள்? அந்தப் பிராமணர்களுடைய வமிசம் எப்படி நிலைபெற்றது? மஹாலோபிகளான ஹைஹய ராஜாக்கள் அந்தப் பிராமணர்களைக் கொன்றபின் என்னசெய்தார்கள்? இந்த வினோதசரித்திரத்தை யெனக்குச் சொல்லவேண்டும். ஓ பிரமசொரூபியே! உம்முடைய கதாவமிர்தத்தைப் பானஞ்செய்கிற வெனக்குத் திருப்தியுண்டாகவில்லை. பரிசுத்தமாயும் சுகத்தைக் கொடுக்கிறதாயு மிருக்கின்ற உம்முடைய கதாவமிர்தமானது கேட்கக்கேட்க மனிதர்கள் மனதுக்கு இகபோக வெறுப்புண்டாய்ப் பரலோகத்தில் விருப்பத்தைக் கொடுக்கின்ற தென்றனன். வியாசமுனிவர், ஓ அரசனே! இமயமலையை யடைந்த ஸ்திரீகள் எப்படி துக்கத்திலிருந்து நீங்கப்பெற்றார்களோ அப்படியே இக்கதையைக் கேட்கின்றவர்கள் பாபத்தினின்றும் நீங்கப் பெறுவரென்றறிவாய். ஹைஹயராஜாக்களால் பயந்தோடிப்போன

பிருகுபத்தினிகள் இமயகிரியை யடைந்து நதியின் கரையில் மண்ணினால் தேவிரூபத்தைச்செய்து ஸ்தாபித்து ஆகராதிகளை யொழித்துத் தேவியைத் தியானித்து ஓ தேவி நீ எங்களுக்கு வந்திருக்கும் ஆபத்தை யொழித்து நாங்களெண்ணி யிருக்குங் காரியத்தை முடிக்காமற்போவையேயாயின் நாங்கள் மரணமடைவது நிச்சயமென்று சொல்லி அவள் பாதத்தில் வீழ்ந்து நமஸ்கரிப்பதுபோல் படுத்துக் கொண்டார்கள். அவர்களுடைய கனவில் தேவி பிரத்தியக்ஷமாய் ஓ உத்தமமான ஸ்திரீகளே! உங்களுக்குள் ஒருத்தியினுடைய தொடையிலிருந்து ஓர் புத்திரன் பிறக்கப்போகிறான். அவன் என்னுடைய சக்தியைப்பெற்று எண்ணியிருக்கும் உங்களுடைய காரியத்தை நிறைவேற்றப்போகிறானென் றனுக்கிரகஞ்செய்து அந்தர்த்தானமாயினள். அந்தஸ்திரீகள் விழித்துக்கொண்டு மஹாசந்தோஷத்தையடைந்து இந்தப் புத்திரபாக்கியம் யாருக்குக்கிடைக்குமோவென்றெண்ணியிருக்க, தேவி யநுக்கிரகித்தபடியே ஒருஸ்திரீயின் தொடையில் கர்ப்பந்தரித்தது. அச்சமயத்தில் அந்தக்ஷத்திரியர்கள் கத்தியைக்கையிலெடுத்துக் கொண்டு கர்ப்பிணிகளெங்கே எங்கேயென்று நான்குபக்கங்களிலுந் தேடிப்பார்த்து வரும்போது தேவியநுக்கிரகத்தால் கர்ப்பிணியாயிருக்கின்ற ஸ்திரீயைப்பெருங்கூட்டத்துடன் கண்டனர். கர்ப்பிணி அவர்களைப் பார்த்தவுடன் பயந்தவளாய் நம்முடைய கர்ப்பத்தை நாமெப்படி பாதுகாப்போமென்றலறியழும்போது கர்ப்பத்திலிருக்கும் சிசுவானது தன்தாயினமுகைக்குரலைக்கேட்டு தொடையைப் பிளந்துகொண்டு சூரியனுதித்தாற்போல் வேகமாய் வெளியில்வந்தது. அச்சிசுவின் தேஜஸானது எதிரில்வருகின்ற அந்தக்ஷத்திரியர்களுடைய கண்களைக்குருடாக்கிவிட்டது. அக்குருடர்களெல்லாம் அதிசயித்துக் கண்டு தெரியாமலலைந்து அலறியழுது அந்தோ! இப்படிச் செய்தது அந்தணர்களுடைய பிரபாவமோ! அல்லது அவ்வந்தண ஸ்திரீகளுடைய பிரபாவமோ! என்றேங்கினவர்களாய் ஒருவருக் கொருவர் நாமிங்கே ஸ்திரீகளைத்தான் கண்டோமேயன்றிப் புருடர்களைக்கண்டோமில்லை. ஆகலான் இதுசெய்தது ஸ்திரீகளேயென்று துணிந்து அந்தோ! நாம் இன்னமும் இங்கிருப்போமாயினென்ன தீங்குவிளையுமோ! நாம் இதுகாறுஞ் செய்துவந்த ஸ்திரீ ஹத்திகள் நம்மை ஹத்திசெய்யும்போ லிருக்கிறதே நாம் யாரைச் சரணடையலாம். நமக்குக்கண்களும் போயிற்றே யென்றேங்கி அங்குள்ள ஸ்திரீகளை நமஸ்கரித்துக் கைகூப்பி நின்று ஓ அன்னைமீர்! நாங்கள் உங்களுடைய அடிமையாட்களாயினோம். மகா பாபிகளாய்க்கொலைசெய்துவந்தநாங்களெல்லாம் உங்களுடைய

பார்வையால்கண்ணிழந்தவர்களாயினோம். ஓ கற்புடைய மங்கையரே! எங்களை உங்களது திருவுருவங்களைக் காணாவண்ணஞ் செய்து விட்டீர்கள். உங்களுடைய கற்பின்றிறத்தையுந்தபோபலத்தையுமென் னென்றுசொல்வோம். எங்களுக்கு நேத்திர பிக்ஷையைத் தந்தருள்வீராக. நாங்கள் செய்து வந்த கொடுமையை ஒருசிறிது மெண்ணாதீர்கள். எண்ணுவீர்களாயின் நாங்கள் அந்தகர்களாகவே யிருப்போமே அது பாவமல்லவா! புண்ணியாத்மாக்களாக யிருக்கின்ற வுங்களுக்கு எங்களாலிப்பாவம் வருவானேன். ஓ அன்னை மீர் நாங்கள் வேண்டியவாறு நேத்ரபிக்ஷையைத் தருவீர்களாயின் நாங்களும் பாபத்தினின்றும் விடுபடுவோம் உங்களுக்கும் பாபம்வந்தணுகாது. பாபிகளாகிய நாங்களெவ்வளவு பாபஞ் செய்யினும் எங்களை உலகமிகழ்ச்சி செய்யாது. இதுபோல் புண்ணியப் பெருக்குடைய நீங்கள் கண்ணைத் தராதொழிதலாகிய இச்சிறு பாவத்தைச் செய்வீராயின் உலகமுங்களைப் புகழ்ச்சி செய்யாது. ஆகலான் புகழ்ச்சியை விரும்பிச் செய்யத்தகுந்த நீவிர் இவ்விகழ்ச்சிக் கிடஞ்செய்து கொள்ளலழகாகுமா எங்களுக்குக் கண்களைத் தருவீராயின்உங்களடிகளை வணங்கி உங்களிடத்து வைரமு மொழியப்பெற்று உங்கள் திருவுருவத்தைக் கண்களாற்காணாது கற்புநிலைமையை மாத்திரம். மனத்தால்மதித்து வாக்கினாற் புகழ்ந்து எங்களிடம்போய்ச் சேருகின்றோம். கர்ப்பிணிகளா யிருக்கின்ற நீங்கள் புத்திரபாக்யம் பெற்றுச்சுகமாய் வாழக்கடவீர்களென்று வணங்கியும் வாழ்த்தியும் கதறுகின்றவர்களா யிருக்கின்ற அவ்வரசர்களது வார்த்தைகளைப் புத்திரபாக்யம். பெற்றவளாகிய பிராமண ஸ்திரீ சற்றிரங்கினவளாய் அவர்களைப் பார்த்து ஓ அரசர்களே! உங்களுடைய நேத்திரங்களை நானும் என்னினத்தவருமாகிய கற்புடைய மங்கையருங் கெடுக்கவில்லை. உங்கள் மீது எங்களுக்கென்ன கோபம். நான் சத்தியமாய்ச் சொல்லிகிறேன். இப்போது நீங்கள் என்னை நோக்கிவருஞ் சமயத்தில் என்தொடையைக் கர்ப்பஸ்தானமாய்க் கொண்டிருந்த பிருகுமுனிவர் வெளிப்பட்டு வந்து உங்கள் மீது கோபமுடையவராய்த் தனது தேககாந்தியினால் உங்கள் கண்களை யழித்தனர். அதன் காரணத்தைக் கேட்பீர்களாக. தன்வம்சத்தவரும் பந்துவர்க்கத்தவருமான அந்தணர்களையும் அந்தணஸ்திரீகளையும் கர்ப்பிணிகளையுஞ்சிறிதுமெண்ணாது நீங்கள் கொலைசெய்து வந்தபடியால் மிகவும் கோபங்கொண்டவரா யுங்களினத்தவரை யெல்லாங் கொலைசெய்வதற் கெண்ணி உங்கள் கண்ணுக்குத் தான் தோன்றாதிருக்கும் வண்ணம் என்னுடைய உதரத்தைக்கர்ப்ப ஸ்தானமாகக் கொள்ளாமல் தொடையைக் கர்ப்ப ஸ்தானமாகக்

கொண்டு நூறு வருஷமாகிய இக்கால பரியந்தம் அங்கிருந்த வண்ணமே வேத வேதாந்தங்களைக் கற்றுணர்ந்து நிறைந்த பண்டிதராய் உங்களைக் கொல்லுஞ் சமயம் பார்த்திருந்து இன்று நீங்களென் னெதிர்ப்படவே அவரும் என் தொடையினின்றும் வெளிவந்து உங்களுக் கெதிர்ப்பட்டு உங்களனைவரையும் * அந்தகர்களாக்கினார். இனியவரெண்ணியபடிச் சங்கரிப்பாரென்பதிற் சந்தேகமில்லை. அவருக்கோ மகாதேவியின் கிருபை யிருக்கின்றமையாலவர் யாருக்கு மஞ்சாத ஆதலால் நீங்க ளவரைச் சரணமடைந்து நமஸ்கரிப்பீர்களாயின் அவர் ஓர் சமயம் சந்தோஷசித்தராய்த் திருஷ்டிதானஞ் செய்தாலுஞ் செய்வார். அத்தானம் என்னால் செய்ய முடியாதென்றனள். இந்த வார்த்தையைக்கேட்ட அரசர்கள் உண்மையெனநம்பி ஓ பார்க்கவரே! உம்மை நாங்கள் நமஸ்கரிக்கின்றோம் யாங்கள்செய்த பிழையைப் பொறுத்தருளுமென்று பன்முறையும் பிரார்த்திக்கவே அந்தப் பிருகுமுனிவர் சந்தோஷமுடையவராய் ஓ அந்தகர்களே! உங்களுக்குக் கண்களைத் தந்தேன். நீங்கள் பிழைத்திருக்கவேண்டுமாயின் உங்கள் கிருகம்போய்ச் சேருங்கள். இனி அந்தணர் வர்க்கங்களுக்கு யாதொரு தீங்கும் செய்யாது அவர்களை வாழவைத்து நீங்களுஞ் சுகமாய்வாழக்கடவீர்களென்று ஆசீர்வதிக்க, அவர்கள் விடைபெற்றுத் தங்களிடம்போய்ச் சேர்ந்தனர். பார்க்கவரையும் அவரது தாய் பாதுகாத்து வந்தனளென்று வியாசர்கூற, ஜனமேஜயன் ஓ முனிவரே! இந்த க்ஷத்திரியர்களுடைய கொடுஞ்செயலைக் கேட்டதனால் க்ஷத்திரியர்கள் கொல்வதற்கும் அந்தணர்கள் கொல்லப்படுதற்குங் காரணமாய் நின்றது திரவியத்தினிடம் வைத்த வாசையென்றே தீர்மானிக்கிறேன். இனி அந்த அரசர்கள் ஹைஹயர்களென்று பிரசித்திபெற்றதற்குக் காரணஞ்சொல்லும். ஓ ஐயா! எது என்பவனிடமிருந்துயாதவரும் பரதனிடமிருந்து பாரதரும் பிறந்தனர். அக்குலத்திலேயே ஹைஹயனென்றொருவனிருக்க வேண்டு மென்றெண்ணுகிறேன். அவ்விவரத்தைக் கூறவேண்டுமென்ன. வியாசர், நீ கேட்ட ஹைஹயர்கள் சரிதத்தை விரிவாய்ச் சொல்லுகிறேன் கேட்பாயாக.

ஓ அரசனே! அளவில்லாத காந்தியையுடைய சூரியன் புத்திரனான ரேவந்தன் உச்சைஸ்ரவமென்னுங் குதிரைமீதேறிக் கொண்டு வைகுண்டஞ்செல்ல, லக்ஷுமிதேவியானவள் இது நம்முடன் பாற்கடலிற் பிறந்த குதிரையல்லவாவென் றதனழகைக் கண்ணிமை கொட்டாது பார்த்துநிற்க, விஷ்ணுமூர்த்தியாகிய புருடோத்தமர் குதிரைமீதிருக்கிற புருஷனைப்பார்த்து அவனழகுக்கு மிகவும் வியந்து

* அந்தகர் - குருடர்

லக்ஷுமியைப்பார்த்து ஒகமலநாயகி! இவன்யார்? அங்கமுள்ள மன் மதனோ? மூன்றுலகையும் ஒரிமைப்போதில் சுற்றிவருகின்றவனாகக் காணப்படுகின்றான். இவன் செய்தி யுனக்குத் தெரியுமோவென்று கேட்க, அவளதைக்கேட்பதற்கும் அதற்கு விடைபகர்வதற்கும் செவியும் நாவுமாகிய புலன்கள் கட்புலனோடுகலந்து குதிரையின் வசப்பட்டிருத்தலால் விடைகூறவில்லை அவளென்செய்வாள். அதனையறியாத விஷ்ணுமூர்த்தி முன்கேட்டவாறு பலமுறையுங்கேட்க முறை பிறழ்ந்திருக்கின்ற விலக்குமி உரையாடாமலேயிருந்தனள். இவளுரையாடாதிருக்குங் காரணமென்னவென்று விஷ்ணுமூர்த்தி யூகிக்கவே அவளது நிலைமையைச் சற்றுணர்ந்து ஒ செந்தாமரையாளே! என்னபார்க்கின்றாய்? உனதுகண் இமைகொட்டா திருக்கப்பெற்றதற்குப் பிரயோஜனம் இக்குதிரையைப் பார்ப்பதுதானோ? உனது மனத்தை இக்குதிரையின் பேரழகோகொள்ளைகொண்டது? யான் கேட்கும்வினாவுக்கும் விடைதருவதற்கசக்தளாய் மெய்யும் மறந்திருக்கின்றனை. உனக்கு இக்குதிரையின் மீது மோகம்வந்திருப்பினும் நான் கேட்கும் வினாக்களுக்கு விடைகூறலாகாதா? அந்தோ! அந்தோ!! இனி நீ எல்லாவிடத்தும் ரமிக்குந்தன்மையடையப் போகின்றபடியால் ரமையென்னும் பெயரையும், நீ எவ்விடத்தும் நிலையற்றுச் சஞ்சலையா யிருக்கப் போகின்றபடியால் சஞ்சலையென்னும் பெயரையும், பிரகிருதிமாயை ஸ்திரம்போற்காட்டியெப்படி ஸ்திரமில்லா திருக்கின்றனளோ அப்படியே ஸ்திரமில்லாத புத்தியையும் பெற்றிடுதியென்று வசைமொழிகூறிப் பின்னும் நீ என் சமீபத்தினின்று கொண்டே ஓர் மாநுடனேறிவந்த குதிரையைப் பார்த்துமோகித்தபடியால் நீ பூலோகத்தில் பெண்குதிரையாகப் பிறக்கக்கடவா யென்றனர். அச்சாபமொழியைக் கேட்ட விலக்குமி மனந்திடுக்கிட்டு விஷ்ணுமூர்த்தியைப் பார்த்துத் தேவர்களுக்கெல்லாம் பிரபுவாயும் எனக்கு நாயகராயும் ரக்ஷகமூர்த்தியாயு மிருக்கின்ற நீர் நான் பார்த்த குற்றமொன்றுக்குப் பல சாபமிட்டீரே. எதன் பொருட்டு அவ்வளவு சாபத்துக்கென்னை யாளாக்கினீர். இவ்வளவு கோபம் உம்மிடத்தில் நான் பார்த்ததில்லை. உமக்கிருந்த பிரேமை எங்கேபோயிற்று என்னிடம் வைத்த பிரேமையென்று மழியாதென்று நினைத்திருந்தேனே. நீர்சொல்லியவையெல்லாம் வச்சிராயுதம் போலிருக்கிறதே; அதைச் சத்துருவினிடத்தி லல்லவா செலுத்த வேண்டும். சிநேகமுள்ளாரிடத்துச் செலுத்தலாமா? உம்மிடமெப்போதும் வரம்வாங்கத்தக்கவளான நான் இப்போது சாபத்தையெப்படி வாங்குவேன். நீர் பார்த்துக்கொண்டிருக்கும்போதே ஆவிவிடுகிறேன். நான் உம்மைப் பிரிவதனாலுண்டாகும் விரகாக்னியினால் தவிப்பேனா? ஜீவிப்பேனா? ஒ பிரபுவே! எப்போது எனக்கிட்ட

இச்சாபம் நீங்கப்பெற்று உமது சமீபத்தை வந்தடையப்பெறுவேன்; என் மீது தயவு வைத்துச் சொல்லி யருளுமென்று கேட்க விஷ்ணுமூர்த்தி ஓ கமலாசனீ! பூலோகத்தில் எப்போது எனக்கு எனக்குச் சமானமான பிள்ளையுண்டாகின்றானோ அப்போது என்னிடம் வாழப்பெறுவா யென்றனர்.

பதினேழாம் அத்தியாயம்

* அவுர்வோற்பத்தியாதிகதனம் முற்றிற்று.

———

சுலோகம் - (சாகூ)

ஆஉ அத்தியாயம் கஎ - க்குச் சுலோகம் (க0ரு0எ)

———

உ

ஈஸ்வரார்த்தாங்கசரீராயைநம:

———

25/12

பதினெட்டாம் அத்தியாயம்

ஹைஹயவம்சோற்பத்திகதனம்

———

சூதர் கூறுகின்றார். ஜனமேஜயன் வியாசமுனிவரைப் பார்த்து பகவானே! வைகுண்டத்துக்குவந்த ரேவந்தன் என்செய்தான்? 'காலவசத்தினால் லக்ஷுமியானவள் விஷ்ணுமூர்த்தியால் சபிக்கப்பட்ட பின்னர் எவ்விடத்தில் எவ்வாறு பெண் குதிரையாய்ப் பிறந்தனள்? மாநுடசஞ்சாரமில்லாத ஆரணியத்தில் என்னசெய்து காலத்தைக் கழித்துப் புத்திரனை எவ்வாறுபெற்று எவ்வளவுகாலங்கடந்து விஷ்ணுவையடைந்தாளென்றுவினவ வியாசமுனிவர் ஓ அரசனே! கேட்கக்கேட்கச் செவிக்கின்பந் தரும் இச்சரிதத்தைக் கூறுகின்றேன் கேட்டு மகிழ்வாயாக.

ஓ அரசனே! வைகுண்டம் வந்த ரேவந்தன் தன்முன் இலக்ஷுமிக்கு விஷ்ணுமூர்த்தி சபித்ததைப் பார்த்துப் பயந்தவனாய்த் தூரத்தி லிருந்தவண்ணமாக அவரை நமஸ்கரித்துத் திரும்பி அதிவேகமாய்த் தந்தையிடம் வந்து லக்ஷுமிக்கு நேர்ந்த சாபத்தைக்

* தொடையினின்றும் பிறந்தவர் முதலியோரது சரித்திரம்

கூறியிருந்தனன். இவன் செய்தி யிங்ஙனமிருக்க, இலக்குமியானவள் விஷ்ணுமூர்த்தியை நமஸ்கரித்து விடைபெற்றுப் பூவுலகில் தூர்யபத்தினி தவம்புரிந்த ஆரணியமடைந்து பெண்குதிரை வடிவேற்றுக்காளிந்தி நதியோடு தமஸாநதிசங்கமிக்கும் சர்வசித்திகரமாகிய அப்புண்ணிய க்ஷேத்திரத்தில் தவசிந்தனையோடுமிருந்து, மகாதேவரும் சங்கரரும் சர்வ வாஞ்சிதப் பிரதரும் திரிசூலதரரும் சந்திரசேகரரும் பஞ்சானனரும் தசபுஜரும் கௌரீ தேகார்த்தரும் கர்ப்பூர கௌரதேகரும் நீலகண்டரும் திரிலோசனரும் வியாக்ராஜினதரரும் கஜசர் மோத்தரீயரும் கபாலமாலாதரரும் நாகயக்ஞோபவீதரு மாகிய சதாசிவமூர்த்தியை ஒரு நெறிய மனத்தாற் றியானித்து ஆயிரந் தேவவருடம் வைராக்கியத்துடன் அதிவுக்ரமான தவம்புரியவே மகாதேவர் மகிழ்ந்து பார்வதிசமேதராய் இடபாரூடராய்ப் பிரத்யக்ஷமாய் அந்த லக்ஷிமிதேவியைப் பார்த்து ஓ சர்வமங்களே! நீ யாது கருதித் தவஞ்செய்கின்றா யதனைச் சொல்வாயாக. சர்வாபீஷ்டங்களையுந் தருகின்றவனாயும் சர்வலோக சிருஷ்டனாயும் சர்வலோகப் பிரபுவாயும் போகமோக்ஷப் பிரதனாயும் வாசுதேவனாயு மிருக்கின்ற வுனது நாயகனை விட்டு என்னைத் தோத்திரஞ் செய்கின்றனையே இது நீதியாமா. வேதத்தில் ஸ்திரீகளுக்குப் பர்த்தாவே தெய்வம். வேறொரு தெய்வமில்லை. பர்த்தா எத்தன்மையனாயினும் அவனுக்குப் பணிவிடை செய்வதே தருமமென்று கூறப்பட்டிருக்கிறது. உனது நாயகனான நாரணனோ எல்லாராலுஞ் சேவிக்கத்தக்கவன். எப்பொழுதும் யோக்யமா யுள்ளவன். வேதத்திற் சொல்லியபடி உனது நாயகனாகிய அவனை நீ தியானிக்க வேண்டியவளா யிருக்க, அவனை விட்டு ஏன் என்னைத் தியானிக்கின்றாயென்று சிவபெருமான்கேட்க லக்ஷ்மிதேவி யடிபணிந்து என்பால் கருணைகூர்ந்து வந்த பரமேஸ்வரா! நானென்னாயகனால் இவ்வுருவாகச் சபிக்கப்பட்டேன்; எனக்குப் புத்திரப்பே றெப்போதுண்டாகுமோ அப்போது தான் இச்சாபவிமோசனமும் வைகுண்டப் பிராப்தமு முண்டாமென்று அவராலேயே கூறப்பெற்றுள்ளேன். எனக்கு நாயகனில்லாமல் புத்திரனுண்டாவதெப்படி? அதற்குவழி அவருங்கூறினாரில்லை நானுங் கேட்டேனில்லை. அவரோ நாயகியில்லையென்கிற கவலையற்றவராய் வைகுண்டத்தில் இவ்வாரண்யத்தில் திரிந் தலைகின்றேன். தேவரீர் உன் நாயகனைவிட்டு என்னையேன் தியானிக்கிறாயென்று கேட்டருளியது என்னிலைமை யறிதற்கோ? உமதுண்மைவெளிப்படுத்தற்கோ? அதுயானறியுந் தரத்ததோ? ஆயினுஞ்சில விண்ணப்பஞ் செய்கிறேன். ஸ்திரீகளுக்கு நாயகனே தெய்வம் வேறில்லையென்று வேதங்கூறியதென் றருளியதுண்மையே!

ஸ்திரீகளுக்குத் தந்நாயகனேதெய்வ மென்னுங்கால் அவன் அந்தஸ்திரீ யொழிந்தமற்றையருக்கு அவன் தெய்வ மன்றென்று ஏற்படுகின்றதல்லவா? தெய்வமாயிருப்பவன் யாவருக்குந் தெய்வமா யிருக்கவேண்டியவனே யன்றி ஒருவருக்கு மாத்திரம் தெய்வமாயும் மற்றையருக் கெல்லாம் மனிதனாயுமிருப்பனா? அப்போதவனிடத் துள்ளது மானிடத் தன்மையா? தெய்வத்தன்மையா? அவனிடத்துள்ளது மாநுடத் தன்மை; இவள் பாவிக்க வேண்டியது தெய்வத்தன்மை யென்றுணர வருகின்றது. இவ்வுணர்ச்சியை இன்னமு மாராயுங்கால் இவனிடத்துள்ள வுண்மைத் தன்மை மானிடத்தன்மை யன்றி தெய்வத்தன்மை யுடையதல்லவென்றும், இவனிடத்தில் பாவித்ததெய்வத்தி னிடத்துள்ள உண்மைத் தன்மை அவரவர் பாவிக்குந் தெய்வத் தன்மையா யிருப்பதே யன்றி பாவித்தற் கிடமாயிருக்கும் அவ்வப்பொருளின்றன்மை யுடையதல்லவென்றும் விளங்குகின்றது. இவ்வுண்மையால் வேதம், மாநுடனை மாநுடனாகப்பாவித்தாலவன் பதியாகமாட்டான் அவனைத் தெய்வமாகப் பாவித்தால் தான் பதியாவான். அப்பதி பாவனைதான் சர்வப்பிரயோஜனமுந்தரும். அப்பதிபாவனை செய்யாவிடின் இவள்யாதொருபயனுமற்றப் பதிதையாவாளென்று அவளுக்குத் தெய்வத்தன்மையை யுணர்த்தி அத்தெய்வத்தை வழிபடுவதற்கான வழி பர்த்தா வெனக் காட்டியதே யன்றி இந்தப்பார்த்தாதான் தெய்வம்; தெய்வமென்பது வேறில்லையென்றுணர்த்த அவ்வாறு கூறியதன்றே. ஆகவே என்னுடைய பர்த்தாவினிடம் நாடோறும் பாவித்து வந்த தெய்வத்தையே இப்பொழுதும் பாவித்துத் தியானித்து வந்தேனேயன்றி வேறுயாரைத் தியானித்தேன். அத்தெய்வம் தேவரீரேயாகையால் இன்று யான்காண வெளிப்பட்டு வந்தீர். நீரன்று யான்தியானித்து வந்த தெய்வம் என்னாயகனாகிய நாராணராகவே யிருப்பராயின் அவரே வந்திருப்பரன்றோ. ஆகலான் அவரவரே, நீர்நீரே. இதனால் அவர்அவராக விருத்தலாகிய வொருதன்மை யுடையவரென்றும் நீரெல்லாப் பொருளாகியும் ஆகாதவராய மிருத்தலாகிய இருதன்மையுடையவ ரென்றும் அறியக்கிடக்கின்றது. இவ்விருதன்மை தேவரீருக் குண்மையால் நானென்னாயக னோடிருந்து உம்மை வழிபட்ட அக்காலத்து நீரவராகவே யிருந்து எனக்கு எல்லாச்சுகத்தையுந் தந்துவந்தீர். நானென்னாயகனாகிய அவரைவிட்டு வேறாய்வந்து உம்மை வழிபடும் இக்காலத்து நீரும் அவருக்கு வேறாய்வந்து நான்வேண்டுஞ் சுகமளிக்கவந்தீர். எந்நாயகன் அவர் அவராகவே யிருக்குந் தன்மையுடைய ராதலால் அவர்நீராக வந்திலர். ஓசங்கரரே! தேவரீர் யாவுமாய் யாருமாயிருக்குந்தன்மை யுடையீராதலால்

முன்னென்னால் அவராகவுமிருந்தீர் பின் இப்போது வேறாயிருக்கும் உண்மையையுங்காட்டவந்தீர். ஆகலான் இப்போது வேண்டிய வரமெதுவோ அதனைக்கொடுத்தருளும் இவ்வுண்மை யிங்ஙனமிருக்க எங்களிருவருடைய தவவிசேடத்தால் தேவரீருக்கும் அவருக்கும், பார்வதியாருக்கும் எனக்கும்பேதமில்லாத தன்மையும் பெற்றிருக்கின்றோம். இவ்விஷயத்தில் சந்தேகமில்லை.

ஓ சர்வஜ்ஞரே! நீ என்னையேன் தோத்திரஞ் செய்கின்றாயென்றீர். நாராயணர் எனக்கு நாயகர்; நீர் தெய்வம். நான் அவரை நீ வெண்ணுபோது நீர் அவராகின் றீரல்லவா! இத்தன்மையான அபேதத்தையறிந்தே உம்மை நான் தோத்திரஞ்செய்தேன். இவ்வபேதத்தன்மையை யறியாமல் நான் தியானமாவது தோத்திரமாவது செய்திருப்பேனாயின் எனக்குத் தோஷமுண்டாகுமென்றனள். சிவனார் இலக்குமியினது ஞான விசேஷத்தையறிந்து மகிழ்ந்தவராய் ஓ கமலாக்ஷி! நீ சொல்லிவந்த நியாயப்படி விஷ்ணுவுக்கும் எனக்கும் அபேதமென்பது சத்தியமே. இந்த நியாயம் உனக்கெப்படித் தெரியவந்தது? யான் எல்லாமாயிருக்குந் தன்மையாகிய ஏகத்வத்தைத் தேவர்களும் முனிவர்களும் வேதாந்த முணர்ந்த ஞானிகளும் குதர்க்கத்தா லறியாமல் பேதபுத்தி யுடையவர்களாய்த் துவேஷிக்கின்றனர். இவர்க ளிங்ஙனமிருக்க, உலகில் எனக்குப் பக்தர்களென்று சொல்லப்பட்ட பலர் விஷ்ணுவைத் துவேஷித்து நிந்திக்கின்றவர்களாயும், விஷ்ணு பக்தர்களென்று சொல்லப்பட்ட பலர் என்னைத் துவேஷித்து நிந்திக்கின்றவர்களாயு மிருக்கின்றனர். இதற்குக்காரணம் தேவியினுடைய மாயையினால் அவர்கள் கவரப்பட்டிருக்குந் தன்மையினாலேயாம். ஏனெனின்! பக்தர்களென்று சொல்லப்பட்ட இவர் ஸ்தூல வுருவங்களைக்கண்டு பக்தி பண்ண வந்தவர்களே யன்றி சொரூப வுண்மையைக்கண்டு பக்தி பண்ணவந்தவர்களல்லர். சொரூப வுண்மையை யறியப்புகுவாராயின் துவேஷ முடையவராகார். ஸ்தூலவுருவம் பல வேற்றுமையாயுள்ளது; சொரூபம் வேற்றுமையாகாது ஒரு தன்மையா யுள்ளது. ஆகவே ஒரு தன்மையாயிருக்கும் சொரூபவுண்மையை விட்டுப்பல தன்மையாயிருக்கும் வடிவத்தைப்பற்றி னாராதலின் கண்டஜ்ஞான முடையராய்ப் பேதவாதத்துக் குள்ளாகின்றனர். என்னுடைய அபேதத் தன்மையாகிய ஏகத்வத்தை யறிவதென்றால் அகண்டஜ் ஞானமும் புண்ணிய விசேடமும் பெற்றவரா யிருப்பி னறிவர். அவர்களிடத்தில் தேவியினது மாயாவிலாசம் போய் ஞானவிலாச முண்டாகும். இது யாவர்க்குங் கிடைத்தலரிது கஷ்டப்பட்டறிதல் வேண்டுமென்று சிவபிரானருளவே இலக்குமிதேவி மிக்க ஆராமையுடையவளாய் ஓ

மஹேஸ்வரா! தேவரீர் கஷ்டமென்று கூறிய துண்மையே. அடியாளை இந்த நியாயமெப்படி உனக்குத் தெரியவந்தது என்றருளினீரல்லவா அதனை இனி விண்ணப்பிக்கின்றேன். என்னாயகரான நாராயணர் ஓர்காலத்தில் பத்மாசனராய் வீற்றிருந்து தியானித்துக் கொண்டிருந்தனர். அதனைக்கண்ட நானதிசயித்தவளாய் அவர்தியான நிலையினின்று நீங்கியவுடன் அடிபணிந்து நானிதுகாறு மும்மையே தெய்வமென்றெண்ணி யிருந்தேன். திருப்பாற்கடலில் நான்தோன்றிய காலத்திலும் அங்கிருந்த தேவர்களை யெல்லாம் பார்க்க அவருள் நீரே யதிகரென்று தெரிந் தும்மை நாயகனாகக் கொண்டேன். அங்ஙனமிருக்க நீரிப்பொழுது தியானிக்கின்றீரே யாரை? அவரும்மிலும் அதிகமான தெய்வமாக வல்ல வாயிருத்தல் வேண்டும். அத்தெய்வமா யுள்ளார்யார்? அதனைச் சொல்லும் எனக்குச் சந்தேகமாயிருக்கிற தென்று வினவினேன். அவர் ஓகமலநாயகி! எவனதிசீக்கிரத்தில் சந்தோஷிக்கிறானோ, எவன் பார்வதிநாதனோ, அவன்தான் என்னிலும் திகன். அந்தவீஸ்வரனைத் தான் தியானிக்கின்றேனென்று கூறியதே யன்றிச் சில வுண்மை கூறுகிறேனென்றார். என்னையெனின்! அவன் சர்வேந்திரியாமித்வம் உடையனாதலால் எல்லாவுயிருள்ளு முள்ளவனா யிருக்கின்றான். உள்ளாயிருக்குந் தன்மையைக் கண்டு சோகம்பாவனை செய்வாராயின் உள்ளாயிருப்பதேயன்றி இவன்தானேயா யிருக்கின்றான். தானேயாயிருக்குந் தன்மையைக் கண்டு சோகம்பாவனை செய்வாராயின் உள்ளாயிருப்பதேயன்றி இவன்தானேயா யிருக்கின்றான். தானேயாயிருக்குந் தன்மையை அவனருளாற்கண்டு அன்புசெய்து தியான மாத்திரமாகவே நிற்கப்பெறுவா ராயின் தானேயிவனாய் நிற்கும் நிலைமையை யுடையனாகின்றான். இந்நிலைமை கூடியபின்னர் இவனவன்றான். அவனிவன்றான். இவன்செய லவன்செயல்தான் அவன்செய லிவன்செயல்தான். இவ்வத்வைத வுண்மையையே வேதாந்தங் கூறுவதாகியவுண்மையும் ஓ செல்வச்சொரூபிணியே! நானவ்வேதாந்த வுண்மையுணர்ந் துள்ளேனாதலால் நானிப்பொழுது சர்வேந்திரியாமியா யிருக்கிற அப்பரமேஸ்வரனைச் சோகம்பாவனை முறைமையானும் அன்பின் வசப்பட்ட தியானமுறைமையானும் தியானித்து வருகின்றேன். இவ்வாறு இடைவிடாது நான் தியானிப்பதனால் தேவதேவனாகிய தன்னைத்தியானிக்கின்றேனென்று அவனென்னை இடைவிடாது எண்ணுகின்றவனா யிருக்கின்றான். இவ்வாறு இடைவிடாது இருவரும் தியானித்தல் நினைத்தலாகிய செயலுடையோ மாதலால் நானப்பரமபதிக்குப் பிராணனா யிருக்கின்றேன். பத்தருக்குப் பக்தராயிருக்கின்ற அவன் எனக்குப்

பிராணனாயிருக்கின்றான். நானவனிடத்தி லன்பாலும், அவ னென்னிடத்தி லருளாலுங் கலந்திருக்குங் கலப்பினையறிந்து பேதமின்மையை யுணராது என்னை வழிபடும் பக்தரென்று பெயருடையோர் என்னைக் கடவுளாகப் புகழ்ந்து அவனை யிகழ்வோர் நிச்சயமாய் நரகத்தையடைவர். இப்பொழுது நான் சொல்லியவையுண் மையென்று அக்காலத்தில் ஏகாந்தஸ்தானத்தில் தேவரீரதுசொரூப வுண்மையைக் கூறுயிருக்கின்றார். ஓ எனது நாயகருக்கு ஆத்மநாயகராயிருக்கின்ற பிரபுவே! தேவரீர்நாராயணருக்குப் பிரியராயிருக்கும் உண்மையுணர்ந்தே வும்மைத் தியானித்தேன், தோத்திரஞ் செய்தே னென்று கூறவே, மஹேஸ்வரர் மகிழ்ந்தவராய் ஓ லக்ஷுமியே! உனதுன்மைஞானத்துக்கும் அன்புக்கும் நானதிசயிக்கு மதிசயம் என்னென்று சொல்லுவேன். இனி உன்னுடைய நாயகன் நீ மகிழும்படியாக ஆண்குதிரையாய் வந்து உனது மனோரதத்தைப் பூர்த்தி செய்து புத்திரப்பேறடையும்படிச் செய்வான். நீ கவலையற்றிருப்பாயாக. அவனெப்படி குதிரையாக வரப்போகிறானென் றெண்ணற்க. நானவனை மகாமோகிதனா யுன்னிடம் வந்து சேரும்படியான காரியத்தைச் செய்கின்றேன். அவனுக்குச் சமானமான புத்திரனைப்பெறுவாய். அவன் ஏகவீரனென்கிற பெயருடையவனாய் யாவரானும் வணங்கத்தக்க பிரபுவாகப்போகின்றான். அவனால் ஹைஹயவம்சம் விருத்தியடையப் போகின்றது. நீ முன்போலவே வைகுண்டத்தில் உனது நாயகனோடு கூடி வாழ்வாயாக. இப்போது நான்சொல்லிய வண்ணம் உனக்குச் சுகமுண்டாவதற்குச் சர்வசக்தி ஸ்வரூபமா யிருக்கின்ற பராசக்தியைத் தியானித்துச் சரணமடைவாயாக. அவளைச் சரண மடைந்தால் தான் நீ குதிரையைக்கண்டு மோகித்துக் காமமதத்தைக் கொண்டதோஷம் நீங்கிச் சித்தசுத்தியடையப் பெறுவா யென்றனுக்கிரகஞ் செய்து பார்வதியோடு மறைந்தருளினர் இலக்குமி தேவியும் சிவனாராணையின்படி தேவியினது திருவடிமலரைத் தியானித்து நாராயணர் எப்போது ❁ அஸ்வமாக வருவாரென் றெதிர் பார்த்துக் கொண்டு தோத்திரஞ் செய்து வந்தனள்.

பதினெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

சுலோகம் - (சாஉ)

ஆஉ அத்தியாயம் கஅ - க்குச்சுலோகம் (கககஉ)

❁ அஸ்வம் - குதிரை

உ

ஈஸாதிதேவதாயை நம:

பத்தொன்பதாம் அத்தியாயம்

இதுவுமது.

சூதர் கூறுகின்றார்: வியாசமுநிவர் ஜனமேஜயனை நோக்கி, இலக்ஷ்மி தேவியினுடைய சரித்திரம் முற்றுப்பெறாம லிருப்பதால் அதனைக் கேட்பாயாக. பரமேஸ்வரர் இலக்ஷ்மிதேவிக்கு அனுக்கிரகித்துக் கைலைக்குச்சென்றபின்னர் தமது கணங்களுள் தூதுசெல்லத்தக்கவனான சித்திரரூபனையழைத்து நீ வைகுண்டத்துக்குப் போய் நாராயணனைக்கண்டு பூவுலகில் இலக்ஷ்மிவருத்தமுற்றிருக்கின்றபடியால் அவள் வருந்துறாவண்ணஞ்சென்று அழைத்துக் கொண்டு வைகுண்டம் வந்துசேரவேண்டுமென்று யான் சொல்லியதாகச் சொல்லிவருவாயென்றேவினர். அவனவ்வண்ணமே வைகுண்டஞ் சென்று தன்வரவை அங்குள்ள துவாரபாலகரால் விஷ்ணு மூர்த்திக்கு முன்னேதெரிவித்து உள்ளேசெல்ல, இவன் வருகையை விஷ்ணுமூர்த்திகண்டு ஆச்சரியப்பட்டு அவனையுபசரித்து மகேஸ்வரருடைய சுபத்தைமுன்னர்கேட்டு, ஒதூதனே! இறைவர் யாதுகாரியமாய் உன்னை என்னிடம் அனுப்பினார், என்னால் ஆகவேண்டிய காரியமானது அவரையுத்தேசித்ததா? தேவர்களை யுத்தேசித்ததா? என்ன கட்டளையிட்டிருக்கின்றார்? சொல்வாயென்ன! சித்திர ரூபன், ஓநாராயணரே! அவர் காரியமுமல்ல; தேவர்களுடைய காரியமுமல்ல உம்முடைய காரியத்தைத்தான் உமக்குக் கட்டளையிட்டிருக்கின்றார். அது என்னையெனின்! இந்த வைகுண்டாத்தில் உம்முடைய இருதயமத்தியில் அதிசுகியாய் போகரூபிணியாய் வசிக்கத்தக்க இலக்ஷ்மிதேவி, காளிந்திநதிக்கும் தமசாநதிக்கும் நடுவிலுள்ள பிரதேசத்தில் ஓர் பெண் குதிரையாய் அதிதுக்கிதையாய் யோகரூபிணியாய் வசித்துக்கொண்டிருக்கிறாள். யாவருக்கும் இஷ்டபோகங்களைக் கொடுக்கின்றவளாயும் தேவயக்ஷகின்னரகிம் புருடர்களால் போற்றப் பட்டவளாயும் உள்ள அவள் அந்த ஆரண்யத்தில் யாதொரு செயலுமற்று இப்படியிருப்பதுங்கஷ்ட காலத்துக்குரியலக்ஷணமல்லவோ? உலகில் இலக்ஷ்மி நீங்கினால் கஷ்டமனுபவிப்பார்களென்று கூறுவது வழக்கம்.

அவளே கஷ்டத்தை யனுபவிப்பதென்றால் இது பாவமல்லவோ! இனிப்பூவுலகிலுள்ளார் இலக்ஷுமியினால் சுகமுண்டாகுமென்று நினைப்பார்களோ! யாவரும் தரித்திரர்களாகவன்றோ இருப்பர்? உமக்குத்தான் சுகமேது. பலமில்லாதவனும் தனமில்லாதவனும் தங்களுக்கு வேண்டிய பலத்தையும் தனத்தையும் விரும்புவதொழிந்து ஸ்திரீசுகத்தை மாத்திரம் விரும்புகின்றனர். எவருக்கும் எதுவில்லாதொழியினும் ஸ்திரீமாத்திர மிருக்கப்பெறின் அவருக்கு எல்லாச்சுகங்களு முடையனவாகக் காணப்படுகின்றன. நீர் தனம் பலம் எல்லாமுடையவராயிருந்தும் அந்த லக்ஷுமிதேவி யில்லாதிருப்பீராயின் அவைகளாலென்ன சுகத்தைப் பெறுவீர். அன்றியும் நீர்பத்தினியை விட்டிருப்பது உமக்குப் பகைவராயிருக்கின்ற அசுரர் நகைப்பதற்கிடந்தருமல்லவா? சத்துருக்கள் நகைக்க விடஞ்செய்து பிழைப்போனது பிழைப்புமோர் பிழைப்பாமா. இனி உம்முடைய பகைவர்கள் லக்ஷுமிதேவி குதிரையாயிருப்பதைப் பார்ப்பாராயின் இரவும்பகலும் உம்மைப் பரிகாசஞ்செய்து சந்தோஷிப்பவராவார்களல்லவா? இனியேனும் யான் சொல்வதை ஆலோசித்துச் சர்வலக்ஷணங்களும் சகலசௌந்தர்யங்களும் சகலசற்குணகளு முடையவளாகிய உமதுபத்தினியை யழைத்துக் கொண்டுவந்து சுகமாயிரும். சுகம்வேண்டாதவராயும் நிர்விஷயராயு மிருக்கின்ற சிவனார், பார்வதியார் தக்ஷனிடம் பிறந்த பாபத்தை யொழித்தற்பொருட்டு அச்சரீரத்தைமாற்றி மலையரையன் மகளாயிருந்த காலத்து அவரது பிரிவுக்காற்றாது வருந்திய வருத்தம் என்னாற்சொல்லி முடியுமோ. நிஸ்ஸம்சாரியாகிய அவருக்கே பத்தினிப்பிரிவு வருத்தத்தை விளைவித்திருக்குமாயின் சம்சாரியா யிருக்கின்ற நும்போல்வாருக்குச் சொல்லவேண்டுமா? பின்னர் அப்பெருமான் றவம்புரிந்து ஞானிகளுக்கு ஞானயோக சுகத்தைமாத்திரமளித்துப் போகிகளுக்குப் போகசுகத்தை யளிக்கப்பெறாது அத்தேவியாரை மணந்து இன்றளவும் நீங்காதுடனாயிருந்து யாவர்க்கும் போகங்களைத் தந்து வருகின்றனர். ஆகலான் நீரும் ஆயிரவருட காலமாய்ப் பத்தினியை விட்டுத் துன்பமனுபவிப்பதை விட்டு அவள் கொண்டிருக்கும் உருவத்திற்கேற்ப ஆண் குதிரையாய்ச் சென்று அவளுக்குப் புத்திரபாக்கியந் தந்து அழைத்துவந்து சேருமென்று சொல்லவும், விஷ்ணுமூர்த்தி, ஓ சித்திரரூப னென்கிற சிவகணனே! நீ சொல்லியவை யெல்லாம் சிவனாருடைய வாக்காகையால் அவ்வாக்கின்படியே செய்கின்றேன். நீ கைலைக்கேகலாமென்று விடைதந்து, பின்னர் தேவியினது மாயாசத்தியினால் காமவிருத்தி யுண்டாய்ப் பீடிக்கப்பட்டு இனி நாமிங்கிருப்பது தகுதியன்றென்று வைகுண்டத்தை விட்டு

லக்ஷுமியிடம்வந்து பேரழகோடுங்கூடிய ஆண் குதிரையாய் நின்று லக்ஷுமியாகிய பெண்குதிரையின் ரூபலாவண்ணியங்களைக் கண்ட திசயித்து லீலையைக் கருதி நின்றனர். இவர் நிலைமையைக் கண்ட லக்ஷுமி தேவி இது காட்டிலுலாவுங் குதிரையன்று; சிவபெருமானனுக்கிரகித்தபடியே வந்த விஷ்ணுமூர்த்தியாகு மென்றெண்ணி அன்று உச்சை ஸ்ரவமென்னுங்குதிரையை எவ்வள வதிசயத்தோடும் பார்த்தனலோ அவ்வதிசயத்தினும் அதிசயமாய்க் காமவிருத்தியோடு லீலையை யவாவிப்பார்த்தனள். இருவர் கருத்துமொன்று படவே அவ்விடத்தே புணர்ச்சியுங் கூடப்பெற்று ஓ ருத்தமமான பிள்ளையைப் பெற்றனர். பின்னர் அப்பிள்ளையை விஷ்ணுமூர்த்தி பார்த்து இதுவுந் தெய்வச் செயலாமென்று நகைத்து, ஓ லக்ஷுமியே! இந்தப் பிள்ளையை இவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு நாமிருவரும் இவ்வுருவை மாற்றிக்கொண்டு வைகுண்டம் போய்ச் சேருவோ மென்று சொல்லவும் இலக்ஷுமி புத்திர லாஞ்சனையினால் ஓ என்நாயகனே! இப்பிள்ளையை நான் எப்படி விட்டுவருவேன். மநுஷ்யசஞ்சார மில்லாத இவ்வாரண்யத்தில் நதிசங்கமஸ்தானமாகிய இத்தீரத்தில் பாலனாயும் யாதொரு சக்தியுங் கூடாதவனாயும் யாதொரு நாதனில்லாதவனாயு மிருக்கிற விவனைநாம் விட்டுப் போவோமாயின் இவனுக்குள்ள கதியாது? உனக்கு மங்கலம்நானா யிருப்பதுபோல் எனக்கு நன்கலன் அறிவறிந்த இம்மகன்றானே! ஆகலின் நாம் இம்மகனை விட்டு வருவதற்கு எப்படி மனந்துணிவேன். உமக்குந் துணிவதற்குக் காரணமில்லாதிருக்க நீரென்னைப் பிள்ளையைவிட்டு என்னுடன் வருவாயென்றது. ஆச்சரியமே யென்று சொல்லிக் கொண்டிருக்கும்போது இருவருக்குந் திவ்யதேகம்வர அக்கணமே ஓர்விமானத்துடன் தேவர்களுங்கண்டு போற்றிநின்றனர். அதனைக்கண்டு ஓ லக்ஷுமி! விமானம் வந்து விட்டது தேவர்களும் பிரார்த்திக்கின்றனர். நீ வேறுவார்த்தை சொல்ல வேண்டாம். உன்பிள்ளைக்கு யாதொரு குறைவும் வரமாட்டாது. அவனை நான் பாதுகாக்கின்றேன். நீஐயுறேல். நீவா வென்றழைக்க, லக்ஷுமிதேவி ஓ என்பிராணநாதனே! இப்பிள்ளை உம்மைப்போலும் காந்தியுள்ளவனாய்ப் பிரகாசிக்கின்றமையால் வைகுண்டம் அழைத்துப் போவோம் என்பிராணனா யிருக்கின்ற விவனைவிட்டு நான்வருவேனாயில் உடல்விட்டுப்போன ஒருவனை வைகுண்டம் போயினானென்று கூறுவதுபோலாகும். ஆகலான் இக்குழந்தையை யெடுத்துக் கொள்ளுமென்ன, விஷ்ணுமூர்த்தி ஓ கமலாக்ஷி! இவனாலிங்குச்சில ஆச்சரியமான காரியங்களாக வேண்டி யிருக்கின்றபடியால் நான் சொல்வதைத் தடுக்காது விட்டுவிடு.

இவ்விடத்தில் யயாதியென்று பிரசித்திபெற்ற தூர்வசுவின் குமாரனாகிய ஹரிவர்த்தமன் புத்திரப் பேறுவேண்டி இவ்வாரணியத்தில் நூறுவருடமாய்த் தவஞ்செய்கின்றான். ஆகலான் அவனிமித்தமாயிப் புத்திரனுண்டானான். நான வனையிவ்விட மனுப்புகிறேன். அவன் தனக்குப்புத்திரப்பேறுகிடைத்ததென்று ஆனந்தமுற்றுத் தன்வீட்டுக்குக் கொண்டு போவானென்றுகூறி லக்ஷுமியைச் சமாதானப்படுத்தி விமானத்திலேற்றிக் கொண்டு தன்னுலகஞ் சென்று சுகமாய் வாழ்ந்திருந்தனர்.

பத்தொன்பதாம் அத்தியாயம்

ஹைஹயவம்சோற்பத்தியாதிகதனம் முற்றிற்று.

சுலோகம் - (ருரு)

ஆஉ அத்தியாயம் ககூ - க்குச் சுலோகம் (ககசாஎ)

உ

ஈஸ்வரப்ரேரணகர்யை நமः

இருபதாம் அத்தியாயம்

துர்வஹோா: புத்திரோற்பத்திகதனம்.

சூதர் கூறுகின்றார். ஜனமேஜயன் வியாசரைநோக்கி ஓ ஐயா! புலி சிங்கமுதலிய துஷ்டமிருகங்கள் வசிக்குங்காட்டில் அந்தக் குழந்தை அவைகளால் கிரகிக்கப்படாமல் எப்படி பிழைத்திருந்து க்ஷேமத்தை யடைந்தது? அதனையுங் கேட்க விரும்புகிறேனென்று கேட்க, வியாசர் ஓ அரசனே! இலக்ஷுமியும் நாராயணரும் போனவுடன் சம்பகனென்கிற வித்தியாதர னொருவன் காமத்தினால் பீடிக்கப்பட்டிருக்கிற தனது பத்தினியோடு கீரீடார்த்தமாய் விமானத்தின்மே லேறிக்கொண்டு வரும்போது தெய்வகதியாய் அவ்வாரண்ணியத்துக்கு வந்தனன். அவ்விடத்தில் தேவகுமாரன் போல் பிரகாசிக்கின்ற சுந்தரமான அக்குழந்தையைக் கண்டு விமானத்தைவிட்டிறங்கி பொருளில்லாதவனுக்குப் புதையல் கிடைத்தது போல் நமக்கு இப்புத்திரன் கிடைத்தானென்று மிக்க

வானந்தத்துடனெடுத்து மதனாலசை என்கிற தன் ஸ்திரீயினிடத்திற் கொடுத்துனன். அவள் அக்குழந்தையை வாங்கிப்பார்த்து ஆஹா! இக்குழந்தை இப்பொழுதுதான் பிறந்ததுபோற் காண்கிறது. பிறந்த விப்பொழுதே மன்மதன்போல் பிரகாசிக்கின்றதே யென்று ஈன்றதாய் போல் மகிழ்ந்து *புளகாங்கிதங்கொண்டு மார்பிலணைத்து முத்தமிட்டுத் தான்பெற்ற குழந்தையாகவே மேன் மேலாவலுள்ள வளாயிறுகத் தழுவிக்கொண்டு இருவரு மகிழ்ந்து உடனே விமானத்தின் மேலேறிச் சென்றனர். செல்லும்போது மதனாலசையானவள் தனது நாயகனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே இந்தப் பிள்ளை யாருடைய பிள்ளை? இவனை யாருமில்லாத காட்டில் யார்விட்டது? ஏன் விடப்பட்டான்? நமக்கென்று தெய்வத்தினால் கொடுக்கப்பட்டானோ? இவனைப்பார்க்கப் பார்க்க எனக்கு ஆச்சரிய கரமாயிருக்கின்றதென்று வினவ, காந்தர்வன் ஓ என் பிராணநாயகி! நீ கேட்டவை யெல்லாம் சீக்கிரம். யிந்திரனிடம் போய் அவனால் இவன் தேவனோ தானவனோ நமது கந்தர்வகுலத்திவனோ வேறு யாவனோ எல்லாந் தெரிந்துகொண்டு பின்ன ரிவனை நமது பிள்ளையாகக் கொண்டாடுவோம். நன்றாய்த் தெரிந்துகொள்ளாமல் ஒரு காரியமும் நிச்சயிக்கக் கூடாதென்று சொல்லி இந்திரனிடஞ் சென்று அவனைப் பணிந்து போற்றி மலர்ந்தமுகமுடையவனாய் குழந்தையைக்காட்டி இக்குழந்தை காளிந்த தாமஸா என்னும்நதிகளின் சங்கம ஸ்தானமாகிய புண்ணியக்ஷேத்திரத்தில் கிடைத்தது. இக்குழந்தையாருடையதோ? அதனைச்சொல்லுவீராயின் நாங்கள் இக்குழந்தையைச் செல்வமாக வைத்துக்கொள்வோம். இது அதிசுந்தரமாயிருப்பதால் என்மனைவி விட்டுநீங்கக்கூடாத பிரியமுடைய வளாயிருக்கிறாள். புண்ணிய க்ஷேத்திரத்தில் தெய்வகதியாய்க்கிடைத்த பிள்ளையையெடுத்துக் கொள்ளலாமென்று தருமநூலிலுஞ் சொல்லியிருக்கிறது. ஆகையினால் இக்குழந்தையின் சரிதத்தைச் சீக்கிரமாய்ச் சொல்லுமென்றுகேட்க, இந்திரன் ஓகாந்தர்வனே! இச்சிசுவானது ஓர்காரணத்தால் குதிரையுருவாக்கொண்ட நாராயணருக்கு லக்ஷ்மிதேவிக்கும் பிறந்தது. அன்றியும்யயாதிபுத்திரன் புத்திரப்பேறுவேண்டி அரியதவஞ் செய்கின்றானாதலால் அவனுக்கு அப்புத்திரபாக்யமளிக்கவே நாராயணர் இப்புத்திரனை யுண்டுபண்ணினார். இதுநிச்சயம். இப்போதே அந்த நாராயணர் துர்வசு என்னுமரசனை அவ்விடமனுப்பப் போகின்றார். நீ சீக்கிரமாய் இக்குழந்தையைக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும். அரசன் அங்கு வருங்காலத்தில் இக்குழந்தையில்லாமற் போமாயின் மகாதுக்கமடைவான். நீவிர் இக்குழந்தையைக்கண்டு என்னிடம் வருவதற்கான காலவரையரை

* புளகாங்கித - அரிதாரம் (பிள்ளையை)

எவ்வளவாயிற்றோ அவ்வளவேதான் இக்குழந்தையினால் உங்களுக்கு வரத்தக்க சுகப்பேறென்றறியக்கடவீர். இச்செய்தி நீங்களொருவருக்கும் விளம்பரஞ் செய்யக்கூடாது. இக்குழந்தை யானவன் பூலோகத்தில் ஏகவீரனென்னும் பெயருடையவனாய்ப் பிரசித்தியடையப் போகின்றான். நீ சீக்கிரமாய் இக்குழந்தையை யவ்விடத்திற் கொண்டுபோய் விடுவாயாக. இனி நீ இங்கிருத்தல் உசிதமன்றென்று விடை கொடுப்ப, அச்சமபகனாகிய காந்தருவன் அக்கணமே புறப்பட்டுப்போய் குழந்தையை முன்னிருந்தவிடத்திற்றானே விட்டுவிட்டுத் தன்னிடம் போய்ச் சேர்ந்தனன். இவன்செய்தியிங்ஙனமிருக்க, நாராயணர் தூர்வசுவினிடஞ்செல்ல அவர் வருகையைக் கண்ட அரசன் ஆனந்த பரவசமுற்று சாஷ்டாங்கமாக வீழ்ந்து பணிந்து ஓ தேவர்களுக் கெல்லாந் தேவனே! சர்வலோகங்களுக்கும் பிரபுவா யுள்ளவனே! உம்முடைய தெரிசனங் கிடைக்கத் தகுந்த பாக்கிய மென்னிடத்து மிருந்ததோ? என்போன்ற அறிவிலிகளால் காணத்தக்கவரோ வென்று தோத்திரஞ் செய்ய, விஷ்ணுமூர்த்தி ஓ அரசனே! நீ செய்துவந்த தபசுக்கு மிகவும் மகிழ்ச்சி யடைந்தேன்; வேண்டியதைக் கேட்பாயாகவென்ன அரசனடிபணிந்து ஓ பகவானே! நான் புத்திரப்பேறே பெரும் பேறெனக்கருதி யிருக்கின்றே னாகையால் அப்பேற்றை யெனக்கருள வேண்டுமென்றுப் பிரார்த்தித்தனன். அவர் ஓ அரசனே! உனக்குப் பேற்றை யளிக்கவே காளிந்தி தமசா கூடுமிடத்தில் ஓர் புத்திரனை வைத்திருக்கின்றேன். அவன் லக்ஷுமிக்குப்பிறந்தவன். அவனை இலேசாக நினைக்கவேண்டாம். அவனையே புத்திரனாகப் பெறுவாயென றனுக்கிரகஞ் செய்து போயினர். அரசன் அக்கணமே ஓர் திவ்யரதத்தின் மீதேறிக்கொண்டு விஷ்ணுமூர்த்தி சொல்லியபடி குழந்தையிருக்குமிடம் வர அக்குழந்தை விளையாடிக்கொண்டும் கட்டைவிரலை வாயில்வைத்துச் சுவைத்துக்கொண்டும் நாராயணரைப்போல் பிரகாசித்துக் கொண்டிருக்கு மதிசயத்தைக் கண்டு மகிழ்ந்து தாமரைமலர் போல் மிருதுவா யிருக்கின்ற தனதிரண்டு கைகளாலும் வாரியெடுத்து மார்பிலணைத்து உச்சி மோர்ந்து அவனது முகத்தைப் பார்த்து அப்பா! என் மீது கருணையுள்ள விஷ்ணுமூர்த்தி உன்னையெனக்குத் தந்தார். அழகாயிருக்கின்ற உன்னை என்பொருட்டிங்குவிட்டு லக்ஷுமி தேவியும் போயினாள். அவர்களுக்கென்ன கைம்மாறு செய்யப் போகின்றேன். புத்திரப் பேறற்றவனுக்குக் கதியில்லை யென்பதைக் கருதி வாடியிருந்த வென்னை மகிழ்விக்க வந்த என் செல்வனே! என்னை ரக்ஷிப்பாய். உன்னைப் பெறுதற்கு நூறு வருடம் அரிய தவம் புரிந்தேன். அதனாலன்றோ? இலக்குமியும் நாராயணரும் அஸ்வ வுருவங் கொண்டுன்னைத் தந்துப்போயினார். புன்னகையோடுங் கூடியிருக்குமுன்னை லக்ஷுமிதேவி விட்டுப் போவாளா? அது என்மேல் வைத்த கருணை யல்லவா? உன்னை எவள் புத்திரனாக

வைத்துக் கொள்ளுகிறாளோ அவள் புண்ணியவதியாயிருப்பளல்லவா. இச்சமுசாரம் கியதுக்கக்கடலைக் கடத்தற்கு நீ ஒரு தோணியல்லவாவென்று அக்குழந்தையைப் பாராட்டிச் சீராட்டி யெடுத்துக்கொண்டு தன்னகரம் போகப்புறப்பட்டனன். இவன்வருகையை மந்திரிகள் புரோகிதர்கள் நகரவாசிகள் முதலிய யாவரும் கேள்வியுற்றுச் சகலமரியாதையுடனெதிர் கொண்டுவர அவர்களையெல்லாம் அரசன்கண்டுமகிழ்ந்து இனிய பலவுபசார வார்த்தைகள் கூறி நகரத்திற் பிரவேசித்து வீதியிலுள்ளாரெல்லாம் பொரிகளையும் மலர்களையுஞ்சிந்த அரண்மனை புகுந்த யாவருக்கும் அங்கு நின்று விடைதந்துப் பின்னர் அந்தப்புரஞ் சென்று தன்மஹிஷியாகிய பத்தினியை யழைத்துத் தன்கையிலிருந்த புத்திரனைத் தந்தனன். அவள் அப்புத்திரனைக் கையிலேற்று ஆச்சரியமும் அன்பு முடையவளாய் மன்மதனுக்குச் சமானனான இப்புத்திரன் உமக்கெவ்வாறு கிடைத்தான்? யாரால் கொடுக்கப் பட்டான்? இவன் என் மனதைக் கவர்ந்து என்னாசையைக் கொள்ளை கொள்ளுகின்றான். இவன் செய்தியைச் சீக்கிரஞ்சொல்லுமென்றனள். அரசன் ஓ ராணியே! நான் புத்திரப்பேறு வேண்டித் தவங்கிடக்கப் போனதை நீயறிவையன்றோ? அதுபோல் தவம் புரிய நாராயணர் கிருபையால் இவன் கிடைத்தானென்று நாராயணர் செய்தியையும் புத்திரன் வரலாற்றையுங் கிரமமாகக் கூறினன். அவள் கேட்குமகிழ்ந்து நம்முடைய தவந்தான் லக்ஷுமி நாராயணர்களை யிவ்வாறாக்கியதென்று அப்புத்திரனை மார்பிலணைத்துக்கொண்டு அரசனைப் பார்த்து இனிப் புத்திரோற்சவத்துக்குரிய வைபவங்களைச் செய்து நாம் களிக்கவேண்டுமென்ன, அரசனும் அப்படியே அந்தணர்முதலிய யாவர்க்குந் தானமளித்து ஜாதகர்மம் நாமகரண முதலிய சடங்குகளை நடத்தத் தொடங்கி, ஏகவீரனென்று பெயரிட்டு இந்திரனுக்குச் சமானமான பலத்தையுஞ் சுகத்தையு முடையவன்போல் சந்தோஷித்து நாம்புத்திரனைப் பெற்றதுபோலுமெவன் பெறுவான்! சாக்ஷாத் விஷ்ணு மூர்த்தியின் அம்சமன்றோ நமக்குப் பிள்ளையாக வந்ததென்று பற்பலவாய் வியந்து கூறிப்பிதுர்க்களுடைய கடனுந் தீர்ந்ததென்று திருப்தி யடைந்து யாதொரு சம்சார தாபமுமின்றி வாழ்ந்திருந்தனன்.

இருபதாம் அத்தியாயம்

தூர்வஸோ: புத்திரோற்பத்திகதனம் முற்றிற்று.

———

சுலோகம் - (ருசு.)

ஆஉ அத்தியாயம் உ0 - க்குச் சுலோகம் (கஉஉஎ)

———

உ

சஸதாண்டவசாக்ஷிண்யை நம:

இருபத்தோராம் அத்தியாயம்
ஏகவீரஸ்யபட்டாபிஷேகம்.

சூதமுனிவர்கூறுகின்றார். வியாசமுனிவர் ஜனமேஜயனை நோக்கி ஓ அரசனே! ஏகவீரனாகிய அந்தக்குழந்தைக்கு அவன்றந்தை ஜாதகர்மமுதலிய சடங்குகளைச் செய்யத்தொடங்கி நாமகரணஞ் செய்தபின்னர், அந்தந்தமாதங்களிலும் அவ்வத்தினங்களிலுஞ் செய்யத்தக்கனவாகிய கிருத்தியங்களையும் வைபவங்களையுஞ் சிறப்பாக நடத்தினன். அவனும் அவர்களால் காப்பாற்றப்பட்டவனாய்ச் சீக்கிரத்தில் விருத்தியடைந்துவர, ஆறாவதுமாதத்தில் அன்னப்பிராசனமும் மூன்றாவது வருஷத்தில் சூடாகரணமுஞ் செய்வித்து அநேகமாக வந்த பிராமணர்களுக்குக் கோதானமுதலிய அளவிறந்த தானங்களையுங் கொடுத்துத் திருப்தியாக்கிப் பதினோராவது வயதில் உபநயனகர்மத்தை நடப்பித்து வேதாத்தியயனத்துக்குரியவனாக்கினான். அந்த ஏகவீரன் சகலவேதங்களையு மறிந்தவனாயும் அரசதர்மத்தில் சமர்த்தனாயுமாயினான். அரசன் அவனதுவித்தையையும் சாமர்த்தியத்தையுங் கண்டுமகிழ்ந்து இனியரசியலுக்குரியனாக்க வேண்டுமென்றுகருதி சூரியனுக்கு புஷ்யநட்சத்திரயோகமிருக்கிற தினத்தைப்பட்டாபிஷேகத்திற் குரிமையான நாளாகப்பார்த்து அதற்கு வேண்டிய சாமக்கிரியைகளைச் சேகரித்து சகலவேதமறிந்த அந்தணஸ்ரேஷ்டர்களை வரவழைத்து விதிமுறையாய்ச் சமுத்திரதீர்த்த முதலிய தீர்த்தங்களால் அபிஷேகஞ்செய்வித்துப் பிராமணர்களுக்குக் கொடுக்கவேண்டிய தானங்களைக்கொடுத்து இராஜ்யத்தைப் பிள்ளையினிடங்கொடுத்து மந்திரிகளுக்குவேண்டிய சன்மானங்களைச் செய்து அவர்களைக் கவுரவப்படுத்தி; ஓ மந்திரிகளே! நீங்கள் என் மகனாகிய ஏகவீரனை என்னைப்போற்பாவித்து அவனைக்கொண்டு மநுநீதிகோணாது அரசாட்சி நடத்திவருவீர்களென்று சொல்லி அரசுக்குரிய சகலவதிகாரங்களையும் அவர்கள் வசமாக்கிவிட்டுத் தான் தனியிடத்திருந்து நமக்குக்கிடைத்த இப்புத்திரனால் சமுசாரத்திலனுபவிக்கவேண்டிய சுகங்களெல்லாமநுபவித்தோம்; பிதுர்க்கடன் தேவர்கடன் முனிவர்கடனென்னு மூன்றுகடன்களையுங்

கொடுத்தவனாயினோம்; இனி நாம் முத்தியடைய வேண்டிய கடனொன்றே யுடையோமா யிருக்கின்றோமென்று நிச்சயித்துச் சம்சாரத்தில்லைந்திருந்த புத்தியைச் சுவாதீனப் படுத்திக் கொண்டு மனைவியுடன் வனத்துக்குப்போய் மைநாகபர்வத மடைந்து அதன்சிகரத்தில் ஓராஸ்ரம மமைத்துக் கொண்டு வானப்பிரஸ்தனாய் காய் கனி சரகுகளை ஆகாரமாய்க் கொண்டு நாடோறும் பார்வதி தேவியை இடைவிடாமற் றியானித்துக் கொண்டிருந்து காலமுடிவில் மனைவியுடன் சுவர்க்கலோக மடைந்தான். அச்செய்தியை ஹைஹயன் கேள்வியுற்று வேதத்திற் சொல்லிய வண்ணம் ஊர்த்ததேகிகளாகச் சென்றவர்களுக்குச் செய்யும் விதிகளையும் உத்தரகிரியையும் நடத்தித் தன்தந்தையினாற் கொடுக்கப்பட்ட ராஜ்யத்தை மிக்க நீதியுடன் பாதுகாத்து மிகவுங் கவுரவஞ் செய்யப் பட்டவனாய் நானாவிதமான போகங்களை யனுபவித்து வந்தனன். ஓர்நாள் அவ்வேகவீரன் மந்திரிகளுடைய புத்திரர்களோடு கூடினவனாய்க் குதிரைமீதேறிக்கொண்டு கங்காநதிக்கரைக்குப் போய் அங்குமிகவும் அழகிய குயில்களுடைய ஒலிக்குரல்களாலும் புஷபங்களாலும் கனிவர்க்கங் களாலும் வண்டினங்களின் வரிசைகளாலும் பிரகாசித்துக் கொண்டிருக்கிற வனங்களின் சிறப்பைக்கண்டு அதன்பின்னர் வேதத்தொனியும் ஹோமப் புகையும் ஆகாயத்தில் ஆவரிக்கப்பட்டிருக் கின்றமையும் அங்குள்ள முனிவராச்சிரமங்களில் மான்குட்டிகள் விளையாடுவதையும் கோபிகாஸ்திரீகளால் ரக்ஷிக்கப்படுகிற வயல்களிற்பயிர்கள் செழிப்புற் றிருப்பதையும் பூந்தோட்டங்க ளெல்லாம் மலர்ந்திருக்கும் மலர்களால் பொலிவு பெற்றிருப்பதையும் பார்த்து மகிழ்ந்து அப்புறஞ் சென்று புதர்களையும் சண்பகம் பலா மா மகிழும் மலர்ந்திருக்கிறமந்தாரம் பனை புங்கம் கடம்பு முதலிய விருக்ஷராசிகள் செழித்தோங்கி யிருப்பனவுங் கண்ணுற்று அப்புறஞ் செல்லும்போது கங்கையில் மலர்ந்து பரிமளம் வீசுகின்ற ஒருதாமரைமலரைப் பார்த்தான். அம்மலருக்குத் தென்பக்கத்தில் அம்மலர்போலுங் கண்களையும் பொன்போலுடம்பையும் அழகிய கருமணல்போற் கூந்தலையும் சங்குபோல் கழுத்தையும் மின்னல் போலிடையையும் கோவைப்பழம் போலுதட்டையும் சூதாடுகருவிபோல் ஸ்தனங்களையும் எட்பப்போல் நாவையும் வாய்க்கைப் பெற்ற ஓர் கன்னிகை யாதொரு துணையுமின்றிக்குரளிப் பட்சியைப் போலழுது கொண்டிருக்கிறதைப் பார்த்து ஓ பெண்ணே! நீ என்ன காரணத்தால் இங்கழுது கொண்டிருக்கிறாய்? நீ யார்? நீயாருடையபெண்? நீகாந்தர்வஸ்திரீயா? தேவஸ்திரீயா? ஒகுயில் போலுள்ளவளே! நீயேன் தனியாய்விடப்

பட்டாய்? உனக்குநாயகனுண்டா? அவனெங்கே போனான்? உன்றந்தை யெங்கேயிருக்கின்றான்? நீ எதற்காகத்துக்கிக்கின்றாய்? அதனை என்னிடம் சொல்லுவையாயின் அத்துக்கத்தை நான் நீக்கிவிடுகிறேன். ஓமேன்மையான சரீரமுடையவளே! நானிவ்வுலகையாளுமரசன். என்னிராச்சியத்தில் பிரஜைகளைத் துன்பப்படுத்துகின்றவ ரொருவருங் கிடையாது. அன்றியுங் கள்ளர்பயமும் ராக்ஷசர்பயமுங் கிடையாது. நானடத்தி வரும் செங்கோன்முறையான் எக்காலத்துந் தீங்கினைக்குறிக்கும் உறபாதங்களுண்டாமாறில்லை. புலி சிங்கமுதலான குரூர செந்துக்களுந் தீங்குசெய்யுமாறில்லை. ஆகையால் நீ அவ்விடம் வரவெண்ணினால் இப்பொழுதேவரலாம். அந்தோ! நீயேன் இந்தக்கங்காநதிதீரத்தில் தனியேயழுகிறாய்? இவ்விடத்தில் நீ துக்கிப்பதனால் எவன்வருவான்? இங்கு ஒருவருமில்லையே! எனக்கு நீயழுங்காரணத்தைச் சொலலுவாய். என்னை நீ இலேசாக நினைக்கவேண்டாம்; பிராணிகளாலொழிக்கக்கூடாத பெருந்துன்பமாயிருந்தாலும் அதனைநான் சுலபமா யொழித்துவிடுவேன். உனக்கு வந்ததுக்கம் மனிதர்களால் வந்ததாயிருந்தாலும் தெய்வத்தால் வந்ததாயிருந்தாலும் நானொழித்துவிடுவேன் துக்கத்தையொழித்து விடுவதே என்னுடையவிரதம். நீ எதனைவிரும்பி இப்படியழுகின்றாய்? அந்த விருப்பத்தைச் சொல்லுவாய். அதற்கேற்றவுபாயத்தை நான் செய்கின்றேனென்றனன். அக்கன்னிகை அவனுடைய வார்த்தையைக் கேட்டு. ஓ இராஜஸ்ரேஷ்டனே! யாருந்துக்கமில்லாமல் துக்கிப்பார்களா? ஆகையால் நானுந்து கத்தினால்தானழுகிறேன். அத்துக்ககாரணத்தைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. ஓ அரசனே! உன்னாளுகைக்குட்படாததொரு தேசத்தில ரப்பியனென்றொரு வரசனிருக்கின்றான். அவனுக்கு ருக்குமரேகையென்கிற வொருமனைவியுள்ளாள். அவளோ அழகிற்சிறந்தவளாயும் இல்லறம் நடத்துவதில் சாமர்த்தியமுடையவளாயும் கற்பிலக்கணத்தில் முதன்மையானவளாயுமுள்ளவள். அவ்வரசனுக்கு இவள் வாய்க்கப்பெற்றதுபோலும் புத்திரப்பேறு வாய்க்கப்பெறாமல் அபுத்திரவானாயிருந்தனன். அவன் அபுத்திரவானென்கின்ற துன்பத்தை யடையாதவனாயிருந்தாலும் அவன் மனையாட்டி நமக்குப் புத்திரப்பேறில்லையேயென்கிற ஏக்கமுடையவளாய், ஒருநாள் தனது நாயகனைப்பார்த்து ஓபிரபுவே! நான் பிழைத்திருப்பதனால் என்ன பிரயோஜனம்? நானிப் பூவுலகில் மலடியென்று பெயர் பெற்று இந்தராஜ்யசுகத்தை யனுபவிப்பதாகிய என் பிழைப்பை நெருப்பினாற்சுடவேண்டுமென்று அவள் மனநொந்து சொல்லும்போது,

அந்த அரசன் அவளது துக்கத்தைச் சகியாதவனாய்த் தானும் புத்திர காமனாய்ப் பிராமணர்களை வரவழைத்து, விதிப்படி புத்திரகாமேஷ்டியாகத்தைச் செய்து அவர்களுக்கு வேண்டிய தக்ஷணைகளைக் கொடுத்து ஹோமாக்னியில் நெய் ஹோமஞ்செய்யும்போது அவ்வக்னியினின்று அழகிய அங்கங்களுள்ளவளாயும் சுபலக்ஷணங்களோடு கூடினவளாயும் கோவைப்பழம்போ லுதடுள்ளவளாயும் முத்துவரிசைபோல் தந்தவரிசைக ளுள்ளவளாயும் விற்போல் புருவங்களுள் ளவளாயும் பூரணசந்திரன் போல் முகமுள்ளவளாயும் பொன்போல் காந்தியுள்ளவளாயும் மேகம்போல் கூந்தலுள்ளவளாயும் செந்தாமரைபோல் உள்ளங்கால் உள்ளங்கைக ளுள்ளவளாயும் தளிர்போல் மிருதுவான சரீரமுள்ளவளாயும் மான்போல் கண்களுள்ளவளாயு மோர்கன்னிகை வெளியேவந்து ஹோதாவினிடம் போக, அவர் அவளைக் கையிற்படித்துக்கொண்டு அரசனிடம்போய், ஓ அரசனே! இந்தப் பெண்ணை வாங்கிக்கொள். நெய்ஹோமஞ் செய்துகொண்டிருக்கும்போது ஏகாவலிபோ லிவளிந்த யாகத்தீயிற் பிறந்தாள். ஆகையால் ஏகாவலி என்றே பெயர்பெற்று இவ்வுலகில் வாழ்வாள். ஓ அரசனே! இவளைப் பெண்ணென்றெண்ணற்க. புத்திரனால் நீ என்ன சுகமடைவையோ அந்தச்சுகம் இவளா லடைவாய். இப்பெண் விஷ்ணுமூர்த்தியினால் கொடுக்கப் பட்டவளாதலால் சந்தோஷமடைவாயாகவென்று கூறிய ஹோதாவின் வார்த்தையைக்கேட்டு அழகிய கன்னிகையையும் பார்த்து மிகவுஞ் சந்துஷ்டியுள்ளவனாகப் பெண்ணைவாங்கிக்கொண்டு தன் பத்னியினிடங் கொண்டுபோய், ஓ நல்ல பாக்கியஞ்செய்தவளே! இந்தப் பெண்ணை வாங்கிக்கொள்வாயென்ன, அவளும் பெண்குழந்தையை வாங்கிக்கொண்டு தானே புத்திரனைப் பெற்றதுபோல் சந்துஷ்டி யடைந்தாள்.

பின்னர் அரசன் புத்திரனுக்குச் செய்யும் விதிபோல் ஜாதகரும் முதலிய மங்கள கிருத்தியங்களையுஞ் செய்து முடித்து யாகத்தையும் பூர்த்திசெய்து பிராமணர்களுக்குக் கொடுக்கவேண்டிய தக்ஷணைகளையுங் கொடுத்து யாவரையு மனுப்பிவிட்டு சந்தோஷ சித்தனாயிருந்தான். அந்தப் பெண்ணும் பிறைபோலுந் தினேதினே விருத்தியடைந்து வருதலை அரசன் மனைவி கண்டு அவளை ஒரு கணமும் பிரியாதவளாய் மிக்க சந்தோஷமடைந்து புத்திரோற்பத்தி நிமித்தம் செய்வதாகிய வுற்சவத்தை விசேடமாய் நடத்தி வந்தனன். ஓ அரசனே! அந்தப் பெண் அரசனுக்கும் அரசிக்கும் புத்திரனால் விளையுஞ் சுகத்தை விளைவித்துச் செல்வமா யிருந்தனள். நானோ

அந்த அரசனுடைய மந்திரியின்பெண். எனக்கு யசோவதியென்று பெயர். அந்தப் பெண்ணும் யானும் சமானவயதுள்ளோம். அவள் பிதாவாகிய அரசன் அப்பெண்ணோடு விளையாடுவதற்கு என்னை அப்பெண்ணுக்குத் தோழியாகச் செய்தான். நாங்களிருவரும் இரவும் பகலும் பிரியாமல் மிகப்பிரீதியோடு வாழ்ந்திருந்தோம். அந்த அரசபுத்திரியாகிய ஏகாவலியென்பவள் தாமரைப் பூவில் மிக்க பிரீதியுள்ளவளா யிருந்ததனால் எங்கு அவள் தாமரை மலரைப் பார்க்கின்றனளோ அங்கு நீங்காமல் விளையாடுவாள். வேறிடத்தில் விளையாடுகிறதில்லை. அவளிடத்துக்குத் தூரத்திலிருப்பதாகிய இக்கங்கா நதியிலுள்ள தாமரைத் தடாகத்தை யோர்நாள்பார்த்து அன்றுமுத லென்னோடும் மற்றைத் தோழிகளோடும் இவ்விடம் வந்து விளையாடிப் போவது வழக்கம். இது மாநுடசஞ்சார மில்லாதவிடமா யிருத்தலால் இவ்விடத்துக்கு வருவது நலமன்றென்று நானெண்ணி அவன் றந்தையாகிய அரசனிடஞ் சென்று ஓ அரசனே! உன்னுடைய புத்திரி மாநுட சஞ்சாரமில்லாத கங்காதீரத்திலுள்ள ஓர் தாமரைத் தடாகத்தில் நாடோறும் போய் விளையாடுகிறா ளென்று சொல்லி விட்டேன். பிறகு அரசன் அரண்மனையிலேயே வண்டுகள் மொய்க்கும்படியான தாமரை மலர்களுள்ள தடாகங்களை விருத்தி செய்து பெண்ணை யழைத்து, அம்மா! இனி நீதாமரைத் தடாகத்தை யுத்தேசித்து வெளியில் போகவேண்டா மென்று தடைசெய்தான். அவன் தடைசெய்தும் அவள் அத்தடைக்குள்ளகாது இங்குள்ள தடாகத்துக்கே வந்து போகும் இச்சையுடையவளா யிருந்தாள். அதனை அரசனறிந்து தடைசெய்வதற்கஞ்சி அநேக காவற்காரர்களை ஆயுதபாணிகளா யுடன்போய்வரும்படித் திட்டஞ்செய்தனன். அதுமுதல் அவ்வரசபுத்திரி அக்காவலாளிகளுடனும் நான் முதலிய தோழிகளுடனும் இத்தடாகத்துக்கு வந்து விளையாடிப் போவது வழக்கமென்றாள்.

இருபத்தோராம் அத்தியாயம்

ஏகவீரஸ்யபட்டாபிஷேகம் முற்றிற்று.

———

சுலோகம் - (சாகஏ)

ஆஉ அத்தியாயம் உக - க்குச் சுலோகம் (கஉஅஉஏ.)

———

உ

ஈஸ்வரோத் ஸங்கநிலயாயை நம:

இருபத்திரண்டாம் அத்தியாயம்

ஏகாவலி விருத்தாந்தம்.

சூதர் கூறுகின்றார். வியாசமுநிவர் ஜனமேஜயனை நோக்கி ஓ அரசனே! யசோதி என்பவள் ஏகவீர னென்பவனைப்பார்த்து அரசனே! அந்த ஏகாவலியானவள் ஓர்நாள் காலையி லெழுந்து வந்து தோழிகளோடு கூடினவளாய் இருபக்கத்திலும் சாமரம் வீச ஆயுதபாணிகளாகிய காவலாளிகள் சாக்கிறதையாய்ச் சூழ்ந்துள்ள இவ்விடத்துக்கு வந்தனள். வந்து வழக்கம்போல் விளையாடி கொண்டிருக்கிற நாங்கள் எங்களைப்போலும் நாடோறும் வந்து விளையாடும் அபசர ஸ்திரீகளோடு அன்று சேர்ந்தோம். பின்னர் அவர்களும் நாங்களும் வேடிக்கையாய் விளையாடிக் கொண்டிருக்குஞ் சமயத்தில் காலகேதுவென்று பிரசித்திபெற்ற மஹாபலமான ஓரசுரன் இருப்புத்தண்டம் கதை கத்தி தனுசுபாணம், தோமரம் இவைகளைத் தாங்கியிருக்கிற அநேகராக்ஷஸர்கள் சூழ ஏகாவலியைப் பார்த்துக்கொண்டே அதிவேகமா யிவ்விடத்துக்கு வரத்தலைப்பட்டனன். அதனையறிந்த நான் இவளைப் பார்த்து, ஓ எங்கள் தலைவியே! எவனோ ஒரு ராக்ஷசன் வந்து உன்னைப் பார்க்கிறான். நாம் தனியேயிருப்பது நன்றன்று. நாம் நம்முடைய காவலாளிகளின் மத்தியில் போயிருப்போ மென்று சொன்னேன். அவளும்ப்படியே யிருப்போமென்று யாவரையு மழைத்துக்கொண்டு காவலாளிகள் யாவரையுந்தூரத்திக்கொண்டேயோடிவரும்போது அவன் வருகைக்கண்ட ஏகாவலிபயந்து நடுங்கியழுது கொண்டிருந்தனள். அவன் யாவரையுந் தூரத்திவிட்டு இவளைப் பிடித்துக் கொண்டனன். அப்போது நான் ஓ ராக்ஷசனே! இப்பெண்ணை விட்டுவிடு என்னைப் பிடித்துக் கொள்ளென்று சொன்னேன். அவளைமதித்த அவனுக்கு என்னிடத்தில் மதிப்புண்டாகுமா? அதனால் என்னைப் பிடித்துக்கொண்டு போவதற்கெண்ணாமல் பிடித்த அவளையே கொண்டுபோகத் தொடங்கினன். அதைக்கண்ட காவலாளிகள் அந்த ராட்சனைத்தடுத்து நில்லு நில்லென்று கோபத்துடன் சூழ்ந்துவீராகளும் அதிசயிக்கும்படியான யுத்தஞ்செய்யும் போது ராக்ஷசச் சேனைக்ளெல்லா மிகவுமுயற்சியுள்ளவர்களாய் யுத்தம்புரிந்து

காவலாளிகளை யெல்லாங்கொன்று விடவும் அசுரன் ஏகாவலியை யெடுத்துக்கொண்டு தன் சேனைகளுடன் பட்டணத்துக்குச் செல்லத்தொடங்கினான். அப்போது அவன் கையிலப்பட்டிருக்கும் ஏகாவலி பெருங் குரலிட்டழுதனள். அவ்வழுகைக் குரலைக் கேட்ட நான் அந்த ராக்ஷசன் போகும் வழியே போகும்போது அவனென்னைப் பார்த்து, ஓ யசோதே! என்னைப்பார் என்னைப் பாரென்றழுது கொண்டே போனாள். நானும் விடாமல் பின்றொடர்ந்து சென்றேன். அதனாலவள் சிறிது பயமற்றவளாகச் சென்றாள். நானும் அவள் சமீபத்திற் போய் விட்டேன். போகவும் என்னோடு அவள் அடிக்கடி பேசிக்கொண்டே மிக்கதுக்கமுள்ளவளாய் சரீரமெல்லாம் வியர்த்து நடுக்கமுற்று என். கழுத்தைக்கட்டிக்கொண்டு ஓவென்றலறியழுதாள். இப்படி யிவளழும்போது அந்தக்காலகேதுவென்பவன் என்னைப்பார்த்து மிகப்பிரீதியோடு எனது பிரியைக்குச் சகியாகிய பெண்ணே! உனது தலைவியைப் பயப்பட வேண்டா மென்று சமாதானப் படுத்துவாய். தேவலோகத்துக்குச் சமானமான என்னுடைய பட்டணம் வந்து சேர்ந்துவிட்டோம். ரதிக்குச் சமானமான இவளுக்கு நான் தாசனாய்விட்டேன். ஏனழுகின்றாள். அழவேண்டாமென்று சொல்லுவாயென்று என்னையும் அவளுடைய பக்கத்திலிருக்கும்படி ரதத்திலேற்றிக் கொண்டு சேனைகளுடன் மலர்ந்தமுக முடையவனாய்த் தன்பட்டணம் போய்ச்சேர்ந்தான். பின்னர் ஏகாவலியையும் என்னையும் பால்போலிருக்கிற வோர்கிருகத்தில் வைத்துக் கோடிராக்ஷஸர்களைக் காவல் வைத்தான். மூன்றாநாள் அந்தராக்ஷசன் ரகசியமா யென்னைப்பார்த்து மனவருத்தப்பட்டுக் கொண்டிருக்கிற அவளுடன் சிலவார்த்தைகள் நான் சொல்வதுபோல் நீ சொல்லுவாய். என்னையெனின், ஓ சுந்தரவதியே! நீ எனக்குப் பத்தினியா யிருப்பாய். நீமனம் போனபடி எல்லாச்சுகத்தையு மனுபவிப்பாய். சந்திரன் போன்ற முகமுடையவளே! என்னுடைய ராஜ்யமெல்லாம். உன்னுடையதே. நானுன்னுடைய தாசனாயிருக்கிறேனென்று சொல்லச்சொன்னான். நானவனைப் பார்த்து ஓராக்ஷசனே! நானிந்த கொடுமையான வார்த்தையை யவளிடஞ் சொல்லமாட்டேன். நீயே சொல்லிக்கொள்ளென்றேன். மன்மதனால் பீடிக்கப்பட்ட அவன் பயத்தால் மெலிவடைந்திருக்கின்ற ஏகாவலியைப்பார்த்து வணக்கத்தோடு உள தோவிலதோ என்று சந்தேகிக்கச் செய்யவல்ல இடையுடையாளே! நீ என்மேல் மந்திரத்தை ஏவிவிட்டாய் அதனாலென்மனது உன் சுவாதீனமாய் விட்டது. இனி நானுனக்கு ஏவலாளியாய் விட்டேன். மன்மத பாணத்தினால் பீடிக்கப்பட்டுப் பரவசனாயிருக்கிற வென்னைப்

பர்த்தாவாகச் செய்துகொள். சஞ்சலப்படு மென்மனதைச் சஞ்சல மற்றிருக்கும் உன்னுடைய யவ்வனத்தை வீணாக்காது என்னைக்கட்டிக்கொண்டுச் சபலமாகச் செய்வாயென்றான். அப்போது ஏகாவலி என்றந்தை ஹைஹய னென்னும் அரசகுமாரனுக்கு என்னைக் கொடுப்பதாகச் சொல்லிவிட்டபடியால் நானும் அவனையே மனதினால் பர்த்தாவாக நிச்சயித்துவிட்டேன். எவனைப்பார்த்தாவாக நினைக்கின்றோமோ அவனுக்கே நாங்களாளாவது அநாதிவழக்கம். அதை விட்டு நினையாத வுன்னைப் பர்த்தாவாக எப்படியடைவேன். நீ கன்னிகாதருமந் தவிர மற்ற தருமசாஸ்திரங்களெல்லாம் அறிந்தவனாகக் காண்கின்றாய். அத்தருமத்தை நான் கூறுகின்றேன் கேட்பாயாக. கன்னிகையானவள் தந்தையார் தன்னை எவனுக்குக் கொடுக்க நினைக்கின்றாரோ அவனையே பர்த்தாவாகத் தானடைய வேண்டும். எப்போதும் கன்னிகை சுதந்தரமுடையவ ளல்லவென்று சொன்னாள். அவனதனைக் கேட்டானேயன்றி தருமத்தையெண்ணி மோகத்தை விடாதனாவ யெங்களிருவரையும் விடவில்லை. அவன் செய்தி யங்ஙனமிருக்க, ஓ அரசனே! அவனது பட்டணமோசங்கடமான பாதாளத்தில் அநேக ராக்ஷசர்களால் காவல்கொண்டு கோட்டையைச் சுற்றிலும் அகழியுடைத்தாயிருக்கிறது. நானவளை விட்டுப்பிரிந்த துக்கத்தினாலிங்கழுதுகொண்டிருக்கிறே னென்றாள்.

அவள் சரிதத்தைக்கேட்ட ஏகவீரன் ஓ பெண்ணே! அப்பட்டணத்திலிருந்து நீ எப்படி வந்தாய் அதைச் சொல்லவில்லையே! அன்றியும் நீ சொல்லி வந்ததில் எனக் கோராச்சரியமிருக்கின்றது. என்னையெனின்! ஓ பெண்ணே! அவள், தந்தையாரால் ஹைஹயனுக்குக் கொடுக்க நிச்சயிக்கப்பட்டாளென்று சொன்னாய்; ஹைஹயனென்னும் பெயருள்ளவன் யானே. என்னைத்தவிரவேறு அப்பெயருள் எவன் கிடையாது. எனக்காகவே அவள் நிச்சயிக்கப்பட்டாளா? நீ அந்த வுண்மையைச் சொல்லி என் சந்தேகத்தை யொழிப்பாய் எனக்கிவ் வையமொழியுமாயின் நானவ்வதமனைக்கொன்று அவளைக்கொண்டு வருகின்றேன். பாதலத்திலெவ்விடமிருக்கிறாள் அதுவுனக்குத் தெரியாதல்லவே? எல்லாஞ் சொல்லி வந்தவளாகிய நீ அந்த வொன்றைத்தானே மறைத்துச்சொன்னாய் அவளங்கிருப்பது அவன்றந்தைக்குத் தெரியுமா தெரியாதா? நீயாவது அவள் சங்கடப்படுவதை அவனுக்குச் சொல்லக்கூடாதா? நீயாவது அவள் சங்கடப்படுவதை அவனுக்குச் சொல்லக்கூடாதா? அவள் வேறொருவரா லறிந்திருப்பானாயின் பெண்ணை விடுவிப்பதற்கு அவன் ஏன்பிரயத்தனப்படவில்லை? தன்பெண்கடுங்காவலி லிருப்பதைக் கேட்டும் அவனெப்படிச்

சகித்திருக்கின்றான். அவன் யுத்தஞ்செய்வதற்கு வல்லமையற்று ஏங்கியிருக்கின்றானா? சீக்கிரமாய்ச் சொல்லுவாய்? நீ அப்பெண்ணினுடைய தேவசம்பந்தமான குணங்களனைத்துஞ் சொல்லி என்னுடைய மனதை அவள் வசமாக்கிவிட்டபடியால் நான் காமவசப்பட்டுப்பீடிக்கப்பட்டவனாய்ச் சங்கடத்திலிருக்கும் அப்பெண்ணை அவ்விடத்தினின்று நீக்கி எப்பொழுது சுகமாய்ப்பார்ப்பே னென்றேங்குகின்றேன். பார்க்கும் விஷயத்தில் என்மனது அதிக ஆசையுடையத்தாயிருக்கிறது. ஒருவராலும் பிரவேசிக்கக்கூடாமையா யிருக்கின்ற அவன் பட்டணத்துக்குப் போகுமுபாயத்தை மாத்திரம் நீ சொல்வாய். அவ்வுபாயமுனக்குத் தெரியுமென்பதிற் சந்தேகமில்லை. தெரியாதிருக்குமாயின் அச்சங்கடத்திலிருந்து நீயெப்படிவந்திருக்கலா மென்றான்? யசோதி ஓ அரசனே! நான் பால்யத்தில் சித்தப்பிராமணிடத்தில் பகவதியினுடைய மஹாமந்திரத்தை பீஜத்தியான பூர்வகமா யுபதேசிக்கப் பெற்றிருக்கின்றேன். அந்த மந்திரத்தைச் சிறையிருந்த அவ்வீட்டில் ஒருமாதம்வரையில் நிராதாரையாய், நிராஸ்ரையாய், பிரபஞ்சந்தோன்றி நின்றழிதற்கு ஆதாரையாய், தன் பக்தர்களுடைய சகலகாரியங்களையுஞ் சாதித்துக்கொடுக்கின்றவளாய்ப் பிரகாசிக்கின்ற தேவியைச் சிவந்த ஆடை தரித்தவளாயும் சிவந்த கண்களுடையவளாயும் நல்லமங்கள கரையாயும் இருப்பவளாய்த் தியானித்து இந்தச் சிறையினின்றும் விடுவிக்கவல்லவள் இவளன்றி வேறொருவருமில்லையென்று நிச்சயித்துச்செபித்து வந்தேன். அவ்வாறு ஜபித்துவரும்போது எனக்கு உறக்கம்வந்தது. அவ்வுறக்கத்திலுண்டாகிய கனவின்கண் மஹாதேவி வந்து ஏன் உறங்குகின்றாய்! எழுந்திருந்து சீக்கிரமாய் கங்கைக்கரைக்குப்போய்ச் சேருவாய். அவ்விடத்தில் இலக்குமி புத்திரனாகிய ஹைஹயனென்னும் அரசனொருவன் வருவான். அவனுக்கு ஏகவீரனென்றும் பெயர். அம்மஹாவீரன் தத்தாத்திரேயனால் என்னுடைய மந்திரமாகிய மஹாவித்தையை யுபதேசிக்கப் பெற்று அதனால் என்னை எப்போதும் உபாசித்தும், மனதை அவ்வழி நிறுத்தியும், ஏனைய விந்திரியாதிகளெல்லாம் அவ்வழியில் உழன்று கொண்டிருக்க என்னுடைய பூசையி லாசைவைத்தும் தியானித்தும் வருகின்றான். ஓ யசோதே! அவன் இந்தப் பெருந்துக்கத்தை நீக்கிவிடுவான். நீ கண்ணீர் விட்டழவேண்டும். அவன் அக்கங்கைக்கரையில் உன்னைக்காணும் பொழுதே உன்றுயரமொழிவதிலையமில்லை. பின்னர் இந்த அசுரனையும் வன்கொன்று ஏகாவலியைச் சிறையினின்றும் விடுவித்து அவளுள்ளங் களிக்குமாறு செய்வான். ஆகையால் இந்த ஏகாவலி அவனையே

நாயகனாகக் கொள்ளவேண்டுமென்று கட்டளையிட்டுப் போயினாள். உடனே நானுங் கண்விழித்து அதிசயமும் ஆராமையும் உடையவளாய் ஏகாவலிக்கு அச்செய்தியைச் சொன்னேன். அவளதைக்கேட்டு ஆனந்த பரவசையாய்த் தனக்கு நேர்ந்த துன்பங்களையெல்லாம் மறந்து, ஓ தோழி! தேவியனுக்கிரகித்தவண்ணம் கங்கைக் கரைக்குப்போய் அங்கு ஆகவேண்டிய காரியங்களைச் செய்வாய். தேவி நமக்கு நல்ல வனுக்கிரகத்தைச் செய்வாளென்று எனக்கு விடைகொடுக்க. அவ்விடையைப்பெற்று இனி நாம் போகவேண்டுமே யென்று தேவியை நினைக்க அவளது கருணையினால் எனக்கு வழியொன்று தோன்றிற்று. அவ்வழியே நானதிவேகமாய்வர அது என்னை இவ்விடத்திற் கொண்டு வந்துவிட்டது. ஓ அரசனே! என்னுடையசெய்தியிதுவாகும். இனி உம்முடைய செய்தியைச் சொல்லும். நீர்யார்? யாருடைய குமாரர்? எல்லாவற்றையுங் கிரமமாய்ச் சொல்லுமென்று கேட்டனள்.

இருபத்திரண்டாம் அத்தியாயம்

ஏகாவலிவிருத்தாந்தம் முற்றிற்று.

———

சுலோகம் - (சாரு.)

ஆஉ அத்தியாயம் உஉ - க்குச் சுலோகம் (கஙசுஎ.)

உ

சதிபாதாவிநாசிந்யைநம:

———

இருபத்துமூன்றாம் அத்தியாயம்

* ஏகவீரஸ்ய காலகேதுநா ஸஹயுத்தம்.

———

வியாசர் கூறுகின்றார். ஓ அரசனே! லக்ஷுமி நாராயணர்களது புத்திரனாகிய ஹைஹயன் யசோதையென்பவள் சொல்லிவந்த வார்த்தைகளைக்கேட்டு மலர்ந்தமுக முள்ளவனாய் அவளைநோக்கி ஓ நங்காய்! யான் ஹைஹயன், ஏகவீரன் என்னும் இருபெயருள்ளேன். நான் இலக்குமிதேவியினுடைய புத்திரன். இத்தகைய சிறப்புள்ள என்னுடைய மனதை நீ என்னுடைய சுவாதீனத்திருக்க வொட்டாமலும் அது பராதீனமாய்க் காமாக்னியால் வாதிக்கப்

* ஏகவீரன் காலகேதுவோடு செய்யும்யுத்தம்.

பட்டிருக்கவுஞ்செய்தனை நானென்செய்வேன். அது முதலில் நீ சொல்லிவந்த ஸ்திரீயினுடைய வடிவ லக்ஷணங்களைக்கேட்டு மன்மதபாணத்சா லடிபட்டது. இரண்டாவது அவளுடைய குண விசேடங்களைக் கேட்டு அவள்பால் போகத்துணிந்தது. மூன்றாவது தேவியினுடைய அனுக்கிரகத்தைக்கேட்டு அவளை யாஸ்ரயித்துவிட்டது. நான்காவது ஏகாவலியானவள் அந்த அசுரன்முன்னே ஹைஹயனைத்தவிர வேறொருவனை நினைக்கமாட்டேனென்ற கற்பு விசேஷணத்தைக்கேட்டு அடிமையாய்விட்டது. இச்செய்தியிங்ஙனமிருக்க,

இனி நாம் என்னசெய்யலாம் அதனைச்சொல்வாய். நானிது வரையில் அந்தத்துஷ்டனுடைய பட்டணத்தையறிந்துமில்லை போனதுமில்லை. ஆகையால் என்னை அவ்விடத்திற்கு நீ அழைத்துக்கொண்டுபோவாய். இதுதான் நீ செய்யவேண்டிய உபகாரம். நானந்த அசுரனை அக்கணமேகொன்று ஏகாவலியைச் சிறையினின்றும்விடுவித்து அவள்படும் துன்பத்தை யின்பமாக்கி அவள் தந்தைபால் கொண்டுபோய்விட்டு ஐயா! இனி உன்னுடைய புத்திரிக்கு விவாகஞ்செய்யுங்காரியத்தில் தலைப்படலாமென்று சொல்லிவிடுகிறேன். பிறகு அரசனிடத்தில் சொல்லவேண்டியது எதுவோ அதனை நீ சொல்வாய் அதுவே என்னுடைய இஷ்டமுமாகும். நானவளை நினைந்து படும் காமநோயைத்தீர்த்தற்குச் சாதனமாயுள்ளவள். நீ யன்றி மற்றுயாருளார். அதனை நீயேயறிவாய் இப்போது அவளிருக்கும் பட்டணத்தைக்காட்டி என்னுடைய பராக்கிரமத்தைப்பார்ப்பாய். பரஸ்திரீயை விரும்பிய அவ்வசுரனை நான் சங்கரிப்பதற்கு இப்போது நீதான் வல்லமையுடையவளென்று நினைக்கின்றேன். ஏனெனின்! நீ என்னை அவன்பட்டணத்தில் கொண்டுபோய்விட்ட பின்னரன்றோ எனது வல்லமை வெளிப்படப்போகின்றது அதனாலென்றான். யசோதை இவனது சாகசமான வார்த்தையைக் கேட்டுச் சந்தோஷித்தவளாய் இலக்குமி புத்திரனை நோக்கி ஓ ஏகவீரனே! அந்த வசுரனுடைய பட்டணம் போகவேண்டுமானால் என்னிடத்திலிருக்கும் தேவியினுடைய மந்திரத்தை முன்னம் பெற்றுக்கொள். பின்னரவன் பட்டணத்தைக் காண்பிக்கின்றேன் நாம் அவ்விடத்திற்குப் போனவுடன் போர்விளையுமாகலான் நீ என்னுடன் சகலசேனைகளோடும் வரவேண்டும். காலகேதுவென்பவன் மஹாபலசாலி. அவனுடைய சேனைகளும் மஹாவீரர்கள் அவர்களை இலோசாக நினைத்தல் கூடாதென்றாள். ஏகவீரன் அவள் சொல்லியபடியே தேவிமந்திரோபதேசம் பெற்றுத்தனது சேனாசமுத்திரங்களுடன்

புறப்பட்டனன். அந்த ஏகவீரன் திரைலோக்கிய சுந்தரியாகிய யோகேஸ்வரியினது மஹாமந்திரோபதேசம் பெற்றுப்புறப்பட்ட அந்தவிசேஷத்தால் யாவருடைய எண்ணங்களையு மறியத்தக்கவனாயும், தூரத்திலிருக்கும்பொருளும் சமீபத்திலிருப்பது போல் காணும் வல்லமையுள்ளவனாயுமாயினான். அவ்வாறு தனக்குண்டாகிய மகிமையையுணர்ந்து மந்திரத்தைப்போற்றி அந்த யசோதையுடன் புறப்பட்டு மஹாசர்ப்பங்களால் காவல்கொண்டிருக்கும் பாதளத்தில் மஹாகுரூரர்களாகிய அசுரர்களால் காவல்கொண்டிருக்கும் அந்த காலகேதுவினுடைய பட்டணத்தை அதிகசுலபமாய்ப் போய்ச்சேர்ந்தனன். இவனது வருகையை அசுரனது தூதர்கள் கண்டு அழுது கொண்டேயாதொன்றுந்தோன்றாமல் மதிமயங்கினவர்களாய், ஏகாவலியினிடத்தில் காமமோகிதனாய் அவள் சமீபத்திற்சென்று அதி விநயத்தோடு வேண்டிக்கொண்டிருக்கின்ற காலகேதுவினிடத்திலோடி ஓ அசுரேந்திரனே! என்ன செய்கின்றாய். இங்கு இவளோடு சகியாய் வந்திருந்த யசோதையானவள் யாரோ ஒரு அரசனைச் சேனைகளோடும் அழைத்துக்கொண்டு வருகின்றாள். அந்த வீரனை நாங்கள் கண்டபொழுதே எங்களுக்கழுகையுண்டாகியது. அது என்ன காரணமோ! என்ன சகுனமோ! நாங்களறியோம். அந்தவீரன் இந்திரனோ! அவன் மகனாகிய ஜயந்தனோ! சிவன் மகனாகிய முருகனோ! அவன் மதத்திருக்கும் மதத்தையும் சேனைகளுடைய வீரபராக்கிரமத்தையும் நமது சேனைகள் காணப்பெறின் எங்களைப்போல் அழுது கொண்டேயோடிவருவரேயன்றி எதிர்த்து நிற்பர்களென்று நாங்கள் நினைக்கவில்லை. நீ இனிச்சும்மாவிருப்பதினால் யாதொரு பயனுமில்லை நீ வேண்டிக்கொண்டிருக்கின்ற இவள்தான் இந்தப்போருக்குக்காரணம். உனக்குயுத்தஞ்செய்யச் சாமர்த்தியமிருந்தால் யுத்தத்துக்குப் புறப்படு. இல்லாவிடில் இப்புண்ணியவதியை அவனுடன் கூட்டியனுப்பிவிடு. இப்போது எதிரியினுடைய சைனியங்கள் மூன்றுகாதத்திலிருக்கின்றன. யுத்தஞ்செய்ய உனக்குத் தைரியமிருக்கும் பக்ஷத்தில் ரணபேரியடிக்கும் படியாய் உத்தரவு செய்வாயென்று சொல்ல, அவ்வார்த்தைகளை அசுரன் கேட்டுக் கோபங்கொண்டவனா யெதனையு மெண்ணாது படைகளைக்கூவி ஓ படைகளே! நீங்களனைவரும் சகல வாயுதங்களுடன் அதி சீக்கிரமாய் நம்மை எண்ணாது வருகின்ற பகைவன் முன்னேசென்று போர்புரியுங்கள். நானும் உங்கள் பின்னோடு வருகின்றேனென்று அவர்களை முன்னேவிட்டுத் தானும் சர்வாயுதபாணியனாய்ப் புறப்பட்டு ஏகாவலியைப் பார்த்து, ஓ எனது மனோன்மணியே! உனது சகியினுடைய காரியமல்லவா இவ்வளவும்

அவளுக்கு ஆஹா இவ்வளவு சாமார்த்திய மிருக்குமாயின் உனக்கு எவ்வள விருக்கமாட்டாது. வருகின்ற இவன்யார்! உனது தந்தையா? அல்லது உன்னைச்சேர்ந்தவர்களில் யாராவது ஒருவனா? உண்மையைச்சொல். உனது தந்தையாயிருப்பானாயின் அவனை நானொன்றுஞ் செய்யேன் அவனை யழைத்துவந்து எனது அரண்மனையிலிருத்தி அவனுக்கு வேண்டியபடி உணவுகளானும் ஆடை யாபரணாதிகளானும் அவனுள்ளங்களிக்குமாறு செய்கின்றேன். வேறுபகைவனாயிருப்பானாயின் அவனை யிப்போதே எனது கொடூரமான ஓர் பாணத்தால் யமனுலகத்திற் கொண்டுபோம்படிச் செய்கிறேன். அவனுக்கு வேறு இயமன்வேண்டாம். எந்தமூடன்தான் என்னுடைய பராக்கிரம் முதலியவற்றை யெண்ணாதுவருவான். அவனுயிரினிடத்தில் விருப்பமுள்ளவனாயிரான். நீ வருகின்றவன் இன்னானென்று சீக்கிரத்திற் சொல்வாயென்றுகேட்க, அவள் ஓ அசுரனே! நானிங்கு உன்னுடைய கடுங்காவலிலிருக்க வருகின்றவ னின்னானென்று நானெப்படிச் சொல்லுவேன். அவன் என் தந்தையுமல்லன் வேறு என்னைச் சேர்ந்த பந்துக்களிலொருவனு மல்லன். இவன் எவனோ! எதற்காக வருகின்றானோ! நானொன்று மறியேனென்றாள். அசுர னவற்றைக்கேட்டு ஓ பிராண நாயகியே! நீ யொன்று மறியே னென்பதுண்மையாயின் உன்னிட மிருந்த யசோதை போயன்றோ இவன் வருகின்றான். அவள் வராதிருப்பாளாயின் இவன் யாரோ வென்று நீ சொன்னது வுண்மைதான். அவளுக்குத் தெரிந்தவன் உனக்குத் தெரியாதவனா யிருப்பானா. இது விந்தையினும் விந்தையே! என்னுடைய தூதர்கள் உன்னுடைய தோழிதானழைத்துக் கொண்டு வருகின்றாளென்று சொல்லுகின்றார்களே! நீங்களிருவரும் மஹா சாமர்த்தியவதிகள் தான். என்னை யெதிர்த்து வருகிற சத்துரு எவ்வுலகினு மில்லை யென்றான்.

ஓ அரசனே! இவனிப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்போது சில தூதர்கள் ஓடிவந்து ஓ அசுரேந்திரனே! என்ன செய்கின்றீர். பகைவரிதோ வந்துவிட்டனரே! உமக்கு இவளிடத்தில் பேசுவதற்கே காலம் சரியாயிருக்கிறது. அவளும்மிடத்திற் பேசிக்கொண்டே காரியத்தில் கண்ணா யிருக்கின்றாள். நீர் புறப்படு மென்று தூதர் கடிந்து சொல்லவே அவன் அவளைச் சற்று விட்டிருப்பதற்கு மனந் துணிந்து ரதத்தின் மீதேறிச் சென்றான். இவன் வருகையைக்கண்ட ஏகவீரன் யசோவதியுடன் குதிரைமீதேறிக்கொண்டு எதிர்த்துவந்தான் இருவரும் இந்திரனும் விருத்திரனும் போர்புரிந்ததுபோல் போர்புரிந்தனர். இவ்விருவரது போரைத் தேவரெல்லாங்கண்டு இப்போர் எப்போருக் கிணையாகுமென்று அவர்களதிசயித்திருக்கும் போது ஏகவீரன்

காலகேது என்னும் அசுரனைக்கதையினால் நோக்கி ஓரடியடித்தான். அவ்வோரடியினாலேயே அவன் உயிரிழந்தவனாய்ப் பூமியில்வீழ்ந்து யமபுரஞ்சென்றனன். அசுரச்சேனைகளெல்லாம் போனவழி தெரியாமலோடிப்போயின. இவ்வற்புதத்தைக்கண்ட யசோதையானவள் இதுவன்றோ தேவியினது கருணையென்று வியந்து ஏகாவலியைப் பார்த்து ஓ என்னரசியே! பரமேஸ்வரியினுடைய கிருபையினால் உனக்கு வந்த ஆபத்து ஓரிமைப்பொழுதில் போனவழிதெரியாமற் போயிற்று. அந்த வசுரனைக்கொன்ற அரசனாகிய இம்மஹாபுண்ணியசாலி ஸ்ரீ ராமமூர்த்தியைப்போல் பிரகாசிக்கின்றான். அவன் உன்னைப்பார்க்க வேண்டுமென்கிற ஆவலுடையவனா யிருக்கின்றான். நான் இம்மஹாபுருஷனைக் கங்கைக்கரையில் பார்த்து இவனுடைய செய்தியெல்லாமறிந்து உன்னுடைய கஷ்டத்தையும் உனது ரூபலாவண்ணிய விசேடங்களையுஞ் சொன்னேன். அவனதனைக் கேட்டு இந்த ராக்ஷசனுடைய கொடுஞ் செயலால் நீ படும்பாட்டையும் மன்மதனால் தனக்குண்டாகிய பெரும்பாட்டையும் எண்ணிப்பார்த்து மனம்பொறாதவனாய் வந்த ராக்ஷசப்போரை யொழித்து மன்மதன் போரை உன்னாலொழித்துக்கொள்ள எதிர் பார்க்கின்றான். உனதெண்ணம் எப்படியோ வென்றுசொல்லவும் அவள் ஓ தோழி! யவ்வனமுடைய ஸ்திரீ யவ்வனபுருஷனிடத்தில் போவதென்றால் நாணமல்லவோ! அதுவுனக்குத் தெரிந்ததுதானே. ஆயினும் இவ்வரசன் என்னுடைய கஷ்டத்தைப்போக்க இவ்வளவு தூரஞ்சிரமப்பட்டு வந்து இவ்வளவு பெரிய யுத்தத்தைச் செய்திருக்கும்போது அம்மஹானுபாவனை நான் திருப்திசெய்யாதிருப்பேனாயின் தேவிக்குச்சம்மதமாகுமா! ஆதலால் நாம்போகலாமென்று ஓர் பல்லக்கின்மே லேறிக்கொண்டு அவன் முன்னே போயினாள். அவன் இவள் வருகையைக்கண்டு சமீபத்தில்வந்து அவள் அழுக்கடைந்த சரீரத்தோடும் மாசேறியவாடையோடும் இருப்பதைப் பார்த்து மிகவும் மனவருத்த முடையவனாய் அவளைப்பார்த்து ஓ ரதிபோன்றவளே! யசோதையால் உன்னை மனத்தகத்தே நிர்மலமாய்க் காணப்பெற்ற நான் இப்போது வெளியில் இவ்வாறான அழுக்கடைந்த கோலத்துடன் காணப்பெற்றேனே இது எனது கண்கள் செய்த பாவமோ! நீ எவ்வாறிருந்தபோதிலும் என்னாசை உன்னைப்பார்ப்பதில் முற்பட்டுவந்து நிற்கின்றது. அதற்கு உனது திருமுகத்தைக்காட்டி அதனை யுன்வசமாக்கிக் கொள்வாய். அது என்னுள்ளடங்கத் தக்கதாகவில்லை. நானென் செய்வேனென்று வேண்டிநிற்ப, அவளும் இவனது வார்த்தைகளுக்கெல்லாம் புன்னகையோடுங் கூடியிருந்தனள். இருவரது குறிப்பையுங் கண்டயசோதை அவனைப்பார்த்து ஓ ஏகவீரனே! இந்த ஏகாவலியை இவள்

தந்தையுனக்கே கொடுப்பதாகச் சொல்லி யிருக்கின்றாராகையால் இவள் உன்னுடைய சுவாதீனமா யிருக்கத்தக்கவளே. ஆனால் இவளுடைய சல்லாபசுகம் உனக்குக் கிடைப்பதற்கு இன்னுஞ்சிறிது போது பொறுத்திருக்கவேண்டும். நீங்களிருவரும் இனி கவலை கொள்ளாதீர்கள். ஓ அரசனே! இவளை யழைத்துக் கொண்டுபோய் தந்தையிடஞ் சேர்த்து விடுவையாயின் அவர் உடனே விவாகத்தைச் செய்து முடிப்பாரென்று சொல்லவும், ஏகவீரன் அவளது வாய்மொழியை வாய்மையென வெண்ணி இருவரையும் அழைத்துக்கொண்டு சகல சேனைகளுடன் அவள் தந்தையிடம் போவதற்குப்பிராயாணப்பட்டு வரும்போது இவர்களது வருகையை அவன் கேள்வியுற்று ஆச்சரியமுஞ் சந்தோஷமுமடைந்து மந்திரி முதலாயினாருடன் சகல வாத்தியங்களுங் கோஷித்துக்கொண்டுவர எதிர்கொண்டுபோய்த் தனது புத்திரி அழுக்கடைந்த வாடையுடன் வாட்டமுற்றுவருங் கோலத்தைக்கண்டு மனம் புழுங்கி யசோதையைக் கேட்டு அவளால் எல்லாச் சங்கதிகளுந் தெரிந்துகொண்டு மனப்புழுக்கமாறி ஏகவீரனது ஒழுக்கத்தை நாடி அவனை முன்னும் தன் மகளைப் பின்னுமாக விசாரித்து அன்புபாராட்டி நீங்களிருவரும் சுகமாக வாழக்கடவீர்களென்று தன்னரண்மனைக்கு அழைத்துக் கொண்டுபோய்க் கொலுமண்டபத்தி லிருக்கச்செய்து யாவரையும் பார்த்து, ஓ மந்திரிகளே! நமது அருமந்த செல்வியை நாமனைவருங் கண்டு களிக்குமாறு செய்வித்த இம் மகாபுருஷனைக் காட்டிலும் நமக்கு எவன் மருமகனாக வருவான்? ஆகையால் நமது பெண்ணை இந்த ஏகவீரனுக்குக் கலியாணஞ் செய்துகொடுக்க வேண்டுமென்று சொல்லி அப்பொழுதே விவாகத்தையும் நடத்தி வேண்டிய ஸ்ரீ தனங்களையுங்கொடுத்துத் தன் பெண்ணோடு யசோ தையையுங் கூட்டி அவனுடனனுப்பினான். அந்த ஏகவீரனும் மன மகிழ்ந்தவனாய் யசோதையுடன் தனது பத்தினியையும் அழைத்துக் கொண்டுபோய்ச் சுகமாய் வாழ்ந்திருந்து பின்னர் கிருதவீரிய னென்னும் ஓர் புத்திரனையும் பெற்று மகிழ்ந்திருந்தனன். அவனுக்குப் பிறந்தவன் கார்த்தவீரியன். ஓ அரசனே! கார்த்தவீரியனுடைய வம்சமும் இதனாலறியக்கடவாய்.

இருபத்துமூன்றாம் அத்தியாயம்

ஏகவீரஸ்ய காலகேதுநா ஸஹயுத்தம் முற்றிற்று.

———

சுலோகம் - (ருசாஏ.)

ஆஉ அத்தியாயம் இருபத்துமூன்றுக்குச்சுலோகம் (கசுகஙஏ)

———

உ

ஈஹாவிரஹிதாயைநம:

இருபத்துநான்காம் அத்தியாயம்

வியாசநாரதசம்வாதகதனம்

சூதர் கூறுகின்றார். ஜனமேஜயன் ஹைஹயர்களுடைய வம்சோற்பத்தியைக்கேட்டு ஆச்சரியமடைந்தவனாய், வியாசரை நோக்கி, ஓ சர்வஜ்ஞரே! இப்போது நீர் சொல்லிவந்த சரிதம் மிக்க ஆச்சரியகரமாயிருக்கின்றது. லோகபாலகராகிய விஷ்ணுமூர்த்தி யானவர் வனத்தில் குதிரை யுருவங்கொண்டுவந்து லக்ஷமியோடு கூடினாரென்பது எனக்குமிகவும் வியப்பைத்தருகின்றது அதனுண்மையை எனக்கு விளங்கும்வண்ணஞ் சொல்லப் பிரார்த்திக்கின்றேனென்று கேட்க, வியாசமுநிவர் ஓ அரசனே! நான் நாரதமுநிவரிடத்தில் இவ்வுண்மையைக் கேட்டிருக்கின்றேன்; அதனைக்கேட்பாயாக. திரிலோகசஞ்சாரியாயும் வீணாகானப்பிரியராயும் யாவர்க்குமின்ப மளிப்பவராயுமுள்ள நாரதமுநிவர் ஓர்சமயம் என்னுடைய ஆச்சிரமத்துக்குவர, அவரை நான்கண்டு அடிபணிந்து ஆசனமளித்து அதிலிருக்கச்செய்து அர்க்கியபாத்திய ஆசமனாதிகள்தந்து மிக்க விநயத்துடன் நீ எண்ணியவாறு நானுமெண்ணி அந்நாரதமுநிவரைநோக்கி ஐயா! சாரமில்லாததாகிய இச்சம்சாரத்தில் பிராணிகளுக்கு என்னசுகமிருக்கின்றது? நன்றாய் நீர்பரியாலோசனைசெய்துபாரும். எப்பொழுதும், எவ்விடத்திலும், எவனிடத்திலும் சுகமிருக்க நானறிந்தேனில்லை. நானே ஓர் த்வீபத்திற் பிறந்து அந்த க்ஷணத்திலேயே பாதுகாக்கத் தக்க தாயினாலும் விடப்பட்டு, யாதொரு சகாயமு மில்லாமல் கர்மவசத்தால் ஆரண்யத்தில் விர்த்தியடைந்து, பின்னர் மேருபர்வதத்துக்குப்போய் புத்திராபேக்ஷையினால் பரமேஸ்வரனை நோக்கி அதி உக்கிரமான தவத்தைச் செய்து, அவரருளால் சுகனென்கிற ஒரு புத்திரனைப் பெற்று அவனுக்கு வேதசாரங்களை யெல்லாங் கற்பித்து வருங்காலத்தில் அவன் என்னைவிட்டு ஓடிப்போயினான். பின்னர் நான் அப்புத்திரசோபத்தால் வருத்தமுற்று எங்குந் திரிந் தலையுங்காலத்தில் நீரும் சில நல்லுபதேசங்களைச் செய்து போயினீர். நானவ்வுப தேசங்களாலும் புத்திரசோபம் நீங்கப்பெறாது ஏக்கமுடையவனாய் மேருபருப்பதத்தையுந் தவத்தையும் விட்டு குருஜாங்கலம் என்னுந்

தேசத்தையடைந்து அங்கும் எப்பொழுதும் சுகனே! சுகனேயென்று புத்திரனைக் கூவிக்கூவி யலைந்தலைந்து இனி இச்சம்சாரத்திலென்ன சுகமிருக்கின்றதென வெறுத்து இப்பிரபஞ்ச வாழ்க்கையைப் பொய்யென வெண்ணியிருக்கு மச்சமயத்தில், மாதாவைப் பார்க்கவேண்டுமென்றெண்ண முண்டாக அவளிருக்குமிடத்தைத் தேடிச் சென்றேன். அவளோ சந்தநுமகா ராஜாவினால் வரிக்கப்பட்டுப் புத்திரப் பேறுண்டா யிருப்பதறிந்து அவளிடத்திற் போவதை விட்டு சரஸ்வதி தீரத்தில் ஓர் ஆச்சிரமங் கட்டிக்கொண்டு வசித்திருக்குங் காலத்தில் என்தாய்க்குப் பர்த்தாவான சந்தநுமகாராசன் சொர்க்கத்தையடைந்துபோக அவளும் அவளுடைய இரண்டுபிள்ளைகளும் காங்கேயனால் காக்கப்பட்டு, பின்னர் அக்காங்கேயன் சித்திராங்கதனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்து அரசியலை நடத்திவரச்செய்தனன். அப்பொழுது என்தாய் மகிழ்ந்திருந்தாள். அவனுஞ் சின்னாள்கழித்துச் சொர்க்கத்தை யடைந்தனன். பின்னரவ ளழுதவண்ணமாயிருந்தாள். அதனை நானறிந்து அவளைச் சமாதானஞ் செய்வதற்குப்போய் காங்கேயனையுங் கண்டு தாயாரைச் சமாதானப்படுத்தினேன். காங்கேயன் விசித்திரவீரியனுக்குப் பட்டாபிஷேகத்தோடு கலியாணமும் நடத்த அதுகண்டு நானும் என்தாயும் சுகமாக வாழ்ந்திருந்தோம். சின்னாள் கழித்து க்ஷயரோகத்தா லவனும் இறந்துபோயினான். பின்னர் அவன் பத்தினிமார்கள் மாமியாரைவணங்கி நாங்களினி யிங்கிருத்தல் கற்பிலக்கணமன்று; அக்கினிப்பிரவேசமாய் எங்கள் கணவருடன் சுவர்க்கத்தில் வசிக்கின்றோம்; எங்களுக்கு விடைகொடுக்க வேண்டுமென்றுவேண்ட அவளதற்குடன்படாது தடைசெய்து விசித்திரவீரயனுக்குச் செய்யவேண்டிய கருமாதி கிரியைகளைப் பீஷ்மருடன் கலந்து செய்துமுடித்தனள். நானும் என்னுடைய ஆஸ்ரமத்துக்கு வந்து விட்டேன். என் தாயானவள் புத்திரசோக மிகுதியினாலும் சந்ததியற்றுப்போன துக்கத்தினாலும் என்னை நினைத்தாள். நான் அந்த க்ஷணமே அவளிருக்கும் நாகசமென்னும் பட்டணத்துக்குப்போய் அவளைக்கண்டு வணங்கி, ஓ தாயே! எதற்காக இப்பொழுது என்னை நினைத்தாய்? என்னாலாகவேண்டிய காரியமென்ன? எனக்கு நீயே குருதெய்வமெல்லாமும். உன்னுடைய உத்திரவுக் கிரண்டாவதாக உனக்கடிமையாகயிருக்கிற நான் செய்யேனாகையால் எனக்குக் கட்டளையிடுமென்று கேட்க, அதற்கு என்தாய், அப்பா புத்திரனே! நீ சர்வசாஸ்திர தருமங்களையும் நன்றாயறிந்தவனாகையால் நான் சொல்லப்போகிற தருமத்தில் விளங்கும் உபகாரத்தை நன்றாயாலோசித்து என்னெண்ணத்தைப்

பூர்த்திசெய்வாய். இச்சந்தநு வம்சம் இதுவரையில் இந்தக் காங்கேயருடைய பீஷ்மத்தால் காக்கப்பட்டுவந்தது. இப்போது இந்தவம்சம் போகும்போலிருக்கின்றதே என்கிறவேக்கமும் பயமுமுடையவளாய் அவற்றைப்போக்கிக்கொள்வதற்கு உன்னை நினைத்தேன். நினைத்தபடி நீயும்வந்தாய். வந்த நீ வம்சவிர்த்தியைச் செய்துபோகவேண்டும். யான் வம்சச்சேதபயத்தால் வருத்தமடைகின்றேன். என்னை நீ ரக்ஷிக்கவேண்டும்; அதாவது விசித்திரவீரியனுடைய பத்தினிமாரிருவரையும் நீ கூடி வம்சோத்பாதனஞ்செய்வாயாக. ப்ராதாவினுடைய வம்சத்தைவிர்த்தி செய்வதனால் உனக்கு யாதொரு தோஷமு முண்டாகமாட்டா தென்றாள். இவ்வாறுகூறிய தாயின் வார்த்தையைக்கேட்டு நான் சிந்தாகுலமடைந்தவனாய் நாணத்தால் தலைகுனிந்துகொண்டே தாயை நோக்கி ஓ அன்னாய்! பிறருடைய ஸ்திரீயைக் கையினாற்றொடுவதே அதிகபாதகமென்று தெரிந்தயானே இந்த அதர்மகாரியத்தைச்செய்ய எப்படித்துணிவேன்? சகோதரனுடைய மனைவிபுத்திரியென்று சொல்லப்பட்டிருக்க, வேதங்களையெல்லாம் படித்த நான் இந்த விபசாரத்தை எப்படிச்செய்வேன்? அதர்மமார்க்கத்தில் வம்சத்தை விருத்திசெய்தால் வம்சவிருத்தியை எதிர்பார்த்திருக்கும் பிதுர்க்களெல்லாம் பாபிஷ்டர்களாய் நரகத்தையடைந்து அதினின்றும் எழுந்திருக்கமாட்டாமலிருப்பர் ஓ அம்மா! யாவருக்கும் தருமங்களை யுபதேசஞ் செய்கின்றவனாயும் தருமங்கள றிவதற்கே புராணங்களைச் செய்கின்றவனாயும் இருக்கின்ற நான் எப்படி இந்த நிந்தையான காரியத்தைச் செய்வேனென்றேன். இவையெல்லாங் கேட்டு வந்த தாயானவள் அப்போது நான் சொல்லிவந்த தருமாதருமங்களைச் சிறிதும் எண்ணிப்பாராமல் வம்சோத்பத்தியை எவ்வித்திலாவது செய்யவேண்டுமென்கிற ஓர் தருமத்தையே மேற்கொண்டு என்னைப்பார்த்து, அப்பா! குழந்தாய்! நீ சொல்லியவெல்லாஞ்சரியே யாயினும் என்னுடைய வார்த்தையினால் உனக்கு யாதொரு தோஷமுமுண்டாகமாட்டாது. பெரியோர்களென் றெண்ணத்தக்கவர் அதருமத்தைச் சொன்னபோதிலும் அதனையோசியாமல் மனிதர்கள் செய்யவேண்டுமென்றும், தாயானவள் எதுசெய்தால் சந்தோஷிப்பளோ அதைச் செய்யவேண்டுமென்றுந் தருமநூல் கூறியிருக்கின்றதல்லவா! அத்தருமங்களை நீ இப்போதெண்ணி புத்திரசோகத்தில் மூழ்கியிருக்கின்ற வென்னை நான் சொல்லியபடி செய்து சந்தோஷப்படுத்துவாயென்று அவள் சொல்லிமுடித்தவுடன் பீஷ்மன் என்னைப்பார்த்து, ஓ வியாசரே! நீர் இந்த விஷயத்தில் ஆலோசனை

செய்வதை விட்டுவிடும். "தாய்சொற் றுறந்தால் வாசகமில்லை" என்பதை நாடும்; நாடிச்செய்வீராயின் நீர் உலகில் அதர்மராக வழங்கப்பட மாட்டீரென்றான். பின்னர் நான் இருவர் வார்த்தையுங் கேட்டு அந்த நிந்திதமான காரியத்தைச் செய்ய வாரம்பித்து அந்தப்புரஞ் சென்று படுக்கையரையில் நானிருக்கும்போது அம்பிகை என்பவள் வந்து என்னைப்பார்த்து மனம் ரமிக்காதவளாய் அருவருப்படைந்தனள். அதனைக்கண்ட நான் அவளைப்பார்த்து, நீ என்னைக்கண்டு அருவருப் படைந்து கண்களை மூடிக்கொண்டபடியினால் உனக்குப் பிறக்கப்போகிற பிள்ளை அந்தகனாகவிருப்பானென்று சபித்தேன். அச்சாபத்துடன் அவளென்னைக்கூடிப்போயினள். மறுநாள் என்தாய் என்னை ரகசியமான ஸ்தானத்தில் லழைத்து அப்பா நல்ல புத்திரன் பிறக்கும்படியாக அனுக்கிரகஞ் செய்தனையாவென்றாள். நான் ஓ அம்மணி! நீ என்பால் அனுக்கிரகத்தை நினைக்க அது சாபமாய் முடிந்த தென்று நடந்த செய்திகளைச் சொன்னேன். அவளதைக்கேட்டு என்ன காரியஞ்செய்தாய்! எதற்காக நான் பிள்ளையை வேண்டியது? என்று வருந்திநிற்ப, நானும் அவள் வருத்தத்தைக்கண்டு வருத்தமுற்று ஏனிப்படிச் செய்தோமென் றெண்ணியிருந்தேன்.

இருபத்துநான்காம் அத்தியாயம்

வியாசநாரதசம்வாத கதனம் முற்றிற்று.

———

சுலோகம் - (சாசு.)

ஆஉ அத்தியாயம் இருபத்துநான்கிற்குச் சுலோகம் (கசுளசுஏ)

———

உ

ஈஸசக்தியைநம:

———

இருபத்தைந்தாம் அத்தியாயம்

திருதராஷ்டராத் யுத்பத்திகதனம்

———

வியாசர் கூறுகின்றார். ஓ ஜனமேஜயனே! எனது சகோதரன் மனையாட்டிகட்கு என்னால் நேரிட்ட சாபத்தை எனது தாயாகிய சத்தியவதிகேட்டு வருத்தமுற, நானும் அவளது துயரத்தைக்கண்டு துன்பமுற்றிருக்கும்போது, அவள் மீண்டும் மிகவும் பயந்தவளாய்

என்னைப் பார்த்து, ஓ புத்திரா! அம்பிகை என்பவள் பெறப்போகிற பிள்ளை குருடாயிருக்குமாதலால் அப்பிள்ளை அரசாட்சிக்கு யோக்கியனாகானே! நானென்செய்வேன். என்பா லன்புடையனாய் மறுபடியும் நீ இனி அம்பாலிகையோடுகூடி அரசாட்சிக்குரிய ஓர் சத்புத்திரனைப்பெற்று எனக்குக் கவுரவத்தைக் கொடுப்பாயென்று வேண்டினாள். நான் அவளது இரக்கத்துக்கஞ்சி அவள் சொல்லுக்குடன் பட்டு, அந்த அம்பாலிகை என்பவள் அம்மாதத்திலாகவேண்டியருதுகாலத்தை யெதிர்பார்த்துக்கொண்டு அஸ்தினாபுரத்திலிருந்தேன். பின்ன ரவள் ருதுஸ்நானஞ்செய்து நானிருக்கும் ஏகாந்தமான படுக்கை யறையில் மாமியார் உத்திரவின்படி வந்துசேர்ந்து என்னையும் என்னுடைய சடையையும் என்னுடைய பற்களையும் வற்றல்போலிருக்கும் உடம்பினையுங் கண்டு அருவருத்து வியர்த்து உடம்பை வெண்ணிறமாக்கிக்கொண்டு மனவருத்தத்தோடு என்னருகே வந்து நின்றனள். நானவளைப்பார்த்துக் கோபங்கொண்டு ஓ பெண்ணே! நீ என்னைப் பார்த்து உன்னுடம்பை வெண்மையாக்கிக் கொண்டபடியால் உனக்குப் பிறக்கப்போகிறபிள்ளை வெண்ணிறத்தோடு மிருப்பானென்று சபித்துப் பின்னரவளுடன் சுகித்து மறுநாள் என்னிடம்போய்ச் சேர்ந்தேன். பின்னர் இரண்டு பிள்ளைகளும் திருதராஷ்டிரனென்றும், பாண்டுராஜனென்றும் பிரசித்தி பெற்றிருந்தனர். என்தாயார் மாத்திரம் ஒருவன் குருடனாயும் ஒருவன் பாண்டுரோகனாயும் இருப்பதைப் பார்த்து திருப்தியடையாதவளாய், ஒரு வருடங்கழித்து என்னை வரவழைத்து, ஓ குழந்தாய்! உன்னாலுண்டாக்கப்பட்ட இரண்டு பிள்ளைகளும் அரசாட்சிக்குரியவர்களல்லர். மனோகரமான வேறொருபிள்ளையை நீ கொடுக்கவேண்டுமென்ன, நானப்படியே செய்கிறே னென்று சொல்லவும், அவள் மகிழ்ந்தவளாய்த் தன் மருமகளாகிய அம்பிகை என்பவளை வரவழைத்து ஓ பெண்ணே! நீ வியாசனிடத்தில் வெறுப்படையாமல் அவனைச் சந்துஷ்டனாக்கி அவனோடுகிரீடித்து அரசாட்சிக்கு யோக்கியமான ஒரு பிள்ளையைப் பெறுவாயென்று வேண்டிக்கொள்ளவே, அவள் நாணத்துடன் மறுமொழி யொன்றுஞ் சொல்லாமல் அவளிடம் விடைபெற்றுச்சென்று, தனதுநாயகன் தாதியொருத்தியையழைத்து, என்னிடம் வரவேண்டிய சங்கதிகளைச்சொல்லி அவளை ஆடையாபரணங்களால் அலங்கரித்து நறுமணங்கமழுங் பூக்களைச்சூட்டி சுகந்தங்களைப்பூசி ரதியும் நாணும் படியான கோலத்துடன் அனுப்பினாள். அவள் அதிக சந்தோஷத்துடன் நானிருக்கும் படுக்கையிடத்திற்குவந்து என்னைக்கண்டுமுக விலாசத்துடன் காமவிலாசத்தையுங்

காட்டித்தழுவி என்னை மதன நூலிற்பயில்வித்து இதுவே பரமானந்தமென மூழ்குவித்தனள். ஓ நாரதமுநிவரே! நானவ்வானந்தத்திற்றிளைத்து அவளைப்பார்த்து ஓ பூங்கொடி போன்றவளே! சர்வலக்ஷணங்களோடு கூடினவனாயும் சவுந்தர்யவானாயும் சகலதருமங்களுணர்ந்தவனாயும் சத்தியவாதியாயும் உள்ள ஓர் புத்திரன் உனக்குப் பிறப்பானென்று வரங்கொடுத்தேன். அவன்தான் விதுரனென்பவன். இந்த மூன்றுபிள்ளைகளும் சகோதரனுடைய பத்தினிகளிடத்தும் அவனுடைய தாதியினிடத்துமாகிய பர (அன்னிய) க்ஷேத்திரத்தில் பிறந்தவர்களாயிருந்தும் இவர்களிடத்தில் எனக்குண்டாகிய ஆசை தர்மபத்தினியிடத்தில் பிறந்த பிள்ளைகளிடத்திலுண்டாகும் ஆசையினுஞ் சிறந்திருந்தது. இவர்களால் சுகனில்லையே என்கிற ஏக்கத்தையு மறந்தேன். இதுமாயையின் செயலன்றோ. இம்மாயையை வெல்ல ஸ்வாதீன அறிவுள்ளவர்களாலு முடியாது. அதற்கோ உருவமுங்கிடையாது; இதமுங்கிடையாது. அது உருவமும் இடமுமில்லாமலே ஞானிகள் முதலாயினாரை மயக்குவதல்லது அதனை மயக்கும் ஞானிகளொருவருங் கிடையாது. ஓ திரிசீலாகஞ்சாரியே! அதன் விலாசத்தை நானென்னென்று சொல்லுவேன். சம்சார பரதரகிதனாயிருந்த நான் அது முதல் தாயாரென்றும் பிள்ளைகளென்றும் பந்தமுண்டாய் அடிக்கடியம் அஸ்தினாபுரத்திற்கு வருவதும் சரஸ்வதிக்குப்போவதுமாய் ஊசலைப்போ லென்மனமுழல் ஓரிடத்தில் நிலையாயிராமல் அலைந்து கொண்டேயிருந்தேன். அதுமாத்திரமா! ஒருவேளையில் நமக்கேனிந்தபந்தமென்று பந்தமற்றுத் தெளிவடைந்தும் ஒருசமயத்தில் நாமிறந்து போவோமாயின் நமக்குச்சிராத்தாதி கருமங்கள் செயதற்குரிய பிள்ளைகளிவர்களாகாரே இவர்களிடத்தில் நாமேன் ஆசைவைத்து மூலவேண்டுமென்று வெறுப்படைந்தும், ஒருசமயத்தில் வெறுப்படைந்திருக்கும் நம்மிடத்தில் பந்தத்தையுண்டுபண்ணுகின்றது எதுவோ அதுவல்லவோ மாயை; அந்த மாயையைவெல்ல வேண்டுமென்றும், நாம் அன்னியாயமாய் மோகமாகிய பாழ்ங்கிணற்றில் வீழ்ந்து விட்டோமே என்றும் என்னுள்ளத்துள்ளே நினைப்பேன். இவ்வாறு நினைக்கத்தக்க நினைவுடன் கூடியிருக்கின்ற நான் பாண்டுவுக்கு ராஜ்ய பட்டாபிஷேகமானவுடன் ஆஹா! நமது பிள்ளைக்குப் பட்டாபிஷேகமாய்விட்டதேயென்று மகிழ்ந்தேன். பின்னர் அவன் குந்தி மாத்திரி என்கிற இரண்டு ஸ்திரீகளை விவாகஞ் செய்துகொண்டு சில நாள் நகரத்தில் வசித்துப் பின்னர் பிராஹ்மண சாபத்தால் ஆரண்யத்தில் வசிக்கப்பெற்று ஸ்திரீகளுடைய சல்லாப

சுகமற்றிருந்ததைக் கேள்வியுற்று வருத்தமுற் றவனிடத்திற்போய் அவனுக்குவேண்டிய சமாதானங்களைச் சொல்லிவிட்டு அஸ்தினாபுரத்துக்குப் போய் திருதராஷ்டினைக்கண்டு அவனுக்குஞ் சொல்லவேண்டியவைகளைச் சொல்லிப் பழையபடி என்னுடைய ஆஸ்ரமம்வந்து சேர்ந்தேன்.

ஓ நாரதமுநிவரே! தவசியாயிருந்தும் "தவஞ்செய்வார் தங்கரு மஞ்செய்வார்" என்றபடி நான் தவத்தைச்செய்யாமல், ஆசையுட்பட்டு அலைந்து திரிந்து செயலெல்லாங் கூறுகின்றேன்; கேட்பீராக. வனவாசஞ் செய்துகொண்டிருந்த பாண்டுபுத்திரனானவன் மகப்பேறு வேண்டித்தன் மனையாட்டிகளாகிய குந்தியையும் மாத்திரியையுமழைத்து நீங்களிருவரும் இயமன் வாயு இந்திரன் அஸ்வினி தேவதைகள் என்கிற இந்த ஐவர்களால் நன்மக்களைப் பெறக்கடவீர்களென்று அநுஞ்ஞைதர அவர்கள் அப்படியே அந்த ஐவரால் தருமன் வீமன் அருச்சுனன் நகுலன் சகாதேவன் என்கிற ஐவர்களையும் பெற்று வாழ்ந்துவர, பின்னர் ஓர்நாள் அப்பாண்டுவானவன் தனக்குள்ள சாபம் தானறிந்தவனாயிருந்தும் மாத்திரியினிடத்தில் சம்போகஞ்செய்து அவனிறந்து போயினன். அதனைக்கண்ட அவ்விரண்டு ஸ்திரீகளும் அக்னிப் பிரவேசமாவதற்குத் துணிய, அங்குள்ள பெரியோர்கள் அதனைக்கண்டு தடுக்கும்போது குந்தி தேவி ஒருவாறு தடைபட்டு நிற்க, மாத்திரி தடைபடாமல் அக்னியிற்பிறவேசமாயினள். பின்னர் குந்தி ஐந்துபிள்ளைகளையும் வைத்துக்கொண்டு ஏக்கமுற்றிருக்கும் போது சில முநிவர்கள் அவளை யழைத்துக் கொண்டு அஸ்தினாபுரம் போய் பீஷ்மரையும் விதுரரையுங்கண்டு ஐவர்களது வரலாற்றைச் சொல்லி அவர்களைக் காத்துவரும்படிகட்டளையிட்டனர். இச்செய்திகளை நான்கேட்டு அச்சுகதுக்கஞக்காளாய் பீஷ்மனிடத்தும் விதுரனிடத்துஞ்சென்று அவர்களைப் பாதுகாக்கவேண்டிய விஷயங்களைப் பற்றியாலேசித்து அப்பாண்டுபுத்திரர்கள்க் காத்துவரும்படிச் செய்தேன். பின்னரப்பாண்டு புத்திரர்கள் துரியோதனாதியரால் பலகொடுமைக ளனுபவித்து வருவதைப் பீஷ்மன்கண்டு அவர்களைப் பிரியாமலிருந்து துரோணாசாரியரால் தனுர்வித்தையில் சமர்த்தராகும்படிச்செய்து வருநாளில் கர்னனுடைய பலத்தால் துரியோதனனுக்குச் செருக்குண்டாய் கலகமுதிர்ந்து துரியோதனாதியர்க்கும் வீமனுக்கு பகையதிகரித்துவருவதை திருதராஷ்டரனறிந்து இனி யிவர்களையொன்றாய் வாழும்படிச் செய்வோமாயின் பெருங்கலகம் விளையுமென்றஞ்சிப் பாண்டுபுத்திரர்களை வேறிடத்தில் வைத்தனன். அப்படிவைத்திருந்தும்

துரியோதனன் தீங்கானவெண்ண முடையனாதலால் அரக்கு மாளிகையொன்றமைத்து அதில் அவர்களை வைத்துத்தீயிட்டனன். அக்கொடுந்தொழிலைக்கேட்ட நான் அழுதுபுரண்டலறித் துக்கித்து துக்கம் இவ்வளவென்று சொல்லிமுடியாது. பின்னரவர்களைக்காண வேண்டுமென்று காடுகளெல்லாந் திரிந்துதிரிந்தலைந்து அவர்களைக் கண்டுபிடித்து ஏகசக்கிரநகரத்துக்கனுப்பி ஒருவாறு மனத்திருப்தி யடைந்து அதன்பின்னர் துருபதனுடைய பட்டணத்துக்கனுப்பினேன். பின்னரவர்கள் திரௌபதியினுடைய சுயம்வரத்தில் மிகவும் மெலிந்து வணக்கமுள்ளவர்களாயும் துக்கிதர்களாயும் பிராண வேடம் பூண்டு மான்றோலைத் தரித்தவர்களாயும் வந்து சேர்ந்தனர். அவர்கள் வேடத்தைக்கண்டு பெருந்துயரத்தையடைந்தேன். இது வென்ன பந்தமையா! அப்படித் துயரத்தோடிருக்கும்பொழுது அருச்சுனன் அச்சுயம்வரத்தைத் தன்னுடைய தாக்கிக்கொண்டு அந்தப் பாஞ்சாலியைத் தாயினுடைய ஆணையின்படி ஐவருக்கலியாணஞ் செய்து கொண்டமையைக் கண்டு ஆனந்திந்தேன். பின்னரவர்கள் பாஞ்சாலியுடன் அஸ்தினாபுரம் போயிருக்க, அதைவிட்டுத் திருதராஷ்டரனாலும் கிருஷ்ணபகவானாலும் காண்டவப்பிரஸ்தத்தில் வசிக்கும்படியாய் வந்தது. அதில் வசித்திருந்து பின்னரவ்விடத்தை அருச்சுனன் அக்கினிதேவனுக்குத் திருப்தியாக்கிவிட்டனன். அதன்பின்னர் தருமராஜன் ராஜசூயயாகஞ்செய்து பெரும் பட்டத்துடனிருக்க நானதைப்பார்த்து எனக்கே அப்பட்டம் வந்ததுபோலும் அதிக சந்தோஷமடைந்தேன். அப்பாண்டவர்கள் துரியோதனனுடைய பொறாமைச்செயலால் யாவுந்தோற்றுச் சகலசெல்வங்களையுமிழந்து திரௌபதிக்கு மானபங்கமும் வரப்பெற்று வனவாசமேகதியாய் வருந்தாநிற்ப, நானவையெல்லாங் கேட்டுப் பெருந்துக்கத்துக்காளாயினேன். ஓ நாரதபகவானே! சுகதுக்க சொரூபமான சம்சாரத்தினது அநாதிதர்மத்தை யானறிந்தவனாயிருந்தும் பிரமையினால் சுகதுக்கங்களில் மூழ்கிப்போய்விட்டேன். நான் யாருடைய பிள்ளை அவர்கள் யாருடைய பிள்ளைகள் தாய் யார் என்பது தெரிந்திருந்தும் என்மனது இரவும் பகலும் மோகத்தினால் சுழன்றுகொண்டு எங்கே போவேன் என்னசெய்வேனென்று எவ்வித்தானும் சந்தோஷம் சிறிதுமடையாமல் ஊஞ்சலிலேறி யாடுகின்றவன் போல் ஆடியடி அலைந்துழன்றதேன்றி ஸ்திரமா யொன்றினும் நின்றதின்று. ஓ முனிஸ்ரேஷ்டரே! நீர் சர்வக்ஞராயிருக்கின்றீர். இந்த மோகத்திற்குக் காரணமென்னையோ! அதனையெனக்குச் சொல்லிச் சந்தேகத்தை நிவிர்த்தித்து நானெப்படி

மனவருத்தமின்றிச் சுகமாயிருப்பேனோ அப்படிச் செய்யமென்று விண்ணப்பஞ்செய்தேன்.

இருபத்தைந்தாம் அத்தியாயம்

த்ருதராஷ்ட்ராத்யுத்பத்திகதனம் முற்றிற்று.

———

சுலோகம் - (சாஙு)

ஆஉ அத்தியாயம் உரு - க்குச் சுலோகம் (கருஙளஏ.)

———

உ

ஈஷஸ்த்மிதாநநாயைநம:

———

இருபத்தாறாம் அத்தியாயம்

* வியாசாயநாரதோகதஸ்வ மோஹமஹாத்மியம்.

———

சூதர் கூறுகின்றார் - வியாசர் ஜனமேஜயனை நோக்கி, ஓ அரசனே! நாரதமுனிவர் மோககாரணத்தைக் கேட்கிற என் வார்த்தை களையெல்லாங்கேட்டுச் சிரித்துச்சொல்லுகிறார். ஓ வியாசரே! புராணமெல்லாஞ் செய்தவரே! நீர் என்னை கேட்கின்றீர்? இச்சம் சாரத்தில் மோகமில்லாத மனிதனுமுண்டோ? பிரமனாதியரும் சனகர் கபிலர் முதலாயினாரும் மாயையினால் சூழப்பட்ட வர்களாய்ச் சம்சாரமார்க்கத்திற் றிரிகிறார்களென்று சொன்னால் ஏனையரைச் சொல்லவும் வேண்டுமா? அவர்களெல்லா மங்ஙனமிருக்க, உலகிலென்னைக் கியானியாக அறிந்துகொண்டிருக் கின்றார்களே அவர் களறிந்தவண்ணம் நானிருக்கின்றேனா? இல்லையே. நானெல்லாரைப் போலுமே மோகமடைந் திருக்கின்றவன் றானேன்றி வேறில்லை. ஓ வியாசரே! நான் பூர்வம் ஸ்திரீதேகமடைந்து ஓரரசனுக்கு மனைவியாய் மோகத்தினா லனுபவித்து பெருந் துக்கமான விருத்தாந்தத்தைச் சொல்லுகிறேன் கேட்பீராக.

ஓர்காலத்தில் நானும் பர்வதமகாமுனியும் தேவலோகத்தி லிருந்து பூலோகத்துக்குவந்து பூ பிரதக்ஷணஞ் செய்து உத்தமமான பரதக்கண்டம்

* வியாசருக்கு நாரதர் சொல்லுகிற கன்மோநமகிமை.

வந்தடைந்து ஆங்காங்குள்ள புண்ணிய தீர்த்தங்களையும் புண்ணிய க்ஷேத்திரங்களையும் முனிவராச்சிரமங்களையுங் கண்டுகளித் துலாவிவந்தோம். ஓ வியாசரே! நாங்கள் பூலோகத்துக்கு வரும்போது பரஸ்பரம் ஒருவருக்கொருவர் ஓர் சங்கேதஞ்செய்து கொண்டு புறப்பட்டோம். அஃதென்னை யெனின் நம்மிருவருக்குள் எந்தெந்தவிடத்தில் யாருக்கு எப்படியெப்படி மனோவிருத்தி யுண்டாகிறதோ அதைமறைக்காமல் சொல்லி விடவேண்டும். அதுநல்லதாயினும் கெட்டதாயினும் மறைக்கக்கூடாது. அன்றியும் போஜனம் தனம் ஸ்திரீ என்னு மிவ்விஷயங்களில் யாருக்கு எப்படி மனதுண்டாகிறதோ அதையும்ப்படியே ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ள வேண்டுமென்று சபதபூர்வகமாய்ச் சங்கேதஞ்செய்து கொண்டோம். செய்து கொண்டபடியே ஒரே மனமுள்ளவர்களா யிஷ்டப்படி எங்குந் திரிந்து வரும்போது கிரீஷ்ம காலத்தின் முடிவுவரவே சஞ்சய மென்கிற பட்டணம் வந்து சேர்ந்து அந்நகரத்தரசனால் நாங்கள் கவுரவத்தோடுப் பக்தியோடும் பூஜிக்கப் பட்டவர்களாய் அவனுடைய வீட்டில் நான்குமாச மிருந்தோம். ஏனெனில் நான் குமாசமும் மழைக்கால மாகையால் வழிநடப்பவர்கட்கு மிகவும் வருத்தத்தை யுண்டாக்கும். ஆனதுபற்றியே அறிவுள்ளவர்கள் அந்நான்குமாதமும் ஓரேவிடத்திலிருந்து ஏனைய எட்டுமாசங்களில் காரியார்த்தமாய்த்திரிவர். வெளியில் சுகத்தைக் கோறுகிறவர் மழைக்காலத்தில் பிரயாணஞ் செய்யக்கூடாது. ஆனதால் நாங்கள் அரசன்வீட்டில் வாசஞ்செய்து வந்தோம். அந்த மஹாராஜனோ பிரதிதினமும் எங்களுக்குப் பிக்ஷையென்கிற மரியாதையில்லாமல் விருந்தென்கிற மரியாதையில் போஜனத்தை நடத்தி வந்தனன். அதுவுமன்றி தமயந்தியென்று பிரசித்திபெற்ற தன் மகளையும் எங்களுக்குப் பரிசாரகஞ்செய்ய வேற்படுத்தினான். மிக்க அழகான தந்தவரிசையும் சுந்தரத்தையும் நல்லவிவேகத்தையும் பரந்த கண்களையுமுடைய அந்தராஜ புத்திரியும் எங்களிருவருக்குஞ் செய்யவேண்டிய பணிகளில் எந்தச்சமயத்திலு முயற்சியோடிருப்பது மன்றி ஸ்தானகாலங்களில் வேண்டியவரையில் சுத்தமான தீர்த்தமும் போஜனசமயத்தில் இஷ்டமான போஜனமும் அதுமுடிந்த பின்னர் தாம்பூலமும் இவற்றினிடையே வேண்டுவனவுங் கொடுத்துக் கொண்டு வருவள். இவையன்றி நாங்கள் கேட்பதற்குக் கூடாமல் மனதால் விரும்பப் படுவவனவாகிய ஆசனம் சயன முதலானவற்றைத் தானே குறிப்பாலறிந்து அவைகளை யமைப்பாள். இவ்வண்ணம் அவளுடைய பணிவிடையின் சுகத்தால் அங்குநாங்கள் ஆவலுள்ளரார்களாய் வசித்திருக்கும்போது நான் வீணையைக் கையிலெடுத்துச்

சாதனநிமித்தம் உத்தமமான ஸ்வரத்தை ஆல்லாபனஞ்செய்து கொண்டுமனதுக்கினிய சாமகானத்தைப் பாடிவருவேன். அச்சமயங்களில் ராஜபுத்திரி மனோகரமான அக்கானத்தைக்கேட்டு வருவதனால் என்னிடம் மிகவும் ஆவலுள்ளவளாயினாள். எனக்கும் அப்பெண்ணிடத்தில் மிக்க பிரீதியுண்டாய்த் தினேதினே எங்களிருவருக்கும் உண்டாகிய ஆசைவிருத்தியாயிற்று. அதனாலவள் போஜனமுதலிய சகல காரியங்களிலும் என்னிடத்தி லதிகப்பிரீதியாய் விசாரிப்பதும் என்னுடனிருக்கும் பர்வதமுனியைச் சாமானியமாய் விசாரிப்பதுமாயிருந்தனள். இந்தப் பேதவுபசாரமும் தினேதினே விருத்தியடைந்து என்னுடைய ஸ்நானத்துக்கு வெந்நீரும் அவருக்குக் குளிர்ந்தசலமும் எனக்குத்தயிரும் அவருக்குமோரும் இப்படியே உண்பனவற்றிலும் உடுப்பனவற்றிலும் ஏனைய பணிகளிலும் வேறுபாடே செய்து வருவதோடு எனக்குரிய படுக்கையை மிக வெண்மையாயும் மிருது வாயுமுள்ளதைப் போடுவாள் அப்படிப்பட்டதை அவருக்குப் போடமாட்டாள் என்னைச் சந்தோஷமாயும் அவரை வெறுப்பாயும் பார்ப்பாள். இவ்வாறு இவள்செய்யும் பேதத்தால் பர்வதமகாமுனி இவனிப்படி நடத்துவதற்குக் காரணமென்னையென்று ஆச்சரியத்தோடு மனதில் சிந்தித்து என்னை ரகசியமாயழைத்து, ஓ நாரதமுனியே! இந்த ராஜபுத்திரி உன்னிடமெப்பொழுதும் பிரீதியுடன் வேலை செய்கின்றதுமன்றி உனக்கு வேண்டிய போஜனமும் பக்ஷியமும் நீ வேண்டாமென்று தடுத்தாலும் வேண்டிவேண்டி யுண்பிகிகறாள். நானோ வேண்டுவதுமில்லை வேண்டினாலும் அவள் கொடுப்பதுமில்லை. உன்னிடத்தில் அப்படியும் என்னிடத்தி லிப்படியுமா யிருப்பதற்குக் காரணந் தெரியாமையா லெனக்குச் சந்தேகத்தை விளைவிக்கின்றது. இதனால் இந்த ராஜபுத்திரி உன்னைப் பர்த்தாவாகச் செய்து கொள்ள இச்சிக்கிறாளென்றும் நீயும்ப்படியே அபிப்பிராயப்பட்டிருக்கிறாயென்றும் உங்களிருவரிடத்து முண்டாயிருக்குங் கண்செய்கைகலாலும் முகக்குறிப்புகளாலும் நானறிகின்றேன். உள்ளே நிகழுமெண்ணத்தைக் கண்ணும் முகமுங் குறிப்பினால் உணர்த்துமன்றோ ? ஓ நாரதமுனியே! நாம்புறப்படும்போது இருவருஞ்செய்துகொண்ட சங்கேத்தை நினைத்துபொய்மையை யொழித்துண்மையைக் கூறுவாயாகவென்றார். இவ்வாறு அவரென்னைப் பலாத்காரமாயழைத்துக் கேட்டபடியினால் நான் வெட்கப்பட்டுக் கொண்டு ஓ பர்வதமுனியே! நீர் சொல்லியபடியே இருவருக்கும் ஆசையுண்டாயிருப்பதிற் றடையில்லை. அது வுண்மைதானென்று சொன்னேன். அவர் கோபங்கொண்டவராய் ஓ நாரதரே! முதலாவது

நாம் செய்து கொண்ட சபதப்படியுனக்குண்டாகிய இச்சையையேன் சொல்லிதிருந்தாய்? இரண்டாவது என்னைவெறுத்திருக்கும் அவளை நீ வெறுக்காது மோகங்கொண்டிருக்கின்றாய். இவ்விரண்டுந் துரோகமான செயலாதலா லுன்னைப்போலுந் துரோகியொருவனுண்டா! சீசீ!! இனி உன் முகம் குரங்குமுகமாகப் போகக்கடவதென்று சபிக்க, நான் அக்கணமே அம்முகத்தைப்பெற்றேன். பின்னர் நானும் அவரை உடன் பிறந்தாள் பிள்ளையென் றெண்ணாது அதிககோபத்தோடு மூடாத் மாவாகிய நீ சொற்பகுற்றத்திற்காகச் சபித்தபடியால் உனக்குச் சொர்க்கத்தில் வாசமில்லாமல் மிருத்யுலோகத்தில் வாசமுண்டாகக் கடவதென்று சபித்தேன்.

அச்சாப்தத்தைக் கேட்ட முனிவர் மனவருத்தத்துடன் அப்பட்டணத்தை விட்டுப்போயினர். எனது விணாகானத்தைக் கேட்டுவந்த அந்த ராஜபுத்திரி எனது முகம் வானர முகமானதைப் பார்த்து மிகவும் மனவருத்தமுற்றனளென்று நாரதர்கூற, வியசர் ஓ பிரம சொரூபியே! பின்னர் நீரெப்படி அச்சாபத்தினின்றும் விடுபட்டு மனிதமுகமுள்ளவரானீர்? உம்மைச் சபித்துப்போன அந்தப் பர்வதமுனிவ ரெவ்விடம்போனார்? உங்களிருவருக்கு மண்டுமெவ்வாறு சிநேக முண்டாயிற்று? இவையனைத்தும் விரிவாய்க்கூறி யருளவேண்டுமென்று கேட்க நாரதர் ஓ மஹாநுபாவரே! இச்சரித்திரம் மிகவும் பெரிதானபடியால் அவ்வளவையு மெவ்வாறு சொல்வேன். பர்வதமுனி போனபின் ராஜபுத்திரி முன்போல் பணிவிடை புரிபவளாகவே யிருக்க, நான் நாணத்தால் மிக்க துன்பமுள்ளவனாய் விசாரப்பட்டுக் கொண்டு நமக்கெந்தகதி கிடைக்குமோ வென்று சிந்தித்திருக்குஞ் சமயத்தில், சஞ்சய மகாராஜன் புத்திரிக்கு விவாகத்திற்குரிய பருவம் வந்திருப்பதையறிந்து மந்திரிகளை நோக்கி ஓ மந்திரிகளே! என்புத்திரிக்கு விவாக்காலஞ் சமீபித்து விட்டபடியால் அவளுக்குத் தகுந்தவழகுள்ளவனாயும் யாவருக்குஞ் சம்மதப் பட்டவனாயும் அவுதாரிய முதலான சத்குணங்களோடு கூடினவனாயும் மகாசூரனாயும் நற்குலத்திற் பிறந்தவனாயுமிருக்கிற ராஜபுத்திரனொருவனைக் குறிப்பிப்பீர்களாயின் அவனை என் புத்திரிக்கு விதிப்படி மணம்புரிவிக்கின்றேனென்ன, மந்திரிகள் ஓ அரசனே! உன்புத்திரிக்குத் தகுந்த சகலநற்குணமுள்ள அநேக ராஜபுத்திரர்களிருக்கின்றனர். அவருள் ரிசி என்னும் ராஜபுத்திரன் சிறந்தவனாயிருக்கின்ற படியால் அவனை வரவழைத்து யானை குதிரை முதலான் வரிசையுடன் பெண்ணைக் கொடுக்கலா மென்றுகூறினர். இச்செய்தியை தமயந்தி யறிந்து சகியொருத்தியை யழைத்து ஓசகியே! நீ தனியேயிருக்கு மென்றந்தை யிடஞ்சென்று

உன்புத்திரி மகதியென்னும் வீணையில் வல்லவரும் அறிவிற் சிறந்தவருமான நாரத மகாமுனிவர்பால் வீணாகானத்தை நாடோறுங்கேட்டு வந்த வாசை மிகுதியால் அவரையே நாயகனாகக் கொள்ளவேண்டுமென்று முன்னமே யெண்ணி யிருக்கின்றவளாகக் காணப்படுகின்றமையால் அவள் வேறொருவரைப் பர்த்தாவாகக் கொள்ளா மென்பது நிச்சயம். இனி நீர் அவளிஷ்டப்படி அம்முனிவருக்கே விவாகஞ் செய்துவைப்பதே தருமமாகும். ஓ தருமமறிந்தவரே! அவள் முதலையோடு திமிங்கலமாதி நீர்வாழுயிர்களும் உப்பென்பது மில்லாமல் ஸ்வரபேதங்களுடன் இராகமென்னுஞ்சுவையோடுகூடிய சுகமென்னுந் தண்ணீரால் நிறைந்தோங்கி யிருக்கின்ற வீணாநாதமாகிற சமுத்திரத்தில் மூழ்கியிருக்கின்றாளாதலால் அக்கடலுக்கு அதிதேவதையாயிருக்கின்ற நாரதரைவிட்டு யாவரை நாயகனாரக் கொள்வாள். அதனை நீரே யாலோசித்து அவளிஷ்டப்படி விவாகத்தை நடத்துமென்று சொல்லிவருவா யென்றனுப்பினாள்.

இருபத்தாறாம் அத்தியாயம்

வியாசாயநாரதோக்தஸ்வமோஹமஹாத்மியம் முற்றிற்று.

சுலோகம் - (௫௭)

ஆஉ அத்தியாயம் உ௬-க்கு சுலோகம் (௧௫௯௬௭)

உ

லகாரரூபாயை நம:

இருபத்தோழாம் அத்தியாயம்

நாரத விவாஹகதனம்.

சூதர் கூறுகின்றார். பின்னர் நாரதமுனிவர் வியாசரைப்பார்த்து ஓ முனிவரே! தமயந்தியின் நந்தையாகிய அரசன்தாதியினால். தனது புத்திரியின்பிப்பிராயத்தை யறிந்தவனாய்த் தன்னருகிலிருந்து தனது மனைவியைப் பார்த்து ஓ கைகையே! உனது புத்திரியின் சகி சொல்லிவந்த வார்த்தைகளைக் கேட்டனையா. நம்மிடம் வந்திருக்குங் குரங்குமுகமுள்ள நாரதமுனிவன் தான் தனக்கு நாயனாகவேண்டுமாம்.

உன்னுடைய புத்திரியின் புத்திவிசாலத்தை நானென்ன சொல்லுவேன் யோசித்துப்பார். அவளந்த குரங்குமுகனைவிரும்பினாலும் அவனுக்கு நானெப்படிக் கொடுப்பேன். குரூபியான அந்தப் பிச்சாண்டியெங்கே! என் புத்திரியாகிய இவளெங்கே! இந்த விபரீதமான காரியத்தை நானொருபோதுஞ் செய்யமாட்டேன். நீ அந்த நாரதமுனிவனிடத் திலாவலுள்ள உனது அருமந்தபுத்திரியை ஏகாந்தஸ்தானத்தி லழைத்துத் தனியே வைத்துக் கொண்டு சாந்தையாய் சாஸ்திரங்கட்கும் பெரியோர்கட்கும் ஒப்பாயுள்ள புத்தியை அவள் புத்தியிலமையச் சொல்லுவா யென்றனுப்ப அவளப்படியே தன்பெண்ணையழைத்து ஓ குணவதியான தமயந்தியே! சௌபாக்கியவதியாகிய உன்னழகெங்கே! குரங்குமுகமுள்ள தரித்திரனாகிய அம்முனிவனுடைய கோரமெங்கே! நீ கெட்டிச் காரியாயிருந்தும் பிச்சாண்டியினிட மெப்படி மோகமடைந்தாய். நீயோ கொடி போல் மிருதுவான தேகமுள்ளவள். அவனோசாம்பலால் பூசப்பட்டு வரண்டுபோன தேகமுள்ளவன். ஓரங்கதோஷமுமில்லாத பெண்ணானவள் குரங்குமுகனோடு எப்படித்தான் பேசுவாள். ஓ புன்னகையுள்ள பெண்ணே! உனக்குரிய ராஜபுத்திரளிருக்கக் குரூபியான அம்முனிவனிட முனக்கேன் பிரீதியுண்டாயிற்று? வீணாய் நீ அடஞ் செய்யாதே. உன் றந்தை நீ யனுப்பிய தாதியினால் உன்னெண்ணத் தையறிந்து துக்கமடைகிறார். நிலவேம்பின் மேல் முல்லைக்கொடிபடர்ந்திருந்தால் அதனைக்கண்டவர் அந்தோ! இக்கொடி இம்மரத்தில் படர்ந்திருக்கின்றதென்று மனவருத்தமடையாமற் போவரா? அது போல விவாககாலத்தில் உனது அழகிய கையை அந்தக் குரங்கு முகம் பிடித்துக்கொண்டு சேர்ந்துவருவானானால் அங்கு வந்திருப்பவரது மனமெப்படித்தான் தபிக்காது. மிருதுவாயும் இளைமையாயுமுள்ள வெற்றிலைகளை ஒட்டகந்தின்பதற்கு ஒருவன் தருவானா? அதுபோல உன்றந்தை உன்னை அம்முனிக்குக் கொடுக்கத் துணிவானா! நீதான் அந்தக் குரூபியோடு பேசத்துணிந்தாலும் உன் மனம் அருசியையடையாதா! அருவறுக்கத்தக்க அவனோடு நீ எவ்வண்ணம் மரணபரியந்தங் காலத்தைக் கழிப்பாயென்று சொல்ல, தாய் வார்த்தையைக் கேட்ட தமயந்தி சிறிதும் என்மேல் வெறுப்பில்லாதவளாய் என்னையே மனதில் நிச்சயஞ்செய்துகொண்டு தாயைப்பார்த்து ஓ தாயே! நீ சொல்லியவெல்லாஞ் சரியே. நானொன்று சொல்லுகிறேன். முகத்தினாலும் வடிவினாலும் தனத்தினாலுஞ் சிறந்திருப்பவன் மூடனாயிருந்தா லவனாலென்ன பிரயோசனம். யுத்த சாமர்த்தியமில்லாதவனுக்கு ராஜ்யத்தினா லென்ன பிரயோஜனம்? ஓ

தாயே! எல்லா வின்பத்திலுஞ் சிறந்தது செவிக்குரிமையாயுள்ள கான வின்பம். அவ்வின்பத்தைக் காட்டிலுள்ள பெண் மான்களும் விரும்பி அதனால் மோகிக்கப்பட்டவைகளாய் அந்தக் கானஞ் செய்கின்றவர்களையே பார்த்துப் பிராணனை விடுகின்றன. அந்த இசையாகியகானத்தை யறியாதவன் சிறந்த மானுடனாயிருந்தாலும் அவனைச் சுடவேண்டும். இசைமயமாயிருக்கின்ற எந்தக் கானவித்தையை நாரதரறிந்திருக்கின்றாரோ? அவ்வித்தையின் பிரபாவத்தை சிவன் தவிர மற்றொருவருமறியார். நீயும் முநிவனோடு மரணபரியந்தம் எப்படி வாழ்வாயென்று கேட்டனையன்றோ? மூடனோடு கூடிவாசஞ்செய்வது தான் க்ஷணத்துக்குக்ஷணம் மரண துக்கமாகுமேயன்றி அவரது சகவாசம் அப்படியாமா! மூடன் ரூபனானாலும் தனவானானாலும் அவனாலென்ன சுகமுண்டாகும்; அவனை யெப்பொழுதும் விட்டுவிட வேண்டும். யாதொரு குணமுமில்லாமல் வீணாய்க் கர்வங்கொள்ளுகிற மூடனான அரசனிடத்திலுண்டாகுஞ் சிநேகம் துக்கத்தைவிளைவிக்கு மாகையாலதனை நிந்தித்து குணமுடையவனான பிக்ஷாண்டியினிடத்தி லுண்டாகும் சிநேகம் சுகத்தைக் கொடுக்குமாகையால் அதனையே போற்ற வேண்டும். சர்வஜ்ஞனாயும் இந்திரியங்களின் வன்மையை யறிந்தவனாயும் மோஹம், அஞ்ஞானம் இவைகளைப் பேதித்தவனாயுமுள்ள மஹாபுருஷன் கிடைப்பதரிது. கங்காநதியும் சரஸ்வதிநதியும் தம்மையடுத்தவரை யெவ்வாறு கயிலையங்கிரியை யடைவிக்குமோ, அவ்வாறு ஸ்வரஜ்ஞானத்தில் சமர்த்தனாயிருக்கிறவன் தன்னையாஸ்ரயித்தவனைக் கயிலாயமடைவிக்கின்றான். ஸ்வரப்பிரமாணத்தை எவனறிகிறானோ அவன் மானுடனானாலும் தேவன் தான். அதனை எவனறிந்து கொள்ளவில்லையோ அவன் தேவராஜனாக விருந்தாலும் மிருகந்தான். மூற்சனாபேதத்தையும் தாள ஸ்வரமார்க்கத்தையுங் கேட்டு எவனானந்தமடையவில்லையோ அவனை மிருகமாக நினைக்கவேண்டுமேயன்றி அவ்வானந்தத்தை யடையவல்ல மான்கள் மிருகங்களல்ல. விஷத்தோடு கூடியிருக்குஞ் சாப்பம் செவியில்லாமலிருந்தும் மனோகரமான கானத்தைக் கேட்டானந்திக்கின்றது. இரண்டு செவிகளைப் படைத்த மானுடர் அதனைக் கேட்டுச் சந்தோஷமடைகிறதில்லை. அவர்களையன்றோ சுடவேண்டும். ஒன்றுமறியாத குழந்தைகளும் ஸ்வரத்தோடுகூடின பாடலைக்கேட்டு மகிழ்கின்றன. அக்குழந்தைகளைக் கண்டோரும் புகழ்கின்றனர். பெரியவர்களாகவிருந்த கானத்தையறியாமல் தம்மை எல்லா மறிந்தவராகவெண்ணி யறிந்தவர்களைக்கண்டு இகழ்கின்றனர். இங்ஙனமிருக்க, ஓ என்னன்னையே! நாரதருடைய அநேக

நற்குணங்களை என் தகப்பனார் ஏன் றெரிந்துகொள்ளாமலிருக்கின்றார். மூன்றுலோகங்களுக்குள் நாரதருக்குச் சமானமாய்ச் சாமகானம் பாலொருமுண்டோ அவரை யிகழ்ச்சியாகக் கூறாதீர்கள். அவர் சாபத்தினால் குரங்குமு மாவதற்குமுன்னரே நானவரைக் கணவராக நினைத்துவிட்டேன். நினைவால் நினைத்தவரை இப்பொழுது மாற்றலாமா; அது நீதியாமா; இசைஜ்ஞானத்திற சிறந்த கின்னரர்கள் குதிரைமுகமுடையவர்களா யிருந்தும் அவர்களைத் தேவராவது மற்றையாராவது வெறுக்கின்றார்களா; அவர்களையன்றோ யாவரும் விரும்புகின்றனர். ஆகலான் முகத்தினாலென்ன பிரயோசனம்.

ஓ தாயே! முனிவரை விரும்பினேனென்று என் தகப்பனார் வருந்துவதைவிட்டு என்னைச் சந்தோஷத்துடன் அந்த நாரதமஹா முனிவருக்கே கொடுக்கவேண்டுமென்று நீ சொல்லுவாயென்றாள். அவளது வார்த்தைகளைக் கேட்ட தாய் தனது பர்த்தாவினிடஞ் சென்று ஓ எந்நாயகனே! என் பெண்ணினுடைய அபிப்பிராயங்களை நன்றாயறிந்துகொண்டேன். அதுவிதிவசம் இனி நீர் அந்த நாரதமுனிவருக்கும் நமது பெண்ணுக்குஞ் சுபகரமான தினத்தில் விவாகஞ்செய்துவிடும். அம்முனிவரோ சர்வமுமறிந்தவராக விருக்கின்றார். நம்முடைய பெண்ணும் அவரை மனதால் வரித்துவிட்டாள். ஆனபடியால் அதைமாற்றுவது நமக்குத் தருமமல்லவென்று கூற, சஞ்சயராஜன் இருவருக்கும் விதிப்படி விவாகஞ்செய்துமுடித்தனன்.

விவாகமாகவேண்டுமென்றெண்ணி யேங்கியிருந்த நான் விவாகமான பின்னர் நமக்கே னிந்த விவாகமென்று பிரதிதினமுமெண்ணி யெண்ணி மனவருத்தத்துடன் அவ்விடத்திலேயே விசித்துக்கொண்டு எவ்வெப்பொழுது அந்தத் தமயந்தி எனக்கு வேலைசெய்ய வருகின்றாளோ அவ்வப் பொழுதெல்லாம் என்முகத்தைக் கோணி எண்ணாததெல்லா மெண்ணியேங்குவேன். அவள் மாத்திரம் என்னைப்பார்த்து மனவருத்தமடைவதில்லை. சிலகாலஞ்சென்ற பின்னர் அந்தப் பர்வதமகாமுனி அநேகதீர்த்தயாத்திரை செய்துகொண்டு என்னைப் பார்ப்பதற்காகவர, நானவரை மிக்க பிரீதியோடு எதிர் கொண்டழைத்துவந்து ஆசனத்திலிருத்தி விதிப்படி பூசித்துபசரித்து நிற்கும்பொழுது, அவரென்னைப் பார்த்துத்துக்கமடைந்தவராய் அந்தோ! நீ இந்த முகத்துடன் காட்டிலிருந்தால் துக்கமில்லை, ராஜபுத்திரியோடு கூடியிருப்பதென்றா லெவ்வளவுகஷ்டம், நானப்போது உன்மீது வந்தகோபத்தினா லிப்படிச்சபித்துவிட்டேன், இப்போது இந்த

ராஜபுத்திரியைப்பார்த்த போது எனக்குமிகவுமிரக்கமுண்டாயிற்று, ஆதலின் என்புண்ணியத்தினால் நீர் அழகான முகமுடைய வராயவாழ்வீரென் றனுக்கிரகஞ்செய்ய, அவ்வனுக்கிரகத்தைப் பெற்ற நானும் அவரைப்பார்த்து ஓ முனிவரே! என் மீது தயவு வைத்து எனது துக்கத்தைப்போக்கி நன்மையால் நீரும் என்னாலீடப்பட்ட சாபத்தினின்றும் விடுப்பட்டவரானீர், இனி நீர் சொர்க்கத்துக்கு இஷ்டப்படிப் போகலாமென்றேன். நானும் அவருக்கு முன்பாகவே இந்த வழகான நன்முகத்தைப் பெற்றேன். ராஜபுத்திரியும் என்னைப்பார்த்து மிக்க சந்தோஷமடைந்து தன் தாயினிடஞ்சென்று அம்மா! உன்மருமகப்பிள்ளை அந்தப் பர்வதமுனிவர தனுக்கிரகத்தால் இன்று சாபம் நீங்கி அழகான முகமுள்ளவராயினா ரென்றுகூற அரசி அதனைக்கேட்டு அரசனிடமறிவிக்க அவன் சந்துஷ்டி யடைந்தவனாய் மிகப்பிரீதியுடன் முனிவரைப் பார்த்து மகாசந்தோஷமடைந்து ஓ நாரதமகாமுனிவரே! இன்று தான் கவலை யொழிந்தவனானேன். இன்று தான்பெண்ணைப் பெற்றவனாயும் விவாகஞ்செய்தவனாயு மாயினேனென்று அப்பொழுதே எனக்கும் தன்பெண்ணுக்குஞ் செய்யவேண்டிய மரியாதைகளையெல்லாஞ் செய்து மகிழ்ந்தான்.

ஓ வியாசரே! எனக்கு மாயாபலத்தினால் எது எதுநேர்ந்ததோ அவையெல்லாஞ் சொன்னேன். ஐயா! மாயாகுணத்தால் நிர்மிக்கப்பட்ட பொய்யான இச்சமுசாரத்தில் சுகமுள்ள பிராணிகளுமுண்டோ! அப்படிப்பட்டவர்க ளிதுவரையிற் பிறந்ததுமில்லை. இனிப் பிறக்கப்போகிறதுமில்லை. காமம் குரோதம் லோபம் மாச்சரியம் மமதை அகங்காரமுதலிய இவையெல்லாம் மஹாபலமுள்ளவை. இவற்றை யாவரால் ஜயிக்கமுடியும்! ஜயித்தாரு முண்டோ! சத்வமுதலிய முக்குணங்களன்றோ தேகோற்பத்திக்குக் காரணமாகின்றன. ஓவியாசரே! என்னுடைய சரித்திரத்தில் இன்னுமொன்று சொல்லுகிறேன். அதனையுங்கேளும் ஒருசமயத்தில் விஷ்ணுவுடன் நான் காட்டிற்றிரிந்து கொண்டிருக்கும் போது விஷ்ணுமூர்த்தி வேடிக்கையாயென்னை ஒருக்ஷணத்தில் ஸ்திரீயாக்கிவிட்டார். பின்னர் நான் மாயாபலத்தினால் ஒரு அரசனுக்கு மனைவியாய் அநேக பிள்ளைகளப் பெற்றேனென்றார். அதனைக்கேட்ட வியாசர் ஓ சாந்த குணசீலரே! உம்முடைய வார்த்தையைக்கேட்க எனக்கோர்பெருஞ் சந்தேகந்தோன்றிற்று. மகாஞானியாயிருக்கும் நீர் எப்படி ஸ்திரீயாயினீர்? மறுபடி எப்படி புருஷராயினீர்? எப்படி அநேகபுத்திரர்கள் பிறந்தனர். எந்த அரசனுடைய வீட்டிலிருந்தீர்? இச்சரிதம் மிக அற்புதமாகவிருக்கின்றது. அதைச் சீக்கிரமாய்ச்சொல்லும் ஏனெனின்

ஓ நாரதரே உம்முடைய சரித்திரம் கேட்கக்கேட்க இன்னமுங்கேட்க வேண்டுமென்று ஆசைமேலிடுகின்றபடியால் யான் கேட்கின்றேன் சொல்லுமென்றார்.

இருபத்தேழாம் அத்தியாயம்
நாரதவிவாஹகதனம் முற்றிற்று.

———

சுலோகம் (௫சா)
ஆக அத்தியாயம் உஎ - க்குச் சுலோகம். (கசாரு0எ)

———

உ

லலிதாயை நம:

———

இருபத்தெட்டாம் அத்தியாயம்

* வியாசாய நாரதோக்தஸ்வ விருத்தாந்தம்.

————

சூதர் கூறுகின்றார். நாரதமகாமுனிவர் வியாசபகவானைப்பார்த்து ஓ முனி ஸ்ரேஷ்டரே! யோகநிலை யறிந்தவர்களான முநிவர்களும் மாயாபலத்தை யறிந்தவர்களல்ல. அதற்காகவே இச்சரிதத்தைச் சொல்லுகிறேன் கேளும். ஸ்தாவரசங்கம ரூபமாயிருக்கும் பிரமாதி ஸ்தம்பபரியந்தமான சகத்தெல்லாம் மாயையினால் மோகிக்கப் பட்டிருக்கிறது. இதுநிறக, ஒருகாலத்தில் நான் சத்தியலோகத்திலிருந்து மனோகரமான ஸ்வேததீபத்தில் விஷ்ணு மூர்த்தியைத் தெரிசனஞ் செய்வதற்குப்போய் மகதி என்னும் வீணையையெடுத்து இன்னிசையமைத்த சப்தஸ்வரத்தோடு பாடும்போது சங்கு சக்கரதரராகிய விஷ்ணுமூர்த்தி அச்சமயத்தில் சர்வ லக்ஷணத்தோடு கூடினவளாயும் சர்வபூஷணங்களா லலங்கரிக்கப் பட்டவளாயும் ஸ்திரீகளுக்குள் உத்தமமானவளாயும் யௌவனாதிகளால் மிகச்செருக்குடையவளாயும் தனக்கு வேண்டியவாறு மிகவும் இஷ்டமா யிருப்பவளாயும் பொன்னிறமுள்ளவளாயு மிருக்கிற இலக்குமிதேவியோடு சந்தோஷமாய்க் கிரீடித்துக்கொண்டிருந்தனர். அந்த லக்ஷுமிதேவி என்னைப் பார்த்தவுடன் மறைந்துபோயினள்: நான் முகுந்தனை நோக்கி ஓபகவானே! நான் விடனுமல்ல

* வியாசருக்கு நாரதர் தன் வருத்தாந்தத்தைக் கூறுதல்.

துஷ்டனுமல்ல நான் ஜிதேந்திரியன். கோபத்தையும் மாயையும் வென்றவன். இப்படிப்பட்ட நான் உமது சமீபத்தில் வரும்போது லக்ஷ்மி தேவி ஏன் மறைந்துவிட்டனளென்றேன். விஷ்ணுமூர்த்தி சிறிது கோவத்தோடுகூடின என்வார்த்தைகளைக்கேட்டு என்னைப் பார்த்து நகைத்து நீ பாடும் வீணையினது ஸ்வரம்போலிருக்கிறது உனது மதுரமான வார்த்தையும் ஓ நாரதனே! தனது பர்த்தாவை இதர புருஷன்வந்து பார்க்கும்போது ஸ்திரீயிருக்கக் கூடாதென்பது நீதி. ஓ வித்துவானே! மாயையானது சுவாசபந்தனம் செய்யத்தக்க வர்களாலும் சாங்கிய மறிந்தவர்களாலும் ஆகாரங்களை யொழித்த வர்களாலும் ஜிதேந்திரியர்களாலும் யோகிகளாலும் தேவர்களாலும் மற்றுமெவராலும் ஜயிக்கத்தக்கதல்ல. ஆகையால் நீ மாயை ஜயித்திருக்கிறேனென்று இப்போது சொல்லியதுபோல் இனி யெப்போதுஞ் சொல்லற்க. மாயையை ஜயிக்கவல்லமை யுள்ளவர்களாயிருந்தாலும் வெளியில் சொல்லத்துணியார்கள் நானுஞ்சொல்லமாட்டேன் பிரமனுஞ் சொல்லமாட்டான். மாயையை ஜயிக்கவல்லமையுள்ளவர்களான சனகாதிமுனிவர்களுஞ் சொல்லமாட்டார். மாயாதீதனாகிய சிவனாருங்கூறாரெனின் நீயாகூறவல்லவன்? தேவமாநுட திரியக்காதிதேகங்களை யெவன் தரித்திருக்கின்றானோ அவன் செயித்திருப்பானாயின் அச்சரீரத்தையடைவானா? அவன் வேதமறிந்தவனாயிருந்தாலும் யோகமறிந்தவனா யிருந்தாலும் எல்லாமறிந்தவனாயிருந்தாலும் ஜிதேந்திரியனாயிருந்தாலும் முக்குணத்தோடுங் கூடினவனாதலினவனெப்படி அந்த மாயையைச் செயிக்க வல்லமை யுள்ளவனாவான்? உருவமில்லாததாகிய காலமும் அந்த மாயைக்கு ரூபமாயருந்து அம்மாயையே வெளிப்படுத்துகின்றது. எங்ஙனமெனின்! வித்துவான் மூடன் மத்திமன் எனவுலகில் மூன்றுவகையாயுள்ளார். இவர்களுள் அக்காலமானது வித்துவானைத் தருமமறியாதவனாயும் மூடனைத் தருமமறிந்தவனாயும் மத்திமனை இவ்வண்ண மாறுபட்டிருப்பதால் இவ்விரண்டினுண்மையை அறிவதற்கில்லாதவனாயுமாக்கி விடுகிறது. இதுதான்காலம் மாயையோடு கூடிச்செய்யம் சேஷ்டை யாகும். அந்தச்சேஷ்டை யொருவிதமாயறியத் தக்கதல்லவென்று கூறி விஷ்ணுமூர்த்தி மௌனமாயிருந்தனர். நானவரை ஓநாராயணரே! மாயை யென்பவளுடைய வுருவமெத்தன்மைத்து? அவளெத்தன்மையள்? அவள்வல்லப மெத்தன்மைத்து? எங்கிருப்பவள் எதனையாதாரமாக வுள்ளவள்? இவற்றினுண்மையைச் சொல்லும். நானந்தமாயையைப்

பார்த்து அவள் தன்மையை நன்றாயறியவிரும்புகின்றேனாதலால் சீக்கிரத்தி லவளைக்காண்பியு மென்றுவினவ அவர் ஓ நாரதனே! அந்தமாயை மூன்று குணசொரூபிணியாயும், யாவராலும் சம்மதித்துப் புகழப்பட்ட சர்வஜ்ஞையுமாயும், எவராலும் வெல்லக்கூடாத வளாயும், அநேக பேதவுருவமாயுள்ள சகலசகத்தையும் வியாபித்திருக் கின்றவளாயும், அகிலலோகத்துக்கும் ஆதாரையாயுமுள்ளவள். உனக்கு அவளைப்பார்க்க வேணுமென்கிற ஆவலிருக்குமாயின் இப்பொழுதென்னோடு கருடன்மேல் வருவாயாக. நான் அவளிருக்குமிடங் கொண்டுபோய் ஜிதேந்திரரல்லாதவர்களால் செயிக்கக்கூடாத அந்த மாயையை யுனக்குக்காண்பிக்கிறேன். நீயவளைப்பார்ப்பையாயின் உனக்கு மனதிலுள்ள துக்கம் நீங்கிவிடுமென்று சொல்லி, கருடனை மனதில் நினைத்தனர். நினைத்தபடி அக்கருடன்வரப் பின்னரவர் என்னுடன் கருடாரூடராய் திவ்யமானவனங்களையும் ஆறுகளையும் ஏரிகளையும் பட்டணங்களையும் முனிகளுடைய ஆச்சிரமங்களையும் அழகானநடபாவிகளையும் தடாகங்களையும் தாமரைமலர்களா லழகுபெற்றிருக்கும் மடுக்களையும் பசுக்கூட்டங்களையும் ஏனையமிருகக்கூட்டங்களையும் பன்றிக்கூட்டங்களையும் பார்த்துக்கொண்டே கான்னிய குப்ஜியமென்னும்பட்டணத்துக்குவந்து அங்கு திவ்யமான ஓர் தடாகத்தைப்பார்த்தோம். அது தாமரைமுதலிய மலர்களால் பிரகாசிக்கப்பெற்ற வழகுள்ளதாயும் வண்டினங்களால் சப்திக்கப்பெற்றதாயும் அன்னப்பட்சி கரண்டபக்ஷிசக்கரவாளப் பட்சிமுதலிய சிறந்தபட்சிகளால் நிரம்பப்பெற்றுள்ளதாயும் பாற்கடலோடு போர்செய்ய வெழுந்திருப்பதுபோல் மேலோங்கி சலசமர்த்தியைப் பெற்றுள்ளதாயுமிருந்தது. இவ்வாறான அதன்சிறப்பை நான்கண்ணுற்று அதிசத்துடனிருக்குஞ் சமயத்தில் விஷ்ணுமூர்த்தி ஓ நாரதனே! இந்த நிர்மலமான தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பின்னர் இப்பட்டணத்தையும் பார்க்கபபோவோமென்று சொல்லிச் சிரித்துக்கொண்டே எனது சுட்டு விரலைப் பிடித்துக்கொண்டு சுற்றிவந்து அந்த சிரேஷ்டமான தடாகத்தைப் புகழ்ந்து அதன்கரையிலிருக்கு மோர்மர நிழலில் சற்றிளைப்பாறி ஓ நாரதனே! சாதுக்களுடைய மனம்போல் நிர்மலமாயிருக்கும் மித்தீர்த்தத்தில் நீ முன்னே ஸ்நானஞ்செய்க. பின்னர் நானுஞ் செய்கிறேனென்று சொல்லவே, அவர் சொல்லை நம்பி நான் வீணையையும் கிருஷ்ணாசனத்தையுங் கரையில் வைத்துவிட்டு முன்னர்

கைகால்களை யலம்பிச் சிகையை முடித்து ஆசமனஞ்செய்து தர்ப்ப பவித்திரந் தரித்துக்கொண்டு அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து கரையேறி என்னைப் பார்க்கின்ற பொழுது நான் சர்வாபரணத்தோடுங் கூடி ஸ்திரீரூபமாயிருக்கக் கண்டு ஆச்சரியப்பட்டு பூர்வ தேக நிலையையும் மாயாவியான நாராயணரையும் எனது வீணையையு மறந்து த் தடாகத்தைத் திரும்பிப் பார்த்து இதுவென்ன வதிசயமென்று அங்கு நின்றிருந்தேன். பின்னரங்கு நல்ல வயதுடன் சர்வ பூஷணாலங்கிருதனாய் மன்மதனே வுருவங்கொண்டாற்போல் விளங்கும் தாலத்துவஜனென்றும் அரசன் சதுரங்க சேனைகளோடு ரதாரூடனாய் வந்து திவ்யமான பூஷணங்களா லலங்கரிக்கப்பட்டுப் பௌர்ணமிசந்திரன் போல்பிரகாசிக்கின்ற முகமுள்ளவளாயிருக்கின்ற வென்னைப்பார்த்து ஆச்சரியமடைந்து ஓ கலியாணசுந்தரி! நீ யாருடைய பெண்? தேவபுத்திரியா? நாககன்னிகையா? எவ்வனத்தாலும் பூஷணத்தாலும் அலங்கரிக்கப் பட்டிருக்கும் நீ எப்படிச் சகாயமின்றி இங்கு தனித்திருக்கிறாய்? நீ கலியாணஞ்செய்யப்பெற்றவளா? கன்னிகையா? உண்மையைக் கூறுவாய். தடாகத்தில் என்ன பார்க்கின்றாய். மன்மதனையு மோகிக்கச்செய்யவல்ல ஓ சிறிய பெண்ணே! உன் கோரிக்கை யாது? நீ என்னைப் பர்த்தாவாகக் கொண்டு நானாவித போகங்களையு மனுபவிப்பாயென்று கூறினன். அவன் செய்தி யிங்ஙனமிருக்க, நாராயணரோ என்னுடைய வீணையையும் மான்றோலையும் எடுத்துக் கொண்டு கருடாரூடரா யதிவேகமாய்த் தன்னிடம்போய்ச் சேர்ந்தார்.

இருபத்தெட்டாம் அத்தியாயம்

வியாசாய நாரதோக்தஸ்வ விருத்தாந்தம் முற்றிற்று.

———

சுலோகம் - (ருசுஎ)

ஆஉ அத்தியாயம் உஅ - க்குச் சுலோகம் (கஎ0ரு)

———

உ

லக்ஷ்மீவாணி நிஷேவிதாயை நம:

———

இருபத்தொன்பதாம் அத்தியாயம்

* நாரதஸ்ய புருஷஸ்வரூப ப்ராப்தி.

———

சூதர்கூறுகின்றார். வியாசமுனிவரை நாரதமுனிவர்பார்த்து ஓ முனிவரே! தடாகக்கரையில் வந்து நின்று வரசன் சொல்லியவை யெல்லாங்கேட்டு என்மனதில் நன்றாயாலோசித்தும் ஒன்றுந் தோன்றாமையால் அவனைநோக்கி ஓ அரசனே! நான் இன்னாருக்குப் பெண்ணென்பதை யறிந்திலேனிது நிச்சயம். இத்தடாகக்கரையில் நான் வந்திருப்பது பிரமன் விதித்தவிதியன்றி வேறில்லை. இனி ஆதாரமில்லாதிருக்கின்ற யான் என்செய்வேன் எங்குசெல்வேன் எனக்கு நன்மையுண்டாகும் வகையாது? என் முயற்சியாதொன்றுமில்லை. தெய்வசங்கற்பம் என்விஷயத்தில் யாதாயிருக்கின்றதோ அதனையுமறியேன். நீர் தருமமறிந்த அரசனாயிருத்தலால் உமக்கு யாது தோன்றுகின்றதோ அதனைச்செய்யும். என்னை ரக்ஷித்தற்குரிய தாய்தந்தைமுதலிய பந்துக்களுமில்லாமல் உமது சுவாதீனமா யிருக்கின்றேனென்று நான் சொல்லிவரும்போது அவன் என்பால் காமங்கொண்டவனாய்த் தனது சேவர்களைநோக்கி ஓ சேவகர்களே! இவளை நானழைத்துக்கொண்டு போகவேண்டியிருப்பதால் முத்துச்சரங்களானும் வெண்பட்டுகளானும் மிருதுவான மெத்தைகளாலும் அலங்கரிக்கப்பட்டுள்ள ஓர் சிவிகையைக் கொண்டு வாருங்களென்ன அவர்களப்படியே கொண்டுவர அவ்வரசன் என்னை அச்சிவிகை மீதேற்றிக்கொண்டு மிக்க சந்தோஷத்துடன் தன்னரண் மனைக்குச்சென்று சுபலக்கினங்கூடிய சுபத்தினத்தில் விதிப்படி அக்னிசாக்ஷியாய் என்ன விவாகஞ்செய்து கொண்டனன். நானவனுக்குப் பிராணநாயகியாயும் அவனால் சௌபாக்கிய சுந்தரியென்று பெயருடையவளாயும் அவனாற் செய்யப்படுங் கிரீடைகட்கெல்லாமுரிமையுடையவளாயும் விசேடமான சுகங்களையனுபவித்துக் காமசாஸ்திரத்தில் சொல்லப்பட்ட விலாசங்களுக்கெல்லாம் உரித்தான வளாயுமிருந்தே னாகையால் அவ்வரசன் தன்ராஜ்யகாரியங்களை யெல்லாம்விட்டு மன்மதனுக்காளாய் இரவும், பகலும் கிரீடிப்பதில் ஆவலுள்ளவனாய்

* நாரதர் புருஷரூபத்தை யடைவது.

இவ்வளவு காலமாயிற்றென்பதை யறிந்துகொள்வதற்கும் அறிவில்லாதவனாய் உத்தியான வனங்களிலும் ஆரணியங்களிலும் உல்லாசமாயிருக்கத்தக்க மாளிகைகளிலும் மெத்தைகளிலும் நடபாவிகளிலும் உயர்ந்தமலைகளிலும் வசித்துமதுபானஞ்செய்து மதத்தவனாய் விளையாடிக்கொண்டு என் சுவாதீனமாயிருந்தனன். ஓ வியாசரே! நானும் அவனுடனே கூடி ரமித்திருந்தேனே யல்லது எனது பூர்வசென்மம் முனிசென்மமென்பதை நினையாதவனாய் இவன் நமக்கே பர்த்தா; நாமே இந்த இரசனுக்குள்ள ஸ்திரீகளில் இஷ்டமானபத்னி நாம் தாம் பட்டத்தரசி. நாம் தாம் காமவிலாச மறிந்தவள். நமக்கிப்படிப்பட்ட புருஷன் கிடைத்ததினாலன்றோ நம்முடைய வாழ்நாள் சபலமாயிற்றென்று இரவும்பகலும் அவனிடத்தில் ஆசையுள்ளவளாய்க்கிரீடித்திருந்தேன். அந்தோ! எனக்குமுன்னுள்ள பிரமஜ்ஞானமும் பிரமவிஜ்ஞானமும் தர்மசாஸ்திர பரிஜ்ஞானமும் மறந்துபோயின. ஓ வியாசமுனிவரே! இவையெல்லா மறந்தவனாயும் அஜ்ஞானமும் அஜ்ஞானவிஜ்ஞானமும் அதர்மசாஸ்திர பரிக்யானமுமாகிய இவையிற்றை மறவாதவனாயும் அரசனோடு கிரீடிக்குஞ் சுகமே பேரின் பசுகமாயும் பன்னிரண்டு வருடகாலம் ஒரு க்ஷணகாலம்போலக் கழித்தேன் என்தவமெல்லாம் கொள்ளைபோக வந்த அக்காலத்தில் கர்ப்பவதியுமாயினேன். அதனை அரசன் கண்டு மகாசந்தோஷமடைந்து விதிப்படி ஸ்ரீமந்தமுதலிய சடங்குகளை நடத்தி கர்ப்ப சம்ஸ்காரஞ்செய்து அடிக்கடி என்னை சந்தோஷப்படுத்தி உனக்கென்ன இஷ்டமென்று கேட்பான். எல்லாவிதத்தாலுஞ் சந்தோஷ மடைந்திருக்கிற நான் வெட்கத்தினா லொன்றுஞ் சொல்லாமலிருப்பேன். பத்தாவதுமாதம் பூர்த்தியாகும்போது சுப நட்சத்திரத்தோடும் தாராபலத்தோடுங்கூடின சுபதினத்தில் புத்தி ரோற்பத்தியாயிற்று. பின்னர் செய்யவேண்டிய புத்திரோற்சவுத்தையும் நடத்தி வீரவர்மனென்று பெயரிட்டுப் பிள்ளையைப்பார்த்து மகாசந்தோஷ சித்தனாயென்னிடம் முன்னையிலு மிக்க பிரீதியுடையவனாயினான். நானுமவன்பா லப்படியே யிருந்து இரண்டுவருஷங்கழித்து கர்ப்பவதியாய் சர்வலக்ஷணத்தோடுங் கூடிய இரண்டாவது பிள்ளையைப்பெற்றேன். அவனுக்குமப்படியே அரசன் செய்யவேண்டிய புத்திரோற்சவத்தை நடத்தி சுதன்மனென்று பெயரிட்டான். அப்படி பன்னிரண்டு பிள்ளைகளைப் பெற்றேன். அப்பிள்ளைகட்ளெல்லாம் சகல சிறப்புகளும் நடந்தன. பின்னர் அப்பிள்ளைகளுக்கெல்லாம் விவாகம்நடத்தி அப்பெண்களாலும் பிள்ளைகளாலுஞ் சூழப்பட்டவளாய்ப் பெரியசமுசாரியாய்ப் பின்னர்ப் பிள்ளைகளுக்

கெல்லாம் பிள்ளைகள் பிறக்க, அப்பேரன் மார்களுடன் சல்லாபமுடையவளாய் அவர்கள் விளையாடும் விளையாடலைக் கண்டு மோகம் விருத்தியடையப்பெற்றவளாயினேன். ஓ முனிவரே! இக்காலவரையில் சுகமன்றிவேறொன்றறியேன். அதன்பின்னர் சில வேளைகளில் சுகமும்சிலவேளைகளில் துக்கமும் சிலவேளையில் ஐஸ்வர்யமும் சிலவேளையில் ஆச்சர்யமுமுடையவளாயிருந்தேன். அதன்பின்னர் பிள்ளைகளுக்கு ரோகமுண்டாகும்போது தேகசந்தாபமும் சிலசமயத்திலொருவருக் கொருவர்க்குண்டாகுங் கலகங்களால் பயங்கரமும் மருமக்கமார்களுக்குண்டாகுங்கலகங்களால் மரணதுக்கத்துக்குச் சமானமான துக்கமுமுண்டாயிற்று. ஓ முனிவரே! இவ்வண்ணம் நான் அஞ்சத்தக்க பொய்நடத்தையுள்ள சுகதுக்கசொரூபமான சம்சாரத்தில் மூழ்கினவளாய் பூர்வஜ்ஞானமும் போய் சாஸ்திரஜ்ஞானமுமறந்து ஸ்திரீத்வமாயை யினாலாவரிக்கப்பட்டு எப்பொழுதும் வீட்டின் காரியத்திலேயே ஆசையுள்ளவளாய் மோகத்தை விருத்திபண்ணுகிற அகம்பாவ முடையவளாய் நம்முடைய பிள்ளைகளெல்லாம் மகாபலசாலிகள்; மருமகள்களெல்லாம் நற்குலத்திற்பிறந்தவர்களென்கிற கர்வமடைந்து நம்முடைய பிள்ளைகளெல்லாம் வீட்டில் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். சம்சாரியான ஸ்திரீகளுக்குள் நம்மைப் போலும் யாருள்ளார்? நாமேபுண்ணியவதி யென்றிருமாந்தேனையா! நாம் நன்னடைக்கயுள்ள ராஜபத்தினி. வெகுபுத்திரர்களை யுடையேம். பதிவிரதை யென்றும் சம்சாரத்தில் வெகுபுண்ணியவதி யென்றும் பெயர்பெற்றுள்ளே மென்றிருந்தேனே யல்லது ஒருநாளாவது நாம் நாரதனல்லவாவென்றும் விஷ்ணுமூர்த்தியால் வஞ்சிக்கப்பட்டோ மென்றும் மனதினால் சிந்தித்தேனில்லை.

பின்னர் தூரதேசத்திலிருக்கும் ஒருபெரிய அரசன் என்பர்த்தாவுக்குச் சத்துருவாய் ரதகஜதுரகபதாதிகளுடன் வந்து யுத்தத் திற்கழைத்து பட்டணத்தைச் சூழ்ந்துகொள்ளவே என்பிள்ளைகளும் பேரன்மார்களும் யுத்தசந்நுத்தர்களாய்ப் பட்டணத்திற்கு வெளியேபோய் அவனோடு போர்புரிந்து காலவசத்தால் சத்துருவினால் மாண்டனர். அரசனோ தோல்வியடைந்து பிள்ளைகளும் பேரன் மார்களும் மாண்டதையெண்ணாது என்னையெண்ணித் தானுயிர்விடுதற்கஞ்சி வீட்டுக்குவந்தனன். நான் என்மக்களிறந்து போனமையைக் கேள்விப்பட்டு பிள்ளைகளையும் பேரன்மார்களையும் போர்க்களத்திற் பார்த்து சோகசாகரத்தில் மூழ்கி, ஆ பிள்ளைகளே! எங்கே போய்விட்டீர்கள்? பலிஷ்டமான பாழுந்தெய்வத்தினால் நான்

வஞ்சிக்கப்பட்டேனேயென்றழுது கொண்டிருந்தேன். அவ்வாறிருக்கும் போது விஷ்ணுமூர்த்தி நல்லவஸ்திர முடுத்திக்கொண்டவராயும் வேதமெல்லா மறிந்தவராயுமுள்ள ஓர்நல்ல விருத்தப்பிராமண வேஷங்கொண்டு போர்க்களத்திலென் சமீபத்தில்வந்து அழுதுகொண்டிருக்கிற வென்னைப்பார்த்து, அம்மா ஏனழுகிறாய். பர்த்தாவென்றும் மாடென்றும் புத்திரர்களென்றும் பவுத்திரர்களென்றும் வீடென்றும் ஒவ்வொருருவங்கொண்டுவந்த இச்சமசாரத்தில் வைத்த மோகத்தினால் துக்கம் நேரிடுகின்றதேயன்றி ஆராய்ச்சி செய்யுங்கால் நீ யார்! இந்தப் பிள்ளைகளெல்லாம் யாருடைய பிள்ளைகள்? இவர்களைப் பற்றி யுனக்கென்ன சம்பந்தம்? ஒன்றுமில்லை. இனி நீ உன்னாத்மா கடைத்தேறுவதைப்பார்; எழுந்திரு. அழுகையைநிறுத்து மனதைச் சமாதானப்படுத்திக்கொண்டு பரலோகமடைந்த புத்திரர்களுக்கு வழக்கப்படி செய்யவேண்டிய தகனாதிகளை நடத்துவாயாக. வெளியே யுள்ள தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்வோம். வீட்டிலுல்ள தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தலாகாதென்று தர்மசாஸ்திரம் விதித்திருக்கின்றது. ஆகையால் புறப்படென்று என்னைப்பிரயாணப் படுத்தி அரசனையும் பந்துக்களையும் என்னைச் சுழந்து வரும்படிச் செய்து தான் முன்னே நடந்து புருஷ தீர்த்தமென்னும் ஓர் தீர்த்தத்துக்குப் போய் என்னைப்பார்த்து; ஓ பெண்யானையைப் போல நடக்கிற ஸ்திரீயே! இத்தடாகத்தில் ஸ்நானஞ்செய். வீணான துக்கத்தை விட்டுவிடு. புத்திரர்களுக்கு உத்தரகிரைய செய்யவேண்டிய காலம் வந்துவிட்டது. உனக்கு முன் சென்மங்களிலிறந்து போனபிள்ளைகள் எத்தனைகோடியோ. தாய் தந்தையர்களெத்தனை கோடியோ. புமான்களா யிருந்தவர்களெத்தனைகோடியோ. அப்படியே சகோதரர்களும் எத்தனைகோடியோ. இந்தப் பிராந்தி ரூபமான சம்சாரத்தில் நீயாருக்கென்றழுவாய். பொய்யாயும் சொற்பனத்துக்குச் சமானமாயும் பிராணிகளுக்குத் தாபத்தையுண்டு செய்கிற இந்தச் சம்சாரத்திலழுதுமுடியுமோ வென்றென்னைத்தேற்றி அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வித்தார். அதில் மூழ்கியெழுந்தவுடன் எனக்குப் புருஷஜன்மம் வந்துவிட்டது. விஷ்ணுமூர்த்தி எனது வீணையையும் கிருஷ்ணாசனத்தையுங் கையிலேந்தி நின்றனர். அவரை நான் பார்த்ததும் எனக்குப் பூர்வவுணர்ச்சி வந்து நாம் இங்கே ஏன் வந்திருக்கிறோம். நமக்குப் பெண்தன்மையிவரால் தான்வந்தது. இவர்தானிம்மாயையைச் செய்தவரென்று சிந்தித்திருக்கின்றபோது, அவர் ஓநாரதமுனியே! ஜலத்திலென்ன செய்கிறாய்? போகலாம்வாவென்றார். அப்போது தருணமான பெண்தன்மை

யிக்காரணத்தால் வந்ததென்றும் மறுபடியும் ஆண்தன்மை இக்காரணத்தால் வந்ததென்றும் அறிந்து கொள்ள சக்தியில்லாதவனாய் விட்டேன்.

இருபத்தொன்பதாம் அத்தியாயம்

நாரதஸ்ய புருஷஸ்வரூப ப்ராப்தி முற்றிற்று.

———

சுலோகம் - (சாசா)

ஆஉ அத்தியாயம் உகூ - க்குச் சுலோகம் (களஎ0ஏ)

———

முப்பதாம் அத்தியாயம்

* நாரதம்பிரதி ஹரிகிருத மாயாமஹிமாநு வர்ணனம்

சூதர் கூறுகின்றார். நாரதமுனிவர் வியாசபகவானைப் பார்த்து ஐயா! பின்னடந்த எனதற்புத சரித்திரத்தைக்கேளும். நான் ஸ்திரீ வடிவமொழிந்து புருஷவடிவமானதை என்னுடன் வந்த என்னாயகனாகிய அரசன் பார்த்து ஆச்சரியமடைந்தவனாய் என் மனையாட்டி எங்கேபோனாள்? இந்த முனியார்? இவர் என் மனையாளுடன் மூழ்கவில்லையே அவள் தான் முனியாய்விட்டனளோ? இல்லை! இல்லை!! அவளெப்படி முனியாவாள்? அந்தோ! நானென் செய்வேன்!! என்னிஷ்டையான என்னாயகியே! உன்பிரிவினால் நானழுது கொண்டிருக்கின்றேனே! என்னையழும்படியாகச் செய்த விட்டு நீ எங்கேபோய்விட்டாயென்று சிறிதும் லச்சையின்றி ஓவென்று பெருங்குரலிட்டழத்தொடங்கி ஓ பெருத்த தொடையுள்ளவளே! தாமரைமலர்போன்றகண்களுள்ளவளே! ஓ புன்சிரிப்புள்ளவளே! நீ யிங்கில்லாமல் என்னையெப்படிப் பிரிந்துபோனாய்? என் கிருகமும் என் ராஜ்யமும் வீணாய்ப்போயிற்றே. என் பிள்ளைகளெல்லாம் இறந்தும் என் பிராணனையுனக்காக வைத்திருந்தேனே. இப்பொழுதும் உன்விரகத்தினாற் பிராணன்வெளியே போகாமலிருக்கிறதே. என்னுடன் பிரீதியாயிருந்த நீ மாத்திரம் என்னை வஞ்சித்தனையே! ஓ விசாலமான கண்ணுடையாளே! நானழுதுகொண்டிருக்கின்றேனே உன் கண்ணுக்குத் தெரிய வில்லையா! நானுன்னை புருஷனில்லாதவ ளென்றெண்ணி யிருந்தேனே. இப்போது நீ அந்தப் புருஷனிடத்தில் போயிருப்பதாகத் தெரிகின்றதே. நீ அப்படியிருந்தாலு மெனக்கொரு

* நாரதரை நோக்கி விஷ்ணுமூர்த்தி சொல்லுகிற மாயாமகிமை வர்ணனம்

வார்த்தைசொல்லக் கூடாதா? முதலிலென்னைச் சேர்ந்தகாலத்தில் நீவைத்திருந்த பிரீதியெல்லாம் இப்போதெங்கேபோயிற்று? அந்தோ! நீ உயிரோடிருந்தாலிப்படி யிருக்கமாட்டாய். தனுராகாரமாயிருக்கிற புருவங்களுள்ளவளே! நீ ஜலத்தில் மூழ்கினபோது மச்சங்களாலும் கூர்மங்களாலும் பக்ஷிக்கப்பட்டனையோ? அல்லது என்னுடைய தௌர்ப்பாக்கி யத்தினால்ஜலாதிபதியாகிய வருணன்பிடித்துக் கொண்டு போய்விட்டானோ? அல்லது ஓ அழகான அங்கங்களுள்ளவளே! உன் பிள்ளைகளோடு சேர்ந்துவிட்டனையோ? ஓ புண்ணியவதி! அமிர்தம்போலினிப்பாய் பேசுகின்றவளே! உனக்குப் பிள்ளைகளிடத்தி லந்தரங்கமான பிரீதியுண்டென்பது இப்போதன்றோ தெரியவந்தது. என்னை விட்டுப்புத்திரவாஞ்சையினால் சுவர்க்கத்துக்குப் போனது யுகதருமமல்லவே. ஓ என் பிராணநாயகியே! பிள்ளைகளோடுன்னையும் இழந்திருக்கிற இந்தத்தருணத்திலும் எனக்குமரணம் நேரிடவில்லையே. என்ன செய்வேன்? எங்கே போவேன்? பூவுலகில் ராமனைத் தெய்வமென்று சொல்லுகின்றனரே. அவனிப்போதில்லையோ. நானிப்போது படுந்துன்பம் இப்படிப்பட்டதென்று அவனுக்கு நன்றாய்த் தெரியுமே அவனென்னைப்போலு மனைவியையிழந்து துன்பப்பட்ட வனல்லவா எனக்கேன் ஒருகதியுந்தேடாமலிருக்கின்றான். ஓ ராவிற்கு இரண்டு கொம்புதோன்றினாற்போல்வாழத்தக்கதம்பதிகளுள் சிலரைத் தெய்வமானது ஒரே காலத்திற் கொல்லுதலும் வேறு வேறாகப் பிரித்துக் கொல்லுதலுஞ்செய்து வருகின்றதே. இதுகொடுமையல்லவா! தெய்வமானது காலவேற்றுமை செய்யலாமா! மஹருஷிகள் பர்த்தா மரணமடைவானாயின் பத்தினி அவனுடன் மரணமடைய வேண்டு மென்றும் அக்கினிப்பிரவேசமாக வேண்டுமென்றும் விதித்தது சிறந்ததே. அதுபோலும் பத்தினியிறந்தால் பதியுமிறக்க வேண்டுமென்று ஏன் விதிக்காமற் போயினரென்று பற்பலவாய்ப்பிதற்றி அழுது கொண்டிருக்கும்போது, நாராயணர் அவனைப்பார்த்து ஓ ராஜ ஸ்ரேஷ்டனே! ஏனழுகிறாய்? நீதர்மசாஸ்திர மறிந்தவனாயும் பெரியோர்களையடுத்தவனாயு மெனக்குத் தோன்றவில்லை. உன்னுடைய பிரியையாகிய மனைவியெங்கே போயினாள்? அவள் யார்? நீ யார்? அவளுன்னைச் சேர்ந்ததென்பதெங்கே? உன்னைப் பிரிந்த தென்ப தெங்கே? மனைவி மக்கள் சகோதர ரென்றெண்ணப் பட்ட இவரெல்லாம் சம்சாரமென்னும் பிரவாகத்தில் ஒன்றோடொன்று சேருகின்ற செத்தைகள் போலன்றோ? இங்கிருந்து வீணாய்அழுவதனா லென்னபிரயோஜனம்? வீட்டுக்குப்போ. ஒருவரோடொருவர் சேர்தலும் பிரிதலுந் தெய்வாதீனமாயுள்ளது. நீ இந்தஸ்திரீயையிவ் விடத்திலேயே கூடிக்களித்தாய். இவ்விடத்திலேயே பிரிந்து துக்கிக்கின்றாய்.

இவளுடைய தாய் தந்தைகளை நீ யறிவையோ? அல்லது பார்த்திருப்பையோ? ஒன்றுமில்லாதிருக்க நீ இவளை இக்குளக்கரையில் சேர்ந்தது காகதாளி நியாயமாகும். இனிக்கூடுவதென்பது ஏது? இனி துக்கப்படுவதனா லென்னபிரயோஜனம்? எல்லாங் காலத்தின்படி நடக்குமாகையா லதனை யுன்னாலு மென்னாலுமற்றெவராலும் அதிக்கிரமிக்க முடியாது. இனி அக்காலமானது உனக்கு என்ன சுகத்தைக் கூட்டுமோ அந்தச்சுகத்தை வீட்டுக்குப் போயனுபவிப்பாயாக. இப்போது மறைந்துபோன அந்த உத்தமஸ்திரீ எப்படிவந்தாளோ அப்படியே போய்விட்டாள். நீ அந்த ஸ்திரீ வருவதற்குமுன் எப்படி யிருந்தனையோ அப்படியிருப்பாயாக. இனி நீ எவ்வளவு அழுதபோதிலும் அவளந்த அழுகையைக்கேட்டு ஐயோவென்றிரங்கி வரப்போகிறதில்லை. ஓ அரச சிரேஷ்டனே! யோகஞ் செய்வாய். போகம் வருவதும் போவதும் காலவசத்தினா லென்றறிக. இவ்வருத்தமான சம்சாரமார்க்கத்தில் விசனப்படுவதனால் வரும்பயனென்னை? சுகமோரிடத்தி லிருப்பதில்லை; அதுபோலவே துக்கமுமோரிடத்திலிருப்பதில்லை. சுகமுந்துக்கமும் மாறிமாறி வந்து கொண்டேயிருக்கும். ஆகையால் நீ மனதை யொருவழியில் ஸ்திரப்படுத்திக்கொண்டு ராஜ்யத்தைச் சுகமாயனுபவிப்பாயாக. இதிலுனக்கு வெறுப்பாயிருக்கும் பட்சத்தில் தாயாதிகளுக்கு ராஜ்யத்தைக் கொடுத்து விட்டு காட்டுக்குப்போய் யோகாப்பி யாசஞ் செய்வாயாக. இம்மானுட தேகமானது ஒரு க்ஷணகாலத்தில் நசித்துப் போகும் அநித்தியத் தன்மையுடையது. இம்மாநுட தேகம்போமாயின். மீண்டுங் கிடைப்பதரிது. இது க்ஷணத்தில் நாசமடையத்தக்க தன்மையை யுடைத்தானதாயினும் பிரயோ ஜனமோ நித்தியமாகிய பெரிய பிரயோஜனத்தைக் கொடுக்குந் தன்மையை யுடைத்தாயுமுள்ளது. இங்ஙனமான அரிய தேகங் கிடைத்திருக்கும் போது செய்யுங் கருமத்தைச் செய்வதொழிந்து செய்யவேண்டிய தல்லததாகிய காரியத்தைச் செய்தழிந்து போவதனா லென்னபயன்? அருத்தல் பொருந்தலாலுண்டாகுஞ் சுகங்களையறிந் தனுபவிக்குந் தன்மை பசுச்சாதிகளிலு மிருக்கின்றது. அப்பசுப்போலன்று இம்மாநுடதேகம். ஓ அரசனே! நித்தியசுகத்துக் கேதுவாகிய ஞானம் இம்மானுடதேக மொன்றி னாற்றான். கிடைக்கத்தக்கது. வேறெந்த விதமான சரீரசாதிகளினுங்கிடைக்காது. ஆதலால் நீ வீட்டையும் விட்டு ஸ்திரீயின் பிரிவினாலுண்டாகிய துக்கத்தையும் விட்டு வனத்துக்குச் செல்லக்கடவாய். இவ்வுலகம் மாயாகாரியமாகையால் மோகிக்கப் பட்டிருக்கிறது. இவ்வண்ணம் மாயை மயங்கச் செய்கின்றது மாயாசொரூபிணியாகிய தேவியின் பலத்தினா லென்றறிவா யென்று

அவனுக்குப் போதிக்கவே, ஒருவாறு தெளிந்தவனாய் அந்த விஷ்ணுமூர்த்தியை நமஸ்கரித்து அத்தடாகத்தில் ஸ்நானஞ்செய்து தனது கிருகம் போய் தாயாதிகளுக்குத் தனது ராஜ்யத்தைக் கொடுத்து வைராக்யமுடையவனாய் ஆரணியஞ்சென்று சாத்வீகஞானத்தை யடைந்து வாழ்ந்திருந்தனன்.

ஒ வியாசபகவானே! அரசன் போனபிறகு விஷ்ணுமூர்த்தி என்னைப் பார்த்து அடிக்கடி சிரித்தனர். நானவரைப் பார்த்து ஒ பிரபுவே! உம்மால் நான் வஞ்சிக்கப்பட்டு, பெரிதான மாயா பலத்துக்குள்ளாய் ஸ்திரீ தேகமெடுத்து அந்தத் தேகத்தில் நான் செய்தவேலைகள் மிகவும் ஆச்சரியகரமானத்தால் அவைகளை யெண்ணிப் பார்க்கின்றேன். அந்தோ! நான் அந்தஸ்திரீ தேகத்தை யடைந்து இந்திரன் போன்ற ஓரரசனைப் பர்த்தாவாகக்கொண்டு பெரிய சம்சாரியாயிருந்தேன். இப்போது இச்சரீரத்தை நோக்குமளவில் முன்னிருந்த நார சரீரமாகத் தெரியவருகின்றது. அதே மனம் அதே தேகம் அதே (ஆண்) குறி முதலிய வெல்லாமும் முன்னிருந்ததுபோல் பெற்றவனாயிருந்தும் அந்தக் ஞாபகமாத்திரம் ஏன் மறந்துபோயிற்று? அது பற்றி மிகவுமாச்சரியப்படுகின்றேன். பகவானே! நான் குளத்தில் மூழ்கியபோது பூர்வ ஞானமெவ்வாறு மறந்துபோயிற்று? இவற்றின் காரணங்களைக் கூறவேண்டும். ஒ விஷ்ணுமூர்த்தியே! நான் ஸ்திரீதேகத்தை யடைந்திருந்த காலத்தில் அனேக விதமான சுகதுக்கங்களை யனுபவித்தேன். பிரதிதினமுஞ் சுராபானஞ் செய்தேன். நியமமில்லாமல் போஜனமுஞ்செய்தேன். நாரதனென்பதையுமறந்தேன். இவைநிற்க, இப்போது ஸ்திரீசன்மத்தில் நடந்தசெய்திகளை எப்படி நன்றாய்த் தெரிந்து கொள்ளுகின்றேனோ அப்படி நான் ஸ்திரீயாயிருந்த போது நாரதனாயிருந்ததைத் தெரிந்துகொள்ளவில்லையே. இதனை யெனக்குச் சொல்லவேண்டுமென்றேன். விஷ்ணுமூர்த்தி, மஹாபுத்திமானான ஒ நாரதமுனியே! இதைத்தான் பெரியோர் மாயா விலாசமென்று சொல்லுவர். சர்வஜெந்துக்களினுடைய தேகங்களிலும் சுகதுக்க சம்பந்த மாயிருக்கின்ற அவஸ்தாபேதங்கள் பல. அதுபோலவே சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னும் ஐந்தவஸ்தைகள் எல்லாச் சரீரங்களிலுமுண்டு. இந்தச் சாக்கிரமுதலிய அவஸ்தையை எப்படி ஒருவன் மாறிமாறி யடைகின்றானோ அப்படியே தேகாந்தராவஸ்தையுமடைகின்றான். இதுபோல் நீ ஸ்திரீதேகத்தை யடைந்ததுமாம். இதிலென்ன சந்தேகம்? மாயையைச் செயித்தேனென்று சொல்லிய நாரதனே! சாக்கிரமுதலிய அவஸ்தைகளின் அனுபவத்தைக்கேட்பாயாக. சுழுத்திய வஸ்தையடைகிறவன் செவியால் கேட்கிறதுமில்லை. வாயினாற்

பேசுகிறதுமில்லை. மற்றொன்றை யறிகிறதுமில்லை. அவன் சாக்கிராவதை யடைவானாயின் எல்லா விஷயஜ்ஞானங்களையு மறிந்துகொள்ளுகிறான். மனமானது சாக்கிரத்தினால் மறைப்பில்லாமல் பிரகாசித்தும் சுழுத்தியினால் பிரகாசமில்லாமல் மறைந்துமிருக்கின்றது. இனிச் சொப்பனத்திலோ வெனின், நானாவிதமான மனோபேதமாயுள்ள வபிப்பிராயங்கள் அநேக விதமாயுண்டாகின்றன. அஃதென்னையனின், ஒருவன் தன்னைக் கொல்வதற்கு யானை யோடிவந்ததாகவும் அதனைக் கண்ட தான் ஓடுவதற்குச் சக்தியின்றி யானென்ன செய்வேனென்று மறைந்து கொள்வதற் கோடியதாகவும் அங்கிடங்காணாமல் பயந்ததாகவுஞ் சொல்லுகிறான். ஒருவனிறந்து போன பட்டனாரைப் பார்த்து அவருடன் வீட்டிற்கு வந்து அவருடன் பலார்த்தைகளாய்ப் போசனஞ் செய்ததாகக் கண்டு சொல்லுகிறான். இவ்வாறு சொப்பனங்கண்டவர் விழித்துக்கொண்டு சொப்பனத் திலறிந்தனுபவித்த சுகதுக்கங்களை நன்றாய் ஞாபகம்பண்ணிக் கொண்டு பிறருக்கு விவரமாய்ச் சொல்லிப் பின்னர் இது பிரமையென்றுஞ் சொல்லுகின்றனர். அதுபோல் சொப்பனத்தில் எவராவது சாத்திரத்தில் நடந்த செய்திகளைத் தெரிந்து கொள்ளுகின்றார்களா! இல்லையன்றோ. இது போலவே, நீ எடுத்த அந்தஸ்திரீ ஜன்மம் சொப்பனாவஸ்தையைப் போன்றதெனவும், இந்த நாரதஜன்மம் சாக்கிராவஸ்தையைப் போன்றதெனவும் அறிவாய். ஆகவே நீ அந்த ஸ்திரீசென்மமாகிய சொப்பனாவஸ்தையில் இந்த நாரதஜன்மமாகிய சாக்கிராவஸ்தை யனுபவத்தை எப்படி யறிவாய். ஓ நாரதமுனியே! மாயையினுடைய செயலென்றுணர்க. அம்மாயா குணங்களுடைய கரையை நானுமறிந்தவனல்ல. உருத்திரரு மறிந்தவரல்ல. பிரமாவுமறிந்தவனல்ல. நாங்களே அறிந்திலமென்றால் மந்தபுத்தியுள்ளவராகிய வேறுயாவ ரெப்படி யறியவல்லவராவார்? மாயாகுணத்தினுடைய அளவு எவனுக்குந் தெரியாது. ஸ்தாவரசங்க மரூபமான வுலகமெல்லாம் குணத்திரயத்தினால் நிர்மிக்கப் பட்டிருத்தலால் இச்சமுசார் பிரவிர்த்தி யுண்டாகின்றது. குணசம்பந்த மில்லாவிடின் சம்சாரமேது. நான்சத்துவ குணத்தில் பிரதானனா யிருக்கின்றவனாயினும் என்னிடத்தில் ரஜோகுண தமோகுணங்களு முள்ளன. அப்படியே பிரமனும் உருத்திரருமுள்ளார். நாங்கள் மூவரும் குணங்களை விட்டிருக்கும் பிரபுக்களல்ல. அஃதில்லாதபிரபு துரிய சிவனாரொருவரே. அவரையன்றி மற்றொருவரையுங் குணரகிதரென்று கேட்டதில்லை. ஓ முனிசிரேஷ்டனே! நீ மாயாவிலாசவிபவத்தைக் காணவும், அதனைக் கடத்தலரிதென்றும் அதிலாழ்ந்து போகாது ஞானநிலையைக்கூடு முபாயத்தை யூகிக்கவுமென்னால்

விளைவிக்கப்பட்டஅசாரமாயும் கரையில்லாததாயுமுள்ள இச்சம்சாரத்தில் அது எப்படி இது எப்படியென்று மோகத்தையடைய வேண்டாம். மாயாப்பிரவாகபேத விலாசங்களை நீ தான் கேட்டு முடியுமோ! நான் தான் சொல்லி முடியுமா! அதுமஹா அற்புதமாயுள்ளதென்றார்.

முப்பதாம் அத்தியாயம்

நாரதம்பிரதி ஹரிகிருத மாயாமஹிமாநு வர்ணனம் முற்றிற்று

———

சுலோகம் (ருசு)

ஆஉ அத்தியாயம் ங0 - க்குச் சுலோகம் (கஅஉசுஏ)

———

31. மஹா மாயா மஹிமாதிகதனம்

சூதர் கூறுகின்றார் :- வியாசமுனிவர் ஜனமேஜயனை நோக்கி, மகாராஜனே! மாயையினுடைய மகத்துவத்தை நாரதரிடத்தில் இவ்வண்ணம் நான் கேட்டிருக்கின்றேனாதலால் அம்மாயையின் ஸ்வரூப விசேஷங்களை யுனக்கு நன்றாய்ச் சொல்லுகிறேன், கேட்பாயாக. நான் அந்த நாரதருடைய ஸ்திரீதேகத்தைப் பற்றிய சரிதத்தை அவரால் கேட்டபிறகு, ஓ நாரதமகாமுனிவரே! பின்னர் விஷ்ணுமூர்த்தி யாதுகூறினார்? உம்மையழைத்துக்கொண்டு எவ்விடம் போயினாரென்றேன். அந்த நாரதர், ஓ வியாசமுனிவரே! அத்தடாகத்தின் கரையினின்று கருடாரூடராய்ப் புறப்பட்டு என்னைப்பார்த்து, ஓ நாரதனே! இனி உமக்கு எந்தவிடத்திற்குப் போகவேண்டுமென்றிச்சை யுதிக்கின்றதோ அவ்விடத்துக்குப் போகலாம். அல்லது என்னுடன் வைகுண்டம் வருவதாயிருந்தாலும் வரலாமென்று கூற, நானவரிடம் விடைபெற்றுக்கொண்டு இந்திரலோகம்போய்ச் சேர்ந்தேன். அவரும் எனக்கு விடை கொடுத்துவிட்டு வைகுண்டம் போய்ச்சேர்ந்தனர். பிறகு நான் என் தந்தையிருக்கும் சத்தியலோகம் போய்ச் சேர்ந்து அவரை நமஸ்கரித்து அவரெதிரினின்று என்னுடைய சரிதத்தை நினைத்துக் கொண்டிருந்தேன். அவர், ஓ புத்திமானே! எங்கே போயிருந்தாய்? எதற்காகச் சிந்தைப்பட்டுக்கொண்டிருக்கின்றாய்? உன்னுடைய மனம் இப்போது சுகமாக விருக்கிறதென்று நானினைக்கவில்லை. நீயாராலாவது வஞ்சிக்கப்பட்டனையா? அல்லது ஏதேனும் ஆச்சரியத்தைக் கண்டனையா? விசனப்பட்டுக் கொண்டிருக்கின்றவனாயும் அறிவு கலங்கினவனாயுங்

காணப்படுகின்றாய். ஏனப்பா அப்படி யிருக்கின்றாய்? உட்காரென்றார். நானவர் கட்டளைப்படி ஆசனத்திலிருந்து மாயாபலத்தால் உண்டான என்னுடைய விருத்தாந்தத்தை சொல்லத் தொடங்கி, ஓ என்றந்தையே! சமர்த்தரான விஷ்ணு மூர்த்தியால் நான் மிகவும் வஞ்சிக்கப்பட்டு ஒரு தடாகத்தில் மூழ்கி ஸ்திரீரூபமெடுத்து பூர்வஞானமெல்லாம் மறந்து அநேக வருஷகாலம் ஸ்திரீயாகவேயிருந்து புத்திரசோகத்தினாலுண்டாகும் துக்கங்களெல்லாம் அனுபவித்துப் பின்னரந்த விஷ்ணுமூர்த்தியால் நல்லுபதேசமும் பெற்றுத் தடாகத்தில் மூழ்கியெழுந்து புருஷனாயினேன். ஓ ஐயா! நானிவ்வாறு மோகமடைந்ததற்குக் காரணம்யாது? மாயையின் வன்மையைக் கடத்தல் மிக்க வரிதென்று நானிதுவரையில் தெரிந்து கொள்ளாமலிருந்தேனாகையால், இந்த மோகோத்பத்தியானது என்னுடைய ஞானத்தைக் கெடுதி செய்து விட்டது. இப்பொழுது அந்த மாயையால் விளையும் சுபாசுபங்களெல்லாம் நான் நன்றாயனுபவித்துத் தெரிந்து கொண்டேன். ஓ என்றந்தையே! நீரெப்படி மாயா பலத்தை ஜயித்திருக்கிறீர்? அந்த உபாயத்தை யெனக்குச் சொல்லுமென்றேன். (1-17)

அவரென்னை நோக்கிச் சிரித்து, அப்பா! இம்மாயை சக தேவர்களாலும் மகா மகிமையுள்ள முனிவர்களாலும் பிரம்மஞான முள்ள தபசிகளாலும் காற்றையே புசிக்கிற யோகிகளாலும் முக்குணத்தான் மும்மூர்த்திகளாகிய எங்கள் மூவராலும் வெல்லத்தக்கதல்ல. சிருஷ்டி ஸ்திதி லயமென்கிற முத்தொழிலையுஞ் செய்விக்கவல்ல அந்த மகா மாயையையறியும் வன்மையுள்ளார் யாவர்? ஓ புத்திமானே! காலம் கர்மம் சுபாவம் இவை முதலான நிமித்த காரணங்களால் மகா பலமுள்ள அந்த மாயையெங்கும் வியாபித்துச் சுகதுக்கங்களை விளைவிக்கின்றபடியால் அவைகளில் உன்னறிவைச் செலுத்தாமலும் அவைகளுடைய அனுபவங்களிலாச்சரியம் வைக்காமலுமிருப்பாயாக. நாங்களெல்லோரும் மாயையினால் மோகிக்கப் பட்டிருக்கிறோமென்று அதனுண்மையைச் சொல்லவும், நான் அவ்வுண்மையைக் கேட்டு மனந்தெளிந்து மாயா காரியங்களில் தலைப்பட்டுழலவரும் அவ்வக்காலங்களில் ஆச்சரியப்படுதைவிட்டு நித்தியானந்த சுகத்தை நாடினவனாயினேன். ஓ வியாசமுனிவரே! பின்னரவரிடத்தில விடைபெற்றுத் திவ்ய தீர்த்தங்களையெல்லாம் பார்த்துக்கொண்டே வந்தேன். ஆதலால் நீரும் கௌரவ புத்தியை நாசஞ்செய்து மோகமொழிந்து காலகர்ம சுபாவத்துக் கீடாயமைக்கப்பட்ட இவ்விடத்திலேயேயிருந்து சுகமாய் காலத்தைக் கழித்து வாரும். அவனவனால் செய்யப்பட்ட சுபாசுபகர்மங்கள் கட்டாயமாய் அனுபவிக்கத்தக்கதேயென்று மனத்தில் நிச்சயித்துக் கொண்டு

சுகமாய்ச் சஞ்சரித்திருமென்று சொல்லி என்னிடம் விடைபெற்றுப் போயினார்.

ஓ அரசனே! நானப்பொழுது நாரதமுனிவரால் சொல்லப் பட்டவுண்மையான அனுபவ வார்த்தைகளை மனத்தில் சிந்தித்துக் கொண்டு அன்று முதல் சரஸ்வதி நதிக்கரையில் வாசஞ் செய்து கொண்டு அச்சிந்தனையில் என்னுள்ளம் நிலைபெற்று காலத்தைக் கழிக்கும் நிமித்தம் உத்தமபுராணமாயும் சர்வசம்யத்தையுமறவே யொழிப்பதாயும் நானாவித சரித்திரங்களுடன் வேதப் பிரமாணத்தோடு கூடினதாயுமிருக்கிற இந்தத் தேவீ பாகவதத்தை நிருமித்தேன். ஓ அரசம்ரேஷ்டனே! நீயும்ப்படியே இம்மாயா விஷயத்தில் சந்தேகப்பட வேண்டியதில்லை. இந்திரஜால வித்தை செய்கின்ற வனொருவன் மரத்தினால் பாவைகளை நிர்மாணஞ் செய்துக்கொண்டு அவைகளைத் தன்னிஷ்டப்படி எப்படிக் கூத்தாட்டிவைக்கின்றனனோ அப்படி மாயா தேவியே தாவரஜங்கமரூபமான இப்பிரபஞ்சத்தை யெல்லாமுண்டாக்கி ஆட்டிவைக்கின்றாள். பிரம்மாதி ஸ்தம்ப பரியந்தமான தேவாசுரர் மானிடர் முதலிய யாவரும் பஞ்சேந்திரிய சம்பந்தமான மனம் முதலிய அந்தக்கரண வசப்பட்டுழல்கின்றவரேயன்றி வேறில்லையாகலான், அரசனே! யாவருக்கும் மூன்று குணங்களும் அக்குணங்களோடுகூடிய காரியங்களுமுண்டாகிற தென்பது நிச்சயம். மாயையில் பிறந்த மூன்று குணங்களும் வெவ்வேறு சுபாவமுள்ளவைகள்; ஸத்துவகுணம் சாந்தமாயும் ரஜோகுணம் கோரமாயும் தமோகுணம் மூடமாயுமுள்ளன. மாயா சம்பந்தமுள்ள இம்முக்குணங்கோடு எப்போதும் புருஷன் கூடி இருக்கிறானாதலால் அந்த மாயையை விட்டிருக்க எப்படி முடியும்? உலகில் நூலில்லாமல் வஸ்திரமெப்படியாகும்? அதுபோல் அம்மூன்று குணங்களைவிட்டு மனிதனாவது திரியச்சாதியாவது கிடையாதென்பது நிச்சயம். மண்ணில்லாமல் கடமெப்படியில்லையோ அப்படியே முக்குணங்களைவிட்டு மும்மூர்த்திகள் முதலிய யாருமில்லை. முக்குண வசத்தராகிய மூவரும் சில சமயத்தில் சந்தோஷமாயும் சில சமயத்தில் சந்தோஷமில்லாமலும் சில சமயத்தில் துக்கமாயும் சில சமயத்தில் துக்கமில்லாமலுமிருக்கின்றனர். ஓ ஜனமேஜயனே! பிரமன் ஒருவேளையில் ஸத்துவ குணத்தை ஆஸ்ரயித்திருக்குங் காலத்தில் சாந்தனாய்த் தியான முள்ளவனாய் சர்வ பிராணிகளிடத்தும் பிரீதியுள்ளவனாய் நல்ல ஞானத்தோடுங் கூடினவனாயிருக்கின்றான். அச்சத்துவ குணத்தை விட்டு ரஜோகுணத்தை ஆஸ்ரயித்திருக்குஞ் சமயத்தில் எல்லா வஸ்துக்களிடத்தும் பிரீதியற்று கோர ரூபியாயும், தமோகுணத்தை யாஸ்ரயித்திருக்குங் காலத்தில் துக்கமடைந்து மூடனாயுமாகின்றான். இப்படியே ஏனையருமென்பதிற் சந்தேகமில்லை. (26-44)

ஓ அரசனே! பிரம்மன் முதலானவர்களே முக்குணவசப் பட்டிருப்பவர்களானால் சூரிய சந்திர வம்சத்து ராஜாக்களுக்கும் இன்னுஞ் சில மகான்களுக்கும் மாயா விஷயத்தைப்பற்றி நாமென்ன வார்த்தை சொல்லலாம்? இவ்வுலகில் தேவர் சுரர் முதலான எல்லாப் பிரபஞ்சமும் மாயைக்கு அதீனமாகையால் நீ இவ்விஷயத்தில் சந்தேகிக்கவேண்டாம். சகலப்பிராணிகளும் மாயை அதீனர்களாயும் மாயையினிஷ்டப்படி யலைந்துழல்கின்றனர். அம்மாயை எப்பொழுதும் சம்வித்ரூபமான பராசக்தியினிடமிருந்து அவ்வக்காலத்துக் கேற்றவாறு அப்பராசக்தியினாலே வசப்பட்டு ஜீவர்களிடத்தில் வசித்துக் கொண்டிருக்கிறது. ஆதலால் மாயை யோடுகூடிய சம்வித்ரூபமாயும் பரமேஸ்வரியாயும் சச்சிதானந்த ரூபியாயுமிருக்கிற தேவியைத் தியானிக்க வேண்டும். பூஜிக்க வேண்டும், நமஸ்கரிக்கவேண்டும். தேவி மந்திரத்தை ஜபிக்க வேண்டும். இத் தியானாதிகளால் தேவி சந்துஷ்டியடைந்து பிராணிகளைச் ஸம்ஸாரத்திலிருந்து விடுவித்துத் தன் மாயையுமடக்கித் தன்னனுபவத்தைக் கொடுக்கிறாள். லோகமெல்லாம் மாயா சொரூபமாக விருக்கிறது. பரமேஸ்வரி அம்மாயா சொரூபமான லோகத்திற்கு எஜமானியாயிருக்கிறாள். ஆதலால் மூன்று லோகத்தாராலும் சுந்தரமான தேவியே புவனேஸ்வரியென்று சொல்லப் படுகிறாள். ஓ அரசனே! மனம் புவனேஸ்வரி ரூபத்தில் சம்பத்தித்திருக்குமாயின் இச்சம்ஸாரத்தில் சதசத்ரூபமான மாயை என்ன செய்யும்? ஆதலால் மாயையை யொழிப்பதற்குச் சதானந்தரூபியான தேவியைத் தவிர வேறொரு தேவதாந்தரங்கள் சக்தியுள்ளனவல்ல. தமோராசியை நாசஞ்செய்வதற்குத் தமேச காரணமாக மாட்டாது; சூரியன் சந்திரன் அக்னி மின்னல் இவைகளுடைய காந்தியல்லவோ இருளைப் போக்கடிக்க வல்லமையுள்ளவை. ஆதலால் சம்வித்ரூபமாய்த் தானே பிரகாசித்துக் கொண்டிருக்கிற மாயேஸ்வரியான அம்பிகாதேவியை மாயையைக் கழிப்பதற்காக மிகப் பக்தியோடு பூஜிக்க வேண்டும். (45-55)

ஓ அரசனே! உனக்கு விருத்திராசுரவதம் முதலான பல சரிதங்களைச் சொல்லிவந்தேன். அவைகளை நீயும் பக்திசிரத்தையோடு கேட்டுவந்தனை. இன்னும் வேறெதைக்கேட்க இச்சிக்கிறாய்? தேவியின் மகிமையை விஸ்தாரமாய்ச் சொல்லுகிற இந்தப் புராணத்தின் பூர்வபாகம் உனக்கு என்னாலிதுவரையிற் சொல்லப்பட்டது. இந்த ரகசியமான பாகவதத்தைச் சாதாரணமான மனிதனுக்குச்சொல்லக்கூடாது. பக்தனாயும் சாந்தனாயும் தேவியினிடத்தில் பிரீதியுள்ளவனாயும் சிஷ்யனாயும் அல்லது ஜ்யேஷ்ட புத்திரனாயும் அதி பக்தியோடு கூடினவனாயுமிருப்

பவனுக்கே சொல்லல் வேண்டும். வேதத்திற்குச் சமானமாயும் நல்ல பிரமாணத்தோடு கூடினதாயும் கதைகளுக்குள் ஸ்ரேஷ்டமாயுமிருக்கும் இப்புராணத்தை மிக்க பக்தியோடு எவன் படிக்கிறானோ எவன் கேட்க்கிறானோ அவன் இவ்வுலகில் தனவானாயும் ஞானவானாயுமிருப்பன். (56-60)

ஆறாவது ஸ்கந்தம் முற்றிற்று.

உ



ஸ்ரீ காமாக்ஷி துணை

ஆசிரியர் :-ஆலாலசுந்தரம் பிள்ளை (1852-1922)

சிறப்பு பெயர் :- "சித்தாந்த போத ரத்நாகரம்"

ஊர் :- காஞ்சிவரம் / காஞ்சிபுரம்

குரு :- "ஸ்ரீ ஏகாம்பர சிவயோகிகள்"

கல்வி & மொழிகள் :- தமிழ்மொழியில் கல்விமான், ஆசிரயராகவும், வடமொழி (சமஸ்கிருதம்) கல்விமானாக விளங்கினார்.

தொண்டு :- சைவசித்தாந்தங்களை பரப்புதல் தமிழ்நாட்டுல் மட்டுமின்றி வெளிநாட்டிலும் ரங்கூன், மோல்மோன், சைவமதத்தைப் பரப்பினார். அவருடைய காலத்தில் அவருடன் சேர்ந்து ஸ்ரீலஸ்ரீசோம சுந்தர நாயகர், பூவை கலியாண சுந்தர முதலியார் ஆகியோர் சைவ சித்தாந்த நெறிகளை பரப்பி கலங்கரை விளக்கமாக விளங்கினார்கள்.

அவர்களின் தமிழ் உரை & சைவ நூல்கள் :- 'ஸ்ரீ தேவீ பாகவதம்' காமாக்ஷி லீலாப் பிரபாவம், (காமாக்ஷி விலாசம்) சாதத்தியம் என்னும் காஞ்சிபுராணம் என்பன. மொழி பெயர்ப்பு நூல்கள், பெரியபுராணம், விருத்தியுரை, காஞ்சிபுராணம் உரை, திருப்போரூர் சந்நிதிமுறை உரை, திருவுந்தியார், திருகெளிற்றுப்படியார். பொருத்தவுரை என்பன உரை நடையில் எழுதிய சிவஞான போத நுட்பம், பகவத்கீதா சாரம், ஆச்சாரிய பிரபாவ"ா ஞான வாசிட்டத் தெளிவு, காஞ்சி ஷேத்திர மஞ்சரி என்பன.

இவர் வெளியிட்ட நாளிதழ் :- "ஞானபானு" இவர்களால் பாராட்டபெற்றவர் :- ஸ்ரீமத் பாநுகவி, மணி, திருநாவுக்கரசு முதலியார் திரு.வி.கல்யாண சுந்தர முதலியார் (திரு.வி.க.) சைவத் திருவாளார் சச்சிதானந்தம் பிள்ளை. பி.ஏ.எல்.டி. 'தருமவெளியீடு உளது'.

For Copies Contact Publishers :

C.S.S. MOORTHY MANAGING TRUSTEE

"காஞ்சிஆலால சுந்தரம்பிள்ளை டிரஸ்ட்"

'காஞ்சி' - No.11, Ramamoorthy Street, Nehru Nagar,
Chrompet, Chennai - 600 044. Phone : 2230041 Fax : 2230041.

Copies also available at : **M/s. SURESH CORPORATION**

15, G.S.T Road, Opp. State Bank of India
Guindy, Chennai - 600 032.
Phone : 234 2866

56, Mount Road, Opp. Indian Bank
Guindy, Chennai - 600 032.
Phone : 234 7290

Between 12.00 noon and 6.30 p.m. on all working days.